[illegible]

JL
M211, [illegible]
NOS.
145 6

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுபரப் பீடோங்கும் பெண்மைதா
னுண்மை யறவோங்கு முலகு."

Vol. 1. } Madras, August 1905. { No. 1.
தொகுதி-1. } சென்னை, 1905-ம் வருஷம் ஆகஸ்ட் மீ" { பகுதி-1.

## நமது பத்திரிகை.

செந்தமிழ் நாட்டில் மாதர்களின் அபிவிருத்தியின் பொருட்டு பிரத்தியேகமாகப் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள் எத்தனையோ இருக்கின்றன. அங்ஙனமாக நாம் அதே நோக்கத்துடன் இப்புதுப் பத்திரிகையைப் பிரசுரிக்க வேண்டுமெனச் சிலர் சந்தேகிப்பர். அதற்கு நாம் பின்வருமாறு விடை தருகின்றோம். எத்தனையோ ஆயிர யோஜனை தூரம் பொழுதி கொண்டு பரந்திருப்பதாகிய ஸஹாரா பாலைவனத்தில் இப்பொழுது சிற்சில நீர்ச்சுனைகளிருக்கின்றன. அதுபற்றி அப்பாலைக் காட்டில் இனி நீர்ச்சுனை தோன்றவே கூடாதென்று யார்சொல்லத் துணிவார்கள்? அஞ்ஞானப் பாலைவனத்தில் அறிவு நீர் காணாது வருந்தியலையும் நமது மாதர்களுக்குப் பெரிய ஏரி நிர்மாணிக்க எம்மால் முடியாதெனிலும், நாம் தோண்டுகின்ற சிறு சுனை அனாவசியமென்று யார் சொல்லத் துணிவார்கள்? அறிவின்மை யென்னும் பெருங்கடலில் தத்தளிக்கும் நமது பதினாயிரக்கணக்கான பெண்களைக் கரை சேர்ப்பதற்குச் சில பெருங் கப்பல்களிருந்த போதிலும் யாம் கொண்டுவரும் சிற்றோடம் அவசியமில்லை யென்று யாவரே கூறுவார்?

கிருத, திரேதா, துவாபர யுகங்களிற் கல்விகற்று இகபரஞானத்திற் சிறப்படைந்திருந்த இத்தேச மாதர் கலிபுருஷனால் கல்வியின்மை யென்னும் இருட் சிறையிலடைப்பட்டிருக்கின்றார்கள். அந்தச் சிறையைத் தகர்ப்பதற்குப் பெருமிதத்திரப் பீரங்கிகள் சில இருந்தபோதிலும் நாம் கொணர்ந்திருக்கும் சிறு பீரங்கி அதிகமென்று கூறுவது நியாயமா?

தமிழ்நாட்டு மாந்தர்கள் நன்கு கருதவேண்டிய உண்மையொன்று எடுத்துரைக்கின்றோம். (அதென்ன வெனில்) ஒவ்வொரு நாட்டின்

மேன்மையோ தாழ்மையோ அந்நாட்டு மாதர்களைப் பொறுத்திருக்கின்றது. இவ்வுலகத்தில் எல்லாத்தேசங்களும் மேம்பட்டு வரும் இக்காலத்தில் பழம் பெருநாடாகிய நமது தாய் நாடொட்டிலும் உறங்கிக் கிடக்கின்றது. இதன் காரணமென்ன? நமது பெண்களின் அறிவின்மையே காரணம்.

புதுப்புதுப் புத்தகங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும், மற்றும் திருஷ்டி சோதனை மூலமாகவும் நமது நாட்டு ஸ்திரீகளுக்கு நல்லறிவு பிறப்பித்து அவர்களின் நிலைமையை உயர்த்த வேண்டுவதே நமது நாட்டாரின் முதற் கடமை. இதை மறந்தவன் நமது நாட்டிற்கு விரோதி. நம்மவருக்கு இருக்கும் எல்லா அபேக்ஷைகளினும் இவ்வபேக்ஷையே முற்பட்டிருத்தல் வேண்டும். இப்பெருங்காரியத்தை நிறைவேற்றுவதில் நமது நாட்டாருக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, இராமர் கடலணை கட்டுவதற்குச் சிறியதோர் அணிலும் துணையாற்றியது போல நாம் இப்பத்திரிகையை வெளியிட்டிருக்கின்றோம். தேசாபிமானிகள் நமது எண்ணத்தை நிறைவேற்றும்பொருட்டு எல்லாவித உதவியும் புரிவார்களென்ற முழு நம்பிக்கை மேற்கொண்டிருக்கின்றோம்.

பத்திராதிபர்.

## ராஜாவும் ஜனங்களும்.

உலகத்தில் கணக்கில்லாத தேசங்களிருக்கின்றன. அவைகளில் சில ஜனங்கள் வசிக்காமலே காடு மலைகளாய்க் கிடக்கின்றன. இப்படிப்பட்ட தேசங்கள் எங்கேயோ சமுத்திரங்களுக்கப்பால் ஒதுக்காய்க் கிடக்கும் தேசங்கள். மற்ற தேசங்களில் ஜனங்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜனங்கள் கூட்டமாக வசிக்குமிடங்களிலெல்லாம், ராஜன் என்று ஒருவர் அவசியமாகவே யிருப்பார். அவரைச் சேர்ந்த சில ஜனங்கள் அவரை யண்டி அவர் கட்டளைகளுக் கடங்கியிருப்பார்கள். ஏன் அப்படி இருக்கவேண்டுமென்றால், மனுஷ மிருகத்தைப்போலச் சண்டைசெய்யும் சுபாவமுள்ளவன். சும் மனதுப்படி விட்டுவிட்டால் அயலானுடன் சண்டை செய்துகொண்டே யிருப்பான். அயல்தேசத்து ராஜா இன்னொரு தேசத்தைக் கட்டிக்கொள்ளாமல் காப்பதற்கே ராஜாவென்று ஒருவன் ஆதியில் ஏற்படுத்தப்படுகிறான். தன்னைச் சேர்ந்த ஜனங்களை தேசத்தார்கள் சண்டைசெய்து வென்று அடிமைகளாக்கிக்கொ



மற் காப்பது இந்த ராஜாவின் முதற்கடமை. ஆதிகாலத்தில் ராஜாவானவன் அயல் தேசங்களை ஜயித்து பட்டங்கட்டிக்கொள்ளுவதே தனது பெருமையாக நினைத்து எப்போது சமயம்நேரிட்டாலும், முற்றிலும் காரணமில்லாமலுங்கூட, சண்டைசெய்வான். சண்டையில் ஜயித்தால் ஜயித்தநாட்டு ராஜாவிடம் கப்பம் வாங்குவதுமன்றி, அங்குள்ள பொக்கிஷங்களை வாரிக்கொண்டுபோவான்; அவ்விடத்து ஜனங்களை, முக்கியமாகப் பெண்களை, அடிமைகளாகவும் பிடித்துக் கொண்டுவருவான். இப்படி நேரிடாமல் காப்பதற்காகவே ராஜாவென்று ஒருவன் ஆதியில் ஏற்படுகிறான். அதற்காகவே ராஜாவுக்குப் பூபாலன் என்றும், நரபதி என்றும், பலபெயர்கள் கொடுக்கப்படுகின்றன. ராஜா இப்படிச் செய்கிற உபகாரத்துக்கு ஜனங்கள் அவன் வேண்டும்போதெல்லாம் சண்டைக்குக் கூடப்போகத் தயாராயிருக்கவேண்டும். அவன் செலவுக்குப் பணங்கேட்டாலும் கொடுக்கவேண்டும். எந்த தேசத்திலும் சேனையென்றும் வரிகளென்றும் ஆதியில் இப்படித்தான் ஏற்படுகின்றன. அன்னியதேச அரசன் ஒருவன் நம்தேசத்து அரசனைவென்று நம்மை அடிமைப்படுத்தாமல் காப்பதைத்தவிர அவன் செய்யவேண்டிய கடமை வேறொன்றுமுண்டு. தன்னைச்சேர்ந்த ஜனங்களுக்குள்ளேயே பலவான் பலமில்லாதவனையடித்து அவன் சொத்தை பிடுங்கிக்கொள்ளாமல் காக்கவும் கடமைப்பட்டவன். பலவான் பலமில்லாதவனை யப்படிச் செய்தால், பலமில்லாதவன் ராஜாவிடத்தில்தானே முறையிட்டுக் கொள்ளலாம். அல்லது ராஜாவின் உத்தியோகஸ்தர்களிடத்தில் முறையிட்டுக் கொள்ளலாம். அப்படி அநீதங்கள் நடவாமலிருக்கும் [illegible]தடுக்கப் போலீஸ் ஏற்படுகின்றது. அநீதமடைந்தவனுக்கு நீதி [illegible]கும்படி செய்ய கோர்ட்டுகளென்கிற நியாயஸ்தலங்கள் ஏற்படு[illegible]றன.

ஆகவே, என்ன ஏற்படுகின்றது என்றால்; ஒவ்வொரு தேசத்திலும் ராஜாவென்றும் குடிகளென்றும் பிரிவினையுண்டு. ராஜாவின் கடமை அன்னியராஜா ஒருவன் நமது தேசத்தைக் கட்டிக்கொள்ளாமலும், தம் ஜனங்களுக்குள்ளேயே அநியாயங்கள் நடக்காமலும் காப்பது கடமை. இந்தக் கடமையைச் செலுத்த சேனைகளும், போலீஸும் நியாயஸ்தலங்களும் வேண்டும். இவைகளுக்கு பதிலாகக் குடிகள் அரசனுக்கு வேண்டிய வரிகளைக் கொடுத்து ஆள்சகாயம் வேண்டும்போது அதையும் செய்யவேண்டும்.

G. சுப்பிரமணிய அய்யர் B. A.

145626 சென்னை-600 008

# விக்டோரியா சக்கிரவர்த்தினியின் சரித்திரத்திலிருந்து.

## நமது நாட்டு மாதர்களறியத் தக்க சில விஷயங்கள்.

பெண்மைக்கே ஓர் அலங்காரமாயிருந்த விக்டோரியா மகாராணியின் பெருந்தகைமையும் உயர் குணங்களும் நமது நாட்டு மாதர்களுக்கு என்றும் முன்மாதிரியாக மனத்தே பதிந்திருக்க வேண்டுமென்பதைக் குறிப்பித்தற் பொருட்டு இப்பத்திரிகைக்குச் "சக்ரவர்த்தினி" என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. இனி வேறு பல காரணங்களுமுள. நமது நாடு இனிப் பெறப்போகின்ற பெருமைக்கெல்லாம் விக்டோரியா மகாராணியின் நாட்களிலேதான் வித்துக்கள் இடப்பட்டன. நவீன சாஸ்திரக்கல்வி, புதுப்பாஷைகளில் தேர்ச்சி, மறக்கவிட்டிருந்த பழங்காலத்துப் பெருநூல்களை மறுபடி ஆராய்ச்சிபுரிதல், தொழிற் கல்வி முதலிய எண்ணிறந்த நன்மைகள் இப்பெண்ணரசின் அரசாட்சிக் காலத்தே இந்நாட்டுக்குக் கிடைத்திருக்கின்றன.

இங்கு இவ்வரசியின் சரித்திரத்தையேனும், புகழையேனும், விரித்துக் கூறவேண்டுமென்பது எமது கருத்தன்று. இவரது சரிதையினின்றும், நமது நாட்டுமாதர்கள் அறிந்துக்கொள்ள வேண்டிய சில முக்கியவிஷயங்களை அறிவுறுத்த வேண்டுமென்பதே எமது விருப்பம். இவற்றுள்ளே முதற்பட்டது பெண்களின்

### சுதந்திரத்தன்மை.

விக்டோரியா என்ற மாது இவ்வுலகத்தில் ஐந்திலொரு பங்கை அரசாளத்திறமை கொண்டிருந்தாளென்றால் நமது நாட்டில் சில சாமான்னிய ஜனங்கள் நினைக்கிறபடி பெண்களுக்கு ஸ்வய புத்தியும், ஸ்வதந்திரமும் கிடையாதென்னும் கொள்கை எத்தனை அறிவற்ற கொள்கையாக முடிகின்றது? ஸ்திரீகள் கணவர்களுக்கு "அடிமைகளல்லர், உயிர்த்துணைவர்" என்றறிந்து கொள்வதே தேசாபிவிருத்தியின் அங்குரமென்று கூறலாம். புராதன காலத்தில் நமது ஆரிய ஜனங்களுக்குள்ளே ஸ்திரீகள் வெகுமதிப்புடன் நடத்தப்பட்டு வந்த



னர். தேசக்ஷேமத்திற்கும், ஜனசமூகத்தின் அமைதிக்கும் மாதர்கள் எம்மட்டிற் கட்டுப்பட்டிருக்கவேண்டுமோ அவ்வளவே கட்டுப்பட்டிருந்தார்களல்லாமல், இக்காலத்தைப்போல கொடுங் கட்டுப்பாடுகளெவையும் கிடையா.

பிற்காலத்தே மகமதியர் முதலான பிறதேசத்தாரின் குறைந்த நாகரிகம் இந்நாட்டிலே படரத்தொடங்கியபோது, காக்கையரசாட்சி செய்யுமூரில் குயில்களும், "கா கா" வென்று கத்தத்தொடங்கல்போல நம்மவராகிய ஆரியர்கள் அந்நிய நாகரீகத்தைப் பின்பற்றத் தொடங்கி விட்டனர். பிறகு ராவணன் முதலிய இராக்ஷதர்கள் செய்ததுபோல ஸ்திரீகளை அடைத்து வைக்கவேண்டுமென்ற துர்ப்புத்தி நம்மவர்க்கு உண்டாகிவிட்டது. மகம்மதியர்கள் பிரபலமாயிருக்கும் வட ஹிந்துஸ்தானப் பிரதேசங்களிலே இன்னுங்கூட உயர்தர ஹிந்துக்கள் தமது ஸ்திரீகளைத் திரையிலடைத்து வைக்கிறார்கள். ஆனால் தெற்கே அவ்வளவு தூரம் இழிவுபட்டுப் போகவில்லை. ஆனால் திரையிலடைப்பதற்கு அனுசரணையான மற்ற வழக்கங்கள் ஏற்பட்டு விட்டன. முதலாவது பெண்களுக்கு

### கல்வி

இல்லாமற்போய்விட்டது.

விக்டோரியா மகாராணியின் சரித்திரத்திலிருந்து நமது பெண்கள் அறிந்துகொள்ள வேண்டியவற்றில் கல்விச்சிறப்பு ஒன்றாகும். மகாராணியின் கல்வித் திறனைப்பற்றி ஒருவர் பின் வருமாறு எழுதுகின்றார் :—

"விக்டோரியா சக்கிரவர்த்தினி வித்தியா விநோதினி. இவள் ஐயந்திரிபறக்கற்றுத் தேர்ந்த சிரேட்டமங்கை; அருங்கிரந்தமொன்று இயற்றியவள்; வித்துவஜனப்பிரியை; இவளாற் பல வித்துவான்கள் பொருளுதவி பெற்றதுண்டு. இவள் சமஸ்தானத்து வித்துவான்களாக ஒர்ட்ஸ்வொர்த்து, டெனிசன் ஆதிய சிரேட்டர்கள் விளங்கினார்கள். இவள் சாதுரியசம்பாஷணி; மாதுரிய வசனப்பிரியை, எத்தனை நாடக வித்வான்கள், எத்தனை சங்கீதவித்துவான்கள், எத்தனை நாகரிக வித்தியா நிபுணர்கள், எத்தனைச் சித்திரக்காரர்கள் இவளால் உற்சாகமும் ஊக்கமும் ஆதரணையும் பெற்றவர்கள் !" *

விக்டோரியா மகாராணியின் பெருமைக்கு முதற்காரணம் அவரது கல்வித்திறமையே. கல்வித்திறமை யில்லாதவர்கள் உலகினைப்

* True Victorian Glory—K. C. Duraisamy.

புகழோடு ஆட்சிபுரிய மாட்டுவார்களா? ஐயோ! கல்வியில்லாதவர்கள் நேரே மண் சுமக்கக்கூட முடியாதவர்களாயிற்றே.

"விலங்கொடுமக்களனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனையவர்"

இக்குறள் தற்காலத்து ஆசாரத்திருத்தக் காரர்களில் ஒருவரால் இயற்றப்பட்டதன்று. தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரால் இயற்றப்பட்டது. படிப்பில்லாதவர்களையும் படித்தவர்களையும் ஒப்பிட்டு நோக்கினால் மிருகங்களையும் மனிதர்களையும் ஒப்பிடுவது போலுமென்கின்றார் வள்ளுவர். கல்வியற்றோர் ஆணாயிருப்பினும் பெண்ணாயிருப்பினும், வண்டியிழுக்கத்தான் பயன் படுவார்களென்பது திருவள்ளுவருடைய கருத்து. இனிக்,

## காருண்யம்.

காலஞ்சென்ற மகாராணியிடம் நிகரற்று விளங்கியது. இப்பெருங் குணத்திற்குக் கல்வி மட்டிலும் போதாது. கல்வியிற் சிறந்த எத்தனையோ பேர்கள் காருணியமில்லாத பேய்வாழ்க்கை வாழ்கின்றார்கள். மகாராணியோ அவ்வகைப்பட்டவளல்லள்.

காருணியமென்பது தனது பந்துக்கள், தனது ஜாதியார், என்பவர்கள் மீது மட்டிலும் வைக்கப்படும் அன்பன்று. உலகத்தில் எல்லாச் சாதியாரையும் தம்மைப்போற் கருதி அவருக்கிரங்கும் நற்குணமே கருணையாகும். இப்பெருங் குணம் விக்டோரியா ராணியிடத்தில் ததும்பிக் கிடந்தது.

1858-ம்வருஷத்தில் மகாராணி செய்த ராஜவிளம்பரத்தில் கருணை பொங்கி நிற்கவில்லையா? அவ்விளம்பரமன்றோ 30-கோடி ஜனங்களுள்ள நமது பெருந்தேசத்தை ஆங்கிலேயர் ஆட்சியின் கீழடக்கி வைத்திருக்கின்றது. ஜாதிவித்தியாசமேனும் சமயவித்தியாசமேனும், நிறவித்தியாசமேனும் பாராட்டாமல் சகல ஜனங்களையும் ஒன்றுபோல நடத்துவதே நமது ராஜரீகத்தின் முகற்கொள்கையென்று விக்டோரியா ராணியார் பிரசுரம் புரிந்தனர்.

இதுவே தற்கால நாகரீகத்தின் விருத்தி காணப்படும் வாக்கியமாகும். இந்த வாக்கியத்தின் உண்மையை நன்குணர்ந்த பிறகுதான் மனித ஜாதியார் மெய்யான சிறப்படைவார்கள். அதி நாகரீகஸ்தர்களென்று பொய்ப்பெயர் சூட்டிக்கொண்டிருக்கும் மேல் தேசத்தார்கள் கூட இன்னும் வர்ணவேற்றுமை சாதிவேற்றுமை, மத வேற்றுமை என்பவற்றின் சிறு வரம்புகளைக் கடக்கமுடியாது மயங்குகின்றார்கள். நமது தேசத்திலோ வென்றால் இவ்விதச் சிறு வரம்புகளால் தேச



நன்மை அபரிமிதமாகத் தடைப்பட்டு நிற்கின்றது. இதனை நமது தேசத்து மக்கள் மனதிற் பதியச்செய்ய வேண்டுமாயின் தாய்மாராகிய மாதர்கள் மனதில் முதலாகப் பதிப்பிக்கவேண்டும். "தாயைப் போலவே பிள்ளை." மற்றும்,

கணவனிடத்தன்பு, கற்புடைமை.
மக்கட்பேணல்,

முதலிய எத்தனையோ அரிய பெரிய குணங்கள் சக்ரவர்த்தினியிடம் திகழ்ச்சி பெற்று நின்றன. ஆனால் இவற்றைப்பற்றி நமது மாதர்களுக்கு போதனை செய்யவேண்டிய அவசியமில்லை. பிறப்பு முதல் நமது மாதர்களுக்கு இக்குணங்கள் சிறிது சிறிதாக ஊட்டப்பட்டு அவர்களுக் கியற்கையாகிவிடுகின்றன. நாயகனிடத்தன்பு, மக்கட் பேணல் என்பவற்றில் இந்து மாதர்கள் எந்நாட்டு ஸ்திரீகளுக்கும் பிற்பட்டவர்களில்லையென்பது உலகமறிந்த விஷயம்.

ஸாவித்திரி, தமயந்தி, முதலிய எத்தனையோ ஸ்திரீ ரத்னங்களின் திவ்விய சரித்திரங்களைக் கேட்டே வளர்ச்சி பெற்றவர்களாகி அவர்களின் ஒழுக்கத்தைத் தவறாது கைக்கொள்ள முயன்றுவரும் நமது மாதர்க்குக் "கற்புடைமை" புதிதாகப் போதிக்கத்தக்கதோர் விஷயமன்று. குழந்தைகளை நம்மவர் தவப்பேறென்று கொண்டிருக்கின்றனர். கண்போலப் பாதுகாத்துவருகின்றனர். இவைபோன்ற எண்ணிறந்த குணங்கள் விக்டோரியா மகாராணியின் சரித்திரத்திலிருந்து எடுத்துக் காட்டக்கூடுமாயினும், நம்மவர்மாட்டுக அதுமிகையாமென்று கருதி விரிவுசெய்யாது விடுத்தோம்.

பத்திராதிபர்.

# அறிக்கை.

மாதந்தோறும் நமது பத்திரிகையில் பெண்களுக்கினிய ஏதேனுமோர் விஷயம் பற்றி மாறுபட்ட அபிப்பிராயங்கொண்ட இருவர்களால் ஒவ்வொரு வியாசம் எழுதப்படும். ஒரே விஷயத்தைப்பற்றி ஜனங்கள் எத்தனை மாறுபாடான அபிப்பிராயம் வைத்துக்கொண்டிருத்தல் சாத்தியமென்பதை எடுத்து விளக்கும் பொருட்டும், ஒரு விவகாரத்தின் இருகட்சிகளையும் கேட்டு நியாயத்தைக் கண்டுபிடிக்கும் வழக்கம் நமது மாதர்களுள்ளே பலப்படும் பொருட்டும் இம்முறை அநுசரிக்கப்படுகின்றது.

பத்திராதிபர்.

# Question No I.

## மாதர்களுக்கு இங்கிலீஷ் கற்பித்தல் அவசியந்தானா?

அவசியந்தான்-ஸ்ரீ N. ராகவாசாரி B. A.

அவசியமில்லை-பண்டிதர் T. வெங்கிடராமய்யங்கார்.

## நமது மாதர்களுக்கு இங்கிலீஷ் கற்பித்தல் அவசியந்தானா? [ஆம்.]

ஆண் பிள்ளைகள்போலவே பெண்களும் கற்கவேண்டுமென்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்ததென வெண்ணியே இவ்விஷயம் எழுதப்படுகிறது. இத்தமிழ்நாட்டுப் பெண்களுக்கு எவ்விதக் கல்வி எவ்வாற்றால் புகட்டல் வேண்டுமென்பதையே இங்கு சிறிது விசாரிப்போம். புருஷர் கற்கும் கல்வியையே, அவர்கள் கற்கும் முறையிலேயே, கற்பித்தல் தகுந்ததா? அல்லது காலஞ்சென்ற ஜட்ஜி முத்துசாமியய்யரவர்கள் கூறியவாறு கொஞ்சம் சங்கீதமும், கொஞ்சம் சுகாதாரநூலும், எழுத்தும்; என்னும் தமிழ் மூலமாய்க் கற்பித்தல் தகுந்ததா?

பெண்கள் ஏன் கற்கவேண்டும்? ம-ா-ா-ஸ்ரீ முத்துசாமியய்யரவர்களின் விஷய அட்டவணையை நோக்குங்கால், பெண்கள் குடும்பப்பாதுகாப்புக்காக சிருஷ்டிக்கப்பட்டனரென்றும், அக்குடும்பப் பாதுகாப்புக்கு மேற்கூறிய விஷய ஞானம் அவசியமென்றும் அவர் கருதியதாக நாம் அறிகின்றோம்.

பெண்கள் குடும்பப் பாதுகாப்புக்கு மட்டுமே சிருஷ்டிக்கப்பட்டவரல்லர். எல்லாப்பெண்களும் விவாகஞ்செய்து கொள்ள வேண்டுமென்பது புருடர்க்குள் பிரமசாரிகள் கூடாது என்பதனளவு அடாததேயாகும். மற்றென்னை? மனிதரைப்போல் ஸ்திரீகளுக்கும் ஆன்மாவுண்டு. அவரும் பாப புண்ணியங்களுக்குக் கருத்தராயிருக்கக் கூடும். கணவருடன் பகிர்ந்துகொள்ளாது கர்ம பலங்களை அவரே முற்றும் அநுபவிக்கக் காண்கிறோம். ஆகவின் அவரது பிற்கால சுக துக்கங்கள், அவர் தற்காலத்துத் தாமே செய்யும் நன்மை தீமைகளைப் பொறுத்தனவேயன்றி, அவரடையும் கணவனைப் பொறுத்தன வில்லை என்பது விளங்கும். மனிதர்க்கும் விலங்குகளுக்கும் பேதஞ் செய்யும் விவேகம் அவரிடத்தும் உண்டு. அவ்விவேகத்தை இலங்குநூல் கற்றுப் பயிற்சி செய்யாவிடின் விலங்கொடனையராவர். ஆதலால் பெண்களுக்குப்புகட்-



கல்வி அவரிடத்துள்ள புத்தியினையும் மனச்சாட்சியினையும் தீட்சமாக்கல்வேண்டும். அதற்கு வழியாக அவர்களுக்குத் 'தாமும் து கணவரும் ஒன்றில்லை. தமது விதி தம்மிடத்தேயுளது' என்பதைக் கற்பித்தல்வேண்டும். இப்பெரு மெய்யினை நாமும் இப்பொழுதுதான் கண்டு ஆனந்திக்கின்றோம். எவ்வாறிதனைப் பெண்களுக்குப் புகட்டுவது? நாம் கற்றமுறையினாலேயன்றோ?

அன்னிய பாஷையின் அட்சர இலக்கணமறிவதில் நமது வாழ்நாளில் பெரு நாட்களை வீணாட்களாகக் கழிக்கின்றீர். இதனின்றும் நமது பெண்களையேனும் பாதுகாத்தல் கூடாதோ என்பாருளர். இதற்கஞ்சிப் பெண்களுக்குத் தமிழ் நூல்களும் தமிழ்சாத்திரங்களுமே கற்பிக்கவேண்டும் என்பார் கூற்றுப் போலிக்கூற்றும். தற்காலத்துப் புதியநாகரிகத்தின் கட்டியத்தொனி சுதந்திரமேயாகும். இவ்வெண்ணம் பழைய நூல்கள் கற்றோர்க்கு உண்டாவதில்லை. பெண்களுக்குண்டாதல் முற்றிலும் அசாத்தியம்.

ஆங்கிலத்துள்ள அரிய சாத்திர சரித்திர நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கக்கூடாதோ என்பார்க்குத்தரமாக அந்த கூடுமாயின் பெண்களுக்கு மட்டுமேயன்றி புருடர்களுக்கும் மிக்க நலமாகுமென்று கூறுவாம். ஆனால்; அவ்வாறு செய்வதற்கு வேண்டிய சாமர்த்தியமும், நேரமும், பொருளும் பொருந்தினோர் நமக்குளில்லை. பெண்கள் கற்பிக்கப்பட்டால், அவர்களுள் எனேகர் இத்தகைய தொழில் செய்யக்கூடும் என்று நம்புவதற்கிடமுண்டு. அவ்வாறன்றி அத்தகைய பெரியோர் நம்முளுண்டாகுமட்டும் பெண் கல்வி வளர்தற்கு நாம் முயலாவிடின் எக்காலத்தும் நமதெண்ணம் நிறைவேறமாட்டாது.

குடும்பத்தின் ஓரங்கமாகிய ஸ்திரீயின் கல்வி எவ்வாறிருக்கவேண்டுமென்று ஆராய்வாம். கணவன் வெளிச்சென்று ஊழியஞ்செய்து குடும்பத்துக்காகத் திரவிய சேகரஞ் செய்பவனாதலால் களைத்து வருபவனது மனத்துக்கு ஆனந்தமும் அவன் தேகத்துக்கு ஆரோக்கியமும் உண்டாக்குபவள் மனைவி. அவனது அந்தரங்க சந்தோஷம், விசனம், பயங்களைத் தானு மனுபவிக்கக் கூடியவளாயிருத்தல் வேண்டும். அவ்வாறன்றி, அவள் ஆனந்தம் கதைகளிலும், அவள் பயம் மாமி வரவிலும், அவள் துக்கம் தனது மூன்றுவயதுப் பெண்ணுக்கு நல்லவரன் கிடைக்க வேண்டுமென்பதிலுமிருக்க, அவன் ஆனந்தம் சரித்திர வாராய்ச்சியிலும், அவன் பயம் கிழச்சாதியோர் தரித்திரம் வளர்வதிலும், அவன் துக்கம் தனது காருண்ணியச் செயல்கள் பயனற்றுப் போவதிலும் இரு-

க்குமாயின் அக்குடும்பத்தில் எவ்வாறு சமாதானமுண்டாம்? அ தெய்வீகச்* சேக்ஸ்பியரின் கவி கற்றுக் களிகொண்டிருக்கும்போது தாகவத்தரப்பர்வனை வேண்டுமென்னும் மனைவி நல்ல மனைவியாவாள்? புருஷன் எவ்விஷயத்தில் கல்வி மிகுந்து சாமர்த்தியவானாயிருக்கிறானோ அவ்விஷயத்தில் மனைவிக்கு அவ்வளவு கல்வி யிராவிடினும் அவன் போதிப்பின் அதனையறிந்து அவனது அறிவில் அளவளாவி ஆனந்தக்காற்றலிருத்தல் வேண்டும் என்பது நமது கொள்கை. அவ்வாறு தன் கணவனது பெருந்தன்மையை அறியத்திறனற்ற ஆர்க்ரைட் (Arkwright) என்பவரது மனைவி அவரது அருமை யந்திரங்களை நாசமாக்கினதாகக் கேட்டிருக்கிறோம். அன்றியும் பிராண சிநேகமென வெண்ணிப் பேசவருங்கால், தனக்கு மிக்க அருமையான விஷயங்களைப் பற்றிப் பேசக்கூடாமல, தனக்கு அருவருப்பான விஷயங்களைப்பற்றிப் பேசுவது வீண்பேச்சாகு மன்றோ? அஃது மனித வியற்கையை அழிக்குமேயன்றோ? ஆதலான் ஆண்மதிக்கு எவ்விஷயத்தை எவ்வாற்றன் படிப்பிக்கிறோமோ, அவ்விஷயத்தை அம்முறையான் பெண்களுக்கும் கற்பித்தல் வேண்டும். நாம் எம்மட்டும ஆங்கிலங் கற்று, ஆங்கிலக் கவிகளிலும், ஆங்கிலசாத்திர சரித்திர நூல்களிலும் ஆனந்திக்கிறோமோ, அம்மட்டும் பெண்டிரும் அவைகளிலே ஆனந்தித்தல் தக்கது.

இன்னும் ஆங்கில நாட்டுண்மைகள் ஆங்கிலக்கவிகளிலும், ஆங்கில தத்துவ நூல்களிலுமேயே ஆழ்ந்திருக்கின்றன. அத்தேனை அருந்த விரும்புவோர், கூடுமாயின அதனை வைத்திருக்கும் பூவினை முகர்ந்து அதனழகைக் கண்டு மகிழாது விடலாமா? அது முற்றிலும் கூடுமா? தமிழ்க்கவிஞர் மலை, கடல் முதலியவைகளை வெகு அழகாய்ப் பாடினராயினும் சுயேச்சை, குடியரசு முதலியவைகளைப்பற்றிப் பாடினரில்லை; இவையே தற்கால எண்ணங்கள். இவையே தகுந்த எண்ணங்களெனத் தோற்றுகின்றன. ஆதலான் இவையே தங்கி நிற்கக்கூடுவன. இவைகளைப் புகட்ட நம்மிடத்துக் கவிகளும் எழுவரோ? எழுந்த கவிகளை நமது தேசம் போற்றுமோ? அவ்வாறெழுந்து போற்றுமுன் நாம் ஆங்கிலேயக்கவிகளைக் கற்றல்வேண்டும். நமது பெண்களும் அவ்வாறே கற்றல்வேண்டும். அவ்வாறு கற்பின் ஆங்கில வழக்கங்கள் நல்லவை, கெட்டவையாவும் படிந்துபோம் என்பது தவறு. ஏனெனின், நாம் இதுகாறும் சொல்லிவந்தவாறு ஆங்கிலநாகரிகத்தின் கட்டியக்காரி சுய எண்ணம். இச்சுய எண்ணம் வளர வளர மேல்நாட்டுத் தீமைகள் செத்து, நன்மைகள் நிற்கும். நமது மாதரிடத்து நமது நாகரிகம்

* Shakespeare.



ஆழமாய்ப் படிந்து கிடக்கிறது. களர்மண்ணைப்போலப் பயிருக்குக் கெடுதி விளைக்கிறது. இப்பழமை நாகரிகத்துடன் மேல்நாட்டு புது வெள்ளம் சேருமாயின், வண்டல் படிந்து அதன் பயனாய்வந்த நாகரிகப்பயிர் மிக்க செழிப்புடன் ஓங்கி வளரும்.

இப்பொழுது நம்முன்னர் புதிய வினைக்கள் பிறந்துள. பழைய வினைக்களையும் நாம் புது முறையிற் பரிசோதிக்கிறோம். ஜாதி வித்தியாசமும், பால்ய விவாகமும், விதவாவ்யசனமும், மற்றுமநேக விஷயங்களும் நாமொடுக்க முடியாதவாறு மனத்தை வருத்துகின்றன. இத்துரப்பியாசங்களுக்கெல்லாம் ஆதாரமாகப் பெண்டிர் நிற்கின்றனர். அவரிச்சேச விருத்திக்கு விரோதிகளாயிருப்பதினாலேயே ஆசாரச்சீர்திருத்தச் சபையோரிலநேகர் சுறுசுறுப்பாய் வேலைசெய்யாது போகின்றனர். இதற்குத் தக்க ஔஷதம் கல்வியே. அக்கல்வி பழையமுறையிலிருக்குமாயின் இவ்வுயர்ந்த எண்ணங்கள் பெண்டிர் மனத்தில் உதித்தல் அசாத்தியம், அப்படி உதிப்பினும், அவர் அக்கேள்விகளுக்குத் தரங்கூற முயலும் விதம் நமது விதத்தினது; இது சாத்திர விரோதம் என்றும், இது சாத்திரத்துடன் ஒக்குமென்றுங் கூறுவர். சுயஎண்ணமும், சுய அபிப்பிராயமும் உண்டாகாது.—

ஆதலான் பெண்டிர்க்கு ஆங்கிலத்திலேயே கல்வி புகட்டல் தகுதி. அன்றியும், ஒருகாலத்தில் நமது இந்து தேசமெங்கும் ஆங்கிலபாஷையே தாய்ப் பாஷையாக வழங்கக் கூடுமென்று எண்ணுவாருளராகலின், அவ்வெண்ணம் நிறைவேறுவதற்கு வழி பெண்டிர்க்கு ஆங்கிலக் கல்வி புகட்டலே என்பதையுங் காண்க.

N. ராகவாச்சாரியார்.

## நமது மாதர்களுக்கு இங்கிலீஷ் கல்வி அவசியந்தானா? [இல்லை.]

பெண்சாதி கமலம்.—நம்முடைய பெண்குழந்தைகளை இப்பொழுது ஏற்பட்டிருக்கிற புதுப்பள்ளிக்கூடங்களுக்கனுப்ப எனக்கு இஷ்டமில்லை.

புருஷன் கோபாலன்.—ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? படிப்பது எழுதுவது, கணக்குப் பார்ப்பதென்கிற இந்த முக்கியமான விஷயங்களை அவர்கள் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்ளுவார்களல்லவா.

பெண்சாதி.—ஆம், அவைகள் சொந்த பாஷையில் கற்றுக்கொடுக்கப்பட்டால் உபயோகந்தான். நமது பெண்களுக்கு இங்கிலீஷ் பாஷை சுத்தமாக உபயோகமே இல்லை. ஏனென்றால் இங்கிலீஷ் பேசுகிற புருஷர்களையும், பெண் பிள்ளைகளையும் நமது பெண்கள் சந்தித்துப் பேசும் சமயமே கிடையாது. அபூர்வம்.

புருஷன்.—பெண்கள் பள்ளிக்கூடத்தில் படித்தால் அவர்கள் நடவடிக்கை சீராகுமல்லவா.

பெண்சாதி.—சீராகுமென்று நான் சொல்லமாட்டேன். பெண்கள் வீட்டிலேயே இருந்தால் நமது வழக்கப்படி அங்குமிங்குமோடி சுபாவமான பல விளையாட்டுகள் விளையாடுவார்கள். அப்படிச் செய்வதால் பெண்களின் உடம்பு திடப்படும். சந்தோஷமாய் இருந்து வரவும் பழகுவார்கள். அவர்களைப் பள்ளிக்கூடத்தில் நிர்ப்பந்தம் செய்வது, வளரும் பூச்செடிகளைச் சூரியன் பிரகாசம் படாதபடி மூடி வைப்பது போலாம். இதன்றி வீட்டிலிருக்கும்போது அவர்கள் பல உபயோகமான விஷயங்களை நேருக்கு நேராகத் தாயார், அக்காள், தங்கைகள் மற்றப் பெரியவர்களிடத்தில் தெரிந்துக் கொள்வார்கள். இப்பேர்ப்பட்ட சங்கதிகள் பள்ளிக்கூடங்களில் நேர வகையில்லையே. அதற்கு என்ன செய்வீர்கள்? வீட்டிலுள்ளவர்களின் நாக்கு ருசிக்கத்தக்கபடி சமையல்செய்ய, யார் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொடுக்கிறார்கள்? புருஷர்களை உற்றுப் பாராமலிருக்கவும், யாராவது பார்த்தால் அதற்கு நாணும்படிக்கும் அவர்களுக்கு யார் சொல்லிக்கொடுக்கிறார்கள்? பெண்டாட்டிகள் புருஷர்களிடத்தில் மரியாதையாயும், மனோகரமாயும், சாந்தமாயும், நயமாயும் நடந்துக் கொள்வதை அப்போதைக்கப்போது நேராய் பார்க்கப் பள்ளிக்கூடத்திலிருக்கையில் நேருமா? நேரவே நேராது. இதுவன்றி ஸ்திரீ புருஷர்கள் அன்பு பாராட்டி ஒருவருக்கொருவர் நாகரீகமாய் நடந்துக் கொள்ளும் விலாசங்களைக் கண்டு தெரிந்துக் கொள்ளவாவது வழியுமுண்டோ? விவாகமெனும் ஒரு ஸம்பந்தத்தை விருத்திசெய்ய முக்கியமாகிய பொறுமை, சமயோசிதமாயும் சாதுரியமாயும் நடந்துக் கொள்ளும்விதம், இவைகளைப் பள்ளிக்கூடத்தில் தேர்ந்துகொள்ள வகையுண்டோ? இவைகளை ஒரு அன்னியதேச பாஷையில் எடுத்துச் சொல்ல முடியாது. பிள்ளைகளைத் தாயார் வளர்த்தல் முதலிய பற்பல வீட்டு வேலைக்கடுத்த காரியங்களில் தாயாருக்கு உதவி இவ்விதம் செய்யவேண்டும் என்பதையாவது தெரிந்துகொள்ளப் பள்ளிக்கூடம் இடங்கொடுக்குமா? இத்தியாதி காரணங்களால் நமது பெண்களை



நாம்பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவோமானால், அவர்கள் முரடாயும் உபயோகமற்றவர்களாயும் ஆய்விடுவார்களென்று நான் பயப்படுகிறேன். இதல்லாமலும் அவர்கள் நமது தேச வழக்கப்படி நமதுவீட்டு வேலைகளைச் சீராயும் செட்டாயும் செய்துவரத் தக்கபடியுள்ளவர்களாகாமல் கெட்டுப்போவார்கள். நூறு தலைமுறைக்கும் அதிகமான காலந்தொட்டு கிரஹகிருத்திய வியாபாரங்கள் நமது வீடுகளில் நடைபெற்று வருகின்றன. பல குடும்பங்களில் நடைபெற்று வருகின்றன. குடும்பங்களிலுள்ள பெண்களுக்குள் ஒருவிதமான படிப்புத் தானாகவே அவர்களுக்குத் தெரியாமலே வேரூன்றுகின்றது. அந்தப்படிப்பு சாந்தமானதாயும் இயற்கையாகவே உண்டாவதாயும் அதிகப் பிரயோஜன முள்ளதாயுமிருக்கின்றது. இதுதான் நமது பெண்களுக்கு வேண்டிய படிப்பென்று நான் உறுதியாய்ச் சொல்கிறேன். பள்ளிக்கூடத்தில் படிக்கிற பெண்களுக்கு நமது சமய சம்பந்தமான உணர்ச்சிகளும் குணங்களும் எப்படி உண்டாகும். அவைகளைத் தெரிந்துக் கொள்ள அங்கே படிப்பேது. அப்பேர்ப்பட்ட நல்ல குணங்களும் அவைகளினால் உண்டாகும் அடக்கங்களும் உதியாவிட்டால் அவர்கள் கெதி எவ்விதமாகும். அதைப்பற்றி நான் நினைக்கவும் அஞ்சுகின்றேன். நமது தேசத்துப் பெண்கள் நடத்தை வேறு, மற்ற தேசப் பெண்கள் நடத்தை வேறு.

புருஷன்.—உன்னோடு வாதம்பண்ண எனக்கு இஷ்டமில்லை. நீ பள்ளிக்கூடத்தில படித்திருந்தால் பள்ளிக்கூடத்துப் படிப்பு நல்லதென்று சொல்லுவாய். நீ படியாத குறையால்தான் இப்படியெல்லாம் சொல்லுகிறாய்.

பெண்சாதி.—நான் அப்படியே படித்திருந்தால் உங்களோடு இவ்வளவு இன்பமாய் இவ்வளவு காலம் இருந்திருப்பேனோவென்பது எனக்கே சந்தேகமாக இருக்கிறது.

புருஷன்.—வீட்டிலிருக்கும்போது ஒரு பெண் அனேக சங்கதிகளைத் தெரிந்துகொள்ளுகிறாளென்றும், குடும்பவாழ்க்கைக்கு அவைகளெல்லாம் வெகு முக்கியமென்றும் சொன்னாயே. அவைகளை விவரமாய் நீ சொல்லு. அவர்கள் எவைகளை எப்படிப் படிக்கிறார்கள்?

பெண்சாதி.—இதைச் சொல்ல எனக்கு சந்தோஷந்தான். முதலில் ஒன்று சொல்கிறேன் கேளுங்கள். அவர்கள் படிப்பது புஸ்தகப் படிப்பல்ல. தாயார், அக்காள், தங்கைகள், மற்றப் பெரியவர்கள் எப்போதும் நடப்பதைப் பார்த்துக்கொண்டும் அவர்கள் முன்னிலை

யில் பயபக்தியுடன் சுபாவமாய்த் தெரிந்துகொள்ளும் படிப்புத்தான்.
அது குடும்பத்திலுள்ள பெண்பிள்ளைகள், கண்பார்வையைக் கொண்
டே பிரியத்துடன் அப்போதைக்கப்போது குற்றம் குறைவுகள்
தங்கள் பெண்களிடம் கண்டால் அவைகளைச் சரிப்படுத்துவதுண்டு.
பெண்களுக்குச்சுபாவத்தில் தாயார், தமக்கை, முதலானவர் செய்வது
போல வெளிக்காரியங்களைத் தாங்களும் செய்யவேணுமென்கிற எண்
ணம் எப்போதுமுண்டு. ஒருபெண் நடத்தைக் குறைவாக நடந்
தால் அதைத் தமக்கையோ, தாயாரோ, உடனே பார்த்துச்
சாந்தமாகவே கோபித்துக்கொண்டு கண்டிப்பதுண்டு. தன் பெண்
ணின் உத்தரீகம் நழுவி விடுமானால் தாயார் உடனே வெறிக்கப்
பார்த்துவிட்டு அதனை சேர்க்குவாள். இப்படிப் பல சங்கதிகள் ஒன்
றின் பின்னொன்றாய் நடப்பதினாலே ஒருவிதமான நல்ல நடவடிக்கை
உண்டாகி அதனால் சரீரதிடமும் அன்பு ஆதரணைகளும் உண்டாகி
அவைகள் பெண்களுக்கு ஜீவ தசைகளில் உபயோகமுள்ளவைகளா
கின்றன. பெண்களின் சரீர விஷயமான நடத்தைகள் முதல் முத
லில் இவ்விதமாய் அவர்களால் கற்றுக்கொள்ளப் படுகின்றன. ஒரு
வார்த்தையையாவது தொடர் மொழியையாவது ஒரு பெண் அக்
கிரமமாயும், மரியாதையில்லாமலும் விகாரமாயும் தகுதியற்றதாயும்
சொன்னால் உடனே தாயாரோ, அத்தையோ, தமக்கையோ, வேறு
ள்ள பெரியவர்களோ அதை அப்பொழுதே கண்டித்துச் சரிப்
படுத்தி விடுகிறார்கள். இப்படிச் சம்பாஷணை விஷயமான நடத்தை
நெடுகிலும் கற்றுக்கொள்ளப்படுகிறது. தெய்வ வந்தன வழிபாடு
களும் சமய சம்பந்தமான காரியங்களும் நேரே கண்ணாற் பார்ப்ப
வைகளினாலேயே ஏற்படுகின்றன. பெண்கள் தங்கள் சரிவயசுப்
பெண்களோடு விளையாடிச் சிறு பாத்திரத்தில் கூட்டாஞ்சோறு
சமைத்துத் தனக்கும் தோழிகளுக்கும் போட்டுக்கொண்டு சாப்பிடு
கிறதுண்டு. எல்லாருமாகப் பண்ணின சமையல் நன்றாய் இருக்கிறதா
இல்லையா வென்று பார்ப்பார்கள். கொஞ்சம் கெட்டுப்போயிருந்
தால் எல்லாருமாய்க் கைகொட்டிச் சிரிப்பார்கள். சமயலில் இவ்
விதமாகப் பழக்கம் செய்யப்படுகிறது. குழந்தைகளுக்குக் காலையி
லும் மாலையிலும் இப்படிப் பெண்களே சமையல் செய்வதுமுண்டு.
இதல்லாமல் தாயார் வெந்நீர் அறையில் குளிக்கும்போது பெண்கள்
அங்கேபோய் ஒத்தாசை செய்வதுண்டு. புருஷர்கள் அங்கே போகிற
தில்லை. வெந்நீரோ, பச்சை ஜலமோ வேண்டியதைப் பெண்கள்
தாயாருக்கு வேண்டும்போது எடுத்துக் கொடுப்பதுண்டு. தாயாரு



க்கு அரப்புத் தேய்த்து விடுகிறதுமுண்டு. இதுபோலவே தாயார்
புடவை உடுத்திக் கொள்ளும்போதும். தலைவாரிக் கொள்ளும்போ
தும் வேறு அலங்காரம் பண்ணிக்கொள்ளும்போதும், பெண்கள்
உதவி செய்வதுண்டு. நகைப் பெட்டியிலிருந்து நகைகளைப் பெண்
கள் எடுத்துவந்து தாயாரிடம் கொடுக்கும். தாயார் சிலவற்றை எடுத்
துக்கொண்டு பாக்கி நகைகளைப் பெட்டியில் பந்தோபஸ்தாய் கொ
ண்டு போய் வைக்கும்படியும் செய்கிறார்கள். சில சமயங்களில்
தாமாகவே சமையல் செய்துகொண்டு தாயாருக்கு வேண்டிய
காரியங்களிலும் சந்தோஷமாய் உதவி செய்வதுண்டு. தாயார்
ஏதாவது விரதம் பூஜைபண்ணினால் பெண்கள் குதூகலத்துடன்
புஷ்பம், கற்பூரம், சாம்பிராணி, பழம், விளக்கு முதலிய சகல
சாமான்களையும் கொண்டுவந்து கொடுப்பதுண்டு. இப்பேர்ப்
பட்ட சமயங்களில் தாயார் அன்போடு பெண்களைச் சந்தோஷ
மாய்ப் பார்த்துக் களிப்பது பெண்களுக்குக் கிடைக்காதது கிடைத்
ததுபோல் அதிக சந்தோஷத்தையுண்டாக்கும். பள்ளிக்கூடத்தில்
வெகுமதியாகக் கொடுக்கப்படும் சில்லரை நகை கடியாரம் முதலிய
சாமான்கள் தாயாரின் கருணை நிறைந்த சந்தோஷமுள்ள பார்வைக்
கிணையாகுமா? இப்படித் தாயாருக்கு வேண்டிய பணிவிடைகளை
யெல்லாம் செய்துவிட்டுப் பெண்கள் உடனே தகப்பனாரிடம் போய்
அவைகளைச் சொல்வதுண்டு. தகப்பனார் அதைக் கேட்டுச் சந்
தோஷத்துடன் புன்சிரிப்புக் காட்டுவதுண்டு. பள்ளிக்கூடத்தில்
பெண்களுக்கு வெகுமதி அளிக்குங்காலத்தில் அந்நிய தேசத்துஸ்திரீ
சபாநாயகியாயிருந்து கொண்டு பெண்களின் கையைப் பிடித்துக்
குலுக்குவது தகப்பன் காட்டிய புன்சிரிப்புக்கு இணையாகுமா? இப்
படிப் பெண்கள் தினந்தோறும் படிக்கும் படிப்பைப்பற்றி நான்
எடுத்துச் சொல்வதைக் காட்டிலும் நீங்கள் நிதானித்துக் கொள்
வதே சிரேட்டமாகும். தாயார், தகப்பனார்கள் அடிக்கடி நடந்துக்
கொள்ளும் விதங்களையெல்லாம் கண்ணாரப் பார்த்து அவ்வழியாக
பல சங்கதிகளைப் பெண்கள் அறிந்துக் கொள்கிறார்கள். அந்த
அறிவு பிறகு பெண்களுக்கு வெகு உபயோகமாகின்றது. ஏழைப்
பெண் பிள்ளைகளுக்குத் தாயார் மிகுந்த காய், கறிகள், விறகு, பழந்
துணி முதலியவைகளைக் கொடுத்து ஆதரிப்பதையும் ஏழைகள் தாயா
ரைச் சிலாகிப்பதையும் தாயார் எப்படி ஏற்றுக்கொள் ளென்பதையும்
பெண்கள் கண்ணாரப்பார்ப்பதுண்டு. வாசலில் ஏழைப் பரதேசி வந்து
கெஞ்சிக்கேட்க ஏழைகளுக்குத் தருமம் செய்வதுதான் சுவாமிக்குச்

செய்யும் பெரிய பூஜை யென்று சொல்லிக்கொண்டு பாட்டுகளாக அதைப்பாடும்போது தாயார் சொற்படி பெண்குழந்தைகள் உள்ளே போய் பிடி அரிசியைஅந்தப் பிச்சைக்காரனுக்குப் போடுவதுண்டு. அந்த ஏழைசெய்யும் ஆசிர்வாதத்தைப் பெண்பெற வேண்டுமென்று இப்படிக்கொத்த காரியங்களைப் பெண்ணைக் கொண்டே செய்விப்பது தாயார்கள் வழக்கம். இப்படிப் பெண்கள் பிறருக்கு உதவி செய்யும் விதத்தை தங்களுக்குத்தெரியாமலே கற்றுக்கொள்கின்றார்கள். அதாவது சுபாவமாகவே தெரிந்துகொள்ளுகிறார்கள்.

தி. வெங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப்பண்டிதர், சென்னை.

## CORAL—பவளம்.

பவளம் இன்னதென்று சிறுமியர்க்குங் கூடத் தெரிந்தும், அதன் குணோற்பத்திவிஷயத்தில் பெரும்பான்மையோர் தப்பபிப்ராயங் கொண்டிருக்கின்றனர். இது ஒரு கொடியென்றும், அதை ஜனங்கள் சமீபித்த காலத்தில் அவர்கள்மேல் சீறிப்பாய்கிறதென்றும், ஆகையால் தூரத்திலிருந்து நறுக்கி எடுக்கின்றார்கள் என்றும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கலாம். ஐரோப்பிய தேசத்தவரும் சுமார் நூறு வருஷங்களுக்கு முன், பவளம் ஒரு சிறு செடி யென்றும், அது சமுத்திரத்திற்குள் முளைத்து வியாபிக்கிறதென்றும் நம்பி யிருந்தனர். தற்காலத்திய சாஸ்திர ஆராய்ச்சியால் இப்பிரபஞ்ச வஸ்துக்களின் நிஜஸ்திதி குணம் முதலியவைகள் தெரிய வந்திருப்பதால், சர்வ சாதாரணமாய் எல்லோரும் பார்த்திருக்கும் இவ்வஸ்துவைப்பற்றி நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது முக்கியமானது.

இது ஒரு விதசமுத்திர ஜந்துவினின்றும் உற்பத்தியாகிறது. இஜ்ஜந்துக்கள் அதிகக்குளிர்ச்சி யில்லாத சமுத்திரங்களில் 60-அடி முதல் 180-அடிக்கு மேல்படாத ஆழத்தில் இருக்கின்றன. ஆகையால் சாதாரணமாய்ப் பவளங்கள், இதற்கதிகமாய் ஆழமான இடங்களில் உண்டாகமாட்டா. சேறு, மண் முதலியவைகள் இப்பவளப் பூச்சிகளுக்காகமாட்டாவாகையால், சமுத்திர அடியில் கற்பாறையுள்ள இடங்களில் இப்பூச்சிகள் வசித்துவந்து, அளவில்லாமல் விருத்தியடைந்து தங்கள் தேகத்தினின்றும் உண்டாகிற ஒருவிதக் கெட்டியான வஸ்துவைக் கொண்டு பவளப் பாறைகளை உற்பத்தி செய்கின்றன.



வியாபாரத்திற்கு வருகிற பவளங்கள் விருட்சங்களுக்கிருப்பது போன்ற கிளைகளுள்ளனவாயிருக்கின்றன. பவளப் பாறைகளினின்றும் வெட்டி யெடுப்பதற்குமுன் இந்தக் கிளைகள் எல்லாம் ஒருமாதிரி வெளுப்பான தோல்போன்ற வஸ்துவால் மூடப்பட்டு, வழுவழுப்பும், பளப்பளப்புமுள்ளதாயிருக்கும். இக்கிளைகள் மேல்பாகத்தில் எண்ணிறந்த மிக நுண்ணிய முட்டைகள் போன்றவைகளிருக்கின்றன. இவற்றின் ஒவ்வொன்றுக் குள்ளும் ஒரு பவளப்பூச்சி இருக்கின்றது. இவ்வித அழகிய சிறு ஜந்துக்களையே பவளப் புஷ்பமென்று எண்ணி வந்தார்கள்.

பவளங்களின் வர்ணங்கள் சுத்தவெளுப்பு முதல் கொவ்வைப் பழம்போன்ற சிவப்பு வரையில் நானாவிதங்களாயிருக்கின்றன. அவற்றின் விலை நிறத்தையும், பரிமாணத்தையும் பொறுத்ததாயிருக்கிறது. ரோஜா வர்ணப்பவளம் எல்லாவற்றைப் பார்க்கிலும் அதிக விலையுள்ளது.

உஷ்ண சமமான பிரதேசத்திய சமுத்திரங்கள் எல்லாவற்றிலும் பவளங்கள் இருந்தபோதிலும், வியாபாரத்திற்கு வருகிறவைகள், பெரும்பான்மை மத்தியத்தரைக்கடலி (என்றால் ஆசியா, ஆபிரிகா, ஐரோப்பா கண்டங்களுக்கு மத்தியிலிருக்கிற சமுத்திரம்) லினின்றும் எடுக்கப்படுகின்றன. இதை எடுக்கும் விதம்: இரண்டு இரும்புத் துண்டுகளை குறுக்கும் நெடுக்குமாய் கிறிஸ்தவர் கோவில்களில் காணப்படும் சிலுவைபோல் அமைத்து அவற்றின் நுனிகளில் வலைகளைக் கட்டி இக்கனமையான இயந்திரத்தினால், பவளப்பாறைகளை இடித்து, அத்துண்டுகளை வலையில் வாரி எடுப்பார்கள். முத்துக்கள் எடுப்பதுபோல், சமுத்திரத்தில் முழுகிக்கூட எடுப்பதுமுண்டு. வெகுகால முதல் பவளங்கள் ஆபரணத்திற்கும் அலங்காரத்திற்கும் வழங்கப்பட்டுவருகின்றன. 2,000-வருஷங்களுக்கு முன்னிருந்த ரோமன் ஜாதியர்கள் இவைகளைக் குழந்தைகளின் கழுத்தில் இரட்சையாகக் கட்டி வந்தனர். தற்காலத்தில் இட்டாலியா தேசத்தவர்கள் திருஷ்டி தோஷம் படாமலிருப்பதற்கும், ஸ்திரீகளின் மலடு நிவாரணத்திற்காகவும், இதைக்கட்டிக் கொள்கிறார்கள். நமது தேசத்து மாதர்கள் இவற்றை மாலையாய்ச் செய்து அணிந்துவருவது யாவர்க்கும் தெரிந்த விஷயம்.

வருஷந்தோறும் 2-கோடி ரூபாய்க்கதிகமாகப் பவள வியாபாரம் நடக்கிறது. சிரேஷ்டமான பவளத்தின் விலை ஒரு அவுன்சு நிறை

ரூபா 1,000-முதல் ரூபா 3,000-வரைக்குமிருக்கின்றது. இவ்விதமாய் விலையுயர்ந்து கொண்டாடப்பட்டு வருகிற பவளத்தில் சேர்ந்திருக்கும் வஸ்துக்கள் முக்காற்பங்கு மேல் சுக்காலும், கொஞ்சம் அயமும், மாகினீஸியா என்று சொல்லப்பட்ட ஒரு வஸ்துவும், ஆகிய இவைகளே.

S. A. பஞ்சாப்கேசய்யர் B. A. L. T.

## இந்தியாவும் ஸ்திரீகளும்.

ஒரு தேசம் நற்கதியடைதல் அத்தேசத்து ஸ்திரீகளினாலேதான். ஸ்திரீகளினிடத்தில் மரியாதையாய் நடத்தல் நாகரீகமான ஜனங்களுக்கு அடையாளமாம்; அவர்களைத் தாழ்வாய் இகழ்தல் அநாகரீகமான காட்டு ஜனங்களினும் கேடுகெட்டவர்களின் குணமாம். இவைகளை நன்றாய் ஆராய்ந்தறிந்தும், இத்தேசத்துப் பெண்கள் எவ்வளவு தாழ்ந்த நிலைமையில் இருக்கிறார்கள் என்று நாம் கவனிக்கவேயில்லை. இந்தியா முழுதும் சுகமாயிருக்கவேண்டுமென்று முயன்று வரும் வெகு காலந் தொடங்கி நாகரீகத்தைப் பெற்ற நம்தேசத்தவர் கல்வியில் சிறந்த பயிற்சியடைந்தவர, பெண்கள் மாத்திரம் இதில் மிகுதியாய் பின் தங்கிவிட்டார்கள். அவர்களைக் குற்றஞ் சொல்ல சிறிதேனும் இடமில்லை. நம்மிடத்தில் அப்பிசகு இருக்கிறதென்று மனவெட்கத்துடனே ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எவ்வளவு தான் தாய் தந்தையர்கள் தம்மிடத்தில் இருக்கும் வரையிலும் 3 அல்லது 4-வருஷங்களுக்குள்ளாக நமது பெண்களைப் படிக்க வைத்தாலும், குணநிசையங்களெல்லாம் மாறி கடைசியாக ஸ்திரப்படும் முதிர்ந்த பருவங்களை தமது கணவனிடத்தில் கழித்தலால், அவர்களைக் கல்வியில் தேற்றல் கணவனது கடமையே முக்கியமாக ஆகும். கணவன் அறிவில்லாதவனாய் இருந்தால், தாய் தந்தையர்கள் செய்யும் முயற்சியும் வீணேயாகும். அவர்கள் வாழ் நாள் முழுவதும் பரிதவிக்கும்படி கெட்டுப் போகும்.

ஸ்திரீகள் உணரவேண்டிய கல்விகள் அனைவரும் அறிவர். இவைகளை இன்னும் எவ்வளவு குறைவாக கற்றுவருகிறார்கள் என்பதை நாம் சிறிதும் அறியாமலும் கவனிக்காமலும் இருக்கிறோம். உதாரணமாக, பெண்கள் கற்கவேண்டிய முக்கியமான விஷயங்களில் ஒன்று



சங்கீதம். இதில் அவர்களுக்கு எவ்வளவு பயிர்ச்சி இருக்கிறது என்று யோசித்தால் நமக்கே ஆச்சரியமாயிருக்கிறது. சங்கீத வாத்தியங்களை வைத்துக்கொண்டு நல்ல பாட்டுகள் கற்றுவரும் பெண்கள் எவ்வளவுபேர்? மிகவும் குறைவே. இதற்குக் காரணம் நாம் கவனிக்காமல் அலட்சியம் செய்வதோடுகூட, அவர்கள் நமது வாழ்நாளை சுகவாழ்க்கையும் நல்வாழ்க்கையுமாக செய்யக்கூடியவர்கள் என்று அறியாமல், அவர்கள் நம்மைப்போன்ற மானிட ஜந்து என்று மறந்தே விட்டோம். நாம் நம்பக்கூடாததாயினும், இது மிகவும் நிஜமானதே. இப்படியே தான் மற்ற ஒவ்வொரு கல்விகளும் இருக்கிறது என்று நாம் அறியவேண்டும்.

பெண்கல்வியைப்பற்றி கவனஞ்செலுத்துபவர் பலரும் அவர்கள் தேகப்பயிற்சியைப்பற்றி மறந்துவிடுகிறார்கள். தேகபயிற்சியும் ஒரு கல்விதான் என்று நாம் உணராதது மிகுதியாக விசனிக்கத்தக்கதே. மேலும், இக்காலம் விரைவாக மாறி வருகிறதற்கேற்ப, நாமும் நமது நடைகளை மாற்றி வரவேண்டும். பட்டணங்களிலும் நகரங்களிலும் வசிப்பதால் தாம் கிராமங்களில இருக்கும்போது செய்துவந்த சில முக்கியமான தொழில்களின் பலன்களை இழந்துவருகிறார்கள். பல தோழிமார்களுடன்கூடி விளையாடுவதால் சிநேகத்துக்குரிய பலன்களையும், தூரத்திலிருந்து நீர் கொணர்தல், கிணற்றிலிருந்து நீர் எடுத்தல், கோவிலுக்கு நடத்தல், இவை போன்ற தேகப்பயிற்சியா ண்டாகும் தேக சக்தியும் திடமும் இப்பொழுது இழந்துவருகிறார்கள். ஆண்பாலர்கூட முன்னைக்காட்டிலும் இப்பொழுது அதிக கபலம் உடையவர் என்று நிச்சயமாகச் சொல்லக்கூடவில்லை. னால் பெண்களுக்கு சரீர பலம் குறைந்துவருகிறது என்று உறுதி கச் சொல்லலாம். இது நாம் அதிகமாக கவனிக்கத் தக்கது.

நாம் ஸ்திரீகளைக் கற்பிக்க தகுந்த போதுமான முயற்சிகள் செய்யவில்லையென்பது அவர்களின் தற்கால நிலைமையாலேயே அறிவோம். ஜப்பானியர் சென்ற 30-வருஷங்களுக்குள்ளாக ஸ்திரீகளை இவ்வளவு உன்னத நிலைமைக்கு எப்படிக் கொண்டு வந்தார்கள் என்பது ஒரு ஆச்சரியந்தான். யுத்தத்தில் காயம் பட்டவர்களுக்கு வைத்தியஞ் செய்ய ஐரோப்பாவில் பல கூட்டங்களும் (Societies) ஆஸ்பத்திரிகளும் ஏற்பட்டன. இவ்வருமையான தொழிலின் பெருமையும் அருமையும் அறிந்த ஜப்பானியர் தாமும் அவ்விதமாக ஏற்படுத்த நிர்மாணித்தார்கள். இதற்கு முக்கியமானவர்களாகிய ஸ்திரீகள் தெருக்களிலும் வீதிகளிலும் பிரசங்கம் செய்து வந்தார்கள்; இதைப்

பற்றி ஸ்திரீகள் படிக்கக்கூடிய ஏற்ற புத்தகங்கள் பதிப்பித்து வந்தார்கள்; "விசித்திர விளக்கு" (Magic Lantern) நாடகம் முதலிய பல நூதனமான வேடிக்கைகள் காட்டி வந்தார்கள். கடைசியாக ஜப்பான் சக்கிரவர்த்தினியே தமது உறவினர்களுடன் நாதிகளுக்குரிய வித்தைகளைக் கற்க ஆரம்பித்தார். ராஜவம்சத்தைச் சேர்ந்த ஸ்திரீகளும், சிறந்த தனவான்களின் பெண்களும் ஒரே மனத்துடன் முன் வந்தார். ஜப்பான் இப்போது, ஐரோப்பாகண்டத்து ராஜியங்களைக் காட்டிலும், உலகத்து எல்லா தேசங்களைக் காட்டிலும், அதிக பெரிய சிறந்த யுத்த ஆஸ்பத்திரியுடைத்தாயிருக்கிறது. ஜப்பானிய ஸ்திரீகள் ஒவ்வொருவரும் வைத்திய சாஸ்திரத்தை நன்றாக அறிந்தவர்கள். நமது பெண்கள் இச்சாஸ்திரத்தைச் சரியாக அறியாமலேதான், எத்தனையோ ஆண் பெண் குழந்தைகளை கேடும் ஆபத்தும் நேரிடும்படி கெடுத்து விடுகிறார்கள். ஜப்பானியர் முயற்சிகள் செய்யும் மாதிரிக்கு மற்றொரு உதாரணம். ஜப்பான் ஒரு தீபகற்பமாயிருந்த போதிலும் ஜப்பானியர்கள் கப்பலில் மாலுமிகளாய்ப் போதல் அவ்வளவு பெருமையாக நினைக்கவில்லை. ஆகையால் கப்பற் படைக்கு மாலுமிகள் வந்து சேரவில்லை. உடனே சக்கிரவர்த்தி தமது ராஜகுமாரனையும் மற்றும் பல பிரபுக்களையும் கப்பற் படையில் சேர்த்தார். உலகத்திலுள்ள கப்பற் படைகளில் மூன்றாவதான ருஷியப் படையை இச்சிறு தேசம் இப்பொழுது முழுவதும் அழித்துவிட்டது. ஒரு காரியத்தை நன்றாக யோசித்து, பிறகு உறுதியாக தீர்மானித்து, ஒரே மனதாய் தகுந்த முயற்சிகள் செய்துவரும் ஜப்பானியரைக் கண்டாவது இனி நாம் கற்றுக் கொள்வோம். ஸ்திரீகளை தகுந்த வழியில் கற்பித்து அவர்களை உன்னத பதவிக்கு கொண்டுவந்தாலல்லது, இந்தியா முன்னுக்கு வரவேண்டுமென்று கருத இத்தேசத்துப் புருஷர்கள் வெகு பாடுபட்டுச் செய்யும் முயற்சிகளெல்லாம் வீணாகத்தான் போகும்.

T. S. V.

## சுகாதாரம்.

சகோதரிகளே! சுகமானது மனிதப் பிறவிக்குத் தேடிக்கொள்ள வேண்டிய நன்மைகளில் முதன்மையானது. உலகத்தில் ஜனனமாய் விட்டால் ஜனனகாலம் முதல் மரணகாலம் வரை பிணி பீடைகள்



நேரிடாமல் காத்துக்கொள்ளவேண்டியது அவரவர்கள் பொறுப்பேயாகும். உயிர் வெல்லம் பட்டபாடாகவிருக்கும் நமக்கு அதைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்கு வேண்டிய உபகரணங்களை தேடிக்கொள்ள நாம் மறந்துவிடுகிறோம். ஒரு குடும்பத்திற்கு நாயகி நாயகர்களே தலைமைப் பட்டவர்கள். நாயகன் ஓடி ஆடிப் பொருள் சம்பாதனம் செய்து வீட்டிற்குள் அவைகளைக் கொண்டுவந்து சேர்ப்பவன். நாயகியோ நாயகன் வீட்டிற் கொண்டுவந்து சேர்த்த பண்டம் முதலியவைகளைச் சிந்தாமல் சிதறாமல் அதற்கு வேற்பட்ட இடங்களில் அழகாய் அமைத்து அடக்கமாய் ஆண்டுவரவேண்டியவள். அவள் குடும்ப விருக்ஷத்திற்குத் தாய் வேர். அவளிடமிருந்துதான் குடும்ப விருக்ஷத்தின் கிளைகளான குஞ்சு குழந்தைகள் பலம் பெறவேண்டும். ஆகவே குடும்பத்தின் நாயகிதான் குடும்ப சுகத்திற்கு முக்கியமானவள். நல்லது குடும்பத்தின் தேக சுகத்திற் காதாரமுள்ளவை இன்னின்னவை யென்று இவ்விடத்திற் சொற்பம் கூறுவோம். ஆமாம் நாயகிகள் எல்லோருக்குமே மேற்கூறிய எட்டம்சங்களையும் நன்றாய்ந்து நடத்தும் திறமையுண்டோ?

மாசறக் கற்றவளாயிருந்தால் எப்படி ஆடை ஆபரணங்களால் உண்டாகும் அழகு அழகல்ல. ஆனால் குணவழகே அழகென்று அறிவாளோ அப்படியே 'நோயற்ற வாழ்வே வாழ்வு' என்று அவள் கண்டுகொள்வாள். ஏனைய ஸ்திரீகள் பூர்வ புண்ணிய வசத்தால் நாம் பிறந்த மதாசார வழிகளை கைப்பிடியாய்ப் பிடித்து நடத்தினாலும் சுகவழியையே காட்டும். மேலேகண்ட இருவழிகளிலும் சம்பந்தப்பட்ட ஸ்திரீகள் சிறுபான்மையோரென்னும் அவர்களை சீர்படுத்துவது அவரவர்கள் நாயகனின் கடமையாகும். "சாஸ்த்ராயச சுகாயச" நமது சாஸ்திரங்கள் அதாவது நீதிமார்க்கங்கள் சுகவழிகளே. அதாவது தினம் தினம் காலையில் பல்தேய்த்து முகம் கழுவி ஸ்நானம்செய்ய வேண்டும். அன்றாடம் துவைத் துணர்த்திய மடி ஆடை உடுத்தல் வேண்டும். பாத்திரம் பண்டங்களை பழம் பற்றன்றி சுத்தமாய்த் தேய்த்துக் கழுவவேண்டும். குழந்தைகளைக் கழுவிப் பொட்டிட்டு நல்ல ஆடையுடுத்தல்வேண்டும்.

அன்று கொய்துவந்த போசனப் பதார்த்தங்களைச் சமைத்தல் வேண்டும். நல்ல நீரோட்டத்தில் எதிர்முகமாய் நீராடல் வேண்டும். நல்ல நீரில் நீர் மொள்ளல் வேண்டும். வீட்டைக் குப்பை கூளங்கள் சேராமல் கூட்டிக் கழுவி வைக்கவேண்டும். பாத்திரம் பண்டங்களை சிந்தாமல் சிதறாமல் அததற்குள்ள இடங்களில் வைத்தல் வேண்டும்.

வீட்டின் நாயகன் குழந்தைகள் இவர்களுக்கு நல்லன்னம் தயாரித்துப் போட்டு வரவேண்டும். மற்றப்படியான குடித்தனப் பாங்கிற்குள்ள ஒவ்வொரு விஷயங்களையும் ஊக்கத்தோடு கவனித்துச் சீர்தூக்கி வரல்வேண்டும். விருந்தோம்பல் தன்னால் இயன்றளவு பிச்சை இடல் வேண்டும். இத்தியாதிய நீதி மார்க்கங்களை வழுவற நடத்தும் நாயகியே நல் நாயகி. அவளே இல்லற தர்மத்திற் கேற்றவள். அவளே சுகவழி அறிந்தவள். அவளிருப்பிடமே லட்சுமி விலாசம்.

எளியவர்கள் அழுகிப்போன பதார்த்தங்களைத் தள்ள மனம் வராதவர்களாய் அதைச் சமையல் செய்துவிடுகிறதை நாம் பார்த்திருப்பதுண்டு. அந்தப் பதார்த்தங்களை உபயோகித்தலாகாது. அவைகளை உண்பதால் நோய் நொடிகள் வரும். நல்லிரத்தம் கெட்டுப் போகும். எளியவர்களாயிருந்தாலும் இரண்டொரு நல்ல பதார்த்தங்களைச் செய்துகொண்டு அதை உண்டு நல்ல சரீரிகளாயிருப்பதே மேன்மையாகும். சாமான்னிய குடும்பங்களில் ஸ்திரீகள் பொதுவாய் விசேஷ வேலைகள் செய்யவேண்டி வருகிறது. அப்படியுள்ள குடும்ப ஸ்திரீகள் தங்கள் தேகத்தை அடிக்கடி பிரத்தியேகமான துண்டுகளை வைத்து வேர்வைகளைத் துடைத்துக்கொள்ளவேண்டும். சமையலறைகள் பொதுவாய்ப் புழுக்கமுள்ளவைகள். அவ்விடங்களில் விசேஷக் காற்றோட்டத்திற்கு இடமில்லை. ஆனதினால் சமையல் செய்யும்போது உடம்பில் அடிக்கடி வேர்வை உண்டாகும். பொதுவாய் மேற்குல ஸ்திரீகள் தினமும் காலையில் பற்தேய்த்து முகம் கழுவிக் குளித்துவிடுவார்கள். அப்புறம் சமையல் வேலைக்குப் போவார்கள். சமையல் செய்தபின் வேர்வைகளைப் போக்கக் குளிப்பது வழக்கமில்லை. அன்றிக் குளிப்பதும் சரீர சுகத்திற்கு உசிதமானதல்ல. ஆகவே ஈரத்துணியால் துடைத்துக்கொள்வதே உசிதமாகும்.

D. நடேசய்யர்.

## சமாசாரக் குறிப்பு.

**இடாலிதேசத்து தாய் ராணி:**—இடாலி தேசத்து தாய் ராணியார் ஜப்பான் தேசத்திற்கு யாத்திரை புரியத் தயார் செய்துகொண்டிருக்கின்றார்.

**விதவை மறுமணச்சட்டம்:**—விதவை மறுமணச்சட்டம் இந்தியா கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட தினத்தின் வருஷாந்திர விசேஷம் இம்மாதம் 25-ந்தேதி பம்பாயிற் கொண்டாடப்படும். அப்போது முக்கிய ஆசாரத் திருத்தக்காரர்கள் பிரசங்கம் புரிவார்கள்.

**அமெரிகா அதிபதியின் குமாரத்தி:**—ரூஸ்வெல்ட் அதிபரின் குமாரத்தியும் அமெரிகா யுத்த காரியதரிசியாகிய மிஸ்டர் டாப்டும் ஜப்பானுக்கு வந்திருக்கிறார்கள். சென்ற வியாழக்கிழமையன்று இவ்விருவரும் டோகியோவில் மிகாடோ சக்ரவர்த்தியுடன் பேட்டிசெய்து கொண்டார்கள். மிகாடோ இவ்விருவர்க்கும் தமது அரண்மனையில் விருந்தளித்தார்.



**வேல்ஸ் இளவரசரைப் போலவும் அவரது மனைவியைப் போலவும் பிரதிமைகள்.**—வேல்ஸ் இளவரசரும் அவரது மனைவியாரும் வந்து சென்றதென அடையாளமாக கல்கட்டா விக்டோரியா ஹாலில் அவ்விருவரைப்போலவும் பிரதிமைகள் செய்துவைக்கப்போவதாய் H. E. அகாகான் தெரிவித்திருக்கிறார். இங்கிலண்டில் ஓர் திறமை மிக்க சிற்பியிடம் பிரதிமைகளுக்கு உத்திரவனுப்பியாய் விட்டது.

**விதவா விவாகம்:**—ஆமதாபாத் விதவா விவாகச் சங்கத்தாரின் மேற்பார்வையின் கீழ் ஜூலை 25-ந்தேதி அந்நகரத்தில் ஓர் கைமை மணம் நிகழ்ச்சி பெற்றது. பெண்ணும் மாப்பிள்ளையும் பிராமண குலத்தவர்களே. பெண்ணுக்கு ராதாபாய், அல்லது மணி என்று பெயர். இம்மாதுக்கு 2-வயதுக் கைக்குழந்தையாயிருக்கும்போதே விவாகம் நடத்தப்பட்டது. 5-வயதில் குழந்தை விதவையாகிவிட்டாள். இப்போது இவளுக்கு வயது-21. மணமகன் பெயர் பிரேமாநந்தப் பிரபுராம். இவ்வருஷம் தொடங்கியதுமுதல் ஆமதாபாத் சங்கத்தாரால் இத்துடன் 3-கைமை மணங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

**சக்ரவர்த்தி குமாரர்:**—எட்வர்டு சக்ரவர்த்தியின் பட்டத்துக் குமாரரும் அவரது தேவியாரும் இவ்வருஷம் நவம்பர் மாதம் 9-ந்தேதி மாலை பம்பாயில் வந்திறங்கி வட இந்தியா, பம்பாய், முதலிய இடங்களிலெல்லாம் யாத்திரை புரிவார்கள். 1906-ம் வருஷம் ஜனவரி மாதம் 24-ந்தேதி சென்னை நகரத்துக்கு வரப்போகிறார்கள். பம்பாய் நகரத்து ஸ்திரீகள் சக்ரவர்த்தி குமாரரின் தேவிக்கு நல்வரவு கூறி உபசாரனை செய்யப்போகின்றார்கள். நமது சென்னை மாதர்களும் அவ்வரசியை நேரில் உபசரிப்பதற்கு வேண்டிய யத்தனங்கள் புரிவரென நம்புகின்றோம்.

**ஐக்கிய மாகாணங்களில் பெண்கல்வி:**—ஐக்கிய மாகாணங்களில் பெண்கல்வியை விருத்திசெய்யும் வழிகளைத் தேட நியமிக்கப்பட்ட கமிட்டியார் பெண்களுக்குப்பள்ளிக்கூடங்களில் படிப்பு சொல்லிக்கொடுக்கப்படுவதோடு பள்ளிக்கூடங்களில் போய் வாசியாத பெண்களுக்கு அவர்களுடைய வீடுகளிலேயே படிப்பு சொல்லி வைக்கவேண்டியது அவசியமென்றும், அவர்களுள் ஏழைகளுக்கு புஸ்தகம் முதலியன வாங்கிக் கொடுக்கவேண்டுமென்றும், அங்கங்கே லோகல் கமிட்டிகள் ஏற்படவேண்டுமென்றும், அடிக்கடி காட்சிக்கூட்டங்கள் கூட்டப்படவேண்டுமென்றும், பெண்கல்வி விசாரணை அதிகாரிகள் படிக்கும் பெண்களின் வீடு சென்று அவர்களுடைய குடும்பத்தாருடன் கலந்து அவர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்றும் ஒரே மனதாய்த் தீர்மானித்துவிட்டார்கள். லெப்டினண்ட் கவர்னரும் அவர்களுடைய சிபார்சுகளை அங்கீகரித்துவிட்டார். இப்போது பெண் பள்ளிக்கூடங்களுக்கு வாத்திமார்கள் அகப்படுவதுதான் கஷ்டமாயிருக்கிறதாம்.

**வெள்ளையர் வீட்டுத் வேலைக்காரிகளும் "ஆயா" மார்களும்:**—இந்தியாவில் வெள்ளையர் வேலைக்காரிகளுக்கும் "ஆயா" மாருக்கும் சிறிது கஷ்டமடைகின்றார்களென்பதை எவரு மறியாதாரில்லை. மிகுந்த தாழ்ந்த வகுப்பு ஜனங்களைத் தவிர மற்றப்படி வெள்ளையர் வீடுகளில் சென்று சிறு தொண்டு செய்து பிழைக்க இந்தியர்கள் யாவரும் உடன்படமாட்டார்கள். நமது நாட்டு ஜாதி வித்தியாச முறையினால் எத்தனை கெடுதிகள் உண்டாயிருந்தபோதிலும் இந்த ஒரு விஷயத்தில் அம்முறையபற்றி நன்மையே விளைந்திருக்கிறதென்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். இப்போது "சிங்கப்பூர் பிரீ ப்ரெஸ்" என்ற பத்திரிகையொன்று ஐரோப்பியரின் பொருட்டு ஓர் உபாயந் தெரிவித்துக் கொடுக்கின்றது. அதென்னவெனில், ஜப்பானிய யுத்தத்தில் லக்ஷக்கணக்காக மரித்த ஜப்பானிய வீரரின்

வீட்டு அநாதை மாதர்களைத் தருவித்து வேலைக்காரிகளாகவும் "ஆயா"மார்களாகவும் ஐரோப்பியர் உபயோகப்படுத்திக்கொள்ளலா மென்கின்றது. ஜப்பானிய மாதர்கள் பணிவுக் குணமும் ஊக்கமும் அன்பும் நன்றியு முடையவர்கள். அவர்களது தேகசுத்தம், உடைச் சுத்தம் முதலியன உலகறிந்த விஷயங்களாகும். ஆதலின், அம்மாதர்களை இங்கு தருவித்துக்கொள்ள முடியுமாயின் ஐரோப்பியர்களுக்கு அனுகூலந்தான். ஆனால் அது சாத்தியமாகுமா என்பதுதான் சந்தேகம். ஜப்பானுக்கு அபார வெற்றியளித்த மகா வீரர்களின் சுற்றத்து மாதர்களை ஜப்பானிய இராஜாங்கத்தார் தக்கபடி சம்ரக்ஷணை செய்யாமல் இந்தியாவில் வந்திருக்கும் ஐரோப்பிய அகம்படிகளின் வீட்டிற்குத்தொண்டு செய்ய அனுப்புவார்களென்று நாம் நம்பவில்லை.

**மைசூர் கவர்ன்மெண்டார் விதவைக் கல்விக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்தல்:—** விதவைகளுக்குள்ளே கல்வி விருத்திசெய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் அதற்கென்று மைசூர் கவர்ன்மெண்டார் பிரத்தியேகமான ஸ்காலர்ஷிப்புகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஸ்காலர்ஷிப்புகள் ஜூலை மாதம் 10-ந்தேதி முதல் தரப்படுகின்றன.

| வகுப்பு. | ஸ்காலர்ஷிப்புகளின் தொகை. | ஒவ்வொரு ஸ்காலர்ஷிப்புக்குள்ள பணம். | மொத்தச் செலவு. |
|---|---|---|---|
| 1-ம் ஸ்டாண்டர்டு, | 6 | ரூபா 3-வீதம். | ரூபாய் 18 |
| 2-ம் ,, | 6 | ,, 4-வீதம். | ,, 24 |
| 3-ம் ,, | 6 | ,, 5-வீதம். | ,, 30 |
| 4-ம் ,, | 6 | ,, 6-வீதம். | ,, 36 |
| 5-ம் ,, | 6 | ,, 7-வீதம். | ,, 42 |
| மொத்தம் | 30 | | 150 |

(மாதமொன்றுக்கு)

சுயபாஷைகள் மட்டுமன்றி இங்கிலீஷாவது ஸம்ஸ்கிருதமாவது கற்கும் விதவைகளுக்கு ஒவ்வொரு ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்படும்.

இதுமட்டுமன்றி, 3, 4, 5-ம் வகுப்புகளில் படிக்கும் விதவைகளுக்கு, அவசியமானால், சம்ரக்ஷணைக்காரப் பெண்பிள்ளையொருத்திக்குச்செலவென்பதாக மாதம் 4-ரூபாய்வீதம் 12 ஸ்காலர்ஷிப்புகள் தரப்படும்.

## விடுகதை.

என் பிரியமான சகோதரிகளே! அடியில்கண்ட
விடுகதைக்குப் பொருள் சொல்வீர்களாக.

ஒரு முன் முனையில் முப்பதினாயிரம் கோடி பட்டணம். அந்தப் பட்டணத்தை ஆளுகின்ற இராஜனுக்கு தலையில்லை. தலையில்லாத அந்த இராஜன் குளிக்கும் குளத்திற்குக் கரையில்லை. கரையில்லாத அக்குளத்தில் முளைத்த மரத்திற்கு வேரில்லை. வேரில்லாத அம்மரத்தை தின்னவந்த மானுக்குத் தலையில்லை. தலையில்லாத அம்மானை ஒரு வேடன் எய்ய அம்மானிறப்பட்டாமல் அதின் வயிற்றிலிருந்த குட்டியில் பாய்ந்து இறந்த அக்குட்டியை மூலையில்லாத சாக்கில் போட்டுக் கட்டி ஆளில்லாத ஊரில் கொண்டுபோய் விற்று அச்சில்லாத தங்களும் வாங்கிவந்தான்.

லக்ஷ்மியம்மாள்.

7 - FEB 1906 MADRAS

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
னொண்மை யுறவோங்கு முலகு."

Vol. 1. தொகுதி-1. | Madras, September 1905. சென்னை, 1905-ம் வருஷம் செப்டம்பர்மீ | No. 2. பகுதி-2.

## தாதாபாய் நவுரோஜி.

நமது தேச ஸ்திரீகள் யாராவது பெரியோரைவணங்கும்போது அப்பெரியோர் "வீரஸூ:பவ" என்று ஆசிர்வதிப்பதுண்டு. அதாவது "நீ வீரர்களுக்குத் தாயாகக் கடவாய்" என்று பொருள்படும். வீரனென்றால் வில்லெடுத்துப் போர் புரிவோன் மட்டிலு மென்றர்த்தமில்லை. அது மிகவும் சாதாரண ஜனங்கள் கொள்ளப்படும் பொருள். உலக நன்மையின் பொருட்டுச் சாமான்யரால் முடியாத பெருங்காரியங்களை ஒருவனாக இருந்து நிர்வகித்து முடிப்பவனே வீரனாவான். அப்படிப்பட்ட வீரர்களைப் பெறுவதைக் காட்டிலும் ஸ்திரீ ஜன்மத்திற்குப் பெரும் பாக்கியம் வேறொன்றுமில்லை. குஜராத்து மாகாணத்தில் நௌஸாரி என்ற கிராமத்தில் 1825-ம் வருஷம் செப்டம்பர்-மாதம் 4-ந்தேதி யன்று ஓர் பார்ஸிமாதுக்கு இப்பெரும் பாக்கியம் உண்டாயிற்று. அந்த சுபதினத்தில் அம்மாது ஓர் வீரனைப் பயந்தாள். அவ்வீரனுக்கு தாதாபாய் நவுரோஜி என்ற திவ்விய நாமம் சூட்டப்பட்டது. தாதாபாய் பிறந்து இப்போது 80-வருஷங்கள் முடிந்து விட்டன. இம்மாதம் 4-ந்தேதியன்று தான் இத்தேச முழுதும் இம்மகானுடைய 81-ம் பிறந்த நாளைப் பெருஞ் சிறப்புடனும், உற்சாகத்துடனும் கொண்டாடிற்று. மூலைக்கு மூலை நகரங்களிலும், பட்டணங்களிலும், கிராமங்களிலும் இவருடைய பிறந்தநாள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பிறந்த நாளைப்போல அத்தனை பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பட்டது. ஆனால் ஸ்ரீ கிருஷ்ணனது ஜன்மத் திருநாள் ஹிந்துக்களால் மட்டுமே சிறப்பிக்கப்படுவது. தாதாபாயின் பிறந்த நாளிலே ஹிந்துக்கள், மகம்மதியர்கள், பவுத்தர்கள், ஜைனர்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள் எல்லா மதத்தினரும் சேர்ந்து ஒரே மனதாக விழா நடத்தினர். இம்மகானுடைய சரித்திரத்தைச் சுருக்கிச் சொல்லும் விஷயத்தில் இவரிடத்தில் இத்தேச முழுதும் செலுத்தும் பக்திக்குக் காரணம் இனிது விளங்கும்.

## குழவிப்பருவமும் இளமையும்.

இம்மகானது தந்தையார் இவர் குழந்தையாக இருக்கும்போதே காலஞ் ன்றுவிட்டா ரானபடியால், இவர் தமது தாயாலே வளர்க்கப்பட்டு வந்தனர். க வன் இறந்த பின்பு மகனை ஒன்றுக்கும் பயன்படாமல் செய்வதில் தேர்ச்சி பெ வர்களாகிய பல அறிவற்ற தாய்மார்களைப் போலாது நவுரோஜியின் தாய் அவரு அதிக தாக்ஷிண்யங் கொடுத்தல் முதலிய மடச் செய்கைக ளொன்று லாது மிகத்திறமையுடன் வளர்த்தாள். கிராமப் பள்ளிக்கூடங்களிலே கல்வி கப் புகுந்த நவுரோஜி சுக்ல பக்ஷத்துச் சந்திரன் போலக் கலை வளர்ச்சி யெய்தி. கடைசியாக பம்பாய் நகரத்தில் எல்பின்ஸ்டன் காலேஜில் வந்து சேர்ந். அங்கே கல்வி பயின்றுவரும் போதே இவரது புகழ் எங்கும் பரக்கத்தொடங்கி இவர் உயர்ந்த பரிக்ஷைகள் தேறியவுடன் ஹைகோர்ட் தலைமை ஜட்ஜாகிய ஏர்ஸ்கைன் என்பவர் நவுரோஜியை இங்கிலந்துக்கனுப்பி பாரிஸ்டர் பரிக்ஷை தேறும்படி செய்யவேண்டு மென விரும்பினார். அதனால் விளையக்கூடிய செலவி லே தாம் பாதி போட்டுக் கொடுப்பதாக உடன்பட்டார். அக்காலத்திலே பார்ஸி ஜனங்கள் கூட நாகரிக வொளி பெறாமலே யிருந்தனர். இவர் இங்கிலந்துக்குச் செல்லும் விஷயத்தில் ஒருவேளை கிறிஸ்து மார்க்கத்தில் சேர்ந்து விடுவாரோ என்ற அச்சத்தின்பேரில் இவரது இனத்தார் இவரை யனுப்புவதில் சம்மதியா திருந்தார்கள். பிறகு இவருக்கோர் கவர்ன்மெண்ட் உத்தியோகம் கிடைக்கத் தெரிந்தது. அது கிடைத்திருக்குமாயின் அவரது பிற்காலப் பெருமுயற்சிகளெல் லாம் நிகழ்ச்சி பெற்றிரா. ஆனால் இந்தியா தேசத்து 30-கோடி ஜனங்கள் செய்த பெருந் தவத்தினால் அவருக்கு அந்த வேலை கிடையாமற் போய்விட்டது.

1854-ம் வருஷம் இவர் தாம் கல்விபயின்ற எல்பின்ஸ்டன் காலேஜிலேயே கணித நூலும் இயற்கை நூலும் கற்பிக்கும் போதகராக நியமிக்கப்பட்டனர். ஏதா வது ஓர் தொழில் கிடைக்குமாயின் இந்த பதவி கிடைத்துவிட்ட தொப்பப் பிறகு உயர்ந்த அவாக்கள் எவையுமின்றி அதிலேயே கிடந்து வாணாள் கடைக்கும் சாதா ரண இந்தியரைப்போலாது நவுரோஜி முயற்சியே உருவமாகக் கொண்டவர். இவர் ஒரு வருஷந்தான் அவ்வேலையிலிருந்தார்.

## இங்கிலந்துக்குச் செல்லுதல்.

தாய்த்தேசம் பிறர் வசமிருக்குங் காலத்தில் ஓர் மனிதன் செய்யக்கூடிய தொழில்களிலெல்லாம் மிகச் சிறப்புற்றது வாணிகத் தொழிலே யென்பதை நவு ரோஜி நன்குணர்ந்தார். இரட்டை யக்ஷரம் தெரிந்துவிட்டால் பிறகு வர்த்தக முத லிய பயன்படு தொழில்களை இகழத் தொடங்கிவிடும் புல்லரைப்போலாது கலா சமுத்திரமாகிய நவுரோஜி 1855-ம் வருஷத்தில் ஓர் வர்த்தகசாலை ஸ்தாபிக்கும் பொருட்டு இங்கிலந்துக்குச் சென்றார். அங்கே வர்த்தகத் தொழிலோடு மட்டிலும் திருப்திகொண்டு நின்றுவிடவில்லை. இவர் அங்கே இந்தியா விஷயமானவிவகாரங் களின் பொருட்டு ஈஸ்ட் இந்தியா சங்கம் என்ற ஓர் சபை ஸ்தாபித்து அதில் பல ஆங்கிலேயர்களைச் சேர்த்ததும், இந்தியாவிலிருக்கும் பிரிடிஷ் அதிகாரிகள் விக்



டோரியா சக்கிரவர்த்தினியின் திருவாக்கை நிறைவேற்றாமல் அழிம்பு செய்துக்கொ ண்டிருப்பதை கண்டிக்கும்படி இங்கிலந்து மந்திரிகளைத் தூண்டியதும், முதலிய பல தேசோபகாரச் செய்கைகளை விவரமாக விரித்தெழுதல் நமது மாதர்களுக்குச் சுவை தரா தென்றஞ்சி விடுத்தோம்.

## இந்தியாவுக்கு முதல் முறை திரும்பல்.

1869-ம் வருஷத்தில் இந்தியாவுக்கு இவர் முதல்முறை திரும்பினார். பம்பாய் வாசிகள் இவரது பெரு நன்றிகளுக்கோர் சிறு கைம்மாறாக நவுரோஜிக்கு ஓர் பணத்தொகை கொடுத்தார்கள். தேசத்தாரின் நலத்துக்கென்றே அவதரித்தவரா கிய நவுரோஜி அத்தொகையைப் பொது நலம் பற்றிய விஷயங்களில் அக்கணமே செலவு புரிந்து விட்டார்.

1871-ம் வருஷம் இங்கிலந்திற்குச் சென்றுவிட்டார். அப்போது பார்லி மெண்டார் நியமித்த "இந்தியா வரவு செலவு விசாரணை"க் கமிட்டியார் முன்பு தமது நாட்டிற் கிதம்பேசினார்.

## பரோடா மந்திரி வேலை

1873-ம் வருஷம் இவர் மறுபடி இந்தியாவுக்குத் திரும்பி வந்தனர். அப் போது பரோடா ராஜ்ஜியத்தில் மல்லாரிராவ் என்ற அரசர் செய்த பிழைகளால் அவ்வரசின் நிலை வெகு கேவலமாய்விட்டது. அங்கே சரியான ராஜாங்கம் ஸ்தா பிக்கும் பொருட்டு நவுரோஜி நியமனமுற்றார். நெடுங்காலம் இவர் அப்பதவியி லிருக்கவில்லை. ஒரு வருஷமே யிருந்தனர். அதற்குள் எண்ணிறந்த பெருந் திருத் தங்கள் புரிந்து அவ்விராஜ்ஜியத்தைச் சிறப்புறுத்தி இந்தியா கவர்ன்மெண்டா ரால் மெச்சப்பெற்றனர். பிறகு பம்பாய்க்கு வந்து ஓர் சங்கம் ஸ்தாபித்து இத்தேச வறுமையைப்பற்றிப் பலமுறை பிரசங்கம் புரிந்து புகழ் பெற்றார்.

## காங்கிரெஸ்

1880-ம் வருஷம் இங்கிலந்திற்குப் போனார். இந்திய தேசம் பிரிடிஷ் ஆட்சி யிலே செழிப்புப்பெற்று வருகிறதென்ற எண்ணம் பிழையென்றும், நாளுக்கு நாள் இத்தேசம் வறுமை மிஞ்சி வருகிறதென்றும், ஆங்கிலேயர் மனசில் அழுத்தும் பொருட்டு இவர் பட்டிருக்கும் பிரயாசைகள் வரம்பி லடங்கா. நேராகவும், பத்திரி கைகள் மூலமாகவும் இவர் உயர்ந்த ஆங்கில மந்திரிகளுடனும், பெரும் பண்டிதர்க ளுடனும் வாதாடிப் பலரைத் தமது அபிப்பிராயத்துக்கு மாற்றியிருக்கிறார். 1883-ம் வருஷத்தில் மறுபடி இந்தியாவுக்கு இவர் வந்திருந்தபொழுதுதான் இவரும், ஹ்யூம், வெட்டர்பர்ன் என்ற பிரமுகர்களும் சேர்ந்து, சென்ற 21-வரு ஷங்களாக இந்தியாவுக்குப்பெருநன்மை விளைத்துவருகின்ற காங்கிரஸ் சபையை ஸ்தாபித்தார்கள். 1885-ம் காங்கிரெஸ் சபை பம்பாயிற் கூடியபோது அதில் வந்தி ருந்து சிறப்பித்தார். 1886-ம் வருஷம் கல்கத்தா நகரிலே நடந்த காங்கிரெஸில் தலைமை வகித்தனர்.

## பார்லிமெண்ட் மெம்பர் ஸ்தானம்.

1886-ம் வருஷம் இங்கிலண்டுக்குச் சென்று பார்லிமெண்டிலே ஸ்தானம் பெற முயன்று தவறிவிட்டார். எனினும் மறுபடி 1892-ம் வருஷத்தில் "எலெக்ஷன்" நடந்தபோது அச்சபையில் ஸ்தானம் பெற்றுவிட்டார். பார்லிமெண்டில் தாமொருவராகவே இருந்து இம்மஹான் இத்தேசத்தின் பொருட்டுப் பாடுபட்டதெல்லாம் அளக்குந்தரமன்று. ஸிவில் ஸர்வீஸ் பரீக்ஷை இங்கிலந்தில் நடப்பது போலச் சமகாலத்திலேயே இந்தியாவிலும் நடத்தவேண்டுமென்று பிரேரணை புரிந்து அதனைப் பார்லிமெண்டார் அங்கீகரிக்கும்படி செய்தார், செய்யினு மென்னை? பிறகு பிரிடிஷ் மந்திரிகளும் இந்தியா கவர்ன்மெண்டாரும் பார்லிமெண்ட் தீர்மானத்தை நிறைவேற்றாது போய்விட்டனர்.

1894-ல் இவர் இந்தியாவிற்கு வந்து லாஹோரில் நடந்த காங்கிரெஸில் தலைமை வகித்து விளங்கினர். இந்தியா தேசத்தாரனைவரும் இவரைத் தெய்வத்தைப் போல உபசரித்தனுப்பினார்கள். 1895-ல் பார்லிமெண்ட் சபை கலைந்துவிட்டது.

1895-ம் வருஷத்திலேயே இந்துதேச வரவு செலவு-விசாரணையின்பொருட்டு ராணியார் ஏற்படுத்திய ராயல் கமிஷனில் ஓர் மெம்பராக இருந்து வேறு பல ர தேசாபிமானிகளுடன் சேர்ந்து நம்மவர்க்கிதமான அபிப்பிராயம் கொடுத்தார். அன்று முதல் இன்று வரை இங்கிலந்திலேயே இருந்துவருகிறார். இப்போது மறுபடியும் பார்லிமெண்ட் மெம்பராக முயற்சியெடுத்து வருகிறார்.

## இவரது சரீரத் திடன்.

வயது எண்பதிற்கு மேலானபோதிலும் நமது கிழவருக்குச் சரீரபலம் சிறிதேனும் குறைவில்லை. சில தினங்களின் முன்பு டாக்டர் ஸ்ரீ மாதவநாயர் இங்கிலந்திற்குச் சென்றபோது நௌரோஜியைப் போய்த் தரிசனம் புரிந்தார்.

"சரீரஸ்திதி எப்படி இருக்கிறது?" என்று நாயர் கேட்டார்.

"எனக்கு எப்போது மிருந்தமாதிரியேதா னிருக்கிறது. ஆனால் வருஷங்களை எண்ணிப் பார்க்கும்போது வயது முதிர்ந்திருக்கவேண்டுமென்றே நினைக்கிறேன்" என்று நமது கிழச்சிங்கம் கூறியதாம். வயது மிகைக்குள்ளதாகிய அனுபவமும் ஞான முதிர்ச்சியும், இளமைக்குள்ளதாகிய சரீரத்திடனும் ஊக்கமும் இம்மஹானிடத்தே கலந்திருக்கின்றன.

## நிறம்.

இவர் எல்லா விஷயங்களிலும் நம்முடைய பக்க மிருந்தபோதிலும் ஒரு விஷயத்தில் மட்டும் ஆங்கிலேயருடன் சேர்ந்துவிட்டாரென்று நாம் இவரைக் குறைகூறுவோம். அதாவது இவருடைய நிறத்தில். இவரது இருதயம்போலவே முகமும் ஸ்படிகத்திற்குச் சமானமான நிறமுடையது. ஓர் ஆங்கிலேயரின் கூட்டத்திடையே நௌரோஜி நிற்பாராயின் இவரை உஷ்ணதேசத்தாரென்று எவராலும் கண்டுபிடிக்க முடியாது.



## குணவிசேஷங்கள்.

தேசாபிமானத்தால் தூண்டப்பட்டு அல்லும் பகலும் இந்தியாவின் நலமே கருத்தாகக் கொண்டு பாடுபடும் இம்மஹானது கருணைக் குணத்தை வருணிப்பது அவசியமில்லை. ஆனால் ராஜகாரியங்களில் பாடுபடுவோர் தமது அபிப்பிராயத்துடன் இணங்காத ஜனங்களிடம் சாதாரணமாக உதாரசிந்தை கொள்வதில்லை. நவுரோஜியோ அங்ஙனமன்று. தமது மகா சத்துருக்களிடம் கூட மிகுதியான பெருந்தன்மை பாராட்டு மியற்கையுடையவர். இவரையும் இவர் போன்ற காங்கிரெ ஸபிமானிகளையும் அளவுகடந்து தூஷித்தெழுதிய **பவனகிரீ** என்ற இந்தியரை இவரது சீடர்களிற் பலர் கண்டித்துப் பேச விரும்பியபோது இவர் தடுத்து விட்டார். இதன்றியும் இவரிடம் மற்றொரு சிறந்த குணமுண்டு. அதாவது வயதிலும், அனுபவத்திலும், கல்வியிலும், அறிவிலும் இவரைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு குறைந்தவர்கள் வந்தபோதிலும் அவர்களிடமிருந்து கூட ஏதேனும் அறிந்துகொள்ள முயல்வார். மற்றெல்லா விஷயங்களிலும் அரிய உதாரகுணம் பெற்ற நவுரோஜி இந்த ஒரு விஷயத்தில் மட்டும் லோப குணமுடையவர். எல்லோரிடத்திலும் சிறிது அறிவை கிரகித்துக்கொள்ள வேண்டுமென்ற பேராசை இந்தக் கிழவருக்கு மிகுதியாக வுண்டு. இவர் நேராக நமக்குச் செய்திருக்கும் நன்மைகள் எத்தனையோ இருப்பதுடன் இவர் நமது தேசத்தாருக்குத் தூண்டியிருக்கும் தேசாபிமான வூக்கத்தின் மூலமாக நமக்கு விளையும் நன்மை சொற்பமன்று. தற்காலத்தில் இந்தியாவுக்கு முக்கியத்தலைவராயிருப்போரெல்லாம் இவருடைய சீடர்களென்று கூறலாம். இம்மஹான் இயற்றிய "இந்தியா வறுமை" என்ற சிறு புத்தகந் தான் தமது நெஞ்சில் தேசாபிமான விதைகள் நட்டதென்று ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யர் கூறியிருக்கிறார். ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலே நவுரோஜியைத் தமது உபாசனைத் தெய்வமாகக் கொண்டிருக்கிறார். "மகரிஷி தாதாபாய்" என்று சொல்வதேயன்றி இவருடைய திருநாமத்தை ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யர் சாதாரணமாக ஒருபோதும் உச்சரிப்பது கிடையாது. தாதாபாய் நவுரோஜி இன்னும் பலகாலம் இருந்து நமக்கெல்லாம் பெரு நன்மை புரியவேண்டுமென்றும், அவரைப்போல இன்னும் பல வீரர்கள் இந்நாட்டில் தோன்றவேண்டுமென்றும் நாம் முழுமனதுடன் விரும்புகின்றோம்.

## கவிகள்.

(1) முன்னொளி யிராமபிரான் கோதமனாதியபுதல்வர் முறையினின்று
பன்னாடு முடிவணங்கத் தலைமைநிறுத் தியவெமது பரதகண்ட
மின்னாளிங் கிந்நாளின் முதியோளாய்ப் பிறரெள்ள வீழ்ந்தகாலை
யன்னாளைத் துயர்தவிர்ப்பான் முயல்வர்சில மக்களவ ரடிகள் சூழ்வாம்.

(2) அவ்வறிஞ ரனைவோர்க்கு முதல்வனாமைந்தன்ற னன்னை கண்ணே
எவ்வகையினுந் துடைப்பே னின்றேலென் னுயிர்துடைப்பே னென்னப்
[போந்தி
யௌவனநாள் முதற்கொடுதா னெண்பதின்மேல் வயதுற்ற வின்றுகாறும்
செவ்வியுறத் தனதுடலம் பொருளாவி யானுழைப்புத் தீர்தலில்லான்.

(3) கல்வியைப்போ லறிவுமறி வினைப்போலக் கருணையுமக் கருணைபோலப்
பல்விதவூக் கங்கள்செயுந் திறனு மொரு நிகரின்றிப் படைத்த வீரன்
வில்விறலாற் போர்செய்தல் பயனிதா மெனவதனை வெறுத்தே யுண்மைச்
சொல்விறலாற் போர்செய்வோன் பிறர்க்கன்றித் தனக்குழையாத் துறவி
[யாவோன்.

(4) * மாதாவாய் விட்டதை வதைச்சிறிது மதியாதே வாளுள் போக்குந்
தீதாவா ரவினுமவர்க் கினியசொலி நன்குணர்த்துஞ் செவ்வி யாளன்
வேதாவா யினுமவனுக் கஞ்சாமே யுண்மைநெறி விரிப்போ னெங்கள்
தாதாவாய் விளங்குறுநற் குதாப்பாய் நவுரோஜி சரணம் வாழ்க!

(5) எண்பதின் தாண் டிருந்தவவ னிளைப்பல்லான் டிருந்தெம்மை யினிதுகாக்க!
பண்பல்ல நமக்கிழைப்போ ரறிவுதிருந் துக! வெமது பாதநாட்டுப்
பெண்பல்லார் வயிற்றினுமந் நவுரோஜி போற் புதல்வர் பிறந்து வாழ்க!
விண்புல்லு மீன்களென வவனன்றோ ரெவ்வயினு மிகுக மன்னே.

பத்திராதிபர்.

# சந்திரமதி.

(தெலுங்கு பாஷையில் மஹா˙ பண்டிதராகிய பிரம்மஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலுவின் அற்புதமான (சந்திரமதி) என்ற நூல் "சக்ரவர்த்தினி"ப் பத்திரிகையின் பொருட்டு விசேஷமாகத் தமிழில் மொழி பெயர்த்தெழுதப் படுகின்றது. இந்நூல் இதுவரை மொழி பெயர்ப்புற்ற தில்லை.)

## முதல் அத்தியாயம்.

ஆந்திர தேசத்திற்கு முற்காலத்தில் பிரதிஷ்டானம் என்னும் பட்டணம் தலைநகராயிருந்தது. அதனை உசீநரன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு சுநந்தை என்னும் மனைவியினிடத்து வெகு காலத்துக்குப் பின் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு அவர்கள் சந்திரமதி என்று நாமகரணம் செய்தார்கள். வெகுகால மில்லாதிருந்து பிறந்த பெண்ணானபடியாலும், உலகத்துக்கெல்லாம் ஒப்பற்ற தனிப்பேரழகு பெற்றிருந்தமையாலும், தாய்தந்தைகள் அவ்வருமைக் குழந்தையின் கால் தங்கள் மார்பை விட்டுக் கீழே அசையாதபடி அதை எவ்வளவோ சீருடனும் செல்வத்துடனும் வளர்த்து வந்தார்கள். இவ்வாறு நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாய் அக்குழந்தை வளர்ந்து கொஞ்சங் கொஞ்சமாய்த் தட்டித் தடுமாறிச் சிற்றடி பெயர்த்து வைத்துத் தங்கள் முன் நடப்பதை அதன் தாய் தந்தையர் கண்குளிரக் கண்டு களித்தார்கள். அவ்விளங் குழந்தை திருந்தியும் திருந்தாமலும் பேசும் மழலைச் சொற்களே அவர்களது செவிகளுக்கு இனிமையான சங்கீதத்திலும் மதுரமாயிருந்தன. அச்சிறுமி

* நமது தாய்த்தேசம்.



யைக் கண்ட கண்களால் அரம்பையைப் பழித்த சுந்தரிகளைப் பார்க்கினும், அப்பெண்மணியின் சௌந்தரியத்துக்கு அவர்களது அழகு உறைபோடவுங் காணாது. சுநந்தை கல்விமணம் பெற்றவளானபடியால் கல்வியின் பயனை யுணர்ந்து தன் மகளுக்குச் சிறிது பகுத்தறிவு உண்டானது முதல் இலகுவான நீதி நெறிப்பாட்டுகளைக் கற்பித்து வந்தாள். அதினால் சந்திரமதி ஆறாவது வயதிலேயே சாதாரணமாய்த் தன் வயதுள்ள பாலிகைகளைவிட அதிக விவேகமும் குணமும் பொருந்தியிருந்தாள். மென்மைத் தவறிய மொழிகளை யென்றுங் கூறாள். தாய் தந்தையர்கள் அன்பாய்க் கொடுப்பதைப் பெற்று சந்தோஷிப்பாளேயன்றி, இல்லாத பொருளைக் கொண்டுவந்து கொடுக்கும்படி என்றும் போர் புரியாள். தன்னுடன் விளையாடும் பெண்களை எப்பொழுதாவது பல்லளவு பேச்சாவது சொல்லாமலும், தனக்குக் கிடைக்கும் பழம் முதலியவற்றை அவர்களுக்குக் கொடுக்குமுன் தின்னாமலும், ஒரு தாய் வயிற்றிற் பிறந்த குழந்தைகளைப்போல் அவர்களைக்கருதி வந்தாள். எப்பொழுதேனும் தப்பித் தவறி தான் ஒரு பிசகு செய்துவிட்டால், பதில் பேச்சு ஒன்றும் பேசாது அதை யொப்புக்கொண்டு மன்னிப்பு கோருவாளேயன்றி, தன் தப்பை மறைப்பதற்காக பொய் முதலியவை கற்பித்து ஏமாற்றுவதற்கு என்றும் முயல்பவள் அல்லள்.

உசீநரமகாராஜர் ஒருநாள் புலவர்கள் அனைவரும் தன்னைச் சூழ்ந்திருக்கச் சபையில் வீற்றிருந்து கல்வி யாராய்ச்சி செய்துகொண்டிருக்கும் சமயத்தில் புலவர் திலகராகிய வித்தியாசாகரர் என்னும் பிராமணர் அரசனது அனுமதிபெற்று அடியில் வருமாறு பிரசங்கம் புரிந்தார்.

"உலகத்தில் ஸ்தூல தேகத்தை வளர்ப்பதற்கு உணவு எவ்வாறு இன்றியமையாததோ, அவ்வாறே ஞானதேகத்தை வளர்ப்பதற்குக் கல்வியென்னும் உணவு மிகவும் அவசியகமாம். கல்வியினால் விநயம், விவேகம் முதலியவை உண்டாகும். அதனால் சமஸ்த சற்குணங்களும் அமையும். சாதாரணமாக கல்வி கற்றவர்கள் தம் கல்விக்கேற்ற புத்தியும் நன்னடக்கையும் பொருந்தியேதோ ஒரு விதத்தில் கௌரவமாய் ஜீவனம் செய்வதும், கல்லாதவர்கள் புத்திவல்லமை அவ்வளவாய் இன்றி நல்ல நடவடிக்கையும் தெரியாமல் கட்டைகள் வெட்டி விற்பது முதலாகிய வேலைகளில் குறைவாய் ஜீவனம் செய்வதும் சமஸ்த தேசங்களிலும் நாம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். கொலை, களவு முதலிய பெருங் குற்றங்களைச் செய்பவர்கள் காலக்கிரமத்தில் கல்வியில்லா ஈனஜாதியாரைப் போல் ஆவதும் அனைவருக்கும் அனுபவ சித்தமேயன்றோ? சபையேறி உத்தியோகம் செய்யப் போவதில்லையாகையால் பெண்களுக்குக் கல்வி யனாவசியகமென்றும் அனர்த்தத்தை விளைக்குமென்றும் சிலர் சொல்வார்களாயினும், அது விவேகிகள் கொண்டாடத்தக்க உரையன்று. கல்வியை ஞானபிவிர்த்தியின் பொருட்டு கற்கவேண்டியதேயன்றி உத்தியோகங்கள் செய்யும் பொருட்டன்று. கனிகளின் பொருட்டு நடப்பட்ட பலா முதலிய மரங்கள் நிழல் தருதல் முதலான இதர காரியங்களுக்கும் பயன்படுவது போலவே, அறிவின் பொருட்டேற்பட்ட கல்வியும் வேறு காரியங்களுக்குக் கூட உபயோகமாகக்கூடும். பசுவை விட மனிதன் உயர்ந்திருப்பத

குக் காரணம் அதிக ஞானமுடைமையே யாதலாலும், ஞானாபிவிருத்திக்குக் கல்வியே சாதாரணமாதலாலும் நமது முன்னோர்கள் கல்வியில்லாதவனை இருகாற் பசுவெனக் கூறியது தவறாகாது. மானிட தர்மத்தை விட்டு பசுப்பிராயர்களாய் இருக்கக் கருதுவோர் தவிர மற்றெவரும் ஞானத்துக்கு ஒரே சாதனமான கல்வி யாவசியமென நினையார்கள். கணவனும் மனைவியும் வெளிக்கு வேறாகக் காணப்படினும் உண்மையில் அவர்களது ஒரே தேகமென்று எல்லா நாட்டார்களும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். அவ்வாறாயின் கணவன் கல்விகற்று விளங்கவேண்டுமென்றும் மனைவி கல்வியின்றி யுழலவேண்டுமென்றும் கூறுதல், பாதி சரீரம் மனிதனையும் பாதி சரீரம் விலங்காயும் இருக்கவேண்டுமென்பதைப்போலாகும். புத்திமான் எவனும் கல்வி மணஞ் சிறிது மில்லாத பசுவுக்கு ஒப்பானவனுடன் நிமிஷநேரமாயினும் சகவாசம் செய்ய விரும்பான்; அவ்வாறிருக்க பெண்களைப் படிக்கவைக்காமல் பசுக்களுடன் சகவாசம் செய்வதுபோல் எப்பொழுதும் கல்வியறிவில்லா மடந்தையருடன் சகவாசம் செய்யவேண்டுமென்று உபதேசிப்பவன் எவ்வளவு புத்திமானோ நான் சொல்லவேண்டியதில்லை. கல்வி யில்லாதவர்களுக்கும் கல்வி கற்றவர்களுக்கும் இயல்பாய் இருளுக்கும் ஒளிக்கும் உள்ள வேற்றுமை இருக்கின்றது. ஒற்றுமையோடு கூடி இருவருக்கும் க்ஷேமகரமாயிருக்கும் வண்ணம் கௌரவமாய்ச் சம்சாரத்தை நடத்தவேண்டிய தம்பதிகளுக்குள் கல்வி வேற்றுமையால் ஒருவர் சென்ற வழி யொருவர் செல்லாமல் ஒருவர் வீட்டுக்கும் மற்றவர் காட்டுக்கும் இழுப்பவர்களானால் உலக வாழ்க்கையில் அவர்கள் எவ்வாறு சரியாய் ஒழுகமுடியும்? ஸ்திரி புருஷர்கள் சில விஷயங்களில் பேதப்பட்டிருப்பினும் ஞானம், புத்தி முதலானவை இருவர்களுக்கும் சாமானியமாகவே யிருக்கின்றன. ஆகையால் அறிவின் அபிவிர்த்திக்குக் காரணமான கல்வி ஆடவர்களுக்கு எவ்வாறோ அவ்வாறே பெண்களுக்கும் பெரும்பயனை யளிக்குமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்ற ஆன்றோர் உரையின்படி ஞானக் கண்ணுக்குத் துணையாயிருக்கும் கல்வியினால் புருஷர்களுக்கு நன்மையும் ஸ்திரீகளுக்குத் தீமையும் விளையும் என்று வாதித்தல், வெளிக் கண்ணுக்குத் துணையாயுள்ள வெளிச்சம் புருஷர்களுக்கு உபகாரத்தையும் பெண்களுக்கு அபகாரத்தையும் அளிக்கும் என்றுரைப்பதை யொக்குமேயன்றி வேறில்லை. நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கும் பயன்படுவதுபோல் நன்னெறி யொழுக்கத்தின் பொருட்டு பயன்படவேண்டிய கல்வி சில வேளைகளில் ஸ்திரீ புருஷர்களது தீயவொழுக்கத்துக்கும் இடமாகலாம். களைகள் விர்த்தியாகுமென்று நீர் பாய்ச்சாமல் பயிரை வெயிலில் தீய்ந்துபோகும்படி விடுதல் பயிரிடுங் குடிக்கு எவ்வாறு தர்மமன்றோ, அவ்வாறே எப்பொழுதோ கெட்ட காரியங்களுக்குப் பயன்படக்கூடுமென்று ஞானத்துக்கு வேராகிய கல்வியைத் தம் குழந்தைகளுக்குக் கற்பியாது விடுதலும் தாய்தந்தைகளுக்குத் தர்மமாகாது. களைகளை யதிகமாய் வளரவிட்டால் பயிருக்கே கெடுதியுண்டாகி பலன் கிடைக்காது போகுமென்றறிந்து பயிரிடுங் குடி தக்க காலத்தில் களைபிடுங்கி பயிரைக் காப்பாற்றவேண்டியதுபோல, தாய் தந்தையர்களும் தாங்கள் கற்பிக்கும் கல்வி கெட்ட தொழில்களுக்கு உபயோகப் படாதிருக்குமாறு சிக்ஷித்துக்கொண்டு குழந்தைகளை ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி



அதன் பயனை யநுபவிக்கமுயலவேண்டும். இளமையில் வளையாத செடி முதிர்ந்த பின் வளையாதென்ற முதுமொழியை ஞாபகத்தில் வைத்து ஒருவனது மனதை துர்க்குணத்தினின்று திருப்பி சன்மார்க்கத்தில் ஒழுகச்செய்வதற்கும் இளமையே உத்தமமான பருவமென்று தெரிந்து அவ்வாறு செய்ய பிரயத்தனப்படவேண்டும். இளம் பருவத்திற் பிடிபட்ட துர்க்குணத்தையாவது நற்குணத்தையாவது வயது முதிர்ந்தபிறகு மாற்றிக்கொள்ளுதல் அரிது. ஆகையால் சிறுவர்களையும் சிறுமிகளையும் இளமையிலேயே நன்னடக்கை யுள்ளவர்களாகத் திருத்துவதற்கு சக்தி வஞ்சனையின்றி பாடுபடவேண்டுவது தாய் தந்தைகளின் கடமையாயிருக்கின்றது. அதிலும் பிள்ளைகளைக் காட்டிலும் பெண்களின் விஷயத்தில் அதிக அக்கறை வைக்கவேண்டும். ஆண்பிள்ளைகள் எப்பொழுதும் பிறந்த வீட்டிலேயே இருக்கப் போகின்றவர்கள். பெண் பிள்ளைகளோ என்றைக்காயினும் அந்நியர்களது அகம் போய்ச் சேரவேண்டியவர்களே யன்றி எப்பொழுதும் பிறந்த அகத்திலேயே இருக்கமுடியாது. ஆகையால் வளர்த்தவர்களுக்கு அவமானம் வராதிருக்கும் பொருட்டு அவர்களைப் புக்ககத்துக்கு அனுப்புங்காலம் வருவதன்முன்னமே பெண்களைச் சிறந்த குணவதிகளாகவும் புத்தியுள்ளவர்களாகவும் செய்து பிறகு அனுப்ப வேண்டும். ஆதியில் நற்குணங்களைப் புகட்டி ஞானவதிகளாக்கச் செய்யாமல் சம்சாரக்கடலிலே நீந்துவதற்காகத் தம் பெண்மணிகளை புக்ககத்துக்கு அனுப்பும் தாய்தந்தைகள், நீந்தத்தெரியாதவர்களைச் சமுத்திரத்தில் தள்ளி, அவர்களை அடித்துக்கொண்டு போகையில் கண்ணுற்றுப் பார்த்து வருந்தியும் ஏதும் செய்யமுடியாமல் நிற்கைக்குப் பாத்திரமாகின்றவர்களைப் போலவே தாமும் பின்னர் அபகீர்த்திக்காளாகி வருத்தமுறுவார்கள்.

மஹேச குமார சர்மா.

## இந்தியாவில் ராஜாவும் ஜனங்களும்.

இந்தியா முழுமையும் சேர்த்து ஆளும் ராஜா இந்தியாவில் வசிக்காமல் சமுத்திரத்துக்கு 6,000 மைலுக்கப்பால் இங்கிலந்தில் வசிக்கிறார். இந்த ராஜாவுக்கு இப்போது எட்வர்ட் என்று பெயர். இம்மாதிரிப் பேர்கொண்ட ராஜா இதற்கு முன் ஆறுபேரிருந்தபடியால், இப்போதிருக்கும் ராஜாவுக்கு ஏழாவது எட்வர்ட் என்று பெயர். அவர் தூர தேசத்தில் வசிப்பதால் அவருடைய காரியஸ்தர் ஒருவரை நியமித்து இந்தியாவின் ஆட்சியை நடத்தச் சொல்லிவருகிறார். இந்தக் காரியஸ்தருக்கு **கவர்னர் ஜெனரல்** என்றும் **வைசிராய்** என்றும் ஆங்கிலப் பாஷையில் பெயர். எட்வர்ட் மகாராஜா இந்தியா முழுமைக்கும் சக்கிரவர்த்தியானதால், மற்ற ராஜாக்கள் அவருக்குக் கீழ்ப்பட்ட அந்தஸ்தைக் கொண்டவர்கள். தென்னிந்தியாவில், மைசூர், திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை யென்ற சமஸ்தானங்களில் ஹிந்து ராஜாக்களிருந்தபோதிலும், இங்கி

வந்தி விருக்கும் இந்தியச் சக்கிரவர்த்தியின் காரியஸ்தராகிய கவர்னர் ஜெனாலது உத்தரவின்படி ராச்சியத்தை நடத்தக் கடமைப்பட்டவர்கள். அப்படியே இந்தியாவிலுள்ள மற்ற ஹிந்து மகமதிய ராஜாக்களும் கடமைப்பட்டவர்கள். ஹைதராபாத்தென்ற பெரும் சமஸ்தானத்துக்கு ராஜாவாகிய நிஜாமாசனும், சிந்தியா, ஹொல்கார், காயக்வார் என்கிற மகாராஷ்டிர ராஜாக்களும், காஷ்மீர் ராஜாவும், ஜயப்பூர், பௌநகர் முதலான ரஜபுத்திர ராஜாக்களும், அப்படியே எட்வர்ட் மகாராஜாவின் பிரதிநிதியாகிய கவர்னர் ஜனரல் உத்தரவுப்படி நடக்கக் கடமைப்பட்டவர்கள். இந்த ராஜாக்களன்றி, பூர்வமிருந்த ராஜாக்க ளழிந்துபோய், ராஜாக்களே யில்லாமல் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களா லாளப்பட்டுவரும் நாடுகளே இந்தியாவி[illegible]ரும் பாகமானவை. பெங்காளம், அலகாபாத், பஞ்சாப், குஜராத், பூனா, தென்னிந்தியா இங்கு ராஜாக்களே யில்லை. இங்கிலந்திலிருந்து எட்வர்ட் சக்கிரவர்த்தியால் நியமிக்கப்படும் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களே இவைகளை யாண்டுவருகிறார்கள். இவர்களுக்குக் கவர்னர் என்றும் லெப்டினென்ட் கவர்னரென்றும் பெயர்கள் கொடுக்கப்படுகின்றன. எட்வர்ட் மகாராஜாவால் நியமிக்கப்பட்டபோதிலும், அவர் கண்ணுக்குத் தெரியாத தூரதேசத்தி லிருக்கிறபடியால், இந்தியாவிலேயே இருக்கும் கவர்னர் ஜெனரலின் உத்தரவுப்படி இவர்கள் நடக்க வேண்டியவர்கள்.

முற்காலத்தில் இந்தியா தேசத்துக்கு பரத கண்டமென்று பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. அப்போது 56 தேசங்களென்றும், 56 ராஜாக்களென்றும் நமது புராணங்கள் முதலான புஸ்தகங்களிற் சொல்லப்படுகின்றன. அயோத்தி, காசி, மகதம், காஷ்மீரம், கூர்ச்சரம், மகாராஷ்டிரம், கலிங்கம், இப்பேர்கள் கொண்ட தேசங்கள் நமது பழைய புராணங்களில் சொல்லப்படுகின்றன. அவைகள் முற்காலத்தில் செழித்தனவே யன்றி, இப்போது அழிந்துபோய்விட்டன. சேர, சோழ, பாண்டியர் என்கிற தமிழ்நாட் டரசர்களும் அப்போது செழித்தவர்களாயினும் இப்போதில்லை. இவர்களாண்டுவந்த மலையாளம், தஞ்சை, மதுரை ஆகிய தேசங்க ளிப்போது ஆங்கிலேயர்களா லாளப்பட்டு வருகின்றன. முற்காலத்தில் 56 தேசங்களென்று பெயரே யொழிய, அடிக்கடி புது தேசங்களும் புது ராஜாக்களும் தோன்றி ஆண்டுவந்தார்கள். அடிக்கடி இந்த ராஜாக்கள் ஒருவரோடொருவர் சண்டை செய்துகொண்டே யிருந்தார்கள். எந்த ராஜ வம்சமாவது ஆதிகாலந்தொட்டு இந்தக்காலம்வரையில் ஆண்டதாகக் காணோம். இக்காலத்திலுள்ள ஹிந்து ராஜாக்களெல்லாம் சமீபத்தில் 100 அல்லது 200 வருஷங்களுக்கு முன்னால் ஏற்பட்டவர்கள். அவர்கள் காலத்துக்குமுன்னால் இந்தியாவில் 56 அல்லது 560 ராஜாக்களு மிருந்திருக்கக்கூடும். சிறிய ராஜாக்களாகவும் புதிது புதிதாகத் தோன்றிச் சிலகாலம் நிலைபெற்றழிந்துபோகிற ராஜாக்களாகவு மிருந்தபடியால், அவர்களுக்கு விசேஷமான பலம் ஏதும் ஏற்படவில்லை. ஜனங்களுக்கு மவர்களிடத்தில் அபிமான முண்டாகவில்லை. எந்த ராஜா எங்கே யாண்டாலென்ன, நமது ஜீவனத்துக்குத் தொந்திரவில்லாமல் நடந்தாற் போதுமென்று ஜனங்கள் உபேட்சையா யிருந்தார்கள். பழைய காலமாகிய அக்காலத்தில் க்ஷத்திரியரென்ற ஜாதியாரே சண்டை செய்வோராயிருந்தார்கள். மற்ற ஜாதி ஜனங்கள் சண்டை செய்யும் தொழிலிற் பிரவேசித்ததே யில்லை. இந்த க்ஷத்திரிய ஜாதியும் வரவரக் குறைந்து



போய் மற்றப் பல ஜாதிகளுடன் கலந்துபோயிற்று. எப்போது க்ஷத்திரிய ஜாதி குறைந்தும் மறைந்தும் போயிற்றோ, மற்ற ஜாதி ஜனங்களையாவது சண்டைத் தொழிலில் அமர்த்தி தேசத்தைக் காற்றுக்கொள்ளலா மல்லவா? அப்படியுஞ் செய்யவில்லை யென்று தோற்றுகிறது. இப்போது இந்தியாவிலுள்ள துருப்புகளில் ஒரு ஜாதி ஜனங்கள்மட்டும் அமர்ந்திருக்க, பல ஜாதி ஜனங்களும் அமர்ந்திருக்கிறார்க ளல்லவா? அப்படி நம் முற்காலத்து அரசர்கள் செய்யவில்லை. அப்படிச் செய்யாததினால், ஜனங்களுக்கும் ராஜாக்களுக்கும் அபிமானப்பற்று உண்டாகவில்லை. ராஜாக்கள் வரி கேட்பது அவர்கள் சுதந்தரம், கேட்ட வரியைக் கொடுப்பது ஜனங்களின் கடமை, அகப்பட்டவர்களைச் சேனைகளாகத் திரட்டிக்கொண்டு ராஜா அவசியமானபோது சண்டைசெய்வான். இந்த நிலைமையில் இந்தியா அநேக நாற்றாண்டுகள் இருந்து வந்தது. இந்தியா முழுதையும் ஒன்றாகக் கட்டிச் சேர்த்து ஆண்டவனில்லாமல், எங்கெங்கே எந்த ராஜா பலவானாயிருந்தானோ, அங்கங்கு அந்த ராஜா தன்னைச் சக்கிரவர்த்தி யென்று சொல்லிக்கொண்டு மற்ற ராஜாக்களுடன் போர்செய்வான். இந்தியா தேசமோ மகா பெரியதேசம். வடக்கே ஹிமாலயமலை அதற் கெல்லையாயும் மற்ற மூன்று பக்கங்களிலும் சமுத்திரங்கள் எல்லைகளுமா யிருப்பதால், இந்தியாவிலாண்ட ராஜாக்களுக்கு இந்தியாவுக் கப்புறமுள்ள தேசங்களிலிருந்து எந்த அரசனாவது பெரும் படையுடன் வந்து தங்களை வென்று இந்தியாவைக் கட்டிக்கொள்ளுவானென்ற எண்ண முண்டாகவேயில்லை. உண்டாகாததினால், இந்தியாவைச்சுற்றிக் காவல்போட எண்ணவேயில்லை. இந்தியாவின் வடமேற்கு மூலையில் ஒரு குறுகலான பாதை மலை வழியாய் வருகின்றது. அந்தப் பாதை வழியாய் அப்பாலுள்ள ராஜாக்கள் இந்தியாவில் பெரும் படையுடன் வந்து புகலாம். அப்படியே சமுத்திரத்து வழியாய்க் கப்பலில் அன்னிய தேசத்தார் படையுடன் வரலாம். இந்த இரண்டையும் ஹிந்து ராஜாக்க ளறியாமல், தங்கள் பொது தேசமாகிய ஆரிய வர்த்தத்தைக் காவல்செய்து காப்பாற்றிக்கொள்ளாமல் ஒருவரோடொருவர் சண்டைசெய்து பலக்குறைவு செய்துகொண்டபடியால், மகமதியர் சுமார் ஆயிர வருஷத்துக்கு முன்னால் மத்திய ஏஷியாவிலிருந்து இந்தியாவுக்குவந்து ஹிந்து ராஜாக்களை வென்று மகமதிய ஆட்சியை ஸ்தாபித்தார்கள்.

G. சுப்பிரமணிய அய்யர் B. A.

## கருத்துக்கிசைந்த காதலி.

ஜகத்திலுள்ள சகலவிதமான உயிருள்ள பொருள்கள், உயிரில் பொருள்கள் யாவுமே மித்திரத்துவத்தை நாடிச் சத்துருத்துவத்தைத் தூரப்படுத்தி நிற்பதுவே சுபாவமாக விருக்கின்றது. எவ்வாறெனில் மண் என்பது பொதுப் பெயராக விருக்கினும், களிமண், செம்மண், உவர்மண், இருமண், என நிறத்தின் பேதத்தினாலும், குணபேதத்தினாலும் ஒன்றோடொன்று பொருந்தாமலிருக்கின்றன. மலைக்கல்லுகள் பலவகையாக விருக்கின்றன. திருக்கல் மலை, கருங்கல்

மலை, சந்தனக்கல் மலை, திக்கல் மலை, கந்தகக்க மலை, இன்னு மிவைபோன்ற அனேகவித மலைகள் நிறங்குணம் உருவ மித்தகைய பேதங்களினால் வித்தியாசப் பட்டிருக்கின்றன. தாபர வர்க்கங்களுள்ளும், விருட்சம், செடி, கொடி, பட்டும் பூண்டுமென்று உருவம் குணங்களில் பேதப்பட்டிருப்ப தல்லாமல் ஒவ்வொரு வகையிலும் பல்வகைப் பேதங்களுண்டு. எவ்வாறெனில், மா, தெங்கு, பலா, புளி, ஆல், என்னும் விருட்ச பேதங்களும், மல்லிகை ரோஜா, சாமந்தி, அலரி, தாவரை, கமிலை முதலிய செடி வர்க்கங்களும், அவரை, வசலை, சம்பங்கி, கொடி முந்திரி, தமரத்தங்காய்க் கொடி முதலாய கொடி வகைகளும், கருணைக்கிழங்கு, உருளைக் கிழங்கு, வள்ளிக்கிழங்கு, முள்ளங்கிக் கிழங்கு முதலாய கிழங்கு வர்க்கச் செடிகளும், பாசை, தாமரை, அல்லி, நீரோற்பலம் முதலாய படர் செடி வர்க்கங்களும் பேதமுடையன வாகவே யிருக்கின்றனவென்பது எவர்க்கும் வெளிச்சம். அவ்வாறே இரத்தினம் என்பது பொதுப்பெயராக விருப்பினும், கெம்பு, பச்சை, நீலம், புஷ்பராகம், கோமேதகம், வைரம், மாணிக்கம் என்னும் பல சிறப்பு நாமங்கள் பெற்று குணத்திலும் நிறத்திலும் பேதமுடையன வென்று விகற்பித்துக் காட்டுகின்றன. மயில், குயில், கிளி, ஆந்தை, கோழி, கொக்கு, குருவி என்று பல இருகுறி, சிறப்பு நாமங்களுடையனவாக உருவத்திலும், அளவிலும் நிறத்திலும் குணத்திலும் பேதப்பட்டுள்ளனவாகத் தோற்றுவிக்கின்றன பட்சி வர்க்கங்களும். ஜலசாரங்கள் என்பவற்றில் மச்சம் என்னும் பொதுப் பெயருடையதாக விருக்கினும் பலவகை பேதமுள்ளனவென்று அவற்றின் உருவம், குணம், அளவு இவை முதலாய பேதங்களினால் விகற்பித்து தோற்றுவிக்கின்றன. அதுவன்றி மற்றும் அச்சமுத்திரத்தில் சிப்பி, சங்கு, இவ்வகைகளுள் பல பேதங்களும், பவழக்கொடிகளில் பலவகை பேதங்களுமுண்டு. விலங்கின மென்பதுள்ளும் மாடு, ஆடு, மான், பன்றி, கரடி, ஒட்டை, யானை இவை முதலாய பேதங்களும் இவற்றுள் ஒவ்வொன்றுள்ளும் பலவகை பேதங்களு முடையனவாக விருந்து வித்தியாசம் உண்டென்பதை விளக்குகின்றது. உலகிலுள்ள மனிதர்களெல்லாம் உருவில் ஒரேவிதமானவர்களாக விருப்பினும் தேசங்களின் சீதோஷ்ணங்களுக்கு ஏற்கவே நிறங்களும், உடைகளும் அனுசரிக்கவேண்டிய அனுஷ்டானங்களும் பேதமுடையனவாக விருக்கின்றதுமன்றி, அப்பியாசத்தினால் ஒவ்வொருவருக்கும் இச்சையும் வெறுப்பும் ஒவ்வொரு பொருளின்மேலும், செய்கையின்மேலும் பற்றியிருக்கும் வித்தியாசத்தையுங் காணலாம். இது நிற்க, மனித இலக்கணத்திற்கு உரிய குணங்களில் ஒருவரிடத்துள்ளது மற்றொருவரிடத் தில்லாமல் இருப்பதால் பேதமுடைமையுங் காணலாம். சிலரிடத்தில் அன்பு, அனுதாபம் இவைகளும், சிலரிடத்து மூட வைராக்கியம், மூடபக்தி இவைகளும், சிலரிடத்து சுத்தஞானமும், அருளுடைமையும், சிலரிடத்து சுய நயப்பிரியமும், சிலரிடத்துத் தரும குணமும், சிலரிடத்து பக்தி ஞானமும், சன்மார்க்க நடையும், சிலரிடத்து பல பாரிசமனமும், இவ்வாறு அமைந்து விகற்பித்துத் தோற்றுவது வழக்கம். இங்கனமிருக்க, சுத்தஞானமும், விசேஷக்கல்வி விருத்தியும் அனுதாபமுடைய நாயகனுக்கு மூடபக்தியும், கல்வியின்மையும் அன்பற்றவளுமாக இருக்கும் மனைவி அமைவாளாகில், அந்நாயகன் படுந் துயரிற்கு அளவின்று. முற்றும் பழகிய மாடு



ஒன்றும், சற்றும் பழகாத மாடு ஒன்றுமாக இரண்டினையும் ஒரு வண்டியில் பூட்டின் ஒன்று முன்னிழுக்க மற்றொன்று பின்னிழுக்க அவ்வண்டியானது ஒரு அடி தூரமும் பெயர்ந்து செல்லாது. அதுபோல அவன் தொடுங் காரியங்களுக்கெல்லாம் இடும்பு பேசி முடிவுபெறுவண்ணம் அடங்கள் செய்து தன்னிஷ்டப்படி நடக்கும் மூடக்கிரியைகளை இயற்றக் கணவனைத் தொடர்ந்துவரச் செய்வான். பூத பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியும், ஜீவ காருண்யமும் தரும குணமுமுடைய நாயகனுக்கு அற்பக் கல்வியும், மூட பக்தியும், பிடிவாதமும், கருணையின்மையும், உடைய நாயகி இருந்தால் எவ்வாறு பொருந்தியிருப்பார்கள். இத்தகைய காதலிகளா கருத்திற்கிசைந்த காதலிகள்? அன்று. அன்று. கணவனின் குணத்திற்கேற்ற குணமுடைய நாயகியன்றோ கருத்துக் கிசைந்த காதலி? "நாயகன் ஆண்டிக்கிடச் சொன்னால் நாயகி தாதனுக்கிடுவது" என்னும் பழமொழிக் கிணங்க ஒற்றுமையின்றி வாழும் வாழ்க்கையும் வாழ்க்கையாமா? உலகிலுள்ள நாளுள்ளளவும் தானும், தன்னைச் சூழ்ந்தவர்களும் உச்சிவிக்கும் பொருட்டு, தேக கஷ்டப்பட்டோ, அல்லது மனக் கஷ்டப்பட்டோ, சம்பாதித்துக்கொண்டு வரும் பொருளை மனத் திருப்தியுடன் சுக மனுபவியாமல் சதா துக்கமனுபவிக்கும்படியான மனைவி அமைந்திருந்தால் அவ்வில்லம் எவ்வாறிருக்கும்?

"இல்லாளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளேயாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முறைக்கு மேலவ்வில்
புலிகிடந்த தூறாய்விடும்"

என்பதுபோலன்றோ இருக்கும். அந்நாயகனே, "சற்று ஏறுமாறாக விருப்பனேயாமாகிற், கூறாமல் சந்நியாசங் கொள்" என்றபடி துறக்கவேண்டும் இல்லத்தை.

"பூவாதே காய்க்கு மரமுமுள மக்களுளு
மேவாதே நின்றுணர்வார் தாமுளரே."

என்றபடி காதலனின் குணத்தின் தன்மையையும் அவனுக்கு வேண்டியவை இன்னவை என்றும் குறிப்பாலுணர்ந்து அன்னையைப்போ லமுது முதலாயவற்றை அளித்து,

"உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே,
இடுக்கண் களைவதா நட்பு."

என்றபடி ஒரு கைக்கு மற்றொரு கை உதவி செய்வதுபோல உதவி புரிவதில் நண்பனைப் போலும், மனத்தின் கணுள்ள துக்கத்தையும் ஆனந்தத்தையும் வெளிப்படுத்துங் கண்ணீர்போலக் கணவனின் சுக துக்கங்களுக்குத் தான் சகபாடியாக விருக்கின்றவளென்பதை அவன் ஐசுவரியத்தை அடைந்து நல்ல நிலைமையிலிருக்கும்போ தவனுடன் சுகத்தை அனுபவித்து அவனின் சுகத்தையும் சௌரவத்தையும் பெருகச் செய்வதிலும், அவன் வறுமையடைந்திருக்குங்கால் அவனை அந்நியர்போல வருத்தாமல் பொறுமையுடன் அவ்வறுமையைச் சகித்து ஏற்ற காலங்களில் தைரியத்தைத் தரத்தக்க வீரமொழியையும், சத்தமான மொழிகளையும் மொழிந்து துக்க நிவாரணஞ் செய்வதிலும் அந்நாயகனின் கண்ணுக்கு நிகராக விருப்பவளன்றோ கருத்திற் கிசைந்த காதலி? தன்னை நாயகன் மறக்கினும்

தன் மீதுள்ள அன்பை வேறு இடத்தில் செலுத்துவதாக விருக்கினுந் தனது காதலன் மீதுள்ள அன்பை மறவாமலும் அக்காதலன் அன்பு வைக்குமிடத்திலுந் தான் அன்பு வைத்து அவனிஷ்டத்திற் கிணங்க நடப்பவளன்றோ கருத்திற் கிசைந்த காதலி?

"அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோ
லுற்றுழித் தீர்வாருறவல்லர் — அக்குளத்திற்
கொட்டியுமாம்பலு நெய்தலும் போலவே
யொட்டியுறுவா ருறவு"

என்றபடி காதலன் கைவறண்ட காலத்திலும் கொட்டி, ஆம்பல், நெய்தல் போல விருப்பவளன்றோ கருத்திற் கிசைந்த காதலி? கணவன் வறுமை, நீங்கா வியாதி உன்மத்தம், இவைகளாற் பீடிக்கப்பட்ட காலத்து அவனால்தான் சுகப்பட்டிருந்த சுகமற்பமாக விருந்தாலும் அவற்றை;

தினைத்து நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன்றெரிவார்"

என்றபடி ஆயிரம் பங்கமாகக் கொள்வது மன்றி

"நின்று, தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருதலால்"

என்றபடி நன்றி அறிதலைக் குறிப்பிக்க தன்னாற் கூடிய ஜிவனோபாயஞ்செய்து காதலனைச் சம்ரட்சணைசெய்து மனரம்யஞ் செய்பவளன்றோ கருத்திற் கிசைந்த காதலி? சில பெண்கள் தாங்கள் கைப்பாடுபட்டு கணவனை சம்ரட்சணை செய்பவர்களாக விருந்தால் அவனைச் சற்று மதியாமல் தங்களுக்கு வேலையாட்களைப் போலப் பாவித்து நடக்கின்றனர். அவ்வாறு செய்வதனால் யாது பயன்? "என்றுளி லென்ன கடவுளு மில்" என்ற அன்னைகூட "தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு" என்னுஞ் சொற்குள்ளாவாள். ஆனால் காதலனுங் காதலியு மவ்வாறன்று. பாதியுடல் காதலியும் பாதியுடல் காதலனுமாக சுக துக்கத்திற்குங் கௌரவா கௌரவத்திற்கும் ஒருவர்க்கொருவர் உடன் சுதந்தரவாளியாராக விருக்கின்றனர். ஆதலின் காதலன் காதலியை எவ்வாறு சந்தோஷத்துடன் சம்ரக்ஷணை செய்கின்றானோ அவ்வாறே காதலன் சம்பாத்திய மில்லாக்கால் காதலி முகங்கோணாது சம்ரக்ஷணை செய்வதும் குடும்ப பாதுகாப்பும் நமக்குரிய கடனென்று செய்பவளே கருத்திற் கிசைந்த காதலி. அவ்வாறு நடக்கும் காதலி இம்மையில் கீர்த்தியும் மறுமையில் சதானந்தப் பெருவாழ்வும் அடைவர். இதற்கு திருஷ்டாந்தம், நளாயினி, சாவித்திரி, திருவள்ளுவர் மனைவி இன்னுமிவர் போன்ற இந்து பூர்வ பெண்மணிகளின் சரிதைகளே. இவர்களின் சரித்திரங்களைப்பற்றி பின்னர் முறையே தொடர்ந்து எழுதுவாம்.

C. ஸ்வப்பனேசுவரி யம்மை.



# கற்பு.

"கற்பெனப்படுவது சொல்திறம்பாமை" என்ற வாக்கியம் மிகவும் சிறியதாயிருந்த போதிலும் அதில் பொதிந்திருக்கும் அர்த்தத்தை ஆராயுங்கால் சகல சாஸ்திரங்களிலும், கிரந்தங்களிலும் கற்பைப் பற்றிச் சொல்லியிருக்கும் விஷயங்கள் யாவும் அடங்கியுள்ளன. அதாவது, கணவன் வார்த்தைக்கு இரண்டு சொல்லாதிருத்தல் என்று தெரியவருகிறது. "சொல்" என்று மாத்திரம் சொல்லியிருப்பதால், கணவன் சொல் நியாயமாயினும் சரி, அநியாயமாயினும் சரி, நரியாயினும் சரி, பிசகாயினும் சரி, ஒரு ஸ்திரீயானவள் அதின்படியே நடத்தல் வேண்டும். ஆதலின் கணவன் எந்தக்காரியம் செய்வதில் இஷ்டப்படுகிறானோ அக்காரியத்தைச் செய்வதும், அவன் இஷ்டமில்லாமல் தவிர்ப்பனவற்றைச் செய்யாதிருத்தலும், அவன் சந்தோஷமாயிருக்கிற காலத்தில், அதைத் தானும் பகிர்ந்து அவனுக்கு ஆனந்தத்தை உண்டாக்குவதும், அவன் துக்கப்படுங்காலத்தில் அவன் துக்கத்தை சமாதானம் பண்ணி அவனுக்கு ஆறுதல் செய்தலும் ஸ்திரீகளின் கடமை என்பது சொல்லாமலே விளங்குகிறது.

அப்படியிருப்பவள்தான் கற்புநிலை தவறாதவள் என்று சொல்லப்படுவாள். பரபுருஷர் முகத்தைப் பாராமலிருந்தால் மாத்திரம் ஒருவள் கற்புடையவள் என்று சொல்லப்பட மாட்டாள். ஆதலினே திருவள்ளுவர் "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை" என்று சொல்லியிருக்கிறார். அதாவது ஸ்திரீகளுக்குப் பதியே தெய்வம் என்பதும், ஸ்திரீகள் வேறு தெய்வாராதனை ஒன்றும் செய்யாமல், பதியினிடத்தில் தெய்வங்களிடத்தி லிருப்பது போல, கெட்ட காரியத்தைச் செய்தால் தெய்வ அபராதம் வருவதுபோல பதி வார்த்தைக்கு மாறி நடந்தால், பதிக்கு அபராதம் செய்தவர்களாவோம் என்று எண்ணி பயந்து ஒழுகலும், தெய்வத்தின் பேரில் பக்திவைப்பது போல், பதியினிடத்தில் அந்தரங்க பக்தியுள்ளவர்களாயும் இருத்தல் வேண்டுமென்பதும் தெற்றென விளங்குகிறது. அப்படியிருக்கப்பட்ட ஸ்திரீயே கற்புள்ளவள் என்று சொல்லப்படுவள். ஸ்திரீகளில் சிரோன்மணி போன்ற அவள் எந்த காரியம் நினைத்தாலும் அது நிறைவேறும். தெய்வங்கள் கூட அவளின் கோபத்துக்கு அஞ்சி நடக்கும் தன்மையன. உண்மையாய் அவளால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை என்று சொல்லுவதற் கேற்க பெய்யெனப் பெய்யுமழை என்றார். ஸ்திரீகளுக்கு, புருஷன் சொல்படி செய்வதைத் தவிர, வேறே தானதருமங்கள், விரதங்கள், தெய்வ ஆராதனை யாதொன்றும் வேண்டியதி மில்லை. யாதொன்றும் அவர்கள் செய்யவும் கூடாது.

## ஓர் ரிஷிபத்தினியின் கதை

தெய்வங்கள் கூட அவர்கள் இஷ்டத்திற்கு மாறுபாடு செய்வதற்கு அஞ்சி நடக்கும் தன்மையன என்பதைப் பின்வரும் திருஷ்டாந்தம் நன்கு விளக்கும். ஆதி காலத்தில் ஒரு அரசன் தன் சைனியங்களுடன் வேட்டைக்குப் புறப்பட்டு ஒரு காட்டில் வேட்டையாடிக் களைத்துப்போய், தாகம் மேலிட, அவ்விடத்தில் ஓர்

தம் கிடைக்கும்படி, நதி, குளம் முதலியன ஒன்றும் சமீபத்தில் இல்லாதபடியால் தேகம் மெலிந்து வருந்துகையில், அவன் சேவகர்களில் ஒருவன் ஒரு விருக்ஷத்தின் மீதேறி எங்கேயாவது ஒரு குடிசை தென்படுகிறதா என்று பார்க்க, கொஞ்ச தூரத்துக் கப்பால் ஒரு ரிஷி ஆசிரமம் தென்படுகிறது என்று தன் அரசனுக்குத் தெரிவித்தனன். அரசன் மிகவும் சந்தோஷத்துடன் குதிரையேறி அந்த ரிஷியின் ஆசிரமம் செல்லுவானாயினன். அவ்விடம் வந்து ரிஷி ஆசிரமத்துக்குள் நுழைந்து, அவ்விடமிருந்த ரிஷி பத்தினியைத் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு தனக்குத் தீர்த்தம் தரும்படி கேட்டான். அவள் மடியில் அந்த ரிஷியானவர் தன் தலையைக் வைத்து அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்த சமயமாதலால், அவர் சயனத்தை பங்கப்படுத்துவது அவர் மனதுக்கு அதிருப்தியை விளைவிக்குமாதலால் அப் படிச் செய்யத் தவிர்த்து, அரசனை நோக்கி, மிகவும் வணக்கத்துடன், ஐயா, தேவரீர் தயவுசெய்து, ஒரு குடத்தைச் சுட்டிக்காட்டி, அதிலிருந்தும் தீர்த்தம் எடுத்து சாப்பிடுங்கள், இப்போது நான் இருக்கப்பட்ட நிலைமை தங்களுக்கே தெரியு என்று வேண்டிக் கொண்டனள். தனக்கு மிகுந்த உபசாரத்துடன் தீர்த்த அளிப்பள் என்று எண்ணியிருந்த அரசன், தன் எண்ணத்துக்கு முற்றும் மாறு அவள் நடந்ததைக் கண்டு, கோபங் கொண்டவனாயினும் சற்று அதை அடக்கிச் கொண்டு அம்மா! இதுவோ நீங்கள் அதிதிகளுக்கு விருந்தளிக்கும் மரியாதை என்னைக் கண்டவுடன் ஆதரித்து எனக்கு வேண்டியவற்றைக் கொடுத்து உத வேண்டியதாயிருக்க இப்படிநான் தாகத்தால் வருந்துகிறேனென்று சொல்லியும் என்னை எடுத்து சாப்பிடச் சொல்லுதல் யுக்தமோ என்றனன்.

அந்த ரிஷி பத்தினியானவள் மிகவும் வணக்கத்துடன் ஐயா! தாங்கள் இவ்வளவு கற்றறிந்தவராயிருந்து இப்படிச் சொல்லுதல் தங்கள் புத்திக்கு அழகோ நான் இப்போது இருக்கிற நிலைமையைப் பார்த்தும் ஸ்திரீகளுக்கு தங்கள் பர்த்தாவினும் மிக்க தெய்வமில்லை என்று தங்களுக்குத் தெரிந்தும், இப்போது அவர் சயனத்துக்கு பங்கம் வரும்படி செய்து என்னை தங்களுக்கு தீர்த்தம் உதவும்படி சொல்லுதல் தங்களுக்கு அழகோ! அப்படிச் செய்வது தான் எனக்கு நியாயமோ! ஆதலின் இனிமேலாவது தேவரீர் தயவுசெய்து தீர்த்தம் எடுத்து அருந்தி செல்லல் வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்" என்றனள். அரசனுக்கு இவ்வார்த்தையைக் கேட்டதும், அடங்காக் கோபம் பிறந்தது. உடனே அம்மாதிரோன்மணியைப் பார்த்து "நான் யார் தெரியுமா? இப்பூலோக முழுமையும் ஒரு குடைக்கீழ் ஆண்டு தன்னுயிர்போல மன்னுயிர் புரக்கும் சக்ரவர்த்தி என் அறிவாய். ஆதலின் சீக்கிரம் எனக்கு தீர்த்தம் கொடுத்து உதவவேண்டும்," என் மிகவும் கோபத்தோடு புகன்றனன். இதைக் கேட்ட அவ்விருஷி பத்னி பின்னும் சொல்லுவாள் "உலகுக்கெல்லாம் மன்னவனும் யார் யார் எந்த எந்த கடமைகளைச் செய்யவேண்டுமென்பது தங்களுக்குத் தெரிந்திருந்தும், ஏ ராஜனே! இப்படிச் சொல்வது சரியன்று, ஆதலின் நான் முன் சொன்னபடி செய்துகொள்ள வேண்டியதே அவசியம் என்று மறுபடியும் புகன்றனள். இதைக் கேட்ட அரசன் மிகவும் கோபங்கொண்டு "பின்னர் எவ்விடுக்கண் வரினும், நீ உன் இடம் விட்டு நகரமாட்டாய் சொல்" என, "உயிர் போவதிலும் மிக்க இடுக்கண் உளதோ? எ



உயிர் போவதாயினும் என் பர்த்தாவின் சயனத்துக்கு இடையூறு வரும்படியான காரியம் செய்யேன்" என்றனள். உடனே அரசன் எப்படியாவது அவளை எழுந்திருக்கச் செய்வது என்று தீர்மானங்கொண்டு அருகில் சயனித்துக்கொண்டிருந்த அவர்களின் குழந்தையை எடுத்து ஜ்வலித்துக்கொண்டிருந்த அக்கினி ஹோம குண்டத்தில் வைத்து விட்டனன். அச்சமயத்திலும், பதிவிரதா தர்மமே உருக்கொண்டு வந்தது போன்ற அப்பத்தினியானவள் பதை பதைத்திலள். இடம் பெயர்ந்தனள் அல்லள். தன் பர்த்தாவை மனதில் தியானம் செய்துகொண்டு சும்மா இருந்து விட்டனள். அக்குழந்தையே அவ்வக்கினியில் தகிக்கப்படாமல், சந்தனக் குழம்பில் விளையாடுவது போல அக்கினி மத்தியில் விளையாடியது. ஏனெனில், அவள் கோபத்துக்கு ஆளாகுவோமென்று பயந்து அக்கினியானவன் தன் பலத்தை யெல்லாம் குறைத்துக்கொண்டு அக்குழந்தையை தகிக்காதிருந்தான். இதைக் கண்ட அரசன் மிகவும் ஆச்சரியமடைந்து அவளுக்கு அபராதம் பண்ணினேனென்று நினைத்து வலம் வந்து நமஸ்காரம் செய்து தன்னை மன்னிக்கும்படி பிரார்த்தித்தான். பிறகு அவளால் மன்னிக்கப்பட்டு தன் நகரடைந்தனன். இக்கதையே பதிவிரதைகள் கோபத்திற்கு தெய்வங்களும் அஞ்சி நிற்கும் தன்மையன என்பதைக் காட்டுகிறது.

ஆதலின் ஸ்திரீகளுக்கு அவரவர் பர்த்தாவின் சொற்படி நடத்தலே தர்மமாம்.

V. Sundarasa Iyer B. A.

# சௌந்திரம்.

(ஓர் கற்பரசி.)

## I-வது அத்தியாயம்.

## சிறைக்கோட்டம் புகுதல்.

ஒரு நாள் சால்வதேசத்து அரசன் அவைக்களத்தே மந்திரி, பிரதானிகள், பிரபுக்கள் முதலானோர் எல்லோரும் கூடி ஒருவருக்கொருவர் மெதுவாக "இன்று அரசன் நம்மெல்லோரையும் எதற்காக இவ்வவைக்கண் அழைத்திருக்கின்றாரோ அறியோம். ஏதேனும் முக்கியமான சங்கதியிருக்கவேண்டும். வீண் காரியத்திற்காக நம்மரசன் எல்லோரையும் அழைக்கமாட்டார். எல்லா சங்கதிகளும் அவர் வந்தவுடனே தெரிந்துவிடுகின்றது. அவசரப்படுவானேன்?" என்று பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் மெய்காப்பாளர் புடைசூழ அரசனும் வந்து நவரத்தினம் இழைத்த பொற் சிம்மாசனத்தின்மீது உட்கார்ந்து சபையில் இருந்தோரை நோக்கி "மந்திரி, பிரதானிகளே, பிரபுக்களே, மற்றுமுள்ளவர்களே! நான் இன்று இவ்விடத்திற்கு உங்கள் எல்லோரையும் அழைத்ததேன் என்பது உங்களுக்கு விளங்காமலே இருக்கும். அது ஆச்சரியமல்ல. இன்று யோசிக்கப்போகும் விஷயத்தைப்பற்றி நானும் என் பத்தினியும் பேசித் தீர்மானித்துக்கொண்டோமே

யன்றி வேறொருவருக்கும் இன்னும் இதை வெளியிடவில்லை. ஆனால் இப்போது
அதை வெளியிடுகிறேன். கவனித்துக் கேட்டு அதன்பிரகாரம் நீங்கள் நடக்கவேண்
டும்" என்று கூறினார். இவ்வார்த்தைகளைக் கேட்ட எல்லோரும் "தங்கள் பேச்சுக்
கட்டியுண்டா? சொல்லவேண்டியதைத் தாராளமாய்ச் சொல்லுங்கள். காலாலிட்ட
வேலையைத் தலையால்செய்யக் காத்துக்கொண்டிருக்கும் எங்களைக் கேட்பானேன்?"
என்று பதில் தந்தார்கள்.

இதைக் கேட்ட அரசன் மனமிக மகிழ்ந்து பின்வருமாறு கூறுவானாயினன்:
"நான் என் பால்யமுதல் இவ்விராஜ்யத்தை என்னால் கூடியமட்டும் நன்றாகவே
ஆண்டுவந்தேன். இராஜ்யபாரம் தாங்குதல் சாமானியமான காரியம் அல்ல. பல
விதத் துன்பங்களும் அதில் உண்டு. எனக்கு முதுமை மேலிட்டபடியால் இனி
அப்பாரத்தைத் தாங்குதல் அசாத்தியமாகுமென்றெண்ணுகிறேன். மேலும் காட்
டிற்குச் சென்று தவம் புரியவேண்டும் என்னும் எண்ணமும் எனக்குண்டாகிறது.
ஆகையால் சற்குணன் ஆகிய என் ஒரே புத்திரனுக்கு மணம் புரிவித்து பட்டாபி
ஷேகம் செய்து ராஜ்யபாரத்தை அவன் கையிலே ஒப்புவித்துவிட்டு நானும் என்
பத்தினியும் அடவியிற் சென்று அருந்தவம் புரியத் தீர்மானங்கொண்டோம்.
போகும்போது என் மகனுக்கு வேண்டிய புத்திமதிகள் கூறிப் போகின்றேன்.
அவன் என் சொல்லைக் கடவான். என்னைப்போலவே தேசத்தை ஆள்வான்.
நீங்களும் என்னிடத்தில் எப்படி விஸ்வாசமாய் இருக்கிறீர்களோ அப்படியே
அவனிடத்திலும் இருக்கவேண்டும். சிறு வயதானபடியால் ஏதேனும் தப்பினாலும்
தப்பக்கூடும். அப்போது அவன்மேல் கோபியாமல் நியாயத்தைப் போதித்து
சீர்திருத்தவேண்டுவதே உங்கள் கடமையாகும். இதற்கு உங்கள் உத்தரத்தை
எதிர்பார்க்கிறேன். எல்லோரும் யோசித்துச் சொல்லுங்கள்."

இவ்வினிய மொழிகளைக் கேட்ட அவையோரெல்லாம் மெத்த சந்தோஷித்து,
"ஓ! வேந்தே! தாங்கள் கொண்ட கருத்து மிகச் சிலாக்கியமே. தாங்கள் அடவிக்
குச் செல்லுதலைக் குறித்து எங்களுக்கு மிக விசனம். ஆயினும் தங்களுக்கு அது
நன்மையைப்பயக்குமாதலால் எங்கள் விசனத்தை ஒழிக்கின்றோம். மேலும் தங்கள்
குமாரன் சற்குணர். எங்களைச் சீர் ஆளுவார் என்பதில் ஐயமில்லை. சகல சாஸ்
திரமும் தீரக் கற்றுணர்ந்த அவர் ஒருபோதும் தீயவழியில் நடக்கமாட்டார்.
தங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள். சற்குணன் கல்யாணச் சடங்குகளைக் கண்டு
கண்குளிரும் காலம் எப்போது வரும் என்று காத்திருந்தோம். அதுவும் நெருங்கி
விட்டது. அது விஷயத்திலும் மெத்தச் சந்தோஷமே. எல்லாவற்றையும் சீக்கிரம்
முடிவு செய்யுங்கள்" என்று ஏகோபித்துச் சொன்னார்கள். உடனே அரசன்
அவையோரை நோக்கி தங்கள் இனிய சொற்கள் எனக்குப் பேரானந்தத்தை
விளைத்தன. எல்லாம் திட்டம் செய்துகொண்டபின் பறையறைவித்து சமாசா
ரம் வெளிப்படுத்துகிறேன் என்று சொல்லிச் சபையைக் கலைத்துவிட எல்லோரும்
தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றனர்.

பின்னர் இராஜா மந்திரியை மட்டும் அழைத்து "இன்று நாம் சபையில்
பேசிய விஷயத்தை சற்குணனுக்கறிவித்து அவன் கருத்தை யறிந்துவா" என்று



ஆளை தந்தனுப்பினன். உடனே மந்திரி அரசகுமாரனை அடைந்து யோகக்ஷேமங்
கள் வினவி சபையில் நடந்த விஷயங்கள் அனைத்தையும் கூறி உன் கருத்தென்ன
என்று கேட்க,

சற்குணன்:—நானோ இன்னும் சிறுவன். இச்சிறுவயதிலேயே கல்யாணம்
என்னத்திற்கு? மேலும் நான் இன்னும் கற்றுக்கொண்டிருக்கிறேன், இராஜ்ஜிய
பாரம் தாங்கும் சக்தி எனக்கு இல்லையே. அநீதமாய் அரசாண்டால் எனக்குப்
பெரும் பாபம் சேருமே அதற்கென் செய்கிறது.

மந்திரி:—சற்குணா! நீ சொல்வது அவ்வளவாகப் பொருந்தவில்லை. உனக்கு
இப்போது வயது ஆயிற்று. கல்யாணத்திற்கு ஏற்ற பருவம்தான். இன்னும்
கற்றுக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னாயே அது வாஸ்தவம்தான். "கல்வி
கரையில கற்பவர் நாள் சில" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆதலின்
ஒருவன் ஆயுள் முழுவதும் வேறொரு வேலையும் செய்யாமல் கற்றுக்கொண்டே
யிருந்தாலும் அவன் கல்வியின் கரையைக் காணமாட்டான். ஆகவே அவன் தன்
கல்வியை எண்ணியே வேறு வேலைகளில் பிரவேசியாதிருத்தல் அறியாமையாகும்.
இனி இராஜ்யபாரம் தாங்கச் சக்தியில்லை யென்கின்றாய், அது அப்படியல்ல. நாம்
சரித்திர வாயிலாக நோக்கும்போது 16, 17, 18-வது வயதுகளிலேயே இராஜ்யத்
தைக் கைக்கொண்டு சீராய் அரசு செலுத்திய பலர்களைப்பற்றிப் பார்த்திருக்கி
றோம். ஆகையால் நீ தேசமாளுதல் இயலாத காரியம் அல்ல. அப்படியே
உனக்கு ஏதேனும் ஒன்று தெரியாவிட்டால் அதிக அநுபோகமுள்ள நாங்கள்
எல்லாம் உன்னிடத்தில்தான் இருக்கிறோம். சமயோசிதமாய் புத்தி கூறுவோம், நீ
ஒன்றிற்கும் அஞ்சவேண்டாம்.

சற்குணன்:—ஏது, அதிகமாய்ப் பிரசங்கம் செய்கிறீரே! இவை யெல்லாம்
சரிதான். ஆனால் என் மனதில் ஒன்று இருக்கின்றது. அது வென்னவென்றால்
"சம்சாரம் துக்கசாகரம்" என்று பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன், நூல்களி
லும் வாசித்திருக்கிறேன். ஜனங்களைப் பார்த்து வருவதிலும் அது உண்மை
யென்றே தோன்றுகிறது. ஆகையால் எனக்குக் கல்யாணமே வேண்டாம் என்பது
தான் என் கருத்து. இதைக் குறிப்பதற்குத் தான் முன் ஒருவாறாகச் சொன்
னேன். அதற்கெல்லாம் சமாதானம் சொன்னபடியால் என் கருத்தை நேரே
சொல்லிவிட்டேன். இனி என்னை இவ்விஷயத்தைப்பற்றிக் கேட்கவேண்டாம்.

மந்திரி:—நீ சொன்னது மெத்த நன்றாயிருக்கிறது. "சம்சாரம் துக்கசாகரம்."
அது ஒருவாறு உண்மையே. ஏழைகட்குப் பொருந்தக்கூடிய பழமொழியேயொழிய
அது உன்னைப்போன்ற அரசகுமாரர்கட்கு ஒருபோதும் பொருந்தாது. மேலும் ஒரு
வன் புத்திரபாக்கிய மில்லாதிருந்தால் அவன் அநேககோடி புண்ணியங்கள் செய்த
போதிலும் "புத்" என்னும் நரகத்தில் என்றென்றும் அழுந்துவான் என்று
சொல்லியிருக்கிறது. ஆகையால் நீ அவ்வீண் எண்ணத்தை யெல்லாம் விட்டு
உன் தகப்பன் பிரியத்திற்கேற்ப ஒரு நல்ல பெண்ணை மணந்து பின் பட்டாபி
ஷேகம் செய்துகொள்.

சற்குணன்:—மந்திரி! நீர் சொல்வது வெகு நன்றாயிருக்கிறது. புத்திரன் இல்லாவிட்டால் புத் என்னும் நரகத்தில் அழுந்தவேண்டும் என்பது சரியன்று என எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் எத்துணைத் துறவிகள் இருக்கின்றனர். அவர்கட்கெல்லாம் மோக்ஷம் கிடைக்கும் என்று நூல்கள் கூறுகின்றனவே. அவர்கள் புத்திரன் பெற்றவர்கள் அன்றே. ஆகவே அவர்கள் ஏன் அந்நரகத்தில் அழுந்தி அவஸ்தைப்படுவதில்லை? நீர் சொல்வதை நான் ஒருபோதும் நம்பமாட்டேன், உம் சொற்படியும் கேட்கமாட்டேன். தயை கூர்ந்து பிதாவினிடம் சென்று அவருக்குக் கோபம் உண்டாகாதபடி இச்செய்தியைச் சொல்லிவிடும். நான் படிப்பறைக்குச் செல்லவேண்டும். என்று சொல்லிவிட்டுச் சரேலென்று போய்விட்டான்.

மந்திரி:—இவன் என்ன நமக்குமேல் பேசுகின்றானே, எவ்வளவு நியாயங்களை எடுத்துரைத்தாலும் அவற்றிற்கெல்லாம் பிரதிநியாயம் சரியாகவே கூறுகின்றான். அவன் கடைசியாகச் சொல்லியதற்கு என்ன பதில் சொல்லுகிறதென்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருந்தேன். நல்ல வேளையாய் அவன் போய்விட்டான், என் மானமும் தக்கிற்று. நல்லது இச்சமாசாரத்தை அரசனிடம் அறிவிக்கிறேன். அவர் இதைக் கேட்டு சந்தோஷப்படார் என்பது உண்மை. ஆயினும் என்செய்வது? என்று தனக்குள்ளேயே தீர்மானித்துக்கொண்டு அரசனிடம் சென்று தன் வரவைத் தெரிவித்தான்.

அரசன் உடனே மந்திரியை உள்ளே அழைத்து சமாசாரம் என்னவென்று கேட்க அவன் எல்லாம் தெரியச்சொன்னான். அரசன் அதைக் கேட்டு மனம் பொறாதவனாய் என்ன செய்வோம் என்று ஒன்றுந் தோன்றாதவனாயிருக்கையில் மந்திரி, வேந்தே! இதற்கு யோசனையென்ன! சற்குணன் என் வார்த்தையைத்தான் தட்டிவிட்டான். தாங்கள் நேரில் கூப்பிட்டுச் சொன்னால் தட்டமாட்டான் என்று எண்ணுகிறேன். ஆகையால் அப்படிச் செய்யலாம் என்றான். ஆனால் நாளை நாம் கொலுவீற்றிருக்கும்போது அவனை அழைத்துச் சொல்லலாம் என்று நிச்சயித்து இருவரும் பேர்தனர்கள்.

மற்றைநாள் அரசன் கொலுவில் அமர்ந்தவுடனே மந்திரியை நோக்கி உன் சற்குணனை அழைப்பாயாக என்ன, மந்திரி உடனே ஒரு சேவகன் மூலமாய்ச் சமாசாரம் அனுப்ப சற்குணன் வந்து "பிதா! நமஸ்காரம். தாங்கள் என்னை அழைத்ததாக சேவகன் செப்பினான். ஏனென்று கேட்க விரைந்து வந்தேன்.

அரசன்:—நல்லது, நேற்று மந்திரி உன்னிடம் பேசிய விஷயத்தைப்பற்றி மீண்டும் யோசித்தனையா?

சற்குணன்:—என் முடிவை அவரிடமே செப்பிவிட்டதால் மீண்டும் யோசிக்கவில்லை.

அரசன்:—நல்லது, இப்போது நான் சொல்லுகிறேன். நீ கல்யாணம் செய்துகொண்டு பட்டாபிஷேகம் செய்துகொண்டு ராஜ்யபாரத்தைக் கைக்கொண்டால் நான் காடுசென்று தவமியற்ற அநுகூலமாக இருக்கும். எனக்கு இந்த முதிய வயதில் நீ செய்யவேண்டிய சகாயம் இதுவே, என்ன பகருகிறாய்?



சற்குணன்:—நான் கல்யாணம் செய்துகொள்வதில்லை யெனத் தீர்மானித்திருக்கிறேன். தயவுசெய்து தாங்கள் இனி என்னை இவ்விஷயத்தைப்பற்றி வினவ வேண்டாம்.

அரசன்:—(கோபத்துடனே) அது முடியாது, இப்போது நான் அரசனாகக் கட்டளையிடுகிறேன், கல்யாணம் செய்துகொண்டு பட்டாபிஷேகம் செய்துகொள்ளுகிறாயா, இல்லையா?

சற்குணன்:—தேவரீர் அவ்வளவு என்மீது கோபங்கொண்டால் சிறியேனாகிய நான் செய்யவல்லது என்ன இருக்கிறது, மீண்டும் என்னை அப்படியே கேட்கிறீர்களே. என் மனது அதற்கு இசையவில்லை.

அரசன்:—அப்படியா? நீ அரசன் ஆணையை மீறினமையால் சிறைச்சாலை வாசம் செய்யவேண்டியதுதான். என்று உத்தரவு செய்தான். உடனே சற்குணன் சேவகர்களால் சிறைச்சாலையிற் சேர்க்கப்பட்டான்.

M. V. மீனாக்ஷிசுந்தரம். பி. ஏ.

## சமாசாரக் குறிப்பு.

புதிய வைஸிராய்.—லார்டு மின்டோ தமது மனைவியாருடனும் பெண்களுடனும் நவம்பர் மாதம் 7-ந்தேதி மார்ஸேல்ஸிலிருந்து இந்தியாவுக்குப் புறப்படப் போகின்றார்.

மிஸஸ் அன்னிபெஸான்ட்.—மாதர் சிரோன்மணியாகிய மிஸஸ் அன்னி பெஸான்ட் இம்மாதம் 8-ந்தேதி பிரான்ஸ் தேசத்து மார்ஸேல்ஸ் துறைமுகத்திலிருந்து "மங்கோலியா"க் கப்பலேறி இந்தியாவுக்குப் புறப்பட்டுவிட்டார்

வேல்ஸ் இளவரசியார்.—சக்ரவர்த்தி குமாரர் இத்தேசத்திற்கு வருங்காலத்தில் தமது மனைவியாருடன் சேர்ந்திருக்கும் சமயத்திலெல்லாம் உபசாரப் பத்திரிகை படிப்போர் இருவர்க்குஞ் சேர உபசாரனை கூறவேண்டுமே யல்லாது இளவரசர்க்கு மட்டிலுந் தனித்துக்கூற வொண்ணாது.

ஓர் பெரிய வயிரமணி.—பிரிடோரியாவில் 400 காரெட்டுள்ள புதிய வயிரமணியொன்று சிறிதேனும் மாசற்றதாக அகப்பட்டிருக்கின்றதென்று தெரிவிக்கப்படுகின்றது. சில காலத்தின் முன்பு 3,000 காரெட்டுள்ள மணியொன்று பிரிடோரியாவில் அகப்பட்டிருந்தது. அம்மணி லண்டனில் வந்து கிடக்கின்றது. அதனை விலைக்குக் கொள்வாரெவரையும் காணவில்லை.

H. H. தீபாம்பா பாயி ஸாஹப்.—தஞ்சாவூர் ராணிகள் நால்வரில் ஒருவராகிய M. தீபாம்பா பாயி ஸாஹப் செப்டம்பர் மாதம் 19-ந்தேதி காலஞ்சென்றுவிட்டாரென்று அறிகிறோம். இறக்கும்போது இவர்க்கு 65-வயது. இந்த ராணி அனேக ஏழைகளுக்கு உபகாரம் புரிந்து பெரும் புகழ்பெற்றிருந்தார். இவரது உத்தரக்கிரியைகளனைத்தும் இவரது பவுத்திரராகிய ஸ்ரீமந்த ராஜஸ்ரீ சிவஜி ராஜா ஸாஹபினால் செய்யப்பட்டன.

ஓர் ஜப்பானியக் கப்பல் முழுகிப்போயிற்று.—இம்மாதம் 11-ந்தேதி காலை "மிகாஸா" என்ற ஜப்பானியக் கொடி கப்பல் தானகவே தீப்பற்றி, அதன் கண்ணிருந்த வெடிமருந்துக் கூடம் வெடித்துவிடவே, கப்பல் முற்றிலும் அழிந்து கடலில் முழுகிவிட்டது. 599-பேர் சேதமென்று அறிகிறோம். வேறு கப்பல்களிலிருந்து துணை செய்யும்பொருட்டு வந்திருந்த சிலர்கூட மடிந்துபோயினர். உலக

மெல்லாம் மெச்சுமாறு ருஷியரை வெற்றிகொண்ட அட்மிரல் டோகோ அத்தருணத்தில் அந்தக் கப்பலில் இல்லாமலிருந்தது அதிருஷ்டவசமே. ஜப்பானியக் கடற்படைக்கு நேர்ந்த இப்பெருஞ் சேதம்பற்றி உலகமனைத்தும் துயரமுறுமென்பதில் ஐயமில்லை.

திருவாங்கூர் ராணிகளின் கல்வி.—சில தினங்களின் முன்பு திருவாங்கூர் திவான் மிஸ்டர் மாதவராவ் ராணிகளுடைய கல்வி விருத்தியைப் பரிசோதனை செய்துவரும் பொருட்டுச் சென்றிருந்தனர். இந்தக் குழந்தைகள் இங்கிலீஷ் படிக்கத் தொடங்கி 3-வருஷங்களாயின. எனினும் யாவரேனும் ஐரோப்பியரிவரின் அவர்களுடன் சாதாரணமாய்ச் சம்பாஷணை செய்தற்குரிய நிலைமை யடைந்திருக்கிறார்கள். மிஸ் வாட்ஸ் B. A. என்ற ஐரோப்பிய மாது ராணிகளுக்குப் "பயானோ" வாத்தியம் கற்பித்துவருகின்றனள். திவான் சிறிது நேரம் இருந்து ராணிகளிடம் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ராணிகள் தப்பில்லாதபடி மறுமொழி யளித்தார்கள்.

"சுதேசினிகள்."—"சுதேசீய"ம் என்று கூறப்படும் முயற்சி இப்போது இத்தேச முழுதும் பரவிவருவதை அனைவரு முணர்வார்கள். அன்னிய தேசத்தில் செய்துவரும் பொருள்களை விலக்கி வைத்துவிட்டு நமது தேசத்துச் சாமான்களையே விலைக்கு வாங்கி நமது வர்த்தக நிலைமையும் பொருள் நிலைமையும் விருத்தி செய்துகொள்ளவேண்டுமென்பதே "சுதேசீய"த்தின் நோக்கம். பெங்காள ஜனங்களுக்குள்ளேதான் இவ்வூக்கம் மிகுதியாக ஏற்பட்டிருக்கிறது. ஆனால், பெங்காளத்தில் ஒருவிதத் திருத்தமும் ஆண்பிள்ளைகளோடு நிற்பதில்லை. பெங்காளத்து ஆண்மக்களை யெல்லாம் பற்றியிருக்கும் சுதேசீய ஆவேசம் பெண்களுக்குள்ளும் பரவுகின்றது. எனவே, மாதர்களும் பிரத்தியேகமாகச் சபைகள் கூடி அந்நியச் சரக்குகளை விலக்கிவிடவேண்டுமென்று பிரதிக்ஞைகள் செய்துவருகிறார்கள்.

புனாவில் ஓர் ஹிந்து விதவா ஆசிரமம்.—கதியற்று வருந்தும் ஹிந்து விதவைகளுக்குக் கல்வி பயிற்றி ஆதரணைபுரிந்து அவர்களுக்கு ஸ்கூல் உபாத்தியாயச்சி வேலை முதலியன வாங்கிக்கொடுத்து உபகரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் புனாவில் ஸ்தாபனமாயிருக்கும் விதவாசிரமம் இம்மாதம் 26-ந்தேதி பம்பாய் கவர்னர் லார்டு லாமிங்டனால் திறக்கப்பட்டது. டாக்டர் பண்டாரகர், புரொபஸர் கர்வே முதலிய பெரியோர்கள் கவர்னருக்கு உபசாரங்கூறி அழைத்தனர். லார்டு லாமிங்டன் இந்தப் பெருந் தருமத்தில் முயற்சி யெடுத்தோரனைவர்க்கும் தாம் வாழ்த்துக் கூறுவதாகச் சொல்லினர். தமது மனைவியார் இந்தியாவிலிருந்திருக்கும் பக்ஷத்தில் அவரும் அவ்வாசிரமத்திற்கு மகிழ்ச்சியுடன் வந்திருப்பாரென்றும் இந்திய ஸ்திரீகளிடம் லேடி லாமிங்டன் மிக்க அனுதாபமுள்ளவரென்றும் கவர்னர் சொன்னார். இம்மாகாணத்திற்கெல்லாம் வந்து மேற்படி புண்ணியத்தின் பொருட்டுப் பொருள் சேகரித்துச் சென்ற காசிபரம் தேவதர அம்மை கவர்னரின் வரவின்பொருட்டும் அவரது அன்பார்ந்த சொற்களின் பொருட்டும் அவருக்கு நன்றி கூறினர்.

ஜப்பானிய மணச்சடங்குகள்.—ஆகஸ்ட் மாதத்து வானீ விலர்வினிப் பத்திரிகையில் மிஸ்டர் C. ராமசாமி அய்யங்கார் பின்வருமாறு எழுதுகின்றார்:—"(ஜப்பானில்) பிரபுவீட்டுப் பெண்கள் தங்கள் ஒட்டியாணங்களில் ஈட்டியைச் சொருகிவைத்திருப்பார்கள். மணமாகாத பெண்களின் பற்கள் வெண்மையாக இருக்கும். மணமானபிறகு பற்களைக் கருமையாக்கிக் கொள்கிறார்கள். பெண்களுக்குப் படிப்புச் சொல்லிவைப்பார்கள். ஜப்பானிய ரெல்லோரும் தங்கள் மனைவிகளை நம்பிக்கையுள்ள வேலையாளைப்போலப் பாவிக்கின்றனர். மேலும் இவர்கள் தங்கள் மனைவியை அடிப்பதாகவாவது கொடுமையாக நடத்துவதாகவாவது கேட்கின்றிலம். சிலர் கலியாணம் செய்துகொள்வதன்முன் ஒரு பெண்ணை ஒருவாரம் வைத்துக்கொண்டு



அவளுடைய குணகுணங்களை யறிந்து பிறகு மணத்தல் ஒருவகை வழக்கமாகத் தோன்றுகிறது. இவர்கள் கலியாணச் சடங்குகள் மிகச் சாதாரணமானவையே. மணமகனும் மணமகளும் மூன்று முறை ஒருவர் கொடுக்க மற்றொருவர் மாறி மாறிச் சில சிநேகிதர் முன்பு சாராயம் குடிப்பார்கள். மணமகள் தன் தாயின் வீட்டிலிருந்து முனைவனது கிரஹத்திற்குப் போகும்போது வெண்மையான உடை உடுத்திக்கொண்டு போவாள்."

ஸர் S. சுப்பிரமணிய அய்யரும் வேசியர் நாட்டியமும்.—லாஹோரில் பிரசுரமாகும் "ஆரிய பத்திரிகை" ஸர் S. சுப்பிரமணிய அய்யரைப்பற்றி ஓர் சமாசாரம் பிரசுரித்திருக்கின்றது. ஆனால் அது மெய்யென்று நாம் கருத இடமில்லாமலிருக்கின்றது. ஓர் பெருந்தேச இழிவென்று பிறர்கள் கருதும்படி சென்னை "வேல்ஸ் இளவரசரின் உபசாரணைக் கமிட்டியார்" இளவரசர் இங்கு வருங்காலத்தில் 'நாட்டியக் கச்சேரி' நடத்தவேண்டுமென்று தீர்மானித்திருப்பதாக நெடுநாளாக வதந்தி யேற்பட்டிருக்கிறது. அதை மறுத்து இன்றுவரை கமிட்டியார் ஒன்றும் எழுதவில்லை. இப்போது "ஆரிய பத்திரிகை" மேற்படி கமிட்டித் தலைவராகிய ஸர் S. சுப்பிரமணிய அய்யரும் நாட்டியக் கச்சேரிக்கு அனுகூலமாகவே பேசினாரென்று கூறுகின்றது. இங்ஙனம் அப்பத்திரிகை கூறுவதற்குத் தக்க ஆதாரமுண்டோ, இல்லையோவென்பது நமக்குத் தெரியவில்லை. உலகமறியும் வண்ணம் இழிநடை கொண்டவளாகிய ஓர் வேசை மாதை சக்ரவர்த்தி குமாரரின் முன்பு கூத்திடச்சொல்வது அவர் மனதில் இத்தேசத்தாரைப்பற்றி மிகத் தாழ்வான எண்ணம் முண்டாகும்படி செய்யுமென்பதை ஸர் S. சுப்பிரமணிய அய்யர் அறியாதவரல்லர். முன்னோர்முறை "நாட்டியக் கச்சேரி"க்கு விரோதமாக ஸர் S. சுப்பிரமணிய அய்யர் அபிப்பிராயங் கொடுத்திருக்கின்றாரென்பதை யாமறிவோம். எனினும், உபசாரணைக் கமிட்டிக்கு ஸர் S. சுப்பிரமணிய அய்யர் தலைமை பூண்டிருப்பது ஒருவிதச் சந்தேக முண்டாக்குகின்றது. நமது புகழ்பெற்ற ஸதேசஸ்தரின் பெயர்மீது பற்றியிருக்கும் இந்த மாசு பத்திரிகைகள் மூலமாக விரைவிற் கழுவிவிடப்படுமென்று நம்புகிறோம்.

(பிற்பட்டுத் தெரியவரும் வர்த்தமானத்தால் சென்னைக் கமிட்டியார் மேற்படி துராலோசனையை நிறுத்திவிட்டார்களென் றுணர்ந்து மகிழ்ச்சியடைகிறோம்.)

சு. மித்திரன்.

## நமது பத்திரிகையைப்பற்றிப் பிறர் யாது கூறுகிறார்கள்?

சுதேசி, 13-9-15 புதன்கிழமை.

"சக்ரவர்த்தினி" யென்ற மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையானது, சென்ற ஆகஸ்ட் மாதம் முதல் சென்னையில் வெளியாகிப் பெண்பாலாரின் அபிவிருத்தியே நோக்கமாகப் பிரசுரிக்கப்படுகின்றது. இப்பத்திரிகை விருத்தியாவதாக! இதனுடைய அரிய பெரிய நோக்கங்கள் கைகூடுவதாக! இப்பத்திரிகையின் முதற் சஞ்சிகையை நோக்கிச் சந்தோஷப்பட்டோம். இப்பத்திரிகையின் நோக்கம் பத்திராதிபரால் நன்கு விவரிக்கப்பட்டிருக்கின்றது. மகா கனம்பொருந்திய ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தமிழ் நாட்டார்க்கு ஞானகுரு வல்லவா? "ராஜாக்களும் ஜனங்களும்" என்ற தலைப்பின்கீழ் ஐயரவர்கள் தமக்கியற்கையா யமைந்துள்ள பொருட் செறிந்த நடையில் எழுதியிருக்கிறார்கள். ஐயரவர்கள் எழுதும் எந்தப் பத்திரிகைக்கும் விசேஷ மதிப்புண்டாதலா லிப்பத்திரிகையின் உயர்வு சொல்லாமலே விளங்கும். "விக்டோரியாச் சக்கிரவர்த்தினியின் சரித்திரத்திலிருந்து நமது நாட்டு மாதர்கள் அறியத்தக்க சில விஷயங்கள்" என்ற தலைப்பின் கீழ்ப் பத்திராதிபரும், 'பவனம்' என்ற தலைப்பின்கீழ் மிஸ்டர் பஞ்சாபகேச ஐயர் பி. ஏ. அவர்களும், 'சுகாதாரம்' என்ற தலைப்பின்கீழ் மிஸ்டர் டி. நடேச ஐயரும், இந்தி

யாவும் மாதர்களும்" என்ற தலைப்பின்கீழ் 'டி. எஸ். வி' என்பாரு மெழுதியிருக்கின்றார்கள். "நமது மாதர்களுக்கு ஆங்கிலப்பாஷை கற்பிப்பது அவசியந்தானா?" என்பதைப்பற்றி மிஸ்டர் என். ராகவாசாரியார் பீ. ஏ. யும், மிஸ்டர் வேங்கடராம ஐயங்காரும் தர்க்கிக்கின்றார்கள். பெண்பாலாருக்கே பொருத்தமான விஷயங்களிச்சஞ்சிகையிற் காணப்படுகின்றன. இதன் ஆசிரியர் "சுதேசமித்திரன்" உதவிப் பத்திராதிபராகிய மிஸ்டர் ஸி. சுப்பிரமணிய பாரதி. இதன் வருஷ சந்தா ரூபா 2. சென்னைச் 'சுதேசமித்திரன்' அச்சாபீசிலிருந்து இது வெளியாகின்றது.

இந்து நேசன், 1905-ஆு செப்டம்பர்-மீ 13-உ.

"சக்ரவர்த்தினி"—எந்நாட்டினைக் காட்டிலும் இவ்விந்திய நாட்டில் பெண் கல்விக்கு அபிவிர்த்திக் குறைவேயென்று சொல்லவேண்டும்: பெண்களுக்கு விசாலமான புத்தி நுட்பமிருக்கும்படி அவர்கள் மனத்திற் கல்வியூட்டினால் மேலேசொன்ன குறை சூரியனைக் கண்ட பனியைப்போல் அகன்றுபோமென்ற நல்லெண்ணத்துடன் நந்தமிழ்நாட்டு மாதாகளின் அபிவிருத்தியையே பெரு நோக்கமாய்க்கொண்டு இப்போது வெளிப்போந்த 'சக்ரவர்த்தினி' என்ற மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகையின் முதற் சஞ்சிகையைப் பார்க்க அகமகிழ்ந்தனம். நந்தமிழ்நாட்டு சிறுவர் சிறுமியர் முதலினோர் அறிந்துகொள்ளும்படியான செந்தமிழ் நடையில் விஷயங்களிச் சஞ்சிகையின் கண் புத்தியும் சாமர்த்தியமும் மிகுந்த கல்வியாளரால் எழுதப்பட்டிருக்கின்றன. தமிழுலகத்து மாதர்களின் அறிவைப் பரவச்செய்வதற்காகக் கங்கணங் கட்டி முன் வந்திருக்கும் இப்பத்திரிகையினது நோக்கம் நிறைவேறும்படி தமிழ் நாட்டார் இதனை ஆதரிப்பாராக.

சர்வஜன மித்திரன், 1905-ஆு செப்டம்பர்-மீ 8-உ.

இப்பத்திரிகை யொன்று ஆகஸ்டு மாதம் முதல் வெளிவரப்போகிறதாய் முதற் றொகுதியின் முதற் பகுதி எமக்குக் கிடைத்தது. அதில் (1) சுதேசமித்திரன் பத்திராதிபர் ம-ள-ள-ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் (2) சுதேசமித்திரன் உதவி பத்திராதிபரும், இவ்விந்து நாட்டின் அபிவிர்த்தியையே தமது குறிக்கொண்டு இந்நாட்டின் பொருட்டே தமது வாழ்நாளை உபயோகிக்க வெண்ணியிருக்கும் தருமசீலரும், எமது நெஞ்சினின்றகலா ஆருயிர் நண்பரும் இச்சக்ரவர்த்தினியென்னும் பத்திரிகைக்கே அதிபருமான நமது சி. சுப்பிரமணிய பாரதியாரவர்கள் முதலிய பல கனவான்கள் அதிக உத்தமமான விஷயங்களைப்பற்றி மனோகரமான செந்நடையி லெழுதியிருக்கின்றனர். இப்பத்திரிகையை மாதந்தோறும் தவறாது வாங்கி வாசிக்கும் மாதரனைவரும் அதிருஷ்டசாலிகளேயாவர். இது மாதர் தம் மடமை நோய் தீர்க்குமோ ரருமருந்தே யென்னற் கையமின்று.

பத்திராதிபர்.

THE EDUCATIONAL REVIEW.

September, 1905.

CHAKRAVARTINI: A TAMIL MONTHLY, EDITED BY C. SUBRAMANIA BHARATI.
RS. 2 YEARLY, OR 3 AS. PER ISSUE.

To judge by the first number which has been kindly sent to us, we should think that the editor has placed a good ideal before him and we are sure that if he keeps up to the high level, the journal will be greatly appreciated.
The "Indian Social Reformer."

பம்பாயில் பிரசுரமாகும் "இந்தியன் ஸோஷல் ரிபார்மர்" சொல்லுகிறது: சக்ரவர்த்தினிப் பத்திரிகையின் தோற்றமானது இக்காலத்தினது நல்லடையாளங்களில் ஒன்று.

(வேறு பல பத்திரிகைகளின் அபிப்பிராயங்களும், கல்விமான்களின் அபிப்பிராயங்களும் இம்முறை பிரசுரிக்க இடமில்லாமையால் அடுத்த முறை பிரசுரிக்கப்படும்.)

ப-ர்.

REGISTRAR ... 7 FEB 1908 MADRAS

25

ஸ்ரீ

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
னெண்மை யுறவோங்கு முலகு."

| Vol. 1. தொகுதி-1. | Madras, October 1905. சென்னை, 1905-ம் வருஷம் அக்டோபர்மீ | No. 3. பகுதி-3. |
|---|---|---|

## ஓர் பஞ்சாபி மாது.

ஸிந்து நதிக்கரையிலுள்ள மகா க்ஷேத்திரங்கள் பல விளங்கப் பெற்றதும், ஆதியில் நமது முன்னோர்களாகிய ஆரியர் குடியேறி யிருந்தது மாகிய பஞ்சாப் தேசமானது பரதகண்ட மாதாவின் முகமென்று கூறுதல் வெறும் அலங்கார வசனமாக மாட்டாது. உண்மையாகவே இமவானுடைய மடியின் மீது தலைவைத்து முப்புறங்களும் கடல்சூழப் பள்ளிக்கொண்டிருக்கும் நமது தாய்த் தேசத்தின் முகப்பிரதேசத்தில் பஞ்சாப் அல்லது பஞ்சநதத் திருநாடே இலங்குகின்றது. வேத கர்த்தர்களாகிய மகரிஷிகளால் வர்ணிக்கப்பட்ட பஞ்சாப் தேசத்தின் இயற்கை யழகையும், வளனையும், செல்வத்தையும், இங்கு வருணித்தல் நமது சக்திக்குப் புறம்பாகிய விஷயம். ஆயின் அந்நாட்டின் ஜனங்களுடைய தன்மையைப்பற்றி மட்டிலும் சிறிது கூறிய பிறகுதான் நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைப்பற்றிப் பேசுதல் எளிதாகும்.

### பஞ்சாபின் ஜனங்கள்.

பஞ்சாபிகள் இந்தியாவின் மற்றெல்லாப் பகுதியிலுள்ள ஜனங்களைக் காட்டிலும் வீரத்தன்மையில் மிகுந்தவர்க ளென்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ரஜபுத்திரர்கள் ஒரு காலத்தில் பஞ்சாபிகளினும் சிறந்த வீரத்தன்மை கொண்டிருந்த போதிலும், வர வர ரஜபுத்திரர்களின் பெருமை குறைந்து வருகிறதென்பது விசனகரமான உண்மையாகும். தற்காலத்தில் பஞ்சாபிலுள்ள சிக்கர்கள் (அதாவது சிஷ்யர்கள்) என்ற ஜாதியாரது போர் விறலை உலகமுழுதும் புகழ்கின்றது. 1469-ம் வருஷத்தில் தெய்வ பக்தியும் தேசபக்தியுமே ஒன்றாகி அவதரித்தது போல உதித்த நானக்ஷா என்ற ஞானகுருவால் ஏற்படுத்தப்பட்ட இந்த சிக்க (சிஷ்ய) ஜாதியார் தாம் தொகையிற் குறைவுற்றிருந்த போதிலும்

ஸத்தியமே பலமாகக்கொண்டு தமது எதிரிகளை யெல்லாம் முறியடித்து வந்த பராக்கிரமம் அளத்தற் கரியது. இன்றுகூட பிரிடிஷ் ராஜாங்கத்தாரின் இந்திய சேனைகளுக்குள்ளே சிக்கப்படைதான் தலைமை பெற்றது.

சிக்கர்கள் ஹிந்துக்களினின்றும் சில மதக் கொள்கைகளிலும் ஆசாரங்களிலும் வேறுபட்டிருந்த போதிலும் மற்றப்படி வேறு வித்தியாசம் இடையாது. சிக்கர்களும் ஹிந்துக்களும் ஒன்றாக இருந்துண்பார்கள். பெண் கொடுத்து சம்பந்தம் செய்வார்கள். இது மட்டுமா? ஒரே குடும்பத்திலே தமையன் சிகை வளர்த்துக்கொண்டு விக்கிரக வணக்கம் செய்யாமல் சிக்கமத ஆசாரம் கொண்டிருப்பான். தம்பி சிகையில்லாமல் விக்கிரக பூஜை செய்துகொண்டு ஹிந்துவாக இருப்பான்.

சரீர வளர்ச்சி, நிறம், பலம், ஆண்மை, அழகு இவற்றில் பஞ்சாப்காரரினும் சிறந்தவர்கள் பாதகண்டத்திற் கிடையாது. நமது பூர்வீக ஆரியர்களின் சரீர இயல்பு முதலியவற்றை ஒருவாறாக அறியவேண்டுமானால் பஞ்சாபிகளைப் பார்த்து அறிந்துகொள்ள வேண்டும்.

உண்மையான **மனிதர்**களுக்கு இன்றியமையாத பெருங் குணங்களாகிய தேச பக்தி, மத பக்தி, சுஜனாபிமானம், கொடுங் கோன்மையில் துவேஷம் என்பவை பஞ்சாபிகளிடம் சிறப்பாக விளங்குகின்றன. இக்குணங்களை விரிவான திருஷ்டாந்தங்களின் மூலமாக விளக்குதல் அதிக இடத்தைக் கவருமாதல் பற்றிச் செய்யாது விடுக்கின்றோம்.

ஆனால் ஓர் திருஷ்டாந்த மட்டிலும் எடுத்துக் கூறாதிருக்க முடியவில்லை.

## ஓர் தேசாபிமானி.

சில தினங்களாகச் சென்னை நகரத்திற்கு ஓர் பஞ்சாபி வந்திருக்கின்றார். எத்தனையோ பஞ்சாபிகளிருக்க நாம் இவரையே இங்கு திருஷ்டாந்தமாக எடுத்துக் கொண்டதின் காரணம் பின்பு விளங்கும். இவரது உண்மையான பெயரைப் பிரசுரிப்பதற்கு நாம் இவரிடம் அனுமதி கேட்கச் சாவகாசமில்லாது போயினமை பற்றி விசன முறுகின்றோம். ஆதலால் இவர்க்கு "**பாதர்**" என்ற புனை பெயர் கொடுக்கின்றோம். இவர்க்கு வயது 30-க்கு மேல் 35-க்குள்ளிருக்கலாம். இவர் இங்கிலந்து தேசத்திற்குச் சென்று உயர்ந்த வைத்தியப் பரீக்ஷை தேறிச் சென்னைக்குப் பெரியதோர் கவர்ன்மெண்ட் அதிகாரியாக வந்திருக்கின்றார். ஆனால் இங்கிலந்துக்குச் சென்று உயர் பரீக்ஷை தேறி வருவோர்களிற் பெரும்பாலர் சுதேசாபிமானம் சிறிதேனு மில்லாமல், இத்தேச ஜனங்கள் ஏதோ தாழ்ந்த நிலையுடையவர்கள் போலவும், தாமேதோ இங்கிலந்திற்குச் சென்று திரும்பியதற் கப்பால் தெய்வப் பிறவி எடுத்துவிட்டது போலவும், பாவனை செய்துகொண்டு தருக்கினாலேயே செதுக்கப்பட்டது போன்ற முகமுடையவர்களா யிருப்பதை நாம் கண்டிருக்கின்றோம்.

நமது "**பாத**" ரோ இவ்வகைப்பட்டவ ரல்லர். தாம் இங்கிலந்திலிருந்து கல்வி பெற்று வந்திருப்பதுடன், இங்கிலந்து வாசிகளுக்கெல்லாம் இயற்கையாக நிறைந்துளதாகிய "தாய்த்தேச"ப் பக்தியையும் நிரம்ப அருந்தி வந்திருக்கின்றார்.



"என் தாயினுடைய க்ஷேமத்திற்கு நான் இரத்தம் சிந்த வேண்டுவது அவசியமாயின் நான் இப்போது இறப்பதற்கு முற்றிலும் விருப்பமுடையேனாக இருக்கின்றேன்." என்று "**பாதர்**" நம்மிடம் ஓர் முறை சொல்லினர்.

"எனது தமையனார் சிக்க மார்க்கத்தைச் சேர்ந்தவர். நான் ஹிந்து. ஆனால் இந்தியாவிலுள்ள சிக்கர், பிரம ஸமாஜிகள், ஆரிய ஸமாஜிகள் எல்லோரும் ஹிந்து மார்க்கத்தைச் சேர்ந்தவர்களே. கிறிஸ்தவர்களும், மகமதியர்களும் நம்மவர்களே யாவார். ஹிந்து மார்க்கம் வரையறுக்கப்பட்டதன்று. எல்லாக் கொள்கைகளையும் தன் வசத்தே அடக்கிக்கொள்ளும் வன்மையுடையது. இந்தியாவிலிருக்கும் நாமெல்லாம் சகோதரர்களே. நமக்கெல்லாம் மதம் ஒன்றே." என்று "**பாதர்**" பெருமையுடன் சொல்லிக் கொள்வதுண்டு. மேற்கூறிய அபிப்பிராயத்தினின்றும் பலர் மாறுபடக் கூடுமாயினும் அம்மனிதருடைய சுஜன நேசத்தை எல்லோரும் கண்டு வியக்கத்தவற மாட்டார்களென்று நம்புகின்றோம்.

## பாதரது பத்தினி.

[illegible] "**பாத**"ருடைய பத்தினியாரைப் பற்றியே நாம் இவ்விஷயமெழுதத் தொட[illegible]னோம். பஞ்சாப் தேசத்தில் எல்லா மாதர்களும் இம்மாதைப்போலவே இருப்பார்களென்று நாம் நினைக்க வில்லை. எனினும் கல்வித் தேர்ச்சிகொண்ட பஞ்சாப் கனவா னொருவரின் மனைவி எங்ஙன மிருப்பாளென்பதற்கு இம்மாதை நல்ல[illegible]ார் திருஷ்டாந்தமாகக் கொள்ளலாம். இம்மாது 20-வயதுக்கு மேல் 22-வய[illegible]க் குட்பட்டவர். தமது குணச்சிறப்பைப் போலவே வடிவச் சிறப்புங் கொண்டவர்.

## இம்மாதின் கல்வித்திறமை

[illegible] [illegible]து பலருங்கண்டு வியத்தற் குரியது. ஆங்கிலேய பாஷையில் சிறிதேனும் [illegible]ழவின்றி இம்மாது சம்பாஷணைசெய்யும் அருந்திறமை பெற்றவர். சென்னை மாக[illegible] [illegible]த்து மாதர் தமது கணவர்களை நகை வேண்டுமென்று உபத்திரவஞ் செய்வது[illegible] [illegible]ல இம்மாது தமக்குக் கல்வியாகிய பூஷணத்தை மென்மேலுந் தரவேண்டுமென் [illegible] தமது கணவனை வற்புறுத்தும் இயற்கையுடையவர். கண்ணுக்கும் கருத்துக்கு[illegible] இனிய தமது நாயகனை அறிவளிக்கும் குருவாகவுங் கொண்டு காதலிப்பவர். "[illegible]பாத"ருடைய சீட்பெண்ணாகிய இம்மாது தேசாபிமானச் சந்தமும், சுஜன[illegible] [illegible]நசமும் மிகுதியாகக் கொண்டவரென்பது கூறவேண்டுவ தில்லை. சுபாஷைய[illegible] [illegible]ய பஞ்சாபியிலும் புராதன பாஷையாகிய வடமொழியிலும் இவர் மிக்க அன்[illegible] வன்மையும் கொண்டவர். சிக்க மார்க்கஸ்தரின் முக்கிய நூலாகிய "கிரந்த ஸாஹ[illegible]" (ஸ்ரீ கிரந்தம்) என்னும் பெருநூல் இப்பெண்மணிக்குப் பெரும்பாலும் மனப்[illegible] [illegible]மென்றே கூறலாம். சாதாரண மாதர்களைப்போல வெறும் லௌகிக சிந்த[illegible] மாத்திரத்தோ டிராமல், இவ்விளஞ்செல்வியார் 'கடவுள்,' 'ஆன்மா,' 'உலகு' என்ற [illegible]பெரு விஷயங்களைப்பற்றி வரையறுத்த அபிப்பிராய[illegible] சொல்வதற்கும் விவ[illegible] [illegible] புரிதற்கும் வன்மையுடையவர். இப்பெண்மணிக்கு இப்போது ஒரு [illegible] குழந்தை இருக்கின்றது. உண்மையாகவே ஒவ்வொரு நற்குணத்துக்கும்

தனது குழந்தை மீது இருக்கும் பெருங்காதல் இவர்க்கும் உண்டாயினும் அதல் காரணமாக இவர் தமது அருமைப் புத்தகங்களை மறந்து விடவில்லை. மடியிற் குழந்தையை ஒரு கையால் தழுவிக்கொண்டு மற்றொரு கையில் இவ்விளந்திரு ஓர் ஞானநூலை வைத்துப் படித்துக்கொண்டிருக்கக் கண்டபோது தெய்வக்காட்சியாக இருந்ததென்று நமது நண்பரொருவர் தெரிவித்தனர்.

## மற்ற மாதரும் கல்வி பயிலவேண்டு மென்பதில் இம்மாதிற்குள்ள ஆசை.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்று வள்ளுவர் பிரான் கூறியிருக்கின்றார். சகஜந்தானே?

வீரர்கள் தம்மைப்போலவே உலகத்தாரெல்லாம் வீரர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். முனிவர் எல்லா மனிதர்களும் உலகினைத் துறக்குமாறு ஞானம் பெறவேண்டுமென்று விரும்புகிறார்கள். கேவலம் கட்குடியன் கூட மற்றொருவன் குடித்துக் களிப்பதைக் கண்டு பெரு மகிழ்ச்சியடைகிறான். சங்கீத ஞானமுள்ளவன் உலகத்தாருக்கெல்லாம் சங்கீத ஞானமுண்டாகி எல்லோருங் கானரஸத்தை அமிர்தமாகக் கொள்கின்றார்களில்லையே என்று விசனமுறுகிறான். அதுபோலவே மஹா ஞானிகளாலே கத்ய ரூபமாகவும், பத்ய ரூபமாகவும் இயற்றப்பட்ட தெய்வப் பெரு நூல்களிலுள்ள சுவைகளை யெல்லாம் துய்த்தறிந்த விற்பன்னர்கள் 'ஐயோ, உலகத்தாரெல்லாம் இவ்வரிய இன்பத்தை ஏன் துய்ப்பதற்கு முன் வருகின்றார்களில்லை?' என்று விசனமடைவது ஓர் வியப்பாக மாட்டாது. இதற்கிணங்கவே கல்வியும், அறிவும் வடிவெடுத்தாற் போன்ற இம்மாதர் சிரோன்மணி இத்தேசத்திலும், முக்கியமாக இம்மாகாணத்திலுமிருக்கும் பெண்கள் கல்வியில்லாமல் மிருகப்பிராயமாகத் திரிவது பற்றிப் பெருந்துயரம் பாராட்டுகின்றார். "சென்னை மாகாணத்திற் பெரும்பான்மையான மனிதர்கள் தமது தாய்மாரையும், சகோதரிகளையும், மனைவியரையும், பெண்களையும் கல்வி பெறுவதற்குத் தகுதியில்லாத அடிமைகளாகக் கருதுகிறார்கள். இக்காரணத்தினாலேயே சென்னை மனிதர்கள் உருவத்திலும், அறிவிலும், மனோதைரியத்திலும், சரீர திடத்திலும் மிகவும் பின்னடைந்தவர்களாக இருக்கின்றனர்" என்று இம்மாது ஒருமுறை சொல்லினராம். தமது கணவனைப் பார்க்க வரும் சிநேகிதர்களிட மெல்லாம் அவரவர் வீட்டு மாதர்களின் கல்வி யறிவைப்பற்றியே இவர் பேராவலுடன் விசாரணை புரிவார்.

## உண்மை நாணம்.

மாதர்களுக்கு இன்றி யமையாத நாற்குணங்களிலே "நாணம்" ஒன்றென நமது முன்னோர்களால் வகுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நமது தேசத்தில் பழைய நாட்களின் பிரயோகங்க ளனைத்தும் தமது உண்மையான அர்த்தத்தை இழந்து தப்பான [illegible]த்திலே வழங்கி வருவதுபோல "நாணம்" என்பதும் தப்புப் பொருட் கிணங்கவே சில மாதர்களிடம் அமைந்திருக்கின்றது.



தப்பான சொற்களைச் சொல்லாமலும், வழுவிய மார்க்கத்தில் நடக்காமலும், மிதமிஞ்சிய துணிவு கொள்ளாமலும் பணிவு கொண்டிருப்பதே மெய்யான நாணமாகும்.

தற்காலத்திலோ சில மாதர்கள் சொந்த நாயகர்களிடம் பேசுவதற்கு வெட்கமடைவார்கள். வேலையாளிடத்திலும், தெருவழியாக வரும் வர்த்தகனிடத்திலும், சத்தமிட்டுக் கூவிக்கொண்டிருப்பார்கள். பகிரங்கமான தடாகங்களிலே எத்தனையோ புருஷர்கள் காணுமாறு ஸ்நானம் புரிவார்கள். சகோதரனுடன் எத்தனை தாழ் நிலைகொண்ட மனிதன் வந்தானாயினும் அவனோடு வார்த்தையாடுவார்கள். புருஷனுடன் வருவோர் எத்தனை அறிவும், மதிப்பும், பெருந்தன்மையும் உடையோர்களாயினும் அவர்களைக் கண்டவுடன் புலிகண்ட மானைப்போல ஓட்டமெடுத்துவிடுவார்கள். இஃதெல்லாம் உண்மையான நாணமாகுமா? சீதையும், தமயந்தியும், சந்திரமதியும் இவ்விதமாகவா நாணங்கொண்டிருந்தார்கள்? அவர்கள் தமது கணவர்களை யெல்லாம் தெய்வம்போலக் கொண்டாடியபோதிலும் தற்காலத்திலே வழங்கிவரும் பொய் நாண மேதுமின்றி யிருக்கவில்லையா?

இந்தப் பஞ்சாபி மாதும் பாரத கண்டத்துப் புராதனப் பெண்மணிகளைப் போலவே மெய்ந்நாணத்தைத் தமக்கு அணியாகக் கொண்டிருந்தபோதிலும் இம்மாகாணத்துச் சில பெண்களுக்குள்ள விநோதமான பாவனைகள் சிறிதேனுமில்லாதவர்.

தமது நாயகனுடைய நண்பர்களைத் தமது சகோதரராகக் கருதி ஒழுகுவார். மிக்க ஆதரவுடன் உபசரணை புரிவார்.

## இவர் தமது கணவரின் நண்பரொருவர்க்குச் செய்த சற்போதனை.

24-வயதுகூட முடியாத யௌவன மாது இத்தனை நற்குணங்களும், அறிவும் வாய்ந்திருப்பது பற்றிச் சிலர் வியப்புற்று நாம் வரைந்துவருவது பெரும்பாலும் கற்பனை யென்று கருதக்கூடும். ஆனால் கல்வியாலும் சற்சகவாசத்தாலும் உண்டாகக்கூடிய பயனை முற்றிலு முணர்ந்தோர்கள் அங்ஙனம் கருதமாட்டார்கள். நாம் இந்த மாதைப்பற்றி எழுதிவருவ தனைத்தும் கல்வி, சற்சகவாசம் என்பவற்றால் ஆண்களுக் குண்டாவதுபோலவே பெண்களுக்கும் அளவற்ற நன்மை யுண்டாமென்பதை திருஷ்டாந்தப் படுத்தும் பொருட்டேயாம். தமது மனைவியர்க்கு நல்லறிவு புகட்டி அவர்களின் நிலையை உயர்த்தவேண்டுமென்று "பாரதி" முயல்வது போல இம்மாகாணத்திலும் பலர் மனப்பூர்த்தியாக முயற்சி புரிவாராயின் நமது மாதர்களுக்கு எத்தனையோ நன்மை யுண்டாகும். இது நிற்க, ஒரு நாள் அங்கே "பாரதி"யுடைய நண்பரொருவர் "பாரதி"யைப் பார்க்கச் சென்றிருந்தார். பார்க்க "பாரதி" தமது மனைவியுடன் ஏதோ வேதாந்தம் பேசிக்கொண்டிருந்தார். அவர் இதுபோன்ற காட்சி கண்டிராத நண்பர் ஸ்தம்பிதமாக உட்கார்ந்துவிட்டார். அவர் இதுபோன்ற காட்சி [illegible] ஜன்மங்களுக்குள்ளே கண்டதில்லை. பிறகு சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்ததற்கப்பால், பாரதியின் பத்தினி வந்த நண்பரை நோக்கி,

"ஐயா, தமக்கு விவாகமாய்விட்டதா?" என்று கேட்டாள்.

"இல்லை" என்று நண்பர் சொல்லினர்.

மாது சிரோன்மணி, நகைபுரிந்து "ஐயா, தாம் ஏதோ ஆசாரத்திருத்தஞ் செய்பவரென்றும், இத்தேச நன்மைக் குழைப்பவரென்றும் பட்டம் புனைந்து கொண்டிருக்கிறீரே? விவாகம் கூட இல்லாமல் ஜனசங்கத்திலிருந்து முற்றிலும் அப்புறப்பட்டு நிற்கும் நீர் ஜனசங்கத்திற்கு என்ன நன்மை செய்யப்போகிறீர்? என்றனள்.

வந்த நண்பர், "அம்மே, ஜனங்களின் மூடத்தன்மைகளைத் திருத்துவதற்கும் நான் மணம் புரிந்துகொள்வதற்கும் யாது சம்பந்த மிருக்கின்றது? விவாகஞ் செய்துகொள்வதனால் இரகத் தொந்தரைகள் ஏற்பட்டு உலக நன்மைக்குப் பாடுபடுதல் தடைபடுமே யன்றி யாதொரு நலமு முண்டாகாதென யான் கருதுகின்றேன். உலக நன்மையைச் சிறிதேனும் கருதாமல் 'தன்னலம்' தேடும் ஜனங்கள்தான் மணம்புரிந்து கொள்வார்கள்" என்றனர்.

உடனே பெண்மணி தனது கணவனது முகத்தை நோக்கிக் குறுநகை புரிந்தாள்.

பாதரோ "எனக்கொன்றும் தெரியாதம்மா! நீதானே விவகாரம் தொடங்கினை. நீயே அதனை முற்றிலும் நடத்திக்கொள். உன்னால் எனக்கும் தன்னலம் கருதுவோனென்ற பேர் கிடைத்து விட்டது" என்று கூறிச் சிரித்தனர்.

பெண்மணி நண்பரை நோக்கி "ஐயா, நமது தேசத்தின் தற்கால நிலைமையை நோக்குமிடத்து முக்கியமாக எல்லாவிதத் திருத்தங்களும் பெண்களிடமிருந்தே ஆரம்பஞ் செய்யவேண்டு மென்பது யார்க்கும் வெளியாகும். "இல்வாழ்க்கை" என்னும் சகடத்தில் ஒரு பக்கத்து மாடு கால்களும் விழிகளுமின்றி விழுந்து கிடக்கும்வரை மற்றொரு மாட்டுக்கு எவ்விதப்போஷணை செய்தபோதிலும், அதை எத்தனை கம்புகளைக்கொண்டு குத்தினபோதிலும் யாதொரு பயனும் ஏற்படமாட்டாது. ஆகவே நீர் செய்யப்போகிற நன்மைகளெல்லாம் முதலிலே பெண்களுக்குச் செய்யவேண்டும்.

விவாகமில்லாத உம்மால் பெண்களுக்கு என்ன நன்மை யேற்படக்கூடும்? பெரும்பான்மையான மாதர்களிடம் நீர் பேசக்கூட முடியாது. நீர் மணம்புரிந்து கொண்டு உமது மனைவிக்குப் புது அறிவுகள் புகட்டி, அவள் மூலமாக மற்ற மாதர்களுக்கு நன்மை விளைக்கலாம். அவளைப்பார்த்துப் பிறமாதரும் நன்னடையும் நல்லறிவும் கொள்ளக்கூடும். அதொன்றுமின்றி ஜன சங்கத்தோடு யாதொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ளாமல் நீர் திருத்தத்தைப்பற்றிப் பேசுவது வெட்கத்துக்கிடமாயிருக்கின்றது. ஆனால் ஒருவேளை, சங்கராசாரியார், இயேசு, புத்தர் முதலிய மகான்களைப்போல நீர் அத்தனை உன்னத ஸ்திதிக்கு வரும் விஷயத்தில் உமக்குக் குடும்ப சம்பந்தமின்றியே உலகிற்கு நன்மை புரியும் ஆற்றல் உண்டாகக் கூடும். அந்த மகா குருவர்க்கத்தில் தாம் சேர்ந்தாய்விட்டதோ?" என்றனர்.

மாதர் சிரோன்மணியின் வசனங்களைக் கேட்டவுடனே நண்பர் முகத்தை இறங்கப்போட்டு விட்டார்.



## முடிவுரை.

இதுபோல இப்பெண்மணியின் சம்பாஷணைகள் பலவற்றைப் பெயர்த்தெழுத வேண்டுமென்ற நோக்கம் நமக்குண்டு. ஆயினும் இடமுதலிய சவுகரியங்களின்மை பற்றி அங்ஙனம் செய்ய முடியவில்லை. எனினும் நாம் எழுதிவந்த மட்டில் இம்மாதின் அரிய கல்வியும், அறிவும், குணவிசேஷமும் இந்நாட்டார் மனதில் நன்கு பதிந்திருக்குமென்று நம்புகின்றோம். இத்தகைமை கொண்ட மாதர்கள் பலர் தமிழ் நாட்டிலும் பெருகவேண்டு மென்ற நமது மனப்பூர்வமான விருப்பத்தில் ஒவ்வொரு தேசாபிமானியும் கலப்பனென்று நம்புகின்றோம்.

# இந்து மாதர்களுக்கு சங்கீதப் பயிற்சி.

சங்கீதம் என்பதற்குப் பொருளென்ன? சங்கீதமென்றால் இனிய வோசைகளின்
தொடர்ச்சி. இவ்வினிய வோசைகளானவை அணுக்கள் வெவ்வேறு மாதிரி
யாய் ஒன்றோடொன்று அனுசரித்துப் பதறி ஒலிப்பதாலுண்டாகின்றன.

மனிதன் நாகரீக ஸ்திதியை யடைந்த பிற்பாடே சங்கீதப் பயிற்சி யுண்டா யிருக்க வேண்டும். மனிதன் தன் உணவுக்காக மிருகங்களை வேட்டையாடிக் கொண்டு வீடு வாசலில்லாமல் காட்டில் அலைந்துகொண்டிருக்கும் பொழுது எவனாவது பாடியிருப்பானோ என்பது மிகவும் சந்தேகம். விலங்கின் தன்மையைவிட்டு ஓரிடத்தி லமர்ந்து வீடு கட்டி இனத்தாருடன் வாழும்படி ஏற்பட்ட பிறகுதான் சங்கீத மென்பதைக் காணலாம். இதற்கு அத்தாட்சியாக உலகத்தின் சில பாகங்களில் மலைகளிலும் சமுத்திர மத்தியிலுள்ள தீவுகளிலும் இன்றளவும் வாழ்ந்து வருகிற நாகரீகமற்ற ஜாதியார் இருக்கிறார்கள். ஆனால் சங்கீதம் முதல் முதல் எப்படி ஏற்பட்டது என்றால்:—மனிதன் தன் பசியாறின பிற்பாடு தன் குடிசைக்குப் பக்கத்திலுள்ள மரங்களிலும், செடிகளிலும், தோப்புகளிலும் வந்து விதம் விதமாய் கூவுகின்ற பறவைகளின் குரலை உற்றுக் கேட்பான். கேட்டிப்பதில் இன் கூவுவான். மேலும் அநேக பறவைகள் மிகவும் இனிய குரல்களையுடையன. இன்னும், தான் அலைந்து திரியும் காடுகளில் அடர்ந்த மரங்களின் சொம்புகளின் வழியே காற்று வீசுவதால் உண்டாகும் இனிய தொனியைக் கேட்டிருப்பான். இன்னும், பசியாறின பிற்பாடு கூட்டம் போட்டு உத்ஸாகத்தால் பலர் கூடிக் கத்த அதனாலுண்டாகும் இனிமை போன்ற குரலைக்கேட்டுப் பின்னும் அதையே பழகுவான். இவ்வாறு அநேக ஆயிரவருஷங்களாக மெள்ள மெள்ள நாகரீகத்தையடைந்து சங்கீதம் பயின்று தான் வாய்விட்டுப் பாடுவது போதாமல் ஊதும் வாத்தியங்களையும், நரம்பாலமைத்த வாத்தியங்களையும், வாய்ப் பாட்டிற்கு உபவாத்தியங்களாக உண்டாக்கிப் பாடி இன்பத்தை யடைகிறான்.

முற்கூறியபடி சங்கீதம் நாகரீகத்தின் அறிகுறி யாகையால், இவ்வுலகத்தில் முதல் முதலில் நாகரீகத்தை யடைந்த சங்கீதப் பயிற்சியை யடைந்த ஜாதியை

இந்துக்களும் கிரீஸ் தேசத்தினராகிய கிரேக்கர்களுமே. இந்துக்களின் சாஸ்திர
கொள்கைப்படி சங்கீதம் வேதங்களை சரியாய் உச்சரிக்கும் உதாத்தம், அனுதாத்தம்
ஸ்வரிதம் என்னும் மூன்று ஸ்வரங்களினின்றுண்டாயதென்றும் ருக்கு, யஜுஸ்,
ஸாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களில் மூன்றுவதாகிய ஸாமவேத
கான முறையினின்றும் உண்டாயதென்றும், அதற்கு அத்தாட்சியாக ராவணன்
ஸாமகானம் செய்து சிவனது கோபம் தணித்து வரம்பெற்றுச் சென்றனென்றும்
எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. எல்லாக் கலைகளுக்கும் தலைவியாகிய ஸரஸ்
வதிதேவி சங்கீதத்திற்கு முக்கிய அதிஷ்டான தைவதம். அவ்வம்மையின் கையில்
வீணை கொடுக்கப்பட்டிருப்பதால் ஆரியர்கள் வீணையையே மிகச் சிறந்ததாகக்
கொண்டார்கள் என்று புலப்படுகிறது. மேலும் இந்துக்களின் லோகபாலக தெய்வ
மாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி புல்லாங் குழலிற்றேர்ந்தவர். நாரத கானமென்றும்,
கந்தர்வகானமென்றும் நாம் புராணங்களில் வழங்கக் காண்கிறோம். ஆகையால்
இந்துக்கள் பூர்வ காலத்திலேயே சங்கீதப் பயிற்சியில் மிகத் தேர்ந்தவரென்பதற்
குச் சந்தேகமில்லை. நாளடைவில் தம்புரு, ஸ்வரபத், கோட்டு, ஸுந்தரி முதலிய
வாத்தியங்களும், நாகஸ்வரம், துத்தி, காளம், முதலியனவும், பேரிகை, தவல்
மிருதங்கம் முதலியனவும் ஏற்பட்டன. இவைகளில் தேர்ச்சி பெற்ற மகான்கள்
அநேகம்பேர் இருந்தனர். இன்றும் இருந்து வருகின்றனர். பிட்டில், கஞ்செர்ட்டு
முதலியன வெள்ளைக்காரரிடத்திருந்தும், கஞ்சரா, டோலக் முதலியன மகமதிய
ரிடத்திருந்தும் நமக்கு வந்திருக்கின்றன. இதன் மத்தியில் நமது நாட்டின் சுதேச
அரசர்களின் ஆதரவால் சங்கீத வித்வான்கள் தழைத்து சங்கீதத்தை சாஸ்திரமாக
வகுத்து ஸ்வரங்களின் இராகங்கள், இவைகளின் லக்ஷணங்களை வகுத்து, தாளங்
களை நிர்ணயித்து, சிறந்த பொருள்களமைந்த கீர்த்தனங்களை இயற்றி, அதில்
பல்லவி யென்றும் தில்லானாக்களென்றும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். நமது காலத்
திலேயே நமது நாட்டரசராகிய திருவாங்கூர் ஆயில்ய மகாராஜா, விஜயநகரம்
ராஜா இவர்களின் ஸமஸ்தானத்தில் விளங்கிய வித்வான்கள் பலர். நூறு நூற்
றைம்பது வருஷங்களுக்கு முன் தஞ்சாவூர் திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜ
ஸ்வாமிகள் எழுந்தருளி தென்னிந்தியாவிற்கு ஒரு திலகம் போன்று வாக்கிற்கும்
மனத்திற்கு மெட்டாத இனிமையையுடைய கிருதி அல்லது கீர்த்தனங்களை இய
ற்றி, கர்நாடக சங்கீதத்தை நிலை நிறுத்தி யிருக்கின்றனர். வட இந்தியாவில் கபீர்
தாஸ் ஸ்வாமியால் மஹாராஷ்டிர பந்தர்வம் இன்னும் வடக்கே ஹிந்துஸ்தான் சங்
கீதமும் ஏற்பட்டிருக்கின்றன. கடைசியிற் சொன்னது மகமதிய சங்கீதத்தையே
அனுசரித்திருக்கும். இது நிற்க, ஸங்கீதத்தில் இத்துணை கௌரவம் வாய்ந்த
இவ்விந்தியாவில், சில வீடுகளில் அல்லது சங்கீத பரம்பரைகள் உள்ள சில
வம்சங்களில் தவிர பெரும்பான்மை சங்கீத ஞானம் இப்பொழுது குறைச்சலெ
ன்று தெரிகிறது. பொதுவாய் மராட்டியர்கள், உயர்குலத்திற் பிறந்த மலையாள,
மகமதியப் பெண்கள் இவர்களைத் தவிர, சாதாரணமானவர்க்குப் பயிர்ச்சியே
யில்லை. புருஷர்களாவது சங்கீத வித்துவத் சபைகளுக்கு அடிக்கடி போய் அதனால்
கொஞ்சம் ஞானமடைந் திருப்பதாகத் தலையாட்டிக் கொள்ளட்டும். நமது பெண்
களுக்கு அந்த சங்கீத ஞானம்கூட இல்லை. ஏதோ அடியும் நுனியும் தெரியாத



கும்மிகளும், பாட்டிகள் சொல்லிக்கொடுத்த ராமாயண பதங்களும், திருவகையி
லுஞ் சேராத நோட்டுகளும், அர்த்த மில்லாத ஜாவளிகளும் பாடுகின்றார்கள்.
"சுருதிః மாதா; லயః பிதா" என்ற வடநூற் பழமொழிப்படி சுருதியும் லயமும்
பாட்டிற்கு முறையே அன்னையும் பிதாவுமாம். விவர ஞான மிருந்தாலொழிய
பிரயோஜனமில்லை. பெண்களுக்குக் கல்வி கொடுக்கவேண்டிய தவசியந்தா
னென்று உணர்ந்தவர்கள் கணிதம், பூகோள சாஸ்திரத்தோடு சங்கீதத்தை
யும் ஊட்டக் கல்லூரிகளேற்படுத்தவேண்டும். கன்னிகையாய் தாய்வீட்டி லிருக்
கும் பொழுதே சரியான வித்வான்களை யமர்த்திப் பாட்டுச் சொல்லித்தரவேண்டும்.
கல்யாணம், கார்த்திகை, மஞ்சட்குங்குமம் முதலியன வரும்பொழுது பாட்டுப்பாட
வேண்டிய சமயங்களுண்டு. அப்பொழுது, "நீ பாடு, நான் பாடு" என்று விழித்து
ஒருவரும் பாடி முடிக்காத சமயங்களை நான் அநேகம்தரம் பார்த்திருக்கிறேன்.
இது இந்தியாவிற்குக் கேவலம். மாப்பிள்ளைகள் ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய்
கேட்பதைக் காட்டிலும் "பெண்ணிற்குச் சிறிது பாடத் தெரியுமாயின் மணம்
புரிவோம். இல்லாவிடில் மாட்டோம்" என்று முறண்டுவார்களாயின் உத்தமமா
யிருக்கும். என் அபிப்பிராயத்தில் நமது சங்கீத குருவாகிய தியாகராஜருடைய
கீர்த்தனைகளிற் சிலவாகிலும் முறைப்படி பாடத் தெரியாத பெண்பிள்ளை பெண்
பிள்ளையல்ல. சமையற் செய்தல், துணிமணி, நகைநட்டுப் பத்திரப்படுத்திக்
கொள்ளல், கணவனுக்குத் தேக சௌகரியங்கள் செய்தல் இவைகள் மாத்திரம்
போதா. வெளியில் அலைந்து பகலெல்லாம் பாடுபட்டு வரும் கணவனது களைப்பு
மனைவியாவது, மகளாவது இனிய பாடலைப் பாடத் தீரும். மேலும், சரீர அவய
வங்களில், சுவாசப் பைகள் முக்கியமானவையாம். மிதமாய்ப் பாடிப் பழகினால்
அச் சுவாசப்பைகள் சௌக்கியத்தை யடைந்து ஆயுர் விருத்தியைத் தருகின்றன.
வீட்டில் நோவுண்டாயபொழுது மெதுவாய் பாட்டுப் பாடினால் நோயாளிக்கு
வியாதி குறைந்து சாந்தமுண்டாகும்.

கடைசியாக, சங்கீதம் பக்தி ஸாதனமாகப் பலிக்கின்றது. இந்தியாவில் இப்
பொழுது புருஷர்கள் இங்கிலீஷ் அரை குறையாகக் கற்று முன் பக்தியையு
மிழந்துபோயிருக்க, பெண்களின் மூடபக்திக்காகவாவது [illegible] மழை பெய்கிறதே
யொழிய வேறில்லை யென்று என் துணிபு. அப்பக்தியை வெளியிடுவதற்கு இயற்
கையா னமர்ந்த கருவி சங்கீதமாகையால் நமது பெண்களுக்குச் சங்கீதம் கற்பிப்
பது நமது கடமைகளிலுள்ளும் முதற்கடமையாம்.

குருமூர்த்தி அய்யர், B. A.

# Ramathilakam

or

## The other end of hatred is love.

## ராமதிலகம்

ஓர் நாடகம்.

நாடகபுருஷர்கள்.

சோமசுந்திர பாண்டியன்.—மதுரை அரசன்.
சித்திரசேன பாண்டியன்.—அரசனுடைய ஓர் உறவு.
மாணிக்கத்தேவர், கிருஷ்ணக் கவுண்டர்.— ஒருவரோடொருவர் வைரமுள்ள இரண்டு குடும்பத் தலைவர்கள்.
ராமத்தேவர்.—மாணிக்கத்தேவர் குமாரன்.
சந்திரசேகர பாண்டியன்.-அரசனுடைய உறவு, ராமத்தேவருடைய மித்திரன்.
பேயாண்டித் தேவர்.—மாணிக்க தேவருடைய மருமகன், ராமத்தேவருடைய மித்திரன்.
தாண்டவராயக் கவுண்டர்.—கிருஷ்ணக் கவுண்டர் மைத்துனன் மகன்.
கண்ணப்பத் தம்பிரான்.—ஒரு குரு.
சாமிநாதத் தம்பிரான்.—கண்ணப்பத் தம்பிரான் சிஷ்யன்.
அப்பாசாமி.—மாணிக்கத்தேவர் வேலைக்காரன்.
பாலசுந்திரம்.—ராமதேவருடைய வேலைக்காரன்.
சுப்பன், கோவிந்தன்.—கிருஷ்ணக் கவுண்டர் வேலைக்காரர்கள்.

பாடசர்கள்—நாடகப்பெண்கள்.

ஸரஸ்வதி தேவி.—மாணிக்க தேவர் மனைவி.
காமவல்லி.—கிருஷ்ணக் கவுண்டர் மனைவி.
திலகவல்லி.—கிருஷ்ணக் கவுண்டர் பெண்.
ஒரு கிழவி.—திலகவல்லியின் சேடி.

இடம், மதுரை, ஒரு சமயத்தில் மேலூர்.

முற்கூற்று.

சூத்திரதார்.—மாட்சிமை தங்கிய மதுரை மாநகரில் தலைமுறை தததுவமாக வைரத்தோடு கூடிய இரண்டு குடும்பத் தலைவர்கள் புதிதாக கலகத்திற்கு ஆரம்பிப்பதும், அவ்விரோதிகளின் குடும்பத்தே உதித்த மனமொத்த அன்பினர் இருவர் மணைத்தலினுல் பெற்ரேர்களது கலகம் முடிவு பெறுகிறதும், அம்மணத்திற்கு நேர்ந்த பயங்கரமான இடையூறுகளும், அஃதாலன்றி மற்றொன்றால் அடங்காத அப்பெற்ரேர்களின் சினமும், நாடக ரூபமாய் நிதர்சனம் செய்யப்படும். அறிவிற் சிறந்த இச்சபையோரால் ஆதரிக்கப்பட்டால் இதில் ஏற்படும் குறைவுகளை நீக்க முயல்வோம்.



### அங்கம் I. களம் I.

இடம்.—மதுரை இராஜவீதி.

கிருஷ்ணக் கவுண்டரைச் சேர்ந்தவர்களாகிய சுப்பன், கோவிந்தன் இருவரும் கத்தி, கேடயங்களுடன் வருதல்.

சுப்பன்.—கோவிந்து, நான் சொல்லரேன் நாம்ப உள்ளே பொகஞ்சுண்டிருக்கப் படாது.

கோவிந்தன்.—படாது. அப்படி யென்று நாம்ப அடுப்பா என்ன?

சுப்.—நான் சொல்லரதென்ன, கோவமிருந்தா, உருவிக் காட்டவேணம்.

கோவி.—ஆமாம், கழுத்திலிருந்து தலையை உருவவேண்டியது தான்.

சுப்.—கோவம் வந்தால் நகத்திவிடுவேன்.

கோவி.—ஆனல் உனக்கு கோவம்தான் வாதில்லையே.

சுப்.—தேவர் வீட்டு நாயைக் கண்டால் நான் நகத்திவிடுவேன்.

கோவி.—நகந்து விடுவாய் அதற்கென்ன தடை, நிக்காமல் ஓடிப்போவே.

சுப்.—மாணிக்க தேவர் வீட்டு ஒரு நாயைக் கண்டாலும் போரும் நான் நின்று சண்டை போடுவேன், ஆனு, பெண்னு யார் வந்தாலும் சரி.

கோவி.—பெண் பிள்ளையோடு சண்டை போடுகிருயா! நீ பொரு பலவான்தான் போ.

சுப்.—அப்படியில்லை, ஆண் பிள்ளைகளை துரத்திவிட்டு பெண் பிள்ளைகளை மாத்திரம் வைத்துக் கொள்வேன்,

கோவி.—சண்டை நம்ம எசமான்களுக்கும் அவர்கள் மனுஷாளாகிய நமக்கும் தானே

சுப்.—அதெல்லாம் ஒண்ணுதான். நான் சண்டையிலே வெகு கடுமையாயிருப்பேன். ஆண் பிள்ளைகளை சண்டையிட்டுத் துரத்திய பிறகு பெண்பிள்ளைகளை வசப்படுத்திக் கொள்வேன்.

கோவி.—உன் கத்தியை உருவிக்கோ. தேவர் வீட்டு ஆள்கவராங்க.

அப்பாஸாமி, பாலசுந்திரம் வருதல்.

சுப்.—உருவி விட்டேன் கத்தியை, சண்டை போடு, நான் பின்னலே பார்த்துகிறேன்.

கோ[illegible]—எப்படி! முதுகைக் காட்டிண்டு ஓடிப்போரியோ?

[illegible] [illegible]ன்னிண்டே பயப்படாதே.

[illegible]வி.—இல்லை, [illegible]ன்னிண்டே எனக்கு பயந்தான்.

[illegible]ப்.—நாம்ப, சாக்கிரதையாயிருப்பம். அவங்க ஆரம்பிக்கட்டும்.

கோவி.—நான் போகச்சே பல்லெ கடிக்கரேன். அவங்க என்னவோ நெனச்சுக்கட்டும்.

சுப்.—நான் அவங்களை பார்த்து துப்பரேன். அதைப் பொறுத்தாங்களானல் அதைவிட அவமானம் வேறில்லை.

அப்பா.—என்ன அப்பா எங்களைப்பார்த்துத் துப்பாயா?

சுப்.—நான் துப்பரேன் அப்பா.

அப்பா.—எங்களைப் பார்த்தா துப்பரே?

சுப்.—(கோவிந்தனோடு) ஆமாமென்று சொன்னுக்கே நம்மபேரிலே பெச கில்லையே?

கோவி.—(சுப்பனோடு) பெசகுதான.

சுப். — (அப்பாஸாமியோடு) இல்லே. உங்களைப்பார்த்து துப்பலே அப்பா? சும்மா துப்பினேன் அப்பா.

கோவி.—ஏன் சண்டைபோட வேணுமோ?

அப்பா.—சண்டையா அப்பா, இல்லே அப்பா.

சுப்.—போர்ட தாயிருந்தால் அப்பா, நான் இருக்கேன் உனக்கு ஒரு கை.

அப்பா.—ஒரு கையா, இரண்டில்லையா?

சுப்.—இருக்கட்டும்.

கோவி.—(சுப்பனோடு) ஆமாம் இரண்டு கைதான் என்று சொல். நம்ம எசமான் உறவாளி ஒருத்தர் வரார்.

சுப்.—(அப்பாஸாமியோடு) ஆமாம் இரண்டு கை அப்பா, பார்க்கலாம்.

அப்பா.—புளுகரே நீ.

பேயாண்டித் தேவர் வருதல்.

சுப்.—ஆண்பிள்ளையாயிருந்தால் கத்தியை உருவுங்கள் — கோவிந்தா, அந்த வரிசை ஞாபகம் இருக்கட்டும்.

பேயா.—மடையர்களா, நிறுத்துங்களடா (அவர்களுடைய அடித்துத் தள்ளி) கத்தியை உள்ளே சொருகுங்கள். நீங்கள் இன்னது செய்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியவில்லே.

தாண்டவராயக் கவுண்டர் வருதல்.

தாண்ட.—அடேய், இந்தக் கன்றுக்குட்டிகளோடு சண்டை போடு றையா? பேயாண்டி இப்படித் திரும்பு. உன்னைக் கொல்லுகிறேன் பார்.

பேயா.—சண்டையை விலக்குகிறேன் அப்பா, கத்தியை அடக்கு, அ து என் னோடு சேர்ந்து இவர்களை நீயும் விலக்கு.

தாண்ட.—என்ன, கத்தியை உருவிக் கையில் வைத்துக்கொண்டு சமாதானம் பேற கிருயா? நீ புள்பட மாணிக்க தேவர் வகையரு யாரைக் கண்டாலும் நா பொறுக்கமாட்டேன். பயங்காளிப் பயலே பிடி இதை (அவர்கள் சண்டை போடுகிறார்கள்.) (இரண்டு குடும்ப ஜனங்கள் வெகுபேர் வந்து சண்டையில் கலக்கிறார்கள். தடியெடுத்துக்கொண்டு ஊரார் வருகிறார்கள்.)

ஊரார்.—கொண்டா தடி, கொண்ட பாறை, உதையடா, அடியடா, கவுண்டர் களை கொல்லுங்களடா, தேவர்களைக் கொல்லுங்களடா.

இதில் ஏற்படும் குறைவுகளை நீக... ம்.



கிருஷ்ணக் கவுண்டர், காமவல்லி வருதல்.

கிருஷ்.—இது என்ன இரைச்சல்? என் பெரிய கத்தியைக் கொண்டுவா.

காம.—கத்தி யென்னத்திற்கு. ஊனிக்கிற தடியொன்று கேளுங்கோ.

மாணிக்க தேவர், ஸரஸ்வதி தேவி வருதல்.

கிருஷ்.—அடே யாரடா, என் கத்தியைக் கொண்டுவாடா, மாணிக்க தேவன், கிழவன் என்னை மதிக்காமல் கத்தியை சுழற்றிக்கொண்டு வருகிறான்.

மாணி.—போக்கிரி கண்டா, என்னை பிடிக்காதே விடு (ஸரஸ்வதி தேவியைப் பார்த்து)

ஸரஸ்.—சண்டைக்காக நீங்கள் அடியெடுத்து வைக்கப்படாது.

(அரசன் பரிவாரங்களுடன் வருதல்.)

அரசன்.—ஏ கலகக்காரர்களா, கடுங் கொலையாளிகளா, மதியற்றவர்களா—அவர்களுக்குக் காது கேட்கவில்லையோ?—ஹோ, நீங்கள் மனுஷியர்களா? மிருகங்களா? ஏன் இப்படி உங்கள் கொடுஞ் சினமாகிய அடங்கா அனலைத் தணிக்க இரத்த வெள்ளத்தை பெருகவிடுகிறீர்கள் உங்கள் கையிலிருக்கிற ஆயுதங்களை தரையில் எறிந்துவிட்டு உங்கள் அரசன் ஆணையைக் கேளுங்கள். இல்லாவிட்டால் உங்களைச் சித்திரவதை செய்வோம். இதற்குமுந்தி மூன்று தடவைகளில் ஓய் கவுண்டர், ஓய் தேவர்—நம்முடைய ராஜவீதியில் அகாரணமாய் உங்கள் சண்டை சச்சரவு நடந்ததுமன்றி, நம்முடைய மதுரை மாநகருக்கு அலங்காரமா யிருந்திருக்கக்கூடிய வெகுபேர்கள் உங்களுடைய தொன்று தொட்டு வருகிற வைரத்திற்குப் பலி கொடுக்கப்பட்டார்கள். இனிமேல் நீங்கள் இந்தமாதிரி கலகம் செய்தால் உங்களுடைய உயிருக்கு ஹானி வரும். இப்பொழுது நீங்கள் எல்லாரும் வீடு சேருங்கள். கிருஷ்ணக்கவுண்டர் நீர்மாத்திரம் நம்முடன் வாரும். மாணிக்கதேவர்சாயங்காலம் நம்முடைய அரமனைக்கு வாரும். இந்த விஷயத்தில் நம்முடைய இஷ்டத்தைத் தெரிவிக்கிறோம். இன்னு மொருதடவை சொல்லுகிறோம். நீங்கள் எல்லாரும் கலைந்துபோங்கள். இல்லாவிடின் உயிரை வாங்கிவிடுவோம்.

(அரசன், பரிவாரங்கள், கிருஷ்ணகவுண்டர், காமவல்லி, தாண்டவராய கவுண்டர், ஊரார், வேலைக்காரர்கள், போகுதல்.)

மாணி.—இந்தப் பழைய சண்டையை இப்பொழுது யார் கிளறினார்கள்? அப்பா பேயாண்டி இந்தக் கலகம் ஆரம்பிக்கிறபோது நீ இங்கு இருந்தாயோ?

பேயா.—நான் இங்கு வருகிறதற்கு முந்தி நம்மவர்களும் விரோதி மனுஷியர்களும் நெருங்கி சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். என் கத்தியை உருவி அவர்களை வி கப்போனேன். திடீரென்று உருவின கத்தியும் கையுமாய் அந்த மூர்க்க தாண்டவராயன் வந்து பலவிதமான அவதூறுகளைப் பேசி கத்தியை உ த் தூக்கிச் சுழற்றி ஆகாயத்தை வீணில் வீசினான். இப்படி நாங்கள் குத்தும் வெட்டுமாக ஒருவருக்கொருவர் வீசிக்கொண்டிருக்கையில்

பரபரவென்று அதிக ஜனங்கள் வந்து இருகக்ஷியிலும் கலந்து சண்டை போட்டார்கள். கடைசியாக அரசன் வந்து இருவர்களையும் பிரித்துவிட்டார்.

ஸரஸ்.—நம்ப ராமன் எங்கே? நீ இன்னைக்கி அவனைப் பார்த்தயோ? இந்த சண்டையிலே அவன் இல்லாதது நல்லதாய்போச்சு.

பேயா.—சூரியோதயத்திற்கு முந்தி கிழக்கு வெளுக்கிற வேளையில் என் மனது ஏதோ ஒருமாதிரியா யிருந்ததனால் நான் வெளியே புறப்பட்டுப்போனேன். அப்பொழுது ஊருக்கு வெளியே மேல்புறத்திலிருக்கிற நந்தவனத்தில் தங்கள் பையன் உலாவிக்கொண்டிருந்தான். சமீபத்தில் நான் வருகிறதை அறிந்து அவன் விலகி வனத்திற்குள் மறைந்தான். மனோவியாகூலத்தால் மனிதர் உறவை வெறுத்து தனித்திருக்க எண்ணும் அவன் கருத்தை யறிந்து என் மனமும் அவ்வாறே யொழிந்திருந்தமையினால் அவன் போனவழியே விட்டு நான் விலகிச் சென்றேன்.

மாணிக்கம்.—இந்தமாதிரி பலதடவைகளில் அவன் காலை வேளையில் அங்குபோய் அழுது பெருமூச்சுவிடுகிறான். சூரியன் புறப்படுகிறதற்கு முந்தி வெளிச்சம் கண்டவுடன் வீட்டுக்கு ஓடிவந்து அவன் அறைக்குள் புகுந்து வெளிச்சம் உள்ளே வராமல் கதவையும் ஜன்னல்களையும் மூடிக்கொண்டு பகலையும் இராப்பொழுதாக்குகிறான். இவ்வியாகுலத்தின் காரணத்தை யறிந்து நல்ல புத்திமதி சொல்லி நீக்காவிட்டால் இது வெகு கெடுதலாய் முடியும்.

பேயா.—மாமா, காரணம் உங்களுக்குத் தெரியுமோ?

மாணி.—அது தெரியவுமில்லை. அவனிடத்திலிருந்து அறியவு முடியவில்லை.

பேயா.—ஆனால் அவனை ஏதாவது கேட்டுப்பார்த்தீர்களோ?

மாணி.—நான்மாத்திரமன்று, அவன் சிநேகிதர்களைக் கொண்டும் கேட்டுப் பார்த்தாய்விட்டது. ஆனால் அவன் தன் காரியத்திற்கு தானே மந்திரியாயிருந்து கொண்டு—(நல்ல மந்திரியோ கெட்ட மந்திரியோ தெரியாது.) தன் எண்ணங்களை ஒருவரும் அறியாவண்ணம் அடக்கிவைத்துக்கொண்டிருக்கிறான் மலர்ந்து மணம் வீசி கண்டோரைக் களிப்பிக்கும் முன்னம், புஷ்பத்தை கண்ணுக்குத் தோன்றாமல் மறைந்திருந்தே தின்றுவிடும் புழுவைப்போல் இக்கவலையானது அவன் மனதில் மறைந்துகிடந்து அவனைத் தின்றுவிடுகிறது. இக்கவலைக்குக் காரணம் மாத்திரம் தெரிந்தால் அதை உடனே நீக்கும்படி எத்தனம் செய்யலாம்.

கொஞ்சதூரத்தில் ராமத்தேவன் வருதல்.

பேயா.—பார்த்தீர்களா அதோ அவன் வருகிறான். தயவுசெய்து கொஞ்சம் மறைந்திருங்கள். அவன் வருத்த மின்னதென்று அறிகிறேன். என்னிடத்தில் சொல்லுவான். மறைக்கமாட்டானென்று நினைக்கிறேன்.

மாணி.—நீ யிருந்து நிஜத்தைத் தெரிந்துகொள். எனக்கு வெகு சந்தோஷம். வா போவோம்.



(ஸரஸ்வதி தேவியைப்பார்த்து)

(மாணிக்கதேவர் ஸரஸ்வதி தேவி போகுதல்.)

பேயா.—எங்கே, காலை வேளையில் இப்படி; வா அப்பா.

ராம.—என்ன இப்பொழுதுதான் விடிந்ததோ?

பேயா.—ஆமாம். இப்பொழுது விடிந்து ஒரு ஜாமந்தானாயிற்று.

ராம.—அப்படியா, கவலையிருந்தால் காலம் கழிவதில்லை. இங்கிருந்து விரைவாய்ச் சென்றவர் என் தகப்பனார்தானே?

பேயா.—ஆமாம். ராமனுக்குப் பொழுது போகாம லிருக்கும்படியான வியாகுலம் என்ன ஏற்பட்டிருக்கிறது?

ராம.—எதை அடைந்தால் பொழுது போவது தெரியாமல் போய்விடுமோ அதை யடையாததினால்தான்.

பேயா.—காதலோ?

ராம.—சீ விடு.

பேயா.—காதலிற்குரியா ரின்மையாலோ?

ராம.—நான் விரும்புமாள் என்னை விரும்பாததினால்.

பேயா.—ஐயோ, மனிதருடைய இன்பத்திற்கு ஆதாரமாகவும் வெகு இனிப்பாகவும் தோன்றும் காதல் அனுபவத்தில் இவ்வளவு குரூரத்தன்மை யடைந்திருக்கவேண்டுமோ?

ராம.—அதை யேன் கேட்கிறாய் அப்பா. காதலுக்குக் கண்ணில்லை யென்று சொல்லுவார்கள். ஆனாலும் அது தன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்ய எப்படியாவது வழி தேடிக்கொள்ளுகிறது பார். இதென்ன ஆச்சரியம். எங்கே சாப்பாடு? இங்கு என்ன, சண்டையோ? நான் எல்லாம் கேள்விப்பட்டேன், நீ எனக்குச் சொல்லவேண்டாம். இது விரோதத்தாலுண்டான கலகம். ஆனால், காதலாலுண்டாகும் கலகம் அதனிலும் பெரிது. என்னுடைய விருப்பமின்றியே இக்காதல் வலையில் அகப்பட்டுச் சுழல்கின்றேன். அதுவோ ஊடலே யுருவாகவுடையது. அன்பால் செய்த துன்பம், அமிழ்தாலாகிய விஷம், காற்றுலாய மனமலை, குளிர்ந்த நெருப்பு, அருளுருக்கொண்ட இருள், கல்வியுதித்த நார், கண்மூடா நித்திரை, ஆகாயத்திலுண்டாகிய தாமரை, என்ன உனக்கு சிரிப்பாயிருக்கிறதோ?

பேயா.—சிரிப்பா, அழுகையல்லவோ வருகிறது.

ராம.—ஐயோ பாவம் அழுவானேன்?

பேயா.—உன்னை வருத்தப்படுத்தும் இப்பாவத்தை யெண்ணித்தான்.

ராம.—காமத்தின் பயனிதுவே யன்றோ? தாங்கமுடியாமல் என்னை வருத்தும் துன்பத்தை ஏன் வீணில் உன் துயரத்தால் வளர்க்கிறாய்? உனது அன்பானது எனதளவில்லாத துன்பத்தை யதிகப்படுத்துகின்றது. காமத்தால்

கனலும் வெந்தீயானது. பெருமூச்சாகிய புகையுடைத்தாயிருக்கின்றது. அப்புகையின்றி எரிந்தால் காதலர் கண்ணுக்கினிய வெளியாகும்; இல்லையெனில் அவர்களது கண்ணீர் கடலால் அணைந்துவிடும். அதை யென்னவென்று நினைக்கிறாய். அறிவுள்ள மதிமயக்கம், அன்பென்னும் விடம், உயிர் நிலைக்கும் மருந்து, போய்வருகிறேனப்பா. (போதல்)

பேயா.—இரு நான்கூட வருகிறேன், நீ என்னை இப்படி விட்டுவிட்டு போகிறது நன்றாயில்லை.

ராம.—எனக்கு நல்ல ஞாபகமில்லை. நான் இங்கு இல்லை. இது ராமனல்ல, அவன் வேறு எங்கேயோ போயிருக்கிறான்.

பேயா.—அதிருக்கட்டும்; நீ யார்பேரில் காதல்கொண்டிருக்கிறாய் சொல்.

ராம.—என்ன அப்பா, நான் சொல்லி யழவேண்டுமோ?

பேயா.—அழுவானேன் வேண்டாம், அழாமல் யாரென்று சொல்.

ராம.—நோயாளியை மரண சாஸனம் செய்யச்சொன்னால் அதுவே போதும், அவனை உடனே கொல்ல. நான் ஒரு பெண்பேரில் காதல்கொண்டிருக்கிறேன்.

பேயா.—நீ காதலுற்றாய் என்று நினைத்தபோது அப்படித்தானிருக்குமென்று குறித்தேன்.

ராம.—நீ ரொம்ப நல்ல குறிப்பாளி! நான் விரும்புமவள் நல்ல குறிப்பாளவள்

பேயா.—நல்ல குறிப்பாயிருந்தால் எளிதில் எய்துவிடலாமே.

ராம.—சரிதான். அந்தக் குறியில் நீ தவறினாய். அவள் காமன் அம்பினால் காயமடைகிறதில்லை. கற்பென்னும் கவசத்தால் காமன் கைக்கரும்பு வில்லினின்றும் காக்கப்படுகிறாள். அவளை நோக்காலும், வாக்காலும் மயக்கமுடியாது. முற்றும் துறந்த முனிவர்களையும் வெல்லத்தகுந்த செல்வந்திரளினும் அவள் மயங்கி இணங்குவதில்லை. அவள் உருவமோ எழுதொணாதது. ஐயோ அவளுக்குப் பின் னவ்வடிவம் அழிந்துவிடுமே.

பேயா.—ஆனால் அவள் மணமின்றியிருப்பதாகத் தீர்மானித்திருக்கிறாளோ?

ராம.—ஆம். இவ்வாறான கிருபணத்தன்மையால் அதிக நஷ்டத்தை யுண்டு பண்ணுகிறாள். அவளுடைய கன்னிக் காவலினால் அழகென்பதும் அவளுடனே அழிந்துவிடுகின்றது. அவள் வனப்பிற்கோ வரம்பில்லை, அறிவிற்கும் அளவில்லை, ஆனால் அவளை இவ்வளவு அழகுடன் சிருஷ்டித்த தெய்வம் என்னை இவ்வாறு வருந்துவதற்காகச் செய்திருக்கமாட்டாது. அவள் விமத்தை வெறுத்தாள். அதிலேயே யானும் மாண்டிருக்கின்றேன்.

பேயா.—நான் சொல்லுகிறபடி கேள். அவளை நினைக்காதே மறந்துவிடு.

ராம.—மறப்ப தெப்படி? அவளும் என்மனமும் இரண்டற்று ஒன்றாய் நின்றால், அவளையன்றி வேறொன்றை யெண்ண மற்றொரு மனமுண்டோ?



பேயா.—அழகிற் கெல்லையில்லை. நீ இந்த வலையினின்றும் விடுவித்துக் கொண்டு வனப்பிற் சிறந்த மாதர்கள் பலரைப் பார்க்கின் இவளை மறந்துவிடலாம்.

ராம.—அதுதான் வழி, அவள் அழகிற் கீடு இல்லையென்று அறிவதற்கு. பூர்ண சந்திரனை மறைத்திருக்கும் மேகத்தைக் கண்டும் அந்த சந்திரனையே நினைப்பது போல். திடீரென்று கண்ணிழந்தவன் அதற்குமுன் கண்டிருந்த இனிய காட்சியை மறப்பதெப்படி? வனப்பிற் சிறந்த மங்கையரைப் பார்க்கின் அவரினும் சிறந்த எழிலுடையாள் என் காதலியென்றே தோன்றும். இதில் பயனில்லை. உன்னால் என்னை மறக்கச் செய்ய முடியாது. போய் வருகிறேன்.

பேயா.—நான் சொல்வது கூடுமென்பதை நிலை நிறுத்துவேன்; இல்லாவிட்டால் உனக்கு அடிமையாய்விடுகிறேன்.

எஸ். வி சீனிவாஸய்யர் B. A.

# நன்றி மறவாமை.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

இக்குறளின் பொருளாவது "எப்படிப்பட்ட பாவச் செய்கைக்கும் ஒருவிதமான பிராயச்சித்தம் உண்டு. அவ்விதமான பிராயச்சித்தத்தைச் செய்வதினால் பாவம் நீங்கி ஒருவன் நற்கதி யடையும்படியான மார்க்கம் உண்டாகிறது. ஆனால் ஒருவன் செய்த உபகாரத்தை மறத்தலே மிகவும் பாபம். அதன்றி அந்த நன்றியை மறப்பதோடு அந்நன்றிக்கு பதிலாக தீங்கிழைக்கும் பாபிக்கு ஒருவிதமான பிராயச்சித்தமும் கிடையாதென்பதற்கேற்ப உய்வில்லை" என்றார். அதோடு "மகற்கு" என்று சொன்னதின் பொருள் யாதெனில் அவன் மானிட ஜன்மத்தில் சேர்த்து எண்ணப்படத்தக்கவனல்லவென்றும், பாம்பு முதலிய விஷஜந்துக்களோடு சேர்த்து எண்ணத்தகுந்தவன் என்றும் பொருள்படும். அப்படிப்பட்டவனைப் பார்ப்பதும் பாபம். அவனோடு சம்பாஷிப்பதும், உறவாடுவதும், மகா பாபமாகும்.

இதுபற்றியே, அனேக பெரியோர்கள் நன்றி மறந்து, உயிர் வாழ்வதிலும் நன்றி பாராட்டி உயிர் விடுவதை மேற்கொண்டனர். உதாரணமாக பாரத யுத்தத்தில் பீஷ்மர், துரோணர், கிருபர் முதலான மஹான்கள் துரியோதனாதியர் அநியாயம் செய்கிறார்களென்று நன்றாய் தங்களுக்குத் தெரிந்திருந்தும், தங்களுக்கு அன்னவஸ்திரம் கொடுத்து ஆதரித்த அரசனுக்கு ஒத்தாசை செய்வதே தங்களுக்கு தருமமென்று நினைத்து யுத்தத்திற்கு போய் தங்கள் பிராணனை விட்டனர். இவர்கள் செய்கையிலும் மிகவும் உயர்ந்தது கர்ணனுடைய செய்கை.

எவ்விதமெனில், கர்ணன், பிறந்த பிற்பாடு அவன் தாயாகிய குந்தியானவள் உலகத்தார் பழிக்கு பயந்து அவனை ஒரு பெட்டியில் வைத்து நதியிலே விட்டுவிட்டனள் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அப்படி மிதந்துவந்த பெட்டியை திருதாஷ்டிரனது ரதிகன்னன் எடுத்து அக்குழந்தையை வளர்த்து அவனுக்கு சகல வித்தையும் கற்பித்தான். அவன் வில் வித்தையில் மிகவும் வல்லவனென்று தெரிந்து, துரியோதனன் தனக்கெதிரிகளாகிய பாண்டவர்களை இவன் ஒத்தாசையைக் கொண்டு வெல்லலாமென்று கருதி, அவனுக்கு ராஜ்யங்கள் தேசங்கள் கொடுத்து அவனை அங்கதேசத்து அதிபதியாக்கினன். இவனிடத்தில் மிகவும் பிரியமுள்ளவனாய், இவன் வார்த்தைக்கு மாறாக தன் தம்பிகள் கூட சொல்லக் கூடாதென்று ஆக்ஞாபித்து தன் தம்பிபோல அவனைப் பாராட்டி வந்தான். கர்ணனும் துரியோதனனிடத்தில் வெகு பட்சமுடையவனாய் அவனுக்கு உற்ற துணைவனாயிருந்து வந்தான். இப்படியிருக்கையில், பாண்டவர்களுக்கும் துரியோதனாதியருக்கும் ஒருவிதமான சமாதானம் பண்ணுவிக்க வேண்டுமென்று, கிருஷ்ண பகவான் எவ்வளவு பிரயாசைப் பட்டும், பாண்டவர்களுக்கு ஒரு அடி நிலமும் யுத்தமில்லாமல் கொடுப்பதில்லை என்று துரியோதனன் சொல்லிவிட்டபடியால், பாண்டவர்களுக்கு யுத்தத்தில் அவர்களை வென்றுதான் தங்கள் ராஜ்யம் அடையவேண்டியதாயிற்று. ஆதலின் யுத்தத்திற்கு இருதிறத்தாரும் ஆயத்தமாயினர். அப்போது பாண்டவர்கள் கிருஷ்ண பகவானுடைய ஆலோசனையைக் கேட்டுத்தான் ஒரு காரியம் செய்யவேண்டுமென்று அவருடைய புத்திமதியைக் கேட்கலானார்கள். அவர் இருதிறத்தாருடைய பலாபலத்தை யோசித்துப் பார்த்து, "துரியோதனாதியர் பக்கத்திலுள்ள கர்ணனை ஜயிப்பது எவ்விதம்? அவன் பிறக்கும்போதே கவச குண்டலங்களோடு பிறந்தவன். காண்டவதகனம் செய்தபோது தப்பியோடின அசுவசேனன் என்னும் பாம்பை தன் அஸ்திரமாக உடையவன். அந்த நாகாஸ்திரமானது எப்போது நாம் அர்ச்சுனனைக் கொல்லப்போகிறோமென்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆதலின் அவனை ஜயிக்க ஒரு வகை தேடாமல் யுத்தத்துக்கு பிரயத்தனம் செய்து என் பயன்?" என்று பகர்ந்தனர். பாண்டவர்களும் தங்களுடைய கிருபையால்தான் நாங்கள் வெல்லவேண்டும். அவனை வெல்லுவதற்கேற்ப உபாயம் தாங்களே சொல்லவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அவர் துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனார்த்தம் அவதரித்தவராதலின், சரி அதற்குத் தகுந்த உபாயம்தான் செய்கிறேனென்று சொல்லி குந்திதேவியிடத்துக்கு புறப்பட்டுப் போயினர். குந்தியிடம் போய் அவளுக்கு, பாண்டவர்கள் இருக்கும் நிலைமையைச் சொல்லி, கர்ணனை வெல்லுவதற்கு அவள் சகாயம்தான் வேண்டுமென்று அது இல்லாவிடில் பாண்டவர் அனைவரும் யுத்தத்தில் மாண்டுபோவது நிச்சயமென்றும் சொல்லினர். குந்தியோ இந்த வார்த்தையைக் கேட்டவுடன் இருதலைக் கொள்ளியின் நடுவில் அகப்பட்ட எறும்புபோல, பதை பதைத்து ஐயோ! பாண்டவர் சௌக்கியத்தைக் கோரினேனாகில் நம் மூத்த குமாரனாகிய கர்ணன் யுத்த களத்தில்பட்டு மடிவன், இல்லாவிடிலோ, மற்ற ஐவரும் இறக்கவேண்டி வரும் என்று மனநொந்து பிற்பாடு கிருஷ்ணன் தேற்றத் தேறி கிருஷ்ணனைப் பார்த்து தேவரீர் எப்படிச் சொல்லுகிறீர்களோ



அப்படி கேட்கச் சித்தனாயிருக்கிறேன் என்றனள். அப்படியாகில், நீ பாண்டவர்களுக்கு கர்ணன் அவர்கள் தமையன் என்பதை வெளியிடாமலிருக்கவேண்டும். நீ நேராக கர்ணனிடத்துக்குப் போய் அவன் உன் பிள்ளை என்பதைத் தெரியப்படுத்தி, நம்முடைய பக்கம் வரும்படி வேண்டியழைத்து வருவாய். அப்படி அவன் வரமாட்டேன் என்று சொன்னால் அவனிடத்தில் ஒரு வரம் நீ கேட்டால், அவன் உயிரைக் கேட்டாலும் அளிக்கும் கிருபா நிதி ஆதலின் நீ கேட்பதைத் தட்டாமல் அளிப்பன். நீ கேட்கும் வரம் யாதெனில் "நீ உன்னிடம் இருக்கும் நாகாஸ்திரத்தை ஒரு தடவைக்குமேல் இரண்டாந்தடவை அர்ச்சுனன் மேல் பிரயோகிக்கக் கூடாது, அது தவிர, மற்ற நால்வர் பேரிலும் நீ யாதொரு காரணத்தினாலும் பாண பிரயோகம் செய்யக்கூடாது." என்கிற இந்த இரண்டு வரமும் கேட்டு வாங்கிக்கொண்டு வரவேண்டும் என்றனர். சரி என்று ஒத்துக்கொண்டு அவள் கர்ணனிடம் போய் அவனுக்குத்தான் தாயார் என்பதை நிரூபித்தனள்.

"அப்பா என் மகனே! இவ்வளவு பராக்கிரமசாலியான உன்னைப் பெறுவதற்கு நான் தபம் செய்திருந்தும், உன்னை எடுத்து வளர்க்கப் பாக்கியம் செய்திலேனைய்யோ," என்று மிகவும் அன்பு பாராட்டி பிரலாபித்தனள். கர்ணனும் அவளை உபசரித்து பின் தாங்கள் என்னிடம் வந்த காரணமென்ன என்றும் தங்களுக்கு ஆகவேண்டியது ஏதாகிலுமுண்டாகில், அதை இந்த க்ஷணமே முடிக்க வல்லேன் என்றனன். "அப்பா உன்னை பிள்ளையாகப் பெற்றிருக்க எனக்கு இல்லாதது ஒன்றுளதோ ஆயினும் இந்த பாரத யுத்தத்தில், நீ உன் தம்பிமாரோடு வந்து மகா பாபியான இத்துரியோதனாதியரிடம் போர் செய்து ஜெயித்து இவ்வுலகம் முழுவதும் ஒரு குடைக்கீழ் நீ யாள்வதைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்" என்றனள். கர்ணனுக்கு இது வரையில் பாண்டவர் தனது சகோதரர் என்பது தெரியவே தெரியாது. இவள் இப்படிச் சொன்ன வார்த்தையைக் கேட்டதும், பின் வருமாறு சொல்லானாயினன். அவன் வார்த்தைகள் அவன் பெருந்தன்மைக்கும் அவன் நன்றியறிவுக்கும் முற்றும் ஒத்தவை என்பதை விளக்கும்.

"அம்மணி நீங்கள் அப்படி சொல்வது அழகல்ல. நீங்கள் என்னை அநாதையாய் விட்டபிறகு என்னை அன்னவஸ்திராதிகள் கொடுத்து உபசரித்து வந்த துரியோதன ராஜனுக்கு நான் நன்றியறிவு பாராட்டவேண்டாமா?

"யாரும் அறியத்தகாத என்னை அரசனாக்கி முடிசூட்டி
சீரும் பெயரும் தனது பெருந்திருவும் எனக்கே தெரிந்தளித்தான்
பாரின்றறிய ஈன்றவர்க்கும் பழிதீர் வென்றிப் பாண்டவர்க்கும்
போரென்றறிந்தும் செய்ந்நன்றி போற்றுதவரின் போவேனோ
மடந்தை பொற்றிருமேகலை மணி உகவேமாசறத்திகழுமேகாந்த
இடந்தனில் புரிந்தே நானயர்ந்திருப்பவெடுக்கவோ கோக்கவோ என்றான்
திடம்படுத்திடுவேல் விராஜ ராஜனுக்குச் செருமுனைச்சென்று செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதுவே எனக்கினித்தருமமும் கருமமுமென்றான்.

என்னை ஆதரிப்பாரின்றி நான் கஷ்டபட்ட காலத்தில் எனக்கு அன்னமளித்தும் இன்னும் அனேக ராஜ்யங்களெல்லாம் கொடுத்து உதவி புரிந்தவும், என்னைத்

தன் பிராணனுக்கு சமமான சிநேகிதனாக பாவித்தும் வந்த துரியோதன ராஜன் எவ்வளவு அநியாயமாய் நடந்தபோதிலும் நான் அவனுக்காக சண்டை போடுதல் தர்மமே ஒழிய, அதைவிட்டு பாண்டவர்களோடு சேர்ந்தேனாகில் "செய்நன்றி போற்றாதவர் போகும் நரகத்தில் அல்லவோ போய்ச் சேருவேன்" ஆதலின் அதைத் தவிர்த்து வேறு ஏதாவது கேளுங்கள் என்றனன். பிற்பாடு குந்தியானவள், கிருஷ்ணன் கேட்கச் சொன்னபடி கேட்க, அதினால் தனக்கு நிச்சயம் பிராணனுக்கு அபாயம் வருமென்று தெரிந்திருந்தும் அவள் வேண்டுகோளுக் கிணங்கி முன் சொல்லிய இரண்டு வரமும் அளித்தனன். ஆகலின், செய்நன்றி பாராட்டுவது அவ்வளவு அவசியம் என்பது தெளிவாகிறது.

தவிரவும், ஸ்ரீராமபிரான் தம்பியாகிய பரதர், ஸ்ரீராமர் வனவாசம் போன பிற்பாடு கௌஸலையண்டை வந்து நமஸ்கரித்ததும் அவள் அப்பா பரதா ராமர் காட்டுக்குத் துரத்திய பிற்பாடு இப்போதாவது சந்தோஷம் வந்ததா? என்றனள்.

அப்போது பரதர் அவள் முன்பாக சப்தம் பண்ணுவதில் "நான் ஸ்ரீராமபிரான் காட்டுக்குப் போவதில் ஏதேனும் அணுவளவாயினும் சம்பந்தப்பட்டவனாகில், நன்றி மறந்தோர்க்கு கிடைக்கும் கதியை நான் அடையக் கடவேன்," என்று சப்தம் செய்தனர். ஆதலின் அப்படிப்பட்ட மானிடரை இந்த உலகத்திலும் ஜனங்கள் வெறுத்துப் பழிப்பார்கள். பிற்பாடும் அவர்களுக்கு நல்லகதி யென்பதே கிடையாது.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

என்றார் திருவள்ளுவர்.

V. Sundarasa Iyer B. A.

# சந்திரமதி.

## இரண்டாம் அத்தியாயம்.

வித்தியாசாகரப் புலவர் மேற்கூறிய பிரசங்கம் புரிய வாரம்பித்த சிறிது நேரத்துக்கெல்லாம், சந்திரமதி அவ்விடத்திற்கு வந்து தந்தையின் மடியில் உட்கார்ந்து கொண்டு பிரசங்கம் முடிகிற வரையில் செவி கொடுத்து அதே கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தாள். அதைப் பார்த்துக்கொண்டிருந்த அரசன் பிரசங்கம் முடிந்தவுடன் மகளை முத்தமிட்டு உடம்பைத் தடவிக் கொடுத்து, "குழந்தாய், நீ என்னவோ தெரிந்தவள்போல் இத்தனை நேரம் 'பராக்கு' பார்க்காமல் அவர் சொல்வதை யெல்லாம் மிகுந்த சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருந்தாயே, அதில் உனக்கேதாவது தெரிந்ததா?" என்று கேட்டான்.



சந்தி.—நான் கேட்டதில், பெண்களுக்குக்கூட கல்வி கற்பித்தல் பிரயோஜனகரமென்று அவர் உபதேசித்ததாக எனக்கர்த்தமாயிற்று. அவர் பிரசங்கத்தின் முக்கிய கருத்து அதுதானே?

உசீ.—ஆமாம்! அவர் இப்பொழுது பேசினது அந்த விஷயமாகத்தான். நீ இமை கொட்டாமல் கடைசி வரைக்கும் ஜாக்கிரதையாய்க் கேட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்தபொழுதே, நீ அதன் கருத்தை யறிந்து படிக்கவேண்டு மென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தா யென்பதை நான் அறிந்து எவ்வளவோ சந்தோஷித்தேன். நீ எப்பொழுது வாசிக்கத் தொடங்கி உன் அன்னைக்கும் எனக்கும் களிப்பை உண்டாக்குவையோ?

சந்தி.—அவர் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு நீங்கள் என்னை எப்பொழுது படிக்க வைக்கப் போகிறீர்களென்று கேட்க நினைந்து அந்தக் கேள்வி என் நாக்கின் நுனிவரையில் வந்து விட்டது. அதற்குள் நீங்களே பேசத் தொடங்கி என் உள்ளக் கருத்தென்ன வென்று கேட்டீர்கள். நீங்கள் என்னை எவ்வளவு சீக்கிரமாய் வாசிக்க வைக்கிறீர்களோ அவ்வளவு சந்தோஷத்துடன் வாசிப்பதற்கு நான் சித்தமாயிருக்கிறேன். ஏற்கனவே அம்மா எனக்கு எழுத்துக்கள் கொஞ்சம் கற்பித்திருக்கிறாள்.

இவ்வாறு சந்திரமதி கூறிய விடையைக் கேட்டு அரசன் அளவிலாச் சந்தோஷமடைந்து, உடனே வித்தியாசாகரருக்குத் தன் புதல்வியைக் காட்டி, 'உங்கள் சிஷ்யப் பெண்ணாகிய இவளுக்கு இன்றுமுதல் வித்தியாப்பியாசம் ஆரம்பித்து அவளை கல்வழியில் பழக்கவேண்டிய பாரம் உங்களுடையது?' என்று சொல்லி மகளை அவரிடம் ஒப்புவித்து, அவரைத் தனகனகவஸ்து வாகனங்களால் சம்மானித்தனுப்பினான். வித்தியாசகாரரும் நல்ல முகூர்த்தமொன்று பார்த்து அந்நாளில் அவளுக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கி, இரண்டு வருஷங்களுக்குள்ளாகவே, எழுதிய புஸ்தகங்களைப் பார்த்து சரியாய்ப் படிப்பதற்கும், சொல்வதைத் தப்பின்றி எழுதுவதற்கும், அந்நியருடைய உதவியின்றி சுலபமான செய்யுள்களுக்குப் பொருள் தெரிந்துக் கொள்வதற்கும் சாதாரண நடையில் கடிதம் வரைவதற்கும் சக்தியுள்ளவளாகச் செய்தார். பிள்ளைகளைக் கொஞ்சங்கூட விளையாடவிடாமல் நிர்ப்பந்தப்படுத்தி வாசிக்கச் செய்தால், கற்ற கல்வி மனதிற் பதியாமற் போவதினால் அதனால் பிரயோஜனமுண்டாகாதென்றும், தினந்தோறும் சிறிது நேரம் குதித்து விளையாடும்படி விட்டு அவ்வாட்டங்களில் கூட ஏதாவது பிரயோஜனமுள்ள ஒரு புதிய விஷயத்தைக் கற்பிப்பார். சிறு பெண்களுக்குப் பொம்மைகளைப் பார்ப்பதில் மிகவும் பிரியமென்றறிந்து அடிக்கடி சந்திரமதியை யழைத்துக்கொண்டு போய்ச் சுவர்களில் மாட்டியிருக்கும் சித்திரப் படங்களையும் கல் தூண்கள் முதலியவற்றின் மேல் செதுக்கியிருக்கும் விக்கிரகங்களையுங் காட்டி அவற்றைப் பற்றிய விநோதமான கதைகளின் மூலமாய்ச் சில நீதிகளைப் போதிப்பார். அவ்விளங்கொடி மனதில் வாங்க முடியாத விஷயத்தை யவர் அவளுக்கு என்றுங் கற்பிக்கவில்லை. சொல்வதின் பொருள் தெரியாமல் குருட்டுப்பாடமாய் ஒரு பாட்டையாவது கீர்த்தனத்தையாவது அவர் அவளுக்குச் சொல்லிவைக்க வில்லை; சொல்லிவைத்த இலக்கண நூல்களுடன் கூட பாஷாபிவிர்த்தியின் பொருட்டு, இலக்கிய நூல்களையுங் கற்பித்து, வாசித்ததெல்லாம் பயன் படுமாறு செய்தார். கணித சாஸ்திரம் புத்தியை மலரச்செய்து விஷயங்களைப் பிரித்துணரும் சக்தியையும் விர்த்தி பண்ணுமென்று கருதி சாதாரணமாக இல்லாண்மைக்கு வேண்டிய அளவை விட சற்றதிகமாகவே அந்நூலில் அவளைப் பயிற்றுவித்தார். இனி சம்சார பாரத்தைத் தாங்கவேண்டி வரும் பொழுது பலவித கஷ்டங்களும் வந்து சூழ்ந்துகொண்டு இவ்வுலக வாழ்க்கை ஒரு பெருஞ் சுமையாகத் தோன்றும் சமயத்தில் மனதுக்கு உல்லாசத்தையும்

ஒழிவையும் கொடுக்கத்தக்கதான சங்கீத வித்தையையும் அவளுக்கு அப்பியாசம் செய்வித்து, பக்தி ரஸம்பொழியும் பாடல்களையும் கீர்த்தனங்களையும் பலவித ராகங்களுடன் சர்ளுமிர்தமாய்ப் பாடுமாறு கற்பித்தார். உலகத்திற் சிறுவர்களேனும், சிறுமிகளேனும் தாம் கற்றுக்கொண்டதைப் பிறருக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்னும் சுபாவமுள்ளவராதலால், சந்திரமதியும் தன்னைக் குருவாகவும், தன் தோழிப் பெண்களையாவது, அவர்களில்லாத பொழுது சந்தனப் பதுமைகள் முதலியவற்றையாவது சிஷ்யர்களாகவும் வைத்துக்கொண்டு தான் குருவினிடம் வாசித்ததை யெல்லாம் அவர்களுக்குப் போதித்து விளையாடிக்கொண்டு இன்னுமதிகமாய் அறிவில் அபிவிர்த்தி யடைந்தாள். பெரியோர்களும் தெரிந்தவர்களும் எவ்வாறு நடப்பார்களோ, அவ்வாறே சிறியோர்களும் தெரியாதவர்களும் நடந்துகொள்ளுதல் உலக வியற்கையாதலால், அகத்தில் தாய் தந்தைகளினுடையவும் வெளியில் வித்தியா சாகரருடையவும் நல்லொழுக்கத்தின் வாயிலாக சந்திரமதிக்கு உண்டான சுகுண சம்பத்து இவ்வள வவ்வளவென்று கூறத்தரமன்று. வாயாற் கூறும் சொற்பச் சொற்களைவிட கையாற் செய்து காட்டும் செய்கைகளே மிக்க சிறந்தவையாயும் மனதில் நன்குயப் பதியத்தக்கனவாயு மிருப்பதால், குருவானவர் போதிக்கும் உபதேசங்களைவிட அவரது நல்லொழுக்கமே அவளை விசேஷ நீதியுள்ளவளாகச் செய்தது.

அவர் இம்மைக்கு வேண்டிய சங்கதிகளைச் சந்திரமதிக்கு விரிவாகப் போதித்து வந்தபோதிலும், மறுமைக்கு சாதனமாகிய கடவுளைப் பற்றிய ஞானத்தைச் சுத்தமாய் உண்டாக்காமல் உபேக்ஷை செய்து சும்மா இருக்கவில்லை. ஒருநாள் சந்திரமதி ஒரு சித்திரப்படத்தைக் கையில் வைத்துக்கொண்டு உட்கார்ந்து, குரு வரும்பொழுது, அதன் அழகைக்கண்டு ஆனந்தத்தால் தலையசைத்து ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

மஹேசகுமார சர்மா.

## வர்த்தமானக் குறிப்புக்கள்.

சுதேசியமும் பெண்களும்:—அன்னிய நாட்டுச் சரக்குகளை வாங்காமல் சுதேசச் சரக்குகளை மட்டுமே வாங்கி இந்நாட்டுக் கைத்தொழில்களை விருத்திசெய்ய வேண்டுமென்று அனேக இந்திய மாதர்கள் வீர விரதம் செய்துக்கொண்டிருக்கிறார்கள்.

மிஸஸ் அன்னிபெஸன்ட்:—ஐரோப்பிலிருந்து அன்னிபெஸன்ட் அம்மை திரும்பியது முதல் மிகவும் அதிகமான ஊக்கத்துடன் உழைத்து வருகின்றார். "தியாசபியும் ஹிந்து மதமும்" என்ற விஷயமாகப் பல பிரசங்கங்கள் செய்து வரப்போகின்றார்.

பெங்காளத் துண்டிப்பு—அக்டோபர்-ம்௴ 16-உ முதல் பெங்காள மாகாணத்தை இரண்டு துண்டாகப் பிரித்து இரண்டு பகுதிக்கும் லெப்டினென்ட் கவர்னர்களேற்படுத்தி அரசாளப் போகிறார்கள். இதனுல் பெங்காள வாசிகளிற் பெரும்பாலாருக்கு வருத்த முண்டாயிருக்கிறது.

இந்தியாவிற்கு 'ஆகாய ரதம்' (Balloon) கொண்டுவருதல்:—இங்கிலண்டிலிருந்து ஸ்பென்ஸர் என்ற ஆகாய ரதக்காரர் இந்தியாவுக்கு புறப்பட்டிருக்கின்றார். வேல்ஸ் இளவரசர் இங்கு வந்திருக்கும்போது அவர் ஆகாய ரதமேறிச் சில முக்கிய நகரங்களைப் பார்வையிட வேண்டுமென்ற கருத்துடன் ஸ்பென்ஸர் வரப்போகிறார்.

கடல் யாத்திரையும் ஹிந்து சாஸ்திரங்களும்:—மைசூர் பழமை யாராய்ச்சி ஆபீஸில் பண்டிதராகிய வித்வான் காசி நாகேசுர சாஸ்திரியார் கடல் யாத்திரையைப்பற்றி ஓர் சிறு புத்தகம் எழுதியிருக்கின்றார். அதில் பூர்வீக சாஸ்திரங்களில் கடல் யாத்திரைக்குப் போதுமான அனுமதி யளிக்கப்பட்டிருக்கிறதென்று நிரூபணம் செய்கிறார்.



விக்டோரியா "சக்ரவர்த்தினி"யின் விளம்பரத் திருநாள்:—1858-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம்தேதி விக்டோரியா சக்ரவர்த்தினியார் இந்தியா ஜனங்களுக்கு ராஜ்ய பரிபாலன விளம்பரமருளிச் செய்தனர். அதன் அறிகுறியாக இவ்வருஷம் நவம்பர் மாதம் 1-ம்தேதி யன்றும் கல்கட்டா, பம்பாய் முதலிய பல நகரங்களில் ஒன்றுகூடி மகிழ்ச்சி கொண்டாடுவார்கள்.

நூறு ரூபாய் இனாம்:—விதவா விவாகம் கூடாதென்று தடுக்கும் வழக்கத்தால் உண்டாகும் கெடுதிகளையும் ஹிந்துக்களிலே உயர்ந்த ஜாதியாருக்குள்ள வழக்கம் ஒழிவதற்குரிய உபாயங்களையும் பற்றி மிகவும் சிறந்த வியாசம் எழுதிக்கொடுப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாமளிக்கப்படும். அந்த வியாசத்தில் சாஸ்திராதாரங்கள் பொருள் நூலாதாரங்கள், ஜனசங்க நிலே, ஒழுக்கமுறை என்ற எல்லா விஷயங்களும் அடங்கி யிருக்கவேண்டும். இந்தியா முழுதிலுமுள்ள எந்த ஹிந்துவும் இதைப்பற்றி எழுதலாம். வியாசம் இங்கிலீஷில் எழுதப்பட வேண்டும். தேசபாஷைகளொன்றில் எழுதுவோர் இங்கிலீஷில் மொழி பெயர்ப்பனுப்பவேண்டும். இந்த வியாசத்தை பம்பாய் மாகாண ஆசாரச் சீர்திருத்தச் சங்கத்தின் காரியதரிசியாகிய மிஸ்டர் B. N. பஜேகருக்கு அனுப்பவேண்டும். திருத்தச் சங்கத்தார் வியாசங்களைப் பரிசோதிக்க ஓர் கமிட்டி நியமித்து இன்னருக்கு சன்மானம் கொடுக்கவேண்டுமென்பதை தீர்மானிப்பார்கள்.

## புத்தக வரவு.

இந்த "செந்தமிழ்" "விவேகபானு" "விவசாய தீபிகை" என்ற அரிய மாதாந்தப் பத்திரிகைகளின் அதிபர்கள் நமக்கு மாற்றுப் பத்திரிகை அனுப்பியதன் பொருட்டு நன்றி செலுத்துகின்றோம். மற்றைய பத்திராசிரியர்களும் இங்ஙனம் புரியுமாறு வேண்டுகின்றோம். அடுத்தமுறை தொட்டு நமது பத்திரிகையிலே புத்தகங்களின் உள்ளுறை விவரங்கள் பிரசுரிக்கப்படும்.

## நமது பத்திரிகையைப்பற்றிப் பிறர் யாது கூறுகின்றார்கள்?

மதுரை தமிழ்ச் சங்கத்துச்செந்தமிழ்ப் பத்திரிகையின் கருத்து:—"சக்கரவர்த்தினி சென்னையினின்று மாதந்தோறும் வெளியேறும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதன் முதற் பெண்பாலரின் அறிவுப் பெருக்கத்துக்கென்று தொடங்கப்பெற்றது. இதன் முதலிரு பகுதிகள் கிடைக்கப் பெற்றோம். நம் நாட்டு மாதர்கணிலையைச் சீர்ப்படுத்தற்கென்றே எத்தனை பத்திரிகைகள் வெளியேறினும் அவை மிகையாகா வென்று பத்திராசிரியர் இப்பத்திரிகையின் முதற் பகுதியில் எழுதியது முற்றும் பொருத்தமே யாம். ஒரு நாட்டின் சீருஞ் சிறப்பும் அந்நாட்டு மாதர்களைப் பொறுத்தே பெரும்பாலும் இருத்தலின், தேச நலத்தைக்கருதும் நன்மக்களெல்லாம் அதிலுங்கவலை செலுத்தற்குரியர். இப்பத்திரிகை, பெண்பாலார்க்கு முக்யமாகத் தெரியவேண்டிய பல இனிய வியாசங்களைத் தன்பால் நிரம்பவுள்ளது. இதுபோன்ற சிறந்த பத்திரங்களை நம்நாட்டுமாதர்கள் பெற்றுப் படித்துவரின் அவர்கள் இலெளகிக, வைதிக ஞானங்களில் நல்ல தேர்ச்சிபெற்று விளங்குவ ரென்பது திண்ணம். இதற்கு முதலில் சுதேசமித்திரன் பத்திராசிரியராகிய ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் முதலிய நல்லறிஞர்கள் விஷயமெழுதி வருகின்றனர். இதன் பத்திராசிரியர் ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதியாரவர்கள். இப்பத்திரிகையை எல்லாரும் அபிமானித்து, நடாத்துபவர்க்கு ஊக்கமளித்து வர நம்மவர் கடமைப்பட்டவர்களாவர்.

சுதேசமித்திரன் பத்திரிகை சொல்கின்றது:—"சக்ரவர்த்தினி" எனும் இப் புதிய மாதாந்தப் பத்திரிகையின் இரண்டாம் பகுதி வரப்பெற்றனம். மெய்யாகவே தேசாபிவிருத்திக்குப் பாடுபட வேண்டுமென்ற பேராவலும், தக்க பண்டிதர்களிடமிருந்து இனிய விஷயங்கள் சேர்த்து இத்தேசத்துமாதர்கள் படிக்கச்செய்யவேண்டுமென்ற விருப்பமும், மேற்படி பத்திரிகை நடத்துவோர்களின் பாற்சிறக்க இருப்பது கண்டு களி கூர்கின்றோம். தேசவுயர்வுக்கு இன்றியமையாதன வாகிய சுபாஷாபிவிருத்தி, பெண்களின் அறிவு மிகுதி, என்றும் இரண்டிற்கும் துணைபுரிய வேண்டுமென்னும் கருத்துடையோர் இப்பத்திரிகையை ஆதரிக்க முன் வருவார்களென நம்புகின்றோம்.

இதன் வருடசந்தா ரூபா 2. வேண்டுவோர் திருவல்லிக்கேணி, வீரராகவ முதலி தெரு, 100-ம் நம்பர் வீட்டில் மேற்படி பத்திரிகை மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

"சுதேச பரிபாலினி" (ரங்கூன்) கூறுகின்றது:—சக்கிரவர்த்தினி எனும் பெயர் கொண்ட மாதாந்தப் பத்திரிகையின் இரண்டாம் பகுதியாகிய செப்டெம்பர் மாதப் பிரதி நமக்குக் கிடைத்திருக்கின்றது. இது பல வகையாலும் உயர்வுபடுத்தற்குரியதா யிருக்கின்றது. தலையங்கத்தில் பத்திராதிபரால் எழுதப்பெற்ற சுருக்கமும் தெளிவுமான இனிய வியாசம் ஒன்று நமது ஒப்பற்ற தலைமைத் தேசாபிமானியாகிய மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி அவர்களின் சரித்திரத்தை நன்கு விளக்குகின்றது. இந்த வியாசத்தின் முடிவுரையாக பத்திராதிபர் மிஸ்டர் சுப்பிரமணிய பாரதியார் சுவை நிரம்பிய ஐந்து தமிழ்ச் செய்யுள்கள் எழுதியிருக்கின்றார். மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் 'இந்தியாவில் ராஜாவும் ஜனங்களும்' என்ற வியாசம் பெண்பாலார் அறிதற்குப் பொருத்தமுடையதாக எழுதப்பட்டிருக்கின்றது. மற்றும் "கருத்துக் கிசைந்த காதலி," "கற்பு" "சந்திரமதி" "சௌந்திரம்" என்பன பற்றிய வியாசங்கள் மாதர்க்கின்றியமையாத ஒழுக்க முறைகள், அறிவுப்பயிற்சி, மனப்பயிற்சிகளை வளர்த்தற்கு ஏற்றவையாகவே யிருக்கின்றன. உபயோகமுள்ள இப்பத்திரிகையின் அபிவிர்த்தியை நாம் மனப்பூர்வமாக விரும்புகின்றோம்.

விவேகபானு (மதுரை) சொல்கிறது:—சக்ரவர்த்தினிப் பத்திரிகையின் நடை எளிதாகவும் இனிதாகவு மிருக்கின்றது. மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் "அரசனுங் குடிகளும்" என்ற விஷயத்தைப்பற்றிப் பெண்களுக்கேற்பச் சிறு வியாசம் ஒன்று எழுதியுள்ளார்கள். இதன் பத்திராசிரியராகிய மிஸ்டர் ஸி. சுப்பிரமணிய பாரதியவர்களின் நன் முயற்சி மேன்மேலும் ஓங்கி வளரும் வண்ணம் திருவருளின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய தீபிகை (சைதாப்பேட்டை) சொல்கின்றது:—"சக்ரவர்த்தினி" என்று பெயர் வாய்ந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை யொன்று கிடைக்கப்பெற்று மகிழ்ந்தனம். இப்பத்திரிகை தமிழ்மாதர்களுக்கு மிகவும் இன்றியமையாதது. அவர்கள் சிரத்தையோடு வாசிப்பார்களானால் அவர்களுடைய அறிவு மிகவும் விருத்தியடைந்து புருஷர்களுக்கு இல்லறம் நடாத்தலில் ஊன்றுகோல் போல மிகவும் பேருதவியாயிருப்பார்களென்பதற்கும் அவ்வளவு தேர்ச்சியடைந்த மாதர்களால் நமது தேசம் சீக்கிரம் க்ஷேமத்தையடையு மென்பதிற்கும் சிறிதும் ஐயமில்லை. இப்பத்திரிகை யிடைவிடாது நடந்து வரவேண்டு மென்பதும் தமிழபிமானிகளொவ்வொருவரும் இப்பத்திரிகையை ஆதரிக்க வேண்டுமென்பதும் நமது முக்கிய கோரிக்கை. இதனின் பத்திராசிரியர் நமது நண்பரும் சுதேசமித்திரன் உதவிப் பத்திராசிரியருமான ம-ள-ள-ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரவர்.

N. B. சென்ற மாதத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருந்த பத்திரிகைகளிற் பல சக்ரவர்த்தினியைப்பற்றி மறுபடியும் எழுதும் நல்ல ஜனங்களைப் பதிப்பிக்க முடியாமைபற்றி மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம். வேறு பல பண்டிதர்களும் பத்திரிகைகளும் கூறும் அபிப்பிராயங்கள் அடுத்த முறை பிரசுரிக்கப்படும். (ப—ர்.)

7-FEB 1906 MADRAS.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
னெ[illegible]யுறவோங்கு முலகு."

Madras; November 1905. No. 4.
சென்னை, 1905-ம் வருஷம் நவம்பர்மீ பகுதி-4.

## ல்ஸ் இளவரசரும் இளவரசியாரும்.

ஒ மகா சக்ரவர்த்தியின் பட்டத்துக் குமாரர் தமது தேவி சகிதமாக இம்
9-ம் தேதி பம்பாய் நகரில் வந்து இறங்கினார். எதிர்காலத்தில்
இந் சக்ரவர்த்தியாகப் பட்டம் வகிக்கப்போகின்ற இந்த இளவரசர்
முதிலும் யாத்திரை புரிந்து, இத்தேசத்தைப் பற்றிய விஷயங்களை
ள்ள வேண்டுமென்ற சிறந்த எண்ணத்துடன் வந்திருக்கின்றாராத
லைய தினம் எமது பாரத மாதா (இந்திய நாடு) தனக்கேற்பட்டிருக்கும்
பங்களையும் சிறிது மறந்து, மங்களாலங்காரம் பூண்டு, இளவரசருக்கும் அவர்
க்கும் நல்வரவு கூறினள்.

### இளவரசரின் பெயர் முதலியன.

நாமம் "ஜார்ஜ் பிரடரிக்" என்பது. இவர் 1865-ம் வருஷம்
ஜூ 3-ம் தேதியன்று பிறந்தவர். இவர் இப்போது "வேல்ஸ் இள
வ ரவது "பிரிடிஷ் சக்ரவர்த்தியின் பட்டத்துக் குமாரர்" என்ற உயர்
ற போதிலும், இவர் சக்ரவர்த்தியின் மூத்த குமாரரில்லை. இவருக்
னாயிருந்த "ஆல்பர்ட் விக்டர்" என்பவர் 1892-ம் வருஷத்தில்
பி தின் பின்னரே இவர் பட்டத்திளவரசராயினர்.
மனைவியாரின் பெயர் "விக்டோரியா மேரி" என்பது.

### இவர்கள் சென்னைக்கு வருதல்.

சரும் தேவியாரும் பம்பாயிலிருந்து அனேக ராஜ்ஜியங்களைச் சுற்றிப்
கண்டு பெங்களூர், பர்மா மூலமாக 1906-ம் வருஷம் ஜனவரி மாதம்
புதன்கிழமையன்று காலை 8-மணிக்கு சென்னைக்கு வந்து 5-தினங்கள்
ர். இவர் இன்னின்ன ஊர் வழியாக வருகின்றாரென்பதையும், ஒவ்
ர்களிலும் இவருக்கு எத்தனை சிறப்பான உபசாரணைகள் நடைபெற்று

வருகின்றன வென்பதையும் விரித்தெழுத வேண்டுமானல் நூற்றுக்கணக்கான பு[க்]கங்கள் செல்லும். அதுவுமன்றி அவரது யாத்திரை முடிந்த பிறகுதான் அவ்வி[ஷ]யத்தைப்பற்றி எழுதுவது பொருந்து மாதலால், இப்போது அங்ஙனம் எ[ழுத] விரும்புகின்றிலோம். பொதுப்படையாக எல்லா விடங்களிலும் ஜார்ஜிளவாச[ரை]யும் அவரது தேவியையும் மகாராஜாக்களும், ராஜாக்களும், மற்றைய ஜனங்க[ளும்] அளவிறந்த உற்சாகத்துடன் உபசரித்தார்களென்பதும், இளவரசரும் இத்தே[சத்]தவர்களைப்பற்றி மிகவும் ஆதரவுடனும், அன்புடனும், மதிப்புடனும் பேசி ந[ம]வ[ரி]ன் உபசாரணைகளைப் பரவசத்துடன் ஏற்றுக்கொண்டாரென்பதும் அறிவி[க்கத்]தக்கன. எனினும்,

## வேல்ஸ் இளவரசிக்குப் பம்பாயில் மாதர்களால் நடத்தப்பட்ட உபசாரணை

[க]ளைப்பற்றி விவரித்துக் கூறுதல் எமது பத்திரிகைக்குப் பொருந்திய வி[ஷய]மே யென்று கருதுகின்றோம்.

நவம்பர்மீ 10-ம் தேதி இரவில் பம்பாய் நகரத்தின் கண், வேல்ஸ் இள[வ]ரசியார் மாதர்களுக்குப் பேட்டி யளிக்கும்பொருட்டுத் தனியாக டவுன் ஹாலில் [வந்]திறங்கினர். அம்மண்டபமானது மேற்படி விசேஷத்தின் பொருட்டு வெகு ஆ[டம்]பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. காஷ்மீர, பாரஸீக தேசங்களிற் செய்து வந்த கம்பள விரிப்புக்களும், சுவர்களிலும் தூண்களிலும் செய்திருந்த பட்டு ஜ[ரிகை] அலங்காரங்களும், மிகச்சிறப்பான "குளோப்" "லஸ்தர்" முதலிய[வ]ற்[றி]ன் ஒளியும், எங்கு பார்த்தாலும் புஷ்பமாலைகள் பூம்பந்தல்கள் என்பன குள[ர்]ச்சி பெற விளங்கிய தோற்றமும், மண்டப மத்தியில் வேல்ஸ் இளவரசிக்குப் போ[ட்]டிருந்த பொற் சிங்காதனமும் பார்ப்போர் விழிகளைக் களிப்புறச் செய்தன. பா[ர்ஸி]கள், ஹிந்துக்கள், மகமதியர்கள், ஐரோப்பியர் என்ற 4-வகைப் பெண்மணிக[ள்] தமக்குரிய ஆபரணங்களுடனும் ஆடைகளுடனும் இனிது விளங்கினர். [லேடி] ஜம்செட்ஜி, லேடி பேடிட், லேடி மேட்டா என்ற மூன்றுமாதர்களுமே உபசா[ர]ணை முதலிய வற்றில் தலைமை வகித்தனர்.

பார்ஸிமாதர்கள் வேல்ஸ் இளவரசிக்கு திருஷ்டி கழித்தமை.

பார்ஸி மாதர்கள் வேல்ஸ் இளவரசிக்கு திருஷ்டி கழித்த மாதிரி தமிழ் [நா]ட்டாருக்கு வெகு விநோதமாகத் தோன்றும். ஓர் தேங்காயையும், கோழி முட்டையையும் எழுமுறை வேல்ஸ் இளவரசியின் தலையை சுழற்றிக்கொண்டு வந்து [பிறகு] உடைத்து விட்டார்களாம். பிறகு தண்ணீர்ப் பீங்கானென்றை எழு முறை தலையைச் சுற்றிக் கொணர்ந்து கீழே வைத்தார்கள். பிறகு வேல்ஸ் இளவரசி[யின்] தலையில் சிறிது அக்ஷதை (அரிசி) போடப்பட்டது. கடைசியாக ஓர் பார்ஸி மா[து] தனது விரல்களை மடித்துக் கன்னத்தில் நெரித்துக்கொண்டு வேல்ஸ் இளவரசிக்குத் திருஷ்டி கழித்தனராம்.

ஹிந்து மாதர்களின் உபசாரம்.

பிறகு ஹிந்து மாதர்கள் பலர் ஓர் தட்டிலே தீபங்களேற்றிக் கொண்டு அத்தில் தட்டில் வைத்திருந்த குங்குமத்தை வேல்ஸ் இளவரசியின் புருவத்தில் தீற்றி உப[சரிக்கும்பொருட்டுச் சென்றார்கள்.]



சரிக்கும்பொருட்டுச் சென்றார்கள். ஆனல் வேல்ஸ் இளவரசிக்கு அது பிரியமில்லையாதலால் அவ்விசேஷம் நடத்தப்பட வில்லை.

மகமதிய மாதர்களின் உபசாரணை.

அதன்பின் மகமதிய மாதர்கள் "ஆமீன்" என்றதோர் விசேஷம் செய்தார்கள். அதில் முதலாவது வேல்ஸ் இளவரசிக்கு மாலை சூட்டினார்கள். பிறகு வாதாங்கொட்டைகள் இளவரசியின் தலையைச்சுற்றி எறியப்பட்டன. பின்பு வேல்ஸ் இளவரசிக்குத் தேங்காய் கொடுத்தார்கள்.

உபசாரப் பத்திரிகை படித்தல்.

அதன்பின்: மராட்டி, உருது, குஜராத்தி என்ற பாஷைகளிலே உபசாரப் பத்திரிகைகள் படிக்கப்பட்டன. வேல்ஸ் இளவரசியார் மறுமொழி கூறியபின் சிற்றுண்டி யளித்தல், மாலை போடுதல் முதலிய உபசாரணைகள் நடந்தன.

முத்துமழை சொரிதல்.

வேல்ஸ் இளவரசி மண்டபத்திலிருந்து புறப்படப்போகும் தருணத்தில் மிஸ்டர் காபூர் சந்த் என்ற ஹிந்து வர்த்தகரின் மனைவி வேல்ஸ் இளவரசியின் முடி மீது முத்துக்களை கொணர்ந்து பொழிந்தனள். வேல்ஸ் இளவரசி மிகவும் சந்தோஷம் கொண்டு புன்னகை பூத்திருந்தனர்.

## எமது வேண்டுகோள்.

[இந்தியாவி]ன் அளகாபுரி என்று கூறத்தக்க பம்பாய் நகரத்திலே வேல்ஸ் இளவரசியாருக்கும் இளவரசருக்கும் நடந்த உபசாரணைகள் போலவே கல்கட்டாவிலேயும் நடைபெறுமென அறிகின்றோம். சென்னை நகரத்திலும் வேல்ஸ் இளவரசருக்குச் செய்யும் பல உபசாரங்களுடன் இளவரசியாருக்கும் இந்நகரத்து மாதர்கள் பலர் கூடி பம்பாயில் நடந்ததைப்போல உபசாரணைகள் செய்ய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன வென்று கேள்விப்படுகின்றோம்.

மாதர்கள் ஒருங்கு கூடி தாமாகவே ஓர் பொது நன்மைபற்றிய காரியத்தை ஏற்று நடத்துவது பெருமைப் படுத்துவதற்குரிய விஷயமே யென்றாலும் இவ்விஷயத்தில் மிகுதியான பணத்தை வீண் செலவு செய்வது தகுதியாக மாட்டாது. ஸர். V. பாஷ்யமய்யங்காரின் மனைவியார், முதலிய மாது சிரோன்மணிகள் இவ்விஷயத்தில் முற்பட்டு வேண்டிய முயற்சி புரிவார்களென எண்ணுகின்றோமாதலால் அவர்கள் இளவரசியார் வரவின் அறிகுறியாக ஹிந்து மாதர் ஹைஸ்கூல் ஒன்று ஸ்தாபனஞ் செய்யுமாறு பிரயத்தனிக்கும்படி பிரார்த்தனை புரிகின்றோம்.

மேலும் இளவரசியார்க்குத் திருஷ்டி கழித்தல், மந்திரம் போடுதல், தூபங்காட்டல் முதலிய செய்கைகளையெல்லாம் கூடியவரை சுருக்கிவிடவேண்டும். இதனால் வேல்ஸ் இளவரசிக்கு இந்நாட்டு மாதர்களின்மீது அன்பு அதிகமாகக்கூடுமென்றாலும் இச்செய்கைகளால் அவருக்கு இத்தேச ஸ்திரீகளின் மீதுள்ள மதிப்பு மிகக் குறைந்து போய்விடுமென்பதில் சந்தேகமே கிடையாது.

ஆதலால் "நல்வரவு பத்திரிகை படித்தல்" "மாலை புனைதல்" முதலிய சில செய்கைகளோடு உபசாரங்களைச் சுருக்கவேண்டுமே யல்லாது பம்பாய் ஸ்திரீகளைப்போல வரம்பு கடந்து போய் விடலாகாது.

## முடிவுரை.

சென்னை மாதர்கள் பம்பாய், கல்கட்டா முதலிய நகரத்துப் பெண்களைக் காட்டிலும் நாகரிகத்திலே குறைந்தவர்களென்று பலர் நம்புகின்றார்கள். இப்போது வேல்ஸ் இளவரசியை உபசரிக்கும் முறைமையினாலும், அவருக்கு ஞாபகச்சின்னம் மேற்படுத்துவதில் காண்பிக்கும் யூகத்தினாலும், சென்னை மாதர்கள் தாம் மற்றைப் பகுதியிலுள்ள ஸ்திரீகளைக் காட்டிலும் சிறந்தவர்களென்று ஸ்தாபித்துக்கொள்வார்களென யாம் நம்புகின்றோம். இதற்கு முன்னமேயே சென்னை ஆசாரத் திருத்தச் சங்கத்தாரி (Hindu Social Reform Association)ன் மூலமாக இந்நகரில் ஓர் "மாதர் ஹைஸ்கூல்" ஸ்தாபிப்பதற்கு ஒரு கனவான் எண்ணங்கொண்டிருப்பதாக நாமறிவோம். அக்கனவான் இந்நற்றருணத்தை வீணாக்காமல் பார்த்துக்கொள்ளுமாறு விரும்புகின்றோம்.

இத்தேச எதிர்காலச் சக்ரவர்த்திக்கும், "சக்ரவர்த்தினி"க்கும் எமது மனப்பூர்வமாக நல்வரவு கூறுகின்றோம். ஸ்வாகதம்!

பத்திராதிபர்.

## சந்திரமதி.

மூன்றும் அத்தியாயம்.
(முன் தொடர்ச்சி.)

குரு.—குழந்தாய்! நான் வருவதைக்கூட கவனியாமல் நீ அந்தப் படத்தை எவ்வளவோ ஆவலாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறாயே; அதில் உன் மனதைக் கவரும்படியான விசித்திரம் என்ன இருக்கின்றது?

சந்திர.—இந்தப் படத்திலுள்ள சரஸ்வதி விக்கிரகம் பார்ப்பதற்கு நேர்த்தியாகவே யிருந்தபோதிலும், அவள் கரத்திலிருக்கும் தாமரைப் புஷ்பத்தைப்பார்த்த பிறகு என் மனது வேறிடம் செல்லாமல் எத்தனை நாழிகை பார்த்தாலும் ஆவல் அடங்காமலிருக்கிறது.

குரு.—நீ இதுவரையும் எப்பொழுதும் பார்த்தறியாத அந்தத் திவ்ய சுந்தர விக்கிரகத்தைக் காட்டிலும், பிரதி தினமும் உன் கையில் விளங்கிக்கொண்டிருக்கும் தாமரைப்பூ உனக்கு இவ்வளவு விந்தையாகத் தோன்றினதற்குக் காரணமென்ன?

சந்திர.—இது பலகையின் மேல் எழுதப்பட்டதாயினும் உண்மையான தாமரைப் பூவை மறக்கடிக்கிறது. இதோ என் விளையாட்டுக்காக வேலைக்காரப் பெண் குளத்திலிருந்து கொய்து கொண்டுவந்த இந்தத் தாமரைப் பூவை போலவே இதன் இதழ்களுங்காணப்படுகின்றன. இவ்வளவு நேர்த்தியாயும் சாதுரியமாயும் வரைந்தச் சித்திரக்காரனுடைய திறத்தை நான் என்னென்று புகழ்வேன்?



குரு.—இதனிடம் உனக்கிவ்வளவு ஆசை யுண்டாவதற்கு உண்மையான தாமரைப் பூவைப்போல இருப்பதுவே காரணமென்று நீ இப்பொழுது சொல்லுகிறாய் அல்லவா? ஒரு பொருளை முழுவதும் ஒத்திருக்கிறதென்ற காரணத்தினாலேயே இது அவ்வளவு மெச்சிக் கொள்ளத் தக்கதாயிருக்கும் பொழுது, முதற் பொருளைக் கொண்டாடாதிருப்பதும் அதைச் செய்த திவ்விய சித்திரக்காரனுடைய சக்தியை வியக்காதிருப்பதும் மிக்க விந்தையாயிருக்கின்றது.

சந்திர.—நான் இப்பொழுது முடித்துக் கொண்டிருக்கும் இத்தாமரைப் பூவும் ஒருவரால் செய்யப்பட்டதுதானோ?

குரு.—இந்தப் படத்திலுள்ள புஷ்பம் யாராலாவது எழுதப்பட்டதா? அல்லது அதுவே தனியாய் உண்டாயிற்றா?

சந்திர.—இதை எழுதினவர் இன்னார் என்று எனக்குத் தெரியாமற் போனாலும், இது ஒருவரால் வரையப்பட்டுத் தானிருக்கவேண்டு மென்று மாத்திரம் எனக்குத் தெரியும். இதை எவரும் எழுதி யிராவிட்டால், இம்மலர் இந்தப் படத்தில் இருக்கவே இராது.

குரு.—நீ கூறிய விடை மிகப் பொருந்தியிருக்கிறது. ஒருவர் செய்தாலொழிய ஒரு பொருள் இராது என்பதை நீ யறிந்ததாக உன் பேச்சால் ஏற்படுகின்றது. அதே காரணத்தினால், இத்தாமரையை யொருவர் செய்யாதிருந்தால், இதுவும் இல்லாமலே போயிருக்கும்.

சந்திர.—அப்படியானால், இதை யார் செய்தாரோ, அவரை எனக்குக் காண்பிக்கிறீர்களா?

குரு.—அம்மகானுபாவர் நம் கண்களுக்குப் புலப்படுகின்றவர் அல்லர். அப்படி காணப்படாதவரா யிருந்தாலும், அவர் இப்பொழுது இங்கிருந்து நாம் பேசுகிற பேச்சுகளைக் கேட்டுக்கொண்டே யிருக்கிறார். அவர் இல்லாத விடம் எங்கும் இல்லை. அவர் படைத்த பொருள்கள் எல்லாம் எவ்விதத்திலும் சிறந்தவை; அவரே ஸர்வேசுவரன். நாம் செய்யும் பொருள்கள் எவ்வளவு சிறந்திருப்பினும் அவர் இயற்றிய வஸ்துக்களின் கோடியில் ஒரு பங்குக்கும் ஈடாகா. இப்படத்தில் வரையப்பட்டுள்ள இந்தத் தாமரை எவ்வளவு மனோஹரமா யிருப்பினும், கடவுளால் படைக்கப்பட்ட இவ்வியற்கைத் தாமரைக்கு எவ்விதத்திலும் சமானமாகமாட்டாது. வர்ணத்திலும் உருவத்திலும் சிறிது ஒத்திருந்தாலும், அதனிடத்துள்ள குளிர்ச்சியும், மென்மையும், நறுமணமும், மகரந்தமும் இதற்கெங்கிருந்து வரும்? இதை நாம் சும்மா பார்த்து சந்தோஷிக்க வேண்டியதேயன்றி, அதைப்போல் இது கூந்தலில் அணிந்து கொள்வதற்காவது, மருந்து வகையில் உபயோகிப்பதற்காவது பயன் படுமா? இவ்வாறு நமக்குப் பேருபகாரமாகுமாறு எல்லாவற்றையும் படைத்த கடவுளின் விசித்திர சிருஷ்டியைக் கண்டு வியந்து நாம் அவரிடத்தில் அன்பும் நன்றியறிதலும் பாராட்டுதல் வேண்டும்.

சந்திர.—தாங்கள் அருளிச்செய்த கடவுளென்னும் திவ்விய சித்திரகாரன் செய்த பதார்த்தங்கள் இன்னும் எவை எவை?

தை வீணே கழித்துக் கெட்டனே. ஆகையால் நான் சொன்ன மொழிகளைக் கவனித்து நடக்கவேண்டும். சுந்தரியை இன்னும் இரண்டு வருடம் மணம் செய்யாது வைத்திருப்பேன். நீ அதற்குள் நல்நெறியைக் கடைப்பிடித்து விருத்தியடையாவிடின் சுந்தரியின் மணத்தை வேறொருவரன் தேடிநடத்துவேன்." என்றனர் கோபத்துடன் பேசிய இம்மொழிகளைக் கேட்ட சிவராமன் அத்தையிடத்தும் தன் அருமைக் கண்மணியாம் சுந்தரியிடத்தும் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினான். இப்படி புறப்பட்டு வ ம்போது சுந்தரி மனக்கவலை கொண்டவளாய்ச்சிவராமனைப் பார்த்து "நீங்கள் ஜயமுடன் சுகஜீவியாய் வருவதை அன்புடன் பார்த்திருக்கின்றேன்" என்று தலை குனிந்து வணங்கிச் சிவராமன் போவதை உற்று நோக்கிக் கொண்டிருந்தனள்.

பிறகு சிவராமன் தன் தாயாரிடத்தே வந்து சில பிராமணர்கள் காளஹஸ்தி ராஜ்ஜியத்துக்குப் பிரயாணம் கிளம்புகிறார்கள் என்றும், அவர்களோடு தானும் போய்ப் பொருள் ஈட்டி வருவேன் என்றும், தான் திரும்பி வருங்காறும் தன் அன்னை ஜாக்கிரதையாய்த் தன்னையும் தங்கையையும் காத்துக்கொள்ள வேண்டும் என்றும், தான் இரண்டு வருஷங்களில் வந்து சேருவேன் என்றும் சொல்லி வணங்கி அவளது ஆசிர்வாதத்தைப் பெற்று நான்கு பிராமணர்களோடு வழி நடந்தனன். இவர்கள் செங்கற்பட்டு தாண்டிச் சிறிதுதூரம் போகவே ஒரு பெருங்காடு தோன்றிற்று. சுமார் ஐந்து அல்லது ஆறு மைல் தூரத்துக்கு ஜனப்பழக்கம் ஒன்றும் காணப்படவில்லை. வழி நடையிலே ஒரு மண்டபம் ஒன்று காணப்பட்டது. அதன் முன்னிலையில் ஜலம் மிகவும் வற்றிய கிணறு ஒன்று இருந்தது. கொடிய கோடைகால மானதால் பச்சைப்பயிர்களாவது கிழங்குகளாவது காணப்படவில்லை. ஐந்து பிராமணர்களும் இவ்விடம் சேர்ந்து இங்கே பிழைக்க வழியில்லை யென்றும் தாங்கள் நிற்காது வழிநடக்க வேண்டும் என்றும் எண்ணம் கொண்டனர். ஆனால் சிவராமன் மடத்துட் புகுந்து ஆங்கு நோயால் வருந்திப் படுத்திருக்கும் இருவர் அதிபரிதாபமான நிலையைக்கண்டு 'ஐயோ, பாவம்! இவர்களுக்குக்கடவுள் இட்டவினைப் பயனைப் பார். உற்றோர் பெற்றோர் இல்லாமே வனத்துள்ள ஒரு சாவடியிலே தம் கதிகளையும சொல்ல வழியில்லாமே, மயங்கிக் கிடக்கும் இவர்களின் நிலைமையின் கதி என்னே? இவர்கள் எச்சமயத்தாரே ஆயினும் சரி, நான் கைவிட்டுப் போவது கடமை அன்றாகும்.' என்று மனத்தை திடம் செய்துக்கொண்டு தன்னோடு வந்த வேதியர்களுக்கு இச்சமாசாரத்தை உரைத்தனன். அவர்கள் தாங்கள் தங்க மாட்டோம் என்றும், சிவராமன் தங்குவதாய் இருந்தால் அவர்களை விட்டு நிற்க வேண்டும் என்றும் சொல்லி பிரயாணம் செய்தார்கள். இப்பரிதாபநிலையை உணர்ந்த சிவராமன் அங்கேயே தங்கிக் கடவுளின் அருளை வாழ்த்தி நோயாளர்களிடம் சென்றனன். ஒருவன் தன் போர்வையால் நன்றாய் மூடிக்கொண்டு உறங்கி நிலை தெரியாதே கிடக்கின்றான். மற்றவனோ ஒரு விவரமும் தெரியாதே 'தண்ணீர்' 'தண்ணீர்' என்று கதறுகிறான். அண்மையில் யாரும் இல்லாத இக்காலத்திலே அதி துணிகரமும் உலகானுபவமு முள்ளவர்களும் அஞ்சுவார்கள் என்றால், ஒரு அநுபவமும் அறிந்திராத சிவராமன் மயங்கித் தயங்கினன் என்பது அதிசயமோ? [இன்னும்வரும.]

எம். எஸ். நடேச ஐயர் B. A.



அன்பு மிகுதியோடு புன்னகை புரிந்தாள். அவளது மனோகர வடிவும் இளமையும் அவள் தனக்கு செய்த நன்றியும், அவன் மனத்தே யூன்றி வேர்கொண்டன.

மகமதிய விஜயனோ அவள் மிசையாங்கே அடங்காக்காதல் கொண்டான்.

* "முதற் காட்சியினே மூளாக் காதலோர், எவரே காமத்தியன்றார்" என்பது அனுபவ சித்தமன்றோ?

அவளது களங்கமில்லாத முக சந்திரன் முன்னர், அப்போர் வீரன் நெஞ்சம் சந்திரகாந்தக் கல்லாயிற்று.

"என்னபேரழகு! என்ன கவுரவம்! என்ன வாழ்க்கை! இந்த ரஜபுத்ர கன்யாமிருதத்தை மணம்புரிந்து அவளுடன் அனவரதம் ரமித்துக்கொண்டு நமது தகப்பன் வீட்டிலேயே இருப்பதுநன்று. அக்பர் சக்ரவர்த்திக்கு நம்மைப்போலாயிரம் துணை மன்னருண்டு. நாம் போய் என்ன ஆய்விடும்? அதனால் அவர் நமக்குக் கொடுக்கும் சிறப்பும், சன்மானமும் ஸ்தோத்திர மொழிகளும் என்ன பெறும்? இப்போது அப்போர்ப் பெருமைகளுக்காக நாம் போவோமானால் இனி இவளை எங்கே பார்ப்பது? போரில் நாம் மடியாது பிழைப்பது தான் என்ன உறுதி?" என்று பலவாறு யோசித்தான்; அப்பஸ்கான். "ஆகா! என்ன யோசிக்கிறோம்! அக்பர் பாதுஷாவின் கொடிக்கீழ் நின்று போர் புரிந்து விஜய லக்ஷ்மியுடன் திரும்பி வருவான் மகனென்று கருதியிருக்கும் நம்தந்தையும் நம் ஊராரும், இடைவழியில் பாதுகாப்பாளரில்லாது வருந்தி நின்ற ஓர் ரஜபுத்ர சிறுமியைத் திருடர்களினின்றும் காப்பவன் போன்று தான் அபகரித்து வந்துவிட்டான், என்று தெரிந்தால் நம்மை எவ்வளவு இ[illegible] புரிவார்கள்? ஆதலால் இக்கன்னியை அவள்போமிடம் போக்கிவிட்டு நாம் போர்க்குச் செல்வதே தகுதியா"மென மீட்டும் அவனுளம் திரிந்தது. இவ்வாறு பலவகை கருதி, கடைசியாய்ப் போர்க்குப்போவதே நன்றென நிச்சயித்துக் கொண்டான்.

அதனுள் வழிப்பறிக்காரரை யஞ்சி ஓடிய ரஜபுத்ரக் குதிரை வீரர்கள் தாம் ஒளிந்துகொண்டிருந்த இடங்களினின்றும் மீண்டு வந்து அப்பஸுக்கு நன்றி கூறிச் சிவிகையை எடுத்துக்கொண்டு சென்றனர். துருக்க வீரன் தானும் அவ்வழியே போக வேண்டியிருந்ததால் சிறிது தூரம் சிவிகையுடன் சென்றான். ரஜபுத்திர குலத்தவர்செய்த தவத்தின் விளைவாகிய துளசிபாயி. வழிப்பறிக்காரர் திரையிலே கிழித்த துவாரத்தின் வழியாக இவனை நோக்கிக் கொண்டேபோயினள்.

சற்று நேரத்தில் அப்பஸ்கான் பிரிந்து செல்லவேண்டிய இடம் வந்து விட்டது. ததும்பித் தத்தளித்துத் தடுமாறுகின்ற குரலுடன் "ரஜபுத்ர குலவிளக்கே! யான் போய் வருகின்றேன்" என அப்பஸ்கான் கூறலும், துளசி, தனது ஜாதி

* முதலில் பார்த்தவுடனே காதல் கொள்ளாமல் யாவர்தான் பிறகு காதலுடையவர்[illegible] என்பது பொருள்.

"Who ever loved that loved not at first sight?" Shakerpeare.

யாசாரத்துக்கு விரோதமாக திரையை நீக்கிக்கொண்டு அற்புத ஒளி வீசிய விழிகளுடன் அவனை நோக்கித் தன் விரலிலிருந்த ஓர் வயிரக் கணையாழியை எடுத்து "இதைக் கருணைபுரிந்து வாங்கிப் போவீராக" என்றாள். அவனும் அதை மிகவும் பத்தியுடன் வாங்கி அதிலே பதித்திருக்கும் மணிகளுடன் தனது உயிரையும் பதிப்பான்போல முத்தமிட்டுத்தன் விரலிலணிந்து கொண்டான். இதைப் படிப்பவர்களே! அளவு கடந்த காதலுடைய ஸ்திரீ புருஷர்கள் தாம் இனிமேல் ஒருவரை யொருவர் எப்போதும் பாரக்கப் போவதில்லை யென்ற நிச்சயத்துடன் பிரியுங் காலத்து அவர்கள் கண்ணோடு கண் பொருந்தி நோக்குவதை யான் உங்களுக்கு வருணித்துக் காட்ட வல்லனல்லேன்.

சரீர வீட்டிலிருக்கும் சீவன் தன்வடிவை வெளியே காட்டுவதற் குரிய சன்னல்களென்று கண்களைச் சொல்வார்கள். ஆயின் இப்போது இந்த அப்பஸ்கானும் துளசியும் ஒருவரை யொருவர் நோக்கும்போது அச்சன்னல்களின் வழியாக அவர்களிருவரின் உயிர்களும் கீழே குதித்துவிடத் தெரிந்தன. அவ்வண்ணம் சற்றுநேரம் பார்த்திருந்த பின்பு அவர்கள் பிரிந்து விட்டனர்.

அப்பஸ்கான் தன் படைகளுடன் போரின் மாண்புகளைக் கவரும் பொருட்டேகினன். துளசியோ தான் இதுவரை கண்டறியாத ஓர் சிறுவனை மணந்து அவனுக்கு மனைவியாக இருந்து தன் வாழ்நாள் கழிப்பச் சென்றாள். ஆனால் இந்நாள் அவளது உயிரைக்காத்து நெஞ்சை கொள்ளைகொண்ட போர் வீரனை ஒருபோதும் மறக்கமாட்டா ளென்பது திண்ணம். அக்குமரனோ தான் பிறந்ததுதொடங்கி முதன்முதற் காதலித்த ரஜபுத்ர ஜோதியை சுகத்திலும் துக்கத்திலும் தன் மனக்கோயிலிலிருந்து நீக்கமாட்டான்.

(அடுத்த முறையில் இச்சிறுகதை முடிவு செய்யப்படும்.)

# "வந்தே மாதரம்"

இப்போது பெங்காள மாகாணத்திலிருக்கும் ஒவ்வொரு ஹிந்துவாலும் ஸாமகீதத்தைப் போல அத்தனை பக்தியுடன் பாடப்பட்டு வருகின்ற "வந்தே மாதரம்" என்ற திவ்ய கீதத்தை நான் மொழி பெயர்க்கத் துணிந்தது, கர்வங்கொண்ட செய்கை யென்று பலர் கருதக்கூடும். மேற்படி கீதமெழுதிய பெங்காளி வித்வானாகிய பங்கிம் சந்திர பாபவின்தைவிகச் சொற்களைத் தமிழ்ப்படுத்த எனக்குப் போதிய வன்மை யில்லாவிடினும், தமிழ் நாட்டாருக்கு அச்செய்யுளின் பொருளுணர்த்த வேண்டுமென்ற ஆசைப் பெருக்காலேயே யான் இதனைத் துணிந்திருக்கின்றேன். இவ் "வந்தே மாதரம்" என்ற கீதம் பங்கிம் சந்திர சாடர்ஜியின் நூல்களிலே மிகச்சிறப்புக் கொண்டதாகிய "ஆனந்த மடம்" என்ற (நாவல்) கதையினிடையே அமைக்கப்பட் டிருக்கின்றது.



"ஆனந்த மடம்" என்ற கதையானது உண்மையாகவே நடந்த சரித்திரத்தைத் தழுவியது. 'வாரன் ஹேஸ்டிங்ஸ்' கவர்னர் ஜெனராலாயிருந்த காலத்தில் சன்னியாசிகள் சேர்ந்து நடத்திய ஓர் பெரும் கலகத்தைப்பற்றியே மேற்படி நூல் விரித்துக் கூறுகின்றது. பெங்காளத்தில் 1774-5-வருஷத்தில் ஓர் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. அதற்கப்பால் அநேக ஆயிரம் சன்னியாசிகள் ஒன்றாய்க்கூடி அன்னியர்களைத் தமது தாய்ப்பூமியிலிருந்து ஒழித்துவிட வேண்டு மென்னும் ஒரே நோக்கத்துடன் கலகஞ் செய்யத் தொடங்கினார்கள்.

இவர்கள் ரகசியமாகச் சந்திக்கும் பொருட்டு ஆள் நுழையக்கூடாத கருங்காட்டில் "ஆனந்த மடம்" என்பதோர் இடம் வைத்திருந்தார்கள். இவர்கள் மகமதியப் படைகளைப் பல இடங்களில் தோல்வி செய்ததுமன்றி ஓர் ஆங்கிலேயப் பட்டாளத்தையும் முறியடித்தார்கள். எனினும் பிரிடிஷார் விடாமல் தாக்கியதின் பேரில் இந்த வீர சன்னியாசிக் கூட்டத்தார் கடைசியாகப் பிரிந்து போயினர். இந்த வீரத் துறவிகளில் ஒருவராகிய பாபா நந்தர் "வந்தே மாதரம்" என்ற ஆரம்பங்கொண்ட அரிய கீதத்தைப் பாடியதாக, பங்கிம் புலவர் தமது நூலில் அமைத்திருக்கின்றார்.

25-வருஷங்களுக்கு முன் இவர் இந்தப் பெருநூலைப் பிரசுரித்தபோது அந்த கீதத்தின் கண்ணே பெரும் பகுதி சம்ஸ்கிருதமாகவே யிருந்தபடியால் அவருடைய நேயர்கள் பலர் அதைக் குறைகூறினார்கள். ஆனால் அம்மஹான் அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பொருட்டாக்க வில்லை. எழுதி 25-வருஷங்களுக்குள்ளாக மேற்படி திவ்யகீதம் பெங்காளத்து ஜனங்க ளெல்லோருடைய நாவிலும் இருக்கும் மென்மையை அந்தக்கவி யாசர் அறிந்திருந்தார் போலும்! அதிலிருக்கும் சமஸ்கிருதப் பதங்கள் வெகு எளிதாயிருப்பதால் எந்த பெங்காளிக்கும் வெகு சுலபமாகப் பொருள் விளங்கிவிடும். அதுவுமன்றி அந்தக்கீதமானது பழமையில் முன்னோர்களால் வழங்கப்பட்டு வந்ததும் ஒப்பற்றதுமான சம்ஸ்கிருத பாஷையோடு தற்காலப் பாஷை கலந்து அமைக்கப்பட்டிருப்பதால் பூர்வ காலத்துடன் தற்காலத்தை இணைப்பதாக இருக்கின்றது. தாய்த் தேசத்தை அந்தப்பாட்டில் தாயென்று வழங்கியிருப்பதுவும் பொருத்த முடைத்தே.

கீழ பிரசுரித்திருக்கும் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு பெங்காளி கீதத்திலிருந்து சில இடங்களில் மாறுபடுகின்றது. அவ்வாறு மாறுபட்ட இடங்களில் என்னால் கூடிய அளவு பெங்காளிச் சொற்களை யனுசரித்தே தமிழ் மொழி பெயர்ப் பெழுதியிருக்கின்றேன். எனது தமிழ் எத்தனை குறைவுபட்டிருந்த போதிலும் தெய்வப் புலவராகிய பங்கிம் பாபுவின் மதிப்பைக் கருதித் தமிழுலகத்தார் இதனை நன்கு ஆதரிப்பாரென்ன நம்புகின்றேன்.

# VANDEMATARAM.

I.

HAIL MOTHER.

Sweet Thy water, Sweet Thy fruits,
Cool blows the scented south wind.
Green waves thy corn.
Hail Mother! (Vande Mataram)

II.

Land of the glad white, moon-lit nights.
Land of trees with flowers in bloom.
Land of Smiles, land of voices sweet,
Giver of joy, giver of desire.
Vande Mataram!

III.

Seventy million * voices resounding,
Twice seventy million arms in resolve uplifting,
Dare any call Thee weak?
Obeisance to Thee! O Thou, mighty with multiple might,
Redeemer Thou, Repeller of the Enemy's hosts,
Vande Mataram

IV.

In Thee all Knowledge, Religion Thou,
Thou, the Heart, Thou, the seat of life,
The "breath of life in the flesh" Vande Mataram!

V.

O Mother, the strength of this arm Thou,
Thou, the Devotion in the heart,
Thine, the Image consecrate,
From temple to temple. Vande Mataram!

VI.

The wielder of ten arms, Durga, Thou,
Thou, the Goddess of wealth, bowered in the lotus,
Thou, the Muse dispensing Wisdom.
Obesance to Thee! Vande Mataram!

VII.

Salutations to Thee! Holder of wealth, peerless
With thy limpid water and luscious fruit,
Mother? Hail, Mother!
Verdant. Artless, Sweet—Smiling,
Radiant, Sustaining, Nourishing.
Mother! Hail, Mother! Vande Mataram!

* When Bankim wrote this song the population of Bengal was only 70 millions. In the Tamil rendering, this has been changed into "300 million" so that the song might apply to our *Bharatmata* (Mother-India) instead of merely a single Province.



வெளியிடுதற் கிடமில்லாத இவ்விஷயத்திற்குத் ஐரோப்பா.

## பொது வர்த்தமானம்.

### மாதர்களின் சுதந்திரங்கள்.

ஸர் C. டில்க் பார்லிமெண்டில் மாதர்களின் வோட் சுதந்திர மசோதா கொண்டுவரப்போகின்றார். எல்லா ஸ்திரீகளுக்கும் எலெக்ஷன் சுதந்திரங்களுண்டென்பதாகவும், பார்லிமெண்டின் இரண்டுசபைகளிலும் ஸ்திரீகள் மெம்பர்களாயிருக்கலாமென்பதாம் மேற்படி மசோதாவின் கருத்தாகும்.

### மலையாளத்து நம்பூத்ரிகளுக்குள்ளே ஓர் சீர்திருத்தம்.

சீர்திருத்த வுணர்ச்சி யென்ற மலையாளத்து நம்பூத்ரிகளை எட்டிவிடுமானால் பிறகு தென்னும் பிழைத்துவிட்டதென்று சொல்லலாம். ஏனென்றால், ஞானமற்ற, மூடத்தனமான, மூடபக்திப்பிடிவாதத்திற்கு நம்பூத்ரிக் கூட்டத்தாரே முக்கியப் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். இவர்களது மூட ஆசாரங்கள் பலவற்றுள்ளே ஓர் குடும்பத்திலே தமையன் மட்டிலுமே விவாகம்செய்துகொள்ளலாம், மற்றவர்கள் செய்துகொள்ளக்கூடாதென்பது தொன்றாகும். மற்ற இளையசகோதரர்கள் அனைவரும் பொதுவாக "நாயர் ஸ்திரீகளுக்கு முண்டுகொடுத்தல்" என்ற துன்மார்க்கப் பிரவிருத்தியை அனுசரிப்பது வழக்கம். இப்படியிருக்க சமீபத்திலே தென்திருவாங்கூரிலே ஓர்போத்தி (நம்பூத்ரி) யின் இல்லத் (குடும்பம்) திலே இளைய சகோதரனொருவருக்கு விவாகம் நடத்தப்போகிறதாக வர்த்தமானம் வந்திருக்கின்றன. இதை முக்கியமான சீர்திருத்தமென்றே சொல்லவேண்டும்.

### ஓர் ஆங்கிலேய வேதாந்தினி.

ஹிந்துக்களுக்கே ஹிந்து சாஸ்திரப்பிரசங்கம் செய்யும்பொருட்டு இந்தேசத்திற்கு வந்திருக்கும் ஐரோப்பியமாதர் கூட்டத்திலே இப்போது மிஸஸ் ஸ்டானனர்டும் சேர்ந்துவிட்டாள். இம்மாது புநாவிற்கு வந்திருக்கும் ஸ்வாமி ஆத்மாநந்தருவின் சிஷ்யபெண் என்பதை முன்னமே நேயர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம். மிஸ்டர் திலகரின் உதவியின்பேரில் இம்மாது புநாவிலே பல உபந்யாசங்கள் நடத்தினாள். மிஸஸ் பெஸாண்ட் அம்மையைப்போல வேதாந்தம் மட்டிலும்போதியாமல் சகோதரி நிவேதிதை (Miss Noble)யைப்போலவே மிஸஸ் ஸ்டானனர்டும் தேசாபிமான வுணர்ச்சியையும் தூண்டுவது பற்றி மகிழ்ச்சி யடைகின்றோம்.

### மஹாகாளி பாடசாலை.

கல்கத்தாவில் கன்னியர்களின் படிப்பின்பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மஹாகாளி பாடசாலையில் 23-ம் தேதி மாலையன்று "பிரைஸ்" கொடுக்கும் விசேஷம் நடைபெற்றது. கன்னிகைகளது சன்மானங்கள் லேடி மிண்டோவினால் கொடுக்கப்பட்டன. வைதிக நெறி மாறாமல் இப்பாடசாலையில் சிறுமிகளுக் [illegible] கல்வி பயிற்றப்படுகின்றது. இது 1893-ம் வருஷத்தில் மாதாஜி மஹாராணி [illegible] தபஸ்வினியால் ஸ்தாபனம் செய்யப்பெற்றது. ஆரம்பத்தில் சாதாரணமாயிருந்த போத[illegible] பாடசாலை நாளுக்கு நாள் பெருமை மிகுந்து வருகின்றது. சென்ற வருஷ இனிய [illegible]ல் சம்பளம் கொடாமல் படித்துக்கொண்டிருந்த சிறுமிகளின் தொகை [illegible]மை [illegible]ப்பாடசாலைக்கும் பெங்காள மாகாணத்தில் பல இடங்களிலே கிளைகள் இனியபு[illegible]ன்றன. குழந்தைகளுக்கு லேடிமிண்டோ மெடல்கள் கொடுக்கும்போது [illegible]ரித்தெ[illegible] தபஸ்வினியும் வந்திருந்து சிறப்பித்தார்.

### விடு கதைக்கு விடை.

பெங்கா[illegible] ரள மாகாண[illegible] டிசம்பர் சந்திகை 120-ம் பக்கத்தில் எஸ். ஞான வடிவுடையம் ள் ஜன[illegible]பூதியிட் 6-வது நெம்பர் விடு கதைக்கு விடை.

மயில்,

[illegible]ருக்மணியம்மாள்.

## "வந்தே மாதரம்."

(1) ஆரியமென்ற பெரும்பெயர் கொண்டவெம்
    மன்னையின் மீது திகழ்
அன்பெனு மென்கொடி வாடிய காலை
    யதற்குயிர் தந்திடுவான்
மாரியெ னும்படி வந்து சிறந்தது
    வந்தே மாதரமே.
மாணுயர் பாரத தேவியின் மந்திரம்
    வந்தே மாதரமே.
வீரிய ஞான மரும்புகழ் மங்கிட
    மேவி நலாரியரை
மிஞ்சி வளைந்திடு புன்மையி ருட்கணம்
    வீவுற லங்கமகா
வாரிதி மீதிலெழுந்த இளங்கதிர்
    வந்தே மாதரமே.
வாழிய வாரிய தேவியின் மந்திரம்
    வந்தே மாதரமே.
(2) காரடர் பொன்முடி வானி மயந்தரு
    கங்கை வளம் பெறினும்
*கன்னியை யங்கொரு தென்றிசை யார்கலி
    காதல் செயுமிடையும்
வீரர்கள் மிஞ்சி விளங்கு புறுமுதல்
    வேறுள ஊர்களிலும்
விஞ்சை யெனும்படி யன்புடன் யாரும்
    வியந்திடு மந்திரமும்;
பாரத தேச விரோதிகள் நெஞ்சு
    பதைத்திடு மந்திரமும்,
பாதகரோ டினு மேதக வுற்றிடு
    புண்ணியமா மந்திரமும்,
வாரமுறுஞ் சுவையின்னமு துங்கனி,
    வான மருந்தெனவே
மாணுயர் பாரத தேவி விரும்பிடும்
    வந்தே மாதரமே.

C. சுப்பிரமணிய ப

* கன்னியாகுமரி.

## OPINIONS.

ரங்கூன் சுதேச பரிபாலினி கூறுகின்றது.

சக்ரவர்த்தினிப் பத்திரிகையின் ஜனவரிமாதப் பிரசுரம் நமக்குவந்திரு ஒவ்வொரு தடவையிலும் இதில் எழுதப்படும் வியாசங்கள் ஒன்றையொன் பவையாயிருக்கின்றன. இந்தப் பிரதியில் பத்திராதிபரால் எழுதப்பட் "பாரத குமாரிகள்" என்ற வியாஸம் படிப்போர் கருத்தைக் கவருந்தன் வமைந்திருக்கின்றது. நம் ஜென்மபூமியாகிய பரதகண்டமாதாவின் யும், அந்நகைய துக்கத்திகாரணங்களையும் பற்றி எழுதியிருப்பவை இருக்கின்றது. சென்னையில் இளவரசரின் வருகையில் நடந்த முழுவ எழுதப்பட்டிருக்கின்றன. "ராமதிலகம்" "சந்திரமதி" "ஞானசி பவத்தின் தொடர்புகளும், இன்னும் பல அரிய விஷயங்களும் காணப்படுகின் றன.



## வந்தே மாதரம்

I

இனிய நீர்ப்பெருக்கினை, இன்கனி வளத்தினை,
தனிநறு மலயத் தண்காற் சிறப்பினை,
பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை! போற்றிதாய்! (வந்தே மாதரம்)

II

வெண்ணிலாக்கதிர் மகிழ்விரித்திடு மிரவினை!
மலர்மணிப் பூத்திகழ் மரன்பல செறிந்தனை!
குறுநகையின் சொலார் † குலவிய மாண்பினை!
நல்குவை யின்பம், வரம்பல நல்குவை! வந்தே மாதரம்!

III

* முப்பது கோடிவாய் (நின்னிசை) முழங்கவும்
அறுபது கோடி தோளுயர்ந் துனக்காற்றவும்
"திறனிலாள்" என்றுனை யாவனே செப்புவன்!
அருந்திறலுடையாய், அருளினை, † போற்றி!
பொருந்தலர் படைபுறத் தொழித்திடும் பொற்பினை, வந்தே மாதரம்!

IV

நீயே வித்தை, நீயே தருமம், †
நீயே யிதயம், நீயே மருமம், †
உடலகத்திருக்கு முயிருமன்னீயே. வந்தே மாதரம்!

V

தடந்தோ ளகலாச்சக்தி நீ! அம்மே,
சித்தநீங்கா துறு பத்தியு நீயே
ஆலயந்தோறு மணிபெற விளங்கும்
தெய்விக வடிவமுந் தேவியிங் குனதே! வந்தே மாதரம்!

VI

ஒருபது படைகொளு முமையவளீயே.
கமல மெல்லிதழ்களிற் களித்திடுங் கமலை நீ!
வித்தை நன்கருளும் வெண்மலர்த் தேவி நீ! வந்தே மாதரம்!

VII

போற்றி! வான் செல்வீ, புரையிலை † நிகரிலை,
இனிய நீர்ப் பெருக்கினை, இன்கனி வளத்தினை.
சாமள நிறத்தினை † சரளமாந் † தகையினை,
இனியபுன் முறுவலாய்! இலங்குநல் லணியினை,
தரித்தெமைக் † காப்பாய்! தாயே, போற்றி! வந்தே மாதரம்!

* பெங்காளி பாஷையிலே 7-கோடி என்றே கூறியிருக்கின்றது. ஆனால் அது பெங்காள மாகாணத்தை மட்டிலுமே குறிப்பிட்டது. 30-கோடி இந்தியா முழுமையின் ஜனத்தொகை.

† இக்குறிப்பிட்ட இடங்களில் ஆங்கிலமொழி பெயர்ப்பானது சிறிது மாறுதோற்றங் கொண்டிருப்பதால் பெங்காளிச் சொற்களைத் தழுவியே தமிழ் ...ப்பட்டிருக்கின்றது.

# பெண்கள்

## அறிவுத் திறமையிலே புருடரினும் குறைந்தவர்களா?

(ஸ்ரீமதி—N. ராகவாசாரியார் B. A.)

இப்பொழுது இத்தேசத்தில் பெண்கள் அறிவுத் திறமையில் புருடரில் தாழ்ந்தோர் என்பதைப்பற்றி எமக்கேனும் பெண்களுக்கேனும் ஐயமில்லை. என்றாலும் இத்தாழ்மைக்குக் காரணங்கள் எத்தனையோ அனேகர் கற்பிக்கின்றனர். அனேக நூற்றாண்டுகளாக மனிதனது அடிமையாக விருந்தமையின் அவரது இயற்கை அறிவுத்திறமையானது மிகுதற்கிட மில்லாமற் போயிற்றென்பவர் சிலர். எக்காலத்தும் அவருக்குக் கல்வி புகட்டாமையே அவரது இழிவுக்குக் காரணம் என்பார் சிலர். அன்றியும் அவருக்கு நம்முன்னோரால் ஏற்படுத்தப்பட்ட தருமங்கள் (Ideals) சிறப்பற்றன ஆகலின் இங்ஙனம் நேர்ந்துவிட்டதென்பார் வேறு சிலர், இயற்கையில் புருடரினும் பெண்கள் அறிவுத் திறமைகுன்றியவரா என்பது ஆராயக் கூடியவிஷயம். அவ்வாறு குன்றியவரென்பதே எமது கொள்கை.

பெண்களுக்குள் உயர்ந்த புத்தி கொண்டோர் ஒருவரும் இதுகாறும் உண்டாகவில்லை. பெருங் கவிகள் ஒருவரும் பெண்பாலருக்குள் கிடையாது. ஜனங்களை ஆளுந் திறன்படைத்தோர் அவர்க்குள் உலக சரித்திரத்தில் சிலரே விளங்குகின்றனர். உலகத்தை வெறுத்து வெளி மயக்கத்தைத்தள்ளி உட்பொருளாராய்ந்த தத்துவநூலறிஞர் அவருள் ஒருவரேனும் காண்கிலோம்.

புருடர்க்குள் உயர்ந்த கவிகளும், ராஜாங்கத்திற னமைந்தோரும், ஞானிகளும் உயர்குலத்திற் பிறந்து சர்வ சாதனமு மமைந்து வளர்ந்தவரல்லர். பர்ன்ஸ் (Burns) என்னும் கவிபோன்று உழுது வயிறு வளர்த்த வம்சத்திற் பிறந்தோரனேகர். இழிகுலத்தில் பிறந்த மகான்கள் எத்தனையோ பேருளர். மனித சரித்திரத்தை நோக்குமிடத்து மண்ணிலேயே மாணிக்க மிருப்பதுபோல இழிவான குலத்திலும், யாது சாதனமுமில்லாத விடத்திலுமேயே உயர் அறிவுடையோர் உண்டு என்று சாதிக்கத் துணியலாம். ஆனால் இவ்விஷயங்களில் பெண்களுக்குப் பரம்பரையான பயிற்சியில்லாமற் போய்விட்டபடியால் குறையுண்டாய் விட்டதென்று சிலர் கூறுவர்.

எனில் பெண்பாலார் எக்காலத்தும்பயின்று வந்த விடயங்களிலாவது மிக்க திறமுடையோராக விளங்குகின்றனரா? சங்கீத வித்வான்களவருள் ஒருவரேனும் உண்டா? சமீபகாலத்தில் தோன்றி விளங்கிய பட்டணம் சுப்பிரமணியய்யர், தியாகராயர், தீக்ஷிதர், சரப சாஸ்திரியார் என்பவர்களைப் போல ஒரு பெண்ணேனும் சங்கீதத்தில் தேர்ந்திராதது யாது காரணம் பற்றி? எக்காலத்தும் அவர் சமையல் செய்து கொண்டிருந்தது வாஸ்தவந்தானே. ஏன் அச்சமையலிலேனும் முதன்மை பெற்றாரில்லை? இயற்கையில் புத்திக் குறைவினாலே ய...



ஸ்திரீகளின் குணத்திலேயே அவருடைய அறிவு நிலமிகுதற் கிடமில்லாத மூலம் ஏதேனு முளதோ? அவரது தேக நிலையை ஆராய்ந்து இவ்வினாவிற்குத் தாங் கூறுதற்கு மனிதர் வல்லோரல்லர். எனினும் 100-வருடங்களாக ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களில் உயர்வாக விளங்கும் பெண்மணிகளின் குணாதிசயங்களை நோக்குங்கால் அவருடைய மேன்மையும், அவருடைய குறைவும் நன்கு விளங்கும். பெருங்கவிகளாகிய சிற்சில மாதர்களைத் தவிரப் பிறர் பெரும்பாலும் சாதாரணமான நாவல்கள் எழுதுவதிலேயே திறன் காட்டியிருக்கின்றனர். (Madame de Sevigne) போன்று கடிதம் எழுதுவதில் சிலர் முதன்மைபெற்றிருக்கின்றனர். மற்றும் அவர் கவிகளையே நோக்குமிடத்து உணர்ச்சி மிகுதியைக் காண்பிப்பனவாகவே உள்ளன. பெண்பாலார் முக்கியமாகப் படிக்கின்ற நூல்கள் உணர்ச்சிமிகுந்துள நாவல்களே. ஆதலின் பெண்பாலாது குணாதிசயம் தொடர்ந்து யோசிக்கும் திறமற்று இடை யிடையே புத்திசாதுர்யம் காட்டுதலே என்று சொல்லலாம். உணர்ச்சி மிகுந்தவரேயன்றி அவர் அறிவு மிகுந்தவரல்லர்.

செய்யுள் முதலிய இலக்கிய விஷயங்களிலே அவர்கள் காட்டும் தகுதியை அவர்கள் ராஜதந்திர விஷயங்களில் காட்டும் திறனுடன் ஒப்பிட்டுக் கூறலாம். அவரது ராஜதந்திர முறைமை அவர்களால் விரும்பப்படும் ஒருவனது கட்சியேயாகும். அவருக்கும் பெரியோர் வணக்கம் என்பது மிகுதியாக உண்டு. அவரது பெரியோர் வணக்கத்து முற்றிலும், அறிவுத்திறனும், சாமர்த்தியமும் மட்டுமே விக்கிரகங்களாக இரா. அனேக முறை அவரது விக்கிரகங்கள் மண்ணினால் செய்து வண்ணம் பூசினவையாயிருக்கும். ஆனால் அவற்றினடிக்கண் வீழ்ந்து மிக்க உணர்ச்சி காட்டுவர்.

இவையெல்லாம் நோக்கு மிடத்து தெய்வ சிருஷ்டியில் ஸ்திரீகளை ஆடவரினும் அறிவு குன்றியவராகவே ஏற்படுத்தியிருக்கிறதென யாம் கொள்ளுதல் தக்கது.

இதனால் யாம் நமது பெண்களறிவு மிகுதல் அசாத்தியம் என்றாவது, மிகுதலால் நன்மை விளையாதென்றாவது எண்ணியதாக நினைத்தல் கூடாது. தற்காலத்து எமது பெண்களறிவு மிகுவதைக் கண்டு ஆனந்திக்கிறோம். அவரறிவு மிகுவதால் இத்தேசத்துப் பெரியோர் மனமொன்றெண்ணுவதும் நாவொன்று பேசுவதும், செய்கை வேறொன்றாவதும், ஒழித்து எண்ணுவதைப் பேசுந் தைரியமும், பேசியதைப் பயிலுந் திறமுமுடையாராவரென எண்ணுகின்றோம்.

N. ராகவாச்சாரியார்.

# பெண்கள்.

## அறிவுத் திறமையிலே புருடரினும் குறைந்தவர்களா?

(இல்லை—S. S. பாரதி B. A.)

ஆடவர், மகளிர், தங்கட்குள்ள இயற்கை வேறுபாடுகள் பலவாம். அவற்றுள் "அறிவாலும் மங்கையர் புருஷர்க் கென்றும் பின்னிடைந்தவர்" என்றதோர் கொள்கை தோன்றி தொட்டுள்ளது. இங்கிதனுண்மை சிறிது விசாரிப்பாம்.

முதற்கண், இக்கொள்கையுடையார் தமது கொள்கையை நிறுவுமாறு:— பெண்டிர், புருஷர், இருவருக்கும் 'அறிவுடைமை' ஒரு விதமாயின், உலகில் பண்டைமுதலின் றளவு அறிஞர் தொகுதியில் ஆடவரே மிகுவதென்னை? அது மாத்திரமா? அறிவுடையார் அனைவருமே ஆடவர்தாமன்றோ? ஒரோவழிப் பெண்ணறிஞர் ஒரு சில்லோர் அறிஞர் கூட்டத்தினிடைப் படினும், அவர் தொகை மிகச் சிறிது. அன்றியும், அச்சிலரும் அறிவால் அத்துணை உயர்ந்தோரு மல்லர். மென்மையானும், இனிமையானும், மகளிர் புருஷர்க்கு மேலாவது போலவே இயற்கையில் அறிவினும் ஆற்றலினும் ஆடவர் பெண்டிரின் மேம்பட்டவர். முறையே இவ்விருவர்தந்தம் மேம்பாடுகளுக்கும் இயற்கைக் காரணங்களுண்டு. இச்சுபாவ குண வேறுபாடுகள் பற்றியே, பெண்டிர்க்கு, 'மெல்லியர்,' 'பேதையர்,' என்றும்; புருஷருக்கு, 'ஆடவர்' 'அறிவாளர்,' என்றும் காரணப் பெயர் வாய்ந்தது.

எனவு மின்ன பிறிதுமாய பலகாட்டி, "மகளிர், இயற்கையில் புருஷரினும் அறிவாற் பின்னிடைந்தவர்." என்ற கொள்கையை நிறுத்த முயலுகின்றார் பலர்.

'அறிஞர் தொகுதியுள், ஆடவரே மிகுந்துளார்.' என்பதுண்மையே. இதனால் இயற்கையில் மகளிர்க்கு அறிவுடைமை குறைந்ததாயவாறு, எப்படி? மக்கள் தம்முள், அறிவிலார் தொகையே மிகையினும் மிகுதி: பேரறிவாளர் வெகு சிலரே யாவர். எனவே, மாந்தர்க்கு அறிவுடைமையாந் தன்மை குறைந்ததாமா? அறிவு, பயிற்சிக் கேற்ப விளங்கும். "தொட்டனைத் தூறு மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு" என்று பொதுப்பால் கொண்டு பாடிய நாயனாரும், பால்வேறுபாடின்றி மக்களனைவருக்கும், பயிற்சிக் கேற்ப அறிவு விருத்தியாமாறு, நன்கு விளக்கினார்.

நம்மவர் மாத்திரமன்று: தொன்று தொட்டு உலகில் மாந்தர் பலரும், மகளிர் ஆடவர்க்குரிய தொழில் வேறுபாட்டு முறையில், அறிவு வளர்த்தலை ஆடவர்க்காக்கினர். அன்பின் முதிர்ச்சியை பெண்டிற் கைக்கொண்டனர்; இது அப்பழங் கால நிலைக்குரிய இன்றியமையாப் பல இயற்கைக் காரணங்களின் ஏற்பட்டது. பின்னர் நாளடைவில், நாகரீக விருத்தியால் இருபாலினரும், சிறுவழி, தம்முள் தொழில் கைம்மாற்றியக் கால், பெண்களிற் சிலருக்கு ஒருவாறு அறிவு வளர்த்தற் கேதுவாயிற்று. என்றாலும் கூட, வெளிப்படையான பல வேறு காரணங்களால், பெரும்பாலும் அறிவு விருத்தி பண்ணுவோர் ஆடவரே யாயினர்.

இனி யிவ்வாறு இடையிடையே எழுந்துலவிய பெண்ணறிஞரும் சில ரல்லர். ஸ்பென்ஸர் என்ற ஞானியார் எழுதியிருக்கும் 'ஸ்டேடிக்ஸ்' (Spencer's Statics) எனும்புத்தகத்தில், (Rights of women) பெண்களினுரிமைகள்" என்றவிவார் அதிகாரம் பார்க்கில், 'கணிதம்' 'புலமை' 'கவித்துவம்' 'தத்துவஞானம்' 'சிற்பம்' 'ஓவியம்' 'சங்கீதம்' இன்னபல் கலைகளினும், பல நாடுகளினும், உயர்ந்த தேர்ச்சி கொண்டிருந்த பல மாதர்களின் பேர் காணலாம். அவர்களின் சைத்திரமும், மனத்தெளிவுமின்று வரைகாட்டி நிற்கும் பலபுத்தகங்கள், சித்திரங்களின்வரலாறு மறியலாம். இவை பல விரித்தலின் ளியலாது. நம்மவரும் ஔவையை மறந்திலர். இடம் வாய்த்தபோது மகளிர் அறிவுயர்வான் ஆடவருக் கெட்டுணையுங் குறைந்த



இல்லை. தற்காலத்தில், நம் பாரதநாட்டில் ஆடவரும் தலை குனிய, இனிய சொற்சுவை கலந்து நல்லறிவுச் சுடர் கொளுத்தி, நாடோறும் அறிஞர் தமக்கிடையே வாதாடி, இந்துமதவுண்மையினை இனிது நிறுத்துவேன்என வெளிப்போந்தபெண்ணரசியாகிய, பெசாண்டம்மையின் புகழ் (Besant) எட்டாதாரில்லை. ஒருக்கால் அறிவு ஆங்கில மகளிர்க்கு மாத்திர முரியதாமோ? என்றால்; பம்பாய் நகரில் பெண்டிரி னபிவிர்த்திக்கென்றே தம்வாணாள் கழித்துழைத்து வரும் பண்டிதைகள் பலரிருப்பதறியோமா? உண்மையில், அறிவபிவிர்த்திக்குரிய சாதனங்களனைத்தையு மாடவர் தமக்கே யுரியனவாக்கி, மகளிர்க்கின்றாக்கினமையால், புருஷர் தற்காலம் கல்வி மேம்பாடுடையார். இந்தச் சாதனங்களை மாதர்க்கு எவ்வளவு கொடுக்கின்றனரோ, அவ்வளவு மாதர் அறிவுயர்வால் ஆடவரை யடுக்கின்றனர். மேனாட்டார், நம்மினு மதிகமாகத் தம் பெண்டிரை இச்சாதனங்களுக் குரியோராக்கிக் கொண்டமையால், ஆங்கில ஐரோப்பிய "ஔவையார்" பலராகின்றனர். தமிழரினும், பார்ஸிகள் மகளிர்க்குச் சுதந்தர முதலியன மிகக் கொடுத்தமையால், தற்காலத்தே பம்பாயின் சிறப்பும், சென்னையின் தாழ்வுமுடன் போந்தன. இவையன்ன பல காரணங்களாலும், கல்வி பயிலப்போதிய சாதனங்கள் கிட்டுமாயின், நம் சகோதரிகள் அறிவால் நம்மிற்றாழ்ந்தவராகா ரென்பது தெளிவாகும்.

இதுவரை உயர்கலைக் குரிய அறிவெல்லை சுட்டி, அவ்வளவில் ஸ்திரீ புருஷர்களின் ஏற்றத்தாழ்வுண்மை விசாரித்தோம். இனிக் கல்வி யுதவியின்றி, இயற்கையறிவுடைமையில், முறையே யிவர் நிலை காண்பாம். நன்கு உண்மையில் பெண்டிர் இயற்கையறிவால் புருஷரின் மேம்பட்டவரல்லரோ, என்ற சந்தேக முண்டாகிறதே தவிர, இருவரின் சமத்துவத்தை மறுத்து பெண்டிரைக் கீழ்ப்படுத்த ஹேதுவேயில்லை. வழக்கமாய் பெண்களுக்கோ கல்விப் பயிற்சி யென்பது மில்லை. சாமான்ய ஜனங்களில், புருஷருக்கும் கல்வி பயில்வதற்கிடமுமில்லை, அவசியமுமில்லை. இவ்வாறு இவர்களிருவருக்கும் இங்கு கல்வியின்றுதவி சமத்துவமாகவே, முறையேயிவர் தம் அறிவினிலை யளப்பதற்கு, உயர்கலையொன்று முதவா. வாழ்க்கைக் கின்றியமையாத 'நன்மனையோம்பல்' 'மக்கள் வளர்த்தல்' 'சிக்கன பெருக்கல்' 'அயலார்தம் மாட்டன்பாயிருத்தல்' முதலிய சில விஷயங்களில் தான் இந்தச் சாமான்ய ஜனங்களுள் ஸ்திரீ புருஷர்கள் ஒத்துப் பயில்வது. பால் வேறுபாட்டிற்கிணங்க வேறுபட்ட சில விஷயங்களொழித்து, ஒழிந்த மனைத்திருத்த, வாழ்க்கை நல விஷயங்களில், இயற்கை வித்தியாசமின்றி பெண்களும் புருஷரும் ஒக்கப்பயில்கின்றனர். இயற்கையில் ஆடவருக்குப் பெண்டிரினும், அறிவுடைமையதிகமாக அமைந்திருப்பதுண்மையாயின், இவ்விஷயங்களிலெல்லாம் புருஷர்ஸ்திரீகளுக்கு மேம்பட்டிருத்தல் வேண்டும். ஆனால், இவ்விஷயங்களி லெல்லாம் பெண்கள் புருஷருக்கெ[illegible] நாம் தாழ்ந்தவரில்லை யென்பதோ யாவரு மறிந்ததாகும். வீனக்கு களு[illegible] விவேகத்துக்கு முதல் நாகரீகத்தாலுயர்ந்த ஆரியரில் சுந்தரி [illegible] யா[illegible] யுதியாயுள்ள, மாந்தரின் முழுதிலும், பெண்டிர் ஆடவருக்கு [illegible] தேக வலியால் புருஷர் எவ்வளவு வாழ்வே எவ்வாறு செய்கின்ற [illegible] அங்கே அவ்வாறு மனவலிமையால் செய்து ஆடவருக்குரிய [illegible]

வியாயிருப்பதை நாடோறும் காண்பதாகும். கல்வி கேள்விகளால் சமத்துவமுடைய இவர்களுள், புருஷர்மகளிரினும் அறிவுடைமையா லுயர்ந்திருப்பதுண்டாயின், இயற்கையில் பின்னவர் அறிவின் தாழ்ச்சி பெற்றதாகும். இதற்கு மாறாக சாதாரணமாய்ப் பெண்டிர் ஆடவரெப்படி 'தைரியம்' 'உறுதி' முதலியவைகளாற் றம்மின் மேம்பட்டவரா யிருக்கின்றனரோ, அப்படி 'சூழ்ச்சி' 'தெளிவு' 'கூர்மை' முதலிய குணங்களில், தாம் புருஷரின் மேம்பட்டவராயிருக்கின்றனர். மேம்பாடு இல்லாதுபோனாலும், (இயற்கை) அறிவுடைமையில், அல்லது(கல்வி) அறிவின்மையில் இருவரும் ஒத்திருக்கின்றன ரென்பதற்கையப் பாடில்லை. எனது நண்பரொருவர் "பயிற்சிக் கிடமில்லாத மற்ற கலைகளில் பெண்டிர் குறைந்திருப்பது, அறிவின் குறைவுபற்றி யன்று, பயிற்சிக் குறைவினாலென்றாலும்; எந்நாளும் அவரையிடையூறின்றிப் பயில விட்டிருக்கும் 'சங்கீதத்தி'லும் ஆடவர்க்கவர் தாழ்ந்திருப்பதொன்றே பெண்டிரின் அறிவின் தாழ்ச்சிக்குப்போதிய சான்றாகும்" என்றனர். ஒரு சிறிது யோசித்திருப்பாராயின், இதன் பொய்மையும், தியாகையர் ஒத்த சங்கீத லக்ஷண பண்டிதைகள் வெளிப்படாமையினுண்மையும் இனிதுவிளங்கும். தீக்ஷிதர்களும், பாகவதர்களும், சாமான்யமா யாவதில்லை. வருஷக்கணக்கான பயிற்சியாலும், பிறகு சுயேச்சையாய்த் திரிந்து ஆங்காங்கு கொண்ட கேள்வியாலும், புருஷருக்கு அமைந்துள்ள மற்றைய சாதனங்களாலும், அவருக்குரிய பிறபல கலைகளினுதவியாலும், நாடொறும் வளர்வதாகுமவர் சங்கீதத்திறன். சங்கீத லக்ஷணத்தின் பயிற்சி வெகுவாயில்லாமலும், எப்போதும் அந்நியவசப் பட்டுக் கட்டுண்டு கிடப்பதால் கேள்வியே முழுதுமில்லாமலும், துணை செய்வதற்குப் பிறிதோர் கல்வி யெதுவு மில்லாமலும், வாணாள் கழிக்கும்போதே பெண்கள் பலர் இத்தனை திறமை வாய்ந்திருப்பது வியப்பன்றோ? இனி இப்பெண்டிரைப்போலவே பயிற்சிக் குறைவும், பெண்களினு மதிகமாகக் கேள்விக் கவகாசக் குறைவுமுடைய சாதாரண புருஷ கோடிகளோ டொப்பிடில்—ஈண்டு பாகவதப் போலிகளைக் குறிக்கின்றேன். பாடவே தெரியாதவரையில்லை—சங்கீதத்திலும், பெண்களினியற்கை யறிவு அவர்களை புருஷரினு மெவ்வளவு உயர்த்துகின்ற தென்பதினிது விளங்கும்.

விரிவஞ்சி விஷயத்தைச் சுருக்கி யெழுதலானேன். பொதுவாய் அறிவு விருத்திக்கு, 'தன்வய முடைமை'யும், 'வெளி யியக்கமும்,' 'பலஜனப் பழக்க'மும், 'கேள்வி'யுமின்றி யமையாதன. பெண்களிடம் பெரும்பாலும்—நம்மவர் பெண்களுக்கு முழுதும்—இவை யொன்றும் பலவும் பலவேறளவுகளில் அமையா திருப்பன. எனவே அறிவபிவிருத்தி ஸ்திரீ புருஷர்களிடம் சமத்துவமாய் நடைபெறுவ தெங்ஙனம்? தற்கால நிலையில், அறிவெல்லைகளில் ஆடவர் பொதுவாய்ப் பெண்டிரின் மேம்பட்டவ ரென்பதுண்மையே. ஆனால் இயற்கை யறிவுடை[illegible]ச்சி[illegible]ம், அறிவு வளர்தற்குரிய தகைமையிலும், சாதனங்கள் ஒத்து வாய்த்த[illegible]னும், [illegible] விருத்திக்குப் பயன்படுத்திக் கொள்வதிலும், புருஷரினும் மகளிர் [illegible] னிடையார், என்பதும் உண்மையாம்.

S. S, Bhar[illegible]



# சமாசாரக் குறிப்பு

நானக் முனிவர்.—இம்மாதம் 12-ம் தேதியானது பஞ்சாப் மாகாண முழுதிலும் பெரிய விழா நாளாகக் கொண்டாடப்பட்டது. ஏனெனில் உலகத்தின் மகா ஞானிகளிலொருவராகிய நானக் முனிவரது ஜன்மதினம் அன்று ஏற்பட்டிருந்தது. இம்மஹான் 1461ம் வருஷத்தில் பஞ்சாப்பிலே திருவவதாரம் செய்தவர். "சிஷ்யர்" அல்லது "சிக்கர்" என்று சொல்லப்படுவோர்களின் மார்க்கத்திற்கு இவரே மூல புருஷர். பரத கண்டத்தின் மகான்களுடைய திவ்ய சரித்திரங்கள் அவ்வம்மாகாணத்தோடு வரையறைப் பட்டுப்போய், இத்தேசத்துப் பாஷைகளனைத்திலும் மொழி பெயர்ப் புறாதிருத்தல் பெருந் துர்ப்பாக்கியமே.

கல்கட்டாவில் மகாராணி விளம்பரத்தின் வருடாந்தக் கொண்டாட்டம்.—1858-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதி இத்தேசத்தாருக்கு மகாராணியார் தமது புகழ்பெற்ற சுயாதீன விளம்பரம் அருளிச் செய்தனர். இந்த நவம்பர் முதல் தேதி (புதன்கிழமை) மேற்படி விளம்பரத்தின் வருடாந்த தினமாதலால் அது கல்கட்டாவில் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அவ்விஷயத்தின் பொருட்டு ஐக்கிய மண்டப ஸ்தலத்தில் கூடிய பெருஞ் சபைக்கு 50,000-ஜனங்கள் வந்திருந்தார்கள். அப்போது நாவலர் பெருமானாகிய பாபு சுரேந்திர நாத் பானர்ஜி ஓர் அருமையான பெரும் பிரசங்கம் புரிந்தார்.

காசியில் நடக்கப்போகின்ற ஆசாரத் திருத்தச் சங்கம்.—காசியில் காங்கிரஸின் பிறகு நடக்கப்போகின்ற ஆசாரத் திருத்தச் சங்கத்திற்கு ஈடா ஜில்லா கலெக்டராகிய பண்டித ஜ்வாலா பிரசாத் M. A. C. S. சபைத் தலைமை வகிப்பார். நமது காசி நண்பர்கள் இவரைத் தெரிந்தெடுத்தமை மெச்சத்தக்கதேயாகும். ஜ்வாலா பிரசாத் பண்டிதர் வடமொழியில் பெருந்தேர்ச்சி கொண்டவர். உயர்ந்தனவும் அகன்றனவுமாகிய கொள்கைகளுடையவர். இவர் ஹிந்துஸ்தானியாக இருந்தும் மகரிஷி தேவேந்திர நாதரின் பேரப்பெண்ணாகிய ஓர் பெங்காளி மாதை விவாகம் செய்திருக்கின்றார். இதன்றி பம்பாயில் நடந்தது போலவே ஹிந்து மாதர்களின் சங்கமொன்று காசியிலும் நடக்கப்போவதாக அறிகின்றோம். இந்தியாவின் பற்பல இடங்களிலிருந்து அநேக மாதர்கள் அச்சபைக்கு வருவார்கள். இச்சபையில் அயோத்தி ஜில்லாவைச் சேர்ந்த "பிரதாபகர்" ராணியார் அக்கிராசனம் வகிப்பார்.

பாபு சுபோத சந்திரமல்லித் தாய்ப் பாஷையின் முக்கியத் தன்மையைப் பற்றிப் பேசுதல்.—கல்கத்தாவிலே ஸ்தாபிக்க வேண்டுமென்று சுதேசிகள் பலர் கருதியிருப்பதாகிய சுதேச யூனிவர்ஸிடிக்கு ஒரு லக்ஷ ரூபாய் கொடுத்த சுபோத சந்திர பாபு இப்போது இத்தேச முழுதிலும் கீர்த்தி பெற்றவராய் விட்டார். இவர் [illegible] நன்கொடை யளிக்கக்கருதிய தருணத்தில் ஓர் திவ்யமான உபந்நியாசம் [illegible] இவர் வளமிகுந்த செல்வமுடைய[illegible]

நலத்தைக் கருதியே தமக்கு அசௌகரிய முண்டான போதிலும் கவனியாமல் இப்பெருந் தொகை கொடுக்க முற்பட்டிருக்கிறார். இம்மஹோபகாரி தமது பிரசங்கத்தின்போது பின் வருமாறு கூறினர்:—

"சகோதரர்களே, நான் உங்களிடம் இங்கிலீஷ் பாஷையில் பேசத்தொடங்கியதுபற்றி மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன். தாய்ப் பாஷையைக் காட்டிலும் அந்நிய பாஷையிலே நன்றாகத் தமது கருத்துக்களை வெளியிடுமாறு ஏற்பட்டிருக்கும் தற்காலத்து இழிவுபெற்ற கல்வி முறைப்படி நானும் கல்வி பயின்றவனென்பதை வெட்கத்துடன் அங்கீகரித்துக் கொள்கின்றேன்."—(சு. மி.)

ஒரு விண்ணப்பம்.—சென்னை ஆசாரத் திருத்தச் சங்கத்தின் காரியதரிசியாகிய டாக்டர் C. B. ராமராவ் L. M. S. பின் வருமாறு விண்ணப்பமொன்று இம்மாதத்தில் பிரசுரம் புரிந்திருக்கின்றார்:—"மகிமைகொண்ட மாதர்கள்" என்பது முதலிய பல நூல்கள் இயற்றியவரும், பெண்கல்வி விஷயத்திலும், மாதர் சபை விஷயத்திலும், மாதர் சபை விஷயத்திலும் அரிய உழைப்பெடுத்துக் கொண்டவரும், பயிற்சி, தேசாபிமானம், சற்குணம் என்பவற்றிற்கு ஒரு திருஷ்டாந்தமாக இருந்தவருமாகிய காலஞ் சென்ற ஸ்ரீமதி. ப. அச்மாம்பா என்ற (தெலுங்குப்) பெண்மணியின் ஞாபகச்சின்னமாகச் சென்னை ஹிந்து ஆசாரத்திருத்த சங்கத்தார் சென்னையில் ஒரு தரும புத்தகசாலை ஸ்தாபிக்கக்கருதி யிருக்கின்றார்கள். அதில் சுதேசப் பாஷை புத்தகங்களும், பத்திரிகைகளும் மாதர்களின் உபயோகத்துக்காகக் கொடுத்து வரப்படும். இது ஒரு ஞாபகச் சின்னமாக மட்டிலும் இராமல், ஹிந்து மாதர்களுக்குப் பயிற்சி யளிப்பதற்கொரு முக்கிய ஆதாரமாகவும் இருக்கும். மகிமைகொண்ட அச்மாம்பாளின் குண விசேடங்களை வியப்போர்களும், மற்றும் அவரது நண்பர்களும் எமது நோக்கம் கைகூடுமாறு தக்க பணவுதவி புரிந்தேனும், அல்லது பயன்தரக் கூடிய தேசப்பாஷைப் புத்தகங்கள் கொடுத்தேனும் எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றது. மேற்கூறப்படும் பெருங் காரியத்திற்குத் தமிழ் நாட்டாரும் தெலுங்கர்களும் பிறரும் தக்கவாறு துணைபுரிவார்களென நம்புகிறோம்.

## சுதேசிய ஏலப்பாட்டு.

தற்காலத்தில் இந்நாடு முழுதும் பரவி வருவதாகிய சுதேசிய ஊக்கத்தின் சம்பந்தமாக "சிங்கைநேசன்" என்பவர் "சுதேசமித்திரன்" பத்திரிகைக்கு எழுதியனுப்பியிருக்கும் பின்வரும் ஏலப்பாட்டை மாதர்கள் அன்புடன் படிப்பார்களென நம்புகின்றோம்.

வருகுதுபார் கப்பலொன்று—அந்த—வங்காள நாடதிலே
பெருகின்ற கல்கத்தா—நகரில்—பேர்கொளும் லால்மோகன்கோஷ்
—ரேந்திரநாத்—பானர்—ஜீமுதலா மானுமிகள்



### முடுகு.

சீரும சுதேசிய மெனப்பெயர் புனைந்து-சார்வானகாளிக டத்துறையில் வாழும்
வரமுதவு காளிகா தேவியருள் நாடி-மகிமைபெற "வந்தே மாதரம்" என்று,
பெருமைமிகு மிந்தியா கைத்தொழில்கள் தம்மைப்-பிரபலமதாக்கவே கங்கணங் [கட்டி,
உரிமையுள உள்நாட்டு வஸ்திரம் புடைவை-உருமாலை சோமனோடு சால்வை [துப்பட்டா,
விரிவுமிகு காகிதம் பென்சல் பேனாக்கள்-விஸ்தாரமேவு தீப்பெட்டி சுடர்வத்தி,
சரியான சோப்புகள் லஸ்டர் வால்சேட்டு-தக்க பீங்கான்களோடு கண்ணாடி [சாமான்,
வரிமேவு பூட்டுப் பேனாக்கத்திக் குடைகள்-மண்வேலை கூஜா வெண்கலவார்ப்பு [நகைகள்,
பிரியாத தாமிரம் பித்தளைச் சாமான்-பேசரிய வெள்ளிநகை, தங்கநகை யுடனே,
சரியான குழலர்கள் மேனியிற் பூசச் சொகுசான வாசனைத் திரவியங்கள் பெட்டி,
உருவானமேஜை நாற்காலி சோபாக்கள்-உக [illegible] வர்யாப் படங்கள்,
மரியாதையான வங்காள மாணாக்கர்-வாழ்த்திப் பிரிப்பிக்கும் கா[illegible]திரிகை இலகா [illegible] லஜ-ப்பேப்பர்,
தெரியாத பேர்கட்குப் புத்திகற்பிக்கும்-சேரு மயிர் தப்பளார் [illegible]
பெரிதாக வெழுதிவரும் கேசரி மராட்டா-'பேட்ரியாடிக்' இண்டியன்மிரர் முதலாம்,
பரிவானபேர் கலைக்கொண் டெவ்விடத்தும்-பரவிவரும் எங்கள் சுதேசமித்திர [னும்,
குருவான பத்திரிகை யாபிசைநாடி கோலாகலத்துடன் ஜெயபேரி கொட்டி
அரிதான வெங்கள் சுதேசியக் கப்பல்-அதிதுரிதமாகவே வருகிறது மாதே— [ஏலேலோ]

# "AS OTHERS SEE US."

## நமது பத்திரிகையைப்பற்றிப் பிறர் யாது கூறுகிறார்கள்?

The *Hindu* says:—"CHAKRAVARTINI." As described in its title page, this is a Tamil monthly magazine, devoted entirely to female education and to the elevation of our women in genenal. With this sole object in view, such subjects are chosen as tend to elucidate to our women their duties towards their husbands and superiors, their inferiors, and their equals in Society. They are written in such an easy style, as any woman of ordinary ability can read and understand them. This was started some three months ago. The last two issues contain some interesting stories and ideas which are both pleasing and instructive.

The current number contains among many interesting subjects one which is well-worth reading viz, "an exemplary lady of the Punjab" written by the Editor, describing the character of an ideal Hindu wife.

இந்து நேசன் சொல்கின்றது.

"சக்ரவர்த்தினி".—அறிவிலிகளான நம் நாட்டு மாதர்களுட் பெரும்பாலார் சீருஞ் சிறப்பு மிகுந்து நீர்வளம் நிலவளம் முதலான அறுவகை வளங்களும் செவ்வனே செழித்தோங்கும் இப்பரதகண்டத்தில் அதனினும் நந்தமிழ் நாட்டினுள் பிரகாசிக்குமாறு அன்னார்க்கு அறிவூட்டக் கங்கணங்கட்டி வெளிவந்திருக்கும் "சக்ரவர்த்தினி" எனும் பெயர்பூண்ட இம்மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையின் மூன்றாம் பகுதி வரப்பெற்றனம். அதனுள்ளுறையை நோக்குங்கால் தென்னிந்தியச் சிறுமிகள் பரிவுடன் புகழ்ந்தோதுதற்குரிய விஷயங்களைக் காணுதற்கியலும். மாதர்களுக்கு இத்தன்மையதான குணங்களிருக்க வேண்டுமென்பதைப் பத்திராசிரியர் ஆரம்பத்தில் ஓர் பஞ்சாபி மாதை உதாரணமாக வெடுத்துக்காட்டி அவ்வம்மையின் குண விசேஷங்களை இனியதோர் சம்பாஷணையின் மூலமாக விளக்கியிருக்கின்றார். இந்து மாதர்களுக்குச் சங்கீதப்பயிற்சி, ராமதிலகம் என்ற தமிழ் நாடகம், நன்றிமறவாமை, சந்திரமதி, வர்த்தமானக் குறிப்புக்கள் முதலியன மாதர்களுக் குற்றவாறு வரையப்பட்டிருக்கின்றன.

## நமக்கு அனுப்பப்பட்ட கவிகள்.

எமது பத்திரிகையின் மீது நல்லெண்ணங் காட்டி எமக்கு நேரிலேயும் "சுதேச பரிபாலினி" "சுதேச மித்திரன்" "சர்வஜன மித்திரன்" என்ற பத்திரிகைகளுக்கும், இனிய செய்யுட்களும் குறிப்புக்களும் எழுதிய பலவர்களுக்கு நன்றியளிக்கின்றோம். மிஸ்டர் S. S. பாரதி, B. A. எழுதிய அருமையான செய்யுளும், மிஸ்டர் P. B. சுப்பிரமணியம் என்ற நண்பர் தமது பேனாவை இன்னமுதத்திலே தோய்த்து தமிழ் மணந்ததும்பு மாறு எழுதிய அகவலும், இங்கு குறிப்பிடற் குரியன. இச்செய்யுட்களை நமது பத்திரிகையில் இடக்குறைவினால் பிரசுரிக்க முடியாது போயினமைபற்றி மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றோம்.

பத்திராசிரியர்,
சக்ரவர்த்தினி.

## விடுகதைகள்.

எனது பிரிய சகோதரிகளே!
இவ்விரண்டு விடுகதைகளின் பொருள் உரைப்பீர்களாக.

தாமரையின் பெயருடையாள் உடலமெங்குஞ்
சக்கரத்தைப்போலிருக்கும் வடிவங் கொண்டாள்
காமிவெகு கோலத்தாள் பார்க்கவென்றால்
கண்ணுமில்லை காலுமில்லை வாயுமில்லை
ஆமைபோல் வயிறுடையாள் யாருங்கண்டா
லன்புடனே கைநீட்டி யுபசரிப்பார்
மால்மருகன் மணியார்பன் பொன்னுக்சாமி
மன்னவனைச் சொலச்சொல்லி யாடுபாம்பே.

வாயுண்டு பல்லுமில்லை, பேச்சுப் பேச
மாட்டான்றன் காதிலொரு வாளி கொண்டான்
சேயமொடு வெந்நீர் புனைவான் அன்றோர்
நிறைந்தவொரு வயிறுடையான் மனிதனல்லன்
வாயினுலுண்டு கக்கு வான், தன்பாலே
வைத்த பொருளைச் சிறிது சிறிதாயீவான்
தாயனை முத்து மாமயிலச் சேது
சுந்தரனைச் சொலச்சொல்லி யாடுபாம்பே.

ருக்குமணி அம்மாள்.

69
7 FEB 190
MADRAS.

சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
னெண்மை யுறவோங்கு முலகு."

Vol. I. தொகுதி-I. | Madras, December 1905. சென்னை, 1905-ம் வருஷம் டிசம்பர்மீ | No. 5. பகுதி-5.

# கோபால கிருஷ்ண கோகலே.

பரதகண்டத்தின் மேற்குப் பிரதேசத்திலே பல்லாயிர வருஷங்களுக்கு முன் அவதரித்திருந்த ஓர் கோபால கிருஷ்ணர் ஒரு காலத்தில் தமது ஜனங்களைப் பெருமழையினின்றும் இடிகளிலிருந்தும் பாதுகாக்கும்பொருட்டு தமது திருவிரலிலே கோவர்த்தன கிரியைத் தூக்கி நிறுத்தி அருள் புரிந்தாரென்று புராணங்கள் கூறுகின்றன.

அதுபோலவே தற்காலத்தில் அந்த மேற்கிந்தியாவிலேயே மற்றொரு கோபால கிருஷ்ணர் விளங்கி வருகின்றார். இவர் தேசாபிமான மென்னும் ஒடித்தற்கரிய விரலின்மீது தமது போறிவு என்னும் குன்றைத்தூக்கி நிறுத்தி நம்மவர்களை ரக்ஷிக்க புரியத் தலைப்பட்டிருக்கின்றார்.

முன்னாளிலே பிறந்த கோபால கிருஷ்ணர் க்ஷத்திரியராதலால் தோள் வலிமை காட்டி ஜனரக்ஷணை புரிந்தார். இந்நாளிலே தோன்றியிருக்கும் கோபால கிருஷ்ணர் பிராமணராதலால் தமது ஞான வலிமையாலேயே காரிய சாதனம் செய்ய வேண்டுமென்ற நோக்கம் கொண்டிருக்கின்றார். துவாபரயுகத்து கோபால கிருஷ்ணருக்கும் இந்த யுகத்து கோபாலகிருஷ்ணருக்கும் வேறு எந்த விஷயங்களிலே வேற்றுமை யிருக்கக் கூடுமென்றாலும் ஒரு முக்கியமான விஷயத்திலே இவரைக் கண்ணபிரானுடைய தலைமைச் சீடர் என்று கூறலாம்.

இந்நாட்களிலே பூமி முழுதிலுள்ள ஞானிகளால் இனிது புகழப்படுவதாகிய "பகவத் கீதை" என்ற "தெய்வீகப் பாட்டி"லே கோபால கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குப் போதனை புரிந்த முக்கிய உபதேசமாவது, "அர்ச்சுனா! நிஷ்காம்ய கர்மமே புரிவாயாக, அதாவது யாதொரு பலனையும் எதிர்பாராமல் உனது கடமையை நிறைவேற்றுவாயாக." என்பதேயாகும்.

இந்த உபதேசத்தின்படி தற்காலத்தில் நடந்துவரும் பெரியோர்களுக்குள்ளே கோபால கிருஷ்ண கோகலே ஒருவர். இவர் தமது வாழ்நாள் முழுதிலும் தமக்கு வரப்போகின்ற இன்பத்தை யேனும், நலத்தையேனும், புகழையேனும் சிறிதேனும் எதிர்பாராதவராகித் தமக்குப் பெருங்கடமையாகத் தோன்றும் தொழிலை முடிப்பதிலேயே அடங்காத பற்றுக் கொண்டவராக இருக்கின்றார். இவரது இவ்விய சரித்திரத்தை மிகவும் சுருக்கிக் கீழே எழுதி மேற்கூறிய உண்மையை விளக்குவாம்.

## இளமைப் பருவம்.

1866-ம் வருஷத்திலே ஸ்ரீ கோபாலகிருஷ்ண கோகலே அவதரித்தனர். எத்தனையோ மஹோபகாரிகளைப் போலவே இவர் மிகவும் ஏழைமைகொண்ட குடும்பத்திலே பிறந்தவர். வெகு பாலியத்திலேயே இப்பெருமானுக்குத் தந்தையார் இறந்து போய்விட்டனர். ஆரம்பத்தில் கோலாபூரில் இவர் கல்விப்பயிற்சி பெற்றவராகிப் பிறகு பம்பாய் நகரத்திலுள்ள எல்பின்ஸ்டன் காலேஜிற்கு வந்தார். அந்தக் காலேஜிலேயே பி. ஏ. (B. A.) பரீக்ஷை தேறினார். அதன்பின் தமது 18-ம் பிராயத்திலே புனா நகரத்திலிருந்த "New English School" (ந்யூ இங்கிலீஷ் ஸ்கூல்) என்ற ஆங்கிலேய பாடசாலையில் வேலைக் கமர்ந்தார். இத்தருணத்தில் மேற்படி பாடசாலையின் ஓர் விசேஷத்தைச் சுருக்கிக் கூறுதல் பொருந்தும்.

## புனா பெர்குஸன் காலேஜ்.

மேற்படி ந்யூ இங்கிலீஷ் பாடசாலையே இப்போது பெர்குஸன் காலேஜ் என்ற பெயர்கொண்டு விளங்குகின்றது. இப்பாடசாலையில் பல வருஷங்களாக உயர்ந்த அறிவுகொண்ட பண்டிதர்கள் பலர், பாலியத்திலேயே, தமக்கு வேறிடங்களில் அதிகமான சம்பளம் கிடைக்கக் கூடுமென்றாலும், அதனைப் பொருட்டாக்காமல் மிகவும் தாழ்வான சம்பளத்திற்கு உழைப்பதாகக் கங்கணம் கட்டிக்கொண்டு, தேச நலம் புரிவது மரபாக இருந்து வருகின்றது.

ஸ்வ ஆத்ம லாபத்தைச் சிறிதேனும் கருதாமல், உலகிற் குழைப்பதே கடமையாகக் கொண்ட மகான்களது சம்பந்தத்தினால் இந்தக் காலேஜ் அடைந்திருக்கும் புகழுக்கு வரம்பு கிடையாது.

சிப்ளோங்கர் (Chiplonkar), நம்ஜோஷி (Namjoshi), ஆப்தே (Apte), அகர்கர் (Agarkar), திலக் (Tilak), என்ற மகான்கள் இக்காலேஜிற்குப் பாடுபட்ட சரிதை பொன்னிலே செதுக்கி வைத்தற்குரியது. கோகலே இந்தப் பாடசாலையில் வேலைக்கு வந்தபோது இம்மஹோபகாரிகளின் கூட்டத்திலே சேரவேண்டுமென்ற எண்ணமே கிடையாது. ஆனால் அங்குவந்து சில மாதங்களுக்கப்பால் அங்கிருந்த கருணாமணிகளின் சகவாசம் இவருக்குப்பலப்பட்டு விட்டபடியால் இவருக்கு இயற்கையாக உள்ளே மறைந்திருந்த அருட்குணமானது விரிவுபெற்று விட்டது. உடனே என்றும் மாற்றக்கூடாத ஓர் பெரு விரதத்தை ஏற்றுக்கொண்டுவிட்டார்.

தாயனை[illegible]தை முதலாக ஆதரித்துவந்த அவருடைய மூத்த சகோதரர்





தமது தம்பிக்குப் பெரிய உத்தியோகம் கிடைக்கவேண்டுமென்ற ஆசையோடிருந்தார். இவருடைய அன்புகொண்ட மாதாவும் தமது செல்வத்திருமைந்தனுக்குப் புகழும் செல்வமும் பெருகக்கூடிய ஓர் உயர்ந்த பதவி கிடைக்கவேண்டுமென்னும் ஆசை கொண்டவராகவே யிருந்தனர். இவர் இந்த தாழ்ந்த உத்தியோகத்திற்குப் போவதாகத் தீர்மானம் செய்தபோது இவரது மாதா எத்தனை துயருணர்ந்தி யிருக்கவேண்டும்!

எனினும், கோகலேக்கும், நம்பவர் அனைவருக்கும், தாயாகிய, வயதுமுதிர்ந்த, துணையற்ற, பாதகண்டமாதாவின் சொல்லையே கேட்டு, அவளின் மனதிற்கு இனிமை புரியவேண்டுமென்ற மனவுறுதி இவருக்கு உண்டாய் விட்டது. தாய், அண்ணன், நண்பர், என்பவர்கள் எல்லோருடைய மனதைத் துயர்செய்தும், தமது நன்மையைப் புறக்கணித்தும், இப்பெருமான் தமது வாழ்நாட் பிரதிக்ஞையைக் கைக்கொண்டனர். ஒருபோதும் மாதம் 75-ரூபாய்க்கு மேற்படக்கூடாத சம்பளம் வாங்கிக்கொண்டு 20-வருஷம் வேலை செய்ததிற்கப்பால் மாதம் 25-ரூபா பென்ஷனின் பேரில் விலகிக்கொள்ள வேண்டுமென்ற உடன்படிக்கைக் குட்பட்டார்.

இவருக்கப்பாலும் இம்மாதிரி விரதங் கைக்கொண்டு வேலை செய்வதற்கு மிஸ்டர் பரஞ்ஜபே என்ற வித்வ சிகாமணி இங்கிலண்டிலே "Senior Wrangler" (ஸீனியர் ராங்க்ளர்) என்ற நிகரற்ற கணித வல்லமைப்பட்டம் பெற்றுவந்து, இத்தேசத்தில் தமக்கு உயர்ந்த பதவிகள் பல கிடைக்கக் கூடுமாயினும், அவற்றையெல்லாம் வெறுத்துத் தள்ளியவராகி, 75-ரூபாய் வாங்கிக்கொண்டு இந்தப் புனா நகரத்துக் காலேஜில் அருட்கடமை நிறைவேற்றி வருகின்றார். இது நிற்க.

பம்பாய் மாகாணத்து கவர்னர்களாகிய லார்டு ஸான்ட்ஹர்ஸ்ட் (Lord Sandhurst) லார்டு நார்த்கோட் (Lord Northcote) என்ற இருவர்களும் இந்தக் காலேஜில் வேலைசெய்யும் தேசோபகாரிகளை மிகவும் உயர்வு கூறிப் புகழ்ந்திருக்கின்றார்கள்.

## இவரது சற்குரு.

இவரது வாழ்நாளிலே மிகவும் விசேஷித்த சம்பவமானது 1887-ம் வருஷத்திலே நிகழ்ச்சி பெற்றது. பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜாயிருந்த காலஞ்சென்ற மகாதேவ கோவிந்த ரானடே மகரிஷியின் பழக்கம் இவருக்கு அவ்வருஷத்திலேதான் ஏற்பட்டது. புனா "ஸார்வஜனிக" சபையின் பிராணாதாரமாக இருந்த ரானடே மேற்படி சபையின் மும்மாதப் பத்திரிகை யொன்றை நடத்துவதற்குத் தகுதிகொண்ட பத்திராசிரியர் வேண்டுமென்று தேடிக்கொண்டிருந்தார். அப்போது 22-ம் பிராயத்திலிருந்த கோகலேயே இப்பெருந் தொழிலுக்குத் தகுதியானவர் என ரானடே ரிஷி கேள்வியுற்று இவரைத் தெரிந்தெடுத்தார். அன்று முதல் இவ்விருவருக்குள் குருசிஷ்ய சம்பந்தம் ஏற்பட்டு விட்டது. ரானடே மகரிஷியைப்பற்றி இவர் பன்முறையும் பேசுங்காலத்துக் கூறும் திவ்ய வசனங்களை நோக்குமிடத்து அச்சம்பந்தமானது அக்குரு இறந்த பின்புங்கூடச் சற்றேனும் வலி குறையாது நிற்கிறதெனத் தோன்றுகிறது.

உயர்ச்சி பெற்ற அறிவும், அழுக்கற்ற ஒழுக்கப் பெருமையும், ஊன்றிய தேசாபிமானமும், ஒருங்கு சேர்ந்து வடிவமெடுத்தால் போன்று விளங்கி, என்நாளும் இத்தேசத்தார் மறத்த லில்லாது பெருங்காதலுடனும், பக்தியுடனும், கொண்டாடுதற் கிலக்காயிருந்த ரானடே வள்ளலாரின் பெருமையை விரித்து வர்ணிப்பதற்கு இது தகுந்த இடமன்று. அம்மகானிடமே கோகலே இந்தியாவின் "செல்வநிலை" (Ecomonics) யைப்பற்றிய விஷயங்களனைத்தையும் கற்றுக்கொண்டார். கோகலே அவரிடம் படித்து வெளிவருமுன்பு இவர் அவ்விஷயத்தில் பாடுபட்டது கொஞ்சமன்று. சர்க்கார் ரிபோர்ட்டுகளையும், மற்ற பிரசுரங்களையும் நன்றாகப் படித்து அதன் விஷயங்களைச் சங்கிரகம் புரிந்து சுருக்கி எழுதி ரானடேயிடம் கொண்டு காட்டுவது கோகலேயின் கடமைகளிலொன்றா யிருந்தது. இதுபோன்ற பலவிதமான பயிற்சிகளால் இவர் ராஜதந்திர சம்பந்தமான பல்வேறு வகைப்பட்ட விஷயங்களையும் மிகத் தெளிவாகவும், நுட்பமாகவும், அறிந்துகொண்டார். செல்வநூலின் தேர்ச்சியிலே இவருக்குச் சமானமானவர்களாகத் தற்காலத்தில் இந்தியாவி லிருப்போர் சிலரினுஞ் சிலரே யென்றல் பொருந்தும். இனிய பாற்கடலுக்குத் திருமாலினுறவும் ஏற்பட்டதுபோல இயற்கையிலேயே பெருஞ் சிறப்புக்கொண்டவராகிய இவர் ரானடே ரிஷியின் பழக்கம் பெற்றதால் அடைந்திருக்கும் பெருமையை எளிதிற் கூறமுடியாது.

## இங்கிலந்துக்கு முதன்முறையாக யாத்திரை சென்று மீளுதல்.

இங்கிலந்திற்கும் இந்தியாவிற்கும் உள்ளதாகிய பொருள் நிலைச்சம்பந்தங்களைப்பற்றி ஆலோசனை புரியும்பொருட்டு 1897-ம் வருஷத்திலே லண்டனில் "வெல்பி கமிஷன்" நியமிக்கப்பட்டது. அப்போது மேற்படி விவகாரத்தில் இந்தியர்களுக்குள்ள நோக்கத்தைத் தெரிவிக்கும்பொருட்டு இத்தேசத்திலிருந்து சில விற்பன்னர்கள் சென்றிருந்தார்கள். உயர்ந்த அறிஞர்களாகிய ஸ்ரீ G. சுப்பிரமணிய அய்யர், ஸ்ரீ சுரேந்திரநாத் பானர்ஜி, ஸ்ரீ D. E. வாச்சா என்பவர்களுடன் அங்குபோன நமது கோகலே அதற்கு முன்னகவே செல்வ நூலிலும், அரசிறைக் கணக்கிலும் மிக நுட்பமான அறிவுவன்மை காட்டியிருந்தனர். இவர் இங்கிலந்திலே ராஜாங்க சம்பந்தமான கணக்கிலும் விவகாரங்களிலும் காண்பித்த அரிய திறமையையும், விஷயங்களைப் பிறர்க்கு எடுத்துரைப்பதில் இவர்க்கேற்பட்ட தெளிவையும், இவரது தேசாபிமான ஆவேசத்தின் உண்மை நிலையையும் கண்டு மிஸ்டர் லியொனர்டு கோர்ட்னே (Leonard Courtney) முதலிய அனேக அறிஞர் இவரைப் பெரிதும் வியந்திருக்கின்றார்கள். வெல்பி கமிஷனின் முன்பு இவர் சாக்ஷியம் கூறி முடித்தபிறகு இங்கிலந்திலுள்ள பல மாகாணங்களைச் சுற்றிப்பார்த்து உபந்நியாசங்கள் செய்துகொண்டு வந்தார்.

## புகழ்ப்பரிதி கரிய மேகத்துட்படுதல்.

அந்தக் காலத்திலே தான் இவரது கீர்த்தியாகிய (கிரஸ்தமன) சூரியன் சிறிதுபோது உலகப்பழியாகிய மேகத்துள்ளே மறைந்து கிடக்கும்படியான ஓர்

145726



சம்பவம் நிகழ்ந்துவிட்டது. இச்சம்பவத்தின் முழு விவரங்கள் ஒருபோதும் வெளியுலகத்தார்க்கு நன்கு தெரியப்போவதில்லை. என்றாலும் அதைப்பற்றிய பொதுவான சில விஷயங்கள் இங்கு வரைதற்குரியன.

அத்தருணத்தில் புனா நகரத்திலே பிளேக் வியாதியின் நிவாரணத்தின் பொருட்டு பம்பாய் கவர்ன்மெண்டார் அனுசரித்த சில முறைமைகள் ஜனங்களுக்கு மிகவும் கோபமுண்டாக்கின. எங்கே பார்த்தாலும் ஜனங்களுக்குள்ளே திகிலும் கலக்கமும் ஏற்பட்டிருந்தன. அரசாட்சியாருக்கும் குடிகளுக்கும் மனவொற்றுமையானது அகற்சி பெற்றுக்கொண்டே வந்தது. திடீரென்று இரண்டு ஆங்கிலேயர்கள் கொலை செய்யப்பட்டனர். கவர்ன்மெண்டாருக்கும் மற்ற ஆங்கிலேயர்களுக்கும் அறிவு மருண்டுபோய்விட்டது. ஜனங்களை "அடக்கவேண்டும், அமுக்கிவிடவேண்டும், தேய்த்துவிட வேண்டும்" என்ற இரைச்சலேற்படத் தொடங்கிவிட்டது. கவர்ன்மெண்டார் என்ன செய்து விடுவார்களோ என்ற திகில் இந்தியா முழுதும் பரவிவிட்டது.

இதுமட்டுமன்றி இங்கிலந்திலும் இந்தியர்களுக்கு விரோதமான ஆத்திரமும் சினமும் அதிகரிக்கத் தொடங்கின. அப்போது ஸ்ரீ கோகலே இங்கிலந்து வாசிகளிடம், இந்துதேசம் மேற்கூறிய நிலைமையிலிருப்பதற்கு கவர்ன்மெண்டாரின் செய்கைகளே காரணமென்று, பலவிடங்களில் உபந்நியாசம் புரிந்தார். இந்தியா காரியதரிசியாக இருந்த லார்டு ஜார்ஜ் ஹாமில்டன் அதனை மறுத்துப் பத்திரிகைகளில் பிரசுரம் புரிந்தார். இதற்கிடையே இவர் இந்தியாவுக்குப் புறப்பட்டு விட்டார். பாதிவழிக்கு வரு முன்பாகவே இவருக்கு இந்தியாவிலிருந்து பல கடிதங்கள் கிடைத்தன. அக்கடிதங்களிலே யாருடைய சொல்லைக்கேட்டுக்கொண்டு இவர் கவர்ன்மெண்டாரின் செய்கைகளைப்பற்றி இங்கிலந்திலே உபந்நியாசம் புரிந்தனரோ, அவர்களெல்லாம் தத்தம் பெயர்களை வெளியிடக் கூடாதென்று இவரைப் பிரார்த்தனை செய்து கொண்டார்கள்.

எனவே இவர் தாம் சொல்லிய விஷயங்களை நிரூபிப்பதற்கு இயலாமற் போய்விட்டது. கவுரவத்தின் பிண்டமாகிய மிஸ்டர் கோகலே தமக்கு மேற்படி அபிப்பிராயங்களை அறிவித்தோர்களின் பெயரை வெளியிடுவதாகிய ஈனத்தொழில் புரிவதைக் காட்டிலும், தம்மையே பழிக்கு உட்படுத்திக்கொள்வது சிறப்பென்று கருதிவிட்டார். ஆகவே தாம் சொல்லிய விஷயங்களை நிரூபிக்க முடியாதென்று கூறி கவர்ன்மெண்டாரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

இச்செய்கையானது அவரை நமது தேசத்தார் பலரின் இகழ்ச்சிக் குட்படுத்திற்று. அவர் ஏதோ கோழைத்தன்மையால் அங்ஙனம் செய்துவிட்டாரென்ற அபிப்பிராயம் பலர்க்குண்டாயிற்று. கோகலே போன்ற மனிதர்கள் கவர்ன்மெண்டாரின் சினத்தையேனும் ஆதரவையேனும் பொருட்டாக்க மாட்டாரென்பதை இந்த ஜனங்கள் சிந்திக்கவில்லை. மேலும் மகரிஷி ரானடேயின் சம்மதியின் பேரிலேயே அச்செய்கை செய்யப்பட்டதாகலின், அதில் எவ்வித இழிவேனும் இருக்குமாயின், ரானடே அதற்கு ஒருபோதும் இடங் கொடுத்திருக்க மாட்டார், என்பதையும் இவர்கள் கருதவில்லை.

நோவையேனும் யாத்திரைபோய் வந்த சரீரக் களைப்பையேனும் மனக்களைப்பை யேனும் சற்றேனும் பாராட்டாமல் இத்தேசாபிமானிகளின் சிகாமணி காசி காங்கிரஸ் தலைமை வகித்து நடத்தியமை எவரும் வியத்தற்பாலது.

இவர் செய்த பிரதமப் பிரசங்கத்தின் பொருளாழ்ச்சியையும், சொல்லழகை யும், விவகார வுண்மையையும் இவரது எதிரிகள் கூட ஸ்தோத்திரம் புரிவார்களாயின் நாம் அதைப்பற்றிப் பேசுவதற்கு யாதிருக்கின்றது? இவரது கொள்கைகளென யாம் குறிப்பிட்டிருப்பதனைப் பின்பற்றியே மேற்படி பிரசங்கம் அமைவுற்றிருப்பதாலும், அத்திவ்விய உபந்நியாசம் இன்னும் சில நாட்களில் முழுதும் தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரிக்கப் படுமாதலாலும், அதன் விஷயமாக இங்கு நெடுந்தூரம் எழுதாது விட்டனம்.

## முடிவுரை.

* "மேலோர் புகழை விரிக்குஞ் சரிதையெலாம்
ஏனோர்க் கோருண்மை யுணர்த்துமஃ தென்னையேல்,
(ஊக்கத்தால்) யாமுமெம் வாழ்க்கை யுயர்வுடைய
தாக்கிட வல்லே மெனல்"

என்று ஓர் அமெரிக்கப் புலவர் பெருமான் பாடியிருக்கின்றார். ஸ்ரீ கோகலே, இன்னும் அவர்போன்ற பெரியோர், இவர்களின் சரிதையை இத்தேசத்தார் அனைவரும் படித்து அனுபவிக்க வேண்டியதின் முக்கியக் காரணம் மேற்படி செய்யுளினிடத்தே காணப்படும். இவரது சரிதையினிடையே கூற மறந்ததோர் முக்கிய விஷயத்தை இங்கெடுத்துக் கூறி அதனையே மேற்படி செய்யுட் பொருளோடு பொருத்துதல் இயலும்.

இவர் "பாரதகண்டஸேவகர் சங்க" (The "Servants of India" Society) மென வொன்று ஸ்தாபித்து அதில் அனேக இளைஞர்கள் சேர்ந்து தமது சொற்படி உழைப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்திருக்கின்றார். அதில் சேர்ந்த இளைஞர்கள் சொற்பக் கைம்மாறு பெற்றுக்கொண்டு, ஸ்ரீ கோகலேயின் வாழ்க்கை முறையையே முன்மாதிரியாகக் கொண்டு அவரது உபதேசங்களுக்கிணங்க இந்நாடு சீர்மை யடைவதற்குரிய முயற்சிகள் செய்து வருகின்றார்கள். இவ்விளைஞர்களைப் போலவே அவருக்கு நேரே கீழ்ப்பட்டிராவிடினும் நகரங்கள் தோறும் பலகல்விகற்ற இளைஞர்கள் கூடித், தம் வயிற்றுக்குரிய விஷயங்களை மட்டினுமே கருதிப் பிறகு உறங்குவதாகிய தீயவழக்கத்தை அற ஒழித்துவிட்டுப், பாரதமாதாவின் கண்ணீர் துடைத்து அவளை மகிழ்வுறுத்தலே கடமையாகக்கொண்டு அவளுக்குத் தொண்டு பூண்டு நடப்பார்களாயின் எம்மவர்மீது கடவுளர் கருணை யெய்துவார்கள். அங்ஙனம் செய்தாலன்றி வேறு வகையால் நன்மை யடைவோமென் றெண்ணுவது பித்தரின் கனவென்பதில் சிறிதேனும் ஐயம் கிடையாது.

* The Lives of great Men all remind us;
We can make our lives sublime—Long fellow.



# சந்திரமதி.

மூன்றாம் அத்தியாயம்.

78-வது பக்கத்தொடர்ச்சி.

மற்றொருநாள் சந்திரமதி உபாத்தியாயரிடம் படித்துக்கொண்டிருக்கையில், அங்கே ஒரு ஜால வித்தைக்காரன் வந்து மூட்டையை யவிழ்த்துக்கொண்டு உட்கார்ந்து தன் வித்தையை பார்க்கவேண்டு மென்று வேண்டினன். அவனைப் பார்த்து, படித்துக்கொண்டிருந்த பெண்களெல்லாரும் படிப்பைவிட்டு அவனையே கண் கொட்டாமற் பார்க்கலானார்கள். வித்தியாசாகரர் அவர்களுடைய நோக்கத்தை யறிந்துக்கொண்டு, பிள்ளைகளின் மனது வேறொன்றின் மீது சென்றிருக்கையிற் பாடம் படிப்பிப்பதிற் பயனில்லை யென்று அறிந்தவராகையால், உடனே பாடஞ் சொல்வதை நிறுத்தி, பெண்கள் எல்லாரையும் தன்முன் வரவழைத்து, அவ்விந்திர ஜாலக்காரனை சில வேடிக்கைகளைக் காண்பிக்கும்படி சொல்ல, அவனும் தான்கற்ற வித்தைகளிற் சிலவற்றைக் காட்டியான பிறகு, அவனுக்குத் தக்க வெகுமதி யளித்து, அவனைச் சந்தோஷப்படுத்தி யனுப்பிவிட்டார். அப்பொழுது அப்பெண்கள் அனைவரும் அவன் செய்த வேடிக்கைகளை யொருவருடன் ஒருவர் சொல்லி ஆச்சரியப்பட்டுக்கொண் டிருந்தார்கள். அவர்களுள் சந்திரமதி, மாங்கொட்டையை யாவரும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, பூமியில் நட்டு கிமிஷத்தில் அதை முளைக்கப்பண்ணி, இலை காய்களுடன் காட்டியதும், ஒரு காசை பையில் போட்டு பல காசுகளாகச் செய்து காட்டியதும், அவன் காட்டின விசித்திரங்களிலெல்லாம் மிகவும் மெச்சத்தக்கனவாயிருக்கின்றன வென்று தன் குருவினிடம் கூறிக் கொண்டாடினள். அவர் அதை நிமித்தமாக வைத்துக்கொண்டு அதன் மூலமாகச் சந்திரமதிக்குச் சில உபயோகமான விஷயங்களைக் கற்பிக்கக் கருதி, பின்வருமாறு பிரசங்கிக்க லாயினர்.

குரு.—நான் முன் உனக்குக் கூறிய கடவுள் ஒருவருக்கன்றி, மற்றெவருக்கும் புதிதாய் ஒன்றைப்படைக்கும் சக்தி கிடையாது. இப்பொழுது வந்த ஜாலவித்தைக்காரன் செய்ததெல்லாம் மயக்கு வித்தையே யன்றி வேறொன்றுமில்லை. உயரமான நான்கு கால்களுள்ள மூங்கிற் கூடையை மேலே வைத்து, அதன் உள்ளே மறைவாய் ஒன்றும் செய்யவொட்டாமல், அக்கூடையை எடுத்துவிட்டு, பகிரங்கமாய் மாங்கொட்டையை புதைத்து வைத்து செடியை யுண்டாக்கச் சொன்னால், அவனால் செய்யவே முடியாது. அவன் ஏற்கனவே, தளிர்களோடும், பூக்களோடும் காய்களோடும், உள்ள வெவ்வேறு கிளைகளை இரகசியமாய்க் கொண்டு வந்து பத்திரமாய்க் கூடையில் மறைத்து வைத்திருந்தபடியால், இடை இடையே, கிளைகளை நாட்டு, நாம் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே பூமியில் நட்ட விதையை எடு

த்துவிட்டு, கூடையில் மறைத்து வைத்திருந்தவற்றிலிருந்து முதலில் தளிர் இருக்கும் கிளையையும், பிறகு பூக்கள் பூத்த கிளையையும், அதன்பிறகு காய்கள் நிறைந்த கிளையையும் ஒன்றன் பின் ஒன்றாய், நடுவிலுள்ள துவாரத்தின் வழியாய் கூடையிலிருந்தெடுத்து பூமியிற் புதைத்து வைத்து திரையை எடுத்துவிட்டு மாஞ்செடியைக் காட்டினான். சுற்றிலும் உள்ள துணித்திரையை மூடி அவன் இடைக்கிடையே உள்ளே கைபோட்டு செய்துகொண்டு வந்த வேலையெல்லாம் இதுதான். அவன் காசுகள் செய்து காட்டினதும் இப்படிப்பட்ட மோசக் காரியமேயன்றி வேறில்லை. அவன் கைத்திறத்தால் நமக்குத் தெரியாமல், சில காசுகளைத் தன்கையில் மறைத்து வைத்துக்கொண்டு, அவற்றில் ஒன்றைமாத்திரம் நமக்கு முதலிற்காட்டி மற்றதையெல்லாம், அவ்வொரு காசினாலேயேதான் செய்து விட்டதாகக்காட்டி நம்மைப் பிரமிக்கப்பண்ணினான். அவன் எங்கே காட்டினாலும், தன்னிடத்திலுள்ள அந்தப் பத்து காசுகளைக் காட்டுவானேயன்றி, அதைவிட அதிகமாய்க் காண்பிக்க மாட்டான். அவனுக்கே காசுகள் செய்யும் சக்தியிருக்குமாகில், அவன் இவ்வாறு வீடு வீடாய்ச் சென்று யாசித்து ஜீவிக்கவேண்டிய அவசியமின்றி, பொன்னால் வீடு கட்டிக்கொண்டு நம்மைப்போன்றவர்களுக்கும் வேண்டிய வளவு செல்வமளிக்கச் சமர்த்தனாயிருப்பான். பட்டப்பகலில் நம் அனைவர் கண்களையும் மயக்கி பிரமிக்கச்செய்த அவன் சாமர்த்தியத்தைப் புகழவேண்டியதேயன்றி, நாம் நாள்தோறும் பார்த்துக்கொண்டிருக்கும் கடவுளின் அதி அற்புதச் செயல்களின்முன் அவை பர்வதத்துடன் பரமாணுவைப்போல் கூட ஒப்பிடக் கூறத்தக்கனவல்ல. நமக்குக் கண்களிருந்தும் கடவுளின் விசித்திரங்களைக்கண்டு களிப்படாதவர்களாயிருக்கிறோம். அற்பமான இப்படிப்பட்ட மோசடி வித்தைகளைப் பார்த்து மெச்சுகின்றோமேயன்றி, கடவுளாகிய மஹேந்திர ஜாலக்காரன் செய்யும் உண்மையான அற்புதச் செயல்களைக்கண்டு வியப்புறுகின்றோமில்லை. நாம் இப்பொழுது அற்புதங்களெனக்கருதிய இவற்றையே பகவான் பிரதிதினமும் உன்னைக்கொண்டும், என்னைக்கொண்டும், பிரபஞ்சத்திலுள்ள அனைவரைக் கொண்டும் செய்து வருகிறார். நாலு மாதத்துக்கு முன் இவ்வறையின் எதிரே உன் கைகளால் நட்ட செடி அதற்குள் தினமும் பூத்துக் காய் காய்க்கவில்லையா. கடவுள் இவ்விந்திர ஜாலத்தை உன்னைக்கொண்டே செய்வித்திருக்கிறாரே. இதற்கேன் நீ ஆச்சரியப்படக்கூடாது? மண்ணிற் புதைத்த பயிறு மணியவ்வளவு கரிய விதையினால், பசுமையான அழகிய இலைகளும், மெல்லிய கிளைகளும், சித்திரவர்ணமுள்ள புஷ்பங்களும், இன்னும் எண்ணிறந்த செடிகள் உண்டாகவதற் காதாரமான விதைகளுள்ள காய்களும், உண்டாவது விந்தையல்லவா? இதைவிட விந்தை வேறென்ன இருக்கின்றது?, சில வருஷங்களுக்குமுன் எங்கள் தோட்டத்தில் நானே என்கையால் ஒரு மாங்கொட்டையை நட்டேன். இப்பொழுது அது பெரியமரமாகி, பிரதி வருஷமும் எண்ணிக்கையற்ற பழங்களை யளிக்கின்றது. எல்லாம் வல்ல இறைவனாகிய இந்திரஜாலக்காரன் தான் வெளிக்குவராமல் என்னைக்கொண்டே இவ்வற்புதத்தைச் செய்வித்ததற்கு எவ்வளவென்று புகழலாம். உலகத்தில் அனைவரும் வயல்களில் சில நாற்றுகளை நட்டு, சில வருஷங்களுக் குள்ளாக ஆயிரமடங் கதிகமாய்



பயன் அநுபவிக்கின்றார்கள். நாம் எங்குபார்த்தாலும் கண்களியாய்க் காட்சியளிக்கும்விருக்ஷங்களும், பயிர்கள் முதலிய வனைத்தும், இப்படியே மிக்கஆச்சரியத்தை விளைக்கின்றன. இப்பொழுது நம்மிடத்தில் காசுபெற்று சென்ற இந்திரஜாலக்காரன்போல் பொருளாசை வைத்துச் செய்யாமல், கடவுளாகிய இந்திரஜாலக்காரன் தாம் படைத்த பொருள்கள் அனைத்தையும் சுயேச்சையாய் அநுபவியுங்களென்று நமக்குக் கொடுத்துவிடுகின்றார். அப்படிப்பட்டவரிடத்து நாம் எவ்வளவு நன்றியறிதலும் அன்பும் பூண்டு ஒழுகுதல் வேண்டும்!

சந்திர:—தாங்கள் பகவானுடைய பெருமைகளை விண்டு சொல்லியதைக் கேட்ட எனக்கு அடங்காத ஆச்சரியமும் ஆநந்தமும் உண்டாகின்றன. நான் தினந்தோறும் தூங்கி யெழுந்தது முதல் படுக்கப்போகிற வரையில் கடவுளுடைய சிருஷ்டியையே பார்த்துக்கொண்டிருந்தாலும், குருடியைப்போல் அதிலுள்ள அருமை பெருமைகளைக் கண்டுகளிக்கச் சக்தியற்றிருக்கின்றேன். தங்கள் வாக்கியாமிர்தத்தை யருந்தினது முதல், எம்பெருமானுடைய திவ்விய குணங்களை யறிந்தானந்திக்க வேண்டுமென்ற கோரிக்கை மேன்மேலும் அதிகரிக்கின்றது. அடியாளிடத்தில் கருணைகூர்ந்து, என் கோரிக்கையை ஈடேற்றி, என்னை யாட்கொண்டருளுமாறு வேண்டுகின்றேன்.

குரு:—அவரது குணங்களை முற்றும் அறிந்துகொள்வது சாதாரண மனிதன் எவனுக்கும் சாத்தியமில்லை. மகானுபாவர்களான சிலருக்குக் கொஞ்சம் அதிகமாய்த் தெரிந்திருக்கலாம். நீ என்னை மிகவும் வேண்டிக்கொள்ளுகிறபடியால், எனக்குத் தெரிந்தவளவில் நீ யறிந்துகொள்ளுமாறு சிறிது கூறுகின்றேன்.

அவரது திவ்ய குணங்களில் நாம் தெரிந்து கொள்ளக்கூடிய சொற்பபாகத்தினாலேயே நமக்கு உண்டாகும் ஆநந்தம் அளவிடக் கூடாததாயிருக்கிறது. பூமியை மாத்திரமன்றி, சூரிய சந்திரர் முதலிய பலகோடி கோளங்களையும் கணக்கின்றிப் படைத்த கடவுளுக்குச் சரீரம் இருக்குமாயின், அவ்வுருவம் பிரமாண்டமாய் இருக்குமாகையால் நமக்குத் தென்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். அப்படித் தென்பட்டுக்கொண்டிராமையால், அவர் உருவில்லாதவர் என்று ஊஹிக்கவேண்டும். அணுமுதல் பிரம்மாண்டம் வரையிலுமுள்ள எல்லாப் பொருள்களும், எண்ணிறந்த சூரிய சந்திராதி கோளங்களும் பரஸ்பர ஸம்பந்தமுற்றிருப்பதாலும், ஒவ்வொரு பொருளும் ஒரு பிரயோஜனத்தை யுத்தேசித்தே ஆலோசனையுடன் செய்யப்பட்டதாகக் காணப்படுவதினாலும், எல்லாப் பொருள்களையும் படைத்தவர் ஒருவரே யென்றும், அவர் ஆத்மஸ்வரூபி யென்றும் வெளிப்படையாகின்றன. உருவமில்லாத வஸ்து எப்போதும் அழியாதாகையால், அவர் அழிவற்றவர்; ஆகையாலேயே எப்போதும் இருப்பவர். சிருஷ்டியின் தன்மைகள் சிருஷ்டி கர்த்தாவுக்குத் தெரியாமற் போகாவாதலால், அவர் ஸர்வஜ்ஞர். அதாவது எல்லா முணர்ந்தவர் என்றும், எல்லாவிடத்தும் ஒருவன் இருந்து நடப்பிப்பதுபோலவே, சிருஷ்டி யவ்வளவும் ஒழுங்காய் விளங்குகின்றமையால் அவர்

ஸர்வவ்யாபி அதாவது எங்கும் நிறைந்தவர் என்றும், சிருஷ்டியை நோக்கின் அவரது வல்லமைக்கு மேற்பட்டதாக எதுவும் இருப்பதாய்த் தெரியவராமையால், அவர் ஸர்வ சக்தி யுள்ளவரென்றும், எளிதில் அறிந்து கொள்ளலாம். சிருஷ்டியிலுள்ள எந்த வஸ்துவைப் பார்த்தாலும் சிருஷ்டி கர்த்தாவின் புத்தியும் அறிவும் பிரகாசிக்கின்றமையால், அவர் அளவற்ற புத்தியுடையவரென்றும், ஞானஸ்வரூபியென்றும் தெரியவருகின்றது. சிருஷ்டியிலுள்ள எல்லா ஜீவராசிகளும், இயற்கையாக சுகத்தையே அநுபவிக்கின்றமையாலும், என்றைக்காவது துக்கம் வருமானால், அது நமது குறைவுபாட்டினாலோ அல்லது மற்றவர்களின் தோஷத்தினாலோ உண்டாகின்றமையாலும், கடவுள் ஜீவகாருண்ய முள்ளவரென்றும், அருள் வடிவானவரென்றும் வெளியாகின்றது. இயற்கையால் ஒரு ஜந்துவுக்கு சுகமும் மற்றொரு ஜந்துவுக்கு துக்கமும் உண்டாவதில்லை யாதலால், கடவுள் பக்ஷபாத மில்லாவரென்றும், நியாயமுள்ளவரென்றும் விளங்குகின்றது. உலகத்தில் யாராவது தீமை செய்வதற்குப் பயமோ, பலவீனமோ, மருளோ மற்றெவ்வித அஜாக்கிரதையோ காரணங்களாயிருக்கும். கடவுளினிடத்தில் அவ்வகைக் குறைகள் எவையும் இல்லாமையால், அவரிடத்தில் தாழ்ந்த குணங்கள் எவையும் கிடையா. அதனால் அவர் பரிசுத்தர் என்றும், எல்லா நற்குணங்களும் நிறைந்தவரென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றன. நம்முடைய எல்லா அவயவங்களும், அவற்றின் தொழில்களும், நம்மைச் சுற்றிலுமுள்ள எல்லாப் பொருள்களும் நம் சுகத்தின்பொருட்டே பயன்படுகின்றன. கடவுள் நமக்கு இப்படிப்பட்ட நன்மைகளைச் செய்வதற்கு நம்மீது அவருக்கிருக்கும் அன்பைத்தவிர வேறு யாதொரு காரணத்தையுங் காணமுடியவில்லை. யாதொரு காரணமுமின்றி நம்மீதுள்ள கடாக்ஷத்தினாலேயே நமக்கிப்படிப்பட்ட பேருபகாரத்தைச் செய்யும் பரமேசுவரனை நாம் எப்போதும் மாசற்ற மனத்துடன் ஆராதிக்கவேண்டும்.

சந்திர:—எல்லா ஜீவராசிகளும் இயற்கையால் சுகத்தையே அடைகின்றனவென்று தேவரீர் இப்பொழுது சொன்னீர்கள். இயற்கையாலேயே சிலர் நோய்க்குள்ளாகி துன்பங்களையே அநுபவித்துக் கொண்டிருக்கவில்லையா?

குரு:—நோய்கள் கூட இயற்கையாய் உண்டாகின்றவையல்ல. நாம் உட்கொள்ளும் ஆகாரத்திலுள்ள பதார்த்தங்கள் நன்றாயிராமற் போவதினாலோ, அழுக்குக் கால்வாய்கள் முதலியவற்றின் துர்நாற்றத்தினால் காற்று கெடுவதினாலோ, இப்படிப்பட்ட மற்றுஞ் சில காரணங்களினாலேயோ, சாதாரணமாய் வியாதிகள் ஸம்பவிக்கின்றன. அவை எப்போதும் சுயதோஷத்தினாலாவது பிறர் தோஷத்தினாலாவது நம்மைச் சேரும். இவ்விஷயமாக, இனி வரவர உனக்குக் கொஞ்சம் விவரித்துச் சொல்வேன்.

மஹேச குமார சர்மா.



# பெண்களின் பயிற்சி.

பெண்களுக்குப் புத்தகக்கல்வி மட்டுமேயன்றி வேறு பலவிதப் பயிற்சிகளும் அவசியமாகும். இந்து மன்னர்களின் குமாரிகளெல்லாம் விதைபோட்டு பூஞ்செடி, கொடி, மரம் என்பனவையை வளர்த்து வந்தார்களென்று நம் கதைகளால் தெரிகிறது. ஒவ்வொரு இராணியும் இராஜகுமாரியும் பூஞ்சோலைக்குச் செல்வதுண்டென்றும் பந்து விளையாடலுண்டென்றும் புஸ்தகங்களில் படித்திருக்கிறோம். உதாரணமாகக் கூறுவோமாயின் சாகுந்தல நாடகத் தலைவியான சகுந்தலை தன் தோழிமார்களோடு தன் சிங்காரவனத்து செடிகளுக்கு ஜலம் வார்ப்பதிலும் வனத்தை சீர்ப்படுத்துவதிலும், தன் காலத்தில் ஒரு பாகத்தை செலவழித்ததாகத் தெரிகிறது. கிராமாந்திரங்களில் ஒவ்வொரு கிரகத்தின் பின் பாகத்தில் இன்று காணலாகும் "கொல்லை"யில் காய்கறிக்காக போடப்படும் செடிகளும் புஷ்பங்களுக்காக இருக்கும் மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய செடிகளும் இப்பழைய வழக்கத்தின் சின்னம் என்று ஒருவாறு ஊகிக்கலாம். இப்படி செடிகளை வளர்த்து வருவதால் உண்டாகும் பயன் பலவுள. பெண்கள் இச்செடிகளுடன் நெருங்கி ஊடாட்டமாயிருப்பதால் ஒவ்வொரு செடியின் தன்மையும் குணங்களும் அறிய ஏதுவுண்டாகிறது. கிராமாந்திர ஜனங்கள் தங்கள் குழந்தைகளுக்கு உபாதி ஏதாவதுண்டானால் பட்டண வாசிகள்போல டாக்டரிடம் சென்று மருந்துக்குப் பணம் கொடுக்காமல் ஒவ்வொரு ஸ்திரியும் தன் வீட்டுக்குத் தானே வைத்தியச்சியாக இருந்து வந்தாள். இங்கிலீஷ் வைத்தியருக்கு 10, 15 ரூபாய் கொடுத்து சொஸ்தப்படும் வியாதி ஒரு பச்சையிலையாலும், 3 தம்படி சுக்கு, மிளகு போன்ற வஸ்துக்களாலும் சுவஸ்தப்படும், இது எவ்வளவு லாபம்? பட்டணங்களில் குடியிருப்புக்காக செடி மரங்கள் இருக்கவேண்டிய இடங்களெல்லாம் வாசஸ்தலமாக்கப்பட்டு வருகிறது. சென்னை பிளாக்டவுன் போன்ற இடங்களிலுள்ள வீடுகளில் "கொல்லை" இடமே யிருக்கிறதோ என்பது பெருத்த சந்தேகம். "கொல்லை"யில் செடி மரங்களுள்ள வீடுகள் வெகு சிலவேயுள்ளன. நாம் வெளியில் விடும் கெட்ட காற்று நற்காற்றாகச் செடி மரங்களின் பக்கத்திலிருக்க வேண்டிய தவசியம். இவைகள் இல்லாத காரணத்தால்தான் பட்டணங்களின் காற்று, கிராமாந்தரங்களின் காற்றைவிட அசுத்தமாயிருக்கிறது. செடி மரங்கள் அவசிய மென்பதை சில ஐரோப்பியர் வாசஸ்தலங்களிலும், சுதேசிகள் வாசஸ்தலங்களிலும் குரோட்டன், ரோஜாச்செடி முதலியவைகள் வீட்டிற்கு முன் பக்கத்திலும் பின் பக்கத்திலும் வைத்து வளர்ப்பதால் விசதமாகும். இவ்விதமாக முன் காலத்தில் சகுந்தலா போன்ற ஸ்திரீகள் இத்தகைய சிங்காரத்தோட்டங்கள் செடிகள் முதலியவற்றிற்கு ஜலம் வார்த்து வந்ததால் இது ஒருவித தேகப்பயிற்சியாம். நல்லகாற்று சுவாசிப்பதற்கிடமுமுண்டாகிறது. இக்காலத்திலோ ஜலம் வார்ப்பது போன்ற காரியங்கள் கூலி வேலைக்காரர்களுக்கு விடப்படுகிறது. தோட்டங்கள் செவ்வையாய் மேற்பார்வை பார்ப்பதுகூட நம் காலஸ்திரீகள் செய்கிறதில்லை. நாம் இங்கு கூறவந்த

தென்னவெனில், செடி கொடி மரங்களைக் கண்டு அதன் குறைகுணங்களை தெரிந்து கொள்வது முக்கியமான ஒருவிதக் கல்வியாம். இத்தகைய கல்வி ஸ்திரிகளுக்கு இப்பொழுது அடையக்கூடாம விருக்கும்படி யாயிற்றே என் விசனமுறுகிறோம். இத்தகைய கல்வியின் அவசியத்தையும் பிரயோஜனத்தை நிறுத்தி வேறொன்றைக் கருதுவோம்.

முன்காலத்தில் ஒவ்வொரு வீட்டின் பின்பக்கத்திலும் நல்ல பெரிய கிணறுகளோ குளங்களோ அமைக்கப்பட்டிருக்கவேண்டும் தற்காலத்தி லிருப்பதுபோல் குழாய் வசதியொன்றும் அக்காலத்திலில்லை. ஜலத்துக்கெல்லாமாதாரம் ஆறு அல்லது பொதுவாக தர்மத்துக்கு வெட்டப்பட்ட குளங்களேயாம். ஐசுவரிய[...]கள் வீட்டில் குளங்கள் கட்டாயமாயிருக்கும். கமலேயேற்றத்தால் செடி மரங்[...]கு நீர்பாய்ச்சப்படும். இக்குளங்கள் ஸ்நானபானாதிகளுக்கு வெகுவாய்ப் பிர[...]ணப்படும். ஏனெனில் முற்காலத்தில் ஜலக்கிரீடை ஆடல் என்ற வழக்கம் [...]ாஜ கன்னிகைகள் முதலியவர்களிட மிருந்ததாகத் தெரிகிறது. பிரதிதினமும் [...]சாவகாசமாய் அழுக்கில்லாம லிருக்கும்படி நன்றாய்த் தேய்த்துக் குளிப்பதுடன் நீந்துவதிலும், முழுகுவதிலும் பந்தயம் போட்டுக்கொண்டு நீரில் விளையாடியதுண்டென்றறியலாம். குளிர் ஜலத்தில் நன்றாய் ஸ்நானம் செய்வதால் சிரங்குபோன்ற சருமத்தைப்பொருந்திய வியாதிகளுண்டாகா. நீந்துவது தேகப்பயிற்சிகளுள் சிறந்தவைகளி லொன்று. கால்பந்து விளையாடல், டென்னிஸ் போன்றவைகள் காலுக்கோ, கைக்கோ மாத்திரமே வலுவுண்டாக்குமே யன்றி நீந்துவதைப்போல உடம்பின் எல்லா உறுப்புகளுக்கும் சரியான வலுவைக் கொடுக்கா. முன்காலத்திலிருந்த ஸ்திரீகள் அத்தகைய காரியங்களால் திடசரீரிகளாயும் வலியராயும் நோயற்றவராயு மிருந்திருக்கவேண்டும். அப்பொழுதும் அத்தகைய தேகப்பயிற்சியின் பலனை நாம் காணலாம். காவேரி, பவானிநதிக்கரை வாசிகளும் குளத்தில் ஸ்நானம்செய்யும் பாலக்காட்டுப் பக்கத்து வாசிகளும் இதர பக்கத்து வாசிகளைவிட சௌக்கியமான ஸ்திதியிலிருக்கிறார்கள். முக்கியமான விஷயமொன்று. எத்தனை ஸ்திரீகள் நீந்த அறியாத காரணத்தால் நீரில்மாள நேரிட்டிருக்கிறது? நீந்துவதறிந்திருந்தால் இவ்வளவு சாவுமில்லா திருக்குமல்லவா? மேற் கூறப்பட்டுள்ள பாகங்களிலில்லாதவர்கள் ஸ்திரீகள் நீந்துவது கூடாது. கெட்டவழக்கம் என்று அப்பாகத்து ஸ்திரீகளை ஏளனம் செய்வது பேதமையேயாகும்.

ஸ்திரீகள் கல்வி விஷயத்தில் மனப்பயிற்சிக்கு எவ்வளவு கவலை செலுத்தப்படுகிறதோ இதைவிட பன்மடங்கதிக கவலை இவர்களின் தேகப்பயிற்சிக்குச் செலுத்தப்படவேண்டும். நம்மில் பலர் பிரசவகாலத்தில் கர்ப்பத்துன்பம் பொறுக்க சக்தியின்றி இறக்கின்றார்! இதின்காரணத்தை ஆராயின்தேகப்பயிற்சியின்மையே. நம்முள் கர்ப்பவதிகளுக்கு ஆகாரமட்டும் ஜாஸ்தியாக்கப் படுகிறதேயன்றி அவர்கள் செய்துவந்தசில்லறை வீட்டுப்பணிகள் கூட, ஒன்று மில்லாமலாகின்றன. உண்மையில் தக்கவேலை செய்வதவசியமன்றோ? மாதம் அதிகரிக்க அதிகரிக்க ஸ்திரீகள் வேலை செய்யாமல் உட்கார்ந்த இடத்தை விட்டு சாமான்யத்தில் பெய



ராது இருப்பது வழக்கமாயிருக்கிறது. ஐரோப்பிய ஸ்திரீகள் வேலை செய்யாமலாவது விளையாடாமலாவதிரார்கள். நம் ஸ்திரீகளுக்கு இதைப்பற்றி என்ன பன்னிப்பன்னி ஓதியபோதிலும் தெரிகிறதில்லை. ஸதிரீகள் நல்ல தேகப்பயிற்சியுள்ளவர்களா யிருத்தலவசியம். அவர்கள் நல்ல ஸதிரீகளா யிருந்தாலல்லவோ இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் இடசரீரிகளாயிருக்கும். நம்முள் 13-வயதில் ஒரு ஸ்திரீக்குப் பறந்திருக்கும் குழந்தையைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது. தாய்க்காவது, பிள்ளைக்காவதுநோயில்லாதநாளே கிடையாது. தேகப்பயிற்சியினவசியம் என்று நம்பினோர் மனதில் வேரூன்றுமோ, இப்பொழுதுதான் நல்ல காலம்.

# சிவராமன்.

இரண்டாம் அத்தியாயம்.

(80-வது பக்கத்தொடர்ச்சி).

தண்ணீர், என்ற வார்த்தை கேட்டவுடன் கிணற்றண்டை ஓடி ஒரு செம்புத் தண்ணீரைத் தூக்கிவந்து அதை வெந்நீராகக் காய்ச்சி இரண்டாவது தரம் தான் கண்ட நோயாளனுக்குக் கொடுத்தனன். அவன் இந்நீரைக் குடித்த சிறிது நாழிகைக்குள் இவ்வுலக வாழ்வைத் துறந்தனன். போர்வையைப் போர்த்துக் கொண்டு இருந்தவனே சிறிது புரள ஆரம்பித்துத் 'தீர்த்தம்' என்றனன். இவன் சிறிது வெந்நீர் உட்கொண்டு நிதானம் கொண்டு, 'இப்படியா' என்றனன். சிவராமனும் இவனை உற்று நோக்கினன். இருவர் முகமும் உருமாறியது. சிவராமன் தன் முகத்தைத் திருப்பிச் சிறிது நகர்ந்தான். அப்போது அந்நோயாளன் 'சிவராமா' என்னை அறியாயோ? வீணாய் உன்னை வாலிபத்தில் கெடுத்த மாபாதகன் அன்றோ நான்? என் காலமும் குறுகியது. என்? ஆயுளுக்கு இரண்டு மூன்று நாள் எல்லையே பாக்கி. நீ என்னை வெறுத்துப் பயன் என். ஆபத்துக்காலத்தே எனக்கு உதவினாய். உன்னைப்போல் எனக்கு உற்றதுணைவர் உண்டோ! என்று கஷ்டத்துடன் பேசினான். அதைக்கேட்டுச் சிவராமன் தன் வெறுப்பை நீக்கி தன் வாலிபத் தோழனாகிய குப்பையனுக்கு வேண்டிய உதவி புரிந்தனன்.

ஐயோ! பாவம்! குப்பையனுக்கு இரண்டு நாளில் ஜன்னி பிறக்கத் தொடங்[...] இனி பிழையோம் என்ற எண்ணத்தோடு சிவராமனை அழைத்து ஒரு [...] நாழியைப் பெற்றனன்,

[...]யன் உடம்பு சௌகரியப்படாதே இறந்தனர். சிவராமன் இவர் [...] வேண்டுகோளை முடிக்க முயன்றனன். மடத்தின் எதிரே இரண்டு [...] உண்டு. ஒன்று பட்டமரம் மற்றொன்று பச்சைமரமே. குப்பையன் தான் [...] பிறகு தன் சவத்தை இவ்விரு மரங்களுக்கும் மத்திமமான இடத்தில் ஆறு

அடித்தாழம் பள்ளம் வெட்டி அதில் தன் சவத்தை அடக்கவேண்டும் என்று இரந்து கேட்டனன். இறக்குந் தறுவாயில் ஒருவன் கேட்டதைச் செய்ய மனமோ முயலுகின்றது. சிவாமன கையிலே மண்வெட்டியை எடுத்தனன். குறித்த இடத்தை வெட்டத்தொடங்கினன். ஐயோ! இது கற்றரைப் பூமியே! இதை வெட்டிப் பள்ளம் செய்ய நம்மால் இயலுமோ? "மூன்றடித்தாழம் வெட்டினேன். உயிரே வாடி அயர்ந்ததென ஆயிற்று. இறந்தவன் சொல்லை நிறைவேற்ற மனம் துணியவில்லை, என்றால் ஆனமட்டும் பார்ப்பேன்" என்றுரைத்து முனைத்திடம் செய்துகொண்டு வெட்டத் தொடங்கினன். தாகம் உண்டாக உண்டாக நீர் குடித்துக் களைப்பாறி 12-மணிக்குள்ளே ஐந்தடி ஆழம் வெட்டினன். இப்பள்ளம் ஆனவுடனே, இதுவே போதும் என்று ஆலோசித்துப், பிறகு 'இன்னும் ஒரு அடித்தாழம்தானே பார்ப்போம்', என்று மண்வெட்டியைத்தூக்கி ஒருவெட்டு வெட்டினால். வெட்டவும் கலீர் என்று ஒரு சப்தம் கேட்டது. சிவாமன் அச்சப்தத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டு ஆழ வெட்டினன். வெட்டி மண்ணை வீசி எறிந்த பின் பள்ளத்தைப் பார்த்தான். பளீர் என்று சிவாமனைக் கண் மயங்கச்செய்தது. பிறகு கஷ்டப்பட்டு வெட்டியவுடன் தங்கப்பாளம் ஒன்றும், அதன் கீழ்ப் பல தங்கத் துண்டுகளும் கிடைத்தன. இவைகளைக் கண்டதும் அதிக ஆச்சரியம் கொண்டு இறந்த குப்பையன் கட்டளையும் அதை நிறைவேற்றுவதால் கிடைத்த பிரதிபலனையும் நன்கும் ஆராய்ந்து இன்பம் உற்றான். பிறகு குப்பையனுக்குச் செய்யவேண்டியவைகளை முறைமையின் இயற்றித் தன் அன்னம் முதலியவைகளைச் செய்து உண்ட பின்னர், தான் தனக்குக் கிடைத்த பொருள்களை எடுத்துக்கொண்டு திருவையாற்றை அடைய எண்ணிப் பிரயாணப்பட்டுச் சொத்துடன் சுகமாய் வீடு வந்து சேர்ந்தனன்.

பிறகு இவன் தன் அருமைத் தாய்க்கும் இனிய பெண்மணியாம் சுந்தரிக்கும் உண்டான சந்தோஷத்தை எவராலே சொல்லமுடியும்? சுந்தரி நன்றாகக் கல்வியைக் கற்று உணர்ந்து அழகுவாய்ந்த பெண்மணியாய் பதின்மூன்று வயது நிரம்பினவளாய் இருந்தாள். சிவாமன் அத்தை வீட்டுக்குச் சென்று பெரியோருக்கு வந்தனை வழிபாடு செய்து தனக்கு வாய்த்த அதிர்ஷ்ட வசத்தையும் கடவுளின் அருளையும் வியந்து போற்றினன்.

சுந்தரி தன் மாமன் மகனாகிய அழகனும் சிவாமன் மிகுந்தசெல்வவானையும், நன்னெறியினனையும், அனுபவசாலியாயும் ஆனதைக் கண்டும் தன் மீது சொல்லற்கரிய காதல் கொண்டிருக்கிறான் என்றும் உள்ளம் உருகி இன்பக்கடலில் ஆழ்ந்தனள். பிறகு இவர்கள் இருவருக்கும் விவாகம் யாதொரு தடையின்றியும் நடந்து வெகுநாள் இன்பமுடன் வாழ்ந்திருந்தார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ? அநுபவம் அறிந்த சிவாமய்யன் தன்தகுதிக்கு ஏற்றபடி கல்வியும் கற்றுச்சிறந்து விளங்கினன்.

'முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்.'

எம். எஸ். நடேசய்யர், B. A.



# Ramathilakam.

or

## The other end of hatred is love.

## * ராமதிலகம்.

ஓர் நாடகம்

நாடகபுருஷர்கள்,

(அக்டோபர்-மீ சஞ்சிகையின் 64-வது பக்கத்தொடர்ச்சி)

தாமோதர முதலியார், கேசவநாயகர், வேலைக்காரர்கள் வருதல்.

தாமோதர முதலியார்.—என்னை மாத்திரமா, மதுரைநாயகம் பிள்ளையையும் தான் அரசன் கண்டித்தார். அவனுக்கும்தான் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. எங்களைப்போலொத்த கிழவர்களுக்கு சண்டை போடாமலிருப்பது கடினமன்று.

கேசவநாயகர்.—நீங்களிருவரும் நல்ல கௌரவமான குடும்பத் தலைவர்கள் ஏதோ பாபம் வெகு நாளாக உங்களுக்குள் பொருத்தமில்லை.—என் விஷயத்திற்கென்ன சொல்லுகிறீர்கள்?

---

* இந்நாடக பாத்திரங்களின் பெயர்களை முன்முறை கொடுத்திருப்பதிலிருந்து பின்வருமாறு மாற்றவேண்டுமென எக்காரணம் பற்றியோ மிஸ்டர் ப. ஸ்ரீநிவாசய்யர் விரும்புகிறார். அவர் விருப்பத்திற் கிணங்கவே நாமும் மாற்றியிருக்கின்றோம். இதனால் நேரும் அசவுகரியத்தைப் படிப்பவர்கள் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

நெடுமால் நாயகர்.—மதுரை அரசன்.
கேசவநாயகர்.—அரசனுடைய ஓர் உறவு
மதுரைநாயகம் பிள்ளை தாமோதர முதலியார்.—ஒருவரோடொருவர் வைரமுள்ள இரண்டு குடும்பத் தலைவர்கள்.
...மாமிர்தம்பிள்ளை மதுரைநாயகம் பிள்ளையின் குமாரன்.
...ங்கபாணிநாயகர்.—அரசனுடைய உறவு, ராமத்தேவருடைய மித்திரன்.
...தேவபிள்ளை:—மதுரைநாயகம் பிள்ளையினுடைய மருமகன், ராமத்தேவருடைய மித்திரன்.
...கோபமுதலியார்:—தாமோதரமுதலியார் மைத்துனன் மகன்.
...ணப்பத் தம்பிரான்:—ஒரு குரு.
...நாதத் தம்பிரான்:—கண்ணப்பத் தம்பிரான் சிஷ்யன்.
...டாரி மதுரைநாயகம்பிள்ளை வேலைக்காரர்கள்.
...துக்கருப்பன் ராமாமிர்தம்பிள்ளை வேலைக்காரன்.
இடும்பன், வீரபாகு தாமோதரமுதலியார் வேலைக்காரர்கள் ஊரார் பாடர்
வேலைக்காரர்கள் மதுரைநாயகம்பிள்ளை நாடகப்பெண்கள்.

அம்புஜத்தம்மாள்:— மதுரைநாயகம்பிள்ளை மனைவி.
தெய்வநாயக அம்மாள்.—தாமோதரமுதலியார் மனைவி.
திலகவல்லி:—தாமோதரமுதலியார் பெண்.

தாமோ.—முன் சொன்னதைத்தான் திருப்பிச் சொல்லவேண்டும். என் குழந்தைக்கு உலக ஸமாசாரம் ஒன்றும் இன்னும் தெரியவில்லை. 13-வயது நிரம்பவில்லை. அடுத்த தை-மாதத்தில் பார்த்துக்கொள்வோம். அப்பொழுது அவன் கல்யாணத்திற் கேற்றவனாயிருப்பான்.

கேசவ.—அவனுக்கு இளையவர்களெல்லாரும் ஏற்கெனவே தாயாராய்விட்டார்கள்.

தாமோ:—பிஞ்சில் பழுத்தால் பிரயோசனமில்லை. கேட்டுப்போய் விடும். எனக்கு இதை யிரபஞ்சத்தில் அவனைத் தவிர வேறு ஒன்றுமில்லை. பெற்றதெல்லாம் மண்ணிற் கிரையாக்கிவிட்டேன். அவன் தான் பாக்கி என் ஆஸ்திக்கு அதிபதி அவனே, அப்பா, கேசவா, அவனிஷ்ட மெப்படியோ அவ்வழியில்தான் என் மனமும் செல்லும். அவனுக்கு ஸம்மத மிருக்கிறதென்பதைத் தெரிந்து கொண்டு பிறகுதான் மற்ற யோசனைகள் செய்யவேண்டும். இன்று இரவில் நம்முடைய வீட்டில் வருஷா வருஷம்போல் கோலாட்ட ஜோத்திரை நடக்கிறது. அதற்கு அன்பினர்கள் அநேகரை அழைத்திருக்கிறேன். அவர்களில் தம்மை முக்கியமாகக் கருதியிருக்கிறேன். இன்றிரவு என் வீட்டில் பூலோக நக்ஷத்திரங்களை யொத்த வெழிலுடைய கன்னியர்களைக் காண்பீர். கார்காலத்தை கடந்து வந்த வஸந்த காலத்தைக்கண்டு களிக்கும் காமுகர் மனம்போல் கன்னியர் பூங்காவில் களிப்படைவீர். அப்பொழுது உம்முடைய மனதுக்கிசைந்த மங்கையை நாடிக் கொள்ளலாம். குறிப்புக்குத் தகாதவரையினும் ஆள் கணக்குக்கு என் மகனும் வருவான். போகலாம் வாரும்.—அடே (வேலைக்காரனைப் பார்த்து) மதுரைப்பட்டணம் முழுவதும் போய் (ஒரு காகிதத்தைக்கொடுத்து) இதில் யார் யார் பெயரெழுதியிருக்கிறதோ அவரவர்களைக் கண்டுபிடித்து நம் வீட்டுக்கு வரும்படி சொல்லிவிட்டுவா.

(தாமோதர முதலியார்.—கேசவநாயகர் போகுதல்)

வேலைக்காரன்.—இங்கெ எழுதியிருக்கிற பேரைக் கண்டுபிடிக்கணுமா? அவனவனுக்குத் தெரிந்த வேலையை அவனவன் செய்யவேணும். கொசவ • கோட்டாவி பிடிக்கணம்; குடியானவன் குண்டுசெட்டி தட்டணம்; சேணியன் கத்தி தீட்டணம்; அம்பட்டன் தழிபோடணம்; வலையன வாசிக்கணம்; வாத்தியார் வலைபோடணம். இதில் எழுதியிருக்கிற பேரெல்லாம் நான் கண்டு பிடிக்கணமாம். எழுத்துகாரன் இங்கெ என்ன எழுதியிருக்கானன்னே எனக்குக் கண்டுபிடிக்க முயாதே. படிச்சவனண்டை போகணம். அதுவும் கொஞ்சம் சீக்கிரமாத்தான் போகணம்.

(வசுதேவபிள்ளை, ராமாயிர்தம்பிள்ளை, வருதல்.)

வசுதேவபிள்ளை.—விரு அப்பா, தீமூட்டியைக்கண்டால் விளக்கு ஒளிமழுங்கும். மற்றொருவர் துயரத்தைக்கண்டு தன் துயரம் மறந்துவிடுவது வழக்கமல்லவா வேறோர் முகத்தின் அழகை உன்னுடைய கண் பருகினால் பழகிய மயக்கம் தெளிந்து ஏறியிருந்த விடம் மிறங்கிவிடும்.

ராமாயிர்த நாயகர்.—அதற்கு உன் ஊமத்தை இலை மிகவும் குணம்.

வசுதே.—எதற்கு அப்பா? தயவுசெய் கொஞ்சம்.

ராமா.—உன் முழங்கால் பிடிப்புக்கு.

வசுதே.—ராமா உனக்கு பைத்தியம் உண்டோ?



ராமா.—பைத்தியமில்லை, ஆனால் பைத்தியக்காரனைவிட அதிகம்தான்
கதி; சிறையிலடைபட்டும் ஆகாரமில்லாமல் அடிபட்டும். நல்லது வா அப்பா.
வேலைக்காரன்.—சாமி காப்பாத்துவார் ஐயா, எழுத்துத் தெரியுங்களா?
ராமா.—ஆக, இந்த அக்கத்தைப் பார்த்தால் தங்கள் முத்துத் தெரியாத
வேலை.—அது புத்தகமில்லாமன்று தெரிஞ்சிண்டெங்க. கண்ணைத்தி
பார்த்ததை படிக்கத் தெரியுங்களா?

ராமா.—ஆக, எழுத்தும் பாஷையும் தெரிந்தார்.

வேலை:—நல்லாச் சொன்னிங்க, சௌக்கியமாப் போய்வாங்க,

நாயி:—இல்லடா எனக்கு வாசிக்கத்தெரியும், இங்கே கொண்டாடா (ஜ
கிருன்,) சந்திரசேகர முதலியார் குடும்பத்தோடு, சொர்ணத்தம்மாளும் ம
சூரியமூர்த்தி நாயகர்பிள்ளையும், சகோதரிகளும், சித்தப்பா கோவிந்த முதலி
குடும்பத்தோடு, மருமகள் மாதவி, சடகோபமுதலியார், கிருஷ்ணனும் கு
லக்ஷ்மியும், (கடுதாசைத் திருப்பி கொடுத்துவிட்டு) எங்கே வரவேண்டும்?

வேலை:—அங்கேதான்.

ராமா:—எவ்விடத்திற்கு?

வேலை:—சாப்பாட்டுக்கு. எங்கவீட்டுக்கு.

ராமா:—யார் வீட்டுக்கு?

வேலை.—எங்க எசமான் வீட்டுக்கு,

ராமா:—சரிதான், முந்தியே அதைக் கேட்டிருக்கவேண்டும்,

எஸ். வி. சீனிவாஸய்யர், B.

(இன்னும் வரும்.)

## மாணிக்கவாசகர் சரித்திரச் சுருக்கம்

மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டிலுள்ள திருவாதவூரில் ஆமாத்தியப் பி... வம்சத்தில் "சம்புபாத சிருதரு"ம் அவர் பத்தினியாரும் செய்த தவப்பயனால் அவர்களுக்குப் புதல்வராக அவதரித்துப் பதினாறு வயதுக்குள் சகல சாஸ்திரங்களிலும் வல்லவராக விளங்கினார்.

அதை அரிமர்த்தன பாண்டியன் கேட்டு அவரை அழைத்து அவரு... கல்வித்திறம் கண்டு மகிழ்ந்து முதன் மந்திரியாக நியமித்தான். மந்திரித்தொழிலை அதிக சிறப்பாய் நடத்திவந்த அவருக்கு ஆன்ம விசாரம் மேலிட்டது.

அரசனுத்தரவுப்படி குதிரைவாங்கி வருவதாக பெருந்திரவியம் எடுத்துக்கொண்டு பெருந்துறை நோக்கி வருபவர் வழியில் உண்டான நற்சகுனங்கண்டு தனக்கு அருள்புரியும் ஆசாரியர் கிடைப்பாரென்று சென்றார்.

திருப்பெருந்துறையில் ஆசாரியனுக்கிரகம் பெற்று தம் விருப்பத்தின்படி திரவியங்களைத் திருப்பணியிற் செலவழித்து விட்டு பாண்டியனிடம்

ரை வருமென்று சொன்னர். சிவபிரான் அவருக்காசக் காட்டிலுள்ள நரித்
ள்களைப் பரித்திரள்களாக்கிக் கொண்டுவந்து பாண்டியனிடம் கொடுத்துச்
ன்றார். அவை மீண்டும் நரிகளேயாகி ஓடிவிட்டன. பாண்டியன் மந்திரிய
ிய மாணிக்கவாசகரைப் பிடித்து வருத்தினன். அதன்பேரில் வைகை பெருகி
. வந்திக்காகப் பெருமான் கூலியாளாகி வந்து உடன்பட்டபடி கரையை
டக்காமைக்காகப் பாண்டியன் கோபித்து அடித்த அடியை உலகிலெல்லா
ம்படி செய்து ஒரு கூடை மண்ணினற் கரையை அடைத்து மறைந்து நின்
னிக்கவாசகரது தன்மையை மன்னவருக்கு உணர்த்தினர். அரசன் அ
பணிந்து அழைக்கவும் இசையாது, மாணிக்கவாசகர் துறவு மேற்கொண்
பட்டுத் திருப்பெருந்துறையை அடைந்து, ஆசாரியரின் பிரிவுக்காக வரு
பெருமான் கட்டளைப்படி இதர க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்
லையை அடைந்து சிவயோகத்திருந்தார். வாதுக்கு வந்த புத்தர்களை பெரு
ஆஞ்ஞைப்படி வாதில் வென்றார். ஈழத்தரசன் பெண்ணின் ஊமைத்த
யைப் போக்கினர். பின் பெருமான் வந்து கேட்கத் திருவாசகமும் திருக்கே
யும் வகுத்தார். பெருமானல் அலற்கேறயடைந்த தீக்ஷிதர்கள் அவற்றுக்குப்பெ
கேட்க, பொருளாவார் சிவனே என்று காட்டிச் சோதியுட் கலந்தார்.
இவர் இல்மையில் தம்மிடம் வந்து கேட்பவருக்கெல்லாம் வரையாது
ய வழங்கினர். இவ்வாறே கல்வியுடையவர்கள் அதில் விருப்புடைய பிற
வேண்டும்.

செல்வமுள்ளார் தெய்வசிந்தனை கொள்ளார். இவர் தமக்குவந்த எல்
ம்வும் பிரானருளே எனக்கொண்டார். உலகத்தோர் சுகம் வந்தபோது
ள் அதிர்ஷ்டம் என்றும், கஷ்டம் வந்தபோது பாழுந்தெய்வம் அதைச்செ
டதென்றும் சொல்லுவார்கள். இவர் சுகம் வந்தபோது பெருமானருளெ
கஷ்டம் வந்தபோது அது தம் வினையின் பயனென்றார்.
ஈசுவர விசாரணை செய்வாராகி கற்று வல்லோர் வருந்தோறும் கடவுளையும்
தியடையும் நெறியையும் பற்றிக் கடாவுவார். இது மற்றவர்களும் பார்த்து
பற்றத் தக்கது.

உலகத்தார் தங்களுக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும் பாரிக்கலாகாப் பட்டங்
த் தாங்களே தாங்கித் திரிவார்கள். இவரோ மகா தேவனளித்த மாணிக்க
ப்பட்டத்தையும் பிறரறியா வண்ணம் மறைத்தொழுகினர்.

ம் "மாணிக்கவாசக"ருடைய பாட்டுகள் சொற்சுவை பொருட்சுவைகளில்
னியன! அவை சைவர்களால் வேதத்திற்கு ஸாம்ய முடையன வாகக்கருதப்
ன்றன.

"மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தின் மாண்டோர்கள்
கனஞ்சடை யென்றுருவேற்றிக் கண்மூடிக்கதறுவரோ"

ரர் ஸ்ரீ சுந்தரம் பிள்ளையவர்களும், மாணிக்க வாசகருக்காகப் பெரு
ணியற்றிய திருவிளையாடல்களை திருநாவுக்கரசர் தம் தேவாரத்திற்
லிக்கின்றார். திருநாவுக்கரசும், திருஞான சம்பந்தரும் ஒரே காலத்
ர்கள், திருஞான சம்பந்தர் காலம் கி. பி. 610-எனத் தீர்மானிக்
பட்டிருக்கின்றது. ஆகையால் இம்மாணிக்கவாசகர் 610-கி. பி. க்கு முன்னி
ந்திருக்க வேண்டும். சங்கத்தார் காலம் கி. பி. 113-எனத் தீர்மானிக்கப்பட்
ருக்கின்றது.

சங்கத்தார் நூலில் மாணிக்கவாசகரைப் பற்றிப் பிரஸ்தாபமில்லை,
ணிக்கவாசகர் கோவையில் சிறைவான் என்று தொடங்குகிற செய்யுளில்
கத்தாரைக் குறிக்கின்றார். ஆதலால் மாணிக்கவாசகர் காலம் கி. பி. 113-க்
பின்னும் கி. பி. 610-க்கு முன்னும் இருக்கவேண்டும்.

ம. வீ. மீனாக்ஷிசுந்தர முதலியார் பி. ஏ.



# சமாசாரக் குறிப்பு.

மிஸஸ் பானர்ஜி என்ற சங்கீத விற்பன்னை.—கல்கத்தாவில் கிறிஸ்து
கத்தில் சேர்ந்து பாதிரியாக இருக்கும் மிஸ்டர் பானர்ஜி என்ற ஒரு
மனைவியாகிய மிஸஸ் பானர்ஜி என்றமாது இங்கிலண்டில் போய் ஓர் பெரிய
டன் சபையார் முன்பு இங்கிலீஷ் சங்கீதம் பாடிப் புகழ்பெற்று இப்போது
யாவுக்குத் திரும்பியிருக்கிறாள். இம்மாதைப்பற்றி லண்டன் பத்திரிகைகள்
புகழ்ச்சியாகப் பேசுகின்றன.

காசி நகரத்து மாதர் சங்கம்.—காசியில் கூடிய மாதர் சங்கம் வெகு
மாக நிறைவேறிற்று. அக்கிராசனம் வகித்த பிரதாபகர் மஹாராணியார் ஜ
விஷயங்களிலே மாதர்களது வன்மை எத்தனை தூரம் செல்கிறதென்பதை
கூடியிருந்த பெண்களுக்கு நன்றாக வற்புறுத்திக் காட்டினர். அதிபாலிய
கம் பெருந் தீங்கென்றும், அதனை நீக்கும் விஷயத்தில் மாதர்களை மிக்க
மெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், போதனை புரிந்தார்.

காசி ஆசாரத்திருத்தச் சங்கத்தின் முதல் தீர்மானம்.—(The Fist I
bution in the Benars Social Coference)

பிரேரேபகர்:—மிஸஸ், ரமண்பாய் மஹீபத்ராம் (என்றமாது)

பெண்கல்வி அவசியமென்றும், அதனைப் பாடசாலைகள், வீட்டுப்பாட
உபந்நியாசங்கள் என்பவற்றால் பெண்கல்வியை விருத்திசெய்ய வேண்டு
றும், பெண்கள் விருத்தியாகாத ஜனசங்கம் சர்வ நாசமாகி விடுமென்றும் இ
மானம் வற்புறுத்திற்று.

ஆமோதித்தோர்:—
(1) ஸ்ரீமதி சாஸ்திரி தேவி (ஹிந்திபாஷையில்)
(2) லாலா தேவராஜ்
(3) லாலா சிவதயால பாடியாலா
(4) மிஸஸ் ஸாளதேவி சௌதரி (லாகோர்)
(5) மிஸஸ் தாராயாய் (இங்கிலீஷில்)

ஆறு வயதுள்ள ஓர் பெண்குழந்தை மேற்படி விஷயத்தைப் பற்றிப்
பாடி மகிழ்வித்தது.

பாபு சுரேந்திரநாத் பானர்ஜி காசி விசுவேசுர சந்நிதியிலே செய்துகொ
பிரதிக்கினை,—ஜனவரி மாதம் 1-ம்தேதி காலையில் பாபு சுரேந்திரநாத் பா
அனேக பெங்காளி நண்பர்களுடனும் பரிவாரங்களுடனும் கங்காநதியில்
சென்று ஸ்நானம் செய்துகொண்ட பிறகு அங்கிருந்து "வந்தே மாதரம்"
தேசகீதம் பாடிக்கொண்டு விசுவேசர் ஆலயத்திற்கு வந்து சேர்ந்தார். அப்பே
விசுவேசர் முன்னின்று கொண்டு அவ்வனைவரும் பின் வருமாறு பிரதிக்கி
செய்து கொண்டார்கள்:—

"ஈசா, உனது காருண்ய விசேஷத்தால் எங்களது இச்சை நிறைவே
தாக. நாங்கள் எங்களால் கூடியவரை அன்னியதேசச் சாமான்களை தள்ளி
எங்கள் தாய்நாட்டில் செய்யப்பட்ட சாமான்களையே வாங்குவதாக உனது
வடிமீது ஆணையிட்டுக் கொடுக்கின்றோம். இம்மாதிரியே எல்லாருடைய
லும் நல்லெண்ணம் ஏற்படுமாறு நீ திருவருள் புரிவாயாக. ஜய்விசுவ
வந்தே மாதரம்!"

ன்க அடையாற்றில் மஸஸ் அன்னி பெஸான்ட்—மிஸஸ் பெஸான்ட் தியஸ ன்ஸ் சங்க மண்டபத்திலே பிளாவட்ஸகியம்மையின் பிரதிமையின் கீழ் உ யர்ந்துகொண்டு தம்மிடம் சூக்ஷ்ம தர்மத்தைப்பற்றிக் கேள்வி கேட் களுக்கெல்லாம் தக்கபடி மறுமொழி கூறித் திருப்தி செய்துகொண்டிரு அப்போது ஹிந்துக்கள், பார்ஸிகள், ஐரோப்பியர் முதலிய பலவகுப் ங்களும் வந்து கூடியிருந்தனர். கடைசியாக ஒருவர் "விதவா விவாக" ன ஓர் கேள்வி கேட்டார்.

"விதவா விவாகம்".—மேற்படி விஷயத்தைப்பற்றி மிஸஸ் அன்னி ஸான்ட் தாம் எப்போதும் கூறியுள்ள அபிப்பிராயத்தையே மறுபடியும் விச த் தெரிவித்தார். அம்மாது சொல்லினர்:—

(1) விதவா விவாகம் செய்வது கூடாது.

(2) ஆனல் பாலிய விதவைகளின் ஸ்திதி எனக்கு உண்மையாகவே மன அளிக்கின்றது.

(3) விவாகத்தின் பரிசுத்தத் தன்மைக்குக் கேடு விளைக்கக்கூடிய எவ்வி ாடும் நீக்கத்தக்கதேயாகும்.

(4) சின்னப் பையன்களுக்கு விவாகம் செய்யாமல் நிறுத்திவிட்டால் பால வ களின் தொகை மிகவும் குறைவாகி விடும்.

(5) இங்கிலண்டில் சாமளவும் விவாகமின்றிப் பெண்கள் இருக்கும்படி டிருக்கும் நிலைமையிலும் இத்தேசத்தின் நிலைமை குறைவானதன்று.

---

## மைக்காலத்து மாதர்களின் பாட்டுக்கள்

No I.

### ஸ்ரீ பார்வதி அம்மன் சோபனம்.

து ஸ்காந்த புராணத்தில் ஸ்கந்தர் அவதாரம் வரையில் உள்ள கதையை ம்து தமிழ் நாட்டு ஸ்திரீகள் எளிதில் தெரிந்து கொள்ளும்பொருட்டு ரூபமாய் செய்யப்பட்டுள்ளது. எந்தக்காலத்தில் எவரால் பாடப்பட்ட பது தெரியவில்லை. மிக பெரிதாகையால் இதை முழுவதும் நெட்டுருச் த ஸ்திரீகள் வெகு அபூர்வம். சில பாகங்களை மாத்திரம் கல்யாண காலங் ல் சொல்லுவது வழக்கம். முழுவதும் வாசித்துப் பார்த்தால் ஒரு ஸ்திரீயினல் ன் பாடப்பட்டிருக்க வேண்டுமென்று நன்ருய் விளங்குகிறது. அச்சிலில்லாமல் கு காலமாய் வாய் மொழியாலேயே ஆதரிக்கப்பட்டு வந்திருக்கிறபடியால் ழைகள் விசேஷமா யிருக்கலாம். அதிகப் பிழைகளைக் கூடியமட்டும் திருத்தி க்கிறேன்.

R. S. சுப்புலக்ஷ்மி அம்மாள்.

### விநாயகர் துதி.

ரவில்தும்பி விநாயகனை ஸ்ரீஹரியார்தன் மருமகனை
ஹரிசகோதரி யாள்மகனை ஆதிமூர்த்தி விநாயகனை
அமர்ந்த சுந்திர நடையனை சிவந்த பங்கஜ நயனனை
தளர்ந்ததொந்தி விநாயகனை பணிந்து பாடுவோம் சோபனமே.



### அம்பிகை துதி.

பார்வதியாள் சோபனத்தை பக்தியுடனே நான்பாட
ஈஸ்வரியே என்னுடைய ஹிருதயந்தன்னில் வாருமம்மா
ஏர்வையான பெண்மணிகாள் இன்பமுடன் கூடிக்கொண்டு
கோர்வையாகவே நின்றுகொண்டு (நீங்கள்) குனிந்து பாடுங்கள் சோபன

### தாக்ஷியாயனி அவதாரம்.

பிரமனிடத்தில் உதித்தவராம் பிரம்மாண்ட சிருஷ்டி வகித்தவராம்
அக்ஷரநாயகி பாலகராம் தக்ஷப்பிரஜாபதி என்பவராம்
அகிலபுவன சிருஷ்டியிலே அதிகசிரத்தை யுடன்கூடி
அமரமண்டல மத்தியிலே ஆதித்தன் ஒளி போலிருந்தார்
சகலபுவன காரணியை சச்சிதானந்த ரூபிணியை
அச்சுதருக்கு சகோதரியை தக்ஷரும் நோக்கித் தவமிருந்தார்
பச்சைவர்ணமேனி யம்மனவள் பிரத்தியக்ஷமாகி எதிரில்வந்து
இச்சையுடனம்மன் தக்ஷரைநோக்கி என்னவாம் வேண்டுமென்ருள்
போற்றிசெய்து தக்ஷரும் அம்மனை (தன்) பெண்ணுகவரக் கேட்டுக்கொண்
பார்த்து அம்மனும் கிருபையுடனே பாலையாகவே தோன்றி நின்ருள்
அன்புடனே குழந்தையைக்கொண்டு அரண்மனைக்கே வந்துவிட்டார்
பந்துஜனங்க ளுடன்கூடி சந்தோஷங்கள் கொண்டாடினர்.
தக்ஷப்பிரஜாபதி கன்னிகைக்கு தாக்ஷியா யணியென்று பேருமிட்டார்
நித்திய கலியாணியின் பாலலீலைகளை நித்தியம் பார்த்து மகிழ்
இந்தப் பெண்மணிக்கு ஏற்றகணவன் ஈசுவரனென்றே நினைத்திருந்
பரமசிவனும் எழுந்தருளிப்பாரா சக்தியைக் கலியாணம் பண்ணி
அமைந்தகைலை மத்தியிலே அம்மனுடனே வசித்திருந்தார்.

### தக்ஷப்பிரஜாபதி யக்யம்.

தக்ஷப்பிரஜாப தியக்யம் செய்யும்போது அக்ஷயமானந்த ஈசுவரியை
கக்ஷிகூடி அழையாமலம்மனை பக்ஷபாதமாய் தக்ஷனிருந்தான்
அந்தமுமாதியு மற்றசிவன் எந்தவிதமாய் தடுத்தாலும்
பெற்ற பிதாவென்ற பாசத்தினல் குற்றம் பரிகாரஞ் செய்யவென்
தேவியும் மெத்த ஆசையுடன் தோழிமாரை அழைத்துக்கொண்டு
வாழைமரம்போல் தொடையுடையாளரை நாழிகையிலே வந்துவிட்
யக்யசாலையில் வந்த அம்மனை யக்யரூபியென் றெண்ணுமல்
அக்யானத்தாலே, தக்ஷரும் அம்மனை ஆதரிக்காமலே யிருந்தார்
அம்மனும் மிகுந்த கோபத்துடனே அந்தக்ஷணமே மனந்தளர்ந்து
அப்பொழுதே சொன்ன ஆண்டவன் வார்த்தையை ஆதரித்தாலி

துடனே தயங்கி யம்மனும் விக்கி விக்கி யழுதுகொண்டு
த்தினிமாருடன் வீற்றிருக்கும் பெற்றதாயண்டையில் வந்துநின்றாள்
இல்லாத தாயாரும் பரி பூரணியென்று எண்ணுமல்
ற்றுமதிக்காமலே யிருக்க அதை சங்கரி ஆற்ற முடியாமல்
கேசார வேலையென்று எண்ணி இருள்மூடன் யக்ய சாலைவந்து
(ந்த)அவமானந்தன்னை சங்கரர் கேட்டார், அவமானம்நமக்கென்றுஎண்ணி
க்கினி தீயிலே விழ சித்தமாகவே ஓடிவந்தாள்
ந்தோழிமார் ஓடிவந்து எத்தனைவிதம் மறுத்தாலும்
னது திரும்பாமல் தீயில் குதித்து மறைந்துவிட்டாள்
ம்மன் தீயில் குதிக்கவுமே அந்த சபையோர் நடுங்கிவிட்டாள்
ிந்து மஹாதேவர் அக்கினிகண்ணை திறந்துவிட்டார்
ேகோப மடையவுமே அப்போது குதித்தார் வீரபத்திரர்
லயில் ஓடிவந்து இந்திராதிதேவர் களையடித்து
ப்பிரஜாபதி யின்தலையை அக்கினி தன்னிலே போட்டுவிட்டார்.
ந்த அமரர்எல்லாம் ஆதிசிவனண்டை ஓடிவந்து
ியுமையா சரணமென்னவே முக்கண்ணர் கோபந் தெளிந்துவந்து
ர ஜாபதிக் காட்டுத்தலையை யக்யத்தை நிறை வேற்றிவைத்து
ிணமூர்த்தி வடிவத்துடன் தெற்குமுகமாய்த் தவமிருந்தார்
வமாய்த் தானிருக்க சனகாதி முனிவர்கள் தானும்வந்து
ிணமூர்த்தியைத் தான்பணிந்து தத்துவ உபதேசங் கேட்கலுற்றார்.

R. S. சுப்பலக்ஷ்மி அம்மாள்.

(இன்னும் வரும்)

## விடுகதைகளுக்கு விடைகள்.

ஷு நவம்பர்-மீ பத்திரிகையில், 96-ம் பக்கத்தில் உருக்குமணி அம்மாள் கதைகளுக்கு விடைகள்.

1-வது வினவுக்கு கமலம்.
2-வது வினவுக்கு கரண்டகம்.

எஸ். ஞானவடிவுடை அம்மாள்.

## விடுகதை.

ன் பிரியமான சகோதரிகளே! அடியில்கண்ட விடுகதைக்குப்
பொருள் சொல்வீர்களாக.

ந்திபெரு கொண்டையுண்டு முடிப்பதில்லைப்
பணப்பையைப் பிடித்திடலுண்டீய்தலில்லை
ந்தத லெல்மகப் பெறலுண்டணைதலில்லை
விழிகள் பலவுண்டவற்றிற் புலமதில்லை
ந்துநடம் புரிவதுண்டு பின்பாட்டில்லை
வனர்சேயை யேந்துதலுண்ட கங்கையில்லை
தமிழ் சாற்கரலந்தனிற் சந்தோஷம்
ரவில்தாங்குமிந்தப் பொருளறிந்து சாற்றுவீரே.

எஸ். ஞானவடிவுடை அம்மாள்.



# பண்டிதை அ...ாம்பிகை யம்மை
...து.

ஸ்ரீ

Vol. 2. } Ma...
தொகுதி-2. } சென்னை, ...

## சென்னையில் ராஜத...

OFFICE OF ... 9- APR 190..

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் ஜனவரிமீ 24உ சென்...
இறங்கினர். சென்னை நகரமும் அவர்கள் பார்வையிட்டு வந்த மற்றெல்...
ிய நகரங்களையு மொப்ப ராஜதம்பதிகளை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்...
ிறப்புச் செய்தது. நவம்பர்மீ நாம் ராஜதம்பதிகளைப்பற்றி எழுதிய காலத்தில் வேல்ஸ் இளவரசியாரின் ஞாபகச் சின்னமாக இந்நகரத்திற் கோர் மாதர் ஹைஸ் கூல் ஏற்படுதல் தகுமென்று அறிவித்திருந்தோம். அவ்விருப்பம் நிறை வேருமற் போய்விட்டது. என்றாலும் ராஜா ஸர். ஸவலை ராமசாமி முதலியார் சில வருஷங்களின் முன்பு மகாராணியாரின் ஞாபக சின்னமாக ஓர் மாதர் ஹைஸ்கூல் ஸ்தாபிக்கப் போவதாக வாக்களித்திருந்ததை சமீபத்தில் நிறை வேற்றப் போவதாக இரண்டு வாரங்களின் முன்பு பத்திரிகைகளில் உறுதி கூறினது நமது மனதிற்கு மிகவும் இன்பமளிக்கின்றது.

ராஜதம்பதிகளின் வரவு பற்றிய விசேஷங்களெல்லாம் மற்றோரிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இங்கு வேல்ஸ் இளவரசியாரைப் பற்றி மட்டிலும் ...மாக ஓரிரண்டு விஷயங்கள் எழுதிவிட்டு இக்குறிப்பை முடித்து விடுகின்றோம். இளவரசியார் பூமண்டலத்தில் ஐந்திலொரு பகுதிக்குக் கர்த்தருடைய பட்டத்து குமாரன் மனைவியாயிருந்த போதிலும், அவர் ஆடையிலும், தோற்றத்திலும் சிறிதேனும் ஆடம்பரமின்றி விளங்கியதை நமது நாட்டுமாதர் நன்கு கவனி

க்கவேண்டும். சொற்பத் திரவியமுள்ள குடும்பத்தில் பிறந்தோருங்கூட இத்தேசத்தில் நகைப் பைத்தியங் கொண்டலைகிறார்கள். வயிற்றிலே சோறில்லா விட்டாலும் நமது ஸ்திரீகளுக்குக் காதிலே வயிரக்கம்மல் வெகு அவசிய மென்று தோன்றுகிறது. அப்படி யிருக்கச் சக்ரேசுரனுடைய மருமகளாகிய இளவரசி விசேஷ ஆபரணங்களொவையு மின்றி வெகு சாதாரணமாகத் திகழ்ந்தமை பார்ப்பதற்கு வெகு ஆச்சரியமாக இருந்தது.

கோஷா ஆஸ்பத்திரியிலும் கவர்ன்மெண்ட் மாளிகையிலும் சென்னை முக்கிய மாதர்களுக்கும் இளவரசிக்கும் நடந்த சம்பாஷணை முதலிய வற்றின் விவரங்கள் பிரசுரிக்கப்பட வில்லை. இன்னின்ன மாதர்கள் வந்திருந்தன ரென்ற பெயர்ஜாப்தா மட்டிலும் பிரசுரமாயிற்று. என்றாலும், பம்பாய் முதலிய இடங்களைப் போல அசம்பா விதமான சடங்குகள் இங்கு ஒன்றும் நடைபெற ... ன்டு ... டய ... வில்லை.

## யாத்திரையில் ஓர் ... பாட்டுவிட் ... ற ... குறை.

இந்தச் சிறப்பு மிக்க யாத்திரை ... கோபத் ... எத்தனையோ பத்திரிகைகள் எழுத ... தினயில் ஓர் ... றை மட்டிலும் ஏற்பட்டது. அதை துரைத்தல் மிகையாகமாட்டினி ... த்துக் காட்டி ... ருந்த போதிலும் நாமும் எடுத்துப் பார்த்துச் சென் ... னிற் ... டாது. அதாவது த ... லைவும் நகரத்தை மட்டிலுமே ... ற ராஜதம்பதிகள் தென்னாட்டின் ... அழகிய நகராத்தினங்களாகிய காஞ்சி, தஞ்சை, திரிசிரபுரம், ஸ்ரீரங்கம், மதுரை, திருநெல்வேலி, என்ற பழம் பெரும் பட்டணங்களைப் பார்வை யிடாமல் செல்வ ... தனால் அவர்களுக்கு நமது மாகாணத்தைப்பற்றி கண்டு அறிந்து செல்லவழியில்லா ... து போய்விட்டது. ஜனங்களின் உண்மையான நிலை உணர முயலாமல் டம்பமா ... ன வெளிக்கோலங்களை மட்டிலும் பார்வையிட்டுச் சென்றார்களென்ற மற்றொரு ... குறை இருக்கின்றது. அதனை விரித்துக் கூறுவதற்குத்தக்க காலமும் இடமும் இ ... ல்லாததனாலும் இத் ... துடன் நிறுத்துகின்றோம்.

## பாடல்கள்.

இளவரசர் வரவைப்பற்றி அநேகர்களால் இனியபாடல்கள் பா ... ப்பட்டுள்ளன. பூவை-ஸ்ரீ-கலியாண சுந்தர முதலியார், பண்டித வெங்கட்டராமை ... யங்கார் இப்பத்திரிகை ஆசிரியர் முதலிய அநேகர் செய்யுளெழுதி யிருக்கிறார்கள். ... இவை யனைத்தினும் பண்டிதை அசலாம்பிகை எழுதி யிருக்கும் பாடல் எளித் ... ாயும் சுவையுடைத்தாயு மிருப்பது பற்றியும், பெண்மணி எழுதியிருக்கும் சிறப்புப் ... ற்றியும்; அதனைக்கீழே பதிப்பிக்கின்றோம்.



# பண்டிதை அசலாம்பிகையம்மை இயற்றியது.

I

வாழி நீடூழி பல்லூழி—உவர்
 ஆழிசூழும் புவியாள் யுவராஜர்—வாழி நீடூழி

மன்னவர் மன்னற்கு மைந்தன்—நந்தம்
 அன்னை விஜயை யருள்வழிக்கந்தன்—வாழி நீடூழி

பெற்ற பிதா முன நம்பால்—பரிந்
 தற்றதுபோல வடைந்தன ரன்பால்—வாழி நீடூழி

இந்தியர் பால்நேசந் தாங்கி—பெற்ற
 தந்தையை யீன்ற தலைவியி னோங்கி—வாழி நீடூழி

இத் தேசம்போல் ராஜபக்திக்—குற்ற
 எத்தேசமும் இலையென் றுணர்ந்து—வாழி நீடூழி

ஆன்ற குடிப் பிறப்பார்ந்த—இவர்
சான்றுணர்வால் உலகோர்க் கருளோர்ந்து-வாழி நீடூழி

ஈடில் சுதேசியத்தாலே—இந்த
 நாடு செழித்திட நற்செயற் கின்பாய்—வாழி நீடூழி

கீகரில் விசுவாவசு தன்னில்—மதி
 மகரம் பனிரண்டி லெய்தினர் சென்னை—வாழி நீடூழி

சீரியர் ஆசிகள் பாட—எழில்
 மேரி விக்டோரியா டெக்கொடுங்கூட—வாழி நீடூழி.

II.

1. உலகமெலா மொரு குடைக்கீழினிதாளற்குரிய விளவரசே நீதான்
 இலகுபுகழ்க் கோல்தாங்கிப் பேரரசா யமர்காலை யிணையிலா நின்
திலகநிகர் திருமகனார் இளவரசா யிவண்வரவும் சென்னை மாந்தர்
 அவகில்லா வுவகையொடு மெதிரேற்க விழைகின்றார் ஆர்த்துமாதோ.

2. ஆனரச ரடிவணங்க முடிசூடி யொருகுடைக்கீழ் அவனி யாண்ட
 மாணரசியாகிய நின்மூதாட்டி யிந்தியர்க்கு மகிழ்வா யீந்த
பேணுறுநல் லுரிமையெலாம் பேரறுல் நெறிமுறையே பெறுவோ ரென்னக்
 காணுறுநின் குடிகளெலாங் கண்மலர்ந்து மனங்குளிர்ந்து களிக்கின்றால்

3. பொய்யாத விந்தியரைப் பொதிந்திருக்கும் வறுமையெனும் பொல்லாக்கங்குல்
 மெய்யாம் சுதேசியமென் றுரைபெறு நல்லாதவனால் விலகி யேகச்
செய்யாநின் றிடுநினது சீர்வரவின் பாக்கியமென் றுள்ளே சிந்தித்
 தையாயாம் பெறுமகிழ்விற் களவுண்டோ நிகருண்டோ அறையுங்காலே.

# பாரத குமாரிகள்.

உமா தேவியானவள் எல்லா அண்டகோடிகளையும் ஈன்று வளர்த்த போதிலும், அநாதி காலந்தொட்டுத்தான் வாழ்பவளானபோதிலும், அவள் இது வரை நரை, திரை, மூப்பு, பிணி, என்பன யாவுமில்லாது நித்ய கன்னிகையாய் விளங்குகிறாளென்று சைவர்கள் கூறுவதுண்டு. சைவர்கள் உமாதேவியிடம் எத்தனை பக்திவைத்திருக்கிறார்களோ, அத்தனை பக்தியையும், அன்பையும், எமது தாய்ப் பெருந்தேசமாகிய பாரத கண்டத்திருமாதின் மீது செலுத்துகின்ற நாம் இப்பாரத மாது நிரந்தர கன்னியென்பதாகவும், இவளுக்கும் நரை திரை முதலியவை இல்லையென்பதாகவும் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்றோம். சரித்திர நூலார் வகுத்தறிய மாட்டாத பழங்காலத்திலிருந்து இன்றுவரை கோடானுகோடிகளாகிய உயிர்த்தொகைகளை ஈன்று அருமையுடன் வளர்த்தவளான போதிலும், இப் பெண்மணி "கோடியீன்ற அன்னையாய் இன்னமுங் கன்னியாய்த்' திகழ்ந்துவருகின்றாள். ஆனால் இவளைப்பார்க்கும் போது கன்னிகைக்குரிய சின்னங்கள் பல தோன்றவில்லையே; வயது முதிர்ச்சிக்குறிகள் காணப்படுகின்றனவே; இவளது அழகு நிறைந்த மணிவதனம் சிறிது கருமை யடைந்துவிட்டதே; இவளது கருணைத்திரு விழிகள் சிறிது குழிந்து போயினவே; கன்னங்கள் வாடிப்போயினவே; புன்னகையும் உற்சாகமும் ஊக்கமும் இவளது திருமுகத்தில் குலவக்காணோமே; எனச்சிலர் திகைக்கலாம்.

எனினும், செம்மையாக உற்று நோக்குமிடத்து இத்தேவியர் சிகாமணியின் முகத்திலுள்ள வாடுதல் மெய்யான முதுமைப்பிராயத்தினால் நேர்ந்ததில்லையென்றும், இவளது மனத்திலே உண்டாயிருக்கும் ஓர் சஞ்சலத்தினால் நேர்ந்துளதென்றும் நன்குவிளங்கும். பாரதாம்பிகைக்கு இக்கொடுந்துயரம் என்ன காரணத்தால் உண்டாயிற்று? இது நீங்கும் உபாயந்தான் யாது? என்ற விஷயங்களைப்பற்றி ஆலோசனை புரிவது நம்மவரின் முக்கியக்கடமை யாகும்.

## பாரதாம்பிகையின் துக்ககாரணம்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக்கேட்ட தாய்" என்றார் வள்ளுவர். இது எத்தனை உண்மையோ அத்தனை இதன் எதிரிடையும் உண்மையாகும். புத்திரப்பேறு உண்டான காலத்தில்மாதாவுக்குண்டான மகிழ்ச்சியைக் காட்டிலும் அப்புத்திரன் சான்றோனென்ற சொல்லைக்கேட்கும் போது அதிக மகிழ்ச்சி விளையுமாயின் மகன் சான்றோன் அல்லன் என்ற சொல் செவிப்படும்போது அத்தாய் மனம் அவன் இறக்கும்போது உண்டாகும் துயரத்திலும் அதிகத்துயரடையுமல்லவா? "மாயும் பொழுதிற் பெரிதழுங்குந் தன்மகனைக்



கீழோன் எனக்கேட்ட தாய்". பாரதமாதாவும் இக்காரணத்தாலேயே துயரடைந்து நிற்கின்றாள்.

"அந்தோ! வியாசன் புத்தன், சங்கரன், முதலிய மகான்களையும், இராமன், பார்த்தன், சிவாஜீ, பிரதாபஸிங் முதலிய வீரர்களையும் பெற்ற என்வயிற்றிலே இப்போது ஆண்மை யிழந்து, சுயமதிப்பற்று, தேசாபிமானத்தின் பெயரறியாமல் நோய், மிடி, அறியாமை என்ற படுகுழிகளிலேவீழ்ந்து கிடக்கும் பேதைகளா, பிறக்கவேண்டும்? நேற்றுவரை பெயர் கேட்டறியாத அற்பநாடுகளிலெல்லாம் உயர்மக்கள்தோன்றி அத்தேசங்களைப் பெருஞ்சிறப்பில் கொண்டுவைத்திருக்க என்மக்கள் மட்டுமா இங்ஙனம் சீர்குலைந்திருக்கவேண்டும்? இயற்கையலங்காரத்திலும் அழகிலும், பெருமையிலும் என்னில் கோடிமடங்கு சிறியவளாகிய 'ஜப்பான்' தேவியின் பிள்ளைகளின் புகழ் திசைகளனைத்திலும் சென்று சேர்தவில்லையா? சிறிதேனும் அழகின் றிருளிரில் வருந்திக்கொண்டிருக்கும் "ருஷியா" என்றவடதிசை அரக்கி வயிற்றிலேகூட இப்போது சில நல்ல குமாரர்கள் தோன்றியதாகச் சொல்லிக் கொள்கிறார்களே? இப்படி அடுக்கிக்கொண்டு போனதில் என்ன பயன் இருக்கிறது? ஒன்றா, இரண்டா? எத்தனையோ நூற்றுக்கணக்கான சகோதரிகள் என்னிலும் புகழ்மிகுத்து விளங்குகிறார்கள். என்னை அவர்களனைவரும் கண்டு நகைக்கும்படியான கதிவந்து விட்டது. எனது விவேகாநந்தன் (Swami Vivakananda) கேசவ சந்திரன், (Keshub Chunder] தயாநந்த சரஸ்வதி (Dayananda saraswatee) என்ற அருமைப்பிள்ளைகளும்போய்விட்டார்கள். இவர்களுந்தானென்ன? முன்னை மக்களிலே முக்கோடியிலொருபங்கு பெறமாட்டார்கள். இப்போதைக்கு ஏதோ கடுகத்தனை நவரோஜி ஒருவனிருக்கிறான். புத்திரர்களின் நிலைமை இவ்வாறாக எனதுகுமாரிகளின் கதியை நினைக்கும் போதே வயிறு பொங்குகின்றது. மைத்திரேயியும் ஸீதையுமிருந்த நாட்டிலே சூரிய கிரணம் பார்த்தறியாத புழுக்களைப்போன்று கல்வி, அறிவு, முதலியயாது மில்லாத பெண்கள் உலவுகிறார்கள். தலைமுறை தலைமுறையாக இப்பேதைப் பெண்கள் தோள்வலியும், ஆண்மையும், பெருந்தகைமை யுமில்லாத அடிமைப் பிள்ளைகளைப் பெற்று என்னை பங்கப்படுத்துகிறார்கள். ஐயோ, ஐயோ!"

என்று பாரததேவி ஆவிதுடிப்பதினாலேதான் அவளது திவ்விய வதனத்தில் ஒளிமங்கி முதுமைக்குறிகள் தோன்றிவிட்டன.

மேற்கூறிய வாறு பாரதாம்பிகை வருந்துதல் நீங்கற்குரிய உபாயம் இன்னதென்பது மிக்க சுலபமாக விளங்கும். இந்நாட்டு மாதர்கள் கல்வியும், ஞானப் பரப்பும் மிகப்பெற்றோங்கி, அவர்கள் வயிற்றிலேபிறக்கும் மக்கள்நோய் நீங்கிய உடலும், இருள் நீங்கிய அறிவும், பெருந்தகைமையும், கருணையும், அடிமை நிலையில் வெறுப்பும், கொண்டு விளங்கத் தொடங்குவாராயின் பாரதாம்பிகையின் மனத்துயர் ஆறத்தொடங்கும். ஆண்மக்கள் தாமாகவே முயற்சி பண்ணி ஓர் நாட்டை

பெருமை செய்துவருவதுஞ் சாத்தியமில்லை யென்பதை நாம் எத்தனையோ முறை இடித்திடித்துக் கூறி யிருக்கின்றோம். இவ்வுண்மையைக் கோடி முறை கூறிய போதிலும் அஃதோர் மிகையாகமாட்டாது சென்ற 50 வருஷங்களாக இந்நாட் லே பலர் ஜன சாரங்களையும் சமய நிலைகளையும் ராஜாங்க மாதிரிகளையும் திவிடவேண்டுமென்று பகீரதப்பிரயத்தனம் செய்து பார்க்கிறார்கள். இவ் முயற்சிகளிற் பெரும்பாலும் அரைக்காசுக்குப்பயன் படவில்லை. இம்மா இது னும் இவர்கள் 500 வருஷம் முயன்ற போதிலும் திவலை பயன்படப் கயா தில்லை. தேசத்தின் "சத்திரூபங்" களாகிய மாதர்களை அறிவின்மை த்தனை பேரிருளில் ஆழ்த்திவைத்துவிட்டுத் "தேசாபிவிருத்தி" "தேசாபிவிருத்தி தாய் கூக்குரலிடுவோரின் பேதைமையை என்னென்றுரைப்போம்?

### Can man be free if woman be a Slave?

என்ற ஆங்கிலப்புலவர் பெருமான் வாக்குநம்மனோர் மனத்திலே எப்போதும் நீங்காமல் தங்கியிருத்தல் தகும். மாதர் அடிமைகளாகநிற்ப; ஆடவர் சுயாதீனமுறல் எவ்வாறு இயலும்? என்று அப்புலவர் கேட்கின்றார், சுயாதீனமென்றால் ராஜாங்கச்சுயாதீனம் என்பது மட்டும் பொருளில்லை. அபிவிருத்திக்கு முக்கியக்காரணமாகிய அறிவுச்சுயாதீனமென்பதே முக்கியப் பொருளாகும். இருளடைந்த இடங்களிலெல்லாம் விஷக்காற்றுக்களும், நினைக்கவும் அருவருப்பாகிய விஷப்பூச்சிகளும் வந்து கூடும். நமது தேசத்தின் "ஆதாரசக்தி" களாகிய மாதர்களின் ஹிருதயமும், அவர்களது ஆன்மாவும் இருளடைந்து போகவிட்டு விடுவதைக் காட்டிலும் பாதகச்செயல் வேறில்லை. ஞானகிரணங்கள் அவர்களது ஆன்மாவில் தாக்குமாறு செய்தாலன்றி நமக்கு வேறு விமோசனம் கிடையாது.

### பெங்காளத்துப் பெண்விளக்கின் போதனை

மேற்கண்ட விஷயமாகப் பேசிவரும்போது எமக்கு பெங்காளிதேசத்து ஞானமணியாகிய ஸரளதேவியின் நினைப்பு வந்து விட்டது. அம்மாது மேற்கூறிய விஷயங்களை மிகவும் வற்புறுத்திப் பேசியிருகின்றார். தேசத்தின் அன்னதைகள் (அதாவது உணவு கொடுப்போர்) மாதர்களே என்பதை நாம் மறக்கவே கூடாதென்பதை அப்பெண்மணி நமக்குப்போதனை புரிகின்றார். உணவு கொடுப்பதென்றால் வயிற்றுக்கு மட்டிலுமில்லை. வள்ளுவரால் "செவியுணவு" என்று கூறப்படும் ஞானவுணவிருக்கின்றதே, அதனை அளிப்போரும் மாதர்களே யாவர். பாரதகுமாரிகளே! இந்நாட்டிற்கு ஞானவுணவும், தோள்வலியும், மனத்திடனும் கொடுத்து இதனைக்கைதூக்கிவிடுவது உமது பெருங்கடமையாகும். நீங்கள் என்றுவரை அலங்காரப் பொம்மைகளாக நிற்பீர்களோ அதுவரை யெமக்கெல்லாம் ஓர் கதியும் கிடையாது.

இனி ஸரளதேவி என்ற பெங்காளமாது கல்வியும், அருளும், தேசபக்தியும், பெற்று விளங்கும் பெருமையை மற்றொருமுறை தனியாகப்பிரஸ்தா



பிக்க நேரிடுமாதலால் இங்கு விரியாது விடுகின்றோம். ஸரளதேவியின் கோரிக்கைப்படியே நம்தேசத்து மாதர்கள் உயர்நிலை யடைந்து தழைக்கவேண்டுமென்று மனதார விரும்புகின்றோம்.

**பத்திராதிபர்.**

### பெண் கல்வியின் தற்கால அபிவிர்த்தி எப்படி யிருக்கிறது?

---

தலைப்பிற் கண்டவாறு ஒரு விருத்தர் வினவியதற்கு பாலிகாபாடசாலை உபாத்திச்சியாகிய உதையதாரகை கூறிய விடையாவது" ஐயா! இச்சங்கதியைப் பற்றி யென்னைக் கேட்பதையருகிலிருந்து யாரேனுங்கவனிப்பாராயின் பத்து பேறு பெற்றவளுக்குத் தலைப்பிள்ளை பெற்றவள் மருத்துவ மகிமை சொல்லத்துணிந்தது போல நான் கூறப்போகுஞ் சங்கதிகளுக்கு என்னை பரிகாசஞ் செய்வார்களென்பதில் ஐயமில்லை. ஆயினும் பல சங்கதிகளைத் தெரிந்தவர்களுக்கு ஒரு சங்கதியில் பூரணபாண்டித்தியம் உண்டாயிருப்பது அருமையே யொழிய சாதாரண மல்ல. தாங்கள் வயதிலுங் கல்வியிலும் நெடு நாள் அனுபவத்திலு முதிர்ந்தவராயினும்; என்னைப் போல் ஒரேவழியில் சங்கதியில் புத்தியைச் செலுத்திக் கொண்டிராததால் தங்களைவிட நானே தாங்கள் கேட்டகேள்விக்கு தங்கள் மனந் திருப்தியடையும் படியான பதிலுரைக்க வல்லவளென என்னையே யான் புகழ்ந்துபேசுங்குற்றத்தை க்ஷமிக்கக் கோருகிறேன்.

தங்களை யொத்த பெரியோர்கள் நெடுங்காலமாய் செய்து வந்த விடாமுயற்சியால் நம்மிந்துதேயத்துப் பெண்கள் கல்விகற்கவேண்டியது அவசியமென்று பெண்களைப் பெற்றவர்களுக்கு மூடியிருந்தகண் திறந்ததென்பதில் சந்தேகமில்லை. கூடியவரையில் எத்தொழில் புரிவோரும் எந்நிலையிலிருப்போரும் பெரும்பாலுந் தங்கள் பெண்களை வித்தைகற்றவர்களாக்க வேண்டுமென்கிற அவாக்கொண்டே யிருக்கின்றனர், இது மட்டும் போதுமா என்பதை யோசிக்க வேண்டும். என்சிற்றறிவிற்கு இது மட்டுமே போதாதெனக்கருதுகிறேன். ஏனெனில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்கும் வித்தியாசம் அளவில்லை. ஆண்பிள்ளை பிறந்து 5-வயதானவுடன் படிக்கத் தொடங்கிப் பள்ளிக்குப் போய்வருவது மாத்திரம் போதாமல் இல்லில் இருக்குங்காலத்தும் இந்த வேலையிலிருக்கிறான். இப்படி வாசிக்கும் வாசிப்பு இதரசம்பவங்களால் இடையூறு நேரிட்டாலன்றி எடுத்த இத்தொழிலில் பூரணமடையும்வரை இதைத் கைவிடுவதில்லை. இப்படிப்பட்ட முடிவுக்கு வந்த பின்னும் இவன் ஜீவிக்கவேண்டிய எல்லாவித தொழிலிலும் இவன் கற்றவித்தையே நித்தப் பழக்கத்தில் கட்டாயமாயிருக்கிறது. இத்தியாதி காரணங்களால், ஆடவன் கல்வி சுக்கிலபக்ஷத்துச் சந்திரன் போல் மங்காது விருத்தியடைகிறது. பெண்ணாய் பிறந்தவளோ, பெற்றோரால் பாடசாலைக்கு அனுப்பப்படினும் வீட்டுக்கு வந்த பின்வீட்டின் சமையல்

சம்பந்தமான வேலையில் கைபழக வேண்டியவளாயிருக்கிறாள். இதை அலட்சியஞ் செய்து தன் புத்திரியைப் படிப்பதிலொன்றிலேயே விட்டுவிட்டால் பர்த்தாவின் வீட்டுக்கும் போகும்போது தோஷமெல்லாந் தன்பேரிலுறுமென்று தாய் நன்குணர்ந்திருக்கிறாள்.

இது அவசியமில்லையென்று எவருஞ் சொல்லத்துணியார். ஏனெனில் உணவை பக்குவப்படுத்தும் வித்தையைக் கேவலமாக எண்ணப்போகாது. இதற்கு முதலாவது இல்லிடஞ் சுத்தியாக இருக்க வேண்டியது. சுத்தகாற்று உலாவ வேண்டியது. சமைக்கும் ஏனங்களில் நாளாவிருத்தியில் விஷத்தன்மையையடையும் பத்துகள் நிலைக்காது அப்போதைக்கப்போது சுத்தியாகவேண்டியது, சமையல் பதார்த்தங்களில் அடாதவைகளணுகி எதாகிலும் கெட்டிருந்தால் சாக்கிரதையுடன் கவனித்து நீக்கவும் வேண்டும்: தண்ணீர் உற்பத்திஸ் தானம் நல்லதாவென்பதையும் அது சுத்தமாயிருக்கிறதாவென்பதையுங் கவனிக்கவேண்டும், புருடன் பிரியப்படும் பதார்த்தங்களையும் பாகங்களையு மறியவேண்டும்; பாவர்கள் உண்டாயிருக்கில், அவர்களுக்குச் செய்யவேண்டிய கிருத்தியங்களையும் ஐயமறஅறியவேணும். இப்படிப்பட்ட கட்டங்கள் எல்லாந்திட்டமாய் அறிந்து வீட்டின் காரியங்களைச் சரிவரநடத்த வேண்டியவள் பெண், இத்தியாதி காரணங்களால் பெண்ணாய் பிறந்தவளைப் பெற்ற தாயார் முதலிய பெரியவர்களாகிய பெண்பாலர் வீட்டின் வேலையில் பழக்கிவைக்க வேண்டியதும், படித்துக்கொண்டிருக்கும் நமக்கு இதெல்லாம் அவசியமில்லையெனறெண்ணாமல் பழக்கங்களைப் பெண்கள் கைக்கொள்ள வேண்டியதும் அதியவசியம்.

(இன்னும்வரும்)

அ-பொன்னுசாமி முதலியார்.
குடியாத்தம் லைக்கில்

# Ramathilakam.

OR

## The other end of hatred is love.

## ராமதிலகம்.

ஓர் நாடகம்

(113-வது பக்கத்தொடர்ச்சி)

வேலை இப்பொழுது நான் கேக்காமலே சொல்லுறேன். எங்க எஜமான் தாமோதரமுதலியார், மதுரைநாயகம் பிள்ளை வகையராவைச் சேராதவர்களாயிருந்தால் வேடிக்கை பார்க்கலாம். போய்வாரேன், (போகுதல்)



வசு தாமோதரமுதலியார் வீட்டு. ஜாத்திரையில் மதுரைமாநகரிலிருக்கிற கண்ணுக்கினிய கன்னியர்கள் பலரைக்காணலாம். உனது காதலி மாதவியையும் பார்க்கலாம். அங்கேவா. மயக்கத்தை விட்டு கண்ணைத்திறந்து நான் காட்டுகிற சில பெண்களோடு உன் ரூபாவதியையும் ஒத்துப்பார். நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். உன் அன்னத்தை காகமென்று கருதுவாய்.

ராமா என் கண்களும் அவ்வாறு உணருமாயின் இக்கண்ணீரெல்லாம் கனற்பொறிகளாக மாறிவிடும். கண்ணீரில் முழுகியும் அழியாத இவ்வொளி விழிகள். கொடிய பொய்யர் என்றெறிக்கப் படட்டும். ஸர்வ வியாபகராகிய சூரியபகவான்கூட உலகம் தோன்றின நாள்முதல் அவளுக்குசரியான பெண்களை பார்த்ததில்லை.

வசு விடு. வேறொருவரு மில்லாதபோது அவள் அழகாய்த்தானிருப்பாள் அவளையே திரும்பி திரும்பி பார்த்துக்கொண்டிருந்தால் அப்படித்தானிருக்கும் இன்று ராத்திரி வரப்போகிற பெண்களையும் நீ சொல்லிய வளையும் கண்ணாலே நிறுத்துப்பார். அப்பொழுது தெரியும் அவள் யோக்கியதை. இப்பொழுது இவ்வளவு அழகாய்த் தோன்றுகிறவள் அப்பொழுது சாமான்யமாகக் கூடத் தோன்ற மாட்டாள்.

ராமா போகிறேன். நீ சொல்லுகிறபடியல்ல. என் காதலியின் அழகின் மேன்மையைக்கண்டு களிப்பேன். (இரண்டுபேரும் போகுதல்)

### களம் III

தாமோதர முதலியார் வீட்டில் ஒரு அறை,

தெய்வயானை அம்மாள். கிழவி வருதல்.

தெய்வயானை. அடி கிழவி, குழந்தை எங்கே? அவளை என்னண்டே கூப்பிடு

கிழவி. நான் பத்து வயசுவரையில் பதிவிரதையாயிருந்தது நிசமானால் வரச்சொன்னேன்.

தெய்வ. என் மயில் எங்கே! திலகம்!

திலகவல்லி வருதல்.

திலகவல்லி. ஏன்? யார் கூப்பிட்டது?

கிழவி. உங்கம்மா.

திலக. இதோ இருக்கேனம்மா. என்ன வேணும்?

தெய்வ. இதுதான் ஸமாசாரம். கிழவி, கொஞ்சம் ரகசியம் பேசவேணும் நீ போ. கிழவி, இங்கேவா, எனக்கு இப்போதான் ஞாபகம் வரது, நீயும்கூடயிருந்துதான் யோஜிக்கணும் நம்ம குழந்தைக்குதகுந்த வயசு வந்துட்டது, உனக்குத் தெரியுமே.

**கிழவி.** ஒருவிஞடிகூட பிசகாமல் அவள் வயசை நான் சொல்லுவேனே

**தெய்வ.** அவளுக்கு இன்னும் 13 நிரம்பல்லே.

**கிழவி.** இல்லே. இல்லே. அப்படியிருந்தா என் பல்லிலே 13 பல்லெப் பிடிங்கி வச்சுப்படுரேன் ஆனல் எனக்கு பல்லு மாத்திரம் மூனுதான் இருக்கு அவளுக்கு 13 வயதாகல்லே. தீவாளிக்கு இன்னும் எத்தினே நாளிருக்கு?

**தெய்வ.** ஒருமாசம் சொச்சம் இருக்கு.

**கிழவி.** சொச்சமோ முழுமோ எதாயிருந்தாலும் சரி. தீவாளி ருத்திரி வந்தாக்கே அவளுக்கு 13 வயசாரது. சுப்பியும் அவளும் ஒரேவயசு. சுப்பியெ பாவம் சாமிகொண்டு போயுட்டார். அது எனக்கு தக்காது. நான் சொன்னுப்பலே தீவாளி ருத்திரி வந்தாக்கே அவளுக்கு 13 ரொம்பரது. ஆமாம், எனக்கு நன்ரு ஞாபகமிருக்கு. தொப்பகுளத்து படித்துரை கட்டி முடிச்சு 10 வருஷமாச்சு அன்னிக்குத்தான் அவள் பால் குடிக்கிறதை நிறத்தினுள். அது எனக்கு ஒரு நாளும் மறக்காது. என்ன, அன்னிக்குத்தான் நான் மாரிலே வேப்பெண்ணெத் தடவிண்டு வாசத்திண்ணெயில் வெய்யில் ஒக்காந்திருந்தேன். நம்ம எஜமானும் நீங்களும் அப்போ மேலூரிலிருந்தீங்க. எனக்கு நன்ரு ஞாபகமிருக்கு. நான் சொன்னுப்பலே அது வந்து மாரிலே வாயை வச்சுது, வேப்பெண்ணெ நாக்கிலே பட்டுக்கசந்தது அந்த அசடு கொவிச்சுண்டு மாரோடேசண்டை போட்டுது, அதிலிருந்து 10 வருஷமாச்சு. அப்போ அவள் தானே நடப்பள். தட்டி தடமாறி அலேவள். அன்னிக்கு முதல்நாள் தான் அவள் கீழேவிழுந்து நெத்தியிலே காயம் பட்டுது. அப்போ எங்க வீட்டுக்காரர். ஸாமி காப்பாத்தனும். அவர் வேடிக்கைக் காரர், குழந்தையை எடுத்து, குப்புற விழறயா? புத்திவந்துட்டாக்க மல்லாக்க விழமாட்டே, திலகம் என்று சொன்னர். அந்த போக்கிரி குழந்தை அழறதை நிறுத்திப்பிட்டு "ஆம்" என்று சொல்லித்து. பரியாசம் பண்ணினுக்கே எப்படி ஆரது என்று இப்போ நெனச்சாக்கூட சிரிப்பு வரது. எனக்கு ஆயிரவருஷமானலும் அது மறக்காது. "மாட்டே திலகம்" என்று அவர் சொன்னர். அந்த அசடு "ஆம்" என்னுது.

**தெய்வ.** போரும். போரும். நிறுத்து.

**கிழவி.** ஆக அம்மா. என்ன இருந்தாலும் அழரச்சே நிறுத்திவிட்டு "ஆம்" என்று சொல்லித்தே. அதை நெனச்சுண்டாக்கே எனக்கு சிரிப்பு வரது. நிச்சயமாச் சொல்லறேன். நெத்தியிலே ஒரு கொழிக்கட்டையாட்டமா வீங்கிப்போச்சு நன்ரு இடிச்சு பிட்டுது பாவம். வீச் என்று கத்தித்து குப்புர விழறயா; வயசானுக்கே மல்லாக்க விழறயா திலகம்" என்று எங்க வீட்டுக்காரர் சொன்னர். அது மொள்ள அழுகையை நிறுத்திண்டு "ஆம்" என்னுது.

**திலகம்.** போரும் நீயும் கொஞ்சம் நிறுத்திக்கொ



**கிழவி.** நிறுத்திப்பிட்டேன் சாமி உனக்கு எல்லாம் கொடுப்பார். நான் பால் கொடுத்ததுக்குள்ளே நீ தான் ரொம்ப அழகு. நான் இருக்கச்சே உனக்கு ஒரு கல்லியாணம் பண்ணி பார்த்துட்டா எனக்கு திருப்தி.

**தெய்வ.** கல்லியாணம்! அதைப் பத்தித்தான் நான் பேசவந்தேன். குழந்தை திலகம், உனக்குக் கல்லியாணம் பண்ணிக்கிறதிலே இஷ்டதானு?

**திலகம்.** அந்தப்பெரிய காரியத்தைப்பற்றி சொப்பனத்திலே கூட இன்னும் நினேக்கவில்லே.

**கிழவி.** பெரிய காரியம்! நானே சொல்லிக்கப்படாது இருந்தாலும் என் பால் குடிச்சே இவளுக்கு இவ்வளவு புத்திவந்தது.

**தெய்வ.** நல்லது இப்போ கல்லியாணத்தைப்பற்றி யோஜித்துப்பார். உன்னேவிட சின்னவாளுக்கெல்லாம் கல்லியாணமாய் குழந்தை பிறந்திருக்கு. நிச்சயமாய் சொல்லுகிறேன். உன்வயசிலே எனக்கு குழந்தை பிறந்துட்டுது. வீணுப் வளத்துவானேன். கேசவ நாயகர் உன்னேக் கல்லியாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்படுகுரு

**கிழவி.** குழந்தை! அவர் என்ன மனுஷன்! இந்த பூ மண்டலத்தில் அப்படிப்பட்ட மனுஷன் எது? அவர் விக்கிரகம் வார்த்தாப்போல இருக்கார்.

**தெய்வ.** இந்த மதுரை முழுக்கத்தேடினுலும் அவருக்கு சமானமான ரத்தினம் கிடையாது.

**கிழவி.** ரத்தினம். நெஜத்தில் நல்ல மாணிக்கந்தான்.

**தெய்வ.** என்ன சொல்லறே, குழந்தை! அவரைக்கல்லியாணம் பண்ணிக்க உனக்கு பிரியமா? நம்மவீட்டு ஜாத்திரைக்கு இன்று ராத்திரி அவர் வருவர். அவரது மலர்ந்த முகத்தைக் கண்டாலே ஆனந்தம் உண்டாகும். முகமோ படத்திலெழுதியது போலிருக்கிறது. மன்மதனே அமிர்தத்தைத் தோய்த்துக்கொண்டு யெழுதினுப் போலிருக்கிறது. அவருடைய அவயவங்களே எதைப்பார்த்தாலும் ஒன்றுக்கொன்று இசைந்து பொருத்தமாகவே யிருக்கும். அவருடைய அழகுக்கேற்ற ஞபாவங்கள் அவருடைய கண்ணேப்பார்த்தால் வெளியாகும். அவருக்கு உள்ளகுறை யொன்னே! அதாவது அவருக்குத் தகுந்த பெண். அழகைச் செய்யும் ஆபரணங்கள் எப்படி நல்ல அழகுடையவரை யடைந்தால் அவரை அழகு செய்வதல்லாமல்தாமும் சோபிக்குமோ அப்படிப்போல் அவரை யடைந்தால் அவருக்கு பூஷணமாக இருப்பதுடன் நீயும் அதிக சோபையை யடைவாய்.

**கிழவி.** அதிகமா? அவளுக்கு ஈடுஜோடு ஏது அப்புறம்,

**தெய்வ.** நாழியாச்சு, சொல்லு. அவரைக் கல்லியாணம் பண்ணிக்கிறதில் இஷ்டம் தானு?

திலகம். என்னுலானமட்டும் பார்க்கிறேன். பார்க்கிறதில் இஷ்டமுண்டாகுமானல் சரிதான். உன்னுடைய சம்மதிக்கேற்றபடி பார்க்கிறேன். நானாக ஒன்றும் செய்யத் துணியவில்லை.

வேலைக்காரன் வருதல்.

வேலை. அம்மா, எல்லாரும் வந்துட்டாங்கோ. இலை போட்டாச்சு சாப்பிட்டான உடனே கோலாட்டத்திற்கு ஆரம்பிக்கப்போராங்கோ. சின்னம்மா எங்கே என்று கேட்டாங்கோ கிழவியை திட்டருங்கோ. அங்கே யெல்லோரும் எல்லாம் தயாராயிருக்கிறது. நாம் போகலாம் நேரே வாங்க.

தெய்வ. கூடவருகிறம் போ! திலகம், அவர் காத்துக்கொண்டிருக்கிறார்

கிழவி. குழந்தை போ! சுகத்தையும் தேடிக்கோ.

எஸ். வி. சீனிவாஸய்யர், B. A.,

(இன்னும் வரும்.)

78–ம் பக்கத்தொடர்ச்சி.

## சந்திரமதி.

### நான்காம் அத்தியாயம்.

பிறகு ஒருநாள் சந்திரமதி பாடசாலைக்கு நேரம் பொறுத்து வந்து, புஸ்தகத்தைக்கையில் பிடித்துக்கொண்டு, படிக்கத்தோன்றாமல் வருத்தமடைந்து கீழே பார்த்துக்கொண்டு உட்கார்ந்தாள். அதைபார்த்து வித்தியாஸாகரர் பிள்ளைகளுக்கு மனம் நிலையில்லாத சமயத்தில் படிப்பிடித்தல் பயனற்றதென்பதை யறிந்தவராகையால் படிக்கவேண்டுமென்று நிர்பந்தப்படுத்தாமல், அவளுடைய வருத்தத்துக்குக்காரணத்தை யறிந்தவராயிருந்தும் அதை அவளைக்கொண்டே வெளிப்படுத்தி சமயத்துக்கேற்றவாறு நூதன விஷயங்கள் சிலவற்றைப் போதிக்கக்கருதி இவ்வாறு பிரசங்கிக்கத் தொடங்கினர்.

குரு. சந்திரமதீ, நீ எப்போதும் வேளைதப்பாமல் பள்ளிக்கூடத்துக்கு வருகிறவள்; எவ்வளவு வேலையிருந்தாலும் நீ இதுவரையிலும் என்றைக்கும் காலம் தப்பி வந்ததியாய். அப்படிப்பட்ட நீ இன்று நேரம்பொறுத்து வரக்காரணமென்ன?

சந்திர. என்னைச்சிறுபிராயமுதல் நேற்று முந்தினநாள்வரையில் எடுத்துச்சீராட்டி விளையாட்டிவந்த கிழவியான வேலைக்காரி ஒருத்தி நேற்றிராத்திரி பாம்பு கடித்துத்திடீரென்று செத்துப்போய்விட்டாள். அவள் என் தாயாரை மாமியாரகத்துக்கு அனுப்பினபோது தாயாரகத்தவர்கள் பெண்ணுக்கு அனுப்பின வேலைக்காரியாம். அவள் என்னைத்தன் பஞ்சப்பிராணங்களில் ஒரு பிராணத்தைப்போல் பார்த்துவந்தாள். அவ்வளவு ஆசையுடைய வேலைக்காரி போய்விட்டாளென்கிற விசாரத்தினல் சரியான வேளைக்கு வராமற்போய்விட்டேன். இந்த



தப்பிதத்தை மன்னிக்கவும். இப்போதும் என் மனமெல்லாம் அவள்பேரிலேயே இருக்கின்றது.

குரு. நீ இப்பொழுது செய்ததில் பிசகு ஒன்றுமில்லை; நம்பிக்கையாய் வேலை செய்து வந்தவளிடத்தில் உனக்கிவ்வளவு அக்கறை உண்டானதைப்பற்றி எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கிறது. அவள் ராத்திரி போய்விட்டாள் என்றல்லவா நீ இப்பொழுது சொன்னுய்? சற்றுமுன் நான் உன் தந்தையாரைப்பார்த்துவிட்டு வருகையில் வழியில் நான் அவளைப்பார்த்தேன். நான் நிமிஷத்துக்குமுன் பார்த்துவிட்டுவந்தது, இதற்குமுன் பிரதிதினமும் உன்னுடன்வரும்போது காணும் முகமும் கண்களும் மற்ற எல்லா அவயவங்களும் உள்ள தேகமே என்பதற்கு ஸந்தேஹமில்லை. அவள்போய்விட்டாள் என்று நீ எப்படி சொல்லக்கூடும்?

சந்திர. இப்போது [illegible]ளுடைய சரீரம்மாத்திரமே இவ்வுலகத்தில் இருக்கிறது. அந்த சரீரமும் [illegible]னும் சற்று நேரத்துக்கெல்லாம் மண்ணுடன் கலந்து போய்விடும். அதினி[illegible] ஜீவாத்மாபிரிந்துபோய்விட்டது.

குரு. இந்த சங்கதி உன[illegible]குதெரியுமோ தெரியாதோவென்று அறிவதற்காகவே உன்னை இந்தக் கேள்வி[illegible]டேன். நம் தேகத்தைக்காட்டிலும் ஜீவாத்மாவேறானதென்றும், தேகம் எந்த நிமிஷத்திலாயினும் அழியத்தக்கதென்றும் நீ தெரிந்துகொண்டிருப்பதைப்பற்றி நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆத்மா சரீரத்துடன் அழிந்து போகாமல் பிறகு பரலோகத்துக்குப் போகுமென்று உனக்கே தெரிந்திருக்கிறபடியால், இந்த விஷயத்தை மெய்ப்பிக்கும்பொருட்டு கஷ்டப்பட்டு திருஷ்டாந்தங்களை எடுத்துக்காட்டவேண்டிய அவசரமில்லாமற்போய்விட்டது. ஸர்வ சராசரங்களையும் படைத்த பரமேசுவரன் ஒருவரே நித்தியமானவர் என்று முன்னமே உனக்குச்சொல்லி யிருக்கிறேனல்லவா? இவ்விரண்டு சங்கதிகளும் தெரிந்தபிற்பாடு உனக்குப்போதிக்கவேண்டிய விஷயங்கள் அநேகமிருக்கின்றன. நாம் இவ்வுலகத்தில் சரியாய் நூறு வருஷம் பிழைத்திருந்தாலும்; அது அவ்வளவும் மிகச்சொற்பகாலமே. நாம் பரலோகத்தில் இருக்கவேண்டிய காலமோ அனவில்லாதது. நாமும் இருந்தாற்போலிருந்து என்றைக்காயினும் இவ்வுலகத்தைவிட்டு பரலோகத்தைச்சேரவேண்டியவர்களே. பரலோகத்தில் நித்தியசுகம்அநுபவிப்பதற்கு தர்மம் ஒன்று தவிர வேறு வழியில்லை. நாம் நித்தியமான பரலோகசுகத்தை விரும்பும்பக்ஷத்தில், இவ்வுலகத்திலுள்ள இழிவான நிலையற்ற சுகங்களுக்கு ஆசைப்படாமல், எத்தனைகஷ்டங்களையாவது பொறுத்துக்கொண்டு தர்மமார்க்கத்திலேயே நடக்கவேண்டும்.

சந்திர. நமக்கு நித்திய சுகம் உண்டாகும்படிக்குத்துணை நிற்கும் தர்மங்களையும்; அவற்றை அநுஷ்டிக்கவேண்டியமுறைகளையும் என்னிடத்தில் தயவு கூர்ந்து விவரமாய்ச்சொல்லுங்கள்.

குரு. நாம் இன்னவிதமாய் நடக்கவேண்டுமென்று தர்மசொரூபியாகிய ஜகத்ரக்ஷகன் ஏற்படுத்திய கட்டளைகளே தர்மங்கள். அப்படிப்பட்ட தர்மங்களை அ

நுசரிப்பதினால் சுகமும், மீறி நடப்பதினால் துக்கமும் உண்டாகின்றன. நாம் அநுசரிக்கவேண்டிய தர்மங்களையெல்லாம் நான்குபிரிவாகப் பிரிக்கலாம் முதற்பிரிவைச்சேர்ந்தவை சிருஷ்டிகர்த்தாவான கடவுளினிடத்தில் நடந்துகொள்ளத்தக்கவை; இரண்டாம் பிரிவைச்சேர்ந்தவை நம்தேகத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு சுயவிஷயமாய் நடந்துகொள்ளவேண்டியவை; மூன்றாம் பிரிவைச்சேர்ந்தவை கடவுளின் குடும்பத்திற்சேர்ந்து நமக்கு சகோதரரைப்போலுள்ள ஜனங்களின் விஷயத்தில் நடந்துகொள்ளவேண்டியவை; நான்காம்பிரிவைச்சேர்ந்தவை ஜீவதயாபரராகிய கடவுளால் படைக்கப்பட்ட மற்ற பிராணிகளின் விஷயத்தில் நடந்துகொள்ளவேண்டியவை.

சந்திர. முதன்முதல், கடவுளிடத்தில் நடந்துகொள்ளவேண்டியவிதத்தைச் சொல்லி, பிறகு வரிசையாய் மற்ற தர்மங்களைப்போதியுங்கள்.

துரு. பரமதயாபரராகிய கடவுள் தமது குடும்பமாகிய மனிதவர்க்கத்தார் வசிப்பதற்குப் பூமியென்னும் சிறந்த வீட்டை யமைத்து சுக ஜீவனத்திற்கு வேண்டிய ஸகல பதார்த்தங்களையும் அதில் வைத்திருக்கிறார். மறைந்திருப்பதை எடுத்துக்கொள்வதுபோல், பயிர்களிலிருந்தும் பலவிருக்ஷங்களிலிருந்தும் நம் போஜனத்துக்கு வேண்டியவைகளை எடுத்துக்கொள்ளுகிறோம். சூரியமண்டலம் எண்ணெய் விடாமலே எரியும் பெருவிளக்காயிருக்கிறது; ஆறுகள் முதலியவை நீரை எடுத்து வைத்துக்கொள்ளும் பெரியபாத்திரங்களைப்போல் இருக்கின்றன; நம்மைச்சுற்றிலுமுள்ள ஸகல ஜந்துக்களும், செடிகொடிகளும், உலோகங்களும் பலவிதங்களிலும் பிரயோஜனப்படுகின்றன. காற்றானது வியர்வை நீங்க விசிறுகிற வேலைக்காரனைப்போல் சுகமாய் வீசுகின்றது. இனிமையாய்க்கூவும் குயில் முதலிய பக்ஷிகள் சங்கீதபாடகர்களைப்போல் செவிக்கின்பம் அளிக்கின்றன. இவை யெல்லாம் கடவுளின் கிருபையினாலேயே நமக்குக் கிடைத்திருக்கின்றன; ஆதலால் இவ்வளவு பேருபகாரம் செய்த பராபரனிடத்தில் நாம் எவ்வளவு நன்றியறிதல் காட்டி அவரை எக்காலமும் போற்றவேண்டும்? நற்குணமுடையவனை நேசித்தலும் துர்க்குணமுள்ளவனை துவேஷித்தலும் உலகத்தில் அனைவருக்கும் இயல்பானகுணம். எல்லா நற்குணங்களுக்கும் இருப்பிடமாயிருப்பதுடன் நம் அனைவரையும் மக்களைப்போல் அன்போடு பாதுகாத்துவரும் கருணாகரனை நாம் நேசிக்கவேண்டுமென்று நான் விசேஷித்துச்சொல்லவேண்டிய அவசியமேயில்லை. நம்மைப்பெற்றெடுத்த தாய் தந்தைமார்களுக்கும், நம்மையாண்டு நியாயபரிபாலனம் செய்யும் அரசனுக்கும் நாம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளவேண்டுமென்று நீ யறிந்திருக்கிறாயல்லவா? அப்படியிருக்க நம் அனைவரின் பிறப்புக்கும் ஆதிகாரணனாகிய நமது புண்ணியபாபங்களையறிந்து நியாயந்தீர்த்து சுகமளித்துப் பாதுகாக்கும் மோக்ஷ நாயகனுக்கு நாம் பயபக்தியுடன் அடங்கி நடந்துகொள்ளவேண்டுமென்று ஏற்படுகிறதல்லவா? நாம் எப்போதும் தப்பின்றி நடந்துகொள்ள முடியாதாகையால் நம் தப்புகளைப் பொறுத்தருளும்பொருட்டும், நமக்கு வேண்டியவற்றை



க்கொடுத்தருளும்பொருட்டும், நம் ஆபத்துக்களை நீக்கியருளும்பொருட்டும், எல்லாம் வல்ல கடவுளை நாம் நாடோறும் நினைத்து பக்தி விசுவாசங்களுடன் பிரார்த்திக்கவேண்டும். இவையே நாம் கடவுளிடத்து நடந்துகொள்ளவேண்டிய முக்கிய கடமைகளாம். (இன்னும் வரும்)

(மகேசகுமாரசர்மா)

## துளஸீபாயி

(81-ம் பக்க தொடர்ச்சி.)

### அத்தியாயம் II

முதலத்தியாயத்திலே விஸ்தரிக்கப்பட்ட விஷயங்கள் நடந்து ஒரு வருஷத்திற்கு மேலாய் விட்டது. அதே ரோஹிணி நதிக்கரையிலே காட்டின் வழியாக ஓர் மகமதிய இளைஞன் குதிரை யேறி வருகின்றான். சூரியபகவானே தனக்குள்ள 7 குதிரைகளில் முதற் சிறப்புடையதாகிய குதிரை சகிதமாக, வானத்தினின்றும் இறங்கி, சீதளத்தின் பொருட்டு இந்த வனத்தின் வழியாக வருகிறானோ என்று கண்டோர் சந்தேக முறும்படியாக, பேரொளி வீசும் வதனத்தோடு வரும் இக்குமரன் நமது அப்பஸ்கானேயாவன். வரும்போதே பின்வருமாறு ஆலோசனை செய்கிறான்:—

"அடடா! சென்ற வருஷம் இந்த இடத்திற்கு அனேகமாய் சமீபத்திலே தான் அந்த ரஜபுத்திரப் பசுங்கிளியைப் பார்த்தேன், (கையிலே தரித்திருந்த மோதிரத்தை முத்தமிட்டுக் கொள்கிறான்) இந்த அழகிய மோதிரத்தை தனது ஞாபகக்குறியாக எனக்குக் கொடுத்தாள் பேதை! அவளது ஞாபகம் எனக்கு எந்நாளும் இருப்பதற்கு ஓர் அடையாளமும் வேண்டுமோ? எனது நெஞ்சத்திலே துளஸீரத்தினம் பதிக்கப்பட்டிருக்கிறதென்றும், நான் இறந்தாலொழிய அவளை மறப்பது அசாத்தியமென்றும், அவளுக்குத் தோன்றவில்லை! கண்டநாள் முதலாக இந்த நிமிஷம் வரை அவள் நினைப்பு வராத ஒரு நாளுண்டா? சோலைகளையும் நீரோடைகளையும், பார்க்கும்போதெல்லாம் அவள் ஞாபகம் வரவில்லையா? (பாடுகிறான்)

"மந்தமாருதம் வீசுறும் போதினும்,
வானில் மாமதி தேசுறும் போதினும்,

கந்தமாமலர் கண்ணுறும் போதினும்,
கானநல்லமு துண்ணுறும் போதினும்,

சந்தமார் கவி கற்றிடு போதினும்
நாவில்வான்புகழ் பெற்றிடு போதினும்

எந்த வாறினு மின்புறு போதெலாம்
என்ற னெஞ்சகம் ஏந்திழை பாலதே,"

போர்க்களத்தில் கூட அவளைப் பன்முறை நினைத்திருக்கின்றேன். இனி, இதெல்லாம் என்ன வீணாலோசனை? அவள் இப்போது ரஜபுத்திரன் மனைவியாகப் பெருமையும் இன்பமுங் கொண்டிருப்பாள். ஏதோ அன்னிய மகமதியன் ஒருமுறை செய்த உதவிக்காக அவனை எப்போதும் நினைத்திருப்பாளா? அதையும் தவிர அன்னியனுடைய பத்தினியாகிய அம்மாதை என் மனதாலே நினைப்பது கூட தோஷம். அல்லாவே! என் மனதிலிருந்து இந்தப்பாவ எண்ணத்தை நீக்கி அருள் புரிய வேண்டும். * * * * * * *

துளஸீபாயி, துளஸீபாயி, ஆஹா! என்ன இனிமையான பெயர்!''

என இவ்வாறு மகமதியன் தனக்குள்ளேயே பேசிக்கொண்டு வந்த காலத்திலே சிறிது தூரத்திற்கு முன்பாய் "ஐயோ!'' "ஐயோ!'' என்ற கூக்குரல் கேட்கப்பட்டது. அந்தப்பக்கமாகப் பார்த்தான்.

ரோஹிணி நதிக்கரை மயானம்-ரஜபுத்திரக்கூட்டம்-சில பிராமணர்கள் ஓர்பெண் கதறுதல்-அருகே நெருப்பு வளர்த்தல்-ஒருபாடை-இவை யனைத்தும் காணப்பட்டன. உடனே விஷயமின்னதென்பது மகமதியக் குமாரனுக்குத் தெரிந்து விட்டது.

ஓஹோ! யாரோ ஒரு ரஜபுத்திரன் இறந்து போயிருக்கிறான், அவனுடைய மனைவியாகிய பெண்ணையும் கூடவைத்து எரித்துவிடப் போகிறார்கள், என்று தெரிந்துகொண்டான். பெண்ணுக்குச் சம்மதியில்லாமல் அவளைக்கணவனுடைய பிணத்துடன் வைத்தெரிப்பது சட்ட விரோதமென்று அக்பர் சக்ரவர்த்தி விதி ஏற்படுத்தி யிருந்தார். ஆகவே, "இந்த இடத்திற்குச் சென்று இந் 'சதி தகனம்' நடப்பதைத் தடுத்து விடுவோமானால் நமக்கு ஆக்பர்சக்ரவர்த்தியின் மதிப்பும் சன்மானமும் கிடைக்குமென்று அப்பஸ்கானுக்கு எண்ணமுண்டாயிற்று. "ஆனால், எதிரே ரஜபுத்திரர்கள் 4, 5, பேர் வாள் சகிதமாக இருக்கிறார்கள். பிராமணர்களைப்பற்றி பயம் கிடையாது. அவர்கள் நம்மை கண்டவுடனே ஓடிவிடுவார்கள். இந்த ரஜபுத்திரர்கள் வசமிருந்து அப்பெண்ணை மீட்பது தான் கஷ்டம். எல்லாவற்றிற்கும் அல்லா இருக்கிறார். துணைபுரிவார்''.

என்று சொல்லிக்கொண்டே கூட்டத்தை நெருங்கிவந்தான். சமீபத்தில் வரும்போதே இவனுக்கு மனப்பதைப் புண்டாயிற்று. அச்சத்தினாலன்று. அப்பஸ்கான் பயமின்னதென்றறியவே மாட்டான். ஆனால், "இந்தமுகம் எனக்குத்தெரியுமே, இது எனது எனது எனது துளசி யல்லவா? அரே அல்லா மேரீ குலாப்கோ ஜலாவேங்கே! ப-த்! எனது காதல் ரோஜாவையா இப்பாதகர் சாம்பலாக்கப் போகிறார்கள். இதோ! அவர்களத்தனை பேரையும் ஹதம் செய்து விடுகிறேன். என்று வெகு கோபத்துடன் கிளம்பினான். பிறகு திடீரென்று ஓர் யோசனை உண்டாயிற்று. அதன் பேரில் மிகவும் அமைதியாக மெல்லக் குதிரையை நடத்திக் கொண்டு வந்தான். அந்த யோசனை இன்னதென்பது பின்பு அவனுடைய செய்கைகளால் விளங்கும். (இன்னும் வரும்)

ஷெல்லிதாஸ்.



# சென்னையில் வேல்ஸ் இளவரசர்

## வந்த காலத்தில் நடந்த விசேஷங்கள்.

ஜனவரி 24ல பகல் 12-மணி முதலாகவே சென்னை நகரத்தெருக்களிலெல்லாம் ஜனங்கள் வந்து கூடிவிட்டார்கள். முக்கியமாக பீச் ரோட்டிலும் அதற்கெத்த தெருக்களிலும் ஆடம்பரமாக உடையுடுத்த ஜனங்களும், அழகிய மாதர்களும் வந்து பெருகி நின்றார்கள். காலரிகளில் வெயிலையும் பாராட்டாமல், ஜனங்கள் வந்து உட்கார்ந்துவிட்டார்கள். பீச் ரோட்டில் முக்கிய வர்த்தக சாலைகளிலும் மற்ற கட்டிடங்களிலும், அருமையான அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. மாடிகளின் மீதெல்லாம் ஜனக் கூட்டங்கள் ஆவலோடு நின்றுகொண்டிருந்தன.

### துறைமுகப் பந்தல்.

வெளியே ஆரவாரங்கள் இங்ஙனமிருக்கத் துறைமுகத்தில் ராஜ தம்பதிகளின் வரவின் பொருட்டாகப் போடப்பட்டிருந்த விசாலமான வெண்பந்தலிலே 2-மணி முதலாகவே சீமான்களும் சீமாட்டிகளும் வந்துகொண்டிருந்தனர். கடலோரத்திலிருந்து ரம்மியமான காற்று வீசும்படியாக இனிது அமைக்கப்பட்ட இப்பெரும் பந்தல் மிகவும் செம்மையாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. நடுவே உயர்ந்த பீடத்தின் மீது ராஜதம்பதிகளின் பொருட்டு இரண்டு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. சுற்றிலும் விசேஷ அழைப்புப் பெற்றிருந்தவர்களின் பொருட்டு சாய்மானப்பலகைகள் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தன.

3மணி அடிக்கு முன்பாகவே, மகுடபதிகள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், கவர்ன்மெண்ட் அதிகாரிகள் முதலிய பிரபுக்கள் தத்தம் அதிகாரத்திற்கும் தகுதிக்குந் தக்கபடி வந்து சேர்ந்து விட்டார்கள். ஐரோப்பிய மாதர்கள் ராஜதரிசனத்தின் பொருட்டு விநோதம் விநோதமான உடைகளுடன் வந்து தமது வழக்கப்படியே பேச்சும் சிரிப்புமாக உட்கார்ந்துகொண்டார்கள். ஜமீந்தார்களிற்சிலர் மட்டிலும் அத்தியாடம்பரமும், மிகப்புராதனமும், விநோதமுமான கோலங்கொண்டு வந்ததைச் சில ஐரோப்பியப்பெண்கள் கண்டு நகைபுரிந்தனர். ஆனால் பொதுவாகச் சென்னை மாகாணத்து அரசர்களும் ஜமீன்தார்களும் பார்ப்பதற்கு மிகச் சிறப்புடனேயே விளங்கினார்கள். திருவாங்கூர் மகாராஜா தேக அசௌகரியம்பற்றி வராமலிருந்தது பந்தலுக்கு ஓர் குறைவாகவே யிருந்தது. எனினும் வளமிருந்த கொச்சிநாட்டு அரசரும், புதுக்கோட்டைத் தமிழ் மன்னனும், வாண்டேர் மைனர் ராஜாவும் வந்து சிறப்பித்துவிட்டார்கள். ராமநாதபுரம் ராஜாவும் வேறு பல தென்னாட்டு ஜமீன்தார்களும் வந்திருந்தனர். இவர்களை யெல்லாம்பற்றி விரிவான விவரங்கள் எழுதவேண்டுமென்று நமக்கு விருப்பமிருந்த போதிலும் இடம்போதாமை பற்றி விட்டு விடுகின்றோம்.

### கவர்னர் வரவு.

மணி 3¼ ஆனவுடனே சென்னை கவர்னரும் லேடி வில்லிங்டனும், காவல்

துருப்புக்கள் புடைசூழப் பந்தலில் வந்து சேர்ந்தனர். சபையோரெல்லாம் எழுந்து நின்று கௌரவம் புரிந்தனர். கவர்னர் கொச்சி ராஜாவுடனும், ஜஸ்டிஸ் வி. S. சுப்பிரமணிய அய்யருடனும் மற்றவர்களுடனும் 5 நிமிஷம் வார்த்தையாடிவிட்டு ராஜதம்பதிகளுக்கு நல்வரவு கூறும்பொருட்டாக இளவரசரின் கப்பலுக்குத் தோணியேறிச்சென்றார். கவர்னருடன் இளவரசர் கப்பலுக்கு மதராஸ் தலைமை ஜட்ஜ், லார்ட் பிஷப், மிஸ்டர் ஸ்டோக்ஸ், மிஸ்டர் போர்ப்ஸ் என்ற 4 பேரும் சென்றனர்.

## ராஜ தம்பதிகள் பந்தலுக்கு வருதல்.

காதுகள் செவிடுபடும்படியாகவும் கடலலைகளெல்லாம் எதிரொலிசெய்யும்படியாகவும், முதலில் 31-குண்டுகள் போடப்பட்டன. பிறகு 31-குண்டுகள் போடப்பட்டன. உடனே ராஜதம்பதிகள் தமது கப்பலிலிருந்து கொணர்ந்த படகிலிருந்து இறங்கி சென்னை நகரக்கரையிலிறங்கிவிட்டார்களென்ற விஷயம் நகரத்தாரெல்லார்க்கும் தெரிந்தது. இளவரசர் வெள்ளை உடுப்பு தரித்துக்கொண்டிருந்தார். நாஷனல் ஆந்தம் 'கிதம்' பாண்டு வாத்தியக்காரரால் வாசிக்கப்பட்டது. ராஜரீகத் துவஜம் (Royal Standard) கிறக்கப்பட்டது. கரையேறினவுடன் ராஜ தம்பதிகளுக்கு லார்ட் ஆம்ப்ட்ஹில், லேடி ஆம்ப்ட்ஹில், தலைமைஜட்ஜி, கவுன்ஸில் மெம்பர்கள், ஹைகோர்ட்டின் மற்ற ஜட்ஜுகள், லார்டு பிஷப், ரெவினியு போர்டுமெம்பர்கள், மிஸ்டர் ஹாமிக், மிஸ்டர் பியர்ஸ் (கார்பொரேஷன் தலைவர்) முதலிய உத்தியோகஸ்தர்கள் நல்வரவு கூறினர். பிறதேசஸ்தானிகர்களும் பற்பல அரசர்கள், ஜமீன்தார்கள், முதலியவர்களும் அருகிலிருந்தனர்.

## கார்போரேஷன் மெம்பர்கள் படித்த நல்வரவுப் பத்திரிகை.

பிறகு வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் பீடத்தின் மீது அமைத்திருந்த நாற்காலிகளில் வந்து வீற்றிருந்தனர். பீடத்திற்கெதிரே கார்பொரேஷன்மெம்பர்கள் வந்து நின்றுகொண்டார்கள். அப்போது மிஸ்டர் S. D. பியர்ஸ் நல்வரவுப்பத்திரிகை படித்தார்.

அந்தப்பத்திரிகையின் மொழி பெயர்ப்பாவது:—

"மாட்சிமை தங்கிய ராஜதம்பதிகளே:—

சென்னை நகரத்தின்பொருட்டாகவும் கார்பரேஷனின் பொருட்டாகவும்கீழே கையெழுத்திட்ட முனிசிபல் கமிஷனர்களாகிய நாங்கள் உங்களிருவருக்கும் மனப்பூர்வமாகவும் மிக்க விசுவாசத்துடனும் நல்வரவு அளிக்கின்றோம். 4-வருஷங்களுக்கு முன்பாக நீங்க ளிருவரும் பிரிடிஷ் இராச்சியத்தின் பல முக்கியமான இடங்களைப் பார்வையிட்டுவந்த காலத்தில் இந்தியாவை மட்டிலும் நீக்கி வைத்தபடியால் எங்களுக்கு வருத்தமுண்டாயிற்று. ஆனால் பின்னிட்டு இந்தியாவிற்கும் அவ்விதப்பேறு கிடைக்கலாமென்ற நம்பிக்கையின் பேரில் நாங்கள் ஆறுதலடைந்திருந்தோம். இன்றையதினம் எங்கள் நல் லதிர்ஷ்டத்தால் அந்த நம்பிக்கை நிறைவேறிவிட்டது. மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியார் இத்தேசத்



தைக் கொண்டிருக்கும் நல்லெண்ணத்திற்கு நீங்கள் வந்திருப்பதும் ஓர் நிதரிசனமென்பற்றி ஆனந்தமடைகிறோம், பிரிடிஷ் சிங்காதனத்தில் எங்களுக்குள்ள பக்தியையும், ராஜகுடும்பத்தாரிடம் எங்களுக்குள்ள அன்பையும், எந்நாளும் மறக்கவரிய மகாராணியாரால் தொடங்கப்பெற்று எங்கள் சக்ரவர்த்தியாரால் செலுத்தி வரப்படுகின்ற தரும ராஜாங்கத்தில் எங்களுக்குள்ள நன்றியறிவையும் தாம் சக்ரவர்த்தியிடம் தெரிவிக்கும்படியாகவும், தாமும் ஏற்றுக்கொள்ளும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அதகவும் சேர்த்தியான வெள்ளிப்பெட்டியில் அந்தப்பத்திரிகையை வைத்து அப்பெட்டியை மிஸ்டர் W. S, வெங்கடராமானுஜலு நாயுடு (கமிஷனர்) இளவரசரிடம் சேர்ப்பித்தார். அந்தப்பெட்டி 10-இன்ச் உயரமும் $6\frac{1}{2}$-இன்ச் நீளமும் கொண்டது. இந்தப்பெட்டியில் தென்னைகள், நாகங்கள், சிங்கங்கள், சென்னை ஹைகோர்ட், ஸெனேட் ஹவுஸ், கவர்ன்மெண்ட் ஹவுஸ் என்பவற்றின் வடிவங்கள் சித்திரிக்கப்பட்டிருந்தன.

பிறகு வேல்ஸ் இளவரசர் மறுமொழி அளித்தனர். அதன்பின் இளவரசரும் இளவரசியாரும் வெளியில் வந்தவுடனே ஊர்கோலம் புறப்படத் தொடங்கிற்று.

## ஊர்கோலச் சிறப்பு.

இளவரசரும் இளவரசியும் சென்ற தெருக்கள் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்ததைப்பற்றி நாம் அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. அவ்வழி நீளவிருந்த கட்டடங்கள் அத்தனையும் பழுதுபார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டிருந்தன. எங்கே பார்த்தாலும் கொடிச்சீலைகள் கட்டிப் பறக்கவிடப்பட்டிருந்தன. தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. இளவரசருக்கும் இளவரசிக்கும் நல்வரவு கூறும் வளைவுகள் வைத்து அங்கங்கே கட்டப்பட்டிருந்தன. கண் எடுத்துப்பார்த்த இடமெல்லாம் பார்ப்பதற்கு ரம்மியமாகவே யிருந்தது. வேல்ஸ் இளவரசரின் விஜய தினத்தன்று இவ்வூர் கட்டடங்கள் அத்தனையும் அலங்கரிக்கப்பட்டிருந்ததுபோல ஒருநாளும் அலங்கரிக்கப்பட்டிருந்ததில்லை யென்று பார்த்தோர் அனைவரும் சொன்னார்கள்.

அன்றிரவு கவர்ன்மெண்ட் ஹவுஸில் ராஜாங்க விருந்து நடந்தது. அதற்கு இச்சென்னை கவர்ன்மெண்ட் உயர் பதவி உத்தியோகஸ்தர்களும் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜுகளும் பின்னும் அதற்கு வேண்டுமென்று வரவழைக்கப்பட்டிருந்த கனதனவான்களும் வந்திருந்தார்கள். அதற்கு வந்திருந்தவர்களின் தொகையை கணக்கிட்டுச் சொல்லுதல் அனாவசியமாகும். விருந்து சாப்பிட்டு முடிந்ததும் லெவிக்கச்சேரியும் நடந்தது. அப்போது பலர் வேல்ஸ் இளவரசருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். அன்னோர் தங்கள் அந்தஸ்துக்கும் குலப் பிறப்புக்கும் ஏற்ப உடைகள் உடுத்திருந்தது ஒன்றே எத்தனையோ சிறந்த தோற்றத்தையுடையதாயிருந்தது. விருந்து நாளுக்கு இளவரசர் ஏற்கெனவே குறித்த நேரத்தில் வருவதற்கு முன்னதாகவே அவருடைய பரிவாரங்கள் வந்து விட்டனர். 10-மணி அடித்ததோ இல்லையோ வேல்ஸ் இளவரசர் கவர்னரோடுகூட கவ

ர்மெண்டவுஸிலிருந்து விருந்து ஹாலுக்கு வந்து சேர்ந்து அ க்காகப் போட்டப்பட்டிருந்த நாற்காலியின் முன் வந்து நின்றுகொண் ருக்கு ஒரு பக்கத்தில் கவர்னர் நின்றுகொண்டார். மற்றொரு பக்க டைய பரிவாரக்காரர்கள் நின்று கொண்டார்கள். உடனே இளவரச வந்து கண்டு தலைவணங்கி மரியாதை செலுத்த, நாம் அவர்கள் செலு யாதையை அங்கீகரிக்கும் பாவனையாய் இளவரசரும் சிரக்கம்பனம் மரியாதை செலுத்தும் காட்சி சரியாய் ஒன்றரை மணி நேரம்போல் அந்த லெவி (Levee) க் கச்சேரிக்கு சென்னைப் பிரமுகர்களுள் பலர் பே தார்கள். அவ்வனவோடு அன்றைய விசேஷங்கள் முடிவடைந்தன.

## இளவரசி கோஷா ஆஸ்பத்திரிக்குச் செல்லுதல்.

25-ம் தேதி விசேஷங்கள் கொச்சி ராஜாவின் பிரதிநிதிகளும் புதுக்கோ டை ராஜாவின் பிரதிநிதிகளும் இளவரசர் இளவரசி இவர்களுடைய க்ஷேமத்தைப் பற்றி விசாரிக்க இளவரசரின் பரிவாரக்காரர்களைப் போய்க் கண்டு கொண்ட தோடு ஆரம்பமாயின. இளவரசியார் 24-ம் தேதி காலமே விக்டோரியா கோஷா ஆசுபத்திரியைப் போய்ப் பார்த்துவந்தார். அப்பெருமாட்டி வந்து போனபின் அந்த ஆசுபத்திரியிலிருந்த நோயாளிகள் வேல்ஸ் இளவரசி ராஜவமிசத்தைச்சேர்ந் தவரா யிருப்பதற்கேற்ப பெற்றதாயையொப்பப் பரிவா யிருந்தாரென்று தங்க ளைப் பார்த்தவர்களிடம் சொல்லிக்கொண்டார்களாம்.

அன்று மத்தியானம் கொச்சி ராஜாவும், புதுக்கோட்டை ராஜாவும், ராஜ கோலத்துடன் கவர்ன்மெண்ட் அவுஸ் வந்து இளவரசரை பேட்டி கண்டு போனார்கள். அப்பால் பிற்பகல் நேரத்தில் 3-15 மணிக்கு சக்கிரவர்த்தி குமாரர், பொப்பிலி மகாராஜா, ஜெயபுரம் மகாராஜா, வெங்கடகிரி மகாராஜா, விஜயநகரம் மகாராஜா, காளஹஸ்தி மகாராஜா, பிட்டாபுரம் மகாராஜா, கார்வேட் நகர் ராஜா, ராமநாதபுரம் ராஜா, சிரக்கல் வலியராஜா, கள்ளிக்கோட்டை ஸர்வாபாட் ராஜா, கடத்தநாடு வலியராஜா, வள்ளுவநாடு வலியராஜா, கள்ளிக்கோட்டை ராஜா, கொல்லங்கோடு ராஜா, விஜ்ஜூர் ராஜா, எட்டியாபுரம் ஜமீன்தார், சிவகங்கை ஜமீன்தார், பார்லாகிமிடி ஜமீன்தார், மந்தாசா ஜமீன்தார், தாகோட்டா ஜமீன்தார், புங்கனூர் ஜமீன்தார், சாப்குண்டி ஜமீன்தார், ஆரணி ஜாகிர்தார், உடையார்பாளையம் ஜமீன்தார், தேவாகோட்டா ஜமீன்தார், செற்றுவள்ளூர் ஜமீன்தார், பத் ராஜலம் ஜமீன்தார், குருப்பம் ஜமீன்தார், ஆனைகுந்தி ராஜா, இவர்களுக்கெல்லாம் கவர்ன்மெண்ட் ஹவுஸில் பேட்டி கொடுத்தார். சரியாய் 3-மணி அடித்து 15-நிமிஷத்துக்கெல்லாம் இளவரசர் தமது பரிவாரத்துடனும் கவர்னரோடும் விருந்து ஹால் வந்து சேர, அவர் வருவதற்கு முன்னேயே அங்கு வந்து தந் தன் தங்கள் இடத்தில் உட்கார்ந்திருந்த ராஜாக்களும், ஜமீன்தார்களும் தங்களிருப்பிடத்தை விட்டு எழுந்து நின்று மரியாதை செய்யும் பாவனையாய் தலை வணங்கினார்கள். இளவரசர் தமக்குப்போட்டப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து இப்போது



டு போக வந்திருப்பவர்கள் எனக்கு அறிமுகஞ்செய்து வைக்கப்படவ ல்லை, மேலே சொல்லியவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே இள ர்னரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். அவர்கள் அறிமு வைக்கப்பட்டு முடிந்ததும் சென்னை நிலச்சுவான்தார்களின் சங்கத் வர்த்தி குமாரருக்கு நல்வரவுப் பத்திரம் வாசித்துக்கொடுத்து உபசரித் அதற்கு அவர் பதில் சொன்னார்.

ங்காலம் சக்கிரவர்த்தி குமாரரும் இளவரசியும் அடையாற்றுக்கு வண்டி போய்விட்டு கடலோரத்தோடு சேப்பாக்கம் கேட் வழியாய் கவர்ன்மெண்ட் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அடையாற்றுக்கு வண்டி சவாரி போகும் ம் போய்விட்டுத் திரும்பும்போதும் அவர்களைப்பார்க்க வழிநெடுக ஏராளமான கள் கூடியிருந்தார்கள்.

## ஐலண்ட் மைதான வேடிக்கைகள்.

25-ம் தேதி இரவு ஐலண்ட் மைதானத்தில் சென்னைப் பொது ஜனங்கள் வேல்ஸ் இளவரசரையும் இளவரசியையும் உத்தேசித்து நடத்தியபொழுது போக்குக் கச்சேரி வெகு விமரிசையாய் நடந்து முடிந்தது. பொதுஜன உபசாரணைக் கமிட்டி சேர்மென் ஆனரெபில் ஸர் சுப்பிரமணிய ஐயரால் வேல்ஸ் இளவரசருக்கும் இளவரசிக்கும் நல்வரவுப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. வாண வேடிக்கைகள் என்ன, இந்தியன் சாண்டோ வென்று சொல்லப்படுகிற ராமமூர்த்தி ன் வேடிக்கைகளென்ன, பிரொபஸர் சாமிநாத சாஸ்திரியின் மந்திரவாத வேடிக்கைகள் என்ன, களியாட்டுகள் என்ன, நாடகங்கள் என்ன, இவைகளெல்லாம் நடந்தன. அவைகளைக் கண்காணிக்க வெகு ஜனங்கள் வந்து போனார்கள்.

## சென்னையில் கோஷாஸ்திரீகள் வேல்ஸ் இளவரசியை பேட்டிகண்டது.

சென்னைக்கு வேல்ஸ் இளவரசி விஜயம் செய்தகாலத்தில் கோஷாஸ்திரீகள் பாங்க்வெட்டிங் விருந்து ஹாலில், கவர்னர் மனைவியாகிய லேடி ஆம்ப்தில் மூல மாக இளவரசியை கண்டு சலாம் செய்து பூமாலை போட்டார்கள். அவர்களுள்.

1. ஆற்காட் இளவரசியார்.
2. விஜயநகரம் மஹாராஜகுமாரி.
3. பொப்பிலி மகாராணி.
4. லேடி கஜபதிராவ்.
5. மிஸஸ் சங்கரநாயகர்,
6. லேடி பாஷ்யமய்யங்கார்.
7. மிஸஸ் ஸ்ரீநிவாசய்யர்.
8. மிஸஸ் வாசுதேவய்யங்கார்.
9. மிஸஸ் சிவசாமி அய்யர்.
10. மிஸஸ் நரசிம்மேசுவர சர்மா.
11. மிஸஸ் குருசாமி அய்யர்.

12. லேடி தேசிகாச்சாரியார்.
13. லேடி ராமசாமி முதலியார்.
14. கல்லங்கோரோணி.
15. பத்ராஜலம் ஜமீன்தாரிணி.
16. ஆரணி ஜாகீர்தாரணியர் இருவர்.
17. புங்கநல்லூர் ஜமீன்தாரிணி.
18. தென்வள்ளூர் ஜமீன்தாரிணி.
19. ஜாராபேகம் ஸாஹிபா.
20. கைருமிஸ்ஸாபேகம் ஸாஹிபா.
21. டேன்பம்பிஸ்ஸாபேகம் ஸாஹிபா.
22. கெளரி சாந்தம்மகாரு.
23. மிஸெஸ் பாலய்யநாயடு.
24. மிஸெஸ் உஸ்மான் சாயபு.
25. மிஸெஸ் மோல்ஸ்வொர்த்.
26. மிஸ் ஸெல்.
27. மிஸெஸ் பார்த்.
28. மிஸெஸ் சுப்பிரமணியம்.
29. மிஸெஸ் சத்தியநாதம்.
30. மிஸெஸ் ஜோன்ஸ்மன்.

இவர்களும் வந்திருந்தார்கள். இவர்களில் கடை நால்வர் கூபாஷிகளாயிருந்தார்கள்.

---

# பொதுவர்த்தமானங்கள்.

## சென்னை ஜார்ஜ் டவுன்.

வேல்ஸ் இளவரசர் வந்ததன் அறிகுறியாக சென்னை "பிளாக் டவுன்" என்று பெயர்கொண்ட பகுதிக்கு "ஜார்ஜ் டவுன்" என்ற பெயரை பிரிக்கப்பட்டது. "பிளாக் டவுன்" என்பது கருப்பட்டணம்" என்ற பொருள்கொண்டது இந்தியரின் நிறத்தைக்குறிப்பிட்டு ஆங்கிலேயர் முற்காலத்தில் இவ்விழி சொல்லை வழங்கி வந்தனர். "ஜார்ஜ்" என்ற இளவரசர் பெயரை யொட்டி ஏற்பட்டிருக்கும் இப்புதுப்பெயர் எல்லோருக்கும் மகிழ்ச்சி விளைக்கத்தக்கது.

---

### திருவாங்கூரில் மாதர் கல்வி.

யூனிவர்ஸிடி பரீக்ஷைகளில் தேர்ந்து வந்திருக்கும் திருவாங்கூர் மாதர்களைப் பற்றி "மலபார் மெயில்" பத்திரிகை குறிப்பிட்டுப் பேசுகின்றது. திருவனந்தபுரம் ஜெனரல் ஆஸ்பத்திரி ஸர்ஜனுகிய டாக்டர். E. பூனென் எனபவரின் குமாரத்தி எப். ஏ. (F. A.) தேறி இப்போது பி. ஏ. (B. A.) வகுப்பில் சேர்ந்துவிட்டாள். இவள் சரித்திர பாடத்தையே முக்கியபாடமாய் எடுத்துக் கொண்டிருக்கிறாள் மெட்ரிகுலேஷன் தேறிய காலத்திலேயே இப்பெண் இங்கிலீஷில் விசேஷத் திறமை கொண்டவளென்று யூனிவர்ஸிடியார் இவளுக்கோர் மெடல்கொடுத்தார்கள்



இக்கன்னிகை சங்கீதத்திலும் தக்க பாண்டித்யமுடையவர்.

இனி 'சாரதா' என்ற பத்திரிகையை நடத்தும் செள. கல்யாணி அம்மாளும் பி. ஏ. வகுப்பில் சேர்ந்துவிட்டதாக அறிகிறோம். நாயர் வகுப்பிலிருந்து மெட்ரிகுலேஷன் பரீக்ஷை தேறிய செள பாகீரதி அம்மாவும் மேலே தொடர்ந்து வாசிக்க நிச்சயித்திருக்கிறாள்.

### ஆண்களும் பெண்களும் நதியில் சென்று ஸ்நாநம் புரிதல்.

நதிகளிலும், தடாகங்களிலும் ஆண்கள், பெண்கள் என்ற இருபகுதியாரும் சென்று ஒருவர்கண ஒருவர் ஸ்நாநம் செய்வது ஹிந்துக்களுக்குள்ளே மரபாக இருக்கின்றது. அதுவும் ஏதாவது புண்ணியகாலங்களிலே மாதர்கள் ஸ்நானகட்டத்திற்குச் செல்லும்போதும் ஸ்நானம் செய்யும்போதும் காணப்படும் காட்சிகள் எழுதவொண்ணாதன. இவ்வழக்கம் மிகவும் தப்பென்பதைக் குறிப்பிட்டு (லக்னெள) அட்வொகேட் பத்திரிகையிலே ஒரு நிருபர் பின்வருமாறு எழுதுகின்றார்:—

"அன்றையதினம் கண்டதை எழுதுவதற்கு நான் ஹிந்துவாதலால் எனக்கு மனம் சகிக்கவில்லை. நாம் நமது சிறு பெண்களைப் பாடசாலைகளுக்குப்போக விடுவதில்லை. நமது அரிய மித்திரர்களையும் சமீப பந்துக்களையும் சந்திக்கும்படி நாம் நமது மாதர்களுக்கு அனுமதி கொடுப்பதில்லை. மாதர்கள் சபைக்குக்கூடப் போகக்கூடாதென்று சிலர் தமது மனைவியரைத் தடை செய்கிறார்கள். இப்படியெல்லாமிருப்பினும் அவர்களை ஸ்நானக்கட்டத்திற்கு அழைத்துச்சென்று ஜனநெருக்கமான கூட்டங்களில் இடிபடுவதைப் பார்த்திருப்பது தர்மமா? அவர்கள் ஓர் பொது இடத்திலே ஸ்நானம் செய்யும்போது அயோக்கியர்களெல்லாம் வெறித்து நோக்கும் படியாயிருப்பதை நாம் சகிப்பது பொருந்துமா? ஐரோப்பிய மாதர்கள் தமது மாலையுடுப்பில் உடல் முழுவதையும் நன்றாக மறைத்துக்கொள்வதில்லையென்று அநேக ஹிந்துக்கள் குறைகூற முன் வருகின்றார்கள். அது நியாயமே. ஆனால் பொது இடத்தில் மதிப்புள்ள மாதர்கள் வந்து ஸ்நானம் செய்யும் வழக்கம் மேற்படி ஐரோப்பிய வழக்கத்தைக்காட்டிலும் அதிக தப்புகொண்டதல்லவா?" என்கிறார். இதை நமது தேசத்து மாதர்களும் ஆடவரும் நன்கு ஆலோசனை புரியுமாறு பிரார்த்தனை செய்கின்றோம். இதனால் நம்மவரை அன்னியதேசத்தவர்கள் அநாகரிக ஜனங்கள் என்று கருதுகிறார்கள்.

### எப். ஏ. (F. A,) பரீட்சை.

டிசம்பரில் நடந்த எப். ஏ. பரீக்ஷையின் பாஸ் ஜாப்தாவிலே 10 மாதர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இவருள் புதுக்கோட்டை காலேஜ் C. N. முத்துலக்ஷ்மி அம்மாள் என்று ஒருமாதுமட்டிலும் ஹிந்து. மற்றவர்கள் கிறிஸ்தவர், ஐரோப்பியர், யூரேஷியர் என்ற வகுப்புகளைச் சேர்ந்தோர்.

## மெட்ரிகுலேஷன் தேறின ஓர் பிராமணமாது.

சமீபத்தில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறிய மாதர்களுக்குள்ளே ஸ்ரீ சுப்பு லக்ஷ்மி அம்மாள் என்ற பிராமண கன்னிகையும் இருப்பதுணர்ந்து மகிழ்ச்சியடைகிறோம். இப்பெண் திவான்பகதூர் R. V. ஸ்ரீநிவாசய்யரின் (Inspector

general of Registration) சகோதரர் குமாரத்தி இவளது தந்தையாகிய மிஸ்டர் R. V. சுப்பிரமணிய அய்யர் சென்னை விவசாயக காலேஜில் போதகராக (Lecturer) இருக்கின்றார்.

டிஸம்பர் மாதத்து சக்ரவர்த்தினிப்பத்திரிகையில் "பழமை காலத்து மாதர்களின் பாட்டுகள்" என்ற தலைப்பின் கீழே பிரசுரிக்கப்பட்ட "பார்வதிசோபனம்" என்ற பாடலை அனுப்பியது, ஷை R. S. சுப்பு லக்ஷ்மி யம்மையே.

### மிஸ் தங்கம்மா.

மிஸ் தங்கம்மா என்ற மற்றொரு ஹிந்து மாதும் ஷை பரீக்ஷையிலே தேறி இருக்கிறாள்.

இப்பெண் மங்களூரிலே பாளிகர் (Balegar) என்ற ஜாதியைச்சேர்ந்தவள். மங்களூரிலிருந்து மெட்ரிகுலேஷன் தேறிய ஹிந்துப் பெண்களில் இவள் இரண்டாவது. இதற்கு முன் மிஸ் லலிதாபாய் என்ற மாது தேறியிருந்தனள், (லலிதாபாயியை மங்களூர் முனிசிபல் சேர்மனாகிய மிஸ்டர் N. சுப்பராவ் விவாகம்செய்து கொண்டிருக்கிறார்.

### மிஸ். ருஸ் வெல்டின் சுதேசீய வுணர்ச்சி.

அமெரிக்காவின் அதிபராகிய மிஸ்டர் ரூஸ் வெல்டின் குமாரத்திக்கு சில தினங்களின் முன்பு விவாகம் நடந்தேறிய விஷயம் நேயர்களறிவார்கள். அப்போது அப்பெண்மணிகளது ஆடைகளனைத்தும் சுதேச (அமெரிக்க) துணிகளாகவே இருக்கவேண்டுமென வற்புறுத்தி அங்ஙனமே தயார் செய்துகொண்டாள். அவளது கழுத்திலே தரித்திருந்த முத்துமாலையின் முத்துக்களெல்லாம் அமெரிக்க நதிகளிலிருந்து எடுக்கப்பட்டன. அவளது விவாகக் கணையாழியிலே அழுத்தியிருக்கும் இரத்தினங்கள் அமெரிக்க சுரங்கங்களிருந்து எடுக்கப்பட்டன.

### ஸ்ரீமதி கிரிஜா குமாரி தேவி.

பெங்காளத்திலுள்ள பராநகரில் புகழோங்கிய மஹோபகாரியும் சீர்திருத்தக்காரருமாகிய பாபு சசிபாத பானர்ஜியை இந்தியாவிலே அறியாதாரில்லை. இவரது அருமை மனைவியாகிய கிரிஜா குமாரதேவி சில நாட்களின்முன்பு இறந்து போய்விட்டதறிந்து விசனமடைகின்றோம். இப்பெண்மணி டக்கா ஜில்லாவிலே ஓர் சிறந்த வைத்திய குலத்தில் தோன்றியவர்.

## CHAKRAVARTINI.
## A TAMIL MAGAZINE.

"The Indian Patriot says:—'Chakravartini,' a Tamil Magazine edited by Mr. Subrahmanya Bharati, Sub-Editor of the Swadesamitran is, as its name indicates, a high class monthly for Hindu ladies. The contributions are on a variety of interesting subjects, by competent men, several of whom are graduates and are written in easy, flowing Tamil. The get up of the Magazine leaves nothing to be desired and the annual Subscription is fixed at the exceedingly moderate rate of two Rupees. From the manner in which it is being conducted, there is no doubt the 'Chakravartini' deserves the support of our educated Tamil speaking conutrymen."

### நோட்டீஸ்.

"சக்ரவர்த்தினி பத்திரிகைக்காக கையொப்பக்காரர்கள் சேர்க்கும்படியாகவும் அநுசம்பந்தமான மற்றக்காரியங்களை செய்யும்படியாயும் டி. முத்தப்பிள்ளையை ஏஜெண்டாக நியமித்திருக்கிறபடியால் நமது கையொப்ப நேயர்கள் ஷையாருக்கு வேண்டிய ஒத்தாசை செய்யும்படியாய் கேட்டுக்கொள்கிறேன்.

பி. வைத்தியநாதய்யர்
சொந்தக்காரர்.

23 2 06

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
ழெண்மை புறவோங்கு முலகு."

| Vol. 2. | Madras. February 1906. | No. 7. |
|---|---|---|
| தொகுதி-2 | சென்னை 1906-ம் வருஷம் பிப்ரவரி-மீ | பகுதி-7. |

# பவுத்த மார்க்கத்திலே மாதர்களின் நிலைமை.

...வுதம சாக்கிய முனி என்ற ஸ்ரீ புத்தரை ஆரியாவர்த்தத்திலே அவதரித்த மஹான்களுக்குள்ளே தலைமை வகுப்பைச் சேர்ந்தவரென்பதாக இவ்வுலகத் ...ப் பண்டிதர்களெல்லாம் ஒரே மனதுடன் ஒப்புக்கொள்கிறார்கள். இத்தகைய ...மாத்மாவால் ஸ்தாபனம் செய்யப்பெற்ற பவுத்த மார்க்கமானது நமது பாரத ...யை விட்டு நீங்கிவிட்ட தென்றபோதிலும் வெளித் தேசங்கள் பலவற்றிலே ...ருந்த பழைய மதங்களை வென்று பெருமை பெற்றுத் திகழ்கின் ...ஜப்பான், சீனா, திபெட், பர்மா, ஸயாம், இலங்கைத்தீவு, என்பன பவுத்த ...களேயாகும். இவ்வமயத்திலே நவீன சாஸ்திர ஆராய்ச்சியில் பிரதம ஸ்தல ...ஜெர்மனி தேசத்திலே பவுத்த மார்க்கம் பரவத் தொடங்கிவிட்டது. ...ஐரோப்பிய கிறிஸ்தவ மஹாஞானிகள் தமது மதத்தை விட்டுவிட்டு பவுமத்தை அநுசரிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். அமெரிக்காவிலேயும் பவுத்த ...தனது பெருமையைச் செலுத்தா திருக்கவில்லை. இவ்வுலகத்திலுள்ள ...ன், கிறிஸ்தவர், மகமதியர், முதலிய எல்லா மதஸ்தர்களைக் காட்டிலும் ...னை தொகையில் அதிகப்பட்டவர்கள். இந்த சமயாசாரப்படி ஸ்திரீகளு...மான ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிற தென்பதை ஆராய்ச்சி புரி...வும் பயனுடைய தொழிலாகுமென்று நம்புகிறோம். இவ்விஷயத்தில் ...ல ருசிகரமான குறிப்புகள் ஸ்ரீ லக்ஷ்மீநரஸு நாயிடவர்கள் ...or Lakshmi Narasu of the Madras Christian College) சமீபத் ...வாரத்து பத்திரிகைக்கு எழுதியிருக்கும் உபந்நியாசத்தினின்றும் ...நவீன சந்தர்ப்பங்களில் கொள்கைகள் நிறைந்த மனமுடையவ

ராகிய ஸ்ரீமான் நாயடு தமதுகோட்பாடுகளை பவுத்தக் கோட்பாடுகளுடன் பொருத்திவிட வேண்டுமென்று பெரு முயற்சி செய்வதில், பவுத்தமார்க்கத்தைப் பற்றி இவர் கூறும் அபிப்பிராயங்கள் முழுதும் அங்கீகாரம் செய்துகொள்வதற்கு உரியன அல்லவென்பது மெய்யே யென்றாலும், புராதன பவுத்த சரித்திர விஷயங்களில் அவரது ஆராய்ச்சிகளைத் தழுவலாமென்ப திவலையேனும் சந்தேகமில்லை. நிற்க.

### பவுத்த "சங்க"த்திலே சேர விரும்பிய ஸ்திரீகள்.

புத்தப்பெருமான் உலகைத் துறந்தவர்களாகிய பல மெய்ஞ்ஞானிகளை "ஸங்க"மாகச் சேர்த்து வைத்திருந்தார். துறவிகளின் திருக்கூட்டத்தை "ஸங்க"மென்று வழங்குதல் மற்ற இந்திய சமயங்களிலும் மரபேயாகும்.

அந்தக் காலத்திலே அனேக அரசர்களும், பிரபுக்களும், பவுத்த சங்கத்திலே சேர்ந்துகொண்டார்கள். சக்ரவர்த்தி குமாரனுகிய ஸ்ரீ புத்தர் உலகவாழ்க்கையை முற்றத்துறந்து முக்தி (Nirvana) மார்க்கத்தை தமது தெய்வீகத்திருவாயால் போதனை செய்யத் தொடங்கியபோது அதனைச் செவிக்கொண்ட மஹா பாதகர்கள் கூட தமது நீச இயற்கையை மிக எளிதாக உதிர்த்துவிட்டு உண்மை நெறியை அறிந்து கொண்டார்கள். பணமே தெய்வமாக வணங்கிவந்த வர்த்தகர்களெல்லாம் கணப்பொழுதிலே செல்வத்தின் இழிவையும், நிலையாமையையும், தீங்குகளையும் உணர்ந்து கொண்டனர். செல்வத்தருக்குத் தலைக்கேறி, மண்ணாசையும் பெண்ணாசையும் வரம்பு கடந்துபோய், முகஸ்துதி கூறும் நீசப்புழுக்களின் வார்த்தைகளை மெய்யென்று நம்பி, தம்மை பூலோக தெய்வங்களாகக் கருதி, அந்தகாரச்சேற்றிலே அமிழ்ந்துபோய்க் கிடந்த அரசர்களெல்லாம் புத்தர் கோமானது கடைக்கண்ணருள் பெற்றவுடனே "சத்ய மார்க்கப் பிரவேசம்" செய்துவிட்டார்கள். இவர்களெல்லாம் சன்யாசிகளாய் விட்டபோது, இவர்களுடைய பத்தினிகளும் ஞானோதய மடைந்தோர்களாகி, சாக்கிய முனிவரின் சரணங்களையடைந்து "ஜகத்ரக்ஷகா! எங்களையும் சங்கத்திற் சேர்த்துக்கொண்டு அருளவேண்டும்" என்று பிரார்த்தனை புரிந்தார்கள். ஸித்தார்த்தருடைய சிறிய தாயாராகிய பிரஜாபதி கவுதமியே அந்த யோகினிகளுக்கெல்லாம் தலைவியாகி வந்தனர்.

### அருட் பிரசாதம்.

கருணைக்கடலாகிய பெருமான் அவர்களை நோக்கி "அம்மணிகளே, நீங்கள் 'சங்க'த்திலே சேர்வது எனது தர்மத்திற்கு விரோதமில்லை. ஆனால் நீங்கள் வந்து சேர்வதிலிருந்து அஞ்ஞானிகளாகிய உலகத்தார் வீண் அபவாதங்கள் கூறமுற்படுவார்கள். ஆதலால் நீங்கள் வீடுகளிலேயே இருந்து சாதாரண மாதர்க்குள்ள ஆடைகளை அணிந்துகொண்டு, ஒழுக்கந்தவறுமல், ஞானசாஸ்திர ஆராய்ச்சி செய்துகொண்டிருங்கள். அதுவே உங்களுக்கு முக்தி (Nirvana) ஸாதனம்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.



ஆனால் கவுதமி தேவிக்கு அம்மறுமொழி திருப்தி யளிக்கவில்லை. எனவே, கவுதமி மற்ற மாதர்களை நோக்கி 'நாமே ஆசிரமத்திற்குரிய கோலங்கள் தரித்துக்கொண்டு புத்தரிடம் செல்வோம். பிறகு அவர் நமக் கருள்புரிவார்' என்றுரைத்தாள். அங்ஙனமே அம்மாதர்களனைவரும் தமது முடி களைந்துவிட்டு, யோகியுடை தரித்துக்கொண்டு, கையிலே ஓடுகளை யேந்தியவர்களாய், கால்நோவ நடந்து புத்த சந்நிதிக்கு வந்து சேர்ந்தார்கள். புண்ணிய மூர்த்தியின் முக்கியத் தொண்டராகிய ஆனந்தர் அம்மாதர்களின் உண்மைப்பற்றையும், பெருந்தன்மையையும் கண்டு வியப்புற்று குருவினிடம் போய் அவர்களது முறையீட்டையும், தகுதியையும் எடுத்துச்சொல்லினர்.

பெருமான் அவர்களை சங்கத்திற் புகும்படி ஆக்ஞை கொடுத்ததுடன் பின்வருமாறு பேசினர்:—"புத்தர்களின் தோற்றம் புருஷர்களின் நன்மைக்கு மாத்திரமல்லவே. கிசாகைமுதலிய பலமாதர் இதற்குமுன் மெய்ந்நெறியிற் புகவில்லையா? ஆண்களைப் போலவே பெண்களும் தருமமார்க்கத்தை யடையலாம்" என்றார்.

புத்தருடைய மார்க்கத்திலே ஞான சம்பாதனத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சிறிதேனும் வேற்றுமை பாராட்டுவது கிடையாது. பவுத்த வசனங்களிலே தேடித் தேடிப்பார்த்தாலும் புருஷர்களைக் காட்டிலும் ஸ்திரீகளைக் குறைவாக ஓரிடத்திற்கூடச் சொல்லியிருப்பதில்லை. மார்க்கக் கோட்பாடு இப்படியிருந்தபோதிலும் நடையிலே ஸ்திரீகளைச் சிறிது தாழ்ந்தபடியில் வைத்திருந்ததாகப் புலப்படுகின்றது. ஏனெனில், ஐம்புலன்களையும் வென்று, உலகமாயைகளை யெல்லாம் வெறுத்துத்தள்ளி, மஹாசாந்தி நிலையை அடைவதில் புருஷர்களைக் காட்டிலும் ஸ்திரீகள் இயற்கையாகவே பெரும்பாலும் பிற்படுகின்றார்கள். பெண்பாலாரின் நெஞ்சம் மிகுந்த மென்மைகொண்டது. ஆதலால் இவ்வாழ்க்கைப்பற்று அவர்களுக்கு மிகுதியாக ஏற்பட்டு விடுகின்றது. அதுபற்றி, ஜீவன் முக்தப் பெருந்தகை யடைவதற்கு மாதர் பெரும்பாலும் வன்மையற்றவ ராகிறார்கள். ஆனால் ஞானவொளியை நோக்கி, அதனைப் பின்பற்ற மாதர்கள் துணிந்து விடுவாராயின், அவர்களும் மார்க்கப் பிரவேசம் செய்துவிடலாமென்பது 'தரும'த்தின் முடிவு.

### பர்மாவிலே பவுத்த ஸ்திரீகள்.

ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் புத்தர் சமத்துவம் விதித்திருப்பதின் நன்மைகள் பவுத்த மார்க்கம் பரவும் தேசங்களிலே நன்கு காணப்படுகின்றன. முதலாவது பர்மாவை எடுத்துக்கொள்வோம். பர்மிய ஸ்திரீகளின் நிலைமையைப்பற்றி T. வீலர் (Talboys Wheeler) என்ற சரித்திர விற்பன்னர் பின்வருமாறு எழுதுகின்றார்:—

"அந்நாட்டிலே ஜனங்கள் தமது மனைவியரையும், குமாரத்திகளையும் உள்ளறைகளிலே கைதிகளைப்போல் அடைத்து வைப்பது கிடையாது. சந்தோஷகாலங்களிலும், உற்சவ தினங்களிலும் அந்த ஸ்திரீகள் வெகு சுயாதீனத்துடன் இருக்கிறார்கள். குடும்பத்தில் அவர்களது நிலை சுதந்திரமானது. தமக்குத் தாமே சம்பாத்தியம் செய்துகொள்கிறார்கள். தமது தந்தையர், கணவர் என்போரின் காரியாதிகளை மேற் பார்க்கிறார்கள்.

ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் பலவந்தமாக விவாகம் செய்துவைக்கும் வழக்கம் அந்நாட்டிலில்லை. இளைஞர்களும் கன்னியர்களும் காதலிருந்தால் மட்டுமே விவாகம் செய்துகொள்வார்கள். குருக்களேனும், சோதிடரேனும், தாய் தந்தையரேனும், விவாகத்தில் தலையிடுவதில்லை."

கிராமாந்தரங்களிலே கூடப் பெரும்பான்மை கொண்ட மாதர்கள் எழுதப் படிக்க அறிவார்கள். பெண் கல்வி விஷயத்தில் யாதொரு தடையும் செய்யப்படுவதில்லை. குழந்தைப் பிராயத்திலேயே பெண்கள் பாடசாலைகளிற்போய் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். பர்மிய பாஷையிலும், பாளி பாஷையிலும் பவுத்த கிரந்தங்கள் அவர்களுக்கு முக்கியமாகக் கற்பிக்கப்படுகின்றன.

நன்மை, தீமை, சௌக்கியம், அசௌக்கியம், சீரநிலை, மனநிலை, என்பவற்றைப்பற்றி யெல்லாம் அவர்களுக்குண்டாகும் அறிவு இந்த கிரந்தங்களிலிருந்தே ஏற்படுகின்றது. பர்மிய மாதர்களுக்குச் சிறக்க அமைந்துள்ள குணங்களாகிய விசுவாசம், காருணியம், அன்புடைமை, என்பவையும் அப்பெருங் கிரந்தங்களிலிருந்தே கற்றுக்கொள்ளப்படுகின்றன. கிரகபத்தினிக்குரிய பின் வரும் 5-கடமைகளையும் அவர்கள் பாடசாலைகளிலேயே தெரிந்துகொள்கின்றனர்:—

(1) கிருஹ காரியங்களை நிறைவேற்றல்
(2) விருந்தினரை உபசரித்தல்
(3) பதிவிரதா தர்மம்
(4) வரவறிந்து செலவிடல்
(5) சோம்பலில்லாமை.

இதுவுமன்றி அவர்களுக்கு குடிவாழ்க்கை முறைகளைப்பற்றிய பயிற்சி தாய் வீட்டிலேயே கொடுக்கப்படுகின்றது.

ஸயாம் தேசத்து ஸ்திரீகள்.

ஸயாம் தேசத்திலே வெளிக் காரியங்களிலெல்லாம் புருஷர்களுக்குப் பெண்டிர் எவ்வளவோ துணைபுரிகின்றார்கள். புருஷர்களுக்கு எவ்வளவு சுதந்திரமிருக்கின்றதோ அவ்வளவு சுதந்திரம் அந்நாட்டில் ஸ்திரீகளுக்கு மிருக்கின்றது.

டிபெட்.

டிபெட் தேசமானது "லாமாக்கள்" என்ற பெயர்கொண்ட குருக்களின் கீழ் மூடபக்தி யிருளிலே மூழ்கிக் கிடக்கின்றது. ஆனால் அங்கேகூட புத்த மார்க்க விசேஷத்தினால் ஸ்திரீகள் இழிநிலையினின்று விலகியிருக்கிறார்கள். சுய காரியங்களிலே டிபெட் ஸ்திரீக்கு எவ்விதமான நிர்ப்பந்தமேனும், நிபந்தனையேனும் கிடையாது. ருஷியாவிலிருந்து G.Ts. ஸைபிகாப் (T. Sybikoff) என்ற வித்வான் டிபெட் தேசத்திலே ஆராய்ச்சிகள் செய்யும்பொருட்டுச் சென்றிருந்தார். அவர் பின்வருமாறு சொல்கிறார்:—மாதர்கள் முற்றிலும் சுயாதீன நிலையிலிருக்கிறார்கள். லௌகிக காரியங்களிலே அவர்கள் முக்கியமான பாகமெடுத்துக்கொள்கிறார்கள். பெரிய காரியங்களை அந்நாட்டு ஸ்திரீகள் உதவியின்றி மேல் வகித்து நடத்துகிறார்கள்.



முடிவுரை.

பவுத்தர்களின் விவாகக் கிரியையிலே டம்பமான வீண் அனுஷ்டானங்கள் அதிகமாக இல்லை. இலங்கை, டிபெட், மங்கோலியா, ஜப்பான், முதலிய பவுத்த தேசங்களிலே விவாக காலங்களில் டம்பச்செலவுகள் முதலானவை செய்வது கிடையாது. பர்மிய ஸ்திரீகள் ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல விவாகமானவுடன் பெயரை மாற்றிக்கொள்வது கிடையாது. மோதிரம் மாற்றிக்கொள்ளுதல், தாலி கட்டிக்கொள்ளுதல், முதலிய எவ்விதமான சின்னங்களும் கிடையா. ஒரு ஸ்திரீயின் பெயரைக் கேட்பதினாலேனும், அவளைப் பார்ப்பதினாலேனும், அவளுக்கு விவாகம் ஆயிற்றா, இல்லையா என அறிந்துகொள்ள இயலாது. மனைவியின் சொத்தின் பேரில் கணவனுக்கு உரிமைகிடையாது. அவள் சீதனமாகக் கொண்டுவந்த பொருள், அவள் சம்பாத்தியம் செய்த பொருள், பிற்பட அவளுக்கு அவளது தந்தை முதலியவர்களிடமிருந்து 'வாரிஸ்' ஆக இறங்கும் பொருள், என்பவற்றிற்கெல்லாம், அந்த ஸ்திரீகளே உடையோராவர். ஸர். T. G. ஸ்காட்ஸ் சொல்கிறார்:—"ஐரோப்பிய ஸ்திரீகள் கூக்குரலிடும் உரிமைகளிலனேகம் பர்மிய மாதர்களால் அனுபவிக்கப்படுகின்றன."

மேலே விஸ்தரிக்கப்பட்டதிலிருந்து பவுத்த மார்க்க ஸ்திரீகளைப்பற்றி நம்மவர்களுக்குச் சிறிது தெரியக் கூடுமென நம்புகின்றோம். அவர்களின் ஆசாரங்களையேனும், முறைமைகளையேனும் ஒரே யடியாக அங்கீகரித்தற்குரியனவென்று யாரும் வாது செய்யமாட்டார்கள். ஆனால் பாரததேச ஞானிகளில் ஒருவராகிய புத்த முனிவரால் ஸ்தாபனம் செய்யப்பட்ட மார்க்கத்தில் மாதர்கள் நடத்தப்பெறும் வகையை இந்தியர் நன்கறிந்து கொள்வது கடமையெனக் கருதுகின்றோமாதலின், அதற்கு நாமெழுதியிருப்பது போதிய தூண்டுதலாகத் தவறாதென்று நினைக்கிறோம்.

# சந்திரமதி.

(132-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்விதமாய் அவரிடத்தில் நாம் நடந்து கொள்ளாவிட்டால், கடவுள் நம்மைத் தண்டிப்பார் அல்லவா?

குரு.—கடவுள் தம்மைப் புகழ்ந்ததற்காக சந்தோஷிப்பதும் இல்லை. தூஷணம் செய்ததற்காகக் கோபங் கொள்வதுமில்லை. ஆதலால், இவ்விஷயத்தில் நாம் தனியாய்த் தண்டனை யடையாமற் போனாலும், நமக்கு இவ்வளவு உபகாரம் செய்கிற கருணாநிதியி னிடத்திலேயே நாம் நன்றி யற்று, செய்யவேண்டிய கடமைகளை மறந்து, செய்நன்றியற்ற கல் நெஞ்சமுடையவராயிருந்தால், சாமானிய மனுஷர்களின் விஷயத்தில் அடியோடு நன்னடக்கை யென்பதின்றிக் கெட்டுப்போவோமாதலால், அதன் பொருட்டு தண்டனை யடைவோம்.

சந்தி.—துர்மார்க்கத்திற் செல்லாமல் நல்வழியில் நடப்பவர்களுக்கு ஈசுவர தியானம் முதலியவற்றால் பிரயோஜன மில்லையா?

குரு.—எவ்வளவோ பிரயோஜனமிருக்கின்றது. ஈசுவர தியானத்தினால் நம் மனதுக்கு ஆநந்தம் உண்டாவதோடு கூட, நற்காரியங்களைச் செய்வதில் ஒருவித உற்சாகமும் கெட்ட காரியங்களைச் செய்வதில் வெறுப்பும் உண்டாகும். அதனால் எல்லா நன்மைகளும் நமக்கு நிச்சயமாய் உண்டாகும். ஆகவே நாம் தினந்தோறும் மூன்று வேளைகளிலும் பக்தியுடன் கடவுளைச் சிந்திக்கவேண்டும்.

சந்திர.—தாங்கள் செய்த இதோபதேசத்தால் என் அஞ்ஞானவிருள் நீங்கி, ஞானமார்க்கத்தைச் சிறிது காணலானேன். தங்கள் உபதேசத்தின்படி இனி தினந்தோறும் மனமொழி மெய் எனும் திரிகரண சுத்தியாய்க் கடவுளை வழிபட்டு வருவேன்.

## ஐந்தாம் அத்தியாயம்.

மறுநாள் சந்திரமதி பாடம் ஒப்புவித்துக் கொண்டிருக்கையில் இடையிடையில் இடதுகையைச் சொறிவதும் விரல்களைத் தேய்ப்பதுமாயிருந்தாள். அவ்வித்தியா சாகரப்புலவர் கண்டு பாடம் முடியும் வரையில் சும்மாவிருந்து பிறகு அடியில் வருமாறு சம்பாஷிக்கத் தொடங்கினர்.

குரு.—அம்மா, நீ இன்றையதினம் என்னவோ அடிக்கடி கையைத் தேய்த்துக்கொண்டிருந்தையே, அதற்குக் காரணமென்ன?



சந்திர.—எத்தினாலேயோ என் விரல்களின் சந்தில சிறிய சிறிய சிரங்குப் பொறிகள் தோன்றி, கையில் தினவாயிருந்தபடியால் சொறிந்தேன். அதிலும் நடுவிரலின் கணுவில் உண்டாயிருக்கும் இந்த சிறு சிரங்கு என்னை அதிகமாய் பாதை படுத்துகிறது.

குரு.—நமக்கு ஏற்பட்டுள்ள சில விதிகளை நீ மீறினபடியால், உனக்கு இப்படிப்பட்ட தண்டனை உண்டாயிற்று. நீ கைகளை நன்றாய்க் கழுவாமல் அசுசியாய் இருந்தபடியால், உன் கைகளில் இப்பொழுது சிரங்கு உண்டாயிருக்கிறது. கடவுளின் கட்டளை வடிவமாயுள்ள விதிகளுள் எதை மீறி நடந்தாலும், அதன் பயனுக்குத் தக்க தண்டனை உண்டாகாமற் போகாது.

சந்திர.—படிப்பிலுள்ள கவலையால், சென்ற சில நாளாக என் தேக சௌக்கியத்தைப்பற்றி அவ்வளவாய்க் கவனியாமல் விட்டு விட்டேன். கைகளை நன்றாய்க் கழுவாமலிருப்பது கூட விதிகளை மீறி நடப்பதாகுமோ?

குரு.—தேகத்தைப் பரிசுத்தமாய் வைத்துக்கொண்டிருப்பதும் நம் கடமைகளில் ஒன்றென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இது நான் சொன்ன இரண்டாம் பிரிவில் சேர்ந்த சுவய விஷயமான தர்மங்களில் அடங்கும் படிப்பில் அக்கறையாயிருப்பது முக்கியமாயினும், சரீர ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளலாகாது.

சந்திர.—அப்படியானால், சுவய விஷயத்தில் நடத்தவேண்டிய தர்மங்கள் இன்னவை யென்றும் அவற்றை மீறி நடப்பதால் உண்டாகும் கெடுதிகள் இன்னவை யென்றும் விவரமாய்ச் சொல்லுங்கள்.

குரு.—சரீரத்தைப் பாதுகாக்கும்பொருட்டு நாம் செய்யவேண்டிய காரியங்களெல்லாம் சுவய விஷயமான தர்மங்களேயாம். அவற்றை மீறி நடப்பதால், பலவகையான வியாதிகள் சம்பவித்துப் பலவகைகளிலும் வருத்துகின்றன. சரீரம் ஆரோக்கிய நிலையிலிருக்கும் வரையில்தான் நாம் எவ்விதமான தர்ம காரியங்களைச் செய்வதற்குச் சக்தியுள்ளவர்களா யிருப்போம். அதற்குச் சிறிது கேடு நேர்ந்தாலும், எல்லாத் தர்மங்களும் தலைகவிழ்ந்துபோகும். ஆகவே எல்லாவற்றையும் விட நம் சௌக்கியத்தை முக்கியமாய்க் கவனித்து தேகத்தைக் காப்பாற்றி வரவேண்டும். தேக ஆரோக்கியத்திற்குச் சுத்த வாயுவும், தெளிந்த நீரும், மிதமான ஆகாரமும் சுத்தமான உடைகளும், நித்திய ஸ்நாநமும், சுக நித்திரையும் அவசியமாய் இருக்கவேண்டியவை.

சந்திர.—நமது சரீர ஆரோக்கியத்திற்காக வாயுவும் அவ்வளவு அவசியமாய் வேண்டியிருக்கிறதா?

மஹேச குமார சர்மா.

## 1901-ம் வருஷத்து ஸென்ஸஸ் (Census)ல் மாதர் கல்விக் கணக்கு.

சென்ற 1901-ம் வருஷத்தில் பிரசுரிக்கப்பெற்ற ஸென்ஸஸிலிருந்து மாதர் கல்வியின் சம்பந்தமான பின்வரும் கணக்கை எடுத்துப் பிரசுரித்திருக்கிறோம்.—மொத்தம் 10000-ஸ்திரீகளுக்கு 94-ஸ்திரீகளே கல்விப்பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இந்தப் பயிற்சியும் அதி சொற்பமானதாகவே இருக்குமென்று நாம் தெரிவிக்க வேண்டுவதில்லை. முதல் மூன்று பாடப்புஸ்தகங்களுக் கப்பால் படித்திருக்கும் மாதர்கள் மிகவும் குறைவாகவே இருக்கிறார்கள். இவர்களில் கூடக் கிறிஸ்தவப் பெண்கள் மிகவும் பெருந்தொகையாக இருப்பார்கள். தேச பக்தியுடைய ஒவ்வொருவனும் இந்தப் பரிதாபகரமான நிலைமையைக்கண்டு மனநடுங்குவானென நம்புகிறோம். கல்வி யறிவில்லாமல் அறிவிருண்டு கிடக்கும் மாதரின் தொகை இவ்வளவு மிகுதிப்பட்டிருக்கும் தேசம் எவ்வாறு முற்படப்போகின்றது? எனினும், இங்ஙனம் பேரிருள் மிறிக்கிடக்கும் வானத்திலே நம்பிக்கைத் தாரகைகள் சிற்சில திகழ்வதுபற்றி ஒருவாறு மன ஆறுத லடைகின்றோம்.

பத்திராதிபர்.

| ஜில்லா. | ஸ்திரீ ஜன தொகை. | படித்த ஸ்திரீ ஜனத்தொகை. | தமிழ். | தெலுங்கு. | மலையாளம். | கன்னடம். | மற்ற பாஷைகள். | இங்கிலீஷ். |
|---|---|---|---|---|---|---|---|---|
| கெஞ்சம். .. | 880737 | 3114 | 46 | 1575 | | | 1407 | 151 |
| ஷை ஏஜென்ஸி .. | 158633 | 56 | | 2 | | | 54 | |
| விசாகப்பட்டணம். .. | 1065439 | 4417 | 96 | 3477 | | | 273 | 680 |
| ஷை ஏஜென்ஸி .. | 417841 | 343 | 3 | 95 | | | 238 | 11 |
| கோதாவரி .. | 1091371 | 8309 | 112 | 7319 | 2 | 4 | 624 | 487 |
| ஷை ஏஜென்ஸி .. | 78666 | 275 | 2 | 265 | | | 5 | 8 |
| கிருஷ்ணா .. | 1064502 | 7060 | 198 | 6181 | 1 | 4 | 475 | 364 |
| நெல்லூர் .. | 744470 | 4165 | 226 | 3551 | | 8 | 344 | 208 |
| கடப்பை .. | 635449 | 2606 | 138 | 1033 | [illegible] | 72 | 413 | 131 |
| கர்னூர் .. | 431440 | 1811 | 93 | 1511 | 19 | 11 | 147 | 65 |
| பெல்லாரி .. | 466338 | 1617 | 124 | 536 | 7 | 425 | 16 | 414 |
| அனந்தப்பூர் .. | 354898 | 1694 | 117 | 936 | | 95 | 379 | 200 |
| மதிராஸ் .. | 252616 | 23087 | 11330 | 3944 | 57 | 84 | 1585 | 7643 |
| செங்கல்பட்டு .. | 650691 | 6477 | 4257 | 1096 | 3 | 3 | 283 | 1026 |
| வட ஆற்காடு .. | 1106896 | 6594 | 3457 | 1841 | 12 | 32 | 953 | 568 |
| சேலம் .. | 1119442 | 4595 | 3047 | 385 | 15 | 45 | 638 | 516 |
| கோயம்புத்தூர் .. | 1118702 | 6196 | 5209 | 139 | 23 | 125 | 273 | 558 |
| நீலகிரி .. | 50887 | 2516 | 1042 | 28 | 23 | 40 | 133 | 1408 |
| தென் ஆற்காடு .. | 1181727 | 6160 | 5297 | 325 | 6 | 31 | 335 | 397 |
| தஞ்சாவூர் .. | 1178616 | 10592 | 9799 | 112 | 6 | 7 | 278 | 542 |
| திருச்சிறுபள்ளி .. | 744931 | 5589 | 4738 | 142 | 7 | 8 | 293 | 524 |
| மதுரை .. | 1474214 | 8011 | 7572 | 56 | 3 | 29 | 162 | 645 |
| திருநெல்வேலி .. | 1057808 | 15950 | 15236 | 174 | 19 | 15 | 414 | 1226 |
| மலையாளம் .. | 1411335 | 42704 | 620 | 62 | 39806 | 40 | 770 | 2109 |
| தென் கன்னடம் .. | 586197 | 5535 | 13 | 7 | 809 | 3952 | 361 | 814 |
| | 19362849 | 181563 | 72773 | 35692 | 40822 | 5021 | 11103 | 26605 |



# மஹா மஹோ பாத்தியாய சாமிநாதய்யர்

பலவகைத் தானங்களிலே நல்லறிவுத் தானமே விசேஷ முடையதென்று மேலோர் சொல்வார்கள். அழிந்துபோன ஆலயங்களை மறுபடி புதுக்கிக்கட்டிப் பிரதிஷ்டை புரிந்தோர், நெடுங்காலமாக நின்றுபோன அன்னசத்திரங்களுக்கு மறுபடியும் உயிரளிப்போர், வறண்டு மண்ணேறிப் போய்க்கிடக்கும் தடாகங்களை மறுபடி வெட்டி நலம் புரிவோர் என்னும் பலவகையாரினும், மங்கி மறைந்துபோய்க் கிடக்கும் புராதனப் பெருங்காவியங்களைப் பெரு முயற்சிசெய்து திரும்ப உலகத்துக்கு அளிக்கும் பெரியோர்கள் புண்ணியத்திற் குறைந்தவர்களல்லர். மேலும், புகழ் நிலைக்குந் தன்மையில் மற்றெல்லோரைக் காட்டிலும், இவரே சிறந்தவராவார்.

பிரமஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயர் மேற்கூறப்பட்ட பெருந் தருமத்தை நன்கு புரிந்தவர். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பழந்தமிழ் நூல்களை இன்று நம்மவர் கற்றுக் களிப்பது சாமிநாத ஐயருடைய கருணை மிகுதியாலல்லவோ? இவருக்கு கவர்ன்மெண்டார் "மஹா மஹோபாத்தியாய"ப் பட்டம் கொடுத்துப் பெருமைப் படுத்தியது மிகவும் பொருத்தமுடைய விஷயமே. இன்னும் நெடுங்காலம் இம்மஹா பாத்தியாயர் சீரும் சிறப்பும் பெற்று, தமிழுலகத்தாருக்கு இனியன புரிந்து வாழவேண்டுமென்பதே எமது விருப்பம்.

சென்னை பிரஸிடென்ஸி காலேஜில்

### மிஸ்டர் ஸி. சுப்பிரமணிய பாரதி,

மகா மகோ பாத்தியாய

சாமிநாதய்யரைப்பற்றிச் சொல்லியன.

செம்பரிதி யொளி பெற்றான், பைந்நறவு சுவை பெற்றுத் திகழ்ந்த, தாங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றன ரென் றெவரே கொல் உவத்தல் செய்வார்?
கும்ப முனி யெனத் தோன்றும் சாமிநா தப்புலவன் குறைவில்சீர்த்தி
யம்புவிறப் பெற்றனனேல் இதற்கென்கொல் பேருவகை படைக்கின்றீரே? (1)

அன்னியர்கள், தமிழ்ச் செல்வி யறியாதார் இன்றெம்மை ஆள்வோ ரேனும்
பன்னியசீர் மஹாமஹோ பாத்தியா யப்பதவி பரிவி னீந்து
பொன்னிலவு குடந்தை நகர்ச் சாமிநாதன் றனக்குப் புகழ்செய்வாரேல்
முன்னிவனப் பாண்டியர்நா ளிருந்திருப்பி னிவன் பெருமை மொழிய லாமோ? (2)

நிதி யறியோம்; இவ்வு[illegible]த் தொரு கோடியின்பவகை நித்தந் துய்க்கும்
கதி யறியோம்; என[illegible]று மனம் வருந்தற்க குடந்தை நகர்க் கலைஞர் கோவே!
பொதிய மலைப் பிறந்த மொ[illegible]ழி வாழ்வறியும் காலமெலாம் புலவோர் வாயிற்
றுதியறிவாய் அவர் ெ[illegible]ஞ்சின் வாழ்த்தறி வாய் இறப்பின்றித் துலங்குவாயே. (3)

# துளஸீ பாயி.

அத்தியாயம் II.

(81-வது பக்கத்தொடர்ச்சி.)

மகமதிய வாலிபன் மைபப்பையை நெருங்கி அந்த வஹித்துக் கூட்டத்தினிடையேவந்து சேர்ந்தான். இவன் வழியே போய்விடுவானென்று கருதியிருந்த ராஜபுத்திரர்கள் இவன் தம்மருகே வந்து நின்றுகொண்டதைப் பார்த்தவுடனே பெருங் கோபங்கொண்டார்கள். அவர்களின் விராக்கம் பொங்கத் தொடங்கிற்று, விழிகள் சிவந்தன. புரோகிதப் பிராமணர்களோ மனதிற்குள்ளே நடுங்கத்தொடங்கினர். இங்ஙனமாக, ராஜபுத்திரர்களிலே வயதேறிய ஒருவன் அப்பஸ்கானை நோக்கி "ஏனையா, இங்குவந்து நிற்கிறீர்? மதக்கிரியைகள் நடக்கும் இடத்தில் தாம் வந்திருப்பது சரியில்லை. தாம் போகலாம்." என்றனன். அப்பஸ்கானும் மறுமொழி கூறுவதன் முன்பாக மற்றொரு ராஜபுத்திரன் "யோராடா மகமதியன்? இந்தக்கணமே போய்விடு. இல்லாவிடில் உன் தலை இரண்டு துண்டாய் விடும்" என்றான். இதற்குள்ளே அங்கு வந்திருந்த 4,5 மகமதியர்களும் வாள் சகிதமாக அப்பஸ்கானை வந்து சூழ்ந்துகொண்டார்கள். ஒரு ராஜபுத்திரன் வாளைத்தூக்கிவிட்டான். உடனே அப்பஸ்கான் வாளையோங்கும் ராஜபுத்திர இளைஞனை நோக்கி "சகோதரா, நான் அக்பர் சக்கிரவர்த்தியின் படைத்தலைவன் என்பதை அறிவாயாக" என்றான். ராஜபுத்திரர்களுக்குள்ளே முதியவனாயிருந்தவன் மேற்படி சொல்லைக் கேட்டவுடனே அவன் முகத்திலே சிறிது அச்சக்குறிபலப்பட்டது. ஆனால் அதனை உடனே மாற்றிக் கொண்டுவிட்டான். எனினும், மற்றவாலிப ராஜபுத்திரர்களுக்குக் கோபம் மேலிட்டதே யொழிய வேறொன்றுமில்லை. எனினும் வாளோங்கிய வீரன் தனது கையை இறக்கிவிட்டான். இனி அப்பஸ்கான் சொல்கிறான்:—"எனது கையிலும் ஓர் வாளிருக்கிறது. இதுவும் கொஞ்சம் சண்டை பார்த்திருக்கிறது. நான் குதிரைமேலிருக்கிறேன். நீங்கள் கீழே நிற்கிறீர்கள். கையைத் தூக்கவேண்டாம்! பத்திரம்! நான் சொல்வதை மட்டிலும் அமைதியுடன் கேளுங்கள்" என்று கூறினன்.

ராஜபுத்திரர்கள் "சொல்!" என்றனர். அப்பஸ்கான்:— "பெண்ணுடைய சம்மதியில்லாமல் சதிகமனம் செய்யக்கூடாதென்பது அக்பர் சக்ரவர்த்தியின் ஆக்கினை. அந்த இளங்கன்னியை நீங்கள் எரிக்கப்போகிறீர்கள். அவள் அழுது கூக்குரலிடுவதைப் பார்த்தால் அவளுக்குச் சம்மதமில்லையென்று தெரிகிறது. ஆதலால் நீங்கள் இந்த குரூரச்செய்கையை நிறுத்திவிடுங்கள். இல்லாவிடில் ராஜகோபத்திற் குள்ளாவீர்கள்" என்றான்.

வயது முதிர்ந்த ராஜபுத்திரன் ஏதோ சொல்லவாயெடுத்தான். அதற்குள்ளே மதகோபக்கார ராஜபுத்திர இளைஞன் "சீச்சீ! மிலேச்சனே! ராஜகோபத்துக்குப் பாத்திரப்படுவோமென்கிறான்! யாரடா ராஜா! பாரதபூமிக்கு மிலேச்சனோடா அரசன்?" என்று வாளால் ஒரு வீச்சுவீசினான். அந்த வெட்டு தன் மீது விழாதபடி அதிசாமர்த்தியமாய் அப்பஸ்கான் விலகினன்; தனது குதிரையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு தனது பெரிய வாளையோங்கி ஒருவெட்டு வெட்டினான். ராஜபுத்திரன் தலையொன்று துண்டாய் விழுந்துவிட்டது. உடனே சண்டை வெகுபலமாய்விட்டது.



கீழேநின்ற ராஜபுத்திரர்களும் குதிரைமேலிருந்த மகம்மதியனும் இங்ஙனம் ஒருவரையொருவர் கத்திகளால்வெட்டி ரத்தம் பெருகிக்கொண்டிருக்க நெருப்பிற்கிரையாகும்படி வைக்கப்பட்டிருந்த பெண்மணியின் நிலைமை யாதாயிற்றென்பதை கவனிப்போம். பிராமணர்கள் மந்திர கோஷத்தை நிறுத்திவிட்டார்கள். இவர்கள் அங்கிருந்து எழுந்து ஓடிவிடவேண்டுமென்ற ஆசை இருந்தபோதிலும் அதற்குக்கூட மனோதைரியமில்லாமல் ஸ்தம்பிதமாக நின்று போயினர்.

அப்பஸ்கான் வருவதன்முன்பாக கோ! கோ! வென்று அலறிக்கொண்டிருந்த துளஸி அவன் வந்ததைப்பார்த்தவுடனே தனது அழுகையை நிறுத்திக் கொண்டுவிட்டாள். அவனைக் கண்டவுடனேயே அவளுக்கு இனம் தெரிந்துவிட்டது. எப்படியேனும் தனது பிராணனை அந்த ராக்ஷதர்கள் வசத்திலிருந்து காப்பதற்குரிய ஜீவரக்ஷகன் வந்துவிட்டானென்று அவளுக்குப் புலப்பட்டுவிட்டது. எனவே, மகமதியனும் ராஜபுத்திரர்களும் வாய்த்தருக்கம் செய்து கொண்டிருந்த பொழுதெல்லாம் இவள் கூச்சலில்லாமல் பார்த்துக்கொண்டு நின்றாள். அவர்கள் வாள்யுத்தம் தொடங்கிய உடனே மறுபடியும் அலறத் தொடங்கிவிட்டாள். இப்பொழுது முன்போல தன்னுயிரின் பொருட்டுக் கதறுகின்றவளல்லள். தன்னை முன்னாள் திருடர்கள் வசத்திலிருந்து காத்தவனும், இப்போது கொலையாளிகள் வசமிருந்து காக்கவந்திருப்பவனுமாகிய மகமதிய விஜயனுடைய இன்னுயிரின் பொருட்டு அலறுகிறாள். "ஈசா! ஈசா! அவனை வெட்டுகிறார்களே! ஐயோ, எனது ராஜா! பாதகியாகிய என்பொருட்டு நீயும் உயிர்விடவா வந்திருக்கிறாய்? என்னை கொல்லப்போகிற பாவிகள் உன்னையும் கொல்லுகிறார்களே. ஐயோ ஐயோ." என்று கூக்குரலிட்டாள். முகத்திலேயும் மார்பிலேயும் கைகளால் புடைத்துக் கொண்டாள். தரையிலே விழுந்து புரண்டாள். தனது பரிமளமுயர்ந்த, நீண்ட, கருங்கூந்தலைப் பிய்த்துக்கொண்டாள். ஐயோ, அந்தப்பசுந்துளஸிமான் அன்று பட்ட துன்பங்களை நினைக்கும்போது எமக்கு மனங்கன்றுகிறது இப்படியிருக்கும்போது ஓர் ராஜபுத்திரன் பின்புறமாகவந்து பாய்ந்து அப்பஸ்கானுடைய பிடரியின்மீது ஓர் பலமான வெட்டு வெட்டியதையும் அதிலிருந்து இரத்தம் குபுகுபுவென்று வெளியேறியதையும் பார்த்தாள். உடனே "ஐயோ" என்று வான் கலங்குமாறு கதறிவிட்டு மூர்ச்சைபோட்டு விழுந்துவிட்டாள். இதற்குமுன் புரோகிதப் பிராமணர்களுக்கு எப்படியோ தைரியமுண்டாகி ஓடத்தலைப்பட்டுவிட்டார்கள். தனியாக மூர்ச்சித்து விழுந்துகிடைக்கும் ஸ்திரீ ரத்தினத்துக்கு உதவிபுரியவேண்டுமே யென்பது கூட அந்தப் புரோஹிதப் பேடிகளுக்குத் தோன்றவில்லை.

ஷெல்விதாஸ்.

# பால்ய விவாகமும் பெண் கல்வியும்.

பால்ய விவாகத்தால் அநேகம் கெடுதிகள் விளைகின்றன. ஐந்து வயதுள்ள பெண்ணுக்கும் பத்து வயதுள்ள பிள்ளைக்கும் கல்யாணம் செய்தால் அவைகளுக்குத் தாம்பத்ய அந்யோந்யமும் ஸ்நேகமும் பிரியமும் பாராட்டத் தெரியுமா? ஒருக்காலும் தெரியாது. விளையாடும் குழந்தைகளை வீணாய் ஹிம்ஸைக்குட்படுத்துகின்றனர். இத்தேசத்துக் கன்னிகை சிறிய பிராயத்திலேயே புஷ்பவதியாகிறாள். உடனே நிஷேகம் செய்கின்றனர். கொஞ்சகாலத்துக்குள் கர்ப்பிணியாய்க் குழந்தைகளைப் பிரஸவிக்கிறாள். சிசுக்கள் பிறக்க வாரம்பித்ததும் அவள் சரீரம் கிருசமயமாய் இருபது பிராயத்துக்குள் நிச்சக்தியடைந்து அங்கங்களெல்

லாம் தேய்ந்துபோய்க்கிழவியாகிறாள். இவளுக்கு வித்தியாப்பியாஸம் கிடையாது படிக்கத்தெரிந்தாலும் கொஞ்சந்தான்; வித்தியாப்யாஸத்தால் உலக வழக்கங்களை யறிந்துகொள்ளும் காலத்தில் குழந்தைகளை வளர்க்கும் கஷ்டங்களுக்கு ஆளாகின்றனள். பாலகர்களுக்கும் இவ்விதமே கலியாணமாகிறது. பாடசாலையில் படிக்கும் அநேக பையன்களுக்கு இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்திருக்கின்றன. பெண்டு பிள்ளைகளை வளர்க்கும் கஷ்டத்துக்கு வசப்பட்டு சரீரத்தைக் கெடுத்துக்கொள்ளுகின்றனர். கண்டங்களும் மூளைகளும் வளரும்காலத்தில் ஸம்ஸார தர்மத்தில் பிரவேசிப்பதால் ஸ்திரீபுருஷர்கள் துர்ப்பலர்களாகின்றனர். ஆயுளும் குறைந்துபோகிறது. இதுமல்லாமல் இத்தேசத்தாரில் ஐரோப்பியர்களைப்போல் மனைவி மக்களைக் காப்பாற்றும் சக்தியிருந்தாலன்றி கல்யாணம் செய்துகொள்ளக்கூடாதென்ற விதியில்லை. ஸ்திரீகளுக்கும் அத்தேசத்துப் பெண்களைப்போல் அன்னவஸ்திரங்களுக்கு உள்ளவர்களைத் தவிர மற்றவர்களை விவாகம் செய்துகொள்ளுகிறதில்லையென்ற ஸ்வபாவம் கிடையாது. புருஷர்களில் அநேகர் விவாகத்துக்காகத் தங்கள் வீடுவாசல் ஆஸ்திகளை விற்று விடுகின்றனர். பிறகு மனைவி மக்களை ஸம்ரக்ஷிப்பதற்கு ஜீவனோபாயம் அகப்படாமல் அவர்களை யழைத்துக்கொண்டு, பிக்ஷை யெடுக்கச்செல்லும் நிலைமைக்கு வந்துவிடுகின்றனர். மனித ஜாதிக்குப் பிறந்ததுமுதல் [illegible]-வயதுவரையில் சரீரத்தில் நாலுவித ரோகங்கள் உண்டாவது வழக்கம். இந்தப் பருவம் சென்றால் சரீரம் கெட்டியாகும். இந்தவயதுக்குள் ஸம்ஸாரதர்மங்களைக் கைக்கொண்டால் பத்நீ பர்த்தரு கஷ்டங்களுண்டாய் விதவைகளும் பார்யா வியோகிகளும் அதிகரிப்பதற்குக் காரணமாகின்றது. மனைவி இழந்தவர்கள் மறுபடி பத்னியை யடைகின்றனர். விதவைகள் அதிகரிப்பதால் எத்தனை பிராணஹத்யா சிசுஹத்யங்கள் நடக்கின்றனவோ சொல்லிமுடியாது. எல்லாபட்டணங்களிலும் சாக்கடையிலும் காடுகளிலும் மதில்களிலும்பிறந்த குழந்தைகளின் கழுத்தை முறித்தெறிகின்றனர். இவைகளுக்கெல்லாம் காரணம் பால்ய விவாகமேயாகும். ஸ்திரீகளுக்கு பன்னிரண்டு வயது வரையில் நன்றாய் வித்தியாப்பியாஸம் செய்விக்கவேண்டும். மாதா பிதாக்கள் பெண்களுக்கு ஸத்புத்திகளைப் போதித்து ஸம்ஸாரிக தர்மங்களை நன்றாய்க் கற்பிக்கவேண்டும். அப்பொழுதுதான் கன்னிகைகள் புத்திசாலிகளாவார்கள். சிறிய வயதில் விவாகமானாலும் புஷ்பவதியானதும் சாந்திசெய்யும் வழக்கத்தை சில நாட்கள் வரை நிறுத்தினால் மேற்கூறிய கஷ்டங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். ஆரியமதசாரப்படி ருதுமதியாவதற்கு முந்தி பால்ய விவாகம் நடந்தேறினாலும் பின்னால் ஸம்பவிக்கும் கஷ்டநஷ்டங்களினின்று தப்பித்துக்கொள்வதற்காகிலும் பிரயாஸப்படவேண்டும், அப்பொழுதுதான் தேசம் க்ஷேமமடையும். இப்படிச் செய்தால் பாலகபாலிகைகள் அநியாயமாய் அகால மரணத்துக்கு ஆளாவதற்குக் காரணமேற்படமாட்டாது. இதை யறியாமல் அநேகர் பிறரை ஸந்தோஷப்படுத்தும்பொருட்டு தங்கள் மக்களுக்கு விவாக முதலியவைகளைச் செய்து துக்கத்துக்குப் பாத்திரராகின்றனர். இனியாவது நன்றாய் ஆலோசித்துக் காரியங்களைச் செய்யும்படி கோருகிறோம்.

ஸ்திரீ வித்யாப்யாசம் இந்தியாதேசத்தில் அநேக இடங்களில் பரவிவருகிறது. இத்தேசத்தில் வெகுகாலமாய் ஸ்திரீகட்கு கிருஹகிருத்யமும் புருஷர்களுக்குகிருககிருத்யத்துக்கு வேண்டியபொருள்களை ஸம்பாதிப்பதும் வழக்கம். முற்காலத்தில் ஸ்திரீ வித்யாப்யாஸம் அற்ப சொற்பமாயிருந்தது. ஆனால் சிலர் கிருககிருத்யம் பார்ப்பவர்களுக்கு வித்யாப்யாஸத்தால் பிரயோஜனமில்லை யென்று நிறுத்திவிட்டனர். வித்யாப்யாஸத்தால் ஸ்திரீகளுக்குப் பயனுண்டா இல்லையா என்பதை விசாரித்தறியவேண்டும். சமையல் முதலிய காரியங்களை அப்யாஸ பலத்தால் நன்றாய்ச்செய்வதில் எவ்வித சம்சயமுமில்லை. ஸாமான்யமாய் அநேகம் ஸ்திரீகள் கிரகாரக்ஷிகளாகவே இருக்கின்றனர். ஸ்திரீகள் செய்யவேண்டிய காரியங்கள் இவைகள்தானோ? கிருககிருத்யங்களைச்செய்யும் ஸ்திரீகள் பதிகள் ஸம்பாதிக்கும் திரவியத்தை துருபயோகப்படுத்தாமல் வேண்டிய பதார்த்தங்களைத்தவிர வேறு



ஸாமான்களை வாங்காமல் வீட்டுச்செலவுகளை மிதமாய்ச் செய்து மீந்தபொருளை விருத்திபடுத்தும் உபாயத்தைத் தேடவேண்டும். வீடுவாசல்களை நன்றாய்ச் சுத்தம் செய்து பதியின் தேகத்தையும் குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் கெடாதபடி நன்றாய்க் காப்பாற்றவேண்டும். அவர்களை ஆரோக்கிய ஸ்திதியில் வைத்துக் கொள்வதற்காக வேண்டிய ஆகார ஸூத்ராங்களைக் கற்கவேண்டும். வீட்டுக்குடையவர்கள் வரும்வேளையில் எல்லாவற்றையும் தயார் செய்துவைத்துஅவர்களை ஸந்தோஷமுகத்தோடு உபசரித்து போஜனாதிகளைச் செய்விக்கவேண்டும். விராம காலங்களில் குழந்தைகளை உட்காரவைத்து நீதி போதகமாயுள்ள ஸன்மார்க்க வசனங்களால் அவர்களுக்குபதேசித்து லோக வியவஹாரங்களை அடிக்கடி எடுத்துரைத்து நல்லவிளையாட்டுகளைக் கற்பித்து வரவேண்டும். * குடும்பத்தில் எல்லோரும் சுகமாயிருக்கவேண்டுமென்றால் ஸ்திரீகளுக்கு வித்யாப்யாஸம்செய்து வைப்பதுதான் தக்கவழி. அவிவேகிகளான ஸ்திரீகள் ஸதாகாலமும் பிறர் மேல் எறிந்துவிழுவதும் குழந்தைகளை அநாதரவாய் நோக்குவதும், கூடுமானால் திட்டுவதும் அடிப்பதுமாய் வேலையை அரைமனதோடு செய்கின்றனர். இவர்கள் வேலை செய்யும் காலத்தில் புருஷர்கள் பார்த்தால் ஐயோ இந்தக் குடும்பத்திலிருப்பதை விட ஸந்நியாஸியாய்விடுவது மேலென்று நினைப்பார்கள். வீட்டில் எத்தனை ஸாமான்கள் கொண்டுவந்து கொட்டினாலும் புருஷன் அன்னியனென்று நினைத்து தன் ஸம்ஸாரத்துக்குப் பதார்த்தங்களை உபயோகப்படுத்தாமல் பிறந்த வீட்டுக்கும் அயலருக்கும் கொடுத்துவிடுகின்றனர். இதற்கெல்லாம் கல்வியில்லாமையே காரணமாகும். வித்யாவிஹீனர்களின் வீட்டில் ஒரு மூலையில் குப்பையும் குச்சியும், மற்றொரு மூலையில் அழுகிக்கிடக்கும் காய்கறிகளும், இன்னொருபக்கத்தில் குழந்தைகளின் மலஜலாதிகளும் விழுந்துகிடைப்பதை அநேகர்பார்த்திருக்கலாம். இவர்கள் படித்திருந்தால் மேற்கூறியவாறு கிருகத்தை அசுத்தமாய் வைத்திரார். சிலர் ஸர்வபிரயத்தினங்களாலும் புருஷனை ஹிம்சித்துக் கடனையாவது வாங்கி காது மூக்குகளை ஓட்டைசெய்துகொண்டு அவைகளிலெல்லாம் ஆபரணத்தைத் தொங்கவிட்டுக் கொள்வார்கள். கைகால்களுக்கெல்லாம் பாரமான உடைமையை யணிவார்கள். இவர்கள் அவஸ்தையைவிட கைதிகளின் அவஸ்தை உத்தமமென்று தோன்றுகிறது. ஏனென்றால், அவர்கள் குற்றம் செய்ததால் கைகால்களில் விலங்கு விழுந்திருக்கிறது. ஒரு குற்றமும் செய்யாத இந்த அங்கனைகள் ஆபரணமணிவது வெகு அழகென்று நினைத்திருக்கின்றனர். ஐயோ இவர்களின் மூடத்வம் எப்போது தொலையுமோ அறியோம். அதனுடன் இருந்தாலும் ஒருவித நன்மையென்று நினைத்து சும்மா இருக்கலாம். அவித்யாவதிகள் செய்யும் இன்னொரு காரியம் மிகுந்த அதிருப்தியை விளைக்கக் கூடியது. அதையும் எடுத்துச்சொல்லி விடுவது நன்மையாகும். ஊரிலுள்ள பெண்கள் ஒன்று சேர்ந்து யார் புஷ்பவதியானார்களோ, எவர்கள் கர்ப்பிணிகளோ, எந்த விடங்களில் ஜாரத்வம் நடக்கிறதோ நாகரீகர்கள் நன்றாயிருக்கிறார்களோ, எந்த ஸ்திரீ வித்யாவதியாயிருக்கிறாளோ அவைகளை யெல்லாம் விசாரித்து ரஸாபாஸமான வசனங்களை வழங்குவதும்,

* இவைகளெல்லாம் படியாத பெண்களுக்கு வாரா.

ஆத்மஸ் தோத்திரம் பாகிந்தைகளைச் செய்து இழிவான ஸம்பாஷணைகட் கிட கொடுத்து குழந்தைகளைக்கிட்ட உட்கார வைத்துக்கொண்டு "நீ யாரைக் கல்யாணம் செய்துக்கொள்கிறாய்? உனக் கெப்பேர்ப்பட்ட குழந்தைகள் வேண்டும், உன் புருஷனை இவ்விதமாய்த் திட்டு என்று சொல்லிக்கொடுப்பதும், அவைகள் சொல்லிக்கொடுத்த வார்த்தைகளை மறக்காமல் அவ்விதமே உச்சரிப்பதும், அதைக்கேட்டு இவர்கள் ஆனந்திப்பதும் வழக்கம். இவைகளெல்லாம் ஸ்திரீகளுக்குக் கல்வி யில்லாமையினால் உண்டாகும் குணஸ்வபாவங்கள். இந்த புராதன அநாகரீக ஸம்பிரதாயங்களை யொழித்து ஸத் வித்யாப்யாஸம் செய்வித்து விராம காலங்களில் நீதி போதகமான கிரந்தங்களையும் வர்த்தமானப் பத்திரிகைகளையும் வாசிக்கச்செய்து ஸுசிக்ஷிதர்களாக்க வேண்டும். வித்யாவதியான ஸ்திரீ வித்யாவந்தனான புருஷனைக் கைப்பிடிப்பாளாகில் அவர்களின் தாம்பத்ய சுகத்துக்கு முன்னிலையில் எதுவும் சுகமாகாது. ஆகையால் பெற்றோர்கள் தங்கள் புத்திரிகளுக்கு வித்யாப்யாஸம் செய்விப்பதவசியமாம்.

பாலபாஸ்கரன்.

# Ramathilakam

or

## The other end of hatred is love.

## ராமதிலகம்.

அங்கம் 1. களம் 4.

133-வது பக்கத்தொடர்ச்சி)

ஒரு வீதி.

இராமாமிருதம் பிள்ளை, சாரங்கபாணி நாயக்கர், வாசுதேவபிள்ளை, நாலு ஐந்து பாடகர்களுடன் வருதல்.

ராமா.—என்ன! அழையாமல் போவதற்காக ஏதாவது உபசாரம் சொல்லி நுழையுவோமா! இல்லாமல் போனால் ஒன்றும் கவனியாமல் உள்ளே நுழைந்து விடுவோமா!

வாசு:—அந்த காலங்கள் எல்லாம் போய்விட்டது, பேச்சில் பிரயோசனம் பிரயோசனம் கிடையாது. இந்த நாளில் பெண்பிள்ளைகூட ஆகாரத்தைப் பார்த்துப் பயப்படுவது இல்லை. நமக்கென்ன அவர்கள் எப்படி வேண்டுமோ பார்க்கட்டும். நாம் கோலாட்டத்தைப் பார்த்து விட்டுத்தான் போகிறது.

ராமா:—அப்பா! இந்த ஆட்டத்தில் எனக்கு மனம் செல்லவில்லை. நான் இவ்விடத்திலே வெளியிலிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் உள்ளேபோய் வாருங்கள்.

சாரங்க:—அப்படியல்ல, நீ அகத்தியம் வரவேண்டும். நீ தான் இவைகளில் அதிக ஊக்கமாய் இருப்பது வழக்கம்.



ராமா:—இப்பொழுது அதெல்லாம் போய்விட்டது. அதிக உறக்கம் அடைந்திருக்கிறேன்.

சாரங்க:—உறக்கமா? கண் இல்லாதவனுக்கு தூக்கம் ஏது? காமுகனுக்குக் கண் இல்லையே.

ராமா:—ஐயோ! காமன் பாராமலே எய்த சரத்தால் வாடி மயங்கினேன். அவ்வேதனையினின்றும் கிளம்ப முடியவில்லை. அதிலேயே அழுந்திக் கிடக்கின்றேன்.

சாரங்க:—அடா! அழுந்துவதற்கு இந்த அற்ப விஷயம் போதுமா? அதற்கு கனமான விஷயம் அல்லவோ வேண்டும்?

ராமா:—ஐயோ! அதுவா அற்பம். அதன் வன்மையை என்னவென்று சொல்கிறது. அதை வெல்ல வல்லவர் யார்? எல்லோருடைய வன்மையையும் இலேசாய் செய்யும் தன்மை காமத்துடைய தன்றோ? அக்காமன் கணைகள் என்னை புண் படுத்துகின்றன. அவனோ கை ஓயாமல் எய்கிறான். என்பேரில் அவனுக்கு இவ்வளவு வைரம் ஏனோ தெரியவில்லை.

சாரங்க:—நீ வைராக்கியத்தோடிருந்தால், அவன் வைரம் உன்னை என்னசெய்யும்? சும்மா வா. தலையில்முக்காடிட்டு உள்ளே விரைவாய்ச்சென்று உடனே தனித்தனியாய் பிரிந்து நின்றுபார்த்துவிட்டு வருவோம். கூட்டமாய் நிற்கவேண்டாம்.

வாசு:—வாருங்கள் இதோ கதவு திறக்கிறார்கள். கூட்டத்தோடு கூட்டமாய் நாமும் நுழைந்து விடுவோம்.

ராமா:—என்னால் நகரக்கூட முடியாது நான் வரவில்லை.

சாரங்க:—மயக்கேன் முடிவு? ஏதப்பா! நீ இந்த காமச்சேற்றில் மூழ்கிக் கிடக்கிறாய். நாங்கள் உன்னைத் தூக்கி கரையேற்றுகிறோம் வா. வீணில் காலம் கழிக்கவேண்டாம்.

ராமா:—வீணில் இல்லை.

சாரங்க:—கோலாட்டம் பார்த்தாலும் பலன் உண்டு அதை விட்டுவிட்டு இந்த தெரு சந்தியில் நிற்பது வீண் அல்லவோ?

ராமா:—நாம் இப்பொழுது கெட்ட எண்ணத்தோடு போகாமல் இருந்தாலும் போவது சரியல்லவென்று எனக்குத்தோன்றுகிறது.

சாரங்க:—ஏன் அவ்விடத்தில் அப்படி தோன்றுகிறது என்று தெரிவிக்கலாமோ?

ராமா:—ராத்திரி ஒரு கனவு கண்டேன்.

சாரங்க:—நான் கூடத்தான்.

ராமா:—அப்படியா என்ன கனவு கண்டாய்.

சாரங்க:—கனவு காண்கிறவர்கள் எல்லாரும் சும்மா கிடந்து புலம்புவதுதான்.

ராமா:—ஆமாம் படுக்கையில் கிடந்து உள்ளதை கண்டு சொல்லுகிறார்கள் புருகுவது இல்லை.

சாரங்க:—ஓகோ உன்னிடத்தில் ராத்திரி மோகினி வந்திருந்தாப்போல் இருக்கிறது. அவள்தான் பேய்களுக்கு தாய்க்கிழவி. அவள் தனது கடுகிற் சிறிய உருவத்தோடு தூங்குவோர் முகத்தில் தன்ரதத்தை ஓட்டுவாள். அவள் ரதம் என்னவென்று நினைக்கிறாய்? கொட்டைப் பாக்கைக் குடைந்து அதன்பேரில் கரப்புர காலை நாட்டி அதன் இறகால் மேல்தட்டு அமைத்து நிலவாகிய ஆபரணம் பூண்டு எறும்புகளை சிலந்திகளை கட்டியிருக்கும். அதில் கொசுவானது உட்கார்ந்துகோல் கொண்டு குத்தி ஓட்டும். மினிமினிப்பூச்சிகள் விளக்கெடுத்து வழி காட்டும். இந்த ரதம் பரம்பரையாய் தச்சத்தொழில் புரியும் அணிப்பிள்ளைகளால் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வளவு கோலாகலத்தோடும் இரவுதோறும் பவனி உலாவுவது வழக்கம். இவ்வாறு உலாவையில் யௌவனர்கள் தலைமீது நடக்க அவர்கள் காதற் கனவு காண்பார்கள். ஆரம்பு வக்கீல்கள் கைமேல் ஓட்ட அவர்கள் உடனே கட்சிக்காரர்களிடம் பணம் வாங்குவது போல கனவு காண்வார்கள். வைதிக பிராமணர்கள் மூக்கின் ஓட்ட அவர்கள் பூரி தட்சணையைப்பற்றி கனவு காண்கிறார்கள். கன்னியர் மார்பில் ஓட்ட அவர்கள் மனதிற்கு ...சைந்த ஆடவர்களை அணைவதுபோல் காண்பார்கள். யுத்த வீரர்கள் கழுத்தின்மேல் ஓட்ட அவர்கள் பகைவர் கழுத்தை அறுப்பது போலும் யுத்தத்தில் இடசாரி வலசாரியாய் அலைவது போலும் கண்டு பேரீ சப்தத்தையும் கேட்டு திடுக்கிட்டு எழுந்து கனவு என்று அறிந்து பின்னும் தூங்குவார்கள். இம்மோகினிதான் இளையவர்கள் மல்லாந்து தூங்குகையில் மார்பில் இருந்து பழக்கப்படுத்தும்.

ராமா:—நிறுத்து நிறுத்து சத்தில்லாமல் பேசுகிறாய்.

சாரங்க:—ஆமாம் சத்துயில்லாத கனவுகளைப் பற்றித்தான் பேசுகிறேன். அவைகளோ மனோசங்கத்தில் உதித்தவை, காற்றைப்போல் நிலையற்றவை, எவ்வாறு காற்றானது எல்லாத் திசைகளிலும் மாறிமாறி அடிக்கிறதோ அவ்வாறே கனவுகளும்.

வாசு:—நீங்கள் சொல்லுகிற காற்று நம்மை தூரத்தில் அடித்துக்கொண்டு போய்விட்டது. சாப்பாடு ஆய்விட்டது. இன்னும் கொஞ்சம் போனால் ஆட்டமும் முடிந்து விடும்.

ராமா:—இன்னும் ஆரம்பித்துக்கூட இருக்கமாட்டார்களென்று நினைக்கி... என் மனதில் ஏதோ சந்தேகம் தோன்றிக்கொண்டே இருக்கிறது ...ன் எண்ணம் எப்படியோ அறியேன்.

...ய வெல்லமுடியாது. அப்படி நடக்கட்டும் போவோம் வாருங்கள்.

(எல்லோரும் போகுதல்.)

எஸ். வி. சீனிவாஸய்யர், B. A.,



## சந்திர பிம்ப லட்சணம்.

இரவில் நமக்கு ரமணீயத்தை விளைவிப்பது சந்திரன். இப்பூமியிலுள்ள நமக்குச் சூரியபிம்பம் எவ்வளவுபெரிதாய்த் தோன்றுகின்றதோ அவ்வளவுபெரிதாகவே சந்திரனும் தோன்றுகிறபடியால் அவ்விரண்டும் ஒரே பரிமாணத்தையுடையனபோல் தோன்றுகின்றன. சூரியமண்டலத்துக்கும் பூமிக்கும் உள்ள தூரத்திற்குபூமிக்கும்சந்திரனுக்குமுள்ள தூரம்சற்றேறக்குறையநானூறுமடங்குகுறைந்ததாயிருக்கின்றது. ஆகையினால்தான் சூரியனுக்கும்சந்திரனுக்கும்பரிமாணவிஷயத்தில் பெருத்தபேதமிருக்கினும்இரண்டும்சமமாயிருப்பதாகநம்முடையதிருஷ்டிக்குத்தோன்றுகின்றன. இப்பூமிக்கும்சந்திரனுக்கும் 240,000 மயில்தூரமிருக்கிறது. இப்பூமியிலிருந்து சந்திரமண்டலம்வரையில் ஆகாயமார்க்கமாய் இருப்புப்பாதை ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலமாகத் புகைவண்டியிலேறி விடாதுயாத்திரை செய்வோமாகில் சந்திரமண்டலத்தைப்போய்ச் சேருவதற்குச் சற்றேறக்குறைய ஒருவருஷம் பிடிக்கும். ஆகாயத்திலுள்ள அளவிறந்த கிரகங்களுக்குள்ளே இப்பூமண்டலத்துக்கு அதிசமீபமாயுள்ளது சந்திரனேயாம். இப்பூமி எவ்வளவு பரிமாணமுள்ளதாயிருக்கிறதோ அதில் ஐம்பதில் ஒருபங்குதான் சந்திரனுடைய பரிமாணம். சந்திரன் இரவில் இருளை ஓட்டத்தக்க பிரகாசத்தை யுடையதாயிருக்கினும் அது இயற்கையில் ஒளியற்ற தோர்பொருள். சூரிய ஒளி சந்திரன்மீது பட்டுப் பிரதிபலிப்பதே சந்திரனுடைய ஒளியாகும். மற்றப்படி அதற்கு இயற்கையில் ஒளி கிடையாது. சந்திரனுக்கு இயற்கை ஒளி இருக்குமாயின் அது தேய்பிறைகள் வளர்பிறைகளின்றிச் சதா பூரணமாக ஒளிவீசிநிற்கும். வர்த்தவத்தில் சந்திரனுடைய பரிமாணம் குறைவது இல்லை. அதன் எந்தப்பாகத்திலே சூரியனுடைய ஒளிதாக்குகின்றதோ அந்தப்பாகம்பிரகாசிப்பதாக நமக்குத்தோன்றுகின்றது. அங்ஙனம் சூரியனுடைய ஒளி பிரதிபலிக்காத பாகங்கள் நமக்குத் தோன்றுவதில்லை. அமாவாசைகாலங்களில் சந்திர ஒளி நமக்கு எவ்வளவும் தெரியாதபடியினால் அது அன்றையதினம் உதிக்கின்றதோ இல்லையென்று சாதாரணஜனங்கள் நினைக்கிறார்கள். ஏனைய நாட்களைப்போலவே சந்திரன் அன்றையத்தினமும் உதயமாகிறான். ஆனால் சூரியனுடைய ஒளிதாக்கிப் பிரதிபலிக்காத சந்திரபாகம் நமக்குப் புலப்படுகிறதாகையால் சந்திர ஒளி அன்றையதினத்தில் நமக்குத்தோன்றுகிறதில்லை. ஆகவே பௌர்ணிமி காலத்தில் சூரியஒளிதாக்கிப் பிரதிபலிக்கும் பாகம்முழுமையும் நம்முடைய கண்களுக்குப் புலப்படுகின்றமையால், அன்றையதினத்தில் அதன் பூரணஒளி நமக்குப் பயன்படுகின்றது. அமாவாசை காலத்தில் இருட்டிய பிறகு சந்திரனை நிதானித்து உற்றுப்பார்ப்போமாகில் சூரிய ஒளிதாக்கிப் பிரதிபலிக்காத அதன்பாகம் இப்பூமியின் ஒளிதாக்கிப் பிரதிபலிப்பதினாலே அதியற்ப ஒளியோடு ஒருவாறாகப் பிரகாசிப்பதை நாம்காணலாம். இப்பூமியிலுள்ள நமக்குச் சந்திரன் எப்படி பிரகாசத்தைத் தருகின்றதோ அது போல் சந்திரனிடத்து வசிப்போரிருக்கின் அவர்களுக்கு இப்பூமி பிரகாசத்தைத்

தரும். இப்பூமி இயற்கையில் ஒளியற்றபொருளாயிருக்க இதற்குப் பிரகாசம் எங்ஙனம்வரும்? இது சந்திரவாசிகளுக்குப் பிரகாசத்தை எங்ஙனம் தரும்? பூமி இயற்கையில் ஒளியற்றபொருள் என்பதற்கு அதில் வசிக்கிறவர்களாகிய நமக்கு இரவில் விளக்கு வெளிச்சங்களும் ஏனையகிரகங்களின் பிரகாசமும் அத்தியாவசியமாக வேண்டியிருப்பதே சாட்சி பகரத்தக்கதாயிருக்கிறதல்லவா? என்னும் வினாக்களைப் பலரும் ஆவலுடன் கேட்கவேண்டிவரும். சந்திரன் இயற்கையில் ஒளியற்றபொருளாயிருந்தும் அது பிரகாசித்து இப்பூவாசிகளாகிய நமக்கு இரவில் ஒளியைத்தருவது என்னகாரணத்தினுலென்று முன்னே சொல்லியிருக்கின்றேமோ அதே காரணத்தினுல்தான் இப்பூமியும் இயற்கையில் ஒளியற்றிருந்தும் சந்திரவாசிகளுக்கு இரவில் பிரகாசத்தைத்தருகின்றதென்று உணரவேண்டியது. சூரியஒளி இப்பூமியின்மீதுதாக்கிப் பிரதிபலிப்பதே இப்பூமியின் ஒளிக்குக் காரணம். நாம் வசிக்கும் இப்பூமியைப்போன்ற எண்ணிறந்த அண்டங்களைப் பரமதயாநிதியாகிய ஜகதீசன் வெளிப்பரப்பில் அமைத்து அவற்றுள் ஒவ்வொன்றும் ஏனையவற்றிற்கு உதவியாயிருக்கும்படி வைத்த அருமைத்திறத்தை நோக்குகையில் இவ்வுலகத்திலுள்ள சேதனுசேதனங்கள்யாவும் ஒன்றுக்கொன்று உதவிபுரிந்து உயிர்வாழ்ந்து வரவேண்டும் என்பதே தன்வயத்தனுகிய பரமபிதாவின் கருத்தென்பது வெள்ளிடைமலைபோல் புலப்படுகின்றது. ஒரு அண்டம் மற்றொரு அண்டத்துக்கு உதவிபுரிந்துகொண்டு வரவேண்டும் என்பதே அவருடைய திருவுளக்கருத்தாயின் ஒரே அண்டத்திலுள்ள சராசரங்கள் ஒன்றுக்கொன்று உதவிபுரிந்துகொண்டு வரவேண்டுமென்பதும் கடவுளின் கருத்தென்பதற்கு ஐயமென்ன? ஒருதேசத்திலுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் தம்மாலியன்றவரையில் உதவிபுரிந்து சுயப்பிரயோசனத்தையே நாடுவதை அறவே விட்டகலவேண்டுமென்பது கடவுளின் கருத்தென்பது சொல்லாமே யமையும். ஆகவே எவ்வகைப்பட்ட தாழ்ந்த புல் பூண்டு விலங்காதிகளும் உயர்ந்த வஸ்துக்களுக்கும் பெருத்த உதவியாயிருக்கின்றனவென்பதை நாம் மறவாதிருக்கவேண்டும். எதையும் பயனற்றதென்று இகழுதல்கூடாது. யாவும் தன்னுடைய பிரயோசனத்திற்காகத் தான் சிருஷ்டித்து வைக்கப்பட்டிருக்கின்றன வென்று சிற்றறிவினனுகிய மானிடன் எண்ணுதல் அந்தோ! அறியாமை. அதுநிற்க.

சந்திரபிம்பத்தைத் தூரதிருஷ்டிக்கண்ணுடியைக்கொண்டு பார்க்குமிடத்து அதில் பெருத்த பர்வதங்களும் விசாலமான வெளியிடங்களாகிய மைதானங்களும், நிழலுள்ள இடங்களும் இருப்பதாகத்தெரியவருகிறது. சந்திரபிம்பத்தில் சுத்தவெண்மையாய் ஒளிவீசிப்பிரகாசிக்கும் பாகங்களையெல்லாம் பர்வதங்களென்று கொள்ளவேண்டியது; இவைகளின்மீது சூரிய ஒளி எவ்வளவும் தட்டுத்தடையின்றித் தாக்கிப்பிரதிபலிக்கின்றபடியால் அந்தப்பாகங்கள் நமக்குநன்ருய் ஒளி வீசித்தோன்றுகின்றன. கொஞ்சம் கம்மலாகப் பிரகாசிக்கும் பாகங்கள் சந்திரமண்டலத்தில் வெளியிடங்களான மைதானங்கள். இந்தேசத்துப் புலவர்களால் முயற்கறையென்று அலங்கரித்துக் கூறப்படுவதும், சிறுவர்களால் உண்ணைட்ட சுட்டுவிற்கும் கிழவி என்று சொல்லப்படுவதுமாகிய கறுத்தபாகம் சந்திரபிம்பத்தில் சூரிய ஒளிபடாத நிழலான இடங்களாம். சூரியபிரகாசம் எந்தெந்தப் பாகங்களில் எவ்வளவும் தடையின்றி நன்றாய்த் தாக்கக்கூடியதாயிருக்கின்றதோ அந்தப் பாகங்களெல்லாம் அவ்வொளியை நன்றாய்ப்பெற்றுப் பிரதிபலிக்கின்றனவென்பது இதனுல் தெளிவாய்ப் புலப்படுகின்றது. இந்தப்பூமி சந்திரவாசிகளுக்குப் பிரகாசந்தருகிற விஷயத்தைக்குறித்தும் மேற்கண்டகாரணகாரியங்களையே அமைத்துக்கொள்க. சந்திரனிடத்திலுள்ள பர்வதங்கள் வெகுசாய் இப்பூமியிலுள்ளனவற்றைப்போல் தொடர்ச்சியாயிராமல் பெரும்பாலும் தனித்தனியே மகா உந்நதமாக நிற்கின்றன. சந்திரனுக்குறைய சந்திரவட்டப் பரப்பு முழுவதிலும் எரிமலைகள் இருப்பதாகத் தெரியவருகிறது. ஆனுல் அவைகளெல்லாம் அக்கினி நீர் முதலியவற்றை நீராவியின் இயக்கத்தினுல் கக்குவது முதலிய தொழில்கள் இப்போது அறவே ஒழியப்பெற்றன. நூறுமயிலுக்குக்குறையாத குறுக்களவு ஆழ்ந்த பெரும் பள்ளத்தாக்குகள் அனேகம் சந்திரனிடத்திலிருக்கின்றன. அதனிடத்திலுள்ள மலைகளில் சிலவற்றை அவற்றின் நிழலைக்கொண்டு அளந்துபார்க்கையில் அவைகள் ஏறக்குறைய உயரத்தில் இமாசலத்துக்கு நிகராயிருக்கின்றன. சந்திரமண்டலத்தில் இப்போது அப்பு-தேயு-வாயு ஆகிய மூன்றும் இல்லை என்றும், பூர்வகாலத்தில் அவை இந்தப்பூமியில் இப்போது இருப்பன போலவே அங்கு இருந்தனவென்றும், இம்மூன்று பூதங்களே இப்போது இல்லாதபடியால் கடல்-மழை-மேகம் முதலியவை அதில் இப்போது இல்லை என்றும், ஆகவே ஜீவராசிகளும் இல்லை என்றும், சந்திரமண்டல முழுவதும் ஜீவசூனியமான வெறும்பாழாகிய ஓர் பெரும் அண்டமாயிருக்கிறதென்றும் வானசாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். காற்றில்லாதபோது ஓசைகேட்பதற்கே இடமில்லை. நீரில்லாவிடத்துப் புல்பூண்டும் முளைப்பதற்கிடமில்லை. மூன்று முக்கிய பூதங்களற்ற ஓர் அண்டம் எப்படியிருக்கும்! மேலே ஆழ்ந்த பள்ளத்தாக்குகளென்று கூறப்பட்ட இடங்களெல்லாம் ஒருகாலத்தில் சமுத்திரமாயிருந்த பாகங்களாம். சூரியனுடைய உஷ்ணம் இடைவிடாமல் பதினைந்து நாள்வரையில் சந்திரபிம்பத்தின் ஓர் புறத்தில் காய்ந்துகொண்டேயிருக்கிறபடியினுல் அந்தப்பாகம் அளவிட்டுக் கூறமுடியாத அவ்வளவு அதிகமாய்க் கொதிப்பேறிவிடுகின்றது. இந்தப் பூமியில் பூமத்தியரேகைக்கு அணித்தாயிருக்கும் பிரதேசங்களிலுள்ள உஷ்ணத்தைச் சகித்துக்கொண்டு உயிர்வாழத்தக்க பிராணிகளும் சந்திரனிடத்திலுள்ள மேற்கண்ட உஷ்ணத்தையே சதாவிரும்பும் இயல்புடைய பிராணிகளும் அவ்வளவு கொதிப்பேறிய இடத்தில் சகித்து உயிர்வாழுமென்று நினைப்பதற்கிடமில்லை. சூரியன் ஒளிவீசாப் பதினைந்து நாள்வரையில் குளிர்ந்திடக்கும் மற்றொருபாகமோ குளிர்ச்சியையே சதா அவாவும் இயல்புடைய பிராணிகளும் ஜீவித்திருப்பதற்கு யோக்கியதையில்லாத அவ்வளவு குளிர்ந்துபோய்விடுகின்றது. இப்பூமியின் உத்தர தட்சண துருவ விருத்தங்களுக்கு அருகிலிருக்கும் பிரதேசங்களிலுள்ள சீதளத்தைவிட

ஆயிரமடங்கு அதிகமாய், சந்திரனிடத்துப் பதினைன்கு நாள்வரையில் சூரியஜொளி படாத மேற்படிபாகத்தில் குளிர்ச்சியுண்டாய் விடுகின்றது. ஆகவே சந்திரனிடத்து எவ்வகைப்பட்ட பிராணியும் சுகித்து உயிர்வாழ்வதற்கு இடமில்லை என்று தெரியவருகின்றது. ஒருகாலத்தில் சமநிலையாய்ச் சந்திரமண்டலம் முழுமையும் பரவியிருந்த உஷ்ணம் நாளாவர்த்தியில் தணிந்துவிடவே அதிலுள்ள வாயு-அப்பு முதலியயாவும் சந்திரபிம்பப் பிரிதிவுக்குள் ஐக்கியப்பட்டிருக்கவேண்டும். நாளாவர்த்தியில் இந்தப் பூமியின் உஷ்ணமும் குறைந்துகொண்டே வருகிறதென்றும், ஒரு காலத்தில் இந்தப் பூமியும் சந்திரனைப்போலவே ஜீவராசிகளிருப்பதற்கு யோக்கியதையற்றதாய்விடுமென்றும் சில சாஸ்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். அகண்டாகாரமான வெளிப்பரப்பிலுள்ள ஒவ்வொரு அண்டமும் உஷ்ணகொதிப்புடன் பிரதமத்தில் உருள ஆரம்பித்து நாளாவர்த்தியில் உஷ்ணம் குறையக்குறைய அதின் வேகமுங்குறைந்து கடைசியாக முற்றும் உதவியற்றதாய் விடுகிறதென்று வானசாஸ்திரிகள் கூறுகிறார்கள். இந்தப்படியே சூரியபிம்பத்தின் உஷ்ணம் மாத்திரம் அவ்வளவாகக் குறைவதற்கிடமில்லை. ஏனெனில், சூரியன் சகல பதார்த்தங்களையும் தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளும் சக்தி அடையப்பெற்றிருக்கிறபடியால் சூரியபிம்பலட்சணத்திற் காட்டியிருக்கிறபடி பாரமான சிலபெருத்தபொருள்கள் சதா சூரியபிம்பத்தின் எல்லாப் பக்கங்களிலும் அதிக வேகத்துடன் வந்து விழுந்து கொண்டிருக்கிறகாரணத்தினாலே உஷ்ணக்கொதிப்புள்ளைய கிரகங்களின் உஷ்ணத்தைப்போல் அவ்வளவு சீக்கிரத்தில் குறைவுபடுவதற்கிடமில்லை.

மற்றவர்க்குக்காயங்களுக்குச் சாதாரணமாயெட்டாத இவ்வளவு விசித்திரங்களை ஐரோப்பியர்கள் தூரதிருஷ்டிக் கண்ணாடி முதலிய உபகரணத்தைக்கொண்டு அதிக நுட்ப புத்தியுடன் யூகித்தறிந்து இவற்றை உலகினருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் உலகத்தாருக்குப்புரிந்த உதவி செய்யாமற் செய்த உதவியேயாம். அவ்வுதவிக்கு "வையகமும் வானகமு மாற்றலரிது." வானசாஸ்திரத்தில் இந்துக்கள் நெடுங்காலத்துக்கு முன்னரே அனேக விசித்திரங்களையெல்லாம் கண்டறிந்து தங்களுடைய கிரந்தங்களில் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கிரந்தங்களில் அனேகம் பற்பலகாரணங்களினால் இப்போது க்ஷீணித்துப்போய்விட்டன. பிற்பாடு தோன்றிய கல்விமான்கள் ஏன் அப்படிப்பட்ட கிரந்தங்களை அபிவிருத்தி செய்து மேலும் மேலும் மேற்கண்ட விசித்திரங்கள் போன்றவற்றைக் கண்டறிந்து உலகத்தாருக்குத் தெரிவிக்கவில்லை? என்று கேட்டால், இந்துக்களுக்குள் புத்திமான்களாகவும் கல்விமான்களாகவும் இருந்தவர்களில் அனேகர் இவ்வுலகமும் இதைப்போன்ற ஏனைய உலகங்களும் மாயாகாரியங்களென்றும், அவை எத்தனை காலமிருக்கினும் அழியத்தக்கனவென்றும், அவற்றால் ஆன்மாக்கள் ஈஸ்வரன் திருவடியையடைவதற்கு யாதொரு பயனும் விளையாதென்றும் கருதிய ஞானிகளாயிருந்தபடியால் இப்படிப்பட்ட விஷயங்களில் அவர்களுக்கு ஆராய்ச்சி



குறைந்தது. ஆகையால் அவர்கள் கொண்ட சித்தாந்தத்தை யோசிக்கையில் அவர்கள் அங்ஙனம் ஆராய்ச்சி செய்யாமல் இத்தியாதி விஷயங்களில் விசாரமற்றிருந்தது நியாயமென்றே தோன்றுகின்றது. ஆகவே அவர்களை நம்மனோர் அவிவேகிகளென்று நிந்தியாமலிருப்பாராக.

## ஜநவிநோதினி

பார்வதிசோபனம்.

# தக்ஷிணாமூர்த்தியான பரமசிவத்தை

## சனகாதிகள் துதித்தல்.

---

ஆதிமுதலே அகண்ட ஒளி ஆனவரே
(சிவந்த) மெகப்பிரந்தவரே விவேகமுரைப்பவரே
ஞானமுரைக்கவென்றே ரூபமெடுத்தவரே
அஞ்ஞானம் போக்கவென்றே அவதாரமானவரே
சுத்தஸ்வரூப சுருதிமறைப்பொருளே
சுத்தஸ்வரூப சுருதி சொல்லுங்கெட்டாதவரே
ஆத்மஸ்வரூப அகண்டாலயமானவரே
ஆரோக்யஸ்தானத்தில் அமர்ந்திருக்குமாண்டவரே
ஜனனவியாதிக்கு அவிழ்தமிட்டதேசிகரே
சஞ்சிதகர்மத்தை சுட்ட தக்ஷிணாமூர்த்தி
திருமெய்யா எங்களது ஜனமவியாதியையென்று
சனகாதியோதியரும் சீர்பாதத்தில்பணிந்தார்.

## தக்ஷிணாமூர்த்தி உபதேசம்.

(வேறு மெட்டு)

1. சின்மயஸ்வரூபனான தக்ஷிணாமூர்த்திதானும்
   தேசிகராய் யோகிகளுக்கு
2. (சற்றும்) சந்தேகமன்னியிலே அண்டமெல்லாம் ஏகமென்று
   சொல்லிநின்ற வாக்கியஞ்சொல்ல
3. வெண்ணீறுமாயிருக்கும் வேதாவின்நாயகியும்
   விநாயகரும் நாவில்வசிப்பீர்
4. (சற்றும்) கக்குகரைகாணமல் சம்சாரசாகரத்தில்
   என்னசெய்வோம் என்றலையும்பேர்
5. (சுவாமி) நிசந்தரமைப்பாதத்தைத் தியானம்பண்ணி தினந்தோறும்
   சிந்தைதனில் கண்டெணிந்தால்
6. (அவர்) அஞ்சாதேயென்று சொல்லி ஆத்மதிருஷ்டியால்பார்த்து
   (அவன்) தன்றாபம் முன்னையும்போக்கி

7. பொங்கித்தும்பும்மனம் (இறவண) ப்பொழுதால் ஒழிவடைய
போதித்தார் வாக்கியந்தன்னை

8. சந்ததமும் தைலதாரைபோல பக்திபண்ணிவரும்
சனகாதியோகி நால்வரும்

9. (ஸ்வாமி) தானடியிலேபணிந்து தத்துவங்கள் கேட்கலுமே
தக்ஷிணாமூர்த்தியும் சொல்வர்

10. பூதனமர்தைப் பிரியென்பர் போதந்தன்னையறியென்பர்
போக்குவரவற்றிரு என்பர்

11. ஆசைதன்னை ஒழி என்பர் ஆத்மவிசாரனை பண்ணென்பர்
(பிர) மாணத்தமாய் நீ யிரு என்பர்

12. விஷயங்களைவிடுவென்பர் வேதாந்தங்கேளென்பர்
வேதாந்த-சாரந்தன் னென்பர்

13. ஏகாந்தமாயிருந்து ஆராய்ந்து பார்த்தையானால்
வாராது வாசனையென்பர்

14. சாலகாசமாய்த்தணிந்து சர்வத்திலும் பற்றற்று
ஆகாசம் போலிருவென்பர்

15. பக்திவிரக்திதன்னை பிரதிதினம்பண்ணி வந்தால்
பழுதுனக்கு வாராதென்பர்

16. ஸப்தஸ்பரிசரூப ரசகெந்தவாசனையை
தைரியத்தினாலே தள்ளென்பர்

17. கட்டுப்படாதமனதை வணக்கி திருப்பி நல்ல
சத்வாசனைக்கு விடென்பர்

18. மனம்புத்தி அகங்காரம் சித்தம் சிவத்துடனே
தீர்த்து லயமாய் விடுமென்பர்

19. மலடிமைந்தன்போல இந்த மனதினால் வந்ததெல்லாம்
பதினாறு லோகமுமென்பர்.

20. (சற்றும்) பிரமியாதேயாரென்பர் பார்த்தால் இரண்டில்லையென்பர்
அசையாமல் தியானம் பண்ணென்பர்

21. (ஜீவ) ஆத்மபக்தி தேகபக்தி அது இரண்டுமித்தையென்பர்
அறிந்து அதை விட்டுத்தள்ளென்பர்

(இன்னும்வரும்) ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள்.



ஸ்ரீ
# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவயரப் பிடோங்கும் பெண்மைதா
னெண்மை யுறவொங்கும் மூவை."

Vol. I. } Madras. March 1906 { No. 8.
புத்தி. 1. } சென்னை 1906 வருஷம் மார்ச்சு-மீ { பகுதி. 8.

## ...த் ஸ்வாமி விவேகாநந்த பரமஹம்ஸர்.

...ஞ்சிக சூரியோதயம் எந்த திசையிலே உண்டாகிறதோ அதே திசையி
... அடிக்கடி ஞான சூரியர்களும் உதித்து வருகிறார்கள். ஐரோப்பா அமெ
முதலிய மேற்கு தேசங்களில் இடைக்கிடையே சிற்சில ஞானிகள்
...ருக்கின்றார்... சமமானவர்களாகி தெய்வாமிசம் பெற்றோ
மதிக்கப்படும் மஹா ஞான மணிகள் மேற்கே பிறந்தது இல்லையாது.
...ாகண்டமே சர்வமதங்களுக்கும் பிறப்பிடம். ஆசியாகண்டமே ஞானத்
...ம், நாகரிகத்திற்கும் தாய்வீடு. ஐரோப்பா கண்டத்திலும், அமெரிக்
...த்திலும் தற்காலத்து நாகரீக ஜாதியாரிலே பெரும்பாலரின் ...
...குப் பேரமுதாகித் திகழ்ந்துவரும் கிறிஸ்துமார்க்கத்தை ஆரம்பத்தி...
...டைபுரிந்த ஞான சிகாமணி எங்கே உதயமாயினர்? ஆசியாகண்ட...
... ...ப் பாலைவனங்களினிடையே எக்காலும் வற்றாத ஞான
...பட... ...ன்றி, முன்னமிருந்த விஷப்பூண்டுகளையெல்லாம் அழித் தெ...
இப்... ...த்தனையோ கோடிஜனங்களின் ஞானதாகத்தை ஆற்றிவருகின்ற
இ... 525 (...லைவல்லை) மேற்குத்தேசங்களையா சேர்ந்தவர்? பொதுவாக
இருக்கி... ...லே மேற்கூறப்பட்ட இரண்டு பெருஞ்சுடர்களும் மற்றும்
மாதாஜி (Confucius) முதலிய ஞானதாரகைகளும் தோன்றினவென்று
...தகண்டத்தை மட்டும் தனியாக எடுத்துப்பார்க்குமிடத்து
1905 ...ம அளவிடற் கரியதன்று. அதனை [illegible] க்கும்போதே
மான் ... ...ச்சி முண்டாகிறது. தெய்வபூமி என்று எமது தாய்
...மெய்ம்மையானால் அது சிறிதேனும் உபசார வசனமாக மாட்டாது
... ...ரன ஜனங்களை மகிதரென்ற பெயரால் அழைப்போம் ...

கம்பன், காளிதாஸன், ஷெல்லி (Shelley) டான்டே (Dante) முதலிய கவிரத்தினங்களை சிறிது உயர்வான பெயர்கொண்டு தானே அழைக்கவேண்டும்? இவர்களையே இப்படியானால், ஸ்ரீ புத்தர், சங்கரர், முதலிய அற்புத ஆத்மாக்களை என்ன பெயர்கொண்டழைப்பது? கொற்றன், சாத்தன், தேவதத்தன், சுப்பன், சேஷன் முதலியவர்களையும் மனிதர்களென்று சொல்லி ஒழிந்து, புத்தர், சங்கரர் முதலானவர்களையும் மனிதர்களென்றே சொல்வது பாஷைக்குப் பெருமையாகுமா? பிற்கூறிய மகான்களை யெல்லாம் தேவர்களென்று தானே சொல்லவேண்டும்? தேவர் என்ற மொழி 'திவ்' என்னும் பகுதியிலிருந்து தோன்றியது. 'திவ்' என்றால் 'ஒளிவீச' என்பது பொருள். வேறு திசையிலும் காணப்படாத ஞானவொளியும், அதுபற்றிய புகழொளியும் கொண்ட மகான்களைக் கோடிக்கணக்காகப் பெற்றிருக்கும் பாரத பூமியை தேவபூமி என்று சொல்வது முற்றிலும் பொருத்தமேயன்றோ?

## தேவ கணங்கள்.

அம்மம்ம! ஆரிய பூமியிலேபிறந்து விளங்கிய தெய்விக புருஷர்கள் இத்தனை பேரென்று யாவரால் எண்ணமுடியும்? கடலிலேயுள்ள முத்துக்களின் தொகையை யாரறிவார்? வானிலேயுள்ள நக்ஷத்திரங்களை யாவரே எண்ணி முடித்தோர்? ருக்வேதத்து மந்திரத்ரஷ்டா (seers) க்கள் காலம்முதல் நேற்று விவேகாநந்தர் காலம்வரை நமது தேச மாதாவின் வயிற்றிலே தோன்றிய ஞானிகள் எத்தனை ஆயிரம்! எத்தனை லக்ஷம்! ஒன்றை அறுக விதந்து கூறுகிறோமென்று எவனும் நினைக்கவேண்டாம். பாரதபூமியின் வேதங்கள், உபநிஷத்துக்கள், சாஸ்திரங்கள், காவியங்கள் என்பவற்றை ஒருவன் மனக்கோலினால் அளந்து பார்ப்பானாயின் நாம் சொல்லுதலைப்பற்ற உண்மை யென்பது அவனுக்கு மிகத்தெளிவாக விளங்கும். இப்பெரிய கூட்டத்திலிருந்து அதிக முக்கியமான சிலரின் பெயர்களை மட்டும் எடுத்துக் கூறவேண்டுமென்றாலும் இடம்போதமாட்டாது. எனினும் சென்ற ஒரு நூற்றாண்டிற் குள்ளே தோன்றிய முக்கியதேவர்களின் பெயர்கள் இங்கே குறிப்பிடத்தக்கது. ஹிந்துமார்க்கத்தின் புராதன நெறிக்கு விரோதிகள்போல வெளிக்குத் தோன்றியபோதிலும், உண்மையிலே நமது நாட்டைப்பற்றிய நோய்களை நிவாரணஞ் செய்யப்பிறந்த ஆயுர்வேதியராகிய ராமமோஹனராயர், கேசவசந்திரஸேனர், தயானந்தஸரஸ்வதி, விவேகாநந்தரின் சற்குருவாகிய ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீவிவேகாநந்தர் ஆகிய இவர்களே அதிசமீபத்திலே தோன்றி மறைந்தமஹான்கள்-இவர் அனைவரும் தனித் தனியே சிற்சிலவிஷயங்களில் தெய்விகமான திறமை படைத்திருந்தனர். இவர்களை நிறுத்துப் பார்த்து இவர்களிலே யாவர் மேற்பட்டோர், யாவர் தணிந்தோர் என்று வகுத்துக் கூறுதற்கு இது சமயமில்லை. அதற்கு நான் அருகனுமில்லை. சந்திரகிரகத்திற்கும், புதகிரகத்திற்கும் உள்ள தாரதம்மியத்தைப்பற்றிப் பேசுவ



தற்கு, பாறைக்குள்ளிருக்கும் தேரைக்கு என்ன அதிகாரமிருக்கின்றது? தன்னலம் பாராட்டல், ஆசை, அச்சம் என்னும் குணங்கள் செறிந்த உலகமாயை என்ற பாறைக்குட்பட்டிருக்கும் தேரையாகிய நான் ஞானாகாசத்திலே சர்வ ஸ்வயாதீனமாக ஒளிவீசிக்கொண்டிருக்கும் ஜ்யோதி நக்ஷத்திரங்களாகிய விவேகாநந்தர், ராமகிருஷ்ணர், கேசவசந்திரர் முதலானோர்களின் தாரதம்மியத்தைப்பற்றி எவ்வாறு வகுத்து கூறமாட்டுவேன்? ஆனால் அந்தப்பாறையிலிருக்கும் ஓர் சிறிய பிளவின் மூலமாக யாதாலும் ஓர் தாரகையின் ஒளியை கண்டு மகிழும் தன்மை தேரைக்கு மிருக்கலாமல்லவா? அதுபோல் எனக்குத் தெரிந்தமட்டிலே விவேகாநந்தச் சுடரின் பெருமையைச் சிறிது பேசத் தொடங்குகின்றேன்.

## பிறப்பு.

ஸிமூலியா என்பது சென்னையிலே சௌகார்பேட்டை யிருப்பதுபோல கல்கத்தாவிலே ஓர் தனிப்பேட்டையின் பெயர். அந்தப்பேட்டையில் 1862-ம் வருஷம் ஜனவரிமாதம் 9-ம் தேதி திங்கட்கிழமையன்று சூரியோதயத்திற்கு ஆறு நிமிஷங்களுக்கு முன்பாக பிரம முகூர்த்தத்திலே ஸ்வாமி விவேகாநந்தர் அவதாரம் புரிந்தார். ஒவ்வொரு மஹானுடைய பிறப்பையும்பற்றி இந்தியாவில்மட்டுமன்றி அன்னிய தேசங்களிலும் ஜனங்களால் அற்புதமான கதைகள் சொல்லப்படுவதுபோலவே விவேகாநந்தர் பிறப்பின் சம்பந்தமாகவும், ஓர் கதை சொல்லப்படுகிறது. அதாவது இவருடைய தாயார் நெடுங்காலமாக ஆண்குழந்தை யில்லாமலிருந்தனராம். அதினால் மிகவும் மனவருத்தமடைந்து இவர் காசிநகரத்தை அடைந்து அங்கே ஸ்ரீ விசுவேசரிடம் தவங்கிடந்தனராம். அதற்கு விசுவேசர் மனமிரங்கி இந்த அம்மையின் கனவிலே தோன்றி "குழந்தாய், நீ வருந்தாதே. நானேவந்து உன்வயிற்றிலே ஜனிக்கிறேன்" என்று அருள்புரிந்தனராம். இந்தக் கதை பிற்காலத்திலே விவேகாநந்தஸ்வாமிகள் புகழ்பெற்று ஓங்கியதற்கப்பால் கற்பனை செய்யப்பட்டதோ அல்லது உண்மையாகவே அந்த அம்மை அங்ஙனம் கனாகண்டாரோ என்பது நிச்சயித்துக் கூற முடியாத விஷயம். இது நிற்க.

விவேகாநந்த ஸ்வாமிக்குப் பிள்ளைத் திருநாமம் நரேந்திரதத்தன் என்பது. தத்த குடும்பமானது ஸிமூலியா பேட்டையிலே மிகவும்புராதனமான குடும்பம். இந்தக் குடும்பத்தார் பழையகாலத்திலே மிகவும் செல்வமிருந்து வாழ்ந்தவர்கள். பிற்காலங்களில், செல்வம் குறைந்துபோய் சாதாரண குடும்பமாய்விட்டது. இக்குடும்பத்திலே நமது நரேந்திரனுடைய பிதாமகர் உலகத்தை வெறுத்து சன்யாசியாகிவிட்டார். இவர் பார்வைக்கு நரேந்திரனைப்போலவே யிருந்தாரென்று சொல்வதுண்டு. நரேந்திரனுடைய பிதாவுக்கு விசுவநாத தத்தர் என்று பெயர். இவர் வங்காள ஹைகோர்ட்டிலே உயர்ந்த பதவியுள்ள அட்டர்னியாக வேலைபார்த்தவர். அவருக்கு நிறைய

வரவிருந்தபோதிலும் தர்மத்திலே மிகுந்த பிரியமுள்ளவராதலால் அந்த வரவு அவர் செலவுக் கேபோதாமலிருந்தது. ஆதலின், அவர் மரணத்திற்குப் பால் பிள்ளைகளுக்கு அவர் அதிகமாக நிதிவைத்திருக்கவில்லை.

நரேந்திரனுடைய தாயாரும் சாமானியமான ஸ்திரீயில்லை. அந்த அம்மைக்கு ஞாபகசக்தி மிகவும் அதிகமெனப்படுகிறது. ஒருதரம் யாரேனும் ஓர் பாட்டுப் பாடினால் அதைக் கேட்டவுடனே இந்த அம்மை அந்தப்பாட்டு முழுவதையும் ராகம்,மெட்டு,வசனமென்றும் தப்பாமல் திரும்பிச் சொல்லக்கூடிய சக்திகொண்டவளாம். உலகத்துறவுச் சிந்தனை இவருடைய பிதாமகரிடத்திலிருந்தும், இவருடைய சிறந்த அறிவு தந்தையிடத்திலிருந்தும், ஞாபகசக்தி தாயாரிடத்திலிருந்தும், நமது ஸ்வாமிக்குக் கிடைத்ததென்று கூறுவோம்.

## குழந்தைப் பருவம்.

விவேகாநந்த ஸ்வாமிக்கு நரேந்திரனென்று திருநாமம் கொடுக்கப்பட்டபோதிலும்,குழந்தைப்பருவத்திலே இவரை இவர்களுடைய குலதெய்வத்தின் பெயரை யொட்டி வீரேசுரன் என்று அழைத்துவந்தார்கள். உண்மையான புருஷத்தன்மையும், வீரநெறியும் மனிதவடிவெடுத்தாற்போல அவதரித்திருந்த ஸ்வாமிகளுக்கு அவருடைய தாய்தந்தைகள் "வீரேசுரன்", "நரேந்திரன்" என்ற பெயர்கள் கொடுத்திருந்தமை மிகப் பொருத்தமுடையதல்லவா? நிற்க.

குழந்தையாக இருக்கும்போது நமது நரேந்திரன் தனது வீட்டிலே விருந்தாப்பியரான ஓர் பந்துவுடன் படுத்துக்கொள்வது வழக்கம். அந்தக் கிழவர் சம்ஸ்கிருத பாஷையிலே மிக்க தேர்ச்சி பெற்றவர். அவர் ஒவ்வொருநாள் இரவும் நித்திரை வரும் வரையும் நரேந்திரனை அமரகோச சுலோகங்களைப் பாராமல் சொல்லும்படி செய்வதுண்டு. ஞாபகசக்தியிலே இணையற்றவராகிய நரேந்திரர் வெகு சீக்கிரமாக அவற்றை மனனம்செய்து விடுவார். இவ்வாறு 5 வயதிற்குள்ளாகவே நரேந்திரருக்கு அமரகோசத்திலே பாதிபாடமாய்ப்போய்விட்டது. இதுவுமன்றி குழந்தைப் பருவத்திலே இந்த ராஜசன்யாசிக்குத் துறவிகளை கண்டவுடனே மிகுந்த பிரியமுண்டாகிவிடும். வீட்டிற்குவந்த துறவிகளுக்கெல்லாம், பிச்சையிடுவதுடன் தன்மேலே போட்டிருக்கும் துணியை எடுத்து கொடுத்துவிடுவார்.

## இளமை.

பிறகு நரேந்திரப் பெருமான் இங்கிலீஷ் பாடசாலையிலே சேர்ந்து படித்தனர். இவர் விளையாடும்போதே எல்லாப் பிள்ளைகளையும்போல இல்லாமல் தாம் யோகியாக நடித்து "மௌனஸமாதி" விளையாட்டு விளையாடுவார். பாடசாலைப் பாடங்களை நமது நரேந்திரர் கருத்துடன் படிப்பது கிடையாது. ஆனால் ஞாபகசக்தி மிகுதியாக உடையவராதலின் வருடாந்தப் பரீக்ஷைக்கு ஓரிரு நாட்களின் முன்பாக தமது பாடங்களைப் படிக்கத்தொடங்கிப் பரீக்ஷையிலே தேறிவிடுவார். வேதாந்தம் முதலிய தத்துவ சாஸ்திர விவாதங்களிலே இவருக்கு குழந்தைப் பருவமுதலாகவே அதிக ஆவலுண்டு. இவர் 8 வயதி



யிருக்கும்போதே காம்ப்டே (Compte) என்ற ஐரோப்பிய மகானுடைய தத்துவ சித்தாந்தத்தை இவருக்கு ஓர் பந்து எடுத்துப் போதனை புரிந்தார். அப்போதே நமது ஸ்வாமிக்கு இந்த சாஸ்திர வுண்மை நன்கு தெளிவாயிற்று. 12 வயதாயிருந்த காலத்தில் ஸ்வாமி மேல்நாட்டு ஞானிகளுக்குள்ளே தலைமை வகுப்பைச் சேர்ந்தவராகிய ஹெர்பர்ட் ஸ்பென்ஸருடைய நூல்களை அறிந்து கொள்ளும்வன்மை பெற்றிருந்தார். மேற்படி ஞானியின் கோட்பாடுகள் சிலவற்றைக் கண்டனை புரிந்து நரேந்திரர் இவர்க்கோர் கடிதமெழுதினார்: ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) அப்போது ஸ்வாமிக் கெழுதிய மறுமொழியிலே; "தமக்கு தத்துவஞானப் பயிற்சி மிகவும் எளிதாக வரும். கைவிடாமல் மேன்மேலும் படித்துவரவேண்டும்" என்று கூறியுள்ளார். வாலிபத்திலே நரேந்திரர் அதிசுந்தர புருஷராக விளங்கினர். மேலும் அவரது கண்டம் வெகு நேர்த்தியானது. நரேந்திரன் பாடுங்காலத்தில் யெல்லோரும் பேராவலுடன் கேட்பார்கள். 18-ம் வயதிலே நரேந்திரர் பி. ஏ.(B. A.)பரீக்ஷை தேறினர்.

வாலிபத்திலே கூட விவேகாநந்தரின் சிந்தை நிஷ்களங்கமாக திகழ்ந்து நின்றது. தியவஸ்துக்களிடையே அகப்பட்ட காலத்திலெல்லாம் இவர் ஈசுரபஜனை செய்வதுண்டு. மதவிஷயங்களைப் பற்றியே எப்போதும் பேசிக்கொண்டிருப்பார். 12 வயதானவுடனே நரேந்திரன் கடவுள் அனேகருளரென்ற கொள்கையை நம்பாமல் நிறுத்திவிட்டார். பிரம ஸமாஜத்தார் ஈசனைப்பற்றிக் கொண்டிருக்கும் கோட்பாடே தகுதியானதென்று நம்பத் தொடங்கினர். கடைசியாக பிரம சமாஜத்திலே சேர்ந்தார். சங்கீதப் பிரியராகையால் பிரம ஸமாஜத்தாரின் பஜனைகளிலே ஸ்வாமியே முக்கியப் பாடகராக விளங்கினர். ஆனால் சிறிது காலத்திற் கப்பால் இவருக்கு பிரம ஸமாஜத்திலே யிருந்த பற்று நீங்கிவிட்டது. ஸர்வாந்தர்யாமியாகிய பிரமத்தை பிரத்தியக்ஷமாக அனுபவிக்கவேண்டுமென்ற ஆவல் நரேந்திரருக்கு ஏற்பட்டது. பிரம ஸமாஜத்தார் ஏதோ சில ஐதிகங்களை வைத்துக்கொண்டு பழைய பிரார்த்தனைகளையும், ஜபங்களையும் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பது ஸ்வாமிக்கு இசையவில்லை. நேரே பிரத்தியக்ஷமாக அனுபவிக்கப்படாத பிரமத்தினிடத்திலே பக்திவைப்பதெங்ஙனம்? எனக்குத் தெரியாத ஒரு பொருளின் மீது நான் எவ்வாறு அன்பு செலுத்தவல்லேன்? என்று ஸ்வாமிக்கு சந்தேகங்கள் உண்டாயின. இந்த சமயத்தில் ஸ்வாமிகள் நிரீசுரவாதியாகி விட்டனர். இந்த ஜகத்திலே பிரமத்தை யொழிய வேறொன்று மில்லை யென்ற பெருங்கொள்கையை உலகத்தாருக்கு எடுத்துப் போதனை செய்யவந்த இம்மஹான் இந்த ஜகத்திலே தெய்வமே கிடையாதென்ற கொள்கையைச் சிறிதுகாலம் வைத்திருந்தார். ஆனால் இக்கொள்கை சொற்பகாலத்திற்கப்பால் நீங்கிப்போய்விட்டது.

## குரு தரிசனம்.

இவ்வாறிருக்கும் போது ஸ்வாமி தமது பந்துக்களில் ஒருவராகிய ராமசந்திரதத்த ரென்பவருடன் அடிக்கடி சமயவிவகாரங்கள் செய்து

வருவதுண்டு. இந்த ராமசந்திரதத் கல்கத்தா வைத்திய கலாசாலையிலே வேலைபார்த்துக்கொண்டு வந்தவர். நரேந்திரருடைய கேள்விகளுக்கு தக்கபடி மறுமொழிகூற ராமசந்திரரால் முடியவில்லை, அதன்பேரில் ராமசந்திரர் சொன்னார்:—அப்பா! உன்து கேள்விகளுக்கு சமாதானங் கூற என்னால் முடியாது. தக்ஷிணேசுர கிராமத்திலே ஓர் ஞானி யிருக்கிறார், அவரிடம் வா, அவர் உனக்கு திருப்தியானபடி விவகாரம் புரிவார்" என்றனர். தக்ஷிணேசுர கிராமம் கல்கத்தாவுக்கு வடக்கே 4 மைல் தூரத்திலேயுள்ளது. டிஸெம்பர் மீ திறக்கு ஸ்வாமி ராமசந்திரருடன் ஒரு நாள் போய் அந்த மஹாஞானியைதரிசனை புரிந்தார். அந்த ஞானிதான் புகழ்பெற்ற ராமகிருஷ்ண பரமஹம்ஸரென்று கூறவேண்டுவதில்லை. நரேந்திரரைக் கண்டவுடனேயே இராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு ஆனந்த முண்டாய் விட்டது. உலகத்திற் கெல்லாம் ஓர் புதிய ஒளி கொடுக்கப் பிறந்த மஹான் இவரென்பது அந்த ஞானியின் திருவுளத்தில தோன்றி விட்டது. குழந்தாய், நீமட்டிலும் தனியாக எம்மை ஒருநாள் பார்க்க வா என்று ராமகிருஷ்ண பரம ஹம்ஸர் கட்டளையிட்டருளினார்.

நரேந்திரர் சம்மதிகொண்டு மற்றொரு தினம் பரம ஹம்ஸரைப் பார்க்கவிந்தார் அப்போது பரமஹம்ஸர் நரேந்திரருக்கு ஞானநெறி புணர்த்தினர் பிரமத்தை நரேந்திரருக்கு முற்றிலும் அருத்திவெறிகொள்ளும்படி செய்து விட்டார். அந்த மஹா ஞானவெறி நரேந்திரரை விட்டு ஒருபோதும் நீங்க வில்லை. பிரமக்கள்ளுண்டு.இந்த நரேந்திரப் பரதேசி பிதற்றிய வசனங்களே இனி; எக்காலும் அழிவில்லாத தெய்வவசனங்களாகப் பெருஞ்ஞானிகளால் போற்றப்பட்டு வருகின்றன; ஞானோப தேசம்பெற்ற காலமுதல் நரேந்திரர் தமது பழைய இயற்கை யெல்லாம் மாறிப் புதிய மனிதராகி விட்டார். தாய்க்கு மகவின் மீதுள்ள அன்பைக் காட்டிலும், நரேந்திரர் மீது பரமஹம்ஸர் அதிக அன்பைச்செலுத்தினர். 6 வருஷகாலம் நரேந்திரர், தமது குருவுடன் செலவிட்டார். இந்த ஆறு வருஷங்களிலே தான் உலகமுழுதையும் கலக்கத் தோன்றியனவாகிய அற்புதப் பேரெண்ணங்கள் இவரது மனதிலே உதித்து நிலைபெற்றன.

1886 ம் வருஷத்திலே பரமஹம்ஸர் மரணமெய்தினர். இவர் மரிப்பதன் முன்பு நோயுற்றிருந்த காலத்திலேயே தமது சீடர்களாயிருந்த 20 வாலிபர்களுக்கு இவர் சன்னியாஸாசிரமம் அருளிச்செய்தனர். அந்த இருபதின்மருள்ளே எமது நரேந்திரரே தலைவர். இவருக்கு சந்நியாசம்பெற்ற சமயத்தில் விவேகானந்தர் என்ற திருநாமம் அளிக்கப்பட்டது.

சற்குருவின் மரணத்திற் கப்பால் விவேகாநந்தர் செய்த பெருந்தொழில்கள் அடுத்தமுறை விரிவாக வரையப்படும்.

பத்திராதிபர்.



# RAMATHILAKAM:

or

## The other end of hatred is love.

## ராமதிலகம்.

(160 வது பக்கத் தொடர்ச்சி.)

அங்கம் 1. களம் 5.

தாமோதர முதலியார் வீட்டு கொட்டகைப் பந்தல்.

மேளகாரர்கள் தயாரா யிருத்தல். வேலைக்காரர்கள் வருதல.

முதல் வேலைக்காரன்:—எங்கடா அந்த சட்டித்தலையன்? இதெல்லாம் எடுத்துப்போட்டுகொஞ்சம் ஒத்தாசை பண்ணாமல் எங்கே போனான்? அவனுக்கு இதெல்லாம் தெரியாது. உள்ளே உட்கார்ந்துக் கொண்டு சட்டி சுரண்டிக்கொண்டிருப்பன்.

இரண்டாவது வேலைக்காரன்:—ஆமாம்-இவ்வளவு நாளுக் அவனுக்குத் தெரியுமா? ஆனால் நாளுக் விஷயங்களெல்லாம் ஒருவனுடைய முதுகிலேயே ஏறிக்கொண்டு விட்டானால், அதுவும் அழுக்குத் தேய்க்காத முதுகாயிருந்துட்டாக்கே கொஞ்சம் நாற்றம்தான் அடிக்கும். நீ இவ்வளவு கோபித்துக்கொள்ளப்படாது.

மு-வே:—பெஞ்சிகளை யெடு நாற்காலிகளைக்கொண்டு. பேரப்பம்பாயை போடு, ஜமக்காளத்தை விரி,—அந்த புஷ்பம் பட்டி அதைகளில் எனக்கு கொஞ்சம் பாக்கிவச்சவை-வாசல் காவல்காரனிடத்தில் சொல்லி வீர, நீவி இரண்டுபேரையும் உள்ளே விட்டுவிடச்சொல்லு. அடே—ஆறுமுகம் சட்டித்தலை.

இ-வே:—ஏயார்.

மு-வே:—கூடத்தில் உன்னை எங்கே யென்னு தேடராங்க-கூப்பிடராங்க, அழைச்சிட்டு வரச்சொன்னாங்க.

இ-வே:—நாங்கள் இங்கே அங்கே இரண்டு இடத்திலும் இருக்க முடியாதே.

மு-வே:—எதோ கொஞ்சத்துக்கு கொஞ்சம் கஷ்டப்பட்டுவிட்டால் அப்பறம் சௌக்கியம்தான் (சாமான்களை யெடுத்துக்கொண்டு மறைதல்.)

(தாமோதரமுதலியார் முதலானவர்கள்-ஜாத்திரைக்குக் கூப்பிட்டிருந்த சிநேகிதர்கள் - கோலாட்டப்பெண்கள், மேளகாரன் வருதல்.)

தாமோதரமுதலியார்:—வாருங்கள் - எனக்கு இப்போதுதான் திருப்தியாயிருக்கிறது. எல்லாரும் சேர்ந்தால் தான் சந்தோஷம்- எங்கே, குழந்தைகளா; கோலாட்டம் போடுங்கோ - கால்நொண்டி யில்லாதவர்களெல்லாம் கோலாட்டம் போடலாம். யார் கோலாட்டம் போடமாட்டேனென்கிறாளோ அவள் நொண்டி, சரிதானே. (தெய்வயானையைப்

பார்த்து) உன்னுள்ளில் பெரிய பெண்பிள்ளைகள்கூட கோலாட்டம் போவார்களோ இல்லையோ-எனக்குத் தெரியும். அப்பொ எல்லாம் குதிச்சுப்படுகிறது கோலாட்டம் போடுகிறதென்றால் பொம்மனாட்டிகளெல்லாரு தயாராயிருப்பார்கள். வெடிய வெடிய பாடிக்கொண்டிருப்பார்கள் இந்த நாளையப் பெண்களுக்கு எழுந்து நடக்கிறதென்றால், கோலாட்ட போடுகிறதுபோல் சிரமமாயிருக்கிறது. அந்த நாளெல்லாம் போச அந்த நாளில் ஜாத்திரையானால் எவ்வளவுபேர் கூட்டம்; அடேயப்ப அதையெல்லாம் இப்பொ நினைக்கிறதில் பிரயோசனமில்லை. நடக்கிற அடே யார் மேளகாரன் வாசி-எங்கே குழந்தைகளா ஆரம்பியுங்கோ (தெய்வயானையைப்பார்த்து)-ஏன், நீ குதிச்சுப் பாடி எத்தனை வருஷமாச்சு.

தெய்வயானை அம்மாள்:—நான் அதுக்கென்ன முப்பது வருஷமிருக்காதா?

தாமோத-சே:—அவ்வளவு இருக்காது. இராமசாமி முதலியாருடைய திரட்சிக் கல்யாணத்தின்போது குதிச்சுப்பாடலில்லையா? இருபத்தைந்து வருஷந்தானிருக்கும்.

தெய்வ:—நன்றாயிருக்கு. அவன் பிள்ளைக்குந்தான் முப்பது வயசாய் விட்டதே.

தாமோ:—எனக்குத்தான் சொல்லரயோ. பிள்ளைக்கு இரண்டு வருஷம் தானே யாச்சுக் கல்யாணமாயி.

ராமாமிருதம்பிள்ளை:— அதோ அவ்விடத்தில் தன்னைமைக்கும் இடமெல்லாம் பொன்னொளிபறப்பும் பெண்மணியார்?

வேலைக்காரன்:—எனக்குத் தெரியாதய்யா.

ராமா:—ஆகா-என்ன ஆச்சரியம். அவள் மேனி யொளியால் விளக்குகளும் மழுங்குகின்றன. இவ்விரவாகிய நங்கைக்கு முகத்திலிட்ட பிரகாசமான திலகம்போன்றிருக்கிறாள். இவ்வுலகிலிவ்வளவு வனப்பு அமைந்த பெண்ணைக கண்டேன் இல்லை. தெய்வலோகத்திலிருந்து யதிர்ச்சையாய் இவ்வுலகத்தை அடைந்தவளோ. அவள் மற்ற கன்னிகைகள் நடுவில், காக்கைக்கூட்டத்தில் தோன்றும் அன்னம்போல விளங்குகின்றாள். இந்த கோலாட்டம் நின்றவுடன் அவள் அருகில் சென்று அவள்மேனியை ...,...பரிசுத்தமான காற்றையாவது அனுபவிப்பேன். ஆகா! இந்நங்கையினது எழிலை கண்ட பிறகு என் கண்களும் வேறு பொருள்களில் செல்லுமோ? இதுவேரிழைக்கு நிகருண்டோ! நான் முன்னெண்ணியது வீணே. இதுவரையில் அழகென்பதை நான் பார்த்ததே இல்லை.

சடகோப முதலியார்:—இந்த கூத்தைக்கேட்டால் வெள்ளாள குலத்தைச் சேர்ந்த யாரோ ஒருவன் மாதிரியிருக்கிறது. அடே என் தம்பைக் கொண்டுவா. அடே என்ன துணிச்சல்-முக்காடுபோட்டுக்கொண்டு இவ்விடத்தில் வந்து நம்மை பரிகாசம் பண்ணுவோ—இவர்க்கொன்றும் தோஷமில்லையே.



தாமோ:—என்ன அப்பா. எனப்படி கூச்சலிடுகிறாய்?

சடகோ:—மாமா-இவன் பிள்ளைமார்களில் ஒருவன் நமக்கு விரோதி. நம்முடைய சந்தோஷத்தை கெடுத்து, நம்மையும் அவமானம்செய்வதற்காக இங்கு வந்திருக்கிறான்.

தாமோ:—அது யார்-ராமாமிர்தமா?

சடகோ:—ஆமாம்-அதே போக்கிரி பயல்தான்.

தாமோ:—அடே-சும்மா பொறு-அவனை யொன்றும் செய்யாதே. விட்டுவிடு-அவன் நல்ல யோக்கியன்போல் தோன்றுகிறது. இந்த மதுரைப்பட்டணத்தில் குணத்திலாவது நடவடிக்கையிலாவது அவனுக்கு சமமானவன் யாருமில்லையென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்த ஊர் முழுவதும் கிடைப்பதானாலும் நம் வீட்டில் வந்திருக்கும் அவனை அவமானப்படுத்த மாட்டேன். ஆகையால் பொறுத்துக்கொள். அவன் இங்கு வந்திருக்கிறதாகவே நினைக்கவேண்டாம். இதுதான் என்னுடைய நிர்மானம். அதில் உனக்கு மதிப்பிருந்தால், இந்தமாதிரி சமயங்களுக்குஉசிதமில்லாத உன் சிடுசிடுப்பை விட்டுவிட்டு இரு.

சடகோ:—இப்பேர்ப்பட்ட போக்கிரிப்பயல் நம்மவீட்டுக்குவந்தால் சிடுசிடுப்புந்தான் வரும். நான் பொறுக்கமாட்டேன்.

தாமோ:—பொறுக்கமாட்டாயா? பொறுக்கத்தான்வேண்டும். என்ன சிறுபிள்ளைத்தனம்-இது? நான் சொல்லுகிறேன். பொறுத்துக்கொள் இவ்விடத்தில் எஜமானன் நானா, நீயா? இங்கு ஒரு பெரிய கலகம் ஏற்படுத்தி விடுவாய் போலிருக்கிறதே. நன்றாயிருக்கிறது.

சடகோ:—இது என்ன வெட்கக்கேடு.

தாமோ:—போடா- அதிகப்பிரசங்கி அப்படியா? இதனால் உனக்கு ஏதாவது ஆபத்துவந்தாலும் வரும். என்னை எதிர்த்து பேசுகிறாயா? நன்றாயிருக்கிறது. வாயை மூடிக்கொண்டிருக்கிறாயா-அல்லது நான் உன் வாயைமூடட்டுமா?—இன்னும் கொஞ்சம் விளக்குக்கொண்டுவா.

சடகோ:—கோபமும் பயமும் மாறிமாறி என் உடலை வருத்துகிறது. நான் வெளியேபோய் வருகிறேன். இப்பொழுது ஏதோ இனிப்பாயிருக்கிறது. (போகுதல்) இது அனர்த்தத்துக்குத்தான் இவன் இங்கே வந்திருக்கிறான்.

ராமா:—இதென்ன கூத்து ஆகா! அப்பெண்மணி இப்பொழுது தனித்து நிற்கிறாள். அவளருகில் செல்லுவேன். என் மனமும் கண்ணும் அவளைவிட்டுப் பிரியா. (அவளருகில் சென்று) கண்மணியே! உன்னுருவத்தை இவ்வணிகள் மறைப்பதரிது. உன்னை அலங்கரித்தவர்களினது பேதைமையை என்னென்று சொல்வேன். ஐயோ உன் மிருதுவான மேனி இவ்வாபரணங்களால் மிகவும் வருந்தியிருக்குமே யென்று வருந்துகிறேன். ஆனால் உன் முகம் வியர்த்திருக்கிறதே. நான் துடைக்கட்டுமா. என் கடினமான கை உன்னுடைய மிருதுவான அங்கத்தில் பட்டால் மேனி வருத்தப்படுமென்று நினைக்கிறேன்.

திலகம்:—தாங்கள் சொல்வது சரியல்ல. உமது அங்கங்களும் மெல்லியவை

யென்று தோன்றுகின்றது. கோபம்கொள்ளக்கூடாது. தங்கள் கை அதி யிருதுவாயிருக்கிறதாகக் காணப்படுகிறது. ஆனால் எனக்காக தாங்கள் சிரமப்படுவது எனக்கு சம்மதமில்லை.

ராமா:—சிரமமா ? பெண்ணே நீ ஸந்தேகிக்கவேண்டாம்.

கிழவி:—திலகம் உன் தாயார் கூப்பிடுகிருள். ஒரு வார்த்தை பேசவேணுமாம்.

ராமா:—அவள் தாயார் யார் ?

கிழவி:—அவள் தயார் இந்த வீட்டு எஜமானி. நல்லவள் அவள் புத்திசாலி, இப்போ பேசிக்கொண்டிருந்தாயே அந்தக்குழந்தையை நான் பால் கொடுத்து வளர்ந்தேன், அவளைக் கல்லியாணம் பண்ணிக்கிறவனுக்குத் தான் இந்த ஆஸ்தி.

ராமா:—அவள் முதலியாரைச்சேர்ந்தவளா ? ஐயோ, நான் இப்போது என் விரோதிக்கா அடிமைப்பட்டேன்.

வசுவேதப்பிள்ளை:—நாம்போவோம் சோலாட்டம் இப்பொழுது தான் வெகுநன்ருயிருக்கிறது.

ராமா:—ஆமாம், அவ்வளவுக் கவ்வளவு என்மனதும் ஒருமாதிரியாய்த்தானிருக்கிறது.

தாமோ:—கனவான்களே, போகப்படாது. எல்லாரும், கொஞ்சமிருக்கவேண்டும்.—ஆய்விட்டதோ. சரிதான் எல்லாருக்கும் நமஸ்காரம். போய்வாருங்கள், இவ்விடத்தில் வெளிச்சங்காட்டு- வா நாம் படுககப்போவோம். அடே, நாழிகைஆய்விட்டது. நான் படுக்கைக்குப்போகிறேன்.

(திலகம், கிழவி தவிர பாக்கியெல்லாரும் போகுதல்.)

திலகம்:—இங்கே வா, கிழவி ! அதோபோகிறவர் யார்

கிழவி:—கோவிந்த முதலியார்பிள்ளை.

தில:—இதோ கதவண்டைபோகிறது யார் ?

கிழவி:—சுப்பிரமணியமுதலியார்.

திலகம்:—அவருக்குப் பின்னுல் போகிறதுயார்.

கிழவி:—எனககுத் தெரியாது.

தில:—போய் அவர்பெயர் என்னவென்று கேட்டுவா (கிழவி போகிருள்.) அவருக்குக் கல்லியாணம் ஆயிருந்தால் நான் கன்னிகையாகவே இறகக வேண்டியதுதான்.

கிழவி:—அவர் பேர் ராமாமிர்தம் பிள்ளை. உங்கள் விரோதியாகிய மதுரைநாயகம்பிள்ளையினுடைய ஒரே பிள்ளை.

திலகம்:—அறியாமல் பார்த்தேன். இனி அறிந்து பயனில்லை. இப்படியு மாசை பிறக்குமா ? ஆசை யிப்படி செய்யுமென்பதை அறியேனே.

கிழவி:—இது என்ன அம்மா.

திலகம்:—ஒன்றுமில்லை இது ஒரு பாட்டுக்கடி.

(உள்ளிருந்து திலகமென்று கூப்பிடுதல்)

கிழவி:—இதோ வந்துட்டேன். போவோம் எல்லாரும் போய்விட்டார்கள்.

(இன்னும் வரும்) (போகுதல்)

எஸ். வி. சீனிவாஸய்யர். B. A.,



# THE HOME AS IT SHOULD BE.

# குடும்பம் இருக்கவேண்டிய நிலைமை.

## 1. அத்தியாயம்.

### குடும்பப் பற்று.

இத்தேசத்திலே உள்நாட்டுக் கிராமங்களிலிருந்து அரத்திலிலுள்ள பட்டணங்களில் படித்துவரும் பிள்ளைகள் விடுமுறைக்காலத்தே தம் ஊருக்குத் திரும்பிவந்தபோது அப்பிள்ளைகளைச் சேர்ந்தோர் பலரும் "ஊராசையும், வீட்டாசையும் யாரை விடுமோ" என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்படி வீட்டாசை ஊராசை உண்டாவதற்குக் காரணமென்ன? அவ்வீட்டினிடத்தே யிப்பிள்ளைகள் அநுபவித்த மேன்மையென்ன? ஒரு ஊரிலே ஒரு சொத்துமில்லாதே வேண்டிய உறவினருமில்லாதே இருப்போர்களும், பல தூர ஸ்தலங்களுக்குப் பிரயாணமாய் சென்றுத் திரும்பித் தம் வீடுவந்து சேருவர். பினங்கு, மோரீஸ், தெக்ஷிண ஆபிரிகா, அமெரிக்கா முதலிய தூர தேசங்களுக்குச் சென்றோரும் ஒழிந்த காலங்களில் தம் இளமைமுதல் முதுமை வரையிலும் தம் வீட்டில் நடந்த பந்தபாசங்களை நினைக்கையில் எப்போது தம் வீட்டைச் சேருவோம் என்று ஏங்குவர்; உற்றமனிதரை நினைந்து மனம் உருகுவர்.

கல்விச்கழகங்களிலே படிப்பவன் எவனும் தன் வீட்டை நினைக்கையில் பலவித திருத்தங்கள் செய்யவேண்டுமென்று நினைப்பான். உலக வியாபாரங்களிலே உழன்று சிக்கிப் பாடுபடும் எவனும் தன் அகத்தில் தனக்குக் கிடைக்கும் சௌகரியத்தையும் உற்சாகத்தையும் கவனிப்பான். தன் ஞடுவிட்டோட்டப்பட்டுத் தண்டனைப்படும் குற்றவாளி எவனும் தன் வீட்டில் அநுபவித்த சிறப்புக்களை நினைக்கவும் நாம் எக்காலம் திரும்பி வீடுசேருவோம் என்ற எண்ணம் அவனை யையவருத்தும்.

இதற்கு காரணம் என்னவென்று சிறிது ஆலோசிப்பாம். ஒருவன் தான் வளர்ந்துவந்த பழக்கத்தாலே தன் தந்தை தாயர் முதலியோரிடத்தே ஓர் ஆழ்ந்த அன்பும், சுற்றத்தாரிடத்தே பற்றும், ஊரினிடத்தே ஒருவித விசுவாசமும் உடையான் என்பது இயல்பே. இளங்குழந்தைமுதல் தன்னை பெடுத்து வளர்த்துச் சீராட்டிக் கோதாட்டிய தாய்தந்தையரிடத்தே அன்புடைமை இயற்கையே அன்றோ? இளமையிலே இவன் படித்த "தந்தை தாய்ப்பேண்" என்பது இவன் நினைவினின்று மாறுமோ? இதற்குக் குடும்பப் பற்று முக்கிய காரணமாகும். பிறகு தான் பிறந்து வளர்ந்த வீட்டின்பால் பாசமும், அதின் இனிய இனிய இடங்களில் விருத்திசெய்யவேண்டும் என்னும் எண்ணமும் இவன் நெஞ்சில் எப்போதும் அகலாது குடிகொண்டிருக்கும்.

வீட்டின்மேல் அதிக ஆசை யுண்டாகக் காரணம் தான் இளமையில் பழகிய பழக்கமும் அதில்தான் தன் உறவினரோடு அநுபவித்த சுகாதார முறைமையுமே.

இதனால் வீடுகள் நல்ல சுகவாசமான இடங்களில டாம்பீகமாய்க் கட்டப்பட்டு வேண்டிய திரவியங்களைச் செலவழிக்கவேண்டும் என்பது எமது கருத்தல்ல. பெருஞ்செலவிட்டுக் கட்டிய மஹாலே ஆயினும், ஏழையரால் கட்டப்பட்டுள்ள குச்சேயாயினும், தகுந்த சுகாதார முறைமையும் வீட்டினுள் உள்ள பொருள்களை இயற்கையின் வைத்திருக்க வேண்டுவதும் முக்கியமே. இவ்வண்ணம் இருந்தால் அதில் வசிக்கும் பலரும் அதனிடத்தே மிகப் பக்ஷமுடையவராவர். இவ் வில்லவாழ்வு பல நன்மைகளைச் செய்தலும் உடைத்து.

இப்படி மனோற்சாகத்தையும் சௌக்கியத்தையும் தரும் இல்லமும், தனக்கு இளமை முதல் நன்றியே செய்துவந்த தந்தை தாயர்மேல் பிரீதியும், சுற்றத்தாரிடத்தே அன்பும் மரியாதையும் கலந்த இக்குடும்பப்பற்று எவ்வளவு நன்மையை விளைவிக்கக்கூடும் என்று சிறிது ஆலோசியுங்கள். இக்குடும்பப் பற்று மனிதன் ஒவ்வொருவனையும் நல்வழிப்படுத்தி உற்சாகமாயும் சந்தோஷமாயும் செய்து நடத்தையை மேன்மையுறச் செய்கின்றது. வீட்டில் உலக வியவகாரங்களில் மனிதர் அநுபவிக்க நேரிடும் சங்கடங்களைத்தவிர வேறு மனக்கவலையையும் தொந்தரையையும் தரக்கூடிய விஷயங்கள் இருத்தல் நலம் உடைத்தன்று. இவ்வண்ணம் இன்பமுடன் ஒத்துமையின் வாழ்ந்தால் இவ்வில்லவாழ்வன்றோ பூலோக கைலாஸம்? இப்படிச் சில குடும்பங்கள் இருக்கினும் மனச்சங்கடத்தை விளைத்துப் பல்வித வேதனைகள்செய்யும் குடும்பங்கள் பல வுள.

இக்காலத்திலே, முன்காலத்திருந்த குடும்பப் பழக்கத்தையும், குடும்பப் பற்றினையும் தளர்த்திவிடும் முறைமைகள் பல இருக்கின்றன.

குடும்பவாழ்வு, இனிமையாகவும், சந்தோஷமாகவும், பற்றுடையதாகவும் இருத்தல் மனிதர்கள் நடத்தையையும், மேம்பட்ட முன்னேற்றத்தையும், தருவதால் மிக அத்தியாவசியமாய் கவனிக்கற் பாலது.

இளையோர்கள்குடும்பத்தைத் தாமே கவனிப்பதாலும், தாமே நடந்து பழகிய நடத்தையாலும், மதக்கொள்கையாலும், அரசாங்க விஷயக் கொள்கையாலும், வெகுவாய்க் காணப்படுகின்ற வயது முதிர்ந்தோருக்கும் இளையோருக்கும் உள்ள நடத்தை மாறுபாட்டாலும், தற்காலப் பெண்களின் எண்ண விரிவாலும், முன்வழக்கப்பாட்டை அநுசரிக்கவில்லை என்பது நிச்சயமே.

குமாரப்பருவம் உடையோருக்கு உலகவாழ்வு, தாம் அநுசரித்து நடந்துவரும் முன்காலக் கட்டுப்பாடுகள் குறைந்த சுவ இச்சையாலும், வெளியில் தம் கவனத்தைப் பரிகரித்துக் களிப்பூட்டும் உற்சாக ஆடல்களாலும் மிகுந்த ஆனந்தம் உடையதாகத் தோற்றுமாயினும், முன்கால நன்னடக்கைப் பழக்கத்தை மாற்றிக், கெட்ட சகவாசங்களுக்கு இடம் கொடுக்கச்செய்



கின்றது. "அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது." "அட்டையைக்கழுவித் தொட்டிலில் வைத்தாலும் அது கிடக்கும் சேற்றில்," என்னும் முதுமொழியின் பயனை நன்கு விளக்கும் அன்றோ?

தாய்தந்தையின் ஆட்சி குறைந்த தற்காலக்குடும்ப நிலைமை சிறந்த மரியாதையும், செவ்வனம் பழகிவந்த இளமைப் பழக்கமும் இருந்தாலன்றோ நன்மையை விளைக்கும். குடும்பத்துள்ளோர் ஒவ்வொருவரும் தத்தம் சித்தப்படிக் கிரியைகளைச் செய்துவருவார் ஆயின் அக்குடும்பம் நற்குடும்ப சுகத்தைத் தருவதாகாது. வீட்டில் உள்ளோர் சேர்ந்து உண்ணார்; ஒருவர்க்கொருவர் கலந்து வேலைகளை ஒழுங்குறச்செய்யார்; ஒருவன் உற்சாகமாய் நாடகங்களைப் பார்த்து நயங்கொள்வான்; வேறொருவன் விளையாட்டின் மிகுந்த பிரியத்தோடு இல்லக்கிரியைகளை அழியவிடுவான்; வேறொருவன் படிப்பின் மிகுந்த சிரத்தையோடு புத்தகமும் கையுமாய்க் காலத்தைக்கழிப்பான்; வேறொருவன் தெருவணைமீது உட்கார்ந்து வீணருடன் கலந்து சிறிதும் அசையாதே கிட்டாடுவான்; "தாய்க்குத் தவிடிடியான், தம்பிரானுக்கு இரும்படிப்பான்" எனப் பணிசெய்வான் ஒருவன். வீட்டினுள் பெண்மணிகளோ அற்புதம்! மாமியும், மருமகளும் கலந்து பேசும் வார்த்தைகளோ காதவழிகேட்கும்; மாமியோ பழமொழி அகராதி; தன் வேலைகளைப் பக்குவமாய்ப் புத்தி பூர்வகமாய்ச் செய்வோரையும் அன்புடன் செய்யப்பழக்குதல் தெரியாள்; மருமகளோ மாமியின் கொடுமை வார்த்தையினால் மரியாதைமீறிப் பேசத்தொடங்குகிறாள். ஐயோ பாவம்! "மாமியுடைத்தால் மண்கலம் மருமகள் உடைத்தால் பொன்கலம்" என வழங்குகிறதே! இதையும் தவிர ஒரு வீட்டில் பிறந்தவள் ஒருத்தி இருந்தால் விளையும் மருமகளுடைய துன்பம் செப்பத்தரம் உடைத்தன்று. இவ்வண்ணம் குடும்பசுகம்இன்றி வாழ்தல் எதன்பொருட்டென்று ஆலோசியுங்கள்.

வீட்டுப்பிள்ளைகளோ தாம் அடங்கி நடவாராய், அகங்கொண்ட மூர்க்கராய், இல்லத்தில் நடக்கும் விஷயம் ஒன்றும் அறியாதே தாங்கள் அநுசரித்து நடக்கவேண்டிய குடும்பப்பற்றை மறக்கிறார்கள். வித்தையறியாப் பெண்கள் இடும் விகிர்தத்தைச் செப்புதலும் இயலுமோ? படிப்பால் அறிவு மிகுந்த பெண்களோ தம்மால் இயன்றமட்டும் தம் குடும்பப் புருஷர்கள் சுகமுறப் பாதுகாத்தல் வேண்டும். நன்னடக்கை யுடையாராய் குடும்பத்தின் கலகம் விளைக்காது அன்பொடுநடத்தல் வேண்டும். இவ்வண்ணம் இருவரும் ஒத்து நடந்தால் குடும்பவாழ்வு மிக அற்புதமானதே. இதைக் கவனியாது குடும்ப வாழ்வைப் பயன்கெடச்செய்தால் உலக வியாபகங்களிலே இது அக்குடும்ப அங்கத்தினரைக் கண்யதை குறையச்செய்யும். நற்குடிப்பழக்கம் இல்லாதான் வாழ்வு நலம் உடைத்தாமோ?

இத்தேசத்திலே பாதி ஜனங்கள் அத்தகை அறிவிலராய்ப் பேசும் பேச்சுக்களும் இடும் கூச்சல்களும் மிக அகோரமானது. இதினால் விளையும் வீட்

டுச் சண்டைகளும் சச்சரவுகளும் மிக விசாரிக்கத்தக்கது. இவர்கள் நன்னடக்கை யுடையாராய்த் தம்மை யடக்கியாளின் எவ்வளவு மேன்மை விளையுமோ வென்று ஆலோசியுங்கள்.

"நல்லாரைக்காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே, அவரோ
டிணங்கியிருப்பதுவும் நன்று."

(இன்னும் வரும்.)

M. S. நடேசய்யர், B. A.

# THEORIES IN SUPPORT OF WAR.

# யுத்தம் வேண்டுமென்பாரது கோட்பாடுகள்.

—:0:0:—

மனிதஜாதியார் தம்முள் ஒருவருக்கொருவர் கோரமான போர் புரிவது மிக வெறுக்கத்தக்கதென்பது எக்காலத்தும் எத்தேசத்தும் வித்வான்களாலும்; கருணை மிகுந்த பெரியோராலும் வகுக்கப்பட்ட விஷயம். இக்காலத்துப் பெரியோர் தர்மத்தை ஆதாரமாககொண்டு யுத்தத்தைக் கண்டிப்பதுடன், மனிதனது சௌகரியத்திலே விருத்தியடைவதற்கும் போர் இடையூறுகின்றது என்று கூறுகின்றனர். என்றாலும் உலக சரித்திரத்தை உய்த்து நோக்குமிடத்து யுத்த தூஷணையுடன் யுத்த தூஷணபரிகாரக் கொள்கை எக்காலத்துமிருக்கக்காணலாம். அக்கொள்கை வெவ்வேறு காலத்து வெவ்வேறுவடிவங்கொண்டது. இவ்வியாசத்தில் யாம் அக்கொள்கையின் சரித்திரத்தை ஒருவாறு விசாரிப்போம்.

உலக சரித்திரத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிப்பது வழக்கம். பூர்வீக காலசரித்திரம், இடைக்காலசரித்திரம், தற்கால சரித்திரம். பூர்வீககாலமாவது சரித்திரவாரம்பமுதல் சார்லிமான் (Charlemagn) ரோமாபுரி அரசனாக முடிசூட்டப்பட்ட கிறிஸ்துவுக்குப் பின்னர் 800-ம் வருஷம்வரை என்னலாம். அவ்வெண்ணூறும் வருடம்முதல் 15-ம் நூற்றுண்டின் இறுதிவரை இடைக்காலம் என்னலாம். அதன் பின்னரெல்லாம் தற்காலம்.

பூர்வீககாலத்து ஸ்பார்டா தேசத்தார் மனிதனது சாதாரணநிலை போர்நிலையென்று கருதி அதற்குத் தங்களைத் தகுதியாக்கிக்கொண்டதாக வறிகிறோம். ஆதென்ஸ் நகரத்து பெரியசாஸ்திர வித்வான்கள் உண்டாயினராயினும், பொதுவாக கிரேகார் தம்மைப் போருக்காக ஆயத்தப்படுத்துவதில் மிக்க கவ



னம் செலுத்தினர் என்னலாம். ரோமாபுரியோ, போரினால் வளர்ந்தது. போரினாலேயே அதன் பெருமை விளங்கிற்று. அதன் பெருமை வளரவளர, அதன் ராஜாங்கத் தலைவர் மனத்தின் கண்ணே உலக முழுவதையும் தனது ஆதிபத்தியத்துக்குள் கொண்டுவருவதற்கே ரோமாபுரி விதிக்கப்பட்டிருக்கிறதென்றதோர் எண்ணமுண்டாயிற்று. இக்காரணஞ் சொல்லியே ஸிஸரோ (Cicero) என்னுமேதாவி ரோமாபுரிசெய்த சண்டையாவும் நியாயமானவையென்று கூறினர். நாகரிகமற்ற ஜாதியாரை வென்று அவரிடத்து ரோமாபுரி நாகரிகம் பரவச்செய்கின்றமையின் அவை தெய்வசம்மதமே என்று கூறினர். இவ்வெண்ணம் ரோமாபுரி ஜனங்களிடத்துப் பரவியது, அதனாலுண்டாய பெருந்தகைமை யானன்றோ அவரது பெருமை குன்றியபின்னரும் அவரது நாகரிகம் இறவாது நின்றது. மிலேச்சர் அவர் நகரத்துட்புகுந்தும், அதனையழிக்கமனங்கொள்ளாது அதனழகைக்கண்டு பிரமித்து நின்றனர். ஆதலின் பூர்வீக சரித்திரத்தில் நாகரிகம் பெற்றஜாதியார் தமது நாகரிகம் பரவுவதற்கேதுவாயிருந்தமையின் போர் நியாயமானதே என்றெண்ணங் கொண்டிருந்தனர்.

இனி, இடைக்காலத்து சரித்திரத்தை ஆராய்வோம். அக்காலத்துக் கொள்கை யென்னென்றதனை யாம் இங்குப்பகர்வாம். அக்காலமுழுவதிலும் இதே கொள்கை மாறுபாடின்றியிருந்த தென்பது தவறு. மற்றென்னை? அக்காலத்திருந்த கொள்கைகளெல்லாவற்றினூடே மணிகளை யெல்லாம் கோர்த்து மாலையாக்கும் கயிறுபோன்று ஊடேசெல்லும் கருத்தினை இங்குப் பணிப்பாம். பூர்வீககாலக் கொள்கையென்? யாம் கூறியது இனியாம் விரிக்கப் புகும் கொள்கையாவதன் முன்னர் அநேக மாறுபாடுகளடைந்தது. அவையெல்லாம் ஆராய எமக்கிங்கு அவகாசமில்லை. எப்பொழுதும் பனியால் மூடப்பட்ட சமுத்திரங்களையுடைய இவ்வுலகத்தின் வடபாகத்திலே ஒன்றி னொன்று ஒன்றிரண்டு தூரத்துக்கப்பால் இரண்டு பனிமலைகள் காணப்பட, அவை வெவ்வேறென்றெண்ணி மாலுமிகள் அவைகளினூடே கப்பலைச்செலுத்திக் கொண்டேக அடியிலே கப்பல்களையுடைக்கக்கூடிய உறுதிகொண்ட பலகைபோன்ற பனிக்கட்டி இரண்டுமலைகளையும் பிணைத்துக் கொண்டிருக்கிறதைக் கண்டிருப்பதாக யாம் படித்திருக்கின்றோம். அவ்வாறே, ஆங்காங்கு முக்கியமானவை என்று கொள்கை சில எமக்குப் புலப்படினும், ஆராயுமிடத்து அவை பல்குதன் முறை காணலாம்.

இனிஇடைக்காலம் எவ்வாறுளது? ரோமாபுரி மகுடம் ஒரு மிலேச்சன் சிரசின்மீதுளது ரோமபுரிநாகரீகம் அழியாது நின்றதுஎன்றாலும்மிலேச்சநாகரீகம் அதனுடன் தாராளமாய்க்கலந்து உலகம்யாவற்றிற்கும் ஒரே தலைவன் இருத்தல் தக்கது என்ற ரோமாபுரி யரசனாலுண்டாய எண்ணம் தலைத்து நின்றது; என்றாலும் ஆங்காங்கே ஒவ்வொரு தேசமும் சுயேச்சையடைய வேண்டுமென்னும் மிலேச்சஎண்ணம் தலையெடுத்தது. ஆகரோமாபுரியினின்றுப்பிறந்த

உயர்ந்த எண்ணங்கள் மிலேச்சக்கருத்துக்களுடன் கலந்தன. இவைகளின் அங்கத்தினின்றும் பிறந்த தற்காலநாகரீகம் உண்டாவதன்முன்னர் இருந்த காலமே இடைக்காலமென்னப்படும். அக்காலத்து இராஜாங்கமுறை பிராசுபாத்தியதையைப் பொருத்தது. அப்பிராசுபாத்தியதையை ஆதாரமாகவுடைய இராஜாங்கத்துக்கு அங்கமாக சிற்சிலவழக்கங்களிருந்தன. அவைகளிலொன்று சண்டையினுல் நியாயந்தீர்ப்பது. வாதஞ்செய்வோரை மல்யுத்தஞ் செய்யச்சொல்லி அவருள் வென்ற கட்சியாரே நியாயமானவரென்று கூறுங் காலமது. கடவுள் நியாயமான கட்சியார்க்குதவிசெய்வாரென்றும், ஆகலான் ஒருகட்சி வெற்றிபெறின் அக்கட்சியே நியாயமானதென்று கடவுளது தீர்ப்பென்றும் அக்காலத்தார்கொள்கை. அவ்வாறே இருதேசத்தார் போர்செய்யுமிடத்து, அப்போர்களம் அவ்விருதேசத்தார் கட்சியை விசாரிப்பதற் கோர் நியாயசபையென்றும் கடவுளே அதன் நியாயாதிபதியென்றும் அக்காலக்கொள்கை. ஒருதேசத்தார் செய்வது அவர் சேனை வலிமையானன்று அவர் அறவலிமையானென்று அக்காலத்தார் நம்பியிருந்தனர். ஆகலான் மிகஅற்பகாரணங்கள் கொண்டு அக்காலத்தரசர் போரில் தமது கட்சியினை நிலைநிறுத்தமுயன்றனர்.

இவையெல்லாம் 20 ம். நூற்றாண்டின் முதற்பாகத்துள்ள நமக்கு மிக்க அற்பக்கொள்கைகளாகத் தோற்றுகின்றன. நமதரசர் அவ்வளவெளிதாயிப் போருக்குப்புகுவதில்லை போரென்பது ஜனங்களும் ஆலோசிக்கவேண்டிய விஷயங்களுளொன்றாயிருக்கின்றது.

பூர்வீக இடைக்காலங்களைப்பற்றி யோசிக்குங்கால் அவை மிக்க நாகரிகங் குன்றியகாலமென்றும் நாம் அவரினும் மிக்க மேன்மையுடையோம் என்றும் எண்ணுகின்றோம். இது முற்றும் மெய்யென்று ஆழ்ந்து யோசிக்குமிடத்து பூர்வீககாலம் இப்பொழுதைக்கு மிக்க பழையதன்று. விலங்கின வாசனை பூர்வீககாலத்தாரிடத்து தெளிவாய்க் காணும். யாம் நமது மூதாதைகளாகிய குரங்கினத்தின் இயற்கையை முற்றும் மறந்தோமில்லை. என்னை நமது பெரியோர் ஒவ்வொருபோரில் வெல்வோரையும் நியாயமானவரென்று கூறத் துணிவதில்லை. ஒவ்வொரு போரின் நியாய அநியாயத்தை அதன் காரணங்களைக் கொண்டே ஆராய்கின்றனர். ஆயினும் 'உலகத்துக்கு நியாயாதிபதி சரித்திரமே' என்பது தற்காலகொள்கையன்றோ? அன்றியும் விரிந்த பல்குதற் கொள்கையில் மிக்க ஊக்கமுடையோர் தங்கி நிற்பன தகுந்தவையென்று கூறுவதன்பொருளென்னை? தேசத்தார் போர்புரிந்து ஜயாபசயம் பெறுவதனுல் வளரும் சரித்திரம் கடவுள் என்ற பதத்துக்குப் பதில் தற்காலத்துப் பிறந்துள. இயற்கையின் செயலென்றும் காலவகையென்றும் அதுவே தகுந்த தீர்ப்பென்றும் நமது மஹான்கள் கூறவில்லையா? இதற்கும் இடைக்காலக் கொள்கைக்கும் பேதம் மிக்கதென்று யாம் சொல்லத்துணியோம்.

இவை யாவும் அவ்வக்கால ஜனங்கள் மனத்தே தெளிவாய்ப் பதிந்து கிடந்ததன்று; நூலாசிரியர்களான் துணிவுடன் வகுக்கப்பட்டதுமன்று. பூர்



வீககால, இடைக்கால தற்கால கருத்துக்களென யாம் கூறியவை சிறிது சிறிதாக வளர்ந்தும் பிரகாசித்தும் பின்னர்க் காந்தி குன்றியும் இவ்வாறு மாறுதலடைந்துகொண்டேயிருந்தன. ஒரு அழகிய பிரகிருதிக் காட்சி (Land scape) யினைச் சித்திரத்தில் வரைய எண்ணுவோன்தான் எழுது முன்னர் அக்காட்சி மாறுவதனைக்கண்டு சிறிது மயங்கிப் பின் தன் மனத்து ஆழ்ந்துபதிந்த கருத்தினை வரைவதுபோல யாமும் சரித்திரப்போக்கினை ஆராய்ந்து அதன் கண்ணேயாம் தெளிவாய் அறியக்கூடியவாறுள கருத்துக்களைத் தொகுத்து ஒருவாறு கூறினோம்.

இவைபோலாது சிற்சில காரணங்கள் தெளிவாய் எடுத்துக் காட்டி நூலாசிரியர் போரின் பக்கமாக கட்சிபேசியிருக்கின்றனர். 19 ம். நூற்றாண்டின் சரித்திரம் உலகசரித்திரத்தில் மிகப்பிரதானமானது. சாஸ்திரங்களில் இதற்கு முன் எக்காலத்துமில்லாதவாறு புதிய புதிய விஷயங்கள் வெகு துரிதமாகக்கண்டுபிடிக்கப்பட்டன. இராஜாங்கவிஷயங்களிலும் வெகுமுக்கியமான மாறுபாடுகள் ஏற்பட்டன. இந்த நூற்றாண்டின் ஆதியில் மனிதருக்குள் உள்ள பேதத்தை வேரறுக்க பிராஞ்சுக்காரர் போர்புரிந்துகொண்டிருந்தனர். இப்போரின் பயன் முக்கியமாக 19 ம். நூற்றாண்டின் மத்தியிலேயே உலகத்தில் உண்டாயிற்று. அப்போரின் பயனாக தேசாபிமானமென்னும் வித்து விளைந்து பெருமரங்கள் முளைத்தன. கிரேக்கர் தம்சுயேச்சை யடைந்தனர், ஜெர்மானிய இத்தாலியதேசங்கள் பிறந்தன. இவையெல்லாம் போரினாலேயே முடிவுபெற்றன. ஆகலின் நூலாசிரியர்போரின் மகிமையை எடுத்தோதவாரம்பித்தனர். ஆங்கிலக்கவிசிரேஷ்டருளொருவரான டென்னிஸன் (Tennyson) என்பார் 1855 ம். வருஷத்தில் எழுதிய மாட் (Maud என்னும் பாட்டில் போரின்மையின் தீங்குகளை விரித்து போரின் புகழை எடுத்துரைத்தார். Von Moltke என்பார் தேசாபிமானத்துக்கு தம்முயிரை மனிதரிழக்க ஞானவிருத்தி போதாதெனக்கூறினர். பௌருஷத்துக்கும் பரநன்மைக்காக தன்சுகத்தை யிழப்பதற்கும் போர் இன்றியமையாததென்று நூலாசிரியர் மிக்க துணிவுடன் கூறினர். மற்றும் போர்முற்றும் இறக்கும் என்பது கனவு அஃது அழகிய கனவன்றென்றும் அநேகர் கூறினர். இவ்வெண்ணங்களெல்லாம் அநேகமாகஅழிந்துவிட்டன. போர் உலகத்திலேகடவுள் ஏற்படுத்திய விஷயங்களுள் ஒன்றென்னும் எண்ணம் நம்மனத்து அருவருப்புண்டாக்குகின்றது. போரின் இறுதி கிட்டியது என நம்பிக்கை நம்மிடத்து மிகுந்திருக்கின்றது. என்றாலும் இவ்வாக்கியம் எழுதுங்கால் எமது கை நடுங்குகின்றது. இது காறும் உலகத்து நடந்த போரெல்லாவற்றினும் மானிடஇரத்தச் செலவில் மிஞ்சியருஷியஜப்பானிய யுத்தம் அன்றியும் யுத்தம் நடவாவிடினும் உலகத்துள்ள தேசத்தார் யாவரும் சண்டைக்கு முற்றும் ஆயத்தமாயன்றோ போரின்மையைத் தேடுகின்றனர்! ஜர்மனி, இடாலி, பிரான்ஸ், ஆஸ்திரியா, ருஷியா ஆகிய இவ்வைந்து தேசங்கள் மட்டுமே குறைந்தது 120 லட்சம் ஜனங்களைப் போருக்கு

ஆயத்தமாகக்கொண்டிருக்கின்றன. இவ்வாறு ஆயத்தமாகவேண்டியதனுல் கிரீஸின் கடன் அசாத்தியமாய்விட்டது. மற்ற தேசங்களும் மிக வருத்தப் படுகின்றன. இதனுல் உண்டாகும் தீங்குகள் கணக்கற்றவை அவையெல்லாம் வேறோரமயம் வாய்த்தவிடத்துக் கூறுவாம். நாகரிகம் மிகுந்த ஐரோப்பியதே சங்களில் இந்நிலையில் மிக்க வெறுப்புண்டாயிருக்கிறது. ஹேக்(Hague)என்னும் நகரத்துண்டாகிய சங்கத்தில் இவ்விஷயத்தைப்பற்றி விசாரணை நடந்தது போரி னுலேயே பௌருஷம் உண்டாகும் என்பது மெய்யன்று. நம்மிந்தியாவின் விமோசனகாலம் வந்துவிட்டது. போரின்மையினுல் நம் தேசாபிமானத்தின் அாண்டுதலுக்கு நாம் பின்வாங்கமாட்டோம். அடிக்கடி ஒருவரை யொருவர் கொலைசெய்வதினுலேயே ஆண்மை வளருமென்பதை யாம் ஒருக்காலும் நம்ப மாட்டோம்.

(இன்னும் வரும்.)

N. ராகவாசாரி, B. A.

# பார்வதி சோபனம்.

(166-வது பக்கத் தொடர்ச்சி.)

22. சிர்க்ககாலபிறமைதன்னை தினந்தோரும் சிரவணத்தால்
போக்கிவிடு-மென்றுசொல்லுவர்
23. மனனத்தைப் பண்ணியே வஸ்துவாக நீ யிருந்தால்
இருதயத் தர்தி அற்றுபோமென்பர்
24. நிதித்யாஸனந்தன்னிலே நிர்விகாரியாயிருந்தால்
இரண்டுமொன்ருய் காணலாமென்பர்
25. பெருமையுடனேகூடி பூததயவுபண்ணிவந்தால்
(பரி) பூர்ணவடி வாகலாமென்பர்
26. காலமென்றும் தேசமென்றும் கலங்காதே யிரு என்பர்
கற்றுணர்ந்து உற்றுப்பாரென்பர்.
27. அருமையான ஆத்மக்யானம் அறவுமெளிதாகிவிடும்
அறிந்துவிட்ட பின்பாகவென்பர்
28. தர்ப்பணத்து பிரதிபிம்பம் போல ஜகந்தன்னென்பர்
நத்தபடம் போலபாரென்பர்
29. சொப்பனந்தானிப்பிரபஞ்சம் சுத்தப்பொய்யிதென்று தள்ளி
செப்பிடுவித்தை போல எண்ணென்பார்.
30. சமுத்திபோல சாக்கி நத்தின் சுக துக்க மிரண்டையும்
சமபுத்தியாகப் பாரென்பர்
31. மூலாதாரத்தின் வழியை மூச்சடக்கியேபிடித்து
(மூல) மூர்த்திதன்னை தியானம் பண்ணென்பர்.



32. தொன்பதத்தை தற்பதத்தை சோதித்துப்பாரென்பர்
-தோன்றுமப்போ தன்வடிவென்பர்
33. ஆதாரந்தனிலே அதிஷ்டான தேவதைகள்
ஆரிருக்கிருர் பாரென்பர்
34. சகஸ்திரதளத்தின்மேலே சக்தியுடன் சங்கரனுர்
தாமிருக்கின்ருர் பாரென்பார்
35. உற்சாகத்தோடிருக்கும் உவமையற்ற ஞானியர்க்கு
(இந்த)உண்மை வழி தோன்றிடுமென்பர்.
36. அறிவுகெட்ட அக்யானி அறிவுவந்து ஈடேற
ஆலயத்தில் ஈசனுண்டென்பர்
37. (பெரியவாள்) இருக்கின்றதே லவஸ்தலம்-தண்ணீரெல்லாம்- புண்ய
பார்த்தமெல்லாம் மூர்த்திதானென்பர். [தீர்த்தம்
38. எத்தனை தான் சொன்னுலும் எல்லாம் ஒன்றுதானென்பர்
இன்னதென்று சொல்லாதென்பர்.
39. மூன்று குணத்தாலே தோன்றுமுலகந்தன்னை
முசல் கொம்புபோலே பாரென்பர்
40. வேதமுடன் சாஸ்திரங்கள் வித்தை அறுபத்திநாலும்
கற்றும் ஜன்மம் போகாதென்பர்
41. ஐந்தெழுத்து முதலான சப்தகோடி மந்திரத்தால்
சித்தத்தின் பிரமைபோகாதென்பர்
42. விதி நிஷேதமன்னியிலே சாந்தியுடனேயிருந்தால்
(பர) வெளிதன்னைக்காணலாமென்பர்
43. இருதயமான ஆகாசத்தில் உதயமானுல் சூரியனும்
இரவு பகல் ரெண்டில்லை யென்பர்
44. ஆசையுடன் மோகமற்று அனைவரையும் ஒன்ருய்ப்பார்த்தல்
அப்போ ஜன்மம் வராதென்பர்
45. ஆசையற்ற சுகம்போல வேறு சுகமில்லையென்பர்
அனுபோகமாகப்பாரென்பார்
46. விஷயமற்ற சுகம்போல வேறே சுகமில்லையென்பர்
மெய்யோ பொய்யோ நீயே பாரென்பர்
47. மித்ரானைவிடு என்பர் பந்துக்களை ஜெயி என்பர்
வீடு மாடு அசத்தியமென்பர்
48. சத்துருவும் மித்துருவும் சமனுகப்பாரென்பர்
தரணியெல்லாம் ஒன்றுதானென்பர்
49. உத்தம பக்தர்களுக்கு குரு சொன்ன வாக்கியத்தால்
ஸ்வாநுபோகமுண்டாகியே
50. பரிபக்வசித்தரான சனகாதியோகியர்க்கு
சற்குருவின் வாக்கியத்தாலே

51. (பர) வஸ்து இன்று சொல்லிவந்த மகா போத வாக்கியத்தின்
தத்துவத்தை உற்றுக்கேட்டவாள்
52. சற்குருவின் கிருபையாலே சந்தேகங்கள் தோன்றாமல்
ததாகாரமாய் விளங்கினான்.

ஸ்ரீ பார்வதியம்மன் அவதாரம்.

இப்படியாக பரமசிவனும் தக்ஷிணாமூர்த்தமாய்த் தானிருக்க
பர்வதராஜரும் மேனகையும் பக்தியுடன்பராசக்தி தன்னை
நித்திய கலியாணிஜெகன் மாதா புத்திரியாய்வந்து முக்திதர
சித்தர்தன்னிலே ஸ்மரித்துக்கொண்டு நித்தியமாக தபஸிருந்தாள்.
ரத்னமயமான பர்வதத்தில் பொற்றாமரை ஓடைக்கரையிலே
தப்பாமல் மிக பக்தியுடன் தேவியைநோக்கி தபஸிருந்தாள்.
உத்தமமான அவர்கள் தபசை உகந்துகொண்டு மஹாதேவி
அற்புதமான ஓடையிலே ஆயிரந்தளத்தின் நடுவிலே
பூரநக்ஷத்திரந்தன்னிலே அம்மன் பெருமத்தியான வேளையிலே
நாளும் ராசி நல்லலக்னம் கூடிக்கிரகமும் பூரணமாய்
யோகந்தன்னிலே கோடிசூரியன் உதயமான காந்திபோல்
தேவிதாமரைப்பூவிலுதித்தாள் திக்கெட்டும் ஒளிவிளங்கவே
நாற்பத்தி முக்கோண சக்கரத்தில் நல்ல நாளையில் வந்து அவதரித்தாள்.
முப்பத்து முக்கோடி தேவரெல்லாம் புஷ்பமாரி சொரிந்து நின்றார்
அப்போ பர்வதர் மேனகையும் அந்தக்குழந்தை வடிவுகண்டு
சிந்தித்து நாமிப்போ செய்த தபஸுக்கு வந்து உதித்தாள் குழந்தையாக
அந்தமுமாதியும் அற்ற பராசக்தியென்றே அறிந்துகொண்டு
மெய்யாயிருந்த பரப்பிரும்மமிப்போ பொய்யான தேகமெடுத்தாளென்று
கையாலேவாரி எடுத்தணைத்துக்கொண்டு ஒய்யாரமாக வீடுதிவந்தாள்.
குந்தனநாயகியம்மனுக்கு மங்களஸ்நானமும் பண்ணிவைத்தாள்.
தங்கமயமான பீதாம்பரத்தாலே சங்கரிதேவியை சேர்த்தணைத்து
அன்புடன் ராஜாவும் அடிமடியிலமந்தகாசத்துடன் வைத்துக்கொண்டார்.

(இன்னும் வரும்.)

R. S. சுப்பலெக்ஷ்மி அம்மாள்.



# பொது வர்த்தமானங்கள்.

## குருடர்களின் தொகை.

உலகத்தில் 10 லக்ஷம் பேர்களில் 60-பேர் குருடர்களென்று கணக்கிடப் படுகிறது.

## உலகத்தில் செலவழியும் மிளகு.

வருஷந்தோறும் உலகத்தில் செலவழியும் மிளகு விலை 7,50,500 பவுனாகின்றது.

## இங்கிலீஷ் பத்திரிகைகள்.

உலகத்திலுள்ள பத்திரிகைகளில் 10,068 இங்கிலீஷ் பாஷையில் பதிப்பிக்கப்படுகின்றன.

## பிரஸ்லாவில் ஒரு குரங்குக்குக் கண்ணில் பூவிழுந்தது.

அதனை ஆஸ்பத்திரிக்கனுப்பி சொஸ்தப்படுத்தினார்கள். இப்போது அது மூக்குககண்ணாடி போட்டுக்கொண்டு உலாவிக்கொண்டு வருகிறதாம்.

## ராஜகுமாரி பத்மாங்கனி.

மௌர்பஞ்ச் மகாராஜாவின் 9-வயதுள்ள ஒரே குமாரத்தியாகிய ராஜகுமாரி ஸ்ரீ பத்மாங்கனி இம்மாதம் 9-ம்தேதி இறந்துவிட்டனள்.

## வாந்திபேதி.

கண்டிருக்கும் ஜனங்களின் தேகமுழுவதும் நெய் அல்லது வெண்ணையை நன்றாய்த் தேய்த்து குளிர்ந்த ஜலத்தில் கால்மணிநேரம் குளிக்கச்செய்தால் உடனே நின்றுவிடுமெனத் தெரிகிறது.

## ஓர் ஜமீந்தாரிணியின் தேசபக்தி.

நாஷனல் கல்விச்சங்கம் ஸ்தாபிக்கும்பொருட்டு மைமென்ஸிங் ராணியாகிய ஸ்ரீமதி விசுவேசுவரி தேவி ஒரு லக்ஷம் ரூபாய் கொடுத்தனள். இச்செய்கை பாரிஸால் கான்பெரன்ஸில் வியந்து பேசப்பட்டது.

## தலைநோய்க்கு மருந்து.

பலஹீனத்தினாலுண்டாகும் தலைவலியைப்போக்கஓர் கைகண்ட மருந்து பேர்போன வைத்தியரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது 10-நிமிஷம்வரை பாதத்தின் விரல்நுனியை முதல் நிலத்திலூன்றிப் பின் குதிகாலைவைத்து மெதுவாக பின்புறம் நடப்பதே.

## நிஜாம் அரசரின் மகனுக்கு விவாகம்.

ஹைதராபாத் நிஜாம் அரசருடைய பட்டத்துக் குமாரராகிய மீர் அஸ்மான் அலிகான் பஹதூருக்கு விவாகம் சமீபத்திலே நடத்தப்பெறும். மீர் அஸ்மானுக்கு இப்போது 20-வயதாயிருப்பதாக அறிகிறோம். விவாகத்திற்கு எத்தனை கன்னிகைகள் நிர்மாணம் செய்திருக்கிறார்களோ தெரியவில்லை!

---

## அதிகபோஜனமும் புத்திக்கு வேலையின்மையும்.

மனிதனுயிரை கம்மிசெய்யுமெனவும், வர்த்தகர்கள் இவ்விதம் அதிக போஜனம் செய்வதாலும் யோசனைசெய்யவேண்டிய விஷயங்களில்லாதிருந்தலாலும் 60-வயதிற்கதிகமாக ஜீவிப்பது அரிதெனவும், தர்க்கம், சயன்ஸ் சட்டம் இதுகளில் உழைப்பவர்கள் வெகுகாலம் இருப்பார்களெனவும் லான்ஸெட் என்னும் மெடிகல் சஞ்சிகை கூறுகின்றது.

---

## சிரிப்பைப்பற்றி ஓர் பத்திரிகையின் அபிப்பிராயம்.

லண்டனில் பிரசுரிக்கப்பட்டு வரும் பத்திரிகை யொன்று மனுஷர்கள் பலமாகச் சிரிப்பது நன்மையை விளைவிக்குமென்றுணர்ந்தால் சிரிப்பையே அதிகமாகப் பாராட்டுவார்கள் என்று சொல்லுகின்றது. இதுவே சில வைத்தியர்களுடைய கருத்தாகவுமிருக்கிறது. ஒரு மனிதன் பலமாகச் சிரிப்பதனால் பசியுண்டாகும்; தின்கிற சாப்பாடு ஜரித்து நல்லரத்தம் உண்டாகும்; இருதயமும், நுரை ஈரலும் பலப்படுவதற்கு சிரிப்பே அவசியம் வேண்டுமென்கிற கருத்தினால் அவ்விதம் அபிப்பிராயங் கொள்ளப்படுகிறது. நன்றாய் ஆராய்ந்து பார்க்குமிடத்தில் சிரிப்பானது அஜீர்ணம் முதலியவற்றை அதிரச்செய்து பசியை யுண்டாக்குகிறதல்லவா. இது யாவருக்குந் தெரிந்தவிஷயந்தானே.

---

## மாதர்களின் டிரேயினிங் காலேஜ்.

பெங்காளத்திலிருந்து பி. ஏ. (B. A.) பரீக்ஷை தேறிய இரண்டு மாதர்களை இங்கிலண்டுக்கனுப்பி அங்கே உபாத்திமைத் தொழில் பயின்று வரும்படி செய்யவேண்டுமென்று பெங்காள கவர்ன்மெண்டார் நிச்சயித்திருக்கிறார்கள். வருஷமொன்று 150 பவுன் வீதம் இம்மாதர்களில் ஒவ்வொருத்திக்கும் செலவுக்குக் கொடுப்பார்கள். தகுதியானபடி மாதர்களைத் தெரிந்தெடுக்கவேண்டிய கடமை ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ரஸைப் பொறுத்தது. ஹிந்துக்கள் அல்லது மகமதியர்களுக்குள்ளே எந்த மாதேனும் போகும்பக்ஷத்தில் அவர்களுக்கே மேற்படி ஸ்காலர்ஷிப் தருவார்கள். அவர்கள் கிடையாத விஷயத்தில் பிரமஸமாஜ ஸ்திரீகள், அல்லது கிறிஸ்தவ ஸ்திரீகளிலே யாருக்கேனும் அந்த ஸ்காலர்ஷிப் கொடுபெறுவதாகும்.

---

## திருவாங்கூர் மகாராணிகள்.

சென்ற மாதம் திருவனந்தபுரத்திலிருந்து ஒருவர் சுதேசமித்திரன் பத்திரிகையிலே எழுதுகிறார்:—சுமார் இரண்டு வாரங்களுக்கு முன் இந்நகரிலிருந்து மஹாராணிகள் தங்களுடைய ஜன்மதேசமாகிய மாவேலிக்கரைக்குச் சென்று அங்குள்ள தமது குலதெய்வங்களைச் சேவித்துவிட்டு நேற்றுக்காலையில் இவ்விடத்திற்குவந்து சேர்ந்தார்கள். 5, 6 வருஷங்களுக்கு முன்பு இந்தஸமஸ்தானத்தின் சந்தான பீஜங்களாக இந்த குழந்தைகள் ஸ்வீகாரம் செய்யப்பட்டார்கள். அது முதல் நாளது வரையில் இந்த ராணிகள் தங்கள் ஜன்மதேசத்திற்குப் போகவில்லை. சமீபத்தில் பெரிய மஹாராணிக்கு விவாஹம் நடக்கப் போகிறபடியால், அதற்குமுன் தங்கள் ஜன்ம பூமியிலிருக்கின்ற சகல தெய்வங்களையும் பிரார்த்தனை புரிந்து வரவேண்டுமென்றகருத்து பூண்டு இப்பொழுது யாத்திரைசெய்து வந்தார்கள். இவர்களின் போஷகராகிய கனந்தங்கிய வலியகோயில் தம்பிரானவர்கள் கூடவேபோய்வந்தார்கள். சுமார் 200-பரிஜனங்களும் கூடப்போய் வந்தார்கள். இந்த யாத்திரையில் ஓர் விசேஷமிருக்கின்றது. இங்கிருந்து புறப்பட்டது முதல் திரும்ப வந்துசேரும் வரையில் மேளவாத்திய கோஷம் யாத்திரையில் இடைவிடாமல் நடைபெற்றது. இவர்கள் தங்கிய ஸ்தலங்களிலுள்ள சத்திரங்கள் முழுதிலும் விசேஷமான விருந்து அளிக்கப்பட்டது. இந்த ஏற்பாடுகளெல்லாம் சாதாரண யாத்திரைகளிலும் முன்காலங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வந்தனபோலும்.



---

## ஸதி தகனம்.

பஞ்சாபிலுள்ள மாரிபூர் என்ற ஊரிலே சென்ற வருஷம் அக்டோபர் மாதம் 30-ந்தேதி யன்று ஓர் ஸதி தகனம் நடைபெற்றது. அதன் சம்பந்தமான கேஸ் இப்போது லாகோர் சீப் கோர்ட்டிலே நடைபெறுகிறது. இது இறந்த ஸதியினுடைய பந்துக்களிற் சிலராலும் வேறு இரண்டு கிராமாதிகாரிகளாலும் கொண்டு வரப்பட்ட அப்பீலாகும். இந்த அப்பீல் வாதிகள் டெல்லி ஸெஷன் ஜட்ஜினால் பல வருஷங்களுக்கு கடுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்றார்கள். அதன் பேரிலேயே சீப் கோர்ட்டிற்கு அப்பீல் கொணர்ந்திருக்கிறார்கள். மேற்படி ஸதி தகனமானது "பாயா" தினம் என்றதோர் விசேஷதினத்தன்று நடைபெற்றது. அப்போது பெருங்கூட்டமான ஜனங்கள் வந்திருந்தார்கள்.

ஸதியின்பெயர் மூஸம்மத்நாராயணி. இவள் யமுனா நதியிலே ஸ்நானம் செய்துவிட்டு மேற்படி லம்பர்தார் (கிராமாதிகாரி)களால் கொடுக்கப்பட்ட ஓர் சிறுஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தாள். வறட்டிகள் அங்கே தயார்செய்து வைக்கப்பட்டிருந்தன. அவள் முகத்திலே லம்பர்தார்களால் கொடுக்கப்பட்ட துணியொன்றைக் கொண்டு மூடினதின்பேரில் அவளது கழுத்துவரை வறட்டிகளை அடுக்கி நெருப்பைக்கொளுத்திவிட்டு, அந்நெருப்பிலே மூட்டப்பட்டுக்கொண்ட மகாபாதகமிருகஜனங்கள் எண்ணெய் நெய்முதலியவற்றைக்கொண்டுசொரிந்தார்கள். மத்தளங்களடித்தும், ராம், ராம் என்று கூக்குரலிட்டும், அவளது அழுகைக் குரல் வெளியிலே கேளாதபடி தடுத்துவிட, நாராயணி சிறிது நேரத்திற்கெல்லாம் சாம்பராகிவிட்டாள். இப்போது அந்த லம்பர்தார்கள் தாம் ஏதோ சாமானியமாக நினைத்து உதவிகள் செய்ததாகவும், அந்த ஸ்தலத்திற்கு வருமளவும் ஸதிதகனம் நடக்குமென்பது தமக்குத் தெரியாதெனவும், வாத பிறகுதாம் எவ்

வளவோ தடுத்துக் கூறியும் பயன்படவில்லை யெனவும் அப்பீலிலே சொல்லு கிறார்கள். பந்து மிருகங்கள் என்ன பொய்கொண்டு வாதிருக்கின்றனவோ அறி யோம். கோர்ட்டார் இன்னும் தீர்ப்புச்சொல்லி முடிக்காமல் தள்ளி வைத்திருக் கிறார்கள். 20 வயது.கன்னிகையை ஆவலுடன் கொளுத்திப் பார்த்துவிட்டுத் தமது நீச உயிர்களுக்குக் கஷ்டம் வரும்போது பொய்போலமிடுகின்ற இந்த ஈனர்களை கோர்ட்டார் இலேசாக விடமாட்டார்களென்று நம்புகிறோம்.

## CHAKRAVARTINI.

### A TAMIL MAGAZINE.

—(:o:)—

"The Indian Patriot says:—"Chakravartini," a Tamil Magazine edited by Mr. Subrahmania Bharati, Sub-Editor of the Swadesamitran is, as its name indicates, a high class monthly for Hindu ladies. The contributions are on a variety of interesting subjects, by competent men, several of whom are graduates and are written in easy, flowing Tamil. The get up of the Magazine leaves nothing to be desired and the annual Subscription is fixed at the exceedingly moderate rate of two Rupees. From the manner in which it is being conducted, there is no doubt the 'Chakravartini' deserves the support of our educated Tamil speking countrymen."

The *Hindu* says:—"CHAKRAVARTINI." As described in its title page, this is Tamil monthly magazine, devoted entirely to female education and to the elevation of our women in general. With this sole object in view, such subjects are chosen as tend to elucidate to our women their duties towards their husbands and superiors, their inferiors, and their equals in Society. They are written in such an easy style, as any woman of ordinary ability can read and understand them. This was started some three months ago. The last two issues contain some interesting stories and ideas which are both pleasing and instructive.

The current number contains among many interesting subjects one which is well-worth reading viz, "an exemplary lady of the Punjab" written by the Editor, describing the character of an ideal Hindu wife.

THE EDUCATIONAL REVIEW.
September, 1905.

CHAKRAVARTINI : A TAMIL MONTHLY EDITED BY C. SUBRAMANIA BHARATI.
Rs. 2 YEARLY, OR 3 AS. PER ISSUE.

To judge by the first number which has been kindly sent to us, we should think that the editor has placed a good ideal before him and we are sure that if he keeps up to the high, level, the journal will be greatly appreciated. The "Indian Social Reformer."

பம்பாயில் பிரசுரமாகும் "இந்தியன் ஸோஷல் ரிபார்மர்" சொல்லுகிறது: சக்ரவர்த்தினிப் பத்திரிகையின் தோற்றமானது இக்காலத்தினது நல்லடையாளங்களில் ஒன்று.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
ழெண்மை புறவேர்க்கும் முலகு."

Vol. 1. } Madras. April. 1906. { No. 9.
தொகுதி. 1. } சென்னை 1906-ம் வருஷம் ஏப்ரல்-மீ { பகுதி. 9.

## ஸ்வாமி விவேகாநந்தர்.

—:o:—

தமது சற்குருவாகிய ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சமாதியிலே யடைந்தவுடனே விவேகாநந்தரும் மற்றுமுள்ள சீடர்களும் "ஸ்ரீராமகிருஷ்ணனைத்தரின் பத்ததி" (Shree Ramakrishna's mission) என ஒன்று ஏற்பாடுசெய்துகொண்டு ஊரூராகச்சென்று ஜனங்களுக்கு ஞானமார்க்க போதனை செய்துவந்தார்கள். இந்தச்சீடர்கள் இருபதுபேரிலே நமதுவிவேகாநந்தரே தலைவராகி விளங்கினர். விவேகாநந்தர் வட இந்தியாவில் பல இடங்களில் யாத்திரைபுரிந்து ஹிமயமலைக்குச்சென்று அங்கே 6 வருஷகாலம் வாசம் புரிந்தார். மேற்படி 6 வருஷமும் இவர் சரீரசுகங்களெவற்றையும் கவனியாமல் ஞானவாழ்க்கையே சிறப்புற்றதென எண்ணி வாழ்ந்தனர். இதற்கப்பால் லோகோபகாரம் செய்யவேண்டுமென்ற திருவருள் இவருக்குண்டாய்விட்டது. 'இந்தியா தேசத்திலே ஆண்களெல்லாம் பெண்பிள்ளைகளைப்போலாகி சரீரபலம், மனோபலம், ஞானபலம், என்ற மூன்றுமில்லாது அற்பவாழ்க்கை வாழ்கிறார்கள். மஹா புண்ணிய பூமியாகிய பாரதநாட்டை இப்படி விட்டுவிட்டு நாம் கண்ணை மூடிக்கொண்டிருப்பது நியாயமன்று" என்று விவேகாநந்தர் கருதிவிட்டார். அதன்பேரில் ஹிமயமலைச்சாரல்களிலிருந்தும், இந்த மகரிஷி இறங்கிவந்து, தென்முகமாக யாத்திரைபுரிந்து ராஜபுதனத்தை அடைந்தார். ராஜபுதனத்திலே கேத்ரி ராஜா இவரது சீடராயினர். அங்கிருந்து பம்பாய், புனா, ஹைதராபாத், முதலிய இடங்களைச் சுற்றிப்பார்த்துவிட்டு நமது சென்னைமாகாணத்தைப் புனிதம் செய்யவேண்டுமென்று திருவுளம் பற்றினர். இங்கே கன்னியாகுமரி புதுச்சேரி, முதலிய பல இடங்களில் சுற்றிவிட்டுச் சென்னைநகரத்திற்கு வந்து சேர்ந்தார். அப்போது அமெரிகாகண்டத்திலேயுள்ள

சிகாகோ (Chicago) நகரில் "சர்வ சமயப்பிரதிநிதி ஸமாஜம்", ஒன்று ஏற்படுத்தி அதிலே உலகத்திலுள்ள எல்லா மார்க்கங்களின் பெருமைகளைப்பற்றி அவ்வம்மார்க்கத்தைச் சேர்ந்த பிரபல பண்டிதர்களைக் கொண்டு உபந்நியாசம் செய்யச்சொல்லிக் கேட்கவேண்டுமென்பதாக ஓர் ஏற்பாடு நடந்துவந்தது. அதற்கு யாரை அனுப்பலாமென்று சென்னை நகரத்தார் ஆலோசனை செய்துகொண்டிருந்த காலத்திலே விவேகாநந்தரும் இங்கு வந்திருந்தார். ஹிந்துமத உபதேசகர்களுக்குள்ளே இவர்போன்ற சாமர்த்தியமுடையோர்களைச் சென்னைவாசிகள் எப்போதும் பார்த்ததே கிடையாது. அதன்பேரில், இவரையே அனுப்பவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. இவரிடம் மிகுந்த அன்பும், பக்தியும் மேலிட்டவர்களாகி சென்னையிலே பல மாணாக்கர்களும், மற்றும் முக்கியப் பிரபுக்களும் வேண்டிய அளவு பணம் சேகரித்துக்கொடுத்து விவேகாநந்தரை அமெரிகாவுக்கு அனுப்பினார்கள்.

### சர்வசமயப் பிரதிநிதி ஸமாஜம்.

### (Parliament of Religions.)

அமெரிகாவுக்கு ஸ்வாமிகள் போகும்போதே ஜப்பான் மார்க்கமாகச் சென்றார். அமெரிகாவிலே இவரை கண்டவுடன் எல்லோரும் மயங்கினார்கள். புருஷசிங்கமாகிய விவேகாநந்தர் தமது தலையிலே பாகைதரித்து, கையிலே தண்டமேந்தி, ஞானகாந்தி வீசும் முகத்துடன் நிற்பதைப்பார்த்தால் கல்லாலடித்த சிலைகள்கூட அவருடைய திருவடியில் விழுந்து வணங்குமல்லவா? கீழ்த்தேசத்திலிருந்து வந்த குருக்களெல்லோரைக் காட்டிலும் விவேகாநந்தரிடத்திலே தான் அமெரிக ஜனங்களுக்கு உடனே பாசமேற்பட்டுவிட்டது. புத்தமார்க்கஸ்தர், மகமதிய மார்க்கஸ்தர், ஜெயின மார்க்கஸ்தர், ஷின்டோ மார்க்கஸ்தர், கன்பூஷியஸ் மார்க்கஸ்தர் முதலிய எத்தனையோபேர்கள் வந்திருந்தார்கள். ஆனால் இரும்புத்துண்டுகளைக் காந்தமொன்றே இழுப்பதுபோல, விவேகாநந்தர் ஒருவரே சங்கத்திலுள்ள ஆண் பெண்ணனைவோர்களின் கண்ணுக்கும் கருத்துக்கும் பேரிலக்காகி விளங்கினார். அவர் சர்வசமய சமாஜத்தின் முன்பாகச்செய்த முதல் பிரசங்கத்தைக் கேட்டவுடனே அந்த ஜனங்களுக்கேற்பட்ட மனோற்சாகத்தை அளந்து கூறமுடியாது. இவரை மிகுந்த ஆவலுடன் வரவேற்றதற்காக சபையாருக்கு நன்றி கூறப்புகுந்த ஸ்வாமிகள் அப்பொழுதே ஹிந்துமார்க்கத்தின் பெருமைகளனைத்தையும் தேன் மாரி சொரிவதுபோல் கேட்போர் செவியும் மனமும் குளிரும் வண்ணம் சொரிந்துவிட்டார். இங்கிலீஷ்பாஷை பேசும் திறமையை மட்டும் எடுத்துக்கொண்டபோதிலும் இவருக்கு சமானமானவர்கள் அந்த சங்கத்தில் மிகச் சிலரே யிருந்தனர். எங்கேபார்த்தாலும், கல்விகற்ற ஜனங்களெல்லாம்விவேகாநந்தரைப்பற்றிப் பேசத்தொடங்கிவிட்டார்-



கள். பத்திரிகைகளெல்லாம் அவரது புகழைப்பற்றியே முழக்கம் புரிந்தன. கல்வி முதிர்ச்சியும் அறிவுமுதிர்ச்சியும் பெற்ற எத்தனையோ ஆண்களும் பெண்களும் ஸ்வாமியின் தொண்டரானார்கள். அரசனைப் பற்றிச் செல்லும் குடிகளைப்போல இவர்போன இடமெல்லாம் ஜனங்கள்கூடவே போனார்கள். இடைவிடாமல் ஜனங்களுக்கு உபந்நியாசம் செய்வதும், போதனை புரிவதும், கடிதங்களெழுதுவதும் என இந்த வேலைகளை சதாகாலமும் செய்துகொண்டிருந்த சிரமத்தை இவருடைய சரீரம் எப்படித் தாங்கிற்றோ தெரியவில்லை. ஆனால் மனுஷ்யவர்க்கத்தினிடத்திலே வரம்பில்லாத பிரேமையும், மஹா தீரத்துவமும்கொண்ட விவேகாநந்தர் சொந்த சுகபோகாதிகளை வெறுத்துத்தள்ளிக் கடமையைச் செய்யவேண்டுமென்ற சநாதன தர்மத்தைக் கைக்கொண்டவரல்லவா?

முதல்வருஷ முடிவிற்குள்ளாகவே இவருக்கு முக்கியத் தொண்டராக இருவர் ஏற்பட்டிருந்தார்கள். ஒருவர் பெயர் கிருபாநந்தர். இவர் நியூயார்க் நகரத்திலே முக்கியமான பத்திரிகையொன்றில் சம்பந்தப்பட்டிருந்தார். ஸ்வாமி அபயாநந்தர் என்று பெயர் வைத்துக்கொண்டு வேறோர் பிரென்ச் பெண்மணியும் ஸ்வாமியின் திருவடி நிழலைத் துணையாகப்பற்றினள்.

(இன்னும் வரும்,) பத்திராதிபர்.

---

# THE HOME AS IT SHOULD BE.

# குடும்பம் இருக்கவேண்டிய நிலைமை.

### 2-ம் அத்தியாயம்.

## குடும்பத் தலைவன்.

தந்தையே ஒரு குடும்பத்துக்குத் தலைவனாயும் அதில் நடக்கும் விஷயங்களுக்கு உத்தரவாதியாயும் இருக்கிறான்; இவன் எவ்வண்ணம் தன் குமாரர்களைப் பழக்கி வழிப்படுத்துகிறானோ, அவ்வண்ணமே அவர்கள் முன்னுக்கு வருவார்கள்; இக்குமாரர்கள் நடக்கும் நடத்தையினாலேயே அவர் தேசம் முன்னுக்கு வருதலோ பின்னிடைதலோ ஆகும்.

தந்தையே தன் குமாரர்களுக்கு உற்ற துணைவன். இவன் அவர்களுக்கு எல்லா புருஷ லக்ஷணங்களையும் கற்பிக்கிறான்; குற்றங்களைக் கண்டால் தண்டிக்கிறான்; நல்லெண்ணங்களையும் நடத்தையையும்கண்டால் இவைகளில் இவர்களை யிறக்கித் தூண்டிவிடுகிறான். இத் தந்தையின் நன்மொழிகளாலும்,

நடத்தையாலும், மானம், முயற்சி, தைரியம் முதலியவைகளைப் புதல்வர்கள் அறிகிறார்கள்; ஒரு தகப்பனோ, தன் இளமையைக் குறித்த கதைகளையும் தான் அன்போடு பாவித்துவரும் விஷயங்களையும், ஒருவிதக் கதையாய் இனிதிற் புனைந்து இளைஞர்க்குப் புகல்வன்; நல்ல சுகந்தமுள்ளனவும், பசும்புற்றரையும் கண்ணிற்கினிய பூக்களும் நிறைந்தனவுமான தோட்டங்களையும், நேத்திரானந்தமாய் மனத்தைக் கவரும் வனப்பினையுடைய சிற்றாறுகளையும் செவ்வனம் காட்டி இளைஞர் கேட்ட கேள்விகளுக்கு இன்புற மறுமொழி புகல்வன்; வெளியே அழைத்துச்சென்று புதல்வர்கள் ஆநந்தமாய் விளையாடவும் தானும் அவர்களோடு சேர்ந்து பந்து, புள், குதிரைச்சவாரி நேர்ப்பித்தலும், வண்டிச் சவாரிபோதலும், நீந்தலும், பாடலும், படித்தலும், இனிமையுடைத்தென்று அளப்பரிய ஆநந்தம் கொள்வன். இளங்குழந்தைகள் மழலைச்சொற்கேட்டு அமிழ்தினும் ஆற்ற இனிதேயென மகிழ்வடைவன். இப்பிள்ளைகட்கு ஓரோர்கால் கல்விபயிற்றுபவனும் தந்தையே. பாடசாலைகளிலே கல்விகற்றனரேனும், தந்தையே பிள்ளைகளைப் பரீக்ஷித்துப் படிப்பின் விருத்தியைத் தெரிவோன். "தந்தை மகற்காற்று உதவி அவையத்து, முந்தி இருப்பச் செயல்" என்பதை நற்றந்தை எந்நாளும் மறவான்.

இவ்வாறு உற்றதுணைவனாய் உள்ள நற்றந்தையிடத்துப் புதல்வர்கள் இனிமையின் பழகித் தங்கள் உலகவியாபகவிருத்தி முதலியவைகளையும் தந்தையின் எண்ணப்படி செய்து முந்தவிருப்பர். 'இளங்கன்று பயமறியாது' என்ற மூதுரையின்படி உலக விவகாரங்களில் சூட்சிதெரியா இளைஞர்க்குத் தந்தை தன் அநுபவஞானத்தைச் செலுத்திப் பல இடுக்கண்களை நீக்கவல்லான்.

இவ்வுலகில் நற்றந்தைகள் வாய்ப்பது எவ்வளவு மேன்மையுடைத்தென்று அறியாதார் எவருமில்லை. அந் நற்றந்தையின் புத்திமதிகளைக்கேளாது கெட்டவரும் அநேகர் உளர். நாம் ஊன்றி ஆராய்ச்சி செய்யின் இது நன்கு விளங்கும். ஒருவன் தனக்குவாய்த்த காலங்களில் தன் புதல்வனுக்குக் கல்விகற்பித்து அவன் சான்றோனெனப் பலரும்சொல்ல மனம் குதூகலிப்பான்; மற்றொருவன் தன்மகனுக்கு இளமையிலிருந்து தண்டமிழ்மொழியைக் கற்பிக்க அவன் சிறந்த நாவலனாய் விளங்குவதைக்கண்டு செப்புதற்கரிய பேராநந்தம் கொள்வான்; மற்றொரு தந்தையோ, தன் புதல்வனை நன்னெறியிற்பழக்கி 'கடமைமுந்தி, இன்பம்பிந்தி' என நேர்ப்பித்த கட்டளையின்படி அவன் உலகத்தார்வியக்க நடக்கும் சதுரைக்கண்டு மனம் களிகூர்வன். உதாரணங்கள் எத்தனையோ சொல்லலாம். 'மகன்றந்தைக் காற்றுமுதவி, யிவன்றந்தை, யென்னோற்றான் கொல்லெனும் சொல்' எனப் புதல்வர்கள் இளமைமுதல் நன்னெறியிற் பழகித் தம் தந்தைதாயரோடு இனிமையின் ஒழுகிச்சிறந்த அன்புடையவராய் இருத்தல்வேண்டும்.

நற்றகப்பனோ தன் பெண்களைக்குறித்து மிக்க அக்கரைஉள்ளவனாக இருப்பான். பெண்களோ தந்தைதாயர்களால் செல்வமாய் வளர்க்கப்பட்டுத் தந்தையிடத்தில் கல்விகற்றும், தாயிடத்தே தாம் அறியவேண்டிய வீட்டுப் பணிகளையும், கோலம் இடுதலையும், துணிதைத்தலையும், சித்திரம் தீட்டலையும், பாடக்கற்றலையும், பொழுதுபோக்கு விளையாடல்களையும் அறிந்து தந்தைதாயர்களுக்கு இன்பமுற நடப்பார். எத்தந்தைக்கும், தன் மக்கள் சீர்சிறப்பொடு விருத்திக்கு வரவேண்டுமென்ற எண்ணம் எப்பொழுதும் நெஞ்சில் அகலாது குடிகொண்டிருக்கும்.



நற்றந்தையோ, தனது இனிமைக்குணத்தாலும் அன்பாலும் மரியாதையாலும் தன் குடும்பம் மகிழ நடப்பான். அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்? இவன் தன் மனைவியிடத்துக் காட்டும் பிரேமைக்கும், மக்களிடத்து உண்டாகும் அன்புக்கும், அளவறிந்துரைத்தல் இயலுமோ? இவன் இட்டதே அனைவருக்கும் கட்டளை. இவன் செய்வதையே அனைவரும் பார்த்து நடத்தல் இயல்பு. இவன் மக்களோ, "சுடர்விளக்காயினும் தூண்டுகோலொன்று வேண்டும்," என்னும் மூதுரைக்கேற்ப தந்தையின் நன்னெறியினைக் கைப்பிடித்து விடாமுயற்சியொடு முன்னுக்குவரும் வழியை கவனிப்பார். இவ்வண்ணம் குமாரர்களும் குமாரத்திகளும்மரியாதை நெறிக்குட்பட்டுச்செய்யத்தகுந்த விஷயங்களில் கவனத்தைச் செலுத்தி தந்தைமனம் களிகூர உழைப்பார். ஏதேனும்ஒரு தொழிலில் அமர்ந்து பணிசெய்யும் தம் தந்தை தொழிற்சாலையில் அலுவலை முடித்து வீட்டுமுகம் அணுகலும் அவன் மக்கள் இன்பமுடன் அவனை அழைத்து ஆநந்தம்கொள்வார். இளைஞரோ தந்தைக்கு ஆசனம் அளித்துக் களைப்பினை ஆற்றி புன்சிரிப்போடு மகிழ்வுற நடப்பார்; வேண்டிய சிற்றுண்டிதந்து உதவுவார். மனத்திற்கு சங்கடத்தை விளைக்கும் விஷயங்கள் அனைத்தையும் முதலில் வெளியிடார். சின்னஞ் சிறுமதலைகளோ, தந்தை வீட்டுக்கு வந்ததும் பெருமகிழ்வோடு அவனிடம் ஓடி அவனை அணைந்து முத்தமிடும் ஆநந்தத்தைச் செப்பத்திறமுடைத்தன்று. "குழலினிது யாழினிதென்ப தம் மக்கள், மழலைச்சொற்கேளாதவர்." என்னும் குறளின் உண்மையை அநுபவத்தில் அறிந்தார்க்கு பிறிது செப்பவும் வேண்டுமோ?

இவ்வண்ணம் பல இல்லங்களும் நல்வாழ்வுடையனவாகவில்லை. கொடிய தந்தை ஒருவன் உண்டேல் தன் குரூர நடத்தையாலே தன் மனைவியை மனம் நோய நடத்துதலும், தன் மக்களை அடக்கியாளாது அவர்தம்வழிவிடுதலும், தான் செய்யும் அலுவலில்நேர்ந்த கஷ்டத்தால் குடும்பத்தை இன்பமில்லாமல் செய்தலும் இயற்கையே ஆகும். இவ்வித குடும்பத்தலைவனோ ஒரு பயங்குளி. தன் வார்த்தைக்கு உட்பட்டாரின் மனம் நலிய நடத்துவான்; மரியாதை மீறிய வார்த்தைகளையும், இன்னாமொழிகளையும், பரிகாசவார்த்தைகளையும் கொடிய தண்டனைகளையும், வெளியிடுத்து அன்போடொழுகவேண்டுவோர் மனம் கசக்குமாறு நடப்பான். ஐயோ! இக்கொடுங்கோற்றலைவற்கு எதிர்செல்ல இயலாத பேதைகள் என்செய்வார்? ஆகையின் மன ஒற்றுமை இல்லாமல்போகிறது. இக்கொடிய தந்தை, வீட்டில் அடிவைத்தவுடனே குடும்ப சந்துஷ்டி அடியோடு நின்றுவிடும். இளைஞர் இன்புடன் பேசார், எவரும் தந்தைமுன் வாரார்; பணியாட்கள் வழிஒதுங்கிச்செல்வார்; பலரும் பாவியென வைவார்.

இதுநிற்க, வேறொரு கொடிய தகப்பனோ மகா அகங்காரி, எப்பொழுதும் இவன் தன் புகழையே பிறர் பேச நயப்பான். இவனுக்குத் தன்னைப் புகழ்தலும்

பிறரை நிந்தித்தலும் முக்கியவேலை. அனைவரும் தன்னைச்சிறந்தோன் என்ன நன்குமதிக்கப்படும் இச்சகவார்த்தையையே நம்பித் தன் காலத்தை வீண் கர்வத்தில் ஒழிப்பான். இப்பிரயத்தனங்கள் எல்லாம் கடைசியில் வெறுமனே போவதாலும், குடும்பத்திலும் பலரும் இவனை வீண் டம்பன் என்று மதிப்பதாலும், பயன்இல்லாமற்போகின்றன. இதனால் தற்புகழ்ச்சியையே நச்சிய இவன் மனம் கசிந்து, இல்லறசுகத்தை வெறுத்துக் கொடிய அதிகாரி ஆகிறான். இவனோடு கலக்கும் அனைவரும் வெறுப்புகொண்டு மெய்யன்போடு நேசியாது விலகுகின்றார்கள்.

இப்படி வாய்க்கும் தந்தைகளாலே குடும்ப சுகம் இல்லாது போகின்றதைச் சிறிது ஆலோசியுங்கள். மக்களோ, இச்சந்தர்ப்பங்களில் தாய்க்குநேரும் மனச்சங்கடத்தை ஒருவாறு நயமொழிகளால் நீக்க முயலவேண்டும்; தங்களால் யாதொரு தொந்தரையும் நேராதவண்ணம் நடக்கவேண்டும். இக்கொடிய தந்தையின் நடத்தையால் வரும் துன்பத்தை மாற்ற எவ்வளவு பொறுமையும், அன்புமரியாதையும் வேண்டுமெனக்குறித்தல் சாத்தியமுடையதில்லை.

புதல்வர்களோ, கடுமையின் பேசப்பட்ட காலத்துச் சுடும் மறுமொழி பேசாது அடங்கியிருத்தல்வேண்டும். பொறுமையோடு மௌனமாயிருத்தலே தகுந்த மறுமொழி. இப்புதல்வர்கள் தாங்கள் குடும்பத்தலைவர்களாய் இருந்தால் எவ்வண்ணம் இருக்கவேண்டும் என்று இதனின்று அறிதல் சிறப்பே. இப்படிக் கொடுமையின் வருத்தும் தந்தைக்குக் கோபம் பம் தணிந்தபிறகு இதன் விவரத்தைக் குறிப்பாய் உரைத்தல் மிக்க பயன் உடைத்ததாகும். இவ்வண்ணம் நிதானம்அறிந்து நடந்துகொண்டால் இது எவ்வளவு மேன்மையையோ விளைக்கும். ஆழ்ந்தூன்றி அறியாத அவசரக்கோபத்தின்விளைவு ஒரு குடும்பத்துக்கு வியாதியாகும். இக்கோபத்தையும் மனக்கலக்கத்தையும் சமானம் செய்யவேண்டியவைகள் அனைத்தையும்செய்து தீரல் வேண்டும். ஒருவர் கோபம்உடையவராய் இருப்பினும், மற்றோர் அக்கோபத்தைக்கவனியாது பக்ஷத்தோடும் மனக்களிப்போடும் நடக்கவேண்டும். பக்குவமாய்ச் சமயத்துக்குத் தக நடத்தலும், அன்போடு ஒழுகும் சதுரும், சிந்தை கலக்கும் கோபத்தைநீக்கும் மந்திராக்ஷதையே.

'தந்தைசொன்மிக்க மந்திரம்இல்லை'
'தாய்சொற்றுறந்தால் வாசகம்இல்லை'

என்னும் பழமொழிகள் எந்நாள்முந்தி நமக்குள் வழங்கிவருகின்றன என்பதைச் சிறிது கவனியுங்கள். பெருந்தகுதியிலுள்ள ஒரு தந்தையும் அவன் குமாரனும் கலந்து ஒற்றுமையாய் இனிமையொடுவாழ்தலைப் பார்ப்பதே மிக ஆநந்தம். இவ்விருவரும் தம்முள் ஒத்துமிகுந்து அன்போடு வாழ்கின்றார் என்பது இவர்களை அறிந்தோர்களுக்கு மிகதிருப்தி. இவ்வொற்றுமை நண்பால் தந்தையும் குமாரனும் அடையும் ஆனந்தத்தைச்செப்புதல் இயலாது. அறிந்தார்க்கேதெரியும் அதன் அளவு. இதனால், இவர்களுக்கு உண்டாகும்வருத்தங்களோ குறைவாகும், இன்பமோமிகும். மிக அற்பமான விஷயத்தை



ஒரு நற்றந்தையுரைப்பின் அதற்கு மரியாதையும் கௌரவமும் உண்டு; அதற்கேற்ப நடக்கும் மக்களின் நடத்தைக்கு ஒரு பெருமையும் உண்டு. ஒரு நற்றந்தை இறப்பினும் அவனுக்கு தன் உரிமையுள்ள மகன் தன்வழியைக் கவனித்துப் பேர்விளங்கச் செய்வான் என்ற மனவமைதியடைந்து சந்தோஷிப்பான். பின்னும் அவன் எண்ணுவான். "என் மகன் உலகில் பல்விதத் தகுதிகளில் உள்ளாரைச் சந்திப்பான். அப்போதவர்கள் பிள்ளாய், நான் உன் தந்தைக்குப் பலவிதங்களிலே கடமைப்பட்டவன். நீயும் அவர் உற்ற புதல்வனாய்க் காலங்கழிப்பாய்".

ஒவ்வொருவனும் பெருங் கீர்த்தியும் மிகுந்த செல்வமும் அடையும்படி புதல்வர்களைப்பெறுதல் சாத்தியம் இல்லை. ஆனால் ஒவ்வொருவனும் தன் மகனை விடாமுயற்சியும், நன்னடக்கையும் தைரியமும், நீதியும் உடையானாய்ச் செய்தலில் முயன்று உத்தமன்புதல்வனென உலகத்தார் உரைக்கப்படுதல் வேண்டும். இவ்வண்ணம் செய்வார்க்கு எங்கும் நிறைகின்ற கடவுளே இன்னருள் தருக !

(இன்னும் வரும்)

M. S. நடேசய்யர், B. A.

# "ஹாம்லெட்" என்னும் ஷேக்ஸ்பியர் செய்த நாடகத்தின் வரலாறு.

## முதலங்கம்.

முப்பதுவயதாகியும் வித்தன்புரம் ஸர்வகலாசாலையில் தத்துவசாஸ்திரம் படித்துக்கொண்டிருந்த "ஹாம்லெட்" இளவரசன் தன் பிதா திடீரென்று இறந்தாரென்று கேள்வியுற்றான். தக்ஷணமே புறப்பட்டு டென்மார்க்குக்கு வர, தன் தாய் கெர்ட்ரூட் மைத்துனன் கிலாடியஸ் என்பவனை மணம்புரிந்த சமாசாரம் அவன் அறிந்தான். அப்பனுடைய உத்தரக்கிரியைகள் முடிந்தவுடனே கலியாணமும் ஆனபடியால் ஹாம்லெட் "பிரேதப்பணியாரங்கள் மணத்திற்குதவின" என்று சொன்னான். இவ்வாறு ஹாம்லெட்டின் தாய் கலியாணஞ்செய்துகொண்டதை வெறுத்தவர் பலர். முற்றிலும்வெறுத்தவன் ஹாம்லெட். இறந்த அரசனையும் கிலாடியஸையும் ஒப்பிட்டால் மலைக்கும் மடுவிற்கும்போலிருக்கும். கெர்ட்ரூட்டை மணம்புரிதற்கும், இளவரசான ஹாம்லெட்டுக்குக் கிடைக்கவேண்டிய அரசைத் தான் கைக்கொள்ளுதற்கும் கிலாடியஸ் தன் சகோதரனைக் கொன்றானென்று எவர்க்கும் சந்தேகம் ஜனித்தது.

ஹாம்லெட் தன்பிதாவினிடத்தில் அத்தியந்தவிசுவாஸம் வைத்திருந்தான். அப்பனிறந்தது முதல் உடையிலும் நடையிலும்முழுமாறுதலடைந்திருந்தான்.

அவன் தாய் என்ன சொல்லியும் கேட்டானில்லை. அப்பன் மரித்ததற்குக் காரணம் புலப்படாமையே அவன்மனத்திற்கு மிகுந்த துன்பத்தையுண்டாக்கிற்று. சிற்றப்பனாகிய கிலாடியஸ் தன் சோதரன் சர்ப்பந்தீண்டி இறந்தானென்று சொல்லித் திரிந்தானாயினும், ஹாம்லெட் மட்டில் கிலாடியஸே தன் தகப்பனைக் கொன்றவனென்று ஊகித்திருந்தான்.

பிதாவின் மரணத்தைப்பற்றி ஹாம்லெட் மனம்தவித்துக்கொண்டிருக்கையில், அவன் தோழன் ஹொரேஷியோவும், மார்ஸெலஸ், பெர்னார்டோ என்றிரண்டு போர்வீரர்களும் ஹாம்லெட்டிடத்தில் வந்து, அவன் தகப்பனுடைய பைசாசரூபம் மூன்றிரவுகளில் தோற்றினதாயும், அவர்களிடத்தில் அப்பிசாசு பேசவில்லையென்றும், கோழி கூவினவுடன் அது மறைந்துவிட்டதென்றும் சொன்னார்கள்.

இப்பிசாசின் தோற்றம் "பிதா கொலையுண்டிருத்தல் வேண்டும்" என்னும் சமுசயத்தை உறுதிப்படுத்தினமையால், ஹாம்லெட் மற்ற மூவரோடு பாராவிற்குப்போக எண்ணினான். பிசாசு மறுபடியும் தோன்றி ஹாம்லெட்டிற்குச் சாடைகாட்டி அழைத்தது. பிசாசு ஹாம்லெட்டைக் கொல்லக்கருதி அழைக்கிறதாக நினைத்து ஹொரேஷியோ இளவரசன் போவதைப் பலவாறுகத் தடுத்தான். ஹாம்லெட்டோ தன் உயிரைத்திரணமாக எண்ணித் தடுத்தவனைக் கொல்வதாக அச்சமுறுத்திப் பிசாசின் பின்போனான்.

ஹாம்லெட்டுக்கும் பிசாசுக்கும் நடந்த சம்பாஷணையில் பிசாசு தான் கொலையுண்டவிதத்தைத் தெளிவாய் ஹாம்லெட்டுக்குச் சொல்லிக் கொலைபாதகனைக் கொல்லவேண்டுமென்றும், தாயைமட்டில் ஈசுவரதண்டனைக்குவிட்டுவிடவேண்டுமென்றும் சொல்லி மறைந்தது.

பிசாசின் சொற்படி நடக்கிறதாகவாக்குத் தத்தம் செய்துவிட்டு ஹாம்லெட் நண்பர்களையும் பிசாசுவந்ததைப்பற்றி ஒருவரிடத்திலும் சொல்லக்கூடாதென்று பிரமாணஞ் செய்யச்சொன்னான். அன்றுமுதல் தான் பித்தன்வேஷம் போடுவதாகவும் சொல்லி நண்பர்கள் இரகசியம் அறிந்தவர்கள்போல காண்பிக்கக்கூடாதென்றும் சொன்னான். பித்தன்வேஷம் போட்டால் சிற்றப்பனுக்குத் தன்னிடத்தில் சந்தேகம் உண்டாகாதென்பதுதான் கருத்து. பிதாவின்வாக்கைப் பரிபாலிக்கும்பொருட்டுத் தன் காதலியாகிய ஒப்பிலியாவிடத்திலும் வெறுப்புப்பாராட்டினான். பொலோனியஸ் என்னும் கிழமந்திரியின் புத்திரி ஒப்பிலியா. பொலோனியஸும் அவன் மகன் லேர்டிஸும் ஒப்பிலியாவைக் கண்டித்து ஹாம்லெட்டை விலக்கும்படி சொல்லியிருந்ததும் இளவரசன் கொண்ட வேஷத்திற்கு ஒத்தாசையாகவே இருந்தது.

## இரண்டாவது அங்கம்.

ஹாம்லெட் போட்ட பித்தன் வேஷத்தினால் கிலாடியஸும் அவன் மனைவியும் ஒருவாறு ஏமாறியிருந்தார்களாயினும், சிற்சில வேளைகளில் அவர்களுக்கும் யதார்த்தம் தெரியாமையால் ஹாம்லெட்டை உற்சாகப்படுத்தற்கும், அவன் அந்தரங்கத்தைக் கண்டுபிடித்தற்கும் ரோஸென், கில்டென் என்றி

140 008.



ரண்டு ஆட்களைத் தருவித்தார்கள். பொலோனியஸ்மட்டில் ஹாம்லெட் பைத்தியம் விரகதாபத்தினால்வந்ததென்று அரசனுக்குச் சொல்லவந்தான். அதற்கு அத்தாக்ஷியாக ஹாம்லெட் தன்மகள் ஒப்பிலியாவுக்கு எழுதின ஓர் கடிதத்தைக் கொண்டு காட்டினான். ஹாம்லெட்டே வேண்டுமென்று இவர்களைத் தடுமாறவைக்க எழுதின கடிதமாயிருப்பினும் இருக்கலாம்.

இதற்கிடையே சில நாடகமாடுவோர் வந்தார்கள். தன் பிதாவை கிலாடியஸ் கொன்றதை ஒத்த ஒரு நாடகம் கற்பித்து அதை அரசன் முன்னிலையிற்போட்டுவித்து அரசன் முகசாடையால் கொலைசெய்தவனோ இல்லையோ என்பதையறிவதாக உறுதிசெய்தான். தன்னைப் பாவச் செய்கைகளில் வீழ்த்த நினைத்துப் பிசாசு பொய் சொல்லியிருந்தாலும் சொல்லியிருக்கலாம் என்று ஒரு சந்தேகம் ஹாம்லெட்டிற் குண்டானமையால் தான் இப்புதிய உபாயம் தேடஆரம்பித்தான்.

## மூன்றாவது அங்கம்.

ஹாம்லெட், உத்தேசித்தபடியே, ஒரு நாடகம் போடுவித்தான். சிற்றப்பன் தன் பிதாவுக்கு விஷத்தை இட்டுக்கொன்ற பிரகாரமே ஒரு சமயத்தை ஹாம்லெட் கற்பித்தான். நாடகம் பார்க்கவந்த அரசன் நாடகத்தில் நடந்த போலிக் கொலையைக்கண்டு நடுநடுங்கி இடையிலேயே எழுந்து ஓடிப்போய்விட்டான்.

பிசாசுசொன்னது ஒவ்வொன்றும் சத்தியமென்று ஹாம்லெட்டிற்கு நிச்சயமாயிற்று. சிற்றப்பனைக் கொலைசெய்ய உபாயம் தேடிக்கொண்டிருந்தான். அவன் தாய் தனியே பேச ஹாம்லெட்டை அழைத்திருந்தாள். போகும்வழியில் கிலாடியஸ் கடவுளை வணங்கிக்கொண்டிருந்தான் [தனியே இருந்த கிலாடியஸை ஹாம்லெட் ஒரே வெட்டாய் வெட்டியிருந்தால், ஒப்பிலியா, பொலோனியஸ், ரோஸென், கில்டென், லேர்டிஸ் கெர்ட்ரூட் முதலானவர்கள் மாண்டிருத்தல் வேண்டுவதில்லை. நல்ல சமயத்தில் சும்மா இருந்தது ஹாம்லெட்டினிடத்தே பெருந்தப்பு என்று நான் எண்ணல் வேண்டும்].

கிலாடியஸ் வேண்டுகோளின்படி அரசி தன் மகன் ஹாம்லெட்டைத்தனியே தருவித்துக் கண்டிக்க எண்ணினாள். அரசி தன் மகனிடத்திற் பேசுவதை ஒளித்துச் சொல்வாள் என்று சந்தேகித்து இருவருக்கும் நடக்கும் பேச்சை மறைவிடம் இருந்து கேட்கப் பொலோனியஸும் ஒத்துக்கொண்டிருந்தான்.

ஹாம்லெட்டும் அவன் மாதாவும் சந்தித்தபொழுது ஹாம்லெட் தாயாரிடத்தில் இன்னாத சொற்களைப்பலவாறுகச் சொல்லிப்பயமுறுத்தவே அவள் அஞ்சிக் கூக்குரலிட்டாள். திரையின் பின்புறத்தில் ஒளித்திருந்த பொலோனியஸும் கூடக் கூவவே ஹாம்லெட் தன் கையிலிருந்த கத்தியால் திரைக்குள் குத்த பொலோனியஸ் வெட்டுப்பட்டிறந்தான்.

## நான்காவது அங்கம்.

பொலோனியஸ் மரணம் ஹாம்லெட்டை டென்மார்க்கிலிருந்து வேறு ஊர்க்கனுப்புவதற்கு அரசனுக்கு இடம் கொடுத்தது. ஹாம்லெட்டையே கொலை

வாங்கிவிடுதலில் அரசனுக்குச் சம்மதம். அவ்வாறு செய்யத் துணியாமல் ரோஸென், கில்டென் இரண்டுபேரைத் துணையாகவைத்து ஹாம்லெட்டை அங்கிலேயதேசத்திற்குக் கப்பலிலேற்றி அனுப்பிவிட்டான். அங்கிலேயதேசத்தரசனுக்கு எழுதிய கடிதத்தில் ஹாம்லெட் கரையில் இறங்கினவுடனே அவனைக் கொலைசெய்துவிடும்படியாகவும் கட்டளை செய்திருந்தான்.

[கப்பலில்போகையில் ஹாம்லெட்டிற்கு ஏதோ சந்தேகம் உண்டாகிச் சிற்றப்பன் எழுதிய கடிதத்தை இரவில் கைப்பற்றினான். அக்கடிதத்தில் தன்பெயரை அடித்துவிட்டு ரோஸென், கில்டென் இருவருடைய பெயரையும் எழுதிக் கடிதத்தை முன்போலவே முத்திரையும்போட்டு வைத்துவிட்டான்.]

அங்கிலேயதேசத்திற்குப் போகும்வழியில் ஹாம்லெட் இருந்தகப்பலைக் சில கொள்ளைக்காரர்கள் மறித்துக்கொண்டார்கள். திருடர்கள்கப்பலில் ஹாம்லெட் போனவுடன் ரோஸென், கில்டென் இருந்தகப்பல் அங்கிலேயதேசத்திற்கு ஓடிப் போய்விட்டது. திருடர்கள் ஹாம்லெட்டைச் சிறைப்படுத்தினார்களாயினும், ஹாம்லெட்டினுடைய சூரத்தனத்தை வியந்தும், மற்றவருடைய கோழைத்தனத்தை இகழ்ந்தும், இளவரசனாயிருத்தல்பற்றி அவனால் திரவியலாபம் பெறலாமென்றும் எண்ணி ஹாம்லெட்டை டென்மார்க்குதேசத்துக் கரையில் இறக்கிவிட்டார்கள்.

அப்பன்மரித்த துக்கத்தினால் ஒப்பிலியா புத்திகலங்கி பித்துப்பிடித்து ஓர் ஆற்றில் வீழ்ந்திறந்தாள். தன் ஆசைநாயகனென்றெண்ணியிருந்த ஹாம்லெட்டே பொலோனியஸைக் கொன்றானென்பது ஒப்பிலியாவுக்குப் பொறுக்கக்கூடாத துக்கத்தை உண்டாக்கிற்று. ஹாம்லெட் அங்கிலேயதேசத்திற்போய் இறக்காமல் திரும்பவும் டென்மார்க்குக்கே வந்துவிட கிலாடியஸ், பொலோனியஸின் புத்திரனாகிய லேர்தீஸினிடத்தில்சொல்லி ஹாம்லெட்டைக் கொலைசெய்துவிடும்படி ஏற்பாடு செய்துவிட்டான்.

## ஐந்தாவது அங்கம்.

ஒப்பிலியாவைக் கல்லறையில் அடக்கஞ்செய்யும்போது ஹாம்லெட்டிற்கும் லேர்தீஸுக்கும் பெருஞ்சண்டைவந்தது. இருவரும் கத்திச்சிலம்பம் ஆடுவதாக ஏற்றுக்கொண்டார்கள். வேடிக்கையாக ஹாம்லெட் எண்ணியிருந்தான். லேர்தீஸ் வைத்திருந்த கத்தியின்முனையில் விஷம் தடவியிருந்தது. ஹாம்லெட் மாத்திரம் கபடமொன்றும் எண்ணாமல் சிலம்பமாடுகிறான். லேர்தீஸ் இடையில் விஷம் தீட்டிய தன் கத்தியினால் ஹாம்லெட்டைக் குத்தினான். அதிலுள்ள வஞ்சனையை அறியாமலே லேர்தீஸ் கத்தியைப்பிடுங்கி ஹாம்லெட் அவனைக் குத்திப்போட்டான். கத்தியின்குத்து மரணமுண்டாக்கலுக்குப் போதுமானதாயிருந்தது.

இதற்கிடையில் ஹாம்லெட்தாய் தாகத்தினால் அங்கிருந்த சாராயத்தை எடுத்துப் பருகி மார்படைத்து இறக்கும்போது சாராயத்தில் விஷம் கலந்திருக்கிறதென்று கதறி இறந்தாள். ஹாம்லெட்டிற்குத் தாகத்திற்குக் கொடுப்பதற்காக அரசன் வைத்திருந்த சாராயத்தை அவன்மனைவி உண்டிறந்தாள். குற்றுயிராயிருக்கும்போழ்து லேர்தீஸ் ஹாம்லெட்டின் இடத்தில் உண்மை எல்லாவற்றையும் சொல்லிவிட்டான். உடனே ஹாம்லெட் கோபமூண்டு சிற்றப்பன்மேற்பாய்ந்து தன்கத்தியால் அவனைத்துண்டமாக்கிப் பிதாவின்கட்டளையை நிறைவேற்றினான்.



# நாயக நாயகிகளின் பிணக்கு நீக்குதல்.

இல்லத்தில் ஆண்பெண்ணிருவரிருந்து வாழ்வதையே இல்வாழ்க்கையென்றும் இவ்விருவரும், பெற்றார், பிறந்தார், உற்றார், மற்றார்களையும் அன்புபாராட்டிப் பாதுகாத்துவருவதையே குடும்பப் பாதுகாப்பென்றும், அத்தகைய பாதுகாப்பைத் தலையாகநின்று செய்பவனையே குடும்பநாயகனென்றும் அவனுக்குதவிசெய்பவந்த மனைவியை நாயகியென்றும் வழங்கப்படுகிறது. இவ்வாறு நாயகனாகவும் நாயகியாகவுமிருக்கும் ஆடவ மடந்தையரிருவரும் ஒருமனப்பட்டு அவ்வில்லறத்தை நடத்தவேண்டும். இரண்டுபெட்டையில் குரங்குங் குடியிராது என்னு முதுமொழிக்கிணங்க மனவொற்றுமையில்லாக் குடும்பஞ் சதா சச்சரவையும் அடுத்த வீட்டார்களும் பந்துமித்திரர்களும் நகைத்திகழ்ச்சியையுமடைய ஹேதுவாகவிருக்கும்: ஆயினமையினாலன்றோ, "காதன்மனையாளுங் காதலனுமாறின்றித் தீதிலொருகருமஞ் செய்பவவே, வோதுகலை, எண்ணிரண்டுமொன்றுமதி என்முகத்தாய் நேக்கரன் கண்ணிரண்டு மொன்றையே காண்." என்று, ஒற்றுமையுடனிருத்தலே இல்வாழ்க்கைக்குரிய லக்ஷணம் என்பதை விளக்கிக்காட்டிய ஔவை ஒற்றுமையில்லா இல்லறத்தினுந் துறவறமே சிறந்ததென்றில்லமுள நாட்டைவிட்டுக் கொடுமையான மிருகங்கள்வாழுங் காட்டிற்கேகிவசிப்பது நன்றென்று உரைத்துளதை அடியில்வரும் வெண்பாவால் தெற்றெனத்தெளிவுறும். "பர்த்தாவிற்கேற்ற பதிவிரதை யாமாகி, லெத்தாலுங்கூடியிருக்கலாம், சற்றேனும், ஏறுமாறாகியிருப்பளேயாமாகிற், கூறுமற்சந்நியாசங் கொள்" என்று பாடியிருக்கின்றனள். இதுகாறு மில்வாழ்க்கையில் நாயக நாயகிகள் ஒன்றுகூடி வாழ்ந்திருக்கவேண்டுமென்றும் அவ்வாறிருப்பதே இல்வாழ்க்கைக்குரிய லக்ஷணமும் சுகிர்தமுமென்று வரையறுத் துரைத்திருக்கின்றதைப்பற்றிப் பேசிமுடித்தோம். இனி நாயக நாயகிகளின் பிணக்கிற்குக் காரணமு மதனிவாரணமு மிவையென்று விளக்குவாம்.

நாயக நாயகிகளாயுள்ளா ரிருவரும் ஒருவரின்றியொருவர் எப்படிச் சுகமனுபவிப்பது கூடாதோ அப்படியே இருவரும் சகலவிஷயத்திலும் மனமொத்தவர்களாயிருக்கவேண்டும். நாயகன் நாயகிக்குச் சம்ரக்ஷண கர்த்தாவாகவிருப்பதால் அவனிஷ்டத்திற்கு விரோதமின்றி நடந்துகொள்ளவேண்டும். இதற்கு மாறாக அநேகபெண்கள், யான், எனதென்னு மகங்காரமமகாரங்களைத் தங்களுக்கு ஜன்மப்பிரகிருதியாகக்கொண்டுத் தத்தங்கணவரையும் கணவரின்சொத்து சுதந்திரங்களையும், தங்கள் சொந்த கஷ்டார்ச்சிதத்தினால் விலைக்குவாங்கியவர்கள் போலத் தங்கள்கணவர்கள் தங்களிஷ்டப்படி நடக்கவேண்டுமென்று பிடிவாதம்

கொண்டு தங்கள் நாயகர்களின்மனதை வருத்துகின்றனர்கள். எங்ஙனமெனில் தந்தங்கணவர்களின் பெற்றோர், பிறந்தாருற்றார், மற்றோர்களுக்கு மனதாரக் கொடுக்கவேண்டுமென்றும் உபசரணைகள் செய்யவேண்டுமென்றும் கணவனுடைய இஷ்டத்தை மறுத்துநடப்பது முதற்குறை. நாயகிகளாயுள்ளவர்கள் தங்களிஷ்டப்படி தங்களுக்கு இஷ்டமானவர்களுக்கு எத்தகைய உதவிபுரிவதும், இஷ்டப்படி சொந்தச்செலவுகள் செய்வதும், அதாவது அநாகரீகமான விஷயங்களாயுள்ள அறுவெறிய ஆடையாபரணங்களுக்கென்றும் மூடபக்தி செலுத்துவதற்கென்றும் பொருணாசஞ்செய்வதும் வழக்கமாகவிருக்கின்றது. இத்தியாதிகாரணங்களால் நாயக நாயகிகளுக்கு ஒற்றுமைகெட்டுப் பகைமைதொட்டு நட்பைத்தட்டி வீட்டைவிட்டு அயலிடஞ்செல்லவும் இதைக்காணும் மேனோக்குடைய உலகம் மாறனைவெல்ல வலியில்லாப் பொல்லாப்புல்லனென்று, கல்லாக்கயவருங் கருத ஆஸ்பதமாகின்றது. இவை யாவற்றிற்குங் காரணம் நாயகிகளாமன்றோ. இத்தகையகுணமும், நாயக நாயகிப் பிணக்கும் கல்லாதாரிடமாத்திரமன்று கற்றுணர்ந்தோர்பாலுமுள. நாகரீகம் நாகரீகமென்று தனுக்கும் கிறிஸ்தவசாதியார்களிலும் B. A. M. A. என்று வாசித்துத் தேர்ந்துள்ளாரிடத்தில் விசேஷமாகவிருக்கக் காணலாம். இவர்கள் ஒருவருடையஇஷ்டத்தை மற்றொருவரறிந்து அவ்வாறே நடந்துக்கொள்ளும் அறிவு குறைவுபட்டிருக்கினும் பிறர் தங்கள்பால் (நாயகன் நாயகியினிடத்து அல்லது நாயகி நாயகனிடத்து) செய்யு மற்பக்குற்றங்களைமாத்திர முணரவும் அதைப் பெரிதாகப் பாராட்டவுமாத்திரம் நன்குணர்ந்திருக்கின்றனர். இத்தகைய கற்றுணர்ந்தமாதர்கள் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" எனும் நமதருமைத்தாயருள் சுரந்துமொழிந்த வாக்கியத்தைக்கண்டேயிலரோ? அல்லது கண்டுமிதென்ன சிறுவாக்கியந்தானே நமதுயர்தரக்கல்விக்கிது உரையிடவும் போதுமோவென்றெண்ணியே விட்டனரோ யாமறிகிலம். புருஷன் கல்லாக்கயவனாகவிருப்பினுந் தனது இனியவார்த்தைகளாலும், முகமலர்ந்து செய்யும் உபசரணைகளாலும் நாளாவட்டத்திற் குணப்படுத்தவேண்டும், தனக்குச்சமதையான அல்லது தன்னிலுமேலான கல்வியறிவுடையவனாகவிருப்பின், அத்தகைய காதலனை நாமடையப்பெற்றதற்குக் கடவுளர்க்கு நன்றிசெலுத்தவேண்டும், அத்தகைய மன்னனிடமிருந்து அநுபவிக்குஞ் சுகாநந்தத்திற்கும் கௌரவத்திற்குங் கைம்மாறாக நாம் நாயக நாயகிகள் பிரியா அன்பு மொற்றுமையுமுள்ளவர்களா விருப்பதுபோலபிறருமிருக்கக் கற்பித்தல்வேண்டும். அத்தகைய உன்னத அறிவுடையஆண்மகனைத்தெய்வமென்று தொழுது அவனின் ஒவ்வொருவார்த்தைகளும் சர்வாபீஷ்டங்களையுந்தரவல்ல மஹாமந்திரமென்று சிரமேலேற்றிப் போற்றல்வேண்டும். நாயகிகள் தங்கள் நாயகர்கள் அயல்மாதரிடமன்புபாராட்டுவதைக் காண்பார்களேல் உடனே நாயகன்மீதுள்ள அன்பை நீக்குவதுமாத்திரமல்லாது பகையுங்கொள்வார்கள். இது சிறிதுங்கூடாது; ஏனெனில் நமதுநாயகனிஷ்டம் பலவற்றுள் அஃதுமொன்றுமாதலின் அவனிஷ்டத்திற்கிணங்கி, நளாயினி, கோவலன்மனைவி கண்ணகி இவர்களைப்போல நடப்போமாகில் நம்மீது நாயகன்மார்களுக்கு அதிசயித்தார்க்கும்படியான அன்பும் உலகுபுகழும்படி சிறந்த புகழ்நாமம் பெறுதற்கு ஹேதுவாம். நளாயினி, கண்ணகி இவர்களெந்தயுகத்திலேயோ இருந்தவர்களெனினும் அவர்களின் சிறந்த குண



வைபவங்களும் நடந்துக்கொண்ட நடைகளும் தங்கப்பலகையில் வைர அக்ஷரங்களால் வரைந்துவைக்கப்பட்டதுபோல் இன்றும் சுடர்விட்டொளிபரப்பி மனங்களிக்கச்செய்கின்றதல்லவா? ஏ! சகோதரிகளே! இதவசனங்களால் நாயகனைச் சந்தோஷிப்பிக்கச்செய்து முகமலர்ந்துபசரணைசெய்தில்வாழ்க்கையை நடத்திவரும் நாயகி நாயகர்களுக்கு எவ்வழியாலும் பிணக்குவர ஹேதுவில்லை. நாயகன் ஆண்டிக்கிடு என்றால் நாயகி தாதனுக்கிடுவதும் நாயகன் நாராயணபூஜை செய்யென்றால் நாயகி நாராயணிபூஜைசெய்வதுமாகிய ஒற்றுமையிலாக்காரியங்களைச் செய்யாது மனமொத்து வாழக்கடவீர்களாக.

## ஸதி.

வடக்கில் ஹிமகிரியும், மற்ற மூன்றுதிக்குக்களிலேயும் நதி சமுத்திரங்களோடுகூடிய இப்பூர்வீக பாரததேசமாகிய இந்தியாவில், வைதர்பம் என்னும் பூர்வீக திருநாமமும், பீரார்என்ற நவநாமதேயத்தையும் தரித்திருக்கிற மாகாணங்களில் சர்வஜன புண்ணியங்களினால் சச்சிதாநந்த பரமேசுவரதியானத்தை ஸர்வகாலத்திலேயும் மனதில் ஸ்மரிக்கும் ஆண் பெண்களோடுகூடிய புஷ்பபுரியென்ற நகரமொன்று உண்டு. நவநிதிகள்கூடின குபேர அளகாபுரியோ! ஸர்வத்திரஸஹிதமான உததியோ! அழகிற்சிறந்த புரியின் உருவமோ! லக்ஷ்மீவிலாசக்ஷேத்திரமோ! தங்கமேருவோ! பூலோககைலையோ! என்று சொல்லத்தகுந்த அநேக லக்ஷணங்களோடுகூடிய இப்புஷ்பபுரி நகரின்கண் குணங்களில் ஸத்ஸங்கம், ஸன்மார்க்கம், ஸத்புண்யம், ஸத்துவகுணம் இவைகள் பொருந்தியவனும், அழகில் மன்மதஸ்வரூபியும், ஐசுவரியத்தில் குபேரனுமாகிய சுசீலன் என்னும் பேர்கொண்டபுண்ணியபுருஷன் ஒருவர், தனக்கனுகுணமான சாமுத்திரிகாலக்ஷணங்கள் பொருந்தியவளும், உருவத்தில் ரதிக்கொப்பானவளும், சௌந்தரியவதியென்ற யதார்த்தநாமத்தை தரித்தவளுமான ஒருபெண்மணியை விவாகம் செய்துகொண்டு நீண்டகாலம் ஈசுவரபக்தியோடுகூடி கிரகஸ்தாசிரம சிரமங்களை யனுபவித்துக்கொண்டு அதிககாலத்திற்குப் பிறகு அதிக ரூபவதியும், சர்வ சாமுத்திரிகாலக்ஷணங்கள் பொருந்தியவளுமான ஒரு ஸதியென்னும் பெண்குழந்தையைப் புத்திரியாக அடைந்தனர். சந்தானலாபம் அடைந்த பரமாநந்தத்தில் மூழ்கி, பூதானம், விரைதானம் முதலான கொடைகளை அர்கர்களான அந்தணர் முதலியவர்களுக்களித்து குழந்தை சௌக்கியத்திற்கு அநுகுணமான சகலசௌகரியங்களையும் செய்தார்.

அதிசீக்கிரமாகத்தானே கழிந்துவிட்டது வருடம் ஒன்று. சதியின் இனிமையான மழலைச்சொற்களும், தொத்துநடைகளும், சந்திரபிம்பத்துக்கு ஒப்பான முகமும் பரமாநந்தத்தை அவ்வூரிலுள்ள சகலருக்கும் உண்டுபண்ணின. வருடம் இரண்டாய்விட்டது. ஸதியோ, அயல்வீட்டுக் குழந்தைகளோடு, அம்மானைகளென்ன, சோழிகள்என்ன, சொப்புகள்என்ன, பொம்மைகளென்ன, இவைகளோடும் இன்னம் அநேக விளையாட்டு சாமான்களோடும்புஷ்பபுரிநகரில் தென்புறமாய் ஓடின நதியில் மணல்பாகங்களில் சாயங்காலசமயத்தில் விளையாடி அதிக சந்தோஷமாய் இருப்பாள். இப்படியாகத்தானே இரண்டுவருஷம்செல்ல சதி பன்

ளிக்கூடம்போய் கல்விபயிலுங்காலம் நெருங்கியது. நல்லதினம்பார்த்து விஜயதசமியன்றையதினம் அந்தணர்களுக்கும், மற்றுமனைவருக்கும் தானங்கள்செய்து குழந்தையை பள்ளிக்கூடம் அனுப்பி உபாத்தியாயருக்கு அநேகம் நன்கொடைகள்கொடுத்து, குழந்தை கல்வியபிவிருத்தியின்பொருட்டு அநேகம்விதமாய் சுசீலன் முயன்றனர். 'ஊக்கமது கைவிடேல்' என்கிறபடி, குழந்தை 12 வயதுவரையில் பள்ளிக்கூடம்போய்வர, ஏதோகொஞ்சம் கல்வியை சதி பயின்றனள். ஸதிக்குப் பதின்மூன்றுவயது நிறைந்து பதிநான்காம்வயதும் நெருங்கியது. குழந்தைப்பருவம்தாண்டி யௌவனத்தையடைந்தனள் ஸதீ. பள்ளிக்கூடத்தில் உபாத்திமார்கள் சங்கீதத்தில் ஸதிக்கு நல்ல ஞானம் உண்டாக்கிவிட்டனர்கள். பிடில் வீணை, ஹார்மோனியம், பியானோ, இன்னும் அநேகவாத்தியங்களை வெளிதில் மனோஹரமாய்சப்திக்கசக்தியையடைந்தனள் ஸதீ. சாதாரணமாய்ப்புஸ்தகங்களை வாசிக்கவும், வாசிப்பதை நன்றாய் கிரஹித்து அதன்படிநடக்கவும், குழந்தைகளைக் காப்பாற்றும்வழிகளைச் சொல்லும் புஸ்தகங்களையும், கணவனோடு சௌஜன்யமாய் இருக்கும்படி செய்துகொள்ளும் வழிகளையும், ஸதீ பயின்று, கணவனோடுகூடிவாழ்ந்து, கிரகஸ்தாசிரம கஷ்டநிஷ்டூரங்களை அனுபவிக்கும் வயதையடைந்தனள். கல்வியிலோ தன்னூரிலுள்ள சகல பெண்களையும்விட அதிகமாய்க்கற்றவள். அழகிலோ, வர்ணிக்கமுடியாதவள்! பத்மராகங்களுக் கொப்பான நகங்களோடுகூடிய, சஞ்சரிக்கும் நிலத்தாமரையோ என்று சொல்லத்தக்க பாதங்களையும், சிகப்புரேகைகளோடுகூடின நீண்ட சங்கத்திற்கனுரூபமான கண்டத்தையும், சந்திரபிம்ப காந்தியையுடைய பற்களையும், ரதிப்பிரியபாணவிரணங்களை யாசுவசிக்கும் விசாலகாந்தியுடைய கண்களையும், அர்த்தசந்திர நெற்றியையும், முகமாகிற தாமரஸ குஸுமத்தின் ஸௌரபத்தை யனுபவிக்கும் கருப்புவண்டுகளோஎன்று சொல்லத்தக்க, கவரிமானைத் தோர்க்கடிக்கக்கூடிய நீண்ட மயிரையும், ஹம்ஸகமனமோ என்று சொல்லத்தகுந்த நடையையும்உடைய, இந்த கொடித்தாமரை ஸதீயைப்பார்த்து, "உண்மையாய் இந்த அழகியை சிருஷ்டித்தவன் பிரமன் அல்லவே அல்லன்; யாதெனின், தனக்கு மனப்பிரியையாயிருக்கும் பாரியையைக்கூட, சிருஷ்டிக்க சக்தியுடையவனாயின், ஸதீபோன்ற அழகியாய் சிருஷ்டித்திருக்கமாட்டானா! ஆகா! என்ன ரூபம், என்ன ஸௌந்தரியம், என்ன குணம், என்னவித்துவத்து, என்ன சங்கீதஞானம்! ஆகா! ஸதீ மானுஷியல்ல! தெய்வமேதான்!" என்று நினைத்து மயங்கி, மனமுருகி, அவளைப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்கிற ஆசையையடையாதவர் யாவரும் இலர்.

இப்படிக்கொத்த சௌந்தரியத்தையுடைய பெண்ணைப்பெற்ற தகப்பனுக்கு நளனைப்பற்றி அளவிறந்ததுக்கத்தை யுண்டுபண்ணின சனீசுரன் தசையினால் தாரித்திரியம்நெருங்கி, தன்குமாரியை, ஸத்குணஸம்பன்னனாகிய ஒரு வரனைத் தேடி, விவாகம்செய்துகொடுக்க முடியாதகாலம் நெருங்கிவிட்டது.

ஸதீயைக்கண்டு மயங்கின அநேகருள் அயல்கிராமம் நரசிங்கபுரம் ஹரிஹர சாஸ்திரிகள் குமாரர் பட்டகோபாலசாஸ்திரிகளும், உள்ளூர் கிரீசர்குமாரர் சுப்பிரமணியனும் இருவர்கள். இவர்களுள் பட்டகோபாலசாஸ்திரிகள் மிகுந்த திரவியமுடையவர், மெட்டிக்குலேஷன் மூன்றுவருஷம் தவறி நான்காம்வருஷம் அதைப் பாஸ்செய்து, எப். ஏ. பரீக்ஷை இரண்டுவருஷம் தேறாமல் சுகமாய் வீட்



டில்வசிப்பவர். ரூபமோ இக்கரைக்கு அக்கரை, மலைக்குமடுவு, மகாவிரூபி. வெகுசந்தேகமுடையவர். ஒருவரையும் நம்பாதவர். சுயநயம் பாராட்டுகிறவர். பிறசுகம் பொறுக்காதவர் மகாகோபி; பிறர் ரகஸியத்தை அவர்களுக்குத் தெரியாமல் திருட்டுவழியாய் அறிகிறவர்; துர்க்குணங்களுக்கெல்லாம் இருப்பிடம். வயதோ 24; வந்தவர்களையெல்லாம் தட்டி ஸதீக்காகக்காத்திருந்தவர்.

சுப்பிரமணியனோ 20 வயதானவன். பரமசிவன்செயலால் அவன் பூர்வஜன்மத்தில் பண்ணிய புண்ணியத்தினாலே ஏதோ கொஞ்சம் கஞ்சிக்குக் காசுடையவன். B. A. பரீக்ஷைதேறி M. A. வகுப்பில் வாசிப்பவன். மகாபுத்திசாலி, கீர்த்திமான், ஸத்குணஸம்பன்னன், பரீக்ஷையால் சகலருக்கும் தெரிந்தவன். நல்ல உத்தியோகங்களுக்கு அர்கமானவன்.

இவ்விருவர்களுள் சுப்பிரமணியனிடத்தில் ஸதீயின் மனம் இளகிவிட்டது, அவன் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போதெல்லாம் அவனைப்பார்த்து ஆகா என்னஸுகுமாரன், என்னகுணசாலி, என்னபுத்திமான்! ஈசன் என்மேல் கிருபைகூர்ந்து என்தகப்பன் மனதிற்புகுந்து சுப்பிரமணியனுக்கு என்னை விவாகம் செய்துவைக்கும்படி செய்யமாட்டாரா என்று வருத்தப்படுவாள்.

ஆனால் தகப்பன் ஸுசீலனோ, தாரித்திரியத்தினால் வருந்தி, பணம்வேண்டியவராய் ஆனபடியினால், பட்டகோபாலருக்குத் தன் குமாரியை ஏதோகொஞ்சம் 450 ரூபாய் தற்கால கலியாணச்செலவிற்கு வாங்கிக்கொண்டு, விவாகம்செய்துகொடுத்துப் பின்பும் அவர் ஒத்தாசையினால் சௌக்கியமாய் இருக்கலாமென்று நினைத்து விவாகத்தைப்பற்றி நிச்சயம்செய்யத் தயாராய்விட்டனர். ஐயோ வறுமையின்கொடுமை இவ்வளவு குரூரமுள்ளதா. பெற்ற தகப்பனும் பெண்ணை விரூபியான அசடனுக்குப் பணத்திற்காக விற்பானா! இந்த சமாசாரம் சதியின் காதையெட்டவே ஏ! பரமசிவ! தீனதயாளோ! ஆபத்தாந்தனே! திரிலோகநாயகா! என்னை என் இப்படிப் பரிசோதிக்கிறீர். கிருபைகூரும். என்தகப்பன் மனதை மாற்றும். அல்பசுகத்திற்காக, அநேகவருஷகாலம் நீண்டிருக்கவேண்டிய என்பரமசுகத்தை என் தகப்பனார் மறக்கிறாரே. வறுமையின்கொடுமை இவ்வளவு குரூரமா? ஹே! பரமசிவ! என்தகப்பன் இப்பேர்க்கொத்த தாரித்திரியத்தையடையும்படியான என்னபாபத்தைச் செய்தாரோ! அல்லது நான்தான், பூர்வஜன்மத்தில் யாருக்குத் தீங்குநினைத்தேனோ, அல்லது வேறு என்னபாபம்செய்தேனோ! சுப்பிரமணியனும் பிறகு தனக்கு ஒத்தாசைசெய்யக்கூடுமென்கிற விஷயம் என் தகப்பனாருக்குத் தெரியவில்லையே! பட்டகோபாலர்தான் ஒத்தாசைசெய்வாரென்பது என்னநிச்சயம். அவரைப்பற்றினவரையிலும், அவருடைய குணங்களைப் பரிசோதித்துப்பார்ப்போமானால் 'காரியமாகிறவரையிற் காலைப்பிடி, பின்புமென்னைப்பிடி' என்கிறபடி என்னைக் கலியாணம்செய்துகொண்டு, என்லாவண்யத்தையும், யௌவனத்தையும் அனுபவித்துக்கொண்டு, பிறகு குதிரைமாடுகளைப்போல என்னைநடத்தி, என்பிதாவையும் கஞ்சிக்குக்கூடகாசில்லாமல் பறக்கவிடுவாரென்பதில் ஐயமேயில்லை. இவைகளைப்பற்றி நான் என்பிதாவினிடத்திற் சொல்லலாமோ? ஐயோ! இவ்விந்தியதேசத்தில், பெண்களை ஆடுமாடுகளைப்போல நடத்துகி

றூர்களே. பெண்கள் தங்கள்மனதிலிருக்கும் விஷயங்களை புருஷர்களுக்குத் தெரிவிக்க முடிகிறதில்லை. இவ்விந்தியாவில் பூர்வகாலத்தில் சீதாமுதலானவர்கள் தங்கள் கணவர்களோடும், மற்றவர்களோடும், தங்கள்மனதைத் தெரிவிக்கவில்லையா? தகப்பனரிடத்திலாவது பெண்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்காலம் எப்பொழுது இந்தியாவுக்குவருமோ? நான் இப்பொழுது என்மனவிசாரங்களை யென் தகப்பனரிடத்திலசொன்னல் என்மனதிற்குக் கொஞ்சம் ஆசுவாஸம்உண்டாகுமே! அல்லாமலும், புருஷர்களுடைய குணங்களையும், நடத்தைகளையும்தெரிந்துகொள்ளுவதற்கு இந்தியஸ்திரீகளுக்கு முடிகிறதில்லை. புருஷன் குணத்தைத்தெரிந்துகொண்டல்லவோ விவாகம் செய்துகொள்ளவேண்டும்! என் விஷயத்திலோ, என்பிதாவும், மற்ற அநேகர்களும்; குணதிசயங்களைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும்பொழுது அவர்களுடைய ஆலாபங்களைத் தனியாய்க் கேட்டிருப்பதின் பேரில் சுப்பிரமணியன் அதிக நல்ல குணமுள்ளவன் என்று தெரியவருகிறது. பெண்கள் சம்மதித்துக் கலியாணம் செய்து கொண்டால் பின்புதங்கள் மனதிற்கொத்த கணவன்களிடத்திற் சௌக்கியமாயிருப்பார்கள். ஏதோகொஞ்சம் வருத்தம் உண்டானலும், தங்கள் மனதிற்குஒத்து கலியாணம் செய்துகொண்டபடியால், தங்கள்மனதையே நொந்துகொண்டு, வருத்தங்களை சீக்கிறத்தில் மறந்துவிடுவார்கள். ஆகையினல் இப்பொழுது குணவானன என் மனதிற்கொத்த சுப்பிரமணியனை மணம்புரிந்தால், எனக்கு ஜன்மசாபல்யம் உண்டு; அப்படியில்லாவிடின், என் ஜன்மம் முழுவதும் வியர்த்தம்தான். ஈசா! தங்கள் பெண்களை, பெண்களென்று நினைக்காமல், ஆடுமாடுபோல் பணத்தாசையினல்; புத்தியில்லாத பிள்ளைகளுக்கு விற்கும், இவ்விந்தியத் தகப்பன்களுக்கு ஈசன் எப்போ கிருபைசெய்வாரோ? என்னகஷ்டம் சுப்பிரமணியன் தகப்பனர் சிரீசர். 1000 ரூபாய் கேட்கிறாராமே! இந்தக் கொடுமையானவியாபாரம், இப்பாரததேசத்தை அண்டியகாலமே, இந்தியாவிற்கு துர்ப்பிக்ஷகாலம் பிறந்துவிட்டது, என் பிதாவுக்கு 1000 ரூபாய் கொடுக்க சக்தியில்லையே. ஹரிஹரசாஸ்திரியோ தன் பிள்ளையின் மனத்தை சந்தோஷிப்பதற்காக என்னை 450 ரூபாய்க்கு வாங்கத்தயாராய் இருக்கிறரே! நிச்சயமாய் என்பிதா என்னை இந்தக் கொடியனுக்கு அள்ளிக் கொடுத்துவிடுவார். அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம். நான் மாட்டேனென்று சொல்வதற்கு எனக்கு சக்தியில்லை. தெய்வம் என்ன செய்யக் காத்திருக்கிறதோ! என் தலைவிதி எப்படியிருக்கிறதோ. பூர்வ ஜன்மத்தில் நான் செய்த புண்ணிய பாபத்திற்குத் தகுந்தபடி இந்த ஜன்மத்தில் எனக்கு சுகதுக்கமுண்டு, வருத்தப்படுவதில் காரியமில்லை. என் தகப்பனுக்கு வேறு யாராவது யோக்கிய சிநேகிதர்கள் தெரிந்த வித்வான்களாய் இருந்து, இவ்விஷயங்களை உரைத்தால் அவர் ஒருவேளை தன் எண்ணத்தை மாற்றுவார். ஓ ஈசா! கருணாநிதி! அநாதரக்ஷகா! என்மேல் கிருபைகூர்ந்து என்னைக் காப்பாற்றும் என்று பலவிதமாய் துக்கப்பட்டு, ஈசுவரன் கைவிடமாட்டாரென்று பரமனிடத்தில் நிச்சயமாய் நம்பி அவரை வணங்கி ஆறுதலடைந்தனள்.

(இன்னும் வரும்)



# பெண்கல்வி அபிவிர்த்தி எப்படி யிருக்கிறது.

(128-வது பக்கத்தொடர்ச்சி.)

"சித்திரமுங்கைபழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்" என்பதாய் இல்லறத்துக்கு வேண்டிய வேலைகளைப் புத்தகத்தில் வாசிப்பதுமட்டும் போதாது. கைப்பழக்கமாகாவிட்டால் "எட்டுச்சுரைக்காய் கறிக்காகுமா? பள்ளிக்கணக்கு புள்ளிக்காகுமா?" என்பதாய் பிரயோசனப்படாது. இந்த காரணங்களால் பெண்களுக்கு ஆண்பிள்ளைகளைவிட அதிக வேலைகளிருக்கின்றன வென்பதை யெவரும் ஒத்துக்கொள்வர். இப்படிப்பட்டவர்கள் கல்விபயிலுங்காலமோ அதிக குறைவு. 10 வயதானல் பாலிகைகள் பாடசாலைகளுக்கு ஏகவினிதில்லையென்று வீட்டுத் தலைவர் இவர்களை நிறுத்திவிடுகின்றனர். இந்தஸ்திதியில் பெண்கள் யானைகண்ட அந்தகர்களாய் "காணுதுகண்ட கம்பங்கூழைச் சிந்தாது குடியடி சில்லிமூக்கி" என்பதாய் கொஞ்சம் கற்ற கல்வி சஞ்சலத்துக்குக் காரணமாகிறதேயொழிய, எந்த நோக்கத்துடன் இவர்களுக்கு கல்வியறிவை யூட்டவேண்டுமென பெரியோர் எண்ணங்கொண்டனரோ, அந்த நோக்கம் முடிவுபெறுவதில்லை. இதை அறியாதாரில்லை. தாங்களு முணராமலில்லை. இப்படிப்பட்ட அபிவிருத்தி எப்படியிருக்கிறதென்பதை தாங்களே யோசித்துக்கொள்ளலாம்.

**விருத்தர்:**—மெய்தான் நீர் உரைப்பது உண்மையே. இதை தவிர்க்கு மார்க்க மிலையோ?

**உதயதாரகை:**—"எல்லாம் இருக்கிறது பெட்டியிலே இலைக்கறிகடைய சட்டியில்லை" யென்பதாய் சிறுமிகள் பூரண பாண்டித்தியர்களாக அனேக வழிகளிருக்கின்றன வென்பதி லையமில்லை. ஆனல் விடாமுயற்சியுடன் ஒரே சிந்தையாய் சரிவரநடத்தும் மனஊக்கமும் ஒற்றுமையுங்கிடையாது. "சுத்திரிக்காய் சொத்தையென்றால் அரிவாமணை மொக்கை" யென்பவரைப் போல, ஒவ்வொருவர் கூறும், ஒவ்வொருவழிக்கும் ஒவ்வாத நியாயங்களைக்கூறி யொழுங்குக்கு வராம விருப்பதே இந்துக்களாகிய நம்மவரின் இயல்பு. இத்துடன் பூணைக்கப்பட்ட மாடுகளிரண்டும் ஒத்தோடாவிடின் ரதஞ்செல்வதெப்படி? அதுபோல பெண்சாதி தன்மகள் மடப்பள்ளி வேலையில் வல்லவளாகவேண்டுமென் மனங்கொண்டால், மணைக்குடையவன் தன் மனையாளை மதியில்லாதவளென வைது மகளுக்கு நாற் காலியிலிருந்து வாசிக்கும்படி செய்வதுடனிராது, அம்மணீ! இனி நீ உன் தாய்வார்த்தையைக்கேளாதே சட்டிபானைகள் ஜோலிக்கும் போகாதே யடுப்பின் முகத்தில் விழிக்காதே விளக்குமாறைத் தொடாதேயென்று நல்ல புத்தி படிப்பிக்கின்றன். தாயாரோ வேலைநேரந்தெரியாது பெண் கவனமாய் ஒன்றை வாசித்துக்கொண்டாவது கணக்குபோட்டுக்கொண்டாவது காப்பியெழுதிக்கொண்டாவது இருக்கும்பொழுது "சிவபூசை வேளையில் கரடியைவிட்டது" போல் "இந்த மனுஷன்

இந்தப்பெண்ணை யிப்படி கெடுத்து கிரைவழி செய்கிருரே வீட்டு வேலையென்பதை கொஞ்சமேனும் கவனியாமல் எந்நேரமும் புத்தகமுங்கையுமா யிருக்கும்படியேற்பாடுசெய்துவிட்டாரே. இவள் படித்து உத்தியோகஞ்செய்தால் யார் பார்க்கவேணும், நாளைக்கு ஒருவர் வீட்டுக்குப்போனல் அவர்கள் யாரைக்கேட்பார்கள், இப்படியும் ஒரு பெண்ணைப்பிறந்ததைப் பாழாக்கலாமா?" என்று "வெண்கலக்கடையில் யானைபுகுந்ததுபோல்" இறைச்சலிட்டு பேசாதும்பேசி புத்தகங் கற்பலகை காப்பி முதலியவைகளைப் பிடுங்கியெறிந்து சாத்துசாத்தென்றுசாத்தி வீட்டு வேலையை செய்யும்படிகண்டித்து "இனி யந்த புத்தகத்தையெடு அப்பொழுதுதெரியிதுபார் உன்பாடு" என்கிருள். இப்படிப்பட்ட தாய்தந்தையரிடஞ்சிக்கிய பெண் எப்படி அபிவிர்த்தியடையக்கூடும். எதற்குங் காலவரை முன் வகுக்கப்படவேண்டும். இல்லின் வேலையில் இருக்குங்கால் தகப்பன் அதிற் பிரவேசிக்கக்கூடாது. படித்துக்கொண்டிருக்கையில் தாய் மடப்பள்ளிக்குப் பெண்ணைத் தருவிக்கக்கூடாது. பள்ளிக்கேகுவதை நிறுத்தி வீண் விளையாட்டுக் காரியங்களைக் கவனிக்கவும் வீடுவீடாய் தங்களுக்குத் துணையா யிழுத்துச்செல்லவுங் கண்ணுக்கலங்காரமாய் சிங்காரித்துப் பார்க்கவேண்டுமென்று கோயில் அல்லது திருவிழாவுக்குப் போவதாய் தாங்களேயொரு எற்பாடு செய்துகொண்டு அழைத்துப்போவதுமுதலிய துர்ப்பியாசங்கள் கூடாது. கூடியவரையில் பெண்கள் எதைப் பயில்வதிலேயுஞ் சந்தோஷவதனங்கொண்டு தெம்பாய் சிரிப்பு விளையாட்டாய் இருக்கும்படி பார்க்கவேணும். இப்படிக்கில்லாமல் பெண்களை வருத்தியவர்கள் முகஞ்சோர்ந்து கண்ணில் நீர்ததும்ப மூக்கைச் சிந்திக்கொண்டு முணுவிக்கொண்டு கட்டாயத்துக்காக எட்டிப்பழம் அருந்துவதுபோல கஷ்டத்துடன் எதையுஞ் செய்யும்படி பலவந்தஞ் செய்யப்போகாது. இப்படி வருத்தி விருத்தியை நாடுவதைவிட நிறுத்தி நிதானமாய் சந்தோஷத்தை வருவித்து தொந்திரைசெய்யாது எந்த வித்தையும் போதிப்பதுதான் உசிதம். 10 வயதாய் விட்ட பெண்கள் கல்விபயில்வதை விட்டுவிடும்படி யொருக்காலுஞ் செய்யக்கூடாது. செல்வராயின் வீட்டில்வந்து கல்வி கற்பிக்க பெண் போதஞசாரியர்களை யேற்படுத்தவேண்டும். எழைகளாயின் பெண் பாடசாலைகளுக்கு ஒருவர் துணையாகக் கூடச்சென்று விட்டுக் கல்லூரி கலைந்தபின் காத்திருந்தழைத்துவரவேண்டும். கலியாணமாகும் வரையில் இவ்வாறு நடத்தி வரவேண்டியது பெற்றோரின் கடமை. விவாகமானபின் இந்த பாரத்தைக் கொண்டகணவன் எற்கவேண்டியது. இவன் செய்யவேண்டியது யாதெனில் செல்வனானல் முன் சொன்னதுபோல் வீட்டில்வந்து சொல்ல நல்ல பெண் உபாத்திச்சியை நியமிக்கவேண்டியது. தரித்திரனாகில் தானே யவ்வேலையை வகித்துக்கொள்ளவேண்டியது. தான் கல்வியில் சிறந்தவனாயிராமலும் போதனைசெய்யுஞ்சக்தியற்றவனாயு மிருக்கில் அத்தகைய யோக்கியதையுடைய பந்துமித்திரர்களைக்கொண்டு அவ்விதம் நடப்பிக்குஞ்சிரத்தை யெடுத்துக்கொண்டு தானுங் கூடுமாயின் அருகிருந்து நெல்லுக்கிறைத்தநீர் புல்லுக்குமாவதுபோலத் தானும் அபிவிருத்தியடையவேண்டும். கல்விக்கரசியாகிய சரஸ்வதி யின்னுங்கலைபயில்கிருளென்பதை யொத்து இத்தொழிற்கு என்றும் முடி



விலையென சாகும்வரை தானாகவும் பிறர் சகாயத்தைக் கொண்டுங் "கண்டதை கற்கப் பண்டிதனாவான்" என்றுரைத்திருக்கு முதுரையைக் கைக்கொண்டு கதை காவியம், புராணம், வேதம், பத்திரிகை முதலியவைகளை யிடைவிடாது வாசித்து வந்தால் பெண்கள் அபிவிர்த்தி யடைவார்களென்பதில் சந்தேகமில்லை.

பு. அ. பொன்னுசாமி முதலியார்.

---

## பார்வதி சோபனம்.

(188-வது பக்கத் தொடர்ச்சி.)

இந்திராதி தேவர்மலர் சொரிய ரம்பையர் நிர்த்தனமாடிவர
நாற்பத்தெண்ணாயிரத்தெட்டு ரிஷிகளும் நால்வேதமும் சொல்லி ஸ்தோத்
[திரிக்க
முக்கண்ணர் தேவிக்குநாமகரணம் விஸ்தாரமாய்ச் செய்யவேணுமென்ற
அச்சுதர் தங்கைவலச்செவியில் இச்சையுடனே ராஜாவும்
தேவி பார்வதி என்று சொல்லி தானுரைத்தார் மூன்று தரம்
பார்வதி என்று பேரு மிடடுபர்வதராஜர் மன மகிழ்ந்து [தாம்
பத்தி பெரிதான மேனகையிடத்தில் நித்தியகலியாணியை தான்கொடுத்
இஷ்டமுடனவள் வாங்கிகொண்டு ஈஸ்வரியை முத்தமிட்டுக்கொண்டு
பக்ஷமுடனே வலது முலைப்பாலை பார்வதிதேவிக்கவள் கொடுத்தாள்
அப்போதந்தஹிமவானும் ஆயிரம்யானைகுதிரைகளும்
முத்தும் பவளமும் ரத்தினங்களும் விரைவுடன்வெள்ளி சொர்ணங்களும்
நித்தியம் ஒருகுடம் பால் சுரக்கும் லக்கமற்ற பசுமாடுகளும்
மட்டில்லாத தானங்களெல்லாம் வாரி வழங்கினர் ராஜாவும்
நித்திய கலியாணியை கண்டுமெவாள் நித்தியானந்த மடைந்திருந்தார்
பூர்வ பக்ஷத்து சந்திரன்போலம்மன் பூரணமாக வளர்ந்துவந்தாள்
மையிட்டு பொட்டிட்டு மஞ்சள்பூசி பட்டமும் நெற்றியில் சுட்டி கட்டி
பெட்டகத்திலுள்ள பூஷணமும்பூட்டி தொட்டிலுக்குள்ளே வளரவிட்
[டாள்.

### தாலாட்டு.

1. சிந்தைமகிழ்ந்து (சிவ) சங்கரியைத் தாலாட்ட
   கந்தனுக்கு முன்பிறந்த கற்பகமே முன்னடவீர்
2. பாருலகம் வாழ (ஹிம) பர்வதத்தின் மேலாக
   தேவரிஷிகள் துதித்து மலர்சொரிய
3. எழுலகம்போற்ற ஹிமவான் மனங்குளிர
   தாரணியில் வந்துதித்த (சிவ) சங்கரியைச் சொன்னரார்

4. சங்கரியோ தாயோ சகலலோக சுந்தரியோ
வன்குறைகள் தீர்க்கும் மலையரசன் சீர்மகளோ
5. மேனகையாள் கண்மணியோ வேதாந்த தற்பொருளோ
ஆதிசிவனார் அரும்பாகம் பெற்றவளோ
6. ஜோதிச்சுடரொளியோ சுந்திரப் பூநாயகியோ
பஞ்சாக்ஷரப்பொருளோ பரிபூர்ண நாயகியோ
7. கங்கைதரித்து புலியுரித்து மேல்போர்த்து
சந்திரனைக்கூட சடைதரித்தான் தேவியரோ
8. எட்டெழுத்து மெய்ப்பொருளோ ஈஸ்பரனார் நாயகியோ
பக்தர் மனதில் உறையும் பரஞ்சுடரோ
9. சித்தாந்த யோகியர்கள் சிந்தைகுடிகொண்டவளோ
திரிபுரம் எரித்த சிவகாம சுந்தரியோ
10. காளி யெதிர்வந்து கனகசபை மண்டபத்தே
ஹாரஞ் சிலம்புகளும் அசைந்தாடுங் கிண்கிணியும்
11. கோலவளையும் கொத்தருகும் கொன்னை தும்பை
மாலைகளும் சூல கபாலம் ஒளிதிகழ
12. நீலகண்டமூர்த்தி நிறைந்த கொலுமண்டபத்தே
ஆலமுண்டார் பக்கல் அமர்ந்த சிவசுந்தரியோ
13. ஹிமவான் திருமகளோ ஏழுலகமீன்றவளோ
திருமுலைப்பாலாலே ஜகமெல்லாங் காத்தவளோ
14. இருநாழிநெல்க்கொண்டு எல்லாஉலகுதனை
பதினாலு லோகமும் படியளக்கும் பார்வதியோ
15. வெள்ளெருதுமேலேறி வெள்ளெருக்குத்தான் சாற்றி
துள்ளுமான் கைப்பிடித்த சங்கரனார் தேவியரோ
ஆராரோ ஆராரோ ஆரிரரோ ஆராரோ
பாராளும் மேனகையின் பாக்கியமே கண்வளராய்.

ஸ்ரீ பார்வதியம்மன் பால லீலை.

பக்ஷமுடனே தாராட்டி சீராட்டி பார்வதிதேவி வளர்ந்துவந்தாள்
ஐந்தாம்வயதில் அம்மனவள் ஐந்தாறு தோழிமார்களுடனே
கஞ்சதள நேத்திரமுடையாள் மஞ்சளபூஷணம் பூட்டிக்கொண்டு
குழல்கத்தைகளும் தொங்கத்தொங்க கழுத்தி லாபரணங்கள் மின்ன
பந்துவிளையாடி தோழிமார்களுடன் பால லீலைகளும் செய்துவந்தாள்
100 ஆறும்வயதில் அம்மனவள் மாயாதாரியைத்தான் நினைத்து
ஈஸ்வரர் மாதவம் பண்ணும்வனத்திலே ஈஸ்வரி தோழிமார்களுடனே
கூர்வேல்விழி அம்மனவள் கொண்டுவந்து கோடிபுஷ்பங்களை
ஸ்வாமி பாதாரவிந்தத்திலே சொரிந்து பக்தியுடனே
தேவிதலையை வணங்கிக்கொண்டு சிவனை அடிக்கடி பார்த்துக்கொண்டு
பாராரோ நம்மைச் சேராரோ போகாதோ இவர் கோபமெல்லாம்



வேறே ஒன்றையும் எண்ணாமல் முக்கண்ணர்மேல் மனதாகியம்மன்
தேவி பொருந்த வணக்கத்துடன் சிவனை பூஜித்துக்கொண்டிருந்தாள்
ஆதியந்தமற்ற சங்கரரும் அறிந்து மறியாதுபோலிருந்தார்
பார்வதிதேவியைப் பாராமல் பராமுகமாகச் சிவனிருந்தார்.

R. S. சுப்பலெக்ஷ்மி அம்மாள்.

---

## EARLY MARRIAGE.

### பால்ய விவாகம்.

ஒரு ஊரில் ஐந்துவயதுள்ள ஒரு பெண்குழந்தைக்கு விவாகஞ் செய்வதாக நிச்சயித்து அதற்காகப் பந்தல் முதலிய கல்லியாண முஸ்திப்புகள் செய்தார்கள். அப்போது அந்தப் பெண்குழந்தைக்கும் தாய்க்கும் நடந்த சம்வாதம்.

குழந்தை:—நம்முடைய வீட்டில் இவ்வளவு அமர்க்களமாய்க் கிடக்கிறதே எதுக்கடியம்மா.

தாய்:—உனக்கு நாளைக்கு கல்லியாணமடியம்மா.

குழந்தை:—கல்லியாணமென்றால் என்ன.

தாய்:—கலியாணமென்றால் தாலிகட்டுகிறது.

குழந்தை:—தாலியென்றாலென்ன?

தாய்:—இதோ என் கழுத்திலிருக்கிறது பார். இந்த மாதிரியாய் உன்கழுத்தில் கட்டுகிறது.

குழந்தை:—உன் கழுத்தில் இருக்கிற தாலியை எடுத்து, என் கழுத்தில் ஒரு நிமிஷத்தில் கட்டிவிடலாமே. இதற்கு இவ்வளவு ஆடம்பரமென்ன?

தாய்:—நான் கட்டக்கூடாது, புருஷர்கள்தான் கட்டவேண்டும்.

குழந்தை:—அப்படியானால், அப்பா எனக்குத் தாலி கட்டட்டும், அண்ணா கட்டட்டும், பரிசாரகச் சுப்பு கட்டட்டுமே.

தாய்:—அவர்களெல்லாரும் கட்டக்கூடாது. வேறே புருஷன்தான் உனக்குத் தாலி கட்டவேணும்.

குழந்தை:—எந்தப்பயல் எனக்குத் தாலிகட்டுவான்? ஒரு பயல் என்னைத் தொடுவானா?

தாய்:—அப்படியெல்லாம் தூஷிக்காதே, புருஷன்மேலே. நீ பக்ஷமாயிருக்கவேண்டும் எத்தனையோ பெண்கள் புருஷனோடு உடன்கட்டை யேறியிருக்கிறார்களே.

குழந்தை:—உடன் கட்டை என்றால் என்ன?

தாய்:—புருஷன் இறந்துபோனால் அவனோடுகூடப்பெண்சாதியும் அக்கினிப்பிரவேசஞ் செய்கிறது. இதுதான் உடன் கட்டை யேறுதல்.

குழந்தை:—அப்பப்பா! இது என்னாலாகாது. எனக்குக் கல்யாணமே வேண்டாம்.

தாய்:—நீ உடன் கட்டை யேறவேண்டியதில்லை. நீ புருஷன்மேலே அவ்வளவு பக்ஷமா யிருக்கவேண்டு மென்பதற்குச் சொன்னேன்.

குழந்தை:—புருஷன்மேலே நான்மட்டும் பக்ஷமா யிருக்கிறதா? புருஷனும் என்மேலே பக்ஷமா யிருக்கவேண்டியதா? இல்லையா?

தாய்:—புருஷனும் உன்மேலே பக்ஷமா யிருக்கவேண்டியது தான்.

குழந்தை:—அப்படியானால் நான் முந்தி யிறந்துபோனால் புருஷனும் என்னோடுகூட உடன் கட்டை ஏறுவானா?

தாய்:—இப்போது ஒருவரும் உடன் கட்டை யேறுகிற வழக்கமில்லை. உன்னுடைய அலப்புவாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கமாட்டாயா?

தாய்:—நான் சும்மா இருக்கமாட்டேன். புருஷன் என்னோடுகூட உடன் கட்டையேறச் சம்மதித்தால்தான் தாலி கட்டிக்கொள்வேன். இல்லாவிட்டால் தாலி கட்டிக்கொள்ளமாட்டேன். அவன்கட்டினாலும் அறுத்து எறிந்துவிடுவேன்.

சில சமயங்களில் பால்குடிக்கிற குழந்தைகளுக்குக்கூடக் கல்யாணஞ் செய்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்குக் கல்யாணத்துக்காக நகைகள்பூட்டி அலங்காரஞ் செய்யும்பொழுது அந்த உபத்திரவம் பொறுக்கமாட்டாமல், கல்யாண ஆரம்ப முதல் முடிவுவரையில் அந்தக்குழந்தைகள் அழுதவண்ணமா யிருக்கின்றன. முகூர்த்தநேரத்தில் அழுகையை நிறுத்துவதற்காகத்தாய்மார்கள் பெண் குழந்தைகளை மடியில் வைத்துப் பால் கொடுத்துக்கொண்டு, மணவறையில் உட்காருகிறார்கள். மாப்பிள்ளையும் சிறு குழந்தையானதால் இன்னாருக்குத்தாலி கட்டுகிறதென்று தெரியாமல் சில சமயங்களில் மாமியார் கழுத்திலே கட்டப் போகிறான். இது வேடிக்கையும் விநோதமுமல்லவா ?

"இந்தியா."

---

# பொது வர்த்தமானங்கள்

---

## வேல்ஸ் இளவரசரும் ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜும்

காசி "ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜ்" பத்திரிகையின் மே மாதப் பிரதியில் மிகவும் ரஸமான விஷயங்கள் சில அன்னிபெஸாண்ட் அம்மை எழுதி யிருக்கின்றார். அவற்றுள்ளே பின் வருவதொன்று:—

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் நமது ஞாபகார்த்தமாக ஹிந்து காலேஜுக்கு தமது சித்திரங்களிரண்டை தாமே கையெழுத்துச்சார்த்தி அனுப்பி யிருக்கின்றார். இவைகள் நேர்த்தியான சட்டம்போட்டு மேற்படி காலேஜ் புத்தகசாலையிலே தொங்கவிட்டு வைக்கப்பெற்றிருக்கின்றன.

---

## ஹஸ்ஸானில் ஓர் பெண் பள்ளிக்கூடம்.

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் மைசூருக்கு வந்து சென்றதின் அறிகுறியாக ஹஸ்ஸானிலே ஓர் பெண் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.



12 கனவான்களும் இரண்டு பிராமண மாதர்களும் ஒவ்வொரு மணிநேரம் சம்பளமின்றிக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க சம்மதியளித்திருக்கிறார்கள். பள்ளிக்கூட மேற்பார்வையின்பொருட்டு ஓர் கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மிஸ்டர் ஸ்ரீநிவாஸ ராவ் என்பவர் கவுரவ காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அப்பாடசாலை நன்குவிருத்திபெற்று விளங்குமென்று நம்புகிறோம்.

---

## ஸ்ரீமதி ஸரளாதேவியின் நற்செயல்.

சென்ற வருஷம் பாரக்பூரில் வேட்டை யாடிக்கொண்டிருந்த ஓர் ஐரோப்பியன் ஒரு இந்தியக் கூலியைச் சுட்டுக் கொன்றுவிட்ட விஷயம் நேயர்களில் சிலருக்கு ஞாபகமிருக்கலாம். அந்தக் கூலியாளின் மனைவியை ஸம்ரக்ஷணைசெய்யும் பொருட்டாக அப்போது ஸ்ரீமதி ஸரளாதேவி ஓர் நிதிசேகரித்திருந்தாள். ஆனால் உடனே அந்தக் கூலிக்காரன் மனைவி பாரக்பூரிலே யிருந்து எந்த இடத்துக்கோ போய்விட்டாள். அவள் இருப்பிடத்தை அறியவேண்டுமென்று பாபு சுரேந்திரநாத் பானர்ஜியும் பிறரும் எவ்வளவோ முயற்சி பண்ணியும் பயன்படாமல் போய்விட்டது. இப்போது அந்தப் பணத்தை கல்கத்தா சுதேசிய நிதிக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று ஸரளாதேவி உத்தேசம் செய்கிறாள். ஆனால் மேற்படி பணம் உதவிய ஜனங்கள் அதனை செலவுசெய்வதற்கு வேறு தக்கதோர் உபாயம் சொல்லக்கூடுமென்றெண்ணி, அதன் பொருட்டாக மே மாதம் 15-ம் தேதி வரை காத்திருக்கப் போகின்றாள்.

---

## விசித்திர விவாகங்கள்.

நாகரீகமற்ற ஜனங்களில் அன்பும் தயாளுத்துவமும் இல்லாததினால் விவாகத்தை இழிவாகவும் பெண்களை வீட்டுமிருகங்களாகவும் பாவிக்கிறார்கள். காடக்ஜாதியாரில் சகோதரன், சகோதரி, தாய் தகப்பன், பிள்ளைகள் இவர்களிடத்தில் ஒற்றுமை நட்பமானவையென்று லாங்ஸ்டாப் என்பவர் சொல்லுகிறார். மேலும் சில்லி தேசத்துக் காங்கன் ஜாதியார் ஏககாலத்தில் தாயையும், புத்திரியையும் மணம்புரிகிறார்களாம். பூர்வீக பார்ஸீகத்தில் பிள்ளை தாயை மணப்பது அதர்மமென்று நினைக்கவில்லை. இஜிப்து தேசத்தரசர்கள் தங்கள் சகோதரிகளைத் தான் மணம்புரியவேண்டுமாம். அப்படியே கிலியோபத்திரா என்பவள் தன் சகோதரன் டாலமியஸ் என்பவனுக்கு மனைவியாய்வந்தாள். இதைத்தவிர வேறு இடங்களிலும் இப்படிக்கொத்த விவாகமுண்டு. இந்தியாவிலுள்ள லோத்தால் என்னும் ஜாதியார் பெண்ணையும் பிள்ளையையும் ஆறு தினம் தனிப்படவிட்டுப் பிறகு தான் விவாகம் நிச்சயமாகும். இதேமாதிரியாக ரிச்சர்ட்சன் சொல்லுகிறார்.—டெட்சகின் ஜாதியாரில் விவாகஞ்செய்ய வேண்டுமானால் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டு எவர் தோல்வியடைகிறார்களோ அவர்கள் மனைவிகள் இவர்கட்கு மனைவிகளாகிறார்கள். இதனால்தான் தென் அமெரிக்காவில் இருப்பவர்கள் தம்மவர்களுக்கு வீரியம் வருமுன் விவாகம் செய்துகொள்ளுகிறதில்லை. இன்னும் சிலர்

விவாகம் செய்துகொள்ளுதலின் பொருட்டுத் தங்களுக்கு எவர் இஷ்டமோ அவர்களைக் கவர்ந்துவிடுகிறார்கள். அமேசான், ஓரிநகோ, நதிகளின் கரையி லிருக்கும் இந்தியர்கள் இதே விதமாகக் கவர்ந்து வந்தார்கள். இப்பொழுதோ விவாகத்திற்காகப் பெண்களை விலைக்கு வாங்குகிறார்கள்.

---

## அன்னிபெஸான்ட் அம்மையின் வேண்டுகோள்.

மிஸஸ். பெஸான்ட் அம்மையை தெய்வாவதாரம் என்று நம்பும் ஜனங்கள் இந்தியாவிலே எத்தனையோபேர் இருக்கிறார்கள். என்றாலும், அநாவசியமான விஷயங்களில் அந்த அம்மை சொல்வதையெல்லாம் தலைமேல் வைத்துக்கொண் டாடுகிறார்களே யல்லாமல், முக்கியமான காரியங்களில் அவர் சொல்வதைக்கூட நம்மவர்கள் கேட்டு நடப்பதாகத் தோன்றவில்லை. இந்தியா முழுமையும், கூடிய வரை கவர்ன்மென்ட் உதவியினின்றும் நீங்கி நிற்பனவாகிய "சுதேசிய" ப்பாட சாலைகள் ஸ்தாபனமுற்று அவற்றிலே மேற்குநாட்டுக்கலைகளுடனே, நமது நாட்டு உயர்ந்த ஞானமுறைகளும், ஒழுக்கங்களும் கலந்து, பயிற்று விக்கப்பட வேண்டுமென்பது மிஸஸ். பெஸான்டம்மையின் முக்கியக் கோட்பாடுகளிலே யொன்றாகும். இந்தியா நற்கதியடையவேண்டுமாயின் இந்தியர்களில் ஆண் பெண் அடங்கலும் கல்வியறிவு நிறைந்திராவிடின் ஒன்றும் நடக்காதென்று இம்மாது ஓயாமல் சொல்லிச்சொல்லி இவருக்குத்தொண்டை வற்றிப்போய் விட்டது. காசமீர ராஜ்யத்தின் ராஜதானியாகிய ஸ்ரீ நகரில் காசி ஸென்ட்ரல் ஹிந்து காலேஜின் முறைமையைப் பின்பற்றி ஓர் ஹிந்து காலேஜ் நடந்துவரு கின்றது. அதுவிஷயமாக மிஸஸ். பெஸான்ட் பிரகரிக்கும் ஸென்ட்ரல் ஹிந்து காலேஜ் பத்திரிகையிலே பின்வரும் விஷயம் கூறப்படுகிறது. காசி காலேஜி லிருந்து ரஜாவில் போயிருக்கும் மிஸ்டர் மூர் என்பவர் இந்த காலேஜை விருத் திக்குக் கொண்டுவரும்படி அரிய முயற்சிகள் செய்து வருகிறார். செய்தும் பய னென்ன? போதுமான பணம் இல்லாதபடியால் காலேஜின் நிலை வெகு கஷ்ட மாக இருக்கின்றது. மிஸ்டர் மூருடன் வேலைசெய்யும் உபாத்தியாயர்களெல் லாம் எத்தனையோ பொறுமையுடையோரும், உழைப்பாளிகளுமாக இருக்கிறார் கள். என்றபோதிலும், அவர்களுடைய மிடிமை நிலை மிக்கப் பரிதாபகரமாக இருக்கிறது. ஸ்கூலுக்கும் காலேஜுக்குமாகச் சேர்ந்து இன்னும் மாதமொன் றுக்கு 700 ரூபா யிருக்குமானால் திருப்திகரமாக நடைபெறும். மேற்படி பணத் தின்பொருட்டு அந்தக் காலேஜ் உபாத்தியாயர்கள் மிஸஸ் பெஸான்டுக்கு விண் ணப்பம்செய்திருக்கிறார்கள். மிஸஸ் பெஸான்ட் கையிலேயும் பணம் ஜாஸ்தி யாக இல்லை. இதன்பேரில் பெஸான்டம்மை பின்வருமாறு மிக்க ஆத்திரத்து டன் எழுதுகின்றார்:—"வீணான டம்பச் செலவுகளுக்கும், கவர்ன்மென்டார் மனங்குளிரச்செய்வதற்கும், லக்ஷக்கணக்கான பணத்தை அள்ளி யெறிவதற்கு நாட்டிலே பிரபுக்கள் இருக்கிறார்கள். பாடசாலைகள் நடத்தி இளைஞர்களின் அறிவையும் நடையையும் செம்மைப்படுத்துவதற்குப் பணங்கொடுக்க ஆளில்லா மல் போய்விட்டது."

107

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
ணுண்மை யுறவோங்கும் முலகு."

Vol. 1. } Madras. May. 1906. { No. 10.
தொகுதி. 1. } சென்னை 1906-ம் வருஷம் மே-மீ { பகுதி. 10.

## ஸ்பெயின் ராஜாவின் விவாக சமயத்திலே வெடிகுண்டு விபத்து.

சென்ற இரண்டுமாதப் பத்திரிகைகளிலே விவேகாநந்த ஸ்வாமியின் சரித்திரத்தைப் பற்றி எழுதினேன். அது இன்னும் முடி வுக்கு வரவில்லை. இப்படியிருக்கையிலேயே மிகுந்த கல்வியில்லாவிடி னும் கூர்மையான அறிவு கொண்ட ஓர் பெண்மணியிடம் நான் சம்பாஷணை செய்ய நேர்ந்தது. அந்த மாது என்னிடம் சொல்லினள் "ஐயா, உமது சக்ரவர்த்தினிப் பத்திரிகை அத்தனை ரஸமில்லை. இன்னும் எத்தனை காலம் விவேகாநந்தரைப் பற்றி எழுதிக்கொண்டே போகப் போகிறீர்? பத்திரிகையின் வெளிப்புறத்திலே தடித்தஎழுத்துகளில் "பெண்களின அபிவிருத்தியின் பொரு ட்டாக" என்று எழுதிவிட்டீர்; உன்னே விவேகாநந்தர் சந்நியாசம் வாங்கிக்கொ ண்ட விஷயம், புத்தர் ராஜாங்கத்தை விட்டுவிட்டுப் பிச்சைக்குப் புறப்பட்ட விஷ யம் இதையெல்லாம் எழுதிக்கொண்டிருந்தால் இதனால் பெண்களுக்கென்ன அபி விருத்தி ஏற்படும்?" என்றாள்.

பாரத தேசத்தின் புண்ய புத்திரர்களாகிய மஹான்களின் சரித்திரத்தை அடி க்கடி பெண்களுக்கு எடுத்துக் கூறி, அவர்கள் மனதிலே தத்தம்பிள்ளைகளும், கண வர்களும், சகோதரர்களும், இப்போது வீழ்ந்து கிடக்கும் தாழ்நிலைமையிலிருந்து மேற்கூறப்பட்ட மஹா புருஷர்களைப் போலாகவேண்டுமென்ற பேராசையுண்டா கும்படி செய்து, தேசத்தின் பெருமை மாதர்களின் அறிவையும் ஆவல்களையும் பொறுத்திருக்கின்றதானபடியால், இந்த மூலமாக தேசநிலைமையினையே உயர்த்த வேண்டுமென்று அளவில்லாத ஆசை கொண்டிருக்கும் என்னிடம் மேற்கண்ட வாறு உதாஸீனமாக ஓர் ஆண்மகன் பேசியிருப்பானானால் எனக்குக் கொடிய கோபம் பிறந்திருக்கும்.

ஆனால், பெண்ணென்றால் பேயுமிரங்குமல்லவா? அவளிடத்தில் மிகவும் சமாதானமாகச் சிலவார்த்தைகளைச் சொல்லிவிட்டு, "அம்மே, நீ அந்த சரித்திர முதலியவற்றையெல்லாம் நன்றாய்ப் படித்துப்பார். உனக்கு அதன் பிரயோஜனம் தெரியும்" என்று சம்பாஷணையை முடித்து விடைபெற்றுக் கொண்டு எழுந்து வந்துவிட்டேன்.

[ஸ்பெயின் தேசத்து ராஜாவின் கலியாணத்தைப் பற்றி ஏதாவது எழுதுவீரென்று வாசித்துக் கொண்டு வந்தால், உமது பத்திரிகையைப் பற்றி உமக்கும் யாருக்குமோ நடந்த சம்பாஷணையைப் பற்றி சும்மா விரித்துக் கொண்டு வருகிறீரே? இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம் என்று சிலர் என் மீது வெறுப்படையலாம். இன்னும் கொஞ்சம் பொறுங்கள். இந்த விருத்தாந்தம் முடிந்தவுடனே ஸ்பெயின் தேசத்து ராஜாவின் கலியாணத்தைப் பற்றி எழுத ஆரம்பித்து விடுகிறேன்].

ஷை மாதை சமாதானம் சொல்லிப் பிரிந்து வந்த பிறகு, "அடடா நாம் யாருக்காக சிரமப் படுகிறோமோ அவர்கள் நமது சிரமத்தை யெல்லாம் சிறிதேனும் பொருட்டாக்க மாட்டோ மென்கிறார்களே" என்று மஹாவிசனத்துடன் வீட்டிற்குத்திரும்பி எனது நாற்காலியிலே மிகுந்த ஆலோசனையுடன் சாய்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்கு திடீரென்று ஒரு யோசனை யுண்டாயிற்று. அந்த யோசனையிலே "ஷை மாது சொன்னது சரி. நான் செய்தது பிழை" என்பதாக எனக்குப் புலப்பட்டது. ஆரம்ப முதலாகவே இந்தப் பத்திரிகை மாதர்களின் அபிவிருத்திக்கென்று சொல்லிக்கொண்டு ஆண்பிள்ளைகள் வாசிக்கும்படியாகவே நடத்திவரப்படுகின்றது. இதைப்பற்றி முன்னமே என்னிடம் சிலர் கேட்டபோது நான் "பெண்களுக்குப் பெரும்பாலும் படிப்பே தெரியாது. இந்தப் பத்திரிகையை ஆண்மக்கள் படித்து அதன்மூலமாகப் பெண்களை அபிவிருத்திசெய்விக்கவேண்டுமென்பதே எனது நோக்கம்" என்று மறுமொழி சொன்னேன். அதெல்லாம் தப்பென்று எனக்கு இப்போது தோன்றுகிறது. ஆண்மக்கள் எத்தனையோ வருஷங்களாக எத்தனையோ அருமையான நூல்கள் படித்து வருகிறார்கள். அதிலெல்லாம் நடக்காத விஷயம் நமது பத்திரிகையாலா நடந்து விடப்போகிறது? ஆகையால் மாதர்களுக்குப் பயன்படவேண்டு மென்ற நோக்கமிருக்குமாயின், இந்த நிமிஷமே மாதர்களுக்கு அருத்தமாகக் கூடிய விஷயங்களை, அவர்களுக்கு அர்த்தமாகக் கூடிய நடையிலே எழுத ஆரம்பிக்க வேண்டுமென்று நிச்சயித்துவிட்டேன்.

**சகோதரிகளே,**

உங்களின் பொருட்டாக மேற்கண்டவாறு நிச்சயப்படுத்திக் கொண்ட எனது மனம் ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி எழுதத் தொடங்கும் போது ஒரு விதமான பிறழ்ச்சியடைந்து விடுகிறது. வெகுசாதாரண விஷயங்களைப்பற்றி பிரஸ்தாபித்தபோதிலும், உங்களுக்கு பெரிய பெரிய பீடிகைகள் எழுதியாக வேண்டியிருக்கிறது. இந்த மாதம் ஸ்பெயின் தேசத்திலே நடந்த வெகு விநோதமும் பயங்கரமும் ஆகிய ஒரு சமாசாரத்தைப்பற்றி உமக்கு அறிவிக்கலாமென்று நினைக்கிறேன். ஆனால் உங்களுக்கு "ஸ்பெயின்" தேசம் எங்கே யிருக்கிற தென்பது தெரியாது



இங்கே "வெள்ளைக்காரர்" என்று சொல்லப்படுகிற ஐரோப்பியர்கள் அனேக தேசங்களிலிருந்து வருகிறார்களல்லவா? அந்த தேசங்களுக்கெல்லாம் பொதுப் படையாக "ஐரோப்பா" கண்டமென்று பெயர்.

ஷை ஐரோப்பா கண்டத்தின் தென்பாரிசத்திலே 'ஸ்பெயின்' தேசம் என்று ஒரு தேசமிருக்கிறது. அந்த ஸ்பெயின் தேசத்துக்கு ஆல்பான்ஸோ என்னும் பெயர்கொண்ட ஒரு ராஜா இருக்கிறார். இவர்மிகவும் வாலிபர். அவர்க்கு மேமீ 31-ம் தேதி ஷை தேசத்தின் ராஜதானியாகிய மாட்ரிட் நகரத்திலே கலியாணம் நடந்தது. விக்டோரியா மஹாராணியின் பேரப் பெண்ணாகிய ஏனா என்பவளைத் தான் ஷை ராஜாவுக்கு விவாகம் செய்துகொடுத்தார்கள். இந்த 'ஏனா' என்ற ராஜாத்தி யௌவனத்திலும் லாவண்யத்திலும் சிறந்தவள். பொதுவாக ஐரோப்பாகண்டத்திலே ராஜகுலத்தாருக்குள் விவாகம் நடப்பதென்றால் தம்பதிகளின் மனப்பிரியத்தை நோக்கி நடப்பது வழக்கமில்லை. ராஜதந்திர சௌகரியங்களைக் கருதி விவாகங்கள் நடத்துவது வழக்கம். ('ராஜதந்திர சௌகரியங்கள்' (Diplomatic euds.) என்றால் என்ன? இப்போது அதை யெல்லாம் விஸ்தரித்துக் கொண்டிருந்தால் சொல்லவந்த சமாசாரம் சீக்கிரத்தில் முடியமாட்டாது. உங்கள் சகோதரர்களை யேனும் கணவர்களை யேனும் அர்த்தம் தெரிவிக்கும்படி வற்புறுத்துவீர்களாக).

ஆனால் இந்த ஸ்பெயின் ராஜாவாகிய ஆல்பான்ஸோவும் ஏனா ராணியும் பரஸ்பரம் உண்மையாகவே பிரேமை கொண்டவர்களாய் விவாகம் செய்து கொண்டார்கள். இவர்கள் ஆரம்பத்தில் ஒருவரை யொருவர் கண்டு பிரேமை கொண்டதும், அதற்கப்பால் அந்த ராஜ குமாரத்தியையே விவாகம் செய்துகொள்ளவேண்டு மென்பதில் இவருக்கு ஆவல் ஏற்பட்டு இவர்பட்ட ஆத்திரமும் வர்ணித்துத் தீராது. இவ்வளவு காதலுடன் செய்யப்பட்ட இந்த ராஜகுல விவாகம் எத்தனை சிறப்பாக நடந்திருக்க வேண்டுமென்பதை நீங்களே ஊஹித்தறிந்து கொள்ளுங்கள். எத்தனையோ தேசத்து ராஜாக்களும் மற்றபிரபுக்களும் இந்த விவாகத்துக்கு வந்திருந்தார்கள். 31-ம் தேதி காலை "ஸான் ஜெரானிமோ" என்ற ஆலயத்திலே விவாகம் நடந்து அங்கிருந்து தம்பதிகள் ஊர்கோலமாக அரமனைக்கு திரும்பி வந்தார்கள்.. இந்திரனும் இந்திராணியும் விவாகமுடிந்து பட்டணப்பிரவேசம் வரும்போது தேவநகரம் எத்தனை கோலாகலமாக இருக்குமோ அத்தனை கோலாகலமாக அன்றைய தினம் "மாட்ரிட்" நகரம் விளங்கிற்று.

## ஓர் பெரிய ஆபத்து.

அரமனைக் கருகே ஊர்கோலக் கூட்டத்தார் வரும்போது ஓர் "வெடி குண்டை" யாரோ, ராஜாவின் வண்டி மீது எறிந்துவிட்டார்கள். வெடிகுண்டு (Bomb) என்பது உருக்கால் செய்யப்பட்டு உள்ளே பலமான வெடி மருந்தும் சிறுசிறு இரும்புத்துண்டுகளும் உடையதாயிருக்கும். அது ஒரு சாமானில் மோதினவுடனே வெடித்துப்போய் அருகிலே நூற்றுக்கணக்கான ஜனங்களிருந்த போதிலும் ஒருக்ஷணத்திலே கொன்று விடும். அந்த வெடிகுண்டு விபத்து நேர்ந்த யா

திரியை ஒரு பத்திரிகை பின்வருமாறு வருணிக்கிறது:—"இவ்விவாகத்திற்கு இங்கிலாந்திலிருந்து வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் வந்திருந்தனர். இன்னும் அனேக நாடுகளிலிருந்து எத்தனையோ பிரபுக்களும் ராஜகுலத்தவர்களும் வந்திருந்து சிறப்புச் செய்தனர். எங்கே பார்த்தாலும், புஷ்பங்களும், தோரணங்களும், ஆடம்பர முயர்ந்த பரிவாரங்களுமாய் விவாகம் வெகு கோலாகலத்துடன் நிறைவேறிற்று.

### தம்பதிகளின்மீது வெடிகுண்டெறியப் பட்டமை.

ஆலயத்திலிருந்து ராஜதம்பதிகள் திரும்பி வந்து கொண்டிருக்கும்போது அவர்களின் வண்டியின் மீது நாலுதிசைகளிலிருந்து பூச்செண்டுகளும் மாலைகளும் எறியப்பட்டன. இப்படியிருக்க ஓர் பூச்செண்டுக்குள்ளே வெடிகுண்டு வைத்திருந்தது. இந்தச்செண்டு அதிருஷ்ட வசத்தால் ராஜதம்பதிகளின் மேலே விழாமல் வண்டிக்கருகேவிழுந்தது. ராஜாவும் ராணியும் பிழைத்து விட்டார்கள். ஆனால் ராஜாவின் வண்டியை இழுத்துச் சென்ற குதிரைகள் மடிந்துபோயின. வண்டி சின்னாபின்னமாகச் சிதறிப்போய்விட்டது. பல ஜனங்கள் செத்துப்போய் விட்டார்கள். இந்தப் பிணக்குவியலுக்கிடையிலிருந்து ஆல்பான்ஸோ ராஜாவையும் ராணியையும் பொறுக்கியெடுத்துக் குதிரைமேலமர்த்திச் சென்றார்கள்.

### அரண்மனைக்குள்ளே பிரவேசம்.

அரண்மனைக்குச் சென்று ராஜாவும் ராணியும் உள்ளே பிரவேசிக்கும் பொழுது கண்ணீர்சிந்திக்கொண்டே போனார்கள். ஐயோ! பரிதாபம்!

### எப்படி எறியப்பட்டது.

வெடிகுண்டு வைத்த பூச்செண்டானது அரண்மனையிலிருந்து கால் மைல் தூரத்திற்கப்பால் ஓர் வீட்டு மாடியிலிருந்து வீசப்பட்டது. இதன்சம்பந்தமாக எத்தனையோ பேரைக்கைதிசெய்திருக்கிறார்கள்."

மேற்கண்ட தந்திக்குறிப்புகளுக்கப்பால் அனேக தந்திகள் வந்திருக்கின்றன. அவையெல்லாம் தொடர்பாக "பொதுவர்த்தமானங்கள்" என்ற தலைப்பின் கீழே மற்றோரிடத்திற் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. நிற்க, நமது தேசத்திலே விவாகசமயத்தில் ஓர் சிறிய துர்க்குறி நேர்ந்தபோதிலும் கூட ஜனங்கள் மனம்பதறுவது வழக்கம். அகாரணமாக அதிபாலியமான ஸ்பெயின் ராஜாவின் விவாகத்தின்போது வெடிகுண்டெறிந்து அனேகர் மடிந்துபோய் நூற்றுக் கணக்கான ஜனங்கள் புண்பட்டு, தம்பதிகள் கிரகப் பிரவேசம் செய்யும்போது அழுதகண்ணும் சிந்திய மூக்கும் இரத்தம் செறிந்த ஆடையுமாய் உள்ளே புகுந்தார்கள். இது எத்தனை துக்ககரமான விஷயம்?

இப்படி மணக்கோலம் பிணக்கோலமாகும்படியாக வெடிகுண்டெறிந்த பாதகன்யாரென்று அனேகர் ஆச்சரிய மடையக் கூடும். ஐரோப்பா கண்டத்திலே அனார்கிஸ்ட்ஸ் என்று ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள். "அனார்கிஸ்ட்" என்றால் "ஸர்வாதிகார விரோதி என்பது" பொருள். "உலகத்திலே ராஜாக்கள் பிரபுக்கள், அதிகாரிகள்முதலிய யாருமே இருக்கக்கூடாது; சர்வஜனங்களும் சம



மாக இருந்து தேசங்களனைத்திலும் ஜனங்கள் தம்மை தாமேயே ஆண்டுகொள்ள வேண்டு" மென்றும் கொள்கையே இந்தக் கூட்டத்தார் வைத்திருக்கிறார்கள். இவர்கள் இரகசியமாக பற்பல இடங்களில் கூடி க்ஷணநேரத்தில் எத்தனையோ ஜனங்களை அழிக்கக் கூடிய "வெடிகுண்டு"கள் தயார்செய்து உலகத்திலுள்ள ராஜாக்கள் சக்ரவர்த்திகள், மாகாணத் தலைவர்கள் முதலிய அதிகாரிகளை நாசம் செய்ய முயற்சி பண்ணி வருகிறார்கள். அமெரிகா, இடாலி, ருஷியா என்ற தேசங்களில் இவர்கள் சில ராஜாக்களை இதற்கு முன் வதை புரிந்திருக்கிறார்கள்.

இந்தக் கூட்டத்தார் நாள்தோறும் அதிகப்பட்டு வருவதனால் ஐரோப்பிய மகுடபதிகள் எப்போதும் உடல் பதறியவண்ணமாகவே இருக்கிறார்கள். இந்த "அனார்கிஸ்ட்" கூட்டத்தாரை எவ்வளவு கடுமையாக தண்டனை புரிந்த போதிலும் இவர்கள் தமது பயங்கரமான செய்கைகளை நிறுத்துவது கிடையாது. இந்த விவாகத்தின் போது வெடிகுண்டெறிந்த மாத்யூ மாரல் என்பவன் தன்னைப் பிடிக்க வந்த போலீஸ் சேவகனைக் கொன்றபிறகு தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இறந்துபோய்விட்டான். உயிரை வெறுத்து இந்தக்கூட்டத்தார் இப்படி ஓயாமல் பெரும் பாதகங்கள் செய்வதின் காரணம் என்ன என்பது யோசனைபுரியத்தகுந்தவிஷயம். இந்தக்கூட்டத்தாரில் அனேகர் நல்ல புத்திக்கூர்மையும் கல்வியறிவும் உடையவர்கள். இவர்கள் கருணையற்ற காட்டு மிருகங்களைப் போன்ற செய்கைகள் செய்வதற்கு முக்கியமான முகாந்திரங்கள்இருக்குமென்பதில் ஆக்ஷேபமில்லை. ஒரு மனிதன் அனாவசியமான செல்வத்திலே முழுகிப் போய் அக்கிரமங்களையே நாடி எத்தனையோபேருக்கு துன்பம்விளைத்துக்கொண்டிருக்க மற்றொரு மனிதன் நல்லபுத்திசாலியாக இருந்தபோதிலும் தனது ஆசை மனைவிக்கும் மக்களுக்கும் சோறு கொண்டுதரக்கூட வழியற்றவனாய், எல்லோராலும் இகழப்பட்டு வருவதை நாம் அடிக்கடி காண்கிறோம். இது நமது மனதிலெல்லாம் மிகுந்த துக்கத்தைக் கொடுக்கிறது. ஆனால் இதே விஷயத்தால் ஐரோப்பில் பல மனிதர்களின் நெஞ்சிலே பொறாமையும் ஆக்கிரகமு முண்டாய், அனாவசியமான செல்வம் பெற்று, அக்கிரம போகங்கள் அனுபவிக்கும் கூட்டத்தாரையே வேரறுத்துவிடவேண்டுமென்று அவர்கள் நிச்சயித்து 'அனார்கிஸ்ட்' கூட்டத்தைச் சேர்ந்துவிடுகிறார்கள். இவர்களுடைய நினைப்பு ஒரு வேளை நியாயமாயிருந்தபோதிலும் இவர்களது செய்கை மாதிரி மிகவும் மிருகத்தனமான தென்பதில் தடையில்லை. இவர்களுடைய மனக்குறையை நீக்கிக் கொள்ளத் தகுதியான மார்க்கம் யாதென்பதைப் பற்றி இன்னொருமுறை எழுதுகிறேன்.

## படியாப்பெண்களின் பாடு.

——:o.——

அறிவிற்சிறந்த சகோதரர்களே, சகோதரிகளே!

கல்வியாகிய பொதுச் செல்வத்தை ஆண், பெண் இருபாலாரும் ஒத்தனுபவித்துப்பெருமையுற வேண்டியதற்கு மாறாக இடைக்காலத்திற் சிலர் காலவேற்றுமையால் அஃது ஆண்பாலார்க்கே யுரித்தென்றும் பெண்பாலார்க்கு அன்னியமென்றும் கருதிப் பெண் கல்வியெனப் பெயரொன்று சூட்டி அவர்கள் அறிவைச் சுருக்கிவரத் தலைப்பட்டனர். ஆனால் அக்கொள்கை தற்கால நிலைமையில் சிறிது சிறிதாகப் பேதிக்கப்பட்டு கூடுமானவரையில் திருப்திக்கிடமாயிருந்து வருகின்றது. உடலுக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தத்தினைப்போல் ஆடவருக்கு எல்லாவிதமான நன்மைகளையும் தீமைகளையும் உடனிருந்தனுபவித்து இம்மை மறுமை இரண்டிலும் இன்பம் பயக்கக் காரணமானவர்கள் கற்புடைமங்கையரே. அத்தகைய பெரும்பொறுப்பமைந்த மனைவியர் ஒத்த அறிவும், அன்பும், குணமும், தகவும் உடையவராதற்கு ஒத்தகல்வியறிவுடையரா யிருத்தலன்றித்தக்க உபாயம், கருவி, வேறில்லை. நாயகன்கருத்திற்கிசைந்து நடத்த லென்னும் பேரமைதியும் உறுதியும் அக்கல்வியாற்றெளிந்த நல்லறிவாலன்றி அமையக்கூடியதன்று. சிறுபான்மை பேதமைபற்றி நேரும் அச்சங்காரணமாக அடங்கிநடக்கும் பெண்களும் சிலர்உண்டென்னலாம்.

எப்படியெனில், கல்விமானும் கூரிய விநயமதியுடையவனுமுள்ள ஓர் வானுக்கு (சிறுபான்மை அறிவின்மையாலோ, பெரும்பான்மையும் மைந்தன் மனைவியின் மதிக்கு மெச்சி அவன்கருத்திற்கிசைந்து நடக்கக்கூடுமென்கிற முன்யோசனையினாலோ?) தாய்தந்தையர்கள் சிறிதேனும் கல்விப்பயிற்சியில்லாத ஓர் சிறுமியை மணம் புரிவிக்கின்றனர்.

அவ்வாறே அப்பெண்ணும் தன் கணவனது உள்ளத்தைக்கவரத்தக்க சாதுரிய புத்தியும் சமயோசித வொழுக்கமும் நாகரீகத்தேர்ச்சியும் அமையப்பெறாதவளாதலின் நாயகன் அன்புக்குமுற்றும் உரியவளாகின்றதில்லை. ஆகவே தனக்குள் தனது கடமை புலியைக்கண்ட பூனைபோலும், கீரியைக்கண்ட சாரைபோலும் கணவனைக்கண்டால் நடுங்கிப்பதுங்கி அடிமைபோற் குற்றேவல் செய்வதுதான் எனத்தீர்மானித்துத் தன் வாழ்நாளைக் கைதி போலவே கழிக்கத் தலைப்படுகின்றாள்.

அத்தலைவனும் இம்மங்கையைப் பாகசாலைப் பசுவெனத்தீர்மானித்துத் தன் பருவத்திற்கும் மனப்போக்கிற்கும் ஏற்றபடி வேறுவழிகளில் மனதைச்செலுத்தி நேசிக்கத்தலைப்பட்டு நாளடைவில் முன்னிருந்த ஏகதேச இரக்கமும் மாறித்தனக்குள்ள வெறுப்பை வெள்ளிடைமலைபோல் விளக்கக் கூடியவனாகின்றான்.

கணவன் இவ்வாறுநடைகோணி அன்பிலாதொழுக அவனிடமிருந்து இல்லறம்புரியும் பேதைப்பெண் நாளடைவில் அண்டை அயல் மாதர்களின் இதோபதேசத்தாலோ, ஆசை வெட்கமறியாதென்னும்பழமொழிக்கிணங்கவோ, அநுபவம் அதிகரித்தலின் பயனாகவோ, பயம் நீங்கி சில சமயங்களில் ஆடையாபரணங்களிலோ, வேறு பொருள்களிலோ, தனக்குள்ள இச்சையை வெளியிடுகின்றாள்.



ஆயினும் அவனுள்ளக்கவர்ச்சி வேறாய் இருத்தலின் செவிடன் காதி லூதிய சங்கோசைபோல் அசட்டை செய்யப்படுகிறது. இவ்வாறு மனதில் மதியாவிடினும் வாயாற் கொடுமொழிகூறுதிருப்பவன் இவ்வகுப்பில் மேதாவியெனல் வேண்டும். இதற்கு மாறாய்ப் பிறர் நகைக்கப் பேசி ஆடுமாடுகளை நடத்துவதுபோல் அடியாத மாடு படியாதெனும் பழமொழியைக் கைக்கொண்டு குரூரமாய் நடத்தும் ஆடவரு முண்டு.

நிலைமை எப்படிப்பட்டதாயினும் முடிவு மனைவியின் எண்ணம் நிறைவேற்றப்படுவதில்லை. கணவன்தான் விரும்பியபடி நடக்கவில்லை, விரும்பியவைகளை யளிக்கவில்லை யென்பதைப்பல முறையுங்கண்ட மனைவிக்கும் ஆற்றொணாத்துயரம் அதிகரித்து அடக்க வறியாமல் தன்குறைகளைத் தன்னொத்த மாதர்களிடம் புகன்று வெறுக்கத் தலைப்படுகின்றாள். இதுவன்றி புருஷனுக்கஞ்சி நடக்கவேண்டியதென தனக்குள்ளிருந்த மூடபக்தியும் மேற்கூறிய ஆலோசனைச்சபையாருடைய நன்முயற்சியால் மாறிவிடுகின்றது. இக்கலகம் முதிர முதிர வீட்டுப்பண்டங்களை ஒன்றுக்கரையாகத்தனக்குத் தாழ்மை வாய்ந்த அவித்தியாசிரோமணிகளின் ஒத்தாசையால் விற்பனை செய்து காசைக்கணவனாக ஒருவாறு தேறிக்களிக்கும் மங்கையரும் சிலர் உண்டு; இது ஓர்வகை.

இத்தகைய இல்வாழ்க்கைபூண்ட மங்கையரில் இன்னும் சிலர் ஆடவனைப் போலவே தாமும் மனம்போனபடி யொழுகி இடர்ப்படுதலுமுண்டு. இது ஓர்வகை.

இத்தகையாரில் இன்னும் சிலர் நாயகனைத்தன்பால் அன்புடையவனாக்க வசியமருந்து தேடக்கருதி வயிறு வளர்க்க வைத்திய வேடம்பூண்டு திரியும் வஞ்சகர்களிடம் தமது கருத்தை வெளியிட்டு (அவ்வயித்தியருக்குப்பொருளைச்சேர்ப்பிக்கும் அவனது நல்வினையும் இப்பேய்ப்பெண்டிரது தீவினையும் உருக்கொண்டதையொத்த) அவர்கள் அளிக்கும் கொலைவிடத்தைக் கோரிக்கையுடன் ஏற்றுப் புருஷன் உணவிற்கலந்து உண்பித்து நாளைக் குறிவைத்தெண்ணிப் பிள்ளைவரத்திற்குப்போய்ப் புருஷனைப்பறிகொடுத்த கதைபோல் பித்தனாகவோ, பிணியாளனாகவோ, மாற்றி விரைவில் அவனது ஆவியையும் உண்டு அம்பலத்தில் வரும் அரிவையரு முண்டு. இது ஓர்வகை.

இதுபோன்ற தீமைகள் இன்னும் அளப்பில. அந்தோ! கல்லாப்பெண்டிரால் விளையும் தீமைகளைக்கருதுவோர்க்கு தத்தம் மக்கள் கல்வியிலாதிருப்பது உடன்பாடாகாதென்பது திண்ணம்.

மேற்கூறிய வகைகள் அனைத்திலும் மாறி ஒரு தீமையும் புரியத்துணியாதவளாய்த் தன்வாழ்நாள் முழுதும் துயருக்கடிமையாகிக் கற்புடனொழுகும் கல்லாமங்கையரும் சிலர் நம்நாட்டில் இருக்கின்றனர். இவ்வாறே ஒவ்வொரு பெண்களும் ஏன் அமையக்கூடாதெனவும், அத்தகைய உத்தமியே என்மகற்கு மனையாளாய் வாய்க்கக்கூடாதெனவும் சில ஆடவர் எண்ணி மனப்பால் பருகிப்பிறகு ஏமாற்றமடைவது முண்டு. ஆனால் இது மிகப்பரிதாபம். இதுவரையில் கல்விமானான கணவன் கல்வியுணர்வில்லாத மனைவியைப் பாராமுகஞ்செய்ய நேருவதை

ப்பற்றியும் அப்படிப்பராமுகம் செய்யப்படுவதால் அம்மாதர்கள் குணங்கெட்டு இல்லறதர்மம் சீரழிந்து பெருமை குறைந்து ஒற்றுமையும் களிப்பும் ஒழிய ஒளிப்பதைச் சுட்டியும் ஒருவாறு கூறினோம். இனி இவ்வாறின்றிக் கல்விமானான கணவன் கல்லாமனைவியாயினும் அவளைக் கூடியவரையில் சீர்திருத்தி இன்பவாழ்க்கைபுரியவேண்டுமென்று முயல்வானாயினும் அது பெரும்பான்மை இதிலும் கேடாய் முடிகின்றதென்பதையும் கவனிப்போம்:—எவ்வாறெனில்,

கூரிய விநயமதியுடைய ஆடவரிலே சிலர் தமக்கு வாய்த்த கல்லா மங்கையரைப் பராமுகம்செய்யாது வருந்தியாவது கல்விபயிற்ற முயன்று பெரும்பான்மையும் தோல்வியடைகின்றனர். "இளமையிற்கல்" என்னும் மூதுரைக்கிணங்க மனைவிக்குக் கல்விஞான முண்டாகாமையால் சினமதிகரித்து அறவே அவ்வாசையைக் கைவிடுவதுண்டு. பின்னும் சிலர் குறிப்படி, வாயடி, கையடி பிரம்படி என நாளடைவில் படிப் படியாக படிப் படியாகத் தேறுதலடையக்கண்டு முடிவில் "காணாதாற் காட்டுவான் தான் காணான் காணாதான் கண்டானாந் தன்மையுடைத்து" என்ற மூதுரைப்பொருள் ஞாபகத்திற்கு வந்து இருந்த அன்பும் மாறி இடர்ப்படுவது முண்டு. [இதில் ஒருபடிப்படியாக என்றதைப்படிப்பு, அடியாக எனப்பிரித்துப் பொருள் கொள்க]

இன்னும் சிலர் தாம்பட்ட சிரமத்திற்குத் தக்கபலனில்லா விடினும் உள்ளதைக்கொண்டு ஒருவாறு திருப்தியடைந்து வெளியில் முழுப்பலனையும் பெற்றதாகத் தொப்பப்பாவனைசெய்து அம்மனைவியர்க்குத் தாமே பிரதிநிதியாயிருந்து அவர்களைச்சிறப்பிப்பது முண்டு. இது எவற்றிலும் பெரிய துர்ப்பாக்கியமே. பின்னும் சிலர் தமக்குள்ள கல்விப்பிரசங்கத்தை (மனைவிபாலுள்ள காதலினால் அவள் பகுத்தறிவின்மையையும் மறந்து) அவள் பால் விஸ்தரித்து அது பயன்படாமையால் முடிவில் அவமதிப்புறுவது முண்டு. உதாரணமாக ஓர் சிறு கதையுண்டு; அதுவருமாறு. ஓர் வித்துவான் ராஜசபைக்குச் சென்று தன் புலமையைத் தெரிவித்து அங்குபரிசாகப்பெற்ற குதிரையுடன் தன்வீடுவந்து சேர்ந்தார். புருஷன் வரவு கண்ட மனைவி அவனுடன் என்ன வருமானம் என அவர் தனக்குள்ள அகமகிழ்ச்சியை வெளியிடக்கருதி அச்வம் என்றார். கல்வியறிவில்லாத காதலி அம்மொழி அசுபத்தைக் குறித்ததெனமயங்கினாள். அதுகண்டு கவிராயன் மா, மா, என இரட்டித்துக்கூறினான். அச்சொல் செவிக்கெட்டியதும் மாமாவுக்குக் கோரமான துக்கம் நேர்ந்ததென நிச்சயித்து வாய்திறந்து புலம்பத்தொடங்கினாள். இக்கூக்குரலைக் கேட்ட உறவினர் பலர்உபசரிக்கப்போந்தனர். இவற்றைக்கண்ட புலவர் தனதறிவின்மைக்கு நொந்து மனைவியைநோக்கி வாசி யென்றான். வந்த விபத்து வழிவிலகியதாய்நினைத்துக் கண்ணீரைத்துடைத்து விசாரிக்கத் துடங்கினாள். புருஷன்கூறிய பெயர்கள் அவ்வளவும் குதிரைக்கே உரியவைகளெனத் தெரிந்து தனக்குநேர்ந்த அவமானத்தையும் கணவனுக்கு நேர்ந்த வருத்தத்தையும் தன்தோழியினிடம் கூறித்தன் பேதைமைக்கு நாணுற்றாள் என்பதே. (இன்னும் வரும்)

பண்டிதை, அசலாம்பிகை அம்மை.



# HAMLET.

## ஹாம்லெட்.

### நாடகபாத்திரங்கள்.

கிலாதியஸ்.—டென்மார்க்கு அரசன்.
ஹாம்லேட்.—அவ் அரசனுடைய தமையன்மகனும் பட்டத்திற்கு உரியவனும்.
பொலோநியஸ்.—இழமந்திரி.
ஹொரேஷியோ—ஹாம்லெட்டின் நண்பன்.
லேர்தீஸ்.—பொலோனியஸின் மகன்.
ரோஸென். } அரண்மனை உத்தியோகஸ்தர்கள்.
கில்டென். }
புரோகிதன்.
மார்ஸெலஸ். } சேனைத்தலைவர்கள்.
பெர்நார்டோ. }
பிரான்ஸிஸ்கோ.—போர்ச்சேவகன்.
ரேநால்டோ.—பொலோநியஸின் வேலையாள்.
கூத்தாடிகள்.
இரண்டு நாட்டுபுறத்தார்கள்.—சவக்குழி வெட்டுபவர்கள்.
பார்த்தின்பிராஸ்.—நார்வே இளவரசன்.
சேனாதிபதி ஒருவன்.
கேர்ட்ருட்.—மைத்துனன் கிலாதியஸை மணம்புரிந்த அரசி. ஹாம்லெட்டிற்குத் தாய்.
ஒப்பிலியா—பொலோனியஸின் புத்திரி.
ஹாம்லெட்டின் பிதாவினுடைய பிசாசு நுபம்.
வேலையாட்கள், தூதர்கள் முதலானவர்கள்.

### முதல் அங்கம்.

#### முதல்களம்.

இடம். எல்ஸினூர் கோட்டையின் முன்புறத்தில் ஒருமேடை.

பிரான்ஸிஸ்கோ பாரா. பெர்நார்டோ ஜோடிதாராகப் பாராவுக்கு வருதல்.

பெர்நார்டோ.—யார் அங்கே?
பிரான்ஸிஸ்கோ.—எனக்கல்லவோ நீ ஜவாப்பு சொல்ல வேண்டும், நின்று நீ யாரென்று எனக்கு அறிவி.
பெர்.—அரசன் நீடூழிகாலம் வாழ்க!
பிரா.—பெர்நார்டோவா?
பெர்.—அவனே.
பிரா.—உனக்குக் குறிப்பிட்டகாலத்தில் சரியாக வந்தாய்.
பெர்.—இப்போது பன்னிரண்டு மணி அடித்தாய் விட்டது; பிரான்ஸிஸ்கோ நீ படுக்கைக்குப் போ.

பிரா.—நீ செய்த உபகாரத்திற்கு அனேக வந்தனம்; குளிர் மிகுதியாயிருக்கின்றது, என் மனம் வேதனைப் படுகின்றது.

பேர்.—உன் பாராவில் விசேஷம் ஒன்றும் நடக்கவில்லையே?

பிரா.—மூச்சுவிடவில்லை.

பேர்.—உனக்கு இராப்போது நன்றாயிருக்கட்டும். என்னுடன் பாராக்கொடுக்க வேண்டிய ஹொரேஷியோ, மார்ஸெலஸ் இருவரையும் கண்டால் விரைவாய் வரச்சொல்.

பிரா.—அவர்கள் வருகை எனக்குக் கேட்கிறாப்போலிருக்கிறது. யார் அங்கே? நில்.

ஹொரேஷியோ, மார்ஸெலஸ்-பிரவேசம்.

ஹொ.—இந்த ராச்சியத்திற்கு நண்பர்கள்.

மார்.—டென்மார்க்கு அரசன் அடிமைகள்.

பிரா.—கடவுள் உங்களை இரக்ஷிக்கட்டும்.

மார்.—நல்ல போர்வீரா-போய்வா. உன்னுடைய ஸ்தானத்தில் பாராவுக்கு வந்திருப்பது யார்?

பிரா.—என் ஸ்தானத்தில் பெர்னார்டோ வந்துவிட்டான். உனக்குநல்ல இரவு ஆகட்டும். [போய்விடுகிறான்.]

மார்.—ஓ பெர்னார்டோ!

பேர்.—ஹொரேஷியோ வந்திருக்கிறானோ? சொல்.

ஹொ.—அவனைப்போல ஒருவன்.

பேர்.—ஹொரேஷியோ, மார்ஸெலஸ், உங்கள்வரவு நல்வரவாகுக.

மார்.—இன்று இரவும் அது தோன்றிற்றா?

பேர்.—நான் ஒன்றையுங்காணவில்லை.

மார்.—நாம் இருவரும் இரண்டு முறை கண்ட பயங்கரமான தோற்றம், நமது மனத்தின் கற்பனையென்றும் நம்பக்கூடியதல்ல வென்றும் ஹொரேஷியோ சொல்லுகிறான். ஆனதுபற்றி இன்று இரவில் நம்மோடுகூட முழுமையும் பாராவுக்குஇருக்கும்படி ஹொரேஷியோவைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அந்தப்பிசாசு மறுபடியும் வருமாயின், நாம் பார்த்தது வாஸ்தவமென்று ஹொரேஷியோவுக்கு ஏற்படும். அவன் அதனுடன் பேசவும் பேசலாம்.

ஹொ.—போ, போ, அது வரவே வராது.

பேர்.—சற்றுஉட்கார்; நாங்கள் இரண்டு இராத்திரி பார்த்ததை மறுபடியுஞ் சொல்லுகிறோம். கேட்பையாயின், உனக்கும் நாங்கள் சொல்வதில் நம்பிக்கையுண்டாகும்.

ஹொ.—ஆனால் உட்காருவோம்; பெர்னார்டோ அதைக் குறித்துச்சொல்லட்டும்.

பேர்.—துருவத்திற்குமேற்கில் இப்போது ஒரு நக்ஷத்திரம் தோன்றுகிறதல்லவா? சென்ற இரவில் இதே நக்ஷத்திரம் இதே இடத்தில் ஒளிவீசிக் கொண்டிருக்கும் பொழுது ஒருமணி அடித்தது. மார்ஸெலஸும் நானும்......



[பிசாசு வருகின்றது.]

மார்.—வாயைமூடு; விலகிநில்; அது வருகிற இடத்தைப்பார்.

பேர்.—இறந்துபோன அரசன் ரூபமாகவே இருக்கின்றதே!

மார்.—உனக்கு மந்திரம் தெரியுமே, ஹொரேஷியோ, நீ அதனிடத்திற்பேசு.

பேர்.—அது அரசனைப்போல் இல்லையா? ஹொரேஷியோ! நன்றாய் உற்றுப்பார்.

ஹொ.—அப்படியே இருக்கிறது; பயமும் ஆச்சரியமும் உண்டாகி நான் மெய் நடுங்குகிறேன்.

பேர்.—அதுபேச ஆசையுள்ளதாயிருக்கின்றது.

மார்.—அதை ஒரு கேள்விகேள், ஹொரேஷியோ.

ஹொ.—[பிசாசைநோக்கி] இறந்து புதைக்கப்பெற்ற டென்மார்க்கு அரசனுடைய அழகிய வீரரூபத்தைத் தரித்து இரவில் சஞ்சாரம் செய்யும் நீ யார்? கடவுள் மேல் ஆணை, நீ பேசவேண்டும்.

மார்.—அதற்குக் கோபம் வந்துவிட்டது.

பேர்.—அது ஒய்யாரமாகப் போகின்றது, பார்!

ஹொ.—ஆணை இருக்கிறது; நின்று பேசிவிட்டுப் போ. [பிசாசுபோய் விடுகிறது]

மார்.—அது போய்விட்டது; பேசாது.

பே.—ஹொரேஷியோ, உன் உடல் நடுங்குகிறதே, முகம் வெளுத்துப் போயிற்றே. இது மனத்தின் கற்பனையாகா தென்று விளங்குகின்றதா? உனக்கு என்ன தோன்றுகிறது?

ஹொ.—கடவுள் அறியச் சொல்லுகிறேன். என் கண்களால் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்திராவிட்டால் நான்நம்பி இருக்கமாட்டேன்.

மார்.—அது அரசனைப்போல இருக்கவில்லையா?

ஹொ.—நீ உன்னைப்போலிருப்பது போலத் தான் அதுவும் அரசனைப்போலிருக்கிறது; பேராசை கொண்ட நார்வே அரசனை வென்ற போது எந்த கவசத்தைப் பூண்டிருந்தானோ அதைப் போன்றதாய்த்தானிருக்கிறது பிசாசுபோட்டிருக்கும் கவசமும்; போலாக்கர்களோடு யுத்தஞ் செய்தபோது அரசன் முகம் இன்று நாம் பார்த்தபோது கோபமுள்ளதாயிருந்தது போலத்தான் இருந்தது. அதிசயமாயிருக்கிறது.

மார்.—இந்தப் பிசாசு இதற்கு முன் இரண்டு முறை இதே காலத்தில் எங்கள் பாராக்காலத்தில் யுத்த வீரனைப்போல் நடந்துகொண்டு வந்திருக்கிறது.

ஹொ.—என்ன கருத்துடன் வருகிறதோ யான் அறியேன்; எல்லாவற்றையும் சீர்தூக்கிப்பார்த்தால் இது நமது இராச்சியத்திற்கு ஏதோ கேட்டைச் சூசிப்பிக்கின்றது. உரோமாபுரி சிறப்புற்று வாழ்ந்த காலத்தில் ஜூலியஸ் ஸீஸர் இறந்ததற்குச் சிறிது காலம் முன் புதைத்த பிணங்கள் குழிகளைவிட்டுக் கிளம்பின; தெருக்களில்நின்றுகூக்குரலிட்டன; ஆகாயத்தில் தூமகேதுக்கள்தோன்றின; மேலுலகினின்று இரத்தம் சொரிந்தது; சூரியன் ஒளிமழுங்கிற்று; கட-

வினுக்குக்களிப்புண்டாக்கும் சந்திரன் பிரளயகாலத்தை யொத்த இருளடைந்தது; அக்காலத்தைப் போலவே நமது தேசத்திற்கும் பிரஜைகளுக்கும் இனிவரப்போகிற கேடுகளுக்குஅறிகுறியாகவே விண்ணும் மண்ணும் விகாரத்தையடைந்திருக்கின்றன.

[பிசாசு வருதல்.]

சும்மா இரு. அதோ அது மறுபடியும் வருகின்றது பார்! பிசாசு என்னை அடித்தாலும் அடிக்கட்டும்; அதன் குறுக்கே நான் போகின்றேன். [பிசாசை நோக்கி]மாயாரூபமே! நில்; வாயுளதாயின் என்னுடன் பேசு; உன் கவலை நீங்கும்படியாயும் எனக்குப் பெருமை யுண்டாகும்படியாயும் நான் செய்யக் கூடிய நன்மை ஏதாவது உண்டாயின் அதனைச் சொல்.

உன்னுடைய இராச்சியத்தின் இரகசியம் உனக்குத் தெரிந்திருந்து, அதை முன்னமேல் அறிவித்தலினால் கேட்டை விலக்கக் கூடுமாயின் நீ வாய்திறந்து பேசு.

பிறர் பொருளை அபகரித்துப் பூமியில் புதைத்து வைத்திருந்தால் அந்தப் பொருளைப் பற்றி உன்னைப்போன்ற பிசாசுகள் பூமியில் அலைகின்றன என்று உலகத்தார் சொல்லுகிறார்கள். [கோழிகூவுகின்றது] அப்படி இருந்தாலும் சொல்லு, நின்று பேசு; மார்ஸெலஸ்! அதை நிறுத்து.

**மார்.**—என் கத்தியால் அதை அடிக்கட்டுமா!

**ஹோ.**—நிற்காவிட்டால் அப்படியே செய்.

**பேர்.**—இதோ வந்து விட்டது?

**ஹோ.**—இதோ இருக்கிறது. [பிசாசு மறைந்து விடுகிறது.]

**மார்.**—அது போய்விட்டது; அதன் கம்பீரத்தை நோக்கின் அதை அடிக்கப்பிரவேசிப்பதனால் நாம் அதை அவமானம் பண்ணுகிறது போலிருக்கிறது.

**பேர்.**—அதுபேசத்தானிருந்தது; ஆனால் அதற்குள்கோழி கூவி விட்டது.

**ஹோ.**—அந்தத் தொனிகேட்டவுடன், குற்றவாளி போலல்லவோ அது திடுக்கிட்டது; கோழிகூவிப் பகலவனை எழுப்புகின்றது என்றும் அதன் குரலைக் கேட்கின், பிசாசுகள் விண்ணிலாயினும், மண்ணிலாயினும், நீரிலாயினும், நெருப்பிலாயினும், எங்கிருப்பினும், தங்கம்இடத்திற்குப் போய்விடுகின்றன வென்றும் எனக்குக் கேள்வியுண்டு. அது வாஸ்தவமென்பதை இன்றைக்கு இந்தப் பிசாசு ருசிப்பித்து விட்டது.

**மார்.**—கோழி கூவ அது மறைந்து விட்டது; நமது இரக்ஷகரான இயேசுவின் ஜனனதினத்தில் இரவு முழுமையும் கோழி பாடுகின்றதென்றும், அவ்விரவில் பிசாசுகள் வெளியில் வருகிறதில்லை யென்றும், இராக்காலம் ஆரோக்கியமானதென்றும், கிரகங்களினால் பீடைகள் உண்டாகா வென்றும், சூனியம் வைப்பவரின் மந்திரம் பலிப்பதில்லை யென்றும் வேறு சிலர் சொல்லக் கேள்வி. இயேசுவின் ஜன்மதினம் அத்தனை பரிசுத்தமும் கருணையுமுடையதாம்.



**ஹோ.**—எனக்கும் அப்படித் தான் கேள்வி; அதில் எனக்கு ஒருவாறு நம்பிக்கையும் உண்டு. காலைப்பொழுது செவ்வாடை உடுத்துக் குணதிசைமலையிலுள்ள பனியின்மேல் உலாவுகின்றது பார். புறா கலைந்து போவோம்; ஒரு விஷயம் சொல்லுகின்றேன் கேளுங்கள்; இன்றிரவு நாம் கண்டதை ஹாம்லெட் இளவரசனுக்குச் சொல்வோம்; நம்மிடத்தில் வாய்திறக்காமலிருந்த இந்தப் பிசாசு அவனிடத்தில் நிச்சயமாய்ப் பேசும்.

## முதல் அங்கம்.

### இரண்டாவது களம்.

கோட்டைக்குள் இராஜ சபை.

பிரவேசம்—அரசன், ராணி, ஹாம்லெட், பொலோனியஸ், லேர்டீஸ், அரண்மனை உத்தியோகஸ்தர்கள்.

**அரசன்.**—நமது அருமைச் சகோதரர் பிராணவியோகமடைந்தது மறக்கப்படவில்லை; நாமும் நமது நாட்டிலுள்ளார் அனைவரும் துக்கங்கொண்டாடி மனம் நொந்திருந்தும், பிரகிருதியை விவேகம் வென்றதினால், நமது ஜேஷ்டனை ஞாபகத்தில் வைத்துடன் சொந்த விஷயத்தையும் மறக்கிலேம். ஆனதுபற்றிச் சிறிது காலம் நமக்கு மதுனியாயிருந்து இப்போழ்து இவ்வீரபூமிக்கு ராணியாயிருப்பவளை குறுங்களியுடன் எமக்கு நல்லுயிர்த்துணைவியாக ஏற்றுக் கொண்டோம். இவ்விவாகத்தில் தமது யோசனைகளை அனுசரித்தே நடந்திருக்கின்றோம். தங்களுக்கு நமது வந்தனத்தை அளிக்கின்றோம். லேர்டீஸ், உன் சமாசாரம் என்ன? ஏதோ மனு உண்டென்றாயே அதுஎன்ன?

**லேர்டீஸ்.**—பிரபுவே! தாங்கள் தயவுசெய்து என்னைப் பிராஞ்சு தேசத்துக்குத் திரும்பவும் போக அனுமதி கொடுத்தல் வேண்டுமென்பதே என் மனு. தங்கள் மகுடாபிஷேக காலத்தில் என் இராஜபக்தியைத் தெரிவித்தற் பொருட்டு அங்கிருந்து வந்தேன், அச்சடங்குகள் நிறைவேறி விட்டபடியால் பின்னும் அங்கேயே என் மனம் செல்லுகின்றது. கருணை செய்து உத்திரவளித்து மன்னித்தல் வேண்டும்.

**அரசன்.**—உன் பிதாவின் உத்திரவு பெற்றாயா? பொலோனியஸ் என்னசொல்லுகிறார்.

**பொலோ.**—என்னை அடுத்தடுத்துக் கேட்டமையால் அவன் இஷ்டப்படி செய்யலாமென்று சம்மதித்து விட்டேன். தாங்களும் உத்திரவு தரலாம்.

**அரசன்.**—லேர்டீஸ்! நல்ல சமயத்தில் புறப்படு; உனது உத்தம குணங்கள் காலத்தை இஷ்டப்படி செலுத்தும்படி செய்யட்டும். [ஹாம்லெட்டை நோக்கி] ஆ! ஹாம்லெட், நமது புத்திரா!

**ஹாம்லெட்.**—[காதிற்படாதபடி] உறவானாயினும் உன்னிடம் யான் பற்றற்றவனே.

**அரசன்.**—இன்னும் இருள்செறிந்த முகத்துடனிருக்கின்றாயே.

**ஹாம்.**—அப்படிஇல்லை, பிரபுவே, கதிரவனொளியிற்றானே இருக்கின்றேன்.

அரசி.—நல்ல பிள்ளாய்! கறுத்த ஆடையைக்களை; அரசனை நண்பனாக நோக்கு; கண்ணைக்கவிந்து மண்ணில் உன் தந்தையைத் தேடாதே. ஜீவராசிகள் எல்லாம் இறந்து நித்தியத்துவத்தை யடைவது சாமானியமென்று நீ அறிவாயே.

ஹாம்.—ஆம், அம்மா, அது சாமானியந்தான்.

அரசி.—அப்படியாயின் உன்மட்டில் வேறாய்த் தோன்றுவதேன்?

ஹாம்.—தோற்றமென்றா சொல்லுகிறீர் [illegible] அம்மா! அன்று; வாஸ்தவம் அப்படித்தான். நடித்த [illegible] நான் அறியேன். உலகத்தாரைப் போலக் கறுத்த ஆடை உடுத்தலும், பெருமூச் செறிதலும், கண்ணீர்ப் பெருக்கலும், முகவாட்டமும், இவை போன்ற [illegible] என் மனத்தின் உண்மையான நிலையை அறிவிக்க [illegible] தோற்றம்; எவரும் அவற்றை நடித்து காட்டலாம். [illegible] அபிநயித்தலாகாது. மற்றவையோ துக்கத்தின் வேஷங்களே.

அரசன்.—ஹாம்லெட், இறந்த [illegible] பிதாவைப்பற்றித் துக்கங் கொண்டாடுதல் உன்னுடைய உத்தம குணத்திற்குப் பொருந்தியதே. உன் பாட்டன் இறந்தான். பூட்டனு மிறந்தான். அவர்கட்குப் பின்னிருப்போர் சிறிதுகாலம் இறந்தவரைக் குறித்து விசனப்படுதல் கடமை தான்.

ஈமக்கடனையும் ஆறாத்துயரம் பாராட்டல் மூடர் பிடிவாதமாம்; அத்துயரம் ஆண்மையாகாது; அவ்வாறு துக்கித்தல் தேவராணையைக் கடப்பதாகும். திடனும் பொறுமையு மற்ற சித்தத்தையும், தெளிவையடையாத புத்தியையும் உடையவனென்றே அப்பேர்க்கொத்தவனை எண்ணல் வேண்டும். இத்தன்மைய வீண் [illegible]த்தைவிட்டு நம்மையே உன்பிதாவாக நினை. எமக்குப் பின் பட்டத்திற்கு வரவேண்டியவர்களில் உன்னினும் நெருங்கினவன் ஒருவனுமில்லை. நமது பிரதானியாகவும் புத்திரனாகவும் நீ இரு.

அரசி.—நான் உன்தாயன்றோ? என் விண்ணப் பத்திற்கும் செவிகொடு. எங்களுடன் கூடவே இரு. வித்தன்புரத்திற்குப் போகாதே.

ஹாம்.—தங்களிஷ்டப்படி நடக்கற்கே முயல்வேன், அம்மா.

அரசன். அது மதுரமான மறுமொழியே. [ஹாம்லெட்டை நோக்கி] இவ்விராச்சியத்தில் நம்மைப்போலவே நீயும் இரு. [அரசியை நோக்கி] காதலி, ஹாம்லெட் சுயமாகவே நமது வேண்டுகோளுக் கிணங்கினது எனக்கு ஆநந்த பரவசத்தை யுண்டாக்கிற்று. ஆதலின் களியாட்டயர்வோம் வா. ஒவ்வோர் முறை மது பானஞ் செய்தலை விண்ணுலகும் மண்ணுலகும் அறிய வெடி போட்டுவர்க் களிப்போம் [ஹாம்லெட்டைத் தவிர எல்லாரும் போய் விடுகிறார்கள்.]

(இன்னும் வரும்.)

K. வெங்கட்டராமய்யர், B. A.



# ராமதாஸர்.

(ஒரு சிறு கதை)

வெகு காலத்துக்கு முன்னால் ஹிமயமலைச் சாரலில் "கிருபானந்த மடம்" என்ற ஒரு மடம் இருந்தது. அங்கே உலகந்துறந்த சன்யாசிகளும் தபஸிகளுமே வசித்து வந்தார்கள். இக்காலத்தைப்போல அப்பொழுதும் காஷாயம் மாத்திரம் தரித்த வெறுந்தடியர்கள் பலர் இருந்தார்கள். என்றாலும் கடவுளிடத்தில் நிஜபக்தியுடைய ஸாதுக்களும் சிலர் இருந்தார்கள் என்பதற்கு சந்தேகமில்லை.

கிருபானந்த மடம் பார்ப்பதற்கு வெகு அழகு. அது கருங்கற்களால் நாலுபுறமும் இருபதடி உயரம் கற்சுவர். நடுவே சங்கரநாராயண ஸ்வாமி கோவில். அதன் கோபுரம் மடத்துக்கு இரண்டு மைல்தூரத்துக்கு அப்பால்வரும் பொழுதே 'பளிச்' என்று மரங்களின் இடையே தெரியும். எங்கே பார்த்தாலும் பசுமையான மரங்களும் புஷ்பச்செடிகளும் ரமணீயமாயிருக்கும். பள்ளத்தாக்குகளில் மான் கூட்டங்கள் நிர்ப்பயமாய் மேய்ந்து கொண்டிருக்கும். ஆயிரக்கணக்கான பக்ஷிகளின் கானமும், சலசலவென்றோடும் நீரோடைகளின் த்வனியும் மனதிற்கு ஓர் அமைதியையும் ஆநந்தத்தையும் உண்டாக்கின. ஆகவே அது சம்சாரத்தையும் அதன் துக்கங்களையும் துறந்து ஆத்மவிசாரம் செய்வதற்கு சிறந்த இடமாக இருந்தது.

இம்மடத்திலுள்ள ஸாதுக்கள் அதிகாலையில் ஸ்நாநம் செய்து தங்கள் கர்மானுஷ்டானங்களை முடித்து சுகந்தமுள்ள புஷ்பங்களை யதேஷ்டமாய்ப் பறித்து ஸ்ரீ சங்கரநாராயணனுக்கு பூஜை செய்வார்கள். பின்பு மரத்து நிழலிலும் பாறைகளின் நிழலிலும் உட்கார்ந்து வெகுநேரம் த்யானம் செய்வார்கள். சிலர் யோகாப்யாஸம் செய்வார்கள். பலவீனமுள்ளவர்கள் சங்கரநாராயணனுக்கு நிவேதனம் செய்த பழங்களையும் கிழங்குகளையும் கொஞ்சம் சாப்பிடுவார்கள்.

இவர்களுள் ராமதாஸர் என்பவர் ஒருவர். அவருக்கு சுமார் 40 வயதிருக்கலாம். ஸ்ரீ ராமனிடத்து அத்யந்த பக்தி. ராம்-ராம்-என்று ராமத்யானத்தில் உட்கார்ந்து விட்டால் நாள் இரண்டானாலும் எழுந்திருக்க மாட்டார். சில சமயங்களில் 'என்னையனே உன்பாத ஸேவை எனக்கு எப்பொழுது கிட்டுமோ?' என்று தேம்பித்தேம்பி அழுவார். இவர் திலகபுரம் என்னும் கிராமத்தில் நிரம்ப ஏழையான ஒரு பிராமணருடைய ஒரே பிள்ளை. சிறுவயதிலேயே தாய்தந்தையரையும் மனைவியையும் இழந்து விட்டார். அதிக கஷ்டமான நோயிலகப்பட்டு உடல் வாடி கையிலுள்ள பணத்தை யெல்லாம் செலவிட்டு சுத்தப் பாபராய் நடுத்தெருவில் நின்றார். நல்லமானியானதனால் பிச்சை யெடுத்து ஜீவிக்க அவர் மனம் சம்மதிக்க வில்லை. கடைசியாய் ஒன்றுந் தோன்றாமல் தற்கொலை செய்து கொள்வதென்று தீர்மானித்து ஒரு நாள் ராத்திரி அவ்வூருகேயுள்ள குளத்தை

நோக்கிச் சென்றார். மூன்று நாள் ஆகாரமில்லாமல் இருந்ததனால் நடுவழியில் மயங்கிவிழுந்தார். அப்படி மயங்கிக் கிடக்கும்போது அவருக்கு முன்னால் ஒரு ஜோதி தோன்றி, "குழந்தாய்! பயப்படாதே சம்சாரசுகதுக்கங்களில் விருப்பும் வேண்டாம் வெறுப்பும் வேண்டாம். நித்யானந்த மூர்த்தியான ஸ்ரீ ராமனிடத்து உன் மனத்தை வை. அவர் உன் மீது கிருபை கூர்ந்தருளுவார்" என்று சொன்னதாக ஒருகனவுகண்டார். அவர்கண் விழித்ததும் தன் மனத்தில்ஓர் சாந்தத்தையும் சந்தோஷத்தையும் கண்டார். தான் தற்கொலை செய்து கொள்வதாகப் புறப்பட்டது எவ்வளவு தப்பென்று நன்றாய் அறிந்தார். அன்றைக்கே சன்யாசம் வாங்கிக் கொண்டு அவ்வூரை விட்டு வெளிக்கிளம்பி விட்டார். கடைசியாய் கிருபானந்த மடம் வந்து சேர்ந்து அங்கே வசித்து வந்த சங்கதி நமக்கு முன்னமே தெரியுமல்லவா?

ஒரு நாள் ராமதாஸருக்கு ஓர் பெரிய சந்தேகமும் அதனால் துக்கமும் உண்டாயிற்று. அவர் பின் வருமாறு யோசிக்கலானார்: "மாம்பழம் சாப்பிடுவதற்கு ருசிதான்; ஆனால் ஆயிரம் பழம் சாப்பிடென்றால் ஒருவனால் முடியுமோ? சங்கீதம் நிரம்ப ஆனந்தத்தை உண்டு பண்ணுகிறது. சங்கராபரணமும் தோடியும் கேட்பதற்கு வெகு இனிமை. ஆனால் ஒருவருஷம் நீ இடைவிடாது தோடியே கேட்க வேண்டுமென்றால் யாரால் ஆகும்? லோகநியாயம் இப்படி இருக்க பகவானை மாத்திரம் 'தெவிட்டாப் பேரின்பவாரிதி' என்கிறார்களே. அப்பேரின்பம் மட்டும் என் தெவிட்டாது. ராமபத்ரா! நீ கருணை கூர்ந்து எனக்கு தர்சனம் தந்தருளும் காலத்து எனக்கு அது தெவிட்டி விட்டால் நான் என்ன செய்வேன்!"

இவர் மனத்து இம்மாதிரி யோசனையும் பயமும் குடி கொண்டிருக்கும் சமயம் ஆகாயம் சில விடங்களில் ரோஜாவர்ணமாயும் சில விடங்களில் தங்கவர்ணமாயும் பிரகாசித்தது. புற்றரையின் மேலும் செடிகளின் மேலும் பனித்துளிகள் விலையுயர்ந்த முத்துக்களைப்போல் மின்னின. கிளிகள், புறாக்கொத்திகள், காகங்கள், குருவிகள் முதலிய பக்ஷிகள் தூக்கத்தை ஒழித்து மனம் போனபடி கூச்சலிட்டுப் பறந்து கொண்டிருந்தன. பட்டுப் பூச்சிகள் அப்பொழுது தான் மலர்ந்து கொண்டிருக்கும் புஷ்பங்களின் மேல் உட்கார்ந்து தங்கள் இறகுகளை உலர்த்திக் கொண்டிருந்தன. இவைகளை யெல்லாம் பார்த்து ராமதாஸர் நாம் முதல் முதல் இங்கே வந்தபோது இவைகளெல்லாம் பார்ப்பதற்கு ஒரு ஆனந்தத்தை உண்டாக்கின. இப்பொழுதோ எல்லாம் ஸர்வஸாதாரணமாய் போய் விட்டது. பட்டுப் பூச்சிகளை இப்பொழுது பார்க்கிறேனா? இப்பறவைகளின் கூச்சல் தலைவலியைத் தான் உண்டாக்குகின்றது. பரமேச்வரஸாந்நித்யமும் இப்படித் தானிருக்கும். அனந்த கோடிகாலம் ஈச்வரஸேவை செய்கிறதென்றால் அதுவும் சலித்துத் தான் போகும் என்று இவ்வாறு ஆலோசித்துக் கொண்டே வெகு தூரம் நடந்தார். சங்கர நாராயணஸ்வாமி கோவில் கோபுரமும் மறைந்து போய்விட்டது. முன்னால் வெகு தூரத்தில் ஸ்ரீ நகரத்தின் கோபுரங்களும் மேடைகளும் இளம் வெயிலில் மங்கலாய்த் தெரிந்தன. யோசனையிலாழ்ந்திருந்ததனால் வெகுதூரம் வந்து விட்டோம் என்று நினைத்தார். அவருக்குப் பக்கத்தில் ஒருகாடு தோன்றிற்று. எண்ணிறந்த பூச்சிகளின் கானமும், மரக்கிளைகளின் மேல் மோதும் காற்றினோசையும் ராமதாஸர் காதில் விழுந்தன. காட்டுப் புஷ்பங்க



ளின் வாஸனை ஒரு உத்ஸாகத்தை உண்டு பண்ணிற்று. அக்காட்டுக்குள் பிரவேசித்தார். போகப்போக அவர்மனம் குதூகலித்தது. காட்டுப் புஷ்பங்கள் இன்னும் வாஸனைகளை வீசின. பூச்சிகளின் கானம் தேவகானத்தினும் இனியதாய் அவர் மனத்திற்கு தோன்றிற்று. பார்க்கு மிடமெங்கும் ஒரே ஜோதியாய் கோடி சூரியோதயமானாற் போல பிரகாசித்தது. கண்களை மூடிக்கொண்டு ஆனந்த பரவசராய் அப்படியே உட்கார்ந்து விட்டார். "கருணாஸாகரமே! ராமப்ரபோ! உன் மகிமை என்ன மகிமை! என்று அவர் மனமுருகிக்கதறும் போது பகவான் ஸ்ரீ ராமமூர்த்தியாக அவருக்கு ப்ரத்யக்ஷமானார். கோதண்டபாணியாய் ஸீதாலக்ஷ்மண ஸமேத ராய் ஒரு நிமிஷநேரம் ஸேவை தந்தருளினார். ராமதாஸரோ ஆனந்தக்கடலிலாழ்ந்து தேகத்தில் ஸ்மரணையற்று கற்சிலை போலிருந்தார்.

அடுத்த நிமிஷம் அப்பூச்சிகளின் கானம் நின்று போய்விட்டது. அவர் கண் விழித்துப் பார்த்தார். நாற்புறமும் தோன்றின ஜோதி மறைந்து போய் காட்டின் இருட்டு காடாந்த காரமாய் இருந்தது. மெள்ள எழுந்திருந்தார். கைகால்கள் மிகவும் மெலிந்து பலங்குறைந்துபோயிருந்தன "இதென்ன வேடிக்கை! நமக்கு வரும் போது இருந்த பலம் எங்கே போய்விட்டது?" என்று ஆச்சரியப் பட்டார். காட்டிற்கு வெளியே வந்து பார்க்கும்போது சூரியன் அஸ்தமிக்கும் சமயம். "நாம் பகல் முழுவதும் இங்கேயே இருந்து விட்டோமே. நம்மை மடத்தில் தேடுவார்களே!" என்று நினைத்தார். அவ்வளவு தானா விந்தை? அவர் முகத்திலிருந்து இரண்டு முழத்தாடி வெள்ளை வெளேரென்று தொங்கிக் கொண்டிருந்தது. ராமதாஸருக்கு தாம் பார்ப்பதெல்லாம் நிஜமோ கனவோ என்ற சந்தேகம் உண்டாயிற்று மடத்தை நோக்கி மெதுவாய் நடந்தார். வழியில் ஒரு நீரோடையில் புடவை தோய்த்துக் கொண்டிருந்த ஸ்திரீகளில் ஒருத்தி இவரைப்பார்த்து "கிருபானந்த மடத்திலுள்ள சந்நியாசிகளை யெல்லாம் பார்த்திருக்கிறோமே இவர் யாரோ தெரியவில்லை" என்றாள். அதைக்கேட்ட ராமதாஸர் "பெண்டுகளுக்கு என்னதான் தெரியும்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு மடத்துக்குச் சென்றார். அங்கே மாறுபாடுகள் பல உண்டாயிருந்தன. புதிய கட்டடங்கள் பல கட்டப்பட்டிருந்தன. அவர் பயிர் செய்து வந்த 'அசுவத்தச்' செடிகளெல்லாம் இப்பொழுது பெரிய மரங்களாய்இருந்தன. மடத்துக் குட்புகுந்தார். அங்குள்ள சன்யாசிகள் ஸாதுக்கள் யாரும் ராமதாஸருக்கு அடையாளம் தெரியவில்லை. அவர்களும் இவரை ஏற இறங்கப் பார்த்தார்கள். ஒரு சன்யாசி இவரை "நீர் யார்" என்று கேட்டார்.

ராமதாஸருக்கு அடக்க முடியாத பயமும் துக்கமும் உண்டாய் விட்டது. தனக்கு ஒருவேளை பைத்தியம் பிடித்து விட்டதோ என்னவோ வென்று கூட நினைத்தார். கடைசியாய் "கிருபானந்தமடத்துச் சன்யாசி ராமதாஸனைத்தெரிந்தவர்கள் இங்கே யாருமில்லையா?" என்று ஒரு தரம் கூச்சலிட்டார்.

எல்லாரும் பேசாமலிருந்தார்கள். விருத்த சந்யாசி ஒருவர் மாத்திரம் "ராமதாஸரென்று ஒருவர் இருந்ததாக நான்கேட்டிருக்கிறேன். அவர் ஒருநாள் காலையில்

மடத்தை விட்டுப் போனவர் மறுபடி திரும்பி வரவேயில்லையாம் அவருடையகதி எப்படியாயிற்றென்று யார்க்கும் தெரியாது" ஆனல் இதெல்லாம் நூறு வருஷத்துக்கு முந்தின சமாசாரம் என்றார்.

ராமதாஸர் அய்யோ வென்று ஒருதரம் கதறினார். அவருக்கு எல்லாம் தெளிவாய் விளங்கிவிட்டது. "ராமபத்ரா! பேரின்பத்தையும் சிற்றின் பத்தையும்ஒரே திராசில்நிறுத்த என்னை க்ஷமிக்க வேண்டும். பிரம்மானந்தத்தின் தன்மையை அறியாமல்; பிரம்மானந்தம் மாத்திரம் தெவிட்டாதா? என்றுபிதற்றின எனக்கு ஈசுவரஸேவையில் நூறு வருஷங்கள் ஒரு நிமிஷமாய்ப் போகும் என்று கற்பிப்பதற்காக இப்படி செய்தீர்போலும். பேதையான என்னை மன்னித்தருளும் சரணம்," என்று கண்களில் நீர் பெருகக்கதறி தரை மீது சாஷ்டாங்க தெண்டனிட்டார். அப்போதே அவருடைய ஆத்மாவும் ஸ்ரீ ராம சந்திரனுடைய சரணாரவிந்தங்களில் லயமாய் விட்டது.

C. N. இராமசுவாமி அய்யர், B A.,

---

# THE HOME AS IT SHOULD BE.

# குடும்பம் இருக்கவேண்டிய நிலைமை.

## 3-ம் அத்தியாயம்.

## குடும்பத்தலைவி.

தற்காலத்திலே ஒரு இந்திய ஐக்கிய குடும்பத்திலே ஒரு வீட்டின் விஷயங்களில் எல்லாம் சிறந்த கவனம் வைத்து நன்கனம் நடத்தி வருபவள் ஒரு ஸ்திரீயே ஆவள். பல ஆடவரும் தங்கள் மனைவியைக் காணாத காலத்தில், தம்மைச் சேர்ந்த பக்கத்து வீட்டார்களை, "எம் அகத்துக்காரி எங்கே போனாள் தெரியுமா" என்றாவது அல்லது "எம் வீட்டுக்காரி எங்கே போனாள் தெரியுமா" என்றாவது கேட்பது வழக்கம். ஆகவே இப்புருஷர்கள் தம் வீட்டுப் பணிகளைச் சிறப்புறச் செய்து வரும் பாரத்துக்குத் தம் மனைவிகளை உத்தரவாதிகள் என்று கொண்டிருக்கும் எண்ணம் செவ்வையாய்த் தெரிகிறது.

இல்லத்தைப் பெருக்கி, மெழுகிக் கோலமிட்டுப், பாத்திரம் தேய்த்துப், பால்கறந்து, தயிர் கடைந்து, அன்னம் சமைத்து வட்டித்தல் முதலிய இல்லப் பணிகளில் ஸ்திரீயே முதன்மை பெற்று எங்கும் சிறப்பின் செய்து வருகிறாள் என்று பலரும் அறிவர். இது தவிர இளம்பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும், ஸ்நாநம் செய்வித்தல், நகை பூட்டல் முதலிய வைகளிலே சிறப்புறச் செய்பவளும் ஸ்திரீயே. எவரேனும் தம் உற்றார் பெற்றார் வந்த காலத்தே அவர்க்கு இன்பமுற மரியாதையின் அனைவரும் நடந்து உபசரிக்கத் தலைமை செய்பவ



ளும் ஸ்திரீயே; தம் பெண்கள் பிள்ளைகள் சரியான காலத்தே பள்ளிக்கூடங்களுக்குச் சென்று, ஒழிந்த காலங்களில் வீட்டில் படிக்கும்படி எச்சரிக்கை செய்பவளும் இவளே. தம் பெண்கள் தம் வீட்டின் பணிகளைச் சிறப்பின் செய்யவும், அவர்கள் புக்ககம் போகும் காலத்தே அநுசரித்து ஒழுகவேண்டிய முறைமைகளைக் கவனிக்கவும் செய்பவள் இவளே. இளம்பிள்ளைகள் வீட்டிலும் தெருவிலும் வீண்கலகம் விளைத்துச் சண்டை செய்யாது நற் கதைகளையும் புத்திமதிகளையும் சொல்லி இன்புற நன் மார்க்கத்தை அநுசரிக்கச் செய்பவளும் தாயே அன்றோ? ஒரு பெண்ணைக் குடும்ப விவகார விஷயங்களில் இளமையிற் பழக்காது அசட்டை செய்து விட்டால் ஒரு குடும்பத்துக்கு விளையும் தாழ்வு இன்ன தென்று செப்புதற்கு முடியாது. "பெண் கொடுத்தவனுக்கு வாயும் உண்டா?" என்று வழங்குகிற பழமொழியைக் கவனித்தால் புக்ககத்தார் பெண்களைத் தந்தோரைப் பலவிதச் சங்கடங்களுக்கு உட்படுத்துவார் என்றும், பணம் நகை வேலை முதலிய செலவுகளில் பெண்ணகத்தார் மனம் சலிக்காது செலவழிக்க வேண்டும் என்ற ஒரு வித அபிப்பிராயம் இருக்கிற தென்றும், பெண்களையும், புருஷர்களையும் ஒப்பிட்டு நோக்கின், பெண்களை தாழ்ந்த வரிசையிலேயே கணக்கிட்டார் என்றும் நன்றாய் ஊகிக்கலாம்.

"ஐந்து பெண்ணுண்டேல் அரசனும் ஆண்டி" என்னும் பழமொழி நன்றாய்க் கவனிக்கற்பாலது. இதனால் பெண்களைப் பெற்றோர், பெரும் வீட்டதிகாரியாய் இருப்பினும், வறும் வீட்டதிகாரியாய் ஆவர். இதனோடு தற்காலம் விசேஷமாய்க் கவனிக்கப்படும். வரதக்ஷணையும் சீரும் நகைப்பணமும், கவனிக்கற்பாலன. பெண்களைப் பெற்றோர்க்கு பலபல சந்தர்ப்பங்களில் தம் பெண்களைக் கவனித்து அன்பு மீதூரப் பணம் செலவாகிய சீர்கள் செய்ய வேண்டிவருகிறது; மரியாதையாய்த் தாம் செய்யவேண்டிய வற்றைச் செய்துஅதற்கு மரியாதை அடைய வேண்டிய தாகிறது.

விருந்தினரை உபசரித்தல் அறத்துறையில் தருமங்களைச் செய்தல் வருவோர் போவோர்க்கு இன்புற மரியாதையின் நடத்தல், முதலிய பல விஷயங்களும் இல்லத் தலைவியே செய்பவள் ஆவள். தன் அகத்தினிலே உள்ள பொருள்களைச் செட்டாகச் செலவழித்துத் தம் தலைவன் வருவாய்க்கு ஏற்றபடி வழங்கித், தலைவன் சிறந்த சம்பன்னனாயினும் வீண் செலவு செய்யாமலும், நகைப் பைத்தியம் பிடியாமலும் நன்னெறியில் ஒழுகுபவள் இத்தலைவியே. பிள்ளைகளையும் பெண்களையும் நல்லவழியிற் பழக்கிக் குடும்பத்தைச் சீரோங்க விளங்கச்செய்து கணவனுடன் சிறந்த அன்போடு பழகி, சுற்றத்தாரை இன்பங்கொள்ள நடத்தித், திரவியத்தை வீண் செலவு செய்யாதே செய்யவேண்டுவனவற்றைச்செய்து, இயன்ற அளவு தான் இளமையிற் கற்றதும், தம் பெண்களுக்குப் பயிற்றிவரும் ஆன சிறந்த பாகசாஸ்திரானு கூலமான உண்டியைத் தம் குடும்பத்தார்க்கூட்டி, வீட்டில் ஆரவாரமும் கலகமும் இல்லாது மாமனார் மாமியார் முதலிய வயதுமுதிர்ந்த பெரியோர்களுக்கு மனம் களிக்குமாறு செய்து விளங்கும் ஒரு க்ருஹிணியின் பெருமையைச் செப்புதல் இயல் புடைத்தன்று.

நாம் மேற்குறித்த அலுவல்களில் தலைவி செலுத்தும் காலம் ஒழிய மிகுந்த காலமாம் மத்தியானத்தில் சிறிது படிப்பின் மனமூன்ற இடம் இருக்கும்.

அன்னம் வட்டிப்பவளாம் இவளோ இளைஞரும் முதியோரும் தினம் அநுஷ்டானங்கள் செய்வதற்கு உதவி, பெரியோர் பூசைமுதலியவற்றிற்கு நைவேத்தியம் மடியோடும் மரியாதையோடும் செய்து, சிறந்த கவனத்தொடு நடப்பாள்.

மாலையிலே தன் பெண்களுக்குத் தலைவாரிச் சடையிட்டு, நகை பூட்டிப்பூ முடித்து அழகு செய்தலும் இவளுக் கோர் ஆநந்தமே. இனிய குரலுடைய பெண்கள் அழகிய சிறந்த பெண்பாட்டல்களைத் தாய் சொல்லிக் கொடுக்கக் கற்றுக் கொள்ளலும், பாட்மான வற்றை ஒப்புவித்தலும் கேட்க மிக ஆநந்தமே. ஆகவே ஒரு இல்லத் தலைவி செய்யவேண்டிய கடமைகள் இன்னின்னவை யென கணக்கிடுதல் சாத்தியம் இல்லையாதலால் சிறந்த அம்சங்களைச் சொல்லி நிறுத்தினோம்.

இவ்விஷயங்களைக் கவனித்தால் வீட்டின் தலைவனே திரவியம் சம்பாதிப்பவனும், வீட்டைவிட்டு வெளியிலே நடக்கும் லௌகிக விஷயங்களையும், புதல்வர்களின் கல்வியையும் கவனிக்க வேண்டுபவனும் ஆகின்றான் என்பது தெளிவு.

(இன்னும் வரும்.)

M. S. நடேசய்யர், B.A.,

மகாமகோபாத்தியாயர்

## ஸ்ரீமான் சாமிநாதையரவர்கள்.

——.o:——

ஆசிரியவிருத்தம்

மருதவளஞ் செறிகுடந்தை மாநகர்க்கு மாமகத்தால் வருமாண்பென்னப்
பொருவவிலாத் தமிழ்பயிற்றிவந்த நின்னுலுஞ் சீர்த்திபொருந்துந்தன்மை
கருதிமகாமகோபாத்தியாயரெனும் பட்டமிற்குக் கவினத்தந்தார்
திருவளர்மன்னவசாமி நாதவள்ளாளினின்போலச் சிறந்தார் யாரே. 1

என்னதானங்களினு மன்னதானஞ்சிறந்த தென்பார் பல்லோ
ரன்னதானத்தினு மரியது வித்தியாதான மதனைநாளு
நன்னர்செய் நீ தோன்று நகர்க்குத் தமதா னப்பெயரை நன்காராய்ந்து
சொன்னவர்தம் மதிவலிதாஞ் சாமிநாதப்பெயர்கொள் சொல்வல்லோனே. 2

மன்னரெலாம் விரும்பு புகழு றும் பாண்டித் துரை மாலும் வாணரெல்லா
முன்னு புகழுறுஞ் சாமிநாதகவிசேகரனு மொருங் கன்புற்றுத்
துன்னு நித்ய நைமித்ய சபைத்தலைமையுறச் சங்கந் துய்க்குமின்பைப்
பொன்னுலகத்தவரறிந்தாற் நவ்வாழ்வை யொருநாளும் பொருட்பண்ணரே, 3



தன்னையடைந்தவர்பிழை யெத்தனைசெயினும் பொறுத்தருளுத்தம் தயாளு
முன்னவன் பாண்டித்துரையும் புலவர்களுமின்ப நனிமுயங்கக் கூடற்
றுன்னியநாற்றமிழ்ச் சங்கத்தைந்தகவைக் கொண்டாட்டத் தழலிக்கண்ணே
மன்னுசபா நாயகருஞ் சாமிநாதப் பெரியோன்வாழ்க மாதோ. 4

பஞ்சமாகாவியங்கண் மிகமலிந்துநாடெங்கும் பரவச்செய்த
விஞ்சுபுகழுறுஞ் சாமிநாத வித்வசேகரனும் வேந்தர் வேந்தா
மஞ்சுநிகர் கொடைப்பாண்டித்துரை மாலுமுயர் தமிழும் வாணரியாரு
மெஞ்சுதலில்லா விந்தப் பெருஞ்சபையு நாடொறும் வாழ்ந்திலங்க மாதோ. 5

எம். கே. எம். அப்துல்சாதிரு ராவுத்தரவர்கள்.
Late Special Magistrate Elayangudi.

## பொது வர்த்தமானங்களும் பிற பத்திரிகைக் குறிப்புகளும்.

### ஸ்பெயின் சக்ரவர்த்தியின் விவாகத்தின்போது வெடிகுண்டு விபத்து.

மேற்படி விஷயத்தைப்பற்றி நமது பத்திரிகையின் தலையங்கத்திலே எழுதியிருக்கிறோம். அதற்கப்பால் வந்த தந்தி விவரங்களைக்கீழே சுருக்கமாகக் குறிப்பிடுகின்றோம்.

### ராஜாவின் மனோதைரியம்.

வெடிப்பிற் கப்பால் ஸ்பெயின் ராஜாஉடனே எழுந்து பயந்துபோய் நின்ற கூட்டத்தாரை யெல்லாம் புன் சிரிப்புடன் "ஸலாம்" செய்து பிறகு தன் மனைவியை கையால் எடுத்துக் கீழே கொண்டுவந்தார்.

### பொது ஜனங்களின் ஆக்கிரகம்.

வெடிகுண்டு மெருகிட்ட உருக்கால் செய்யப்பட்டு வானில் வெடித்தது மாடிகளின்மீதிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த இரண்டு பிரபு குலத்தார் இறந்துபோய்விட்டார்கள். ஜனங்கள் வெகு ஆக்கிரகமுற்று அந்நியர்களையெல்லாம் அடித்துக் கொன்றுவிட முயன்றார்கள்.

### கொலையாளியைப்பற்றிய சந்தேகம்.

மானுயெல் மொரான் என்ற ஒருவனைக் கைதி செய்திருக்கிறார்கள். இவனே வெடி குண்டெறிந்தவனென்பதாக சந்தேக முண்டாயிருக்கின்றது. யாரோ ஒரு இடாலிதேசத்தானே வெடி குண்டெறிந்து விட்டுப் பிறகு தப்பி யோடிவிட்டானென் பதாகவும் சிலர் கருதுகிறார்கள்.

### சூழ்ச்சி செய்யப்பட்ட இடம்.

வெடிகுண்டுச் சூழ்ச்சி லண்டனிலுள்ள சர்வாதிகார விரோதிக் கூட்டத்தாராலேயே செய்யப்பட்டிருக்கக் கூடுமோ என்பதை விசாரித்தனுப்பும் பொருட்டாக ஸ்பானிஷ் அதிகாரிகள் லண்டனுக்கு எழுதினார்கள். லண்டனிலே தான் அந்தச் சூழ்ச்சி நடந்திருக்க வேண்டுமென்பதற்குப் பல சின்னங்கள் புலப்படுகின்றன. இதனால் லண்டனில் வெகு பலமான பரிசோதனைகள் நடத்தப்பெறுகின்றன.

### சேதங்கள்.

மாட்ரிட் நகரத்திலிருந்து கடைசியாக வந்த அறிக்கைகளில் வெடிகுண்டினால் நிகழ்ந்த சேதங்கள் பின் வருமாறு என்பதாக அறிவிக்கப்படுகின்றது.

கொலையுண்டோர்.—3-உத்தியோகஸ்தார்கள், 7 ஸோல்ஜர்கள், வேடிக்கை பார்த்து நோர்களில் 5 பேர். புண்பட்டவர்கள். 200 பேர்.

புண்பட்டவர்களிலே 5 பேர் இறந்து போனதாகப் பிற்பட்டு வந்த தந்தியொன்று தெரிவிக்கிறது.

### கொலை யுண்டோர்களின் மரணக்கிரியை.

கொலை யுண்டோர்களின் மரணக் கிரியைகளை ஆல்பான்ஸோ ராஜாவும் மந்திரிகளும் வந்திருந்து நடப்பிக்கப்போகிறார்கள்.

### எனு ராணி.

எனு ராணி இன்னும் அசவுக்கியம் நீங்காமலே யிருக்கிறார்கள். இது பற்றி மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள் எவையும் தடை செய்யப் படமாட்டா.

### ஆல்பான்ஸோ ராஜா புண்ணாளிகளைப் பார்வையிடல்.

ஆஸ்பத்திரிகளிலே புண்பட்டு கிடப்போர்களை யெல்லாம் ஆல்பான்ஸே அரசர் போய் பார்வை யிட்டார்.

### இறந்து போனவர்களின் மரணக்கிரியை

இறந்து போனவர்களின் மரணக்கிரியையின் தாம் வந்திருக்கும் பொருட்டு ஆலபான்ஸோ ராஜா மிகவும் விரும்பினாரென்ற போதும், மந்திரிகள் அங்ஙனம் ராஜா செய்தல் பொருந்தாதென்று சொல்லிவிட்டார்கள். வேல்ஸ் இளவரசர், இளவரசியார், அன்னிய தேச இளவரசர்கள் என்னோரின் பிரதிநிதிகள் மரணக் கிரியையின்போது வந்திருந்தனர்.

### பொதுஜன உற்சாகம்.

ஜூன் 1-ம் தேதி ஆல்பான்ஸோ ராஜாவும் ராணியும் அரண்மனை மாடியின் மீது வந்து நின்றபோதும் கீழே வந்து கூடியிருந்த ஜனங்கள் மிகுந்த உற்சாகம்



காட்டினர். மாலையில் நகர முழுதும் பெருஞ் சிறப்பாக தீபங்களேற்றி அலங்கரிக்கப்பட்டிருந்தது. உலகமுழுதிலு மிருந்து அரசருக்கும் ராணிக்கும் வாழ்த்துத் தந்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

### எனு ராணியின் மண ஆடை.

எனு ராணியின் விவாக உடையிலே இறந்துபோன ஜனங்களின் ரத்தம் வந்து சிதறிக் கிடந்ததெனப்படுகிறது.

### ஸ்பெயின் ராஜாவின் மீது வெடிகுண்டு எறிந்தவன்.

ஸ்பெயின் தேசத்து ராஜாவின் மீது வெடிகுண்டெறிந்த மாத்யூ மாரால் 25 வயது கொண்ட வாலிபன். பார்ஸிலோனாவுக் கருகேயுள்ள ஸபாடெல் (Sabadell) என்ற ஊரிலே ஒரு நிதிப் பெருக்குள்ளவர்த்தகனது மகனாகப் பிறந்தான். ஜெர்மனி தேசத்திலே போய் உயர்தரக் கல்வி பெற்றான். இப்படியிருக்கையிலேயே "ஸர் வாதிகார விரோத" க்கோட்பாடு இவனது மனதிலே பதிந்து விட்டது. பகிரங்கமாகவே தான் அநார்கிஸ்ட் (சர்வாதிகார விரோதி என்று சொல்லி திரிந்துக் கொண்டிருந்தான் மாட்ரிட் நகரத்திலிருந்து 11-மைல் தூரமுள்ள டாரேஜாம் என்ற கிராமத்திலே தான் போலீஸார் அவனைப் பிடித்தார்கள். இவன் முகத்தையும், அவனது உடைகளையும் பார்தபோது அவன் இரவு முழுதும் பல இடங்களில் சுற்றி ஓடிக் கொண்டிருந்தவனென்று தோன்றியது, பார்ஸிலோனாவுக்கு டிரேயின்கள் புறப்படும் நேரம் எதுவென்று இவன் ஒரு கிராமாந்திர சத்திரத்தில் போய் விசாரணை செய்ததிலிருந்தும், அவனது கந்தையான உடையிலிருந்தும், சத்திரத் தலைவனுக்கு இவன் மீது சந்தேகமேற்பட்டது அதன்பேரில் சத்திரத் தலைவன் இவனை ஒரு போலீஸ்காரன் வசம் ஒப்புவித்தான் இவன் சிறிதேனும் முணுமுணுக்காமல் போலீஸ்காரனுடன் புறப்பட்டு விட்டான். போகும் வழியிலே மாரல் திடீரென்று கைத்துப் பாக்கியை எடுத்து போலீஸ்காரனை சுட்டுக் கொன்றுவிட்டு ஓடத் தொடங்கினான். துப்பாக்கிச் சத்தம் கேட்டு அருகே யிருந்த ஜனங்கள் வந்து மாரலைத் தொடர்ந்து ஓடினார்கள், எப்படியேனும் அகப்படாமல் தீராதென்று தெரிந்தவுடனே மாரல் தன்னைத்தானே நெஞ்சியில் சுட்டுக் கொண்டு செத்து விழுந்துவிட்டான். இத்தனை வாலிபத்தில் இவனுக்கு எத்தனை விரோத சிந்தை யேற்பட்டு என்ன பரிதாபகரமான கதியை அடைந்துவிட்டான்!

### ஸிம்லாவிலே மிஸஸ் அன்னிபெஸண்ட்.

ஸிம்லாவிலே மிஸஸ் அன்னி பெஸண்ட் "சர்வசமய ஸமரஸம்" (Brotherhood of Creeds) என்றவிஷயத்தைப்பற்றி உபந்நியாசம் செய்தார் அப்போது லெப்டினென்ட்கவர்னர் முதலிய அனேக பிரபுக்களும் மாதர்களும் வந்திருந்து மிகுந்த ஆவலுடன் கேட்டு மகிழ்ந்தார்கள்.

### திருவனந்தபுரத்தில் ராணியின் விவாஹம்.

திருவனந்தபுரத்திலே பெரிய ராணியின் கலியாணத்தின் போது மிக்க உழைப்பெடுத்தவர்களுக்கெல்லாம் மகாராஜா தகுதியான சன்மானங்கள் செய்திருக்கிறார். மிஸ்டர் குஞ்ஜுணிபணிக்கர், மிஸ்டர் பல்பு பிள்ளை என்பவர்களுக்கு வீர சங்கிலி இனாமளிக்கப்பட்டது. இளைய ராணிக்கும் சிலமாதங்களுக்குள் விவாகம் நடைபெறுமென்று கூறப்படுகிறது, இளைய ராணிக்கு இப்போது வயது 9 ஆய்விட்டது.

---

### சிங்கம்பட்டியில் தாய் ராணியின் மரணம்.

சிங்கம்பட்டிஜமீன்தாரின் மாதாவாகிய ஸ்ரீமதிசிவகாமி நாச்சியார் இம்மாதம் இரண்டாந்தேதி இறந்துபோய் விட்டார். இந்த அம்மை மிகுந்த தர்ம சிந்தை யுடையவராகவும், தமது குமாரராகிய தீர்த்தபதிக்கு அரிய புத்தி கூறுபவராகவும் இருந்தவரென அறிவிக்கப்படுகின்றது.

---

### ஹைதராபாத்திலே ஓர் பிராஹ்ம விவாகம்.

ஹைதராபாத்திலே பிரமஸமாஜியாகிய டாக்டர் அகோர நாத பட்டாசாரியரின் 3-ம் குமாரத்தி ஸௌதாமினீ என்றபெண்ணுக்கு பிராஹ்ம தர்மப்படியே விவாகம் நடைபெற்றது. மாப்பிள்ளையின் பெயர் மிஸ்டர் சுகுமார் ராய். இவர் பாரிஸ்டர் பரீக்ஷை தேறி யிருக்கிறார். ஸௌதாமினியின் சகோதரி யாகிய ஸரோஜினீ என்ற கவிரத்தினத்தைப்பற்றி பல முறை பிரஸ்தாபம் செய்திருக்கிறோம்.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவயராப் பீடோங்கும் பெண்மைதா
னெண்மை யுறவோங்கு முலகு."

| Vol. 1. | Madras. June, 1906. | No 11. |
|---|---|---|
| தொகுதி. 1. | சென்னை 1906-ம் வருஷம் ஜுன் ஸ்ரீ | பகுதி. 11. |

## மாதர்களின் சுதந்திரங்கள்.

சுதந்திரங்கள் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே நமது தேசத்தில் அனேக மனிதர்களுக்கு மனம் பதறத் தொடங்குகின்றது ஸ்திரீகளுக்கு சுதந்திரம் கொடுப்பதென்றால் உடனே அவர்களை ஐரோப்பிய ஸ்திரீகளைப்போலாக்கி விடுவதேயாகுமென்று நினைத்து இவர்கள் அச்சமடைகிறார்கள். நான் மேற்கண்ட நல்ல ஆத்மாக்களை சிறிதேனும் பயமுறுத்த வேண்டுமென்ற எண்ணம் உடையவளில்லை யாதலால் ஆரம்பத்திலேயே எனது கொள்கையை இங்கே தெளிவாகச் சொல்லிவிடுவது நலமாகும். நான் இடையொன்று ஸ்வதர்மங்களையும், ஸ்வய ஆசாரங்களையும் புரட்டி யெறிந்துவிட்டு மனிதர்களெல்லாம் தடுமாறித் தடம்புரண்டு திற்கவேண்டுமென்று சிறிதேனும் விரும்பவில்லை. மாதர்களுக்காயினும், வேறு யாருக்காயினும் சுதந்திரங்கள் வேறொருவர் கொடுக்கமுடியுமென்ற நம்பிக்கையே எனக்கு கிடையாது.

அவரவர்கள் தத்தம் உரிமைகளைத் தாமே முயற்சிபுரிந்து அடைந்துகொள்ள வேண்டுமே யல்லாமல், மற்றொருவர் கொடுத்ததொன்றும் நிலைத்திருக்கமாட்டாது. ஆகலால் நான் இங்கே இந்தியாவிலே இப்போது ஆசாரத்திருத்தக்காரர்களென்றும், ஆசாரத்திருத்த விரோதிகளென்றும் தம்மைச் சொல்லிக்கொள்ளும் இரண்டு பகுதியாருடனும் சண்டையிட்டுக்கொள்ளாமல் மாதர்களின் உண்மை நிலையையும் அவர்களுக்கு இயற்கையாக உள்ள உரிமைகளையும்பற்றி மட்டிலும் குறிப்பிடுகின்றேன்.

### தாய் உரிமை.

இந்தியாவிலே ஸ்திரீகள் அடிமைகளைப்போலவும் ஆடுமாடுகளைப்போலவும் நடத்தப்படுகிறார்களென்று அன்னியர்கள் முறையிடுகிறார்கள். அப்படி அன்னியர்கள் சொல்வது அறியாமையினாலேயே அல்லாமல் வேறன்று. ஸ்திரீகளை நாம் மதிக்கவேண்டிய அளவு மதிக்கவில்லையென்பதும், நமது ஸ்திரீகள் இருக்க வேண்டிய நிலைமையில் இருக்கவில்லையென்பதும் முற்றிலும் வாஸ்தவமே. என்ற

போதிலும், ஹிந்துக்கள் தமது தாய்களையும், சகோதரிகளையும் நடத்தும் மாதிரியைப்பார்த்த எவனும் மேற்கண்டவாறு "அடிமை" என்பதைச்சொல்லமாட்டான். புதிதாக புக்ககத்திற்கு வந்திருக்கும் பெண்கள் மிகவும் இழிவாகவும் கருணையில்லாமலும் நடத்தப்படுகிறார்களென்பது ஒருவாறு மெய்யாகும். அதற்கு புக்ககத்திலிருக்கும் வயது முதிர்ந்த ஸ்திரீகளே பெரும்பாலும் காரணமாகிறார்கள். புருஷர்கள் தமது மனைவிகளை அடிப்பது, திட்டுவது முதலிய வழக்கங்கள் "வைத்துக்கொண்டிருக்கிறார்களே" யென்றால், அது இந்தியாவில்மட்டுமன்று. எல்லா நாடுகளிலும் அப்படிப்பட்ட மூடர்கள் இருக்கவே செய்கிறார்கள். பேஓம் படிப்பில்லாத ஸ்திரீயை நயத்தாலும் பயத்தாலும் நடத்திக்கொண்டு போவது சில சமயங்களில் அவசியமாகிவிடுகிறது. ஆதலால் ஸ்திரீயின் முக்கியக்கடமை தாம் தேசத்தினருக்குத் தாய்மார் என்பதை நன்றாக அறிந்து, தமது புத்திரர்களும், பெண்களும் ஒழுக்கம், அறிவு, கல்வி, செல்வம், என்பவற்றிலே சிறந்து விளங்குமாறு தாம் செய்தற்குரிய தகுதியடைவதின் கண்ணே அரிய ஆவல்கொண்டவர்களாகி அவ்விஷயத்தில் தம்மால் கூடியவரை முயற்சிபுரிய வேண்டும். மகான்கள் பிறந்து வாழ்ந்த நாட்டிலே மண்ணுண்ணிப் பூச்சிகள் நடமாடுவதைக்கண்டு ஒவ்வொரு ஸ்திரீயும் மனம்புழுங்கவேண்டும். தத்தம் மக்களுக்கு அறிவு, உயர்குணம், சரீரதிடமை, மனோதைரியம், ஆண்மை முதலியவற்றைக் கற்பித்துக்கொண்டே யிருக்கவேண்டும்.

### மனைவி உரிமை.

மனைவியாக இருக்கும் ஸ்திரீ தனது நாயகனுக்கு விரோதமாக நடந்துகொள்ளவேண்டுமென்பது அவசியமில்லை. கணவனுடன் ஒற்றுமைகொண்டு வாழ மனமற்ற ஸ்திரீ விவாகத்திற்கே தகுதியடையவளில்லை.

"காதலிருவர் கருத்தொருமித்து—
ஆதரவுபட்டதே யின்பம்." அல்லவா?

ஆனால் மனைவிதான் கணவனுக்குத் துணைவி என்பதை மறந்து அவனுக்கு அடிமை என்றாவது அவன் தாய்தகப்பன் முதலியோருக்குத் தொண்டச்சி யென்றாவது நினைத்துவிடக்கூடாது. தனது அறிவினாலும், நடையினாலும், தன்னை அன்னியர் மதிப்பின்றி நடத்தாதவாறு செய்துகொள்ளவேண்டும். தானே தனக்கு மரியாதை தேடிக்கொள்ளாதவர்களுக்கு வேறு யார்தான் மரியாதைசெய்ய முற்படுவார்கள்? படிப்பும், ஒழுக்கமும், நாகரிகமும் இல்லாதபேர் மிருகங்களுக்கே சமானமென்பதை நமது மாதர்கள் மறக்க வொண்ணாது.

### ஆசாரத்திருத்தக்காரர்களின் விருப்பங்கள்.

(1) மாதர்களுக்கு அதிபால்யத்திலே விவாகம் செய்யக்கூடாது. (2) விதவைகளை விவாகம் செய்துகொள்ளாமலிருக்கும்படி பலவந்தம் செய்யக்கூடாது என்பது முதலாக எத்தனையோ கோட்பாடுகள் ஆசாரத்திருத்தக் கூட்டத்தாரால் பிரசங்கிக்கப்படுகின்றன. இந்த விவகாரங்களெல்லாம் சிறிதேனும் பயன்படமாட்டா. மேற்படி ஆசாரத்திருத்தச் சங்கத்திலே பெரும்பாலார் வெறும்வாயால்மட்டும் இவ்வாறெல்லாம் பிதற்றிவருகிறார்களே யல்லாமல், வீட்டிற்குள்ளே போய்ப் பார்த்தால் சாமானிய ஜனங்களைக்காட்டிலும் இவர்களின் மாதிரி கேவலமாயிருக்கிறதே யன்றி வேறில்லை. இவர்களெல்லாம் மாதர்களுக்கு விரோதிகளேயன்றி நண்பர்களாக மாட்டார்கள். பெண்களுக்குச் கல்விமட்டிலும் அளித்து அவர்களை மிருகப்பிராயத்திலிருந்து மனுஷப்பிராயத்திற்குக் கொணர்ந்துவிடுவோமானால் பிறகு அவர்களின் நன்மையை அவர்களே தேடிக்கொள்வார்களென்பதில் சந்தேகமே கிடையாது. நோயறியாமல் வைத்தியம் செய்ய முயலும் பேதை வைத்தியர்களைப்போல் ஸ்திரீகளின் குறைகளுக்கெல்லாம் முக்கிய காரணம் அவர்களது அறியாமையே யென்பதை மறந்து விட்டு, மேலெழுந்த மாதிரியாக அவர்களது நன்மைகளை நாம் தேடப்புகுவது சிறிதேனும் பயன்படமாட்டாது. புருஷர்களாக பலவந்தம் செய்யும் சீர்திருத்த முயற்சி எவ்வளவு பயனற்ற தென்பதற்கும், பெண்கள் தமக்கு தாயாகவே அறிந்து முயலும் சீர்திருத்தம் எவ்வளவு இலேசாக நடக்க கூடிய தென்பதற்கும் கீழே ஓர் திருஷ்டாந்தம் கூறுகின்றோம்.

தென்னாட்டிலே ஒரு பிராமணஸ்திரீ யுண்டு, இந்த அம்மாள் வெகு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவள், வயது சுமார் 40 இருக்கும். இந்த அம்மாளுடன் நான் ஒருமுறை நவீன ஆசார திருத்தங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது அவர் பின்வருமாறு கூறினார்:—

"ஓர் புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு சிறிதுகாலம் வாழ்ந்தபிறகு விதவையானோர்களுக்கு கலியாணஞ் செய்வது தப்பு. ஆனால் குழந்தையிலேயே கைமையாய்ப் போய்விடுகிறவர்களுக்கு விவாகம் செய்துகொடுத்தால் பாதகமில்லை" என்றார்.

"அம்மா! பழையகாலை ஸ்திரீகளும் புருஷர்களும் விதவா விவாகம் என்றபேச்சைக்கேட்டால் மகாகோபம் அடைவார்களே? நீங்கள் இப்படி சொல்வது சிறிது ஆச்சர்யமாகவே யிருக்கிறது" என்று நான் கூறினேன். அதற்கு அம்மாது:— "திடீரென்று ஒரு புது வாடிக்கையைக் கொண்டுவந்து காட்டினால் எல்லோருக்கும் பயமுண்டாவது சகஜமே. நாளாக நாளாக எல்லாம் வழக்கத்தில் சரியாகிப் போய்விடும்" என்றாள்.

இவ் விஷயத்தை நமது ஆசார திருத்தக்காரர்கள் நன்றாக கவனிக்கவேண்டும். சுதந்தரத்தின் நன்மைகளை அவரவர்கள் அறியும்படி வழக்கப்படுவதே தகுதியானதுமல்லாமல், ஒருவருக்கு சுதந்திரம் கொடுக்கும் அதிகாரம் மற்றவருக்குக் கிடையாது. "கட்டிக்கொடுத்த சோற்றைப்போல" இன்னும் ஒருவர் ஏற்பாடு செய்துகொடுத்த சுதந்திரங்கள் நெடுங்காலம் நிலைத்திருக்கமாட்டா.

### ராஜாங்க சம்பந்தமான சுதந்திரங்கள்.

இதுவரை பொதுவாக ஹிந்துமாதர்களுக்கு ஜனாசார சம்பந்தமான விஷயங்களிலுள்ள சுதந்திரங்களைப்பற்றி மட்டிலும் பேசிவந்தோம். இவ் விஷயங்களில்

ஸ்திரீகளுக்கு புருஷர்கள் "சுதந்திரங் கொடுப்பது" என்ற எண்ணம் தப்பென்பதைக் குறிப்பிட்டோம். அவரவர்களுக்குத் தகுதியான நிலைமையிலேயே அவரவர்களை ஈசன் வைத்திருக்கின்றார்.

இந்தியாஜனங்கள் வெள்ளைக்காரருக்கு அடிமைப்பட்டிருக்கிறார்களா? இதன் காரணமென்ன? இந்த நிலைமை அவரவர்களுடைய தகுதிக் கிணங்கவே அமைந்திருக்கிறது. இதற்கு யாரையும் குறைகூறிப் பிரயோஜனமில்லை. இதுபோலவேதான் எல்லா விஷயங்களிலும். இது நிற்க. ராஜ்யாதிகார விஷயங்களிலே மாதர்களுக்கு எவ்வளவு சுதந்திரமுண்டென்று இப்போது நடந்துவரும் விவாதங்களைப் பற்றி இங்கே எழுதுவது ரஸத்துடன் படிக்கப்படுமென நம்புகிறோம். ஹிந்து ஸ்திரீகளைப்பற்றி இங்கே பேசவில்லை; ஹிந்து ஆண்பிள்ளைகள்கூட ராஜாங்க சம்பந்தமான சுதந்திரங்கள் அதிகமாக உடைத்தாயிருக்கவில்லை. அப்படியிருக்க ஹிந்து ஸ்திரீகளைப்பற்றி ஏன் பேசவேண்டும்? மேற்குத் தேசங்களிலே இந்த விஷயத்தைப்பற்றி நடக்கும் விவகாரங்களே குறிப்பிடப்படுகின்றன. இங்கிலந்தில் பார்லிமெண்ட் சபையிலே மெம்பர்களாயிருப்பதற்கும் மெம்பர்கள் தெரிந்தெடுப்பதற்கும் சுதந்திரங் கிடைக்கவேண்டும் என்று இப்போது அத்தேச ஸ்திரீகளிலே ஒரு பகுதியார் பெருங் குழப்பமேற்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இந்த மாதர்களிலே பெரும்பாலார் விவாகமற்றவர்கள். இவர்கள் செய்யும் புரளிகள் சகிக்கமுடியவில்லை. பார்லிமெண்ட் சபையிலே போய்க் கூச்சலிடுகிறார்கள். பிரதம மந்திரி வீட்டையும் மற்ற முக்கிய மந்திரிகளின் வீடுகளையும் போய்ச் சூழ்ந்துகொண்டு தொந்தரைசெய்கிறார்கள். பொதுச்சபைகள் கூடி இங்கிலீஷ் ராஜதந்திரிகளைக் கண்டமட்டும் திட்டுகிறார்கள். இவர்களின் நிலைமை இப்படியிருக்க அமெரிகா முதலிய தேசங்களில் ஸ்திரீகள்கேட்கும் சுதந்திரங்களுக்கு எல்லையே கிடையாது. தேசபரிபாலனத்திற்கு வேண்டிய முக்கிய உத்தியோகங்களெல்லாம் தமக்கேன் கொடுபட வொண்ணாதென்றும், தாம் ஏன் யுத்தம் செய்யப் போகக்கூடாதென்றும் சில மாதர்கள் அத்தேசங்களிலே முறையிடத்தொடங்கியிருக்கிறார்கள்.

### இந்த சுதந்திரங்கள் கொடுபடாமையின் காரணம்.

இந்த ராஜாங்க சுதந்திரங்களுக் குள்ளே எதையும் அம்மாதர்களுக்குக் கொடுபடவில்லை. அதன் காரணத்தை யோசிப்போம்:—இந்தக் கருத்துக்கள் அவர்களுடைய சொந்தமல்ல. இந்தியாவிலே சில புருஷர்கள் சத்தமிடுவதுபோல வெறும் கிளிச்சத்தம் போடுகிறார்கள். அந்த மாதர்கள் அழகில்லாமையாலும், வேறு பல காரணங்களாலும் தக்கபடி விவாகப் பேறு முதலியவை அடையாதவர்களாகி யாரோ சில புருஷர்கள் சொல்வதைக்கேட்டுக் கொண்டு சுதந்திரம், சுதந்திரம் என்று கூறுகிறார்களே அல்லாமல் அவர்கள் மனதுடன் அங்ஙனம் சொல்லவில்லை. வீட்டிலிருந்து தனது குழந்தைகள் முன்னுக்கு வர வேண்டுமென்ற ஆவலுடன், அந்த குழந்தைகளுக்கு கல்விபயிற்றி, ஆண்மை கற்பித்து கிரகத்தலைவியாக மகிழ்ந்திருக்கும் ஸதிரீ பார்லிமெண்ட் மெம்பர் வேலையின் பொருட்டு ஜாஸ்தியாக சிரமப்படமாட்டாளல்லவா!



எனவே, ராஜாங்க சுதந்திரங்கள் ஸ்திரீகளுக்கு வெகு முக்கியமானவையல்ல. அநாகரிக மனிதர்கள் அவர்களை இழிவாக நடத்தாமல் பாதுகாத்துக் கொள்வது அவர்களுக்கு இப்போது முக்கியமாகவேண்டியது.

இந்த விஷயம் நிறைவேற வேண்டுமானால் அதற்கு 3 விதமான உபாயங்களிருக்கின்றன. முதலாவது உபாயம் கல்வி. இரண்டாவது உபாயம் கல்வி. மூன்றாவது உபாயமும் கல்வியே. அதாவது கல்வியைத்தவிர வேறெல்லாவிதமான உபாயமும் சிறிதேனும் பயன்படாதென்பது கருத்து.

பத்திராதிபர்.

# HAMLET.
## ஹாம்லெட்

(230-வது பக்கத்தொடர்ச்சி)

ஹாம்லெட்.—[தனிமொழி]. திண்ணிய என் ஊனுடம்பு பனி உருகுவதுபோல உருவழியலாகாதா? தற்கொலைபுரிதல் கூடுமென்று கடவுள் ஆக்ஞை செய்யலாகாதா? தெய்வமே, தெய்வமே, இவ்வுலக வழக்கங்கள் எனக்கு மிகுந்த தெவிட்டலையுண்டாக்கிப் பயனற்றனவாயிருக்கின்றன. சிச்சீ! உலகம் களை பிடுங்காமல் பூண்டுகள் மண்டின தோட்டமாயிருக்கின்றது. சிற்றின்பந்தூண்டும் பொருள்களே உலகத்தைக் கவர்ந்திருக்கின்றன. இவ்வளவுக்கு வந்து விட்டதா! செத்து இரண்டுமாதமும் ஆகவில்லையே! தனக்குவமை யில்லாத அரசனாயிற்றே! இப்போழ்திய அரசனையும் இறந்தவனையும் ஒத்துப் பார்த்தால் மலைக்கும் மடுவிற்கும் போலிருக்கின்றதே! இறந்த அரசன் என்தாயின்மேல் காற்றும் படாமல் பிரியமாயிருந்தவனாயிற்றே! அந்தோ! நினைக்கவும் வேண்டுமோ! என்பிதா உயிரோடிருந்த காலத்தில் என்தாய் அவனைப்பார்த்துப் பார்த்துத் தெவிட்டா இன்பம் அடைந்தவளாக நடித்தாளே! ஒருமாதங்கூட முடியவில்லையே! இதை நினைக்க என்னால் கூடவில்லை! சஞ்சலமே ஸ்திரீயென்னலாம். முப்பதுநாள்கூட ஆகவில்லையே! கண்ணீர்விட்டுக் கதறிக்கொண்டு என் பிதாவின் பிரேதத்தோடு போகையில் என்தாய் போட்டிருந்த செருப்பு இன்னும் தேயவில்லையே! பகுத்தறிவில்லாத விலங்கும் அக்காலம் துக்கங்கொண்டாடுமே! என் பிதாவின் சகோதரனை மணம்புரிந்தாளே! என் சிற்றப்பன் என் அப்பனைப்போல எந்த அம்சத்திலும் ஆகானே! ஒருமாதத்திற்குள்ளேயா! வேஷநீர் சொரிந்த கண்களின் சிவப்புமாறு முன்னே கலியாணம் பண்ணிக்கொண்டாளே! இது நன்மை பயத்தற்கன்று! என் இருதயமே, நீ உடைந்துபோ. நான் இனி வாய்திறத்தலாகாது.

[ஹொரேஷியோ, மார்ஸெல்ஸ், பெர்னார்டோ—பிரவேசம்.]

ஹொ.—பிரபுவே, தங்களுக்கு க்ஷேமமுண்டாக!

ஹாம்.—நீ க்ஷேமமாயிருப்பதைக் காண எனக்குச் சந்தோஷம். ஹொரேஷியோ தானே – எனக்கு ஞாபகமில்லையோ?

ஹொ.—ஹொரேஷியோ தான், பிரபுவே, தங்களடியன்.

ஹாம்.—நீ என் நண்பன். என்னை உன்னுடைய அடியன் என்று சொல்லல் வேண்டும். வித்தன்புரத்திலிருந்து இங்கு எதற்கு வந்தாய், ஹொரேஷியோ? அங்கு நிற்பது மார்ஸெலஸா?

மார்.—ஆம், பிரபுவே.

ஹாம்.—சந்தோஷமாயிற்று; உனக்கு வந்தனம். (ஹொரேஷியோவை நோக்கி) வித்தன்புரத்திலிருந்து இங்கு வந்து என்னபண்ணுகிறாய்?

ஹொ.—நாடோடியாய்த் திரியவேண்டுமென்ற ஆசை, பிரபுவே.

ஹாம்.—உன் சத்துரு உன்னைப்பற்றி அவ்வாறு சொன்னாலும் நான் பொறுக்கேன்! உன்னைப்பற்றி நீயே குறைவாய்ச் சொன்னாயானால் நான் நம்புவேனா? வீணலைச்சல்காரனல்ல நீ; எல்ஸினூரில் உனக்கு என்ன வேலை? இந்த ஊரைவிட்டுப்போகும் முன்னமே உனக்குப் பெருங்குடியனாகும் வழியைக் கற்பிப்போம்.

ஹொ.—உமது பிதாவின் உத்தரக்கிரியைகள் நடத்தப்படுதலைக் காணவந்தேன், பிரபுவே.

ஹாம்.—நண்பா என்னைப் பரிகாசம்பண்ணாதே. என் தாயின் கலியாணக் கோலத்தைப் பார்க்கத்தான் நீ வந்தாய்போலும்.

ஹொ.—வாஸ்தவம், அதுவும் உடன் வந்தது.

ஹாம்.—சிக்கனம், சிக்கனம், ஹொரேஷியோ! சவப்பணியாரங்கள் கலியாணத்திற்கு உபயோகப்படுத்தப்பட்டன. ஹொரேஷியோ, சத்துருவைச் சுவர்க்கத்தில் காணுதலினும் அந்தக் கலியாணத்தைப் பார்த்ததில் எனக்கு மிகுந்த வருத்தம். அப்பா, என் பிதா என் எதிரில் இருப்பது போலத் தோன்றுகின்றது.

ஹொ.—எங்கே, பிரபுவே!

ஹாம்.—ஹொரேஷியோ, என் மனக்கண்ணிடத்தே.

ஹொ.—நான் அவரை ஒரு முறை கண்டிருக்கின்றேன், அவர் சல்லக்ஷணமானவர்.

ஹாம்.—அவரைப் போன்ற புருஷனை இனி நான் காணவும் போகிறேனா?

ஹொ.—நேற்றிரவு அவரை நான் கண்டேன்.

ஹாம்.—கண்டாயா? யார்?

ஹொ.—பிரபுவே, தங்கள் பிதாவான அரசனை.

ஹாம்.—என் பிதாவாகிய அரசனையா!

ஹொ.—தங்களுக்கு உண்டாயிருக்கும் ஆச்சரியத்தைச் சற்று அடக்கிக் கொள்



ளுங்கள் இந்த இரண்டு சாக்ஷிகள் முன்னிலையில் நான் கண்ட அதிசயத்தைச் சொல்வேன். செவி கொடுத்தல் வேண்டும்.

ஹாம்.—கடவுளறியக் கேட்கின்றேன்.

ஹொ.—பெர்னார்டோ, மார்ஸெல்ஸ் இருவரும் இரண்டு நாள் நள்ளிரவில் கண்டார்கள். உமது பிதாவைப் போன்ற ஒரு ரூபம், பாதாதிகேசபர்யந்தம் கவசம் பூண்டு, இவர்கள் கண்களிற் பட்டு ஒய்யாரமாக நடந்திருக்கின்றது. அந்தரூபத்தின் கையிலுள்ள கோல் தூரத்தில் அது இவர்களுக்கு எதிராக வந்து மிகுந்த பயத்தை உண்டாக்கியிருக்கிறது. இவ்விருவரும் அவ்வுருவத்தைக் கண்டு நடுநடுங்கி வாய் திறவாமலிருந்து இரகசியமாய்ச்சொன்னார்கள். இந்த சமாசாரத்தை என்னிடத்தில் இரகசியமாய்ச்சொன்னார்கள். மூன்றாம்நாள் நானும் அவர்களுடன் பாராவுக்குப்போனேன். காலத்திலும் உருவத்திலும் அவர்கள் கூறியபடியே அந்தப்பிசாசு வந்தது. உமதுபிதாவை நான் அறிவேன். உம்முடையகைகளும் அந்த மாதிரியாகத்தானிருக்கின்றன.

ஹாம்.—இவை எல்லாம் நடந்தது எங்கே?

மார்.—நாங்கள் பாராவிருந்த மேடையில், பிரபுவே.

ஹாம்.—நீ அதனிடத்திற் பேசினாயா?

ஹொ.—பிரபுவே, நான் பேசினேன்; அது மறுமொழி ஒன்றுஞ்சொல்லவில்லை. பேசவருதல்போல ஒருமுறை தலையைத்தூக்கினதாக எனக்குத்தோன்றிற்று. அந்தத்தருணத்தில் கோழிகூவவே, அந்தப்பிசாசு வெகுதுரையாய் ஓடிமறைந்துவிட்டது.

ஹாம்.—ஆச்சரியமாயிருக்கிறது.

ஹொ.—ஆம், ஆச்சரியமாய்த் தானிருக்கிறது; தம்மிடத்தில் நாங்கள் கண்டதை சொல்லவேண்டியது எங்கள் கடமை என்று எண்ணினோம்.

ஹாம்.—வாஸ்தவம், வாஸ்தவம், என் மனம் தபிக்கின்றது. இன்றிரவு பாராவுக்கு போகின்றீர்களோ?

மார்., பெர். } போகின்றோம், பிரபுவே.

ஹாம்.—கவசம் பூண்டிருந்ததென்று சொல்லுகிறீர்கள்.

பெர்., மார். } ஆம், அது கவசம்தரித்திருந்தது.

ஹாம்.—பாதாதிகேசபரியந்தமா?

மார்., பெர். } அப்படித் தான், பிரபுவே

ஹாம்.—அதன் முகத்தைப் பார்க்கவில்லையா?

ஹொ.—பார்த்தோம், பிரபுவே. முகக்கவசத்தைத் தூக்கிவைத்திருந்தது.

ஹாம்.—கோபமாகத் தோற்றிற்று?

ஹொ.—துக்கமாயிருந்ததே யன்றிக் கோபமாயில்லை.

ஹாம்.—முகம் சிவந்திருந்ததா, வெளுத்திருந்ததா?

ஹோ.—மிகவும் வெளுத்திருந்தது.

ஹாம்.—உன்னையே உற்றுப் பார்த்ததா?

ஹோ.—கண்கொட்டாமல் பார்த்தது.

ஹாம்.—நான் அங்கு இருந்திருக்க வேண்டும்.

ஹோ.—தங்களுக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாயிருக்கும்.

ஹாம்.—வாஸ்தவந்தான். அதிக நாழிகை இருந்ததா?

ஹோ.—நூறெண்ணுகிற மட்டில் நின்றது.

மார்.<br>பேர். } அதிக காலம் இருந்தது.

ஹோ.—நான் கண்டபோது அவ்வளவு காலம் இல்லை.

ஹாம்.—தாடி நரை மயிர் கலந்ததா?

ஹோ.—அவர் உயிரோடிருந்த காலத்தில் நரையும் கறுப்பும் கலந்திருந்தது போலத் தான் இந்த ரூபத்திலுமிருந்தது.

ஹாம்.—நானும் இன்று இரவு பாராவுக்கு வருகிறேன். ஒருக்கால் இன்றும் அது வரலாம்.

ஹோ.—நிச்சயமாய் வரும்.

ஹாம்.—நான் அது என் பிதாவின் உருவத்தோடு வருமாயின் நான் பேசாம விருப்பதில்லை, அப்படிப் பேசுவதால் நாகமே என்னை விழுங்கினாலும் விழுங்கட்டும்; நான் அஞ்சவில்லை. நீங்கள் இந்த உருவைக் கண்ட விஷயத்தை ஒரு வரிடத்திலும் இது வரை சொல்ல வில்லை யென்றால் இனியும் ஒருவரிடத்திலும் சொல்லல் வேண்டாம். இன்றிரவு நடப்பதையும் பாருங்கள்; வெளியில் ஒருவரிடத்திலும் சொல்லாதீர்கள். உங்களுக்குத் தக்க கைம்மாறு செய்வேன் க்ஷேமமாயிருங்கள். இரவில் பதினொருமணிக்குமேல் பன்னிரண்டு மணிக்குள் உங்களை மேடையில் சந்திக்கிறேன்.

எல்லோரும்.—தங்கள் ஊழியம் செய்யக் காத்திருக்கின்றோம்.

ஹாம்.—உங்கள் அன்பென்று சொல்லுங்கள்; க்ஷேமமாய்ப் போய்வாருங்கள். [ஹாம்லெட்டைத் தவிர மற்ற எல்லாரும் போய்விடுகிறார்கள்.] என் பிதா கவசம் பூண்டு பைசாசமாய் வருகிறாரா! இது நன்மைக் கன்று. ஏதோ சூது நடந்திருக்கின்றது. இப்போதே இரவானாலும் எனக்கு இஷ்டம். மனமே, அது வரையில் பொறுத்திரு. "மறைவழிப்பட்ட பழியான காரியங்கள் பொதிந்து மூடப்படினும் பறையறைந்தாங்கு ஓடிப்பரவும்."

---

## முதல் அங்கம்.

### மூன்றாம் களம்.

[பொலோனியஸ் வீட்டில் ஒரு அறை; லேர்டீஸ்—ஒப்பிலியா—பிரவேசம்.]

லேர்.—என் சாமான்களெல்லாம் கப்பலில் ஏற்றியாய்விட்டது; க்ஷேமமாயிரு. காற்றும் தாதனும் பொருத்தமாயிருக்கும்போது சும்மா இராமல் எனக்கு உன் க்ஷேமலாபங்களைத் தெரிவி.



ஒப்பி—அந்த விஷயத்தில் உனக்கு ஐயமுண்டோ?

லேர்—ஹாம்லெட்டையும் அவன் பிரியத்தையும் பற்றினமட்டில் சிறு பிள்ளைகளுக் கியல்பான விளையாட்டென்று அவற்றை நினை. சாமானிய ஜனங்கள் தங்களிஷ்டம்போல செய்வதுபோல் அவனும் செய்யலாகாது. இராச்சியத்தின் க்ஷேமம் அவன் உயிர்த்துணைவி தெரிந்தெடுத்தலைச் சார்ந்திருக்கின்றது. அவன் செய்தனுப்பும் சீட்டுக் கவிகளை நம்பினால் உன் கற்புக்கு வரும் தீங்கை நினைத்துப்பார். என் அருமைத்தங்காய், அதைக் கண்டு நீ அஞ்சல் வேண்டும். அவனிடத்தில் மிகுந்த காதலை வைக்காதே. அவனுடைய காமத்திற்கு எட்டாக்கையிலேயே இரு. சாவதானம் மிகுதியாக உடைய ஒரு பெண் சூரியன் தன் அழகைக் காணும்படி செய்வாளாயின் அவளையும் ஊதாரி என்று சொல்லுதல் வேண்டும்.

ஒப்பி—நீ சொன்னவற்றின் பொருளை என் இருதயத்திற்குக் காவலாளிகளாய் வைக்கிறேன். அண்ணா, சில போதகர் பிறருக்குக் கஷ்டமான மறுமை வழியைப் போதித்துத் தாம் சிற்றின்ப நெறியில் நிற்பாருமுளர். அவ்வாறாக நீ நடக்கலாகாது.

லேர்—என்னைப்பற்றி அஞ்சுதல் வேண்டாம்; நேரம் ஆகின்றது; என் பிதா இதோ வருகிறார்.

பொலோனியஸ் பிரவேசம்.

இரண்டாவது முறை ஆசீர்வாதம் பெறுதல் இரட்டிப்பு க்ஷேமம். இன்னொரு தடவை தங்களிடத்தில் விடை பெற்றுக்கொள்ளச்சமயம் வாய்த்திருக்கின்றது.

பொலோ.—இன்னும் இங்கே இருக்கிறாயா, லேர்டீஸ்? கப்பலேறு, கப்பலேறு, நீ செய்வது சரியல்ல. அநுகூலமான காற்று பாயில் வீசுகின்றது; உனக்காக காத்திருக்கிறார்கள். என்னுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள். நான் உனக்குப் போதிக்கும் சிலவிஷயங்களை உன் ஞாபகத்தில் நன்றாய்ப் பதியவை. மனத்திலுள்ளதை வெளியில் விடாதே. தீர்க்கமாய் ஆலோசியாத விஷயத்தைச் செய்யாதே. எவரிடத்திலும் பழகு; கீழ்மையாய் நடக்காதே! பரீக்ஷையால் உத்தமர்கள் என்று ஏற்பட்ட நண்பர்களின் தோழமையைப் பலப்படுத்து; புதிதாகக் கிடைக்கும் ஒவ்வொருவனையும் அந்தரங்கமான சினேகிதனாகக் கொள்ளாதே. சண்டையில் பிரவேசிக்கவேண்டாம்; பிரவேசித்துவிட்டாலோ, சத்துரு உன்னைக்கண்டு அஞ்சும்படி நடந்துகொள். ஒவ்வொருவனும் சொல்வதைச் செவிகொடுத்துக் கேள். உன் அந்தரங்கத்தைச் சொல்லாதே பிறர் உட்கருத்தை அறிந்து கொள்; உன் அபிப்பிராயத்தை வெளிவிடாதே. உன் ஐவேஜுக்குத் தக்கபடி விலையுயர்ந்த ஆடைகள் தரித்துக்கொள்; பகட்டான உடைகளை விரும்பாதே; உடுத்திருக்கும் ஆடையே ஒருவனுடைய யோக்கியதையை விளக்கும். பிராஞ்சு தேசத்தார் உடைவிஷயத்தில் மிகுந்த கவனமுள்ளவர்களாம். கடன் வாங்குதலையும் கொடுத்தலையும் தவிர். கடன் கொடுத்தலினால் நட்பிழப்பும் பொரு

னிழுட்பும் சம்பவிக்கின்றன. கடன் வாங்குதல் சிக்கனமாயிருத்தலை ஒழிக்கின்றது. முக்கியமாய் உனக்குச் சொல்வதொன்றுண்டு:—ஆத்துமத்துரோகம் எக்காலத்திலும் செய்யாதே; இதைக் கவனித்தால் பகலும் இரவும் மாறிவருதல் எவ்வாறு நிச்சயமாயிருக்கின்றதோ அப்படியே நீ ஒருவருக்கும் துரோகம் செய்யமாட்டா யென்பதும் நிச்சயம்.

**லேர்.**—தங்களிடத்தில் விடைபெற்றுக் கொள்ளுகிறேன், ஐயா.

**போலோ.**—காலம் ஆய்விட்டது; வேலைக் காரர்கள் தயாராயிருக்கிறார்கள்.

**லேர்**—போய்வருகின்றேன். ஒப்பிலியா, நான் சொன்ன வற்றைக் கருத்தில் வை.

**ஒப்பி.**—அவற்றை என் ஞாபகமாகிய பெட்டியில் வைத்துப் பூட்டியிருக்கிறேன்; திறவுகோல் உன்னிடத்தில் இருக்கட்டும்.

**லேர்.**—க்ஷேமமாயிரு [லேர்தீஸ் போய்விடுகிறான்.]

**போலோ.**—ஒப்பிலியா, லேர்தீஸ் உன்னிடத்தில் என்ன சொன்னான்?

**ஒப்பி.**—ஹாம்லெட் இளவரசனைப் பற்றிச் சில விஷயங்கள், ஐயா.

**போலோ.**—நல்ல வேளையில் ஞாபகப்படுத்தினாய் ஹாம்லெட் உன்னிடத்திற்கு இரகசியமாய்ச் சில வேளைகளில் வருகிறானென்றும், நீயும் அவருடன் வெகு நேரம் தாராளமாய்ப் பேசிக்கொண்டிருக்கிறா யென்றும் என் காதிற்பட்டிருக்கிறது. நான் கேள்விப்பட்டது உண்மையாயிருக்குமாயின் உன்னை எச்சரிக்க வேண்டியது என் கடமையாயிருக்கின்றது. என் மகளாயிருக்கிற உனக்கு உன் குலமரியாதை தெரியவில்லை. உங்கள் இரண்டு பேருக்குள் இருக்கும் இரகசிய மென்ன? வாஸ்தவத்தைச் சொல்.

**ஒப்பி.**—என்னிடத்தில் காதல் மிகுந்திருப்பதாக எனக்குப் பலமுறை ஹாம்லெட் சொல்லிவருகிறார்.

**போலோ**—காதலா! பயித்தியகாரி! ஆபத்திற்குள்படுத்தும் காரியத்தை சிறுபிள்ளை வியாபாரமாகச் செய்கின்றாயே. அவர் காதலை நீ நம்புகின்றாயா?

**ஒப்பி.**—அதைப் பற்றி எனக்கு ஒன்றுஞ் சொல்லத் தெரியவில்லை, ஐயா.

**போலோ.**—இருக்கட்டும்; நான் உனக்குக் கற்பிக்கின்றேன். தேன் என்றால் வாய்தித்திக்கின்றது என்று நினைக்கும் குழந்தைபோல வெறும் பேச்சை வாஸ்தவ மென்று எண்ணிவிட்டாய். உன்னை அடைதல் சுலபசாத்திய மென்று பிறர் நினைக்கச் செய்யாதே. நான் சொல்லுவதைக் கேட்காவிடில் என்னைப் பேதையாக்குவாய்.

**ஒப்பி.**—ஹாம்லெட் இளவரசன் என்னிடத்தில் சத்தியமாயும் கௌரவமாயும் தன் காதலைத் தெரிவித்திருக்கிறார்.

**போலோ**—போ, போ பைத்தியக்காரி.

**ஒப்பி**—கடவுள்மேல் ஆணையிட்டுச் சொல்லியிருக்கிறாரே.

**போலோ**—குருவிபிடிக்க வலைகள் வீசியிருக்கிறார். விரகதாபத்தில் மனிதர்கள் அகோரப் பிரமாணங்கள் செய்வது எனக்குத் தெரியும். இவை எல்லாம் வெளிச்சம் போடுதலாகும்; அந்தரங்கத்தில் அந்த பிரமாணங்களுக்கு ஜீவன் கிடையாது; வாக்கில் பிரமாணம் இருக்கையிலேயே அவைகள் ஜீவனற்ற



வையாயிருக்கின்றன. அவைகளை வாஸ்தவமென் றெண்ணலாகாது. உன்னிடத்தில் அதிகமாய்ச் சொல்வதேன். இன்று முதற்கொண்டு உனக்கு ஓய்வு காலம் ஏற்பட்டால் அதை ஹாம்லெட் இளவரசனோடு சரச உல்லாசப் பேச்சில் நீ செலுத்தக்கூடாதென்று நான் கட்டளையிடுகின்றேன். என் உத்திரவைமீறி நடக்கலாகாது.

**ஒப்பி**—தங்கள் சித்தத்தின்படி நடக்கின்றேன், சுவாமி.

வெங்கட்டராமய்யர். B.A.

---

# துளஸீபாயி சரித்திரம்

இடுகாட்டிலே மூர்ச்சித்துவிழுந்த துளஸீதேவி அதற்கப்பால் நடந்த விஷயங்களெவற்றையு மறியமாட்டாள். மறுநாள் இவளுக்குச் சித்த சுயாதீனம் சிறிதேற்பட்டு கண் விழித்துப் பார்க்கும்போது தான் ஒரு மாடத்திலே யிருப்பதாகக் கண்டாள். தன்னைச்சுற்றி மகமதியச் சேட்டிப் பெண்கள் விசிரியிட்டு வீசுதல் முதலிய உபசாரணைகள் செய்துகொண்டிருக்கக் கண்டாள். இவள் கண்விழித்ததைப் பார்த்தவுடனே மகமதிய ஸ்திரீ யொருத்தி இவளுக்கு பலமுண்டாகும்படியாக ஏதோ ஒரு மருந்தையோ அல்லது உணவையோ கொண்டுவந்து வாய்க்குள்ளே அருள முயன்றாள்.

துளஸீதேவி அந்த உணவை தனக்கு வேண்டாமென்று கையால் விலக்கிவிட்டாள். பிறகு திடீரென்று ஓர் உடலிலிருந்து மற்றோர் உடலத்தே சென்ற உயிர் திகைப்பதுபோலத் திகைப்பாளாகி, “அம்மா! நான் எங்கே யிருக்கிறேன்.” என்று கேட்டாள்.

“தேவி! தாம் சிறிதேனும் பயமடையவேண்டாம். தமக்கு இங்கே எவரும் எவ்விதமான இடையூறும் செய்யப்போவதில்லை. எங்கள் எஜமான் உங்களை எங்கேயோ மரணத்திலிருந்து சம்ரக்ஷணைபுரிந்து இங்கே கொணர்ந்து வைத்ததாக எம்மிடம் கூறினார். அவர் இன்னும் சிறிது நேரத்திற் கெல்லாம் இங்கே வருவார்” என்று ஒரு மகமதியப் பெண் கூறினாள். துளஸிக்கு எல்லாம் கனவைப்போலவே யிருந்தது. இன்ன இடத்திலிருக்கிறோ மென்பது அவளுக்கு நன்கு விளங்கவில்லை. எனினும் மிகுந்த சிரமத்துடன் “அம்மா உங்கள் எஜமான் யாவர்?” என்று கேட்டாள்.

“எங்கள் எஜமான் பெயர் அப்பஸ்கான்” என்று சேடி யொருத்தி மறுமொழி கூறினாள்.

உடனே சென்ற காலத்தின் விஷயங்களனைத்தும் துளஸியின் கருத்துக்குத் தெளிவெனத் தெரிந்துவிட்டது. இவள் மனத்திலே ஒருவிதமான பயம் ஜனிக்கத் தொடங்கிவிட்டது. அப்பஸ்கானிடம் தனக்கிருந்த காதலைக்கூட மறந்துவிட்டாள். மகமதியனுடைய வீட்டில் நாம் சிறைப்பட்டிருக்கிறோமே: இதனால் என்ன நேருமோ என்ற பயம் மாத்திரம் யிருந்தது.

ராஜபுத்திர கன்னிகையாதலால், மனத்திலிருந்த பயம் சற்று நேரத்திற்கெல்லாம் நீங்கிப்போய்க் கோபமுண்டாகிவிட்டது. உடனே இவளுக்கிருந்த களைப்பெல்லாம் போய் பலங்கொண்டவளாகி தன்னைச் சுற்றியிருந்த மகமதியப் பெண்களை நோக்கி "சகோதரிகளே, நான் ஹிந்துவாதலால் உங்கள் ஜாதியாரைத் தொடுவது எனது குலதர்மத்திற்கு விரோதமான விஷயம். தாங்கள் தயவுசெய்து எட்டி நிற்கவேண்டுமென்று சொல்லி மஞ்சத்திலிருந்து இறங்கிக் கீழேசென்று உட்கார்ந்துகொண்டாள். மகமதியப் பெண்கள் ஆச்சரியத்தையும் கோபத்தையும் அடைந்தவர்களாகி ஏதோ மறுமொழி சொல்ல விரும்பியபோதிலும், தங்கள் எஜமான் கட்டளையை எண்ணி வாயை மூடிக்கொண்டிருந்துவிட்டார்கள். எனினும் இவள் ஏதோ மிகப் பிரமாதமான நடிப்பு நடிக்கிறாளென்று குறிப்புத் தோன்றுமாறு தமக்குள்ளே கண் சமிக்கினை செய்துகொண்டார்கள். இதைக் கண்ட துளஸீ மிகுந்த உக்கிரமுண்டானபோதிலும், அதனை மனதிலே யடக்கிக் கொண்டு சும்மா இருந்துவிட்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம் அப்பஸ்கான் வந்து சேர்ந்தான். சேடிகள் தாமே விலகிவிட்டனர்.

இன்னும் மூர்ச்சைமயக்கம் தெளிந்திருக்கமாட்டாளென்று யெண்ணிவந்த அப்பஸ்கான் எதிரே மிகுந்த சோர்வும் சிறிது கோபமும் துலங்கிய முகத்தினளாகி உட்கார்ந்துகொண்டிருக்கும் துளஸிதேவியைப் பார்த்தவுடனே ஒருவிதமான ஆச்சரியம் எய்தினான். தனது குலாசாரப்படி தூர இருந்து ஸலாம் செய்துவிட்டு அருகே போய் "அம்மே, இன்னம் யாதொரு சிரமபரிகாரம் செய்துகொள்ளவில்லைபோல் தோன்றுகிறதே" என்றான். உடனே மிகுதியான கோபம் மேலிட்டவளாகி ஆக்கிரகம் ததும்புகின்ற குரலுடன் "ஏ மகமதியா, நான் ராஜபுத்திரகன்னிகை யென்று அறியக்கடவாயாக. அவமானம் அடைவதற்கு முன்பு உயிரைத் துறந்துகொள்வதில் எங்கள் ஜாதிப் பெண்கள் என்றும் பெயர் வாங்கியவர்கள். வழியிலே பார்க்கப்பட்ட கன்னிகையை மரணத்திலிருந்து சம்ரக்ஷிப்பவன் போல் பாவனை செய்துவிட்டு முறைப்படி யெனது தந்தை தாயாரிடம் கொண்டு சேராமல் மகமதிய அந்தப்புரத்துக்குக் கொண்டுவந்துவிட்ட உனது கண்முன்பாக இதோ இன்னம் சிறிது நேரத்துக்கெல்லாம் உயிரை விட்டுவிடுகின்றேன் பார்," என்று சொல்லி மாடத்தின் மீதிருந்து கீழே குதித்து இறந்துவிடவேண்டுமென்ற நோக்கத்துடன் எழுந்து சென்றாள். உடனே மிகுந்த சோகத்தையும் மனப்பதற்றத்தையும் அடைந்தவனாகிய மகமதிய குமாரன் "அல்லாவின்மேலாணையிட்டுச் சொல்லுகிறேன். உனது கருத்துக்கு விரோதமாக உன்னை எவ்விதமான தீங்குக்கேனும் உட்படுத்தவேண்டுமென்ற ஞாபகம் எனக்குக் கனவிலே கூடக் கிடையாது. காமப்பிசாசுபற்றிய அநேக மகமதிய மூடவாலிபர்களைப்போல நீ என்னையும் நினைத்துவிடவேண்டாம். உன் தந்தையின் வீட்டுக்கு உன்னைக் கொண்டு செல்லவேண்டுமென்று சொல்லுகிறாயே. உனது தந்தையின்னார் என்பதைப்பற்றியாவது, இன்ன ஊரைச் சேர்ந்தவர் என்பதைப் பற்றியாவது எனக்கு யாதொன்றும் தெரியாது, என்பதை சிறிதேனும் ஆலோசிக்கவில்லை அல்லவா? உன்னைக்கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்றால் நீ மூர்ச்சை நிலையிலல்லவா யிருந்தாய். மேலும் அந்த ஸ்திதியில் உன்னை அருகிலுள்ள ஏதாவது ராஜபுத்திரக்கிராமங்களுக்குக் கொண்டுசென்றால் என்னையும் கொலைபுரிந்து உன்னையும் எரித்திருப்பார்கள் அல்லவா? என் மனதிலிருந்த காதலையெல்லாம் அடக்கிக்கொண்டு மெய்மறந்திருக்கும் பெண்ணை கையாலே தொடுவதுகூட நியாயமில்லை யென்று எண்ணி, உன்னை என் ஆயுதங்களினால் எடுத்து குதிரைமீது வைத்துக்கொண்டு வந்திருக்கும் என்மீது நீ தப்பிதமான எண்ணங்கள் கொள்ளுதல் உனக்கு நியாயமாகுமா?" என்று விம்மிக்கூறினான். இதையெல்லாம் கேட்ட உடனே "மகமதிய இளவரசா, என்னைக்ஷமித்து அருளுவீராக" என்று கூறி துளஸி கண்ணீர் ததும்பிவிட்டாள். "எனக்கு எத்தனையோ முறை கைம்மாறளிக்கக்கூடாத பெருநன்மைகள் செய்திருக்கும் தமதுமீது பெண்புத்தியினால் தப்பிதம் எண்ணிவிட்டேன் மேலும்—மேலும்" என்று ஏதோ கூறவந்தவள் வாய் குழறிப்போய் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பத்துவங்கிவிட்டாள்.



அதைப்பார்த்து மனஞ் சகியாதவனாகிய மகமதிய வீரன், "அம்மே, உன் மனநிலை இப்போது நேரில்லை. நான் சிறிதுநேரத்திற்கப்பால் வருகிறேன். அதற்கிடையே ஓர் ஹிந்து ஸ்திரீயின் மூலமாக உண்டு, சிரமபரிஹாரத்துக்குரிய சாமான்களனுப்புகிறேன், அவற்றை உபயோகித்துக்கொண்டு சிறிது நித்திரை புரிந்தெழுவாயாக. ஸலாம்!" என்று சொல்லி மாடத்தினின்றும் கீழே இறங்கி வந்துவிட்டான்.

(இன்னும் வரும்)

ஷெல்லிதாஸ்.

## நாடுகளின் அசுத்தம்.

அழுக்கு முதலிய அசுசிகள் வியாதிக்கு இடமென்றும், மனமும் கண்ணும் அருவருக்கத் தக்கவையென்றும் நம்முடைய முன்னோர்கள் அநுபவபூர்வமாய் அறிந்திருந்தார்கள். இதுபற்றியே சுசியாயிருந்தாலொழியக் கடவுளுக்குச் செய்யவேண்டிய பூஜை முதலான கடமைகளைச் செய்யலாகாதென்றும் சுசியாயிருத்தல் உயர்குலத்தார்க்கு இன்றியமையாதென்றும் விதித்ததுமல்லாமல், அப்படித் தப்பிநடப்பது பாவமென்றும், கடவுளுடைய சிட்சைக்குப் பாத்திரராக்குமென்றும் புராணமுதலிய நூல்களாலும் வெளியிட்டிருக்கின்றன. இதற்கு மூலமென்னவெனில், சாதாரணமாக சுசியாயிருத்தல் சுகத்திற்கனுகூலமென்றால் அதை ஜனங்கள் அவ்வளவாக மதிக்கமாட்டார்கள். மதத்துடன் சம்பந்தப்படுத்தியிருந்தால் எளிதில் மீறக் கூடாததாயிருக்குமென்பதுவே. காலையில் தந்தசுத்திசெய்தல், ஆறு முதலிய ஜலாசயத்தில் ஸ்நானம்செய்தல், ஒருவர் சாப்பிட்ட மிகுதி அல்லது எச்சிலை வேறொருவர்

புசிக்கப்படாதெனல், மாதம் அல்லது பட்சத்துக்கொருதரம் உபவாசமிருத்தல், ஏதேனும் ஒருற்சவம் நதி ஸ்தலம் முதலியவற்றைச் சாக்கிட்டு ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் பிரயாணஞ் செய்தல் இவைபோன்ற ஒவ்வொரு மதசம்பந்தமான காரியத்தையும் ஆராய்ந்தோரும் இவற்றுள் ஒவ்வொன்றும் நமது தேசசுகத்தைக் கருதியே பெரியோர் ஏற்படுத்தியதாகக் கொள்ளவேண்டும். "ஆசாரத்துக் காசாரம் சுகத்துக்குச் சுகம்" என்ற பழமொழி சொல்லவில்லையா? மேலும் இது உஷ்ணதேசமாதலாலும் அழுக்கு முதலியவற்றால் எளிதில் துர்க்கந்த முண்டாகு மாதலாலும், இப்படிப்பட்ட கிரம பந்தமான திட்டங்கள் ஏற்படுத்தல் அவசிய மாயிற்று. இப்படியிருக்க அநேகர் முன்னோருடைய கருத்தை நன்குணராது மேற்சொல்லிய சுகானுகூலமான நடக்கைகளைப் பேருக்குமாத்திரம் ஒருவாறு அநுஷ்டித்துவந்தும் அவைகளின் உத்தேசியங்களை மறந்து, வீடுகளிலும் புழக்கடைகளிலும், தெருக்களிலும், பலவித குப்பைகள் சேர்த்து அழுகி நாற்றமெடுக்கும்படி செய்கிறார்கள். இப்படிச்செய்வது முக்கியமாய் நாகரிகம் இல்லாத நாட்டுப்புறங்களில்தான்.

சுத்தமாயிருக்கவேண்டுமென்பதினால் டம்பமாய் இருக்கவேண்டுமென்பதல்ல; சிறு குடிசையானாலும் சற்று மேட்டுப்புறத்தில் நல்ல காற்று உலாவும்படி விசாலமாய்க் கட்டப்பட்டிருக்கவேண்டும். உண்ணுமலும் உறங்காமலும் இரண்டொருநாளைக் கிருக்கக்கூடுமாயினும், மூச்சுவிடாமல் ஒரு நிமிஷமேனும் இருக்க சாத்தியப்படாது. அன்றியும் நாம் உள்ளுக்கிழுக்கிற காற்று ரத்தத்தை சுத்தப்படுத்தவேண்டியது ஆவசியகமானபடியால் அது சுத்தமானதாயிருக்கவேண்டும். ஆனதுபற்றி அப்போதைக்கப்போது புதிய காற்று உட்செல்லாதபடி அடைக்கப்பட்டிருக்கிற இறுக்கமான ஒரு அறையில் உள்ள காற்றையே மேலும் மேலும் உள்ளுக்கு இழுத்துக்கொண்டிருந்தால் சற்று நேரத்தில் அந்தக்காற்றில் இருக்கும் ஜீவாதாரமான பிராணவாயு பரிமாணத்தில் குன்றி விஷத்தன்மையுள்ள கரிஅமிலவாயு அதிகரித்து கஷ்ட ச்வாசத்தை உண்டுபண்ணும். இதற்குத் திருஷ்டாந்தம் 1756-வது வருஷம் வங்காளத்தில் ஒரு கொடிய நவாபு 20 அடிச் சதுரமான ஒரு இருட்டறையில் 146-அங்கிலேயரைப் போட்டு அடக்க அவர்களில் 23 பேர் தவிர மற்றவர்களெல்லாரும் ஒரு ராத்திரிக்குள்ளே மூச்சுவிடக்கூடாமல் திக்கு முக்காடி இறந்துபோனார்கள்.

வீட்டுப்புறக்கடைகளில் கண்ட இடத்திலும் சாணி குப்பை முதலியவற்றைப் போடாமல் ஒதுப்புறமான ஓரிடத்தில் கொட்டி வைத்து சேர்ந்தவுடன் எருவுக்காகவாவது வேறெந்த வேலைக்காக வாவது அப்போதைக்கப்போது அப்புறப்படுத்தவேண்டும். வீட்டில் பிரதிதினம் ஊற்றப்படும் ஜலமும் மழைக்காலத்தில் சேரும் வெள்ள நீரும் எளிதில் போகும்படிக்கு, ஜலதாரைகள் கட்டி அவற்றில் அழுக்கு முதலானவை தங்காதபடி அடிக்கடி சுத்தப்படுத்தி வரவேண்டும், அப்படிச் செய்யாதபக்ஷத்தில் அழுக்கு ஜலம் குட்டை குட்டையாகத் தேங்கி, அதில் கிருமிகள் ஜனித்து, விஷபேதி முதலிய தொத்து வியாதிகளுண்டாவதற்கு ஏதுவாகும்.



நாட்டுப்புறங்களிலுள்ள மற்றோர் கெட்ட வழக்கம் என்னவெனில், பசுமாடுகளையும் சில சமயங்களில், முக்கியமாய் மழைக்காலங்களில் எருமைமாடுகளையும் தாங்கள் குடியிருக்கும் வீடுகளின் தாழ்வாரங்களிலும் தெருத் திண்ணைகளிலும் கட்டிக்கொள்வது தான். அங்கே மேற்படி ஜந்துக்கள் சாணமிட்டுக் கோமய முதலியவற்றால் அசுத்தமாக்கி, ஸகிப்பதற்கரிய நாற்றத்தை உண்டுபண்ணி பலவித கொள்ளை நோய்களுக்கு அஸ்திவாரம் போடுகிறதுபோலாகிறது, வீட்டிலும் அதிகமான பாசம் முழங்காலளவு சேரும், உட்காரவாவது படுக்கவாவது கொஞ்சமும் உலர்ந்த தரையில்லாமல் எங்கும் ஓதமாயும் அந்தச் சொற்ப இடமும் மாடு முதலியவை மிதித்து சொளசொள என்று சேறாயுமிருக்க, வீட்டைச் சுற்றிலும் குட்டை குட்டையாய்த் தண்ணீர் தேங்கி அவற்றிடையில் புழு நெளிந்து நாற்றத்தை நாற்றிசையிலும் வீசிக்கொண்டிருக்கிற சாணிக்குப்பல்கள் சிறு சிறு தீவுபோலத் தலையெடுத்துக் காட்டி பார்த்திருக்கும் ஒவ்வொருவரும், நாட்டுக்குடிகளும் அவர்களுடைய குழந்தைகளும் குட்டிகளும் மழைக்காலத்தில் படுகிற இம்சை இப்படிப்பட்டதென்று ஒருவாறு ஊகிக்கலாம். இதனால் மாடுகளுக்குள்ளும் கோமாரி, வக்கை, தொம்மை முதலான வியாதி உண்டாகி குடித்தனக்காரனுக்கு அதிக நஷ்டம் விளைவிக்கின்றன. ஸர்வஜீவ தயாபரராகிய கடவுள் மாடுகளை மனுஷ உபயோகத்துக்கென்று உண்டாக்கி இருந்தபோதிலும் அவைகளின் இயல்புக்கும் நம்முடைய சுபாவத்துக்கும் மிக்க தாரதம்மியமிருப்பதால், அவைகளை நமது குடியிருப்பு ஸ்தானத்தில் வைத்துக்கொள்வது அவைகளின் சௌக்கியத்துக்காவது நமது சுகத்துக்காவது ஏற்றதல்ல. ஆதலால் மாடுகளுக்காக பிரத்தியேகமாய் சிறுகொட்டில்கள் கட்டி அவைகளை காலை மாலை இரண்டு வேளைகளிலும் குப்பை முதலிய தங்காதபடிக்குப் பெருக்கி வைக்கவேண்டும்.

அநேக கிராமங்களில் ஒரே குளத்தில் மாடு முதலியவைகளை கழுவுவதும் கால் அலம்புவதும், துணி தோய்த்து ஸ்நான பானம் செய்வதும் வழக்கமாயிருக்கிறது. இதனாலுண்டாகிய கெடுதி ஜலம் மிகுதியாயுள்ள மழைகாலத்தில் அதிகமாய்த் தெரியாதிருந்தாலும் மழையின்றிக் குளம்வற்றி நீர்க்கரிப்புண்டாயிருக்குங்காலத்தில் நன்றாய்த் தெரியவரும் எப்படிக்காற்று ஜீவாதாரமோ, அப்படியே ஜலமும் ஜீவாதாரம் எப்படிக் கெட்டகாற்றை சுவாசத்தோடு உட்கொண்டால் வியாதியுண்டாகுமோ அப்படியே அசுத்தஜலத்தைப் பருகுவதினாலும் தேகத்துக்கு அசௌக்கியம் உண்டாகும்.

தலைமுறை தலைமுறையாய் மேற்சொன்ன வழக்கங்கள் நாடுகளில் நடந்தேறிவருகின்றனவே, ஒன்றும்கெடுதியைக் காணோமே. இப்பொழுதுமாத்திரம் என்ன? என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். அது சரியல்ல. ஏனெனில் முற்காலத்தில் நாட்டுப்புறத்தில் ஜனங்கள் இவ்வளவு அடர்த்தியாயிருந்ததில்லை. காலமழையும் தப்பாமல் பெய்து வந்தது. ஒருவேளை சில வியாதிகள் கண்டிருந்தாலும் அவை இன்ன காரணத்தினா லுண்டானவை என்றறியும் நன்னறிவு இல்லாமையால் கவனியாமல் அம்மை பிடாரி முதலியவற்றின் கோபத்தால்

உண்டாயினவென்று பயந்து உபயோகமற்ற சடங்குகள் அநேகம் செய்து ஆடு வெட்டிக் கோழி முறித்து கிராமத்தை இன்னும் அதிக அசுத்தமாக்கி விடுவது வழக்கம். நாகரீகம் வளர்ந்தோங்குகிற இக்காலத்தில் தகுந்த முயற்சிசெய்து மாடுகள் தண்ணீர்குடிக்கக் கைகால் கழுவ இவற்றிற்கு ஒரு குட்டையும் ஸ்நானபானத்துக்கு ஒரு தண்ணீர்குளமும்உண்டாக்கி ஒன்றை மற்றொன்றுக்குக் கையாதபடி ஜாக்கிரதையாய் பாதுகாத்து வரவேண்டும்.

சிறிதுகாலமாய் ஸ்தாலிகநிதி சங்கத்தார் அவ்விடங்களிலுள்ள நாகதாளி முட்புதர்களைக் களைந்து தெருக்களைச் சமப்படுத்திதண்ணீர்க்கால்கள் வெட்டி பாதைகளைச் சீர்ப்படுத்தி, குளங்களிலும் கிணறுகளிலும் தூர்வாருத சுகாதாரமான ஏற்பாடுகளைச் செய்ய வருஷாவருஷம் முக்கியமான கிராமங்களுக்கு திரவிய ஸகாயம் செய்து வருவதால் இதுவரையில் எடுத்துக்காட்டின குறைவுகளநேகம் நாளடைவில் நீங்குமென்பதற் கையமில்லை. ஆகிலும் புத்திமான்களும் செல்வாக்குள்ள ஜமீன்தார்களும் சுசியினாலுண்டாகும் நன்மை இப்படிப்பட்டதென்றும் சுசியினால் சம்பவிக்கும் தீமை இன்னின்னதென்றும் சாதாரண ஜனங்களுக்குத் தெரியப்பட எடுத்துக்காட்டி அறிவு புகட்டுவது மிகவும் நலமாய் இருக்கும்.

ஜ—ணி.

## அகல்யாபாய்.

முன் காலத்தில் இந்தியாவை ஆண்டு பெருமை பெற்றவர்களில் அகல்யாபாய் என்னும் பெண்ணரசியும் ஒருத்தி. இவள் மகாராட்டிர ராஜ்யத்தில் மால்வா என்னும் பகுதியைச்சேர்ந்த ஒரு கிராமத்தில் 1735-ம் வருஷம் பிறந்தவள். இவளை பெற்றோர் ஸிந்தியாவென்னும் பெயர் பெற்ற மகாராட்டிரத் தலைவனது வம்சத்தைச்சேர்ந்தவர். ஆனால் இக்குடும்பத்தைப்பற்றி அவ்வளவாய் சரித்திரத்தில் ஒன்றும் சொல்லியிருக்கவில்லை. இப்பெண்ணரசி எவ்விதம் அதிக புத்திசாதுர்ய மடைந்தாளென்பதையும் அதி பலவானான ஹரிராவின் பிள்ளைக்கு இவள் எப்படி வாழ்க்கைப்பட்டாளென்பதையும் கூட சரித்திரமெங்கும் உரைக்கவில்லை. அக்காலத்திலும் பெண்களுக்குக் கல்வியே கிடையாது ஆகிலும் இப்பெண்ணரசி நமது பூர்வீக இதிகாஸ புராணங்களை நன்குயறிந்து பூர்ணஞானம் பெற்றிருந்தது மிகவும் ஆச்சரியப்படத்தக்கதே. இவள் அதிக அழகு வாய்த்திராவிடினும் முகத்தில் அதிக தேஜஸும் பெருந்தன்மையுமுடையவளாய்க் கண்டோர் மனதைக் கவரும்படியான தன்மை வாய்ந்து விளங்கினாள்.

மல்ஹார் ராவ் என்பவன் பூனாவுக்கு 20 மைல் தூரமுள்ள ஹோல் என்னும் கிராமத்தில் பிறந்தவன். அதனால் ஹோல்கார் என்று இவ்வம்சத்துக்குப் பெயர். இவன் பேஷ்வாவின் ஒரு சேனைத்தலைவனாயிருந்து பேர்பெற்று இந்தூர் ராஜ்யத்தை மான்யமாகப் பெற்றான். ஆகையால் இவன் இந்தூர் ராஜ்யத்தை



யாளத் தொடங்கி ஹோல்கார் வம்சமெனப் பெரும் பேரெடுத்தான். இவன் புத்திரனாகிய கண்டிராவ் என்பவன்தான் அகல்யாபாயை மணந்தவன். இப்பெண்மணி புருஷன் வீடடைந்து மாமியையும் பக்தியுடன் உபசரித்துக்கொண்டே பல நாள் கழித்தாள். அனேக யுத்தங்களில் அதிக உக்ரத்துடன் சண்டையிட்டிருந்ததால் இவன் ஹ்ருதயம் க்ரூரதசையடைந்திருந்தது. இவனுக்கும் கோபம் வரும் சமயங்களில் அதிதீரவான்களான ராணுவவீரர்களும் இவனை நெருங்க நடுங்கினார்கள்; ஆனால் இவனுடைய க்ரூரத்தன்மையெல்லாம் அக்ல்யாபாயின் மிகுந்த சாந்தகுணத்தின் முன் சூரியனெதிர் இருளென நீங்கியது. மாமியாரோ அதி அகங்காரியாயும் பொறுமையில்லாதவளாயுமிருந்தாள். அவளையும் தன்னுடைய சாந்தகுணத்தால் தன் வழிப்படுத்தினாள். இல்லறவாழ்க்கையில் நல்லறிவுவாய்ந்த இப்பெண்மணி சமுசாரத்தில் அப்போதப்போது தோன்றும் சிறு சண்டைகளையும் ஒழித்து அரமனைக் காரிய மனைத்தையும் சரிவர நடத்திவந்தாள். பாவச் செயல்களைக் கடிந்து, எப்போதும் நல்வழியையே நாடி நடப்பாளாயினள். தினந்தோறும் ராமாயண மகாபாரதங்களைத் தவறாமல் படித்து அவை விளக்கும் நன்மார்க்கத்தையே கடைப்பிடித்து ஒழுகலாயினாள். 1754-ம் வருஷத்தில் இவ்வனிதையின் பர்த்தாவாகிய கண்டிராவ், ஜாட் என்னும் கொள்ளைக் காரரைத் தொலைப்பதற்காகப் போனபோது இவனுயிரையும் அவர்கள் கொள்ளை கொண்டார்கள். அகல்யையின் நிலைமையை என்னவென்று சொல்வது? தெய்வமெனத் தோற்றி நின்ற கணவனைப் பறிகொடுத்து அடங்காப் பெருந் துயருழன்றாள். இவளுக்கு இரு கண்ணெனத்தகும் ஒரு பெண் மகவும் ஆண்மகவுமிருந்தன. மச்சாபாய் என்றும் மாலிராவ் என்றும் முறையே பெயர் வகித்தனர். இவ்விரு கண்களையுங் கூட நோக்காதவளாய்க் கணவன் சென்ற வழி தானும்போவதாய் நிச்சயித்துக் கொண்டனள். எப்போதும் மனந்தளராத மல்ஹார்ராவும் இப்பெண்மணிபால் இரக்கங்கொண்டு, “குழந்தாய், விஸனமுறாதே; கண்டியும், என்னை இவ்விருத் தாப்பிய நிலையில் விட்டு நீங்கினான். உன் முகத்திலல்லவோ என் விசனத்தை நீக்கவேண்டும். குழந்தாய் நீ தான் எனக்கு உயிர் நிலை. நீயும் என்னை விட்டு நீங்குவாயாகில், நானுமிறந்தவனே. நீ என்னருமையன்றோ! உனது துன்பத்தை விடு. இவ்வரசாக்ஷி எல்லாம் உன்னுடையதே. சகல ஸம்பத்தும் நின்னதே. உனக்கென்ன வேண்டியிருந்தாலும் கேள், அதைத் தருகிறேன்” என்றான். அதனால் மனம் சிறிது தேறினாள். மல்ஹார்ராவ் அடிக்கடி சண்டைமேற் செல்லும் ஊக்கமுடையவனாயிருந்ததால் கண்டிராவ் நடத்திவந்த காரியமனைத்தையும் இவளே தாங்கினாள்,

# பெண்கல்வியைப்பற்றிய ஸர்க்கார் ரிப்போர்ட்.

இந்தியாவின் பலபாகங்களிலும் பெண்கல்வியானது தினேதினே விருத்தியடைவதைப் பார்க்க மிகுந்த உற்சாக முண்டாகிறது. பெண்கல்வி யென்னும் தலைப்பின் கீழ், மாகாணக் கவர்ன்மெண்டாருடைய பிரசுரங்களில் தோன்றும் விஷயங்களைப் படிக்க மிகுந்த திருப்திகரத்தை யுண்டுபண்ணுகிறது. சென்ற 1904-05 வருஷங்களில் பெண்கல்வி விருத்தி யடைந்திருக்கும் விபரத்தை அடியில் குறிப்பிடுகிறோம். முதலாவது சென்னை மாகாணத்தைப் பற்றி கவனிப்போம்:—

சென்னை மாகாணத்துப் பொதுக் கல்வியைப் பற்றிய ரிப்போர்ட்டில், தனிமையாய், பெண்கல்வியைக் குறித்து எப்பொழுதும் ஒரு அத்தியாயமிருந்து கொண்டேயிருக்கும். சென்ற வருஷத்தில் டாக்டர் போர்ன் என்பவரின் ரிப்போர்ட்டில் பெண்கல்வி மிகுதியும் விருத்தியாயிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெண் பாடசாலைகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற மார்ச்சு மீ 31௳ 1194 பாடசாலைகளிருந்தன, அவைகளில் 71,434 பெண்கள் படித்துவந்தார்கள். அதாவது முந்திய வருஷத்தைக் காட்டிலும், 103 பள்ளிக்கூடங்களும் 6,154 பெண்களும் அதிகம். பெண் பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகளைத் தவிர்த்தும், ஆண்பிள்ளைகளின் பாடசாலைகளில் படிக்கும் பெண்களைச் சேர்த்தும் மொத்தம் 150,037 பெண்கள் கல்வி பயின்றுவந்தார்கள். ஆனால் முந்திய வருஷத்தில் 139,139 பெண்கள்மட்டுமேயிருந்தார்கள். சென்றவருஷத்தைவிட இவ்வருஷத்தில் பள்ளிக்கூடத்திற்குப் போகத்தகுந்த வயதுள்ள பெண்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் அதிகரித்திருக்கிறார்களென்பதை சந்தோஷத்துடன் குறிப்பிடுகிறோம். பீ. ஏ. டிகிரி இங்கிலீஷ்பாஷைப் பரீட்சைக்கு 3 பெண்கள் ஆஜராகி, மூன்றுபெயரும் தேறினார்கள். ஒருவர் இரண்டாவது கிளாஸிலும், மற்றிருவரும் 3 வது வகுப்பிலும் வெற்றிபெற்றார்கள். இரண்டாவது பாஷைக்கு 4 பெண்கள் ஆஜரானார்கள். அவர்களில் 3 பேர் தேறினார்கள். சாஸ்திர (Science) வகுப்பிலும் அதேமாதிரிதான். மேற்சொன்னவர்கள் முழுமையும், சுதேச கிறிஸ்தவர்களும் ஐரோப்பியர்களுமாகவேயிருந்தார்கள். எப். ஏ. பரீட்சைக்கு, பிராம்மணரல்லாத இந்து 1, ஐரோப்பியர்கள் 18, சுதேச கிறிஸ்தவர்கள் 13 ஆக 32 பெண்கள் ஆஜரானார்கள். அவர்களில் 13 பெயர்கள் தேறினார்கள். அவ்வளவு பெயரும் 2 வது கிளாஸிலேயே வெற்றியடைந்தார்கள். அவர்கள் பிராம்மணரல்லாத இந்து 1, ஐரோப்பியர்கள் 3, சுதேச கிறிஸ்தவர்கள் 9. இந்தப் பரீட்சையில் இதுவரையில் 6 பிராமணர்கள், பிராமணரல்லாத இந்து 1, ஐரோப்பியர்கள் 66, சுதேச கிறிஸ்தவர்கள் 26 ஆக மொத்தம் 99 பெண்கள் தேர்ச்சிபெற்றிருக்கிறார்கள். பிரவேச பரீட்சைக்கு 195 பெயர்கள் ஆஜரானதில் 46 பேர் தேறினார்கள். ஆனால் முந்தியவருஷத்தில் 183 பேர் ஆஜரானதில் 29 பேர்மட்டுந்தான் தேறினார்கள். ஆஜரானவர்கள் பிராம்மணஜாதிப்



பெண் 1, பிராம்மணரல்லாத இந்துக்கள் 5, ஐரோப்பியர்கள் 103, சுதேச கிறிஸ்தவர்கள் 79, மகமதியர்கள் 2, பார்ஸி 20. அவர்களில் பிராம்மணரல்லாத இந்துவர், 21 ஐரோப்பியர்களும், 23 சுதேச கிறிஸ்துவப்பெண்களுமே தேர்ச்சிபெற்றார்கள். இதுவரையில் மொத்தம் 641 பெண்கள் பிரவேச பரீட்சையில் தேறியிருக்கிறார்கள்.

ஸ்திரீகளுக்கென்றே 3 காலேஜிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளில் 12 பெண்பிள்ளைகள் படித்துவந்தார்கள். ஆண்பிள்ளைகளுக்கென்று ஏற்பட்ட பள்ளிக்கூடங்களில் 18 பெண்பிள்ளைகள் படித்துவந்தார்கள். அவர்களில் 11-பேர்வரையில் பிரஸிடென்ஸி காலேஜில் படித்தவர்கள். காலேஜில் படிக்கும்படியான ஸ்திதியிலுள்ள பெண்களின் தொகை 37 லிருந்து 30 க்குக் குறைந்துவிட்டது. பெண்கள் படிக்கும் அப்பர்ஸெக்கண்டரி ஸ்கூல்களின் தொகைகளும் படிக்கும் பெண்களின் தொகையும் அதிகப்பட்டது. இப்படி அதிகரித்ததற்கு முக்கிய காரணம், லோயர்ஸெக்கெண்டெரி, பிறைமெரி, இந்த டிபார்ட்மெண்டுகள்தான். இவ்வகுப்பைச்சேர்ந்த 27 பள்ளிக்கூடங்களில் 25 எய்டெட் (உதவி பெற்ற) பள்ளிக்கூடங்கள். அவைகளில் 24 பள்ளிக்கூடங்கள் பாதிரிகளுடைய விசாரணைக்குட்பட்டவை. மொத்தம் 911 பெண்கள் லோயர்ஸெக்கண்டெரி பரீட்சைக்குப் போனார்கள். அவர்களில் 819 பேர் முழுப்பரீட்சைக்கு வந்தார்கள், 563 பேர் முழு யோக்கியதாபத்திரத்திற்கும் (Certificate) தேறினார்கள். லோயர்ஸெக்கெண்டெரி ஸ்கூல்கள் சென்றவருஷம்போல 170 தானிருந்தன. ஆனால் பெண்கள்மட்டும் ஆயிரம்பேர் அதிகமானார்கள். தேசபாஷா பள்ளிக்கூடங்களின் தொகை அதிகரித்தது. சென்ற மார்ச்சு மீ 31௳ யில் இரண்டாந்தரப் படிப்பிலிருந்த பெண்கள்மட்டும் 4,673 பேர் அதற்கு முந்திய வருஷத்திலோ 4,447 தான். பிறைமெரி எக்ஸாமினேஷனுக்கு 1,700 பெண்கள் ஆஜரானதில் 1,212 பெயர் யோக்கியதா பத்திரம் பெற்றார்கள். தேறியவர்கள் பெரும்பாலும் சுதேச கிறிஸ்தவர்களும் பிராம்மணரல்லாத இதர இந்துக்களும். பெண்பிள்ளைகளின் பப்ளிக் பிறைமெரிப் பள்ளிக்கூடங்கள் அதிகப்பட்டதோடு, அவைகளில் படிக்கும் பெண்களின் தொகையும் அதிகரித்தது. இதாருடைய மேற்பார்வையில் நடந்து வந்த பிறைமெரி பள்ளிக்கூடங்களில் 100-க்கு 56·1 வரையில் பாதிரிகளால் நடத்தப்பட்டவை. லோயர் ஸெக்கண்டெரி, பிறைமெரிப் பரீட்சைகளுக்குப் போன பெண்களுக்காக முறையே, 25, 80 ஸ்காலர்ஷிப்புகள் ஏற்பட்டதில், முதற்சொன்ன 25 [illegible]க்கும் பிந்திய 80-ல் 77 ஸ்காலர்ஷிப்புகளும் கொடுக்கப்பட்டன. அவைகளையடைந்தவர்கள் பெரும்பாலோர் சுதேசகிறிஸ்தவர்களும் பிராமணரல்லாத இதர ஜாதி இந்துக்களும். பிறைமரிப் பரீட்சையின் பேரில், இந்துப் பெண்களுக்கும், மகமதியப் பெண்களுக்குமாக தனிமையில் 60 ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்பட்டன. இந்து மகமதிய விதவைப் பெண்களுக்காக ஏற்பட்ட 63 ஸ்காலர்ஷிப்புகளில் வருஷக்கடைசியில் 45 கொடுக்கப்பட்டன. ஸெக்கெண்டெரி பிறைமெரி இந்த பெண்பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் மொத்தச் செலவு ரூ. 7,65,70

பம்பாய்:—பம்பாய் ஸ்திரீகளுக்குள் உயர்தரப்படிப்பு மிகுதியும் விருத்தியடைந்து வருகிறது. சித்திரக் கலாசாலைகளில் 35 பெண்களிருந்ததில் 2 ஐரோப்பியர் அல்லது யூரேஷியர், 2 இந்தியக்கிறிஸ்தவர்கள், 4 பிராமணர்கள், 3 பிராமணரல்லாத இதரஜாதி, 21 பார்ஸிகள், மற்ற வகுப்பார் 3. கிராண்ட் மெடிகல் காலேஜில் 45 பெண்களிருந்தார்கள். அவர்கள் ஐரோப்பியர் அல்லது யூரேஷியர் 20, இந்தியக் கிறிஸ்தவர் 4, பிராமணர்கள் 2, பிராமணரல்லாத இதர இந்து 1, பார்ஸிகள் 15, மற்ற வகுப்பார்கள் 3, காலேஜ் வகுப்புகளில் ஒரு மகமதியஸ்திரீ கூட இல்லை. 2,654 பெண்கள் கொண்ட 21 ஹைஸ்கூல்களிருக்கின்றன. அவைகளில் ஐரோப்பியர்கள் அல்லது யூரேஷியர்கள் 2,314, இந்தியக் கிறிஸ்தவர்கள் 118, பிராமணர்கள் 54, பிராம்மணரல்லாத இதர இந்துக்கள் 65, மகமதியர்கள் 31, பார்ஸிகள் 972, மற்றவகுப்பார் 70. மத்தியதரப்பள்ளிக்கூடங்கள் (Middle schools) 55. அவைகளில் 3,037 பெண்கள் படித்து வந்தார்கள். அவர்களில், ஐரோப்பியர்கள் அல்லது யூரேஷியர்கள் 825, இந்தியக் கிறிஸ்தவர்கள் 1,441, பிராம்மணர்கள் 47, பிராம்மணரல்லாத இதர இந்துக்கள் 235, மகமதியர்கள் 36, பார்ஸிகள் 383, மற்ற வகுப்பார் 70,923. பிரைமெரி ஸ்கூல்களும் அவைகளில் 58,733 பெண்களுமிருந்தார்கள். அவர்களில் ஐரோப்பியர்கள் அல்லது யூரேஷியர்கள் 8, இந்தியக்கிறிஸ்தவர்கள் 4,102, பிராமணர்கள் 11,768, பிராமணரல்லாதவர்கள் 31,321, மகமதியர்கள் 7280, புத்தர்கள் 15, பார்ஸிகள் 3750, மற்ற வகுப்பார்கள் 489. உபாத்திமைத் தொழிலுக்காக 259 பேர் தயார் செய்யப்பட்டு வந்தார்கள். அவர்களில் ஐரோப்பியர் அல்லது யூரேஷியர்கள் 21, இந்தியக் கிறிஸ்தவர்கள் 56, பிராமணர்கள் 81, பிராமணரல்லாதவர்கள் 81, மகமதியர்கள் 16, பார்ஸிகள் 2, இதரவகுப்பார் 2. சித்திரவேலைப் பள்ளிக்கூடங்களில் படித்து வந்தவர்களில் 5 ஐரோப்பியர்களும், 2 இந்தியக்கிறிஸ்தவர்களும், பிராமணரல்லாத இந்துவும், 2 மகமதியர்களும், 8 பார்ஸிகளும், மற்ற வகுப்பார் இருவருமிருந்தார்கள். கைத்தொழிற் பாடசாலைகளில் 63 மகமதியப் பெண்பிள்ளைகளிருந்தார்கள். தொழிற் பாடசாலைகளில் 14 இந்தியக்கிறிஸ்தவப்பெண்களும், ஒரு பிராமணப்பெண்ணும் படித்து வந்தார்கள். வைத்திய சாஸ்திரப் பள்ளிக்கூடங்களில் இரண்டு ஸ்திரீகள் படித்தார்கள். ஆனால் ஆச்சரியத்துக்கிடமாக அவ்விருவரும் மகம்மதிய வகுப்பினர்கள். உயர்தரப் பிரைவேட் கல்விச்சாலைகளில், அரபி, பெர்ஸியன் இந்த பாஷைகளை 454 மகமதியப்பெண்கள் படித்தார்கள். 35 இந்துப்பெண்கள் ஸம்ஸ்கிருதம் கற்றுக்கொண்டார்கள். 51 பார்ஸிஜாதிப் பெண்கள் வேறு இலக்கியங்கள் கற்றுவந்தார்கள். ஆங்காங்கு பிரைவேட்டா யேற்படுத்தப்பட்டிருக்கும் எலிமெண்டெரி பள்ளிக்கூடங்களில் சுமார் பதினாயிரம் பெண்களுக்குமேல் படித்து வந்தார்கள். பப்ளிக் பரீட்சைகளில் தேறிய விவரங்களைப்பற்றி இனவாரியாய், டயரக்டருடைய ரிபோர்ட்டில் சொல்லப்படவில்லை. பொதுவாய்ப் பார்க்குமிடத்து பெண்கல்வியானது, ஸ்பஷ்டமாய் விருத்தியடைந்திருப்பதைக் கண்டு மிகவும் திருப்தியடைகிறார். அநேக புதிய பெண்பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் விஷயத்தில் "ஹிஸ் எக்ஸலன்ஸி இன் கவுன்ஸில்" மிக்கவும் சந்தோஷப்



படுகிறார். மற்ற மாகாணங்களைப்போல போதனாமுறையைக் கற்றுத் தேறிய உபாத்தியாயர்கள் அதிகமாய் யேற்படாததுமட்டும் பெருங்குறையே. அப்பேர்ப்பட்டவர்கள் வேண்டுமென்று உணரப்படுவதே திருப்தியைத் தருகின்றது.

* * * * * * *

## ராமதிலகம்.

### அங்கம் II களம் 1.

தாமோதரமுதலியார் வீட்டு வெளிப்புறம்.

ராமாமிர்தப் பிள்ளை வருதல்.

ராமா:—நான் எவ்வாறு செல்வேன். என் மனம் பின்தங்கிவிட்டதே. இச்சமயம் சிந்தை வசமன்றே! திரும்பி மனதைத் தேடிச் செல்லவேண்டும். (அங்கிருந்த சுவரைபற்றி ஏறி உள்ளே குதித்தல்)

(வஸுதேவப்பிள்ளை, சாரங்கபாணி நாயகர் வருதல்.)

வஸு:—ராமாமிர்தம், ராமாமிர்தம். ஏ ராமா.

சார:—புத்திசாலியாச்சே. தெரியாமல் மெள்ள படுக்கையில் போய்ச் சேர்ந்திருப்பான்.

வஸு:—இல்லை. இல்லை. இந்த வழியாக ஓடி அந்த தோட்டத்தின் சுவரைப் பற்றி ஏறி உள்ளே குதித்தான். சாரங்கா, கூப்பிடு.

சார:—கூப்பிடவா? ஆணையிட்டு வேணுமானாலும் அழைக்கிறேன்.—ஏ ராமா, ஏ முசுடு, ஏ பயித்தியம், ஏ காமவெறி! சும்மாவாடா அப்பா, வந்து பெருமூச்சுவிட்டு அழு, பேத்து, அது போதும் வந்து கொஞ்சம் ரதியினுடைய பிரசம்ஸையை சொல்லேன். தேவேந்திரனை அகலிகையிடத்திற்கு அடித்துத் துரத்திய அறங்களை அதட்டிப் பேசேன். ஓஹோ என்ன பேச்சு மூச்சுக் காணுமே. என்ன அந்தக் குரங்கு செத்தாப்போலிருக்கிறது. ஆச்சு மந்திரம் போடுகிறேன் பார். அடே மாதவியினுடைய கண்ணின் பேரில் ஆணையிடுகிறேன் வா! பிறைநுதலின் பேரிலாணை, துவரிதழின்மேல், மலர் பாதத்தின் மேல், கதலித் தொடையின் மேலாணையிருக்கு, வா! என்ன இன்னம் மேலே சொல்ல வேண்டுமோ.

வஸு:—ராமாமிர்தம் காதில்பட்டால் அவன் கோபித்துக் கொள்வான்.

சார.—கோபத்திற்கிடமில்லை அவன் பேரைச் சொன்னால் அவனுக்கு ஸந்தோஷமுண்டாகும்.

வஸு:—நாம் போவோம். அவன் இந்த மரங்களின் மத்தியில் ஒளித்துக் கொண்டிருப்பான். காதலுக்குத் தான் கண்ணில்லையே. இரவு அதற்கு ஏற்கையாயிருக்கும்.

சார:—கிராமத்திற்கு கண்ணில்லாமற் போனால் குறிதவறிப்போம் அவன் இங்கேயே மரத்தடியில் உட்கார்ந்து ஆகாசத்தைப பார்த்து மாதவி வரமாட்டாளா என்று அழுது கொண்டிருப்பான். இராமா போய் வரேன். என்படுக்கைக்குப் போகிறேன் இந்தக்கட்டாந்தரையில் படுக்க என்னாலாகாது. போவோமா?

வஸ.—போவோம். வேணுமென்று மறைந்திருப்பதில் பயனில்லை.

(போகுதல்)

# பொது வர்த்தமானம்.

## பாம்புகடி நிவாரணங்கள்.

கோரக்பூரில் பாம்புகடியால் இறக்குந்தருணத்தில் இருந்த 5 பேர் பின்வருமாறு சொஸ்தமடைந்ததாக அலஹபாதிலிருந்து வந்த ஒரு தந்தி கூறுகின்றது. கால்மெட்டேஸ் ஆன்டிவெனீன் (Calmette's Antivenene) பெர்மாங்கனேட் ஆப் பொடாஷ் (Permanganate of Potash) என்ற மருந்துகளை கடிவாயில் செலுத்துவதனால் சொஸ்தமாய் விடுகிறதென அறிவிக்கப்படுகிறது. மேற்படி மாகாணத்திலுள்ள பன்டா என்ற இடத்தில் 21 பேர் மேற்படி மருந்துகளினாலேயே சொஸ்தம் பெற்றிருக்கின்றார்களென அறிகிறோம்.

## பரோடாவில் இனாம் பிரைமரிக் கல்வி.

பரோடாவில் இனாமாகப் பிரைமரிகல்வி ஏற்பாடு செய்வதற்கு அதி தீவிரமான பிரயத்தினங்கள் நடந்துவருகின்றன. அடுத்தமாதம் மேற்படி ராஜ்யத்தில் 1.00 பாடசாலைகள் புதிதாகத் திறக்கப்படும். இந்த விஷயத்தின்பொருட்டு 3 லக்ஷம் ரூபாய் ஸாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

## ஓர் பெங்காளத்து பிராமணஸ்திரீயின் உதாரகுணம்.

ஓர் பெங்காள பிராமணமாது கல்கத்தாப்பத்திரிகைகளிலொன்றின் மானேஜருக்குப் பின்வருமாறு எழுதியிருக்கிறாள்:—"கிழ்பெங்காளத்திலே பஞ்சம் இருக்குமளவும் பஞ்ச நிவர்த்தியின் பொருட்டாக நான் மாதமொன்றுக்கு ரூபாய் 50 கொடுக்க மனமுடையவளாக இருக்கிறேன்."

## சிங்கம் பட்டியில் மிஸ்டர் V, கிருஷ்ணசாமி ஐயர்,

சிங்கம்பட்டி ஜமீன்தார் தீர்த்தபதியவர்கள் திருநெல்வேலியிலே சென்னை மாகாண சபை கூடிக்கலைந்ததும் அச்சபைச் சேர்மன் மிஸ்டர் V. கிருஷ்ணசாமி ஐயரை சிங்கம்பட்டிக்கு வந்துவிட்டுப் போகவேண்டு மென்று கேட்டுக்கொள்ள அவர் அதற்கு இசைந்து சிங்கம்பட்டிக்குப் போயிருந்தார். அவர் சிங்கம்பட்டி ஜமீன்தாரோடு கல்லிடைக்குறிச்சி ஸ்டேஷனில் போயிறங்கினதும்,



அவரை கல்லிடைக்குறிச்சிவாசிகள் ஆசார உபசாரமாய் வரவேற்றார்கள். அவ்வூர் வாசிகள் கோயில் பிரசாதத்தோடு அவரை வந்து கண்டார்கள். அங்கிருந்து புறப்பட்டு அவர் சிங்கம்பட்டிக்குச் செல்ல, அங்கு அவர் சிங்காரத் தோப்பிலே தாம்பிரவர்ணி ஆற்றோரமாயுள்ள பங்களாவில் இறக்கப்பட்டார். அன்றிரவு அங்கு தங்கியிருந்து மறுநாள் காலமே பாபநாசம் மலையிலே சிங்கம்பட்டியிலிருந்து 13 மைலுக்கப்பாலுள்ள ராமதீர்த்தத்துக்குப் போய் ஸ்நானஞ் செய்துவிட்டு வந்து தாம் போயிருந்த இடங்களின் இயற்கை யழகைப் பற்றி ஜமீன்தாரிடம் வர்ணித்துப் பேசி மைசூர் சமஸ்தானத்திலே சிவசமுத்திரம் அருவியை யொப்ப ராமதீர்த்த அருவி போன்ற அருவிகளை யந்திரங்களை இயைக்கப்பிரயோசனப் படுத்திக் கொள்ளலா மென்று சொன்னார். ஐயர் அவர்கள் குறிப்பாய்ச்சொன்னதை சிங்கம்பட்டி ஜமீன்தார் கவனிக்க வேண்டியது அவசியம்.

## பரோடா சமஸ்தானத்தில் வித்தியாபிவிருத்தி.

மிஸ்டர் ரோமே சந்திர தத்தால் சென்ற வருஷத்துக்கு எழுதப்பட்ட பரோடா சமஸ்தானநிருவாகரிபோர்டில் கண்ட சில அம்சங்களைப் பற்றி சென்ற வாரத்தில் பேசினோம். இன்று அந்த சமஸ்தானத்தில் பொதுஜனக்கல்வியின் அபிவிருத்தியைக்கருதிச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளைக் குறிப்பிடுவோம். பல பகுதியினையுடைய அந்த சமஸ்தான வாசிகள் அத்தனை பேரும் படிப்பில்லாதவர்களாயிருக்கக் கூடாதென்பதைக் கருதி கீழ்த்தரப் படிப்பை கட்டாயமாய் எல்லோரும் படிக்க வேண்டுமென்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பெண்கல்வி, தாழ்ந்த வகுப்பு ஜனங்களின் கல்வி, காட்டுச் சாதியார்களின் கல்வி இவைகளிலும் அந்த சமஸ்தானாதிபதி விசேஷ கவலை யெடுத்து வருகிறார். தாழ்ந்தவகுப்பு ஜனங்களுக்குப் பணச்செலவென்பதேயில்லாமல் படிப்பு சொல்லிவைக்கப் படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. காட்டு ஜனங்களின் சிறு வர்களுக்கு தச்சுவேலை, விவசாயத் தொழில். ஒடிந்துபோன ஆயுதங்களைச் செப்பனிடுதல் போன்ற வேலைகள் சொல்லிவைக்கப்படுகின்றன. பிரிடிஷ் ஆட்சியின் கீழுள்ள இந்திய மாகாணங்களுக்கும் பரோடா சமஸ்தானத்துக்கும் வித்தியாபி விருத்தி ஏற்பாடுகளைப் பொறுத்தமட்டில் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்.

## திருநெல்வேலியில் நடந்த 11-வது ஆசாரதிருத்த கான்பரன்ஸ் தீர்மானங்கள்.

### 1-வது தீர்மானம்.

"பெண்கல்வி விருத்தியாகும் விஷயத்தில் இந்துஜனஸமூகத்தார் ஒவ்வொருவரும் சிரத்தையெடுத்து உழைத்து வரவேண்டும். பெண்கல்வி விருத்தியடையும் விஷயத்தில் முக்கிய சாட்சியமாயிருக்கிற, மைசூர் ஸ்ரீமதி ருக்மணியம்மாள், ஸ்ரீமதி ஸ்ரீரங்கம்மாள் இவ்விருவரும் சென்னை சர்வகலா சாலையில்

பி. யே. பட்டம்பெற்றதையும். கல்யாணி அம்மாள் எப். ஏ. பரீட்சையில் தேறியதையும், மிஸ்டர். R. V. சுப்பிரமணியய்யருடைய பெண் பிரவேச பரீட்சையில் தேறியதையும், இந்த கான்பரன்ஸானது மிகுந்த திருப்தியோடும் குறிப்பிடுகிறது, என்ற விஷயமானது மிஸ்டர் M. R. ராமகிருஷ்ணய்யரால் தமிழ்பாஷையில் பிரேரேபிக்கப்பட்டு, ராவ்ஸாஹிப் T. ராகவய்யாவால் ஆமோதிக்கப்பட்டு மிஸ்டர் T. R. கணபதிராமய்யரால் ஆதரித்துப் பேசப்பட்டு எல்லோராலும் தீர்மானிக்கப்பட்டது.

## 2-வது தீர்மானம்.

"பெண்கள் பள்ளிக்கூடத்திற் படித்துவரும் காலவரையை இன்னும் சிறிது அதிகப்படுத்தவும், இர்நுக்கள் நாளுக்கு நாள் சரீரமெலிந்து பலஹீனர்களாகி வருவதைத் தடுப்பதற்கும், அதி பால்யத்தில் அநியாயமாய் அநேகர் கைம்பெண்களாகி விடுவதைக் குறைப்பதற்கும், பெண்கள் ருதுவானபிறகு விவாகம்செய்வதுதான் சரியான மார்க்கம். தற்காலம் ஒரு சமயம் அது சாத்தியப்படாத விஷயமென்று தோன்றினால், பெண்களுக்கு 12 வயதுக்குமேலும், ஆண்களுக்கு 18 வயதுக்கு மேலும்தான் விவாகம் செய்யவேண்டுமென்றாவது அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர எத்தனிக்கவேண்டியது அவசியம்." என்ற விஷயமானது, மிஸ்டர் வி. கிருஷ்ணஸாமியய்யரால் பிரேரேபிக்கப்பட்டதின் பேரில் மிஸ்டர் K. B. ராமனுதய்யர் அதை ஆமோதித்துப் பேசித் தீர்மானிக்கப்பட்டது.

## 3-வது தீர்மானம்.

விவாககாலங்களில் வரசுல்க்கம் அதாவது எதிர் ஜாமீன் என்ற ஏராளமான தொகையை வசூலித்து தாங்கமுடியாத விவாகச்செலவை மிகுதிப்படுத்திப் பல தொல்லைகளுக்குட்படுத்தாமலிருக்கும் வகையில், மிகுந்த திரவியஸ்தர்களும் படிப்பாளிகளும் முன்னுக்கு வரவேணுமாய் இந்த கான்பரன்ஸ் அபிப்பிராயப்படுகிறது என்ற விஷயத்தை மிஸ்டர் K. G. கிருஷ்ணசாமிய்யர் பிரேரேபித்ததின்பேரில் மிஸ்டர் P. M, கைலாசம்பிள்ளை ஆமோதித்தார். பிறகு மெஸர்ஸ் R. கோபால கிருஷ்ணய்யர், V. மகாதேவய்யர் இவர்களால் ஆதரித்துப் பேசப்பட்டதின்பேரில் சபையோரால் தீர்மானிக்கப்பட்டது.

## 4-வது தீர்மானம்.

கைம் பெண்களுக்குப் படிப்பின் சௌகரியங்களைச் செய்து, தாங்களாக இஷ்டப்பட்டுப் புனர் விவாகம் செய்து கொள்ள மனமுடையவர்களுடைய கோரிக்கை நிறைவேறும் விஷயத்தில் தடைகளொன்றுஞ் செய்யாமல், அவர்களிஷ்டம் போல் நடக்க முயற்சி செய்யவேண்டும். ருதுவாவதற்கு முன் கைம் பெண்ணாய் விட்ட தௌர்ப்பாக்கிய ஸ்திரீகள் விஷயத்திலாவது அவ்விதம் செய்ய முயற்சி செய்யவேண்டும் என்ற விஷயமானது, மிஸ்டர் N. K. ராமஸ்வாமி அய்யாவால் பிரேரே பிக்கப்பட்டு, அமராவதி மிஸ்டர் C. Y. சிந்தாமணியால் ஆமோதிக்கப்பட்டு மிஸ்டர் G. A. நடேசய்யரால் ஆதரித்துப் பேசப்பட்டதின் பேரில் சபையோரால் தீர்மானிக்கப்பட்டது.

133
OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 3 AUG 1906 MADRAS.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
ளுண்மை யுறவோங்கும் முலகு."

| | | |
|---|---|---|
| Vol. 1. | Madras. July, 1906. | No. 12. |
| தொகுதி. 1. | சென்னை 1906-ம் வருஷம் ஜூலை-மீ | பகுதி. 12. |

# LOVE.

## காதல்.

உலகவாழ்க்கையோ மிகவும் நம்பத்தகாததாக இருக்கின்றது. எந்த் நிமிஷத்திலே மரணம் சம்பவிக்குமோ அல்லது எந்த நிமிஷத்திலே நீக்க முடியாத நோய்வந்து சேருமோ நம்மால் நிச்சயித்துக் கூற இடமில்லை. இருக்கும்மட்டிலும் உலகத்திற் பெரும்பாலார் துன்பக் கடலில் மிதந்துகொண்டே செல்லுகிறார்கள். இத்துன்பப் பெருங்கடலிலே எத்தனை புயற்காற்றுக்கள்! எத்தனை சுழிகள்! எத்தனை பாறைகள்! இவற்றையெல்லாம் அளவிடமுடியாது. இக்கடலின் நடுவிலே ஒரோவழி சில சில இன்பத்தீவுகள் அகப்படுகின்றன. இந்தத் தீவுகளிலே சிறிது பசுமையும், தென்றலும் காண்கிறோம். இது ஒரு க்ஷணத்தில் முடிந்துபோய்விடுகிறது. மறுபடியும் கடல், மறுபடியும் கைசோரப்புரியும் அலைகள், சுழிகள், பாறைகள், புயற்காற்றுகள் என்பவை வந்துவிடுகின்றன.

இந்த நிலைமையிலிருக்கும் மனிதஜந்துக்களுக்குச் சில சில ஆறுதல்கள் இந்த உலகத்திற் காதாரமான ஆச்சரிய வஸ்துவினால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள்ளே "காதல்" ஒன்றாகும். மறுநாள் காலையிலே தூக்குண்டு சாகப்போகிற மனிதன் இன்று மாலை சிறைக்கதவிற்கு வெளியே தனது ஆசைக் காதலி வந்து நிற்கக் காண்பானாயின் கம்பிகளின் மூலமாக அவளுடன் முத்தமிடும் ஒரு கணமட்டும் தனது துன்பங்களை யெல்லாம் மறந்து பரவசனாகி விடுகின்றான்.

சூரியவம்சத்துச் சிங்காதனத்திலே வீற்றிருக்கும் பெருமையையும் அயோத்தி ராஜமாளிகையின் இன்பங்களையும் இழந்து விட்டவனாகிய இராமன் காட்டின் இடையே ஸீதாதேவியின் கடைக்கண்ணிலிருந்து பெருகும் காதலொளியைக்கொண்டல்லவா ஜீவித்துக் கொண்டிருந்தான்?

இந்த விஷயத்தை நாம் அதிகமாக வற்புறுத்திப்பேசவேண்டிய அவசியமில்லை. காதல் என்ற ஸ்திரமற்ற சந்திரனென்றில்லாவிட்டால் உலகவாழ்க்கையாகிற இரவு எத்தனை பயங்கரமானதாகவும், வீணாகவும், இருக்குமென்பதை அறியாதாரில்லை.

"காதல்" என்ற சொல்லை, நாம் மனிதனுக்கும் மிருகங்களுக்கும் பொதுவாயிருப்பதாகிய "காமம்" என்ற அருத்தத்திலே வழங்கவில்லை. அறிவு சம்பந்தப்படாத வெறும் உடலாசை "காதல்" அல்லது "பிரேமை" என்று சொல்வதற்கு தகுதியுடையதில்லை.

அறிவினாலும் அபீஷ்டங்களினாலும் நெஞ்சொற்றுமை ஏற்பட்டு, அன்றிற்பறவைகள் உடற் பிணைப்புற்றிருப்பதுபோல் எப்போதும் அறிவுப் பிணைப்புண்டாகி வாழும் வாழ்க்கையே பிரேமை வாழ்க்கையாகும். உடல்பற்றிய காதலைப்போல அறிவுபற்றிய காதலானது நிலைபற்றதும் இழிவுடையதுமாகமாட்டாது. சுத்தமான அறிவுக்காதல் எத்தனை அருமையான பதார்த்தமென்பதை நாம் நன்றாக அறிவோம். அது பல மாதர்களிடத்தும் புமான்களிடத்தும் காண்பதற்குரிய பொருளில்லை. ஆனால் மிருககுணங்கள் இன்னும் மனுஷ ஜாதியைவிட்டு அகலாமல்தானே இருக்கின்றன?

மாதர்கள் கல்வி கற்றிருக்கும் தேசங்களென்று கூறப்படும் இங்கிலந்து, பிரான்ஸ் என்னும் தேசங்களிலேயும் ஸ்திரீகளிடம் மிருகவியற்கைகள் இன்னும் மலிந்தே கிடக்கின்றன.

பொதுவாக எல்லாத் தேசங்களிலும் கல்வித் தேர்ச்சி பெற்றிருக்கும் புமான்கள் கூட "உடற்காதல்" பாராட்டுந் தன்மை யுடையவராயிருக்கின்றார்களே யல்லாமல் "உயிர்க்காதல்" பாராட்டும் நிலைமைக்கு வரவில்லை. இப்படி யெல்லாமிருந்த போதிலும், ஆண்களும் பெண்களும் மற்ற விஷயங்களைப் போலவே காதல் விஷயத்திலும் உயர்ந்த இயற்கை பெறுவதற்கு நன்னெறிப்பட்ட கல்வியொன்றைத் தவிர வேறு வழி யாதொன்றும் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை. உயர்ந்த இயற்கை யுடையோருடன் பழகுதல் ஒரு வழியாகுமென்று சிலர் கூறக் கூடும். ஆனால் இதுவும் கல்வியின் கிளைகளில் ஒன்றென்று கூறும் தன்மையுடைத்தே யல்லாமல் வேறில்லை.

## கற்புடைமை.

மேற் கூறிவந்ததிலிருந்து, உடற்பிரேமையைக் காட்டிலும் அறிவுப்பிரேமை விசேஷமானதென்றும், அறிவுப்பிரேமையைக் காட்டிலும் "உயிர்க்காதல்" அல்லது "ஆத்மப்பிரேமை" சிறந்ததென்றும் இனிது விளங்கும். இந்த ஆத்மப்பிரேமையை தான் கற்புடைமை என்று சொல்கிறார்கள். இந்த உயிர்க்காதல் எவ்வாறு ஏற்படுகிறதென்பதை ஊஹித்துச்சொல்வது கஷ்டமாக இருக்கிறது. ஒருவேளை உடல், அறிவு என்பவை இதற்கு ஒருவிதமான பாதையாக இருக்க



லாம். ஆனால் உடலொருமிப்பு, அறிவொருமிப்பு என்பவற்றால் ஆத்மக்காதல் முற்றிலும் ஏற்பட்டுவிடாதென்பதைப்பற்றி சந்தேகமே கிடையாது. ஸாவித்ரி, ஸீதை, சகுந்தலை முதலிய பெண்களின் சரிதைகளையும், ராமன் முதலிய ஆண்களின் சரிதைகளையும், கேட்கும்போது இத்தகையோர்களுக்கு இம்மாதிரி மனப்போக்கு எவ்விதமாக ஏற்பட்டதென்று நினைத்து நினைத்து மிகுந்த ஆச்சரியமுண்டாகிறது. இம்மாதிரியான கற்புடைமை இத்தேசத்துப்பெண்களுக்கு என்றும் ஒரு சிறந்த பூஷணமாகவிளங்கிநின்றமை நமது நாட்டிற்கே ஒருபெருமை ஆகும். ஆனால் நமது நாட்டு ஆண்களுக்கு இவ்வருமையான மனநிலை அதிகமாக புராதனகாலத்தில் இருந்ததென்றேனும், இப்போது இருக்கிறதென்றேனும் நினைக்க இடமில்லை. ஏககாலத்தில் ஒரு மனிதன் இரண்டு மூன்று ஸ்திரீகளை விவாகம் செய்து கொள்ளலாமென்ற விதி முற்காலத்திலே இருந்ததாகத் தெரிகிறது. இக்காலத்திலும் மேற்கண்ட விதி முற்றிலும் மாறிவிட்டதாக தோன்றவில்லை. இது நமது தேசத்திற்கும் பெரிய அவமானமென்று நாம் உறுதியாக நம்புகிறோம். ஒரே காலத்தில் நூற்றுக்கணக்கான ஸ்திரீகளை மணம்புரிந்து கொண்டிருந்த அரசர்கள் பலர் முற்காலத்திருந்தன ரெனப்படுகின்றது. இக்காலத்தில் துருக்கி தேசத்து நாகரீகமற்ற ராஜன் அவ்வாறே மணஞ்செய்து கொண்டிருக்கிறான். இந்த துருக்கி அரசனுக்கும் ஷை ஹிந்து ராஜாக்களுக்கும் அதிக வேற்றுமையிருந்ததாக நாம் நினைக்கவில்லை. பெண்களுக்கு கற்பு நிலை எத்தனை அவசியமோ அத்தனை ஆண்களுக்கு அவசியமில்லை யென்று நினைப்பதைப் போல் மூடத்தனம் வேறு கிடையாது. வண்டியிழுக்கும் மாடுகளிலே ஒரு மாடு காலொடிந்து கண் தெரியாமலிருக்கும் பக்ஷத்தில் மற்றொரு மாடு எவ்வளவு நன்றாக இருந்தும் என்ன பிரயோஜனம்? ஆண்கள் ஒரு விதமான கட்டுப்பாடு இல்லாமலிருக்கும் நாட்டிலே பெண்கள் நன்னெறியிலே நிற்பது சாத்தியமில்லை யென்பது மஹா மூடனுக்குக் கூட எளிதில் விளங்கக் கூடும்.

இந்த விஷயத்தைப்பற்றி நமக்கு ஜாஸ்தியாக விஸ்தரிக்கப் பிரியமில்லை. நிற்க?

## குடும்ப நலம்.

இயற்கையிலேயே உண்மைக்காதல் ஏற்படுவது மனிதனது இஷ்டத்தைப்பொறுத்ததன்று. என்றபோதிலும், கிரகக்ஷேமாபிவிருத்தியின் பொருட்டு ஒன்று சேர்ந்திருக்கும் கணவனும் மனைவியும் தம்மால் கூடியவரை ஒருவருக்கொருவர் ஹிதம் தேடுதல் அவர்களின் கடமையாகும். இன்சொல், வெடுவெடுப்பில்லாமை, சிறு துன்பங்களால் மனக்குழப்பமடைந்து விடாதிருக்கும் திறமை, மற்ற உயிர்களுக்கு இயன்றவரை கஷ்டமேற்படுத்தாமலிருக்க வேண்டுமென்ற ஆசை யென்பவை இருக்குமானால் எத்தனையோ ஹிதம் உண்டாகக் கூடும். இச்சற்குணங்கள் எல்லோராலும் பயின்றுகொள்ளத் தக்கவை. தாய் தந்தையர்கள் தமது குழந்தைகளுக்குச் சிறுபிராயமுதலே அவ்வித நற்குணங்கள் ஏற்படுமாறு பழக்கவேண்டும். நாம் இதை வெறும் பள்ளிக்கூடப்பாடமாக சிலர் படிக்க

வேண்டுமென்ற நோக்கத்துடன் எழுதவில்லை. இதனை முழுமனதுடன் படித்து அது நமது நாட்டவரின் தினசரி அனுபவத்தில் சேர்ந்துவிடவேண்டு மென்பது நமது நோக்கம். கற்புடைய மங்கையர்மட்டுமேயல்லாமல், கற்புடைய புமான்களும் இந்நாட்டில் பெருகிநிற்க வேண்டுமென்ற ஆசை நமது நெஞ்சிலே நிரம்பிக் கிடக்கின்றது.

பத்திராதிபர்.

# படித்த பெண்களினால் எய்தும் பயன்.

(224-வது பக்கத் தொடர்ச்சி)

கல்வி நலம் பெற்ற ஓர் கன்னிகையைக் கல்லா வொருவர்க்கு வாழ்க்கைப்படுத்தல் மேற்சொன்ன விஷயத்திலும் கொடுமை. இவ்விதிக் குள்ளான மங்கையரிற் சிலர், தமது நாயகன் அறிவீனனாயினும் இகழாது காலம், இடமறிந்து தன்னாற் கூடிய வரையிலும் சாதுரியமாய் அவனைத் திருத்திக் கூடுமாயின் நல்வழிப்படுத்திப் பதிபக்தியிற் சிறிதும் குறையாது மனம் களித்து வாழ்வதுண்டு. இன்னுஞ் சிலர் அவ்வாறு திருந்தாத புருஷனாயினும் ஊழ்வலியை நினைந்து அவன் பால் வெறுப் பின்றி அவன் குறிப்பறிந்து நடந்து எவ்விதத்திலாகிலும் அவனுக்குத் தன்மீது களிப்புண்டாகச் செய்து கற்பு வழுவாது குருடன் கைப்பட்ட குருவிந்தமணி (செம்மணி) போல் காலங்கழிப்பது முண்டு. பெண்கள் படித்தால் நடைகோணுவாரெனக்கூறும் சில ஆடவருமுண்டு. அதனுண்மை யெப்படிப்பட்டதெனச் சிறிது விசாரிப்போம்.

கல்வியறிவு களவொழுக்கத்திற்கு உபகாரியாயின் கல்லாப் பெண்கள் யாவரும் கற்பரசிகளாயிருத்தல் வேண்டும். அஃது இல்லை யென்பதை யறியாதாரில்லை.

காவலன் பயத்தினாற் கற்பைக்காக்கின்ற
பாவையர் அரிய நூற்பயன் றெரிந்திடிற்
பாவபுண்ணிய நெறி யறியும் பண்பினாற்
சீலனீங்கினு மயலாரைச் சேர்வரோ?

என்ற செய்யுளின்படி கணவனது அச்சத்தினாலேயே கற்பைக்காக்கும் இயல்புக் குணத்தையுடைய பெண்கள், கற்பு, ஒழுக்கம், பொறுமை, ஈகை, முதலிய நற்குணங்களை விர்த்தி செய்விக்கும் நீதி நூல்களையும் உத்தம சரிதைகளையும் கற்றுத்தேர்வாராயின் தம்முயிரே நீங்கினும் கற்பழியத் துணியார். இது திண்ணம். அங்ஙனமன்றிப் பெண்மைக்கேலாத சில தூர்த்த நூல்களை மட்டில் படித்து இயற்கையாயுள்ள அறிவும் கெட்டு தக்கனதகாதன விளங்காமையாற் கற்பழியும் சில பேதையரைக் கண்டு, பெண்கள் படிக்கக்கூடாதென்பதற்குப் போ



திய உதாரணமாகச் சமாதானமடைவோரின் மதி, தன்னாயகி பெண்ணாயிருந்தால் பிறர் காமுறுவரெனப் பேடியை மணந்து மகிழ்ந்தவன் அறிவையும், தண்ணீரின் நிலையறியாது இறங்கி மாண்ட ஒருவனைக் கண்டு குளித்தலையே விடத்துணிந்தவன் விவேகத்தையும் ஒக்குமன்றி வேறில்லை.

கற்ற பெண்களிலும் சிலர் குற்றம் புரிகின்றனர் என விளங்கினும், அதே பெண்கள் கல்லாதவர்களா யிருப்பின் கற்றவர்களாயிருந்து செய்யும் வழுவினும் ஆயிரம் பங்கு அதிகமாய்ப் பிழை செய்வாரென்பதற் கையமில்லை. உதாரணமாக நிகழ்காலத்தில் நியாயஸ்தலங்கள் மூலமாய் குற்றவாளிகளெனத் தீர்மானித்து தண்டிக்கப்படும் பெண்பாலர்களின் வரிசைப்பட்டியை மட்டில் நாம் சோம்பலின்றி சற்று கவனிப்போமாயின் அப்பட்டி முழுதும் படியாப் பெண்களுடையதாகவே யிருத்தலைத் தெளிவாய்க் காணலாம்.

இருண்டதோர் அறையில் நல்ல குணமுள்ள வஸ்துக்களையும் தீய குணமுள்ள பல பொருள்களையும் நிரப்பிவிட்டு முன்பின்னறியாத பிறனொருவனை அதனுட் சென்று உத்தமமான பொருள்களை அறிந்தெடுத் தநுபவிக்கும்படி கட்டளையிடுவதைப் போன்று கல்வியறிவென்னும் ஒளியில்லாதவர்களை உலகில் இயற்கையாய் அமைந்திருக்கும் நன்மை தீமைகளினிடையில் பகுத்தறிவால் நன்மைகளையே நாடிக் கைக்கொள்ள வேண்டுமென நாம் எதிர்பார்க்கலாமோ?

இதை ஆலோசியாத ஆடவர் சிலர் பெண்கள் படிக்கக்கூடாதென்னும் கொள்கை மேற்கொண்டு சாதிக்கின்றனர். அத்தகைய புருஷருக்கு கல்விபயின்ற கன்னிகைகளை வாழ்க்கைப்படுத்துவது கல்லாக் கணவனுக்குக் கற்றறிந்தாள் வாழ்க்கைப்படும் கொடுமையிலும் கொடுமை. இதனால் மேற்கூறிய கொள்கை கற்ற ஆடவரிடமும் சிலரிடத்து உளதென விளங்குகிறது. இவைகளை எண்ணுமிடத்து பெண்கல்வியை விருத்தி செய்ய வேண்டியதற்கு மேலே காட்டியபடியான தப்பெண்ணங்களையுடைய ஆடவர் கொள்கைகளாகிற களைகளை (அசட்டை செய்யாமல் மற்ற கல்விமான்களாகிய சகோதரர்கள்) பரிகரிக்கவும் வேண்டுமென்று தோன்றுகிறது. உயர்தரப் பரீக்ஷைகளையும் கௌரதாபட்டங்களையும் தாங்கள் அடையவேண்டியது எத்துணை அவசியமோ, அதனினும் அநேகமடங்கு தத்தம் வீட்டிலுள்ள பெண்களும் கல்வியறிவுள்ளவர்களா யிருக்கவேண்டுவது அவசியமென்னும் அறிவு ஒவ்வொரு ஆடவர்கட்கும் இளமை முதலாகவே வேரூன்றி நிலைபெறவேண்டும். பெண்கள் கல்வியறிவும் உலகியல் ஞானமும் இல்லாதவர்களாய் இருந்தால் அதனால் கஷ்டம், நஷ்டம், குறைவு முதலிய யாவும் அவன் கணவனுக்கே ஸ்திரமாகக் கிடைக்கின்றதென்பதில் தடையில்லை.

ஆடவன் இதை யுணர்ந்து பெண்கள் கல்விக்குச் சாதகமாயிருந்தாலன்றி அது ஒருநாளும் சிறப்படையாது. இச்சீர்திருத்தங்கட்கு முதற்காரணம் சிறுவர் சிறுமியரின் தாய் தந்தையரே. பெற்றோர்க்குப் பெறுதல், பாதுகாத்தல், பாராட்டல் முதலிய வெவ்விஷயத்திலாகிலும் ஆண்மக்கள் உயர்வாகவும் பெண்மக்கள் குறைவாகவும் மதிக்கப்படுகின்றதோ? இருவிழிகளில் ஒன்று ஒளிபெறவும் மற்

ரொன்று ஒளி கெடவும் விரும்புவரோ ? அதுபோல் இல்லறத்திற்கு அங்கமாகிய மக்களைப்பெற்று அவர் உய்யுமாறு கல்வி பயிற்றுது விடுத்துப் புறத்தே பற்பல விரதாதிகளும் தருமங்களும் புரிதல் என்ன பயனைத்தரும் ?

இளமை, அழகு முதலியவற்றால் தலைவனுள்ளத்தைக் கவர்ந்து இன்புறும் ஓர் நங்கை அவ்விரண்டும் நீங்கி மூப்புற்ற காலத்தும் அத்தலைவன் பிரிவஞ்சி உடனுறையத்தக்கவனாகச் செய்விக்கும் கருவி கல்வி யழகேயன்றோ ? அன்றியும் பொருளைத்தேடும் ஆடவனுக்குக் கல்வி எத்தனை அவசியமோ அவ்வாறே அப்பொருளைத் தக்க நெறியில் செலவிட வுரிமைபெற்ற பெண்ணுக்கும் அக்கல்வித் துணை இன்றியமையாததன்றோ ?

அன்றியும் கல்வியறிவுள்ள தலைவி தானே குடும்ப பாரங்களைக் கைக்கொண்டு சீர்பெற நடத்துவதால் தன் கணவனது பாரத்தைக் குறைக்கும் சுமைதாங்கி யாகின்றாள். தமதரிய சிறுவர் சிறுமியர்கட்கும் பக்குவமறிந்து கல்வியொழுக்கங்களைப் போதிக்கும் நல்லாசிரியனுமாகின்றாள். கணவன் கவலையுற்றுழி அன்போடு அருகிருந்து தேற்றும் உயிர்த்தோழியுமாகின்றாள். கணவனும் மைந்தரும் தேக அசௌக்கிய முறுங்கால் பதார்த்தங்களின் குணதோஷங்களையறிந்து தகாதனவற்றை விலக்கித் தக்கவை தெளிந்து உண்பித்தலால் குடும்பவயித்தியனுமாகின்றாள். கணவன் கோப முறுங்கால் அமைதியோடிருந்து காலமிடமறிந்து இதவசனங்களால் அதனை யாற்றுந்தன்மையால் அறிவுடைய அமைச்சனுமாகின்றாள். நாயகன் உடலிற்கு துரும்புசாணின், தனதுயிருக்கே தீங்கு விளைந்ததாக நடுங்கும் மெய்யன்புடைய நாயகியின் சம்பந்தத்தை உற்றுநோக்கு மிடத்துக் கணவனது உயிர்க்குடலென்பது சிறப்பன்று. கணவரது உயிருக்குயிரெனவே யன்றோ கருதல் வேண்டும். இதுபற்றியன்றோ;

எனக்குயிர் பிறிதுமொன் றுண்டென் றிரேல் எனக்குமன் றித்
தனக்குயிர் வேறின் றாகித் தாமரைக் கண்ணவாகிக்
கனக்கரு மேகமொன்று கார்முகந் தாங்கியார்க்கு
மனக்கினிதாகி நிற்கும் அஃதின்றி வரம்பிலாதாய்.

எனச் சீதாபிராட்டியார் தனக்கும் இராமருக்கும் உள்ள விள்ளாவன்பினை இராவணனுக்கு விளக்கிக் காட்டினர்.

பொன்னுலகவாசிகளும் பொறாமை யடையும்படி மண்ணுலக வேந்தனாகிய நளமகாராஜனுக்கு மணமாலைசூட்டிய தமயந்தியென்னும் தையல் சனிபகவானால் அரசிழந்து நாடிழந்து தனயர்களைப் பிரிந்து தன் காதலனும் அன்புமாறி அணிந்திருந்த ஆடையையும் ஆருமறியா நடுநிசியில் வகிர்ந்துகொண்டு விட்டகன்றதாய் உணர்ந்த காலத்திலும் தன் ஊழ்வினை கொடிதென நினைந்துருகியதன்றி அக்காதலனிடத்துச் சிறிதேனும் அன்புகுறைந்தனளோ குறைந்தனளோ? பக்தி மாறினளோ? அறிவு மறந்தனளோ? அம்மம்மா! வீமன் அருந்தவப்புதல்வியாகிய அம்மடந்தைக்கும் சூரியவம்சத்தரசனாகிய அரிச்சந்திர



மகாராஜனின் அன்புடைய நாயகியாகிய சந்திரமதிக்கும் நேர்ந்த துக்ககரமான சம்பவங்கட்கு இணையாக வேறு எந்தப்பெண்கட்கு நேர்ந்தது; நேரப்போகின்றது?

அரிச்சந்திரன் கௌசிக முனிவரால் அலக்கண் புலவெய்திய காலத்தும் பட்டமகிஷியாகிய சந்திரமதி தேவியானவள் "எனையிழந்தாலும் மன்னா, என் வயிற்றுதித்தமைந்தன், தனையிழந்தாலும், இந்தத்தலம் இழந்தாலும், வெம்போர் முனையிழந்தாலும், நீதி முறை யொன்றும் இழவேல்" என்று உறுதி கூறி நீதியை யெடுத்துக்காட்டித் தேற்றியது மன்றி கணவன் படும் துயரத்தினை நீக்கத் தான் விலைப்பட்ட காலத்தும் அரசனைத்துதித்து அறம் பெரிதா யெண்ணி அன்புமிகுந்து துன்பத்திற் றுணிந்து தலையிட்டும், கடைசியாக வீரவாகுவின் அடிமையாளாகத் தன் வேந்தன் ஆட்பட்டு ஆனிமோசத்தால் தன்னைச்சிசுவதம் செய்தவளாக காசிவேந்தனால் நிச்சயித்துக் கொலைக்களத்திற் சேர்த்து வெட்டக் கட்டளையிட்டவாறு வாளையோங்கி தன்னிஷ்ட தெய்வத்தை வணங்குவாயாக வெனக்கணவன் புகன்றதைக் கேட்டு அத்தருணத்தும்

"பழக்கமானவக் கணவனைப்பரவி யென்றனவி
யிழக்கற்கஞ்சி நீ யறம்வழுவே" லெனவும்.

"பொருந்து நீதத்திற் புற்புத வாழ்வை நீ மெய்யென், றருந்தவத்தையும் அறத்தையும் மெய்யையும் விடுத்து, வருந்தல் மன்னவ." எனவும் தேறுதல் கூறி அழிதன்மாலையாகிய உடலைநம்பி உண்மையையும் தருமத்தையும் ஒரு போதும் இழக்கவேண்டாமென பிரார்த்தனையென்பதாகக் கேட்குமிடத்து முற்காலத்திய நம்மிந்திய மாதர்களின் நீதிநூற்புலனும், நெறிவழுவாமையும், பதிபக்தியும், தம்பதிநேயமும் எத்துணை அழகிய தாயிருந்ததென்று காண்கிறது. இத்தகைய குணமணிகளாகிய கற்பரசிகள் எந்த தேசத்திற் பிறந்திருந்ததாகக் கேட்கவியலும். இத்தகைய அந்நியோன்னிய தாம்பத்தியம் ஒத்த அறிவினாலும் அவ்வொத்தவறிவு உலகியல் ஞானத்தாலும் அவ்வுலகியல ஞானம் விசாலித்த கல்வியினாலுமன்றோ சித்திக்கக் கூடியது, பிரிய சகோதரர்களே.

இத்தகைய அநேக நன்மைகளையும் சுகங்களையும் இன்பங்களையும், இழந்து அந்தோ! மடமகளிர் மனைவி மக்களுடன் கலகவாழ்க்கை வாழ்ந்ததினாலேயே உலக வின்பம் முற்றிலும் அநுபவித்ததாக எண்ணி இல்லறமும் கெட்டுத் துறவறமும் விட்டு இடருறும் ஆடவர்களின் வாழ் நாட்கள் எள்ளளவேனும் சுகமுடையதாகுமோ ? பொருட்பெருக்கால் மேற்கண்ட சுகங்களை அடைய முடியுமோ? அந்நியோந்நியமென்பது இல்லறமென்னும் தேகத்திற் இயல்பாயுண்டாகும் பலவித துன்பங்களாகிய பிணிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தும் தேடற்கரிய சஞ்சீவியன்றோ ? கற்றுணர்ந்து கூரிய மதியினராய் இல்லறம்புரியும் தலைவியும் தலைவனும் ஒருவர்க்கொருவர் கல்வி நயமறிந்து வார்த்தையாடிக் களிக்கு நேருமேல் அச்சுகத்தையே வீட்டின்பமெனக் கொள்ளுதல் பிரத்தியக்ஷப் பிரமாணத்திற் கொத்ததாமெனப் பொருள்படுவதோடு மோக்ஷவீடெனப் பொருள்கொள்ளுதல் சிறப்பன்றெனவும் கருதியன்ன செய்யுள் அடியில் வருமாறு:

வீட்டினின்பம் வேறுளதென்ல் வெற்றுரை விழுநூல்
காட்டுநன்னெறி நயந்தெரி கணவனுமனையும்
வேட்டகல்வியின் அளவளாய்வியந்து நன்னலங்கொண்
டீட்டுமில்லறப்பயனையே யிசைத்திடற் றிலையும்.

என்றிருத்தலின் நம்மவர் புறச்சவுகரியங்களையும் தேச நன்மைகளையும் பற்றி முன்வந்து பாடுபடுமாறு இன்றியமையாத குடும்ப சுகமும் சீர்திருத்தமும் தங் கட்டு நிலைக்கும் மார்க்கமாகிய பெண்கல்வியையும் கவலையுடன் விர்த்தி செய்யவேண்டியதுடன் அப்படி செய்யும் விர்த்தியும், நமது பூர்வீக வழியைப் பற்றியதாய் இந்திய பூமிக்கியல்பான வித்தியம், தயை, பொறை, கற்பு, முதலிய நற்குணங்களெல்லாம் சிறக்கும்படியும் முயற்சிக்க வேண்டுமெனக் கோருகின்றேன்.

பண்டிதை அசலாம்பிகை அம்மாள்.

---

# ராமதிலகம்.

## அங்கம் II. களம் ii.

தாமோதர முதலியார் வீட்டுத் தோட்டம்.

ராமாமிர்தம்பிள்ளை வருதல்.

ராமா.—பெற்றவட்கே வருத்தம் தெரியும். மலடிக்குச் சிரிப்பாய்த் தானிருக்கும்—

(திருகவல்லி உயர ஜன்னலில் தோன்றுதல்)

இரு, இரு, அந்த ஜன்னலின்கண் தோன்றுகிற ஜோதியென்ன? ஓ! அது தான் திலகம் உதிக்கும் கீழ்த்திசை. உதிக்கவும் அவள் முகத்திற்குத் தோற்ற மதியும் நாணி யொளியிழந்து அழிந்துவிடுவாள். ஏ! மதியே, உனக்கேனிந்த துன்மதி? என் மனதுக் கினியமங்கையின் முகத்தை வெல்வனென்றகங்கரித்தாய். நீயும் அதனால் அங்கமறுத்தாய். மெய்வெளுத்தாய். தேய்ந்தாய். இனிமேலென்னை வருத்தாது ஒழிந்து விடுவாய்.—ஓஹோ. அதுவென்காதலி, ஆ! அதையவள் அறிவளா? அவள் என்னவோ பேசுகிறதுபோலிருக்கிறது. ஆனால் ஒன்றும் எனக்குப் புலப்படவில்லை. இருந்தாலு மென்ன? அவள் கண்கள் தான் நன்றாய் மொழிகின்றனவே. நானும் சொல்லுகிறேன். சீ! அது அதிகத்துணிச்சல். அவள் என்னோடு பேசவில்லை. வானின் விளங்கும் ஒளியிற் சிறந்த இரண்டு நக்ஷத்திரங்கள் தாங்கள் வேலையினிமித்தம் வெளிச் சென்று மீளுமளவும் தங்கள் ஸ்தானங்களிலிருந்து பிரகாசித்துக் கொண்டிருக்கும்படியாக அவள் கண்களை வேண்டுகின்றன. அவள் கண்கள் நக்ஷத்ரஸ்தானங்களிலும் நக்ஷத்திரங்கள் அவள் முகத்திலு மிருந்தால் என்னவாகும்? பகலவனைக் கண்ட விளக்கென அவள் கன்னத்தின் காந்தியால் நக்ஷத்திரங்கள் மறைந்துவிடும். நக்ஷத்திரமண்டலம் போன



இவள் கண்கள் ஆகாயமெங்கு மொளிபரப்பி பக்ஷிகளும் பகலெனப் பாடச் செய்யும். ஆகா, காந்தளேந்திய தாமரை மலரென அங்கையிற் சேர்த்திய முகத்தளாய் நிற்கிறாள். அந்தக்கையிலிருக்கிற மோதிரமாய்க் கிடந்தாவது அம் முகத்தைத் தீண்டப் பெறேனா?

திலகம்:—(உயர) ஆ! என்ன செய்வேன்.

ராமா:—அவள் பேசுகிறாள். என் தெய்வமே மறுபடியும் வாய் திறந்து எனக்கமிர்தமளிப்பாய். உன்னை தெய்வ மென்று சொல்லத் தகாதா? மானிடர்கள் இமையாமல் அண்ணாந்த வண்ணமாய் ஆனந்தத்தோடு நோக்கும்படி ஊர்ந்து செல்லும் மேகத்தைத் தாண்டி தேவலோகத்தினின்றும் விண்ணின் வழியாயிறங்கும் தெய்வம்போல் என் தலைக்கு நேரே நீயும் விளங்குகிறாய்.

திலகம்:—(உயர) ஓ ராமா, ராமாமிர்தம். நீ யேன் அக்குலத்தில் பிறந்தாய்? உன்குலத்தையும் தகப்பனையும் விலக்கலாகாதா? இல்லையெனில் என்னை நீ யுண்மையாய் காதலித்தாய் என்று உறுதி சொன்னால் என்குலத்தையும் தந்தையையும் வெறுத்துவிடுகிறேன்.

ராமா:—(தனக்குள்ளே) அவள் சொல்வதையின்னும் கேட்டுக் கொண்டிருக்கலாமா அல்லது இப்பொழுதே பதில் சொல்லலாமா?

திலகம்:—(உயர) உன்குலம் தான் எனக்கு விரோதியாயிருக்கிறது. உன் குலம் போனாலென்ன? குணமெங்கே போகும்? குலமென்கிறது என்ன, கையா, காலா, கழுத்தா, முகமா, அல்லது வேறு எந்த உறுப்பு? ஐயோ வேறு பெயரா யிருந்தாலாகாதா!—பேரிலே என்ன இருக்கிறது. அமிர்தத்திற்கு வேறு பெயரிட்டால் சுவை குன்றிவிடுமோ? ஆகையால் ராமாமிர்தத்தை ராமாமிர்தம் என்று அழைக்காவிட்டால், அவனுக்குள்ள உத்தமகுணம் இருக்கவேயிருக்கும்.—ராமா உனக்குச் சம்பந்தமில்லாத பெயரைத்தள்ளிவிடு, அதற்கு பதிலாக என்பழுதறு பெண்மையையும் ஆவியையும் ஏற்றுக் கொள்.

ராமா:—(இரைந்து) நீ சொல்வது வாஸ்தவ மென்று நம்புகிறேன். என்னை உன் காதலன் என்கிறதாக மட்டும் அழை. நான் புதிதாக நாமகரணம் செய்து கொள்ளுகிறேன்.

திலகம்:—(திடுக்கிட்டு) யார் அங்கே? இராத்திரியில் இங்கே ஒளிந்து கொண்டு என் ஏகாந்தத்திற்கு இடையூறு செய்யும் நீ யார்?

ராமா:—பெயர் விசாரத்தினால் நான் யார் என்று சொல்ல முடியவில்லையே! என் தவப்பயனே! நான் உன் சத்துரு குலத்தைச் சேர்ந்தவனாயிருக்கிறபடியால் என் பெயர் எனக்கே வெறுப்பாயிருக்கிறது. கடிதத்திலெழுதியிருந்தாலும் அப் பெயரை இப்பொழுதே கிழித்தெறிந்து விடுவேன்.

திலகம்:—அவர் பேசி நாலு வார்த்தை கூட நான் நன்றாய் கேட்கவில்லை. ஆனாலும் குரல் எனக்கு நன்றாய் தெரிகிறதே சீ. வெள்ளாளர் குலத்தைச் சேர்ந்த ராமாமிர்தம் அல்லவோ?

ராமா:—அப்பெயரையும் குலத்தையும் நீ விரும்பாவிட்டால் நான் இரண்டு மில்லை.

திலகம்:—நீர் எப்படி இங்கு வந்தீர்? என்ன காரியத்திற்காக வந்தீர்? இந்த தோட்டத்துச் சுவர் ஏறமுடியாமல் மிகவும் உயரமாயிருக்கிறதே. என் உறவாளிகள் யாராவது உம்மை இங்கே பார்த்தால் நிச்சயமாய்க் கொன்று விடுவார்களே.

ராமா:—ஆசையென்னும் சிறகால் பறந்து ஏறிவந்தேன். காதலுக்கு மதில் ஒரு தடையா? ஒரு விஷயத்தில் ஆசைவிழுந்தால் அதை யடைவதற்குரிய துணிவும் கூடவே வரும். ஆகையால் உன் உறவினர்கள் எனக்குத் தடையாகமாட்டார்கள்.

திலகம்:—அவர்கள் உம்மைப்பார்த்தால் கொலை பண்ணுவார்களே.

ராமா:—நின்செவ்வரிபடர்ந்த கண்ணினும் அவர்வாள் கூரியதன்று. ஆதலால் கொஞ்சம் குளிர்ந்த முகமாய்மட்டும் என்னைப்பார். அவர்கள் விரோதம் என்னை நிச்சயமாய் ஒன்றும் செய்யாது.

திலகம்:—எனக்கு ஏக சக்கிராதிபத்தியம் கிடைக்கிறதாயிருந்தாலும் கூட அவர்கள் உம்மை இந்த இடத்தில் பார்க்க நான் விரும்பமாட்டேன்.

ராமா:—அவர்கள் என்னைப்பார்க்க முடியாது. இருளாகிய போர்வையால் நான் மறைக்கப்பட்டிருக்கிறேன். ஒருஸமயம் அவர்கள் பார்த்து என்னை கொலை செய்வதாக வைத்துக்கொள்வோம். நீமட்டும் என்னை விரும்புவதாகத் தெரிந்தால் அவர்கள் என்னைக் கொல்வதைப்பற்றி எனக்கு விசாரமில்லை. நின்காதலின்றி பூர்ண ஆயுளைப்பெற்று வருந்துவதினும் காதல்கிடைத்துக் கொலையுண்பதில் எனக்கு வருத்தமில்லை.

திலகம்:—நான் இருக்கிறவிடம் உமக்கு யார் சொன்னார்?

ராமா:—நின் ஆசையே உன்னைப்பற்றி விசாரிக்கும்படி செய்து இங்கு கொண்டுவந்துவிட்டது. நீ ஸமுத்திரத்திற்கு அக்கரையிலிருந்தாலும், எனக்கு கப்பலோட்டிப் பழக்கமில்லையானாலும் மிகச் சிறந்த உன்னை நாடி அடைவதில் சலியேன்.

திலகம்:—இருள் இல்லாவிட்டால், இந்நிசியில் நான் ஏகாந்தமாய்க் கூறியதை நீர் கேட்டதனால், நான்நாணமடைந்தது என் முகத்தில் நன்கு விளங்கும். இப்பொழுது நான் சொன்னதையெல்லாம் மறுத்து மாதர்களின் வழக்கப்படி இழுக்கடிப் பதில் இஷ்டந்தான். ஐயோ எனக்கு அது வேண்டாம். உமக்கு என்னிடத்தில் அன்பு உண்டா? எனக்குத் தெரியும், தடையென்ன என்று தான் சொல்லுவீர். நானும் அதை நம்பத்தான் நம்புவேன். இன்னும் நீர் ஸத்தியம் வேணுமென்றாலும் பண்ணுவீர். ஸத்தியம் பண்ணினாலென்ன பயன்? ஆத்திரத்திற்குத் தக்கபடி ஸத்தியப் பண்ணி அதைத் தவறிவிடல் ஆடவரின் வழக்கம். அய்யா, ராமா, நீர் நல்லவர். என் மேலே உமக்கு இஷ்டமிருந்தால் நம்பிக்



கையாக சொல்லும். அப்படிக்கில்லாமல் நீர் என்னை எளிதில் வசியப்படுத்திவிட்டதாய் நினைத்தால் நான் வேணுமானால் இஷ்டமில்லைப்போல் பாவனை செய்து உம்மை வாட்டுகிறேன். அப்பொழுது நீர் என்னை வந்து கெஞ்சிக் கொஞ்சவேண்டுவீர். வேறொன்றுக்கும் அப்படி செய்யமாட்டேன். உண்மையாய்ச் சொல்லுகிறேன். நீர் இருந்ததை யறியாது என் அன்பை வெளியிட்டு விட்டேன். நீர் ஆதனால் என் அன்பு ஸ்திரமில்லை யென்று நினைக்கவேண்டாம். ஆனால், தங்கள் மனதை மறைத்து வாதிக்குமவர்களைக் காட்டிலும் நான் ஸ்திரமான அன்பை யுடையவளென்று நம்பும். நான் இரகசியம் பேசிக் கொண்டிருந்த ஸமாசாரத்தை எனக்குத் தெரியாமல் நீர் கேட்டிராவிட்டால் நான் கூட அந்த மாதிரி பாவனை செய்து வாதிப்பேன். ஆகையால் எனக்கு தங்களிடத்தில் ஆழ்ந்த அன்பு இல்லை யென்று நினைக்கவேண்டாம்.

ராமா:—அம்மா, இதோ இந்த பழவிருக்ஷங்களின் உச்சிக்கு வெள்ளிப்பூண் அமைத்தது போல் நிலவை வீசுகிற சந்திரன் சாக்ஷியாக நான் சொல்லுகிறேன்.

திலகம்:—வேண்டாம் சந்திரனை சாக்ஷியாக வைக்க வேண்டாம். ஒரு நிலையில்லாமல் மாதம் தோறும் வளர்ந்து தேய்கிற இந்த சந்திரனை சாக்ஷியாக வைத்தால் உமது அன்பும் அம்மாதிரி நிலையில்லாமல் போய் விடுமோ வென்று பயப்படுகிறேன்.

ராமா:—வேறு எதின் பேரில் ஸத்தியம் செய்யட்டும்?

திலகம்:—நீர் ஸத்தியம் செய்ய வேண்டிய அவசியமேயில்லை. அப்படி செய்கிறதாயிருந்தால், நான் இடைவிடாமல் தியானம் பண்ணுகிற இந்த ராம விக்கிரகத்தின் பேரில் (தன்கையால் ராமாமிர்தத்தைச் சுட்டிக்காட்டி) ஸத்தியமாய்ச்சொல்லும். எனக்கு நம்பிக்கைதான்.

ராமா:—என் அன்பானது —

திலகம்:—நிறுத்தும். ஸத்தியம் பண்ணவேண்டாம் உம்மிடத்தில் எனக்கு நம்பிக்கை உண்டாகி அதனால் நான் ஸந்தோஷத்தையடைந்த போதிலும், இவ்வளவு அவஸரமாய் தீர்மானம் செய்வதில் எனக்கு ஸந்தோஷமேற்படவில்லை. ஏனென்றால் நாம் செய்து கொள்வதானது ரொம்ப பதட்டமாயும் முன்பின் யோசனையில்லாததாயும், சொல்லிவாய் மூடுகிறதற்குள் தோன்றி மறைகிற மின்னலைப்போல் அவ்வளவு விரைவுள்ளதாயிருக்கிறது. ஆகையால் இப்பொழுது ஒருவாறாய் நாம் பிரிந்து போவோம். இப்பொழுது அரும்பு போன்றிருக்கும் நமது அன்பானது நாம் மறுபடியும் பார்ப்பதற்குள் தானாய்மலரட்டும். இப்பொழுது பிரிந்து போவோம். என்மனதுபோல் உன்மனதும் குளிர்ந்து திருப்தியையடையட்டும்.

ராமா:—இப்படி அதிருப்தியாகப் போகலாமா?

திலகம்:—இவ்விரவில் என்ன திருப்தியை செய்யக் கூடும்.

ராமா:—நான் உன்னை விரும்பும் வண்ணம் நீயும் என்னை விரும்புகிறாய் என்பதற்கு உறுதி வேண்டும்.

திலகம்:—நீர் கேட்பதற்கு முன்னமே கொடுத்து விட்டேனே. கொடுக்காமலிருந்தால் மறுபடியும் கொடுக்கலாமென்று வருந்துகிறேன்.

ராமா:—கொடுத்ததை திருப்பிக் கொள்ளுகிறதாக என் எண்ணுகிறாய்? எதற்காக என் கண்ணே.

திலகம்:—மறுபடியும் திரும்பி உம்மிடத்தில் சேர்ப்பிக்கத் தான். நான் அடைந்த விஷயத்தையே மறுபடியும் விரும்புகிறேன். என் ஆசையோ கடல்போல் கரையில்லாமல் இருக்கிறது. அன்போ கடலினும் ஆழ்ந்திருக்கிறது. நான் உமக்கு கொடுக்க கொடுக்க வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இரண்டும் அளவிறந்தனவல்—(உள்ளிருந்து யாரோ கூப்பிடுதல்,) யாரோ கூப்பிடுகிறாப்போலிருக்கிறது. கண்மணியே போய் வா.—வந்துட்டேன் அம்மா—உண்மையாய்மட்டிலிருக்கவேண்டும். கொஞ்சமிரு. நான் திரும்பி வருகிறேன். (போகுதல்.)

இன்னும்வரும்.

S. V. ஸ்ரீனிவாசய்யர், B.A.

---

# பெண்மணிகளின் பரிதாபகரமான ஏலம்.

நமது இந்தியப் பெண்மணிகளின் தற்கால நிலைமை, அவர்களுடைய படிப்பு நாகரீகம் இவைகளின் அபிவிருத்தியை நாடி, எவ்வளவோ கற்ற கேட்ட தனதனவான்களும், சில பெண்மணிகளுமே பல சமயங்களில், நவரஸாலங்காரங்களோடு கூடிய வசனமிர்த தாரையை, ஓயாமல், நமது சக்கிரவர்த்தினியில் பொழிந்துகொண்டிருப்பதை நான் பன்முறை படித்துக் களித்திருந்தபோதிலும் விஷயத்தினுடைய முக்கியத்தையும், அவசியத்தையு முத்தேசித்து, நானும் ஏதோ எனக்குத் தெரிந்ததை யிங்கு சுருக்கமாய்ச் சொல்ல முன் வந்திருப்பது, அனாவசியமாயும் அதிருப்திகரமாயு மிருக்கமாட்டாதென்றே நம்புகிறேன். ஆகையால் எவ்விதமாக அன்னபட்சியானது பாலும் நீரும் கலந்து வைத்தால் நீரைப் பிரித்துப் பாலைமட்டும் குடிக்கின்றதோ, அதுபோல என்னுடைய இச்சிறு வாக்கியங்களிலுண்டாகக் கூடிய குற்றங்களை நீக்கி குணத்தைமட்டும் கிரகிக்கும்படி வேண்டுகிறேன்.

காடுகளில் சஞ்சரித்து காய்கனி கிழங்குகளைப் புசித்துக்கொண்டு அடிக்கும் காற்றுக்கும், எரிக்கும் வெயிலுக்கும், பெய்யும் மழைக்கும் மலையடிவாரங்களிலும் மரத்தடிகளிலுமே படுத்துறங்கி மிருகங்களோடு மிருகங்களாய், இந்த சரீரத்தையே யொருபொருட்டா யெண்ணாமல் காலங் கழித்துவரும், உலகப் பற்றற்றவர்களைப் போலின்றி, பட்டணங்களிலும் கிராமங்களிலும் வசித்துக் கொண்டு, பெண்டு பிள்ளை, வீடுவாசல், மாடுகன்று, நல்லுணவு, நல்லாடை



முதலியவைகளில் விருப்புற்று குடும்பஸ்தர்களாகவே, நம்மி லநேகமா யெல்லோருமிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட குடும்பங்களுக்கு நடுநாயகமாகவும், பிரஜாபிவிருத்திக்கு முக்கிய காரணமாயுமுள்ள பொருள், பெண்மணிகள், அதாவது ஸ்திரீஜாதிகளே யல்லாது வேறல்ல. எவ்விதமாக நமது கண்களிலுள்ள மணிகள் கெடாமல் ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வந்தாலொழிய கண்களுக்கு யோக்கியதையில்லையோ, அது போலவே பெண்களும் சரிவர காபந்து செய்யப்படாவிட்டால், நாம் நடத்திவரும் குடும்பங்களுக்கு யாதொரு கௌரவமுமில்லை. இந்த உண்மையை யறியாமல் நம்மில் அநேகர் இகபரசாதனங்களுக்குக் காரணபூதர்களான பெண்களை, அலட்சியமாயும், ஆடுமாடுகளையும், முற்காலத்திய அடிமைகளையும் நடத்துவதுபோல, அவர்களுடைய இஷ்டத்துக்கு நேர்விரோதமாய், சிலர் பணங்காசுகளை யுத்தேசித்தும், பலர் கௌரவத்தை யுத்தேசித்தும் அதிக பணம் கொடுக்கிறவர்களுக்கும், அல்லது குறைந்தபணம் கேட்பவர்களுக்கும் எலத்தில்விட்டு, வியாபாரஞ் செய்யத்தலைப்பட்டு விட்டதை நினைக்க நினைக்க மனம் பற்றி யெரிகின்றது. ஐயோ! இந்த மகாகொடிய வழக்கமாகிய, கன்யா சுல்க்கம், வரசுல்க்கம், இவைகளினால் எவ்வளவு மானமுள்ள குடும்பங்கள் அழிந்து ஒழிந்து அடியோடு ஆழ்ந்து போய் விட்டதையும், மகாஉத்தமியும், ரம்பைக்குச் சமானமான அநேக பெண்மணிகள், அவர்களுடைய ஸ்வபாவத்துக்கும், யோக்கியதைக்கும், கல்விக்கும், அழகுக்கும் சிறிதும் பொருத்தமில்லாத கணவர்களுடன் கூடிவாழச்செய்து, அவ்வித அமையாத ஜோடிகளால், அநேக பெண்கள், மனமிடிந்தும், பலவழிகளிலும், கெட்டுப் போவதையும், நாம் கண்ணால் பார்த்துக் கொண்டுந்தான் வருகிறோம். பத்துமாதம் சுமந்து பாடுபட்டெல்லாம் பட்டுப்பெற்ற பெண் மணிகளின் விஷயங்களைக் கவனித்துச் சீர்திருத்தம் செய்ய முன்வர வேண்டுமென்று கண்ணுங் கருத்துமாய்வேலை செய்பவர்கள் மிகச் சொற்பம். அப்படியாராவது சீர்திருத்தஞ் செய்ய முற்பட்டு வெளிக்கிளம்பி வந்தால், அவர்களுடைய பிரேரேபணைகளுக்கும் தீர்மானங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் அடைக்கலான்குருவிக்கு ஆயிரத்தெட்டு கெண்டமென்றபடி, பதினாயிரம் இடைஞ்சல்கள் செய்யமட்டும் பலர் புறப்பட்டு விடுகிறார்கள். அவர்களாவது சரியான ஆதாரங்களோடு ஏதாவது பேசுவார்களோ? ஒரு நாளுமில்லை. கட்டின வீட்டுக்குப் பழுது சொல்ல வேண்டியது என்பது தான் அவர்கள் கொள்கை. இவைகளையெல்லாம் காதுக்கு வாங்காமல் எடுத்த காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து, தொடுத்து முடிக்கக்கூடிய அவகாசமும், ஒரு சமயம் அவகாச மேற்பட்டாலும், மன உறுதியும், சிறிதும் கிடையவே கிடையாது. நம்மவர்களுக்குள் தாறுமாறாய் இவ்வித அபிப்பிராயபேதங்களிருக்கும்பட்சத்தில், நமது பெண்மணிகள் எந்தக்காலத்தில்தான், நன்னிலைமையடைந்து சுகமாய் வாழப்போகிறார்கள்? கன்யாசுல்க்கம் அதாவது பணத்தைப் பெற்றுக் கொண்டு பெண்களை விவாகம் செய்துகொடுப்பது என்ற கொடிய வழக்கத்தினால் நேரிடும் துன்பங்களைச் சற்று கவனியுங்கள். ஒருவன் சுமார் 45 வயதி

வரையில், கோவில்களில் பரிசாரகம் பண்ணியோ, அல்லது மிட்டாய்க்கடையில் வேலைசெய்தோ, இன்னும் கொத்துச்சாப்பிடுதல், சவுண்டி சாப்பிடுதல், பிரேத போஜனஞ்செய்தல் முதலிய இழி தொழில்கள் செய்தோ, தன்னுடைய விவாகத்திற்கென்று ஆயிரம் ரூபாய் கையில் ஆபத்தனமாய் வைத்துக்கொண்டிருக்கிறான். அவனுக்கு அதைத்தவிர இந்த உலகத்தில் ஒரு சம்படியும் இதர ஐவேஜி கிடையாது. ஒரு குடும்பத்தில் பரம ஏழைகளாய்க், கஷ்டப்பட்டு வேலைசெய்து கூலி வேலை செய்தோ அதுவும் சாத்தியப்படாவிட்டால், உஞ்சவிருத்திசெய்தோ, இன்றைப்பொழுதுபோச்சு, நாளைப்பொழுதுபோச்சு என்று அன்றாடம் ஜீவனம் செய்துவரும் ஓர் ஸ்திரீபுருஷனுக்கு ஒரு பெண் பிறந்திருக்கிறது. அந்தப் பெண்ணை யிவர்கள் எந்த எண்ணத்தோடு வளர்த்து வருகிறார்களென்றால், கசாப்புக் கடைக்காரர்கள் ஆடுகளை மிகுதி லாபத்துக்கு விற்கலாமென்ற எண்ணத்துடன், தழை தீனிகள் போட்டு வளர்ப்பதுபோல, அந்தப் பெண்ணுக்குத் தலை கோதி முடித்து, மையிட்டுப் பொட்டிட்டு அலங்காரம்பண்ணி ஆகாரம்போட்டு வளர்த்துக்கொண்டே வந்து, ஏலத்தில்விட்டு எவன் அதிகத்தொகை கொடுக்கிறானோ அவனுக்கே கொடுத்துத் தங்கள் பிறவித்தரித்திரத்தைத் தீர்த்துக்கொள்ளுகிறதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்தசமயம் மேலேசொன்ன ஆயிரம் ரூபாய் பேர்வழி பணப்பையைக் குலுக்கிக் காட்டிக்கொண்டுவந்து ஏலத் தொகையைக் கலகலவென்று கொட்டவே சேர்ந்தாற்போல ஒரு ரூபாய் துட்டை இதுவரையில் பார்த்திராத தாயுந் தகப்பனும், பணத்தைக்கண்டதும் ஆவென்று வாயைத்திறந்து, பெண்ணைக் கொடுத்துவிடச் சம்மதித்து விவாகமுகூர்த்தமும் வைத்தாய்விடுகிறது. பெண்ணுக்கோ வயது 12. இங்கிலீஷ் தமிழ் இரண்டையும் எழுதப்படிக்கச் செம்மையாய்க் கற்றவள். ரம்பை ஊர்வசி மேனகை திலோத்தமை இவர்களைக் காட்டிலும் ரூபத்திலும் குணத்திலும் சிறந்தவள். அன்னம்போன்ற தன்னுடைய சரீரத்தோடு ஸங்கீதத்திலும் ஆழ்ந்த ஞானமுண்டு. ஏலமெடுத்த புருஷனுக்கோ வயது 45. வயிற்றைக் கிழித்துப்பார்த்தாலும் எழுத்து வாஸனையற்ற நிரட்சரகுட்சியான, கைக்கோரணி காட்டக்கூடிய ஒரு பேர்வழி. அழகிலோ ஆயிரம் அமாவாஸைக்குச் சமானமானவன். சிற்றானைக் குட்டி யொப்பந்தம் கறுத்துப்பெருத்த சரீரமும், விகாரமான ரூபமும், வழுக்கை மண்டையும், சப்பை மூக்கும், கொள்ளிக்கண்ணையுமுடைய சுந்தர புருஷன். நெஞ்சில் ஈவிரக்கம் பச்சாத்தாபமற்ற மிருகப்பிராயர்களாகிய தாயுந் தகப்பனும், பணத்தைவாரி மூட்டைகட்டிக்கொண்டு பெண்ணைத் தள்ளிவிட்டார்கள். அந்தப் பெண்மணியின் கதியென்ன கவனித்தீர்களா? நித்திய தரித்திரர்களான தாய் தகப்பனிடம் இதுவரைக்கும், மூன்றுவேளைக் கொருவேளை சாப்பிட்டு நல்லுணவும் நல்லுடையுமின்றிக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த பெண், கையிலிருந்த ரூபாயைக் கொட்டிக் கொடுத்துவிட்டு, வேறு சோற்றுக்கு வழியில்லாமல் சத்திரவாரிக்கணக்குப் பண்ணவேண்டிய புருஷனிடம் கஷ்டப்பட வந்து சேர்ந்திருக்கிறாள்.

இவள் புருஷன் வீட்டுக்கு வந்ததும், " உப்புலேதுரா ஸாமி, பப்புலேதுரா, பப்புலேதுரா ஸாமி உப்புலேதுரா, பப்பு உண்டே உப்புலேது, உப்பு உண்டே பப்புலேது, உப்புபப்பு இரண்டுமுண்டே, சிந்துபண்டுலேதுரா" என்று தெலுங்கில் ஒரு வித்வான் வேடிக்கையாய் கவனம் செய்திருக்கிறார். அதுபோல, வீட்டில் சமையலுக்கு யாதொரு வழியுமின்றி வெளியே போன ஞானசூனியனான புருஷன் நாலுநாள் மூன்றுநாள் வீட்டுவழியே வராமல், இந்தப் பெண் இராப்பட்டினி பகல் பட்டினி கிடந்து ஸதா அழுதகண்ணுஞ் சிந்திய மூக்குமாய்த் துக்கத்தில் ஆழ்ந்துகிடக்கிறது.

(இன்னும் வரும்)

T. V. அய்யாசாமி அய்யர்.



# கோழியும் அதன் முட்டையும்.

ஒரு கிராமத்தில் தெய்வபக்தி பூரணமாய் நிறையப்பெற்ற ஒரு நாயகனும் நாயகியும் கிரகாச்சிரம தருமத்தை நடத்திக்கொண்டுவருகையில் அவர்களுடைய தவப்பேறாக அவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். நாட்டுப்புறத்திலுள்ள சாதாரண பள்ளிக்கூடங்களில் அச்சிறுவனைக் கல்வி பயிலுவித்தால் அவன் விசேஷமாகச் சாஸ்திரங்களை நன்குணருவதற் கிடமிராதென்று நினைத்து அப்பெற்றோர் அவனைத் தூரத்திலிருந்த நகரத்துக்கு அனுப்பி அங்குள்ள சர்வகலா சாலையில் கல்வி பயிலச்செய்தார்கள். இளமைப்பருவத்தில் ஈசுவரபக்தியை விளைவிப்பதற்கேற்ற எவ்வித பாடத்தையும் அக்கல்விச்சாலையில் உபாத்தியாயர்கள் அவனுக்குக் கற்பித்திலர். ஆயினும் லௌகிகத்துக்கு வேண்டிய உலக சம்பந்தமான பல நூல்களையே அவன் அக் கல்விச்சாலையில் சதா கற்றும், ஆன்ம விசாரணை-பரத்துவ நிச்சயமுதலிய விஷயங்களைத் தெரிவிக்கத்தக்க நூல்களைக் கற்காமலும் வந்தானாதலின் அவன் மனம் நாஸ்திகச் சார்பு பெற்றிருந்தது. அக் கல்விச்சாலை விடுமுறைக்காலத்திலே ஒருநாள் அச்சிறுவன் தன் பெற்றோரைப் பார்க்கத் தன் தாயகமாகிய கிராமத்துக்குச் சென்றான். அப்போது அக்கிராமத்தில் அண்டை வீட்டுக்காரனொருவன் இச்சிறுவனுக்கு விருந்தளிக்க நினைத்து அவனைத் தன் வீட்டுக்கு முகமன்கூறி இட்டுக்கொண்டுபோனான். அவ்வீட்டுக்காரனுடைய பெண் ஓர் அறையிலிருந்துகொண்டு கடவுள்விஷயமாய்ச் செய்யப்பட்டுள்ள சில தோத்திரப்பாக்களைப் பக்தியோடு வாசித்துக்கொண்டிருந்தாள். அச்சிறுவன் அதைக்கண்டு பெண்ணே! காலத்தியர்த்தம் இல்பொருளாகிய கடவுள்பெயரைப் பலகாலும் நினைத்தும் கூறியும் வீண்காலம் ஏன் போக்குகிறாய்? உபயோககரமான நற்காரியம் எதையேனும் செய்யலாகாதா? என்று அதி புத்திமான்போல் வினவினான். இதைக்கேட்ட அச்சிறுமி திடுக்கிட்டுப் பிரமித்து, அப்பா! கடவுளிடத்து உனக்கு நம்பிக்கை இல்லையா? அவர் யாவற்றையும் படைத்து அளிப்பவர் என்று உனக்குத் தெரியாதா? என்று கேட்டாள். அதற்கு

அவன் நாட்டுப்புறத்துக் கல்விக்கும் பட்டணத்துக்கல்விக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது! நான் சர்வகலாசாலையில் வாசித்தறிந்த பூதபௌதிகசாஸ்திரம் - வானசாஸ்திரம் - கணிதசாஸ்திரம் - மனோதத்துவலட்சணசாஸ்திரம் முதலியவற்றின் உணர்ச்சியினால் யாவும் இயற்கையே யன்றி அவற்றைப்படைக்க ஒருதனிமுதல் வேண்டுவதில்லை யென்றும், உலகத்திலுள்ள யாவும் காரணகாரிய ரூபங்களாகவே இருக்கின்றனவென்றும், அவற்றிற்கு ஓர் முதற்காரணம் உண்டென்று சொல்வது தர்க்கத்துக்கு நில்லாதென்றும் நான் நன்கு உணர்ந்தேன். இந்நாட்டுப்புறத்துக்கல்வி உனக்கு அவ்வளவு தெளிவை விளைவிக்காது என்று தன்னைவியந்து உரையாடினான். இதைக்கேட்ட அச்சிறுமி அண்ணா! இதோ இருக்கும் கோழிமுட்டை எங்கே யிருந்துவந்தது? சொல் பார்ப்போம் என்றாள். அவன் பரிகாசம்செய்து ஸவாஸ்! பேதாய்! இவ்வளவு பெருத்தகேள்வியையா நீ என்னை கேட்கத்துணிந்தாய்? கோழிமுட்டை கோழியினிடத்திருந்து வந்தது. இது தெரியாதா? என்றான். அதற்கு அச்சிறுமி கோழி எங்கேயிருந்துவந்தது? என்றாள். அதைக்கேட்ட அவன் முட்டையிலிருந்து கோழிவந்தது என்றான். இதைக்கேட்டு நகைத்து அச்சிறுமி எது முன்னே உண்டாயிற்று? கோழியா? முட்டையா? என்றாள். அவன் பசபசவென்று விழித்து அம்மா! கோழிதான் முன்னே உண்டாயிற்று என்றான். அதற்கு அவள் முட்டையிலிருந்து வெளிப்படாத ஒருகோழி ஆதியிலிருந்ததென்று நீ ஒப்புக்கொள்ளுகின்றாயா? என்றாள். அதைக்கேட்டு அச்சிறுவன் இதுஎன்ன வம்பாயிருக்கிறதென்று திகைத்துச் சற்றே நிதானித்து அம்மா! முட்டைதான் முன்னே உண்டாயிற்றென்றான். இதைக்கேட்ட அச்சிறுமி பளா! பளா! நன்று! நன்று! என்று சொல்லிக் கைகொட்டி நகைத்து அப்பா! கோழியிடாத ஒருமுட்டை ஆதியில் இருந்ததென்று நீ ஒப்புக்கொள்ளுகின்றாயா? என்றாள் இதைக்கேட்ட சிறுவன் ஒன்றும் பேசவகையறியாது உதட்டைமென்று பல்லைக் கடித்துக்கொண்டு கோபித்து நின்றான். அப்போது அச்சிறுமி அவனைப்பார்த்து அடியில் வருமாறு கூறினாள்:—

சோதரனே! வயதில் என்னிலும் நீ மூத்தவன்.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினுமப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு."

ஒரு விஷயத்தைக் கூறுவாருடைய வயது-குணமுதலியவற்றை நோக்காமல் அப்பொருளின் பயனை நோக்கி நல்லதைக் கிரகித்துத் தீயதை விடுவதே உத்தம புருஷனுடைய கடமை யென்று பொருள்பட நாயனார் கூறிய அமுதத்திருவாக்கை அனுசரித்து என்சொற்களுக்குச் சிறிது செவிசாய்ப்பாயாக. அற்பவஸ்துக்களாகிய கோழியும் முட்டையும் உண்டான விதத்தைச் சொல்ல வகையறியாத நீ அண்ட சராசரங்கள் யாவும் ஒரு முதற் காரணமின்றி இயற்கையில் தாமே அமைந்தன வென்று சாதிக்கத் துணிந்தது மிகவும் வியப்பாயிருக்கிறது. ஆதியில் உண்டானது கோழியோ? முட்டையோ? எனக்குந் தெரியாது, உலகத்தில் அதனை நிச்சயமாய்க் கூறுவது எத்தகுதிய சாஸ்திரிக்கும் முடியாது. அம்மட்டில் ஆஸ்திகரும் நாஸ்திகரும் சமந்தான்; ஆனால் கோழியையாவது முட்டையையாவது ஆதியில் உண்டாக்கின முதல் வனொருவனிருத்தல் வேண்டுமென்று அனுமானாதி பிரமாணங்களினால் ஆஸ்திகர் நிச்சயிக்கின்றார்கள். ஆகவே முட்டையிலிருந்து வெளிவராத கோழியாவது கோழியிட்டிராத முட்டையாவது ஆதியில் சர்வ வல்லமையுள்ள கடவுளால் படைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று மனத்தெளிவு கொண்டிருக்கும் ஆஸ்திகர் இத்தகைய வினாக்களுக்குப் பசபசவென்று விழிக்கவேண்டியதில்லை. அர்த்தசாரமற்ற இயற்கை என்னும் பதத்தையே கதியாகக்கொண்டிருக்கும் நாஸ்திகர் இப்படிப்பட்ட வினாக்களுக்கு விடை பகர முடியாமல் அல்லற்படவேண்டிவரும். பரிதாபம்! ஒரு அரசனுடைய அரசாட்சிக்குட்பட்ட இரண்டு குடியானவர்களுக்குள்ளே ஒருவன் தனக்காகவும் ஏனையோர்க்காகவும் அவ்வரசன் செய்துவரும் அளவிறந்த நன்மைகளையும் இராஜாங்க ஏற்பாட்டின் ஒழுங்கையும் சட்டநிருபணமுதலிய விவரங்களையும் நன்குணர்ந்தவன்; மற்றவனோ அவைகளில் எதையும் எவ்வளவும் உணர்ந்திலாதவன்; இவ்விருவருக்குள் இராஜவிசுவாசம் யாரிடத்து அதிகமாயிருக்கும்? முன்னே சொல்லப்பட்டவனிடத்தே தான் இருக்குமென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. அதுபோல், உலகத்திலுள்ள பூதபௌதிக ஏற்பாடுகளின் விசித்திரங்களையும், சூரியன் சந்திரன்முதலிய அளவிறந்த உடுத்திரள்களின் இயக்கத்தைப்பற்றிய காலக்கிரமத்தையும், ஊனக்கண்ணுக்குப் புலப்படாத எண்ணிறந்த ஜீவராசிகள் அகண்டாகாசவெளியில் எங்கும் நிறைந்திருந்தும் அவற்றிற்கெல்லாம்

"கருப்பைக்குண்முட்டைக்குங் கல்லினுட்டேரைக்கும்
விருப்புற்றமுதளிக்குமெய்யன்"

படியளக்கும் விசித்திரத்தையும் பேரருட்டிறத்தையும் சர்வ வல்லமையையும் சாஸ்திரங்களின் மூலமாகப் பூரணமாயுணர்ந்தவன் எவனோ அவனே அங்ஙனம் ஒரு சிறிதும் உணரப் பெறாதவனைவிட எண்ணில் மடங்கு தெய்வநம்பிக்கையும் பக்தியும் பெற்றிருக்க வேண்டியதல்லவா? ஆகையால் என்னிலும் நீ அதிக தெய்வ விசுவாசம் உள்ளவனாயிருத்தல்வேண்டும். இவ்வளவுவரையில் நீ வாசித்தும் அந்த இளமையில் ஞான பூரணனை நினைக்கவும் எண்ணம் உதியாதது அம்மம்ம பரிதாபத்துக்கிடம்.

அச்சிறுமி இந்தப்படி சொல்லியான பிறகு, சாப்பிடலாம், வா, என்று அச்சிறுவனை இட்டுக் கொண்டுபோனாள். இருவரும் அறுசுவையோடு கூடிய சாப்பாடு உண்டு வீட்டுக்காரன் களிக்க மனமகிழ்ந்தார்கள். அச்சிறுவன் கூடியவரையில் கல்விக்கு அணிகலமாகிய நன்னெறிமையுள்ளவனானபடியால் அச்சிறுமி தனக்கெடுத்துரைத்த வசனங்களின் உண்மையை அறிந்து அன்றுமுதல் கல்விச் செருக்கை அறவேவிட்டு ஞானவர்த்தியில் ஆன்றோருடைய அனுபவவாக்கியங்களை வாசித்து வெகு சீக்கிரத்தில் தெய்வநம்பிக்கை எய்தப்பெற்றான். ஆகையால் ஒருவன் எவ்வளவு சாஸ்திரங்களை வாசித்துப் புத்திவிசாலம் அடையப்பெற்றானாயினும் இளமைப்பருவத்திலேயே தெய்வபக்தியை விளைப்பதற்கான நூல்களிலும் பயின்று வரவேண்டியது. ஏனெனில்,

"கற்றதனாலாய பயனென்கொல்வாலறிவ
னற்றாடொழா ரெனின்."

ஜ—சீ.

# துளஸீபாயி சரித்திரம்.

(253-வது பக்கத்தொடர்ச்சி)

மறுநாட்காலை துளஸீபாயி அரண்மனை மாடத்திலே ஒரு சேர்த்தியான அறையில் ஒரு ஸோபாவின்மீது சாய்ந்துகொண்டிருந்தாள். இவள் முகத்திலே ஒரு புதிய தெளிவும் அற்புதமான சவுந்தரியமும் விளங்கி நின்றன. இவளது கண்கள் மலர்ச்சி பெற்றிருந்தன. ஏதோ ஆச்சரியமான மாறுபாடுகள் இவள் மனதிலே ஏற்பட்டிருக்கின்றன வென்பது முகத்தைப்பார்த்தவுடனேயே விளங்கிற்று. இம்மாறுபாடுகள்யாவை யென்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றோம். முதலாவது, ராஜபுத்திர ஸ்திரீயாகிய துளஸிக்கு மகமதிய குலத்தார் மீதிருந்த இயற்கை விரோதமானது நீங்கிப்போய்விட்டது. ஆரம்பத்திலே வயிரக்கணையாழி மாற்றிய காலத்தில் மகமதியசுந்தரன் மீது ஒருவிதமான காதல் நெஞ்சிலே வேரூன்றியபோதிலும் பின்னிட்டு நெடுநாள் அது மறைந்தே கிடந்ததல்லவா? அதிலும் இதற்கு முந்தின நாள் மாலையில் தான் கன்னி விரதத்திலேயே நாள் கழிக்கவேண்டுமென்றும் இல்லாவிட்டால் எப்படியேனும் தற்கொலை செய்து உயிர் துறந்துகொள்ள வேண்டுமென்றும் நிச்சயித்துக்கொண்டாளல்லவா? இந்த நிச்சயமெல்லாம் சிதறுண்டு போய்விட்டது. விரித்துவிரித்தெழுதி பிரயோஜனமென்ன? மகமதியவீரன் மீது மறுபடியும் அடங்காத காதல் பெற்றவளாகி அவனை மணம் புரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் மேற்பட்டால் எத்தனை மாறுபாடுகள் தோன்றுமோ அத்தனை மாறுபாடுகளும் அவளிடத்தே தோன்றிவிட்டன.

இந்தச் சிறு கதையைப் படிப்போர்களுக்கு இது சிறிது ஆச்சரியமாகத் தோன்றக்கூடும். பரம்பரையாக மகமதிய துவேஷிகளான மஹா வீரர்களின் குலத்திலே ஜனித்த துளசிதேவிக்கு அவளது ரத்தத்திலேயே மகமதிய வெறுப்பு கலந்திருந்தது. உறக்கத்திலே கூட மகமதிய னொருவனைக் கொலை புரிவதாகக் கனவுகாணக் கூடிய ஜாதியிலே பிறந்த இந்த வீரகன்னிகை மகமதியனை விவாகம் செய்து கொள்ளலா மென்று நிச்சயிப்பது அசம்பாவித மென்று நினைக்கக்கூடும். ஆனால், அப்படி நினைப்பவர்கள் காதலின் இயற்கையை அறியாதவர்கள். காதல் குலப்பகைமையை அறியமாட்டாது. காதல் மதவிரோதங்களை அறியமாட்டாது. காதல் ஜாதிபேதத்தை மறந்துவிடும். காமதெய்வத்தின் உபாஸகர்கள் "அத்வைதிகளே" யல்லாமல் "துவைதி" களல்ல? தன்னை ஒரு முறை கொள்ளைக்காரர்களிடமிருந்தும், மற்றொரு முறை கொலைகாரர்களிடமிருந்தும் காப்பாற்றி அதற்கப்பாலும் கூட தன்னை பலவந்தமாக அபஹரித்துக் கொள்ளவேண்டுமென்ற நோக்கம் சிறிதேனு மற்று விளங்குபவனாகிய மகமதிய குமாரனது வாலிபத்தையும், வீரத்தன்மையையும், லாவணியத்தையும் பெருந்தன்மையையும் நினைக்க நினைக்க அவளது மனம் உருகிப்போய்விட்டது. ஜாதியாசாரம் மதத்வேஷம் என்பவையெல்லாம் அழிந்துபோய்விட்டன. மேலும் டெல்லி நகரத்தில் அக்பர் சக்ரவர்த்திக்கும் அவரது முக்கியப் படைத்தலைவர்களுக்கும், அனேக ராஜபுத்திர முடிமன்னர்கள் தமது பெண்களை விவாகம்செய்து கொடுத்திருக்கிறார்களென்ற வதந்திகள் அவள் காதிலே விழுந்திருக்கின்றன. அதெல்லாம் இப்போது ஞாபகத்துக்கு வந்துவிட்டது. சமயத்திற்குத் தக்கபடி அனுகூலமான காரியங்களும் அனுகூலமான விவகாரங்களும் நினைப்பிற்கு வருவது ஸஹஜந்தானல்லவா?



* * * *

பல்வித ஆலோசனைகளுக் கிடையே முழுகி, இடையிடையே பெருமூச்செறிந்துகொண்டும், புன்னகை புரிந்துகொண்டும் சாய்ந்திருந்தவளாகிய துளஸிதேவி சிறிது நேரத்திற்கப்பால் திடுக்கென்று எழுந்து நின்றாள். எதிரே மகமதிய வீரன் வந்தான். மஹா சவுந்தரியம் திகழுமாறு பால்போலப் பரந்து விளங்கும் வதனமும், அதி விசாலத்துடன் வீரலக்ஷ்மியின் வாசஸ்தானமென்று தோன்றிய மார்பும், தேவஸ்திரீகளும் கண்டு அறிவு கலங்குமாறு ஒளிவீசிய கண்களும், பரந்த நெற்றியும், உடையோனாகி அப்பஸ்கான் வருவதை கண்டவுடனே துளஸியின் உடலில் ஒருவிதமான ரோமாஞ்சிதமும், அவள் முகத்திலே ஒருவிதமான நாணக்குறியும் தோன்றின.

அப்பஸ்கான்:—ஸலாம் பாயீஜீ!

துளஸி:—ராம் ராம்!

அப்பஸ்கான்:—தமது ஊரும், தந்தை தாய்களின் பேரும் தெரிவிக்கும் பக்ஷத்தில அவர்களுடன் நாம் சந்திப்பதற்குரிய ஏற்பாடுகள் இப்பொழுதே செய்கின்றேன்.

துளஸி:—எனது தாய் தந்தையர்கள் நான் ஒரு மகமதியருடன் ஊருக்கு வந்தால், என்னை அங்கீகாரம் செய்துகொள்வார்களோ என்னவோ தெரியாது. ஆதலால் அவர்களையே இங்கே தருவித்து விடலாமென்று நினைக்கிறேன். ஆனால் ஒருவேளை இதுவரை நான் இங்கேயிருப்பது தமக்குக் கஷ்டமாயிருக்கக்கூடும். அப்படியானால்—

அப்பஸ்:—பிரியஸுந்தரீ! நான் இங்கு வரும்போது இதுமுதல் உன்னை சகோதரியாகவே பாவிக்கவேண்டுமென்று என் மனதை கல்லாக்கித் தயார் செய்துகொண்டு வந்தேன். ஆனால் இப்போது உன்முகஜ்யோதியின் முன்பு என் நெஞ்சம் பனிக்கரைவதுபோலே கரைகின்றது. உனது கண்கள் என் மனதில் பலவிதமான நம்பிக்கைகளை உண்டுபண்ணுகின்றன. ஐயாகிய என்னை இன்னுமொருமுறை ரக்ஷிப்பது போல் பாவனைசெய்துவிட்டு மறுபடியும் வெறுப்பு காட்டினால் அதை என்னால் சகிக்க முடியாது. திருவுளத்தை இப்பொழுதே நன்கு தெரிவித்து விடவேண்டும்" என்றான்.

அதன் பின்பு தம்மை யறியாமலே ஏதோ ஒருவிதமான சக்தியின் செய்கையால் இவ்வாலிபனும் கன்யாரத்னமும் ஒரே மஞ்சத்தின்மீது வீற்றிருக்குமாறு நேர்ந்துவிட்டது. தளையமுது தலைகுனிந்து புன்னகை பூத்துநின்றனள்.

(முற்றிற்று.)

ஷெல்லிதாஸ்.

## புத்தக வரவு.

வால்மீகி ராமாயணப் பாட்டு:—

தமிழ்நாட்டு மாதர்கள் எத்தனையோ தலைமுறைகளாக மதப்பயிற்சியும், சன்மார்க்க நடையும் அடைவதற்கு முக்கிய ஆதாரங்களாக இருந்தவை, பாரத ராமாயண முதலிய புராதன சரித்திரங்களின் ஸாரத்தை எளிய நடையில் கொண்டனவாகிய வீட்டுப் பாடல்களே யென்பதை எல்லோருமறிவார்கள். பழையகாலத்து மாதர்கள், பள்ளிக்கூடங்களில் சென்று படிக்காவிடினும் மேற்கூறப்பட்ட பாடல்களே அவர்களுக்குக் கூடியவரை ஞான ஊற்றுக்களாக விளங்கின. கல்விப்பயிற்சியின் பொருட்டுப் பாடசாலைகளுக்குச் செல்வோராகிய தற்காலத்துப் பெண்கள் இளமையிலிருந்தே வீட்டில் மேற்கூறப்பட்ட இனிய பாடல்களைக் கற்றுக்கொள்ள சாவகாசமேற்படுகிறதில்லை. ஆதலால் மேற்படி பாடல்களை யாவரேனும் திரட்டிப் பிரசுரித்துக்கொடுப்பார்களாயின் அது மிகுந்த உபகாரஞ் செயலாகுமென்பதில் ஆக்ஷேபமில்லை. இதற் கிணங்கவே எழும்பூரிலுள்ள ஸ்ரீமத் R. V. சுப்பிரமணிய அய்யரவர்களின் குமாரத்தியாகிய ஸ்ரீமதி R. S. சுப்புலக்ஷ்மி அம்மை "வால்மீகி ராமாயண...ம் ஞான ராமாயண கப்பலும்" என்பதோர் சிறிய புஸ்தகம் பிரசுரித்து நமது பார்வைக்கு அனுப்பியிருக்கிறார். இந்தப் புஸ்தகம் தமிழ்நாட்டு மாதர்களுக்கு மிகவும் பயனுடையதாகுமென்பது எவருக்கும் இனிது விளங்கும். இதற்கு மிகவும் சொற்பமாகவே 2 அணா விலை வைக்கப்பட்டிருக்கிறது. பெண்களெல்லாம் வாங்கிப் படித்து இன்புறுவார்களென நம்புகிறோம். இப்புஸ்தகம் சென்னை திருவல்லிக்கேணி லக்ஷ்மிவிலாஸ புஸ்தகசாலையில் கிடைக்கும்.

இந்தியா சக்கிரவர்த்தியின் முடிசூட்டு வாழ்த்து.

எட்டயபுரம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான ஸ்வாமிகள் "இந்திய மன்னிறை முடிசூட்டு வாழ்த்துப்பா" என்னும் நூலொன்றை நமது பார்வைக்கு அனுப்பியிருக்கிறார். எட்வர்ட் சக்கிரவர்த்தியின் பட்டாபிஷேக சமயத்தை யொட்டி மேற்படி ஸ்வாமிகளால் சுத்த தமிழ்நடையிலே எழுதப்பட்டிருக்கும் இந்நூல் தமிழ்ப் புலவோருக்கு ஓர் பெரு விருந்தாக இருக்கும். இதில் ஆசிரியர் எடுத்துக்கொண்டிருக்கும் சிரமமும், அவர் காட்டியிருக்கும் சாமர்த்தியமும் மிகவும் பாராட்டற்பாலன.



## மன்மத தகனம்.

தாருகாஸுரன் சூரபத்மன் சிங்கமுகன் இம்மையிரேல்
தேவலோகம் பறிகொடுத்து தேவர்களும் மெத்தத்தான் தவித்து
காடுமலைகள் எல்லாமலைந்து சோகத்துடன் விசாரப்பட்டார்.
சூலபாணி உமையுடனே கூடிக் கோபமெல்லாந் தணிந்து
சூரசம்ஹார சுப்ரமணியர் பூர்ணமாய் வந்தவதரித்தால்
தீரும் நம்முடைய கஷ்டவினையென்று தேவர்களெல்லா மெண்ணமிட்டு
அதிரூபமுள்ள மன்மதனை ஆதிமூர்த்தியிடமனுப்ப
தீரனுமந்த மன்மதனும் (இனி) போரகாலமென் றெண்ணாமல்
சூலபாணியின் முன்பாகவந்து பாதம்போற்றி நமஸ்கரித்து
தேகமெல்லாம் நடுநடுங்க மோகபாணங்களை தொடுத்தான்.
தேவியம்பொ சமயமென் றெண்ணி சொர்ணமாலையைக் கொண்டுவந்து
பிராணநாயகர் கைகொடுக்க ஸ்வாமி வாங்கி தரித்துக்கொண்டார்.
ஆசீர்வாதங்கள் பண்ணி சாம்பவர் அந்தரங்கமான பிரியத்துடன்
நாசமில்லாத வஸ்துவைக் கூடி நேசமாயிருவென் றுரைத்தார்.
காமன்மேலே கோபத்துடன் கடுகடுத்த பார்வையுடன்
நெற்றியின் கண்ணைத்தான் திறந்து நீறுசெய்தார் மன்மதனை
வேறே ஒரு கணந்தனிலே லோகநாதரும் போய் மறைந்தார்
நான்முக இந்திராதி தேவரெல்லாம் சாம்பலாய்ப்போன மன்மதனை
பிராணனுன ரதிதேவிக்கும் பூமியிலுள்ள பிரஜைகளுக்கும்
அருபத்துடனே சு...பாவென்று ஆசீர்வாதங்கள் பண்ணினார்
தேவி சுந்தரி...யகியம்மனும் மோசம்வந்ததே என்று சொல்லி
சோகமோக ...சாரத்துடன் சில தோழிமார்களை கூட்டிக்கொண்டு
பூர்ணமான ...லன்கள் தரும்நல்ல புண்ய தீர்த்தங்கள் ஆடிவிட்டு
வாராரிக்...ஜபங்களுக்கு இது போரா தென் றம்மன் எண்ணிக் கொண்டு,
நீராகார ...த்திரையும் சீத உஷ்ணமெல்லாம் சகித்து
நீலகண்டரை சிந்தையில் ஸ்மரித்து நித்ய கலியாணி தபசிருந்தாள்.

சங்கரருக்கும் ஸ்ரீ பார்வதி யம்மனுக்கும் சம்பாஷணை.

மன்மத னாரியும் அம்மனுடைய மனதைச் சோதிக்கவேணுமென்று
சன்னையை வேண்டும் அம்மனிடம் நடுக்கல் கிழவன்போல வந்து
கொம்பில் பழுத்த பழம்போல கோவைப்பழத்தின நிறம்போலே
அன்புள்ளவோர்க்கு தனம்போலே ஆதித்யனுடைய ஒளிபோலே

தும்பைப்பூபோல் நரைத்ததலையும் தோளிலே தூக்கின சஞ்சிகையும்
தம்பலச்சாறு வடியவடிய தளர்ந்து தொங்கும் புருவமும்
சிழித்துவாங்கும் மேல்மூச்சும் சேர்ந்த நடையும் இருமலும்
தவித்துணையும் இல்லாமல் தம்பட்டம் கேளாத காதுடனே [ண்டு
கங்கணங் கையில் தரித்துக்கொண்டு நல்ல மங்களவாக்கியம் சொல்லிக்கொ
எங்கே போறாய் பெண்ணே எங்கேபோறாய் புங்கமரத்தின் நிழலோடே
எந்தனுக்கிப்போது பெண்சாதி இல்லை கன்னியைக் கலியாணம்பண்ணவர்
வந்தவழியிலே உன்னைக் கண்டேன் தள்ளாடத்தள்ளாட ஓடிவந்தேன் [தேன்
எந்தனழகை கண்டபின்னுனக்கு பின்னே போகவும் கால்வருமோ
எங்கே நீ ஓடி ஒளித்தாலும் அங்கெல்லா முன்னுடன் கூட (இ)ருப்பேன்.
உன்னை இனிவிடப் போரதில்லை இப்போ எந்தனுக்கு மாலை சூட்டிவிடு
என்னைத் தவிற இந்த உலகத்தில் உனக்கேற்ற நாயகரைக் காணேன்.
நில்லு பெண்ணே யங்கேநில்லு பெண்ணே என்று அள்ளுகிழவனுஞ் சொல்
கண்டு கல்யாணியும் கண்சிவந்து காலை கெதியோ இதுவுமென்று [லவுமே
இருளடைந்த தோப்பிலே எதடிதோழி இது பழியோ
துஷ்டனை கிழவனிப்போ சொன்னவார்த்தையை கேளுங்கோடி.
போடா போடா கிழவா நீ போக்கிடங்கெட்ட கிழவா நீ
வீடுபோ வென்கிற வேளையிலே யுன்னை காடுவரச் சொல்லும் காலத்திலே
நாடியே இப்போ என்னைக் குறித்து நடுக்கல் கிழவா தொடராதே.
அஞ்சுவயதுக் குழந்தையுடன் நஞ்சுண்டவன் போல் மயங்காதே.
இங்கே வந்தென்னை தொடருவதை எங்கள் பருவத ராஜர் கண்டால்
உன் தலைக்காக் கினைவந்து விடும் (உனக்கு) பின்பலம்பாக ஒரு வரில்லை.
என்னுட வார்த்தையைக் கேட்டுக் கொண்டு உன்தலையைத் தப்பவைத்துக்
பின்னே மலங்கமுழியாமல் பேய்க்கிழவா ஓடுமென்று சொன்னாள். (கொ
ஓடு மென்றம்மன் சொல்லலுமே நீலகண்டர் சிரித்துக்கொண்டு
எத்தனை சொல்லித் தடுத்தாலும், ஈசர் குறுக்கே மறைத்துக்கொண்டு
(உன்) சித்தத்தில் வைத்த கணவனே எனக்கு சற்றே உரைத்தாலாகாதோ.
அத்தை கேட்டந்த பார்வதியும் ஆச்சர்யமோ இது வென்று சொல்வி
உத்தாரமி வர்க்கு சொல்லாதிருந்தால் உற்றார் உறவார்க்கு ஏச்சாகும்.
உத்தாரம் கல்லெறிந்தாப்போலே உத்தண்டமாக உரைக்கலுற்றாள்.
கேளடா நீ நரைத்தலையா கேடுபுத்தி நினைத்தவனே.
வேறடா இது பாவமரத்துக்கு வெட்டிவார்த்தைகள் சொல்லாதே.
கோடி சூரியன் உதித்தாப்போல என் கோமளரூப சங்கரரை
நாடிமனதில் வரித்திருக்கு மென்னை ஓடிவந்து நீமறிக்காதே.
தொண்டு கிழவனிதைக் கேட்டு தொந்திகுலுங்கச் சிரித்துக் கொண்டு

(இன்னும் வரும்)

R. S. சுப்புலக்ஷ்மி அம்மை.



# பொது வர்த்தமானங்கள்.

## ஸ்ரீநகரம் ஹிந்து காலேஜ்.

காசியிலே ஹிந்து காலேஜ் ஸ்தாபனம் செய்து பெரும்புகழ் பெற்றவராகிய மிஸஸ் பெஸாண்ட்டு சொல்லிய போதனையை மேற் கொண்டு காஷ்மீர் மஹாராஜா தமது ராஜதானியாகிய ஸ்ரீநகரத்திலே ஓர் ஹிந்து காலேஜ் ஸ்தாபனம் செய்ய உத்தேசித்து அஸ்திவாரக்கல் நாட்டியாய்விட்டது. இவ்விசேஷம் மஹாராஜாவின் பிறந்த நாள் விசேஷத்தை ஒட்டி நடத்தப்பெற்றது. இந்தக் காலேஜுக்கு ஸ்ரீபிரதாப் காலேஜ் என்னும் பெயர் தரப்பட்டிருக்கின்றது. அந்த விசேஷசமயத்தில் மிஸஸ் பெஸாண்ட் ஓர் உபந்நியாசம் புரிந்தார். அப்போது மிஸஸ் பெஸண்ட் பின் வருமாறு கூறினர்:—"காஷ்மீரத்தார் நெடுநாளாக விரும்பிக் கொண்டிருந்த வரமானது இப்பொது அவர்களுக்கு மகாராஜாவால் கொடுத்துவிடப்பட்டிருக்கின்றது. இனி காஷ்மீரத்தை வடமேற்கிந்தியாவின் காசி யென்று கூறலாம். இது ஹிந்துகாலேஜ் என்றபெயர்கொண்டிருந்த போதிலும் மதசம்பந்தமற்ற பொதுக் கல்வியைப் பரப்பவேண்டு மென்பதே முக்கிய நோக்கமாக உடையதாதலால், மகமதியர்கள், முதலிய எல்லா வகுப்பினரும் இதிலே சேர்ந்து படிக்கலாம்" என்றார்.

---

## டிரெயினில் ஓர் இந்தியமாதைத் தொந்தரை செய்த ஐரோப்பியன்.

பம்பாய் வாசியாகிய டில்லான் என்ற ஐரோப்பியன் டிரெயினில் முதல் வகுப்பு அறையிலே ஓர் இந்திய ஸ்திரீயைத் தொந்தரைசெய்த விஷயத்தைப் பற்றி முன்னமே பிரஸ்தாபித்திருக்கிறோம். இந்தக்கேஸ் இம்மாதம் 21-ந் தேதி யன்று புனவில் மாஜிஸ்ட்ரேட் முன்பாக விசாரணை செய்யப்பட்டது. அப்போது மேற்படி டில்லானுக்கு மாஜிஸ்ட்ரேட் ரூபா 200 அபராதம் விதித்தார். அபராதம் செலுத்தத்தவறும் பக்ஷத்திலே 2 மாதம் சிறையிலிருக்கவேண்டுமென்று மாஜிஸ்ட்ரேட் உத்தரவு செய்தார். டில்லான் அபராதத்தைக் கட்டிவிட்டான். டில்லான் செய்த மிருகத்தனமான குற்றத்தை உத்தேசிக்கும் போது அவனுக்கு ஏற்பட்ட தண்டனை மிகவும் சொற்ப மென்றே கூறும்படியாக இருக்கின்றது.

---

## தர்பங்கா மஹாராஜாவுக்கு ஏற்பட்ட துக்கம்

தர்பங்கா மகாராஜாவின் இளைய பத்தினியாகிய ராணிக்கு இம்மாதம் இரட்டைப் பிள்ளைகள் பிறந்தன. அவற்றில் ஒன்று செத்து விழுந்துவிட்டது. மற்றொன்று பிறந்து சிறிது நேரத்திற் கெல்லாம் இறந்துபோய்விட்டது. இந்த துக்கரமான சம்பவத்தைப் பற்றி மேற்படி நகரமெல்லாம் துக்கத்திலே ஆழ்ந்து கிடக்கிறது. மகாராஜாவுக்கு ஆண் சந்ததியில்லாமலிருக்கிறது.

### நேபாள மகாராஜாவுக்கு புத்திரன் பிறந்தமை.

நேபாளத்து மகாராஜாவுக்குப்பட்டத்துக் குமாரனாக ஆண்குழந்தை பிறந்திருக்கிறது. நேபாளத்தின் தலைமை நகராகிய காட்மான்டுவில் எல்லோரும் மிகுந்த ஆனந்தம் கொண்டிருக்கிறார்கள்.

### ரூபா 5000 இனாம்.

கோயமுத்தூரிலுள்ள மாரண்ணக் கவுண்டன் என்ற ஓர் இந்து தனவான், காசியிலுள்ள மிஸஸ் பெஸாண்டு அம்மையின் பெண் பாடசாலைக்கு ரூபா 5000 இனாமளித்திருக்கிறதாயறிகிறோம்.

### ஹிந்து மாதர்களின் லாவண்யமும், பயிற்சியும்.

அமெரிக்காவிலிருந்து சிறிதுகாலத்திற்கு முன்பு இந்தியா, ஜப்பான் முதலியதேசங்களனைத்திலும் யாத்திரை புரிந்து மீண்டவராகிய மிஸ்டர் ப்ரயான் என்ற பிரவர்த்திமானைப்பற்றி நமது நேயர்கள் நன்கறிவார்கள். இவர் கல்கத்தாவிற்கு வந்திருக்கும் போது அங்கே கேசவ சந்திரஸேனருடைய குடும்பத்து ஸ்திரீகளும், வேறு பல நாகரீகம் பெற்ற ஸ்திரீகளும் கூடியிருக்கும் ஓர் சபைக்கு வந்து அவர்களுடன் பேட்டி செய்து கொண்டார். அதைப்பற்றி அவர் எழுதுவதில் நாம் உலகத்திலே பார்த்த பெண்களுக்குள்ளே அவர்களைக் காட்டிலும் நாகரிகம், அழகு, பயிற்சி என்பவற்றில்சிறந்தவர்கள் யாரையும் கண்டதில்லையென்றுசொல்லியிருக்கிறார்.

### ஸ்ரீகாசி ஸெண்ட்ரல் ஹிந்துகாலேஜ்.

பிரின்ஸஸ் ஆப் வேல்ஸ் இளவரசியார் சக்கிரவர்த்தியினுடைய படமொன்றை மிஸஸ் பெஸாண்டுக்கு அனுப்பி, அதைத் தனக்காக, காசி ஸெண்டரல் ஹிந்து காலேஜுக்குக் கொடுக்கும்படிக்கும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

### லேடி கர்ஸனது மரணம்.

இப்போதிருக்கும் லார்ட் மிண்டோ என்பவருக்கு முன்பு இந்தியா தேசத்தின் வைசிராயாக இருந்த லார்டு கர்ஸனுடைய மனைவியார் (லேடி கர்ஸன்) இறந்துபோய் விட்டாரென்ற துக்ககரமான சமாசாரம் வந்திருக்கின்றது. இதனால் இந்தியா முழுதும் மனவருத்தமடையுமென்பதில் ஆக்ஷேபமில்லை. இம்மாது தமது சௌந்தரியத்தாலும தமது நற்குணங்களாலும் நம்மவர்கள் மனதிலெல்லாம் மிகுந்த அன்புக் கிடமாகி யிருந்தார். இம்மாது முன் பொருமுறை நோய்கொண்டிருந்ததாகக் கேள்விப்பட்ட காலத்தில் நமது தேசம் பட்டபாடு கொஞ்சமில்லை. இம்மாதினிடம் லார்ட் கர்ஸன் அளவிறந்த காதல் வைத்திருந்தார். அவருக்கு இந்தப் பெருந்துக்கம் நேர்ந்து விட்டது பற்றி நாம் மிகவும் அனுதாப மடைகிறோம்.

1157
REGISTERED 5 NOV 1906 MADRAS

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மையறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
னொண்மையுறவோங்கு முலகு."

Vol. II. Madras. August. 1906. No 1.
தொகுதி. II. சென்னை 1906ஹு ஆகஸ்டு மீ. பகுதி. 1.

## நமது பத்திரிகையின் அபிவிருத்தி.
## OURSELVES-A RETROSPECT.

நமது சக்ரவர்த்தினிக்கு இரண்டாம் வயது பிறந்துவிட்டது. இவள் தமிழ்நாட்டு ஜனங்களின் மன அரியாசனத்தின்மீது சிறிது சிறிதாக தனது ஆட்சியைப் பெருக்கி வருகின்றாள். நாம் எதிர்பார்த்த அளவு இவள் அரசு பரவி நிற்கவில்லை. என்ற போதிலும், இவ்வருஷத்தில் இவளது புகழும் வல்லமையும் அதிகப்படுமென்பதற்குப் பல நற்சின்னங்கள் புலப்படுகின்றன. பண்டிதை அசலாம்பிகை, ஸ்ரீ. ஸ்ரீ. சுப்பிரமணிய-அய்யர் முதலிய சிற்சில பண்டிதைகளும் பண்டிதர்களும் நமது "சக்ரவர்த்தினி"க்குத் திறை செலுத்தி யிருக்கின்றார்களாயினும், மற்றவர்கள் இன்னும் கப்பம் கொண்டு வராமலே யிருக்கிறார்கள். ராஜாக்கள், ஜமீந்தார்கள் முதலிய பிரபுக்களெல்லாம் சக்ரவர்த்தினியை ஆதரவுசெய்ய முன்வந்திருப்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். ஆனால் இன்னும் சில முக்கிய ஜமீந்தார்கள் சக்கிரவர்த்தினியை மறந்திருப்பது நியாயமில்லையென்பதை அவர்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறோம். மேலும், தமிழ்நாட்டுப் பெண்மணிகளின் சீரையும் சிறப்பையும் அறிவு நலத்தையும் அபிவிருத்தி புரிவதே பெரு நோக்கமாகக்கொண்ட இப்பத்திரிகை விஷயத்தில் மாதர்கள் நாம் விரும்பியபடி சிரத்தை யெடுக்காமை பற்றி அவர்களிடம் நாம் குற்றம் கூற சுதந்திரம் பெற்றிருக்கின்றோம். நமது பத்திரிகையைப் படிக்கும் மாதர்களிலே பலர் இதற்குச் சிறிய உபந்யாசங்கள், கதைகள், பாடல்கள், நாட்டுவர்த்தமானங்கள், சந்தேகங்கள், முதலியன எழுதியனுப்புவார்களென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறோம். இதுவரை இப்பத்திரிகையிலே மாதர்களனுப்பிய விஷயங்கள் அதிகமாக இல்லாது போயினமை [illegible]குப்பிக்கிடமாயிருக்கின்றது.

நமது பத்திரிகையின் முகப்பக்கத்திலே மாதந்தோறும் எழுதப்பட்டிருக்கும் குறளை நேயர்கள் கவனித்திருப்பார்களென்றே நம்புகிறோம்.

"பெண்மை யறிவோங்கப் பீடுபெறும் பெண்மைதா
னொண்மையுற வோங்கு முலகு"

அறிவின் வளர்ச்சியிலேலே பெண்மைக்குச் சிறப்புண்டாகும். பெண்மை பெருமையுடன் கலந்த விடத்து அந்நாடு சிறப்புடைவதாகும் என்பது பொருள்.

இதைத் தமிழ் நாட்டார் நன்கு மனங்கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை. "சக்ரவர்த்தினி" பத்திரிகையின் இரண்டாம் வருஷமுடிவில் நாம் தமிழ் நாட்டார் இங்கே கூறியிருக்கும் சிறு குறைகள் கூட மீண்டும்சொல்ல இடமில்லாமல் இதனிடத்தே உரியஅளவு அன்பும் அபிமானமும் செலுத்துவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

எம்மால் இயன்ற அளவு இப்பத்திரிகையை படிப்போருக்கு இனிமையும், பயனும் உண்டாக்கத்தக்கவாறு முயற்சி புரிந்திருக்கின்றோம். இனி அம்முயற்சியைப் பதின்மடங்கு செய்ய நிச்சயித்திருக்கின்றோம். நேயர்களும் தமது உதவியையும் அனுதாபத்தையும் நூறுமடங்காகப் புரிய முற்படுதல் வேண்டும்.

---

# ராஜாராம் மோஹன ராயர்.

இந்நாட்டு மாதர்களின் அபிவிருத்தியின்பொருட்டாக முதல் முதல் பாடுபட்ட மஹான் ராஜாராம் மோஹனராயரென்பவர். இவரது பிறப்பு, வளர்ப்பு ஜீவகாலப் பெருஞ் செயல்கள் என்பவற்றைப்பற்றி விவரித்துப் பேச இங்கே இடம் போதாது. எனினும் இம் மஹானுடைய திவ்விய குணங்களில் சிலவற்றை மாத்திரம் எடுத்து விளக்கவேண்டுமென்பது நமது கருத்து. சரித்திர விவரங்கள் முழுதையும் அறிய விரும்புவோர் சென்னை பிரம்மசமாஜத்தாருக் கெழுதி அவர்களிடமிருந்து ராம்மோஹனரின் தமிழ்ச்சரித்திரமொன்றைத் தருவித்துப் பார்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம். ராஜா ராம்மோஹனர் விக்கிரக ஆராதனை முதலிய சில விஷயங்களில் சாதாரண அபிப்பிராயத்தினின்றும் மாறுபட்டிருந்தமை அவருக்குப் புகழ்ச்சியே யாகுமன்றிக் குறைவாகமாட்டாது. அவரது அபிப்பிராயத்தினின்றும் வித்தியாசங்கொண்டோர்கள் கூட அவரது தீரத்தன்மையை வியப்பார்களென்பதில் ஆக்ஷேபமில்லை. இப்போது இந்தியா முழுதும் கிளைகள் வீசி அனேகம் பெரியோருக்கு ஞானக்கனியும், சாந்தி நிழலும் கொடுத்து உதவி புரிவதாகிய பிரமசமாஜமென்ற பெருவிருக்ஷத்திற்கு ராம் மோஹனரே வித்தூன்றியவர். இந்த பிரமசமாஜம் என்பது யாது? இந்த சமாஜத்தாரின் முக்கியக் கொள்கை யென்ன? என்பதைச் சிலர் அறிய விரும்பலாம்.

நாம் இப்போது பிரமமார்க்கஸ்தர்களென்று தம்மைச் சொல்லிக்கொள்வோர்களைப்பற்றிப் பேசவரவில்லை. இம்மார்க்கத்தின் ஆதிகர்த்தர்களால் அது எங்ஙனம் கொள்ளப்பட்டதோ அவ்வகைப் பொருள் கொண்டு பேசுகின்றோம்.

எமது அறிவிற்குப் புலப்பட்டமட்டிலும் பிரமசமாஜத்தின் அதி முக்கியமான கொள்கை ஒன்றேயாகும். அது பின் வருவது:—



(1) ஈசன் ஒருவனே யிருக்கிறான்.

ஏ; ஏ! இது யாவர்தானறியமாட்டார்கள்? இவ்வுண்மையை ஒருவர் புதிதாகக் கூறவும் வேண்டுமோ? என்று சிலர் நகைக்கக்கூடும்.

நான் இவர்களுக்குக் கூறுகின்றேன். நேயர்களே, இந்த உண்மை புதிதன்று. உண்மை எதுவும் புதிதில்லை. பொய்கள்தான் புதியன. உண்மை மனித இயற்கைக்குச் சுபாவமாகவுள்ளது. எனினும் மனித ஜாதியாரிலே பலருக்குத் தமது மானுடத்தன்மை சுமத்தலரிய பாரமாய் விடுகின்றது. மிருகத் தன்மையைத் தாங்குதலே நம்மவரில் பலருக்கு எளிதாக இருக்கின்றது. மனிதர்களைப்போலச் சுய ஆராய்ச்சியும், சுய யோசனையும், புரிதல் அனேகருக்குத் தொல்லை தருகின்றது. மிருகங்களைப்போலப் பண்டை வழி நடத்தலே அனேகருக்கு எளிதாயிருக்கின்றது. உண்மை மனித இயற்கைக்கு உடன்பிறப்பாக இருந்தபோதிலும் எந்தக் கணத்திலே மனிதன் தன் மதி யிழந்து, தான் யோசியாது பிறன் யோசனையைக் கண்ணை இறுக மூடிக்கொண்டு பின்பற்றுகிறானோ அப்போதே உண்மையைத் தவறவிட்டு விடுகின்றான்.

"கடவுள் ஒன்றேயுளது"

இது மிகப் பழமையான உண்மை. ஒவ்வொரு மஹானும் இதையே கதறியிருக்கிறான். என்றாலுமென்ன பயன்? மற்றொரு மனிதன் இதைக் கூறக் கேட்டு நீ உனது சொந்த ஆலோசனையின்றி இதை நம்பத்தொடங்கிவிடுவாயின் உனது அறிவு நாசமடைந்துவிடும்.

உலகத்தில் எல்லாக் கருவிகளையும், எல்லாப் பொருள்களையும்போலவே மனித அறிவும் அடிக்கடி பயன்படுத்தாவிடின் துரேறித் துருப்பிடித்து நிறங்கெட்டுப் பார்ப்பதற்கு வெறுப்புண்டாக்குகிறது. "ஒரு கடவுள்தானிருக்கிறது. ஏனெனில் என்னுடைய தகப்பனார் அப்படித்தான் சொல்லியிருக்கின்றார்" என்று கூறுகிற மனிதன் அர்த்தமின்றி உளறுகிறான். அவன் கடவுள் என்ற சொல்லுக்குப் பொருளுணரமாட்டான். நாம் அவனிடம் கேட்கிறோம். அடே! மூடா, நீ என் கடவுளைப் பார்க்கவில்லை? கடவுளென்னும் பொருள் இப்போது எங்கேயோ மறைந்துபோய்விட்டதென்று நினைக்கிறாயா? இல்லாவிடில், உனது தகப்பன் இறந்துபோய்விட்டான், அவன் பார்த்த கடவுளும் அப்போதே இறந்து போய்விட்டதென்று நம்புகிறாயா? சகோதரா, நீ பேரொளி வீசும் நிலவுப்போதிலே கடற்கரைக்குப் போ. வானத்தைப் பார். திசை எத்தனை தூரம் பரந்து கிடக்கின்றது? திசையிலே எத்தனை பொருள்களிருக்கின்றன? என் மனதிலே இவையெல்லாம் எவ்வாறு வந்து பிரதி பலிக்கின்றன? நான் யார்? எங்கிருந்து வந்தேன்? நான் யார்? நான் யார்? என்று தன்னையே திரும்பத் திரும்பக் கேட்டுக்கொள்.

நீ இதுவரையும் சந்தேகமுற்றிராத ஓர் அந்தர்யாமிப்பொருள் உன்னைச் சுற்றிலும் உன் உள்ளேயும் பேரொளியாகத் ததும்பிக் கிடக்கின்றதென்பதை நீ உணர்ந்துகொள்வாய். இதுதான் பிரமதரிசனம்.

ராம் மோஹனராயர் இங்ஙனமே பிரமதரிசனம் பெற்றவர்.

இத்தகைய மகான்கள் இவ்வுலகில் அடிக்கடி அவதரிப்பதில்லை.

ராம்மோஹன சூரியன் பெங்காளத்திலே உதித்தபோது இந்தேசம் பேரிருளில் முழுகிக்கிடந்தது.

கண்ணால் பார்க்கவும், மனத்தால் நினைக்கவும் அருவருப்புத் தரக்கூடியனவாகிய விக்கிரகங்கள் வணங்கப்பட்டன. ஐயோ! நாம் முதன் முறை காசியிலே ஓர் பெங்காளிக்கூட்டத்தார் தொழுகின்ற பொம்மையைப் பார்த்தோம். கரேலென்ற உருவமும், இரத்தநிறங்கொண்ட விழிகளும், பேய்கண்டாலு மஞ்சக்கூடிய பற்களும், சரியாக ஒன்றரை முழம் கீழே தள்ளியிருக்கும் நாக்கும் பார்த்தவுடன் எம்மை யறியாமல் எமதுடலம் பதறத் தொடங்கிற்று. இந்தக் கருங்காளிப் பொம்மையின் காலடியில் ஓர் ஆணுருவங் கிடந்தது. அதன் மீது இக் கரும் பேய் உண்மையாகவே நடனஞ் செய்வதுபோல எமக்குத் தோன்றியது.

இக்காளிப் பொம்மையின் முன்பு நூற்றுக்கணக்கான எருமைகள் வரிசை வரிசையாக வெட்டுண்டன. வட நாட்டெருமைகள் இந்நாட்டெருமைகளினும் மிகப் பெரிய வடிவமுள்ளன. எங்கே பார்த்தாலும் இரத்தமயமா யிருந்தது. நாம் கண்டு கண்ணை மூடிக்கொண்டு திரும்பிவிட்டோம். ஐயோ! ராம்மோஹனராயரும் கேசவசந்திரரும் வாழ்ந்த நாட்டார் இன்னும் இந்தப் பாதகச் செய்கைகளை நிறுத்தவில்லையே யென்று எமது மனம் பொங்கத் தொடங்கி விட்டது.

ராம்மோஹனராயர் பிறந்தநாட்களில் இந்தப் பொம்மை வணக்கத்தினும் அதிபாதகச்செயல்கள் பல நடைபெற்றன.

"ஸதி" தகனம் என்ற கொடுஞ்செயலைப்பற்றி இப்போது எல்லோரும் கேட்டுக்கேட்டு வெகு ஸஹஜமாய்விட்டபடியால் அதன் கொடுமை நமக்கு முற்றிலும் தோன்றாமல் மறைந்து நிற்கிறது.

ஒருவன் அந்தப்பாதகநாட்களில் அந்த மூட தேசத்திலே பிறந்திருப்பானாகில் அவனது தந்தை இறந்த துக்கத்தில் அவன் முழுகித் தவித்துக்கொண்டிருக்கும்போது மிலேச்சர்கள் வந்து அவன் கண் முன்னாக அவனது தாயையும் நெருப்பில் போட்டு மேலே எண்ணெயைவிட்டுக் குத்திக் குத்திக் கொளுத்தி அவளுடைய அழுகைக்குரல்கள் செவிப்படாவண்ணம் மந்திரங்களாலும், தாளங்களாலும், சேகண்டிகளாலும் பேய்ச்சத்தமுண்டாக்குவார்கள்.

அவன் மனம் எப்படித் துடித்திராது? என்ன பாதகம் பார்த்தீர்களா?

இவைபோன்ற கொடுமைகள் எத்தனையோ நடந்தன. இன்னும் நடைபெறவில்லையா? நாமெல்லாம் பார்த்துக்கொண்டு பொறுத்திருக்கவில்லையா?

ஆனால் ராம்மோஹனராயர் நம்மைப்போன்றவரல்லர். இடையிடையே இவ்வுலகினைக் கைதூக்கிவிடும்பொருட்டுத் திருவவதாரம் புரியும் மகா குருக்களுள்ளே ராம்மோஹனர் ஒருவர். அவர் அநீதியைக்கண்டு பொறுக்க மாட்டார்.



அஞ்ஞானப்பாம்பின் தலையை மிதித்து அதைக் கொன்றுவிடும் வரை மனத் திருப்திகொள்ளமாட்டார்.

தனது உணவையும், தனது லாபத்தையும் கருதி அநீதிகளை வெளியிட்டுச் சொல்லாமல் மறைத்துவைக்கமாட்டார். பகல் வேஷம் போட்டு மோசம் செய்யமாட்டார்.

மனத்தினுள்ளே விக்கிரக வணக்கத்தை வெறுத்து வெளிக்கு நால்வர் காணக் கைதூக்கிக் கும்பிடமாட்டார்.

உலகத்தாரின் நகைப்பு, உலகத்தாரின் நிந்தை, அவர்களின் அவமதிப்பு, அவர்களின் கோபம், அவர்கள் செய்யும் மனத்துன்பம், பொருட்சேதம், சரீரத் துன்பம் ஆகிய எவற்றையும் பொருட்படுத்தாமல் தமது மனத்தில் கடவுளால் அமைக்கப்பட்ட உண்மை நெறியைத் தவறாது கைக்கொள்ளவேண்டுமென்ற வீர விரதங்கொண்டாருள்ளே ராம்மோஹனர் ஒருவர்.

செல்வத்திலேயும் பதவியிலேயும் மதிப்பிலேயும் வாழ்ந்த இவர் உலக இன்பங்களிலே களித்து சத்தியத்தை மறந்திருக்கலாம்.

இனியதும் அரியதுமாகிய உணவருந்தி, கள்ளுண்டு, பூந்தோட்டங்களிலே உலவி, காதலியோடுகளித்து, இன்னிசைகேட்டு உலகத்துமக்களால் வணங்கப் பெற்று ராம்மோஹனர் நிறைவுற்ற இன்பத்திற் காலந்தள்ளி யிருக்கலாம்.

ஆனால் அவர் இவற்றிற் கென்று பிறந்தவரில்லை. தீமைப் பாதைகளினின்று ஜனங்களுக்கு நல் வழி காட்டப் பிறந்தவரன்றோ?

ஸ்ரீ புத்தப்பெருமான், சங்கராசாரியர், கிறிஸ்து யேசு, முதலியவர்களைப் போல அத்தனை உயர்ந்த நிலைமையில் ராம்மோஹனர் இருக்கவில்லை. ஜாதி சமயக்கட்டுக்களையெல்லாம் அவர் அறுத்து வெளியேறியபோதிலும் மரணக் காலத்தில் அவர் மார்பின்மீது பிராமணர்கள் போடுகிற முப்புரிநூல் தவழ்ந்து கொண்டிருந்ததாம். ஐயோ, பாவம்! இத்தேச நகூணயின்பொருட்டு முழுவீரனொருவனை யனுப்ப ஈசனுக்குக் கருணை பிறக்கவில்லை. கார்லை லாசிரியர் ராம் மோஹனரைப்பற்றிப் பேசியிருப்பாராயின் பாதிவீரனென்று கூறி யிருப்பார்.

எனினும் ராம்மோஹனருடைய சுதேசத்தார் அவர் தகுதிக்குத் தக்கவாறு கூட அவரை நன்கு மதிக்கத் தவறிவிட்டார்கள்.

ஊருக்கூர் ராம்மோஹனருடைய சிலை ஸ்தாபித்திருக்கவேண்டும்.

எண்ணிறந்த ஸ்திரீ ஹத்திபுரிந்து, இத்தேசத்துக்கெல்லாம் அழிக்கமுடியாத பெரும் பழி கொடுத்த ஸதி தஹனமென்னும் அரக்கனை மிதித்துக்கொல்லும்படியாக முதலிலே தூக்கப்பட்ட ராம்மோஹனரின் திருவடியை நாம் மறந்துவிட்டால் நமக்கு உய்யுண்டாமா?

இத்தேசத்திலிருக்கும் ஒவ்வொரு பாஷையிலேயும் அவரது திருச்சரித்திரம் எழுதப்பட்டு அதனை ஒவ்வொரு வீட்டிலும் வைத்திருக்கவேண்டாமா?

பத்திராதிபர்.

# ஸதி.

(208-வது பக்கத்தொடர்ச்சி.)

தான் சிருஷ்டித்திருக்கும் புல்லையும் பூண்டையும் காப்பாற்றி வரும் கிருபாநிதியாகிய கருணாகர பரமசிவன் தன்னை யண்டின பக்தர்களை ரக்ஷிக்கவேண்டியது தன் கடமை யாகையால், தெய்வமே துணையென்று நம்பி தம்மிடத்தில் சரணமடைந்த ஸதியைப் பாதுகாத்து அவள் மனோபிப்பிராயத்தை நிறைவேற்றிவைக்க வேண்டுமென்று நிச்சயம் கொண்டனரோ! அல்லது பூர்வ ஜன்மத்தில் ஸதி செய்த பூஜையின் புண்ணியபலனோ! அல்லது பூர்வ ஜன்மத்தில் சதியும் சுப்பிரமணியனும் ஒருவருக்கொருவர் அதிகப் பிரேமையுடன் வாழ்ந்தனர்களோ! என்று பலவிதமாய் ஊகிக்கும்படியாக ஸுசீலன் மனது மாறக்காலம் வந்தது. ஸுசீலன் தன் பால்யம் முதல் நல்ல குணசாலியா யிருந்ததனாலே அவனுக்கு ஏற்பட்டிருந்த சில அன்யோன்யமான சிநேகிதர்கள் இப்பொழுது அவனை நாடி 'ஹே, ஸுசீலா! உன் மனதும் இப்படிக் கெடுமா! யாரடா இந்தக் கெட்ட புத்தி யுனக்கு உரைத்தனர்கள். யோக்கியர்களான புருஷர்கள் தங்களுக்கு என்ன தீங்கு நேர்ந்தாலும் தங்களுடைய பிள்ளை பெண்களுக்கு, அவர்களுக்கு அனுகுணமான வதூவரனைத் தேடி விவாகம் செய்து வைக்க வேண்டுமென்கிற இப்பாரததேசத்தில் நீண்ட காலமாய் வழங்கி வந்த ஆசாரத்தைக் கெடுக்க இந்தக் கெட்ட புத்தி யுனக்கு வந்ததோ? உன் குழந்தையைக் குழந்தையென்று நினைக்காமல் ஏதோ விலக்கு விற்கவும் வாங்கவும் அர்ஹமான ஓர் விவசாய வஸ்துவாய் நினைந்து, இந்த அழகிற் சிறந்த சமுத்திரிகாலக்ஷணங்கள் பொருந்திய பஞ்சவர்ணக்கிளியோவென்று சொல்லத்தகுந்த உன் பெண்மணி ஸதியை, மகா விரூபியும், அவலக்ஷண வாஸஸ்தலமும், கெட்ட குணங்களின் ஆகரமும், நிரக்ஷரகுக்ஷியுமான பட்டகோபாலனுக்குப் பாணிக்கிரகணம் செய்து கொடுக்க நிச்சயித்திருக்கிறாயே? இது உனக்கு அடுக்குமா! இவ்வளவு நாள் நீ கற்ற வித்தையெல்லாம் விழலுக்கிறைத்த நீரைப்போல் வியர்த்தமாயிற்றே! பட்டகோபாலனுக்குப் பெண்ணைக் கொடுப்பதைவிட உன் பெண்ணை நீ ஆற்றில் பிடித்துத் தள்ளிவிடலாம். பணமிருக்கிறது என்கிற ஒரு விஷயத்தைத் தவிர, பட்டகோபாலனுக்கு வேறே யாதாவது விசேஷமான லக்ஷணங்கள் இருக்கின்றனவா? குணசாலியா! அல்லது ரூபவானா? அல்லது வித்துவானா? மகா அயோக்கியன், விரூபி, நிர்மூடன். உலகத்தை யறியாதவன். இந்த அசடனுக்கா உன் பெண்ணை விவாகம் செய்துகொடுக்க நிச்சயித்திருக்கின்றாய் சரிதான். பணமிருக்கின்றதே, அது போதுமென்று நினைத்தாலும், இருக்கும் பணத்தைக் காப்பாற்றும் வழி தெரியாதவன் பட்டகோபாலன். தாயாதி வீடு நுழைந்து ருணவியமாய் கடன் பத்திரங்கள் எழுதிக் கொடுப்பதில் அதிக சாமர்த்தியமுடையவன். ஊரில் நடக்கும் வம்பு வியாச்சியங்களுக்கெல்லாம் மூல ஸ்தானம் இப்பேர்ப்பட்ட யோக்கிய புருஷனிடத்தில் சம்பத்து லக்ஷ்மி வாசம் செய்யும் காலம் மிகவும் அல்பந்தானென்று



அறிய உலக்கு ஈசன் இந்த சமயத்தில் உனக்கு அருள் செய்யவில்லையே! உன் நெஞ்சு கல் நெஞ்சோ! எங்கள் இவ்வளவு வார்த்தைகளில் ஒன்றாவது உன் காதில் நுழையவில்லையே! வாஸ்தவம்தான். குதிரை கழுதையாக வெகு காலமாகாது. பட்டகோபாலன் வாசனை கண்டவுடனே, உன் காதும் மற்ற அங்கங்களும், இவ்வளவு மாறிப் போயிருக்கின்றன. அவனுக்கு உன் பெண்ணை விவாகம் செய்துவிட்டாயேயானால் பிறகு உன் குணங்களையும் உன் காரியங்களையும் வர்ணிக்க இவ்வுலகத்தாரால் முடியாதுபோல் தோன்றுகிறது. எங்கள் வார்த்தைகளைக் கவனியாவிட்டாலும் உன் பெண்ணையாவது இந்த விஷயத்தைக் குறித்து யாதாவது கேளேன். நீ உன் இஷ்டப்படி பட்டகோபாலனுக்கு உன் பெண்ணைக் கொடுப்பதாய் நிச்சயம் செய்து, உன் ஜீவனத்திற்கு வழி தேடிக்கொண்டிருக்கும்பொழுது, இப்பேர்ப்பட்ட நிர்மூடனாகிய கணவனுக்குப் பெண்டாய் வாழ்க்கைப்படுவதைவிட உயிரை இழக்கலாமென்று கருதி உன் பெண் தற்கொலை செய்துகொண்டால் உன் கதி எப்படியாய் விடும். பட்டகோபாலனிடமிருந்து ஒரு தம்படி கூட கிடைக்கமாட்டாதது மாத்திரமல்ல. நீதான் ஸதியைக் கொலை செய்ததாக நினைத்து, நமக்காக வளர்த்த கிளியைத் தின்ன பூனையைக் கொன்று துண்டாக்கிவிடவேணுமென்று, ஒரு வீராவேசம் பூண்டு உன்னை ஹதம் பண்ணுவதற்குப் போலீஸாருடன் பட்டகோபாலன் உன் வீடு வந்து சேர்வானே. அப்பொழுது உன் ஸ்திதி எப்படி யிருக்குமென்று யோசித்துப் பார். யானை வரும் முன்னே மணியோசை வரும் என்கிறபடி பின் வரப்போகிற உன் துன்பங்களுக்கு இப்போ நீ படும் கஷ்டங்களெல்லாம் அறிகுறிகள். இப்பொழுதாவது நீ உன் மனதை மாற்றமாட்டாயா? வாயைத்திறந்து பதில் பேசமாட்டாயா' என்று பலவிதமாய் உரைக்க 'சரி! சுப்பிரமணியனுக்கு என் பெண்ணை விவாகம் செய்துகொடுக்கும் விஷயத்தில், பட்டகோபாலர் கேட்கும் எதிர் ஜாமீன் 1500 ரூபாய்க்கு நான் என்ன செய்கிறது' என்று வினவினான். கொஞ்சம் ஐவேஜியுடையவர்களும், வாயினால் மாத்திரமல்லாமல் காரியத்தினாலேயும் ஒத்தாசை செய்யக்கூடியவுமான ஸுசீலன் சிநேகிதர்கள் தங்கள் ஒவ்வொருவருக்கும் வீதம் போட்டுக்கொண்டு ஸுசீலனுக்கு 2000 ரூபாய் பணம் சேகரித்துக் கொடுப்பதாய் நிச்சயித்து 'ஹே ஸுசீலா! பணத்தைப்பற்றி யோசிக்கவேண்டாம். ஒத்தாசை பண்ண நாங்கள் தயாரா யிருக்கிறோம்.' நாங்கள் கிரீசர் வீட்டிற்குச் சென்று கலியாணத்தை நிச்சயம் செய்துவிடலாமா வென்று' சிநேகிதர்கள் கேட்க 'அப்படியே செய்கிறது' என்ற ஸுசீலன் அனுமதியையடைந்து ஸுசீலன் சிநேகிதர்கள் கிரீசர் வீட்டிற்குச் சென்றனர்கள்.

கிரீசரோ, அயல் கிராமம், ஹரிச்சந்திராபுரத்திலிருந்து வரன் தேடிக் கொண்டு வந்திருந்த ஒரு பெரிய மிராசுதாருடன், தன் புத்திரனின் குணாதிசயங்களையும், வித்துவத்தையும்பற்றி விஸ்தாரமாய்ப் பேசி முடித்துக் கலியாணம் நிச்சயம் செய்வதில் ஆஸக்தியுடையவராய் இருந்தனர். மிராசுதாரோ நல்ல ஐவேஜியுடையவர்தான்; மேலும் உயர்ந்த குலத்தில் பிறந்தவராகை

யால் நல்ல குணமுடையவர். ஆனால், அவருடைய பெண்ணோ அதிக ரூபலா
வண்யம் பொருந்தினவளல்ல. ஸதியின் வித்வத்து, அழகு, சங்கீதஞானம்,
அளவிறந்த உலகஞானம், இவைகளில் நூற்றில் ஒரு பாகம் கூட பொருந்தினவ
ளல்ல. 'நற்றாமரைக்கயத்து நல்லன்னம் சேர்ந்தாற்போல் கற்றாரைக் கற்றா
ரேகாமுறுவர்' என்கிற வாக்கியத்தின்படி, சதியின் மனம் சுப்பிரமணியனிடத்
திலும், சுப்பிரமணியன் மனம் சதியினிடத்திலும் பரஸ்பரம் ஸ்தாபனத்தை
யடைந்தன. மிராசுதாரின் குமாரியையும் நன்கு அறிந்திருக்கும் குணசாலி
யாகிய சுப்பிரமணியனோ 'அந்த வநிதையை விவாகம் செய்துகொள்ளும்படி நேரிடு
மோ! நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்குமோ! நம் கருத்தைத்
தகப்பனார் அறியவில்லையே. அதிகப் பணக்காரர் வீட்டில் நாம் சம்பந்தம்
பண்ணுவோமேயானால், அவர் வீட்டு வாசற் காப்பான் உத்தியோகத்திற்குத்தான்
நாம் அர்ஹம். கிரஹஸ்தாசிரம ஆசாரங்களெல்லாம் உடனே பறந்தோடிவிடும்.
பாரியையோ நாமொன்று சொன்னால் அவள் ஆயிரம் சொல்வாள். இல்லற
சுகமோ, அன்றே, அடியுடன் அற்றுவிடும். இந்த விஷயங்களையெல்லாம் நம்
தகப்பனாருக்குத் தெரிவித்து பிறகு சதியை விவாகம் செய்துகொள்ளவேணும்
என்கிற நம் அபிப்பிராயத்தை ஜாடையாய்ச் சொல்வோமோவென்றால், நம்
வார்த்தையைத் தகப்பனார் வார்த்தைகளாகக் கவனிக்கமாட்டாரே. கொக்
குக்கு ஒன்றே மதியென்கிறபடி பணத்தின்மேல் தான் திருஷ்டியுள்ளவர். நம்
மை மதிக்கமாட்டார். ஆனால் நம்மால் கூடியமட்டும் நாம் முயலுவோம். மன
மிருந்தால் வழி யுண்டு. நிச்சயமாய் இந்த விஷயத்தில் கூடியமட்டும் சிரமப்பட
வேண்டியதுதான் உசிதம். ஹே தயாநிதி, உலகரக்ஷகா, பரமேசா! என் இஷ்
டத்தை நிறைவேற்றி என் மனதையா சுவாசப்படுத்தும்' என்று ஈசனை நம்பி,
தன் மனதை திடப்படுத்திக்கொண்டு தன் தகப்பனாரிடம் புறப்பட்டான்.

தகப்பனாரோ. மிராசுதாருடன் விவாகத்தைப்பற்றிப் பேசி முடித்து 2000-
ரூபாய் எதிர் ஜாமீன் பேசி 400-ரூபாய் அட்வான்ஸு வாங்கி மிராசுதார்
பெண்ணைத் தன் பிள்ளைக்கு விவாகம் செய்வதாய் பத்திரம் எழுதிக் கொடுத்து
விட்டார். இந்தமாதிரிக் கலியாணம் நிச்சயமாய்விட்ட விஷயம் கொஞ்சமே
னும் சுப்பிரமணியனுக்குத் தெரியாது. ஆனால் அவன் தன் தகப்பனாரிடம்
சென்றபொழுது அவருடன் ஸுசீலன் சிநேகிதர்கள் ஏதோ விவாக விஷய
மாய்ப் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு என்ன! ஏதோ வழி பிறக்கும்போல்
தோன்றுகிறதே! ஸுசீலன் தன் பெண்ணை எனக்கு விவாகம்செய்துகொடுக்க
இஷ்டமுள்ளவனாய் ஆய்விட்டான்போல் தோன்றுகிறதே. கடவுள் தன்னை நம்
பினவர்களைக் கைவிடமாட்டாரென்பது வாஸ்தவம்தான். என் மனோபிப்பிரா
யம் நிறைவேறுவதற் கனுகுணமான சகுனங்கள் தோன்றுகின்றனவே. ஈசா
கிருபை கூரும். விவாகத்தை முடித்துவையும். என் இஷ்டத்தை நிறைவேற்றும்'
என்று அநேகம் விதமாய் தனக்குள் ஆலோடம் செய்துகொண்டு. தான் வந்தது
தகப்பனாருக்குத் தெரியாமல் ஜாடையாய் மறைந்து உள்ளே போய், காலேஜுக்
குப் போக நேரமாய்விட்டபடியால் சாப்பாட்டுக்குத் தாயாரிடம் சென்றனன்.



வந்திருந்த ஸுசீலப்பிரியர்களோ, கிரீசரைக் குறித்து 'ஸார்,' தங்கள்
குழந்தை சுப்பிரமணியனுக்கு, எங்கள் சிநேகிதன் ஸுசீலன் அருமைக்குழந்தை
ஸதியை விவாகம் செய்துகொண்டு எங்கள் அபீஷ்டத்தை நிறைவேற்றி வைக்க
வேணும்' என்று வணக்கமாய்ப் பிரார்த்திக்க 'பேஷ். இவ்வளவு தெரிந்தவர்களா
யிருந்தும், M. A. வாசிக்கும் நம் குழந்தைக்கு இந்த அல்பப் பிச்சைக்காரன்
ஸுசீலன் பெண்ணை விவாகம் செய்துகொள்ளும்படி சொல்லுகிறீர்களா?
என்ன. நம்மை வெகு மோசமாய் நினைத்துவிட்டீர்கள்போல் தோன்றுகிறது.
வெகு நன்றாய் இருக்கிறது. வந்த வழியைப் பார்த்துக்கொண்டு சீக்கிரம் செல்
லுங்கள்' என்று வெகு கோபமாய்க் கூறினார்.

வந்திருந்தவர்களோ, 'ஸ்வாமி பட படக்கவேண்டாம். தங்கள் குமாரன்
M. A. பாஸ் செய்திருப்பதில் எங்களுக்கு வெகு சந்தோஷம்; நல்ல குணசாலி
யாகிய உங்கள் குமாரனுக்கு அவனுக்கு அனுகுணமான ஒரு பெண்ணை விவாகம்
செய்து வைக்கவேணுமென்கிற விஷயம் உங்களுக்குத் தோன்றவில்லையே'
என்று சொல்ல, தங்களிடமிருந்துதான் இந்த புத்தி கேட்கக் காத்திருந்தேன்.
சபாஷ் வந்த வழியைப் பார்த்துப் போங்கள் என்று சொன்னபோதிலும்
மேலே பேசிக்கொண்டிருக்கிறீர்களே' என்று கோபமாய் கிரீசர் சொன்னார்.
ஆனால் தாங்கள் குறிப்பிட்டு வந்த காரியத்தை முடித்துப் போகவேணுமென்
றெண்ணங்கொண்ட ஸுசீலன் சிநேகிதர்கள் கொஞ்சமேனும் கிரீசர் வார்த்தை
களின்மேல் கோபம் கொள்ளாமல், சாம, தான பேத, தண்டம் முதலிய நான்கு
விதமாயும் முயலுவதாய் நிச்சயித்து 'ஏய் கிரீசரே நாங்கள் சொல்வதைக் கேளும்;
பிள்ளை M. A. பரீக்ஷைக்கு வாசிக்கின்றானென்று மாத்திரம் வெகு கௌரவ
மாய்ப் பேசுகின்றீர், M. A. வாசிப்பவன் தகப்பன்போல் நீர் நடக்கவில்லை
யே! இது என்ன விநோதம், சொல்வதைக் கேளும்'—என்று சமாசாரத்தைச்
சொல்ல ஆரம்பிக்கும் முன்னமே, வெகு பரபரப்புடன், 'நிறுத்துங்கள் பேச்சை.
தொலங்கள் வெளியே, அல்லது போலீஸாரைக் கூப்பிட்டுவிடுவேன்' என்று கிரீசர்
கூறினார்.

'கிரீசரே! வார்த்தைகள் மிஞ்சி வெகு தெளிவாய் வருகின்றனவே; சமா
சாரத்தைச் சொல்லிவிடுகிறேன் கேளும். 1500-ரூபாய் பணம் கொடுக்கிறோம்.
கலியாணம் நிச்சயம் பண்ணலாமா சொல்லும்' என்று சிநேகிதர்கள் வினவ,
கிரீசர், இந்தப் பெண்ணையும் இரண்டாவது பெண்டாய் தன் பிள்ளைக்குக் கலி
யாணம் செய்து வைத்து 1500-ரூபாய் பணத்தைப் பெறலாமென்கிற பேரா
சையினால் ஒருபுறமும், தன் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமென்
கிற எண்ணத்தால் மற்றொரு புறமும் இழுக்கப்பட்டவராய் உங்களிடத்தில் பண
மிருக்கின்றதுபோல் பேசுகிறீர்களே! போங்கள் வெளியே' என்று பாதி
கேட்டதும் கேட்காததுமாய் முனகி, வார்த்தைகள், இரைந்து பேசப்படாமை
யால், வந்திருந்தவர்கள் தைரியங்கொண்டு "யோசித்துப்பாரும். நீர் மிராசுதா
ரிடத்தில் பணத்தை வாங்கிவிட்டீர். உம்முடைய பிள்ளை மிராசுதாரின் பெண்ணை
விவாகம் செய்துகொள்ளமாட்டான். மிராசுதார் கோர்ட்டில் வியாச்சியம்
செய்து, நீர் மோசம் செய்ததற்காக உம்மைக் குற்றம் சாட்டி உம் பிள்ளையுள்

பட உங்கள் இரண்டுபேர் கையிலேயும் இருப்புக்காப்புப்போட்டு, ஜனங்கள் பின் தொடர நீங்கள் ஊர்வலம்செய்துகொண்டு ஜெயிலுக்குப்போகும் காலத்தை நினைத்து இப்பொழுது செய்யவேண்டிய காரியத்தை யோசித்துப் பாரும், என்று வந்திருந்தவர்கள் சொல்லவே, உள்ளத்தில் பயமுண்டானபோதிலும் பகட்டாய் தன்னை வெளியில் காண்பித்துக்கொள்ளும்பொருட்டு, 'என் பிள்ளையும் உங்கள் பிள்ளைகளைப்போல நினைத்துவிட்டீர்கள். மறுத்துப் பேசினால், அந்தப்பயலைச் சுட்டுவிடமாட்டேனா? அது இருக்கட்டும். நீங்கள் கிளம்பிப்போங்கள். உங்களோடு நான் பேச ஆரம்பித்தது என்பேரில் மிகவும் தப்பிதம். வெளியே போங்கள் பின்பு பேசிக்கொள்வோம்' என்று சொல்லி விட்டுக் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு உள்ளே போய்விட்டான்.

(இன்னும் வரும்.)

---

## சந்திரமதி.

### 151-வது பக்கத் தொடர்ச்சி.

தூ:—நாம் ஆஹாரமின்றியாவது சில நாள் ஜீவித்திருக்கலாம்; வாயுவின்றி ஒரு நிமிஷங்கூட பிழைத்திருக்கமாட்டோம். நாம் உட்கொள்ளும் வாயுவில் ஒரு பாகம் பிராணவாயு சேர்ந்திருக்கிறது. நாம் மூச்சைவாங்குவதாலும்விடுவதாலும் பிராணவாயு உள்ளே சென்று இரத்தத்தை பரிசுத்தம் செய்ய உள்ளேயிருந்து அசுத்தவாயு வெளியேவருகின்றது. அப்படிப்பட்ட காற்று விஷத்தன்மையுள்ள தானமையால் ஜீவஜெந்துக்கள் வெளிவிடும் சுவாசக்காற்றை யாரேனும் தனியாய் உட்கொள்ளும்பக்ஷத்தில் சில நிமிஷங்களுக் குள்ளாகவே அவர்கள் மரணம் அடைவார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் வாசம்செய்யும் வீடுகளுக்குள்ளும் படுத்துக்கொள்ளும் அறைகளுக்குள்ளும் வேண்டுமவ்வளவு நல்ல காற்று வரும்படியான வசதி ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். புதுக் காற்று நன்றாய் வருவதற்கு வழியில்லாத ஓரறையில் பலர் படுத்துக்கொண்டால், கொஞ்சநேரத்துக் குள்ளாகவே பிராணவாயு வவ்வளவும் குறைந்து போதலும், விஷக்காற்றையே உட்கொள்ளும்படி நேரிடுவதால் கொடிய நோய்கள் உண்டாவது மாத்திர மன்றி சிற் சில சமயங்களில் மரணமும் சம்பவிக்கலாம். சாதாரணமாக நம்மவர் யோசனையின்றி பிரசவித்த அறையில்சுத்தவாயு வருவதற்கில்லாமல் கதவைச் சாத்தி வைப்பதால் பிரசவித்தவர்களும் சிசுக்களும் பிரசவித்த தீட்டு போவதற்குள்ளாகவே மரிப்பது சகஜமாயிருக்கிறது.

சந்திர.—நல்ல காற்று இல்லாமற்போவதினால் தானுக்கும், எங்கேயாவது பறந்து போய்விடுமென்ற பயத்தினால் நேற்று நான் இங்கேவருவதற்காகப் புறப்படப்போகும்பொழுது பெட்டியில்வைத்து மூடிவிட்டுவந்த அன்னப்பறவை மறு



படியும் நான் வீட்டுக்குப் போனபிறகு மூடியைத்திறந்து பார்க்கையில் இறந்து கிடந்தது. அதற்குக் காரணம் இன்னதென்று அப்பொழுது எனக்குப்புலப்படவில்லை. அதுமாத்திரமின்றி, நேற்று நான் 'கண்ணாம்பூச்சி' யாடிக்கொண்டிருந்தபொழுது கொஞ்சங்கூட காற்று வருவதற் கிடமில்லாத எங்கள் வீட்டுக்கீழ் அறைக்குள் போய் ஒருநாழிகைநேரம் இருந்து வெளியேவருங்காலையில் உடம்பெல்லாம் வியர்வை கொட்டி மூச்சுவிடக் கூடாமற்போய்விட்டதற்கு இதுவே காரணமாயிருக்கும்.

தூ.—ஆம். சுத்தவாயு இல்லாமற் போவதால் ஜீவஜந்துக்களின் ஆரோக்கியத்துக்குக் கெடுதி உண்டாவதுமாத்திர மன்றி, நெருப்புக்கூட எரியாது.

சந்திர.—நாஷ்டாத்துக்கு முன் எங்கள் தேவதார்ச்சனைப்பெட்டியில் எரிந்து கொண்டிருந்த திருவிளக்கை அப்படியேவைத்து விட்டுக் கதவைச்சாத்திவிட்டோம். அதற்குள் அதிலிருந்த சந்தனக்கிண்ணம் வேண்டியிருந்தபடியால் கதவைத் திறந்து பார்க்கையில் அகலில் நிறைய எண்ணெயும் வத்தியும் இருந்தும் விளக்கு அணைந்துபோனதைப்பார்த்து நான் அப்பொழுது எவ்வளவோ ஆச்சரியப்பட்டேன். இப்பொழுது அதற்குக் காரணம் தெரியவே என்மனதுக்கு சந்தோஷமாயிருக்கிறது. நாம் மூச்சு விடுவதால் மாத்திர மன்றி வேறெதனாலாவது காற்று கெட்டுப்போய் விஷத்தன்மையுள்ளதாகுமா?

தூ.—சாக்கடையிலிருந்து வெளியாகும் துர்க்கந்தமும் செத்துப்போன ஜந்துக்களின் பிணங்கள் அழுகும்போது உண்டாகும் துர்வாசனையும், பசுக்களைக் கட்டியிருக்கும் இடங்களிலிருந்து உண்டாகும் சிறுநீர் முதலியனவையும் சாணிக் குப்பையும் ஊறுவதால் உண்டாகும் துர் நாற்றமும் காற்றை விஷமுள்ளதாய்ச்செய்து நமது தேகாரோக்கியத்துக்குக் கெடுதியையும் விளைவிக்கும். நெருப்பு எரிவதாலும், குடியிருக்கு மிடத்தை ஈரமாய் வைப்பதாலும்; வீடுகளுக்குக்கிட்ட மலமூத்திரங்களை விடுவதாலும், புகைமுதலிய வற்றாலும், காற்று கெட்டுப்போய் பலவிதமான நோய்களை உண்டாக்குமாதலால், குடியிருக்கும் வீடுகளுக்குச் சமீபத்தில் இப்படிப்பட்டவை ஒன்றுமில்லாதபடி ஜாக்கிரதையாய் வாசஸ்தானத்தை எப்பொழுதும் சுசியாய்வைத்திருக்கவேண்டும்.

சந்திர.—இத்தனைவிதங்களில் தினந்தோறும் காற்று கெட்டுப்போய்க் கெடுதி யுண்டாக்குவதாயிருப்பதால், கடவுள் இக்கஷ்டத்தை ஒழிக்கத்தக்க உபாயங்கள் ஒன்றையும் ஏற்படுத்தி யிருக்க வில்லையா?

தூ.—நாம் சுவாசம் விடும் கெட்ட காற்றை மரமுதலியவை உட்கொண்டு நமக்கு அவசியமான பிராணவாயுவைப் பகல்வேளையில் விடுகின்றன. இவ்விதமாக, மரமுதலியவை சுத்தப்படுத்திக்கொண்டிருப்பதாலும், காற்றானது எங்கும் பரவி வீசுவதாலும், காற்றால் தூரமாகத் தொலைவதாலும், விஷவாயுவால் நமக் குண்டாகும் கெடுதி குறைந்து போகிறது. மூச்சுவிடுதல் முதலானதிறுத்தக்கூடாத காரியங்களைத் தவிர வேறெந்தவிதத்தாலும்

நாம் காற்றைக் கெடுக்காமல் இருக்கும்பக்ஷத்தில், நாம் ஆரோக்கிய நிலைக்குக் கடவுள் ஏற்படுத்தியிருக்கிற சாதனங்களே போதுமானவை யாயினும் மேற்சொல்லிய குறைவுகளை யுத்தேசித்து நாமும் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது.

தூந.—நாம் சிரத்தை யெடுத்துக்கொண்டு செய்யவேண்டிய காரியங்களெவை? நாம் வீடுமுதலியவற்றை ஸதாசுசியாய்வைத்து, காற்றினுடைய துர்க்கந்தம் முதலியவை தொலையும்படி சுவர்களுக்கு அவ்வப்பொழுது சுண்ணாம்படித்தும், சுத்தவாயு தாராளமாய் உள்ளே பிரவேசிப்பதற்கு அநுகூலமாக சுவர்களில் ஜன்னல்கள் வைத்தும், புகைமுதலியவை போவதற்குத்தக்க வழிகளேற்படுத்தியும், நமது தேகத்தை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டுக் கூடுமான சிரத்தையெடுத்துக் கொள்ளவேண்டும்

சந்திர.—இனி ஜலத்தை உபயோகிக்க வேண்டிய விதத்தைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்.

தூந.—தேகம் ஆரோக்கியமாயிருக்கவேண்டுமானால் சுவாசிப்பதற்கு நிர்மலவாயு எவ்வளவு ஆவசியகமோ அருந்துவதற்கும் நிர்மலஜலம் அவ்வளவு ஆவசியகமாம். ஆகையால் நதிகளிலாயினும் ஏரிகளிலாயினும் கலக்கலான நீரை ஒருபொழுதும் குடியாமல் நன்றாய் வடிகட்டின தெளிந்த நீரையே குடித்துவரவேண்டும் நாம்குடிப்பதற்காக நீர் கொண்டுவரும் துறைகளில் ஸ்நானம் செய்தல், பற்றுதேய்த்தல், துணிதோய்த்தல், முதலானகாரியங்களை எவ்வளவும் செய்யக் கூடாது. அப்படிச்செய்வதால் ஜலம் கலங்கிப்போய் அதைக்குடித்தவர்களுக்கு நோயை உண்டுபண்ணும்.

சந்திர.—நாம் சாப்பிடவேண்டிய சரியான ஆகாரமெதுவோ, எந்த எந்த வேளைகளில் போஜனஞ்செய்யவேண்டுமோ அதை தயவு சொல்லுகிறீர்களா?

தூந.—ஆரோக்கியகரமாயும் புஷ்டிகரமாயும் உள்ளபதார்த்தங்களை மாத்திரமே புஜித்து, தேகத்துக்குக் கெடுதல் உண்டாக்குவதும் அஜீர்ணகரமாயுமுள்ள வஸ்துக்களை எப்பொழுதும் சாப்பிடாமலிருக்கவேண்டும். கூடுமானவரையிலும் கீரைவகைகளை தின்னாமலிருப்பது நல்லது.நல்லபதார்த்தங்களை மிதமின்றி தின்னுவோமாகில், அஜீர்ணம் முதலிய வியாதிகள் உண்டாகும். சிறுகுழந்தைகள் நாளுக்கு மூன்று நாலுதடவை சாப்பிட வேண்டியவர்களாயிருந்தும் பெரியவர்கள் பிரதிதினமும் இரண்டுதடவை வேளைப்பிரகாரம் புஜித்து, கூடுமாகில், எப்பொழுதும் ஒருபதார்த்தமாயில்லாமல் கறிகாய்களையும் இரஸவர்க்கங்களையும் மாற்றித் தின்னவேண்டும். நோன்பென்றும், விரதமென்றும் பேர் வைத்துக்கொண்டு வேளை தப்பித்தின்பது, ஒருபோதிருத்தல், உபவாசமிருத்தல், முதலிய ஆசாரங்களை கட்டிவைக்க வேண்டும். இல்லாவிட்டால், அப்படிப்பட்டவர் நோய்க்குள்ளாகி உடம்பைகெடுத்துக்கொள்வார்கள்.

சந்திர.—வஸ்திரதாரணத்தைக் குறித்து விசேஷித்து ஏதாவது சொல்ல வேண்டியிருக்கிறதா?



தூந.—வியர்வை முதலானவற்றால் நாம் தரித்துக்கொள்ளும்வஸ்திரங்கள் சீக்கிரத்தில் அழுக்காகிப்போம். அழுக்கான வஸ்திரங்களையே மறுபடியும் கட்டிக்கொள்வதால் முதலான தோலைப்பற்றிய நோய்கள் உண்டாகின்றன. ஆகையால் துணி கொஞ்சம் அழுக்கானவுடனே அதை அவிழ்த்துவிட்டுதோய்த்துக்கொண்டுவந்த துணியை கட்டிக்கொள்ள வேண்டும். தேகாரோக்கியத்திற்கு அழுக்கில்லாத துணிகள் அவசியமேயன்றி விலையுயர்ந்த துணிகளல்ல, ஆகையால் தனவான்களின் மனைவிகளைப்பார்த்து ஏழைகளின் மனைவிகள் தமக்கும் விலையுயர்ந்த வஸ்திரங்களே வேண்டுமென்று பிடிவாதம்செய்யும் புத்தியீனத்தை விட்டுவிடவேண்டும்.

சந்திர.—தினந்தோறும் ஸ்நானம் செய்வதால் பிரயோஜனமென்ன?

தூந.—குடிப்பதற்குப் போலவே குளிப்பதற்கும் நிர்மலஜலமே வேண்டும். அழுக்குள்ள சேற்றுத்தண்ணீரில் முழுகுவதாலும் ஈரத்துணியை கட்டிக்கொண்டிருப்பதாலும் நோயுண்டாகும். சரீரமுழுவது முள்ள சூக்ஷ்மதுவாரங்களின் மூலமாய் வியர்வை, மண், முதலிய அழுக்குப்பொருள்கள் ஸதா மேலே வந்துக்கொண்டிருக்கின்றன சுத்தமாய் தேகத்தைத் தேய்த்துக் குளிக்காமலிருக்கும்பக்ஷத்தில் அத்துவாரங்கள் அடைந்துபோம். வியர்வை முதலானவை சரியாய் மேலுக்குவராமல் சிரங்குசொரிகள் உண்டாகும். ஆகையால் ஸ்நானம் செய்யும்பொழுது சரீரத்தை, அழுக்குப்போகும்படி, நன்றாய்த்தேய்த்து, தினத்துக்கொருவேளையாவது தவறாமல் நீராடவேண்டும். சும்மாதேகத்தின் மீது நீரைக்கொட்டிக்கொள்வதால் யாதொருபிரயோஜனமுமில்லை. பாலர்களும் தேகதிடமுள்ளவர்களும் தினந்தோறும் காலைவேளையில் குளிர்ந்த நீரில் குளிக்கவேண்டும். பலவீனர்களும் நோயாளிகளும் வெந்நீரில் ஸ்நானம் செய்யலாம் அதிகமாசச் சுடும் நீரை வார்த்துக்கொள்வது தேகத்துக்கு நல்லதன்று. ஆகையால் குழந்தைகள்நன்றாய்த் தூங்குமென்று சுட சுட வெந்நீர் வார்க்கும் துராசாரத்தை அறிவுள்ளவர்களெல்லாம் ஒழிக்கவேண்டும்.

சந்திர:—தேவரீர் இன்னும் நித்திரையைப்பற்றி மாத்திரம்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. அதையும் தயவுசெய்து சொல்லுங்கள்.

தூந:—பிரதிதினமும் இரவு 10 நாழிகைக்குப் படுத்துக்கொண்டு சூரியன் உதயமாவதற்கு முன்னமே எழுந்திருக்கவேண்டும். சாதாரணமாய் தினத்துக்கு இரண்டுஜாம நித்திரை போதும். பகலில் தூங்குவது நல்ல வழக்கமன்று. சிறுகுழந்தைகளுக்கு நல்ல நித்திரை வேண்டியிருக்குமாதலால் அவர்களை பகலில் தூங்கவைக்கலாம், தூக்கம்கெட்டால் நோய் வருமாகையால் இரவில் நெடுநேரம் விழித்திருக்கலாகாது.

சந்திர.—இதுவரையில் சொல்லிவந்ததைத்தவிர தேகாரோக்கிய விஷயமாய்ச்சொல்ல வேண்டியது வேறொன்றுமில்லை யல்லவா?

தூந.—முக்கியமானது இன்னும் ஒன்றிருக்கிறது. பிரதிதினமும் கொஞ்சம் தேகப்பயிற்சி செய்வது அத்தியாவசியம், யாதொருவேலையுஞ் செய்

யாமல் சும்மா உட்கார்ந்திருக்கும் பக்ஷத்தில், தேகம் பலவீனமடைந்து நோயுண்டாக்கும். இந்தக்காரணத்தினாலேயே பாடுபடாமல் நின்றுவிட்டு உட்கார்ந்திருக்கும் பணக்கார ஸ்திரீகளைவிட கஷ்டப்பட்டு வேலைசெய்யும் ஏழைவீட்டு பெண்கள் பலமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் வேலைக்காரர் முதலிய பரிஜனங்களுள்ளவர் கூடத்தாமும் வீட்டில் உழைத்து வேலைசெய்து வருவரேல் வெகுகாலம் ஆரோக்கியதிடமுள்ளவர்களா யிருப்பார்கள்.

# The elevation of woman in India—Its necessity.

## பெண்கள் அபிவிருத்தியடைவதின் அவசியத்தன்மை.

தேசசரித்திரங்களை உய்த்துணர்ந்து படிக்குங்கால் ஒவ்வொரு தேசமும் நமக்குப் புலப்படுகிறது யாதெனில் நாகரீகத்தில் பெருமை யடைந்து எவ்விதத்திலும் பெருத்த க்ஷேமத்தை யடைந்து சிறப்புற்று விளங்கியதற்குக் காரணம் அவ்வத் தேசங்களிலுள்ள ஸ்திரீகள் கல்வியில் மிகுந்த ஆடவர்கள் போல் தாமும் நன்றாய் கல்வியில் தேர்ச்சி யடைந்து தேச நன்மைக் குழைக்கும் தமது நாயகருக்கு தக்க ஊன்று கோல் போலிருந்தமைதான். இதனால் கற்ற ஆடவர் முழுதும் தேசநன்மைக்கே உழைத்தார்களென்று கொள்ளலாகாது. அப்படிப்பட்ட கருத்துள்ளவர்களாய் அவர்கள் இருக்க வேண்டு மென்பதுதான் படித்து அறிவடைவதின் முதற் கொள்கையாயிருக்கவேண்டும். கற்றவர்களில் தற்நலங்கருதித் திரிபவர்களுமிருக்கிறார்கள்; பிறருடைய நன்மைநாடி நடப்பவர்களுமிருக்கிறார்கள். ஆனால் எத்தேசமும் பெருமையடைந்து சிறப்புற்றிருக்கும் காலத்தில் அதினுடைய இரகசியமான காரணத்தை விசாரிக்கும் பொழுது ஸ்திரீபுமான்கள் மகாமேதையாயும் ஒற்றுணர்ச்சியுடனும் தேசாசாரக்கொள்கையிலும் மற்றும் எவ்விதமான தேசத்திற்கு சிறந்த பத்சரத்க்க விஷயங்களிலும் தங்களது நுண்ணறிவை உபயோகித்து கால தேச வர்த்தமானத்தை அநுசரித்து வந்தகாரணம் பற்றித்தாமென்று நமக்கு நன்றாய் புலப்படுகிறது. நமது இந்து தேசமானது முற்காலத்தில் சிறப்புற்று விளங்கியதற்குக் காரணம் இஃதென நமக்கு நன்றாய்த் தெரிகிறது. நமக்கு பூர்வீக சரித்திரமான புராணங்களை சோதித்துப் பார்க்கும் பொழுது சீதாபிராட்டி, தமயந்தி, துரௌபதி, சாவித்ரி இவர்களைப்போல அரிய பெரிய குணங்களமைந்த ஸ்திரீகள் அனேகர் இருந்ததைப் பற்றித் தான் நமது தேசமானது தற்காலம் நாகரீகத்தில் புகழ்பட்ட ஆங்கிலேயர்கள் கேவலம் மதியீனர்களாய் மரவுரிதரித்து கீழ்ப்பட்ட நிலைமையிலிருந்த பொழுது நாம் நாகரீகத்தில் பெருமை பெற்றவர்



152

களாகவும் எவ்விதத்திலும் எத்தேசத்தாரைக் காட்டிலும் சிறப்படைந்தவர்களாகவும் இருந்தோமென்று நன்றாய் தெரிகிறது. அக்காலத்தில் நாமிருந்த பெருமைக்கும் தற்காலத்தில் நாமடைந்திருக்கும் தாழ்விற்கும் யாது காரணமென்று சற்று யோசிப்போமாகில் அது நன்கு விளங்கும். உலகத்தில் ஒவ்வொருதேசத்திலும் உயர்வுதாழ்வு ஏற்பட்டிருக்கிறதென்று சரித்திரம் படித்த நமக்கு நன்றாய்த் தெரிகிறது. எந்ததேசத்திலும் ஜனங்கள் நற்குண நற்செய்கையுடன் பாவத்திற்கு பயந்து, தர்மத்தை பரிபாலனம் செய்து. தர்ம, அர்த்த காமமோக்ஷமென்பதான நான்குவித புருஷார்த்தங்களை நன்றாயறிந்து அதற்குத்தக்கபடி நடந்துவருகிறார்களோ அவர்களுள்ளதேசம், பலவித வளப்பமும் பொருந்தி சுபிக்ஷமாய் பெருமை யடைகிறது. நமது சாஸ்திரங்களை நன்றாய் விசாரிக்கும்பொழுது மேற்கண்டபடி நான்குவித புருஷார்த்தத்தையும் தேடுவதற்கு மனைவியினுடைய பலம் இன்றி யமையாததென்று தெரிகிறது மனைவியினுடைய பலம் என்றால் யாது யென்று சற்றுவிசாரிப்போம் மனைவி யமைபவள் புருஷனுக்கு எக்காலத்திலும் உதவிபுரிந்து அவன்மனக் கொள்கையை நன்றாய் அறிந்து அதற்கு தக்கபடி நடந்து அப்படி நடப்பதால் இதரர்களும் அதைக்கொண்டாடக் கூடிய நிலைமையில் இருக்க வேண்டும்.

உதாரணமாக தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் சொல்லி யிருக்கிறபடி,

"கற்க கசடறக் கற்பவை, கற்றபின்
நிற்க அதற்குத்தக"

இத்தகைக் கல்வி கற்ற ஓர் புருஷனுக்கு அவனுடைய அருமைபெருமைகளை அறியக்கூடியவளாய் அவனுக்கு உதவிபுரிந்து அவருடன்கூட பெருத்த மனதுடன் தேச க்ஷேமத்திற்கு எவ்வித நல் வழியிலும் உதவிபுரியக்கூடிய புத்தியுள்ளவளாய் ஓர் மனைவி அமைந்தாலொழிய அவன் படும்பாடெல்லாம் குடத்திற்குள் ஏற்றிவைத்த விளக்காகும். ஒருவன் தேசாசாரங்களில் இருக்கும் குறைவை அறிந்து சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று விரும்பும்பொழுது ஒரு தேசத்தில் ஜனத்தொகையின் சமபாதியான ஸ்திரீகள் மூடர்களாக இருந்து இவன் சொல்லும் விஷயங்கள் ஒன்றும் அவள் புத்திக்குப் புலப்படாமல் போனால் இவன் பிரயாசம் முழுதும் விழலுக்கிறைத்த நீர்போலாகும்.

முற்காலத்தில் நாமிருந்த பெருமைக்கும் தற்காலத்தில் நாம் அடைந்திருக்கும் தாழ்மையான ஸ்திதிக்கும் ஒரு காரணம் நாம் நமது ஸ்திரீகளை தற்கால தேச வர்த்தமானங்களில் அவர்கள் புத்தியை காட்டவிடாமல் இருளறையில் பூட்டி வைத்திருப்பதேயாம். அன்னியராஜாங்கத்தின் கீழ் அன்னிய பாஷைகளைக்கற்று அதிலிருந்து தேர்ச்சியடைந்து ராஜாங்கத்திற்கு உதவி செய்யவும் தேசாபிமான ஊக்கத்தால் தேச நன்மைக்கு உழைத்துப் பாடுபடவேண்டுமென்று கொள்கைகொண்ட கற்றறிந்த ஆடவர்களுக்குக் கல்வியில் தேர்ச்சியடைந்த மனைவி சரியான ஊன்றுகோல் போலுவள். நமது தேசத்தில் கல்வியில் சிறந்த ஆடவர்களின் சங்கியை மிகவும் சொல்பமானதே. அதில் பெரிய யனசுள்ளவா

களாய் தந்நலம் கருதாது தேச நன்மைக்குழைக்கும் பெரியோர்கள் இப்போது கணக்கிட்டு விடலாம். இப்படி இருப்பவர்களுடைய மனைவிமார்களும் இவர்களுக்குச் சரியான உதவிபுரியக்கூடிய நிலைமையில் கற்றறிந்திருக்கிறார்களா என்று விசாரிக்குங்கால் மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கவில்லை. ஆகவே கற்றறிந்த ஆடவர்கள் தங்களுக்கு எப்பாடுபட்டாவது பெண்கள் கல்வியில் சிறப்படைந்து தங்களுக்கேற்ற மனைவிகளாய் செய்துகொள்ளவேண்டியது அவர்களுடைய கடமை. இக்கொள்கையானது ஆடவர்கள் மனம் புகுந்து அதற்குத்தக்க இடம் பொருள் ஏவலறிந்து உக்கொள்கை நிறைவேற்ற முன் வரும்பொழுதுதான் நமது இந்து தேசமானது பெருமையடைந்து சிறப்புற்றோங்குமென்பது திண்ணம்.

கல்வியிற் சிறந்த பெரியோர்கள் பிதா ஸ்தானத்திலிருந்து தமது பெண்களை ஒழுங்கான கல்வி யடையும்படி செய்தும், சகோதரர்களாக இருந்து தமது சகோதரிகளை கல்வியில் சிறக்கச்செய்யும், கணவராயிருந்து தமது மனைவியை தனக்கேற்ற மனைவியாகச் செய்யும் இம்மூவ்விதமாய் பெண்களுக்கு ஒழுங்கான பெருமை யுண்டாக்கப்பட்டால், நமது தேசம் சீர்திருத்தங்களை யடைந்து க்ஷேமத்தை யடையுமென்பதிற் சந்தேகமில்லை. நமது ஸ்திரீகளில் சிலர் கீழ்ப்பட்டவர்கள் தவிர வெகுவாய் மிகுந்த புத்திசாலிகளாகவும், எதையும் அறியக்கூடிய சக்தியுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். உலகத்தில் எல்லோரும் ஒருவித புத்தியுள்ளவர்களாகவே இருக்கவேண்டுமென்று ஒருவரும நினைக்க மாட்டார்கள். அவரவர்கள் புத்திக்குத் தக்க படிப்புக்கொடுத்து, இருளை விலக்கி ஒளியைக்காட்ட வேண்டியது நமது கடமை. நமது நிலைமையோ, நாம் நமது பெருமைப் பட பூர்விக நாகரீகத்தை இழந்து, பற்பல அரசர்களின் கீழ் பற்பல விதமாய் நடந்து மத்தியில் சில அரசர்கள் கீழ் அந்தகாரத்தில் மூழ்கி இருந்து, ஆங்கிலேயர் நமது நாட்டை கைவசப்படுத்திய பின்னர் ஏதோ சற்று நமது இருள் விலகி நமது பழைய பெருமையை நினைத்து நினைத்து ஏங்கவும் தற்காலத்தில் நமது நிலைமையை எப்படி சீர்திருத்திக் கொள்ளலாம் என்ற எண்ணம் மனதில் குடி கொள்ளவும், அத்தகைய எண்ணம் நிறைவேற உபாயங்கள் தேடவும் இவ்விதமாக இருந்துவருகிறது. ஆகவே காலதேச வர்த்தமானங்களை தெளிவாய் மனதிற்கு வாங்கி தக்கபடி ஆலோசனைகள் செய்து நமது தேச ஜனத் தொகையின் சமபாதியான பெண்பாலர்கள் சிறப்படைவதற்குள்ள வழிகளை நாம் தேடவேண்டும். அடுத்த மாதப்பத்திரிகையில் ஏதோ என் சிற்றறிவிற்கு எற்ற வண்ணம் இவைகளைப்பற்றி விரிவாய் எழுதுகிறேன்.

(இன்னும் வரும்.)

S. ஸ்ரீனிவாசய்யர்.

---



# ராமதிலகம்.

1 வால்யூம் 276-வது பக்கத் தொடர்ச்சி.

ராமா:—இவ்விரவு நல்ல சுதினம். ஆனால் இது இரவாயிருக்கிறதினாலேயும், நான் இப்பொழுது அனுபவித்ததெல்லாம் அளவுக்கு மிஞ்சினஸௌகமாயிருப்பதையும் உத்தேசிக்க இவை யெல்லாம் சொப்பனம்போல் பொய்யாய் விடுமோவென்று பயப்படுகிறேன்.

(திலகம் உயர மறுபடியும் வருதல்)

திலகம்:—ஒரே ஒரு வார்த்தை சொல்லிப்படரேன். அப்பறம் போய்விடலாம். உமது அன்பும் ஸரியான மார்க்கத்திலிருந்து, அதன் முடிவும் கல்யாணம் என்று இருந்தால் நான் அனுப்புகிற மனுஷியாளிடத்தில் எப்பொழுது எவ்விடத்தில் நீர் என்னை மணம் செய்துகொள்ளுகிறீர் என்பதை சொல்லி அனுப்பும். என் உடமை முதலிய எல்லாவற்றையும் உம் பாதார விந்தத்தில் அர்ப்பணம்செய்து என் எஜமானனுடன் தங்களோடு பிரியா நிழல்போலிருப்பேன்.

கிழவி:—(உள்ளிருந்து) குழந்தை.

திலகம்:—இதோ வந்துட்டேன்—அப்படி ஸரியான மார்க்கத்தில் அங்கீகாரம் செய்துகொள்ள இஷ்டமில்லாதபக்ஷத்தில், அய்யா இனி இங்கு வரவேண்டாம். நான் என்மட்டில் துக்கப்பட்டுக்கொண்டிருக்கிறேன். நாளை நான் ஆள் அனுப்புகிறேன்.

ராமா:—என் அன்பே அப்படியே செய்.

திலகம்:—ஆயிரந்தரமாகச் சொல்லுகிறேன். போய்வரேன். (போகுதல்)

ராமா:—நீ போய்விட்டால் எனக்கு இப்பொழுது ஆயிரம் தரத்துக்கு கஷ்டந்தான்.

காதலன் காதலியை நோக்கிச்செல்லும் போது பிள்ளைகள் பள்ளியினின்றும் வீட்டுக்குச் செல்வதுபோலிருக்கும்; அவர்கள் விட்டுப் பிரிந்துபோகும்போதோ அப்பையலர்கள் ரொம்ப விசாரப்பட்டுக்கொண்டு பள்ளிக்குப் போவது போலிருக்கும். (மெள்ளப் போகுதல்)

(திலகம் மறுபடியும் உயர வருதல்)

திலகம்:—உச்! ராமாமிர்தம். உச்! வேட்டைக்காரன் பக்ஷியைக் கூப்பிடுவதுபோல் மெள்ளக் கூப்பிடவேண்டியிருக்கு இந்தக் கட்டுப்பாட்டிலகப்பட்டிருக்கிற நான் இரைந்து பேசக்கூடாது. இந்தக் கட்டுப்பாடு இல்லாமல்போனால், ராமா, ராமா என்று அலறி இவ்வீடும் முழுவதும் ராமசப்தமாய் செய்துவிடுவேன்.

ராமா:—என்னுயிர் காதலி என்பெயரைச்சொல்லி கூப்பிடுகிறாள். கவனித்துக் கேட்கிறவர்கள் காதில் ஸங்கீதம் எவ்வளவு இனிமையாய் படுகிறதோ ராத்திரிவேளையில் காதலியின் குரல் அவ்வளவு இனிமையாயிருக்கிறது.

திலகம்:—ராமாமிர்தம் !

ராமா:—என் அருமைக் கண்மணியே.

திலகம்:—நாளைக்கு நான் எப்போ அனுப்பட்டும்.

ராமா:—விடிந்து ஜாமநாழிகைக்கு.

திலகம்:—நான் தவரமாட்டேன். அதுவரையில் போதுபோகிறது ஒரு யுகமா யிருக்குமே. உன்னை என்னத்திற்குக் கூப்பிட்டேன். மறந்துபோய் விட்டதே.

ராமா:—உனக்கு ஞாபகம் வருகிறவரையில் இங்கேயே நிற்கிறேன்.

திலகம்:—உமது இனிய முகத்தை நினைத்தால் நீர் இங்கேயே யிருக்கும் பொருட்டு அதை மறந்தே விடுவேன்.

ராமா:—நானும் வேறு வீடு, வாசல்; ஸ்மரணையின்றி இங்கேயே நின்று கொண்டிருக்கிறேன். நீயும் மறந்துபோய்க்கொண்டே யிரு.

திலகம்:—ஆச்சு இப்பொழுது விடிகிற சமயம். நீர் போகவேண்டிய தவசியமா யிருந்தாலும். நீர் போகப்படாதென்று மனம் துடிக்கிறது. எவ்விதம் விளையாட்டு ஸ்திரி ஜாதிகள் தங்கள் கையிலிருக்கும் பறவைகளைக் கொஞ்சம் பறக்கவிட்டு வேடிக்கை பார்த்து, தங்களுக்கு அவைகளின்பேரிலிருக்கிற பிரியத்தினால் அவைகளை அர்தமட்டும் கூட விடுவதில் இஷ்டமில்லாதவர்களாய் எப்படி தங்கள் கையில் கட்டி யிருக்கும் பட்டு கயிற்றினால் இழுத்துக்கொள்ளுவார்களோ அப்படி நானும் உம்முடைய விஷயத்தில் இருக்கிறேன்.

ராமா:—உன் கை விளையாட்டுப் புறவையாயிருக்க நான் என்ன பாக்கிய முள்ளவனாக விருக்கவேண்டும்.

திலகம்:—அப்படி யிருக்கிறதில் எனக்கும் இஷ்டந்தான். ஆனால் அதிக அருமையினால் உமக்குக் கெடுதலை யுண்டுபண்ணிவிடுவேன். போய் வாரும் காதல்களது அன்பு பிரியும்போது தான் அதிக இனிமையாயிருக்கும். அவ்வினிமையோடு பிரிவால் வரும் துக்கமும் கலந்திருக்கிறது. ஆதலால் விடியுமட்டும் விட்டுப் பிரியாது சும்மா போய் வருகிறேன் என்றுமட்டும் சொல்லிக்கொண்டிருந்தால் தாவளை (போகுதல்.)

ராமா:—உன் கண்ணில் நித்திரையும் மனதில் சாந்தியும் உண்டாகட்டும். ஹா ! ஹா ! அந்நித்திரையாகவும் சாந்தியாகவும் இருந்து உன் கண்ணினிலும் மனதிலும் அதிக இனிமையாய் வசியேனு? இப்பொழுது நான் சாமியார் மடத்துக்குச்செல்லுகிறேன். இப்பிரியகரமான சங்கதியை அவருக்குத் தெரிவித்து இதில் அவருடைய ஒத்தாசையைக் கோருகிறேன். (போகுதல்)

S. V. ஸ்ரீநிவாஸைய்யர், B.A.



# பார்வதி சோபனம்.

மன்மத தகனம

(1-வது வால்யம் 286-வது பக்கத்தொடர்ச்சி.)

குண்டலங்காதில் குலுங்கவே கூனிக்கொண்டு தடி ஊணிக் கொண்டு.
ஈழல் இருமல் நெஞ்சை அடைக்க இருமி எங்கிலும் துப்பிக்கொண்டு
எளிதப்பட்டவிளை அசடே எங்கே கிடந்தோன் உனக்கு வந்தான்.
காளைக்குப் புல்லு அறுக்க வேணுமந்த காமரூபிக்கி வாழ்க்கைப்பட்டால்
சோளிகையில் பிடித்துக்கொண்டு தொண்டு வேலைகள் செய்துகொண்டு
காஷாயத்தைத் தரித்துக்கொண்டு கப்பரை கையிலே ஏந்திக்கொண்டு
சேமக்கலத்தை அடித்துக்கொண்டு தெருத்தெருவாய் இரந்துகொண்டு
நாளைக்கென்ன செய்யப்போரோ மென்றறுபது நாழிகையும் குறைந்து
நாட்டிலே வேறு இடத்திலே நல்லகணவன் கிடையாதோ [கொண்டு
தாயில்லை பெற்ற தகப்பனில்லை தம்பிதமயன் ஒருவரில்லை,
பாயில்லை நல்லபடுக்கையில்லை பால் கறக்க பசுவுமில்லை.
வெங்கலமில்லை விளக்குமில்லை மங்கிலயத்துக்கு வகையுமில்லை.
தங்கம் பூட்டத்துணியுமில்லை (சர்) சங்கமுமில்லை சயனமில்லை.
இங்கிதமில்லை தரித்திரக்கடலுக்கு கங்குமில்லை கரையுமில்லை.
பங்குமில்லை ஒரு இடத்திலும் பொங்கித்தின்ன கிழலுமில்லை.
பணமுமில்லை ஒத்தைரிஷபத்தில் பூனைக்கவேறு எருதுமில்லை.
பாம்பை உடம்பில்பூணுவன் பாடிக்கொண்டே கூத்தாடுவன்.
சாம்பலை மேனியில் பூசுவன் ஜாதி எனக்கு ஏதென்பன்.
புலித்தோலை உடுத்திக்கொண்டு பூசஞ்சிக் காரியஞ்செய்து கொண்டு
ஆனைத்தோலையும் போர்த்துக்கொண்டு ஆகாதவேலையுஞ் செய்துகொண்டு
பூனைபோல இருந்துகொண்டு பூமிகளெல்லாம் நிறைந்திருப்பன்
அஸ்திமாலை தரித்துக்கொண்டு அன்புடனே பூஜை பண்ணிக் கொண்டு,
நெற்றியிலே குறுக்கிட்டுக்கொண்டு நேமத்துடனே இருந்துகொண்டு
பாதக்குறட்டிமேலேறிக் கொண்டு பாடிக்கொண்டு எங்குமாடிக்கொண்டு
காதிலே செம்புக் கடுக்கனிட்டு கையிலே மானைப்பிடித்துக்கொண்டு.
தோளிலே பையைப் போட்டுக்கொண்டு தந்தினப்பாட்டையும் பாடிக் [கொண்டு.
குருபாதம் நினைத்துக்கொண்டு குங்குமப் பொட்டையுமிட்டுக்கொண்டு.
அரஹரசிவா என்று சொல்லி தர்மபிக்ஷை எடுத்துக்கொண்டு.
இப்படி எல்லாம் திரிந்து அலைந்து இரந்து பிக்ஷை புஜித்துக்கொண்டு.
உப்புக்கும் உதவாதவன் அசடன் ஒப்பாவனோ உனக்கிணையோ.
ஒப்பில்லாத உன்கணவன் பம்பரம்போல அலைகிறவன்.
காலைத்தலையை வலித்தாக்கே கண் கரித்த மனுஷருண்டோ.

கூலி கொடுக்க காசு முன்டே கொண்ணேப்பூவைத்த முடிப்பாருண்டோ.
காலை வேளையில் தயிரும் பழயதும் தாலம்வைத்து இடுவாருண்டோ.
இப்படிப்பட்ட தரித்திரத்துக்கு எப்படி வாழ்க்கைப் படரோமென்றாய்.
பங்குமுண்டு பணமுமுண்டெனக்கு தங்கக்கட்டிகள் வேணதுண்டு,
பாக்கியமுண்டு பலமுண்டு போகபாக்யங்களும் வேணதுண்டு.
பாட்டாடைகள் வேணதுண்டு பணிப் பெண்கள் வெகு பேருமுண்டு.
உடமை வேணது பூணலாம் உடுபுடவைகள் உடுக்கலாம்.
பிடிப்பிடியாய் பணத்தையெடுத்து உடன் பிறப்புக்குக் கொடுக்கலாம்.
வேதம் வரும் சாஸ்திரம் வரும் விதம்விதமாய் வித்தைவரும்.
இந்திரஜால முதலான இஷ்டசித்திகளெனக்குவரும்.
மாய்கையெனக்கு வசமானவன் மாயைக்குநான் வசமாவதில்லை.
பத்துதரமாய் உனக்குச்சொன்னேன் பரபேசர் ஆசையைவிட்டுவிடு.
இஷ்டமான ஆசையுடனே எனக்கு மாலையை போட்டுவிடு.
தத்துப்பித்தென்று கிழவனசொல்லவே சங்கரி நாராயணியு மப்போ.
சித்தத்தையுந் திடப்படுத்தி சிவசங்கரனைமனதிலெண்ணி.
எத்தையடாவந்து பேத்துகிறாய் எங்கள் சிவன்மேலே நிந்தனையாய்.
மற்றொருவர் வந்து சொன்னக்கே வாங்கிவைப்பேன் அவாள்தலையை.
விட்டேன் வைதீகனானதினல் வயதான கிழவனென்று.
எட்டப்படாதவர் எங்களுடைய ஈசர்மகிமையைச் சொல்லவென்றால்.
சப்தரிஷிகளும் தாமறியார் சேஷசாயியுந் தானறியார்.
சற்றேனெனக்கு தெரிந்தமட்டும் சொல்லுவேன்கேளடா பேய்க்கிழவா
பட்டியேயுள்ள சிகப்புமன்று ஸ்வாமி பாலியேயுள்ள வெளுப்புமன்று
துஷ்டர்மனது கறுப்புமன்று சூரியோதயத்துக் காந்தியன்று.
கட்டையோ நெட்டையோ மட்டமோவென்று கண்டவர்கள் ஒருவருமில்லை
வெட்டவெளியாய் நிறைந்தபிரமம் விச்வம் எல்லாம்தானே ஆனவர்க்கு
பெற்றோருக்குப் பிள்ளையென்றால் வஸ்துவிலே ரெண்டுஉண்டோடா.
ஒக்கப்பிறந்த பிரப்புவென்றால் ஒன்றுதானே இரண்டாமோடா.
தாயுந்தகப்பனு மற்றுமென்ன தானேஜகத்தில் நிறைந்தவர்க்கு.
வாயும்வயிறும் இருந்தாலென்ன வாக்குக்கு அப்புறப்பட்டவர்க்கு.
கச்சை அரையில் தரித்தாலென்ன நிச்சலனாகி இருந்தாலென்ன.
கந்தைதன்னை தரித்தாலென்ன சனகவஸ்திரம் உடுத்தாலென்ன.
புலித்தோலைத் தரித்தாலென்ன பிச்சையிரந்து குடித்தாலென்ன,
சாம்பலைத்தான் பூசிக் கொண்டாலென்ன சந்தனம்பூசி மணத்தாலென்ன.

(இன்னும் வரும்)

R. S. சுப்புலக்ஷ்மி அம்மாள்.

—:*:—



# பொது வர்த்தமானங்கள்.

இந்து பெண்பிள்ளைகளுக்குப் புதிதாய் ஒரு பள்ளிக்கூடம்:—கொச்சி சமஸ்தானத்தில் ஸாண்டா குருஸ் பாதிரிமார்களில் இந்தியப் பாதிரிமார்கள் சேர்ந்து அந்தப் பட்டணத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஸ்தாபித்து, அவ்விடத்தில் இந்து பெண் பாலர்களுக்கு மலையாளம் கற்பிக்க உத்தேசித்திருக்கிறார்களாம்.

காசி நகரில் பெசண்ட் அம்மை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்து பெண்பாலர் பள்ளிக்கூடத்துக்குப் பொருள் உதவியாக நம் ராஜதானியைச்சேர்ந்த கோயம்புத்தூரில் மாரண்ண கவுண்டர் என்ற பெயருள்ள ஒரு தனிகர் ரூபா 500-கொடுத்திருக்கிறார் என்று தெரிகிறது.

பவனகர் சமஸ்தானத்தில் லாஹன்ன வகுப்பைச்சேர்ந்த ஓர் தன்னியமாது அந்த விடத்திலே லாஹன்ன வகுப்பில் பெற்றோர்களற்று திக்கில்லா திற்கும் குழந்தைகளுக்கு ஓர் சத்திரம் கட்டும்பொருட்டு ரூபா 10,000 வைத்து சென்ற மாதம் 13வ முதல் அது நடந்து வருகிறதாகவும் தெரிகிறது. தற்காலத்தில் அதிக மூலதனம் இல்லாததால் 12-பேர் வரையில்தானிருந்து வருகிறதாகவும் தெரிகிறது.

கல்கத்தா உபாத்திமார் சங்கத்தவர்கள் சரலபாலா மாதுவையும், மிஸ் அடியாவைலி மாதுவையும் இங்கிலாண்டுக்கனுப்பி உபாத்திமார்களாக கற்று வரும்படி அனுப்ப நிச்சயத்திருக்கிறார்கள். இவர்கள்பம்பாயிலிருந்து இம்மாதக் கடைசியில் புறப்படுகிறார்கள்.

ஒருபாதிரி பெண்பாலர் பள்ளிக்கூடம்.—பெண்பாலர்கள் பள்ளிக்கூடங்களுக்குப் பரீக்ஷாகர்த்தாகிய மிஸ் லின்சி மாது சிபார்சு செய்தபடியே பாலக்காட்டு முனிசிபல் கவுன்விலர்கள் அந்த டவுனில் ஒருபாதிரி பெண்பாலர் பள்ளிக்கூடமொன்று ஸ்தாபிக்க எத்தனித்திருக்கிறார்கள்.

பங்காளத்திலிருக்கும் ஸ்திரீகளின் உபாத்தியாயர் காலேஜை பெத்யூன் காலேஜியோடு சேர்த்துவிடும்படி பங்காளக் கவர்ன்மெண்டார் அனுமதி கொடுத்துவிட்டார்கள். உபாத்தியாயர் காலேஜ் நிர்வாகக் கமிட்டியார் கூட்டத்தில் பிரசிடெண்டு கவர்ன்மெண்டார் தங்களால் பிரேரேபிக்கப்பட்ட ஒவ்வொன்றையும் ஒப்புக்கொண்டார்களென்று எடுத்துக்காட்டினார். நாசிப்பூர் ராஜா அவர்கள் நன்கொடையாக வருஷம் 4-க்கு ஒவ்வொரு வருஷமும் ரூபா 300-கொடுப்பதாகவும், ஸர் ஜோர்சேந்திர மோகன்டாகோர் அவர்கள் 4-வருஷத்துக்கு; வருஷம் ஒன்றுக்கு ரூபா 1000-வீதம் நன்கொடையாகக் கொடுப்பதாகவும் வாக்களித்தார்கள். இவ்வித உதவியினாலும், பெத்யூன் காலேஜியோடு சேர்த்தமையாலும் அநேகக் கஷ்டங்கள் நிவர்த்தியானதுபற்றி இனி ஒருவிதமான இடையூறும் இல்லாமல் உபாத்தியார் காலேஜ் வேலை செய்ய தொடங்கும்.

பம்பாய் கல்விச்சங்கத்தில் சென்ற வருடம் வைத்தியத்தி L. M. S. பரீக்ஷையில் தேரியவர்களின் ஜாபிதாவில் 4-ஸ்திரீகளும் தேறி யிருக்கிறார்கள். அந்நால்வர்களில் மூவர் பார்ஸி வகுப்பைச்சேர்ந்தவர்களாயும், மற்றொருவர் மிஸ்டர் வாசுதேவராவ் நௌரோஜியினுடைய குமார்த்தியுமாம். மிஸ் நாரோஜி 1901-ம் வருஷத்தில் வில்ஸன் காலேஜில் படித்து B. A. பரீக்ஷையில் தேறி பின்பு வைத்திய பரீக்ஷைக்குப் படிக்கத் தொடங்கினார். இச்சிறுபெண் தன்னுடைய சிறு வயதில் B. A. யிலும் தேறி, மறுபடி L M S. பரீட்சையிலும் தேறியிருப்பது நம் நாட்டார்களுக்கு ஓர் கீர்த்தியேயாம். இதனால் எந்தப்படிப்பும் ஆண், பெண் இருவர்களுக்கும் கடினமல்லவென்பது தெரியவரும்.

---

சுவாமி அபேதாநந்தர் சென்னைக்கு விஜயம்செய்திருந்தகாலத்தில் ராமகிருஷ்ண பெண்பாடசாலையில் ஓர் உபன்னியாசம் செய்தார் அதில் முக்கிய மானதை இங்கு வரைகுவோம்:—

—நம் தேசத்தில் ஒரு நாஷனல் ஸ்திரீகள கலாசாலை எப்போது ஸ்தாபிக்கப்படுமோ? எப்பொழுது அப்படி ஸ்தாபிகப்படும் கலாசாலைக்கு ஓர் மாது தலைமை உபாத்தியாயர் வேலையை அடையப்போகிறார்களோ? உங்களில் யாராவது அமெரிக்கா தேசம் சென்று பாருங்கள். கற்ற ஸ்திரீகளின் ஜனத்தொகை மெத்த அதிகமாக யிருக்கிறது. அப்படி கல்விகற்ற ஸ்திரீகள் அதிகப்படப்பட தேசத்துக்கு அழகாயும், புருஷர்களுக்கு தக்க துணையாளிகளாயும், குழந்தைகளுக்கு சிறந்த தாய்களாகவும் ஆகிறார்கள். அத்தேசத்தில் இளம்பிராயத்தில் கல்லியாணமென்ற சிறையில் அடைப்படுகிறதில்லை. அவர்கள் தங்கள் இளம் பிராயம் முழுமையும் கல்வியை கற்பதிலேயே செலவிடுகிறார்கள். 35-வயது வரையில் கல்லியாணம், இல்வாழ்கை என்ற ஞாபகமே யல்லாமல ஸ்திரீகளிருந்திருப்பதை நான் அறிவேன். அதனால் அவர்களுக்கு குறைவு நேரிடுகிறதோ? இல்லை, பெருமை அதிகமாகிறது. திரேகம் வலுப்பெற்று நீடித்தகாலம் வசிக்கிறார்கள். நோய்என்பதை அவர்கள் கண்டார்களில்லை. அவ்விதம் இருந்தலல்லவோ தேசத்துக்கு பெருமையாம். அத்தேசத்தில் சிறுமிகள் வேலைசெய்யாத ஆபீஸ்கள் இல்லை. சிறுமியர்கள் உபாத்தியாயர்களா யில்லாத பள்ளிக்கூடங்களில்லை.

நாம் ஏன் அதைப்போல் இருக்கக்கூடாது. முடியாத வேலை ஒன்றுமில்லையே. புத்தி போதாதோ; இல்லை. அவர்களுக்கு மேலானவர்களா யில்லாவிருந்தாலும் அவர்களுக்கு சமானமானவர்களென்பதில் யாதொரு ஆட்சேபணையுமில்லை. இதுவிஷயம் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் யாவரும் ஒருமனதுபட்டு செய்வீர்களானால் கோரிக்கை முடிவுபெற வெகுநேரம் செல்லாது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இவ்விதம் செய்யாமலிருந்தால் அவர்கள் தாங்கள் செய்யவேண்டிய விஷயங்களை செய்ததாக கொள்ளமுடியாது. நீதி தவறி நடப்பவர்களென்றும் அவர்கள்மீது குற்றம் சாட்ட இடமுண்டாகும்.



156

## ஸ்ரீ. எம். ஓ. பார்த்தசாரதி அய்யங்காரின்நன்கொடை.

ருவல்லிக்கேணி பெண் பள்ளிக்கூடத்திற்கு ஸ்ரீ பார்த்தஸாரதி அய்யங்கார்
000 ரூபாய் நன்கொடை யளித்தவிஷயத்தை மகிழ்ச்சியுடன் குறிப்பிடு
றோம். "பெண்கல்வி அவசியம், பெண்கல்வி அவசியம்" என்றுவாயோயாமல்
க்கொண்டு தமது வீட்டு ஸ்திரிகளின் படிப்பைக்கூட கவனியாத ஜனங்
இந்நாட்டில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால் இவரைப்போல்உப
ம் செய்கிறவர்களாலேதான் ஸதிரிகளின் அபிவிருத்தி தழைக்குமே யல்லா
மேற்கூறிய வெறுஞ் சத்தக்காரர்களால் எவ்விதமான நன்மையும் ஏற்படமா
டாது. இந்த நன்கொடைக்கு ட்ரஸ்டிகளாக இவர் சில பெரிய மனிதர்களைநி
மித்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியைப் பள்ளிக்கூடத்தில் உபயோகிக்கும்
டி செய்திருக்கிறார்.

மேலும் இவர் இந்த பள்ளிக் கூடத்துப் பெண்களுக்கு சம்ஸ்கிருத பாஷை
அவசியமாக கற்பிக்கவேண்டு மென்பது தமது நன்கொடையின் ஒரு நிபந்தனை
யாக இவர் வைத்திருக்கிறார். இது மிகவும் மெச்சத்தக்குரிய செய்கையாகும். கார்கி,
மைத்ரேயி, ஸீதா முதலியபாதகண்டத்து ஸ்திரீ ரத்னங்களின் சமாசாரங்களை
நமது மாதர்கள் நேரே சமஸ்கிருதத்திறமை படைத்துவிடுவார்களானால், இதைக்கா
ட்டிலும் இந்நாட்டிற்குவேறென்ன அதிருஷ்டம் வேண்டும்? ஆனால் சிறுபெண்க
ள்கையில் நாகா எழுத்துக்கள்போதுக்க புஸ்தகங்களைக்கொடுத்து இரண்டல்லது
மூன்றுவருஷம் தொந்தரைசெய்து விட்டு, அவர்கள் வயதேறிய பிறகும் அவ்வித்
தியாபிவிருத்திசெய்து கொள்வதற்குதக்க ஏற்பாடுகள் செய்யப்படாவிட்டால்
யாதொரு பயனுமிராதென்பது சொல்லவேண்டியதில்லை.

---

### ஓர் தென்னிந்திய மாதைப்பற்றி அமெரிகா பத்திரிகையிலே பிரஸ்தாபம்.

அமெரிக ஐக்கிய மாகாணத்திலே ஓரிகான் என்பதோர் மாகாண முள்ளது.
இம்மாகாணத்தில் போர்ட்லந்து என்னும் நகரத்தில் "விமென்ஸ்ட்ரைப்யூன்"
னுமோர் மாதர்பத்திரிகை பிரசுரமாகின்றது. அப்பத்திரிகையிலே ஸப்ஜட்ஜி
சுவாமிநாதய்யரின் மனைவியார் பம்பாயிலே மாதர்சங்கத்தில் செய்த உபந்நியாச
த்தைப்பற்றிப் பிரஸ்தாபம்செய்யப்படுகின்றது. இந்தியாவிலே குழந்தை விவா
கங்களைத் தொலைத்து விடுமாறு பிரிடிஷ்கவர்ன்மெண்டார் சட்டமேற்படுத்த
வேண்டுமென்று அம்மாது விண்ணபஞ் செய்வதில் அப்பத்திரிகை அனுதாப மறி
கின்றது. மேற்கண்ட வாறு சட்டமேற்படுவதால் கவர்ன்மெண்டார்மதவிஷயங்
ல் தலையிடுகிறவென்னுங்குற்றத்துக்குஆளாகமாட்டார்களென்று அந்த அம்மை
கூறுகின்றார். ஸதிகளை இறந்து போன கணவருடன் சேர்த்து எரிப்பதாகிய
வழக்கத்தைக் கவர்ன்மெண்டார் தடைபுரிந்து விடவில்லையா? அதன் பொருட்டு
கவர்ன்மெண்டார் தலை யிட்டது அநுவசியமென்று இப்போது யாவரும் கூறுவா
ரில்லை. சாஸ்திரங்களிலே ஸதிகனத்திற்கு ஆதாரம் எம்மட்டு குறைவா
யிருக்கிறதோ அதுபோலவே தான்குழந்தை விவாகத்துக்கும் ஆதாரமில்லாம
லிருக்கிறதென்று அம்மாது கூறுவதை அப்பத்திரிகை சுட்டிக்காட்டுகிறது.

# CHAKRAVARTINI.

## A TAMIL MAGAZINE.

——:0:——

"The Indian Patriot says:—"Chakravartini," a Tamil Maga edited by Mr. Subramania Bharati, Sub-Editor of the Swadesamitran as its name indicates, a high class monthly for Hindu ladies. The contri tions are on a variety of interesting subjects, by competent men, sever whom are graduates and are written in easy flowing Tamil. The get of the Magazine leaves nothing to be desired and the annual Subscripti is fixed at the exceedingly moderate rate of two Rupees. From the ma ner in which it is being conducted, there is no doubt the "Chakravartin deserves the support of our educated Tamil speaking countrymen."

The *Hindu* says:—"CHAKRAVARTINI." As described in its title page is a Tamil monthly magazine devoted entirely to female education and to the elevation of our women in general. With this sole object in view, such subjects are chosen as tend to elucidate to our women their duties towards their husbands and superiors, their inferiors and their equals in Society. They are written in such an easy style, as any woman of ordinary ability can read and understand them. This was started some three months ago. The last two issues contain some interesting stories and ideas which are both pleasing and instructive.

The current number contains among many interesting subjects one which is well-worth reading viz, "an exemplary lady of the Punjab" written by the Editor, describing the character of an ideal Hindu wife.

## THE EDUCATIONAL REVIEW

September, 1905

CHAKRAVARTINI: A TAMIL MONTHLY EDITED BY. C. SUBRAMANIA BHARATI Rs. 2 YEARLY, OR 3 AS. PER ISSUE.

To judge by the first number which has been kindly sent to us, should think that the editor has placed a gold ideal before him and we sure that if he keeps up to the high level, the journal will be gre appreciated.

## THE "INDIAN SOCIAL REFORMER."

பம்பாயில் பிரசுரமாகும் "இந்தியன் ஸோஷல் ரிபார்மர்" சொல்லுகிற சக்ரவர்த்தினிப் பத்திரிகையின் தோற்றமானது இக்காலத்தினது நல்ல யானங்களில் ஒன்று.

——:0:✳:0:——

157
OFFICE OF THE REGISTRAR OF B... REGISTERED 22 DEC 1906 MADRAS.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
னொண்மை யுறவோங்கும் முலகு."

Vol. II. } Madras. September. 1906. { No. 2.
தொகுதி. II. } சென்னை 1906ஷு செப்டம்பர் { பகுதி. 2.

# International Congress of Women.

## மாதர்களின் மகா சங்கம்.

I.

கல்வி, அறிவு, நல்லொழுக்கம், மதநீதி, இராஜதந்திரம், பொதுஜன க்ஷேமம் ஆகிய பற்பல நல்விஷயங்களைப்பற்றிப் பலர் ஒன்றுகூடிப் பேச ற்கே சபைகளென்றும், மகா சங்கங்களென்றும் பெயராம். நாகரீகத்தேர்ச்சி றுள்ள எத்தேசத்திலும் பிரஜைகள் தங்களுக்கு நேருஞ் சுக துக்கங்களை றய் ஆராய்ந்தறிந்து, துக்கமுள்ளவைகளாகக் காண்பவைகளைத் தொலைப்ப கேற்ற வழிவகைகளைத் தேடுவதற்காகக் கால காலங்களில் இவ்வித சபை ம், மகா சங்கங்களுஞ் சேர்வதுண்டு. இவ்வாறு செய்வது புருடர்கள்மட் யன்று. தற்காலத்தில் கல்வியறிவிற் சிறந்த பலமேனாட்டு மாதர்கள்கூடப் ஷர்களைப்போலவே சபைகளும்; மகா சங்கங்களும் கூட்டி, ஆண்மக்கள் றைவேற்றும் அபார காரியங்களைபுஞ் சாதிக்கின்றனர். இதற்குத் திருஷ் ராந்தமாகச் சில தினங்களின்முன் ஜகதிலகமெனவிளங்கும் லண்டன் மாநக ல் கூடிய மாதர்களின் மகா சங்கத்தைக் கூறலாம். இச்சங்கமானது பெண் ளின் அபிவிர்த்திக்கேயன்றிப் பொதுவாய்ப் பிரபஞ்சாபி விர்த்தியின்பொருட்டு மாதர்கள் இதுவரையில் செய்துள்ள வேலைகளைவிடப் பல்லாயிரமடங்கதிகமான வேலைகளைச் செய்திருக்கிறதென்று பல வர்த்தமானப் பத்திரிகைகள் புகழ்ந்து கூறுகின்றன. ஆகவே, இச்சங்கத்தைப்பற்றிய வரலாற்றுச் சுருக்கத்தை இங் கெடுத்துக்கூறுவது நம் கடமைகளில் ஒன்றெனமதிக்கின்றோம்.

இச்சங்கத்தைப்பற்றிய விஷயங்களைக் கூறுவதன் முன் இது நடந்தே
தற்குள்ள முக்கிய காரணங்களை யறிவது அவசியமெனக் காண்கிறது. அ
ரிக்காகண்டத்திலுள்ள "நியூயார்க்" நகரில் 1848-ம் வருஷாரம்பத்தில்
றுத் தேர்ந்த சில மாதர்கள் ஒன்றுகூடி, வித்தியா விஷயங்களிலும், தொ
றுறைகளிலும் புருடர்களுக்குச் சமமான பாத்தியதையே ஸ்திரீகளுக்கு மி
வேண்டுமென்று வாதாடினர். 1855-ம் வருஷத்தில் "இங்கிலாந்து" தேசத்
பிரக்கியாதிபெற்ற மாதர்களில் மூவர் ஒன்றுசேர்ந்து, அந்நாட்டில் மண
யுள்ள மங்கையரின் ஸ்திரீ தன சொத்துவிஷமாகவிருந்த புராதன சட்ட
மாற்றும் விஷயத்தில் அல்லும் பகலும் அதேதொழிலாய் உழைத்தனர். அ
இவ்விரண்டைமட்டுமே முற்கூறிய மகா சங்கத்திற்கு மூலாதாரமாகக் கொ
ளத்தகா.

இதன்பின்னர் 1873-74-வருஷங்களில் அமெரிக்காவிலேயே விவேகிக
கிய சில மாதர்கள் ஒன்றுகூடி "மாதர்களின் மதுவிலக்குச் சங்கம்" என்
பெயருள்ள ஓர் சபையை ஸ்தாபித்து அதை வெகு விமரிசையாய் நடத்திவந்
னர். தேசத்தில் பலரும், முக்கியமாகப் புருடர்களும் திராட்சரசம் முதலிய ப
பல மதுபானங்களை மிதமற்றுக் குடித்து, அதுமூலமாகத் தமக்கேயன்றித் த
குடும்பங்களுக்கும் அபார நஷ்டங்களை விளைப்பதை யறிந்த கல்வி கேள்விகளி
சிறந்த அவ்வமெரிக்கா மாதர்களிற் சிலர் தமக்குக் கோரத்தைத்தரும் விரோதி
யாகிய மதுபானத்தை விலக்கவேண்டுமென்று இச்சபையில் தர்க்கித்து, யாவரும்
ஒரேமனதாய்த் தீர்மானித்தனர். இதன்பொருட்டு அம்மாதர்களிற் பலர் சி
சில சமயங்களில் சாராயக்கடைகளின் எதிரிலேயே ஒன்று சேர்ந்து, தம்மை
யும், தம்புருடர்களையுமே யன்றி ஜகத்திலுள்ள சகலரையுமே மதுபானமென்
னும் கோரசத்துருவின் கையினின்று விலக்கவேண்டுமென்று தேவதா பிரார்
த்தனைகள் புரிந்து, மதுபானவிலக்குப் பாக்களையுமியற்றிப் பாடிவந்தனர். இ
னுஞ் சிலர் மதுபானத்தால் விளையும் அளவற்ற கஷ்டநஷ்ட அவமானங்க
குறித்து வீதிகளில் பிரசங்கஞ் செய்துவந்தனர். வேறுபலர் குடியைச்ச
மூலமாய் விலக்கவேண்டுமென்று அரசாங்கத்தார்க்குப் பல விண்ணப்பங்
வரைந்தனுப்பினர். மதுவிலக்கு விஷயமாக நடந்த இப்பெரும் பிரயத்தினமன்று
ற்கு "மாதர்களின் மதுவிலக்கு யுத்தம்" எனும் பெயருண்டாயிற்று

அத்தேச மாதர்கள் இவ்வித பெருமுயற்சி செய்ததின் பலனாகச் சாராயக்கே
டைகளிற் பல எடுபட்டுப்போயினவாம். இப்பெரும் பிரயத்தினத்தில் தலையிட்டு
டுழைத்தோர் சாமானிய நிலையிலுள்ள மாதர்கள் மட்டுமேயன்று; தம்மைப்போ
ன்ற ஸ்திரீகள் இவ்வாறு தேச க்ஷேமாபிவிர்த்தியின் பொருட்டு படாதபாடுகளும்
பட்டு வருவதையறிந்து, தம் வீட்டில் நிம்மதியாகக் காலங்கழித்து வந்த நியாய
யாதிபதிகள், மதாசாரியர்கள் பிரபுக்கள் முதலிய மேன்மக்களின் மனைவியர்களும்
கூட வெளிக்குக்கிளம்பி, அச்சபையிற் சேர்ந்துள்ள மாதர்களுக்குப் பேருதவி
புரிந்தனர்.



இவ்வித சபைகளாலும், பிரார்த்தனைகளாலும், உபந்நியாசங்களாலும் அவ்
வாய்ச் சாஸ்வதமான நன்மை எதுமுண்டாகாதென்பதை அம்மாதர்களறி
மதுபதார்த்தங்களை விற்கும் விஷயமாகவுள்ள சட்டங்களையே சீர்திருத்து
அத்தியாவசியமென உணர்ந்தனர். ஆகவே, அவர்கள் அரசாங்கத்தில் சட்
டங்களைச் செய்யும் விஷயமாகப் புருடர்களுக்கிருப்பது போலவே மாதர்க
ய தங்களுக்கும் அதிகாரந் தரவேண்டுமென்று பகிரங்கமாய் வாதாடினர்.

மேற்கூறிய "மாதர்களின் மதுவிலக்கு யுத்த"த்தினாலுண்டான வெற்றி
ஒன்றோடு ஒழியவில்லை. இப்பெருமுயற்சியில் அவர்கள் வெற்றிவீரர்களா
போர்வீரர்களைப்போல் எதற்குஞ்சலியாது நின்று போராடியதினால் அத்தேச
தர்களுக்குள் ஒற்றுமை, தைரியம், மனோற்சாகம், பகிரங்கஸ்தானங்களில்பிரார்த்
னைகளும் உபந்நியாசங்களும் செய்வது, சங்கங்கள் கூடி சகல விஷயங்களையும்
த்தெளிய ஆலோசிப்பது, புருடருக்குச் சரியாக சபைகளில் அக்ராசனாதிபத்தி
ம் வகித்துக் காரியசாதனஞ்செய்வது முதலிய சுகுணங்களுண்டாயின. ஆகவே,
க்கண்டத்திலுள்ள ஒஹியோ சம்ஸ்தானத்தில் 1874-வருஷத்தில் "மாதர்களின்
க்கிய சங்கங்கள்" எனும் பெயரால் பல சங்கங்கள் ஏற்படலாயின. அங்கு
ச்சங்கங்கள் ஏற்பட்ட இரண்டொரு மாதங்களுக்குள்ளாகவே ஓர் நாட்டிற்கு
பின் மற்றொன்றாக இவ்வித சங்கங்களில் பலவற்றை ஏற்படுத்திக் கொண்ட
னர். அவ்வருடம் நவம்பர்மீ முடிவுக்குள்ளாக அக்கண்டத்திலுள்ள எல்லா நா
டுச் சங்கத்தாரும் ஒன்று சேர்ந்து "அமரிக்காகண்டத்து மாதர்களின் ஐக்கிய
சபை" எனும் ஓர் மகா சபையை ஸ்தாபித்து, மற்றவைகளை யெல்லாம் அதற்குக்
கிளைச்சபைகளாகச் செய்தனர்.

ஓரிடத்தில் சில மாதர்களுக்குண்டான வீராவேசம் "மதுவிலக்கு யுத்தம்"
ஏற்பட்டபோதேயே அழிவுறாமல் படிப்படியாயுயர்ந்து, நாடுமுழுவதும் வியாபித்த
டு, அதன் மூலமாய் "மாதர்களின் மகாசபைகளாக மாறினவன்றோ? அவ்வ
க்காகண்டத்துப் பெண்மணிகள் தம் நாட்டில் இவ்வித மாதர்களின் சங்கங்
ல் பலவற்றை ஏற்படுத்தியதாலேனும் திருப்தியடைந்தார்களோ? இல்லை;
ல் சில பண்டிதைகளைத் தேர்ந்தெடுத்து ந்யூஜீலண்டு, ஆஸ்டிரேலியா, ஜப்
ன், சீனு, இந்தியா, ஆப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கும், ஐரோப்பாகண்
த்திலுள்ள எல்லாத்தேசங்களுக்குமனுப்பி, அவ்வத்தேசங்களிலும் தம் சங்கங்க
ளைப்போன்ற பல சபைகளை ஸ்தாபிக்கத்தூண்டினர். அவர்களின் விடாமுயற்சி
னாலேயே இப்பொழுது இப்பிரபஞ்சத்தின் கண் நாற்பது தேசங்களில் எண்
சிறந்த மாதர்களின் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றனவாம். ஆஹா! அந்நாட்டு
மாதர்கள் திறமையே திறமை! முயற்சியே முயற்சி! அம்மாதர்களின் பெருமை
யை நாமென்னென்று வியப்போம்? ஓர் சத்விஷயத்தில் உழைக்கவேண்டுமென்
னும் உறுதியும், திட சித்தமுமுண்டாயின் ஸ்திரீகள் எவ்வித அபாரவேலைகளை
யுஞ் செய்து, காரிய சித்தியடைவார்களென்பது இதனால் ஏற்படுகிறதல்லவா?

ஓர் நல்விஷயத்தில் பிரவேசிக்கின் அது மற்றொரு நல் விஷயத்திற்கே கொண்டுவந்து விடுவது சகஜமல்லவா? அதுபோலவே மேற்கூறிய மாதர்களின் சங்கங்களைத் தேசங்கடோறும் ஸ்தாபிப்பதில் அமெரிக்காகண்டத்து மாதர்கள் காட்டிய ஊக்கம், விடாமுயற்சி, ஒற்றுமை, சாமர்த்தியம் முதலியவைகளைக்கண்டு வியந்த "எலிஸபெத் ஸ்டாண்ட்" எனும் ஓர் அமெரிக்க சீமாட்டி பிரபஞ்சத்தில் மாதர்களின் உரிமைகளைப்பற்றிப் பாடுபடுவதற்காக ஓர் மகா சங்கம் ஸ்தாபிப்பது உத்தமமென்று கருதினள். ஆகவே அச்சீமாட்டியின் செல்வாக்கினால் 1888-வருஷத்தில் "மாதர்களின் மகா சங்கம்" எனும் பொதுப் பெயரில் ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. மாதர்களின் ஒற்றுமையையும், க்ஷேமாபிவிருத்தியையும் நாடி ஏற்படுத்தப்பட்டுள்ள இம்மகா சங்கமானது உலகத்தின் எப்பாகத்திலாவது ஸ்திரீகளின் அபிவிர்த்தியை நாடி இராஜாங்க விஷயத்திலும், ஒற்றுமை விஷயத்திலும், பாஷாபிவிர்த்தி விஷயத்திலும், கல்வி, கைத்தொழில் மதபோதனை, நீதி முதலிய சகல விஷயங்களிலும் வேலைசெய்துவரும் எல்லாமாதர்களின் சங்கங்களோடும் ஒற்றுமைவகித்து, அவற்றிற்கெல்லாம் தலைமைவாய்த்திருக்கிறது. இம்மகா சங்கத்திற்குப் பிரதம கிளைச்சங்கம் அமெரிக்காவிலேயே ஏற்பட்டது. பின்பு பிரான்சு, கிரேட் பிரடன், ஜர்மனி, ஜப்பான் முதலிய பல தேசங்களிற்கூட ஏற்படுத்தப்பட்டன. இவைகளன்றி, இவ்வித சங்கங்கள் இன்னும் இதரதேசங்களிலும் ஏற்படுத்துவதற்கேற்ற சகல பிரயத்தனங்களும் தாராளமாய்ச் செய்யப்பட்டுவருகின்றன.

## II.

இப்பிரபஞ்சத்தின் கண்ணுள்ள மாதர்களின் உரிமைகளைப் பலப்படுத்தும் பொருட்டு "மாதர்களின் மகாசபை" எனும் பெயரில் ஓர்சபை 1838-வருடத்தில் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், அதற்குப் பலதேசங்களில் கிளைச்சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், முற்கூறியுள்ளோமல்லவா? இம்மகாசபையைச் சேர்ந்த பெண்மணிகளின் ஆண்டுகோளின் பேரிலேயே சில தினங்களின் முன் லண்டன் நகரிற்கூடிய மகாசங்கம் சேர்க்கப்பட்டது. இச்சங்கத்திற்கு 23-தேசங்களிலின்று பிரதிநிதிகளாகப்பல பிரக்கியாதி பெற்ற மாதர்கள் வந்திருந்தனர். பிரபஞ்சத்திலுள்ள பற்பல தேசங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மாதர்களின் சபைகள் அனைவற்றிற்கும் ஒற்றுமையுண்டாக்குவதற்கென்றே இச்சங்கம் நடந்தேறியது. முற்கூறிய மாதர்களின் மகாசபைக்கு அக்கிராசனாதிபத்தியம் வகித்துள்ள அபர்டீன் பிரபுத்தினியே இம்மகாசங்கத்திலும் அக்ராசனத்தை வகித்தனள். முதல்தினத்தன்று அச்சீமாட்டி நாநாதேசங்களினின்றும் அச்சங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டு களிக்கவந்திருந்தபெண்மணிகளின் நல்வரவைக்கோறி யழைத்து, ஓர் பெரிய உபந்நியாசஞ் செய்தனள். அவ்வுபந்நியாசத்தின் சாரத்தை இங்கு சுருக்கிக் கூறுவதும் அத்தியாவசியமே.

பிரபஞ்சத்தில் ஸ்திரீகளின் உரிமைகளைப் பாதுகாப்பதின்பொருட்டு ஏற்பட்டுள்ள பல சபையோர்களின் பெருமுயற்சியினாலேயே இச்சங்கஞ் சேர்க்கலாயிற்றென்றும், அவ்வச்சபைகளிற் சேர்ந்துள்ள மாதர்களுள் மதாசாரத்தி



லும், நடையுடைபாவனைகளிலும், வேறு பல விஷயங்களிலும் எவ்வளவோ பேதமிருக்கினும் தங்களனைவர்களுக்கும் லோகோபகாரமே பிரதானமென்றும், வித்தியாசங்களும், அபிப்பிராய பேதங்களும் தங்களுக்கவசியமன்றென்றும், அவ்வத்தேச க்ஷேமாபிவிர்த்தியின்பொருட்டு அனைவரும் ஒன்றுகூடி யொருவருக்கொருவருதவி, மாதர்களாகிய தங்களின் அபிவிர்த்தியை நாடுவதே அச்சங்கங் கூடுவதின் முக்கியோத்தேசமென்றும் அபர்டீன் பிரபுத்தினி கூறினள். சென்ற 50 வருடங்களிலிருந்து பிரபஞ்சத்தில் மாதர்கள் கல்வியிலும், நாகரீகத் தேர்ச்சியிலும் படிப்படியாயுயர்ந்து வருகிறார்களென்றும், புருஷர்களைப்போலவே ஸ்திரீகளும் தேசக்ஷேமத்தின் பொருட்டு விடாதுழைத்தாலல்லது பிரஜைகள் எவ்விஷயத்திலும் விருத்தி யடைவது அரிதென்றும், பூர்வீகமாதர்கள் தற்காலத்தவர்களைப்போல் அதிக கல்வித்தேர்ச்சி யடைந்திராததினால், அந்நோர் இவ்வுலகத்தில் மாதர்கள் செய்யவேண்டிய காரியங்களிலொன்றையும் கிரகிக்குஞ் சக்தியற்றவர்களாகி எதிலுந் தலையிடாதிருந்தனரென்றும், இப்பொழுதோ மாதர்களிற் பெரும்பாலார் கல்விகற்றிருப்பதனால் அவர்கள் ஏனோதானோவென்று நகைகளையணிந்து, ஓர் மூலையறையில் உட்கார்ந்திருப்பதகாதென்றும், புருடர்களைப்போலவே விடாமுயற்சியோடு பலவித நற்காரியங்களை நிறைவேற்றுவது அத்தியாவசியமென்றுந் தெரிந்துள்ளாரென்றும் கூறினள். இத்தனைமாதர்கள் இவ்வாறு மகாசபைகூடிப் பேசத்தொடங்குவது; மாதர்களாகிய தாங்கள் வீட்டில் செய்யவேண்டியுள்ள கிரக கிருத்தியங்களினின்று எவ்வாறு விலகலாமென்று யோசிப்பதற்கேயென்று சில பேதைகளெண்ணலாமேயொழிய அங்கு கூடிய மாதர்களுக்கது உத்தேசமன்றெனவும், பெண்பிள்ளைகளில் ஒவ்வொருவளும் தன் கிரககிருத்தியங்களைக் குற்றங் குறைவேதுமின்றி நிறைவேற்றினால்தான் இவ்வித மகாசங்கத்தின் உத்தேசத்தைப் பூரணமாய் நிறைவேற்றக் கூடுமென்றும், அவ்வாறு செய்யாத மாது இச்சபையின் உத்தேசத்திற்கு விக்கினம் விளைவிப்பவளே யென்றும் சொல்லினள். இவ்வித சபைகள் சேர்வதினால் மாதர்கள் தம் கடமைகளை நன்குணர்ந்து, அவற்றை நன்றாய் நிறைவேற்ற வாய்க்குமேயன்றி தம் முறைமைகளைக் குறித்து வீண்மனோராச்சியஞ்செய்ய நேராதென்றும், ஆண் பெண்ணாகிய இருபாலாரும் தம் குடும்பாபிவிர்த்தி, பொதுஜன க்ஷேமாபிவிர்த்தி முதலிய நற்றுறைகளிற்சிறிதுஞ் சலியாதுழைத்தால் தான் லோகம் முன்னுக்குவருமென்றும் அவள் கூறித் தன்னுபந்நியாசத்தை முடித்தனள்.

அதன்மேல் அமெரிக்காவினின்றுவந்த வீவல் எனும் பெண்மணி எழுந்து "மாதர்களின் ஐக்கியசங்கத்தை"ப்பற்றிச் சிறிது கூறி, அச்சபையில் இப்போது 12½ லட்சம்பேர் அவயவிகளாகச் சேர்ந்துள்ளாரென்றும், இவர்களில் 1½ லட்சம்பேர் புருடர்களென்றுஞ் சொல்லினள். இவ்வித மகாசபைகளைப்போன்ற பல சபைகளை ஸ்தாபிக்க முயல்வது மாதர்களாகிய தாங்கள் புருஷர்களுக்கு மீறி நடக்கவேண்டுமென்னும் கருத்துக்கொண்டல்லவென்றும்,

ஆண் பெண்ணனைவரும் ஒன்றுகூடி லோகோபகார விஷயத்தில் காரியசாதனஞ் செய்வதே தங்களுடைய உத்தேசமென்றும், ஒரேகடவுள் ஸ்திரீகளையும் புருஷர்களையும் படைத்திருப்பதால் லோகோபகார காரியங்களில் ஸ்திரீகளும் புருஷர்களுங் கலந்தே உழைக்கவேண்டுமென்பது தெய்வ நிர்ணயமென்றும் கூறினள்.

ஆங்கிலேய நாட்டின் பிரதிநிதியாக வந்த ஸிரிபென்பெர்க் பிரபுத்தினி தம் தேசத்தினாட்சியில் மாதர்களுக்கெவ்வித அற்ப அதிகாரமு மில்லையென்றும், அதனாலே பல சங்கடங்கள் நேருகின்றன வென்றும், "சமத்துவம்" எனும் இச்சபையின் முக்கியோத்தேசத்தை இனியாவதுணர்ந்து பலிஷ்டனான புருஷன் அபலையான மாதுக்களியாயஞ் செய்யா திருக்கவேண்டுமென்றும் உபந்நியாசித்தனள்.

இரண்டாந்தினத்தன்று, இச்சபையோர் அரசாங்க விஷயங்களைப்பற்றியும், சட்டதிட்ட நிர்மாணங்களைப் பற்றியும், கைத்தொழில் சம்பந்தமான சங்கதிகளைப் பற்றியும் யோசித்துப் பல தீர்மானங்கள் செய்தனர்.

மூன்றாந்தினத்தன்றோ "மாதர்களின் மகாசபை" யைப்பற்றிய சில விஷயங்களை ஆலோசனைக் கெடுத்துக்கொண்டனர். அச்சபை சம்பந்தமான வரவு செலவு கணக்குகள் படிக்கப்பட்டதோடு, பல கிளைச்சபைகளின் வருஷாந்தர ரிபோர்ட்டுகளையும் பார்வையிட்டனர். அன்றே அடுத்த வருஷத்திற்காகச் சபா நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்த பிறகு அம்மகா சபையின் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்தன.

பத்திராதிபர்.

---

## ஸதி.

(10-ம் பக்கத் தொடர்ச்சி.)

கிரகத்தினுட் சென்று தன்குமாரனைத் தேடிக்கொண்டு, கோபம் ஒரு புறமும், வருத்தம் ஒரு புறமுமாய், பாகசாலையினுள்ளே புகுந்ததும், அவ்விடத்தில் சுப்பிரமணியனைக்காண, கோபம் மேலிட்டு, "அடே, சுப்பிரமணியா! என்னடா ரஹஸ்யம் உன்தாயாருடன் பேசிக்கொண்டிருக்கிறாய். நான் உன்னை வெகுயோக்கியனென்று நினைத்திருக்க, நீ தெருவு முழுவதும் போய், 'நான்ஸதியைத்தான் மணம்புரியப்போகிறேன்' என்று தம்பட்டம் போடுகிறாயாமே! B. A. பரீக்ஷை பாஸ் செய்தவன் லக்ஷணம் நன்றாய் இருக்கிறது. இனிமேல் இந்தமாதிரி வார்த்தைகள் என் காதில் விழுந்தால் உன்னை வீட்டைவிட்டு அடித்துத் துரத்திவிடுவேன். ஜாக்கிரதையாய் இரு" என்று வார்த்தைகளை நிறுத்துமுன், சுப்பி-



ரமணியன் தாயார், கிரீசரைக்குறித்து "நீங்கள் செய்யும் காரியம் உங்களுக்குத்தான் அழகாய் இருக்கிறது. ஹரிச்சந்திரபுரத்தில் உங்கள் பிள்ளைக்குக் கலியாணம் செய்தால், நான் அவர்கள் வீட்டுக் கூட்டுவேலைக்குத்தான் யோக்கியமேயொழிய, மாமியாராய் இருப்பதற்கு அர்கமல்ல. அவ்விடத்தில் சம்பந்தம் வேண்டவேவேண்டாம். அவர்கள் எவ்வளவு ஆயிரம் ரூபாய் கொடுத்தாலுஞ் சரி, இந்தக் கலியாணம் வேண்டவே வேண்டாம். இந்தப்பணம் வந்துதான் நம் தரித்திரம் வெடியப்போகிறதோ? இந்த வரனைத்தள்ளிவிடுங்கள்' என்று முதலில் கோபமாயும் பிறகு சாந்தமாயும் உரைக்க, ஸுசீலன், தன்குமாரனினால், தன்பாரியையின் மனது மாற்றப்பட்டிருக்கிறது என்று நினைத்து, சுப்பிரமணியனைக்குறித்து 'என்னடா, நீ இவ்வளவு அயோக்கியனாய் விட்டாயா? தேக சிரமப்பட்டு சம்பாதித்த பணத்தைச் செலவழித்து உன்னை வாசிக்கவைத்தது நான்! இப்பொழுது சுகமடையவேண்டியது நீயேயொழிய நானல்ல. என்ன? இவ்வளவு அயோக்கியத்தனமா? ஏலே, நீ என்னடா செய்யலாமென்று நினைக்கிறாய்? என் சம்மதமில்லாமல் எந்தப்பயல் உனக்குப் பெண்ணை விவாகம் செய்துகொடுப்பான். தலையிருக்கும்பொழுது வாலாடுமா? உன் இஷ்டத்தை நீ நிறைவேற்றமுடியுமோ வென்று முயன்று பார்' என்று பலவிதமாய் வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, சுப்பிரமணியன் 'அண்ணா! இவ்வளவு கோபம் வேண்டாம். தாங்கள் எனக்கு எப்படிக் கட்டளையிடுகிறீர்களோ அப்படியே செய்யக் காத்திருக்கிறேன். ஸூரியகுலத்தில் பிறந்து, ராஜகுலத்திய சுகங்களையனுபவித்த ராமசந்திரன், தன் இளையதாயாரின் வார்த்தைகளை நிறைவேற்றும்பொருட்டு தன் பிரியசகியாகிய அருமை சீதையையும், தம்பி லக்ஷ்மணனையும் மாத்திரம் அழைத்துக்கொண்டு மாளிகையைவிட்டு வனம் புகுந்தனரே. இந்த அல்ப விஷயத்தையாகிலும் நான் செய்யவேண்டாமா? தாங்கள் என்னை எவ்விடத்தில் கலியாணம் செய்துகொள்ளச்சொன்னாலும், அங்கேயே செய்துகொள்ளத் தயாராயிருக்கிறேன். தாங்கள் கோபிக்கவேண்டாம். தங்கள் வார்த்தையை நான் மீறி நடக்கமாட்டேன். நான் ஒருவரிடத்திலாவது கலியாணத்தைப்பற்றிப் பேசவில்லையே. ஒருவேளை, அசடாயும் அழகற்றதாயும், இருப்பதால், மிராசுதாரின் பெண்ணை நான் விவாகம் செய்துகொள்ளப் பிரியமுடையவனா யிருக்கமாட்டேனென்கிற விஷயத்தையூகித்து, யாராவது உங்களுக்குத் தாங்கள் எனக்குச் சொல்லிய வார்த்தைகளையுரைத்தனர்களோ? ஆனாலும், தாங்கள் என்னுடைய வார்த்தைளைக் கொஞ்சம் கேட்கத் தயவுசெய்வீர்களேயாயின் ஒருவார்த்தை சொல்லுகிறேன்! 'பணமோ சம்பாதிக்கக்கூடியது. கலியாணம் செய்தபெண்ணைத் தள்ளிவிட்டு வேறேகலியாணம் செய்வது மிகவும் கொடியசங்கடம். இதை நன்றாய் யோசித்து, என்மனதிற்குப் பிரியமாய் இருக்கும் ஸதியைத் தாங்கள் எனக்கு விவாகம்செய்வித்தால், தாங்கள் என்னைப் பெற்றெடுத்து, வளர்த்து வித்தைகற்பித்து, அநேகம்விதமாய் செய்திருக்கும் உபகாரங்களைக் காட்டிலும் பெரியஉபகாரமா யிருக்கும். நம் வீட்டிற்குவரும் பெண் நம்முடன் நம் மயுன்மு

முவதும் இருக்கவேண்டியதனாலே நல்ல ரூபவதியும், குணசாலியும், படித்திருக்கின்றவளுமான ஒருபெண்ணே நம் குலத்திற்குத் தேவை. பாக்கி சமாசாரங்களை யம்மாவிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள். நான் ஏதாவது வார்த்தைகள் பேசியிருந்தாலும், தாங்கள் என்னை மன்னிக்கும்படியாய் பிரார்த்திக்கிறேன். எனக்குக் காலேஜிக்குப்போக நாழியாய்விட்டது' என்று சொல்லிவிட்டு சுப்பிரமணியன் காலேஜிற்குச் சென்றனன். பிறகு சுப்பிரமணியன் தாயார் அவன் தகப்பனுரோடு பலவிதமாய்ப்பேசி அவன் உத்தேசத்தை மாற்றமுயன்றனள். கடைசியாய் கிரீசருக்குப் புத்தியுதயமாகி 'சரி, பிள்ளையின் சௌகரியப்படிதான் செய்வோமே. பணக்காரன் வீட்டுப்பெண் நம் சொல்படி கேட்காவிட்டால் அவளை நாம் கோபித்துக்கொள்ள முடியாது. அல்லது சுப்பிரமணியனைக் கோபித்துக் கொள்ளலா மென்றாலும், நாமே பெண்ணைப்பொருக்கி யெடுத்தபடியால், அவனைக்கோபித்துக் கொள்ளமுடியாது. சரி! ஸதியையே விவாகம் செய்வித்துவிடுகிறது' என்று ஒரு நிச்சயபுத்தியை யடைந்து, சாப்பிட்டுவிட்டு, ஸசீலன் வீட்டிற்குவந்து 'ஸசீலரே! உம்முடைய பெண்ணை நம் பிள்ளைக்கு விவாகம் செய்து கொடுப்பதாக நிச்சயம்செய்ய காலமே யாரோ சிலர் நம் வீட்டிற்குவந்தனர்கள். தாங்கள் நேரில் வரக்கூடாதோ! என்ன அவ்வளவு சௌரதை. சரி! நம் வீட்டு வரையில் வந்து விட்டுவரலாம். வாருமென்று' ஸசீலனை யழைத்துக்கொண்டு தன் வீட்டிற்குச் சென்றான்.

[இன்னும்வரும்]

# HAMLET.

## ஹாம்லெட்.

——:0:0:——

(251-ம் பக்கத்தொடர்ச்சி).

முதலங்கம்.

நான்காங்களம்.

கோட்டைக் கெதிரிலுள்ள மேடை

ஹாம்லெட், ஹொரேஷியோ, மார்ஸெலஸ்—பிரவேசம்,

ஹாம்—காற்று ஊசிபோல் உடம்பில் குத்துகிறது; மிகவுங் குளிராயிருக்கிறது.

ஹொ—காற்று மிகவும் சீதளமாய்த்தானிருக்கிறது.

ஹாம்—இப்போது என்னமணி யாயிற்று?

ஹொ—இன்னும் பன்னிரண்டாக வில்லை,



மார்—அடித்தாய்விட்டது.

ஹொ—அப்படியா? என்காதிற் படவில்லை. பிசாசு வெளியில் வந்து சஞ்சரிக்கும் காலம் சமீபித்து விட்டது. [தாரையின் சத்தமும், அதிர் வெடியின் சத்தமும் கேட்கிறது] பிரபுவே, சத்தம் உண்டாவதேன்?

ஹாம்—அரசன் இன்றிரவு விழித்துக் கொண்டு களியாட்டயர்கின்றார். விருந்து நடக்கின்றது; கூத்தும் நடக்கிறது. ஒவ்வோர் குப்பிச் சாராயத்தைக் குடித்த உடனே பேரிகையை யடித்துத் தாரையையும் ஊதுகிறார்கள்.

ஹொ—இது வழக்கமா?

ஹாம்—ஆம், வாடிக்கைதான். இவ்வூரிலேயே பிறந்து வளர்ந்தவனாயினும், நான் மாத்திரம் அந்தவாடிக்கையை அனுசரிப்பதில்லை யென்கிற மரியாதை வைத்திருக்கிறேன்.

[பிசாசின் பிரவேசம்.]

ஹொ - பிரபுவே, அது வருகிறது பாரும்.

ஹாம்—தேவர் நம்மை இரக்ஷிப்பாராக! நீ நல்ல ஆத்துமாவாயிருந்தாலுஞ் சரி, கோரப்பிசாசாயிருந்தாலும் சரி, சுவர்க்கத்தின் காற்றை வீசினாலுஞ் சரி, நரகச்சண்டமாருதம் அடித்தாலுஞ் சரி, உனது எண்ணங்கள் நல்லவையாயினும் தீயவையாயினுஞ் சரி, உன்னைப்பார்த்தால் பேசவாய்போலத் தோன்றுகிறது; ஆதலின் உன்னோடு பேசுவேன். உன்னை ஹாம்லெட்டென்பேன்; அரசனென்பேன்; அப்பா வென்பேன்; டென்மார்க்கரசனென்பேன்; எனக்கு மறுமொழி சொல்; ஒன்றுந்தெரியாமல் என்னைத் தவிக்கச்செய்யாதே; உனக்குச்சவ ஆடைபோர்த்து உத்தரக்கிரியைகள் செய்திருக்க அதனையேன் களைந்துவிட்டாய்? உன்னைப் புதைத்த கல்லறையின் கனமான மேல் மூடியைத்தள்ளி நீ ஏன் வெளிவந்தாய்? ஓ செத்த பிணமே, நீ கவசம்பூண்டு சந்திரிகையில் வெளிவந்து இராக்காலத்தில் அச்சத்தை ஏன் உண்டாக்குகின்றாய்? அஞ்ஞானிகளாகிய நாங்கள் நடுநடுங்கி எண்ணுதவைகளெல்லாம் எண்ணித் தவிக்கின்றோமே. நீ இவ்வாறு வருவதற்குக் காரணமென்ன? நாங்கள் செய்யவேண்டுவதென்ன? [பிசாசு ஹாம்லெட்டுக்குக் கைச்சமிக்கை காட்டுகின்றது]

ஹொ—உம்மிடத்தில் மாத்திரம் ஏதோ சொல்ல இஷ்டப்பட்ட பாவனையாக உமக்குச் சமிக்கைசெய்கின்றது.

மார்—எவ்வளவு விநயத்தோடு உம்மைத் தொலையான இடத்திற்கு வரவேண்டுமென்று சைகை காட்டுகின்றது. நீர் அதனுடன் போதல் கூடாது.

ஹொ—தோலோ தோல் நீர் போகலாகாது.

ஹாம்—அது பேசவில்லையே; அதன்பின் செல்லுகின்றேன்.

ஹொ—வேண்டாம், பிரபுவே.

ஹாம்—அஞ்சவேண்டியதாய் என்ன இருக்கிறது? எனக்கு உயிர்திரண மாத்திரம். என் ஆத்துமா அதனைப்போலவே நித்தியமான பொருளாகையால்

அவ்வாத்துமாவிற்குத் தீங்கிழைக்கப் பிசாசால் முடியாது. மறுபடியும் சைகைகாட்டுகின்றது; அதன்பின் செல்லுகின்றேன்.

ஹொ—பிரபுவே, ஒருகால் தம்மை நடுக்கடலில் இழுத்துப் போனாலும் போகும்; கடலோரத்திலுள்ள செங்குத்தான பாறையின் உச்சியில் தம்மைக் கொண்டுபோய், அந்த கோரரூபமெடுத்து தமக்குப் பெரும்பயம் உண்டாக்கிப் புத்தியைக் கலங்கச்செய்து தம்மைப் பித்தனாக ஆக்கினாலும் ஆக்குமே! இவற்றைத் தாம் யோசித்தல்வேண்டும். தாம் மலை உச்சியில் நின்று அனேகமாயிரம் பாகம் பள்ளத்தில் ஜலமும் ஒலிக்கப் பார்த்தாலே தலைசுற்றுமே.

ஹாம்—இன்னும் கையைக்காட்டுகின்றது. [பிசாசை நோக்கி] நீபோ, நான் உன்னுடன் வருகின்றேன்.

மார்—தாங்கள் போகவேகூடாது.

ஹாம்—கைகளை விலக்குங்கள்.

ஹொ—நாங்கள் சொன்னபடி தாம் கேட்கவேண்டும்; போதல் கூடாது.

ஹாம்—என்விதி என்னைக்கூவுகின்றது. என்னுடலில் அதிகபலம் உண்டாயிருக்கின்றது. இன்னும் என்னையே அழைக்கின்றது; கையை விடுங்கள், என்னைத் தடுப்பவர்களைக் கொல்வேன். [பிசாசை நோக்கி] போ, உன்னுடன் வருகின்றேன். [ஹாம்லெட்டும் பிசாசும் போய்விடுகிறார்கள்]

ஹொ—அவர் புத்திக்குக் கலக்கம் வந்துவிட்டது போலும்.

மார்—நாமும் பின்னேசெல்வோம்; அவர் சொற்படி கேட்டல் கூடாது.

ஹொ—பின்னேவா இது எப்படித்தான் முடியுமோ?

மார்—டென்மார்க்குக்கு ஏதோ கேடுகாலம் வந்திருக்கிறது.

ஹொ—கடவுள் ஒழுங்குசெய்வார்.

மார்—ஆயினும் நாம் பின்செல்வோம்.

---

## முதல் அங்கம்.

### ஐந்தாங்களம்.

மேடையின் மற்றோர்பக்கம்.

பிசாசும்—ஹாம்லெட்டும்.

ஹாம்—என்னை எங்கு அழைத்துப் போகிறாய்? சொல்! இனிமேல் காலடி எடுத்து வைக்கமாட்டேன்.

பிசா—என்னைப்பார்.

ஹாம்—அப்படியே செய்கின்றேன்.

பிசா—கொடுந்தீயில் என்உடலைப் போடவேண்டிய காலம் அநேகமாய்ச் சமீபித்து விட்டது.

ஹாம்—ஐயோ, பாவம்.



பிசா—என்னைப்பார்த்துப் பரிதபித்தல் வேண்டாம்; நான் வெளியிடப் போகிறதைக் கவனமாய்க் கேள்.

ஹாம்—பேசு; கேட்கத்தயாராயிருக்கின்றேன்.

பிசா—அதுமட்டில் போதாது; கேட்டபிறகு பழி வாங்கற்கும் நீ தயாராயிருத்தல்வேண்டும்.

ஹாம்—பழிவாங்கற்கா?

பிசா—நான் உன்பிதாவின் பிசாசு; இரத்தபுஷ்டியாயிருந்த காலத்தில் நான் செய்த தீவினைகளைப் போக்கற்காக பகற்காலத்தில் தீயில் கிடக்கவும் இரவில் சஞ்சரிக்கவும் ஆக்ஞையாயிருக்கின்றது. எனக்கு இப்போழ்து அமைந்திருக்கும் சிறைச்சாலையின் இரகசியங்களை வெளியிடக் கூடாதென்று உத்திரவு; அப்படி இல்லாவிடின் நான் சொல்வதைக் கேட்டாயானால், உனது ஆவி துடிக்கும், உன் இரத்தம் உறைந்துபோம், உன் கண்கள் பிதுங்கிப்போம், முள்ளம்பன்றியைப்போல உனக்கு மயிர்க்கூச்சறையும். உயிரோடிருக்கிறவர்களிடத்தில் இந்த தெய்வரகசியத்தை வெளியிடல் ஆகாது. உன் பிதாவிடத்தில் உனக்குப்பிரியம் இருக்குமானால் செவிகொடுத்துக் கேள்.

ஹாம்—கடவுளே!

பிசா—அவன் செய்த வஞ்சனைக் கொலைக்குப் பிரதி கொலைவாங்கு.

ஹாம்—கொலையா!

பிசா—எந்தக் கொலையும் பாவந்தான். நான் சொல்லப்போகும் கொலை எவற்றிலும் கொடுமையானது.

ஹாம்—இப்போழ்தே எனக்கு அதைப்பற்றிச் சொல்; வாயுவேகம் மனோவேகமாய்ப் பழிவாங்கற்குப் போகின்றேன்.

பிசா—இந்த விஷயத்தில் உனக்குப் படபடப்பு உண்டாகாவிட்டால் நீ பெரும் மூடனாயிருத்தல் வேண்டும். ஹாம்லெட்டே! என் உத்தியானவனத்தில் நான் தூங்கிக்கொண்டிருந்த காலத்தில் என்னை ஒரு சர்ப்பம் தீண்டிற்று என்று ஓர் வதந்தியைப் பிறப்பித்திருக்கிறார்கள். இந்தப் பொய்யான வியாஜத்தை நாட்டிலுள்ள எல்லோரும் நம்பும்படி செய்யப்பட்டிருக்கிறார்கள். உத்தமமான பிள்ளாய், உன்தகப்பன் பிராணனைக்கவர்ந்த சர்ப்பம் அவன் கிரீடத்தை இப்போழ் தரித்திருக்கின்றது.

ஹாம்—சிற்றப்பா, நான் முன்னமேயே நினைத்தபடி யாயிற்றே!

பிசாசு—முறைகெட்ட புணர்ச்சியை இச்சித்த உன் சிற்றப்பனாகிய மிருகம் நயப்பேச்சு ஏதோ பேசிப் பொடிபோட்டு போலிக்கற்பினளாகிய என் மனைவியைத் தன் வசப்படுத்திக்கொண்டான். ஹாம்லெட், என்ன இழிவானகாரியஞ் செய்தான். அவளைத்தொட்டு நான் கலியாணஞ்செய்த காலத்தில் செய்த பிரதிக்கினையிலிருந்து கிஞ்சித்தேனும் பிறழ்ந்தறியேன். அப்படியிருந்தும், என் கால்தூசுகளுக்குச் சமானமாகாத குரூபியிடத்தில் அவ

ளுக்கு மிகுந்தகாதல் உண்டாயிருக்கின்றதே. அதுநிற்க, உதயமாகிறதுபோ லிருக்கிறது. சுருக்கமாய்ச் சொல்லிவிடுகிறேன். வழக்கம்போல் பிற்பக லில் நான் உத்தியானவனத்தில் நித்திரை போனேன்; உன் சிற்றப்பன் ஒரு வருக்குந் தெரியாமல் விஷப்பூண்டின் இரசத்தை என் காதில் ஊற்றினான். தக்ஷணமே, அது சரீரத்திலுள்ள நரம்புகளி லெல்லாம் ஓடி இரத்தத்தை முறித்துவிட்டது. இவ்வாறாக பிராணனையும் மகுடத்தையும் மனைவியை யும் ஏக காலத்தில் சகோதரன் கையால் இழந்தேன். நான் செய்த பாவங் களுக்குப் பிராயச்சித்தங்கள் உயிரோடிருக்கிற காலத்திலேயே செய்யக்கூ டாமற் போய்விட்டது. இதைச்சொல்ல என்மனம் நடுங்குகிறது. நீ என க்குப் பிள்ளையென்பது சத்தியமாயின் இந்தக் கொலையைப் பொறுத்தலா காது. டென்மார்க்கு அரசனுடைய பள்ளியறை அகம்பியாகமனத்திற்கு இடமாயிருத்தல் கூடாது. கொலைசெய்தவனைத் தண்டித்தற்கு எந்த உபா யத்தை நீ தேடினாலும், உன்தாய்க்குக் கேடு எதையும் நினைக்காதே. கடவு ளும் அவளுடைய மனச்சாக்ஷியும் அவளை வருத்தற்கு விட்டுவிடு. க்ஷேம மாயிரு. மின்மினிப்பூச்சியின் ஒளிமழுங்கி நின்றதினால் உதயகாலம் சமீபி த்து விட்டதென்று தெரிகிறது. விடைபெற்றுக் கொள்ளுகிறேன். என்னை மறக்காதே [பிசாசு போய்விடுகிறது].

ஹாம்:— [தனிமொழி] பூவுலகிலுமுள்ள தேவர்களறியச் சொல்லுகின்றேன்; என்மனம் பதைக்கின்றது; எனக்கு ஜரைவராம லிருக்கவேண்டு மென்று பிரார்த்திக்கின்றேன்; உன்னை ஞாபகத்தில் வைக்கவேண்டு மென்று சொல் லுகிறாயா? புத்தியுள்ளவரையில் உன்னை மறத்தல்இல்லை. நான் படித்த வற்றையும் கண்டவற்றையும் மறந்து உன் கட்டளை ஒன்றையே நினைப் பில் வைப்பேன். வேறு விஷயம் ஒன்றையும் புத்தியில் பிரவேசிக்க விட மாட்டேன். அடிபாவீ. அடா பாதகா! நகைத்துக் குடிகெடுக்கும் துஷ் டா, நாவில் தேனும் கையில் கத்தியுமுள்ளவனா யிருத்தலுமுண்டுபோ லிரு க்கின்றது; மற்ற ஊர்சமாச்சாரம் எப்படியோ, டென்மார்க்கில் மட்டில் அப்படித்தான் என்று தோன்றுகின்றது. [எழுதிவைத்துக் கொள்ளுகி றான்] சிற்றப்பா, உன் சமாசாரம் இப்படியா! (பிசாசு சொன்னதை மறப் பதில்லை யென்று பிரதிக்கினை செய்கிறேன்).

[உட்புறத்தில்]

மார்
ஹொ } பிரபுவே, பிரபுவே!

மார்— ஹாம்லெட் பிரபுவே.

ஹொ—கடவுள் அவரைக் காப்பாராக!

ஹாம்—ததாஸ்து.

ஹொ—ஹோ, பிரபுவே.

ஹாம்—வா, தோழா.



ஹொரேஷியோ, மார்ஸெலஸ். பிரவேசம்.

மார்—பிரபுவே, நடந்ததென்ன?

ஹொ—என்ன சமாசாரம், பிரபுவே?

ஹாம்—ஆச்சரியமா யிருந்தது.

ஹொ—அதைச்சொல்லும், பிரபுவே.

ஹாம்—நீ யாரிடத்திலாவது சொல்லிவிடுவாய்; நான் சொல்லமாட்டேன்.

ஹொ—கடவுளறியச் சொல்லுகிறேன், நான் ஒருவரிடத்திலுஞ் சொல்வதில்லை.

மார்—நானும் ஒருவனிடத்திலும் இரகசியத்தை வெளியிட மாட்டேன்.

ஹாம்—மனிதன் மனத்தாலும் அதை எண்ணியிருக்கக் கூடுமா? இரகசியமாய் வைத்துக் கொள்வீர்களா?

ஹொ
மார் } சத்தியமாய்ச் சொல்லுகிறோம், பிரபுவே.

ஹாம்—டென்மார்க்கிலுள்ள பாவிகளெல்லாம் துஷ்டர்களாம்

ஹொ—இந்த இரகசியம் சொல்லப் பிசாசும் வரவேண்டுமா?

ஹாம்—நீ சொல்வதும் சரிதான்; வீண்பேச்சு நமக்குள்வேண்டுவதில்லை; நாம் விடைபெற்றுக்கொள்வோம்; உங்களுக்கும் வேலை இருக்கும்; எனக்கும் வேலையிருக்கிறது. நான்போய்க் கடவுளை வணங்குகிறேன்.

ஹொ—தாங்கள் சமயோசிதமில்லாத பேச்சைப் பேசுகின்றீர்களே.

ஹாம்—என் சொற்கள் உன் மனத்திற்கு வருத்தமுண்டாக்கலைப்பற்றி நானும் வருந்துகின்றேன் வாஸ்தவம்.

ஹொ—பிரபுவே, எனக்கோர் வருத்தமுமில்லை.

ஹாம்—அப்படியல்ல; என் வார்த்தைகள் உனக்கு மனவருத்தத்தை உண்டாக்கி யிருத்தல்வேண்டும்; அது எனக்கு நன்றாய்த் தெரிகின்றது. வந்த பிசாசு நிஜம் பேசுகிறபிசாசே. எங்களிருவருக்கும் நடந்ததைக் கேட்கவேண்டு மென்றிருக்கிற உங்கள் ஆசையை அடக்கல்வேண்டும். நீங்கள் படித்தவர் களாயும் வீரர்களாயும் நண்பர்களாயுமிருத்தலினால் உங்களிடத்தில் ஒரு மனுப்பண்ணிக்கொள்ளுகிறேன்; அதற்கு இணங்கல் வேண்டும்.

ஹொ—மனு என்ன, பிரபுவே?

ஹாம்—இன்று நீங்கள் கண்டதை ஒருவருக்கும் தெரிவிக்கக் கூடாதென்பதே.

ஹொ—
மார்— } சத்தியமாய்ச் சொல்லுகிறோம், பிரபுவே.

பிசாசு—[கீழிருந்து] பிரமாணம் பண்ணுங்கள்.

ஹொ—பிசாசும் வந்து பேசுகின்றதே, இது என்ன அதிசயமாயிருக்கின்றது.

ஹாம்—அதிசயமாயிருந்தாலும் நாம் அதை நம்பத்தான்வேண்டும். ஹொரே ஷியோ, சாஸ்திரங்களால் கண்டறியாத காரியங்கள் எவ்வளவோ விண்ணி லும் மண்ணிலுமுண்டு. அதுநிற்க: இன்றுமுதல் என் நடவடிக்கைகள் மாறி யிருத்தலைக்காணின் நீங்களிருவரும் அதற்குக் காரணத்தை யறிந்த வர்களாக காண்பிக்கிறதில்லையென்று பிரமாணம்பண்ணுங்கள்.

பிசாசு - [கீழிருந்து] சத்தியம் செய்யுங்கள்.

ஹாம் — சும்மா இரு, பிசாசே [ஹொரேஷியோவும் மார்ஸெல்லஸூம் பிரமாணஞ் செய்கிறார்கள்] என்னை நீங்கள் பாதுகாத்தல் வேண்டும்; ஏழையாகிய நான் உங்களுக்கு எவ்வளவு கைம்மாறுசெய்தல் கூடுமோ அதைக் கடவுள் கிருபையில் செய்வேன். நாம் போவோம், வாருங்கள். வாய்திறந்து பேசாதீர்கள். சமய பேதமாயிருக்கிறது. நானல்லவோ காலத்தைச் செவ்வைப்படுத்த வேண்டியிருக்கின்றது! என்றால் முடிகிறதாக இல்லையே, என் செய்வேன்! போவோம், வாருங்கள்.

K. வெங்கடராமய்யர் B. A.,

## பேகனர் சிற்றுரை; 50-வது; சுவடி வாசிப்பதினாலாம் பயன்.

உலகத்தில் சுவடிகளை வாசிப்பவர்கள் தம் தம் உள்ளத்து மகிழ்ச்சியின் நிமித்தமும், அல்லது நாட்டினரால் புகழ்பெறவேண்டுமென்றும், அல்லது தமக்கு நேரிடும் வேலையில் திறமை உண்டாகவேண்டுமென்றும், கருதி வாசிப்பர். தம் மனமகிழ்ச்சியைக் கருதுவோர் தாம் தனியாயிருந்து இன்புறுவர், புகழ்ச்சியைக் கருதுவோர் மற்றையருடன் கலந்து சம்பாஷிப்பதிலும், சபைகளிலும், தம் கல்வியைக்காட்டிப் புகழ்பெறப் பார்ப்பர்; வேலைத்திறமையைக் கருதுவோர் தாம் செய்யும் வேலையிலும், நடத்தும் விவகாரங்களிலும் விரைவும், வேலைச்சுருக்கும் தம்மிடத்தில் ஏற்பட்டு சாமர்த்தியம் அடையப்பார்ப்பர். வேலையில் வெறும் பழக்கம்மாத்திரம் அடைந்தோர் வேலைப்பிரிவுகளை ஒவ்வொன்றாய்க் கவனித்து அதனை முடிப்பதில் சமர்த்தராயிருக்கலாம்; வேலையின் பொது நோக்கத்தைச் சிந்தையில் வாங்கி, வேலையனைத்தையும் ஒழுங்குபடுத்தி முடித்துக்கொள்ளும் திறமை, நூற்கல்வி அடைந்தார் கண்ணே மிக்க உளத்தக்கது. நூற்சுவடிகளை வாசிப்பதிலேயே மிக்க போதுபோக்கினால் உலக விவகாரங்களைப் பார்த்துக் கூசி விலகும் குற்றம்படும். தம் வாசிப்பை அதிகமாய் விஸ்தாரப்படுத்துவதினால் கல்விச்செருக்காம், நூற்சுவடிகளில் கண்டனவற்றையே பிடித்து விவரிப்பது கற்றறிமடைமையாம். இயல்பாய்த் தெரிவதும், வாசிப்பதினால் செம்மைப்படும், அதன்மேல் விவகார பழக்கமும் சேர்ந்தால் திறமை நிறைவுறும். இயல்பினால் வளரும் செடிகளை நாம் அரிந்து போவதில் எப்படி நன்மை செடிகளுக்கு உண்டாகுமோ, அப்படியே நமக்கு இயல்பாய்த் தெரியவருவதும் நூற்சுவடி வாசிப்பினால் வலிவுறும். சுவடிகளில் சொல்லப்பெறுவன பொதுத்தன்மையின வாதல்பற்றி, நேரிட்ட சந்தர்ப்பங்களுக்கு உதவாதனவா



16 ...OF BO... REGD DEC 1906 ...DRAS

லாம், எனவே விவகாரப்பழக்கமும் சேரின் அறிவின் கிளர்ச்சி நிறைக்கும் மேல் அறியாதார் சுவடி வாசிப்பை இகழ்ந்து பேசுவ... வர் சுவடிகளைப்பார்த்து வீணேவியப்பர். விவேகசாலிகள் நூற்... தம் வசப்படுத்திப் பயன்படுவர். சுவடி வாசிப்பின் தன்மையை எடுத்து... சுவடிகள் உரையிடாவாம். சுவடிகளில் கூறுவனவற்றை நம்வசப்படுத்தி உதவாதனவற்றை நீக்கி உதவுவனவற்றை எடுத்து ஆண்டு அநுபோகத்தையும் சேர்த்து நடவடிக்கை செய்யின் உயர்ந்த அறிவு பெறுவோம். பிறர்பேச்சு தலையெடுக்காது வாதத்தில் நாம் வெல்வதையே கருதியும், கண்டதை ஆராய்ச்சியின்றி நம்பவும் ஓயாமல் வாயாடிக்கொண்டிருக்கவும் எண்ணி சுவடிகளை வாசிப்பது சரியல்ல. சங்கதிகளை கவனித்துச் சிந்தனைபண்ணி உண்மை அறிவில் ஊன்றச் சுவடிகளை வாசிக்கக் கடவோம். குதப்பி உமிழ உதவும் சுவடிகள் உள; விழுங்க உதவும் சுவடிகள் உள; மென்று விழுங்கி அறிவில் பரவி ஊறத்தக்கச் சுவடிகளும் உள; அதாவது இரண்டொரு பகுதிகளைமாத்திரம் கவனிக்கவேண்டிய புத்தகங்கள் சில; முழுமையும் வாசிக்கப்பெறினும் சிந்தனைக்கு வரும்படியான தகைமையற்ற புத்தகங்கள் சில; அரிய நூற்சுவடிகளோ முடிய வாசித்து எங்கே கூறியதும் கவனிக்கத்தக்கதாய் சிந்தையில் ஆழவேண்டுவன. பிறரிடத்தில் கொடுத்து வாசிக்கச்சொல்லி அவர் குறிப்பிடும் கூற்றுகளைத் தவிர மீதியைக் கவனிக்காமல் விடவேண்டிய புத்தகங்கள் இல்லையோ? ஈனச்சுவடிகளுக்கு இவ்வழியே பிராப்தமாம். பூவின் மணத்தைத் திராவகங்களில் வடித்தால் அம்மணம் எப்படி கரைந்துவிடுகிறதோ, அப்படி நூற்களை வடிக்கச்சொல்லி வாசிப்பது திப்பி தின்பதையொக்கும்.

வாசிப்பு பரவின், அறிவும் பரவும், பலர்கூடி சம்பாஷிக்கப்பயிலின் அவ்வப்போது தக்க உரையாடும் திறமையுண்டாம். விசேஷமாய் எழுதிப் பழக்கப்படின் கசடற்ற அறிவு உண்டாம். விசேஷமாய் எழுதிப் பழக்கப்படாதவர் ஞாபக வலிவினாலேயே ஊட்டவேண்டுவர். பிறருடன் கூடியுரையாடப் பழகாதார் அறிவு அமைந்த பேச்சுடனே விடத்திறமை ஏற்கனவே உள்ளனவாகக் கடவர்; சுவடி வாசிப்பு மிக்க அடையாதார் அறிவுடையோராய்த் தோன்ற கஷ்டப்படவேண்டுவராவர்.

இதிகாசச்சுவடி வாசிப்போர் நடவடிக்கையில் விவேகம் பெறுவர், செய்யுளின் உழன்றவர் சாதுரியமாகப் பேசுவர், கணித நூல் பயின்றவர் நுண்ணறிவு பெறுவர், பௌதிகநூல் கற்றவர் அறிவு ஆழ்முறும், நன்னெறிப்பாடம் பெற்றவர் கம்பீரவொழுக்கம் அடைவர், தர்க்கவலங்கார நூற்களை கற்பதினால் வாக்குவாதத்தில் தேறலாம்.

பந்தாடுவதினால் இடுப்புக்கு வலிவும், துப்பாக்கிச்சுடுதல் வேட்டையாடுதல் இவற்றினால் மார்புக்கு வலிவும், மெல்ல நடப்பதினால் உடலுக்குள் இரைப்பைக்கு ஒழுங்கும், குதிரைச்சவாரியினால் மண்டைக்கு வலிவும் உண்டாம், இப்படிக்கெல்லாம் உடலில் உறுப்புக்களுக்கு தக்க அப்பியாசங்களால் அவ்வப்

-[கீழிருந்து] சந்தியம்
சும்மா இரு, பிசாசே [
கிறார்கள்] என்னை
நக்கு எவ்வளவு
செய்வேன்.

[illegible] அடைந்து எப்படி ஒழுங்கு படுகின்றனவோ, அப்படியே, அறி[illegible]ழுதுகளைப் போக்கடிக்கும் முறைகளும் உண்டு. ஒருவர் அறிவு, [illegible]ரியுமாயின், அவர் கணிதநூல் படிக்க அறிவுதிரிவது ஒழியும்; ஏனெ[illegible]ல் கணிதநூல் படிப்பதில் ரவைவரையில் பிசகுபார்த்துக் கவனிக்காமல் விட்டாலும் அடியைப்பிடித்துத் திரும்பவும் கவனிக்கவேண்டும். சந்ததிக்கும் உள்ள வித்தியாசங்கள் புலப்படாதவராயின், கடுதினைப் பிளக்கும் வாதநூற் சுவடிகளைப் படிப்பதினால் அறிவு கூர்மையுறும். விவகார மொத்தத்தைப்-பிடித்துப் பலவழிகளில் உதகரித்து மெய்ப்பிக்கும் திறமையிலராயின், நியாய சபையினின்று வெளிப்படும் விவகாரச்சுவடிகளைப் படிக்க கட்சிபேசும் திறமைஉண்டாம். இப்படி அறிவில் நேரிடும் குறைகளைத் தீர்த்துக்கொள்ளும் வழிகள் பல உள.

இதனைப் படிக்கும் பெண்பாலர்க்கு தமிழ் படுத்தியவர் தெரிவித்துக் கொள்வதாவது:—அறிவென்பது நேர அவரவர் விஷயங்களைக் கவனிப்பதினால் முக்கியமாய் உண்டாகவேண்டிய புலமையாம். அப்படிக்கன்றிச் சுவடி வாசிப்பதினால் உண்டாம் அறிவு இரண்டாம்தரமாம். ஆயினும் எல்லாரும் எண்ணும் எழுத்தும் எம்மட்டும் கற்றிருப்பதில் எவ்வளவோ பிரயோசனமுண்டு. ஒழிந்த வேளைகளில் சுவடிகளை வாசித்து மகிழ்ச்சியுடன் போது போக்கலாம், சூதாட்ட விநோதங்களைத் தேடிச் சீரழியவேண்டாம்; ஊரில் நடைபெறும் வர்த்தமான பத்திரிகைகளைப் படிக்கலாம், வெளியூர்களுக்கு சமாசாரம் எழுதியனுப்பலாம், வீட்டுக்கணக்குகுடவடிக்கைகளை மறவாதபடிஎழுதிவைக்கலாம். கொடுக்கல்வாங்கல்பத்திரங்களில் சேருகிற சங்கதிகளை மனதில் உட்கொண்டு பாதகசாதகங்களை யறிந்து வழிப்படலாம். முற்காலங்களிலும் இக்காலத்திலும் வேறு இடங்களிலும் அறிவில் சிறந்தோர் நுண்ணறிவுடன் சுவைப்பட எழுதிய நூற்சுவடிகளை வாசிப்பதனால் அவர்களிடத்தில் நேரப்பாடம் கேட்டு அறிவுமுதிரும்; இலாபம் அடைகிறோம். சுவடி வாசிப்பும் தகைமையாம்.

T. R. ராமநாதய்யர், B. A.



DEC 1906 MADRAS

## பெண்களும், தொழின் முயற்சி

இம்மதி 17-ந்தேதி "சுதேசமித்திரன்" பத்திரிகையின் தலையங்க[illegible]திய ஸ்திரீகள் செல்வம் சம்பாதித்தல் இயலுமா?" வென மகுடம் புனைந்து வெளியிடுத்த வியாசத்தையும், அன்று வெளிவந்த "பொது வர்த்தமானக் குறிப்பில்" "பூர்வத்தினின்று இந்தியஸ்திரீகள் இன்னின்ன தொழிற் செய்து இன்னின்னவிதமாய் செலவுசெய்தனரென்றும், இப்போது அத்தொழில்கள் இன்னின்ன விதமாயிருக்கின்றனவென்றும் நிருபநேயர்கள் எவரேனும் எழுதுவரேல் கிராமங்கட்டோறும்பரவும் போலி நாகரீகம் குறையவும், இன்னின்ன புதுத் தொழில்கள் இந்தியஸ்திரீகள் இப்போது செய்யத்தகுமென மற்ற நிருபர்கள் குறிப்பிக்கவுங்கூடும்" மென்று குறிப்பிட்டுள்ளதைப் பலரும் படித்திருப்பார்களென்றே நம்புகிறேன். பூர்வீகப் பெண்களின் தொழின் முயற்சி அவ்வளவையும் கண்டறிந்து எவர்க்கும் எத்தகையை சந்தேக விபரீதமின்றி எழுதிவெளியிடுதல் எளிதல்ல; எனினும், அவர்களுக்குத் தொழின் முயற்சி இக்காலத்திற் கேற்றபடி அவசியமென்பதை மட்டும் ஒருவாறு குறிப்பிடுதல் போதுமென்று நினைக்கின்றேன். நாமோ விவசாயம் செய்யும் ஜாதியார். இக்காலத்தும் பெண்கள் அத்தொழிலிற் பிரவர்த்தித்து வருகின்றனர்.

ஆயினமையின், அத்தொழிலிற்றானே இருபாலாரும் அறியவேண்டியவை அநேக முள. கிருஷி சாஸ்திரத்திற்கு அத்தியாவசியமான பூமிசாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், வான சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களை அரிவையர் முதல் யாவரும் அறிதல் மிக்க அவசியமே யாகும். விவசாயப் பெண்கள் மாடாடுகள், காடை, கௌதாரிகள் முதலிய ஜந்துக்கள் வைத்து வளர்த்தல், அவற்றின் முட்டைகளைப் பிற விடங்களுக்கு அனுப்புதல், அவற்றின் எச்சங்களை எருவாக்கல், கொம்பு, தோல், இறகு அவைகளால் விவிதவேலை செய்தல், பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலியவைகளை விசேஷமாய் விருத்திசெய்தல், அவைகளை விற்றல், பாற்கட்டி, மொரப்பா, ஊறுகாய் முதலியவைகளை அன்னிய நாட்டிற்கு அனுப்புதல், கழனிகளில் களை யெடுத்தல், நல்ல விதைகளைத் தெரிந்து கொள்ளல், விதை விதைத்தல், நாற்று நடுதல், வாணிபத்திற் கென்று பலவிதமாய்ப் பயிரிடுதல், அவைகளை விற்றல், பழ விருக்ஷங்களை வைத்தல், பழங்கள் கெடாது பக்குவஞ்செய்து அன்னிய நாட்டிற் கனுப்புதல், வாழை முதலிய செடிகளினின்று நாரெடுத்தல், கயிறு திரித்தல், புருஷர்கள் மேஜோடுகள், பாய்கள், வஸ்திரங்கள் முதலியவைகளைச் செய்தல், விதவிதமான விதைகளின்று எண்ணெயெடுத்தல், அவற்றின் பிண்ணாக்கினின்று சோப்புகள் செய்தல், உழவர்க் கேற்ற உரங்களை சேகரஞ்செய்து விற்றல், ஆங்காங்கு எருச்சாலைகளை ஏற்படுத்தல் முதலிய பல தொழில்களையும் பெண்கள் செய்யலாமன்றோ? இந்நாட்டிற் கிருஷித்தொழிற்கு இரண்டாவதாய்ப்பிரகாசிக்கும்நெய்தற்றொழிலிலும் பெண்கள் செய்யும் பணிகள் பலவுள. இக்காலத்திலும் அநேக பெண்கள் அத்தொழிலில் பிரவர்த்தித்து

[கீழிருந்து] சத்திய
ம்மா இரு, பிசாசே
கிறார்கள்] என்னை
ருக்கு எவ்வளவு

அடைத்திரையைப் பஞ்சாக்குதல், நூல் நூற்றல், தரிகள்வைத்து ழுதுகலைச்சாலைகளில் விதவிதமான வர்ணத் துணிகள் செய்தல், ரியும், அன்னிய நாடுகளுக்கு அனுப்புதல் முதலிய தற்கால நாகரீகத்திற்கேற்றபடி பற்பல தொழில்களை செய்து வனிதைகள் வறுமையின்றி வாழ்வதில் தோஷமென்னை? இத்தியாதிகளை விரிக்கிற் பெருகுமென விடுகின்றேன். எப்படியும் பெண்களைப் பல வழிகளிலும் முற்படுத்த வேண்டுமென விரதம் பூண்டிருக்கும் கிருப சகோதரர்கள் இன்னுமுள்ள தொழின் முயற்சிகளை நன்கு விவகரித்து எழுதுவார்களென்றே நம்புகின்றேன்.

பெண்களை ஒருபுறம் அஞ்ஞான விருளில் ஆழ்த்தி ஒதுக்கி விட்டு, அவர்கள் பெற்றெடுத்த அறிவற்ற பிள்ளைகட்குத் தொழிற் கல்வி வேண்டுமென்று வாளா வாயில் மட்டும் வழங்குவதில் வருவதொன்றில்லை. ஆடவர் அபிப்பிராயங்களைப் பெண்களும் பின்பற்ற வேண்டும். பெண்கள் பலரும் தத்தம் பர்த்தாக்களின் தொழின் மர்மங்களை ஒருவாறு கற்றறிந்து உற்ற உதவியாக விருப்பின், இந்நாட்டில தொழிற் கல்வியும், பொதுக்ஷேமமும் என் விருத்தியாகாது? இதுகாறும் பெண்களைத் தங்கள் அடிமைகளைப் போலாண்டுவந்த ஆடவர்களில் அநேகர் இதைச் சிறிது சினந்து ஆக்ஷேபியாது இலகுவில் இணங்கிவிடுவரென்று எம்போன்றவர்கள் அப்போது எண்ணுவதிற்கில்லை; நாமகளின்குலத்திலுதித்த நங்கையரே! உங்கட்கு நாணமில்லையா? வித்தையும் புத்தியும் சக்தியும் உங்கட்கே உரியவை யென்று உரைத்து ஆடவர் வணங்கி வருவதை உணருங்கள். இன்னும் எவ்வளவுகாலம் ஆட்வர்க்கு அடிமைத் தொழில்செய்து அஞ்ஞான விருளில் ஆழ்ந்திருக்கப் போகின்றீர்கள்? கற்க முயலுவீர்களாயின், உங்கட்கும் நல்லறிவு நாடோறும் உதிக்குமென்று நன்குணர்வீர்கள். ஒரு சமயம் குடும்பத்தினர் வாழ்விழந்து வறுமையடைந்து உங்கள் அருமை மக்களும் சுற்றமும் ஒக்கவருந்தும்போது, நீங்கள் கற்ற கல்வியால் உத்தியோகங்களி லமர்ந்தாயினும், உபாத்திமை முதலிய விவித வியாபாரத்தொழின் முயற்சி செய்தாயினும் வறுமையை வெறுமையாக்க முயலலாமன்றோ? 'ஆத்மராம்சாகூன்"என்பவர் பம்பாயில் பிரபல புத்தக வர்த்தகராயிருந்தவர் இவர்சரசமாய்ப் புத்தகங்களை விற்பதால், அனைவரும் அவரிடமே அன்போடுபுத்தகங்களை வாங்கி வந்தனர். இவர் சில காலத்திற்கு முன்னர் தேகவியோகமாயினர்; இவர்மனைவி இராமாபாயம்மாள் கல்விகற்றிருந்தமையால், பர்த்தாபரலோகம்போன அன்றே அக்கடையை அடைத்து உள்ளதையுந்தொலைத்து உட்கார்ந்திராமல், புருஷன்செய்துவந்த புத்தகவியாபாரத்தில் விசேஷ ஞானமுடையவராய் அவ்வர்த்தகத்தைத் தானுந்தளராது நடத்தினதாய்ப் பத்திரிகைகளிற் படித்துளேன். இவ்வரிய குணம் இவ்வம்மைக்கு எப்படி உண்டாயிற்று? கல்வியே காரணமன்றோ? ஆகையால் ஆடவர்கள் நன்காலோசித்துத் தாங்கள் உயிருடன் இருக்கும் போதே தங்கள் நாயகிகளுக்கு நல்வழியைத் தேடி வைத்தல்வேண்டும் பகுத்தறிவில்லாப் பெண்களுக்குப் பணம் வைத்துப்போயின், அது பற்பல கெடுதிகளுக்கே ஆஸ்பதமாகும். பணத்தை நல்வழியிற்செலவு செய்து மேன்மேலும் விருத்திசெய்துகொள்ளும் விவேகத்திறமையும் வேண்டுமன்றோ? படிப்



STRAR OF BO
DEC 1906
DRAS

பின்றிப் பெண்களுக்கு விவேகத்திறமை எப்படி உதிக்கு வில்லை. அறையிலிருக்கும் அரிவையரை அம்பலத்தி அவமானமின்றிப் பற்பல அலுவல்களில் அமர்ந்து, குடும்ப பொதுக்ஷேமத்தையும் காக்கவேண்டுமென்னும் கருத்தாய் என்பேரில் அருவருப்புக்கொள்ளும் ஆடவர்உளராயின், அன் பது உத்தமமென்று உரைக்கின்றேன். கணவர் முன்னிலையிற்றானே விகள் வறுமையால் எண்சாணுடம்பு ஒரு சாணாய்க்குறுகி வேறொருவர் வீட்டிற்குப் போய் வாசற்பெருக்கி வயிறுவளர்ப்பதும், சாணியெடுப்பதும், குப்பை கூளமரிப்பதும், நெல்குத்துவதும், தோசை சுடுவதும் ஊரைச்சுற்றி விற்று வருவதும், ஒருவருக்கு சமையற்காரியாயிருந்து சஞ்சலப்படுவதும், கூலி வேலை செய்யக் கண்டவிடத்திற்கு ஓடுவதும், வசைச் சொல்லேற்பதும், அவமானத்திற்கும் அபவாதத்திற்கும் ஆட்படுவதும், பின்னும் பற்பல ஹீனத்தொழில் செய்வதினும் கைத்தொழிற்கல்வி கற்றுக் கணவன் அநுமதியின் பேரில் வீட்டிற்றானே கௌரவமாய் அவரவர்கள் குலசாம்பிரதாயத்திற்கடுத்த தொழிலை செய்து வருவதில் ஒன்றும் அவமான மில்லை யென்பேன்.

விவேகமுள்ள பெண்கள் செய்யுந் தொழில்களால் அவர்களைப் பெற்றோர்க்கும், உற்றோர்க்கும் பேரும், பெருமையுமேயன்றிக் குறைவொன்று மில்லை. இந்நாட்டின் பெரிய குடும்பங்களின் தலைவிகளுக்கு அவரவர்கள் அந்தஸ்துக்கேற்றபடிப்பற்பல வேலைகளும், அவர்கட்கு சகாயமாய்ப் பலவேறு வேலைக்காரர்களுமிருப்பார். இத்தகைய குடும்பத் தலைவிகள் வாசித்தறியாதவராய், வித்தையும் புத்தியும் விவித ஞானமும் அற்றவரா யிருப்பின், அவர்களால் என்னென்ன காரியம் நிறைவேறக்கூடும்? குருடர்க்கு குருடர் வழிகாட்டவும், செவிடர்க்குச் செவிடர் சங்கீதம் செப்பவும் முடியாதது போல, இச்செல்வச் சீமாட்டிகளும் தங்கள் குடும்பத்திலுள்ளார்க்கு அநேகமாய் உதவிசெய்ய முடியாமலிருக்கின்றனர். அமெரிக்கிய ஐக்கிய நாட்டுப் பெண்கள் கல்விக்கும் கைத்தொழிற்கும், வீட்டுவேலைப்பாங்கிற்கும் இந்நாட்டு நங்கையர் நாணமுறல் வேண்டும். அந்நாட்டுப்பெண்களுள் அநேகர் கிரந்தகர்த்தர்களாகவும், கவித்துவஞ் செய்பவர்களாகவும், பத்திரிகாப்பிரகடனிகளாகவும், அச்சடிப்பவர்களாகவும், அச்சுகோப்பவர்களாகவும் அச்சாபீஸில் விவித வேலை செய்பவர்களாகவும், போதகர்களாகவும், பிரசங்கிகளாகவும், நியாய ஸ்தலங்களில் வாதிக்கும் வக்கீல்களாகவும் விளங்குகின்றனர். இம்மட்டோ, அநேக பெண்கள் கருமாரத்தொழிலினும், புத்தகங்கள் கட்டுவதினும், விகிதத் தொழிலினும், நாநாவிதவர்ணத்தொழில்செய்வதினும், செதுக்குச்சித்திரத்தொழிலினும், ஓவிய மெழுதுவதிலும், ஒளிச்சித்திரமெடுப்பதினும், வைத்தியத்தொழிலினும், மருத்துவத்தொழிலினும், நாநாவித உடுப்புதைப்பதினும், விவிதவியாபாரஞ்செய்வதினும், உபாத்தித்தொழிலினும், பலவேறு உத்தியோகஞ் செய்வதினும் ஒப்புயர்வற்று விளங்குகின்றனர். ஆங்கிலேயர் நாட்டு அரிவையர்களைப்போலவே பாரதகண்டப் பெண்களும் பெண்களே யல்லவா? அவர்கள் எண்ணிறந்த தொழில்களை ஆதாரம் பற்றியதுபோல், இர்

[கீழிருந்து] சந்திய...
சும்மா இரு, பிசாசே [...
ய்கிறார்கள்] என்னை
ருக்கு எவ்வளவு ...

அவை இத் தொழிலே ஆவாரம் பற்றியிருக்கின்றனர்? இந்நாட்டுப் ... ழுதுகளு ... ண்வாளர் மக்கள் சகோதரர் முதலியோரின் இஷ்டானு ... ரவர்கள் ஜாதியிற்செய்யும் தொழிலுக்குதவியாய்ப் பெண் ... ளியினும் தனித்தனி அல்லது சிலர் ஒன்று கூடி ஒரு தொழி ... ஜீவிப்பின், இந்நாட்டிற் செல்வம் செழித்தோங்குமன்றோ?

அலமேல் மங்கையம்மாள்.

சுதேசமித்திரன்.

## பெண்மணிகளின் பரிதாபகரமான ஏலம்.

(279-வது பக்கத்தொடர்ச்சி).

இவ்விதமாகப்பிறந்த வீட்டில் கஷ்டத்தை யனுபவித்துக்கொண்டிருந்த பெண்மணியானவள், தாய் தந்தையர்களுடைய பேராசையால் ஆயுள்பரியந்தம் புகுந்தவீட்டிலும் தீராத கஷ்டத்தையும் யனுபவிக்கும்படியாக நேரிடுகிறது. கையிலிருந்த பணத்தை யெல்லாம் ஜாடாவுக்கும் கொட்டிக்கொடுத்து ஆடு மாடு வாங்குவதுபோல மேற்படி பெண்ணை விலைக்குவாங்கிய புருஷனும், இவளைக் காணும்போதெல்லாம் சீறிவிழுந்து, வாயில்வந்தபடி திட்டி சில சமயம் விவேக மில்லாமல் கைகொண்டமட்டும் அடிக்கவும் அடிக்கிறான். இவ்வித துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் சில பெண்மணிகள் ஆறு குளங்களில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்வதுமுண்டு. சில மதியற்ற பெண்கள் கெட்டசகவாசத்தால், கொண்ட புருஷனை வெறுத்து, அன்னியபுருஷனைத்தேடிக் கடைசியாய் அவர்களாலும் கைவிடப்பட்டு திரிசங்கு சொர்க்கமாய் அந்தரத்தில் நின்று பல வியாதிகளுக்குட்பட்டு தரித்திரதெசையை யடைந்து, கண்டோர்கழ இகத்திலும் சுகமில்லாமல், பரத்திலும் கதியில்லாமல், புகுந்த குலத்திற்கும், பிறந்த குலத்திற்கும் மாறாதவசையை யுண்டுபண்ணிவைத்துவிட நேரிடுகின்றது. இவ்வளவுக்குங் காரணம் இந்தப்பாழும் கன்னியாசுல்க்கமல்லவா?

இது நிற்க, அநேக மானமுள்ள குடும்பங்களை அதோகெதியாக்கி பெருங் கடனுடன் முழுகச்செய்து பெண் கொண்டவர்கள் பெண் கொடுத்தவர்கள் இவ்விரு குடும்பத்தார்கள் பெருத்த மனவருத்தத்தை யுண்டுபண்ணி விவாகம் செய்து கொடுக்கப்படும் பெண்களுக்கு அளவற்ற சங்கடங்களையுண்டுபண்ணி வரும் "வரசுல்க்கம்" அதாவது மாப்பிள்ளைகளுக்குப் பணம் கொடுத்தல் (எதிர்ஜாமீன்) என்ற துர்வழக்கத்தினால் ஏற்படும் விபரீதங்களைச் சற்று கவனிப்போம். மாப்பிள்ளைகளுக்குப் பணத்தையும்கொடுத்து பெண்ணையும் கொடுக்கிறது என்ற துர்வழக்க மேற்பட்ட பிறகு; நடக்கும் "விவாக"ங்களெல்லாம், "விவாத"மாய் முடிகிறதே யொழிய இருகட்சிக்காரர்களும் திருப்திகரமாய் முடிவதே யில்லை. அதுவிஷயமாய் நமக்குத் தெரிந்தமட்டில் ஓர் உபமானம் சொல்லு



REGISTRAR OF BO... REGISTERED 2 DEC 1908 MADRAS

வோம்:—கல்வி யிலாகாவில் கூடியவரையில் கௌ... விருக்கும் தஞ்சைஜில்லா வாஸி ஒருவருக்கு, 16வயது... 10வயதில் ஒரு பெண்பிள்ளையும் உண்டு. இவர் தம... விவாகஞ்செய்வதா யுத்தேசித்து, தன்னுடைய அந்தஸ்... ளில் வரன் விசாரித்ததில் ரூபாய் ஏறக்குறைய நாலாயிரம் ... செலவுபட ஆகுமென்று அந்த வருஷத்தில் பெண்ணின் விவாகத்... விட்டார். அதேவருஷத்தில் அவருடைய பிள்ளைக்குப் பெண்கொடுப்பதாய் அநேகர் வந்து கேட்டார்கள். அவர்களில் பலருக்கு, இப்பொழுது என்ன அவஸரம் அடுத்தவருஷம் ஆகட்டுமென்றும், தன்னுடைய பெண்ணுக்குக் கல்யாணமானபிறகுதான் பையனுக்கு விவாகம் செய்யவேண்டுமென்றும் சாக்குப் போக்குகள் சொல்லிக் கழித்துவிட்டார். கடைசியாக ஓர் மிராசுதார் தன்னுடைய பெண்ணைக்கொடுப்பதாக வந்து பல சிபார்சுக்கடிதங்களைக் கொண்டுவந்து பையனுடைய ஜாதகத்தைக் கொடுக்கும்படி கேட்டதில் வெங்குஸாமி ஐய்யரென்ற பெண்வீட்டுக்காரருக்கும் கோபாலஸாமி அய்யரென்ற பிள்ளைவீட்டுக்காரருக்கும் நடந்த சம்பாஷணையை நமது பத்திரிகா நேயர்கள் தெரிந்துகொள்ளவேண்டியது அத்தியாவசியமாகையால், அங்கு நடந்தபடியே ஒன்றையுமொளிக்காமல் உங்களுக்குத் தெரிவித்துவிடுகிறேன். சற்று தயவு செய்து பொறுமையுடன் கவனிக்கவேணுமாய்க் கோருகிறேன்:—

வெங்குஸாமி ஐய்யர்:—எங்கள் பெரியவாள் நாளிலே, நமது இருகுடும்பத்தார்களுக்கும் எவ்வளவோ சம்மந்தங்கள், போக்குவரத்து, விசுவாஸம், நல்ல நாள் பெரியநாள், இப்படி யெல்லா மிருந்ததாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். தங்கள் நாளிலேதான் தாங்கள் ஒன்றையுங் கவனிப்பதில்லை. வரவர ஆங்கிலேய நாகரீகம் அதிகரிக்கவே பந்துக்களைக்கூட மறந்துபோய் விட்டீர்கள். அப்படி யிருக்கலாமோ?

கோபாலஸாமி அய்யர்—என்ன, இப்படிச் சொல்லுகிறீர்களே! எனக்கு ஒருநாளும் அந்த எண்ணங்கிடையாது; நீங்கள் வேண்டுமானால் ஆலெட்சியஞ்செய்து போட்டீர்கள். தங்கள் பெரிய குட்டியைப் போன வருஷத்திலே, சிதம்பரத்திலே கொடுத்தீர்களே. அப்பொழுது ஒரு காலணா கார்டு தங்களுக்கு அருமையாய்ப் போய்விட்டது. மாமா கிருஷ்ணையருக்குக்கூட கல்யாணபத்திரிகை வந்தது. போஸ்டுபியூன் கொண்டுவந்து கொடுக்கும்போது நான் கூடத்தானிருந்தேன். பத்திரிகையையும் படித்துப்பார்த்தேன். எனக்கும் வந்திருக்குமென்று தான் எண்ணிக் கொண்டிருந்தேன். என்னமோ உங்களுக்கிஷ்டமில்லை.

வெ—ஆரு? பத்திரிகையா? நானா போடவில்லை? தாங்கள் வரத் தவறிப் போய் விட்டதாய்ச் சொல்லக்கூடாதோ? ஒருக்காலத்திலே தவறுவேனா? எங்கேயோ மூன்றுந்தலைமுறையில் அத்தானம் மாஞ்சியாம், சாத்தூரிலே நைட்ஸ்கூல் மாஸ்டராயிருக்கிறானே, ராமு, அவனுக்குக்கூடப் பத்திரிகை யனுப்பியிருக்கிறேன். எங்கள் பாட்டிக்கு ஸாட்சாத் ஒன்றுவிட்ட அம்மாஞ்சிக்கு சிறிய

—[கீழிருந்து] சத்தியம் ...

சும்மா இரு, பிசாசே [ ... அவை இ ... ]னை நீங்கள் அப்படியிருக்க, உங்களுக்கா நான் பத்திரி ...ருர்கள்] என்னை ... அப்படி நினையாதீர்கள். பத்திரிகை வந்திருக்கும்; ...ருக்கு எவ்வளவு ... ழுதுக ... ல்லே. ஆனால் நீங்கள்மட்டும் கல்யாணத்துக்கு வரவில் ...செய்வேன். ...ரியுர ... லாருக்கும் வெகு மனஸ்தாபம். பாட்டி மூன்றுதரம்கேட் ... இது ... படி பற்பத ... வரவில்லையா கோபாலஸாமி வரவில்லையாவென்று கல்யா...தில் ... நாளைக்குள் 10) தடவை கேட்டுத் தொந்திரவுசெய்து போட்டாள். கடிதமனுப்பவில்லையென்று நன்றாய்ச் சொன்னீர்கள். நான்மாத்திரம் அப்படியிருக்கமாட்டேன். ஸார், அது நன்றாய் ஞாபகமிருக்கட்டும், உங்களுக்குச் சொல்லிவைக்கிறேன்.

கோ:—போனது போகட்டும் இப்பொழுது அபூர்வமாய்ப் புறப்பட்ட விசேஷமென்ன? ஏதாவது கோர்ட்டுக்காரியமா? அல்லது ஏதாவது வியாபாரவிஷயமா?

வெ:—கோர்ட்டாவது, வியாபாரமாவது என்ன வேடிக்கையாய்ப்பேசுகிறீர்களா? நான் வருவதாய் வக்கீல் வெங்கட்டராமய்யர் தங்களுக்குக் கடிதமெழுதவில்லையோ?

கோ:—ஓகோ! சரிதான். சரிதான் ஞாபகமில்லை. எக்ஸ்கியூஸ் பண்ணவேணும். பையன் ஜாதகவிஷயமாகவா? என்னமோ, நீங்கள் வரப்போகிறதாக வெங்கட்டராமய்யரிடமிருந்து ஒரு கார்டுவந்தது. அதிலென்னமோ ஜாதகத்தைப்பற்றியெழுதியிருந்தது. ஆமாம், என்ன அவஸரம், இந்த வருஷந்தான் நாம் கல்யாணம் பண்ணுவதாயுத்தேசமில்லையே யென்று அலட்சியமாய்ப் பேசாமலிருந்துவிட்டேன்; அப்படியா அது? ஆகட்டுமே, என்ன அவஸரம் வந்துவிட்டது?

வெ:—அவஸரமென்னவென்று சொல்லலாமோ? குட்டிக்கோ வயது பதினென்று நிறைந்து இந்தவைகாசிக்குப் பனிரெண்டு நடக்கிறது. பயலும் பன்னியாய்ப்போய்விட்டது. அதுக்கும் ஒருசரட்டை (பூணூலை) மாட்டிப் போடுவோமென்று உத்தேசம். இந்தவருஷம் எப்படியும் முடித்துவிடவேண்டியதுதான்; ஜாதகத்தை யெடுங்கள் சொல்லுகிறேன்.

கோ:—ஜாதகத்துக் கென்ன, ஸார், ஜாதகமிருக்கிறது. ஆத்துலே அவள் சம்மதத்தையும் ஒருவார்த்தை கேட்கவாண்டாமா? அவள் என்னமோ, என்ன அவஸரம் மேல்வருஷம் ஆகட்டுமே, யென்று சொன்னாள். அதையுந் தெரிந்து கொள்வோம்.

வெ:—ஆத்து ஸம்மதமாவது, கொளத்து ஸம்மதமாவது; இதெல்லாம் போகாத ஊருக்கு வழி, நாம் எப்படிச்சொன்னாலும் அவாள் கேட்கிறார்கள்.

கோ:—உங்காத்துலே அப்படியாக யிருக்கலாம். நம்ம அதிகாரங்களெல்லாம் வாசற்படிக்கு வெளியிலேதான். வீட்டிற்குள் வந்துவிட்டால், பிறகு, உஜூர் ஸாங்க்ஷனில்லாமல் ஒருவேலையும் என்னால் நடக்காது.

வெ:—நீங்கள் அப்படி நினைக்கப்படாது அம்மாஞ்சி! நான் சொல்லுவது தெரிந்ததா? அம்மாஞ்சி மதனியை நான் எப்படியாவது சரிப்படுத்திக் கொள்ளுகிறேன், உங்களுக்கு சம்மதந் தானா? அதை முதலிலே சொல்லுங்கள்.



REGISTRAR OF BOOKS
REGISTERED
22 DEC 1908
MADRAS.

கோ:—அவள் சம்மதித்தால், எனக்கும் சம்ம...த்தியாரா? வேடிக்கையா யிருக்கிறது.

வெ:—நான் அதெல்லாம், முன்னாடியே அம்ம...ராயத்தைத் தெரிந்துகொண்டுவிட்டேன். ஏதோ சீர் ... செய்வேனே செய்யமாட்டேனோ என்று அவளுக்... அதெல்லாம், அவள்பாடு என்பாடு, உங்களுக்கேன் அந்தக்கவலை ... ஜாதகத்தை யெடுங்கள்.

கோ:—இதேது, அத்தான்குட்டி விடமாட்டார்போலிருக்கிறது. ஜாதகம் கொடுக்கிறேன். ஆக்ஷேபனையில்லை. என்னதான் தாயும் பிள்ளையுமாக யிருந்தாலும் வாயும் வயிறும் வேறு என்பதுபோல், இந்தக்காலத்துக்குத் தகுந்தபடி, யேதாவது லௌகிகங்களையும் பேசிக்கொண்டு விடவேண்டிய தவசியமல்லவா? அதொரு வழக்கமேற்பட்டிருக்கிறதே!

வெ:—வழக்கமென்னப் பிரமாதம் இப்பொழுது? நீங்களெப்படிச் சொன்னபோதிலும், நான்கேட்க ஸித்தமாயிருக்கிறேன். அதற்கென்னதடை? இப்பொழுது தான் புதிதா? மூணும் வருஷத்துலே, நம்ம பெரியகுட்டிக்கு என்ன செய்திருக்கிறேன் தெரியுமோ இல்லையோ? அதிலே யேதாவது குறைப்பேனோ?

கோ:—பெரியகுட்டி, அதற்கென்ன, அந்த வரனைப்போலத் தானோ இதுவும். அவன் உழவுமாடுஓட்டுகிற கிறல் பேர்வழி, நம்மைபையனுக்குப் போனவருஷம் மெட்ரிகுலேஷனாய் விட்டது. எப். ஏ. க்கல்லவா இப்பொழுது வாசிக்கிறான். ஆச்சு, மேல்வருஷம் எப். ஏ. உடனே, பீ. யே. அதைப்பார்க்கவேண்டாமா?

வெ:—ஆமாம், அதெல்லாம் நல்லதுதானே, என்னதான் செய்யவேண்டுமென்று சொல்லுகிறீர்கள்?

கோ:—நான், சொல்லுகிறேன் கேளும். அத்தான் குட்டி! நாளைக்கு மனஸ்தாபம் உதவாது. நாலிப்பேச்சா யிருந்தாலும் அறுத்துப் பேசிப்போடுகிறது தான் நல்லது.

வெ:—எல்லாவற்றிற்கும் ஜாதகத்தை யெடுங்கள். பொருத்தம் பார்க்க வேண்டாமா? அதைப்பார்த்துக் கொள்ளுவோம்.

கோ:—இதேதுடா இது! கர்மடகம். இந்த நாளிலே பொருத்தமேது நிமித்தமேது? எல்லாம் மனப்பொருத்தந்தான் காரணம். மேலே, லௌகிகத்தைக் காஸ்தம் செய்து கொள்ளுவோம்.

வெ:—அதெல்லாம் உங்களிஷ்டம்போல் எல்லாம் திருப்தியாய் நடக்கும். ஜாதகத்தை யெடுங்கள்.

(டீலேகெல்லி யெலிபிடித்தது போல, இவ்வளவு சிரமப்பட்டு மெதுவாய் ஜாதகத்தை வாங்கினார்)

(இன்னும் வரும்.)

T. V. அய்யாஸாமி அய்யர்.

[கிழிருந்து] சத்தியம் ... ம்மா இரு, பிசாசே ... கிறார்கள்] என்னை ... க்கு எவ்வளவு ... செய்வேன். ... இதே போலிருந்து ...

## [CHAK]RAVARTINI, [A TA]MIL MAGAZINE.

——:0:——

[The Indian] Patriot says:—"Chakravartini," a Tamil Magazine edite[d by] Subramania Bharati, Sub-Editor of the Swadesamitran is as its name indicates, a high class monthly for Hindu ladies. The contributions are on a variety of interesting subjects, by competent men, several of whom are graduates and are written in easy flowing Tamil. The get up of the Magazine leaves nothing to be desired and the annual Subscription is fixed at the exceedingly moderate rate of two Rupees. From the manner in which it is being conducted, there is no doubt the "Chakravartini" deserves the support of our educated Tamil speaking countrymen."

The *Hindu* says:—"CHAKRAVARTINI." As described in its title page is a Tamil monthly magazine devoted entirely to female education and to the elevation of our women in general. With this sole object in view, such subjects are chosen as tend to elucidate to our women their duties towards their husbands and superiors, their inferiors and their equals in Society. They are written in such an easy style, as any woman of ordinary ability can read and understand them. This was started some three months ago. The last two issues contain some interesting stories and ideas which are both pleasing and instructive.

The current number contains among many interesting subjects one which is well-worth reading viz, "an exemplary lady of the Punjab" written by the Editor, describing the character of an ideal Hindu wife.

### THE EDUCATIONAL REVIEW

September, 1905

CHAKRAVARTINI: A TAMIL MONTHLY EDITED BY C. SUBRAMANIA BHARATI
Rs. 2 YEARLY, OR 3 AS. PER ISSUE.

To judge by the first number which has been kindly sent to us, we should think that the editor has placed a good ideal before him and we are sure that if he keeps up to the high level, the journal will be greatly appreciated.

### THE "INDIAN SOCIAL REFORMER"

பம்பாயில் பிரசுரமாகும் "இந்தியன் ஸோஷல் ரிபார்மர்" சொல்லுகிறது: சக்ரவர்த்தினிப் பத்திரிகையின் தோற்றமானது இக்காலத்தினது நல்லுடையானங்களில் ஒன்று.

——:0:✳:0:——

162

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
22 DEC 1906
MADRAS.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
ழெண்மை யுறுவோங்கும் முலகு."

Vol. II. | Madras. October, 1906. | No. 3.
தொகுதி. II. | சென்னை 1906ளு அக்டோபர் | பகுதி. 3.

## சிறுவர்களின் படிப்பு.

"இளமையிற் கல்வி சிலையி லெழுத்து". என்னும் முதுமொழி நமக்குள் பன்னாளாய் வழங்கி வருவது. ஆனால் இளைஞர்கள் தம்மைச் சுற்றிய விஷயங்களைத் தெரிந்துகொள்ள விருப்பம் உள்ள காலத்திலேயே வித்தையைக் கற்பிக்கவேண்டுவது அவசியம். இந்த மாதர்களில் அநேகர் "குழந்தைகள் படிப்பைப்பற்றி நாங்கள் என்ன செய்தல் கூடும்? எங்களால் கல்வி கற்பித்தல் இயலாது. படிக்கும் தருணம் குழந்தைகளுக்கு வாய்த்தவுடன் அவர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவோம்" என்கின்றார்கள். இப்படிப் பலதாய்மார்கள் எண்ணுவதும் சொல்லுவதும் தப்பு. உலகில் ஒரு குழந்தை ஜனித்தது முதல் அது தன் பழக்கத்தையே அநுசரித்து ஒரு மார்க்கத்தை எய்துகிறது. "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்னும் பழமொழியைச் சிறிது ஆலோசியுங்கள். இளமை முதல் பழகிய பழக்கம் இறக்கும் வரையும் ஒருவனுக்கு நீங்காதென்பது நிச்சயம். ஒரு குழந்தை பிறந்தது முதல் அதைச் சகமாய்ச் சீராட்டிப் பாராட்டித் தொட்டிலில் தாலாட்டி இனிமையினைக் காத்து வரும் விஷயத்தை ஒட்டியே அக்குழந்தையின் பின் நடத்தை உருவாகி வருகிறது. எவ்வண்ணம் ஒரு பெருமரத்தின் உருவமும், கிளைகளும், இலைகளும் பழங்களும் ஒரு வித்தில் மறைந்து காணப்படுகிறதோ, அவ்வண்ணமே ஒருவன் முதிர்ந்த அறிவும் சக்தியும் அவன் பச்சிளங் குழந்தையாய் இருந்த காலத்திலேயே தொடங்குகிறது. எப்படி ஒரு வித்து முளைத்தவுடனே இருபாகமாய்ப் பிரிந்து மேல்நிலையோடு இலைதழைத்துப் பலங்கொண்டு பூ பூத்துக் காய் காய்க்குமோ, அவ்வண்ணமே இளங்குழந்தைகளின் வளர்ப்பும். அறிவுவாய்ந்த குழந்தைகளை எந்த எந்த விதத்தில் சேர்ப்பித்து முன்னுக்கு வரச்செய்யவேண்டுமோ அந்த அந்த விதத்தில் இளமையிற் பயிற்றல்வேண்டும். ஒரு குழந்தையின் தேக சக்தி

லமும் மனோபலமும் தெரிந்துகொண்டு எச்சக்திகுறைந்திருக்குமோ அச்சக்தி மகவுக்கு வாய்க்கப் பாடு படுவது நிரம்ப ஆவசியகம்.

**குழந்தைப் பருவம்.** குழந்தையின் மனோவேகத்தையும், தேகதத்துவத்தையும் அறிந்துகொள்ள ஒருவன் அக்குழந்தையின் வாழ்வு எத்தன்மையது என்று உய்த்துணர்தல் வேண்டும். குழந்தைகளைக் கவனமாய்ப் பாதுகாத்தும் தன் இளமை விஷயங்களை ஆய்ந்தறிந்தும் நடக்கவேண்டும். நாம் மூன்று வயதாய் இருந்த இளமைக் காலத்தே நமக்கு ஆச்சரியமாய்த் தோன்றிய விஷயம் என்ன? எது நமக்குப் புதிதாயும் சித்திரமாயும் தோன்றியது என ஆலோசிப்போம். நமக்கு ஆனந்தத்தைத் தந்தவையோ காட்டப்பட்டுள்ள பட்டுத்துணியும், ஊதும் ஊதலும், சித்திரப் பொம்மையும் கண்ணாடியுமாய் இருந்திருக்கும். ஆகையால் அவ்வண்ணமே நாம் குழந்தைகளுக்கு இவ்விதமான அழகிய பொருளையும் வேடிக்கைகளையும் காட்டி இனிதின் பொழுது போக்கவேண்டும்; வேளாவேளைகளில் அன்னம் பால் ஊட்டிச் சீராட்டிக் கோதாட்டிச் செவிக்கினிய கீதத்தால் தாலாட்டிப் பாதுகாத்தல் வேண்டும்; காலத்துக்குத் தகுந்தபடி உடையுடுத்தல் வேண்டும். மதலைகள் கண்டு ஆனந்திக்கும் பளபளப்பான வர்ணத்துணிகளையும், பூக்கொத்துகளையும், கிளிப்பொம்மைகளையும் காட்டல்வேண்டும். நிரம்பா மென்சொல்லாம் சப்தங்களைக்கேட்டுக் குழந்தைகள் இன்புறுவார். பூக்களைமோந்து ஆசைப்படுவார், நயமான இனியதின்பண்டங்களில் சிறிது இச்சைகொள்வார்; மழலை மொழியாடிப் பெற்றோர் உற்றோரைப் பேரானந்தங் கொளச்செய்வார்.

**சுறுசுறுப்பு.** எப்போதும் இளங்குழந்தை ஏதாவது வேலைசெய்துகொண்டே இருக்கும். விழித்திருக்கும் காலத்திலே ஒரு நிமிஷமேனும் வெறுமனே இருப்பது அரிது. வயதுக்குத் தக்கபடி, கால்களால் உதைத்தலும், பிடித்தலும், புரளலும், தவழ்தலும், ஓடலும், தாண்டலும், ஏறலும், இன்னும் பலவித வேலைகளையும் செய்வதும் உண்டு. நாம் குழந்தைகளாய் இருந்த காலத்திலே ஓட்டத்திலும், பந்தாடலிலும், தாண்டுதலிலும் எவ்வளவு பிரியமாய் இருந்தோம் என்று கவனிக்கவேண்டியது. இவ்விஷயங்களை அநுசரித்து இளைஞர்களைப் பாதுகாக்கவேண்டும்.

**பாவனைசெய்தல்.** குழந்தைகள் பெரியோர் செயலைப்பார்த்துப் பொம்மைகளைக் கழுவி உடையுடுத்தி, அன்னமூட்டிச் சமையல்செய்வது போன்ற பலவிதப்பாவனைகளைச் செய்வது அருகில் இருந்துபார்க்க மிக ஆனந்தமாய் இருக்கும். மேலும் இளைஞர்கள் தாம்வெளியில் திரியுங்காலத்திலும், பெரியோர்களைக் கண்டகாலத்திலும், வயதுமுதிர்ந்தோர் கூனிநடந்துவரும் காலத்திலும், அங்காடி விற்போர் கூச்சலைச்சேட்ட காலத்திலும், விசேஷமாய் எது புத்தியைக்கவரும் செய்கையதோ அதை வெகுகவனமாய்க், கண்டது போலேகாட்டக் காத்திருப்பார். இப்போலியாட்டுகளைக் காண்பதே மிக ஆனந்தம். ஆகவே குழந்தைகள் வயது வளரவளரப் பல்விதத் தூண்டுதலாலே அவர்களை உலகவிஷய வியவகாரங்களில் தாய்மார்கள், அவர்களைப் பிரவர்த்திக்கச் செய்யல்வேண்டும். இவ்வண்ண நேர்ச்சியால் குழந்தைகளுக்கு ஒருவித சுபாவம் உண்டாகிப் புத்தி மேன்மேலும் பிர



வர்த்தியாகிறது. இதனால் பிள்ளைகள் ஊகமுள்ளவர்களாகவும் ஆலோசனையுள்ளவர்களாகவும் ஆகிறார்கள். ஆனால் இத்தனைப் பாக்கியம் வாய்க்கக்காரணம் எதுவென்று ஆலோசித்தால், மாதர்கள் கல்வியறிவு உடையவராதலே. அதனாலேதான் இந்தியமாதர்கள் கல்விபயிலவேண்டும் என்னும் பிரயத்தனம். குழந்தைகளை நன்னெறியிலும், மனோவேகத்திலும் சிறந்தவராகச் செய்தல் அறிவில்லாத் தாய்மார்க்கு மிகவும் கஷ்டத்தை விளைவிக்கும் அல்லவோ? பிள்ளைகளின் அறிவு உயர உயர தாய்மார்களுக்கு அவர்களைப் பயிற்ற வழியறியாது அசட்டையாய் இருக்க நேரிடுகிறது. இன்று நம்முன்னாற்படும் இளம் பெண்குழந்தைகளே நாளை வரும் குழந்தைகளுக்குத் தாய்மார்கள் அல்லவோ? இப்பெண்கள் படியாது உலக வியவகாரம் அறியாது இருப்பாராயின் பின்னால்வரும் தலைமுறையாரின் புத்தி சாதுரியம் எவ்வாறு மேன்மை பெறும்? ஆகையாலே பெண்களைப்படிக்கக் கூடுமானவரையில் பள்ளிக்கூடங்களில் படிக்கவைக்கவேண்டும்; பள்ளிக்கூடம் விட்டவுடன் வீட்டில் பின்படிப்பை நற்புத்தகங்களை வாங்கிக்கொடுத்து விருத்திசெய்யல்வேண்டும். பெண்களைப் பள்ளிக்கூடங்களுக்குத் தினம் தவறாது அனுப்பல் வேண்டும். இதை அசட்டை செய்யலாகாது. சிலர் பெண்கள் படித்தால் வீட்டுவேலையை அசட்டைசெய்வார் என்று சொல்வதும் உண்டு. இப்போது படித்துச் சிறந்த பெண்மணிகள் அவ்வண்ணம் இல்லத்துக்குப் பயன்படாது இருக்கின்றனரா? வீட்டுவேலைகளைத் தெரியாது போகின்றனரா என்று கவனிக்கவேண்டும். பெண்கள் படிப்பினால் கர்வம் உடையவர்களாய் விடுவார் என்ற ஒரு எண்ணம் உடையவர்களும் உண்டு. புருஷருக்குள் இக்கர்வம் என்பது இலையா? பெண்களிடத்தில் இதுமாத்திரம் குற்றமாமா? அப்படி ஒருமனைவி மகாபண்டிதையாய் இருப்பாள் என்ற எண்ணம் தெரிந்தால் புருஷனும் ஒரு போட்டியாய்ப் படித்துச் சிறந்த வித்வான் ஆகானோ? பலபெண்களும் படித்து கல்வியறிவுடையவர் ஆகாரோ? இப்படி அனைவரும் கல்விகற்குங்காலம், கர்வம் என்பதையடக்கும் காலமாகும். ஆகையால் இப்போக்கும் பயன் இல்லாததுதான். இந்நாட்டில் எந்நாளும் பெண்களுக்கு உரியவேலை வீட்டுவேலையே. அதை அவர் அறிவு உயர உயர மிகச்சாமர்த்தியத்தோடும் உபசரணையோடும் செய்துவருவார். ஆகையால் நம் நாட்டார் அனைவரும் தம்பெண்கள் நல்ல புத்திரிகளாகவும், உடன் பிறந்தோர்க்கு உற்ற சகோதரிகளாகவும், ஆடவர்க்குச் சிறந்த மனைவியர்களாகவும், தம்பச்சிளங் குழந்தைகளுக்கு அரும் பெரும் தாய்மார்களாகவும் வாய்க்க நம் இளம்பெண்களைச் செவ்வையின் பாதுகாத்துக் கல்வி பயிற்றல்வேண்டும்.

பத்திராதிபர்.

# HAMLET.

## ஹாம்லெட்.

—:0:0:—

38-ஆம் பக்கத் தொடர்ச்சி.

### இரண்டாவது அங்கம்.

### முதற் களம்

பொலோனியஸ் வீட்டில் ஓர் அறை.

பொலோனியஸும் ரேநால்டோவும் பிரவேசம்.

பொலோ:—இந்தப்பணத்தையும் கடிதங்களையும் என் மகனிடத்தில் கொடு.

ரேநா:—அப்படியே செய்கிறேன், ஸ்வாமி.

பொலோ:—அவனைக் காணுமுன்னமே அவனைப்பற்றி நீ விசாரிக்கிறது யுக்தமாயிருக்கும்.

ரேநா:—அப்படித் தான் என் உத்தேசம்.

பொலோ:—அவன் ஸ்தானத்தில் நீயிருந்தால் எப்படிச்செய்வாயென்பதை அறிந்துகொள்.

ரேநா:—தங்கள் சித்தப்பிரகாரம் நடக்கிறேன், ஐயா.

பொலோ:—அவன் போகிறவழியில் விட்டுப்பார்.

ரேநா.—சரி, ஸ்வாமி.

பொலோ:—நல்லது, நீ போய்வா. [ரேநால்டோ போய்விடுகிறான்.

ஒப்பிலியா பிரவேசம்.

என்ன சமாசாரம், என்ன சாமாசாரம், ஒப்பிலியா.

ஒப்பி:—எனக்குட்டி பெரும்பயம் உண்டாயிருக்கிறது, ஐயா.

பொலோ.—எதைக்கண்டு பயந்தாய், பெண்ணே?

ஒப்பி:—நான் அந்தப்புரத்தில் தையல் வேலை செய்து கொண்டிருந்தேன்-ஹாம்லெட் இளவரசன் அந்தச் சமயத்தில் என்னிடத்தில் வந்தார்- அந்தக் கோலத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள்- சட்டைக்குப் பொத்தான் போடவில்லை; தலையில் தொப்பி கிடையாது; காலுறைகள் கட்டப்படாமலும், அழுக்கடைந்தும் கணுக்கால் வரையில் தொங்கிக்கொண்டிருந்தன; உள்சட்டையைப்போலவே அவர்முகம் வெளுத்திருந்தது; முழந்தாளிரண்டும் ஒன்றோடொன்று முட்டிக் கொண்டிருந்தன. நரகத்திலிருந்து வெளியில் விடப்பட்டவன் போலப் பார்வைக்கு மிகுந்த பரிதாபமுண்டாக்கத்தக்க ஜாடையுடையவராயும் அங்குத்தான் பட்டகஷ்டங்களை என்னிடத்தில் சொல்லவந்தவர்போலும் தோற்றினார்.

பொலோ:—உன்னிடத்தில் காதல் மிகுந்ததினால் அவர் புத்திக்குக் கலக்கம் வந்துவிட்டதோ?



ஒப்பி:—நான் என்ன சொல்வேன்? ஒருகால் அவ்வாறிருந்தாலும் இருக்கலாம்.

பொலோ:—அவர் என்ன சொன்னார்?

ஒப்பி:—என் மணிக்கட்டை இறுக்கிப்பிடித்தார்; பின்பு தன்கைகொண்டதூரம் போய் என்னைச் சித்திரத்தி லெழுதுவதற்குப்பார்ப்பது போல உற்றுப்பார்த்து வெகுநேரம் நின்றார்; பின் என் கையைக் குலுக்கித் தன் தலையை இரண்டு மூன்றுதரம் மேலும் கீழும் கம்பனம் பண்ணி ஒரு பெரு மூச்செறிந்தார்; அவர் பிராணனே போய்விடும் போலிருந்தது; பின், என் கையை விட்டுத் தலையைத் தோளில் சாய்த்துக்கொண்டு கண்தெரியாதவன் போல வாசலில்போனார். அவ்வாறுவெளியில் போகையிலேயும் என்னையே நோக்கிக் கொண்டு சென்றார்.

பொலோ:—நீ என்னுடன் வா; அரசனிடத்திற் போவோம்; விரகதாபம் அவருக்கு மிகுந்திருக்கின்றது; அதன் மிகுதியே அத்துமீறின காரியத்தைச் செய்யும்படி தூண்டிவிடுகின்றது. அவரிடத்தில் ஏதாவது கடுஞ் சொற்கள் நீ சொன்னாயோ?

ஒப்பி:—தங்கள் ஆக்ஞைப்படி அவர் எழுதிய கடிதங்களைப் பெறேன் என்றும் அவர் என்னிடத்திற்கு வரக்கூடாதென்றும் சொல்லியிருந்தேன்.

பொலோ:—அதுதான் அவருக்குப் பிரக்ஞைபங்கம் உண்டாக்கி விட்டது; நான் அவரை நன்றாய்த் தெரிந்துகொள்ளாமை பற்றித் துக்கிக்கின்றேன். வா, அரசனிடத்தில் போவோம்; அரசனுக்கு இதை அறிவிப்பது நமது கடன். அவ்வாறு அறிவிப்பதனால் வரும் வெறுப்பினும் ஒளிப்பதனால் உண்டாகும் துயரம் பெரிது- வா. [போய்விடுகிறார்கள்].

### இரண்டாவது அங்கம்

### இரண்டாங்களம்

அரண்மனையில் ஒரு அறை.

அரசன், அரசி, ரோஸென், கில்டன், வேலையாட்கள், பிரவேசம்.

அரசன்:—ரோஸென், கில்டென், உங்கள் வரவு நல்வரவாகுக. உங்களைப்பார்த்தல் வேண்டும் என்று மிகுந்த பிரியமாயிருந்தது. உங்களை யழைப்பித்ததற்கு அவசியமும் நேரிட்டது. ஹாம் லெட்டிற்குச் சித்தவிகாரம் உண்டாயிருக்கிறதென்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாமே; அவன் உள்ளும்புறமும் முன்போலவில்லை. அவன் பிதாவின் மரணத்தை யல்லாமல் வேறு ஏது அவனுக்கு இந்தச் சித்தப்பிரமையை உண்டாக்கி யிருக்கக்கூடுமென்று நான் கண்டறியக்கூடவில்லை. சிறுபிராயமுதற் கொண்டு நீங்கள் அவனுடன்பழகி அவன் குணங்களெல்லாம் அறிந்தவர்களா யிருக்கிறபடியால் தயவு செய்து சிறிதுகாலம் இங்கேயே இருத்தல் வேண்டும். அவனுக்கு மன உற்சாகம் உண்டாகும் வகையை நாடி, வருத்தப்படுவதின் காரணத்தைக் கண்டு நமக்குத்தெரிவித்தால் அவனுக்கு வியாகுலம் நிவர்த்தியாவதற்கு உபாயம் தேடுதல் கூடும்.

அரசி:—உங்களைப்பற்றி அடிக்கடி சொல்வான். உங்களினும் அவன் அதிகமாய் விரும்புகிற இருவர்இல்லை யெனலாம். எங்கள்குமாரன் க்ஷேமத்தின் பொருட்டு நீங்களிருவரும் இங்கே காலத்தைக் கழிப்பீர்களானல் அரசனுலே தக்கவாறு கைம்மாறு பெருவீர்களென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

ரோஸென்
கில்டென் } எங்களைப் பிரார்த்திக்கவேண்டிய தொன்றுமில்லை, கட்டளைப்படி நடக்கக் காத்திருக்கின்றோம்.

அரசன்:—உங்களுக்கு வந்தனம்.

அரசி:—என் வந்தனத்தையும் பெற்றுக்கொண்டு மாறுதலடைந்திருக்கிற எங்கள் குமாரனைப் போய்ப்பாருங்கள். சேவகா, இவ்விருவரையும் நமது பிள்ளையிருக்குமிடத்திற்கு அழைத்துப்போ.

கில்டென்:—எங்கள் இருப்பு தங்கள் குமாரருக்குச் சுகத்தைச் செய்வதாக.

அரசி:—ததாஸ்து. [ரோஸென், கில்டென், சேவர்களிற் சிலர் போய்விடுகிறார்கள்].

பொலோனியஸ் பிரவேசம்.

பொலோ:—நார்வேக்குப் போயிருந்த நமது தூதர்கள் காரியங்களை அனுகூலஞ் செய்துகொண்டு வந்து விட்டார்கள்.

அரசன்:—நீர் எப்பொழுதும் சுபசமாசாரம் கொண்டு வருகிறவராய்த்தா னிருக்கிறீர்.

பொலோ:—தாங்கள் அப்படி நினைத்திருக்கிறீர்களா, மகாராஜா? என் ஆத்துமாவையும், என் ஊழியத்தையும் கடவுளுக்கும் யஜமானுக்கும் வைத்திருக்கிறேன் என்பது உறுதி. என்புத்தி இராஜகாரியத்தில் நுண்மையான விஷயங்களையும் அறிவது வாஸ்தவமாயிருக்குமாயின், தங்கள் புத்திரனுடைய சித்தப்பிரமைக்கும் நான் காரணங்கண்டு விட்டேனென்று சொல்லலாம்.

அரசன்:—அதைச்சொல்லும், ஐயா, அதைக்கேட்க ஆவலுள்ளவனாயிருக்கிறேன்.

பொலோ:—மகாராஜா, மகாராணி, மகிமையும் கடமையும் இத்தன்மையவென்றும், பகல் பகலாயும், இரவு இரவாயும், காலம் காலமாயும் இருப்பதற்குக் காரணமும் சொல்வது வீண்காலப் போக்காகும். சுருங்கச் சொல்லலே புத்தி நுட்பமாயிருத்தலாலும் வளர்த்திப்பேசுதல் தெவிட்டலை யுண்டாக்குவதினாலும் நான் சுருக்கமாய் விஷயங்களைச் சொல்லுகிறேன். உமது புத்திரனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது; பைத்தியமென்றே சொல்லுகிறேன்; பைத்தியமென்பதற்குப் பைத்தியம் என்று அர்த்தம். அதிருக்கட்டும்

அரசி:—விஷயமில்லாமல் சாகசம்பண்ணுதலில் பிரயோஜனமில்லையே.

பொலோ:—எனக்குச் சாகசமே தெரியாது; அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது வாஸ்தவம்; அது பரிதபிக்கத்தக்கதே; பைத்தியம் பிடித்ததற்குக்காரணங்கண்டு பிடிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. நெருப்பில்லாமல் புகையுண்டாகாது; ஒவ்வொன்றிற்கும் காரணமிருக்கும், சற்று யோசித்துப்பார்க்க எனக்கு ஒருபெண் இருக்கிறாள். அவள் உயிரோ

172



டிருக்கிற வரையில் என் பெண்ணென்றே சொல்லலாம். அவள் இதோ என்கையில் இருப்பதை என்னிடத்தில் கொடுத்தாள். [ஒரு கடிதத்தைப் படிக்கிறான்]

"தெய்வத்தன்மை பொருந்திய வளாயும், என்னுயிர்க் குயிரா யிருப்பவளாயும் சகல சவுந்தரியங்களுமுள்ள வளாயு மிருக்கிற ஒப்பிலியா!" இதில் சில சொற்கள் உசிதமான வைகளாயில்லை.

ஆயினும் மேலே வாசிக்கின்றேன், கேளுங்கள். [வாசிக்கிறான்].

"அழகும் ஒளியும் பொருந்திய அவள் இருதயத்தில்"

அரசி:—இக்கடிதம் ஹாம்லெட் உம்முடைய பெண்ணுக் கெழுதினதா?

பொலோ.—மகாராணி, சற்றுப்பொறுங்கள், இருக்கிறவற்றை ஒளிக்காமற் படிக்கின்றேன். [வாசிக்கிறான்].

"ஒளியார்ந்தனவல என்றே விண்மீனினை ஓர்ந்திடினும்
வெளியார்ந்துழிதரும் வெய்யோ னிடத்தையம்மேவுகினும்
ஒளிரார்ந்த வாய்மையைப் பொய்யெனக் கொள்ளினுங் கொள்கமற்றென்
அளியார்ந்த காதலிற் கொள்வற்கவே ஐயம் அருங்கொடியே"

அருமையான ஒப்பிலியா, எனக்குச் செய்யுளியற்றல் தெரியாது. உன்னை நினைந்து நினைந்து எத்தனை முறை கதறுகிறேன் என்பதை கணக்கிடவும் தெரியவில்லை. உன்னிடத்தில் என் காதல் மிகுந்திருக்கிற தென்பதை மாத்திரம் நீ நம்புதல் வேண்டும். என்னுயிருள்ள வரையும் உனக்கே அடிமை பூண்ட ஹாம்லெட்" இந்தக் கடிதத்தை என்மகள் என்னிடத்தில் காட்டினாள். அவ்வவ்வமயங்களில் அவர் தன்னை வருந்தியழைத்ததையும் என்னிடத்தில் அப்போதைக் கப்போது தெரிவித்து வந்திருக்கிறாள்.

அரசன்:—ஹாம்லெட்டின் காதலை அவள் அங்கீகரித்துப் பேசினளோ?

பொலோ:—தாங்கள் என்னிடத்தில் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள்?

அரசன்:—விசுவாசமும் நேர்மையு முடையவராகவே உம்மை எண்ணியிருக்கிறேன்.

பொலோ:—விசுவாசமும் நேர்மையுமுடையவனாக என்றும் இருக்கவே எனக்கு ஆசை. தங்கள்குமாரன் ஹாம் லெட்டுக்கு என்குமாரி ஒப்புலியாவிடத்தில் காதலுண்டாயிருப்பதை அறிந்தவுடன் என்னசெய்தேன் தெரியுமா அதை இரகசியமாகவே வைத்திருந்தேனே யாயின் என்னிடத்துள்ள விசுவாசம் தங்களிருவர்க்கும் குறைந்துவிடாதா? தக்ஷணமே என் பெண்ணிடத்தில் போய் "ஹாம் லெட் இளவரசன் உனக்குப் புருஷனாக அமருவதற்கு நீபுண்ணியஞ் செய்தவளல்ல; அந்தஎண்ணத்திற்குக் கொஞ்சமேனும் இடங்கொடுக்காதே. நீ இனிமேல் அவரை அடிக்கடி பார்த்தலையும், அவரிடமிருந்து தூதுவருதலையும், அவர் உனக்கு அனுப்பும் காதற்பொருளை அங்கீகரித்தலையும் நிறுத்திவிடு" என்று கண்டித்தேன். அவர் கருதியது கைகூடாதது

பற்றிமுதலில் துக்கித்தவராய்ப் பின்னர் முறையே ஊணுறக்க மில்லாமல் மெய்தளர்ந்து, மதிஇழந்து சித்தப்பிரமையுண்டாகி நாமெல்லோரும் வருந்தும்படியான உன்மத்தத்தை யடைந்தவராயிருக்கின்றார்.

அரசன்:—இதுவா உமது அபிப்பிராயம்?

அரசி:—ஒருகால் அவ்வாறே இருக்கலாம்.

பொலோ:—நான் ஒருவிஷயம் "இப்படித்தான் இருத்தல் வேண்டும்" என்று சொல்லிமாறாக விருந்த காலமெது?

அரசன்:—நான் அறியேன்.

பொலோ:—நான் சொல்வது தவறாயிருப்பின் என்தலையை வாங்கிவிடுகிறது. பூமியின் நடுவில் உண்மையொளித்தாலும் அதனைக்கண்டு பிடித்திடுவேன்.

அரசன்:—இன்னும் வேறுவகையிற் பரீக்ஷை செய்து பார்க்கலாமா?

பொலோ:—இந்தமகடியில் தங்கள் குமாரன் ஹாம்லெட் உலாவிக் கொண்டிருப்பதுண்டு.

அரசி:—ஆம், வாஸ்தவந்தான்.

பொலோ:—அச்சமயத்தில் என் பெண்ணை அவரிடத்தில் விடுகின்றேன். தாங்களும் நானும் திரையின் பின்பக்கத்தில் ஒளித்திருப்போம். அவர்கள் சந்திப்பைக் கவனமாய்ப் பார்ப்போம். என்மகள் ஒப்பிலியா விடத்திலுள்ள காதலினாலேயே உங்கள் மகனுக்குச் சித்தப்பிரமை யுண்டாகவில்லை யெனத் தெரியுமானால் என் மந்திரி வேலையை விட்டு உழவுத்தொழில் செய்யப்போய் விடுகிறேன், மகாராஜாவே.

அரசன்:—பரீக்ஷித்துப் பார்ப்போம்.

அரசி:—அழகுபோல என் பிள்ளை படித்துக்கொண்டு வருகிறான், பாருங்கள்.

பொலோ:—நாங்களிருவரும் விலகிப்போதல் வேண்டும். அவனிடத்தில் பேசிப் பார்க்கிறேன். [அரசன் அரசி வேலைகாரர்கள் போய்விடுகிறார்கள்].

(இன்னும் வரும்.)

K. வெங்கடராம அய்யர், B.A.



# சந்திரமதி.

## ஆறாம் அத்தியாயம்.

(14-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இன்னும் சில நாளானபின்பு சந்திரமதி ஒருநாள் தினந்தோறும் வழக்கமாய் நடக்கும் பாடங்களைப் படித்து, கணக்குகள் போட்டு, எழுத்து படிவதற்காக உபாத்தியாயர் வைத்துக் கொடுத்த சட்டப்பிரகாரம் எழுதிக்கொண்டிருந்தாள். அப்படி எழுதிக்கொண்டிருக்கும்பொழுது வித்தியாசாகரர் சிஷ்யப்பெண்ணை உற்றுப்பார்த்து அவளுடைய முகத்தில் கொஞ்சம் வித்தியாச மிருப்பதைக் கண்டுகொண்டு எழுதியாகும்வரையில் சும்மாவிருந்துவிட்டுப் பிறகு சொல்லலானார்.

சாக:—அம்மா! உன் முகத்தைப்பார்த்தால், உள்ளுக்குள் நீ என்னவோ சஞ்சலப்படுகிறவள் போல் தோன்றுகிறாய் – அதுவுமன்றி உன் உடம்பும் முன்னிருந்ததைவிடக் கொஞ்சம் இளைத்திருக்கிறது. அதற்குக் காரணமென்ன?

சந்திர:—என்னைப்பார்த்து நேற்று என்தாயாரும் நீங்கள் கேட்டவாறே கேட்டாள்; சரீர ஆரோக்கியத்தைப்பற்றி நீங்கள் நேற்று பிரசங்கித்ததைக் கேட்டது முதல் நான் அன்னபானாதி விஷயங்களிலும் தேக பரிசுத்த விஷயத்திலும் நான் எவ்வளவோ சிரத்தையாய் இருக்கிறேன். இப்பொழுது என் கைகளில் சிரங்கு முழுவதும் சுத்தமாய்ப் போய்விட்டது. அப்படியிருக்க நான் இப்பொழுது இளைத்துப்போவதற்குக் காரணம் ஏதோயிருக்குமோ எனக்குந் தெரியவில்லை.

சாக:—நீ ஏதாவது மனோவியாதியால் உலர்ந்து போகிறாயோ என்னவோ.

சந்திர:—இப்பொழுது நீங்கள் சொன்னவார்த்தைக்குப் பொருள் இன்னதென்று எனக்குத் தெரியவில்லை. வயிறு நிறைவதற்கு வேண்டிய அளவு சரியான போஜன பதார்த்தங்கள் கிடைக்காமற் போயினும் ஆகாத வஸ்துக்களைத் தின்றாலும் உடம்புக்கு வியாதிவருமென்று எற்கனவே கேட்டிருக்கிறேன் ஆனால் மனதுக்கு வியாதி எதனால் உண்டாகுமோ, மனோவியாதி எந்தவிதமாயிருக்குமோ அதை இன்னதென்று ஊகிக்க என்னால் முடியவில்லை. தேவரீர் அந்தவிஷயத்தைக் கொஞ்சம் சொல்லுகிறீர்களா?

சாக:—தக்க ஆஹாரமாவது பரிசுத்தமாவது இல்லாமற் போனால் சரீரத்திற்கு எவ்விதமாக வியாதி சம்பவிக்குமோ ஆத்மாவுக்கும் அதேமாதிரியாக அதற்கு வேண்டிய ஆஹாரமும் பரிசுத்தமும் இல்லாமற் போவதால் வியாதி உண்டாகும். ஆத்மாவுக்கும் சரீரத்துக்கும் பரஸ்பர சம்பந்த மிருப்பதால், ஆத்மாவுக் கேதாவது துன்பம் உண்டாகும்போது சரீரமும் இளைத்துப்போம்.

சந்திர:—இப்பால் சிலநாளைக்குமுன் காலம் சென்ற எங்கள் வேலைக்காரியைப்பற்றி என் மனத்தில் வாஸ்தவமாகவே விசனமாயிருக்கிறது. நான் சின்ன

ளாயிருந்தது முதல் என்னை எடுத்து வளர்த்தவன் விஷயத்தில் நான் எப்படி விசாரப் படாமலிருப்பேன்? தாங்கள் இப்பொழுது சொன்ன பிரகாரம் நான் மிகவும் இளைத்துப் போனதற்கு அதுவே காரணமாயிருக்கலாம். நீங்கள் இது வரையில் சொல்லிய தர்மங்களெல்லாம் சரீரத்தைப் பற்றியவைகளே யாகையால் ஆத்மாவைப் பற்றிய தர்மங்களைக் கூடக்கொஞ்சம் சொல்லும்படி கோருகிறேன்.

து:—ஆத்மா வென்கிற நம்முடைய ஞானதேகம் வளர்வதற்குக் கல்வியே உணவாம். நமது ஞானத்துக்குச் சாதனமாகிய படிப்புக்குக் கல்வியென்று பெயர். ஞானத்தைச் செவ்வையாய் சம்பாதிக்காதவர் எவ்விஷயத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளாமல் கஷ்டப்பட்டு சுகத்தை யிழப்பார்கள். தேக சக்தியைப் போலவே ஆத்மா சக்தியும் நம்முடைய சௌக்கியத்துக்கு மிகவும் அவசியமானது. நாம் ஆத்மாநந்தம் அநுபவிக்க வேண்டுமாயின் கூடியவரையில் ஞானாபிவிர்த்திசெய்து சித்த சுத்தியோடிருக்க வேண்டும்.

ஆண் மக்களுக்கு எப்படியோ அப்படியே உங்களுக்கும். இப்பொழுது நான் தினந்தோறும் சொல்லுகிறபடி பாஷை விஷயமான ஞானத்தை விருத்திபடுத்தும் இலக்கிய இலக்கணங்களும், பொருளாராய்ச்சி சக்தியை யுண்டாக்கும் கணிதமும் தேசகால வர்த்தமானங்களைத் தெரியப்படுத்தும் சரித்திரங்களும் வேண்டியவையே. உங்கள் ஒழுக்கம் சரியாயிருப்பதற்காக, எல்லாவற்றையும் விட முக்கியமாய் நீதி நூல்களைப் படிக்கவேண்டும். எம்பெருமானுடைய பெருமையைக் கூறும் நூல்களையும் பதிவிரதா தர்மங்களையும் குடும்ப நிர்வாக முறைமையையும் கற்பிக்கும் புஸ்தகங்களையும் தப்பாமற் படிக்கவேண்டும். இவையன்றி ஸ்திரீகளே சிறப்பாய்க் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் சிலவுள. நீங்கள் தையல் வேலையையும், பாகம் செய்யும் வித்தையையும் பெறவும் நீங்கள் அப்பியசிக்கவேண்டும். கடவுள் ஆடவர் குரலில் விட உங்கள் குரலில் மிக்க இனிமையை வைத்திருக்கிறபடியால் சங்கீத வித்தையைப் பயின்று, புருஷன் சிரமப்பட்டு வீட்டுக்கு வரும்போது செவிக்கினிய கீதங்கள் பாடி அவனுக்கு ஆயாசம் தோன்றாமலிருக்கச் செய்யவேண்டிய பாரம் உங்களுடையதேயாகும். புருஷர்கள் வெளியே திரிந்து வேலை செய்ய வேண்டியவர்கள்; நீங்களோ வீட்டிலிருந்துகொண்டு குழந்தை முதலானவருடைய யோக க்ஷேமங்களை விசாரிக்க வேண்டியவர்கள் ஆகையால் குழந்தைகளுக்கு வரும் சாதாரணமான நோய்களுக்குச் செய்யவேண்டிய சிகிச்சைகளும் தேக ஆரோக்கியம் கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டிச் செய்யத் தக்க காரியங்களும், வீட்டில் யாராவது கர்ப்பம் தரித்திருக்கும்பொழுதும் பிரசவமாகும்போதும் செய்யவேண்டிய காரியங்களும் உங்களுக்கெப்பொழுதும் தெரிந்திருக்கவேண்டியவை. இவ்வளவாவது வைத்திய விஷயமானது உங்களுக்குத் தெரிந்திராவிட்டால், புருஷன் வீட்டிலில்லாத சமயத்தில் தற்செயலாய் யாருக்காவது ஒரு நோய் கண்டால், தகுந்த காரியம் செய்வதற்காவது நோயும் வலியும் வராமல் குழந்தைகளை இரட்சிப்பதற்காவது நீங்கள் சக்தியற்றவர்களாவீர்கள்.



சந்திர:—இப்பொழுது சொன்னது கொஞ்சம் வரைக்கும் தெரிந்தது. தாங்கள் சொன்னவற்றில் சில நடத்தையை சீர்ப்படுத்திக் கொள்வதற்கும், சில சம்சார சம்பந்தமான வீட்டு காரியங்களைச் சரியாய் நடத்துவதற்கும், உபயோகமுள்ளனவாயிருக்கும். இனி ஆத்மாவின் பரிசுத்தத்தன்மை யென்ன வென்பதைப்பற்றியுச் சொல்லுங்கள்.

து:—ஆத்மாவுக்கு துக்கத்தை யுண்டாக்கும் துர்க்குணங்கள் எவையும் இல்லாதிருக்கும்பொழுது அது பரிசுத்தமான நிலைமையிலிருக்கும். சரீரத்துக்கு நோயையுண்டாக்கத்தக்க அபத்தியப் பொருள்கள் எப்படியோ ஆத்மாவுக்கு துர்க்குணங்களும் அப்படியே. ஆரோக்கியத்தை யுண்டுபண்ணத்தக்க பத்தியப் பொருள்களைப் போன்றவை நற்குணங்கள். நற்குணங்கள் எப்போதும் சந்தோ[illegible] துர்க்குணங்கள் துக்கத்தையும் உண்டாக்கும். சத்தியம், சாந்தம், தைரியம், வினயம், தயை, திருப்தி முதலியவை ஆத்மாவுக்கு ஆனந்தத்தை யளிக்கும் நற்குணங்கள். இவற்றிற்கு எதிர்மறையாயுள்ள பொய், கோபம் அற்பத்தன்மை, செருக்கு, கொடுமை, அவா முதலியவை ஆத்மாவுக்குத் துன்பத்தையுண்டாக்கும் துர்க்குணங்களாம்.

சந்திர:—இப்பொழுது தாங்கள் சொல்லிய நற்குண துர்க்குணங்களைப் பற்றி விவரித்துச் சொல்லவேண்டிய திருக்கின்றதா?

து:—இவையெல்லாம் பிறர் விஷயத்தில் நாம் நடந்து கொள்ளவேண்டிய தர்மங்களில் வரும். ஆயினும் அவற்றின் விஷயமாய் இப்பொழுது கொஞ்சம் சொல்லுகின்றேன். சகலவித நன்மைகளுக்கும் சத்தியமே மூலகாரணமானது; உயிர் போகும்படியான ஆபத்து வந்தாலும் நாம் சத்தியத்தை விடலாகாது. [illegible]ளபொருளெல்லாம் போனபோதிலும் உண்மையையே சொல்லவேண்டும். [illegible]லோகத்தின் சங்கதி அப்படியிருக்க, நாம் எள்ளளவு பொய் சொன்னாலும் இவ்வுலகத்திற்கூட கம்பட்டத்தில் எல்லாருக்கும் நம்பிக்கைபோய், பலவித கஷ்டங்களும் உண்டாகும்.

சந்திர:—நாம் எந்த விஷயத்திற்காகவாவது பொய் சொல்லலாகுமா?

து:—சுத்தமாய்ச் சொல்லவேகூடாது. பொய்க்கு நாம் ஒருவிஷயத்தில் இடங்கொடுத்தோமானால், இரண்டாவதிலும் பொய்பேசபுத்திபுண்டாகி வரவர நாம் பொய்க்குப்பிறந்த வீடுகளாகித் துன்பம் அடைவோம்.

சந்திர:—சத்தியத்தைப் பற்றித் தாங்கள் இப்பொழுது சொன்னதைக்கொண்டு யோசிக்குமளவில் நாம் எல்லா சமயங்களிலும் சாந்தம் முதலான குணங்களையே மேற்கொண்டிருக்கவேண்டுமென்றும் கோபம் முதலியவற்றை எப்பொழுதும் நம்மிடம் சேரவொட்டாது தடுக்கவேண்டுமென்றும் தோன்றுகிறது.

து:—பொய், அற்பத்தன்மை, செருக்கு, கொடுமை, முதலியவற்றை எப்பொழுதும் நம்மை அணுகாமலிருக்கச் செய்வது அவசியமாயினும், நாம் அப்

போதைக் கப்போது தக்கவாறு கோபம் முதலிய சிலவற்றை க
டிருக்கவேண்டி வரும். ஒரு வேலைக்காரனாவது சிறுபிள்ளையில் நாட்டிக்கொண்
செய்யுங்கால், அவன் மீது கோபம் கொள்ளாம லிருப்போமாயின் ரவாவது குற்றம்
த்தை துர்மார்க்கத்திற் செல்ல, அவன் கெட்டுப்போவான். ஆகவே ம ... அவன் நட
ணம் ஒன்று மில்லாமல் பிறரது நன்மையின் பொருட்டுத் தக்கப்படி ... கட்ட என்
காலங்களில் நாம் கோபத்தைக்காட்டலாம் அப்படியே நியாயமான வி... ரியான
ஆம் நாம்ஆசைவைக்கவும். பேராசையைமாத்திரம் ஒழிக்கவேண்டும். ...யங்களி

சந்திர:—மற்ற நற்குணங்களைப் பற்றியும்சொல்லவேண்டியது ஏதேனுமிருந்
தால் என்னிடத்தல் தயவுகூர்ந்து சொல்லவேண்டும்

குரு:—விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டியதில்லை. சாந்தகுணத்தினால் நமக்
குள்ள நற்குணங்களெல்லாம் இன்னும் அதிகசிறப்புடன் விளங்கும் வேலைக்
காரர்களும் தோழர்களும் நம்மேல் அதிக அன்புள்ளவராவர் ஆபத்து வருங்கா
லத்தில் முக்கியமாய் நாம் தைரியங்கொண்டிருக்கவேண்டும் அந்தத்தைரியத்தைக்
கைவிடுவோமாகில், அதனால் நமக்குக்கூடிவருவது ஒன்றுமில்லாமற் போவதுடன்
ஆபத்து இரட்டித்தனையாய்த் தோன்றி அதிகதுக்கத்தை உண்டாக்கி வைக்கும்.
தைரியத்தை மேற்கொள்வதால் வந்த ஆபத்தில் பாதிகுறைந்துபோகும். வினயத்
தோடுநடந்து கொள்ளுமிடத்தில், சகலஜனங்களுக்கும் நம்மேல்நல்லபிப்பிராயமுண்
டாகும் அடக்கத்தினால் நமது துர்க்குணங்களைக் கூடப்பிறர் பாராட்டாமல்...
அவற்றை நற்குணங்களாகவே கருதுவர். கர்வமுள்ளவர்களாய் நாம் தலைகொழு
த்துநடப்போமாயின் நம் நற்குணங்கள்கூட துர்க்குணங்களாகவே காணப்படும்...
முறைமை ... எல்லாவற்றிலும் தயையானது மிகவும் சிறந்ததாம். அதற்கு மிஞ்சி...
நற்குணங்கள் வையன்றி ஸ்திரீகள் ... இடையாது. திருப்தியில்லா திருக்குமிடத்தி... ...
னதர்மம் மற்ற ... கையல் வேலையைப் ... பயும் பெறவும்
துக்கு எந்நாளும்சுகமே உண்டாகாது. நாம் காரியங்களைச் செய்வதிலும் கல்... கள் ... ரலில்
பொருளைச் சம்பாதிப்பதிலும் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் நமக்குக் ...ன்று, புரு
வுள் அளித்துள்ளது மட்டும் திருப்தியடைந்திருத்தல் வேண்டும்.

[இன்னும் வரும்.]

மஹேச குமார சர்மா.

அவனுக்கு
...தயாகும்.
...ா வீட்டி
விசாரிக்க
...ா நோய்
...ல் பார்த்
...து கர்ப்
...யங்களு
...ா வைத்
...ல்லாத
காரியம்
காவது



## ஸ்தல விசேஷம்.

### I

[இம்மகுடத்தின் கீழ் ஒவ்வோர் விசேஷ ஸ்தலங்களின் சரித்திரங்களும்,
அவற்றால் நாம் கற்கவேண்டிய சிற்சில உண்மைகளும் வெளியிடப்படும். இச்சஞ்
சிகையில் வரைவதற்கென்று தேர்ந்தெடுத்தது திருவாங்கூர் சமஸ்தானத்தில்
வடக்கேயுள்ளதோர் விசேஷஸ்தலம்].

ஏறக்குறைய 400-500 வருஷங்களுக்கு முன்னமே, மிகவும் பக்திமானென்
றுபெயர்பெற்று யோகாப்பியாசங்களில் பயின்றிருந்த ஒருவரிருந்தார். இல்லற
வாழ்க்கையில் பல தருமங்களை நடத்தியபின் அவர் சந்நியாஸ நியமங்கள் ஏற்
றுக்கொண்டவர். அவரையொத்த சந்நியாசிகள் இன்றிருந்தவிடம் நாளையிரா
ர ... யின் இவர்தேச சஞ்சாரம் செய்து கொண்டுவந்தார். அவரிடத்து சீடனாய்
ஊழியஞ் செய்துகொண்டு ராமன் என்று ஒருவனிருந்தான். ராமனுக்கு எழு
தவாவது படிக்கவாவது சிறிதும் தெரியாது. இவரிடத்திருந்தால் தனக்கும்
சோறு சரியாய்க்கப்படுகிறதென்ற ஓர் காரணத்தினாலேயே அவன் இங்கிருந்
தான். குருவும் தனக்கிவன் மிகவுமுபயோகமாய் வேஷ்டி துவைத்தும் பாத்தி
ரங்களைத்தேய்த்தும் மற்றுமுள்ள சில்லறைவேலைகளைச் செய்துகொண்டும் வந்
ததனால், இவனைத்தன் சீடனென்றே யழைத்துவந்தார்.

இப்படிக் குருவும் சீடனுமாய் வெகுநாள் கழித்து வெவ்வேறு ஸ்தலங்கள்
தரிசித்துவருகையில், ஒருநாள் ராமனுக்கு ஒருபெரிய சந்தேகமுண்டாயிற்று.
தன் எஜமானன் ஏன் இப்படி இன்றிருந்தவிடம் நாளையிருக்காது சஞ்சரித்துக்
கொண்டிருக்கிறாரென்பது, அவனுக்கு ஓர் விசித்ரமாயிருந்தது. இதற்காக
அவன் ஒருநாள் மித்யபயபக்தியுடன் தன் எஜமானனை நெருங்கி "சுவாமி! எனக்
கொரு பெரிய சந்தேகமுண்டாயிருக்கின்றது. அதைத்தாங்கள் தான் நிவர்த்தி
செய்யவேண்டும்" என்றான். அதற்கவர் "அதென்னடா அப்பேற்பட்ட சந்
தேகம்? அன்று சர்க்கரை என் தித்திப்பாயிருக்கிறதென்று கேட்டாயே! அம்
மாதிரியான சந்தேகந்தானோ இதுவும்" என்றார். உடனே ராமன் "இல்லை
யில்லை சுவாமி. நீங்களேன் ஊரூராய் இப்படி யாத்திரை செய்துகொண்டிருக்
கிறீர்கள்? ஓரூரில் ஏன் இருக்கவில்லை? இதுதான் எனக்குள்ள சந்தேகம்.
இதைத் தாங்கள் நிவர்த்திசெய்யவேண்டும்" என்றான் இதுகேட்டு குரு "வெகு
நன்றாயிருக்கிறது உன் சந்தேகங்கள். இதுகூடத் தெரியாதா உனக்கு? நாங்
கள் உலகத்தையெல்லாம் துறந்தவரன்றோ? துறந்து இவ்வுலகத்திற்கெல்லாம்
முதற்காரணமாயுள்ள கடவுளைத்தேடி அடையவேண்டித்தான் நாங்கள் இப்படி
யாத்திரைசெய்து கொண்டிருக்கிறோம். ஓரிடத்திலேயே நாங்கள் இருப்போ
மானால் எங்களுக்கு அவ்விடத்தில் பற்றுவேரிடும். அப்பொழுது எங்களெண்
ணம் பூர்த்தியாகாது. நாங்களும் அப்பரம்பொருளைக் காணமுடியாது" என்றார்.

இரா. பரம்பொருளென்கிறீர்களே, அதெப்படியிருக்கும்?

குரு. உனக்கவையெல்லாம் என்? அதெப்படியிருந்தா லென்ன?

இரா. இல்லை; தயவுசெய்து சொல்லவேண்டும்.

குரு. சொன்னால் உனக்குத் தெரியாது; சும்மாவிரு; இனிமேல் என்னைத் தொந்தரை செய்யாதே.

இரா. கட்டாயம் சொல்லியே தீரவேண்டும்.

குரு. சொன்னால் கேழ்க்கமாட்டாயா? உனக்கொன்றும் தெரியாது.

இராமன் பிடித்தபிடியை விடாது குரு பலவாறு ஆக்ஷேபித்தும் சொல்லியே தீரவேண்டும் என்றதனால் சுவாமிக்குக் கோபம் வந்து "அது எருமைக்கடாவைப்போலிருக்கும்; தெரிந்ததா?" இதுமுதல் இராமனும் எருமைக்கடாவொன்றை மனதில் நினைத்து அதையே பரமனாக பாவித்து மனப்பூர்வமாய் பக்திபண்ணிவந்தான். எப்பொழுதும் அவன் மனதில் எருமைக்கடாரூபமாய் பரமன் ஞாபகம்தான்; சாப்பிடும்பொழுதும் அவன் ஞாபகமே; தூங்கும்பொழுதும் கனவிலும் அவன் ஞாபகமே. இப்படி விரதத்துடன் அவன் தன்னை மனதில் நினைத்து உருகுவதைக் கண்ட கடவுளும் ஒருநாள் அவனுக்கு மஹிஷரூபமாகவே தரிசனந்தந்தருளி, அவனதுள்ளத்திருளையும் நீக்கினார். அதன்பின் அவனுடைய பக்தியும் பதின்மடங்கதிகரித்தது. பரந்தாமனது ஸ்வரூபத்தை நினைக்கநினைக்க அவனதுள்ளம் பூரித்தது. காணாத தாய் கண்டசேய்போல் அவன் எப்பொழுதும் தனதருமை எருமையை நினைத்து ஆனந்த ஸாகரத்தில் மூழ்குவான். இப்படி அவன் தன்னைக்குறித்து பக்திபண்ணுவதைப் பார்த்து பரமனும் தன் பக்தனுக்காக அவனுடைய வேலைகளனைத்தையும் தானே செய்துவந்தார். அவனும் ஒரு கவலையுமற்று நாளுக்குநாள் பக்தியிலதிகரித்து இரவும் பகலும் இடைவிடாது எருமை தியானம் செய்துவந்தான். தன் வேலைக்காரனை இராமன் முன்போலிராது ஒருவித ஆனந்தத்தில் மூழ்கியிருப்பதுகண்டு அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்றே குரு நிச்சயித்தார். ஆயினும் பைத்தியமென்றாலும் தான் போகுமிடத்திற்கெல்லாம் அவனும் வந்துவிடுகிறான். ஆனால் அவன் தன் துணிமணிகளை ஒன்றையாயினும் கையினால் தொடுவதில்லை. அவைகள் தானாகவே தான் போகுமிடம்வந்து சேர்ந்துகொண்டிருந்தன. இவற்றால அவர் சிறிது சந்தேகங்கொண்டு மெல்ல இராமனைக் கூப்பிட்டு "அடா என்ன விசேஷம் என் துணி மணிகளையெல்லாம் நீ கொண்டுவர நான் காணேனே. வேறு யார் எடுத்துவருகின்றார்கள். உண்மையைச் சொல்" என்றார். அதற்கு இராமன் "சுவாமி நீங்கள் அன்று எருமைக்கடா என்று சொன்னீர்களே; அதுதான் உங்கள் பூஜைப் பெட்டியையும் மூட்டையையும் எடுத்துக்கொண்டு வருகிறது" என்றான். இதுகேட்ட யோகி தான் அன்று சொன்னதையும் அதன்மேல் நடந்த சங்கதிகளனைத்தையும் ஊகித்து திடுக்கிட்டு கைகால் நடுங்க இராமன் காலில் விழுந்து "ஐயா நீரல்லவோ எனக்குக் குரு? உமக்குக் காட்டிக்கொடுக்க இஷ்டமில்லாயலல்லவோ நான் எருமைக்கடா வென்று



சொன்னேன். நீர்காணும் அக்கடாவை எனக்கும் சற்றுக்காட்டிக்கொடும் என்று "பல்லெலாம் தெரியக்காட்டி" கெஞ்சிக்கேட்டான். யோகி இப்படிச் செய்வதை இராமன் பார்த்து ஆச்சரியமடைந்து "இதோ யிருக்கின்றதே எருமை அது உமக்குத் தெரியவில்லையா?" என்றுகேட்டான். அவன் பக்தன்; அவனுக்குத் தெரியும்; இப்பாம பாவிக்கு எப்படித்தெரியும்? யோகியோ "ஐயோ நான் மஹா பாதகன்: எனக்குச்சற்று தரிசனம் செய்துவையு"மென்று கதறினான். இதைக்கேழ்க்கவும் இராமன் முன்னிலும் பதின்மடங்கு ஆச்சரியமடைந்து இதோ இருக்கின்றதே உமக்குத் தெரியவில்லையா என்று சொல்லித் தன் கையிலிருந்த தடியால் யோகியை மெல்லத்தொட்டான். தடி அவன்மேல் படவும் அவன்மிகவும் பரிசுத்தவானாயினான். கடவுளாகிய எருமையும் அவன் கண்ணுக்குப் புலப்பட்டது; யோகியும் அதைக்கண்டு மிக்க ஆனந்தமடைந்தான். ஆனால் இராமன் அவன்மேல்வைத்த தடியை எடுத்தவுடன் அவன் பரிசுத்தமும் போய் பழையபடி யோகியாயினான். எருமையும் மறைந்து போய்விட்டது. பிறகு அவன் தன்பக்தி போதாதென்றறிந்து முன்னிலும் அதிக பயபக்தியுடன் கடவுளின் திருநாமத்தை பஜிக்கவாரம்பித்தான். கடைசியில் அவனும் பரமபதத்தை யடைந்தான். இக்கதையில் எருமைமறைந்த இடம் திருவாங்கூர் வடபாகத்தில 'போத்துமார்' என்றழைக்கப்பட்டு வருகிறது. மலையாளபாஷையில் 'போத்து' என்றால் எருமை என்றருத்தம் 'மார்' என்றால் மாறின இடம். ஆகையால் போத்துமார் என்றால் எருமை மாறின இடமென்று பொருளாகும்.

செம்பகம்மாள்.

## கடன் கொள்ளல்.

"கடனுண்டு வாழாமை காண்டலினிதே" என்னும் இப் பெரியோரின் வாக்கை இந்தியாவில் அனைவரும் கவனிக்கவேண்டியது அவசியம். இவ்வுலகத்தில் ஒவ்வொருவனும் அநுபவித்துவரும் துன்பங்கள் பலவற்றிலும் மிகக் கொடியது கடன்பட்டு வாழ்தலாம். இக்காலத்தில் நமது நாட்டிலே கடன்பெறுவது சாதாரணமான வழக்கமாய்விட்டது. கோட்டி முதல் தொண்டைமான் வரையில் கடன்படுவதிலேயே கண்ணோக்கமாய் இருக்கிறார்கள். கையிலுள்ள பணத்தையெல்லாம் வீணே செலவழித்துவிட்டு மனம்வருந்திக் கலங்குகின்றார்கள். பணம் உள்ள செல்வவான்களைக் கடன்கேட்டாலோ அவர்கள் சொ

லிலும் வட்டியும், தவணையும் கவனித்து நடத்தல் வேண்டும். இதுவுமன்றி ஏழையர்கள் கடன்வாங்கப்படும் பாட்டைக் கவனித்தால் மனம் திகைக்கின்றது. கடன் கொடுக்க வல்லாரிடத்தில் போதலும் அவர் கேட்கும் நிபந்தனைக்கு ஒத்தலும், அவர்களுக்குக் கடனைக்கொடுக்கும் காலத்தே கொடாது சிறுமைப்படுதலும், கன்மனம் உடையாரையும் அனலில் இட்ட மெழுகுபோல உருக்கக்கூடியதா யிருக்கிறது. உடலுக்கு ஏதேனும் நோய் வந்தால் அதை ஔஷத மூலங்களால் போக்கற்கூடும். மனதுக்கு நோய்வந்தாலோ நாளடைவில் உடலை மாத்திரம் வைத்து உயிரைவாட்டி ஏதொன்றிலும் கவனிக்கச் சாத்தியம் இல்லாப் பித்தனைப்போலாட்டுகிறது. நாளாக ஆக உயிரையும் உட்கொள்ளும். இக்கொடுந்துன்பங்கள் வாராவண்ணம் தடுக்கவேண்டியது அறிவுடையார் கடமையாகும். சிற்சில சமயங்களிலே அரசரும் வணிகரும் கடன்கொள்ளவேண்டியது, இன்றியமையாததாய் நேருகின்றது. இத்தகைய காலங்களிலே கடன்வாங்கியோர் தமக்குள்ள வருவாயைக் கவனித்து வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுத்தல் வேண்டும். அப்படிச் செய்யத்தவறின் நம்பிக்கைத்துரோகம் செய்தாரேயாகில், நாணயம் தப்பியதாகும். இதனையே, உதாரணமாய்க்கொண்டு, முக்கியமாய்க் கடன்வாங்கித் தீரவேண்டிய ஏழைகளுக்கும் கடன்வாங்க வழியில்லாமல், மிகக் கொடுமைப்பட வழியாகும். பெருந்தனக்காரராய் வாழ்வோரும் தமது கையிலுள்ள பொருளை யெல்லாம் செலவழித்து அபரிமிதமான கடனைக் கொண்டு, திருப்பி அதைத் தீர்க்கவழியறியாதே கடன்காரரிடத்தில் படும்பாடோ புண்ணிற்கோலிடுவதுபோல ஆற்றொணாத் துன்பத்தைத் தருகிறது. இப்படி இவர்கள் படுங்கடனும், செய்யும் செலவும் நேரியனவோ என்பதைப் பற்றியும் இப்படிச் செய்வதினால் விளையும் எண்ணிறந்த தீங்குகளைப்பற்றியும், இவைகளை நீக்க நாம் செய்யக்கூடிய உபாயங்களைப்பற்றியும் சிறிது ஆலோசிப்போம்.

நம்மவர்கள் கடன்படும் விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கையில், அவைகளை இரண்டு பிரிவாக ஒருவாறு வரையறுத்துக் கூறலாம்.

முதலாவது : வீண்வழக்குகளில் இறங்கிப் போட்டியே மேலாகக் கொண்டு கடன் வாங்கிச் செலவழித்தல். இரண்டாவது : பெருந்தனக்காரர்கள் செய்யும் விஷயங்களைக் கவனித்துத் தாமும் போலிச்செல்வர்களாகித் தமது பதவியறியாது வீணே செலவிட்டுக் கடன் படுதல்.

முதற்காரணமோ மிகக் கொடியது. வழக்குண்டான காரணத்தைப்பற்றி ஆலோசித்தால் அது மிக ஸ்வல்பமாயிருக்கும். பின்னால் கடனால் வரும் பாரபத்துக்களை முன்னாலேயே ஆராய்ந்து பார்த்திருந்தால், இவர்கள் வழக்குக்குச் சென்றிருக்கவேமாட்டார். வழக்கென்று பேரிட்டுக்கொண்டு நியாயஸ்தலங்களுக்குச் சென்றுவிட்டால், இவர்களின் செலவுக் கணக்கிடலியலாது. வக்கீல்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும், சாட்சிகளுக்கும் பணம் கொடுத்து உதவி செய்யலையும், பிரயாணச் செலவையும், நியாயஸ்தலத்தில் ஸ்டாம்புக் கிரயம்



முதலிய செலவுகளையும், கவனித்தால் மிகக் கொடுமையாய் இருக்கும். "எரிகிற வீட்டில் கொண்டமட்டும் லாபம்" என்றும் பணம் கொள்ள சந்தர்ப்பம் வாய்த்தோர் சிறிதும் பின்னிடையார். ஒரு வழக்கினின்று பல வழக்குகள் தொடரும். "சாட்சிக்காரன் காலில் விழுவதினும் சண்டைக்காரன் காலில் விழலாகாதோ" என்று வழக்காளி எண்ணுவானே ஒழிய ஒரு சமாதானத்துக்கும் உடன்படமாட்டான். ஜயம் தமது பட்சமானால் சகல கடன்களையும் தீர்க்க முன் வருவேனென்று ஒருவன் எண்ணி மேன்மேலும் கடன்கொள்வான். கடைசியிலே செப்பறியாப் பெருந்துயருக்குள்ளாவான். தோற்றவன் உடனே கெட்டான். ஜயித்தவன் சில நாளையிலே கெடுவான். கானலை நீரெனக் கருதி இவ்வண்ணம் கைப்பொருளை வெறுமனே அழித்துத் தன் சொத்தும் இழந்து பிறரிடம் கடன் கொண்டதையும் இழந்து அல்லற்படுவான்.

இவ்வழக்காளிகளைவிட போலிச் செல்வர்கள் செய்யும் செலவு அதிகமாக வருந்தற்பாலது. பெருந்தனக்காரன் செய்யும் செலவுக்கு நாம் பின்னிடைதல் கூடாதென்று தம் இயல்பினையும் நிலையினையும் ஓராது வீணே டம்பத்துக்காகச் செலவு செய்வோன் பேதைமை யென்னே! தன் சொந்தப் பணத்தை இவ்வண்ணம் மிதமின்றி அழிக்கினும் ஒருவாறு ஆற்றல் கொள்ளலாம். பிறர் வருந்திப் பாடுபட்டு மிகுத்திருக்கும் பணத்தைக் கடனாகக் கொண்டு நிலையறியாது செலவழிக்கும் இன்னோர் நிலைமை எத்தனை பரிதாபப்படத்தக்கது. இப்பொருளைச் சிறிதும் கவனியாது வாரி இறைப்பது எவ்வளவு அறிவீனம்! கடன்பட்டுக் கொடுக்க வழியறியான் காலம் கழிப்பதினும் பிச்சையெடுத்துக் காலம் கழிப்பது மேலன்றோ? கடன் கொடுத்தவனைக் கண்டால் கடன் பட்டவன் தலை குனிந்து மனம் வருந்துவதை என்னென்றுரைக்கலாம்? இவன் படும் சஞ்சலத்தை யாரே எடுத்துரைக்கவல்லார்? இதை நன்கனம் அறிந்தன்றோ கல்வியிற் பெரிய கம்பன் "கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்". என்றார், இராமகதையிலும். இந்நாட்டில் கடன் வாங்கும் காலத்தே இவ்வண்ணம் நேரும் கஷ்டங்களை ஆலோசனை செய்வதே இல்லை—எவ்விதமான கொடிய நிபந்தனைகளிருந்தும் அவைகளுக்கெல்லாம் இணங்கியே கடன் கொள்ளுகிறார்கள். கடன்காரன் பின்வந்து நெருக்கினால் வேறொருவரிடத்தே கடன் வாங்கி அவன் தொல்லையைத் தீர்ப்பர். இவ்வண்ணமாய்த் தம் காலத்தை யொழித்துத் தமது வாழ்நாளை யெல்லாம் வீணாய்ச் செய்து காலங் கழிப்பார். இக்கொடிய கடனால் நம் நாட்டில் எத்தனை செல்வர் பதவி யிழந்தனர். எத்தனை ஜமீன்தார் நாட்டை யிழந்துத் தமக்கு ஜாமீன் கொடுக்க வேறு உதவியைத் தேடினர். எத்தனை பெயர் தமது நாடுவிட்டுவேறிடம் போந்து மறைந்து, மானம் அழிந்தனர். எத்தனை பெயர் கடன்காரர்செய்யும் அவமானத்துக்கு மனம் உடைந்து பொறுக்கலாகாது உயிர் துறந்தனர். பயிர் வயல்களில் நிறைந்து அறுக்கும் காலத்தில் கடன்காரன் வந்து உள்ளதை எடுத்துப்போவான். ஆகையின் கடனால் வரும் தீங்குகளை நன்றாய் ஆராய்ந்து கடன் பெறுவார் மிகவும் கவனித்தல் இன்றியமையாதது.

# ஸதி.

(32-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

வீட்டிற்குச் சென்று தன் இஷ்டத்தை நிறைவேற்றும் பொருட்டு ஸுசீலரைக் குறித்து பலவிதமாய்ச் சம்பாஷணைகள் செய்ய கிரீசர் ஆரம்பித்தனர் 'ஸுசீலரே! தங்கள் குழந்தையை நம்குமாரனுக்குக் கொடுக்க வேணுமென்று தங்களுக்கிருக்கும் இஷ்டத்தை எனக்குத் தாங்கள் நேரில் வெளியிட்டிருக்கலாமே. இதற்கு என்ன: அநேகம் மனிஷியாளைக் கொண்டு எனக்கு நீர் சொல்லச்சொல்வானேன். நேரில் நாமிருவரும் பேசிக்கொண்டால் எவ்வளவோ சௌகரியமாய் இருக்கும். இதற்கு சிபார்சு என்ன. உம்இஷ்டத்தை நமக்கு வெளியிட்டால் நம்மிஷ்டத்தை உமக்கு வெளியிட்டு ஏதோ ஒரு முடிவிக்கு நாமிருவரும் வரலாமே. அதை விட்டுவிட்டு, வேறு யாரோசிலரை நீர் வரும்படி சொன்னபடியால் நான் அவர்களுக்கு முகங்கூட கொடுத்துப் பேசவில்லை. சரி நாமிருவரும் நம் சுப்பிரமணியன் தாயாருடன் கலந்து பேசி லௌகீக விஷயங்களை முடித்துவருவோம். உள்ளே வாருங்கள்' என்றார்.

'சரிதான். ஜாதகரீதிகளைப் பார்த்துக்கொண்டு லௌகீக விஷயங்களைப் பேசிக்கொள்வோமே" என்று ஸுசீலன் சொல்ல 'லௌகீக விஷயங்களுக்கு நீர் சம்மதித்தால் ஜாதக விஷயங்கள் தானே சரியாய்ப்போம் வாரும், வாரும்' என்றார்.

இருவரும் உள்ளே போவதும், கிரீசர் சம்சாரம், ஸுசீலருக்கு சில பக்ஷணங்கள் கொண்டு வைத்து அவருக்கு உபசாரம் செய்தபிறகு பின்வருமாறு சம்பாஷணைகள் ஆரம்பித்தார். 'என்ன விசேஷம் இவ்விடம் ஸுசீலர் வந்தது' என்று கிரீசர் பாரியை லக்ஷ்மி யம்மாள் வினவ, 'என் சிநேகிதர் கிரீசருடன் இவ்விடம் ஒரு தடவை வந்து விட்டுவரலாமென்று எண்ணங்கொண்டு வந்தேன். நம்குட்டி ஸதிக்குக் கலியாணம் செய்யவேண்டிய வயது நெருங்கிவிட்டது என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? அதற்காக வெகுநாளாய் ஒருவரன் தேடிக்கொண்டிருக்கிறேன்! என்று சொல்வதற்கு முன் கிரீசர் 'உனக்குத்தெரியாதா சமாசாரம் வரசீலர்பட்ட கோபாலனுக்கு ஸதியைக்கொடுப்பதாக நிச்சயத்திருந்த விஷயம் முடிவுக்கு வந்து நம்மாத்திற்குக் கலியாணம் சொல்ல வந்திருக்கிறார்? என்று பரிகாசமாய்ச் சொன்னார். அதற்கு கிரீசர் 'நீர்பரிகாசம் செய்யமாட்டீரா? உமக்கு ஒருபெண் இருந்தால் தெரியும். சரி, அது அப்படியேயிருக்கட்டும். நான் இப்பொழுது இங்கேவந்த விஷயம் என்னவென்றால், உங்கள் புத்திரன் சுப்பிரமணியனுக்கு நம் குழந்தையை விவாகம் செய்து கொடுக்கவேணுமென்கிற என் இஷ்டத்தை உங்களுக்குத் தெரிவித்துக் கலியாணத்தை நிச்சயம்செய்து இன்னும் பத்துநாளில் முகூர்த்தத்தை நிறைவேற்றி வைக்க வேணுமென்கிற விஷயம்தான் என்று கிரீசர்சொன்னார். கலியாணமென்றால்



சும்மாத்தானா? பொண்ணென்றால் பொன்னல்லவா? மாப்பிள்ளை எல்வசமாய்க் கிடைப்பான். கஷ்டப்படவேண்டியது நியாயம்தானே? என்று லக்ஷ்மீ ஒரு புன்சிரிப்போடு ஒருவிதானந்தத் துடனும் நகைப்புடனும் சொன்னாள். 'சரிதான் வாயால் வெகுசுலபமாய்ச் சொல்லிவிட்டீர்கள் அந்தஸ்தியில் இருந்தால் உங்களுக்கு அந்தவிஷயம் தெரியும்? எப்படியாவது நீங்கள் இந்த விவாஹத்தை முடித்துவைத்து அநுக்கிரகம் செய்யவேண்டுமே! என்று வரசீலர் வெகு சிரத்தையுடன் சொன்னதற்கு 'அதற்கென்ன, 3000 ரூபாய் செலவழித்தீராகில் கலியாணம் முடிந்துபோய் விடுகிறது. இதற்கென்ன இப்போ? எங்களுக்கு 1500 ரூபாய் பணம் கொடுத்துவிடும். மாப்பிள்ளைக்கு 500 ரூபாய்க்கு சீர்வரிசையாக்கள் செய்யும். மற்றசிலவிற்கு 1000 ரூபாய் வைத்துக்கொள்ளும். கலியாணம் நாளில் நடந்துவிடுகிறது என்று லக்ஷ்மியம்மாள் மந்தஹாஸத்துடன் சொன்னாள். அவ்வளவு சிலவழிக்கச் சக்தியிருந்தால் இவ்வளவு சிரமப்படமாட்டேனே. நான் அதிகப்பணக்காரனல்ல. ஏதோ 500 ரூபாய் சிலவழித்துக் குழந்தையை ஏதோ கொஞ்சம் ஐவேஜியோடு கூடினவும், நல்ல புத்திசாலுமாயிருக்கிற ஒருபையனுக்குக் கொடுக்கலாமென்று நிச்சித்திருக்கிறேன். சுவாமி யென்ன நினைத்திருக்கிறாரோ தெரியவில்லை' யென்றார் ஸுசீலர். "அந்தப் பாச்சா பலிக்காது. ரூபாய் 1500 நீர் கொடுத்துவிட வேண்டியது. அப்பொழுது தான் ஸதியை சுப்பிரமணியனுக்குக் கலியாணம் செய்து கொள்வேன் என்னங்காணும்? இப்பொழுது 1500 ரூபாய் கொடுத்தீரானால், பிறகு மாப்பிள்ளையினிடமிருந்து இரண்டு 1500 ரூபாய் உமக்கு மணியார்டர் வந்துவிடுகிறது. இதற்கு என்னயோசனை 1500 ரூபாய் இந்த நிமிஷம் வந்தாலும் இப்பொழுதே கலியாணம் நிச்சயம்தான். சம்மதந்தானே சொல்லவும். என்னசந்தேகம் எங்கள் பிள்ளை நொண்டியா முடமா? வாசிக்கவில்லையா, அழகா - இல்லையா. மன்மதன் மாதிரியாயிருக்கும் என் பிள்ளைக்கு 1500 ரூபாய் கொடுக்க உமக்கு இலவிக்கிறதோ? அடுத்தாத்துக் கிருஷ்ண ஸாமிக்கு 1000 ரூபாய் கொடுத்ததை நீர் நேரில்தானே பார்த்துக்கொண்டிருந்தீர். அவனுக்கு என்ன ஐவேஜியாயிருக்கிறது. இன்றைக்குச் செத்தால் நாளைக்கு ஏற்றுவதற்கு விளக்கில்லை எண்ணெயில்லை கஞ்சிக்கு ஆம்படையாள் பரக்கவேணும் நிலம் நன்னிலம் வேலி திருநெல்வேலி ஏதோ B. A. பரீக்ஷைக்குப் பணம் கட்டப்போகிறானாம் இதற்காக 1000 ரூபாயாம் அப்படியிருக்கும் பொழுது எங்கள் குழந்தைக்கு நீர் 1500 ரூபாய் கொடுக்கக்கூடாதா இது உம்மதிர்ஷ்டம் ஏதோ மலிவாய்க்கிடைக்கும் போலிருக்கிறது நீர் அதுகூட கொடுக்கமுடியாத போனால் நான் என்னசெய்வேன் 1500ரூபாய் கொடுத்துவிடுங்கள். நீங்கள் என்றைக்கு எங்களைப்புறப்பட வரச்சொல்லுகிறீர்களோ, அன்றைக்கு நாங்கள் கலியாணத்திற்கு வந்துவிடுகிறோம் என்றான். அதெல்லாம் வீண் வார்த்தை. 1000 ரூபாய் தருகிறேன். கலியாணத்திற்கு 500ரூபாய் செலவழிக்கிறேன். கலியாணத்தை நீங்கள் முடித்து விடத்தான் வேணும். இல்லாவிடில் இவ்விடத்திலேயே தற்கொலை செய்துகொண்டு விடுவேன். என்றால் சிவன் அதற்குப்போனால் போகிறது "உமக்கும் வேண்

டாம். நமக்கும் வேண்டாம், 1250 ரூபாய் கொடுத்து 250 ரூபாய்க்கு சீர்செய்துவிடும்" என்றாள் லக்ஷ்மி. ஆனால் அநேகமாய் விதமாய் மாற்றி, 1000 ரூபாய்க்கு லக்ஷ்மியினிடத்தில் முடிவுசெய்துகொண்டு, முகூர்த்தம் நடத்துவதற்கு ஆயத்தம் செய்து வைகாசி மீ 10 உ ஞாயிற்றுக்கிழமைதினம் முகூர்த்தம் நடத்துவதாய் நிச்சயம் செய்து, கிரீசரிடத்தில் பத்திரிகைவாங்கிக்கொண்டு கிரகத்தை நோக்கிச்சென்று தன் குமாரிக்கு, அவள் இஷ்டப்பிரகாரம் கலியாணம் நிச்சயமானதைச் சொல்லிவெகு சந்தோஷத்துடன் கலியாண முகூர்த்தத்தை நடப்பிக்க ஏற்பாடுகள், செய்ய கிரீசர் ஆரம்பித்தார்.

எல். நாராயணசாமி அய்யர், பி. ஏ.

# விநோத விஷயங்கள்.

## விவாக தினத்தில் ஓர் விநோதச்சடங்கு.

மரத்தில் ஏறி மறைந்துகொள்ளும் மணப்பெண்களைப் பற்றியும் அவர்களைத் தேடித் திரிந்து அலைகையில் உதையும் கிள்ளும் மிதியும் வாங்கும் மாப்பிளை (மணமகன்) களைப்பற்றியும் அறிய அநேகர் ஆவல்கொண்டிருப்பார்கள் என்பதற்குஐயமில்லை:

சீனதேசத்தில் மேற்குப் பாகத்தில் "லோலர்" (Lolos, என்ற ஜாதியார் வசித்துவருகின்றனர். இவர்களுக்குள்ளே வியப்பிற்கும் நகைப்பிற்கும் இடமான விநோதச் சடங்கொன்று விவாகதினத்தில் நடந்து வருகின்றது. அஃதென்னவெனில், கல்யாண தினத்தன்று, காலைவேளையில், மணப்பெண்ணானவள், ஓங்கி உயர்ந்த ஓர் மரத்தில் உன்னதமான ஓர் கொப்பில் ஏறிஉட்கார்ந்து ஒளிந்து கொள்ளுவாள். அவளுக்குக் கீழே அம்மரத்தின் மற்றக் கொப்புகளில் மணமகளின் அத்தை, தாய், பாட்டி தமக்கை முதலாயினோர் கோலும் கையுமாகச் சூழ்ந்து உட்கார்ந்திருப்பர். சிறிது நேரத்திற் கெல்லாம் மணமகன் காதலியை எங்குந் தேடித்திரிந்து, கடைசியில் இம்மரத்தண்டைவந்து அதில் பெண்ணைக்கண்டு அம்மரத்தின்மேல் ஏறுவன். ஏறிவரும்பொழுதே கையும் கோலுமாகத் தயாராய் உட்கார்ந்திருக்கும் பெண்டுகள் எல்லாரும் அவனை அடித்தும் தள்ளியும் கிள்ளியும் மேற்செல்ல வொட்டாமல் தடுப்பர். இவ்வளவு உபத்திரவங்களையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டு அம்மணமகன் முண்டித் தள்ளி அப்பாற் சென்று மணமகளைத் தொட்டு அவளைக் கீழேகொண்டு வந்தாற்றான் அவனுக்கு அப்பெண் மணமுடிப்பளாம்.



## புருஷர்களே இல்லாத ஊர்.

ருஷியாவிற்கும் சீனாவிற்கும் சமீபத்தில் உள்ள "மைவாட்சின்," என்றஊரே ஸ்திரீகளே இல்லாதஊர், என்று அநேகர் அறிந்திருக்கக்கூடும். புருஷரே இல்லாத ஊர்உள்ளதென்றவிஷயம் சிலர்க்கே தெரியும் இவ்வூர் யாதெனில், இந்தியாவுக்குக் கிழக்கேயுள்ள ஸயாம் (Siam) நாட்டில் இருக்கும் "நாங்க் ஹாரம்" (Nang harm) என்ற நகரமே. இது ஸயாமின் இராஜ தானியாகிய பாங்காக் (Bangkok) குக்கு மத்தியில் உள்ளது. "நாங் ஹாரம்" என்ற பதத்திற்கே 'கோஷாஸ்திரீகள்" என்று அர்த்தம். இந்நகரின் ஜனத்தொகை 9010. இவ்வொன்பதினாயிரம் பேர்களில் புருஷர் ஒருவர் கூடக் கிடையாது. இருப்போர்யாவரும் ஸ்திரீகளும் சிறுகுழந்தைகளுமே. இந்நகரத்திலும் எல்லா நகரங்களிலும் உள்ளதுபோலவே பெரியகடைகள், மார்க்கட்டு (சந்தை)கள், கோவில்கள், நியாயஸ்தலங்கள் நாடகசாலைகள், தெருக்கள் சாலைமரங்கள், உத்தியான வனங்கள், நீதிஸ்தலங்கள், நியாயாதிபதிகள், சிப்பாய்கள், கொலைஞர்கள், போலீஸ்டேஷன்கள், முதலியன உண்டு. இவற்றில் அமர்ந்து வேலைபார்ப்பவர்கள் ஸ்திரீகளே. இந்நகரத்தில் துணிந்து பிரவேசிக்கக்கூடியவர் ஒருவரே. அவர்தான் ஸயாம் அரசர். அந்நகரத்திலுள்ள பிரஜைகளனைவரும் அரசனுடையவும் அவருடைய பாட்டன் பூட்டனுடையவும் பெண் சந்ததிகளே. ஸயாம் அரசர்கள் இஷ்டப்பட்டால் எத்தனைபேரையும் கல்யாணம் செய்துகொள்ளலாம். பலஅரசர்களுக்கும் மனைவியர் அவரினும் பன்மடங் குண்டாதலின் அவர்களுக்கு ஊழியம் செய்ய ஸ்திரீ அடிமைகள் பலர் இருந்தே தீரவேண்டும் அல்லவா? அரசர் மனைவியர் அவர்களுடைய மக்கள், அடிமைகள், அடிமைகளின் மக்கள் இவர்களுடைய சந்ததிகள் முதலியோர் தொகை 9000 ஆக இருப்பது வியப்பிற்கிடமன்றே.

## பெண்கள் பெருகிய ஊர்.

தென் அமெரிக்காவில் தென்பாகத்திலுள்ள பாராகுவே (Paraguay) என்ற தேசத்தில், தெருக்கூட்டுவதும் கப்பல்களில் சாமான்கள் ஏற்றி இறக்குவதும், ஆடுமாடுகள் மேய்த்துக்கட்டுவதும், அந்நிய தேசத்துடன் போர்புரிய ஆயத்தமாக நிற்பதும் இன்னும் மற்றப்படி புருஷர்கள் செய்யவேண்டிய வேலைகளைப் பெரும்பான்மையும் செய்துமுடிப்பதும ஸ்திரீகளே. இதற்குக் காரணம் யாதெனில், அவ்வூரில் புருஷர்கள் தொகையைக் காட்டிலும் ஸ்திரீகள் தொகை 7-மடங்கிற் கதிகமாகவே இருக்கிறது. ஆதலின், அவ்வூர் ஸ்திரீகள் புருஷர்களைத் தம் ஆருயிரினும் அதிகமாக அருமை பெருமையாய்ப் போற்றி வளர்த்து அவர்களுக்கு யாதொரு தீங்கும் எவ்விதத்திலும் நேரிடாவண்ணம் தம்மாலியன்ற அளவு பாதுகாத்து வருகின்றனர்.

## புருஷர்கள் தொகை மிகுந்த ஊர்.

இவ்வுலகத்தில் உள்ள ஜனத்தொகையைக் கணக்கிட்டுப்பார்ப்போமேயானால் ஸ்திரீகள் தொகையே புருஷர்கள் தொகையிலும் மிகுதிப் பட்டிருக்கக் கா

ண்போம். ஆனால் ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள ஈஜிப்ட் (Egypt) தேசம் ஒன்றில் தான் ஸ்திரீகள் தொகையினும் புருஷர் தொகை அதிகப் பட்டிருக்கிறது. அவ்வூரில் ஸ்திரீகளின் தொகை புருஷரின் தொகையைக் காட்டிலும் 160,000 குறைவாகவே இருக்கின்றதெனத் தெரியவருகிறது.

## பெண் அரசாட்சி.

பெண்கள் அரசாள்வது நம்மவர்கட்கு (அதிலும் முக்கியமாய்ப் பெண்பாலருக்கு) அதிக ஆச்சரியத்தை விளைவிக்கிறதல்லவா? உதாரணமாக:— காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியார் பட்டம்பெற்று அரசாளுகையில் எத்தனைபேர் ஆச்சரியப்பட்டவர்கள்! இதற்கு காரணம்யாது? நம்மவர்களுக்குள் பெண்கள் அரசாளும் வழக்கம் இல்லாமையே யன்றோ! அல்லது, விக்டோரியா மகாராணிக்குச் சொந்த சகோதரனாவது சிற்றப்பன் பெரியப்பன் மகனாவது இருந்திருப்பானேல் அவர்க்கிப்பட்டம் கிடைத்திருக்குமா? இராது. ஏனெனில் இங்கிலாந்திலுங்கூட இராஜ குடும்பங்களில் புருஷசந்ததி இல்லாமற் போனால்மட்டும் ஸ்திரீகளுக்குப் பட்டங்கட்டலாம் என்ற விதியிருக்கின்றதேயன்றி வேறன்று. இவ்வழக்கமும் ஐரோப்பா கண்டத்தில் எங்கும் இருப்பதென எண்ணவேண்டாம். அங்கு, இங்கிலாண்ட் ஹாலண்ட் முதலிய சிலதேசங்களைத் தவிர இதர தேசங்களில் எல்லாம் பெண்கள் பட்டாபிஷேகத்திற்கு அருகர்களே அல்லர் என்று நிராகரிக்கப் படுகின்றனர். ஆதலால் பெண்களே பரம்பரையாகப் பட்டம்பெற்று ஆளும் பெரும்பேற்றை நாகரீக முதிர்ச்சி வாய்ந்ததாகச் சொல்லிக்கொள்ளும் மேற்றிசைகூட அடையாவிடினும் அதனைக் காற்றிசையும் புகழ்மணக்கும் நமது பரதமாகண்டத்தில் (இந்தியாவின்) ஓர் பகுதியானது பெற்றுள்ளவிஷயம் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். அறிந்திருக்கும் சிலரும் "தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி" என்ற பழமொழிக்கேற்ப, அந்நியநாட்டுப் பெருமையை அனுதினமும் சிந்திக்கின்றார்களே அல்லாமல் நம் நாட்டிலேயே நாளைவரை நடந்துவரும் இப்பெண்ணரசாட்சியைப்பற்றிப் பேசுகிறார்களில்லை. அவ்விந்தியச் சிறுபகுதியைப் பற்றிய விசேஷம் இன்னும் ஒன்றுளது. இதனை ஆட்சிபுரிவர்கள் "கோஷா" வாய்ப் புருஷர்கள் கண்ணுக்குத் தென்படாமல் காத்திரையும் மகம்மதிய குலத்து மங்கையர்கள். இம்மகம்மதியச் சிற்றரசியின்பெயர் "போபால்", "Bhopa". இவ்விராஜ்யத்தில் புருஷர்கள் பட்டம்பெறச் சட்டம் இடம் கொடுப்பதில்லை. இச்சிற்றரசு தோன்றிய முதல் நாளைவரை ஸ்திரீகளே ஆண்டு வருகின்றனர் என்று தெரியவருகிறது. இப்பொழுது அதனை யாண்டுவரும் மகம்மதிய இராணியார் மற்றைபோரைப் போல் மறைந்து வசியாமல் நேரிலேயே நமது வேல்ஸ் இளவரசர் இளவரசியாரின் நல்வரவேற்று நன்கு பசரித்தனர்.

வி—து.

—:0:*:0:—



## புத்தக வரவு.

"இராமா நீட்சதர் என்னும்" இக்கதை இனிய எளிய தமிழ் வசன நடையில் எழுதப்பட்டுள்ளது. ஸர்க்கார் உத்தியோகஸ்தர் படும் கஷ்டம் மூலியவைகள் ஒருவாறு வெளியிடப் பட்டிருக்கிறது. ஆனால் துரையப்ப ஐயர் டிப்டி கலெக்டர் சிரார்த்த விஷயத்தில் செய்த மூடு முடுக்கு விஷயங்களெல்லாம் பூர்த்தியின் நம்புவதற்குப் பலபேர் இசையார் எனினும், கதை நற்போக்காய் எழுதப்பட்டிருக்கிறது. இதில் எழுத்துப்பிழைகள் பல வுள அடுத்த பதிப்பில் சரியாய் வெளிவரும் என்று நம்புகிறோம்.

"ஞானபோதினி" என்னும் தெலுங்கு இவ்வெளிய முதனூல் கானபுஸ்தகம் பையன்களுக்கும் பெண்களுக்கும் மிகவும் நலத்தைத் தரும். இதின் விலை 12 அணாவென்பது மிகவும் அதிகம். இதின் ஆசிரியர் வி. திருமலைநாயுடு M. R. A. S.

## வர்த்தமானங்கள்.

செப்டம்பர் மாசம் 26 தேதியில் மைமன்சிங்கில் 400 மாதர்கள் மிஸ்டர் (A. M. Bose.) ஏ-எம்-போஸ் இறந்ததைப் பற்றிச் சங்கம் கூடி மனம் வருந்தினார்கள். மிஸ்டர் போஸ் தேசாபிவிர்த்திக்குச் செய்துவந்த வேலைகளினும் பெண்கல்வியைப்பற்றி மிகுந்த சிரமப்பட்டுழைத்தவர். ஸ்ரீமதி சாரத் காமினி தேவி சௌதுரி என்னும் பெண்மணி மிஸ்டர் போஸின் சரித்திரத்தை நன்கு எழுதி அனுப்பும் வங்காளமாதுக்கு 25 ரூபாய் இனாம் அளிப்பதாக வாக்களித்தார்.

---

கோயம்புத்தூர் மிஸ்டர் மாரண்ண கவுண்டன் என்பவர் மிக்கமனமகிழ்ந்து மதிராஸில் நியமிக்கப்படும் ஆனி பெஸண்டு பெண்பள்ளிக்கூடத்துக்கு ரூபாய் 5000 இனாமாக அளித்தார். இப்பள்ளிக்கூடம் ஸெண்ட்ரல் இந்து காலேஜ் மாதிரியாய் நியமிக்கப்படுமாம்.

---

பிரமஞான சபையார், கோயம்புத்தூரில் மிஸஸ் ஆனிபெசண்டு பெண் பள்ளிக்கூடமொன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். கவர்ன்மெண்டு பெண் பள்ளிக்கூடத்துப் பெண்கள் இப்பள்ளிக்கூடத்தில் வந்து சேருகிறார்களாம்.

---

வங்கத்து பாபு சடையா சரன்தாஸின் குமாரத்தி ஸரோஜினிதாஸ் கலகத்தா சர்வகலாசாலையில் பீ. ஏ. பரீக்ஷையில் முதல் முதல் தேறினவள்.

மதிராஸ் ஹிந்து சபையார் முன்னே ஏற்படுத்தியிருந்த "பிராமணப் பெண்களை ருதுவான பிற்பாடு விவாகம் சாஸ்திரப்படிச் செய்யலாம்" என்னும் ரூபாய் 100 பரிசை கர்நூல் வக்கீல் ஸ்ரீமத் B. M. வரதையங்கார் அடைந்தனர். டக்கா ஸ்ரீமத் கங்கசாரன் தாஸ் பீ. ஏ. எழுதிய வியாசமும் கவனிக்கற்பாலதாய் இருந்தமையால், இவருக்கு ரூபாய் 25 பரிசு அலாதியாய் அளிக்கப்பட்டது.

---

இரவிவர்மராஜா:— இவர் சிறந்த சித்திரலிகிதன் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. இவருக்கு இளமையில் இவ்வழக்கம் பெருவாய் இல்லையெனினும், நாளாகவாக மிகச் சிறந்த ஓவியத் தீட்டும் வகைதேர்ந்தவராய் விட்டனர். இதிகாச புராணங்களில் சிறந்த மாது சிரோமணிகளை ஆங்காங்கு எடுத்துக் காட்டிய வண்ணம் சித்திரிக்கும் திறமை இவருக்கு வாய்த்துள்ளது இந்தியாவின் ஒரு பாக்கியம் மன்றோ? சிறந்த கவிகள் பண்புவாய்ந்த இனிய பாடல்களில் பாடியுள்ள அருமையைக் கைபாலே எவரும் இனிதின் நலம்பெறக் காட்டும் பெருமை எளிதேயோ? இரவிவர்மர் இயற்றிய லக்ஷ்மி, ஸரஸ்வதி, தமயந்தி, விசுவாமித்திரன்—மேனகை, முதலிய பெருமை வாய்ந்த படங்கள் பல்லோர் வீடுகளிலும் காண்பதற்கு இப்போது சகஜமே. இந்தியாவின் சிறந்த பாக்கியமெனவாழ்ந்த இவர் சின்னாள் முந்தி, இறந்தனர் என்பதைக் கேட்டு மனம் வருந்துகிறோம். இவர் போன்ற கைதேர்ந்த சித்திரலிகிதன் என்று இக்காட்டிற்கு வாய்க்குமோ அறியோம்!!

---

பாரிஸில் சாமர்த்தியமான ஸ்திரீ யொருத்தியிருக்கிறாள். இவளுக்கு 4 வயதுடைய ஒரு குழந்தையுண்டு. இவளை இந்த நான்கு வயதுக்குள் திருட்டில் நவமணியாகத் தேர்ந்து பேரெடுக்கும்படிச் செய்துவிட்டாள். இவள் தன் குழந்தையை விசேஷ கூட்டமிருக்கும் இடங்களுக்குக் கொண்டுபோனால் அது ஜனங்கள் தலைமயிரில் குத்தியிருக்கும் ஊசிகளையும், கெடியாரங்களையும் திருடித் தன் தாயிடம் கொடுப்பது வழக்கம். இப்படி ஒரு தினம் கும்பலானவிடத்தில் தூக்கிக்கொண்டு போனபோது அரை மணி நேரத்துக்குள் 2 கெடியாரங்களையும், 7 ஊசிகளையும் தெரியாது எடுத்துக்கொண்டது. இவ்வாறு இக்குழந்தையைத் தேற்றிய தாயார் கைதி செய்யப்பட்டிருக்கிறாள்.

181
OFFICE OF THE ... REGISTERED 22 DEC 1906 MADRAS.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி

"பெண்மையறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
னுண்மையுரவோங்கும் முலகு."

Vol. II. Madras. November 1906. No. 4.
தொகுதி. II. சென்னை 1906ஹு நவம்பர் மீ பகுதி. 4.

## குடும்பம் இருக்கவேண்டிய நிலைமை.

### 4-ம் அத்தியாயம்.

வயது வாய்ந்த புதல்வர்கள்.

புதல்வர்கள் தங்கள் கல்வி முதலியவைகளைப் பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலும், தொழிற்சாலைகளிலும் கற்று முடிந்த பிற்பாடு அவரவர் தங்கள் யோக்கியதைக்குத் தக்கபடி ஜீவனம் செய்யவேண்டி வருகிறது. ஆனால் இப்புத்திரர்களில் சிலர் உள்ளூரிலேயே வேலையாயும் அமர்கிறார்கள்; ஆகையால் ஒரு குடும்பமாய் வாழுதல் மிக மேன்மையெனக் கொண்டுக் குடும்பக் கவலை சிறிது குறைவாகக் காலங்கழிப்பார்கள். இக்காலத்தில் இவர்கள் விசேஷமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பலவுள. தம் மனைவிகளை வீட்டிலுள்ள பெரியோர்க்கும் சிறியோர்க்கும் செய்யவேண்டிய முறைமைப்படி செய்யும்படிக்கும், ஒழிந்தகாலங்களிலே வீட்டின் பொதுநலங் கருதி பாடுபடும்படிக்கும் என்றும் போதிக்கவேண்டுவது அவசியம். இதில் "மாமியுடைத்தால் மண்கலம் மருமகளுடைத்தால் பொன்கலம்" என்று போராடும் மாமி மருகியர் வாழ்வுச் சஞ்சலம் இருத்தல் கூடாது. மருகியை நல்வழியிற் பழக்கித் தன் மகனுடைய குடும்பவாழ்வுக்குச் சிறந்த வாழ்வுடையாளாகச் செய்தல் மாமியின் கருத்தாய் இருக்கவேண்டுமே. "பெண்டிர் சேர்ந்தால் பெருங்கலகம்" என்பது இவர்கள் அறிவீனத்தைக் காட்டக்கூடிய ஒரு பழமொழி. பெண்கள் படித்து உலகவிஷயங்களை அறியாதார்க்கு எவ்வண்ணந்தான் போதுகழியும்? தொட்டாற் குற்றம் சட்டாற்குற்றம் என்று ஒவ்வொன்றுக்கும் வாதாடிக் குடும்ப சுகத்தைப் போக்கடிக்கும் விவரங்கள் பலவுள. படிப்பு ஞானம் தெரிந்த பெண்கள் தம்மால் இயன்றவரையில் பொறுத்துப் போராடிக் கலகம் இன்றிக் காலங்கழிக்க வழி தேடுவார்கள். சுயநயத்தை விசேஷமாய்க் கவனியார். அனைவரும் தங்களைச் சிறந்தாள் எனச் சொல்லவேண்டும் என்று முயன்று வேலைசெய்வார். வேலையற்ற காலங்களில் நற்புத்தகங்களைப் படித்து ஆநந்தம் கொள்ளுவார்.

வயது முதிர்ந்த பிள்ளையைத் தகப்பன் உற்றதுணைவன் போலே நடத்தல் வேண்டும். துன்பப்படுங் காலங்களிலே அவனுக்கு உதவியையும், சந்தோஷப்படுங் காலங்களிலே அவனோடு ஆநந்தத்தையும் அநுபவிக்க முயலவேண்டும். வீட்டிலே வீணே கலகம் வாராதபடி செய்யவேண்டுவனவற்றைச் செய்து முடிக்கவேண்டும். ஆனால் முறைமையை அநுசரிக்கின், தந்தை குடும்ப சவுக்கியத்தைக் கவனிக்க வேண்டியவனாகின்றான்; புத்திரனும் அவனை ஒத்து நடக்க வாகின்றனன்.

வீட்டில் காலாகாலங்களைக் கவனித்துத் தின்னவேண்டிய காலங்களில் அன்னமுதலிய தின்பண்டங்கள் உண்டு அனைவரும், வீட்டில் உள்ள பெண்டுகளும் காலத்தில் அமுதுண்ண (...)ார்கள். பெண்டுகளும் வேளைகளிலே அன்னம் சமைத்து ஆயத்தம் செ(...)ள. இக்காலங்களிலே, பட்டணங்களில் 'காபிக்ளப்' பென்றும் 'ரெஸ்டாரண்டு' என்றும் வழங்குகிற தின்பண்டச்சாலைகள்உண்டு. அதை அநுசரித்தே ஆங்கிலம் படித்த பிள்ளைகளும் உத்தியோகஸ்தர்களும் காலவேளைகளில் 'காபி' குடிப்பார்கள் தின்பண்டம் தின்பார்கள். இதைப் பின்தொட்டு வெளிக்கிராமங்களிலும் இவ்வழக்கத்தைக் கையாடித் தினம் காலையில் எழுந்தவுடன் 'காபி' இட்டலி, தோசை என்பதைத் தயார் செய்கிறார்கள். பிறகு வீட்டிலுள்ள புருஷர்கள் தந்தம் அலுவலுக்கு வெளிச்சென்று மத்தியான்னம் சாப்பிட வீட்டுமுகம் திரும்புவார்கள். பட்டணங்களிலோ ஸர்க்கார் உத்தியோகங்களில் அமரும் புருஷர்கள் 10-மணிக்கு ஆஜராகவேண்டும்; வியாபாரங்களில் அலுவலாயுள்ளோர் 8-மணிக்கு அலுவலுக்குப்போய்ப் பின் மத்தியான்ன போஜனத்துக்கு வருவார்கள். இவ்விஷயங்களையெல்லாம் வீட்டிலுள்ள தாய், தந்தை, சகோதரி, மனைவி, இவர்கள் கவனித்துத் தகுந்தபடி சௌக்கியமாய் நடப்பார்கள். "குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை" என்பது அனைவரும் அறிந்ததே. ஆகையின் வீட்டிலுள்ளோர் அனைவரும் மனமொத்துக் கலகமின்றி வாழல் வேண்டும். முதலில், அவ்வக்காலங்களில் செய்யவேண்டியதைத் தவறாது செய்வது அத்யாவசிகம். இரண்டாவது, செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் சுறுசுறுப்பாய்ச் சோம்பலின்றி அக்கறையோடும் செய்யவேண்டும் எவ்விதமான தடங்கல் வந்து வாய்த்தாலும் அதற்கு இடங்கொடாதே "முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை, இன்மை புகுத்தி விடும்" என்னும் திருக்குறளை அடிக்கடி ஞாபகம் வைத்துத் தொழிலியற்றவேண்டும்; 'முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்' என்றும் 'பெருமையும் சிறுமையும் தான்தர வருமே' என்றும் சொல்லிய முதுரைகளை நன்னர் ஆராய்ந்து பின்னிடையாது முயற்சி செய்தல் முக்கிய நோக்காய் இருத்தல் வேண்டும். பிறகு வாக்குத்தத்தம் எவர்க்கேனும் எதையாவது செய்து தீருவேன் என்று உறுதி செய்திருந்தால் அதை நிறைவேற்ற முயலவேண்டும். ஒருவன் இருக்கும் விஷயங்களை ஆய்ந்தோய்ந்து பாராதே வாக்குத்தத்தம் செய்தால் மிகக் கஷ்டத்தை வகிப்பான். சிறு விஷ(...) ஆயினும் சரி, பெரும விஷயமே யாயினும் சரி, வாக்குத்தத்தம் செய்த வ(...)டித்தல் வேண்டும். உறுதியாய்ச் செய்வேன் என்று வாச்



களித்துப் பின்தடுமாறும் மூடரது வாழ்வு என்ன பேதமைத்தாகும்!! மேற்சொன்ன விஷயங்களன்றி ஒவ்வொருவனும் ஏதாவது ஒரு தொழிலையும், சம்பாதிக்கக் கூடிய விருத்தியையும் நன்றாய் அறிந்து நிற்கப் பாடுபடல்வேண்டும்.

சகோதரிகளின் அன்பை இவ்வளவென்று ஒருவராலும் எடுத்துரைத்தல் இயலாது. இங்கிலாந்தில் மேரி என்பவளுக்கு அவள் சகோதரர் சார்லஸ் லாம்பு இயற்றிய செய்கைகள் மிகவும் பெரிது வக்கத்தக்கது. இம் மேரியோ சிற்சில சமயங்களில் புத்தி நிதானமில்லாமல் பைத்தியம் போலே நடந்தவள். ஒருதரம் இவள் அடைந்த பைத்திய வெறியால் சார்லஸ் லாம்பு இளம் பையனாய் இருக்கையிலேயே தன் தாயை உயிரிழக்கச் செய்தனள். ஆயினும் லாம்பு ஒழியாத அன்பைத் தன் சகோதரியினிடம் பாராட்டி வந்தவன். ஆகையின் உடன்பிறந்த பெண்களை அருமைப் பெருமையோடு ஆதரித்துக் காத்தல் அறிவுடையாரின் குணமாகும்.

புருஷர்கள் அநாவசியமான செலவுகளையும், டாம்பீகவாழ்வையும் கவனியாது செட்டுடன்போதுபோக்கும் கண்ணியமான வாழ்வை அநுசரிக்க முயலவேண்டும். தாய்தந்தையரின் நன்மொழிகள் தவறாது அவர் நல்லெண்ணப்படி விஷயங்களை நடத்தலும், சோதரிகளிடத்து அன்பும் நம்பிக்கையும், சோதரர்களை முன்னுக்குக் கொண்டுவரும் நல்வழியும், தம்மனைவி, குழந்தைகள் முதலானோரிடத்தே ஒழிவொழியாப் பிரேமையும் பருவமடைந்த புதல்வர்கள் பால் இருக்கவேண்டியது மிக ஆவசிகம்.

பத்திராதிபர்.

# HAMLET.

## ஹாம்லெட்.

:o:

(56-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஹாம்லெட் பிரவேசம்.

ஹாம்லெட் பிரபுவே, க்ஷேமமா?

ஹாம்:—கடவுள் கடாக்ஷத்தால் சவுக்கியமாயிருக்கிறேன்.

பொலோ:—தங்களுக்கு என்னைத் தெரிகிறதா?

ஹாம்:—நன்றாய்த் தெரியுமோ; நீர் ஒரு வலைஞன்.

பொலோ:—நான் வலைஞனல்லவே, பிரபுவே.

ஹாம்:—வலைஞனைப்போன்ற அத்தனை யோக்கியராயிருந்தால் எனக்குப் போதும்.

பொலோ:—யோக்கியனா, பிரபுவே!

ஹாம்:—உலகத்தினியற்கையைப் பார்க்கும் பக்ஷத்தில், யோக்கியன் பதினாயிரவரில் ஒருவனாயிருக்கிறான்.

பொலோ:—தாங்கள் கூறுவதும் உண்மைதான்.

ஹாம்:—செத்த நாயின்மேல் சூரியனுடைய பார்வைபட்டால் புழுக்கள் ஜனிக்கின்றன. உமக்குப் பெண் இருக்கிறாளோ?

பொலோ:—இருக்கிறாள் பிரபுவே.

ஹாம்:—அவளை வெயிலில் போக விடவேண்டாம்; பிள்ளையுண்டாதல் பாக்கியந்தான்; அவளும் பிள்ளையுண்டாகி விடலாம்; ஜாக்கிரதையாயிரும்.

பொலோ:—[வேறு ஒருவரும் கேளாமல்] இதற்கென்ன சொல்லுகிறது? என் பெண்ணைப் பற்றியே பேசுகின்றாரே; ஆயினும் என்னை யாரென்று முதலில் அவர் அறியவில்லை; என்னை வலைஞன் என்றார். பைத்தியம் முற்றிப்போய் விட்டது. நானும் யௌவன காலத்தில் காமத்தினால் இப்படிப்பட்ட துன்பம் அடைந்திருக்கின்றேன். இன்னும் அவரிடத்தில் பேசிப்பார்க்கின்றேன். பிரபுவே, தாங்கள் வாசிப்பதென்ன?

ஹாம்:—சொற்கள், சொற்கள், சொற்கள்.

பொலோ:—வாசிக்கும் விஷயம் என்ன?

ஹாம்:—அவதூறுகள், அய்யா—வசைபாடும் துஷ்டன் "கிழவர்களுக்குத் தாடி நரைத்திருக்கும்; முகம் திரைகளடர்ந்திருக்கும்; கண்களிற் பீளை சொரியும்; புத்தி மழுங்கியிருக்கும்; தொடைகள் சுருங்கியிருக்கும்" என்று கூறுகிறான். இவை எல்லாம் நிஜமே யானாலும், இவற்றைப் புத்தகத்தில் எழுதி வைத்தல் சரியன்றென்று எண்ணுகிறேன். நண்டைப்போல பின்புறமாய் நகரக்கூடுமாயின் நீரும் என்னைப்போன்ற வயதுடையவராக ஆகலாம்.

பொலோ:—(ஒருவருக்கும் கேட்காமல்) பைத்தியமாயிருப்பினும் இவர் பேசுவதில் ஒழுங்கிருக்கிறதே. காற்றுப்படாத இடத்தில் வருகின்றீர்களா, பிரபுவே.

ஹாம்:—கல்லறைக்குள்ளா?

பொலோ:—கல்லறை காற்றுப்படாத இடமெனல் சரியே. [ஒருவருக்கும் கேட்காமல்]. இவர் சொல்லும் மறுமொழிகள் அர்த்தபுஷ்டியுடையவைகளாயிருக்கின்றனவே. புத்தியுள்ளவர்க்கும் எட்டாத சில விஷயங்கள் பித்தர்களுக்கு ஒருகால் படுகின்றன. இவரைவிட்டு என் பெண்ணும் இவரும் சந்திக்கும்படியான ஏற்பாட்டைச் செய்கின்றேன்.

— பிரபுவே-விடைதரல் வேண்டும்.

ஹாம்:—தங்களுக்கு விடை கொடுத்தலினும் பெரிதான காரியம் எனக்கொன்றுமில்லை. பிராணனை தவிர, பிராணன் தவிர, பிராணன் தவிர.

பொலோ:—தாங்கள் க்ஷேமமாயிருத்தல் வேண்டும், பிரபுவே.

ஹாம்:—கிழக் கோட்டான்கள் சள் சள்ளென்று எவ்வளவு காலம் பேசுவார்கள்!



ரோஸென் கில்டென் பிரவேசம்.

பொலோ:—ஹாம்லெட் பிரபுவைப்பார்க்கப் போகிறீர்களா, அதோ இருக்கிறார்.

ரோஸென்:—கடவுள் உம்மைக் காப்பாராக [பொலோனியஸ்] போய்விடுகிறான்.

கில்டென்:—[ஹாம் லெட்டை நோக்கி] மகாப்பிரபுவே.

ரோஸென்:—அன்புள்ள பிரபுவே,

ஹாம்:—அருமை நேசர்களே—க்ஷேமமா? என்ன சமாசாரம்?

ரோஸென்:—உலகத்தில் நேர்மை அதிகரித்து விட்டது என்பதை விட வேறு ஒன்றும் விசேஷமில்லை.

ஹாம்:—அப்படியானால் ஊழிக்காலம் கிட்டிற்றென்னலாம். நீங்கள் சொல்வது யதார்த்தமில்லை. அது நிற்கட்டும்—எந்தத் துர்ப்பாக்கியம் உங்களை இங்குச் சிறைச்சாலைக்கு அனுப்பி யிருக்கின்றது.

கில்டென்:—சிறைச்சாலை யென்று சொல்லுகிறீர்கள், பிரபுவே.

ஹாம்:—டென்மார்க்கே ஒரு சிறைச்சாலை.

ரோஸென்:—நாங்கள் அவ்வாறு எண்ணவில்லை, பிரபுவே!

ஹாம்:—உங்களுக்கு இவ்வூர் சிறைச்சாலை யன்றெனத் தோன்றலாம். ஒரு பொருள் நல்லதென்றாவது தீயதென்றாவது தோன்றுவது மனத்தின் நிலையைப் பொருந்தினது; எனக்கு டென்மார்க்கு ஒரு சிறைச்சாலையாய்த் தானிருக்கிறது.

ரோஸென்:—தங்கள் ஆசையின் பெருமை இவ்வூரைச்சிறைச்சாலையாகத் தோற்றுவிக்கிறது போலும்.

ஹாம்:—குறுகிய இடத்தை அகன்றதாகக் கொள்ளும்படியானது என்மனம். எனக்குக் கெட்ட சொற்பனங்கள் உண்டாகின்றன.

கில்டென்:—சொற்பனங்களும் தங்கள் ஆசையாலே உண்டாகின்றனவாம். ஆசையின் ஸாராம்சமே கனவின் சாயையாம்.

ஹாம்:—கனவே ஒரு சாயையாயிற்றே.

ரோஸென்:—ஆசை ஓர் சாயையின் சாயை யென்று சொல்லும்படியான அவ்வளவு அற்பமான பொருளென்பது என் கொள்கை.

ஹாம்:—அப்படியாயின் பிச்சைக்காரர்கள்தான் பொருளாக எண்ணப்படுதல் வேண்டும்; அரசர்களும் பிரசித்தவீரர்களும் பிச்சைக்காரர்களுடைய சாயையென்றே சொல்லுதல் வேண்டும். என்னால் தர்க்கிக்க முடியவில்லை; அரசன் சபைக்குப் போவோமா?

ரோஸென்
கில்டென் } —தங்கள் சித்தம் எங்கள் பாக்கியம்.

ஹாம்:—நீங்கள் அப்படிச் சொல்லுதல் தகாது; தங்களை ஊழியக்காரர்களின் ஸ்தானத்தில் நான் வைக்கமாட்டேன்; உண்மையாகச் சொல்லுகிறேன்; என்னைச் சோதனை செய்யும் பொருட்டு என் பக்கத்தில் அநேகர் இருப்பதை யறிந்து பயப்படுகிறேன். நீங்கள் என் நண்பர்களான படியால் ஒன்று கேட்கிறேன், நீங்கள் இங்கு வந்ததற்குக் காரணமென்ன?

ரோஸென்:—தங்களைப் பார்க்கத்தான் வந்தோம்; வேறு காரியம் எங்களுக்குக் கிடையாது.

ஹாம்:—என்னிடத்தில் இவ்வளவு அன்பு பாராட்டுவோரிடத்தில் உபசாரவார்த்தைகள் கூடச் சொல்லாமலிருந்ததற்கு நான் வருந்துகிறேன். நீங்கள் இருவரும் தருவிக்கப் பட்டவர்களன்றோ? நீங்கள் சுயமாய் வந்தவர்களோ? என்னிடத்தில் உண்மையைச் சொல்லுங்கள்.

கில்டென்:—நாங்கள் சொல்வது என்ன, பிரபுவே!

ஹாம்:—காரியத்தைத் தவிர்த்து எதையாகிலும் சொல்லுங்கள். நீங்கள் தருவிக்கப்பட்டவர்களென்று உங்கள் முகம் தெளிவாய் அறிவிக்கின்றது. சூதுள்ளவர்களாயிருந்தால் அகத்திலுள்ளதை யொளிக்கக் கற்றிருப்பீர்கள்; அரசனும் அரசியும் உங்களைத் தருவித்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும்.

ரோஸென்:—எதற்காக என்று நினைக்கிறீர்கள், பிரபுவே!

ஹாம்:—நீங்கள் அதை எனக்குச் சொல்லல் வேண்டும். இளம் பிராயமுதல் இணைபிரியாமல் அன்பு பாராட்டினமைபற்றி உங்களை நான் கேட்கிறேன். பேசுவதில் சதுரனாயிருக்கிறவன் கேட்கும் முறைவேறு. என்னிடத்தில் ஒளிக்காமற் சொல்லவேண்டும். அரசனும் அரசியும் உங்களைத் தருவித்தார்களன்றோ?

ரோஸென்:—(கில்டெனை நோக்கி ஹாம்லெட் காதிற்படாமல்) இதற்கென்ன சொல்லுவாய்?

ஹாம்:—[இருவர்க்கும் கேட்காமல்] உங்களிடத்தில் லக்ஷியம் வைக்கிறேன். உங்களுக்கு என்னிடத்தில் பிரியம் உளதென்பது வாஸ்தவமாயின், ஒன்றையும் ஒளித்தலாகாது.

கில்டென்:—நாங்கள் தருவிக்கப் பட்டோமென்பது உண்மையே.

ஹாம்:—உங்களைத் தருவித்தற்குக் காரணம் சொல்லுகிறேன், கேளுங்கள். நானே அதைச் சொல்லிவிட்டால் உங்கள் வாக்கினால் அது வெளிப்படல் வேண்டுவதில்லை; அரசன் இரகசியத்தை வெளியிட்டீர்களென்கின்ற குற்றமும் உங்களை யணுகாது. சிறிது காலமாய் என் உற்சாகமெல்லாம் போய்விட்டது; ஒரு விளையாட்டிலும் பிரியமற்றவனா யிருக்கின்றேன். அலங்காரமாகிய இப்பூமி என் கண்ணிற்குப் பாழாய்த் தோன்றுகின்றது; பொன்மயமான ஒளிபொருந்திய வானமும் என் புத்திக்கு விஷவாயு நிரம்பிய இடமாகத் தோன்றுகின்றது. மனிதர் எத்துணை அற்புதமான சிருஷ்டி; அவர் புத்தியின் நுட்பம் எவ்வளவு வியப்பை உண்டாக்குகின்றது; உருவம் கண்டோர் கண்கள் மெச்சக்கூடியதா யிருக்கின்றது; செயலிலும் கருத்திலும் தேவனை ஒத்திருக்கின்றார்கள். ஜீவராசியில் மானிடரை விட அழகில் உயர்ந்தவர் யாருளார்? மனிதராகிய பிருதுவி அம்சம் எனக்குப்பொருளாகத் தோன்றவில்லையே. ஆண்மக்களைப்பார்த்தால் எனக்குச் சந்தோஷம் ஜனிக்கவில்லை. நீங்கள் நகைப்பதினால் குறிப்பிப்பினும், பெண் மக்களினும் எனக்குக் களிப்புண்டாகுவதில்லை.



ரோஸென்:—நாங்கள் அப்படி ஒன்றையும் எண்ணவேயில்லை, பிரபுவே.

ஹாம்:—"ஆண்மக்களைப் பார்த்தலில் எனக்குச் சந்தோஷம் ஜனிக்கவில்லை" என்றபோது நீங்கள் நகைத்ததேன்?

ரோஸென்:—மனிதரைப்பார்க்கவும் தங்களுக்குப் பிரியமில்லாவிடின், நாடகமாடுவோர் தங்களுக்கு இன்பம் தர முடியாதே என்று எங்களுக்கு யோசனை யுண்டாயிற்று; வழியில் அவர்களைக் கண்டோம்; தங்கள் இஷ்டப்படி நடக்கக் காத்திருக்கிறார்கள்.

ஹாம்லெட்:—இராஜவேஷம் போடுகிறவனும், கத்தி கேடயம் வைத்து யுத்தஞ் செய்யும் வீரனும் என்னால் மதிக்கப்படுவார்கள்; விரகதாபத்தினால் வருந்துகின்றவனையும் மெச்சிக்கொள்வேன்; விகடனுக்குத் தகுந்த ஸம்மானம் செய்வேன்; ஸ்திரீகள் உட்கருத்தை அச்சமில்லாமல் வெளியிடலாம். என்ன நாடகம் ஆடுகிறவர்கள் வந்திருக்கிறார்கள்?

ரோஸென்:—பட்டணத்தில் சோகநாடகங்கள் ஆடுபவர்கள். தங்களுக்கு அவர்களிடத்தில் அபிமான முளதாயிற்றே.

ஹாம்:—அவர்கள் ஊரைவிட்டு வெளியூருக்கு வரும்படி நேரிட்டதா? அவர்கட்குப் பெரும் பணமும் மிகுதியாயிருந்ததன்றோ? முன்போல அவர்கள் இப்போதும் மதிக்கப்படுகிறார்களா? அவர்களுக்கு முன்போலவே பரிவாரங்கள் ஜாஸ்தியாக வுண்டா?

ரோ:—முன்போல அவர்களை மதிப்பாரில்லை.

ஹாம்:—அதிலும் ஆச்சரியப்பட எதுவில்லை; இப்போழ்து என் சிற்றப்பன் அரசனாயிருக்கின்றான். என் பிதாவின் காலத்தில் இவனை நிந்தித்துப்பேசினோர் இப்போழ்து இவனுடைய சிறியபடத்திற்கு நூறு நூறாய்க் கொடுத்து வாங்குகிறார்கள் ஐயோ பாவம்! இத்தகைய நடபடிக்கை இயற்கைக் கொத்ததாகவில்லை. தத்துவசாஸ்திரிகள் இதற்குக் காரணத்தைக் கண்டுபிடித்தால் உபயோகமாயிருக்கும். [வாத்தியங்களின் கோஷம் கேட்கப்படுகிறது].

கில்டென்:—நாடகமாடுவோர் வருகின்றார்கள்.

ஹாம்:—நீங்கள் எல்சினூருக்கு வந்தது எனக்கு மிகுந்த சந்தோஷம். உபசாரங்கள் சம்பிரதாயத்தை அனுசரித்தவைகளா யிருக்கின்றன. என் சிற்றப்பனாகிய பிதாவும் சிறியதாயாராகிய மாதாவும் தப்பெண்ணம் கொண்டிருக்கிறார்கள்.

கில்டென்:—எந்த விஷயத்தில், பிரபுவே?

ஹாம்:—எனக்குச் சித்தப்பிரமையே கிடையாது; எதையும் அறிய எனக்குச் சக்தியுண்டு.

பொலோனியஸ் திரும்பவும் பிரவேசம்.

பொலோ:—கனவான்களே, உங்களுக்கு க்ஷேம முண்டாகட்டும்.

ஹாம்:—(கில்டென், ரோஸென் இருவரையும் நோக்கி) ஒவ்வொரு காதின் பக்கத்தில் ஒவ்வொருவராய் நில்லுங்கள். [பொலோனியஸைக் குறித்து] அதோ

வருகிற பெரிய சிசுவிற்கு இன்னுந் துணி கட்டிக்கொள்ளத் தெரியவில்லை.

ரோஸென்:—பொலோனியஸ் இரண்டாம் முறை இங்கு வருகிறார் போலும்; உலகத்தார் கிழவனை இரட்டைச் சிசுவென்கிறார்களே.

ஹாம்:—பொலோனியஸ் நாடகமாடுவோர் வருகையை அறிவித்தற் பொருட்டு இங்கு வருகிறார், நான் சொன்னேனே என்றுபார். [வேறு விஷயத்தைப் பேசிக்கொண்டிருப்பதாக எண்பித்தற் பொருட்டு] நீர் சொல்வது சரிதான் திங்கட்கிழமை காலையில் தான்.

பொலோ:—தங்களுக்குச் சமாசாரம் சொல்லவந்தேன், பிரபுவே.

ஹாம்:—தங்களுக்குச் சமாசாரம் சொல்லவந்தேன், பிரபுவே, உரோமாபுரியில் ராஷியஸ் நாடகம் ஆடினபோது,

பொலோ:—நாடகமாடுவோர் வந்திருக்கிறார்கள், பிரபுவே.

ஹாம்:—போம், போம், பழங்கதை சொல்லுகிறீர்.

பொலோ:—சத்தியமாய்ச் சொல்லுகின்றேன், பிரபுவே.

ஹாம்:—நாடகமாடுவோன் ஒவ்வொருவனும் ஒவ்வொரு கழுதைமேலேறிவந்தான்.

பொலோ:—நான் சொல்லுகிறவர்களைப் போல நவரஸஞ்ஞான முள்ள நாடகமாடுகிறவர்கள் எங்குமில்லை யெனலாம்.

ஹாம்:—இஸ்ரேல் நியாயாதிபதி, ஜப்தாவே, உனக்கு என்ன பாக்கியம் இருந்தது!

பொலோ:—அவனுக்கிருந்த பாக்கியம் என்ன, பிரபுவே!

ஹாம்:—கண்மணியொத்த பெண்மணி ஒருத்திதான் அவனுடைய பாக்கியம்.

பொலோ:—[ஒருவருக்கும் கேட்காமல்] இன்னும் என் பெண்ணைப்பற்றியே பேசுகிறாரே.

ஹாம்:—நான் சொன்னது சரியல்லவா, கிழஜப்தாவே.

பொலோ:—என் பெயர் ஜப்தாவாகவிருக்குமாயின், எனக்கும் கண்மணி போன்ற பெண் ஒருத்தி இருப்பது உண்மைதான்.

ஹாம்:—அது அல்ல விஷயம்.

பொலோ:—அன்றேல், தமது கருத்தென்ன?

ஹாம்:—கடவுளுக்குத் தெரியும்; நடந்தபடிதான் நடக்கது. [நாடகமாடுவோர் வருதலைப்பார்த்து] உலகவிஷயங்கள் திரண்டுவைக்கவது யொத்தவர்கள் இதோவருகிறார்கள், பாரும்.

[இன்னும்வரும்.]

கெ. வெங்கடராம அய்யர். B.A.



# சுந்தரி.

## அத்தியாயம்—1.

நம்கதை தொடங்கும் காலம் சுமார் 100 வருஷத்துக்கு முந்தியிருக்கலாம். அக்காலங்களில் தஞ்சாவூர் மஹாராஷ்டா அரசர்கள் தஞ்சை ஜில்லாவை ஆண்டு வந்தார்கள். அப்பொழுது நிலவரி, நீர்வரி, தொழில்வரி, ஆள்வரி, உப்புவரி முதலிய பல்விதவரிகள் வழங்கி வந்தாலும் இக்காலப் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் செய்யும் விதமாய் மிகக் கட்டுப்பாடாய் வசூல் செய்யப்படாமலும் கணக்குகளும் பரிசோதிக்கப்படாமலும் உத்தியோகஸ்தர்கள் வைத்ததே நெறியாய் வழங்குவதாயிற்று. இராஜர்களோ இளமையில் சிரமப்பட்டுப் படித்து ராஜநீதிகளையும் தந்திரங்களையும் அறியாதவராகித் தம் சுகத்தையே பாராட்டுவோராயினர். இந்நாட்டுப்பன்றுள் வழக்கத்தைப் போல இராஜர்கள் அழகிற் சிறந்த நற்குலப் பெண்மணிகளை மனைவியர்களாய் மணந்தும், ரூபலாவண்ணியத்தில் சிறந்து மன்மத பாணங்களால் மயலூட்டும் மங்கையரை அந்தப்புரத்திலே சேர்த்தும் அற்பசுகத்தையே கவனித்துக் காலம் கழித்தனர். ஆகவே இராஜ்ய தந்திர விஷயங்களிலே மிகச் சாமர்த்தியமாய் இராஜனையும் குடிகளையும் நன்னெறியிற் பழக்கவேண்டுவது அமாத்தியனுடைய வேலையாயிற்று. மந்திரிவேலையில் அமரும் வேதியரோ நன்மார்க்கத்தில் பழகி, சாஸ்திரங்களையும், ஆசாரங்களையும் அறிந்து ஜனங்களுக்கு உசிதமானதைச் செய்வது தருமமாயிருந்தது. எதை யறிந்து கொள்ளவேண்டும் என்றாலும் இராஜன் மந்திரியையே கேட்டல்வேண்டும். எதைச்செய்யவேண்டும் என்றாலும் மந்திரியின் ஆலோசனையை அநுசரித்தே நடக்கல்வேண்டும். ஆனால் இராஜர்கள் பிராமணர்களிடத்தே விசேஷ அன்பும் மரியாதையும்உள்ளவர்களாயும் கோயில் சத்திரம் முதலியவைகளுக்குவேண்டிய சொத்துக்களை ஈந்து தருமங்கள் சிறந்துவாழ ஏற்பாடுகள் செய்கிறவர்களாயும், நாலுசாஸ்திரமும்கற்றறிந்த வேதியர்களுக்கும், சங்கீத சாகித்ய வித்வான்களுக்கும், தென்றமிழ்ப்புலவோர்க்கும், ஓவியந் தீட்டுவோர்க்கும் யாகம் முதலியன இயற்றும் தீக்ஷிதர் முதலியோர்க்கும் பலவித சம்மானங்கள் செய்து வழங்கும் கீர்த்தியுடையார். பல்விதத் தொழிலில் சிறந்தாரும் வருஷா வருஷம் நடக்கும் ராஜவித்வ சபையில் பரிசு பெற்று வாழுவர்.

இவ்விதமாய்ச் சிறப்பின் ஆண்டுவந்த நாளில் கிராமங்களிலும் பட்டணங்களிலும் ஜனத்தொகை தற்காலத்தைவிட மிகவும் குறைவு. கிராமங்களில் விளையும் பயிரில் அமாநியாய் இராஜாவுக்குச் சேருவது பாதி. பனையோலை யெட்டெழுத்துக் கணக்கன், பெருந்தனக்காரன், தலையாரி, வெட்டியான் முதலிய மனுஷர்கள் கொள்ளையடித்தது போகப் பாக்கியை இராஜாவுக்கு அனுப்புவார்கள். இந்த காலங்களில் மிகவும் சிறந்த சம்பன்னராய் வாழ்ந்தோர்கள் அணிந்துவந்த நகையின் காரணத்தாலே ‘பதக்கம் கட்டியாள்பவர்’ என்று அழைக்கப்பட்டவர்கள் பலபேர். இவ்வண்ணம் சிறப்பாய்ப் பேர் பெற்றுப்

பதக்கம் கட்டியாண்ட ஒரு பிரபுவின் கிராமத்தைப்பற்றிச் சிறிது கவனிப்பாம். இக்கிராமமோ காவிரி நதியினின்று பிரிந்த அரசலாறு என்னும் ஆற்றின் தென் கரையில் உள்ளது. நீர்வளமும் நிலவளமும்நிரம்பப்புனேர்ந்தது. மிராசுதாரரும்குடிகளும்ஒத்துமையின் வாழ்ந்தனர். ஆற்றின்கரை யோரமோ, தென்னம் தோப்புகளும்,மாந்தோப்புகளுமாய் நிறைந்து கண்ணுக்கினிய வனப்புடன் காணப்படும். ஊரோ ஆற்றின் தென்கரையிலே உள்ளது. அதிலே பார்ப்பனர் வீடுகளும் மற்றைய கீழ்வருணத்தார் வீதிகளும் வேறு வேறு இடங்களில் இருந்தன. பிராமணர்வீடுகளோ சுமார் நூறு இருக்கும். இரண்டு சிறகுகளாய்ப் பிரிக்கப்பட்டுக் கிழக்கு மேற்கு வீதியாய் இருந்தது. இப்பிராமணர்க்குள் வடமர் என்றும் வாத்திமர் என்றும் இரண்டு பிரிவுகள் இவ்வூரிலே வாழ்ந்தனர். கீழ்வருணத்தார் வீதிகளோ சுமார் அரைமயில் தூரம் பிராமண அக்கிரகாரத்திலிருந்து இருக்கும்.

ஊருக்கு வடபக்கத்திலே ஒரு சிறு கோயில் உண்டு. அக்கோயில் மதிற் கட்டடத்துக்குள் சிவன் கோயிலும் விஷ்ணுகோயிலும் வேறு வேருய் இருக்கின்றன. இதைவிட டாம்பீகமான இடங்களில் மிக்க பணம் செலவுசெய்து கட்டப்பட்டுள்ள குன்று குயின்றன்ன கோபுரங்கள் கிடையா. இவ்விரண்டுகோயில்களுக்கும் உள்ளமேல் அலங்காரம் ஸ்தூபிகளையுடைய மண்டபங்களே. இக்கோயில்களுக்கு நடக்கும் மரியாதை மத்தியான காலபூசையும் சாயந்திர கால தீபாராதனையுமே. பூஜை நடத்தும் அர்ச்சகருக்குக் கிராமத்தார் வேலி ஒன்றுக்குக் கலம் நெல் அளிப்பதுண்டு. ஸ்வாமி நிலத்திலுள்ள 100 தென்னமரங்களை அநுபவிப்பவர் மாதம் ஒன்றுக்கு ரூபாய் இரண்டு கொடுத்துத் தீபம் வைக்க ஏற்பாடு செய்வர். பிராமணர்கள் வீடு வீடாய் இந்த ரூபாயை வாங்கிக்கொண்டு இராத்திரியிலே தேவாலயங்களுக்குத் தீபம் ஏற்றுவர்.

இக்கோயிலுக்குப் பக்கத்திலே பெரிய தடாகம் ஒன்றுண்டு. அதின் மேலண்டை கீழண்டை பக்கங்கள் முழுதும் தென்னைமரங்கள் வைக்கப்பட்டு வெயிற்காலத்தே களைப்பாறுவோர் எவரும் எட்டிப்பார்த்து இளநீரை நினைக்க நாத் தண்ணூறும் அழகிய தேங்காய்கள் காய்ப்பன. இக்குளமோ வெயிற்காலத்தே நீர் சிறிது குறைவாக ஊரின் மத்தியிலுள்ள ஒரு கிணறு இதின் வேலையை ஏற்கும். இவ்வூரிலே பெருங்கடைகள் ஒன்றும் கிடையாது. நெல்விளைவு காலத்திலே வெற்றிலைப்பாக்குப் புகையிலை விற்கும் ஒரு கிழவியின் கடையைத்தவிர வேறொன்றும் இல்லை. சமீபத்தில் இரண்டுமைல் தூரத்திலுள்ள அரசன்தாங்கல் என்னும் ஊருக்கே போய் இவ்வூர் ஜனங்கள் சாமான்கள் வாங்கி வருவர்.

இவ்வூரிலே அய்யாவய்யர் என்ற ஒரு பிராமணர் பதக்கம் கட்டி சிறப்போடு வாழ்ந்தனர். இவருக்கு 100 வேலி குடித்தனம் உண்டு. ஆனால் தருமசிந்தனை என்பதை ஒரு காலும் நினையாதவர். தாம் பட்டங்கட்டியாளும் பரமப்ரபு வென்று பலபேர் மெச்சக்காலம் கழித்தனர். இவருக்கு இவ்வளவு செல்வம் வந்ததற்குக் காரணம் இன்னதென்று விசாரிக்கையில் இவர் ஒரு கொலைக்கேஸில் பொய்ச்சாட்சி சொல்லித் திரவியம் தேடினர் என்றும், ஏழையரான, பிராமணர்களுக்கு மிதமிஞ்சிய வட்டிக்குப்பணம் கொடுத்து அவராலே பணம் திருப்ப



வழியில்லாதிருக்கையில் அவருடையநிலத்தை அபகரிப்பதேயென்றும் வழக்கமாய் இருந்தது என்பார். இவ்வேதியர், 'ஏழையர் சொல்அம்பலம் ஏறா' என்றும் எளியரைக்கண்டால் அவதூருய்ப் பேசுவதுமே என்றும் நினைவு கொண்டவர். இவர் சாயந்திரவேளையிலே பயிர் பார்க்கப் போகுங்காலையிலே இச்சகம் பேசி எதிர் நின்று போற்றும் சிலர் பின்னேடு செல்வர். இப்பதக்கம் கட்டியாளும் இப்பிரபுவோ, பயிர்ச்சாகுபடி முதலிய விஷயங்கள் ஒன்றும் அறியார். கவுரவத்துக்கே அறிகுறியாய் இவர் வயல் வெளிப்போவது வழக்கம். கொத்தவால் முதலிய போலீஸ்க்காரர்களுக்கும், அமுல்தார் முதலிய ரெவினியூ அதிகாரிகளுக்கும் மிக்க உபயோகமாய்ப் பிறர்மேல் இல்லாததும் பொல்லாததுமான தப்புகளை ஏற்படுத்திப் பணம் வாங்கும் வழியையே கவனிப்பார். இவருக்கு மனைவியாய் வாய்த்த காமாக்ஷி அம்மாளோ சிறந்த உத்தமி. சற்குல வழியிலே பிறந்து, சன்மார்க்கத்தில் வளர்ந்து வித்தை யறிவு மேம்பட நல்ல சகுணோத்தமியாய் வாழ்ந்தனள். இவள் தந்தை, அய்யாவய்யர் செல்வத்துக் காசைப்பட்டே இவ்வம்மணியை அவருக்கே விவாகம் செய்ய ஏற்பாடு செய்தனர். இவ்வம்மாள் தன்னாலானமட்டும் எவ்விதமான நன்மொழிகளைச் சொல்லியும் சிறிதும் கவனியாது அகம்பாவத்தையே விருதாகக்கொண்டு அய்யாவய்யர் காலத்தைத் தள்ளினர். தேவாலயங்களுக்குச் செல்வதும், ஏழையர்களுக்குத்தருமம் செயலும் எதற்கு என்பார். எவ்வழியினாலும் பயன்பெற முடியுமோ என்று சற்குணவதியாம் காமாக்ஷி அம்மாள் முயன்றும், வீணாயிற்று. ஏழைகள், முடவர், குருடர்முதலியோர் பிச்சைக்கு வரின் எரிந்துவிழுவர். எவரேனும் அதிகாரி வந்தால் இல்லாத மரியாதைகள் எல்லாம் விளங்கும். இவைகளைக் கண்ட காமாக்ஷி அம்மாள் ஏதாவது தருமம் செய்வதாய் இருந்தால் தன் கணவன் இல்லாத காலத்திலே செய்ய நேர்ந்தது. என் செய்வாள்! பாவம்! இவள் தகப்பனர் இப்பெண்மணியை அழகின் வளர்த்து அவள் புருஷனுக்கு உற்றதுணைவியாக்கவேண்டும் என்று அருமையோடு கல்வி பயிற்றியும் அதன் பலனை அநுபவிக்க வாய்த்ததோ அய்யாவய்யருக்கு! தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும் என்றதுபோல் இவ்வய்யருக்கு நன்னெறி வழியில் இறங்கக் கர்மம் இல்லாது போயிற்று. இவருக்கு வயது இக்காலத்தில் சுமார் 37 இருக்கலாம். இவர்க்கு ஒரே புத்திரன். அவனுக்கு வயது 20 இருக்கக்கூடும். அய்யாவய்யர் வீடு வடவண்டைச் சிறகில் வாசலில் முன் பந்தர் போட்டுக் கம்பீரமாய்க் காணப்படுவது. வீடு இவர்காலத்தே புதிதாய்க் கட்டப்பட்டுக் கம்பீரமாய்க் ... பட்டதால் தளம் எழுப்பிக் கட்டப்பட்டு சிறப்பின் விளங்கியது. வாசற்றிண்ணையின் சுவற்றிலே கண்டோர் கண்ணைக்கவரும் அழகிய சித்திரரூபங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஸ்ரீகிர்ஷ்ண மூர்த்தி உருவம் புள்ளாங்குழல் வைத்து இனிமையின் பசுக்கள் எல்லாம் கேட்டு உருகிக் கரையும் ஆனந்தப் பண்ணை வாசிக்கும் ரீதியின் மிகத்திறமையின் எழுதப்பட்டுள்ளது. பற்பல இடங்களிலே திருமகள் உருவமும், அரங்க சயனக் காட்சியும், கண்ணன் தயிர் வெண்ணெய் திருடி உறியேறுதல் முதலிய சித்திரங்களும் அமைக்கப் பட்டிருந்தன.

## தந்தையை மறவேல்.

தந்தையை மறவேற் றந்தையை மறவேல்
தாணடை குறைந்து தலைமயிர் நரைத்துத்
தண்டுகைக் கொள்ளுந் தருணம் வந்தால்
தந்தையை மறவேற் றந்தையை மறவேல்.
கல்வி நீ கற்கக் கைப்பணம் அழிந்துக்
கல்வியுங் கீர்த்தியும் கலந்துளா னென்னப்
பெரியோ ருரைக்கப் பெருமகிழ்ச்சி கொள்ளும்
தந்தையை மறவேற் றந்தையை மறவேல்.
இளமை முதலாயின்னாள் வரையும்
வளமையிற் காத்த மகனமக் குளனல்
இனிமனம் வருந்தி ஏங்குவ தென்னே!
கனிவுறு மன்பாற் களிப்போ டுருகி
அன்னையும் என்னையும் ஆதரிப்பானென
உன்னியனைத்தையும் உனக்கென் றழித்த
தந்தையை மறவேற் றந்தையை மறவேல்.
தேகம் மெலிந்து திடமது குன்றி
சாவுவருந்தினம் ஈதென வறியாத்
திண்ணையிலிருந்து சிவசிவ ராமா
கண்ணனே யடியனைக் காத்திடுவாயெனப்
பண்ணுமோர் செபத்தின் பலனை யறிந்து
தந்தையை மறவேற் றந்தையை மறவேல்.
வருமொரு மங்கையின் வாழ்க்கையிற் படுவாய்
ஒருவழியில்லாய் பெரும்பேதையனே
அன்னை பிதாவோ முன்னறி தெய்வம்
என்னுமிம் மூதுரை யென்றுமே எண்க.
மங்கை பின்னுமோர் மாய வலைப்பட்
டுய்ந்நெறி யறியா துறங்கு மறிவிலோய்
பொல்லாப்பிள்ளையோ வில்லாப் பிள்ளையால்
நல்லறிவாளனாய் நால்வரும் புகழத்
தந்தையைக் காத்துத் தகைமையின் வாழ்கவே.

பத்திராதிபர்.



# THE GAEKWAR OF BARODA.

## பரோடா காயக்வார் மஹாராஜா.

அமெரிகா, ஐரோப் முதலிய வெளி நாடுகளிலே யாத்திரை செய்து மீண்ட
பரோடா மஹாராஜா பம்பாய் "மாணுக்கர்களின் ஸயன்ஸ், விடாரி சங்க"
த்தார்களுக்கு வெகுமதிகள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்
பட்ட போது செய்த உபந்நியாசம் பல விஷயங்களில் முக்கியத் தன்மையுடை
யது. இந்த உபந்நியாசத்தின் போது மிகுந்த கௌரவமுள்ள பெரிய மனிதர்க
ளில் எத்தனையோ பேர் வந்திருந்தார்கள். இவரது பிரசங்கத்திலே எத்தனை
யோ முக்கிய விஷயங்களிருந்த போதிலும், அவற்றிலே சிலவற்றை மட்டிலும்
கீழே குறிப்பிடுகின்றோம்.

பரோடா ராஜ்யத்தின் அபிவிருத்தியைப் பற்றிப் பேசி வருங்காலத்தில்
மகாராஜா சொன்னார்:—"இந்தியாவின் ஒரு பகுதியின் அபிவிருத்தியை மட்
டிலும் கவனிப்பவன் சரியான மனிதனாக மாட்டான். குஜராத் அபிவிருத்தி
யடையவேண்டுமென்று நம்மவர்களுக்கு எம்மட்டு ஆவலிருக்கிறதோ அவ்வளவு
ஆவல் இந்தியாவின் எந்தப் பகுதியினுடைய அபிவிருத்தியிலும் இருக்கவேண்
டும். இந்தியாவின் எல்லா பாகங்களும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கின்
றன. ஒரு பாகத்துக்கு லாபமுண்டானால் எல்லாவற்றிற்கும் லாபமுண்டு:
ஒரு பாகத்திற்குக் கெடுதி யுண்டானால் எல்லா பாகங்களுக்கும் கெடுதி யுண்டா
கும். இதை நன்றாக கருதுபவனாய நான் இந்தியாவின் மொத்த அபிவிருத்தி
யின் பொருட்டாகச் செய்துவரப்படும் பிரயத்தினங்களி லெல்லாம் மிகுந்த
அனுதாபங் கொண்டவனா யிருக்கின்றேன்" என்றார்.

* * *

பெண்கல்வி விசேஷமாகப் பேசி வரும்போது பரோடா மகாராஜா சொன்
னார்:—"நமது தாய்மாரும், சகோதரிகளும், மனைவிகளும் நமக்குத் தகுதியாக
வாழ்க்கைத் துணைவியர்களாக இருக்க வேண்டுமல்லவா என்பதை நாம் இப்
போது நன்கு ஆலோசிக்க வேண்டும். நமது பெண்களெல்லாம் தமது கடமை
களையும், தமது பொறுப்புக்களையும் நன்குணர்ந்து நடத்தற்குரிய நிலைமைக்கு
நாம் அவர்களைக் கொண்டு வரவேண்டும். இது எளிதான காரியமில்லை யென்
பதை நான் அறிவேன். எனினும் சிரமப்பட்டால் இது நிறைவேறி விடும்."

* * *

பிறகு காயக்வார் மகாராஜா கல்வியைப்பற்றிப் பேசினார். கல்வி விஷயத்
திலே கோடிக்கணக்கான பணம் செலவிட்ட போதிலும் அது வீண் செலவாக

மாட்டாதென்றார். "இந்தியாவின் ஸ்திதி முன் இருந்ததைக் காட்டிலும் இப்போது மாறுபட்டதாகி நிற்கின்றது. ஜாதி, குலம், என்ற யாதொரு பேதமும் பார்க்காமல் எல்லோருக்கும் கல்வி யளிக்க வேண்டுமென்ற எண்ணம் ஜனங்களுக்குள்ளே மிகுதியாக ஏற்பட்டிருக்கிறது. பிரஜைகளுக்கு சரியானபடி அறிவுப்பயிற்சி கொடுக்காத எந்த கவர்ன்மெண்டாரும் தமது பொறுப்பை உணர்ந்தவர்களாக மாட்டார்கள். கல்வி விஷயத்தின் பொருட்டு தக்கபடி பணம் செலவிடும்படியாக கவர்ன்மெண்டாரை வற்புறுத்தும் உரிமை பிரஜைகளுக்குண்டு. நான் பிரிடிஷ் கவர்ன்மெண்டாரை மட்டிலும் கருதிப்பேசவில்லை. பிரிடிஷ் அரசாட்சி, இந்திய ராஜாக்கள் முதலிய எல்லோரையும் சேர்த்துப் பொதுவாகவே பேசுகின்றேன்"

* * *

அதற்கப்பால் மஹாராஜா தமது சொந்த ராச்சியத்திலே கல்வி விஷயமாகச் செய்யப்பட்டிருக்கும் சீர்திருத்தங்களைப் பற்றிப் பேசினார். அவர் சொன்னார்:—"எனது ராச்சியத்தின் முறைமைகளை உயர்த்திப்பேச வேண்டுமென்றேனும், அவற்றிலுள்ள குறைகளை மறைக்க வேண்டுமென்றேனும் எனக்கு எண்ணமில்லை. ஆனால் எனது நாட்டு விஷயங்களை நீங்கள் அறிய ஆவலுடனிருப்பீர்களென்று நம்புகிறேன். ஏனெனில் நான் முன்பு சொல்லியது போல, இந்தியாவின் ஒரு பாகத்தார் செய்து வரும் அபிவிருத்திப் பிரயத்தனங்கள் எல்லா பாகத்தாருக்கும் பொதுவல்லவா? என் ராஜ்யத்திலே எல்லா ஜனங்களும் கட்டாயமாகக் கல்வி கற்கவேண்டுமென்ற நிபந்தனை ஏற்படுத்தியாய் விட்டது. அநேக பாடசாலைகள் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் எனது திறமை கொண்ட உத்தியோகஸ்தர்களின் உதவியால் பல பாடசாலைகள் புதிதாகத் திறப்பதற்குரிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ராஜ்யமுழுதிலும் ஓரிடம் பாக்கி யில்லாமல் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படும். பாடசாலை யில்லாதகிராமம் ஒன்றேனும் இருக்கக்கூடாதென்பது எனது நோக்கம். தற்காலத்திற்கு உயர்தரக் கல்வி கொடுக்கும்படியான நிலைமை ஏற்படவில்லை. இன்னும் சிறிது காலத்திற்குள் அந்த ஏற்பாடும் செய்து விட முடியுமென்று நம்புகிறேன். ஜனங்களுக்குக் கல்வி யளிப்பதற்கு உபந்நியாசங்கள் தக்க வழி யென்று நான் நினைக்கிறேன். அப்படி உபந்நியாசங்கள் கல்வி விஷயங்கள் சம்பந்தப் பட்டவை மட்டிலுமாகவே யிருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. பொதுவாக ஜனங்களின் நலத்தைப்பற்றிய எந்த விஷயத்தையும் குறித்து உபந்நியாசங்கள் ஏற்பாடு செய்யலாம்" என்றார்—இந்தியா.

M.



## வர்த்தகனும் அவன் நாயும்.

ஒரு வர்த்தகனுக்கு அயலூரிலுள்ள ஒரு குடியானவன் கடன் கொடுக்க வேண்டியவனா யிருந்தான். அவ்வர்த்தகன் தன் கடனைக் கேட்கும் பொருட்டுக் குதிரை மீதேறிக்கொண்டு அவ்வூருக்குச் செல்லுகையில் அவன் அருமையாக வளர்த்துவந்த ஓர் நாய் அவனைப் பின்தொடர்ந்தே சென்றது. கடன் கொடுக்கவேண்டியவன் இவனைக் கண்டமாத்திரத்தில் கடனை வட்டி சகிதமாகத் தந்துவிட்டபடியால், அந்தத் தொகையை அவ்வர்த்தகன் ஒரு பையில்போட்டுத் தன் குதிரையின் கழுத்தில் கட்டி முன்போலவே தன் குதிரைமீதேறிக்கொண்டு திரும்பினான். அவனுடைய இணைபிரியாத் தோழனான நாய் தன் எஜமானுக்குப் பொருள் கிடைத்ததென்னும் பெருமகிழ்ச்சியால் குதிரையை நாற்புறமும் சுற்றிச் சுற்றிக் குதித்து வாலைக் குழைத்துக்கொண்டு சந்தோஷங் கொண்டாடிக் கொண்டே வந்தது. வர்த்தகன் கொஞ்சதூரம் போனவுடனே ஓர் குளக்கரையில் இறங்கி அதற்குச் சமீபத்திலிருந்த ஓர் விருக்ஷத்தில் தன் குதிரையைக் கட்டிவிட்டுப் பணப்பையைத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டு கட்டுச்சாதம் சாப்பிட்டுக்கொஞ்சம் இளைப்பாறிச் சற்றுநேரம் பொறுத்து மறுபடியும் குதிரை மீதேறிக்கொண்டு தன் ஊருக்குப்போகப் பிரயாணப்படுகையில் பணப்பையை எடுத்துக்கொள்ள மறந்துவிட்டான். அவன் குதிரைமீதேறி இரண்டொரு மயில் தூரம் போய்க்கொண்டிருக்கையில் இது வரையிலே தன்னை ஒருபோதும் பிரியாதிருந்த நாய் கூடவரவில்லை. வர்த்தகன் இறங்கியவிடத்தில் மறதியினால் வைத்துவிட்ட பணப்பையை வாயினால் கவ்வித் தூக்கிக்கொண்டுவர அந்நாய் நெடுநேரம் வரையில் பிரயாசைப்பட்டும் அது அதிக பாரமாயிருந்தபடியினால் அதைக்கொண்டுவர அதற்குச் சாத்தியப்படவில்லை. சற்றுநேரம் பொறுத்து நாய் குரைத்துக்கொண்டே அதிவேகமாய் வர்த்தகனிடத்தில் ஓடிவந்து பணப்பை விஷயத்தை அவனுக்கு நினைப்பூட்டப் பலவகையாலும் முயன்றது. மந்த மதியினனாகிய அவ்வர்த்தகன் அதன் குறிகளைச் சற்றும் உணர்ந்திலன். அதன் பின் நாய் குதிரைக்கு முன் சென்று வழிமறித்துக்கொண்டு பலவகையாலும் தடுத்தது. குதிரை அதை அடிக்கடி உதைத்தது. நாய் அதை லட்சியம் பண்ணாமல் குதிரையின் முன்கால்களை நன்றாய்க்கடித்து அதைப் போகவொட்டாமல் பண்ணியது. நாயின் கோபாவேசத்தைக்கண்ட வர்த்தகன் அதற்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்று எண்ணினான். அப்போது சமீபத்திலிருந்த ஒரு கால்வாயண்டை அதை அழைத்துக்கொண்டுபோய் ஜலத்தைச் சாப்பிடும்படி குறிப்பித்தான். அது தண்ணீரையும் அவன் பர்லையும் ஒரு பொருளென மதியாது, எவ்விதத்திலாகிலும் அவனை இறங்கிய இடத்திற்கு அதி சீக்கிரமாய்த் திரும்பிப் போகும்படி செய்ய மேலும் மேலும் குரைத்து அவனுக்குச் சைகைகாட்டியது. அதன் செய்கைகளெல்லாம் பயித்தியத்தின் குறிகளென்றே எண்ணி அவ்வர்த்தகன்-

ஐயோ! நம் குதிரையின் காலை இது கடித்தது, நம்மையும் போகவொட்டாமல் தடுக்கின்றது, கடிக்கவும் வருகிறது, இன்னும் இது யாருக்கு என்னென்ன தீங்குவிளைவிக்குமோ தெரியாது என்று நினைத்துத் தன் கையிலிருந்த கிறுதுப்பாக்கியினால் தன் உள்ளம் பதைக்கவும் கை நடுங்கவும் உதடு துடிக்கவும் கண்ணீர் சோரவும் துக்கத்துடன் சுட்டுவிட்டான். நாய் உடனே பெருத்த காயம்பட்டு உதிர வெள்ளத்தில் மூழ்கிக் கூக்குரலிட்டுக் கொண்டே, வர்த்தகன் முன் இறங்கிய இடத்தை நோக்கி அதிவேகமாய் ஓடியது. வர்த்தகன் அன்பிற் சிறந்த தன் நாய் அல்லற்படுவதை மறுபடியும் பார்க்க மனமில்லாதவனாகித் குதிரையைக் கொஞ்சதூரம் செலுத்திக்கொண்டேபோனான். அப்படி போகையில், அவன் அந்நாயைத் தான் அருமையாகத் தன் குழந்தை போல் வளர்த்து வந்ததையும், அதனிடத்துத் தன் மனைவி மக்கள் உற்றார் முதலிய யாவரும் வைத்திருந்த பிரீதியையும், அது தான் உறங்கும்போதும் தன் படுக்கையில் கூடச் சயனித்துக் கொண்டிருந்த வழக்கத்தையும், அது தன்னிடத்தில் வைத்திருந்த விசுவாசத்தின் மிகுதியையும் நினைந்து நினைந்து மனமுருகித் துக்கித்துக்கொண்டே போனான். அப்போது தான் அருமையாகத்தேடிய பணம்போனாலும் எனக்கு இவ்வளவு துக்கமிராதே! என்று தனக்குத்தானே பேசிக் கொண்டான். அப்படி பேசிக்கொள்ளுகையில் அவனுக்கு தன் பணப்பை ஞாபகம் வந்தது. தன் மடியையும் குதிரைக்கழுத்தையும் முதுகையும் தொட்டுத் தடவிப்பார்த்தான். பணப்பை காணோம். ஆ! ஆ! இறங்கிய இடத்தில் பணப்பையை வைத்துவிட்டேனே! என் கண்மணியாகிய நாய் எனக்குக் காண்பித்த குறிகளின் அர்த்தத்தையும் தெரிந்திலேனே! என்று வாயிலும் வயிற்றிலும் தலையிலும் அடித்துக்கொண்டு அதிவேகமாய்க் குதிரையைத் திருப்பி முன் இறங்கிய இடத்திற்கு ஓடுகையில் வழியிலே உதிரம் துளித்துளியாகச் சிந்தியிருப்பதை அவன் கண்டான். நாற்புறமும் சுற்றிப்பார்த்தும் நாய் மாத்திரம் அகப்படவில்லை. ஐயோ! என் கண்மணி எங்கேபோயிற்றோ? என்ன பாடு பட்டதோ? இனிநான் எப்போது அதைக் காணப்போகின்றேன்? என்று சொல்லிக் கொண்டே முன் இறங்கிய இடத்தில் வந்து சேர்ந்தான். அங்கேதான் மறந்து வைத்து விட்ட பணப்பையின்மீது உதிரம் ஒழுக ஒழுகத் தன் நாய் படுத்துக்கொண்டு சற்றேறக்குறையப் பிராணனைப் பற்றுக் கண் பஞ்சடைந்து மரணவஸ்தை பட்டுக்கொண்டிருந்ததை அவன் கண்டு அதிசயித்தான். இவன் குரலொலியைக் கேட்டமாத்திரத்தில் காலன் கையிற் கட்டுண்ட நாய் கண்திறந்து பார்த்து, எஜமானன் கடைசியாகத் தன் பணப்பையிருந்த இடத்திற்கு நம் இஷ்டப்படிவந்து சேர்ந்தானே என்னும் மகிழ்ச்சிதோன்ற வாலை மெல்ல ஆட்டியது. வர்த்தகன் உடனே அதை மெதுவாய்த் தடவிக் கொடுத்துத் தூக்க ஆரம்பித்தான். அதன் பலமெல்லாம் ஒடுங்கிப்போயிற்று. அவன் கையை நக்கிக் கொண்டும், தன் மனோபீஷ்டம் நிறைவேறிய தற்காகப் பேரானந்தக்குறியைத் தன் கண்ணினிடமாகக் காட்டிக்கொண்டும் அது பிராணனைவிட்டது.



"யானையனையவர்நண்பொரீஇநாயனையார்
கேண்மைதழீஇக்கொளல்வேண்டும்-யானை
யறிந்தறிந்தும்பாகனையே கொல்லு மெறிந்தவேல்
மெய்யதாவால்குழைக்கு நாய்."

யானையானது தனக்குத்தினம் பாகன் கவளம் கொடுத்துக்கொண்டு வருவதை நன்றாய் அறிந்தும் சினம்கொண்ட காலத்து அப்பாகனையே கொல்லும்; நாயானது தன்னைவளர்த்தவன் தன்னைக் கொல்லும்படி வேலைப் பிரயோகித்த காலத்து அது தன்மெய்யில் ஊடுருவி நிற்கும் போதும் வாலைக் குழைத்துக்கொண்டு அவனருகே செல்லும். ஆகையால் நன்றிமறக்கும் இயல்பினையுடைய யானையை யொத்தகீழ்மக்களது நட்பை ஒழித்து, எக்காலும் நன்றிபாராட்டும் நாயையொத்தவரது நட்பைத் தேடிக்கொள்ள வேண்டும், என்று ஆன்றோர்கூறிய அமுதவாக்குக்கு மேற்காட்டியநாயே இலக்கியமாய் நின்றது.

ஜ—னி.

## மிஸஸ் ப்ராண்டர் அம்மாளின் உருவப் படம்.

இம்மாதம் 20-ம் தேதியாகிய சனிக்கிழமை யன்று இவ்விராஜ தானி பெண்பாலார் போதனாவி விருத்தி வித்தியா சாலையிலே (Presidency Training school for Mistresses) இவ்வித்தியா சாலையை முதன் முதல் ஏற்படுத்தி அதற்குத் தலைமை வகித்துவந்த மிஸஸ் ப்ராண்டர் அம்மாளின் உருவப்படத்தை ஸ்தாபித்த விஷயம் மிகவும் நன்றாய்ச் செய்யப்பட்டது. இப்படத்தை முதன் முதல் திறக்கச், சிறந்த கல்விமானாகிய டாக்டர் மில்லர் துரை ஒப்புக்கொண்டனர். நமது ஹைகோர்ட்டு ஜட்ஜியாகிய ஸர் ராவ் பென்ஸன் துரை அக்கிராசனம் வகித்தனர்.

வித்தியாசாலை மகால் நன்கனம் அலங்கரிக்கப்பட்டு இவ்வானந்த கோலத்தைக் காணப் பல கனவான்களும் போதனாவி விருத்தி செய்யும் மாதர்களும் மிக அழகாய் இவ் வித்தியாசாலைக்கு காயமான தலைமை பூண்ட மிஸ் பெர்நாடால் உபசரிக்கப்பட்டனர்.

அக்கிராசனாதிபதி எழுந்து, இவ்விராஜ தானியில் கல்வி போதனாவி விருத்தியில் மிகவும் பாடுபட்டுழைத்தவர் மூவர்களே யென்றனர்; விசேஷ பிரயாசை யெடுத்துத் தன்னுடை விட்டு இக்காடு சேர்ந்து இளைஞர்களைக் கல்வியிலே சிறப்

மிக்கப் பாடுபடும் வித்வ சிரோன்மணியாகிய டாக்டர் மில்லரும், கல்வி யிலாகாத் தலைமை பூண்டு வேண்டிய திருத்தங்கள், பாடங்கள் முதலிய விஷயங்களில் மிகவும் பாடு பட்டுப் போதனையை ஒரு வழியில் ஏற்படுத்திய டையரெக்டர் ஆகிய க்ரிக் (Grigg) துரையும், பெண்களைப் படிக்கவைக்க மிகவும் முதன் முதல் பாடு பட்டுப் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தி அவைகள் நன்கனம் விருத்தியடைய உழைத்த மிஸஸ் ப்ராண்டர் துரைசானியும் மிகச் சிறந்தவர்கள் எனப்போற்றப் படவேண்டும் எனப் புகன்றனர். பிறகு மிஸஸ் ப்ராண்டர் அம்மாளின் சிறந்த ஊக்கத்தையும், கல்வி பெண்பாலர்க்குக் கற்பிக்க அவ்வம்மணி பட்ட சிரமத்தையும் புகழ்ந்து பேசியபின், மிஸஸ் அலென், மிஸஸ் ப்ராண்டர் அம்மாளின் சரித்திரத்தை அனைவரும் கேட்கப் படித்தனள்.

மிஸ் இஸபெல் பெயின் எனும் பேர் பூண்ட இவ்வம்மணி இந்தியாவுக்கு வருவதன் முன் தன் தாயின் உதவியாலும், தன் தமக்கையின் உதவியாலும் கல்வியைக் கற்று, பள்ளிக்கூடங்களிலும் சேர்ந்து படித்து, போதனாபிவிருத்தி விஷயங்களை லண்டன் பாரிஸ் முதலிய இடங்களில் கற்றுத்தேர்ந்தனள். பிறகு தன் சிநேகி ஒருவளுடன் அமெரிகா சென்று பெண்பள்ளிக் கூடங்களையும் சர்வ கலாசாலையும் பார்த்துப் படிப்பு எவ்வண்ணம் விருத்தி செய்யலாம் என்று அறிந்தனள். தான் 20 வயதுக்கு முந்தியே போதனை செய்யத் தொடங்கினாள்.

1870ம் வருஷத்தில் இந்தியாவின் காரியதரிசி ஆர்கைல் பிரபு, சென்னையில் ஒரு போதனாபிவிருத்தி கவர்ன்மெண்டு வித்தியாசாலை ஏற்படுத்தவேண்டும் என்று இவ்வம்மாளை நியமித்தனர். வயது 22 ஆயினும் இவ்வம்மாளுக்குள்ள திறமை மிக அதிகம்! 5 ஹிந்து பெண்களையே வைத்துக்கொண்டு பள்ளிக்கூடம் ஆரம்பித்தனள். பிறகு வேறு பள்ளிக்கூடங்களும் ஸ்தாபிக்கப்பட்டன. 1876-ம் வருஷம் மிஸ் பெயின் இவ்வேலையை விட்டு, விவாகம் செய்துகொண்டு, இந்தியாவைவிட்டுச் சென்றனள். திரும்பி 1876ம் வருஷம் மிஸஸ் ப்ராண்டர் என்னும் பேரோடு இந்தியாவுக்கு இவ்வம்மாள் திரும்பிப் பெண்பள்ளிக்கூடங்களுக்குத் தணிக்கை அதிகாரம் வகித்தவளாய் வந்தனள். முதன் முதல் இவ்வேலையில் அதிககஷ்டம் இல்லையெனினும் வேறு ஜில்லாக்களுக்குப் போய் அலைந்து திரிந்து வரும் கஷ்டமும் பெண்களுக்குக் கிரமமான விஷயமாய்ப் பாடங்கள் சேர்ப்பிக்கும் விஷயமும் வெகுவாய்க் கவனிக்கவேண்டியதாயிருந்தது. 1903ம் வருஷம் இவ்வம்மாள் முதல் இன்ஸ்பெக்ட்ரஸாயிருந்து வேலையை ராஜீநாமா கொடுத்தனள்.

| | பெண்பள்ளிக்கூடங்கள். | படிக்கும் பெண்கள். |
|---|---|---|
| 1870-ல் | 129 | 9421 |
| 1903-ல் | 1056 | 133000. |

பெண்களைப் படிக்கவைக்கும் விஷயங்களில் இவ்வம்மாளின் அபிப்பிராயங்கள்:

1. பெண்கள் தேகப்பயிற்சியிலும், மனோபிவிருத்தியிலும், நன்னடைப் பழக்கத்திலும் தேர்ந்து பயில்வது.



2. பெண்களை இத்தேச வழக்கப்படியே கல்வி கற்பித்து முன்னுக்குக் கொண்டுவருவது.

3. இந்தப் பெண்களைக் கன்னிப்பருவம் மீறியும் படிக்கவைக்க வேண்டும் என்பது.

4. படித்த பெண்கள் தொகை அதிகமாகச் செயல்வேண்டும் என்பது.

இவ்விஷயங்கள் எல்லாம் பெண்பள்ளிக் கூடங்களில் பாடல், தையல், கிண்டர்கார்டன் உருவங்கள், சித்திரம் எழுதல் முதலிய விஷயங்களில் கவனிக்கப்படுகின்றன. நன்னடைப் பழக்கமும், தேகப்பயிர்சியும் பெண்கள் பழகி வருகிறார்கள். அநேக இடங்களில் போதனாபிவிருத்தி செய்ய என்னும் மாதர்க்கு வித்தியாசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தமிழ்ப் பத்திரிகைகள் பெண்பாலார்க்கே உபயோகப்படும்படி நடந்து வருகின்றன. இவ்விஷயங்களில் மிக்க பிரயாசை எடுத்துப் பாடுபட்ட மிஸஸ் ப்ராண்டர் அம்மாளின் ஊக்கத்தையும் நல்லெண்ணத்தையும் கவனித்துக் கவர்ன்மெண்டார் கெய்ஸர்-இ-ஹிண்டு என்னும் பட்டத்தை அளித்தனர். இவ்வம்மணி பலவித நன்மைகளும் செய்துகொண்டு நீடூழ் வாழ்க.

## சுகபரிபாலனம்.

### 1. ஆடையில் தீப்பற்றல்.

நம்மவர் தரித்துள்ள ஆடைகளில் தற்செயலாய்த் தீப்பற்றிக்கொண்டால் ஆரம்பத்திலேயே மிகப்பீதியடைந்து, அதற்கு இன்ன பரிகாரஞ் செய்வதென்பதை யறியாது நாலா மூலைகளிலும் ஓடுகிறார்களல்லவா? அவ்வாறு செய்வதினால் தங்கள் ஆடையில் பற்றிய சுவர்பத்தி உடனே அணைந்துபோமென்பது அவர்கள் கருத்து போலும். அது முற்றுந்தவறு. ஏனெனில், அவர்கள் அவ்வாறு ஓடுவதினால் அவர்களெண்ணத்திற்கு நேர்விரோதமாகத் தீ ஆடை முழுவதும் வியாபித்துக் கொழுந்து விட்டெரியத் தொடங்கும். அதனால் தேகாத்தியந்தமும் பொசுங்கி, சில வேளைகளில் மரணத்திற்குள்ளாக நேர்வதுமுண்டு. ஆதலால், ஆடைகளில் தீபற்றிக் கொள்ளின் பின்கண்டவாறு செய்வது நன்மையாம்:—

தீயானது தலைப்பாகையிலாவது, குழந்தைகள், பிரம்மசாரிகள், மலையாளிகள் முதலியவர்கள் ஒற்றைச் சுற்றுய்க் கட்டிக்கொண்டுள்ள வஸ்திரங்களிலாவது பற்றிக்கொண்டால் அவர் அதிசீக்கிரமாயும், வெகு சுலபமாயும் அவிழ்த்து விடலாமாகையால் உடனே களைந்தெறியவேண்டும். அவ்வாறு செய்கையில் வெகு சீக்கிரமாய்ப் பற்றிக் கொள்ளக்கூடிய வஸ்துக்களின் பேரிலாவது, ஜனங்களின் பேரிலாவது போடாமல் தரையில் போடவேண்டும். அவ்வாறின்றித் தீப்பட்டது அங்கி, சட்டை, இந்துமாதர்கள் பலசுற்றாகச் சுற்றித்தரித்துக்கொள்ளும் புடவை முதலிய வெகு சீக்கிரத்தில் அவிழ்த்தெறியத்தகாத ஆடைகளாயிருக்கின்

தீப்பட்ட,தென்றறிந்து கொண்டவுடனே தரையில் சட்டெனப்படுத்து அங்கப் பிரதக்ஷணம் பண்ணுவதுபோலப் பரபரவென்று புரளவேண்டும். சமீபத்தில் தண்ணீர் இருந்தால் தீபற்றியவர்களின்மேல் வாரி இறைக்கலாம். ஒரு முரட்டுத் துப்பட்டியைக் கொண்டுத் தீப்பற்றியவர்களைச் சுற்றிப் போர்ப்பதினாலும் சுவாலை அமர்ந்துபோகும்.

சூடு அல்லது சுட்டபுண் சொற்பமானால், ஈரத்துணியை அதன்மேல் விரித்து வைப்பதினாலே சுகுணம் உண்டாம். தேகத்தின் மேல்தோல் வழுவிப் போகாதிருக்கையில் மட்டும் தேங்காயெண்ணெயை அதின்மேல் மெல்லத் தடவுவது நல்ல பரிகாரமாம். கொப்புளங்களைக் குத்தி விடவேண்டும். ஆயின் தோலுக்கு அடியிலுள்ள வெறுமையான உறுப்பைக் காப்பாற்றுவதற்கு உதவுகிற மேல்தோலைப் பிய்த்துப் போடக்கூடாது. தீயிலுண்டான ரணங்கள் அதிகமாயின் உடனே வைத்தியருடைய உதவியைத் தேடுவதே நன் முறையாம்.

## 2. எண்ணெயில் தீப்பற்றல்.

சிலசமயங்களில் கிரசனாயில் என்னும் ஒருவகைச் சீமை எண்ணெயிலாவது, பக்ஷணம் செய்யும் நெய்யிலாவது அல்லது எண்ணெயிலாவது தற்செயலாய்த் தீப்பற்றி யெரிவது சகஜமல்லவா? அப்பொழுது நம் பெண்களும் மற்றவர்களும் ஏக்கங்கொண்டு, அக்கினியில் ஜலத்தை யூற்றினால் அவிந்து போகுமென்றெண்ணி தண்ணீரை மொண்டு அவற்றின்மேல் கொட்டுகிறார்கள். அவ்வாறு செய்வது ஒன்றுந் தகாது. அவ்வாறு ஜலத்தை யூற்றுவதினால் "அக்கினி தேவனுக்கு அபிஷேகார்ச்சனை செய்தது" போல் எரியும் எண்ணெய் முதலியன திடீரெனக்கிளம்பி, அருகிலுள்ளவர்களைப் பொசுக்கி, அதிக அபாயத்தை விளைவிப்பதோடு வீட்டையும் எரித்து நாசமாக்கிவிடும். ஆகையினால், நாம் அப்பொழுதே அவற்றின்மேல் மண்ணைவாரிப் போட்டால் எரியுந் தீ உடனே அணைந்துபோகும். இதுவன்றி வேறெவ்விதச் செய்கை செய்வதும் விபரீதமாகவே விளைவது நிச்சயம்.

## 3. தொண்டையில் சிக்கிக்கொள்வது.

இலையில் சாப்பிடும் இந்நாட்டாருக்கு அவற்றில் தைக்கப்பட்டுள்ள ஈர்க்கு பலதடவைகளில் பெயர்ந்து, உண்ணும் உணவோடு செல்கையில் தொண்டையில் சிக்கிக்கொள்வது அனைவரு மறிந்ததுதானே. தொண்டையில் சிக்கிக்கொண்டிருப்பது ஈர்க்கேயாயினும், வேறெவ்வித பதார்த்தமேயாயினும் அவற்றைக் கைவிரலைக்கொண்டு வெளியிலெடுக்கவாவது உள்ளுக்குத் தள்ளிவிடவாவது பிரயாசைப்படுங்கள். முதுகின்மேல் பலமாய்த் தட்டுவதினாலும், முகத்தில் பச்சைத் தண்ணீரை அடிப்பதினாலும் சில வேளைகளில் சுகுணம் உண்டாம்.

## 4. பாம்புக்கடிக்குப் பரிகாரம்.

நம் நாட்டில் பாம்புக்கடியால் மாள்வோரின் தொகை அதிகமென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்கு மேலிந்தியத் தீவுகளினின்று ஓர்வித



சுலபமான சிகிச்சை தெரியவருகிறது. மிகக் கிழவனாகிய ஓர் சுயம்பாகியின் காலில் பாம்புகடிக்கவே, அவன் விஷமேறாதிருக்கும்பொருட்டு முழங்காலின் கீழ் கயிற்றால் கெட்டியாகக் கட்டிக்கட்டி, உடனே அருகிலிருந்த குளத்திற்குச் சென்று பாம்புகடித்தவிடத்தில் 5, 6 அட்டைகளைக் கடிக்கவிட்டானாம். அவைகள் அங்குள்ள விடங்கலந்த உதிரத்தைக் குடித்து உடனே மரணமடைந்தனவாம். இதனால் அக்கிழசுயம்பாகி சுகமடைந்தனனாம். சிற்சில சமயங்களில் அட்டைகள் கிடைப்பது அரிதாதலால் பாம்புகள் விசேஷமாகவுள்ள இடங்களில் அவற்றை வைத்துவளர்ப்பது அவசியமென்றும், இதற்காகப் பொருள் விரயம் அதிகமாகாதென்றும் ஒரு பத்திரிகை கூறுகிறது.

# வர்த்தமானங்கள்.

## மைசூர் மகாராணியார் பெண் சர்வகலாசாலையில் பீ. ஏ. தேறிய 2 மாதர்களுக்குக் 'கில்லத்து' அளித்தல்.

—:o:—

1881-ல் இச்சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது. காலஞ்சென்ற மகாராஜா ஸ்ரீசாமராஜேந்த்ர உடையார் பஹதூர் ஜி. ஸி. எஸ். ஐ. இக்கலாசாலையை விருத்திக்குக் கொண்டுவரக் கவனித்த விஷயமும், காலஞ்சென்ற ஸர். கே. சேஷாத்திரி ஐயரவர்கள் கே. ஸி. எஸ். ஐ. ஸ்ரீமத். வி. பி. மாதவராவ் அவர்கள் ஸி. ஐ. இ., ஸ்ரீமத். ராவ் பகதூர் நரசிம்ம ஐயங்கார் முதலியோர்கள் எடுத்துக்கொண்ட கவலையும் மிகவும் போற்றப் படல் வேண்டும். வெகுநாள் பின்னிடையாது உழைத்துப் பாடுபட இருவர் இதில் பீ. ஏ. பரீக்ஷையிற் தேறினார்கள். இவர் பிராமணப் பெண்களே. இதைக்கனம் பொருந்திய மகாராணியார் கவனித்து இப்பெண்மணி இருவர்க்கும் 'கில்லத்துகள்' கொடுக்க மனமுவந்தனர். கில்லத்துக்கள், சிறந்த விலைபெற்ற சரிகைச்சேலை மேலாடையும், கெம்புகளும், வயிரக்கற்களும் கலந்து இனிமையோடு இழைத்த ஒரு ஜோடி தங்கக்காப்புகளுமே. இது இந்திய அரசவையிலே மிக அற்புதமான சந்தர்ப்பங்களிலே காண்பிக்கக் கூடிய மரியாதை அறிகுறியாம்.

இப்பெண்மணிகளாகிய ஸ்ரீமதி. ருக்மணியம்மாள், ஸ்ரீமதி. ஸ்ரீரங்கம்மாள் இருவர்களோடும் கலந்து பேசி மகாராணியார் மனம் உவந்து விடையளித்தனர்.

இந்தியர் அனைவரும் இக்கௌரவத்தை உன்னித் தம்பெண்கள் படிப்பு விஷயங்களிலே மிகவும் சிரத்தை யெடுத்துக்கொள்வார் என்று நம்புகிறோம்.

—:0:0:—

கல்கத்தாவிலே டிசம்பர் 29-ம் தேதியில் கூடுகிற மாதர் சங்கத்திலே கவனிக்கப்படும் விஷயங்கள்:

## குடும்ப வாழ்வைக் குறித்து.

1. இல்லங்களை எவ்வண்ணம் சிறப்பின் வைத்தும் பலவற்றையும் சித்தம் செய்யலாம்?

2. குடும்ப வாழ்வு மிக உயர்த்தியென்று பாவிக்கப் படுவது எத்தன்மையது?

3. ஸ்திரீ புருஷர் ஒத்துமைவாழ்வு எவ்வண்ணம் இருந்தால் மிக மேன்மையது?

4. குழந்தைகளை இளமையிலிருந்து விவாகம் ஆகும் வரையில் எவ்வண்ணம் சதுரின் வளர்க்கவேண்டும்?

5. நாலு குழந்தைகளோடு ஸ்திரீ புருஷர்கள் 100 ரூபாய்ச் சம்பளத்தில் 5 ரூபாய் மாதம் மிகுதும்படி நடக்கும் முறை எப்படி?

6. மாமியார் மருமகளோடு நடக்கவேண்டிய முறைமைகள்.

7. மருமகள் தன் தகப்பன் குடும்பத்துக்கும் மாமனார் குடும்பத்துக்கும் ஒழுகித் தீரவேண்டிய முறைமைகள்.

8. பிரசவ காலங்களிலே வீட்டிலே பிரசவ அறையை எவ்வண்ணம் சௌகரியமாய் வைக்க வேண்டியது என்பது.

9. புத்திரர்களையும் பெண்களையும் எவ்வண்ணம் கல்யாணம் செய்வதிலே கவனிக்க வேண்டிய விஷயங்கள்.

## கோஷ்டியைக் குறித்து.

1. தன் பக்கத்தாரோடும் தம்மினத்தாரோடும் நடக்க வேண்டிய முறைமைகள்.

2. பலரும் இனிமையின் வாழ்ந்து மிக வானந்தமாய் வசிக்கும் உயர்ந்த தகுதி.

3. சம்பாஷணையிலும் நடத்தையிலும் மிக அற்புதமான நல் வழக்கம் எது?

4. ஜாதிப் பகுப்பு விவரணம். அது வேண்டுமா, வேண்டாமா, அல்லது மாற்றப்படவேண்டுமா? அப்படி மாற்றப்பட வேண்டுமானால் எவ்வண்ணம் மாற்றப்பட வேண்டும்?

5. கோஷாவைப் பற்றிய விஷயம்.

## கல்வியைக் குறித்து.

1. பெண்ணை எவ்வண்ணம் சிறக்கப் படிக்க வைக்கவேண்டும்?

---

## ஸ்ரீரோமேச சந்திரதத்.

கல்கத்தாவில் நடக்கப்போகும் தொழிலபிவிர்த்தி சங்கத்தில் ஸ்ரீரோமேச சந்திரதத் சபாநாயகராயிருப்பார்.

---

## சீனாவில் பெண் பத்திராதிபர்கள்.

சிலகாலத்துக்கு முன் ஐரோப்பியரால் பரிகசிக்கப் பட்டுவந்த சீனாவில் இப்பொழுது பெண்களால் எழுதப்படும் பத்திரிகைகள் பிரசுரிக்கப் படுகின்றன.



## இந்தியா மாதர் மகாசபை.

சென்ற காங்கிரஸ் சபைகளில் காசி பாம்பே முதலிய விடங்களில் நடந்த பிரகாரமே கல்கத்தா காங்கிரஸ் சமயத்திலும் ஒரு மாதர் சபை கூடும். அதில் கூச்பீகார் மகாராணியார் சபாநாயகராகவும் மோர்பஞ்ஜ் மகாராணியார் வரவேற்பு சபைக் காரிய தரிசியாகவும் இருப்பார்கள்.

---

## கன்னாட்டுக் கோமகனும் கோமகளும்.

எட்வார்டு சக்ரவர்த்தியின் சகோதரராகிய கன்னாட்டுக் கோமகனும் அவர் மனைவியும் சமீபத்தில் இந்தியாவுக்கு வருகிறார்கள். அதாவது அவர்களிருவரும் வருகிற பிப்ரவரி மாதம் இரங்கூனுக்கு வந்து மார்ச்சுமீ 2-ந்தேதி அவ்விடம் விட்டு 5-ந்தேதி கல்கத்தா வந்து வைசிராயைப்பார்த்து விட்டு 18-ந் தேதி கொழும்பு போய்ச் சேருவார்கள். அனேக ரிடமிருந்து அழைப்புக் கடிதங்கள் வந்திருக்கின்றனவென்றும் காலமின்மையால் அவ் விடங்களுக்கெல்லாம் போக முடியாதென்றும் கோமகன் மறுமொழி கூறியிருக்கின்றாராம்.

---

## கற்பாறைக்குள் ஒரு புழு.

1905ஆ நவம்பர்மீ 25-உ "எடின்பரோ மாலை உதந்தி" யென்னும் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது: ஒரு பெரிய கருங்கல் பாறையை மூன்று கல் தச்சர்கள் வெட்டி யெடுக்கையில் அக்கருங்கல்லுக் குள்ளிருந்து ஏழு அங்குலம் நீளமுள்ள ஒரு புழுவைக் கண்டார்கள். அது இருந்த இடமோ கல்லின் மேற்றளத்திலிருந்து 10 அங்குல ஆழத்தில் இருக்கும். இந்தப் புழு சூரிய காந்தியில் உயிரோடிருக்க ஆரம்பித்தது. அதன் நீளம் அப்பொழுது 4-அங்குலமாகக் குறுகியது. இதனால் பல்லாயிரம் வருஷங்கள் தூங்க விட்டாற்போல் இப்புழு இருந்ததாக சொல்லப்படுகிறது.

---

## பெண் உத்தியோகஸ்தர்கள்.

ஐரோப்பாவின் வட பாகத்திலுள்ள பின்லெண்டு தேசத்தின் பார்லிமெண்டு சபையில் மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படும் சமயம் பெண்களும் அபேக்ஷகர்களாய் நிற்கிறார்கள். ஆகவே இராஜாங்க உத்தியோகங்களில் பெண்களைப் பார்க்கலாம். இது போலவே இங்கிலண்டிலுள்ள பெண்களும் பார்லிமெண்டு மெம்பர்களாக வேண்டுமென்று வாதாடுகின்றார்கள். நமது இந்தியாவிலோ ஆண் பிள்ளைகளுக்குக் கூட இவ்வித ஸ்வாதீனம் கிடையாது! புருஷர்கள் கதி யிவ்வாறானால் பெண்கள் ஸ்வாதீனத்தைப் பற்றி விரிப்பானேன்! இன்னும் ஒரு விஷயம். நமது இந்திய புருஷர்கள் தாங்கள் வேண்டும் சுவாதீனங்களைக் கவர்ன்மெண்டாரிடமிருந்து பெற்றாலுங் கூட தங்கள் ஸ்திரீகளுக்கும் அவ்வாறே சுவாதீனம் கொடுக்க விரும்புவார்களோ என்னவோ அறியோம்.

# CHAKRAVARTINI,

## A TAMIL MAGAZINE.

:o:

"The Indian Patriot says:—"Chakravartini," a Tamil Magazine edited by Mr. Subramania Bharati, Sub-Editor of the Swadesamitran is as its name indicates, a high class monthly for Hindu ladies. The contributions are on a variety of interesting subjects, by competent men, several of whom are graduates and are written in easy flowing Tamil. The get up of the Magazine leaves nothing to be desired and the annual Subscription is fixed at the exceedingly moderate rate of two Rupees. From the manner in which it is being conducted, there is no doubt the "Chakravartini" deserves the support of our educated Tamil speaking countrymen."

The *Hindu* says:—"CHAKRAVARTINI." As described in its title page is a Tamil monthly magazine devoted entirely to female education and to the elevation of our women in general. With this sole object in view, such subjects are chosen as tend to elucidate to our women their duties towards their husbands and superiors, their inferiors and their equals in Society. They are written in such an easy style, as any woman of ordinary ability can read and understand them. This was started some three months ao.b The last two issues contain some interesting stories and ideas which are both pleasing and instructive.

The current number contains among many interesting subjects one which is well-worth reading viz, "an exemplary lady of the Punjab" written by the Editor, describing the character of an ideal Hindu wife.

## THE EDUCATIONAL REVIEW

September, 1905

CHAKRAVARTINI: A TAMIL MONTHLY EDITED BY. C. SUBRAMANIA BHARATI

Rs. 2 YEARLY, OR 3 AS. PER ISSUE.

To judge by the first number which has been kindly sent to us, we should think that the editor has placed a good ideal before him and we are sure that if he keeps up to the high level, the journal will be greatly appreciated.

96 (?) 193
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
12 MAR 1907
MADRAS

H. H. The Maharani of Baroda.



பரோடா மஹாராணியார்.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
னுண்மை யுதவோர்க்கு மூலகு."

| Vol. II. | Madras. December, 1906. | No. 5. |
|---|---|---|
| தொகுதி. II. | சென்னை 1906வருஷ டிசம்பர்மீ | பகுதி. 5. |


## குடும்பம் இருக்கவேண்டிய நிலைமை.

### 5-ம் அத்தியாயம்.

### குடும்பப் பெண்கள்.

இவ்விந்தியாவிலே பெண்களே ஆடவர்களுக்கு அன்னம் சமைத்துக் குடும்பவேலைகளைக் கவனிப்பாராகின்றனர். உத்தியோகங்களிலே இவர்கள் அமர்ந்து சம்பாதிக்கும் வழக்கம் முதலியன விசேஷமாய் இல்லை. பெண்களே வீட்டில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் மிகவும் உள. ஆடவன் வீட்டை விட்டுச் சென்று கூலி வேலை செய்தோ, உத்தியோகத்தில் அமர்ந்தோ, அல்லது ஏதாவது தொழிலையேற்றோ, பணம் சம்பாதிக்க முயலுகிறான். நாள் முழுவதிலும் இவனுக்கு வேலை இன்னதென்று ஏற்பட்டுப் போகிறது. பெண்களோ தங்கள் வீட்டைச் சுத்திபெற நன்கனம் காப்பாற்றி, அன்னம் முதலியன செய்து, வருவோர் போவோர்க்கு மரியாதை வழங்கி, வீட்டெஜமானியாய் நடக்கவேண்டி வருகிறது. இளங்குழந்தைகளை நல்வழியிலே பழக்கினால் ஒழிய குடும்பசுகம் ஒன்றுமில்லாது போகும். "தாயைக் கிணற்றண்டை பார்த்தால் பெண்ணை அடுப்பங்கரையில் பார்க்கவேண்டுமா?" என்கிற பழமொழியின் ஊகத்தை அறிந்து, பெண்கள் தம் நடத்தையாலே குடும்ப சுகம் என்றும் அடையும் நன்மார்க்கங்களை அநுசரிக்க வேண்டும். ஒருவனுக்கு 'ஆம்' என்றுரைத்தால் கோபம் வந்திடும். ஒருவனுக்கு 'அது வேண்டாம்' என்றால், தாங்கொணாத ஆத்திரம் வரும். வேறொருவன் எப்பொழுதும் வாயாலே கூச்சலிட்டு இரைந்தே தீருவன். மற்றொருவனோ வாய் திறந்தால் சாபம் எனவைவன். ஆகவே பலவிதமாய்த் தற்காலம் வாழும் பெண்கள் ஒரு வழியை அநுசரித்து முன்னுக்கு வரும் ஏது எதுவென்று ஆலோசிப்பாம். இவ்வேதுவாலன்றோ நாம் இன்பத்தைத் தரும் வழிகளை அடைகிறோம். நாகரிக முறைக

னிற் பழகி, இல்லானுக்கு வேண்டிய உண்டிதிண்டி அளித்து, அவன் என்றும் இன்புற மொழியாடி, தம்மேல் தீரா அன்பு கொண்டு, அவனே தனக்கு இன்பந் தரும் காதலன் என்றெண்ணி ஈருயிரும் உடல் வேறெனினும் ஒரு யிரெனப் பாவித்து ஆனந்தம் கொள்ளும் பெண்களுக் கன்றோ இதனயம் எடுத்துரையாது விளங்கும். குடும்பங்களில் ஆடவர்களை நல்வழிகளிலே இறக்கிக் குடும்ப சுகம் என்பதையே கவனித்து 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்' என்னும் குறளை நினைந்து நடக்கும் பெண்மணி யன்றோ குடும்ப நாயகம். இவளன்றி குடும்ப சுகம், என்பது உளதோ? எத்தனை திரவியம் தேடினும் பயனென்? எவ்வளவு கீர்த்தியடைந்தும் மனோற்சாகம் உளதோ? ஒருவன் வெகு வீரியவானாயினும் காதலின் தளைகட்டாதுகாலம் கழிப்பனோ? என்று இவைகளை ஆலோசித்தால் பதில் இன்னதென்று நன்கு விளங்கும்:

ஸ்திரீகளின் முக்கிய நோக்கம் குடும்பப் பொறுப்பே. அவர்களுக்கு வித்தியாப்பியாசம் செவ்வையின் நேர்ப்பித்தல் வேண்டும். ஏனெனில் அவர்கள் தம் பிள்ளைகளை இளமையிலே நல்வழியிலே பழக்கி முன்னுக்குக் கொண்டுவரலும், தம் பெண்களுக்கு அவர் வழிப்பிறந்தார்களை முன்னுக்கு வரச் சக்திவாய்க்கும்படி செய்யவும் வேண்டும் அல்லவா? ஸ்திரீகளுக்குப் பலவித கலைகளையும் சாஸ்திரங்களையும் கற்பிக்க வேண்டும்

அருமைநல் வாழ்வறியா வாகும்பெண் ணுண்டேல்
பெருகுமோ மாந்தர்க்குப் பேறு?

ஆகவே பெண்கள் அறிவு, ஒழுக்கம், நல்வாழ்வு இல்லாராய் இருப்போர்களிடமிருந்து நன்மக்கட்பேறு உண்டாக முடியுமா வென்று ஆலோசிக்க வேண்டியது. கிரமமாய் ஆலோசிக்குமிடத்து ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் அங்க வித்தியாசம் ஒன்றையும் காணோம். ஆதலின் இருவருக்கும் ஒரே படிப்பே இருந்து தீரவேண்டும் ஆண் விலங்குகளும் பெண் விலங்குகளும் ஒரே நோக்கமும், கருத்தும் உள்ளவைகள் அல்லவா? பெண்களுக்கும் ஆடவர்களுக்கும் வித்தியாசம் எதன் பொருட்டு இருக்கவேண்டும்? ப்ளாடோ என்னும் தத்துவ சாஸ்திரி சொல்வார்: மனிதர் இருபாலார்க்குள் ஒரு பாலாரிடம் இல்லாதவை மறுபாலாரிடம் இருக்கின்றன. ஆகையின் இவ்விருபாலாரும் கலந்தொத்து வாழுதல்இயற்கையே. தம்மிடம் இல்லாதவையைத்தாம்பெண்களிடம் பெற்று, அவரிடம் இல்லாதவையைத் தாம் கொடுத்து இன்புற வாழுதலே ஒத்துமை நயம். இவ்விருவரும் கலந்தால் முழுநயம் அல்லவோ? ரஸ்கின் அபிப்பிராயமும் கவி டென்னிஸன் அபிப்பிராயமும் பெண்கல்வியைப் பற்றி மிகவும் நியாயமாய் இருக்கின்றன. எக்கால சரித்திரங்களிலும் இக்காலங்களிலும் பெண்களே ஆபத்துக்குதவுவாராய் வாய்க்கின்றனர். அவர்கள் இலையேல் படும் அவஸ்தை அதிகம். பெண்களுக்கு உற்ற தகுதியிடம் குடும்பவாழ்விடமே



இங்கே பெண்கள், செய்யப்படும் முறைமைகளுக்கே நாகரிக அதிகாரி; மனோவியாகுலங்களைத் தீர்க்கும் சஞ்சீவி; அழகுக்கோர் அற்புதமான கண்ணாடி.

குடும்பச் சுகங்களும் முன்னாள் வாழ்வு விவரங்களும் நன்றாய்க் கலந்த இல்லம் ஒன்று ஆவசிகம். நற்சாந்தாலும், கருங்கல்லாலும், செங்கல்லாலும் வேலைத்திறமையாய்க் கட்டப்பட்ட இல்வேண்டுமென்பது ஆவசிகம் இல்லை. அது குடும்ப வாழ்வுக்கு வேண்டிய உதவிகள் உள்ளதாய் இருக்கவேண்டும். இவ்வணம் அமைத்த இல்லங்களிலே ஸ்திரீகள் நடுநாயகமாக இருக்கவேண்டும். இவர்கள் தம் நெறிதவறின் அனைவரும் இதைப்பார்த்து நடப்பார் அன்றோ? நாயகன் மனமுடைந்து, இவ்வுலக வாழ்விலே இச்சையில்லானாய் பலவற்றையும் அசட்டை செய்கிறான். பின்வரும் பிள்ளைகளின் வாழ்வு எத்தனை பேதமைத்தாம்? இவ்வண்ணம் குடும்பவாழ்வு கெட்டுப் பயன் அடையாது போகுஞ் சந்ததியாரின்வாழ்வுமுன்னுக்கு வருதலோ சுலபம் அல்ல. பெண், வீட்டிலே குருணைத் தமியாய் இருந்து கல்வி, அன்பு, திறமை, சாதுரியம், நல்லொழுக்கம், அடைந்தால் அன்றோ குடும்பம் முன்னுக்கு வரவழியுண்டு. பெண்களின் கிரமத்தொழில் முறை சண்டை செய்ய அல்ல; கடமைகள் அனைத்தினையும் நல்வழியிலே இனிமையின் திருப்பி அதிகாரியாயிருக்கவேண்டும்; அனைத்தையும் சீர்சிறப்பு குறையாது கவனித்து நடத்தல் வேண்டும். பலவிதப் பொருள்களின் நிதானமும் வித்தியாசமும், பயனையும் நன்கு தெரிதல் வேண்டும். அவர்கள் செய்யும் வேலை திறமைத்தென நால்வரும் புகழ நடத்தல் வேண்டும். புருஷர்களோ வெளிப்போந்து கஷ்டதுக்கங்களைப் பலவாறாய் அநுபவித்துத் தம்மால் இயன்ற அளவின்போராடி லாபம் நஷ்டம் கஷ்டம் வரினும் பின்னிடையாது உழைத்தல் வேண்டும். புருஷன் என்னென்ன கஷ்டப்படினும் தன் மனைவியை அதினின்று காக்க எத்தனையோ வழிதேடுவான். குடும்பவாழ்வில்லமோ, மனைவியின் அதிகாரத்திலே இருப்பதால் இவ்விதச் சஞ்சலத்துக்கு இடம் கொடாது. அபாயமும், துக்கமும், வியாகுலமும் இருத்தல் கூடாது. மனைவிக்குக் கணவனுக்கு வாய்த்த கஷ்டங்கள் வர நியாயம் இருந்தால் சுகக்குறைவாயே குடும்பம் இருக்குமென்பதற்குத் தடையில்லை. ஆகையால் குடும்பவாழ்வில்லத்தின் பயன் இப்போது நன்றாய்த் தெரியவரும். இதுவே புருஷனுக்குச் சமாதான வாழ்விடம்; பலவிதத் துன்பங்களும் இவனை வருத்தாதபடி நயம் தரும் சிறப்பிடம். ஆனால் வெளியுள்ளார் செய்யும் வாதனை வேதனை முதலிய, குடும்பவாழ்வில்லத்திலே கணவன் மனைவி இவர்களை வியாகுலம் செய்வித்துக்குடும்ப சுகம் இல்லாது ஒழிக்கும். இக்கவலைகள் இல்லத்தின் வாசற்படியைத்தாண்டி உள்வரின் துக்கச் சனியனே உள்வந்த கிரகமாம் உலகத்தாரை வெளியில் வைத்தன்றோ நமக்கு உதவியாய் நாம் கட்டியவீடு பயன்படுகிறது. நமக்கு ஆனந்தத்தைத் தருகிறது. இதற்குள்ளே அன்றோ நமது அருமை பெருமைவாய்ந்த தாய் தந்தையரும் குழந்தைகளும் ஓடி விளையாடி உற்சாகத்தைத் தருவார்? இதற்குள் அன்றோ புதிய நாயகி நாயகியர் புன்சிரிப்போடு அருமையாய் முத்தங்கொண்டு

ஆனந்தம் உறக் காலம் கழிப்பார்? இதற்குள் அல்லவா நம் அருமைக் குழந்தைகளைத் தாலாட்டி இனிமையுடன் பாடலும் பாடுவது? சிற்றிளம் குழந்தைகளை நாம் இன்பமுறத் தூக்கி உச்சிமுகர்ந்து முத்தமிட்டு அவர்கள் மழலைச்சொற்கள் பேச மயங்கி ஆனந்திப்பது. இங்கல்லவா நம் இளம் குழவிகள் வெளியிலிருந்து வேலை கழிந்து வீட்டுமுகம் நாம் வரவே, நம்மை எதிர்கொண்டழைத்து உடன்மேலேறி முத்தங்கொள்ள முயல்வது? இங்கல்லவா நம்பிள்ளைகள் ஓடி அன்னையிடம் அப்பா வந்தார் என அருமையின் அவளை அழைத்து வருதல்? இக்குழந்தைகளின் உபசாரம் பெரியோர் எவரேயாயினும் செய்யமுடியுமோ? மணற்பெரும்பாலை வனத்திலே வாய்ந்த மரங்கொடி நீர் முதலிய விளங்கும் பசுங்கு நற்றோட்டமோ? அல்லது காற்று பெருத்தடிக்கக் கப்பலுடையத் தப்பவழியில்லாது தவிக்கும் ஏழையர்க்கு எட்டிய ஒரு பல்வளத்தீவோ? என்று நாம் நற்குடும்பவாழ்வை எண்ண வேண்டியதாய் இருக்கின்றது.

(இவ்வத்தியாயத் தொடர்ச்சி அடுத்த சஞ்சிகையில் எழுதப்பட்டு வரும்.)

பத்திராதிபர்.

---

# முற்கால விவாக முறைமை.

ஆரியர்களே.

நாம் இதுவிஷயமாகச் சிறிது ஆராய்ச்சி செய்தறிய வேண்டியது அவசியமும், கடமையும் என்று கருதிச் சிலவற்றை யிரண்டியிற் விவரிக்கத் துணிகின்றேன்.

முற்காலத்திய இந்துக்களாகிய நம் முன்னோர்களில் நீதிமான்களாயும், கல்விமான்களாயும் விளங்கிய க்ஷத்திரியர்களிலும், வேத வித்துக்களாகியும் சாஸ்திர ஸம்பன்னர்களாகியும், அநுஷ்டானபரர்களாகியும் விளங்கிய அந்தணர்களிலும் தத்தம் பாலிகைகட்கு விவாக மியற்றிய முறைமையையும், பருவத்தினையும் வழக்க ஒழுக்கங்களையும் நமது பூர்வீக இரந்தங்களால் தெளிவு பெறக் காணுமிடத்து தற்கால வழக்க ஒழுக்கங்கட்கு முற்றிலும் எதிர்மறையாக விருக்கின்றது. சற்று நிதானித்து நோக்குமிடத்து நாம் அக்காலமிருந்த ரிஷிகளுடையவும் சந்திர சூரியர்களுடையவும் காஸ்வழிக (சந்ததி) யல்லவோ வென்றும் ஐயுறலாகும்.

மகளிர்க்கு, பேதை, பெதும்பை, மங்கை மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண், என்பதாகப் பருவம் எழென்பர். 5-முதல் 7-வயது வரையில் பேதை; 8 முதல் 11 வயது வரையில் பெதும்பை, 12 முதல் 13 வயது வரையில் மங்கை; இம்மங்கைப்பருவம் நிரம்பிய பின்னரே மணம் புரிந்து வந்தனர். அம்மணமும் தாய் தந்தையர்கள் சுயநலங் கருதியாவது, தம்மிச்சைப் படியாவது, அம்மங்கையரின் கருத்தறியாமலாவது அல்லது கருத்திற்கு விரோ



தமாயாவது நடைபெற்றதில்லை. சப்த விருடிகளென்று யாவராலும் துதிக்கப்படும் மூதறிவாளர்களும் எண்ணிறந்த முனிச்சிரேஷ்டர்களும் கூட தங்கள் கிரகஸ்தமார்க்கத்திற்குத் துணைசெய்ய யோக்கியமாய் மங்கைப் பருவ மெய்திய மாதரசிகளையே பாணிக்கிரகணம் புரிந்தனரென்பது மலை விளக்காய்ப் பெறப்படுகின்றது. அக்காலத்திய க்ஷத்திரியர்களிலோ இதிலும் சற்று மேம்பாடாகவே ஒவ்வொரு அரசிளங் குமரிகளும் மங்கைப்பருவ மெய்திய பின்னர் சுயமாகப் புருஷனை வரித்தல் என்று பொருள் கொடுக்கும் சுயம்வரம் என்னும் வழியாலும் சிற்சிலர் ஊழின்படி காந்தர்வத்தாலும் நாயகர்களையடைந்து கற்பிற் கருந்ததிகளாயும் அந்தரங்க வன்புடையர்களாகவும் இவ்விந்து தேசத்தினை யலங்கரிக்கும் கதாபூஷணங்களாகவும் வாழ்ந்து வந்தனர்.

ஒருவர் உடலிற் களவெடுத்துத் தைக்கப்பட்ட ஓர் சட்டை மற்றவர் தரிக்கக் கூடாமையாகின்றது ஒருவர்க் கியைந்த அணியை மற்றொருவர் பூண விரும்புகின்றார்கள். எக்காலத்திலும் மனோதர்மம் என்னும் ஓர் வஸ்து ஆடவர் மகளிர் இருபாலார்க்கும் தனித்தனி உண்டன்றோ. தனவந்தனுக்கு மனமென ஒன்றிருப்பதுபோல் வறிய தரித்திரனுக்கு முண்டன்றோ? மிருகங்களுக்கு மன்றோ சுயேச்சையொன் றிருந்து நாமோர் வழியிழுத்தால் அஃதோர் வழியிழுக்கின்றது. இத்தகைய மனோதர்மம் தங்கள் அருமைப் புத்திரிகட்கும் இயல்பாய் உண்டென்பதையும் அப்படிப்பட்ட மனோ தர்மம் செவ்வியின் வளர்ச்சியடைந்து கனிந்து அவ்வெண்ணம் புறந்தோன்று முன்னரே அவர்களால் பின்னர் எக்காலமும் மாற்றவும், நிவர்த்திக்கவும் முடியாத தான விவாக பந்தமென்னும் விலங்கினைத் தம்மனோ தர்மப்படிப் பூட்டிவிட்டால் பின்னர் அவர்கள் பக்குவ மெய்தி உலகஞானம் நிரம்பி, தன்னல முணரத் தொடங்கி தாங்கள் போட்ட முடி இகழத்தக்க தாகவோ? அல்லது நற்செயலாய் புகழத்தக்க தாகவோ? நேர்ந்து தமது பெருமைக்கும், அறிவுக்கும் குறைவு சம்பவித்து அப்பெண்களும் பழுது படக்கூடுமென்னும் முன்யோசனை அக்காலத்திய பெரியோர்கட்குண்டாதலின் இக்காலத்தவரைப்போல் பேதைக்கலியாணம், பெதும்பைக் கலியாணங்கள் முடிக்கத் துணிந்ததில்லையென்றறிகிறோம். யுவதிகளான பின்னரே அவர்கள் மனப்போக்கை பாங்கியர் மூலமாக நிதானித்துணர்ந்து அதற்கிசையப் பெற்றோர் மணம்புரிவித்தனர். அக்காலத்திய மணப் பெண்கட்கும் விவாகபந்தத்தின் பொறுப்பையும், கடமையையும் இன்னதென் றுணரக்கூடிய பருவம் வந்ததென்று மட்டில்லாமல் விரிந்த கல்வித் தேர்ச்சியும், பரந்த நூலாராய்ச்சியும், நிறைந்த கற்பின்வலியும் அமைந்திருந்ததாதலின் அவர்கள் வாழ்நாட்கள் முழுமையும், பந்திக்கக் கூடியதாய் இன்பத்திற்கிடமாய் சுகத்திற்கு வழியாய் நன்மைக்குக் காரணமாய்க் கொள்ளப்படும் விவாக சிந்தனையை அவர்கள் சுயேச்சைப்படி சிந்தித்துத் தேர்ந்து கொள்ளும் பெரியதோர் சுதந்திரம் அவர்கட்கு அளிக்கப் பட்டிருந்ததென்னலாம். அது பற்றியே அக்காலங்களில் பால விதந்துக்களின் தொகையும், கள்ள வொழுக்கங்களின் கணக்கும், எலியும் பூனையும் போன்ற விரோத தாம்பத்தியங்களும் அபூர்வமாய் இருந்தன

போலும். நீண்டவாழ்வும், பூண்டகற்பும், அந்நியோன்னிய தாம்பத்தியமும் அக்காலத்தில் நிரம்பி யிருந்தன.

உதாரணமாகச் சிலரைக் குறிப்பிடுவோமாயின் முதற்கண் மங்கைப்பருவமெய்தி நெடுநாள் கடந்தே ஜனக புத்திரியாகிய சீதா பிராட்டியார் வில்லாளனாகிய தசரத நந்தனனை மணந்தார் என்பது பரதகண்ட மறிந்ததே. இந்த சந்தர்ப்பத்தை கவிச்சக்கிரவர்த்தி யாகிய கம்பர் விவரிக்கையில்

"அன்றுமுதல் இன்றளவு மாருமிந்தச் சிலையருகு
சென்றுமிலர் போயொளித்தார் தேர்வேந்தர் திரிந்துமிலர்
என்றும் இனி மணமுமில்லை யென்றிருந்தோம் இவனேற்றின்,
நன்று மலர்க்குழற் சீதை நலம்பழு தாகா தென்றார்."

எனச் சதாநந்தர் விசுவாமித்திரரைப் பார்த்துக் கூறிய தாய்க் கூறுகிறார். இச்செய்யுளைச் சற்று ஆழ்ந்து பொருள் கொள்ளல் ஈண்டு அதிக பயன் தருகின்ற தென்னலாம். அதாவது "அன்றுமுதல் இன்றளவும் யாரும் இந்தச் சிலையருகு, சென்று மிலர்போயொளித்தார்" என்பனவற்றால் மங்கைப் பருவம் எய்தி நெடுநாள் கழிந்தனவென்னும் குறிப்புரையும்,

"என்றுமினிமணமுமில்லை யென்றிருந்தோம் ; இவனேற்றின்
நன்று மலர்க்குழற் சீதை நலம் பழுதாகா தென்றார்" என்ற தொடர்களால் அக்காலத்தில் ஸ்திரீகள் சங்கற்பப்படி கோரிய கணவன் கிட்டாவிடில் விவாகமின்றியே இருந்து வரலா மென்பதும், அவ்வாறே சீதாபிராட்டியும் கன்னிகையாகவே வாழ்நாட்களைக் கழிக்க வேண்டிய தென்பதை அக்கால வழக்கப்படி அவர்கள் அங்கீகரித் திருந்தார்கள் என்பதான வெளிப்படையான கருத்தும் நன்கு புலப்படுகின்றது. தங்கள் கருத்திற்கேற்ற நாயகன் அடையாவிடில் தவஞ்செய்து கன்னிகையாகவே யிறந்து மறுமையிலாகிலும் அடைவேனென்று சபதம் புரிந்து அவ்வாறே நிறைவேற்றிய தாகப் பல சான்றுகளும் உள. அதற்கு இராவணன் திக்குவிஜயம் செய்து வருகையில் மஹா விஷ்ணுவை நாயகனய் வரித்து அநேகமான தவம்செய்திருந்த வேதவதியைக் கண்டு தவத்திற் கிடையூறு விளைத்துத் தன்னை மணம்புரியுமாறு வேண்டியும் மறுத்ததின் பேரில் தசக்கிரீவன் பலாத்கரிக்க எத்தனித்த துணர்ந்து யோகாக்கினியில் தன் உறுதி தவறாமல் சரீரத்தைத் தகித்ததாகக் கூறும் இராமாயணத்தின் உத்தரகாண்டக் கதையும் தக்க உதாரணமாகும். கடையில் பண்டம் கொள்ளப்புகுவோர் தமக் கிஷ்டமான தொன்றையே கிரகித்து ஏனையவற்றைப் பார்த்துப் பார்த்துக் கழிப்பது போல் அக்காலத்திய சுயம்வரங்களில் மணம்புரிய நிற்கும் மங்கை தன் தாதியர்கள் மூலமாக அரசர்களாகிய பல பண்டங்கள் நிரம்பிய அவையில் ஒவ்வொருவரின் வீர, பிரதாபங்களையும் விவரிக்கக்கேட்டு மனஞ் செல்லாமல் ஒவ்வொருவர்களாகக் கழித்து முடிவில் தன் கருத்திற் கருதிய வேந்தனுக்கே மாலை சூட்டிக் கணவனாகக் கொள்வது சாதாரண வழக்கமா யிருந்த தென்பதை நோக்குங்கால் அக்கன்னிகைகள் அரசர் கூட்டத்தில் நுழைந்து தான் தனக்குத் தனக் கென்று அவாவி நிற்கும் ஒவ்வொருவரையும் புறக்கணித்துத் தாம் நாடிய



காதலனையே நாடி யடைவார்க ளென்பதால், அவர்களுக்கு சலங்காமனவுறுதியு முண்டென்பது விளங்குகின்றது.

உதாரணமாக ரகுவம்சம் என்னும் ஸம்ஸ்கிருத காவியத்தில் இந்துமதி தேவியின் சுயம் வரத்தில் இவ்விஷயத்தினை மிக அழகாக விவரிக்கப் பட்டுளது. இந்திரன் முதலாகிய தேவர்களும் மானிட வுருவங்கொண்டு அமர்ந்திருந்த சுயம்வர மண்டபத்தில் அவர்களுடனொருவனாய் வீற்றிருந்த, தன் கருத்தில் சிரோ நாடிய கணவனாகிய நளச்சக்கிரவர்த்திக்கு மாலை சூட்டிய பெண்கள் சிரோ ரத்தினமாகிய தமயந்தி அச்சந்தர்ப்பத்தில் எத்துணை சாதுரியமாயும் சமயோசித யுக்தியினாலும், உண்மையான நளனைக் கண்டுணர்ந்து தன் கற்பைப் பாதுகாத்துக் கொண்டனள் என்பதை நோக்க உலக ஞானத்தினாலாவது, பருவத்தினாலாவது சுயேச்சையின்படி தன் கடமையைத் தவறுதலின்றி ஸர்வ ஜாக்கிரதையாய் நிறைவேற்றிக் கொள்ளும் திறமையினாலாவது குறைந்திருந்தா ளென்பதாக எந்த பிராசீன ஆசார பிரமுகர்களால் கூற முடியும்.

மஹா பாரதத்தில் நாம் கேட்கப்படும் அம்பா, அம்பிகை அம்பாலிகை, காந்தாரி, குந்தி, திரௌபதி, சுபத்திரை முதலிய எண்ணிறந்த இராஜ ஸ்திரீகளும் பருவமடைந்து தத்தம்கொள்கைப்படி சுயமாக வரித்தவர்களே யன்றி வேறுண்டோ? மஹாபாகவதத்தில் உருக்குமணி தேவி தன் விருப்பத்திற்கேற்ப கண்ணபிரானையே மணக்கக் கருதிச் செய்த முன்னிட்ட பிரயத்தினமும், தன் குறிப்புக்கு விரோதமாய்த் தன்னைச் சிசுபாலனுக்கு அளிக்க விருந்த தன் தமையனின் அறிவீனத்தை யிகழ்ந்து மீறிக் கண்ணனையே அடைந்து மகிழ்ந்தன ளென்பதையும் மறைக்க எவர்களால் முடியும். துஷ்யந்தனை காந்தர்வமாய் மணந்த சகுந்தலையை வளர்த்த முனி சிரேஷ்டராகிய கண்ணுவர் மங்கைப்பருவம் வந்தும் அவளைக் கன்னிகையாகவே தனது பர்னசாலையில் வைத்துப் போஷித்தார் என்று கேட்கப்படுதலால் அக்காலத்து பிராமண குலப் பெண்களும் மங்கைப்பருவம் வந்தே மணம்புரியும் வழக்க மிருந்த தென்பதும் பெற்றோரும் வளர்ப்போரும் அக்கன்னிகைகளைத் தங்கள் இஷ்டத்திற்குட்படுத்தியதில்லை யென்பதும், அப்படி அவர்களாய் வரித்தவரை நிந்தித்து இகழ்வதுமில்லை யென்று விளங்குகின்றது. கடலைக்குடித்த அகஸ்திய முனிவர் மயத்தக்ஷ முனிவர் ஜாமதக்கினி முனிவர் முதலியவர்கள் க்ஷத்திரிய குலாடந்தை யர்களாகிய உலோபா முத்திரை, நாளாங்கினி, ரேணுகை முதலிய பெண்களைத் தமது வாழ்க்கைத் துணையாகக் கொண்டன ரென்பவைகளை நோக்க அக்காலத்தில் பிரம க்ஷத்திரியர்க ளென்னும் இரு வகுப்பினர்க்குள் சம்மந்த விசேஷமு மிருந்ததாய்த் தெரிகிறது.

ஆகவே க்ஷத்திரியர்களின் ஆசார அனுஷ்டானங்களை பிரமகுல ரிஷிகளும் முனிவரும் ஒப்பவில்லை யென்றாவது அனுசரிக்க வில்லை யென்றாவது நினைப்பதற்கில்லை. சகோதரர்களே, இவைகளை யெல்லாம் நாம் சற்று ஆழ்ந்து சிந்திக்கின் அவர்கள் சந்ததியிற் பிறந்த இக்காலத்திலுள்ள நம்மவர்கள் ஏனோ அப்ப

ழைய ஆசாரங்களை அனுஷ்டிக்கக் கூடாது. மத்தியகாலத்தில் சமயோசிதமாக மாற்றப்பட்ட மிகவும் கீழ்த்தரமான பாலவிவாகமென்னும் பாவவிவாகங்களையே என் வெட்கிலும் செய்து தீமையைக் கொள்ளையடிக்க வேண்டும்.

ஒன்றுவிட்ட அம்மானுக் கம்மான் இறந்து போய்விட்டாரென்று செய்திவந்தால் சாஸ்திரியார் கிருகத்தை நாடி யோடி எத்தனை நாழிகைத் தீட்டென்று விசாரிப்பதும் அவர்கள் சாஸ்திர வசனத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து இத்தனை நாழிகை, இத்தனை நாளென்றாலும் அதன்படி செய்யும் கிரகஸ்தர்கள் தங்கள் சிறுமிகளின் விவாக விஷயங்களில் மட்டும் ஏனோ முன்னோர்களின் வழக்கங்களை விசாரிக் கின்றாரில்லை.

சூது, சொக்கட்டான் சதுரங்க முதலிய கருவியாட்டக் காரரும் ஜெயாபஜெயத்தைக் கவனித்து பரம எச்சரிக்கையாகப் பந்தயம் வைக்காநின்றனர். அப்பொறுப்புமின்றி கண்ணை மூடிக்கொண்டு கடவுள் தமக்களித்த செல்வத்தைக் கடலில் எறிந்து அவைகள் அதிர்ஷ்டமிருந்தால் கரையில் வரட்டுமெனப் பரீக்ஷிக்க முற்படுவார் போல் மாளாப் பெண்பழிகட் காளாகின்றனர். நாகரிகத்திற் சிறந்த நம் சகோதரர்கள் நம்முற்கால விவாக முறைமைகள் எவ்வாறிருந்த தென்பதையும், ஏன் அவ்வாறு நாமும் புரிதல் கூடாதென்பதையும் பற்றி பெரிய சபைகளிலும், பத்திரிகைகளிடமும் பிரஸ்தாபித்து வாதித்துப் பயன் பெறக்கூடுமான வரையில் முயற்சிக்குமாறு மிக்க விநயத்துடன் கோருகின்றனன்.

அசலாம்பிகை யம்மாள்.

# HAMLET.

## ஹாம்லெட்.

—:O:—

(80-ம் பக்கத்தொடர்ச்சி.)

நான்கு ஐந்து நாடகக்காரர்களின் பிரவேசம்.

[ஹாம்லெட்டு அவர்களிடத்தில் நண்பு பாராட்டிப்பேசி அவர்களில் ஒருவனைப் பழையநாடகம் ஒன்றில் பிரியம் என்னும் அரசன் மனைவி தன் புருஷனை இழந்தபிறகு பிரலாபித்ததை ஒப்புவிக்கும்படி கேட்டுக்கொள்ள, நாடகக்காரன் கல்மனமும் உருகும்படி அதைச்சொல்ல ஹாம்லெட் சந்தோஷப்பட்டுப் பொலோனியனிடத்தில் அவர்களை ஒப்புவித்துத் தக்கமரியாதை செய்யும்படி கட்டளையிட்டான்]



பொலோ:—நாடகக்காரர்கள் அந்தஸ்துப்படி அவர்களுக்கு மரியாதை செய்கிறேன், பிரபுவே!

ஹாம்:—நன்றாயிருக்கிறது; அதிக மரியாதை செய்தல் வேண்டும். ஒவ்வொருவனையும் அவனவன் திறப்படி நடத்தினால் அடிபடாமல் தப்பக் கூடியவன் ஒருவனுமில்லை. உம்முடைய கவுரவத்திற் கொத்தபடி அவர்களுக்கு உபசாரஞ் செய்தல் வேண்டும். உபசாரம் பெறுபவருடைய அந்தஸ்துக்கு மேம்பட்டே உபசரித்தல் வேண்டும்; அவ்வாறு செய்வதினால்தான் உமக்குப் பெருமை.

பொலோ.—(நாடகக்காரர்களை நோக்கி) வாருங்கள் போவோம்.

ஹாம்:—நண்பர்களே! அவருடன் போகலாம் நாளைத்தினம் உங்கள் ஆட்டத்தைப் பார்க்கிறேன் [பொலோனியஸும் ஒரு ஆட்டக்காரனைத் தவிர மற்றவருட் போய்விடுகிறார்கள்] நண்பனே, நான் ஒன்று கேட்கிறேன். "கான்ஜாகோ கொலை" என்று சொல்லப்பட்ட நாடகம் ஆடுவாயா?

நாடக:—செய்வேன், ஸ்வாமி!

ஹாம்:—நாளைக்கு அதை வைத்துக்கொள்வோம். நானே கவனம் செய்த சில செய்யுட்களுண்டு, நாடகத்தோடு அதையுங்கலந்து சொல்லல் கூடுமா?

நாடக:—செய்கிறேன் பிரபுவே!

ஹாம்:—நல்லது! பொலோனியஸ் பிரபுவுடன் நீயும்போ. அவரைப் பரிகாசம் செய்யாதே. [நாடகக்காரன் போகிறான்] நண்பர்களே, இன்று இரவு உங்களிடத்தில் விடைபெற்றுக் கொள்கிறேன். நீங்கள் எல்லினூருக்கு வந்ததில் எனக்கு மிகுந்த ஸந்தோஷம்.

ரோஸென்:—பிரபுவே, தங்கள் சித்தம்.

ஹாம்:—கடவுள் உங்களைக் காப்பாராக [ரோஸென், கில்டேன் இருவரும் போய் விடுகிறார்கள்]

நான் பெரும்பாவியா யிருக்கின்றேனே. கட்டுக்கதையிற் சொல்லிய ஹெகுபா என்பவள் நாடகக்காரனுக்கு எவ்வகையிலும் பந்து அன்றே; ஆயினும் அவள் புலம்பலை ஒப்புவிக்கும் பொழுது முகம்வாடி, நாதழதழத்து, மெய்ந்நடுங்கிக் கண்ணீர்சொரிந்து நின்றானே. நடித்தலை யதார்த்தம் போற் காட்டினானே. உண்மையில் என்னைப்போல் நஷ்டம் அடைந்தவனாயிருந்தால் எவ்வளவு ஆத்திரத்தைக்காட்டான்? நாடகசாலை அவன் கண்ணீரில் மூழ்கிப்போய்விடாதா? அவன் சொற்கள் கேட்போர் செவியில் அம்புபோற் பாயாதா? பாவிகளுக்குப் புத்தி கலங்காதா? நேர்மையுள்ளவர்கள் நடுநடுங்கமாட்டார்களா? மூடர்கள் மயங்கார்களா? கண்களும் காதுகளும் தத்தம் தொழில்களைச் செய்யாமல் நின்றுவிடாவா?

நானோ வீண்மனோராச்சியம் செய்து காலம் போக்கிக் கொண்டிருக்கின்றேன். அரசர்களில் சிரேஷ்டனாயிருந்தவன் கொலை செய்யப்பட்டும் நான் கொலை செய்தவனைத் தண்டிக்கதற்கு எவ்வித முயர்சியும் செய்யாமலிருக்கின்

றேன். என்னை ஒருவன் கோழைமனத்தன், பொய்யன் என்று வசைபாடியும் வேறுவகைகளில் நிந்தனை செய்யினும் நான் அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டியவனாயிருக்கின்றேன். கொடுமை செய்தவனைத் தண்டித்தற்கும் போதுமான அளவு வீரத்தன்மை என்னிடத்தில் இல்லை. அந்நகைய வீரத்தனம் என்னிடத்தில் உளதேல் என் சிற்றப்பன் உடலை இதுகாறும் பருந்துக்கிரையாக்கி இருக்க மாட்டேனோ? என் சிற்றப்பனிலும் பெரும்பாவி எவனுளன்? அப்பனை இழந்து அவனைக் கொன்றவனைப் பழிவாங்கற்குத் தகுந்த நியாயமிருக்கச் சும்மாவாயிருந்து கத்தும் வீண்கழுதையா யிருக்கின்றேனே! குற்றஞ்செய்தோர் நாடகம் பார்க்குங்கால் தமது குற்றங்களை ஒத்துக்கொண்டிருக்கிறார்களென்று கேள்விப்பட்டிருக்கின்றேன். கொலைக்கு வாயில்லை யாயினும், அது தன்னை அற்புதமாய் வெளிப்படுத்தும், என் சிற்றப்பன் சந்நிதியில் என் அப்பனை அவன் கொன்ற மாதிரியாகவே நாடகக்காரர்களைக் கொண்டு ஒரு நாடகம் போட்டுவிக்கிறேன். சிற்றப்பன் சற்றேனும் அந்த நாடகத்தைக்கண்டு கலங்குவானேல், நான் செயற் குரியதைச் செய்து விடுகின்றேன். நான் கண்டு பேசின பிசாசு துஷ்டப் பிசாசாயிருப்பினும் இருக்கலாம். கலக்கமுற்ற என் மனத்தை அறிந்து அந்தப் பிசாசு என்னைத் தீயவழியிற் செலுத்த எண்ணியிருந்தாலும் இருக்கலாம். என் [போய் விடுகின்றான்].

(இன்னும்வரும்.)

K. வெங்கடராமய்யர், B. A.

---

## நயவஞ்சகர்.

நயவஞ்சகர் என்பார் யார்? அவர் செய்யும் வஞ்சகத்தில் நயம் எவ்வாறு காணப்படும்? என்று முதன் முதல் ஆலோசிக்க வேண்டி வருகிறது. இந்நயவஞ்சகர் கற்றுத் தேர்ந்த பொல்லாப் பாவிகள். கைச்செயலும் வாய்ப்பேச்சும் வேறு வேறு, முசன்னவோர் வார்த்தைக்குப் பாவம் ஒன்று கற்பிப்பர். இவரை ஒருக்காலும் நம்பொணாது.

'கோவில் பூனை தேவருக்கு அஞ்சாது' என்று இவர் உள்ளெண்ணம் எண்ணித் தம் அகத்தில் படிந்து கிடக்கும் விஷயங்களை ஒரு சிறிதும் வெளிப்படுத்தாமலே மேலுக்கு வேறு சமாசாரத்தைப் பற்றிப் பேசுவர். இவர் நெஞ்சாழம் அறியாப் பல பேர் இவர் நல்வழியை விரும்பார் என்றெண்ணி மோசம் போவதியற்கை.



இவ்வஞ்சகரது கையிலே பணம் மிகுந்து செருக்குடையவரானால் 'கொழுத்தவன் கைக்கு இளைத்தவன் துரும்பு' என்று எண்ணி ஏழையரை வருத்தி நலியச் செய்வார். 'கொல்லன் எளிமைகண்டு, குரங்கு காலுக்குப் பூண்கட்டச் சொன்னது' போல் இல்லாத பொல்லாத வழக்கங்களையும் ஏற்றுச் செய்ய ஏழையரை ஏவி விடுவர். சில திரவியம் மிகுந்த செல்வவான்கள் 'கட்டி எட்டினமட்டும் குத்தும், பணம் பாதாளமட்டும் குத்தும்' என்று இறுமாப்புடனே மகா கொடிய பாதகங்களைச் செய்து வருவது வழக்கமாயே இருக்கிறது. 'ஈர நாவுக்கு எலும்பில்லை' என்றறிந்து பல பேரும் இப்பாவிகளைப் புகழ்வார். இவ்வஞ்சகர் கையில் 'ஒருக்கால் பட்டால், குருக்கள்' என்று பல பேர்களும் அறிவுள்ளார் ஆவரன்றோ? இதில் உட்கிடக்கும் சூட்சமம் என்னவெனில் இப்போலி உபகாரிகள் பலவித நல்வழிப் பேச்சிலே மயக்கத் தக்கதாய்ப் போலி நற்புத்திகள் பேசி ஆளை மயக்கி அழுங்கச் செய்வார். இதில் உடன்பட்டு இறங்கியவர் நன்மார்க்கரே யாயினும் ஒருவழியில் இறக்கப்பட்டவராதலால் புத்திமாறி அக்காரியம் செய்தபிறகே நமக்கேலாத விஷயத்தில் இறங்கினோம் என்று புலம்பி மனம் நைவர். மேற்கண்ட நன்னய மொழியே இவர்களை நயவஞ்சகர் என அழைக்க வழியாயிற்று.

இவர் சில இளைஞர்களைக் கெட்டவழியில் இறக்கி வீணே பணத்தைச் செலவழிக்கும் மார்க்கத்தைக் காட்டுவர். சமயத்துக்குத் தகுந்தபடி பெரும் வட்டியில் சிறுதொகை கொடுத்துப் பெருந் தொகைக்குக் கடன் பத்திரம் வாங்குவர். தந்தை பிள்ளைகள் ஒத்திருந்தால் தாம் பார்த்துச் சகியார். கிருத்திரமமான விஷயங்களைச் சமயத்துக் கேற்பச் சொல்லி வீணே மனக்குழப்பத்தையும் கலகத்தையும் விளைவிப்பர். இக்கிருத்திரமிகள் ஊருக்கு மகா கொடியர்கள். இப்பாவிகளின் வார்த்தைகளாலே குடும்பத்தை விட்டுப் பிரியவேண்டும் என்றும், குடும்பத் தலைவனை யறியாது வேறு செலவுகள் செய்ய வேண்டும் என்றும், வீட்டாருக்கும் தமக்கும் ஒத்துமை யில்லை யென்றும் பலவிதமான தீர்மானங்கள் உண்டாகின்றன. 'மொய்யரிசி கொதிபொறுது' என்பதைப்போல் இளைஞர்கள் மேற்காட்டிய கிருத்திரமிகளின் 'சேர்க்கைக்குத் தக்க பழக்கம்' கொண்டு படுத்தும்பாடு மகா கொடியது. இவ்வஞ்சகர் பிறர் படும் பாட்டை நினைத்து ஆனந்தம் கொள்வார்.

'சொற்கேளாப் பிள்ளையினால் குலத்துக்கு ஈனம்' என்ற மொழிகளை இளைஞர்களும் சிறுமிகளும் கவனியாது தம் முறையையும் கடமையையும் இறையும் சிந்தியாது குடும்ப சுகத்தைப் பாழே ஆக்குவர்.

ஆகையின் இளைஞர்கள் 'சுற்றம் பார்க்கில் குற்றம் இல்லை' என்பதை நன்கு ஆராய்ந்து இந்நய வஞ்சகர்களுடன் சேராது தமது கடமைகளை நன்னெறியின் செலுத்த முயல வேண்டும். பெண்களும் வஞ்சகிகள் ஆகிய தம் இனத்தாரையும் கவனித்து அவர்களுடன் பழக்கம் கொள்ளாது நடக்க வேண்டும். இதைப்பற்றிப் பின்னொரு முறை விரிவாய் எழுதப்படும்.

பத்திராதிபர்.

## ஸதி.

(68-ம் பக்கத் தொடர்ச்சி.)

பாலில் தவிர மற்றயாதொன்றிலும் ஹம்ஸத்திற்குப் பிரியமில்லை; மழையில் தவிர மற்ற யாதிலும் சாதகத்திற்குப் பற்றுதல் இல்லை; நற்குமணாளையே சேரும் நல்லன்னம்: பாலுடனேதான் கூடும் சர்க்கரை, என்று சொல்லத்தகுந்த இந்த தம்பதிகளிருவரையும் பார்த்து வியப்புற்று அகமகிழ்ந்த சந்தோஷத்தையடைந்தனர் ஊரார் எனினும், இம்முகூர்த்தத்தைக் குறித்துத் தீராவருத்தமடைந்தவனொருவனிருந் திருப்பானென்ன நம்நேயர்க ளூகித்திருக்கலாம்.

கிரீசர் குமாரன் சுப்பிரமணியன் வரன் நிச்சயப்படும் முன்னால் சுசீலை தேடியிருந்த பட்டகோபாலனென்ற துக்குறி இப்பொழுது சில அசட்டு விளையாட்டுகள் விளையாடத்துணிந்தான். 'கைக்கெட்டினது வாய்க் கெட்டாவிடினும் இக்கட்டழகி ஸதியை எவ்விதத்திலேயாவது நாமடைந்து அனுபவிக்க வேணும்' என்ற வெறி நமக்குப் பூராவாய் இருப்பதால் இம்முகூர்த்தம் இன்னும் ஒரு மாதம் நடக்காமல் விக்கினங்கள் உண்டு பண்ணி, இச்சதையை ஒருவருக்கும் தெரியாமல் தூக்கிச்சென்று விடவேண்டியதுதான் நம் கடமை. ஆகையினால் படுத்த படுக்கையைவிட்டு 10, 12, தினங்கள் எழுந்திருக்க முடியாமல் நம்மாட்களைக்கொண்டு, சுப்பிரமணியனை நன்றாயடித்துப் புடைத்து விட்டால் முகூர்த்தத்தை அடுத்த மாதம் தள்ளிவைப்பார்கள். அச்சமயத்தில் சாவகாசமாய் சாமதான பேததண்டம் என்கிற நான்கு விதத்திலேயும் ஸதியைத் தன்னை மணம்புரிந்து கொள்ளும்படி முயன்று தன் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமென்று நிச்சயித்து, ஒருவிதமாய் தன்மனக் குழப்பத்தை அடக்கித் தன்காரியம் நிறைவேறுமாறு ஏற்பாடுகள் செய்யலானான்.

ஐயோ பாவம்! 'இளங்கயிற்கல்' என்னும் வாக்கியத்தினுண்மையைக் கொஞ்சமேனு மறியாதவும், பாலியவயதில் பள்ளிபுகுந்து சரித்திரங்கள் கற்காமையினாலும் குணசாலிகளுடன் பழகாமையினாலும், பணச்செருக்கியல் பாயிருந்து போதும் மதுவிஷத்தின் புத்திமாத்திர மறைந்திருந்த தங்கள் யஜமான் பட்டகோபாலன் சொற்படி நடந்தமையினாலும், சூரியன் புறப்பட்டது முதல் அஸ்தமனம் வரையில் நிலத்தில் கஞ்சிக்காக உழைத்து, இரவில் குடித்து விட்டு, தன் பெண்டோ, பிறர்பெண்டோ, யாருடனேயாவது இரவில் வலிந்து உறங்கும் இம்மிருகங்களுக்குப் பகுத்தறிவு புத்தியாது! ஆயாக்கரிசி கொடுப்பதாக யஜமான் சொன்னால், கொலை செய்யும்படி அவன் கட்டளையிட்டாலும், அவன் கட்டளையை மீறமாட்டார்கள் என்பதில் ஆக்ஷேபனையாது?

பட்டகோபாலன் தன்னாட்களிடம் சென்று, தன் பிரதி ஸ்தோத்திர வார்த்தைகளினாலேயும் அவர்களுக்குத் திருப்தி உண்டாக்கி, வெள்ளிக்கிழமைதினம் சாயங்காலம், சுப்பிரமணியன் உலாவித்திரிந்து திரும்பி வருங்கால் ஒருவரும்



அணுகாத ஐயனார் கோவிலருகே, 10, 12 தினங்கள் படுக்கை விட்டெழ முடியாமல் அவனை நையப்புடைத் துதைத்துக் காயப்படுத்தும்படியவர்களைக் கட்டளையிட்டான். மதியற்றஆட்களோ, மிருகங்கள்போல், பட்டகோபாலன்கட்டளை நியாயமா, பிசகாவென்று பகுத்தறியாமல், அதைச் சரிதானென்று இந்திரன் கட்டளையாகநினைத்து, ஒரு புண்ணிய புருஷனை உபத்திரவிக்க ஸஜ்ஜமானார்கள்.

ஐயோ விதியின் கொடுமை மிகவும் பெரிதே! வைத்த முகூர்த்தம் தட்டிவிடும்படி, தனக்கு விரோதியாகிய ஒரு துரோகி முயன்றானே யானாலும், அம்முயற்சிக்குக் கிரீடமளித்தாற்போல் முகூர்த்தமும் தட்டி விடுமோ! ஹா! ஈசா! இவ்வுலகின் கண் பணமிருப்போர்களிடத்தில் உதாரகுணமும் நன்னடக்கையும், உதாரகுணமும் நன்னடைக்கையு முள்ளோரிடத்தில் ஐசுவரிய லக்ஷ்மீகடாக்ஷமும் உண்டாகும்படி யுமக்கு எக்கால் மனம் வருமோ! அறியமுடியவில்லையே! ஏழைகள் பரிதபிக்கும்படி பகலிரவு செய்யும் வேலையினாலுண்டாகும் ஐசுவரியத்தை யப்பேதைகளுக்குத் தெரியாமல் கொள்ளையடிக்கும் பணக்காரர்கள் அவர்களுக்கு உண்டாக்கும் உபத்திரவமோ அளவற்றதாயிருக்கிறதே! ஈசனே! எல்லோரிடத்திலும் அளவற்ற அபிமானமுடையஸர்வேசன் நீரென்று எல்லோரும் உம்மை வணங்க, நீர் ஸந்நேசனாயிராமல் தாவிபோல்ஸம்பந்நேசனாயிருக்கிறீரே! ஒருக்கால் உம்மாயையால் 'ஸத்' என்றபதம் 'ஸம்பத்' என நீர் நினைக்கின்றீரோ! இவ்வுலகத்தில் எல்லோரும் சமசொத்துள்ளவர்களாயிருக்க முடியாவிடினும்; நல்லகுணமுள்ளோர்கள் பணக்காரர்களாய் இருக்கும்படி நீர் கடாக்ஷிக்கக் கூடாதா! ஸத் புருஷர்கள் பணமுள்ளவர்களாயிருப்பார்களேயாயின் ஏழை ஜனங்களை நல்லகுணசாலிகளாய்ச் செய்யும்படி அவர்கள் முயலுவார்கள். முயன்றாலும் ஜயம் கைகூடுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை என்கிற விஷயம் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்க, உலகத்தில் ஏன் அம்மாதிரி நடக்கமாத்திரமில்லை. சிவபெருமானே! உலகம் முழுதும் வியாபித்து ஸ்தாவரங்களாகிற புல் பூண்டுகள் முதல் ஜங்கமங்களாகிற பறவை முதலிய ஜந்துக்களைக் காப்பாற்றுகிற உம்முடைய இம்மாயத்தை யறிய இவ்வுலகத்தாரால் முடியவில்லையே!

தன்னை நம்பியிருப்போனைப் பூராவும் பரிசோதிப்பான் ஈசன் என்பது திண்ணம் தானென்று பலசரித்திரங்கள் நமக்குத் தெரிவிக்கின்றனவே! அம்மாதிரியே சுப்பிரமணியனிடத்திலும் ஈசன் அநேகம் விதமாய் பரிசோதித்தது போதாததுபோல் பின்னும் பரிசோதிக்கலானார். ஸதி தன்னிடத்தில் வைத்திருந்த அபிமானத்தைப்போல் பதின் மடங்கு தானவளிடத்தில் வைத்திருந்த நேசம் கைகூடி விவாகம் முடியவேண்டுமேயென்று பலவிதமாய் முயன்று, ஈசனை நம்பி விடாமுயற்சியுடன் அவர்கள் காரியம் ஸத்காரியமென்று மனச்சாக்ஷியாக நினைத்து மனிதர்கள் உழைப்பார்களேயாயின் அவர்கள் காரியம் கைகூடுமென்பது திண்ணம் என்று நினைத்து, பரமேசன் தீனதயாளுவாகிய ஸர்வேசனிடத்தில் நம்பி, சுப்பிரமணியன் தன்காரியத்தில் கைவைத்து முயன்ற போதிலும், கைக்கெட்டியது வாய்க் கெட்டாமற் போகுமோ வென்று அவன் நினைத்து மனமுருகுங்காலம் கிட்டிய தெனக்கேட்க உருகா மனமுமுண்டோ!

பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் செட்டிக்காரப்பிள்ளைகளும் மற்ற உத்தியோகங்களிலிருக்கும், உண்மையான உத்தியோகஸ்தர்களும் ஒவ்வொரு தினமும் இன்ன இன்ன காலத்தில் இந்த இந்த காரியங்கள் செய்யப்பட வேணுமென்று முன்னதாகவே நிச்சயித்து, அக்காரியங்களை முடிக்கப் பூராவாகவும் முயலுவார்களென எல்லோரு மறிந்த விஷயமே. அம்மாதிரியே தன் வழக்கப்படி வெள்ளிக்கிழமை தினம் சாயங்காலம் 5-மணிக்கு, அழுக்கற்ற வேஷ்டியுடுத்து, அழகிய சொக்காயணிந்து சிராய் வாரப்பட்டிருக்கும் தலையில் ஷோக்குண்டாசடனும் பார்வையின் முன்னிற்கும் அகன்ற நெற்றியில் வாசனைச்சாந்துடனும், கையிற் பிரம்புடனும் வெளியில் உலாவித் திரியப் புறப்பட்டான். மரங்கள் நிறைந்ததும், நல்லகாற்று வீசினதுமான அவ்வையனூர் சோலையில் திரிந்து 6¾-மணி சுமாருக்கு அவ்விடம் விட்டுத் திரும்பி 10-அடி வரும்முன், தானறியாமல் யாரோ வொருவன் தன் கண்ணையும் வாயையும் துணிகளைக்கொண்டு கெட்டியாய்க் கட்டுவதை யுணர்ந்தான். கத்துவதற்காக முயன்றான்; முடியவில்லை: கண்கட்டை யவிழ்த்துவிட முயன்றான்: கட்டில் கைவைப்பதற்கு முன் கைகளும் கட்டப்பட்டன. என் செய்யக்கூடும் சுப்பிரமணியன்! சாமமாய் அப்பாதகர்களை வேண்டிக் கொள்வோமென்றாலோ, பேசமுடியாமல் வாய்கட்டப்பட்டிருந்தது. தன்பலத்தை யுபயோகம் செய்வோமே யென்றாலும், தானொருவன், எதிரிகளனேகர். அகப்பட்டுக் கொண்டிருக்குமிடமோ ஒருவரு மணுகாதவிடம். இனிச் சுப்பிரமணியன் பட்ட கஷ்டத்தை வர்ணிப்பதை விட உணருவது நலம்.

தன் பக்தனைக் கைவிட ஈசனுக் கிஷ்டமில்லை போலும்! சுப்பிரமணியன் அதிருஷ்டத்தினால், அச்சமயத்தில் அவ்விடத்திற் கருகாமையில் சீக்கிரமாய் சிலர் தைவ யத்நமாய் வந்தார்கள். இவர்களைக் கண்டவுடன் பறந்து விட்டார்கள் பட்டகோபாலன் ஆட்கள். அகப்பட்டுக் கொண்டான் யஜமான் மாத்திரம்; ஓட முடியாமையினாலே. அசடனுக்கு குறும்பு புத்தி யிருந்தாலும் அது மிகவும் அல்பம் தான். சுப்பிரமணியனை யடிக்குமிடம் யாரு மணுகாமல், வருவோர் யாராவது தென்பட்டால், அவர்கள் நோக்கும் திசையை மாற்றி, சமத்காரமாய் அவர்களுடன் பேசி வேறிடம் அழைத்துப் போகக் கூடிய சிலரைச் சுற்றிலும் வைத்திருந்தால் இக்காரியம் யார் செய்ததென்று வெளியாயிருக்குமா? பலமுறைத் திருடனொரு தடவை யகப்படுவா னென்கிற வசனப்படி இப்பொழுது பட்டகோபால னகப்பட்டுக்கொண்டான்.

தன்னை யிம்மாதிரி யடிக்க ஏற்பாடு பண்ணினவன் யாரென்றும், எவ்வெண்ணத்தினால் இக்காரியம் செய்ய அவன் துணிந்தானென்றும் நன்கு யறிந்துகொண்டு, இவ்விஷயத்தைப் பற்றிக் கச்சேரியில் வாதாடினால், முன்காலத்தில் ஐரோப்பியர் கண்டத்தில் நடந்த டியூவல் (Duel, மாதிரி தன் காரியமாய் விடுமென்று நினைத்து தன் ஞாதார்களுடன் அவனைக் கண்டித்து, இனி அப்படிச் செய்தால் கோர்ட்டார் அவனை தண்டனை செய்வாரென்று அவனுக்கு புத்தியுரைத்து வேறொன்றும் அவ்விஷயத்திலவன் செய்யவில்லை.



சுப்பிரமணியன் தேக சௌக்கியம் இவ்வளவு சுகமாய் இல்லாமையால் கலியாணத்தை 11-வ. வியாழக்கிழமை ஒத்தி வைத்தார்கள். ஆனால் பட்டகோபாலனோ அயோக்கியர்களுக் கெல்லாம் சிகாமணி யாகையினாலே, வெறி மூண்டு, எப்படியாவது ஸதியை யபகரித்து இருந்த விடம் தெரியாமல் ஓடிப் போய் விடவேணும் என்கிற எண்ணம் அவனிடம் மேற்கொண்டது.

நான்கு ஐந்து நாளைக்கு முன்னமேயே, பட்டகோபாலன் தனக்கு வேண்டிய கல்பம் என்ற குல்டா சிகாமணியாகிய ஒரு சிறுமியை அடிக்கடி ஸதியினிடம் போய் அவளுள்ளத்தை மாற்றி அவள் மனதைக் கவர்ந்து அவளிடம் அதிக சிநேக பாத்தியதை கொண்டாடும்படி, வேண்டிக் கொண்டிருந்தான். அச்சிறுமி கல்பமோ பணமோகம், மனமோகம், இவ்விரண்டையும் மேல்கொண்டு, தன் மனதிற் கிசைந்தவன் பட்டகோபாலனே யென்றெண்ணி, அவன் மனோபீஷ்டத்தைத் திருப்தி செய்ய முயன்றாள். ஸதியை சாதாரணமான ஒரு பேதையாக வெண்ணி, அவள் கூந்தலை அழகாய் வாரிப் பின்னுவதிலும், நல்லாடை யாபரணங்களால் அவளை யலங்கரிப்பதிலும், அதிக ஆசையுள்ளவள் போல் நடித்து, ஸதியைத் தன் வலைக்குள் சிக்கிக் கொள்ளும்படி செய்ய வேண்டுமென்று முயன்ற போதிலும், ஸதி அதிகக் கற்றுணர்ந்த வளாகையால், அச்சிறுமியின் உள்நோக்கத்தை ஒரு நிமிஷத்திலறிந்து விட்டாள். ஆகையினால் இச்சிறுமியை முற்றிலும் கெடுத்து, துக்க சமுத்திரத்தில் முழுகச் செய்ய வேணுமென்று நிச்சயித்து, அதிகமாய் நம்புவது போல் நடித்து மோசம் செய்து விடவேண்டுமென்கிற வெண்ணம் ஸதியின் மனதில் பதிந்தது.

எல். நாராயணசாமி அய்யர், பீ. ஏ.

## அரிச்சந்திரன்.

சூரிய வம்சத்திலே சிறந்த அரசனாகிய திரிசங்கு மகா ராஜனுக்கு அரிச்சந்திரன் என்னும் ஒரு உத்தம புத்திரன் உதித்தனன். அவன் இளமை முதல் நல்வழியிலே பழகிச் சிறந்த அயோத்தியா நகரைப் பெருமையின் ஆண்டு வந்தனன். இவன் சிறந்த தைரியவான், வீரன், நற்குணங்களும் நயான குணமும் பொருந்தியவன். இவனைப்போல தர்ம சீலனும், மதவைராக்கியனும், கல்வி போதகனும் வேறு உளர் என்று சொல்லுதல் இயலாது. இவனுக்கு மேற்குறித்த தர்ம சிந்தையும் மதபோதனையும் இருந்தும், ஒரு ரிஷியின் கோபாக்கினிக்கு உடன் படும்படி வாய்த்த விவரம் மிகவும் பரிதாபிக்கத் தக்கதே!

வேத குலத்தவரல்லாத ராஜரிஷி யாகிய விசுவாமித்திரன் வேத புராணாதிகள், யோகம், யாகம் முதலியன கற்றுப் பயின்று 'ராஜரிஷி, ஆனால், பிரமரிஷி' யென்னும் பட்டத்தை அடைந்த தவவலிமை யுள்ளார். இவர் அக்காலத்தே வசித்த ரிஷிகளுக் கெல்லாம் சிறந்த மகரிஷியாயும், இதிகாச புராணங்களைக் கற்றுத் தேர்ந்த அநுபவசாலியாயும் இருந்தும், அகங்காரமும் முன்கோபமும் இவரை விட்டதில்லை. இவரைக் கண்டோர் எவரும் நடுங்குவார். கோபம் வந்தால் சாபம் முந்தி எனும் வாக்கு இவர்க்கு பலிவந்தது.

இவ் விசுவாமித்திரர் கானகத்தின் மத்தியிலே ஒரு ஆசிரமத்திலே வசித்து தபம் செய்து வந்தனர். இவ் வாசிரமமோ, காண்பதற்கு மிக ஆனந்தமாய் இருக்கும். இது கண்ணுக்கினிய பூஞ்சோலையின் மத்தியிலே உள்ளது. புஷ்பச் செடிகள் பற்பல விதமான வர்ணங்களுடன் பூத்துப் பல விதமான நிறத்தையும் அழகையுங் காட்டின. இது ஒரு புஷ்பச் சிறுகுன்றே எனத் தோற்றும். தன் ஆசிரமத்தின் பக்கத்தி லுள்ள மணங்கமழ் புஷ்பங்களாலே இவ்விரிஷி தேவனைப் போற்றித் தனிமையிலே தபம் செய்வாராயினர்.

ஒரு நாள் சில கந்தர்வஸ்திரீகள் ஆகாய மார்க்கமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் இப்பூஞ்சோலையைக் கண்ணுற்று மகா ஆனந்தங் கொண்டு 'இதுபோல இனியாம் சோலையையும், கண்ணைக்கவரும் வனப்பினை யுடைய பலநிற வர்ண மலரையும் யாம் எங்கும் கண்டதில்லை. நாம் இதன் கண் எவ்வளவு குதூகலத்தோடு இப்புஷ்பங்களின் வாசனை முதலியவற்றை அநுபவிக்கலாம்' என்று எண்ணங் கொண்டனர். அன்று முதல் ஒவ்வொருநாளும் இரவிலே இக்கந்தர்வ ஸ்திரீகள் பூஞ்சோலையிற் புகுந்து, ரிஷி மிக அன்புடன் தேவார்ச்சனைக் கென்று காப்பாற்றி வந்த மணங்கமழ் மலர்களைப் பறித்துப் பூஞ்சோலையின் அழகை ஒருவாறு குறைத்து வந்தனர். ரிஷி உதயம் எழுந்து தேவார்ச்சனைக்குப் பூக்கள் கொய்யப் போய் நின்றவுடன், "ஐயோ! ஈதென்ன அதிசயம்! யான் இன்றைநாள் வரையும் இவ்வண்ணம் நிகழ்வதைக் கண்டறியேன். மிக அற்புதமாய் யான் தேவ பூஜைக்கென்று போற்றி வந்த புஷ்பங்களை நடு இரவிலே கொய்து பாழாக்கி யிருக்கின்றார்கள். பூஞ்சோலையோ உதயம் மணம் வீசும் காற்றோடும், கண்ணுக்கினிய வனப்போடும் மிக ஆனந்தமாய்க் காணவில்லையே. பொல்லாப் பாவிகளும் இதன்கண் புகுந்து நாற்புறமும் பரிசோதிக்கும் பாக்கியம் அடைந்தனரேல் அவர்கள் பாவவழியை விட்டுத் தெய்வ வழிபாடு செய்வரே! இப்படி, இப்பூக்களைக் கொய்து உருவில்லா தழித்தனர்; அதோ, செடிகளைத் தாழ்த்தி அவைகளை வளர்க்கும் அருமை யறியாதே நலிய விட்டனர்; செடிகளை யெல்லாம் மிதித்து ஏற்பட்ட வழியிலே செல்லாதே, நாசம் செய்தனர். என் சோலையிலே புகுந்து இவ்வண்ணம் செய்வார் எவர்? அவர்க்கு இத்தனை ஆற்றலும் உண்டோ? ஒரு நாள் அன்று! தினம் தினம் இவ்வண்ணமே!, இக்கிருத்திரமிகளைக் கண்டுபிடிக்க வலைகளைப் பூஞ்சோலையில் போடுவிப்பேன். இதன்கண் புகுவோர் எவரே யாயினும் இவ்வலைகளில் அகப்படுவோர் பார்ப்போம்" என்று தீர்மானம் செய்து வலைகளைப் போடுவித்தனர்.



மேற் கூறிய கந்தர்வ ஸ்திரீகளோ வழக்கப் பிரகாரம் மறுநாள் நடு இரவிலே இப்பூஞ்சோலையை அடைவோமென்ற ஆனந்தத்துடன் போந்தனர். ஐயோ, எவர் அறிவார், பூஞ்சோலையிலே வலை போட்டிருப்பது! இக்கந்தர்வ ஸ்திரீகள் இதில் சிக்கித் தம்மாலானமட்டும் போராடியும் வெளிப்படக் கூடவில்லை. அவர்கள் எண்ணின எண்ணமும், உரைத்த மொழிகளும், அடைந்த பயமும், இனையவென்னயாரால் எடுத்துரைக்க இயலும்? 'இவ்வனமோ மகா தவச்சிரேஷ்டராகிய விசுவாமித்திர ரிஷியதே, நம்மைக்கண்டால் அவர் கோபித்துச் சபிப்பாரே; ஓடுவோம் என்றால் வலையினின்று விடுவித்துக்கொள்ள மார்க்கம் இல்லையே; உதயகாலம் ஆகின்றதே; ரிஷி பூக்கொய்யக் காலம் நெருங்கியதே; ஈசா, என் செய்வோம்! என் செய்வோம்!" என்று மனமுருகி ஸ்திரீகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்ணீர் சொரியக் கலங்கி நின்றனர்.

கானத்தில் வேட்டமாடப் புறப்பட்டு வந்த அரிச்சந்திர மகாராஜன் செவியில் இவர்கள் புலம்பிய கூக்குரல் கேட்டது. அரசன் பூஞ்சோலையை நண்ணி இதற்குள் யாரோ பெண்கள் அகஸ்மாத்தாய் அகப்பட்டுக்கொண்டு பரதவிக்கிறார்கள், இவர்களுக்கு உதவி செய்வார் ஒருவரையும் காணேன் என்று எண்ணித் தன் உடைவாளை யுருவிச் சென்றனன். அருகே நெருங்கி அவர்கள் காந்தர்வஸ்திரீகள் என்று அறிந்தும், ஏன் அவர்கள் வலையிற் சிக்குண்டார் என்று விசாரித்தறியாதே மனம் மிக இரங்கி வலையைத் துண்டித்து அவர்களை விடுத்தனன். ஸ்திரீகள் அரசனைப் பலவிதமாய் நன்மொழி கூறி வாழ்த்தி இவ்வனத்தில் நாம் இனி அடிவைக்கோம் எனவெண்ணித் தம் வாசஸ்தானத்தைச் சேர்ந்தனர். தருமகுணசீலனாகிய அரிச்சந்திரன் இந்த சிறு உதவி தனக்குப் பின்னால் கொடிய சரித்திரத்தையும், சங்கடத்தையும், மனோ வியாகுலத்தையும் தரும் என்று எண்ணுறாய்த் தன் வேட்டை முடிந்தவுடன் இராஜநகர் நோக்கிச் சென்றனன்

## 2-ம் அத்தியாயம்.

உதயமானவுடன் விசுவாமித்திர மகரிஷி தாம் ஏற்படுத்திய வலையிலே எவரேனும் சிக்குண்டாரா வெனப் பார்க்கப் போனதும் அவ்வலையை எவரோ துண்டித்திருப்பதைக்கண்டு மனம் வெதும்பினர். கோபமோ மிகவும் அதிகரித்தது; தம்மிரு கண்களினின்றும் நெருப்புப் பொறி பறந்தன. "எந்த கர்வியாயினும் விசுவாமித்திரரின் வேலையிலே தலையிடல் கூடுமா? விடேன் விடேன்" என்று ஆத்திரத்தோடு சீறினர்.

சிறிது ஆலோசித்து ஞானக்கண் பார்வையால் அரிச்சந்திரனே நமது ஆசிரமம் வந்து இக்கந்தர்வ ஸ்திரீகளை விடுத்து நம்மை அவமானம் செய்தான் என்று ரிஷி அறிந்தனர். "நமது பூஞ்சோலையைக் கெடுத்த ஸ்திரீகளைத் தண்டிப்போமென்று போட்டவலை துண்டாய் கிடக்கிறது. ஆகா! என்ன சாமர்த்தியம்! தனக்கிருக்கும் செல்வத்தாலும் அந்தஸ்தாலும் இந்த அற்பன் கொண்ட கர்வம் எவ்வளவு! இவன் விசுவாமித்திரரைக் கோபிக்கச் செய்யும் பலனை அறிக! இந்தக்

கர்வ அரசனுக்குப் பாடம் சொல்வித்துப் பழிவாங்குவேன். நல்லது! நல்லது! என்ன துணிவு?" என்று பலவாறு ரிஷி சிந்தனை செய்து இராஜநகர் நோக்கிச் சென்றனர்.

இம்மகரிஷியை மிக்க வணக்கத்துடன் அழைத்து அர்க்கியபாத்திய ஆசமனியாதிகள் அளித்து ஆசனத்தில் இருத்தி அரிச்சந்திரன் இருகை மடித்துப் போற்றி நின்று, "ஏழையேன் அடிகள் ஆணையை நிறைவேற்றக் காத்திருக்கின்றேன்." என்றனன்.

ரிஷி: நல்லது அரிச்சந்திரா! நீ எமக்கு வேண்டியது உதவுவாய் என்றனை. மானிடர் எல்லோரும் நீ வேத விதிப்படி நடப்பாய் என்றும் மகரிஷிகளுக்கு மிக்க உபகாரி என்றும், மன்னுயிர் எல்லாம் தன்னுயிரெனப் பாவிப்பாய் என்றும் சொல்லுகிறார்கள். நீ என் வேண்டுகோளை நிறைவேற்ற முடியுமா?

அரிச்சந்திரன்: மகரிஷியே, என் உயிரும், செல்வமும், நாடும் ஒரு பயன் உடையதல்ல. தம்மைச் சிந்தைகளிக்கச் செய்வதினும் இவை பெரியனவோ?

ரிஷி: நல்லது! நான் கேட்பது எது வாயினும் உடனே தருவேன் என்று வாக்களிப்பாயா?

அரிச்சந்திரன்: ஐயா தாம் கேட்பது எது வாயினும் தருகிறேன் என்று இதோ வாக்களித்தேன்.

ரிஷி: (புன் சிரிப்பு கொண்டு ராஜ சபையாரைப்பார்த்து) ஏ சனவான்காள், உமது அரசன் செய்த வாக்குத்தத்தத்தைக் கவனியுங்கள். (அரசனை நோக்கி) உன் நாட்டையும் உன் செல்வத்தையும் எனக்குத் தந்தருள்.

இராஜசபையில் இருந்த அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்து ஆச்சரியப் பட்டார்கள். மந்திரி பிரதானிகள் ஒன்றும் தெரியாதேகிய பிரமை கொண்டனர். சேனாதிபதிகளோ மனம் நைந்து வெட்கினாற்போல தலைகுனிந்தனர். ஏனெனிலோ, அரிச்சந்திரன் மகா உத்தமன். இராஜ்யத்தை நியாய விரோதமின்றித் திறமையில் ஆண்டவன். சத்தியவாக்குத் தவறாத வேந்தன். ஆகையில் சகல ஜனங்களுக்கும் இவன் மீது மிக விசுவாசம்.

இராஜன் ரிஷியின் வேண்டுகோளைக் கேட்டவுடனே "மகரிஷி என்னுடைய ஜனங்களும் செய்த தவத்தை என்னென்றுரைக்க முடியும்? இன்றை யமுதல், இந்நாடும் இதைச்சேர்ந்த அரண்மனைமுதலிய செல்வங்களும் தம்மதே. தாமே இந்நாட்டுக்கு அதிபதியாய் ஆள்வதில் என் ஜனங்களுக்கு மிக திருப்தி. அடிகாள், தயை செய்வீர்கள் அடியேன் காட்டிடைச் சென்று காலங்கழிப்பேன்" என்று வேண்டினன்.

ரிஷி சரியென ஒப்பி அரசன் பெருந்தன்மைக்கும் தருமசிந்தைக்கும் மனமுவந்து ஆசீர்வதிக்க அரசன் தன் உத்தம மனைவியாகிய சந்திரமதியையும் லோகிதாசனையும் அழைத்துக்கொண்டு இராஜதானிக்கு வெகு தூரத்தில் வசிக்க ஏற்பாடு செய்தனன். இராஜன் காசிக்குச் சென்று தன்சரால் சம்பாதிக்கச்



கூடிய மார்க்கத்திலே பாடுபட்டு நன்னெறியிற் காலம் கழிக்க எண்ணினன். உடனே விசுவாமித்திரர், அவனை தரித்திரனாய் விடுதல் போதாது இன்னும் பாடு படுத்தல் வேண்டும் என்று சிந்தித்தனர். சகல செல்வத்தையும் தானங் கொடுத்துச் சென்ற இராஜனிடம் சென்று, "ஏ அரசே, நீ அனைத்தையும் எனக்குத் தானம் செய்தனை. தக்ஷிணையின்றி ஒரு தானத்தை வாங்குதல் கூடாது என்று சொல்லமறந்தேன். என் தக்ஷிணை எங்கே? கொடுத்துதவுவாய்" என்று வேண்டினர். மகா ஏழையாகிய அரிச்சந்திரன் என் செய்வான்! கையில் ஒரு சிறிதும் இல்லை ரிஷிக்குக் கொடுக்கவோ! ஆகையின் ரிஷியை ஒருவாரம் தவணை கேட்டனன். அவரும் அதற்கிசைந்து அந்த நாள் தவறாது கொடுத்திடுவென்று எச்சரிக்கைசெய்து போயினர்.

## சுகபரிபாலனம்.

**குளிர் நீர் ஸ்நானம்:** தேகவலி யுள்ளவர்க்குக் குளிர் நீரில் முழுகுவது மிகுந்த சௌக்கியத்தைத் தரும். காலையிலே குளிர் நீரிலே உடலை நன்றாய்க் காய்ந்த சட்டைச் சவுக்கத்தாலே தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்வார்க்கு ஜலதோஷம் பிடிப்பது அரிது.

**வெந்நீர் ஸ்நானம்:**—வெந்நீர் ஸ்நானம் இராத்திரிகாலத்திலே செய்தால் மிகச்சுகத்தைத் தரும். அப்படியல்லாமல் வெந்நீரில் முழுகிக் காற்றடிக்கும் வெளியிடங்களுக்குச் செல்லுதல்கூடாது. வெந்நீரின் உஷ்ணம் அதிகம் இருத்தல் கூடாது. சாப்பிட்டவுடன் வெந்நீரிலே ஸ்நானம் செய்யல் கூடாது. அப்படிச்செய்வதானால் சாப்பிட்டு ஒரு மணிநேரம் கழித்துத்தான் செய்யவேண்டும்.

**காய்ந்தாறின வெந்நீர் ஸ்நானம்:**—குளிர் ஜலஸ்நானத்தைவிட உடம்புக்குச் சுறுசுறுப்பும், வெந்நீர் ஸ்நானத்தைவிட தேக சுகத்தையும் தரும்.

**வியாதியஸ்தர் படுத்திருக்கும் அறை:**—அவசியமில்லாத சாமான்கள் இங்கு வேண்டாம் தொத்து வியாதியாய் இருந்தால் அறையில் உள்ள வியாதியஸ்தனுக்கு வேண்டிய துணிசட்டைகள் போக பாக்கியை அங்கே வைத்தல் உதவாது. எத்துணிகளை அழுக்கும் அசுத்தமும் போகக் கழுவமுடியுமோ அவைகளையே அங்கு உபயோகப்படுத்தவேண்டும். படுக்கையின்கீழ் பெரும் கம்பளிகளை உபயோகிக்கவேண்டாம். சமமான நல்லதரையிலே படுக்கைபோட்டு, எடுத்துச் சுத்திசெய்யும் படியான சிறுகம்பளிகள் அறை சௌகரியத்தை அநுசரித்துப்போகிக்கவேண்டும் அறையோ, பார்க்க ஆநந்தமாயும், நற்

காற்று வருவதாயும், நல்லவெளிச்சம் உடையதாயும், படங்களும் கண்ணாடிகளும், சிறுசெடிகளும் உள்ளதாயும் செய்யவேண்டும். அன்னபானாதிகளை அந்த அறையிலே மீந்து வைத்தலோ கூடாது.

வியாதியஸ்தர் படுத்திருக்கும் வேளையிலே அவசியமில்லாத தடபுடசப்தங்களும் நகையோசையும், ஓசைக் காற் செருப்பும், இரகசியமாய்ப் பேசுதல் முதலிய விஷயங்களும் இருத்தல் கூடாது. கணப்பு எரியவேண்டியிருந்தால் வரளிமுதலியவைகளையும் விறகு முதலியவைகளையும் சிறிதும் சப்தங்கள் நேராதபடிப் பக்குவமாய் வேலை செய்யவேண்டும். அறையில் ஜலம்விட்டு நனைத்திருத்தல் கூடாது. காற்று வரவும் போகவும் சௌக்கியமாய் இருக்கவேண்டும். கணப்பு போட்டிருந்தால் நல்லகாற்று வருவதற்கு ரொம்ப சௌகரியம்.

வியாதியஸ்தனைக் கவனித்துக் கொண்டிருப்போர் தம்மிடத்தில் பலதலையணைகளையும், போர்வை வேறொன்றையும் தயாராய் வைத்திருக்கவேண்டும். அவர்கள் நன்றாய்ச்சுத்தி செய்யக்கூடிய உடையுள்ளவர்களாயும், நாகரீகவழியிலே பழகுபவர்களாயும் இருத்தல் வேண்டும். வியாதியஸ்தரின் கவனத்தை இழுக்கும்படியான அந்தஸ்தில் இருப்பது கூடாது. ஆகையின் வியாதியஸ்தனைக் கவனிக்கவேண்டியவர் உலகவழிகளையறிந்த அன்பார்ந்த தாயார் தமக்கை முதலியவர்களாய் இருந்தால் மிகவும் சௌக்கியமே.

## புத்தகக் குறிப்பு.

குசலவாக்கியம் என்று வழங்கும் இராமாயண உத்தரகாண்டம் : R. S. சுப்பலக்ஷ்மி அம்மாள் தமிழ் நாட்டுப் பெண்கள் கர்ண பரம்பரையாய்ச் சொல்லிக் கொண்டுவரும் இப்பாட்டை அச்சில் இடுவித்தது மிக நன்மையே ஆம். இவ்வம்மாள் முகவுரையிற் கூறுகிறபடி, "வீதிவிட்டு வீதி போய்க் குசலவாக்கியம் ஒரு விதமாய்த் தெரிந்த கிழவிகளிடத்தில் சொல்லிக்கொண்டுவருகிற ஸ்திரீகள் இப்புத்தகத்தை மிகவும் பிரியத்துடன் வாங்குவார்களென்று நம்புகிறேன்." என்பதை நாமும் ஒப்புகிறோம். ஆனால் வெகுவாய்க் காணப்படும் கொச்சைச் சொற்களை நாம் வசன நடையிலே உபயோகப்படுத்தும் வழக்கமே இல்லாததால், அவைகளைத்திருத்தி பாட்டு மெட்டு மாறாது செய்திருந்தால் நன்மையே யெனத் தோற்றுகிறது. பெண்மணிகள் இவ்வளவு தூரம் முன்வந்து இப்புத்தகத்தை வெளிப்படுத்தியது நமக்கு வெகு சந்தோஷமே.



# NEWS AND NOTES.

## வர்த்தமானங்கள்.

புனாவில் ஓர் சுதேசபாங்கி:—மிஸ்டர் பாலகங்காதர திலகர் புனாவில் ஓர் சுதேசபாங்கி ஸ்தாபிக்க பிரயத்தனஞ் செய்து வருகின்றார்.

ஒரு அணாவுக்கு ஓர் புதியநாணயம்:—இரண்டு அணாவிற்கு ஓர் வெள்ளி நாணயமிருப்பதுபோல 1 அணாவிற்கு நிக்கல் வெள்ளிநாணயம் ஒன்று தயார் செய்திருக்கிறார்கள். இது பெரும்பாலும் வருகிற ஜனவரி மாதத்திலிருந்து வழக்கத்திற்கு கொண்டுவரப்படுமென அறிகிறோம்.

ஓர் லார்ட்பட்டதாரி பால் விற்பனை செய்கிறார்:—இங்கிலாந்தில் கான்சர்வேடிவ் கக்ஷியார் காலத்தில் பிரதம மந்திரியாயிருந்த பால்பர் பிரபுவின் மைத்துனராகிய லார்ட்ராலேபிரபு இப்பொழுது பால்வியாபாரம் செய்கின்றனராம். இவருக்கு லண்டனில் மாத்திரம் 1000 பசுக்களிருக்கின்றனவாம். இவர் லண்டனிலுள்ள அநேக ஓட்டல்களுக்கும் தேனீர் கடைகளுக்கும் பால் சவதரிக்கின்றாராம்.

இங்கிலாந்தில் கோடீஸ்வரர்கள்:—சென்றவருடம் வருமானவரிக் கட்டினவர்களில் ரூபாய் 10,000 க்குக்குறையாமல் கட்டினவர்கள் 25 பேருக்கு மேலுண்டாம்.

ஜப்பான் சக்ரவர்த்தியுடைய டொக்கியோ அரண்மனைகளிலொன்று உள்ளும் புறமும் அக்கினியால் தகர்த்து போடப்பட்டதாம்.

ஜப்பான் முன்னுக்கு வந்ததற்கு ஜப்பானிய சக்கரவர்த்தி காரணராயிருப்பதுமன்றி, ஜப்பானிய சக்ரவர்த்தினியும் காரணராயிருக்கிறார். ஏனெனில், இவர் முதல் முதல் தம்முடைய வம்சத்திலுள்ள சில பெண்களைப் படிப்புக்காக அமெரிக்காவுக்கு அனுப்பினர். அதே அனுஷ்டானமாக ஜப்பானிய பெண்கள் தங்கள் நாட்டிலும் கல்விகற்க ஆரம்பித்து தேசக்ஷேமத்திற்கு முக்கிய பாத்திரர்களானார்கள்.

பாரசீகத்து அரசராகிய "ஷா" என்பவரிடத்திலிருக்கும் ஊக்காவின் மதிப்பு 60,000 பவுன்களாம்.

ஐரோப்பாவின் வடபாகத்திலுள்ள பின்லெண்டு தேசத்தின் பார்லிமெண்டு சபையில் மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்படும் சமயம் பெண்களும் அபேக்ஷகர்களாய் நிற்கிறார்கள். ஆகவே இராஜாங்க உத்தியோகங்களில் பெண்களைப் பாக்கலாம். இதுபோலவே இங்கிலாண்டிலுள்ள பெண்களும் பார்லிமெண்டு மெம்பர்களாக வேண்டுமென்று வாதாடுகின்றார்கள்.

---

குருடருக்குப் பத்திரிகை.

லண்டன் டேய்லிமெயில் பத்திரிகை, குருடருக்கென வாரத்திற்கு ஒருமுறை பென்னிபேப்பராப் பிரசுரிக்கப்படும். அப்பத்திரிகை "பிரெய்லி" எழுத்தில் அச்சிடப்படும். அந்த எழுத்தைக் கையால் தடவிப்பார்த்து தெரிந்துகொள்ளும்படியான வழியொன்றேற்பாடு செய்திருக்கும்.

---

எட்வர்ட் அரசர் அவர்கள் இங்கிலாந்தில் புதிதாய் ஓர் பாடசாலையைத் திறந்தார்கள். "பணச்செலவு செய்யும் நல்வழிகள் பல விருக்கினும் சிறுவர்களுடைய படிப்பைக் கருதிச்செய்வது எல்லாவற்றினும் உத்தமம்" என்று அச்சமயத்தில் பேசினார்.

---

பரோடாமகாராஜா:—பரோடா கைக்குவார் மகாராஜா தமது மகாராணியார் சகிதம் மிஸ்டர் ரோமேச சந்திரதத்துடன் புறப்பட்டு 28-ந்தேதி கல்கத்தா போய்ச் சேர்கின்றார். 29-ந்தேதி மாதர் மகாசபையில் பரோடா மகாராணியாரும் வந்திருந்து சிறப்பிப்பார் என்று தெரிகின்றது.

---

இவ்வருஷம் கல்கட்டா நகரில் நடைபெறப்போகும் காங்கிரஸுக்குப் போடும் பந்தலின் விஸ்தீர்ணம் 38,000 சதுரஅடியென்றும், அந்தப்பந்தல்போட இட்டம்போட்டிருக்கும் தொகை ரூபா 9000 என்றும் அந்தத்தொகைமுன் வருடங்களைவிட ஜாஸ்தி விஸ்தீர்ணம் போட்டு வருவதற்கு மற்றவருடங்களில் செய்தசெலவை விடக் குறைந்ததென்றும் சொல்லப்படுகிறது.

---

பம்பாயிலுள்ள இந்திய வர்த்தகர்கள் சேர்ந்து 7-லக்ஷம் ரூபாய் முதலில் ஓர் பஞ்சு யந்திரசாலை ஸ்தாபித்திருக்கிறார்கள்.

---

இந்தியாவில் ஜான்ஸீ என்னுமிடத்தில் ஓர் பிராமண விதவைக்குக் கிரமப்படி விவாகம் நடந்தது.

மெட்ரிக்குலேஷன் பரிக்ஷைக்கு வயது.

சர்வகலாசாலையில் நடந்த ஓர் மீடிங்கில், மெட்ரிகுலேஷன் பரிக்ஷைக்குப் போகும் மாணவர்களின் வயது 15-க்குக் குறையாமலிருக்கவேண்டுமெனத் தீர்மானஞ் செய்தார்கள்.



ஆசாரச் சீர்திருத்த சபை:—ஸா சந்திர மாதவ கோஷ் இதற்கு அக்கிராசனாதிபதியா யிருப்பார்கள். இச்சபையில் மதுவிலக்கம் ஒழுக்கம், பாலிய விவாகத்தால் விளையும் தீமைகள், பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திராதிய நான்கு வருணத்தாரும் முன்போல வேற்றுமை பாராட்டி விலகி நில்லாமல் சிறிது நெருங்கி யிருத்தல், பெண்களுக்கு அளவு கடந்த சீதனம் கொடுக்கப்படாதென்பது, விவாகத்திற்குச் செலவு செய்யப்படும் தொகையைக் கூடியவரை குறைக்க வேண்டுமென்பது இந்துக்கள் கப்பல் யாத்திரை செய்யலாமென்பது பெண் கல்வி, பெண்களுடைய நலவொழுக்கும் விர்த்தியாகும் படியான விதமாகப் பெண்கல்வி வேண்டுமென்பது, விதைவைகளின் நிலைமையும் பரிபாலனமும், புனர்மணம், ஒருவன் பல பெண்களை மணத்தல் வேறு மதத்திற்குப் போய் விட்டுப்பின்பு இந்து மதத்திற்குவர விரும்புகிறவர்களை ஏற்றுக் கொள்ளல், கிரிஜா கியாமுறை முன்னிலும் கௌரமாக நடத்த வேண்டுமென்பது முதலிய முக்கியமான விஷயங்கள் பேசப்படும்.

---

வெகுமதி பெற்றாள்:—ஹைதராபாத் நவாப் அவர்களின் பேரில் கவிபாடின சேத்திஜான் என்னும் மாது நவாப்பீடத்திலிருந்து ரூ. 1000-வெகுமதி பெற்றாள்.

---

காசியில் ஓர் கைத்தொழிற் கல்விச்சாலை:—அனிபெசண்டமாது காசியில் ஓர் கைத்தொழிற் கல்விச்சாலை ஸ்தாபிப்பதற்காக அனேக முயற்சிகள் செய்து வருகின்றார்கள்.

---

நவ்ரோஜியைப்பற்றி ஒருவர் எழுதுகிறார் "நவ்ரோஜிக்கு நான்கு பௌத்திரர்கள் இருக்கின்றார்கள் ஒரு பௌத்திரர் கேம்பிரிட்ஜ் கலாசாலையில் வாசிக்கிறார். ஒரு பௌத்திரி எடின்பரோ சர்வகலாசாலையில் எம். பி. என்னும் வைத்தியப்பரீக்ஷையில் தேறியிருக்கிறார். இம்மாது தான் முதல் முதல் இப்பரீக்ஷை தேறிய இந்துமாது.

---

ஜப்பானிய ஸ்திரீகள்.

ஜப்பான் ஸ்திரீகள் இந்திய ஸ்திரீகளைப் போல இதுவரையும் புருஷருக்குக் கீழ்ப்படிந்து புருஷரே தெய்வமென்று ஒழுகிவந்தார்கள். ஆனால் நாகரீகமும் படிப்பும் வளரவே. அவர்கள் இப்பொழுது ஐரோப்பிய பெண்களைப்போல் தங்களுக்கும் ஸ்வாதீனம் வேண்டுமென்றும் தாங்கள் கேவலம் அடிமைகள் போலத் தொண்டுசெய்துகொண்டு புருஷருடைய காலடியில் கிடக்க முடியாதென்றும் சொல்லிக்கொண்டு வெளிக்கிளம்பி விட்டார்கள். முன்வீட்டை விட்டு வெளியேறாமல் கோஷாக்கள் போலிருந்த சிறு பெண்கள் இப்பொழுது பைசைகலின் (காலவண்டி) யேறிக்கொண்டு வெளியே உலாவப் புறப்படுகிறார்கள். பழயமாதிரி உடைகளை எறிந்து விட்டு, நடப்பதற்கு சௌகரியமாயும் பார்வைக்கு

அழகாயு முள்ள உடைகளைத் தரிக்கின்றார்கள். இது ஜப்பான் புருஷருக்குக் கொஞ்சம் பிடிக்கவில்லைபோல் தோன்றுகிறது. ஆகவே ஜப்பான் கவர்ன்மெண்டாரே இது விஷயத்தில் தலையிட்டுப் பெண்கள் அவ்வாறு செய்வதைத் தடுக்க வேண்டிய முயற்சி செய்து வருகிறார்கள்.

---

ஓர் ஐரோப்பிய ஸ்திரீ ஸ்பெயின் தேசத்திற்சென்று, ஆண்பிள்ளையைப் போல வேஷந்தரித்து போலீசு சேவகத்தில் அமர்ந்து கொண்டாள். இவள் இவ்விதமாக வெகுகாலம் இருந்து "பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்" என்கிறபடி ஒரு சமயத்தில் அகப்பட்டுக்கொண்டாள். இவளுக்கு வேலையும் போய்ப் பென்ஷனும்போய் விட்டபடியால், இப்பொழுது பரிதாப நிலையில் இருந்து வருகிறாள்.

---

ஓர் பதிவிரதா சிரோமணி.

நேபாளராஜ்யத்தில் இமயமலைச்சாரலில் வாழ்ந்து வந்த ஒரு பிராமணோத்தமர், தமது 82 ஆவது வயதில் சிவகதியடைந்தனர். இவருக்குச் சுமார் 5-லக்ஷம் ரூபாய் ஸ்திதியுண்டு. தமது பர்த்தாவின் பிரிவையாற்றாத 78 வயதுடைய மனைவியார் தம்மிடம் ஒப்புவித்திருந்த 5 லக்ஷம் ரூபாயில் ஐயாயிர ரூபாய்க்குச் சுடுமும் ஆயிரத்து முந்நூறு ரூபாய்க்குச் சந்தனக்கட்டையும் நூறுரூபாய்க்கு நெய்யும், 100 ரூபாய்க்கு வஸ்திரமும் வாங்கிவைத்துக்கொண்டு மிச்ச ரூபாயையும் சொத்துக்களையும் தமது வேலைக்காரர்களுக்கும், ஏழைகளுக்குமாகக் கொடுத்து விட்டுத் தாமும் தமது பிராணநாயகருடன் உடன்கட்டை ஏற எத்தனித்தனர். நேபாள ராஜாங்க உத்தியோகஸ்தர்களுணர்ந்து தடைசெய்ய, உத்தமிகொண்ட கருத்துக் கிடையூறு சம்பவிக்கவே, அத்துக்கம் பின்னும் சகியாதவராய் அவ்வம்மையார் ஊணுறக்கமின்றிப் பட்டினிகிடந்து தமது தேகத்தை யொடுக்கித் தமது நாயகன் திருநாமத்தையே பஜித்து 9 ஆம் நாள் அவருடைய திருவடியை யடைந்தனர். மூன்றுரூபாய் சாலிபோனால் மூந்நூறு ரூபாய் முதலாய்ச்செலவிருக்கும் இக்காலத்தில், இத்தகைய பதிவிரதா சிரோமணி தமது நாயகனிடத்து வைத்திருந்த அன்பும் பயபக்தியும் கொழுநன் பாதாரவிந்தத்தையே தியானிக்கும் மாண்பும், செல்வத்திற்கு வெறுக்கையெனப் பேர்வாய்ந்திருந்தும் அதை வெறுத்துத் தானம்செய்த நேர்மையும் இம்மையிலே யன்றி மறுமைக்கும் பேறெனக்கருதி உயிர்துறந்த பெருமையும் நாம் சொல்லத்தரிதினுமரிது. சு-தி

---

சீனாவில் பெண்கள் படிப்பில் தேறினால் அவர்களுக்கு மரியாதையான அடையாளங்கள் அளிப்பதாய்ச் சீன கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF ... 12 MAR 1907 MADRAS
256

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயர்ப் பீடோங்கும் பெண்மைத்
தென்னம் யுறவோங்கு முலகு."

Vol. II. } Madras. January, 1907. { No. 6.
தொகுதி. II. } சென்னை 1907ளு ஜனவரி மீ { பகுதி. 6.

## கல்கட்டாவில் கூடிய இந்திய மாதர் சங்கம்.

இந்தியாவில் படித்த இந்தியர்கள் சபை கூடி இராஜாங்க விஷயத்தைக்குறித்தும் ஆசாரத்திருத்தங்களை குறித்தும், கல்வி அபிவிருத்தியைக் குறித்தும், தொழில் விருத்தியைக்குறித்தும், தேசம் மேன்மைப்படும் விஷயங்களைக்குறித்தும் அச்சபைகளிலே பேசுவது சகஜமாய் இருக்கின்றதே ஒழிய இந்திய மாதர்கள் அவ்வண்ணம் சபைகூடிப் பேசுகின்ற வழக்கம் இல்லை. இந்திய மாதர்கள் குடித்தனமே தமக்குரியதெனக் குடும்பவாழ்க்கையே கவனிப்பவராயினும், அவர்கள் சிறிது காலமாய் மேனாட்டு மாதர்கள்போல் சபை கூடித் தத்தம் அபிப்பிராயங்களை வெளியிடுகின்ற வழக்கம் பரவி வருகின்றது. இப்பொழுது இந்திய மாதர்கள் இந்திய புருஷர்களைப்போலே கல்விப்பயிற்சி அடையவேண்டும் என்றும், அவர்கள் தம்புருஷர் துணையோடு வெளியே போய் வருவதில் பாதகம் இல்லை யென்றும், தேசோபகாரமாய் உள்ள அரும் பெரும் விஷயங்கள் எடுத்துப் பேசப்படும் சபைக்குப் படித்த இந்தியர் தம்மாதர்களை அழைத்துச் செல்லுதல் இயல்பே என்றும், அச்சபைகளிலே பேசப்படும் விஷயங்களைப் பெண்பாலார் தெரிந்து கொள்வதினால் நன்மையே விளைவது திண்ணம் என்றும், ஒரு விதவழக்கம் பரவி வருகிறது. இதற்கெல்லாம் காரணம் நம்மவர்க்குள் ஆசாரத்திருத்த உணர்ச்சி பரப்புவதே. இவ்வாசாரத்திருத்த உணர்ச்சி இச்சென்னை மாகாணந்தவிர மற்றைய மாகாணங்களிலே விசேஷம் பரவி யிருக்கிறது. இம்மாகாணத்தில் இந்திய ஸ்திரீகள் எவ்வளவு சுதந்தரம் அற்றவர்களாக இருக்கிறார்களோ அவ்வளவு மற்றமாகாணங்களில் சுதந்தரம் அற்றவர்களாக இருக்கவில்லை, இது ஆசாரத்திருத்த உணர்ச்சியின்

காரணமே யாகும். இதனால் மற்றைய மாகாண இந்திய ஸ்திரீகள் ஆடவரை யொப்பச் சபைகூடிப் பேசுவதைக் கேட்டிருக்கிறோம். இவ்விஷயமோ இம்மாகாணத்தில் நடப்பதைக்கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. மூன்றும் வருஷத்தில் காங்கிரஸ் மகாசபையும் பொருள் காட்சியும் நடந்தகாலத்தே அம்மாகாண மாதர்கள் சபைகூடிப் பெண்கல்வி விஷயத்தைக்குறித்தும், ஆசாரத்திருத்த விஷயங்கள் சிலவற்றைக்குறித்தும் எடுத்துப்பேசித் தீர்மானங்கள் செய்தனர். அவ்வண்ணமே இவ்வருஷமும் காங்கிரெஸ் சபையும் ஆசாரத் திருத்தச் சபையும் நடக்கும் காலத்தை ஒட்டி, மாதர்கள் ஆசாரத்திருத்தத்தைப் பற்றியும் பெண்கல்வியைப் பற்றியும் பிரஸ்தாபித்தவிஷயம் மிகச் சிறந்ததே. இம்மாதர் சபைக்கு இவ்வருஷம் சிறந்த பதவியிலுள்ள இந்திய சீமாட்டிகள்போய் அச்சபையின் நடவடிக்கைகளை அநுசரித்ததை நோக்கினால், இன்னும் சிலவருஷங்களுக்குள் இம்மாதர் சபை மிகவிருத்தியடைந்து ஆசாரத்திருத்தத் துறைகளிலும் மற்றைய துறைகளிலும் சந்தேகமற நன்மையை விளைவிக்கும் என்பதில் ஆட்சேபனையே இல்லை.

டிசம்பர் மாதம் 30-ம் தேதியில் கல்கட்டாவில் கார்ன்வாலிஸ் தெருவிலேயுள்ள பெதூன்கலாசாலை, இந்தியமாதர் சங்கத்துக்கென்று மிக அழகின் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இச்சங்கத்தின் அக்கிராசனத்தை பரோடா மகாராணியார் வகித்தனர். இச்சிறந்த சீமாட்டியோடு கூச்பிகார் மகாராணி, மேர்பஞ்ச் மகாராணி நாட்டோர் மகாராணி முதலிய இன்னும் சில மகாராணிகளும் மத்தியதர அந்தஸ்திலுள்ள ஸ்திரீகளுள் மிஸ்ஸஸ் J. C. போஸ், மிஸ்ஸஸ் மல்லிக், மிஸ்ஸஸ் ஜோஷி, மிஸ்ஸஸ் சரோஜினி நாயுடு, மிஸ்ஸஸ் காசிபாய், மிஸ்ஸஸ் சிவராவ், மிஸ்ஸஸ் சாரம்மா, இவர்களும், இன்னும் 500 அல்லது 600 இந்திய மாதர்களும், இச்சபையிலே வந்திருந்தார்கள். சங்கம் நடக்கும் ஹாலும் மிக சிறப்பின் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அக்கிராசனம் வகித்த பரோடா மகாராணியாருக்கு அழகிய இராஜாசன நாற்காலி ஒன்று போட்டிருந்தது. வங்காளப் பெண்கள் ஈஸ்வரத்துதிப் பாடல்கள் பாடச் சங்கம் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கியது.

கூச்பிகார் மகாராணியார் இந்திய ஸ்திரீகள் இருக்கும் நிலைமையை நன்றாய் எண்ணித் தாங்கள் அன்றையதினம் கூடிய சங்கத்தின் அபிப்பிராயத்தையும் இந்தியாமுன் வருதற்கு வேண்டிய கிரமத்தையும் ஒருவாறு வெளியிட்டுச்சபைக்கு வந்த பிரதிநிதிகளை நல்வரவு கூறி அழைத்தார்கள். பிறகு பரோடா மகாராணியார் செய்த பிரசங்கம் நடந்தது. ஆங்கிருந்த மாதர்கள் அனைவரும் இதைக்கேட்டு அதிக சந்தோஷம் கொண்டார்கள். பிறகு மிஸ்ஸஸ் சரோஜினி நாயுடு முன்காலத்தில் இருந்த இந்தியப் பெண்மணிகள் திறத்தையும் பெருமையையும் பற்றிப் பேசியபின்பு, மிஸ்ஸஸ் மல்லிக் இந்தியாவை முன்னுக்கு வரச்செய்வதில் காலத்தை யொட்டி இந்தியமாதர்களும் முன் வந்து கல்வி கற்றுப் பிரயத்தனம் செய்யவேண்டும் என்றும், நாளை இந்தியாவில் தலையெடுக்கும்



புருஷர்க்குத் தாம் உற்ற தாயர்களாய் இருக்கவேண்டும் என்றும் பேசி முடித்தார். பிறகு ஜாதி விஷயத்தைப்பற்றியும் கோஷா விஷயத்தைப் பற்றியும், சிறந்த பெண்மணிகள் இருக்கவேண்டிய நிலைமையைப் பற்றியும், பத்திரிகைகள் படிக்கப்பட்டன. பரோடா மகாராணியாருக்கும் கூச்பிகார் மகாராணியாருக்கும் மரியாதை செய்யப்பட்டுச் சபை கலைந்தது.

பரோடா மகாராணியார் இம்மாதரின் சபையின் அக்கிராசனத்தை வகித்துச் செய்த அருமையான பிரசங்கத்தின் சாரத்தை இந்திய மாதர்கள் கேட்க ஆசைகொள்ளுவது இயல்பே யாதலால், அதை ஒருவாறு இங்கு எடுத்துரைப்போம். இம்மாது சிரோன்மணி அச்சபையிலே ஆங்கிலத்தில் பேசினார்கள். இப்பாஷையிலே இச்சீமாட்டியார் சிறந்த பயிற்சியுடையவர் ஆவர். இப்பிரசங்கத்தின் நன்னோக்கத்தையும், ஆழ்ந்த கருத்தையும் அனைவரும் கவனிப்பாராக.

*"பிரிய சகோதரிகாள்!

இந்த மாதர் சங்கத்தின் அக்கிராசனத்தை வகிக்க வேண்டிக்கொண்டது காரணமாக நீங்கள் என்னை மிகுதியும் கௌரவப்படுத்தி விட்டீர்கள். நானும் உங்களுடைய வேண்டுகோளுக் கிணங்கிவிட்டேன். நான் சபைத்தலைமையை வகிப்பதில் ஏதேனும் குறைகள் காணப்பட்டால் நீங்கள் மன்னித்துக்கொள்ள வேண்டும். நான் பரோடாவிலிருப்பதற்கும் இங்கிருப்பதற்கும் யாதொரு வித்தியாசத்தையும் காணவில்லை. இந்திய மாதாகிய தாயின் வயிற்றில் பிறந்த மக்களே நாம் எல்லோரும் ஆவோமாதலால், என் சகோதரிகளின் மத்தியில் இருப்பதில் எனக்கு யாதொரு அசௌகரியத்தையும் காணவில்லை. இரண்டு வருஷத்துக்குமுன் ஒருமுறை நீங்கள் என்னை அன்பாய் வரவேற்றீர்கள். இப்போது மறுபடியும் உங்கள் இடையே இருக்கச் சமயம் வாய்க்கப்பெற்றதில் எனக்கு மிகுந்த சந்தோஷம். பரதேசங்களில்—பிரான்ஸ், இங்கிலண்ட், இட்டலி, கிரீஸ், ஜர்மனி, ஆஸ்டிரியா, அமெரிகா—இந்த நாடுகளில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். அத்தேசங்களில் நான் பார்த்த தொழிற்சாலைகள் விஷயத்திலும் கல்விச்சாலைகள் விஷயத்திலும் மிகவும் கவனம் செலுத்தினேன். அந்நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்த நான் இப்போது ஜன்மதேசம் திரும்பியிருக்கிறபடியால் என் மனநிலை முன்னிலும் வேறுபட்டிருக்கிறது. இந்தியா நான் எங்கிருந்தாலும் அது எனக்கு ஜன்மதேசமாகவே தோற்றுகிறது. உங்களையும் என்னையும் ஒன்றாகப் பிணைக்கும் பாசம் ஏதோ ஒன்றிருக்கிறது. உங்களுடைய சகலசம்பத்தியானது இந்திய மாதர்களனைவரும் சகோதரிகள்; அவர்கள் இந்திய மாதாவின் புத்திரிகள் என்ற நோக்கத்தினையே பரிபாலிக்கின்றது. அச்சபை ஜாதி மதவேற்றுமையினையுடைய இந்திய மாதர்களை ஐக்கியப்படுத்தி விடவேண்டுமென்றே முக்கியமாய்ப் பாடுபட்டு வருகிறது. இவ்விந்திய நாட்டுப் புருஷர்கள் காங்கிரெஸ் மகாசபையையும் இதர சபைகளையும் ஆதாரமாய்க் கொண்டும்; சில போது நோக்கங்கள், சில போது முயற்சிகள், சில போது விருப்பங்கள் இவைகளை ஆதாரமாய்க்

*சுதேசமித்திரன்.

கொண்டும் ஒன்றுசேரப் பழகுவதுமன்றி வர வர நெருங்கியும் வருகிறார்கள்.
ஆனால் தேச கட்டாகிய கயிற்றை நன்றாய் இழுத்து இறுக்குவதில் இந்திய
மாதர்கள் செய்ய இருக்கும் வேலையோ அல்லது, அவ்வேலையைச் செய்வதில்
காட்டக்கூடிய சக்தியோ புருஷர்கள் செய்யக்கூடிய வேலைக்கும் காட்டக்கூடிய
சக்திக்கும் தாழ்ந்தவன்மையை யுடையதாகமாட்டாது. நாம் ஒருவரை விட்டு
ஒருவர் ஆயிரம் மைல்களுக்கப்பால் வசிப்பவர்களாயிருந்தாலும், நாம் வெவ்
வேறு பாஷைகளைப் பேசுகிறவர்களா யிருந்தாலும், நாம், எல்லோரும் சில
பொது நோக்கங்கள் உடையராயும், பொது விருப்பங்கள் உடையராயும், பொது
முயற்சிகள் உடையராயும் இருப்பதில் சந்தேகமில்லை யாதலால், மகிலசம்ஹிதி
சபைக்கு இந்நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இந்தியமாதர்களை வரவழைக்க
வேண்டுமென்று தோற்றியது யாரும் கேட்டு சந்தோஷிக்கக் கூடியதாகும்
நாம் சபைகூடக்கூட ஒருவரை யொருவர் நன்றாய்த் தெரிந்துகொள்வதும் நம்
முடைய பொது முயற்சிகளில் வெகு நன்றாய் நாம் வெற்றி பெறுவதும் சாத்திய
மாகின்றது. மகிலசம்ஹிதி என்ற சங்கத்தின் மற்றொருநோக்கம் இந்தியச் சரி
த்திரத்தைப்பற்றிய அறிவையும் இந்திய பாஷைகளைப்பற்றிய அறிவையும் பர
வச்செய்வதுதான் என்று காண்கிறது. அந்த விஷயம் சம்பந்தமாகவும் இந்திய
புருஷர்கள் செய்யக்கூடிய வேலை செலுத்தக்கூடிய செல்வாக்கு, அல்லது
சுமக்கக்கூடிய பொறுப்பு, இவைகளைவிட இந்திய ஸ்திரீகள் செய்யக்கூடிய
வேலையும், செலுத்தக்கூடிய செல்வாக்கும், சுமக்கக்கூடிய பொறுப்பும் விசேஷ
மாகும். இந்தியக் குழந்தைகளின் மனதுக்கு ஒருவித போக்கையமைப்பது
யார்? இந்தியத் தாய்மாதர்கள் அல்லவா? அன்னோருக்கு தங்கள் குழந்தை
கள் இத்தேசச் சரித்திரத்திலும் பாஷைகளிலும் அபிமானம் வைக்கும்படி செய்
தல் வெகு எளிதாகும். தொட்டிற் பழக்கத்தின் முன் மற்றப் பழக்கங்கள் நிலை
த்து நிற்கமாட்டா. இந்தியத் தாய்களாகிய நாம் பிற்கால இந்தியப் புருஷர்
களையும் இந்திய ஸ்திரீகளையும் தேசப் பணிவிடைக்குச் சித்தப்படுத்துவோம்
அதனைவிட நாம் செய்யக்கூடிய அருமையான வேலை வேறெதுவுமில்லை."

மிஸஸ் ஜே. ஸி. போஸ் மகிலசம்ஹிதியின் பேரால் பரோடா மகாராணிய
ருக்கு நல் வரவு கூறி அழைத்த நல்வரவுப் பத்திரத்தை படிப்போர் அனை
வரும் இந்தியமாதர்களுள்ளும் இவ்வளவு விஷயங்களை அறிந்தோர் உண்டா
வென ஆச்சரியப்படுவார். இப்பத்திரத்தை ஜே. ஸி. போஸே சித்தப் படுத்தி
னார் என்று தெரியாதோர், பெண்பாலார் இவ்வளவு செய்யக் கூடுமோவென்று
ஆச்சரியப் படுவார். இது மிகச் சிறப்பின் எழுதப்பட்டிருந்தது: மிஸஸ்
போஸோ பெங்காளத்திலே கல்விசாலாகாவிலே நடுநாயகமாய் விளங்குகின்ற
டாக்டர் ஜகதீச சந்திரபோஸின் மனைவியார். இப்பெண்மணியோ கல்வியி
னன்று பழகிய வித்வசிரோண்மணி; இவர் செய்த பிரசங்கத்தின் அபிப்பிராய
களை மாதர்கள் கவனிக்கவேண்டியவையே. இம் மாது சிரோன்மணி காங்கிரஸ்
மகாசபை, பொருட்காட்சி, ஆசாரத்திருத்த சபை முதலிய சபைகளின் சா



யாய் இம்மாதர்சபை முன்னுக்கு வந்து மாதர்கள் தம் அபிப்பிராயங்களையும்
ஆசாரத்திருத்தங்களையும் சாங்கோபாங்கமாய் வெளியிட்டுத் தங்களின் தீர்மா
னங்களை வெளிப்படுத்தல் சிலாக்கிய உணர்ச்சி ஆகுமே ஒழிய சபைமூலமன்றி
வேறு மார்க்கத்திலே பயன் உற நினைத்தல் விசேஷம் பலன் தராது என்ற
னர். இந்திப் புருஷர்கள் நமக்குச் சாதகமாயோ, பாதகமாயோ, செய்யக்கூடி
யவைகள் இனைய இனைய என்றும், அவர்கள் சொல்லிக் கேட்டு கொள்வதை
விட நாமே ஒரு தீர்மானத்துக்கு வருதல் சிறப்பென்றும் உரைத்தனர். எக்கா
லத்திலும் இந்திய மாதர்களுக்குப் படிப்பு வேண்டாம் என்று கொள்ளப்படவில்லை
என்றும் இப்பொழுதும் பெண்கல்வி உதவாதென்று பேசுபவர் இல்லையென்றும்.
இப்பெண்கல்வி விருத்தியடையாதின்றால் ஆசாரத்திருத்தங்கள் திருப்திகர
மான நிலையை அடையாதென்றும், முதிர்ந்த அறிவுள்ள மாதர்கள் தம் அபிப்
பிராயத்தை வெளியிட அவைகளைக் கிரமத்தின் மதித்துப் பெண்பாலார் தழுவ
வேண்டும் என்றும், இதுவே ஆசாரத்திருத்தம் ஒரு வழியாய் திருப்திகரமான
நிலையை அடைந்துவிட்டதென்றும், சொல்லலாம் என்றனர். மாதர்கள் சுதே
சியவழிகளை அநுசரித்துப் பாடுபடும் புருஷர்களை உற்சாகப்படுத்தி அவர்கள் பிர
யத்தினம் சோர்வடையாது முன்வரக் கவனிக்கவேண்டும் என்றனர். உழைத்துப்
பாடுபடுவது புருஷர்தேயாயினும் வீட்டில் மாதர்கள் தம்பணிகளைக்கவனித்து
நூல் நூற்றல் முதலிய வேலைகளில் இறங்கித் தொழில் அபிவிர்த்தி செய்யவேண்
டும் என்றனர். வீட்டில் மாதர்களே வேண்டிய பண்டங்கள் சாமான்கள் வாங்
குபவராதலாலே, சுதேசியத்தை விருத்திசெய்து, சுதேச சாமான்களையே வாங்
கவிரும்பிவிட்டால் தொழில் வரும்படி வாராத நம் நாட்டுத் தொழிலாளிகள்
பலம்பெற்று விர்த்தியடைந்து முன்னுக்கு வருவார்கள் என்று எச்சரிக்கை செய்
தனர். குடும்பத் தலைவியாய் உள்ளமாதே இவ்விஷயங்களைக் கவனித்து நடக்க
ஆரம்பித்தால் ஜனசமூகப்பாதுகாப்பும் அவர்கள் பொறுப்பே என்பதற்கு ஐயம்
உண்டோ? எனத்தேச விருத்தியாகும்விஷயத்தைக் குறித்துப்பேசி முடித்தனர்.

பத்திராதிபர்.

## பெண் கல்வி.

"பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்" என்று ஔவையார் சொல்லி
யது உண்மை; அவ்வாறே நாம் நடத்தல்வேண்டும், பாடசாலைகளுக்குப் பெண்
களை அனுப்புதல் அனாவசியம். அறியாமை இன்பகரம், அறிவினால் துன்பத்
தைத் தேடவேதன் இவ்வாறுகவும், இவைபோன்றவைகளையும் நியாயம்போல
எடுத்துப் பேசுகிறவர்கள் இப்பாதகண்டம் செய்த புண்ணியத்தினால் இக்கா
லத்தில் ஒருவரையும் காணோம். மாதரீடத்தில் நாம எதிர்பார்க்கும் உத்தம
குணங்களை யோசித்துப் பார்ப்போமாயின், சிறிது கல்விப்பயிற்சியாவது

இல்லாதவரிடத்தில் அத்யுத்தம குணங்களில் சிலவற்றைக்கூடக் காணலரிதாம். எந்தக்கல்வி புருஷர்களுக்கு மேன்மையும் மதிப்பையுந் தருகின்றதோ அந்தக்கல்வி பெண்பாலார்க்குத் தீமை விளைக்குமென்பதே எமது துணிபு.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

அளவிறந்த கல்வியுடைய ஆண்மக்களுக்கும் மேற்கூறிய குறளில் குறிப்பாய்ச் சொல்லியிருக்கிற குணங்கள் அமர்வது துர்லபம். அக்ஷரஞானமும், உலக விஷயஞானமும் இல்லாத பெண்களிடத்தில் உயர்ந்த நற்குணங்கள் அமையவேண்டுமாயின் அது கூடுங்காரியமா?

ஆண்மக்களுக்குக் கண்திறந்து விடுதல் இன்றியமையாதது போலவே பெண்மக்களுக்கும் கல்வி ஆவசியகம்.

கல்விப்பயிற்சி அந்த அந்தத் தேசாசாரத்தை அனுசரித்து வந்தால் மேன்மேலும் விருத்தியடையும். புளியமரத்தை ஆங்கிலேய நாட்டில் நட்டால் மூன்று நாள் அது பனியாற் கருகிப் பட்டுப்போம். அந்நியநாட்டு வாடிக்கைகளை இந்நாட்டில் நிலை நிறுத்தப் பார்த்தல் பேதைமையாம்.

நமது துரைத்தனத்தார் இந்நாட்டுப் பெண்பாலாரிடத்து அன்பு கூர்ந்து அநேகபாடசாலைகளை ஸ்தாபித்து அவைகளில் கல்விபயிற்றுவித்து வருகிறார்கள். அநேகபாடசாலைகளில் பெண்களே உபாத்திமைத் தொழிலை நடத்தி வருகிறார்கள். பாடசாலைகளைப் பரீக்ஷை செய்யவும், விசாரணை செய்யவும் ஆங்கிலேய துரைசானிகளுக்கு ஏராளமான சம்பளங்களைக் கொடுத்து ஆண்மக்கள் பாடசாலைகள் போலவே காரியங்கள் நடந்து வருகின்றன. சற்று நாம் யோசித்துப் பார்க்கவேண்டிய அம்சங்கள் சில உள. (1) மாணாக்கர்கள் யார்? (2) படிப்பிப்பவர்கள் யார்? (3) விசாரணை செய்பவர்கள் யார்?

(1) மாணாக்கர்கள் பெரும்பாலாரும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களும் பல வருணத்தாரா யிருக்கின்றனர்கள். ஒரு வருணத்தாருடைய கிருத்தியங்கள் இன்னொரு வருணத்தாருடையவைகள் போன்றவையல்ல. பார்ப்பனப் பெண்கள் வீட்டின் நடபடிக்கை போன்றதா படையாச்சிப்பெண்கள் வீட்டு நடபடிக்கை? அன்றே. அப்படியாயினும், இவ்விரண்டு ஜாதிப்பெண்களையும் ஒருமித்துவைத்துத் தானே பாடங்கள் சொல்லப்படுகின்றன. இது சரியா? பார்ப்பார்களையும் படையாச்சிகளையும் ஒன்றாய்ச் சேர்த்துவிட வேண்டுமாயின் இவ்வாறு செய்தல் அவசியந்தான். இவ்விருவருணத்தாரும் சமீபகாலத்தில் ஒன்று சேர்வார்கள் என்று நினைப்பதற்கு ஏதுக்கள் ஒன்றையுங் காணோம். ஒவ்வோர் வருணத்தார்க்கும் பிரத்தியேகமான பாடசாலைகள் ஸ்தாபிக்கவேண்டுமோ? என்று கேட்கலாகும். அப்படிச் செய்தல் ஆவசியகமே. "உப்பொடு நெய் பால் தயிர் காயம் பெய்து அடினும்



கைப்பறு பேய்ச்சுரையின் காய்" என்றவாறு சசி ருசி அற்றவர்களா யிருப்பவர்களோடு இவை மிகுதியாக உள்ள ஜாதியாரைக் கலத்தலால் மேன்மைக்குணம் தாழ்கின்றதற்கு ஏதுக்கள் அதிகப்படுகின்றனவே அல்லாமல் தாழ்க்குணமுள்ளவர்கள் பண்படுவதில்லை. இஃது அனுபவசித்தம். பார்ப்பனப் பெண்கள் சிலரும் இதரஜாதிப் பெண்கள் பலருங் கூடுமிடத்தில் பலர் வாசனை சிலருக்கு வந்துவிடுமேயன்றி சிலர் வாசனை பலருக்கு வருவதில்லை. இத்தியாதி காரணங்களை முன்னிட்டு ஒவ்வோர் வகுப்பினருக்கும் பிரத்தியேகமான பாடசாலைகள் இருப்பது முக்கியம்.

(2) உபாத்திமார்கள் யார் என்னும் வினாவுக்கு உத்தரம் சொல்வோம். இந்து மதப் பெண்களுக்குக் கிறிஸ்தவ உபாத்தியாயனிகள் தாம் பெரும்பாலும் கிடைக்கிறார்கள். சிறு பிராயத்திலேயே பெண்களானாலும் பிள்ளைகளானாலும் தத்தம் மதத்திலுள்ள ஸாரம்சங்களை அறியவேண்டுவதன்றோ? கிறிஸ்தவர்கள் இந்து மதத்தைப் போதிப்பார்களா? தங்கள் வேதமே சத்திய வேதமென்றும், இந்துக்கள் தொழும் தெய்வங்கள் எல்லாம் பிசாசுகள் என்றும் அபிப்பிராயங் கொண்டவரிடத்து இந்து மதத்தை அறிந்து கொள்ளுதல் எவ்வாறு? இந்துக்கள் வீட்டு ஆசாரங்கள் இத்தன்மைய என்றாவது கிறிஸ்தவ உபாத்திமார்கள் அறிவார்களா? இல்லையே. பாலிகைகளுக்குப் பாடஞ்சொல்ல ஊட்டு மறவாத கன்றுக்குட்டிகளை நியமித்தல் சரியா? நார்மல் பாடசாலையில் உபாத்திமைத் தொழில் செவ்வையாய்க் கற்றாலே அத்தொழிலை ஒழுங்காய்ச் செய்ய வல்லவர்களாய் விடுகின்றார்களா? உபாத்தியாயனிகளின் படிப்பின் அளவைப் பார்ப்போமாயின் வெட்கக்கேடு. எந்த வகுப்பிற்குப் பாடஞ் சொல்லுகின்றார்களோ அவ்வகுப்புப் புத்தகங்களை விட்டு வேறு புத்தகங்கள் ஒன்றையாவது அறியாதவர்களன்றோ பல உபாத்தியாயனிகளும்? சில உபாத்தியாயனிகள் மணம் புரியாமலே இருந்து விடுகிறார்கள். இல்வாழ்க்கையின் பெருமையை இத்திறத்தினர் போதிக்க வல்லவர்களோ? இக்காலத்தில் பெண்கள் பாடசாலைகளில் வேலைக்கு அமர்ந்திருப்பவர்களால் இந்துப்பெண்கள் முன்னுக்கு வருவார்கள் என்றெண்ண இடமே யில்லை.

(3) மேல் விசாரணை செய்ய வரும் இன்ஸ்பெக்ட்ரெஸ்கள் எத்தன்மையரென்று சற்று விசாரிப்போம். இவர்கள் ஆங்கிலேய பாஷையில் விசேஷப் பயிற்சி உடையவர்களா யிருக்கலாம்; பாடங்கள் சொல்லும் முறைகளில் தேர்ந்தவர்களாயுமிருக்கலாம்: தங்கள் நாட்டுச் சங்கீதத்தில் நிபுணர்களா யிருக்கலாம்; தையல் வேலை செவ்வையா யறிந்திருக்கலாம்; துரைத்தனத்தாரால் மதிக்கப்பட்டுமிருக்கலாம். இந்துப் பெண்களுக்கு இவர்களாலாவது என்ன? ஒன்றுமில்லை யென்றே எமது கொள்கை. அடுத்த முறை இப்பத்திரிகையில் இதே விஷயமாய் எமக்குள்ள நிருணயங்களை அறிவிப்போம்.

கே. வேங்கடராமையர். B. A.

# ஸதி.

(111-ம் பக்கத் தொடர்ச்சி.)

கலியாணத்திற்கு முதல்நாள் புதன்கிழமை இரவு, மாப்பிள்ளை குதிரையின் பேரில் பவனியூர் கோலம் வரும்பொழுது, வீட்டில் ஸதியையும் அவள் தாயாரையும் தவிர மற்று யாவரும் இருக்கமாட்டார்கள் என்று கருதி, திடீரென அச்சிறுமி ஸதியினிடம் வந்தாள். 'சாதாரணப் பெண்களைப்போல வெட்கிக்கொண்டு கணவன் ஊர் வலம் வருவதைப்பார்க்காமல் இவ்விடம் இருக்கின்றாயே! என்னுடன் ஊர்வலம் பார்க்கலாம் வா! ஸதி! வா!' என்றழைத்தவுடன், அக்கல்பத்தினுடனேற்கனவே பழகியிருந்ததினாலேயும், இப்பொழுது அவள் முகத்தில் தோன்றிய குறிகளினாலேயும் இச்சிறுமி இப்பொழுது நம்மை வஞ்சிக்க வந்திருக்கிறாள் என்று ஊகித்து 'அக்கா என் தாயார் ஊர்வலம் பார்த்து வரவேண்டுமென்று சொன்னாள். ஆகையினால் அவள் பார்த்துவந்த பிறகு நாம் போகலாம். இப்பூமாலையைக் கட்டிக்கொண்டு இவ்விடமிரு. நானிதோபோய் வந்துவிடுகிறேன்' என்று ஸதி அக்கல்பத்தினிடம் சொன்னாள். அச்சிறுமியோ தான் மோசமான கருத்துடன் வந்திருப்பது ஸதியினால் ஊகிக்கப்படவில்லையென்று நினைத்து 'சரி! போய், வா, ஸதி!' என்று விடையளித்தாள்.

தன் தாயினிடம் சென்று 'அம்மா! இக்கொடும்பாவி ஏதோ கெட்ட எண்ணத்துடன் இங்கே வந்திருக்கிறாள் என்று புலப்படுகிறது. ஆகையினால் வீட்டில் புருஷத்துணை யிருக்கவேண்டியது அவசியமென்றெண்ணி நான்கு புருஷர்களை இவ்விடம் நீ அழைத்து வரவேண்டும். நீங்கள் வரும் வரையிலும், அப்பாவி முண்டையை நான் ஏமாற்றுகின்றேன்' என்று ஸதி சொன்னவுடன், தன் குமாரியின் சாமர்த்தியத்தை நம்பி, ஊர்வலம் வருமிடத்திற்குப்போய் தன்கணவர் சிநேகிதர்கள் நான்கு ஐந்து பேருக்கு இவ்விஷயத்தைச் சொல்லி அசல் வீடுகளில் பதுங்கியிருக்கச் சொன்னாள்.

தன் வீடுவந்து சேர்ந்து 'நீ ஊர்வலம் ஜாக்கிரதையாய் பார்த்துவா' என்று ஸதியை யச்சிறுமியுடனனுப்பிவிட்டு, அக்கல்பத்தின் கண்களில் படாமல் அவர்களைப்பின் தொடர்ந்தாள். ஊர்வலம் ஒரு பக்கத்தில்வர, இப்பெண்கள் மற்றொரு பக்கத்தில் போவதையும் இவர்கள் போகும் வழியில் ஒரு கோச்சுவண்டியும் நிற்கக்காண, உடனே தான் அயல் வீடுகளில் இருந்தவர்களிடம் இச்சமாசாரத்தைச் சொன்னாள். இதற்குள் அச்சிறுமியும் ஸதியும் கோச் வண்டியின் பதினைந்து இருபது அடி தூரம் நெருங்கிவிடவே கல்பம் ஒரு தூங்கின உதை பூமியிலுதைத்து ஸதியின் கண்ணையும் வாயையும் மூடினாள். இதைக்கண்ட ஸாம்பசிவன் சிநேகிதர்கள் அவ்வண்டியையும் அதிலிருந்த பட்டகோபாலனையும் அச்சிறுமியையும் வளைந்துப் பிடித்துக்கொண்டார்கள். இச்சமாசாரம் காட்டுத்தீபோல் ஊரெல்லாம் பரவ ஜனங்கள் சூழ்ந்து, பட்டகோபாலனையும்



அச்சிறுமியையும் நன்றாய்ப் புடைத்து, அவர்களைப் போலீசார் வசம் ஒப்புவித்து, இரும்புக்காப்புகள் கைகளில் போடப்பட்டு ஒருவருக்கொருவர் பிணைக்கப்பட்டிருக்கும் அப்பட்டகோபாலனையும் அச்சிறுமியையும் பின்தொடர்ந்து காராகிரகப் பிரவேசம் நடப்பதைப் பார்த்துஆனந்தித்துக் கைகொட்டி நகைத்துப் பரிகாசம் செய்தார்கள்.

பொழுது விடிந்ததும் அழகாய் ஜோடிக்கப் பட்டிருக்கும் கலியாண மண்டபத்தில் மின்னல் கொடிபோன்ற ஸதியும் மேகவர்ணம் போன்ற சுப்பிரமணியனும், ரதி மன்மதர்களாய், அருந்ததி அகஸ்தியஸ்வரூபமாய் பார்ப்பவர்கள் மனம் கவர, மங்கை மணவாளனையும், மணவாளன் மங்கையையும், வேதவாத்திய கோஷத்துடன் அக்கினி சாக்ஷிகமாக மணம் புரிந்தார்கள். கொஞ்சம் திருப்தியாய்க் கலியாணத்தை யாரம்பித்த கிரீசனும் திருப்தியடையும்படியாய்க் கலியாணம் சிறப்பாய் நான்கு நாளும் நடந்தது. ஈசுவரனின் கிருபையால், அகமகிழ்ந்து, மணவாளனுக்கேற்ற மங்கையென்று சந்தோஷித்து தம்பதிகளை யாசீர்வதித்து, இக்கலியாண தம்பதிகளைப்போல் ஒற்றுமையுள்ள தம்பதிகளைப் பார்த்ததே யில்லை யென்று சொல்லி ஊர் ஜனங்கள் திருப்தியடைந்தார்கள். அம்ஸப் பக்ஷிக்கல்லவோ பிரீதியைக் கொடுக்க வேண்டும் பால்; சாதகப் பக்ஷிக்கல்லவோ பிரீதியைக் கொடுக்கும் மழை: நற்றாமரைக் கயத்தை யல்லவோ சேரும் நல்லன்னம்: பாலுடனல்லவோ சேரும் சர்க்கரை என்று துதிக்கப்பட்ட இத் தம்பதிகளைப் பற்றி ஊரா ரெல்லாம் வியப்புற்றனர். சிறு குழந்தைப் பருவம் முதல் வெகு அபிமானமும் ஆசையையும் காட்டி வளர்ந்தவளும் ரூபலாவண்ணியங்களிலே தேவலோக ரம்பையும், நாகலோக கன்னிகையுமாய் விளங்கினவளும், உலக விஷயங்களில் நேரில் அதிகப் பழக்கமில்லாதவளா யிருந்திருந்த பொழுதிலும், தன் புத்தி கூர்மையினாலேயும் அளவிறந்த பொறுமை யென்கிற அபூர்வ குணத்தினாலேயும் 10 வருடமாய் நன்றாய் வாசித்துக் கற்ற சரித்திரங்களினின்றும் மற்ற புத்தகங்களினின்றும் அறிந்த உலகஞானத்தால் இவ்வுலகில் நன்றாய் சோபிக்கக் கூடியவளுமான ஸதியென்னும் யதார்த்த நாமத்தோடு கூடிய இப்பெண்சிகாமணியைப் பார்த்து ஊரார் ஜனங்களே ஆநந்தமிருக்கவுக யுண்டு சிறந்த ஸந்தோஷத்தை யடைந்தார்களென்றால் ஸாம்பசிவன் சந்தோஷத்தையும் மற்ற உறவினர்கள் சந்தோஷத்தையும் விவரிப்பதை விட ஊகிப்பதே நலம்.

பட்டகோபாலனுக்கு $7\frac{1}{2}$ வருடகாலம் கடுங்காவல் விதிக்கப்பட்டான். கல்பமோ 3 வருடம் கடுங்காவல் விதிக்கப்பட்டாள். இச்சமாசாரத்தைக் கேட்டு சகலமான ஜனங்களும் 'கெடுவான் கேடு நினைப்பான்' என்றார்கள்.

இக்கதையில் விவரிக்கப்பட்டிருக்கும் ஸதியினுடையவும், சுப்பிரமணியனுடையவும் சரித்திரங்களினால், ஈசனை நம்பி ஒரு காரியத்தை முயலுவோமேயானால், அவர் கிருபையினால், நம் விடாமுயற்சிக்குப் பிரயோஜன மளிக்கப்படு

மென்பது திண்ணம். பட்டகோபாலன் திரித்தியத்தினாலேயோ 'கெடுவான் கேடுநினைப்பான்' என்பது நன்றாய் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. சுபம், சுபம், சுபம்

L. நாராயணஸாமி ஐயர். பி. ஏ.

# HAMLET.

## ஹாம்லெட்.

—:0:—

(106-ம் பக்கத்தொடர்ச்சி.)

### மூன்றும் அங்கம்.

### முதற்களம்.

அரண்மனையில் ஓர் அறை.

அரசன், அரசி, பொலோனியஸ், ஒப்பிலியா. ரோஸென், கில்டென், பிரவேசம்.

அரசன்:—மனக்கலக்க மடைந்து பித்தனாய் ஹாம்லெட் இருப்பதற்குக் காரணத்தை அவனிடத்திலிருந்து எவ்வகையிலாவது உங்களால் அறியக்கூடவில்லையா?

ரோஸென்:—புத்தி கலங்கி நிற்கிறதென்று மாத்திரம் சொல்லுகிறார்; காரணத்தை அறிவிக்கின்றாரில்லை.

கில்டென்:—அவர் மனத்தின் நிலைமையைக் காண எங்களுக்கு இடங்கொடாமல் தந்திரமாய்த் தனித்தே இருக்கின்றார்.

அரசி:—உங்களைத்தக்கபடி உபசரித்தாரா?

ரோஸென்:—கௌரவமாக நடந்தார்.

கில்டென்:—மனமில்லாமற் செய்தவராய்த் தோன்றிற்று.

ரோஸென்:—எங்களை ஒன்றும் அவர் கேட்பதேயில்லை; எங்கள் வினாக்களுக்குப் பூரணமாய் மறுமொழி சொன்னார்.

அரசன்:—அவனை ஏதாவது காலப்போக்குக்கு அழைத்துப் பார்த்தீர்களா?

ரோஸென்:—நாங்கள் வரும் வழியில் நாடகமாடிகள் சிலரைக்கண்டோம். அவர்கள் வருகையை இளவரசனிடத்தில் சொல்ல, அவர் சிறிது களிப்புற்றவராய்த்தோற்றினார். அரண்மனைக்குச் சமீபத்தில் இறங்கி யிருக்கிறார்கள். இன்றிரவு இளவரசனெதிரில் ஓர் நாடகமாடப் போகின்றார்கள்.



பொலோ:—தாங்கள் இருவரும் நாடகத்தைப் பார்த்தற்கு வருதல் வேண்டுமென்று என்னிடத்திலும் கேட்டுக்கொண்டார்.

அரசன்:—அவன் புத்தி இந்தவழியில் திரும்பினதைக்கேட்டு என்மனம் களிப்படைகின்றது. நான் அவசியம் வருகின்றேன். அவனை இத்தன்மையான காலப்போக்கில் ஆசைகொள்ளும்படி நீங்களிருவரும் செய்தல் வேண்டும்.

ரோஸென்:—சித்தத்தின்படி நடக்கின்றோம், மகாராஜாவே [ரோஸென், கில்டென் போய் விடுகிறார்கள்].

அரசன்:—அருங்காதலி, நீயும் சற்று விலகி இருத்தல் வேண்டும்; ஹாம்லெட்டும் ஒப்பிலியாவும் அகஸ்மாத்தாய்ச் சந்தித்தாற் போன்ற ஏற்பாட்டைச் செய்திருக்கின்றோம். நானும் அவள் பிதாவும் இங்கு ஒளித்திருந்து ஒப்பிலியாவை ஹாம்லெட் கண்டவுடன் அவனிடத்தில் அவன் நடக்கும் வகையைப்பார்த்துக் காதலினால் பித்தனாயதும் வேறு காரணத்தினாலென்பதும் கண்டறியப் போகின்றோம்.

அரசி:—தங்கள் ஆணைப்படி நடக்கின்றேன். ஒப்பிலியா, உனது ஒப்பிலா அழகினாலேயே என்மகன் பித்தனாய்விட்டான் என்று கேட்க என் மனம் குளிரும். உங்களிருவருக்கும் பெருமையுண்டாகும் விதமாகவும் அவன் பித்தம் தெளியவும் நீ உன் உத்தம குணங்களாற் செய்வாயென்று நம்புகின்றேன்.

ஒப்பிலியா:—அவ்வாறுவதில் எனக்கும் விருப்பந்தான், அம்மா. [அரசி போகின்றாள்]

பொலோ:—ஒப்பிலியா, நீ இங்கு உலாவிக்கொண்டிரு; மகாராஜாவே, தாங்களும் நானும் இவ்விடத்தில் ஒளித்திருப்போம் ஒப்பிலியா, நீ இப்புத்தகத்தைக் கையில் வைத்துப் படிப்பதுபோலப் பாவனை செய்து கொண்டிரு. நீ தனிமையாயிருத்தற்கு அது ஒருதக்க காரணமாய்த் தோன்றலாம். பரமனுடன் ஒருவன் பக்தியுடையவனைப்போல வேஷம் போடுவதினாலேயே கடவுளையும் ஏமாற்றிவிடலாமென்றெண்ணுதல் உலகத்தாருடைய பெரும்பிழை.

அரசன்:—[தனக்குள்ளே]. பொலோனியஸ் சொல்வது வாஸ்தவமே. அவன் வார்த்தைகளைக் கேட்கப் புண்ணிற் கோலிடுவது போலிருக்கின்றது. விகாரமான முகத்தையுடைய விலைமாது ஒருத்தி மஞ்சள்பூசி அதை அலங்கரித்து வைப்பினும் குரூபம் குரூபமே; அவ்வாறே என் குற்றத்தை நல்லது போலேகாண்பிக்க நான் எவ்வகையில் முயன்றாலும்கேடு கேடாய்த்தானிருக்கின்றது. நான் செய்த பாவம் வெகு பாரமாயிருக்கின்றதே!

பொலோ:—ஹாம்லெட் அதோ வருகின்றார். நாம் போவோம் வாருங்கள் [அரசனும் பொலோனியஸும் தனியிடஞ் சென்று ஒளிக்கின்றார்கள்]

## ஹாம்லெட் பிரவேசம்.

ஹாம்:—[தனிமொழி] உயிரோடிருத்தலா, உயிரைத்துறத்தலா, இவ்விரண்டில் மேலானதை அறிதல் வேண்டும்; கஷ்டம் வந்தால் அதைப் பொறுத்தல் பெரிதா! அதை வென்று சகித்தல் மேலா? இறத்தல் ஓர் வகைத் துஞ்சல் தான். இறத்தலென்னும் துஞ்சலினால் உடலினுக்குச் சகஜமான ஆயிரக்கணக்கான துன்பங்களை நீக்கல் கூடுமாயின் அந்தவழி எவராலும் விரும்பத்தக்கதே. தூக்கத்தில் கனவுண்டாகு மன்றோ. கனவில் துன்ப முளதே. மரணமென்னும் தூக்கத்திற் பற்பல விதமான சொற்பனங்கள் உண்டாதலியற்கை யாகையால் மரணத்தை விரும்புமுன்னே சற்று தீர்க்காலோசனை செய்தல் வேண்டும். துன்பம் தீர்க்காயுள் பெறும். உருவினகத்தியால் உயிரை மாய்த்துக்கொண்டு துன்ப நிவர்த்தி செய்தல் சுலுவாயிருக்கையில், காலத்தின் கொடுமையையும், வருத்துவோன் தீங்கையும், இறுமாப்புடையோனின் வசையையும், நியாயஸ்தல விளம்பனத்தையும், காதலியின் இகழ்ச்சியையும், அதிகாரியினால் அவமதிக்கப்படுதலையும், பொறுமையுள்ள சான்றோர் இழிந்தோரால் இகழப்படுதலையும் எவன் பொறுப்பான்? மறுமையில் ஆவது இன்னதென்று அறிவிக்க, இறந்தோர் உலகினுக்குத் திரும்பி வராமைபற்றி, மறுமையை நினைக்க அச்சமுண்டாய் உளதாகிய துன்பத்தை நுகர்ந்து பிரத்தியக்ஷமாயில்லாத கேட்டை உலகத்தார் வெறுக்கிறார்கள். ஊன்றிப்பார்த்தல் மனத்திடத்தின் உருவழிக்கின்றது; ஆதலின் சங்கற்பித்த காரியங்கள் முறை பிறந்து செயலற்றவைகளாகின்றன.

அழகிய ஒப்பிலியா, நீ கடவுளை வழிபடுங்கால் என் பாவங்களும் நீங்கவேண்டுமென்று பிரார்த்திப்பாயாக.

ஒப்பிலியா:—பிரபுவே, தங்களைப்பார்த்து வெகுகாலமாயிற்று; சவுக்கியமா?

ஹாம்:—சவுக்கியமே.

ஒப்பிலி:—ஞாபகக் குறியாக தாங்கள் எனக்குத் தந்த சில பொருள்களைத் திருப்பிக் கொடுத்தற்கு எண்ணியிருக்கிறேன். அவற்றை அங்கீகரிக்கவேண்டும்.

ஹாம்:—நான் உனக்கு ஒன்றுந் தரவில்லையே.

ஒப்பிலி:—தங்கள் கொடைகள் ஞாபகத்தில் இருத்தல் வேண்டும்; கொடுக்குங்கால் தங்களுடைய இனியமொழிகள் அப்பொருள்களின் மதிப்பை உயர்த்தின. அவற்றின் நறு நாற்றம் போய்விட்டபடியால் தாம் அவற்றைத் திரும்பவும் ஏற்றுக்கொளல் வேண்டும். கொடையளிப்போன் இன்னாதனாயின் கொடைப் பொருள்களும் இன்னாதனவேயாம். அவை இதோ இருக்கின்றன.

ஹாம்:—ஹா, நீ நேர்மை யுடையவளா?

ஒப்பிலி:—என்ன சொல்லுகிறீர், பிரபுவே!



ஹாம்:—நீ அழகுடையவளா?

ஒப்பிலி:—தங்கள் மொழிகளுக்குப் பொருள்யாது, பிரபுவே!

ஹாம்:—நேர்மையும் அழகும் உடையவளாயின், அவை ஒன்றினுக்கொன்று சம்பந்த முடையன வல்ல.

ஒப்பிலி:—அழகினுக்கு நேர்மையினும் உயர்ந்த தோழமை யுள்ள பொருள் வேறியாது?

ஹாம்:—அழகினுக்கு நேர்மையை யழித்தற்கு சக்தி உண்டு; நேர்மைக்கு அழகை நேர்மை யுடையதாகச் செய்தற்குத் திறம் இல்லை. இது சிலகாலம் பரஸ்பரவிரோதார்த்தமான வழக்குச்சொல்லாயிருந்தது. இப்போ அதனுண்மை விளங்குகின்றது. ஓர் காலத்தில் எனக்கு உன்னிடத்தில் காதலிருந்தது.

ஒப்பிலி:—நானும் அப்படித்தான் எண்ணியிருந்தேன், பிரபுவே!

ஹாம்:—என்னை நீ நம்பி இருக்கக்கூடாது; சகஜமாய் நமக்குள்ள தீக்குணம் புண்ணியத்தினால் மாறுதலடையாது. உன்னிடத்தில் எனக்குக் காதலிருந்ததில்லை.

ஒப்பிலி:—நான் மோசமல்லவோ போனேன்!

ஹாம்:—நீ கன்னியா மடத்திற் புகுதல் நன்று; நீ உலகத்தில் பாபிகளை ஏன் அபிவிருத்தி செய்யப்பார்க்கிறாய்? நானும் ஏகதேசம் நேர்மையுடையவனாயிருக்கின்றேன். என்னிடத்தில் இறுமாப்பும், கோபமும் ஆசையும் மிகுந்திருக்கின்றன. மனத்தால் எண்ணிக் கற்பனையால் உருவாக்கிக் காலத்தால் முடிக்கக்கூடாத தாயுமுள. அநேக பாவங்கள் என்னிடத்தில் குடிகொண்டிருக்கின்றன. என் பாவங்களை நினைக்குங்கால் என் தாய் வயிற்றில் பிறந்ததைப்பற்றி வருந்துகின்றேன். என்னைப்போன்ற ஏழைகள் அந்தரத்தி விருப்பதாலாவதென்ன? நாங்கள் பெரும்பாவிகள்; எங்களை நம்பாதே. கன்னியாமடத்திற்குப்போ உன் பிதா எங்கே?

ஒப்பிலி:—வீட்டிலிருக்கிறார், பிரபுவே!

ஹாம்:—தன்வீட்டிலன்றி வேறெங்கும் அவன் மூடத்தனம் வெளிப்படாமலிருத்தற்கு அவனை உள்ளே தள்ளிக் கதவை மூடிவை. நீ போகலாம்.

ஒப்பிலி:—தெய்வங்காள், இளவரசனை இரக்ஷித்தலாகாதா?

ஹாம்:—நீ மணம் புரிய விரும்பின் உனக்கு ஓர் சாபம் தருகின்றேன். நீ பதிவிரதா சிரோன்மணியாயிருப்பினும் அவதூறில்லாமலிருக்க மாட்டாய். கன்னியாமடத்திற்குப்போ. பிடிவாதமாய் மணம் புரிந்தே தீர்வையாயின் ஒரு மூடனைக் கணவனாக்கிக்கொள். ஸ்திரீகள் புருஷர்களைக் குரங்குகளாக்கி விடுகிறார்களென்று விவேகிகள் நன்கறிந்திருக்கிறார்கள். இந்த க்ஷணத்திலேயே கன்னியாமடத்திற்குப்போ. நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

ஒப்பிலி:—கடவுள் தான் இவரைத் தன்னிலைப் படுத்தல் வேண்டும்!

ஹாம்:—உங்கள் முகப் பூச்சைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். கடவுளளித்த முகம் ஒன்று; உங்கள் சித்திரம முகம் ஒன்று. ஒய்யார நடைபோடு கின்றீர்கள்; மழலைப்பேச்சு பேசுகின்றீர்கள்; ஈசுவர சிருஷ்டியிலுள்ள பொருள்களுக்கு மாற்றுப்பேர் தருகின்றீர்கள். மிகுந்த காமத்தைப் பேதைமை என்கின்றீர்கள். இவை நான் சகிக்கக் கூடியவையல்ல; என் புத்தி இதனால் கலக்கமடைந்திருக்கின்றது. விவாகம் என்பது இனி வேண்டுவதில்லை; இதற்கு முன் மணம் புரிந்தவர்களில் ஒருவனைத் தவிர்த்து மற்றவர் உயிரோடிருக்கட்டும். இதரர் கன்னிகையராயிருக்கட்டும். நீ கன்னிமாடத்திற்கே போ.

ஒப்பிலி:—இம்மகானுடைய அரசநோக்கும், சதுர்வாக்கும், வீரவாண்மையும் எங்கோ ஒளித்து விட்டதே! அரசர்க்குரியவராயிற்றே! உலக நடையாவர்க்கும் கற்பிப்பவரன்றே; உருவத்தில் அச்சப்போன்றவராயிற்றே! கண்டோர் கண்ணைக் கவர்ந்தவரன்றோ! இவருக்குப்புத்தி முற்றிலும் கலங்க வேண்டுமோ? அவர் மதுர மொழியைக் கேட்டுக்களித்த நிர்ப்பாக்கியையாகிய நான் இசை குலைந்த மணிகள் போல இவர் பிதற்றுவதையும் கேட்கின்றேனே! மன்மதன் போன்ற உருவம் உன்மத்தத்தினால் வருந்துகின்றதே. முன்னிருந்ததையும் பார்த்து இப்போழ்திய நிலைமையையுங்காண நான் என்ன பாவம் செய்தேனோ?

அரசனும் பொலோநியஸும் பிரவேசம்.

K. வெங்கட்ராமய்யர். பி. ஏ.

# அரிச்சந்திரன்.

## 3-ம். அத்தியாயம்.

அரிச்சந்திரன் கேட்டதவணையோ ஒரு வாரமே. அதற்குள் ரிஷிக்குச் சேர்க்கவேண்டிய தக்ஷிணையோமிக அதிகம் அத்தவணையின் கடை நாளும் நெருங்கிவிட்டது. பணம் என்பது ஒன்றுமேற் கிடைக்கவில்லை தன் நிலைமையை நன்றாய் அறிந்த அரசன் சொல்வான் “சந்திரமதி, தருமம் செய்ய வேண்டும் என்னும் எண்ணத்தால் நாம் ஏழையரானோம். ஐயோ தர்ம அதிர்ஷ்டம் என்பது நம்மை மிகவும் வாட்டுகிறது. மகரிஷிக்குக் கொடுத்த தானமும் தக்ஷிணையின்றி பலன் படாதாகையால் நாம் தானம் கொடுத்தும் பயன் இன்றிப் போகின்றது, என் செய்வோம் என்று ஆலோசித்தும் ஒரு தீர்மானமும் ஏற்படவில்லை”. இம்மொழிகளைக் கேட்ட சந்திரமதி, “என் அருமை கர்த்தா, நான் ஒருவன் தங்களுக்கே சொந்தம் அல்லவா? என்னை எவர்க்கேனும் தனவந்தர்க்கு



விற்று அவர் தரும் பொருளாலே தக்ஷிணையைக் கொடுக்கலாம். இதற்கேன் இவ்வளவு கவலை” என்று உருகும் மனத்தனாகிய அரசனைத் திடப்படுத்தினாள். சந்திரமதியோ மகாசிறந்த பதிவிரதா சிரோன்மணி. பூமிதேவிக்கு நிகரான பொறுமை உடையவள்; நாயகனே தெய்வம் என்று போற்றும் பதிவிரதா தருமமும், அறநெறியுட் பார்வையுள்ள மனமும் உடையாள்; சிறந்த இராஜபுத்திரனாகிய லோகிதாசுனுக்கு அன்புற்ற தாயார். இவளை விற்கும்படி வாய்த்ததை நினைந்து அரிச்சந்திரன் மனம் கரைந்தான்.

மகரிஷியோ தக்ஷிணையைக்கேட்க வாசற்படியண்டை வந்தனர். இவருக்கோ கரைந்துருகும் மனதும், இரக்கமும் பரிதாபமும் சிறிதும் இல்லை. “இராஜனைப்பார்த்து, எங்கே என் தக்ஷிணை? நான் இனி வீணே காக்கமுடியாது. என் நித்திய கருமங்களுக்கு வீணே இடையூறுகள் நேரிடுகின்றன.” என்று ரிஷி படபடத்தார். இந்த வார்த்தைகளை அரசன்கேட்டு மிக நடுங்கி, இம்மகரிஷி சபித்துப் பல தொந்தரைகளைச் செய்வாரே என் செய்வதென்று அவரை அரை முகூர்த்தகாலம் வாய்தாவைப்பணிந்து கேட்டு, “மகரிஷி எனக்குப்பணம் இதுவரைக் கிடைக்கவில்லை. என் மனைவியைவிற்று உமக்குத் தக்ஷிணை தருவேன்” என்ன அதற்கு அவர் இசைந்து காத்திருந்தனர்.

அரிச்சந்திர மகாராஜன் தன்மனைவியை அழைத்துக்கொண்டு கடைத்தெருக்கட்டம் சேர்ந்தனன், பல்லோர் அனைவரும் சந்திரமதியைப்பார்த்து மனம் நைந்தனர். அரசனோ சந்திரமதியை விற்க விலைகூறலானான். ஒருவரும் அவளை வாங்க வெகுநாழி முன்வரவில்லை. கூடியிருந்தோர் பலரும் பலவிதமாய்ப் பேசினார். ஒருவன்: “ஐயோ, ஈதென்ன கொடுமை, திருமகள் ஒத்த இவ்வம்மணியை விற்பதேனோ” என்பான். மற்றொருவன் “படும்பாவி ரிஷியன்றோ படுத்தும் பாடு” என்பான். ஒருவன் “பதிவிரதா சிரோன்மணியாம் இத்தாயை வாங்கின் இவளை எவ்வண்ணம் காப்பாற்ற இயலும்” என்பான். வேறொருவன் “கூறும் விலை கொடுக்க நம்மால் இயலுமோ” என்பான். “இளங்குழந்தையைப்பார், அவனும் இவ்விதி அநுபவிக்க, நேர்ந்ததே” இதுவும் கடவுளின் கருணையே என்பான் ஒருவன். ஒருகிழவன் “சத்திய கீர்த்திபடும் பாட்டைப்பார். பெண்டைவிற்று [illegible]பொருள் கொள்ளப் பார்க்கிறான்” என்று சிரிப்பான். இவ்வண்ணம் பலபேர் கும்புகூடிப் பலபல வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கையிலே கூனிக் குனிந்த ஒரு கிழப்பிராமணன் சந்திரமதியை உற்றுநோக்கினன். கணவனும் கேட்டற்கரிய கொடுமொழி பேசினன். அரசனும் மறுவார்த்தை பேசாது விலைபேசிமுடித்தனன். இருந்தோர் அனைவரும் சந்திரமதியின் நிலைமையைக்கண்டு மனங்கரைந்துருகி உலகவாழ்வை நினைந்து நினைந்து வெறுத்தனர்.

இராணி சந்திரமதி மிகவும் கலங்கி “என் அன்பார்ந்த நாயகா, லோகிதாசுனை நீரே இட்டுச்செல்லும் [illegible] இன்று முதல் நீரே அவனுக்குத் தாயும் தந்தையும்” எனப் போற்றிப் பெருமூச்சுவிட்டனள். கிழப்பிராமணனோ, இவ்

வார்த்தைகளைக்கேட்டு ' நல்லது, நல்லது, பசுவை விற்குவோன் கன்றைத் தவிர்த்து வாங்குவனோ? ரொக்கப்பணம் கொடுத்து இவளை வாங்கினேன்; பிள்ளையை அழைத்துக்கொண்டு என்னை ஏய்க்க நான் இடம் கொடேன்." என்று சந்திரமதியையும் இராஜகுமாரனையும் அழைத்துக்கொண்டு கடைவீதிவிட்டு சென்றனன்.

சந்திரமதியை விற்றபணமோ தக்ஷிணைக்குப் போதியதில்லை. ரிஷிக்கு இன்னும் அதிகப்பணம் சேர்க்கவேண்டும். இப்பாக்கியை எவ்வண்ணம் அரசன் சேர்ப்பான்! வேறே மார்க்கம் ஒன்றும் காணப்படவில்லை. அரசன் தன்னையே விற்கத் துணிந்தனன். தான் எப்போதும் அடிமையாய் இருப்பேன் என்றும், அதற்கு ரிஷிக்குக் கொடுக்கவேண்டிய தொகைப்பணத்தைக் கொடுத்துத் தீர வேண்டும் என்றும் தன்னை விலை கூறினன். வாங்குவார் ஒருவரையும் காணோம். கடைசியில் ஒருசண்டாளன் வந்து தோன்றினன். இவன் ஸ்மசான கட்டத்துக்காவலன். இவன் அரசனைப்பார்த்து, "நீ தாருட்டியமாயும் சிறந்த ஆளாயும் இருக்கிறாய். எனக்கு ஒருவன் ஸ்மசான கட்டத்தில் பிணம் சுடும் விஷயங்களிலே வேண்டியிருக்கிறான். உனக்கு இஷ்டமா?" எனக்கேட்டனன். அரசன் தன் விலையை முடித்து ஒப்புக் கொண்டனன். இப்பணத்தை ரிஷிமுன் எடுத்துச்சென்று 'தக்ஷிணை தந்தேன்' என சமர்ப்பித்தனன். ரிஷி மனம் உவந்து "என் மனம் பூரித்தது" என்று சொல்லிக்கொண்டு, தம் வழி நோக்கிச் சென்றனர். அரிச்சந்திரனோ சண்டாளன் பின் தொடர்ந்து ஸ்மசான கட்டத்திற் காவலாளியாய் இருந்து தன் கடமையைச் செலுத்தி வந்தனன்.

---

## சுந்தரி.

(88-ம் பக்கத் தொடர்ச்சி.)

வீட்டின் உட்கூடத்திலும், சயன அறையிலும் சிறந்த நிலைக்கண்ணாடிகளும், தஞ்சாவூரில் பேர்பட்ட சிற்பிகளால் எழுதப்பட்ட கண்ணுக்கினிய தெய்வப்படங்களும் தொங்கிக் கொண்டிருந்தன. உள் வருவோர் போவோர் மனத்தை ஒரு விதமாய்க் களிப்பாற்றும் சுயத்தைத் தருவன. உள் நாட்டுப் பெரிய மனுஷர்கள் யார்வரினும் அவர்களோடு கலந்து பேசுவது எல்லாம் வாசல் திண்ணையிலே, எனவும் உத்தியோகஸ்தர் எவர் வரினும் உட்கூடத்தில் உபசாரமே எனவும் ஒரு ஏற்பாடாய் அய்யாவையர் நடத்தி வருகிறார்.

சிவபுரமாகிய இவ்வூருக்கு இவர் சிறந்த பணக்காரராதலினால், இவ்வூரிலே நடக்கும் சச்சரவு முதலியன இவர்க்குத் தெரியாது மேலே உத்தியோகஸ்தர்களுக்குப் போகாது. இவரே அனைத்தையும் ஒரு விதமான மத்தியஸ்தம் செய்வார். ஆயினும் இக்கேவிலே இருகட்சி யாருக்கும் கைப்பணச் செலவே



தவிர வேறொன்றும் இருக்கக் காரணம் இல்லை. அய்யாவையரின் குணம் நமக்குத் தெரிந்திருக்கிறது அல்லவா?

இவ்வூரிலே விசேஷமாய் இவரது வீட்டண்டை அடிக்கடி வந்து காலங்கழிப்பவர்கள் அண்ணு சாஸ்திரிகளும், வயது முதிர்ந்த குப்புசாமி ஐயருமே. இவர்கள் இருவரும் அய்யாவையருக்குப் பாத்தியதை. இதைக்கொண்டே அவரது வீட்டிலே கொண்ட மட்டும் உண்டு வயிறு நிறைப்புவார்.

மற்றைய கிராமப் பெருந்தனக்காரனும், கணக்கனும், சில்லரை வேலைக்காரர்களும் ஐயரை தூரநின்று வணங்கி ஒதுங்கிச் செல்லுவார். ஏனெனில் இவர் விஷமச் செயல் அவர்கள் நன்றாய் அறிவார்கள் அல்லவா?

### அத்தியாயம்—2.

இப்பொழுது சூரியன் தக்ஷிணாயனம் மாறி உத்தராயணம் வந்தனன். போகி பண்டிகையும் சங்கிராந்தி பண்டிகையும் கடந்தன. உள் நாட்டுக் குடிகளும் மிராசுதாரரும் இப்பண்டிகளை விசேஷமாய்க் கொண்டாடிக் குதூகலிப்பர். இவைகளோடு கூடப் 'பிரம்மசாரி கோர்ட்டு' என்று இப்பொழுது வழங்கப்படுகிற விவாக காலமும் வந்தது. இவைகளுக்கெல்லாம் தைமாசம் ஆரம்பம் எனல் எதன் பொருட்டென்று சிறிது விசாரிப்பாம்:

போகத்திற்கு உரித்தான காலம் போகியென்று பெயர். போகம் என்பது சுக சவுக்கியமான நன்மைகளை அனுபவித்தலாம். புராண பரம்பரையாய் இஷ்டசித்தி பெற்ற காலமாகி யிருப்பதால், மார்கழி மாதத்தின் கடையான தினத்திற்குப் "போகி" என்ற பெயர் உண்டாயிற்று. தட்சிணாயனத்திலே சூரியன் தென்பாதி கோளத்தைச் சார்ந்த காலமாம்; உத்தராயணத்திலே சூரியன் வடபாதி கோளத்தைச் சார்ந்த காலமாம். ஆகவே தட்சிணாயனத்தின் கடைசி மாதமாகிய மார்கழிமாதம், உத்தராயணத்தில் சூரியன் சஞ்சரிக்கிற தைமாதத்துக்கு விடியற்காலம் போலாம். ஆகையினால், விடியற் காலமாகிய மார்கழியில் நீராடிக் கடவுளைத் துதித்துப் போற்றி வருவது உத்தமம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதை அநுசரித்தே நம் நாட்டு ஆலயங்களிலும், வீடுகளிலும், பூஜை உற்சவங்கள் மாதம் முழுதும் நடந்தேறி வருகின்றன. சங்கிராந்தி பண்டிகையென்பது சூரியன் தட்சிணாயனத்திலிருந்து உத்தராயணத்திற்குத் திரும்புகிற முதல் நாள். இது பரியந்தம் விளைவு காலமாயிருந்தது. ஜனங்கள் தானியத்தை அறுத்துக் கொண்டாடுகிற காலம் இதுவே; விளைவுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் அளித்த சூரியனைப் போற்றும் காலம் இதுவே; இந்நாளே தம்மை அடுத்த குடிகளுக்கும் சிநேகித பந்துவர்க்கங்கள் முதலியோர்க்கும், புது விளைவுப் பண்டங்களைக் கொடுத்துப் பண்டிகையாடும் காலம்; இந்த சங்கிராந்தி தினமே, புதிதின் விளைந்த தானியத்தின் அரிசியைப் பாலும் சர்க்கரையும் சேர்த்துக் கனிவர்க்கங்களோடு பொங்கி சூரிய மண்டலத்திலுள்ள பகவானுக்குப் படைக்கும் காலம். பக்திமான்கள் இந்நாளில் கட-

வுளைத் தியானிப்பார். வீடுகளை உள் நாட்டிலே பார்த்தால் மிகத் திறமையின் பழுது பார்க்கப்பட்டுப் ஜனங்கள் பணிக்காய் வைத்திருப்பார்கள். அப்பொங்கலுக்கு அடுத்த தினமாகிய இரண்டாம் தேதியிலே உழவு காரியங்களுக்கு உதவியாய் இருந்த மாடுகள் விருத்தியடைய வேண்டும் என்னும் கோரிக்கையினால் பகலின் மேல் பொங்கல் இட்டுக் கடவுளைத் துதித்து, மாடுகளை வெட்டிமாலைகளாலும், பூ, மாவிலை, நெல்லி, வேம்பு முதலிய மாலைகளாலும் அலங்கரித்து, வாத்தியங்களோடு "மாட்டுப்பொங்கல்" என்பதை நடத்துவார். முதல் நாள் பொங்கலுக்கு "பெரும் பொங்கல்" என்று பெயர். "மாட்டுப் பொங்கல்" நடக்கும் தினத்திலே பிராமணர்கள் பசுக்களாலே உலகம் விருத்தி யடைவதைக் குறித்து அவைகளை வணங்குவார். இதற்குக் "கோபூஜை" என்று பெயர். பொங்கல் நடந்த பிறகு இஷ்டமித்திர பந்துக்களின் வீடு சென்று "பால் பொங்கிற்றா" வென க்ஷேமம் விசாரித்து மரியாதைகள் பெறுவார்.

விளைந்த தானியத்தின் தெம்பினாலே உலகத்தார் விவாகம் முதலியன நடத்தும் காலம் தைமாதத்திலே துவக்கம் ஆகின்றது.

சுந்தரராஜ புரத்திலே தென் கிழக்குக் கோடியில் உள்ள மாடிவீட்டின் திண்ணையிலே கையில் ஏட்டுச் சுவடியை எதிரே பிரித்துப் போட்டுக் கொண்டு தரையில் மாக்கல்லினால் கட்டம் கிழித்துக் கொண்டிருக்கிறாரே அவர் தான் ராஜா சாஸ்திரிகள். அவருக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டு "என்ன சாஸ்திரிகளே இது நல்ல வரமா" என்று கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாரே அவர் தான் இராஜப்பையர். இவர் தகப்பனார் அருணாசலய்யர் தஞ்சாவூர் அரண்மனையிலே உத்தியோகத்திலிருந்து விசேஷம் திரவியம் சம்பாதித்தவர். "அரண்மனையைக் காத்தவனும் அடுப்பங்கரையைக் காத்தவனும் வீண்போக மாட்டான்" என்பதையும் "அரண்மனைச் சம்பளம் அரைப்பணம் என்றாலும் போதாது" என்பதையும் கவனிக்கின், அரண்மனை உத்தியோகஸ்தர் பலவழியில் திரவியம் சம்பாதிக்க மார்க்கம் இருந்த தென்று தெரிய வருகிறது. இராஜப்பையருக்குத் தகப்பனார் இளமையிலே யிறந்துவிட்ட படியால் சுந்தரராஜ புரத்தில் தனக்கிருந்த சொத்தை விருத்தி செய்யலாம் என்ற எண்ணத்துடன் இங்கே இருந்து விட்டார். இராஜப்பையர் நல்ல நடத்தையுள்ளவர்; நால்வரும் மகிழ்ந்து பேசக்கூடிய கீர்த்தியுள்ளவர். சொத்தும் விசேஷமாய் இருந்தது. இவர்க்கு அருமையான மனைவி விசாலாக்ஷி யென்பாள் சிறந்த பாக்கியமே போலும். இவர்களுக்கு முதல் புத்திரியாகிய சுந்தரியை மிகச் செல்வத்துடன் வளர்த்துத் தாயே அவளுக்குக் கல்வி பயிற்று வித்தாள். இப்பெண் இயற்கையிலேயே ரூபவதியாயும் குணவதியாயும் இருந்தனள். அதனோடு கல்வி ஞானமும் சேரவே மிகுந்த சுகுணோத்தமியாய் இருந்தனள். இப்பெண்மணிக்கு இப்பொழுது வயது பன்னிரண்டு இருக்கலாம். இவளை நல்ல மாப்பிள்ளைக்குக் கொடுத்துச் சுகமாயும், மனச் சந்தோஷத்தோடும் வாழச் செய்ய வேண்டும்



என்பது இராஜப்பையரின் அபிப்பிராயம். அதனால் பல வரன்களைப் பார்த்து மனஇஷ்டம் கொள்ளாதே கவலைப் பட்டுக் கொண்டிருந்து வந்தார்.

"பெண்ணுக்கோ வயது பன்னிரண்டு ஆயிற்றே. ஒருவருஷம் கழித்து விவாகத்தைச் செய்வோமென்றாலோ ஊரபவாதம் வந்துவிடுமே. சீக்கிரமாய்ச் செய்துவிடுவோம் என்றாலோ நல்ல வரன்கள் கிடைக்கவில்லை. இத்தனை அருமையாய்ச் சீராட்டிக் கோதாட்டிச் செல்வமாய் வளர்த்து குழந்தைக்குக் கல்வியும் கற்பித்தேன். கிளியை வளர்த்துப் பூனை வாயில் கொடுப்பது போல ரூபலாவண்ணியமும் சுகுணோத்தமமும் பொருந்திய என் கண்மணியை அருகனல்லாத எவர்க்கேனும் கொடுக்கவோ மனந் துணியவில்லை. காலத்தை யொட்டி வரதக்ஷிணை கொடுப்போம் என்றாலும் நல்ல வரன்கள் கிடைக்கவில்லை. சுந்தரி அதிர்ஷ்டம் எப்படியிருக்குமோ! பூர்வஜன்மத்தில் நல்ல பூஜை செய்திருந்தால் குழந்தைக்கு நல்ல மணவாளன் வாய்ப்பான். எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கிறார்." என்று ஆலோசித்துக்கொண்டு ஒன்றும் தோற்றாது எதிரில் இருந்த பிராமணரைப் பார்த்து "என்ன சாஸ்திரிகளே, இந்த ஜாதகம் பொருத்தம் எப்படி யிருக்கிறது? சொல்லுங்கள்" என்றார்.

சாஸ்திரி:—இந்த ஜாதகப் பொருத்தம் என்னமோ சரியாய் இருக்கிறது. மற்றைய விஷயங்கள் எல்லாம் எப்படியோ?

இரா:—வரதக்ஷிணை யென்னமோ 500 ரூபாய் வேண்டுமாம். பையன் என்னமாய் இருப்பானோ? எனக்குத் தெரியாது.

சாஸ்திரி:—பையன் நல்ல செகப்புத்தான். 20-வயது ஆய்விட்டதாம். அய்யாவய்யர் என்னோடே பலவதுக்கள் நல்ல இடங்களில் இருந்து வந்ததாகச் சொன்னார். பையன் புத்திசாலியென்றே சொல்லுகிறார்கள். தமிழிற் சிறந்த வித்வானும்.

இரா:—அப்படியா, என் சுந்தரிக்கேற்ற புருஷனா இருப்பான் என்று தங்களுக்குத் தெரியுமா?

சாஸ்திரி:—நான் பையனைப பார்த்திருக்கிறேன். பையன் நன்றாய் இருக்கிறான். காம்பீரியமான முகவிலாசமும், திடசரீரமும் உடையவனே; சுமார் உயரமான பிள்ளையென்றே சொல்லவேண்டும். கண்களின் நன்றேக்கமும் இனிய மொழியும், உபசார வழக்கமும் உடையான் என்றே எல்லாரும் சொல்லுகிறார்கள். சங்கீதத்திலும் ஞானம் உடையவனும், நன்மார்க்கத்தை அநுசரிப்பவனும், டாம்பீகப்பழக்கம் இன்றி தன் விவகாரங்களையே கவனிப்பவனும், ஊரிலுள்ள குடிகளும் பையனையே மிகவும் புகழ்கிறார்கள். வேணும் என்றால் பார்க்கலாம்.

இரா:—உமக்கு மனசு பிடித்திருக்கிறதா? உமக்கு இஷ்டமானால் எனக்கும் இஷ்டமே ஆனால் இவ்வளவு அந்தஸ்துள்ள மணவாளன் சுந்தரிக்கு வாய்க்கத் தெய்வங்கள் அநுகூலம் பண்ணவேண்டுமே.

சாஸ்திரி:—அதான் சொன்னேனே. இருக்கிறதற்குள்ளே சிவபுரம் வரன் திறன்தான். குடும்ப ரீதியும் சொத்தும் விசேஷமாய் இருக்கு. பையனோ சுகுமாரனானவன். சிறந்த வித்வான். அவன் முகவிலாசமே காண ஆநந்தமாய் இருக்கும். ஈசன் செயல் எப்படியோ?

ராா:—இந்த வரனுக்குக் குடித்தனம் திறந்தான். தகப்பனார் கொஞ்சம் துர்க்குணரே. ஆனாலும் பையனை உத்தேசித்து இறங்கத்தான் வேண்டும்.

சாஸ்திரி:—என் வேலையை நானே மெய்ச்சிக்கொள்ளுதல் நன்றாய் இராது. சிவபுரம் ஜாதகம் வாங்க நான் பட்ட சிரமம் சொல்லிமுடியாது. ஆனால் பிரபுக்கள் விஷயங்களிலே உபகாரஞ் செய்தால் சமயத்திலே மறக்க மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும் அப்பாசாமி தீக்ஷதர் பெண்ணுக்கு வரன் இசைத்தது நான்தான். ஆனால் உப்பிட்டவரை யுள்ளளவும் நினை என்பதற்கேற்ப சம்மந்திகள் இரண்டுபேரும் என்னைக்கவனித்து ரூபாய் 25-ம் ஒவ்வொரு ஜோடி மரியாதை வஸ்திரமும் வாங்கித்தந்தார்கள். எனக்குக் கொடுப்பதெல்லாம் இருதிறத்தாரும் தமது லாபத்தை உத்தேசித்தே. நான் எத்தனையோ விவாகம் முடித்து வைத்திருக்கிறேன். இதோ பாருங்கள் என் கையிலுள்ள ஜாதகக்கட்டை சுமார் 100 பெண்ஜாதகங்களும் 70 அல்லது 80 புருஷ ஜாதகங்களும் இதில் இருக்கின்றன. எவர்களுக்கு எவ்விதமான வது வரன் வேண்டுமென்றாலும் ஒரு கை பார்ப்பேன். என்பேர் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். நான்தான் மருட்டேர் ராஜா சாஸ்திரிகள்.

இம்மாதிரி சாஸ்திரிகள் பேசிமுடித்தார் தன்னூராகிய மருட்டேருக்குத் தக்கபடி சாஸ்திரிகளுக்கு உருட்டலும் அதிகம் உண்டு. சாஸ்திரிகள் என்னும் என்னும் பேர் இவருக்குக் கிடைத்தது இவர் தகப்பனார் சாஸ்திரிகளாக இருந்ததினாலே. மரியாதை மிகுந்த தகப்பனார் தம்மாலான பிரயத்தனம் செய்தும் குட்டி சாஸ்திரிகளுக்கு அத்தியயனமும் சாஸ்திர ஞானமும் கிட்டவே வரவில்லை. ஒட்டி யொட்டிப் பார்த்தும் பலன் படவில்லை. ஆனால் ஜாதகங்களில் நக்ஷத்திரப்பொருத்தம், ரஜ்ஜுப் பொருத்தம், கணப்பொருத்தம், தாலிப்பொருத்தம் முதலிய பொருத்தங்களை ஒருவாறாய்த் தெரிந்துகொண்டார். இவர் எங்குபோனாலும் ஜாதகங்களைச் சேகரிப்பது வழக்கம். பிராமணர்களுக்குள்ளே விவாகம் என்பது ஒரு பெருங் காரியம். வது வரன்கள் தேடுவதில் 3, 4 வருஷங்கள்கூடச் செல்லும். இவர்களுக்குச் சாஸ்திரிகள் ரொம்ப உபகாரி. சாஸ்திரிகள் ஜாதகக் கட்டில் அநேகமாய் எந்த வதுவுக்கு வரன் வேண்டுமென்றாலும், எந்த வரனுக்கு வது வேண்டுமென்றாலும், கிடைப்பது சுலபமே. இச் சாக்கைக் கொண்டு போன இடங்களில் சாஸ்திரிகளுக்கு விருந்துச் சாப்பாடும் மரியாதையும் நடக்கும். சில குறித்த வரன்களை முடித்துவைப்பேன் என்று இரண்டு சம்மந்திகளிடத்தும் சாஸ்திரிகள் "டிஸ்கவுண்டு" வாங்குகிறதும் உண்டு. ஆகையால் இவருக்கு 'டிஸ்கவுண்டு' சாஸ்திரிகள் என்றே வெளி ஜனங்கள் சொல்லுவார்கள். ஜாதகங்களில் சிறிது பொருத்தம் இல்லாதவையாய் இருப்பினும் இச்



சாஸ்திரிகள் தமக்குக் கிடைக்கும் லாபத்தை மேலாகக்கொண்டு சிறிது சாதகங்களை மாற்றினும் மாற்றுவர்.

[இன்னும் வரும்.]

ஜானகி.

# NEWS AND NOTES.

## வர்த்தமானங்கள்.

அடுத்த காங்கிரஸ். மத்திய மாகாணத்தின் தலைநகராகிய நாக்பூர் (நாகபுரி) நகரத்திற் கூடும்.

காங்கிரேஸ் சபா நாயகர்:—இந்த வருஷம் காங்கிரேஸில் சபாநாயகராக இருந்த ஸ்ரீ தாதாபாய் நவரோஜிக்கு காங்கிரெஸ் சபையார் வந்தனம் செய்து அவருடைய தள்ளாப்பருவத்தில் இந்தியாவின்மேல் வைத்த அன்பால் காங்கிரெஸிற்குச் சபாநாயகராய் இருந்து சிறப்புடன் நன்கு முடிந்ததை மிகுதியும் வியந்தார்கள். சபாநாயகரும் மறுமொழி புகன்றார். பின்பு அநேக வங்காள ஸ்திரீகளும் பாடசாலைச் சிறுமிகளும் ஸ்ரீ தாதாபாய்க்குப் பூமாலை சூட்டினார்கள். இக்காட்சி மிகவும் ரம்மியமாய் இருந்தது.

கல்கத்தா பொருட்காக்ஷி:—1906-ம் வருஷம் டிசம்பர் 21ல கல்கட்டா பொருட்காக்ஷியை இந்தியாவின் வைஸிராய் ஆகிய லார்டு மின்டோ பிரபு திறந்தார். இப்போது நடக்கும் பொருட்காக்ஷி காங்கிரெஸ் சபையை யொட்டி 6-வது முறையாகக் கூட்டப்பட்டது. முன் காட்சிகளைவிட மிகப் பிரபலமாய் இருக்கிறதென்று எண்ணப்படுகிறது. இந்தியாவின் பலநாட்டுத் தேசங்களினின்றும் காட்சிப் பொருள்கள் பல்லாயிரக் கணக்காய் வந்திருந்தனவாம். வைஸிராய் திறக்கும்போது வரிசைப்படுத்தப்படாமலும் இருந்தனவாம். இக்காட்சியில் இந்தியாவின் நெசவுதாரிகள் பலபேர்கள் சாமான்களுடன் வந்திருந்தனராம்.

பெர்ஷியாவில் ஷாவின் விஷயம்.

பெர்ஷியாவில் (ஷா அரசர் இறந்து விட்டபடியால்) அவருடைய குமாரரும் இளவரசரும் ரீஜெண்டுமாகிய புதிய ஷா டிகிரோன் ராஜ மண்டபத்திற்கு வந்தார். அவரே இனி ஷாவென்று குருக்கள்மார், மந்திரிமார் சிற்றரசர் முதலியவர்களால் அங்கீகரிக்கப் பட்டது. அடுத்த பிப்ரவரி மாதம் 2-ந்தேதியன்று பட்டாபிஷேகம் நிச்சயிக்கப் பட்டிருக்கின்றது.

### ஜெர்மனியில் நிச்சயதாம்பூலம்.

கேஸலிருயடைய நான்காம் இராஜ குமாரனுக்கு ஆல்ஸ்டன் அலக்சாண்ட்ரா விக்டோரியா இளவரசியை விவாகம் செய்வதாய் நிச்சய தாம்பூலம் செய்யப்பட்டிருக்கிறது.

---

### ஒரு விவேகமுள்ள கிளி.

சில தினங்களுக்கு முன் வால்மர் என்னும் ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருந்த தபால் பார்ஸல்கள் முதலியவற்றைத் திருடுவதற்காக நடுச்சாமத்தில் சில திருடர்கள் ஸ்டேஷன் கட்டிடத்துக்குள் நுழைந்து சாமான்களைப் பொறுக்கிக்கொண்டிருந்தார்கள். அந்த அறையில் ஸ்டேஷன் மாஸ்டரால் வளர்க்கப்பட்ட ஒரு கிளி தனது கூண்டிற்குள்ளிருந்தது. இந்தத் திருடர்களின் சப்தத்தைக் கேட்டவுடன் ஏதோவென்று பயந்து "ஹரிஹரி" என்று பலமாய்க் கத்தினது. இதைக்கேட்டு பக்கத்திற் படுத்திருந்த ரெயில்வே காவற்காரர்களும் சேவகர்களும் விழித்துப் பார்க்கவே கள்ளர்கள் திருடுவதை யறிந்து ஆரவாரஞ்செய்தார்கள். கள்ளர்கள் சாமான்களைப் போட்டுவிட்டு ஓட்டம்பிடித்தார்கள். கிளியினது புத்தியையும் ஜாக்கிரதையையும் பலரும் மெச்சிக்கொண்டார்கள்.

---

### ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியும் இந்திய மாதர்களும்.

சென்ற வியாழக்கிழமையன்று கல்கத்தா பொருட்காட்சியில் ஸ்திரீகளுக்கென்று பிரத்தியேகமாய் அமைக்கப்பட்டிருக்கும் பாகத்தைப் பார்வையிடுவதற்காக ஸ்ரீ தாதாபாய் சென்றார். அப்பொழுது அங்கு கூடியிருந்த இந்திய ஸ்திரீகள் அவருக்கு ஒரு வெள்ளித் தாம்பாளமும் ஒரு வெள்ளிப் பெட்டியும் காணிக்கையாக வைத்து உபசரித்தார்கள். அப்பொழுது தாதாபாய் அதை அன்போடு ஏற்றுச் சொன்னதாவது:—"பாலியனா யிருக்கும்பொழுது இந்தியப் பெண்களுக்குக் கல்வி வேண்டுமென்பது முதல் முதல் பிரஸங்கம் செய்யத் தொடங்கினது நான்தான். பின்பு என்னுடைய முன் மாதிரியைக் கொண்டு அநேகர் பெண்கல்வியின் பொருட்டுழைத்தார்கள். அதன் பலனாக இப்பொழுது இந்த சபையில் எத்தனையோ இந்திய ஸ்திரீகள் கல்வியறிவிற் றேர்ந்தவர்களாய் பொதுக் கூட்டங்களில் தலையிட்டு முன்வந்திருப்பதைக் காண என் மனம் பூரிக்கின்றது. நீங்கள் இன்று எனக்குச் சம்மானஞ் செய்த இந்தப் பெட்டியையும் தட்டத்தையும் தங்களுடைய அன்பென்னும் பொருள் நிறைந்த பொக்கிஷமாய் நினைக்கின்றேன்.

---

ஐரோப்பிய பாஷை — அங்கிலேய பாஷை பேசுகிறவர்கள் உலகத்தில் 111,000,000-ம் பேர் வசிக்கிறார்கள். ஜர்மானிய பாஷைக்காரரும் ருஷ்ய பாஷை பேசுகிறவர்களும் தனித்தனி 75,000,000—ம் பேர்வசிக்கிறார்கள். பிரான்சுப் பாஷையை 51,000,000-ம்பேரும். ஸ்பானிய பாஷையை 43,000,000-ம் பேரும், இத்தாலியாபாஷையை 3?,000,000-ம்பேரும், போர்ததுக்கேசியபாஷையை 13,000,000-ம்பேரும் பேசுகிறார்களாம்.



### ஆசார சீர்திருத்த மகாசபை.

### The Indian Social Conference.

ஆசார சீர்திருத்த மகாசபை கல்கத்தாவில் சென்ற டிசம்பர் மாதம் 30-ந் தேதியன்று கூடிற்று. ஸர் சந்திரமாதவ கோஷ் அக்கிராசனம் வகித்தார். அப்பொழுது பரோடா மகாராஜா, மகாராணியார் ஆகிய இருவரும் வந்திருந்தார்கள். ஸ்ரீ கோபால கிருஷ்ண கோக்கலே முதலிய காங்கிரெஸ் அபிமானிகளும் வந்திருந்தார்கள். சபை ஆரம்பிக்கப்பட்டவுடன் சபா நாயகர் பிரசங்கம்செய்தார். பின்பு தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவை யாவன:—

---

1. மதுவிலக்கு:—கள் முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகப்படுத்துவதை நிறுத்தவேண்டுமென்றும், ஜனங்களுடைய ஆசாரங்கள் சுத்தமாயிருக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இது ஸர் பாலசந்திர கிருஷ்ணுவால் பிரேரேபிக்கப்பட்டது.—

---

2. பெண் கல்வி:—இந்தியாவில் அபிவிர்த்தியாய்க்கொண்டு வருவதைப் பற்றி இந்த சபையார் மிகவும் சந்தோஷிப்பதாகவும் அதன் பொருட்டு கவர்ன்மெண்டாரெடுத்துக்கொள்ளும் சிரமத்திற்கு நன்றி யறிதலுள்ளவர்களா யிருப்பதாயும், இன்னும் கிருகஸ்தா சிரமத்திலுள்ள பெரிய ஸ்திரீகளுடைய கல்வியின் அபிவிர்த்தியின் பொருட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இது மிஸ்ஸஸ் சரோஜினி நாயுடுவால் பிரேரேபிக்கப்பட்டது:—

---

3. விவாகத்துக்கு வயது:—இந்தியர்க்குள் நடக்கும் அகால விவாகத்தை நிறுத்தவேண்டுமென்றும், குறைந்த பக்ஷம் பிள்ளைகளுக்கு 18-வயதும் பெண்களுக்கு 12-வயதும் ஆகுமுன் விவாகஞ் செய்வது கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.—

---

4 ஜாதிக்கலப்பும் விவாகக் கலப்பும்:—பிரமக்ஷத்திரிய வைசிய சூத்தராகிய நான்குவகைக்குள் ஒவ்வொரு வகையிலுமுள்ள உட்பிரிவுகளைச் சேர்ந்த ஜாதியார் ஒருவரோடு ஒருவர் விவாகமும் பந்தி போஜனமும் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

---

5. விவாகச்செலவு:—விவாகத்துக்காகச் செய்யப்படும் வீண்செலவையும் சீதனம் கொடுத்தல் முதலிய வழக்கங்களையும் நிறுத்திவிட வேண்டுமென்று செய்யப்பட்ட தீர்மானம் மைசூர் மிஸ்டர் சுப்பராவால் பிரேரேபிக்கப்பட்டது.

---

6. ஒழுக்கக்கல்வி:—இந்தியர்களுக்கு பயிற்றுவிக்கப்படும் கல்வி ஒழுக்கத்தை விர்த்தி செய்யக்கூடிய விதமாயிருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

7. கடல்யாத்திரை:—கடல்யாத்திரை செய்வது கூடாதென்பதைப்பற்றி சாஸ்திரங்களில் யாதொரு விதிவிலக்கங்களும் சொல்லப்படவில்லை யாகையால் கடல்யாத்திரை செய்வதைப்பற்றி யாதொரு குற்றமுமில்லையென்று ஒரு தீர்மானம் ஸ்வாமி நித்யானந்தா என்னும் ஒரு துறவியால் பிரேரேபிக்கப்பட்டது.

---

8. விதவைகள்:—இந்துக்களுக்குள் பால்யத்தில் கைம்பெண்ணாயிருக்கும் ஆயிரக் கணக்கான ஸ்திரீகளுடைய நிலைமை மிகவும் பரிதாபமாகவும் இந்தியர்களுக்கு ஒரு கேவலமாகவும் பாபமாயுமிருப்பதாயும் அவர்களை ஆதரிப்பதற்காக ஒரு பண்டு ஏற்படுத்தி ஏதாவது அவர்கட்கியைந்த கைத்தொழில் பயிற்றுவிப்பதோடு அவர்களுக்கு இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் விவாகம் செய்து கொள்வதற்கு அநுமதி கொடுக்க வேண்டுமென்றும் செய்யப்பட்ட இத்தீர்மான மானது பம்பாய் ஸர்-பாலசந்திர கிருஷ்ணாவால் பிரேரேபிக்கப்பட்டது. மிஸ்டர் ஜி. கோஷால் என்பவரின் புத்திரியாகிய மிஸஸ் மூக்கர்ஜீ அம்மையென்னும் ஒரு பெண்மணியால் மிகவும் ஆதரித்துப் பேசப்பட்டது அன்றியும் விதவைகளுடைய மங்களமான உடையை மாற்றி வெள்ளை வஸ்திரம் உடுக்கும்படியும் தலைமொட்டை யடிக்கும்படியும் வற்புறுத்துவதும் மிகவும் பரிதாபமாயும் குரூரமாயுமிருப்பதாய் விளக்கிக் காட்டினதுமன்றி அவ்வழக்கத்தை நிறுத்தவேண்டுமென்று வேண்டினார். இதை காசிவாசியாகிய ஒரு வைதீகப்பராமணர் மிகவும் சரியென்று மெச்சி அங்கீகரித்தார்.

---

9. கீழ்ஜாதி:—கீழ் ஜாதியாரை அன்போடும் கௌரவமாயும் நடத்தவேண்டுமென்ற தீர்மானத்தைப் பற்றி ஸ்ரீ கோக்கலே பேசினார். கு.—ன்.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுபரப் பீடோங்கும் பெண்மைதா
னுண்மை யுறவோங்கு முலகு."

| | | |
|---|---|---|
| Vol. II. தொகுதி II. | MADRAS, FEBRUARY 1907. சென்னை, 1907-ஷ பிப்ரவரி-மீ. | No. 7. பகுதி 7. |

## இந்திய மாதர்களின் கல்வி அபிவிருத்தியைக் குறித்துச் செய்ய வேண்டுவன.

நாகரீகம் மிகவும் அடைந்து வருகிற ஜாதியாருக்கு முக்கிய அடையாளம் என்னவெனின் அவர்கள் தங்கள் ஸ்திரீகளுக்கு என்னென்ன நன்னெறி முறைமைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதைக் கவனிப்பதே. உத்தம ஸ்திரீகள் குடும்பங்களில் இல்லையாயின் அக்குடும்ப வாழ்வு சங்கடத்தையே தரும். விருத்திக்கு வரச் சந்தர்ப்பம் இல்லாது காலம் வீணே போகும். குடும்பத்தில் பிள்ளைகளும் பெண்களும் முன்வந்து பெருமையடையாது காலங்கழிப்பர். ஆகையால் நாகரீக விவகாரங்களில் ஸ்திரீகளின் நிலைமையை முக்கியமாய் கவனிக்கவேண்டியதாகிறது. நாகரீகம் என்பதை நாம் சாதாரண அர்த்தத்தில் உபயோகிக்கவில்லை. ரஸ்தாக்களில் தற்காலம் யந்திர சக்தி மகிமையால் 'மோடார்' வண்டிகளும், இருசக்கரவண்டிகளும், மின் சக்தியால் ஓடும் 'ட்ராம்' வண்டிகளும் வாய்க்கப் பெற்றதாலும் அநேக யந்திர சூழ்ச்சியால் வேறு வேறு வேலைகளைச் செய்வதாலும் இது நாகரீக காலமாய் விட்டதென்று எண்ணுதல் கூடாது. ஜனங்களுக்குள்ளே பெரும்பான்மையாக இகபரஞானமும், நற்குணங்களும், பரஸ்பர உபகார சிந்தையும், வேறு சற்குணங்களும் பரவிவருமானால் அக்காலத்தை நாகரீக நிலைமையது என எண்ணலாம். பரதகண்டமாகிய இந்நாடு இன்னும் செழித்தோங்கி உண்மையான நாகரீக முதிர்ச்சி அடைய வேண்டியதற்கு சாதனங்கள் பல இருக்கின்றன. அவைகளுள் மாதர்களுக்குரிய ஸ்தானம் எதுவென்று ஆலோசிக்கவேண்டியது ஆவசியகம். சர்வஜன சம்மதமான பெண்கல்வியோ, பெண்பாலார்க்கு ஆவசியகம் என்பதை அனைவரும் அறிவார். ஆனால் தற்காலம் கவர்ன்மெண்டாராலும் பாதிரிமார்களாலும் ஏற்படுத்தப்பட்டு வருகிற பெண் பாடசாலைகளிலே கன்னியர்கள் பெறும் கல்வி விசேஷ நன்மையை தேசத்துக்குத் தருவதாகாது. நம்மவர்கள் ஊருக்கூர் சுதேச பாடசாலைகளை ஏற்படுத்தி சம்மதத்துக்கும், ஆசாரத்துக்கும் குறைவு வாராதபடிப் போற்றுதல் மிக ஆவசியகம். ஆண்பாலார்குணம் அழிந்தாலும் பெண்பாலாரால் உலகம் கடைத்தேறும்.

பெண்பாலர் குணமழிந்தால் தேசம் பாழாய் முடியும். ஆகையால், நம் நாட்டார் கண்ணும் கருத்துமாயிருந்து தக்க சுதேச பாடசாலைகளை கிராமங்களிலே ஏற்படுத்திச் சுதேச முறைமைப்படிப்புகளைத் தீர்க்காலோசனையின் பேரில் நியமிக்க முயலவேண்டும். இவ்விதம் சிலகாலம் செய்து வந்தால் பிறகு பாடசாலைகளுக்குப் பொதுவான விதிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆகையால், கிராமங்களிலே பெருந்தனக்காரராய் இருப்போர்கள் இம்முக்கிய விஷயங்களைக் கவனித்து ஆண்பெண்பாலார் இருவரும் தேசபக்தியிலும், ஆசார விவகார விஷயங்களிலும் உன்னதமடைய முயற்சி செய்தல் ஆவசிகம்.

வாயாலே பெண்கல்வி ஆவசிகம் என்று பலகாலும் சொல்லி ஒருகாலும் கிரியை வழியாய்க் காட்டி ஏற்பாடு செய்யாதவர்களின் செய்கை பலன்படுதல் ஆகாது. ஆகையின் இந்திய மாதர்கள் முன்னுக்கு வந்து மேன்மை பெறும் நன்மார்க்கத்தை ஆராய்ந்தறிந்து கிராமங்களில் பெண்பாடசாலைகள் ஏற்படுத்த ஆயத்தப் படவேண்டும்.

மாதர்களைத் தள்ளிவிட்டு அவர்கள் துணையின்றி புருஷர் மேனிலைக்கு வரமுயலுதல் வீண் பிரயத்தனம். முன்னாளிலே சிறந்த பேர்பெற்ற யுத்தவீரர்களையும், மகா கீர்த்தி கொண்ட தத்துவஞானிகளையும், என்றும் தம் பெயரை நிலை நாட்டிய ஞானவான்களையும் தந்துவிளங்கியது இத்தேசமே அன்றோ? இச்சிறந்த மகான்களை ஈன்றெடுத்த தெய்வபக்தி சிறந்த ஸ்திரீ ரத்தினங்களின் வாழ்வு நம் பெண்பாலார் தெரியவேண்டுவது ஆவசிகம் அல்லவா? இவ்விஷயங்களை நம் நாடு முன்னிவர எண்ணும் தேசாபிமானி எவ்வனும் என்றும் நெஞ்சிற் பதித்துத் தன்னாலானவரையும் செய்யக் கூடியவற்றைச் செய்து பலன் அடையப் பாடுபடல்வேண்டும்.

தமிழ் நாட்டில் பல இடங்களிலும் தாய் தந்தையர்கள் தம் பெண்கள் படித்திருந்தால் நல்லமணவாளனை அடையச் சௌகரியம் ஆகும் என எண்ணி ஏதோ தம்மாலான மட்டும் சிறிது கல்வியைப் புகட்டிவைக்கிறார்கள். ஆனால் இவர்கள் கல்வி ஞானமும் ஆசார அறிவும் எவ்வளவு மேன்மையைத் தரும் என்று ஆழ்ந்து ஆலோசியாதவர்கள் "கண்ணிரண்டு முள்ளான் கற்றோன், முகத்திரண்டு புண்ணுடையான் கல்லாதவன்" என்னும் வாக்கைச் சிந்தியார்க்குப் படிப்பால் கிடைக்கக் கூடிய நன்மை துலங்குமோ? ஆகவே, ஒவ்வொரு குடும்பத்தில் இருப்போரும் தமது குடும்பத்தில் படித்தறிந்தவர்களாலே தம் குடும்பப் பெண்களுக்குக் கல்வியைக் கற்பித்து அவர்களுக்கு ஒரு ஆசையை மூட்டிவிட்டால் பிறகு பெண்கள் குடும்பம் விட்டுக் கணவர்களோடு சேர்ந்த காலத்து அவருதவியால் மேன்மை பெறக் காலம் வாய்க்கும். ஆகையால் ஒவ்வொருவரும் பாடுபட்டால் ஒழியப் பயன்படுவது நிச்சயமில்லை. பெண்களுக்கு கல்வி முதலிய விஷயங்களையும், இனிய சரித்திரங்களையும் விளக்கி எழுதப்படும் புஸ்தகம் பத்திரிகை முதலியவைகளை வரவழைக்கச் சக்தியுள்ளவர்கள் அவ்வொரு விஷயத்தில் செலவாகும் செலவை வேறொரு விஷயத்திலே செட்டு செய்து அவைகளை வரவழைத்து உதவவேண்டும். இவ்விஷயங்களிலே எச்சரிக்கை எடுத்துழைப்பவர்க்கு எத்தனையோ வழிகள் காணப்படும். 'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்' என்பதை எண்ணி அனைவரும் பாடுபடவேண்டுகிறோம்.

பத்திராதிபர்.



219

# பெண்கள் கற்றால் பிள்ளைகட்குப் பேருதவி.

இந்நாட்டுப் பெண்கள் படித்திருப்பரேல் தம் பிள்ளைகள் பாடசாலைகளினின்று வீட்டிற்கு வந்த வுடனே "அம்மா! சீக்கிரம் வாடி! அப்பனே சீக்கிரம் வாடா!" என்றன்போடழைத்து அமுது படைத்து இன்பமாய்ப் பேசி யிங்கிதப்படுத்தி முன்னே ஏற்படுத்திவைத்துப் பாடங்களைப் படிக்கச் செய்வர். அதிகாலையி லருணோதயத்திற்கு முன் அவர்களை யெழுப்பி, நித்திய பாடங்களை நியமமாயோதிரத்தில் அவர்கள் முன் விளக்கேற்றிவைத்துப் பாடங்களைப் படிக்கச் செய்வர். வேளை தவறாது பிள்ளைகள் பள்ளிக்குப் போகவேண்டிய யுணரும்படி யுபதேசிப்பர். கையெழுத்து நன்கு படியும்படி தினந்தோறும் கவலையெற்பாடுகளையுஞ் செய்வர். சில பிள்ளைகளின் எழுத்துக்கள் பிரம்ம லிபிபோற் யுடன் காப்பி யெழுதக் கற்பிப்பர்; வேறு சில பிள்ளைகளின் எழுத்துக்கள் காணற்கரிய வெவ்வேறு ருபமாய் பேதப்பட்டன; தாய்மார்களுக்குத் தக்கபடிப்புணர்தல் தம்மக்கட்குச்சிறுவயதிற்றானே விகாரப்பட்டன. பிள்ளைகள் எழுதும்போதும் படிக்கும்போதும் கையெழுத்து நன்கமையச் செய்வர். ஐரோப்பிய ஸ்திரீகளைப்போன்று பாடங்களுக்கேற்ற வேறுபாரக்கின்றி யிருக்கச்செய்வர்; நம்பிள்ளைகளு மானந்தமாய் நபடி சித்திரப்படங்களைப் பிள்ளைகளுக்குக் காண்பிப்பின் வருணபேதங்கள், புட்ப விநோ கல்வியைக் கற்றுக்கொள்வர். நானாவித வஸ்துக்களின் வருணபேதங்கள், புட்ப விநோ தங்கள், ஆறுகள், மலைகள், நகரத் தோற்றங்கள், கட்டிட விநோதங்கள், தேசக்காக்ஷிப் படங்கள் முதலிய எவற்றையும் பிள்ளைகட்குக் காட்டி அவற்றின் விருத்தாந்தத்தையும் விவகரித்துணர்ந்து அவர்கள் விவேகத்தை விருத்தி செய்து வருதற்கு முதலில் வநிதைகள் கற்றவர்களாயிருத்தல் வேண்டும். பிறரெழுதி யச்சிட்டதை மக்கட்குக் காட்டுவதினும் தாய்மார்களே தத்தம் கைகளாற்றகுந்தபடி கற்பலகை, கடிதம் முதலியவைகளிற் பற்பல வுருவபேதங்களை யெழுதிக்காட்டுவதெவ்வளவு சிறந்த பிரயோஜனமாயிருக்கும்? அரிசி மாவினாலும் பிறவாற்றாலும் இரதம், பிரம்மமுடி முதலிய பற்பல நாமரூப பேதமுள்ள அழகிய கோலங்களை இல்லினும் புறத்தினும் ஆங்காங்கிட்டு, ஆங்கிலேயர் முதல் யாவரும் கண்டு வியந்து களிகூறச் செய்யும் இத்தேச அரிவையர் சிறிது பிரயாசைப்படில் சித்திரத்தொழிலை முற்று முணருவது முடியாத காரியமன்று. பிள்ளைகளின் கல்வியபிவிருத்திக்காகப் பின்னும் பலவிதமாய்ப் பிரயாசைப் படலாம். சௌகரியமுள்ள பெண்கள் தத்தம் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு பூந்தோட்ட முதலிய விடங்களுக்குப் போய் ஆங்குக் காணும் இயற்கையின் வனப்பை அவர்கட்கு இனிது விளங்கச் சொல்லி யூகமுடையராக்கி, யுலாவி வருதலும் உத்தம காரியமாகுமன்றோ? இதனாலவர்கள் அறிவு மென்மேலும் விசாலிக்கு மென்பதற்கையமில்லை. பூர்வமித்தேயத்தில் ரிஷிகள், யோகிகள், முதலியோரின் மனைவிமார்களும் ராஜஸ்திரீகளும் மற்றப் பெண்களும் பூஞ்சோலை முதலிய விடங்களுக்குப் போய்ப் பொழுது போக்கினரென்று புலப்படுவதால் இத்தேசப் பெண்களுக்கிதுவோர் புதுமையான வழக்க மன்றே; இதனாற் பெண்கள் தத்தம் புத்திரர்க்குப் புதிய குணங்களுதிக்கச் செய்யலாம். விளையாடுதல் போலவர்களை விவேகத் திறமைசாலி களாய்ச் செய்தல் விசேஷமன்றோ? தாய்மார்கள் தம் கண் முன்னும் பிறவிடங்களிலும் தம் பிள்ளைகள் விளையாட விடங் கொடுப்பது விசேஷமேயாகும். ஆனாலவர்கள் துஷ்டப் பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுதல் பரம் பொடு விளையாடுவதற்குச் சமானமாதலின், தாய்மார்கள் தம்மக்கள் அற்சன சகவாச

யின்றிச் சற்சன சகவாசஞ் செய்வதற்கு வேண்டிய சர்வ பிரயத்தினங்களையுஞ் செய்தல் வேண்டும். அறியாக் குழந்தைகள் நாய், பூனை முதலியவற்றின் கால்களையும் வால்களையும் காதுகளையும் பிடித்திழுத்தும், பூச்சிகளையும் குருவிகளையும் பிடித்து ஹிம்சித்தும், குதூகலமாய் ஓடி, ஆடி, குதித்து விளையாடுவதினுங்கூட ஓர்வித ஆநந்த வநுபவமும், சுக சந்தோஷமும், தேகாரோக்கியமும், வளர்ச்சியும், பலமும் அவர்கட்குண்டாவது நம்மியற்கை யநுபவமன்றோ? தாய்மார் தகுதியான வராயின் இப்படியாடிப்பாடி தம்பிள்ளைகள் விளையாடுதற் கனுசரணையாயிருப்பது மன்றி, "அப்பா? பூனையின் வாலைப் பிடித்திழுக்காதே;" அம்மா! நாயின் காலை நசுக்காதே; அது கடிக்கும் தடவிக்கொடு, தூங்கவிடும்பார்; என வித்தியாதி விஷயங்களை யன்போடறிவித்துத் தாங்களுமவ் வண்ணமே செய்து விளையாட்டைப் போலவர்களிடத்து ஜீவகாருண்யம், நற்குண நற்செய்கைகள், நாளொரு வண்ணமாய் வளர்ந்தோங்கச் செய்வர். இதையே ஆங்கிலேயர் "கிண்டர் கார்டன் முறை" எனமொழிவர். நம் தாய்மார்கள் தத்தம் சிறு குழந்தைகளின் இயல்புகளை யுற்று நோக்கியாயினு முணர்கின்றனரா? அங்ஙனமுமில்லை. குழந்தைகள் பாயிற் கிடத்திய விடத்திலிருக்கின்றனவா! ஒருபோதுமில்லை. காலையாட்டுவதும் கையையாட்டுவதும் குப்புறவிழுதலும் எங்கும் நகர்வது மாயுமிருக்கின்றன. குழந்தைகள் தூக்கு மஞ்சத்திற் றூங்குஞ்சமயம் போக மற்றச் சமயங்களிலெல்லாம் ஒரு கணப்பொழுதாயினும் சும்மாயிரா? சில மூடப்பெண்கள் தம் குழந்தைகள் கட்டைகள் போல போட்ட விடத்தில் அசையாது விழுந்து கிடப்பின் அதைக் கண்டு வியந்து களிகூர்வர். என்னே! ஈன்றெடுத்தவன்னைகளின் அறியாமை!! பிள்ளைகள் சுறுசுறுப்பாயிருப்பதேயவர்கள் வளர்தற்கடையாளமெனவறியார். குழந்தைகள் ஓடினும், ஆடினும், ஒன்றைத் தொடினும், தவறிவிழினும், உலகமேயழிந்தது போல் உளரியலரியழுது அங்கலாயிப்பர். குழந்தைகள் யாதேனுமோர் விஷயத்தைப் பற்றித் தாய்மார்களைப் பன்முறை வலிந்து கேட்பின் அதற்குத் தாய்மார் தக்க சமாதானஞ் சொல்லார்: சர்ப்பம் போற் சீறிவிழுவர். இங்ஙனம் சீறிவிழுதற்குக்காரணம் ஒன்றைக் காரண காரியத்துடன் சொல்லத் தெரியாமையே யாகும். "பயிர்கள் முளைத்தபோதே புழுவெட்டு" என்று மொழிவது போல தாய்மார்கள் தம் குழந்தைகளை முளையிலிருந்தே முழுச்சோம்பேறிகளாகவும் முழுமூடர்களாகவும் மந்தமதிகளாகவும் வளரச் செய்கின்றனர். இங்ஙனம் வளர்ந்தவ ரெப்படி பின்னர் விருத்தியாவர்? போட்ட விடத்தில் விழுந்து கிடப்பதற்கும், உட்கார வைத்த விடத்தில் அவர்கள் உட்கார்ந்திருப்பதற்கும் தாங்கள் பெற்ற குழந்தைகள் பொம்மைகளா? கல்லுங் கட்டைகளுமா? என்பதைச் சிந்தியார்கள். தாய்மாரின் எண்ணப்படியே இத்தேசமுமிருந்து வருகின்றது. சில குணவதிகள் தமதருமைமக்களைக் கயிற்றால் கட்டிக் கம்பத்திற் பிணைப்பதைக் கண்கூடாகக் கண்டுளேன். என்னே! பெற்றெடுத்தப் பேதைப் பெண்களின் அறியாமையிருந்தவாறு; வியவசாயம் வாணிபம், பற்பல கைத்தொழில் முயற்சி முதலிய பலவும் தற்சமயம் கல்வியயிலும் இத்தேசச் சிறுவர்க்கு முக்கியமாய் வேண்டுமென்றும், அவ்வித முயற்சிகளை அவர்கள் ஆங்கிலேய நாட்டிற்குச் சென்றாவது இந்நாட்டிலாவது வேறு எந்நாட்டிலாவது கற்றுக்கடைத்தேறுதல் வேண்டுமென்றும் இந்நாட்டிலுள்ள மதிநுட்பர்கள் இப்போதிடையறா தெழுதி வருகின்றனர். இவ்வரிய பெரிய குணவிசேடங்கள் ஆங்கிலேய வன்னைகளிடம் கற்றுத்தேறும் சுறுசுறுப்புள்ள குழந்தைகளுக்குண்டாகும் குணமேயன்றி, இத்தேசத்துப் படியாப் பேதைப் பெண்கள் பெற்ற முழுச்சோம்பேறிக் குழந்தைகளுக்குடனே யுண்டாகி-



விடும் குணவிசேஷமன்று; அல்லும் பகலும் அறுபது நாழிகையும் சகுனங்கள் பார்க்கும் நம்மவர்கள் ஒருகாரியத்தை முயற்சிப்பதும் ஊர்விட்டு ஜப்பான் அமெரிக்கா முதலிய விடங்களுக்குப் போவதும் எளிதான காரியமல்ல; கஞ்சை யுண்ணினும் உண்பரே யன்றி தங்கள் ஜாதி, மதம், ஆசாரம் முதலியவைகளில் வேறுபட்டவர் வீட்டில் அஞ்சாது அமுது செய்யார். அன்னியர்களோடு கலந்துறவாடார்கள். இவர்களெவ்விதத்தில் விருத்தியாகப் போகின்றனரோ வறியேன். ஆங்கிலப் பெண்களைப் போல இத்தேசப் பெண்களும் கல்விகற்று அவர்களைப் போலத் தம்பிள்ளைகளுக்குப் போதித்துப் பேணும் பெருங்குண முடையாராதல் வேண்டும். கற்றறிந்த தாய்மாரிடம் தகுந்தபடி கற்பவரே குலோத்தமராவர். இதைத்தான் நம்மவரிலனேகர் பூர்வந்தொட்டு குலங்கோத்திரமென்று பெருமை படுத்தியுளார். "தாயைப் போலப் பிள்ளை நூலைப்போலச் சேலை" என்றும் "தாயைத் தண்ணீர்த் துறையிற் பார்ப்பின், மகளை வீட்டிற் பார்க்க வேண்டியதில்லை" என்றும் சொல்வதின் உண்மையும் உட்பொருளுமிதுவேயாகும். ஒழுக்கமில்லாச் சாதி சமயப்பெருமையிலொன்றுமில்லை. "ஒழுக்கமுயர்குலத்தினன்று" என்னும் ஔவையின் அமுதமொழியைப் பறையன் முதல் பார்ப்பான் பரியந்தம் மனதிற் பதித்தல் வேண்டும். மக்களென்பதற்கு யாவரினும் மிக்கவரென்றும், மைந்தரென்பதற்குத் தாய் தந்தையரைத் தாங்கும் வலிமையுடையாரென்றும் பொருளுரைப்பர். அப்பொருளின்படியே யவர்களைக் கல்வி கேள்விகளிற் சிறக்கச் செய்துவிடுதலன்றோ மிக்கமேன்மையாகும். இத்தேச வாடவர்கள் கல்வியறிவொழுக்கங்களிலும், உத்தியோக வுயர்வுகளிலும், பொதுஜனப்பிரியத்திலும், தேசாபிமானத்திலும் சிறந்திருக்க வேண்டுமாயின், அந்நோக்கம் நிறைவேறுதற்காகவேனும் தன்னலங்கருதியேனும் பெண்களைப் படிப்பிக்கவேண்டும். எப்படிப்பார்க்கினும் பெண் கல்வியின்றி யிந்நாடு இனிப்பிரகாச முறாதென்பது திண்ணம். பெண்மக்கள் வேறொருவர் வீட்டிற்குப் போகவேண்டியவர்களாதலின், அவர்களை உத்தமிகளாக்குவது ஆடவர்க்கே கௌரவமாயும் உத்தமிகள் ஆக்காமையா யிருப்பது ஆடவர்க்கே அகௌரவமாயுமுடியும். கல்லாத பெண்களால் இளமையிற் கற்கப்புகும் சிறுவர்க்குச் சிறிதளவேனும் பயனில்லையன்றோ? பொன்முதலிய லோகங்கள் இளகியிருக்கும்போது இஷ்டமான நகைகளைத் தட்டார்செய்து கொள்ளுதல் போலும்; உழுது இளகியிருக்கும் உழுச்சாலில் உழவர் வேண்டிய விதைகளை விதைத்துக்கொள்ளுதல் போலும்; மக்கள் மனதில் சிறுவயதிற்றானே வேண்டிய வித்தையும் புத்தியும் பதிப்பித்தல் வேண்டுமென்பதைக் கல்லாதவன்னைமார்களறியார்களன்றோ? கல்லாத பெண்கள் மலடிகளாயிருப்பினும் அநேகமாய் நாட்டிற்கு நன்மையுளது. விருந்துக்கழைத்து விஷத்தைக்கொடுப்பார்போலும்; ஏறவிட்டு ஏணியை வாங்குவார்போலும்; உருவிலாதிருந்தமக்களை யுருவாக்கி யுலகத்திற்கொண்டுவந்த மாதாபிதாக்கள் அவர்களுக்குரிய அறிவொழுக்கங்களை விருத்திசெய்வதில் அசட்டைசெய்தல் மிகப்பெரிய பாதகமாகும். "விளையும்பயிர் முளையிற்றெரியு" மென மொழிதல்போலப் பிள்ளைகளின் துற்குணமோ, நற்குணமோ, அவர்களொடிளமையினின்று வளர்ந்தோங்குவதால் பயிரிட்டவன் களைபிடுங்கிப் பயிரை பாதுகாத்தல் போல பிள்ளைகள் புத்தியிலும் துற்குணக்களைகள் கிளைத்தோங்காதபடி மாதாபிதாக்கள் அதி ஜாக்கிரதையாயிருந்து அவர்கள் வாயில் வரும் வார்த்தை நடக்கும் நடவடிக்கைமுதலிய வொவ்வொன்றினையும் ஊன்றிக்கவனித்து அவர்கள் நன்மைசெய்யின் நயமாய்ப் பேசி, தீமைசெய்யின் தண்டித்து, நயமும் பயமுமாக நடத்தல்வேண்டும்,

பிள்ளைகளை அதிகமாய்க்கண்டிப்பதும் தண்டிப்பதும் தகுதியன்று. அவர்களை அதிகக் கண்டனை தண்டனை செய்வதினால் பொய்யும், புரட்டும், பயமும், பெற்றோரெனிற்பெரிய மனவெறுப்பும் பெரும்பான்மையுண்டாகும். பெற்றோர்கள்தாம் பெற்ற பிள்ளைகளைப் பேணாவிடில், "துள்ளித்திரிகின்ற காலத்திலே யென் றுடுக்கடக்கிப் பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே" எனப் பட்டணத்தடிகள் பாடிப்புலம்பியது போற் புத்திரரும் பிற்காலத்திற் புலம்புவர். "தந்தையொடு கல்விபோம்" என்பரெனினும் தந்தை யிருந்தும் தாயினுதவி யின்மையால் கல்லாதபிள்ளைகள் எத்தனைபேர்? "கைப்பொருடன்னின் மெய்ப்பொருள்கல்வி" "கேடில் விழுச்-செல்வங் கல்வி யொருவருக்கு மாடல்ல மற்றயவை" என்பதை யறிந்த ஆடவரேயெனினும் தம்மனைவியினுதவியின்றி மனவாளர் என்ன்காரியம் நடத்துவர். "கல்வி கரையில; கற்பவர் நாள் சில; மெல்ல நினைக்கிற் பிணிபல" என்பதால் பிள்ளைகள் எப்போதும் பயன்படும் கல்விகற்கவும், சிறிதுகற்று அதை விட்டுவிடாமலும் ஒரு சமயம் கற்றதைப் பின்னர் மறக்காமலும், மேன்மேலும் கற்பதிலேயே கருத்தும் கவலையுமாக விருக்க, மாதாவின் துணையே மக்களுக்கு முக்கியமன்றோ? இல்வாழ்க்கைக்கு மக்களைப் பெறுவதைப் போன்றதொன்றில்லை. "பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த, மக்கட்பேறல்ல பிற" என்றபடி யெவர்களும் மக்களைப் பெறுவதே விசேஷமாகும். இவ்வுலகத்திலொருவரும் மக்களைப் பெறாவிடில் பின்னர் மானிடப் பூண்டென்பதே யற்றுப்போம். பின்னர் பிரபஞ்சத்தின் பெருமையாது? "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்றபடி, எத்தேசத்திலும் மக்கள் அன்னையை முன்னறிந்து, அவளுபதேசத்தின் பேரிற் பிதாவைப் பின்னறிந்து கொள்ளுகின்றனராதலின், மக்களுக்கு அன்னையே முன்னறி தெய்வமாவாள். ஆதலின் மக்கள் நல்வழியில் நடப்பதற்குத் தாய்மாரே முதலில் நல்வழியில் நடத்தல் வேண்டும். சிறு பிராயத்தில் மக்களுக்குத் தகப்பனைவிடத் தாய்மாரிடத்தே யதிகப்பற்றும் ஆதரவும் உள்ளன்பு முள்ளமையால், அன்னையின் அறியாமையும் அவிவேகமும் தத்தம் பிள்ளைகளையும் பின்பற்றிப் பாதிக்கின்றது. பிள்ளைகளுக்குத் தாய்மார்கள் போதிப்பினும் போதிக்காவிடினும் அவர்கள் சுகுண துற்குணங்கள் அவரவர் மக்கள் மனத்தில் பதிந்திருந்து அதுவே பிற்காலத்தில் அவரவர்கள் இயற்கைப் பழக்கமாயேற்பட்டுவிடுகின்றதாதலின், மக்களை தத்தம் பின்னவதாரமென்பதிற் பிழையில்லை. ஓர் மரத்தின்கிளைகளைப் போன்று மக்களும் தாய் தந்தையர்க்கிருப்பதால் அவர்களைத்தம் கிளைகளெனச் சொல்கின்றனர். மாதாவின் வயிற்றில் அல்லது தாய் தந்தையரின் வழியில் வந்து முளைப்பதால் மக்களை "முளை", என்றும் மொழிகின்றனர். "தந்தை" என்பதற்குத் தன்னைத் தந்தவனென்றும், "தாய்" என்பதற்குத் தன்னைத் தந்தவளென்றும் பொருள் கூறுவாருமுளர். இதனாலவரவர்கள் சுக துக்கங்கள், நற்குண நற்செய்கைகள் முதலிய எவற்றிற்கும் மாதாபிதாக்களே முதற்காரணமென அநேகமாய் மொழிதல் வேண்டும். பிள்ளைகள் தாய் தந்தையர்களை யெதிர்த்துப் பேசிக் கல்வியிலாது, எவ்வித வேலையுஞ் செய்யாது கெட்டவர்களோடு கூடியாடி யொருநாளைக் கொன்பது சண்டை கொண்டு வருவாராயின் எவர்க்கென்ன சுகிர்தமுண்டு. வாழைமரங்கள் தாமீன்ற கன்றுகளாலேயே தம் வாழ்வையிழந்து மடிவதுபோல, மதியிலா மக்களைப் பெற்ற மாதர் பிதாக்களும் தாமீன்ற மக்களால் மனமிக நொந்து மடிவர். பிள்ளைகட்குக் கல்வியுடன் பற்பல தொழில்களையும் கற்பிப்பின் ஆலமரத்தைத் தாங்கிக்கொள்ளும் ஆலவிழுதுகள்போல, மக்களும் தத்தம் தாய்தந்தையரைத் தாங்கிக்கொள்வர். தாய்மார்களொவ்



வொருவரும் தத்தம் மக்களை தங்கட்குச் சகலபாக்கியமென்று நினைப்பவரா யிருத்தல் வேண்டும். "தாய்" என்னும் பொருப்பு சாமான்ய வேலையன்று; ஒரு அன்னை நூறு உபாத்தியாயர்க் கொப்பாவாள்:—

ஒரு காலத்தில் ஒரூரில் ஒரு பெண்ணிற்கிரண்டு குழந்தைகளிருந்தன. அவள் பரம ஏழையாயினும் தம்பிள்ளைகளின் படிப்புவிஷயத்தில் மிக்க முயற்சியுள்ளவள். அவளை ஒரு பணக்காரி பார்க்கப்போய், சிறிதுநேரமவளோடுரையாடிய பின்னர்த் தம்முடன் கொணர்ந்த ஆபரணப் பெட்டியைத்திறந்தவளுக்குக்காட்டி நின்னிடமித்தகைய நகைகளுண்டோவென வினவ, அதற்கவள் மௌனஞ்சாதித்தும் வந்தவள் வற்புறுத்திக்கேட்டதினால் அவ்வேழைப்பெண் அவளை நோக்கி, சற்றுபொறு; என்நகைகளையுங் காட்டுகின்றேனென நவின்று, பாடசாலைக்குப்போய்ப் படித்துவந்த தம்மருமை மக்களிருவரையும் அழைத்துப்போய் இவர்கள்தான என்னன்பிற்குரிய, நீ யடைதற்கரிய ஆபரணங்களென யறிவித்து அவளை யவமானஞ் செய்தாளென்பதாய்க் கற்பனைக்கதையொன்றுண்டு. இவ்வேழைமாதின் அபிப்பிராயப்படியே நங்கைமார்களின் நல்நகைகள் அவரவர்களின் மங்களகுணமுடைய மக்களேயன்றி மற்றபடிவேறென்னை?

அலர்மேல் மங்கை யம்மை.

# பெண் கல்வி.

(127-ம் பக்கத் தொடர்ச்சி.)

சென்ற மாதப்பத்திரிகையில் பெண்கள் கல்வியைப்பற்றிச் சில விஷயங்களைச் சொன்னோம். இந்தப்பத்திரிகையில் இன்னும் சிலவற்றை எடுத்துக் கூறுவோம்.

உபாத்தியாயனிகளாக ஏற்படுகிறவர்களுடைய மதக்கொள்கையும் மாணாக்கர்களாயிருப்பவர்களுடைய மதமும் ஒன்றாயிருத்தல் அவசியம். துரைத்தனத்தார் இந்நாட்டிலுள்ள மதங்களொன்றிலும் தாம் பிரவேசிப்பதில்லை யென்று ஓர் பிரதிக்ஞை செய்தவர்களாயினும், பெண்கள் பாடசாலைகளுக்கு உபாத்தியாயனிகளும், மேல்விசாரணைக்குள்ளவர்களும் பெரும்பான்மையும் ஹிந்துமத விரோதிகளான கிறிஸ்தவர்களாகவே உள்ளார். ஹிந்துமதத்தினராயுள்ள ஸ்திரீகளிடை உத்தியோகங்களுக்கு லாயக்குள்ளவர்களாயொருவருமின்மையால் இவ்வாறு செய்யநேர்ந்திருக்கிறதென்று ஓர் நியாயம் சொல்லக்கூடியது. "உப்பு இல்லாமையால் பருப்பு வாங்கிப்போ" என்று கடைக்காரர்கள் சொல்வது போலத்தான் இந்த நியாயம் தோற்றுகிறது. ஹிந்துக்கள் தங்கள் மதத்தின் விசுவாசம் குறையாமலிருக்கவேண்டுமென்ற கவலை யுள்ளவர்களாயின் இவ்வாறு செய்யமாட்டார்கள். இருப்புப்பாதை வண்டித்தொடர்களில் வருணாசிரம நீதிகள் புரண்டு புலையர்களும் உயர்குலத்தவரும் தோளோடுதோள் முட்டி வியவஸ்தையின்றி இருப்பதுபோலத்தான் பெண்கள் பாடசாலையினும் நடந்து வருகிறது. இவ்வொழுக்கத்தைச் சீர்திருத்துதல் தேசாபிமானிகளுடைய முதற்கடமை. இதனைத் தனவான்கள் உணர்ந்தாரில்லைபோலும். அவ்வம்மதத்தினருக்கும் பிரத்தியேகமான பாடசாலைகள் இன்றியமையாத காரியம். ஹிந்து மதத்தில் கிஞ்சித்தேனும் அபிமானமில்லாத துரைத்தனத்தார் கையில் பெண்கள் கல்வியை ஒப்புவித்துத் தாம் கவலையற்றிருத்தல் தேசத்திலுள்ளவரிடத்துக்கு

மையாம். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கூறப்பட்டிருக்கின்றது. அன்னையிடத்தில் தெய்வத்தன்மை பாவித்தல் எவ்வாறுண்டாகும். ஹிந்து மதத்தின் கொள்கை இத்தன்மைத்தென்று தாயின் ஸ்தானத்தைப் பெற்றிருக்கிற எந்தப் பெண் அறிந்துளாள்? விஷயம் இன்னதென்று அறியாமலே தன்னினும் வயது முதிர்ந்த ஸ்திரீகள் எதைச் செய்திருக்கிறார்களோ அதையே தான் செய்து வருகிறாளேயன்றி வேறொன்றுமில்லை. புருஷர்கள் விடிந்தது முதல்உறங்கும்வரையில் பொருள்தேடுவதிலேயே நாட்டமுடையவர்களாயிருக்கிறார்கள். தாய்கிரகக்ஷரகுக்ஷி. அவளுக்கு ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் அநேகர் பிறந்து விடுகிறார்கள். இச்சிறுவர் சிறுமியர்களை நல்வழிப்படுத்தி வளர்க்கத் தாயறியாள். பெண்களைப் புத்தியற்றவர்களென்று நாம் சொல்லத் துணிந்தோமில்லை. புத்தியை மலரச்செய்ய முயலாதது ஆடவர்களுடைய குற்றமேயாம். மாதாவானவள் தெய்வமுண்டென்று நம்பினவளாயும், அவ்வகைப்பட்ட அறிவைத் தன்மக்களுக்குப் புகட்ட வல்லவளாயும் தன்னொழுக்கங்குன்றாமற் பாதுகாக்கக் கூடியவளாயுமிருந்தால் மாத்திரம் மக்கள் அவளிடத்தில் தெய்வத்தன்மையை ஏற்றி வணங்குவார்களேயன்றி "அரி" என்ற எழுத்தும் அறியாதவளாயிருப்பின் அவளை எவ்வாறு மக்கள் கனஞ் செய்வார்கள்? இரண்டெழுத்துப் படிக்கத் தெரிந்த ஆண்பிள்ளை தாயைத் திருணமாகவெண்ணுவதேன்? தாயினிடத்திலிருக்கவேண்டிய இலக்ஷணங்கள் இல்லாமையாதலே தான். இக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டுவது தேசத்தாருடைய வேலை. துரைத்தனத்தார்மேல் பாரத்தைப் போடுவது எமக்குச் சரியாகத் தோற்றவில்லை.

பெண்களுக்கும் ஆண்மக்களுக்கும் வாசக புத்தகங்கள் ஒன்றாகவே இக்காலத்திலமர்ந்துள்ளன. இதுவும் ஒருபெரியதவறுதலே. ஹிந்துப்பெண்களுக்குக்கோவேறுகழுதையைப்பற்றியும், நீக்குருவியைப்பற்றியும், சிங்கத்தைப்பற்றியும், கங்காருவைப்பற்றியும் சொல்வதினாலாவதென்ன? மிருகங்களில் பசு, எருமை இரண்டினுடைய சுபாவங்கள் இத்தன்மையவென அறிதல் முதன்மையான காரியம். அவைகளின் உணவும், அவைகளால் கிடைக்கக் கூடிய நயமும் இன்னவின்னதென்று அறிதலல்லவோ நடபடிக்கைக்கு உதவியாக இருக்கும். தசாம்சபின்னத்தினாலும், ஆஸ்திரேலியா நாட்டின் பிரிவுகளும் எல்லைகளும், மத்திய ஆப்பிரிக்காவின் துரைத்தன முறையும் கற்பிப்பதனால் நயமுண்டோ? தற்காலத்தில் பெண்கள் படிக்கும் விஷயங்களும் உபயோகிக்கும் புத்தகங்களும் கவைக்குதவாதன வென்றே எமது கொள்கை. மாற்றிச் செய்ய வேண்டுவதியாது?

வாசகபுத்தகங்கள் எல்லாவற்றிலும் உத்தம ஸ்திரீகளின் சரித்திரம் நிறைந்திருத்தல் வேண்டும். இந்தியாவிலுள்ளவருடைய சரித்திரமாத்திரம் போதாது. ஆங்கிலேயச் சீமாட்டிகளின் சரித்திரமும் இருத்தல் வேண்டும். ஒவ்வோர் வாசக புஸ்தகத்திலும் ஹிந்து மதக்கொள்கைகள் சிறுமியர் புத்திக்கு எட்டக் கூடிய அளவு கற்பிக்கப் பாடங்கள் இருத்தல் வேண்டும்.

கணிதத்தில் தெரியவேண்டியதெல்லாம் நமது தேசத்து எண் சுவடியும் கூட்டல் கழித்தல் பெருக்கல் வகுத்தல் மட்டும். கடையிற் போய் சாமான்கள் வாங்கினால் அவற்றின் கிரயம் சரியாகத் தெரிந்தும் வீட்டுச்செலவிற்குப் புருஷன் கொடுக்கும் ஜீவனத்தை ஒழுங்காய்ச்செலவிட்டு அதற்குக் கணக்குவைக்கவும் தெரிந்தாலே விசேஷம்.

பாகசாஸ்திரமும், பதார்த்தங்களின் குணமும் பள்ளிக்கூடத்திலேயே பெண்கள் கற்றுக்கற்றல் வேண்டும். பார்ப்பனிப்பெண்கள் தங்கள் வீட்டுப்பாகத்தைப்பற்றி மு



மகம்மதியரிடத்திலும், கிறிஸ்தவர்களிடத்திலும் எவ்வாறறியக்கூடும். பத்துப்பேருக்குச் சமையல் செய்யவேண்டுமாயின் பதார்த்த நஷ்டமில்லாமலும் குறைவில்லாமலுமிருக்க ஒவ்வோர் சாமானிலும் எவ்வளவு உபயோகிக்கவேண்டுமென்பது அறிந்திருந்தால் வோகுடித்தனம் நன்றாய் முன்னுக்குவரும். ஆங்கிலேய துரைசானிகள்போல சமையலுக்கும் குழந்தைகளுக்குப் பாலூட்டவும் காற்றில் கொண்டுலாத்தவும் பிரத்தியேகமான ஆட்களை நியமித்திருப்பதுபோல நமது நாட்டாரும் செய்யப்போதுமான ஜீவனம் நமக்குண்டாவது சொற்பனத்திலுமில்லையென்றே நம்பலாம். வான்கோழி தன்னை மயிலாகப்பாவிப்பதுபோல் நம்மவர்களுள் சிலர் துரைசானிகளாக வழங்கப்பார்த்துத் தம்புருஷர்களை எண்ணிலாக்கஷ்டங்களுக்குட்படுத்தி வருகின்றார்கள். இது நிஷித்தமான காரியம். தமிழ்ப்பெண்கள் தெலுங்கரைப்போலாடை யுடுத்தலும், ஐரோப்பியரைப்போலாடைவிரும்புதலும் இழிவான காரியமே. ஐரோப்பிய சீமாட்டிகள் இந்நாட்டிலேயே குடிகொண்டவர்களாயினும் தமது ஆசாரங்களைக் கைவிடாமலிருத்தலை நாம் நன்றாயறிந்திருந்தும் நாம்மாத்திரம் சுய ஆசாரத்தைத் துறப்பதில் ஆவலுள்ளவர்களாயிருத்தல் வெட்கக்கேடு.

பெண்கள் பாடசாலைகளில் தையல் வேலைக்கு அதிககாலம் செலவிடப்படுகிறது. நமது நாட்டார் இரவிக்கை ஒன்றைத் தவிர்த்துத் தைத்துப்போட்டுக்கொள்ளும் ஆடை எவ்வளவு? அஃது கிழிந்தால் அதை ஒழுங்காய் நூலோட்டித்தைக்கத் தெரிந்திருந்தால் போதாதா? தையலில் செல்லுங்காலத்தை வேறு நல்ல விஷயங்களில் போக்கலாமல்லவா?

பூகோளம், சரித்திரம் முதலானவைகளில் வீண்காலம் போக்கலாகாது. அந்தப் பாடங்கட்கு ஏற்பட்ட காலங்களில் இராமாயணம், பாரதம், பாகவதபுராணம் முதலானவைகளைக் கற்பித்தால் குல தெய்வங்களிடத்தில் விசுவாசம் உற்பத்தியாகித் தடித்துத் தம்மக்களுக்கும் நீதி மார்க்கங்களைக் கற்பிக்க ஏது உண்டாகுமன்றோ?

இந்நாட்டில் தாய்ப்பருவம் மற்றெந்த நாட்டினும் சீக்கிரமாகப் பெண்களுக்கு வருவதனால் கர்ப்பகாலத்திலும் குழந்தை பிறந்த பிற்பாடும் தாயானவள் தன் சரீரத்தையும் குழந்தையின் சரீரத்தையும் வியாதி வராமல் பாதுகாத்துக் கொள்வதற்குச் செய்ய வேண்டிய முறைகளைப் போதிப்பதல்லவோ கல்விச் சாலையின் முக்கிய தருமம். சிறு நோய்களுக்கு வைத்தியர்களைத் தேடாமல் தாமே வைத்தியம் சிறிது தெரிந்திருத்தல் எவ்வளவு நன்மை பயக்கும். ஹிந்துப் பெண்கள் பதினான்கு வயதிலேயே பிரஸவித்துக் குழந்தைகளின் இரப்பைகளின் அமைப்பு அறியாமல் அரிசிச்சோற்றை அளவறியாமலூட்டி மாந்தம் உண்டாக்கி விரோசனத்திற்கு விளக்கு நெய்யைப் போட்டி உயிரை இழக்கச் செய்கிறார்களன்றோ?

ஆங்கிலேயருடைய குழந்தைகள் கொழுத்திருக்க, நம்மவரின் சிசுக்கள் தலைசிறுத்து, வயிறுபெருத்துக்கால்சூம்பி உடம்பு மஞ்சளித்துப்போவதேன்? உடற்கூற்றின் நிலைமை அறியாததே இதற்குக் காரணமாம். பாடசாலைகளில் பெண்களுக்கு உடற்கூற்றைப் பிரத்தியக்ஷப் பிரமாணமாய்க் கற்பித்தல் வேண்டும்.

காலையிலும் மாலையிலும் பாடம் ஆரம்பித்தற்கு முன்னமேயே திருவாய்மொழி, தேவாரம், இவைபோன்றவைகளை ஓதியானபிறகு பாடங்கள் கற்க ஆரம்பித்தல் வேண்டும்.

பள்ளிக்கூடங்களில் சங்கீதப்பயிற்சியும் உண்டாக்குவிக்கிறார்களாம். ஹிந்துக்களுடைய சங்கீதசாஸ்திரம் கடல் போன்றது. அதன் வாசனையும் இல்லாத பலர் சொல்லிக் கொடுத்திருக்கிற பாட்டுக்களைச் சிறுமியர்பாடிக் காதைப் புண்படுத்துகிறார்கள். இதில் ஆங்கிலேயர் ருசி அடையலாம். இங்கிலீஷ் நோட்டுக்களைத் தமிழ்ச் சொற்களால் பாடுவதினும் கர்ணகடூரம் வேறியாதுளது. ஆரியசங்கீதத்தின் அவதார புருஷர்களென்னப்பட்ட பிரம்மஸ்ரீ தியாகய்யரவர்கள், தீக்ஷிதரவர்கள், கோபாலகிருஷ்ண பாரதிகள் இவர்களுடைய சாகித்தியங்களையும், அருணாசல கவிராயர்களுடைய இராமநாடகம் பாட்டுக்களையும் நமது நாட்டுச் சிறுமியர்களுக்குச் சொல்லிவைத்தால் ஆரிய ஒழுக்கத்திற்குப் பலமுண்டாவதுடன் ஹிந்துக்களுடைய செவிக்கும் இன்பம் ஜனிக்கும்படி செய்யலாகுமே. இவைகளையெல்லாம பரியாலோசனை செய்யாமல் சம்பளமில்லாத படிப்பு வருகின்றதே என்று மனங்களித்துத் தெய்வமாக மக்கள் கொண்டாடவேண்டிய மாதரவை அந்நிய பிரஷ்டைகளாக்கப் பார்க்கிறது நமது நாட்டாருடைய பெரும்பிழை.

தற்காலத்தில் ஸ்திரீகளை உபாத்திமைத் தொழிலை நடத்துவதற்குத் தக்க படிப்பும் ஒழுக்கமும் போதாதவர்களாயிருத்தல் பற்றிப் புருஷர்களே அந்த வேலையைச் செய்தல் வேண்டும். பாடசாலை உத்தியோகத்தில் நம்மவர்கள் பலவாண்டுகள் வேலை செய்து உபகாரத்திரவியம் பெற்று வீட்டிற் சும்மா காலம் போக்கிக் கொண்டும் வம்பு பேசிக் கொண்டும் பணம் வட்டிக்கிட்டுக் கொண்டும் இருப்பவர்கள் பெண்கள் பாடசாலைகளில் உபாத்தியாயர் வேலையை ஏற்றுப் பெண்மக்களைச் சிறந்தவர்களாக ஆக்க முயலவேண்டியது அவசியம். நாட்டிற்குப் பெருமை பெண்கள் போட்டிருக்கும் ஆபரணங்களாலும் உடுத்திருக்கும் ஆடைகளாலுமல்ல. புருஷர்களும் ஸ்திரீகளும் ஒழுக்கத்தாலுயர்ந்த நாடெதுவோ அதுவே உலகத்தாரால் மதிக்கப்பெறும். குடும்பங்களில் மவுட்டியத்தினாலுண்டாகும் கலகங்கள் குறையும். தெய்வபக்தி யிருக்குமாயின் தரும சிந்தையும் கூடவே இருக்கும். தரும சிந்தையுள்ள இடத்தில் நசுவரமான இன்பநுகர்ச்சியில் புத்திசெல்லாது. குடித்தனம் நடத்துவதற்கு ஜீவனம் தேடுவதில் முயன்றிருக்கிற புருஷனுடைய சிரமத்தையும் அவன் மனைவி நன்றாயுணர்ந்து வரவுக்குத் தக்க செலவுசெய்துகொண்டு இக்காலத்தில் அவசியமாகத் தோற்றுகிற ஆசாரச் சீர்திருத்தங்களையும் எளிதிற் செய்ய ஸ்திரீகளின் உடன் பாட்டையும் பெறலாகும்.

கே. வெங்கிடராமய்யர், பி. ஏ.

# HAMLET.

## ஹாம்லெட்.

(134-ம் பக்கத்தொடர்ச்சி.)

அரசன் :—காமவிடாயுள்ளவனாகத் தோற்றவில்லை; அவன் பேச்சு ஏகதேசம் பொருந்தாததாக இருப்பினும், உன்மத்தர்பேச்சைப்போலிருக்கவில்லை. அவனுடைய அந்தரங்கத்தில் ஏதோ இருந்து அவனை வருத்துகின்றது. இங்கிலாண்டிலிருந்து நமக்கு வராமலிருக்கிற கப்பத்தை வாங்க ஹாம்லெட் அவ்வூர்க்குத் துரையாய்ப் போதல் வே



ண்டும். அவனை தன்னினைவு தெரியாமல் மயங்குவதை வேறு ஊரும் கடலும் ஒருகால் மாற்றி அவன் துக்கத்தை ஓட்டி விடலாம். உமது அபிப்பிராயம் என்ன?

பொலோ :—தாங்கள் சொல்வதே நலம்; அவனுக்குச் சித்தப்பிரமை யுண்டானதற்குக் காரணம் மாத்திரம் காதல் பரிபூரணமடையாததுதான் என்று எனக்குத் தோன்றுகின்றது.

என்ன சமாசாரம், ஒப்பிலியா, நீயும் ஹாம்லெட் இளவரசனும் பேசினதைச் சொல்லுதல் வேண்டுவதில்லை. நாங்கள் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தோம்.

மகாராஜாவே, தங்களிஷ்டப்படி ஹாம்லெட்டை இங்கிலாண்டிற்கு அனுப்பலாம். ஆயினும் ஒன்று சொல்வேன். அவன் தாயைக்கொண்டு அவன்வருத்தத்திற்குக் காரணத்தை அறிதல் அவசியம். அவள் கண்டிக்கவும் வேண்டும். தங்களுக்கும் சம்மதமாயின் அவ்விருவரும் பேசுவது எனக்கு முற்றிலும் கேட்கும்படியான இடத்திலிருந்து கேட்கிறேன். அவளுக்கும் புலப்படாவிடின் இங்கிலாண்டிற்கு அனுப்பினாலும் சரி, வேறெங்காவது சிறையிலடைப்பித்தாலும் சரி.

அரசன் :—நீ சொல்வது சரி: உயர்ந்த பதவிபெற்றவரிடத்துச் சித்தப்பிரமையைக் கண்டால் அதனை உதாசனித்தல் தகுதியன்று.

## மூன்றாம் அங்கம்.

### இரண்டாங் களம்.

ஹாம் லெட்டும் நாடகமாடிகளும் பிரவேசம்.

ஹாம் :—சொல்ல வேண்டியவற்றை நாவினால் வேகமாய் உச்சரித்தல் வேண்டும். நாடகமாடிகளில் சிலர் குழறிப்பேசுவது போல் நீயும் பேசுவாயாயின், உனக்கும் பறையறைவிப்பவனுக்கும் பேதமிருக்காது. அம்பம்போல் கையை மேலும் கீழும் ஆட்டாதே; அபிநயங்களை மெல்ல மெல்லச் செய்தல் வேண்டும். மனம்பரவசமாயிருக்கும் பொழுதும் தன் நினைவு குன்றாமல் சாந்தமாயிருத்தல் வேண்டும். கீழ் மக்களாயிருப்பவர்களுக்குப் பரவச அபிநயம் பிரியமாயிருக்கலாம். எதற்கு அவை நேத்திரகரோமாயிருக்கின்றன. வாய்ப்பட்டிவேஷம் போட்டவனும் உரத்துப் பேசினால், அவனைச் சாட்டை கொண்டடிக்க எனக்குப் பிரியம். அவ்வகையான நடப்டிக்கைகளை நாடகசாலையில் கைவிடவேண்டும்.

நாடகமாடி :—தங்களிஷ்டப்படி செய்கிறேன், ஸ்வாமி.

ஹாம் :—மிகவுஞ்சாந்தமாயுமிருத்தல் கூடாது; உன் புத்தியே உனக்கு உபாத்தியாயனாயிருத்தல் வேண்டும். வாக்கும் அபிநயமும் பரஸ்பரப் பொருத்த முடையவைகளா யிருத்தல்வேண்டும். அதிலும் இயற்கைக்கு விரோதம் வராமலிருக்கவேண்டும். நாடகமென்பதே உலக இயற்கையின் பிரதி பிம்பத்தைக் காட்டுகிற கண்ணாடியாயிருத்தலால், சகஜ தர்மத்திற்கு விரோதம் ஒன்றும் தக்கதல்ல. உத்தம குணங்களின் நிஜரூபத்தை விரித்து, அவற்றின் போலியை மறைத்தும், காலஸ்வபாவத்தைக காட்டியும் நாடகம் ஆடப்படவேண்டியது. சான்றோர் மதிப்பே மேன்மை ஆனது பற்றி, இழிந்தோருக்

குக் களிப்புண்டாக்கும் உபாயங்களைக் கைவிட்டுப் பெரியோரால் நன்கு மதிக்கப்படுவதையே கைக்கொள்ளவேண்டும். நாடக சாலையில் வந்து அபிநய சாஸ்திரம் இஞ்சித்தேனும் தெரியாமல் காட்டுமிருகாண்டிகள் போலக் கத்தும் சிலரை நான் கேட்டபோது கடவுள் அவர்களை மனிதராக எதற்குப்படைத்தாரென்று எண்ணுகின்றேன். இவ்வாறு மனிதரைப்போல அபிநயிக்கத்தெரியாமல் நாடகமாடிகளில் சிலர் இருக்கிறார்கள்.

நாடகமாடி:—இக்குறைகளை யெல்லாம் நிவர்த்தித்துப்போட்டிருக்கிறோம், சுவாமி;

ஹாம்:—கெட்ட வாடிக்கைகளை முற்றிலும் கைவிடுங்கள்; நாடக பாத்திரன் ஒவ்வொருவனும் அவனவனுக்குரித்தான பேச்சுக்களைமட்டில் பேசவேண்டும். நகைக்காமலிருக்கும் சிலரை நகைக்கும்படி செய்தற்கென்று சில நாடக பாத்திரங்கள் தாமே பல்லைக் காட்டுவதைக் கண்ணுற்றிருக்கின்றேன். இத்தகைய நடபடிக்கைகள் வெறுப்பை யுண்டாக்கும்.

ஹொரேஷியோ பிரவேசம்.

ஹாஹா, ஹொரேஷியோவா வருகின்றது.

ஹொர:—தங்கள் தாஸனாகிய நான் தான்.

ஹாம்:—ஹொரேஷியோ, என் மனதிற்கேற்ற தோழன் உன்னைப்போல் வேறு ஒருவரையும் காணேன்.

ஹொர:—பிரபுவே.

ஹாம்:—உன்னை நான் முகஸ்துதி பண்ணுவதாக நீ எண்ணலாகாது; உணவும் உடையும் பெறற்கு உத்தமகுணங்களைத் தவிர வேறொன்று மில்லாதவனாகிய உன்னை முகஸ்துதி பண்ணுவதால் நான் அடையக்கூடிய பெரும்பயன் யாது? ஏழைகளைத் தோத்திரம் பண்ணுவதாலாவதென்ன? இச்சகம்பாடிகள் பணமுடையவர்களைப் புகழ்ந்து அவர்கள் காலில் வீழ்ந்து உபசரிக்கட்டும்; பண ஆசையுள்ளவர்கள் செய்யும் காரியம் அது. நான் சொல்வது உன் காதிற்படுகின்றதா? தோழனைத் தெரிந்தெடுப்பதில் எனக்குச் சுய அதிகாரமுள்ளதால் உன்னையே உயிர்த் தோழனாகத் தெரிந்தெடுத்திருக்கின்றேன். "மெய்த்திருவந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளத்தறவோன்" நீ லாப நஷ்டங்களை ஒரேதரமாய் எண்ணினை. செல்வத்தின் பெருக்கினாலும், தரித்திரத்தின் வருகையினாலும் சித்தங் கலங்காதவரே உத்தம புருஷர். அத்தகையருக்கு நான் கோவில் கட்டிக் கும்பிடக் காத்திருக்கின்றேன். நீ தான் அப்படிப்பட்டவன் என்று எண்ணி உன்னை என் கண்மணியாக வைத்திருக்கின்றேன். இது நிற்க,

அரசன் சந்நிதியில் இன்றிரவு ஓர் நாடகம் ஆடப்படும்; அந்த நாடகத்தில் ஓர் களம் என் பிதாவைக் கொன்றதை ஒத்த கதை ஒன்று வருகிறது. நாடகம் நடக்கும்போழ்து என சிற்றப்பனைக் கவனமாய்ப்பார்; நாடகபாத்திரனுடைய சொற்களைக் கேட்கும்போது என் சிற்றப்பன் ஒளித்துச் செய்த குற்றம் வெளிப்படாவிடின், என்னிடத்தில் வந்து பேசின பிசாசின் சொற்களில் எள்ளளவேனும் நம்பிக்கை வைத்தல் சரியன்று; நானும் தப்பெண்ணம் கொண்டவனாவேன். சிற்றப்பன்மேல் நோக்கத்தை வை; நானும் அவனைக் கண் கொட்டாமற் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நாடகமான பிறகு இருவரும் கலந்து பேசுவோம்.



ஹொரே:—அப்படியே ஆகட்டும் பிரபுவே: உங்கள் சிற்றப்பன் அந்தரங்கத்தை வெளியிடுங்கால் நான் பார்க்கவில்லை யென்கின்ற குற்றம் என்னிடத்து வருமாயின் நான் அதற்கு உத்தரவாதம் செய்கின்றேன்.

ஹாம்:—அவர்கள் நாடகம்பார்க்கவருகிறார்கள்; நான் ஒன்றும் பேசுதல் கூடாது; நீ ஓரிடத்தில் போய் உட்கார்.

—அரசன், அரசி, போலோனியஸ், ஒப்பிலியா, ரோஸேன், கில்டேன், உத்தியோகஸ்தர்கள், தீவர்த்தியாட்கள் பிரவேசம்.

அரசன்:—ஹாம்லெட், குழந்தாய் சௌக்கியமா?

ஹாம்:—ஒரு குறைவுமில்லை; பச்சோந்தியின் ஆகாரம் எனக்குப் போதுமான அளவு அகப்படுகின்றது. வாதாசனஞ் செய்துகொண்டிருக்கிறேன். நலமடித்த சேவலுக்கு அவ்வளவு உணவு போதுதலில்லை.

அரசன்:—நான்கேட்டதொன்று, நீ சொல்வதொன்றாயிருக்கிறதடா?

ஹாம்:—நான் ஒன்றுஞ் சொல்லவில்லை.

ரோஸென்:—நாடகமாடிகள் தங்கள் சாவகாசம் எப்பொழுதென்று கேட்கிறார்கள்.

அரசி:—அருமைமகனே ஹாம்லெட், என்பக்கத்தில் வந்துட்கார்.

ஹாம்:—(ஒப்பிலியாவின் பக்கத்தில் உட்கார்ந்து) என்மனத்திற்கு திருப்தியுண்டாக்குமிடம் இங்கிருக்கிறது அம்மா.

போலோ [அரசனை நோக்கி]:—அதைப் பார்த்தீர்களா, நான் சொன்னது சரியாய்ப் போய்விட்டது.

ஒப்பிலியா [ஹாம்லெட்டைப் பார்த்து]:—தாங்கள் இன்று உற்சாகமாயிருக்கிறீர்கள்.

ஹாம்:—நானா?

ஒப்பிலி:—ஆம் பிரபுவே.

ஹாம்:—க்ஷமாஷ் செய்கிறேன், பெண்ணே! உற்சாகமில்லாமலிருப்பதேதற்கு? என் பிதா இறந்து இன்னும் இரண்டு மாதம் ஆகவில்லையாயினும், என் தாயார் முகக்களிப்பைப்பார்.

ஒப்பிலி:—நாலு மாதம் ஆய்விட்டது, பிரபுவே.

ஹாம்:—அவ்வளவு காலம் ஆய்விட்டதா? ஆனால் இனி நான் துக்கப்படுதலை விட்டுக் கலியாண உடுப்புகள் போட்டுக் கொள்கிறேன். இறந்து இரண்டு மாதமாகியும் மறக்காமலிருத்தல் சரியன்று! கணவான் ஒருவன் இறந்தால் ஆறு மாதகாலமாவது அவனை ஜனங்கள் மறக்கார் போலும்! உலகத்தார் அவனை மறக்கலாகாதென்றால் அவன் கோவில் கட்டிவைத்தல் வேண்டும்.

வாத்தியம்:—கைவரிசை காட்டுவோர் பிரவேசம்.

[அன்னியோன்னியமாயிருக்கிற ஒரு அரசனும் அவன் மனைவியும் வருதல்; அரசன் அரசியையும் அரசி அரசனையும் தழுவுகிறார்கள்; அரசி முழந்தாளிட்டு அரசனிடத்தின் தனக்கிருக்கும் காதல் மிகுதியை அபிநயிக்கிறாள்; அரசன் அரசிமேல் சாய்ந்து கொள்ளுகின்றான், அரசன் நித்திரை போனவுடன் அவனைப் புற்றரையில் விட்டு அரசி

போய்விடுகிறார்கள். சிறிது நேரமான பிறகு அன்னியன் ஒருவன் வந்து அரசன் மகுடத்தைக் கையிலெடுத்து முத்தங் கொடுத்து அவன் காதில் விஷத்தை ஊற்றிவிட்டுப் போகிறான். அரசி திரும்பவும் வருகிறாள். அரசன் இறந்து கிடத்தலைக் கண்டு புலம்புகின்றாள். அரசன் காதில் விஷத்தை ஊற்றினவன் இரண்டு மூன்று பேர்களைக் கூட இட்டுக் கொண்டு துக்கம் விசாரிக்க வருகிறான். இறந்த அரசன் பிரேதம் எடுத்துப் போய் விடப்படுகிறது. விஷம் வைத்துக் கொன்றவன் அரசிக்கு நன்கொடைகள் அளித்துத் தன்னை மணம் புரியக் கேட்கிறான். சற்று நேரம் இஷ்டமில்லாதவள் போல நடித்து முடிவில் அந்தக் கொலைபாதகனைக் கணவனாக்கிக் கொள்கின்றாள்.]

ஒப்பிலியா:—இந்தக்கைவரிசை காட்டலுக்குப் பொருளென்ன? பிரபுவே,

ஹாம்:—அது ஒரு சில்லரைக்கிருத்திரமம்.

ஒப்பிலி:—கைவரிசை நாடகத்தின் கதைச்சுருக்கத்தை விளக்குகின்றது போலும்.

## சூத்திரதார் பிரவேசம்.

ஹாம்:—இதோ வருகின்றானே, இவன் சொல்லுவான்.

சூத்திர:—நாங்கள் இன்று ஆட இருக்கும் சோக நாடகத்தைத் தாங்கள் பொறுமையாய்க்கேட்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஹாம்:—இது பாயிரமா, கீதிச்சூத்திரமா?

ஒப்பிலி:—வெகு சுருக்கமாயிருக்கின்றது.

ஹாம்:—பெண்கள் காதலைப்போல.

## இராஜவேஷம், இராணிவேஷம் போட்டவர்கள் பிரவேசம்.

வேஷராஜா (வேஷ இராணியைப்பார்த்து):—என்பிராணநாயகி, உன்னை நான் மணம்புரிந்து முப்பது வருஷமாகின்றது.

வேஷராணி:—எனக்கு உம்மிடத்திலுள்ள காதல் எத்தனை வருஷமானாலுங் குன்றாது. தங்களுக்கு உடம்பு சௌக்கியமில்லை யென்று எனக்குத்தெரிவதால் நான் வருந்துகின்றேன். தங்கள் பிராணனுக்கு பயம் வந்துவிடுமோ? என்செய்வேன்? ஆயினும் தாங்கள் அதைரியப்படுதல் வேண்டாம்.

வேஷராஜா:—பிரியே உன்னைப் பிரியுங்காலம் வந்துவிட்டது. என் உடம்பில் திராணியே இல்லை, நான் தேகவியோக மடைந்த பிறகு நீ யாவராலும் பூசிக்கப்பட்டு ஜீவதசையோடிரு; விரும்பின் உனக்குப் புருஷனாக——

வேஷராணி:—பிராணநாதா, என்னவார்த்தைசொன்னீர், மேல் பேசுதல்வேண்டாம். தங்களிடத்தில் நான் வைத்த அன்பெல்லாம் பொய்யாமன்றோ? நான் புனர்விவாகம் செய்துகொள்வேனாயின் நாசமடைவேன். முதற் புருஷனைக் கொன்றவர்களே இரண்டாம் புருஷனைக் கலியாணஞ் செய்துகொள்ளுகிறார்கள்.

ஹாம்:—(தனக்குள்ளே) வேப்பங்காயாகக் கசக்கிறதுபோலும்.

வேஷராஜா:—(இராணியைப்பார்த்து) உன் அந்தரங்கத்தையே நீ சொல்வதாக வைத்துக்கொள்வோம். சங்கற்பித்தபடி நாம் செய்வது அரிது. சங்கடகாலங்களில் செய்த பிரதிக்கினைகளைச் சங்கடம் நீங்கின உடனே மறந்துவிடுகிறோம். அவ்வாறே இப்



பொழுது வேறுபுருஷனைக்கலியாணஞ்செய்து கொள்வதில்லையென் றெண்ணுகிறாய்;
முதற்புருஷன் மரித்த நிமிஷமே இந்த எண்ணம் உன்னைவிட்டு நீங்கும்.

வேஷ இராணி:—ஒரு கைம்பெண்ணானபின் மறுபடியும் நான் மணம்புரிவேனாயின், இவ்வுலகில் எனக்கு உண்ணச் சோறு கிட்டாமலும், கதிரவன் வெளிச்சத்தைத் தாராமலும், மனதிற்கு உற்சாகமில்லாமலும், இம்மை மறுமையில சுகலேசமில்லாமலும் போகட்டும்.

ஹாம்:—இப்பொழுதே வாக்கினுக்கு விரோதமாக நடப்பாளாயின்?

வேஷ ராஜா:—அகோரப் பிரமாணம் செய்திருக்கிறாய், பிரியே, சற்றுநேரம் என்னிடத்திருந்து விலகி இருப்பாயாக. எனக்கு மயக்கமாய் வருகிறபடியால் சற்றுத் தூங்குகின்றேன். [தூங்குகிறான்.]

வேஷ இராணி:—உமக்கு நல்ல தூக்கம் வருவதாக உமக்கும் எனக்கு முள்ள அன்பு கெடாமலிருப்பதாக. [போய்விடுகின்றாள்.]

ஹாம்:—[தன் தாயை நோக்கி] இந்த நாடகம் தங்களுக்குப் பிரியமாயிருக்கின்றதா, அம்மா?

அரசி:—அந்தப் பெண் மிதமிஞ்சிப் பேசுகின்றாள்.

ஹாம்:—அதனாலென்ன? சொன்னபடியே செய்வாள்.

அரசன்:—கதையின வரலாற்றைக் கேட்டாயன்றோ? அதில் குற்றமில்லையா?

ஹாம்:—வேடிக்கையாகத்தானே விஷத்தை வார்க்கின்றார்கள்; அதினால் பாதகம் ஒன்றுமில்லை.

அரசன்:—இந்த நாடகத்திற்குப் பெயரென்ன?

ஹாம்:—எலிப்பொறி என்று இலக்கணையாய்ச் சொல்வது. வியென்னா என்னும் நகரத்தில் நடந்த ஓர் கொலையை இந்த நாடகம் ரூபிக்கின்றது. அரசன் பெயர் கான்ஜாகோ, அவன் மனைவியின் பெயர் பாபதிஸ்தா; வரவரத்தாங்கள்காணலாம். வேலை மட்டில்தீயதுதான். அதனாலென்ன? அந்தரங்க சுத்தியாயிருக்கிற உங்களுக்கும் எங்களுக்கும் இந்நாடகத்தினால் வரக்கூடியகேடு ஒன்றுமில்லையே. புண்ணுள்ளகுதிரை துடிக்கட்டும்; நமக்கு ஒருவருத்தமுமுண்டாவதில்லை.

## லூஷியானஸ் பிரவேசம்.

இதோ வருகிறவன் அரசன் சகோதரனுடைய மகன்.

ஒப்பிலி:—நாடகபாத்திரங்கள் ஒவ்வொருவரையும் தாங்கள் அறிவீர்கள் போலும், பிரபுவே.

ஹாம்:—உன்னை ஆட்டுவிப்பவனை மாத்திரம் நான் பார்க்கக்கூடுமாயின் உன்போலியன்பையும் உன்காரியங்களையும் நன்றாய்விளக்கிக் காட்டுவேன்.

அடா, கொலைகாரா, உன் தொழிலைச்செய்—முகத்தைக் கோணாதே.

லூஷியானஸ்:—மனம் கல்லாயிருக்கிறது; கையும் மருந்தும், காலமும், கொலைக்கு ஒத்தனவாயிருக்கின்றன. பற்பல சரக்குகளிலிருந்து இறக்கின இந்த விஷம் பட்டால் உயிர் உடனே போய்விடும். [விஷத்தைத் தூங்கும் அரசன் காதில் வார்க்கிறான்.]

ஹாம்:—அரசுரிமையை அடைவதற்கு விஷமிடுகிறான். அரசன் பெயர் கான்ஜாகோ; இந்தக் கதை இத்தாலியா பாஷையில் இன்னும் வழங்குகின்றது. சற்றுப்பொறுத்தாயானால் கொலையாளி கான்ஜாகோவின் மனைவியை மணம்புரிவதைப் பார்க்கலாம்.

ஒப்பிலி:—நமது அரசன் எழுநிஇருர்.

ஹாம்:—எங்காவது நெருப்பு பிடித்து விட்டது என்னும் பயந்தாலோ?

அரசி:—[கணவனைப் பார்த்து] உடம்பு என்ன, பிராணநாதா.

பொலோ:—நடகததை நிறுத்துங்கள்.

அரசன்:—வெளிச்சம் கொண்டுவா.

அனைவரும்:—வெளிச்சம், வெளிச்சம், வெளிச்சம் [ஹாம்லெட், ஹொரேஷியோ இருவரைத் தவிர எல்லாரும் போய்விடுகிறார்கள்.]

—•—•—

# அரிச்சந்திரன்.

## 4-ம் அத்தியாயம்.

(136-ம் பக்கத் தொடர்ச்சி.)

சந்திரமதியும் தேவதாசனும் வேதியன் வீட்டை அடைந்து, அவனும் அவனது மனைவியும் இட்ட கட்டளைகளை மிகவணக்கத்துடன் செய்துவந்தார்கள். விலைகொண்ட யஜமானக்கிழவேதியனே மகா கொடியன்; பொல்லாதவன்; அன்பறியாதவன்; இவன் மனைவியோ ஒரு குருடி; புருஷனினும் கொடியபாவி.

இவர்கள் படுத்திவந்த தொந்தரைகளைப் பொறுத்துக்கொண்டு சந்திரமதி தேவி செய்து வந்த பணிகளை நினைக்கின் மனம் நையாதவர் எவரும் இலர். பொழுதுவிடியு முன்னே ஒரு சாமத்துக்கு முன் எழுந்து இல்லத்தில் செய்யவேண்டிய வேலைகளைச் செய்து இரவிலே மிகவும் பொழுது போன பிறகு பேட்ட கூழை உண்டு பின்னுறங்குவாள். மகாராணியாய் இருந்த இப்பெண்மணி வெயிலில் உலக்கை யெடுத்துக் கை சிவக்க, வியர்வைகால, நெற்குத்துவதைக் காண்போர் பலரும் வருந்தினர். தேவதாசனோ, வேதியன் அடிக்கும் அடிகளுக்கஞ்சி ஊர் வேதியப் பிள்ளைகளோடு காட்டுக் ருந்து சென்று தர்ப்பமும் சமிதையும் விறகும் கொண்டு வருவது வழக்கம். இவ்வண் யினும் ஒருநாள் காட்டுக்குப் போய்த் திரும்பி விறகுக்கட்டுடன் வீட்டு முகம் நோக்கி ருவகை யில், வழிப்பக்கத்திலே இருந்த ஆலமரத்தின் கீழுள்ள ஒரு புதர்ப் பக்கத்தில் தருப்பை யிருப்பதைக் கண்டு இதைக் கொய்து போகவேண்டும் என்று அதைக் கொய்யவும் அதனுள்ளே யிருந்த ஒரு பெரும் சர்ப்பம் சீறி ஒங்கி இளைஞனைத் தீண்டியது; அவனும் எழுந்து அலறி ஓடி மூர்ச்சை போயினன். தன்னோடுவந்த நண்பர்க்கு "பெரும் பாம்பு வெண்டிக்கிறது பாரும்" என்றனன். சினேகிதர் அனைவரும் புரட்டிப் பார்த்து "ஐயோ! விஷமேறி இறந்தனன். ஈதென்ன விதியோ! இவனோ நற்குண சிகாமணி. இச்சஷ்டம் இவனுக்கு வரத்தெய்வம் விட்ட வழியைப்பார்" என மனம் நொந்து. "அவனது தாயிடத்தே இதைச் சொல்வோம்" என வீட்டு முகம் நோக்கிச் சென்றனர்.

பாலர்களும் ஊரிடை வந்தனர். சூரியன் அஸ்தமனமாயினன், இராணி சந்திரமதியோ, தன் மகன் வராததைக் கண்டு மனம் வருந்தினள். பாலர்களைக் கண்டு "சில செந்தைகாள், என் மகன் இன்னும் வரவில்லையோ அவன் எங்கே தெரியுமா?" என்றே இப்.



வேண்டினள். பையன்கள் அவள் சஞ்சலத்தைப் பார்த்து "அம்மா, உன் மகன் காட்டினில் ஒரு பெரும்பாம்பு தீண்டி இறந்தனன். எங்களாலானவரைப்புரட்டிப்பார்த்தும் செய்யக்கூடியது ஒன்றும் இல்லாது போயிற்று. அவனைப்போலச் சிறந்த உத்தம நண்பனை நாங்கள் என்றும் காணப்போவதில்லை. தெய்வங்கள் விட்டவழியைப் பார்" என்று மனம் வருந்தினர். இதைக் கேட்டதும் சந்திரமதி நிலை தெரியாதே மயங்கி வீழ்ந்து "குழந்தைகாள், எங்கே இறந்தான் என் மகன்" என்றனள். அவர்கள் "நாங்கள் வரும் வழியிலே ஆலமரத்தின் அடியின்கீழ் வளர்ந்துள்ள தர்ப்பக் காட்டின் பக்கத்திலே அம்மா" என்றனர். இதைக் கேட்டுச் சந்திரமதி மனம் நைந்து கண்ணினைகள் நீர் ததும்பக்கலங்கி வீழ்ந்து யஜமானின் கொடுமைக்கஞ்சி வாய்விட்டுக்கதறுளாய் "ஐயோ, மகனே, மோசம் செய்தனையே; கொடும்பாவி வேதியனின் கடுமை பொறுது மாய்ந்தனையோ? என் அரசிளங்குமரா, இவ்விதியும் வாய்த்ததோ" என்று பலவிதம் துக்கப்பட்டுச் செய்யவேண்டிய நியமவேலைகள் எல்லாவற்றையும் செய்து வேதியன் உத்திரவு பெற்றுச் செல்வேன் எனமனத்தில் எண்ணினள். வேதியன் வீட்டையடைந்து பணிகளையெல்லாம் முறைமைப்படிச் செய்து ஆரியனை நோக்கி, "ஐயா, என் மகன் அரவத்தால் தீண்டப்பட்டுக் காட்டில் இறந்தான். அவனைத்தேடிவரத் தயைபுரிவாய்" என்று வேண்டினள். இதற்கு வயது முதிர்ந்த பிராமணன் சீறிவிழுந்து "நீ கேட்கும் விஷயத்தை நீ கவனிக்கவில்லை. பட்ட கஷ்டம் என்னதே அன்றோ? என் பொருளுக்குச் செலவுவத்தால் உனக்கென்ன குறைவு; விலைப்பட்ட பையனுக்குத் தாயும் உண்டோ? நீ போகவேண்டுவதில்லை" என்று கடுகடுக்கப்பேசினன். சந்திரமதி இம்மொழிகளைக்கேட்டு *"அடிமையேயென்னுமையா வந்தாத்திறந்தான் என்றால், கொடியனேன் றனக்குப் பெற்றவயிறுதான் கொதித்திடாதோ, படியின்மேலிறந்தான் தன்னைப் பார்த்தெடுத்தடக்கிக் கன்றுல், விடியுமுன் வருவே னல்குவிடை"—யெனத் தொழுது வீழ்ந்தாள்.

வேதியனும் "வேலைகள் மிகவிருக்கின்றன. விடியுமுன் வருவாயாகில் நீ போ" வெனக்கட்டளை யிட்டனன். இவ்வண்ணமே அவள் உடனே கிளம்பிக் காட்டுவழியைத் தொடர்ந்து சென்றனள்.

பதிவிரதாசிரோன்மணியாகிய சந்திரமதி தேவியார்க்கு வாய்த்த இக்கொடுமையைக் கேட்டு மனம் இரங்காதவர் எவர் உளர்? மகா கீர்ம்பீரியமான அரிச்சந்திரமகாராஜன் மனைவியாய் வாழ்ந்து வரும் இவ்வம்மணி பெற்ற பெரும் பாக்கியத்துக்குத் தற்காலம் அடிமையாய் வாழ நேர்ந்த துக்கம் எத்தன்மையதென்று இதைப்படிப்போர் ஆலோசிக்க வேண்டியது. தருமை தேவதை யொத்த இவள் படும்பாடு எதன் பொருட்டென்று சிறிது ஆராய்ந்து பாருங்கள். இவ்வடிமைத் தொழிலினும் "பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்பதைப்போல நாயகனுடைய பிரிவும், தன்னருமைக் குழந்தையின் மரணமும் தொடங்கியன. தான் வாழும் இடத்தின் கொடுமையை அனைவரும் அறிந்ததே. சந்திரமதி இவ்விவகாரங்கள் அனைத்தையும் சிந்தித்து மகனை நினைந்துருகிக் காடும், புதரும், நிலமும், முன்னும்தெரியாது சங்கடப்பட்டுக் கொண்டு ஆலமரத்தையே குறியாய்க்கொண்டு செல்கின்றாள். தன்னுயிரைத்தேடித் திரிவார்போல மயங்கி நிலையின்றி வழிநடக்கிறாள். செடி, கொடி, புதர் முதலியவைகள் எல்லாவற்

* அரிச்சந்திர புராணம்,

றையும் தேடிப்பார்த்தனர், எங்கும் அவள் அருமைமகன் காணப்படவில்லை. சிறிது
தூரம் போகவும் ஒரு விறகுகட்டைக் கண்டனள். உடனே ஓடினள்; உருகி வீழ்ந்த
னள். அருமை மகனைக் கண்டனள். மேல்விழுந்தலறினள்; மகனைமடிமேல் எடுத்துப்
புலம்பினள்; கண்டோர் எவரும் கலங்கும் இக்காட்சியை எடுத்துரைப்பது இயலுமோ?
இருநாடுகள் ஆளவல்ல ராஜ இளங்குமரன் அடிமைப்பட்டு இம்மாதிரி இறந்திருந்தால்
அவன் தாய்க்கு என்ன என்ன எண்ணங்கள் பிறக்கும்? சந்திரமதி தேவியோ புலம்பி
அழுததைச் செப்புந் தரமுடையதோ? அவ்வம்மணி:

* "பனியான்னைந்து வெயிலா லுலர்ந்து பசியாலலைந்துழலவா—அநியாய வெங்கண
ரவா லெறிந்து வுதிபாவ மென்கொலறியேன்-தனியே கிடந்து விட ரோய் செறிந்து தரை
மீதுருண்ட மகனே-இனியாரை நம்பி யுயிர் வாழ்வமென் றனிறையோனும் யானுமவமே"
என்று புலம்புவள். "இராஜ ராஜேஸ்வரன் அளித்த மகனே, உனக்கிது விதியோ?"
என்பாள்; "நின் தகப்பன் எனைவந்து அன்புடைய என்னுசைமகன் எங்கேயென்று
கேட்டால் என்செய்வேன் மகனே" என்பாள்; "தருமமார்க்கத்தையே அநுசரித்
துத் தரும வழியிலே நடக்கும் எங்களுக்கு விதித்தவிதி இதுவோ?" என்பாள்;
"திவ்விய தேஜஸ் உள்ள உன் உருவங்கள் மாறுபட்டுக் கிடப்பதைப் பார்க்க என்மன
மும் தரிக்கவில்லையே, நான் அருமையின் பெற்றவயிறும் தரிக்கவில்லையே!" என்று
மோதிக்கொள்வாள்; "நின் தகப்பனும் இலையெனினும் உன் பாட்டனதாகிய கஜேஸி
நாட்டையாள எவரும் உரிமையுள்ளார் இல்லையே! ஐயோ, கொடும்பாம்பே, என் அரு
மைக்கண்மணியைத்தீண்ட நீயும் பகை கொண்டனையோ? என் கண்மணியே, என்னை
அம்மா என்றழைத்து நீ அழுதல் என் என்று சொல்லாதிருத்தல் தருமமோடா?" என்று
பற்பலவிதம் வாய்விட்டலறி "விதிப்பயனை கோவதால் பலனென்றும் காணேன். வரு
வது வந்தேதீரும்" என்று சிறிது மனந்தேறி இளமகனைத்தன் தோளின் மேல் வைத்
துக்கொண்டு காட்டுபத்திரவங்கள் அனைத்தினுக்கும் இடங்கொடாது தள்ளாடி நடந்து
காசி நகர் நாடிச் சுடுகோட்டை அடைந்தாள்.

## சுந்தரி.

(141-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஐயோ பாவம்! பிராமணர்களின் வாழ்நாளில் விவாகம் என்பது ஒரு பெருங்காரி
யம். அது இனிமையின் முடியாது இடையூறுகளாய் வாய்க்கவோ ஜாதகப்பொருத்தம்
வரதட்சிணை, நகைப்பணம், எதிர்ச்செலவு சீர்-முதலிய விஷயங்கள் பல உண்டு. ஜாதகப்
பொருத்தம் கிரமமோ அல்லவோ என்பதைப்பற்றி நாம் சொல்ல வரவில்லை. வாழ்
ன் முக்கிய காரியமாகிய விவாகத்தைப் பண்பும் பயனும், நன்மையும், இன்...வர்வி
மையும் அறியாது, துட்டு இலாபத்தையே உத்தேசித்து நெஞ்சில் இரவு...ச்சஷ்களை
துகின்ற ராஜாசாஸ்திரிகளுக்கு ஒப்புவித்தலும், வரதட்சிணை நகைப்ப... அவனது
சொல்லியிருப்பவை யெல்லாவற்றையும், விற்றேனும், கடன் ...
நான்குநாள்களில் தொகையை அழித்துவிட்டு பெரும்வீட்டகி...
றும் வீட்டதிகாரியாவதும், யோக்கியதை வித்தை அந்தஸ்து இராணி சந்தியதாக...ளி
களைக் கண்டு "தனி... பமும், உன்
தெரியுமா?" ...யில்லாது நடத்

* அரிச்சந்திர புராணம்.



கவனியாதேபெண்களை விற்றுவிடுதலும், ஐயோ கொடுமை, கொடுமை! எங்கள் திருமோ
இப்பேதைமை? அனைத்திலும்நாகரிகம் அடைந்தோம் என்று தம்மைமெச்சிக்கொள்கிற
சிறப்புடையோர்களே, அறத்தினை யொழிக்கும் திறத்ததாய இப்பாவ வழியை ஒழியின்.
தாம் பெற்ற பெண்களின் அருமை பெருமை தெரியாதே விவாகம் என்னும் ஒரு சடங்கை
நிறைவேற்றி அடிமை யென்னப் பெண்களை விற்றுவிடும் ஏழைத் தந்தைகாள், இவ்வழக்
கத்தை நீக்குமின். பணத்தாசை பிடித்து பணம் பெருத்தோர் பெண்களே மருகியாய்
அமைதல் வேண்டும் என்றும், தம் பிள்ளைகளுக்குப் பெண்ணினை மணத்தில் உதவுவார்
தமக்குப் பெருந்தொகை அளித்தல் வேண்டும் என்றும், ஆசை கொள்ளும் தனிகர்காள்,
இல்வாழ்வு வழக்கை அறிமின். பிள்ளைகளின் அருமையை உணர்மின். இவ்வருமை
தெரிவாரிடத்தே நட்பும் காதலும் நடைபெற்றுவாழும். அறமும் அன்பும் அழகொடு
விளங்கும். இவைகளை நன்கனம் ஆராய்ந்து அறிந்தன்றோ விவாகங்களையும் மற்றைய
விஷயங்களையும் கவனித்து நடக்க வேண்டியது.

### 3-அத்தியாயம்.

சிவபுரம் வான் தாவினை யென்றும் ஆஸ்தியும் சுமாராய் இருக்கிறதென்றும் கேள்
விப்பட்டவுடனே அவ்வரத்தை எவ்வண்ணமாவது இசைவிக்க வேண்டும் என்று இராஜ
ப்பையர் ராஜா சாஸ்திரிகளை வேண்டிக்கொண்டனர். சாஸ்திரிகளும் 25 ரூபாய்த் தர
கிரி தட்சிணைக்கு ஒப்புக்கொண்டு பின்வரும் வண்ணம் சொல்லுவார்:

சாஸ்திரிகள்:—ஸ்வாமி, நீங்கள் சொல்லிய விஷயத்தைச் செய்து முடிக்கிறேன்
என்று ஒப்புக்கொண்டு விட்டேன். அது முடியும் வரையிலும் எனக்கு நித்திரையே
வராது. ஆனால் ஏழையாகிய சாஸ்திரிகளை நீங்கள் மறக்கமாட்டீர்களென்று வேண்டிக்
கொள்ளுகிறேன். கல்யாணத்திலே தங்கள் பேர் இருக்கும்படியாய் ஒரு நல்ல சோமன்
ஜோடு தயவு செய்யவேணும். என்னவோ கேட்டேன் என்று நீங்கள் கிலேசப்படக
கூடாது. என்னால் ஆகும் பிரயாசைப்பட்டு இந்த வரனை முடிவிக்கிறேன்.

இராஜ:—அதெல்லாம் உமது பாடே. நான் மேலே சொல்லுவதில் என்ன பயன்?
எதிர் ஜாமீன் 500 ரூபாயிலே சரிப்படுத்தவேண்டும். குறைத்துப்பேசினால் நான் அதன்
உபகாரத்தை மறக்கவும் கூடுமோ? எனக்குப்பல விஷயங்களில் அது அநுகூலமே.

சாஸ்திரி:—அதை எல்லாம் நீங்கள் சொல்லவேண்டுமா? என்னைத்தான் நீங்கள்
நம்பி விட்டுவிட்டீர்கள். நான் அதற்கு துரோகம் செய்வேனா?

இரா:—சரி! இனி யெனக்கு வேறொன்றும் பேச்சில்லை. வரனைப்பற்றிச் சகலத்
தையும் ஏற்பாடு செய்துகொண்டு வரவேண்டியதே. தங்கள் ஞாபகம் எனக்கு நன்றாய்
இருக்கிறது. அதைப்பற்றிப்பேசுவது அநாவசியம். (என்று நீர் நிறைந்த வாய்க்கால்)
வரையில் வழிவிட்டு "ஒருவாரத்துக்குள் எனக்குப்பதில் தெரிவிக்கவேண்டும்" என்று
சொல்லிக்கொண்டிருக்கையில் ஆகாசத்தில் இரண்டு கருடன்கள் வலமாகி இவியசப்தத்
தோடு சென்றன.

சாஸ்திரிகள் இராஜப்பையரிடத்தில் "அதற்கென்னதடை. திவ்யமான சகுன
ங்கள் ஆகின்றன. தெய்வப்பிராப்தி அநுகூலம் உண்டென்று எனக்குப்படுகிறது"

என்று இருவரும் "ஸ்ரீகிருஷ்ணா, கிருஷ்ணா" என்று வேண்டிக்கருடனைத்தியானம் செய்தனர். நிறைந்த நீர் நிலை தாண்டிவழிவிடல் நியாயம் அல்லவென இராஜப்பய்யரும் வீட்டுமுகம் திரும்பினர்.

சாஸ்திரிகள் போய்ச் சேரவேண்டிய சிவபுரம் சுமார் 10 மைல் தூரம் இருக்கும். இளம்வெயில் விசேஷமாய்க் காய்ந்தது. சாஸ்திரிகள் விசேஷமாய் உபத்திரவம் எடுத்து ஒரு விஷயத்திலும் கஷ்டப்படாதவர். வார்த்தை வெளிவரும் ஆயுதம் இவர்க்கு மிக கவுரவத்தைத் தருவது. ஆகையால் இவர் சிறிது தூரம் நடக்கையில் வெயர்வை விட ஆரம்பித்தது. இவர் இதைக்கண்டு மரங்களின் கீழ் சற்று இளைப்பாறி இந்த கஷ்டத்தில் சிவபுரம் போதல் சாத்தியம் இல்லை யென்றும் தன் மனதில் பலவிதம் ஆலோசிக்கலானார்: "சிவபுரம் வரனை முன்னமே ஒரு நிறுசில் முடித்து வைத்திருக்கிறேன். இது ஒரு விதத்திலும் தவறாது. இதை முடித்து வைத்தால் நமக்கும் 60 ரூபாய் வரையில் கிடைக்கும். ஆனால் நாம் முன்னமே செய்து வைக்க நேர்ந்த விநாயகர்மலைவான் போல் நாலு விவாகங்கள் முடிந்தால் நாமும் இவ்விதமாய் ஓடி யோடிப் பெருந்தனக்காரப் பிராமணரைக் காணுதலும், அவர்கள் அறிமுகம் ஆயின பின்பு அவர்களைக் கைக்கொள்ள முகஸ்துதியம் செய்தலும், அவர்கள் சொன்ன வார்த்தைக்கு ஆம் ஆம் என்று பல்லைக் காட்டிப் பாதவிக்கும் சிரிப்பும், இத்தனைத் தொந்தரைகளும் பட வேண்டிய காரணம் இராது. கன்னிகைப் பெண்களின் நடமாட்டத்தைக் கண்டு அவர்களின் பின் போய்த் தகப்பனாருடன் பேசும் ஆயிரம் புளுகுகளும் இலலாது போகும். நமது விவகாரத்தில் புளுகுகள் உற்றதுணைவர். அவையில்லையேல் ஒன்றும் நடவாது. காரியத்தை உத்தேசித்து நாம் எல்லாம் செய்யவேண்டி வருகிறது. பெரும்பணக்காரரேனும் என்னைக் கண்டால் கொஞ்சம் மரியாதையாய் இருப்பார். இல்லையெனில் நானே இவ்வுலகில் நாரதக்கலகம் செய்விப்பேன். இன்னும் சிறிதுநாள் இவ்விதக்காலம் தள்ளினால் இப்பாடெல்லாம் மறையும்படி செல்வனாய் வாழலாம். நானும் குடும்பைசுவரியதில் ஏமாந்தவன் அல்ல. சிவபுரம் போவதன்முன் வழியூர்களிலே எங்கேனும் என்றாலும் மத்தியானத்தைச் சாப்பிட்டுவிட்டுப் போகலாம். எத்தனையோ கல்யாணங்கள் நான் போய்ச்சேரவேண்டியாகின்றன."

இவ்விதமாய்த் தன் குடும்பத்தின் செல்வத்தைப்பற்றியும், தன்கவுரவத்தைப்பற்றியும் ஆலோசித்துக்கொண்டு பக்கவூராகிய ராமசந்திராபுரத்தில் போஜனம்செய்து சாயங்காலம் சிவபுரம் போய்ச்சேர்ந்தனர்.

ஜானகி

# ஸ்ரீமதி வி. இராஜலக்ஷ்மி அம்மாள் உபந்நியாசம்.

1907ஆம் ஜனவரியீ 24ஆம் புதுவை கலவை-சுப்பராய செட்டியார் கலாசாலை மண்டபத்தில் கலெக்டராகிய மேர் கஸ்தேரம்பியர் ஸாயெபவர்களின் அக்கிராசனத்தின்கீழ் புதுவை, சென்னப்பட்டணத்து வீதி வெர்மெண்டு பெண்பாடசாலைப் பரிசளிப்புக் கொண்டாட்டகாலத்தில் ஷெ கல்விச்சாலைத் தமிழ்த்தலைமை உபாத்தியாயர் ஸ்ரீமதி வி. இராஜலக்ஷ்மி அம்மாள் B. A. அவர்களால் சொல்லப்பட்ட உபந்நியாசம்.

கனம் சபாநாயகி யவர்களே!

...னது அருமையும் பெருமையும் வாய்ந்த அன்புள்ள சகோதரிகளே?

நான் வாசிக்கப்போகிற சில வரிகளைக் கவனத்துடனும், பக்ஷத்துடனும் கேட்கும்படி உங்களை நான் அதிக விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்நகரிலுள்ள எல்லாப்பெண் பாடசாலைகளிலும் இந்தப்பாலிகா பாடசாலையானது மிகுதியான எண்ணையுடைய வித்தியார்த்திகளையுடையதாக விருக்கிறது. அதாவது இதில் 250-க்கு மேற்பட்ட பெண்கள் படித்து வருகிறார்கள்.

கடந்த சட்ட நிருபண எலக்ஷ்ய பயங்கரகாலத்தில் சிறுமிகளின் வரத்து மிக்க கேவலமாயிருந்த போதிலும் பரீக்ஷையில் மாணவிகள் திருப்திகரமாய்த் தேறியிருக்கிறார்கள். இதில் ஒரு உயர்தர வகுப்புச் சிலகாலமாக நடத்தப்பட்டு வருகிறது. கல்வியிலாகா அதிகாரியும் இந்தப்பாடசாலை நன்றாக நடத்தப்பட்டு வருகிறதென்றும் இப்பாடசாலைத் தலைமைப்பதவியை வகித்துவருகிற கெர்மான்மம்ஸேல் அவர்களுடைய முயற்சியாலும், ஊக்கத்தாலும், இந்தப்பெண்வித்தியாசாலை யாவராலும் மதிக்கும்படியான விருத்திமுகங்காட்டி வருகின்றதென்றும் தெரிவித்திருப்பதைப்பெற்றோர்கள் கூடியிருக்கும் இந்தமகா சபையில் தெரிவிக்கிறதனால் எங்களுக்கு மிக்க சந்தோஷமும் தைரியமும் உண்டாகின்றது.

நம் நாட்டில் ஸ்திரீகள் கல்வியில் தேர்ச்சியடைய வேண்டிய தவசிய மெனவெண்ணி வெகுகாலமாகியும் 1903ஆம் குடும்ப மாதர்களைக்கொண்டு போதிக்க ஆரம்பித்தது முதல்தான் பெண்கல்விக்கு உயிர்வந்ததெனலாம். குடும்பத்திலுள்ள ஸ்திரீகளை உபாத்தினைத்தொழிலில் பக்குவப்படுத்திவைக்க ஆரம்பித்தகாலத்தில் அநேக இடர்கள் நேர்ந்தன. ஆனால் மேலே நிலையான பாதையில் ஸ்திரப்படுத்த முயற்சித்தபோது கிறிஸ்துமத கன்னிகா ஸ்திரீகள் கூட்டத்தாரினின்று வேறுபடுத்திப் பெண்கல்வியை அதிக விருத்திக்குக்கொண்டுவர வேண்டுமென்னும் பரோபகாரமான சிந்தையையுடைய தேசாபிமானிகள் ஒத்துழைக்க முன்வந்தார்களானாலும், முக்கியமான எல்லாப்பாரமும் பெண்கல்வி விருத்தி விஷயத்தில் அதிககவனமும் ஊக்கமும் உள்ள வித்தையிலாகா தலைவரான கனம் தெலால்துரை அவர்கள் மீதுதான் இருந்தது.

இவர் முதல் முதல் குடும்பஸ்திரீகள் உபாத்தியாயர் தொழிலுக்கு வந்து அமர அரும்பாடு பட்டார். அன்றியும் இப்போது உபாத்தினைத் தொழிலுக்குப் பயிற்சிபெற விரும்பும் ஸ்திரீகளுக்கு போதனாப்பியாச சாலை ஒன்று ஏற்படுத்தி அதில் சேர்ந்து வாசிக்கும் வித்தியார்த்திகளுக்கு மாதமாதம் உபகாரச் சம்பளமும் கொடுத்து உதவிவருவதை நீங்கள் தெரிந்துகொண்டிருப்பீர்களென்று நான் நினைக்கிறேன். நமது தேசத்தில் படிக்க வேண்டியவயதை யுடைய பெண்களில் அநேகர் படிக்காமலும் படித்தவர்கள் தேர்ச்சியடையாமலும் நிற்கிறார்கள். இப்படி நம்மவர்களில் பெண்கல்வி அதிகமாக விருத்திக்கு வராததற்குக் காரணம், நமது பெண்மணிகள் சொற்ப வயதிலேயே கல்விக்கூடத்தினின்று விலகிவிடுகிறதையும், பெற்றோர்கள் ஆண்பிள்ளைகளுக்கு அறிவூட்டுவதில் அக்கறை கொள்வதைப்பார்க்கிலும் பெண்களுக்குப் படிப்பு சொல்லி வைப்பதில் கொஞ்சமாய் அக்

க்ரவர்த்தினி.

கரைப்படுவதையும், பாடசாலையினின்று விலகிவிட்டபிறகு பிரதிதினம் அரைமணிநேரமாவது நல்லபுஸ்தகங்களையும் இக்காலத்தில் நமது முற்போக்குக்கு இன்றியமையாததாய்க் காணப்படுகிற பத்திரிகைகளையும் வாசித்துவர தவிர்த்துவிட்டு வீண்பேச்சுகளில் காலங் கழிப்பதையும், காரணமாகச் சொல்லலாம்.

கல்வியானது ஒவ்வொரு மாந்தருக்கும் அவசியம் தேவையென்பது யாவரும் அறிந்ததே.

படிப்பானது அறிவை விருத்தியாக்குகின்றதென்றும் மிருகப் பிராயத்தினின்று மனிதர்களை நீக்குகின்றதென்றும் படிப்பில்லாதவர்கள் குருடர்களென்றும் நமக்குத் தெரியும் ஆகையால் பெண்களுக்கு அறிவு வேண்டாமோ?

இல்வாழ்க்கையாகிய வண்டியைக்கணவனும் காதலியுமாக விழுக்கவேண்டும்போது ஒரு மாடு பழகினதும் மற்றொரு மாடு சண்டிமாடாக விருக்கலாமா? இல்லறத்திலிருந்து நடத்தவேண்டிய பலகாரியங்களையும் குறைவின்றி நடத்துவதற்கும் படிப்பில்லாமல் முடியுமா? மேலும், பெண் படித்திருந்தால் தான் பூட்டிக் கொள்ளும் நகையைக் காட்டிலும் தன் கணவன் வார்த்தையே சிறந்த நகையாகுமென மதித்து நடப்பாள். வீட்டுவரவு செலவுகளைச் சீராக வைத்துக்கொண்டு. பொருளையும் செட்டாய்ச் செலவழிப்பாள். வீட்டு வேலைகளையும் கருத்தாய் பார்ப்பாள். குழந்தைகளையும் தக்கவாறு வளர்த்தெடுத்துச் சிறுவயதிலேயே கல்வியும் கற்பிப்பாள். அதனால் குழந்தைகளும் படித்த தாய்மார்களும் பொருள்களினியல் புணர்ந்து அவற்றைப் பயன்படச் செய்யு மறிவும் நோயில்லாவுடலும் வறுமையில்லா வாழ்வும் குற்றமற்றநடையும் தாழ்ந்து நகர்ந்து பிறர்க்கும் உதவும் பெருங்குணமும் ஆகிய இவைகளில் தேர்ச்சியடைந்து தழைக்கும்போது தேசத்தில் சீரும் சிறப்பும் உண்டாகும்.

நம் தேசத்தில் ஸ்திரீகளுக்குக் கல்வியிருந்தால் கற்புக்கே கேடுவருமென்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இவ்விரண்டிற்கும் என்னவிரோதம்?

அப்படி யிருந்தால் பூர்வகாலத்தில் கல்விக் களஞ்சியங்களாயிருந்த சீதை, நளாயினி, தமயந்தி, அநசூயை, கார்கியை, மயித்திரி, அருந்ததி, ஔவை, ஆண்டாள் மங்கையர்க்கரசி, காரைக்காலம்மையார் முதலிய பதிவிரதாசிரோன்மணிகள் கற்பழிந்தவர்களோ?

மேலே சொல்லியவற்றால் பெண்களுடையபடிப்புமிகவும் இன்றியமையாததென்று முற்காலத்திலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

ஆகையால்,

நமது தேசத்திலுள்ள கற்றறிந்த தேசாபிமானிகள் பெண்கல்வியை விருத்திக்குக் கொண்டுவர முயலவேண்டுவதோடு, பரோடா சமஸ்தானத்தில் பெண்கள் 6 வயது முதல் 10 வயது வரையில் படித்து வரவேண்டும், இவ்விதம் செய்யாவிடில் பெற்றோர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்பது போன்ற இனும் பிரதம கட்டாயப் படிப்புச் சட்டம் நம் நாட்டிற்கு ஏற்படுங்காலத்திற்கு முயற்சியுடையவர்களாகவேண்டும்.

ஆனாலும் நாம் அறிவில்லாத காட்டுமிராண்டிகளாயிருந்து விட்டால், நமக்கு நமது நிலைமை தெரியாமல் கிடைத்ததையுண்டு, வந்ததை அனுபவித்து காலத்தையெப்படியாவது கழித்து விடலாம் அப்படியில்லாமல் பல்லாயிரமாண்டுகளாக நமது ஜனத்தார் நாகரீகத்தில் தேர்ச்சியடைந்து, புத்திக்கூர்மையிலும், அறிவிலும் நிகரற்றவர்களாகிச் செல்வமும், புகழும் பெற்று உயர்ந்த நிலைமையிலிருக்கிறார்கள்.



போதிலும்,
மத்தியகாலத்தில் நமது ஸ்திதி, சற்றுத் தாழ்ந்து மழுக்க மடைந்த
ஐரோப்பியர் வந்த பிறகு நமது பூர்வ நிலைமையினுடைய ஞானம் நமக்குண்டாய் வருகிறது. ஆகையால் நமக்கு நேரிடும் துக்கங்களையுங் கஷ்டங்களையும் நாம் மனதில் உணர்ந்து வருந்துகிறவர்களாகி விட்டோம். நமது பூர்வீக நிலைமையைப் பற்றிச் சிந்தித்துத் தாழ்ந்த நிலைமையி
லிருக்கப்பட்டும் உலகத்தில் மற்றச் சாதியார் அவரவர்கள் முயற்சியால்
லிருந்து உயர்ந்த நிலைமைக்கு வந்ததை யறிந்தும் நாம் மனம் நொந்து போகிறோம்.

நம்முடைய சொந்த அறிவாலும் உணர்ச்சியால் தூண்டப்பட்டும் நமது தற்கால நிலைமையைப்பற்றிச் சிந்திக்கும்போதெல்லாம் மனதில் வியாகூலமுண்டாகி நம்மிலும் தாழ்வடைந்த ஸ்திரீஜாதியார் உலகத்திலில்லையென்று நம்மை நாமே நிந்தித்துக்கொண்டதால் என்னபயன்.

நம்மை நாம் குறைவாக நினைத்துக்கொள்வதால் மட்டும் நமக்கு விமோசனங் கிடைக்கப்போகிறதா?

உலகத்தில் மற்றச் சாதியார், அவர்களுக்கு கெட்டகாலம் நேரிட்டபோது எப்படி தன்முயற்சியென்னும் பெருங்குணத்தைக்கையாண்டு கெட்டகாலத்தை நிவர்த்திசெய்து கொண்டது மல்லாமல் நல்லகாலத்தையு மடைந்தார்களோ, அப்படியே நாமும் தன் முயற்சியே துணையாகக்கொண்டு நமது அருமையும் பெருமையுமான ஸ்திரீஜன சமூகத்திற்கு சம்பவித்திருக்கும் சிறுமைகளையும், துக்கங்களையும் நிவர்த்திசெய்துகொண்டு நல்லஸ்திதி மையடையவேண்டும். அப்படி செய்யாமல் நமக்குக் கெட்டகாலம் வந்திருப்பதைமட்டும் உன்னி உன்னி விசனப்பட்டு அதை நிவர்த்தி செய்யத்தக்க முயற்சி செய்ய சக்தியற்றவர்களாய் கேவலமிருகங்கள் போல் வசிக்கவேண்டிய காலத்தில் நாம் இப்போதில்லை.

இவ்வளவு நேரம் மிகப்பொறுமையோடு கேட்டு வந்த என தன்பார்ந்த சகோதரிகளே!

கவர்ன்மெண்டார் கூடியவரையில் எங்கும் பெண்பாடசாலைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். இவைகளில் நமது கண்மணிகளாகிய பெண்மணிகள் சேர்ந்து வாசிக்கவேண்டியதவசியமென்று புத்திமான்கள் எல்லோர் மனதுக்கும் பட்டப்பகல் போலப் பிரகாசமாகத்தெரிகிறது. நம்மக்களின் வாழ்நாட்களுக்கு கல்வியைக்காட்டிலும் சிறந்த உதவி கிடையாது.

அதுவே இவ்வுலகத்தில் துன்பப்பட்டு வருந்தும் உயிர்க்குத் தகுந்த துணை.

கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை?

ஆதலால் நீங்கள் யாவரும் உங்கள் குமாரத்திகளையும், உங்கள் பாதுகாப்பில் உள்ள பெண்களையும் கிரமமாக பாடசாலைக்கு அனுப்பிவரவும் உங்களிஷ்ட பந்துக்களுடைய பெண்மணிகளை வித்தியாசாலைக்கு அனுப்பத் தூண்டுதல் செய்யவும் உங்களை மிகவுங் கேட்டுக்கொண்டு நீங்கள் யாவரும் எங்கள் வரவழைப்புக்கு மனமுவந்து இங்குவந்து கூடி எங்களுக்கு மிகுந்த உற்சாகத்தையும் மனமகிழ்ச்சியையும் உண்டாக்கிய உங்கள் எல்லோருக்கும், மிக விசுவாச முள்ளவர்களா யிருக்கிறோமெனத் தெரிவித்து எங்கள் மனப்பூர்ணமான வந்தனத்தை மிகப்பணிவோடும் மரியாதையோடும் அளிக்கிறோம்.

மாதர்கள் கல்வி வாழ்க? தன்னாட்சி வாழ்க??
பிரான்ஞ்சிந்தியா வாழ்க??? பிரான்சு தேசம் வாழ்க????

## புத்தக வரவு.

காங்கிரஸ் பிரசங்கங்கள் 1906: இவ்வரிய தமிழ்ப் புஸ்தகத்தைச் "சுதேமித்திரன்" ஆபீஸில் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இதில்மகாகனம் பொருந்திய இந்தியாவின் "அரும்பெரும் கிழமஹான்" ஆகிய தாதாபாயின் சரித்திரச் சுருக்கமும், உபசரணைக்க மிட்டியின் அக்கிராசனாதிபதியாகிய டாக்டர் ராஷ்பிஹாரி கோஷின் பிரசங்கமும் எளிய தமிழ்வசனநடையில் சிறப்பின் எழுதப்பட்டுத் தமிழ் மட்டுமே தெரிந்த நம் நண்பர் பலர்க்கும் உபயோகப்படுமாறு விளங்குகின்றன. நம் தமிழ் நாட்டார் பலரும் இதை வாங்கிக் காங்கரெஸில் பேசப்படும் விஷயங்களை முற்றும் தெரிந்து கொள்ளுதல் மிக நன்மையைப் பயக்கும். ஸ்ரீதாதாபாயின் சரித்திரம் மிக எளிய நடையில் சிறப்பின் எழுதப்பட்டிருக்கிறது. இதில அவர் உருவப்படமும் அமைந்துளது. இத்தேசாபிமானியின் சரித்திரத்தை அனைவரும் தெரிந்துகொள்ளல் வேண்டும். இப்புத்தகத்தின் விலை அணா 8.

# NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

கர்னல் ஆல்க்காட்டு:—இவர் சிறந்த விவசாயி; யுத்தவீரன்; வியாதிபதி; வக்கீல்; பிரம்மஞான சபையின் அக்கிராசனாதிபதி. இவர் பிப்ரவரி மீ 17௳ ஞாயிற்றுக்கிழமை சென்னையில் இறந்தனர். இவர் படிப்பு விஷயங்களில் சிறந்த மகான்; லோகோபகாரி. இவர் மதவிஷயத்தைப்பற்றி பட்ட பாட்டை உலகத்தார் அனைவரும் அறிவர்.

* * *

இந்தியா கவர்ன்மெண்டு, ப்ரைமரிப் பாடசாலைப் படிப்பைப் பையன்களுக்குச் சம்பளமின்றி விசேஷவிருத்தி செய்ய வேண்டும் என்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், பரோடா மகாராஜாவும், கொச்சின் மகாராஜாவும் ப்ரைமரிப் பாடசாலைகளில் பிள்ளைகளுக்குச் சம்பளம் இல்லாமலே ஏற்பாடு செய்து நடத்தி வருகிறார்கள். இன்னும் பல அரசர்களும் பெருந்தனக்காரர்களும் இவ்விஷயத்தைக் கவனித்து அனைவரும் படிக்கும்படியான தருமத்தை முன்னுக்கு வரச செய்யவேண்டும் என்று வேண்டுகிறோம்.

* * *

ஸ்ரீமதி ஆர். கல்யாணி அம்மாள்:—திவாங்கூர் சமஸ்தானத்தில் ஒரு பத்திராதிபராயிருக்கும் மிஸ்டர் இராமகிருஷ்ண பிள்ளை என்பவரின் மனைவியாகிய ஸ்ரீமதி ஆர். கல்யாணி அம்மாள் சென்ற சென்னை சர்வகலாசாலை பி. ஏ. பரீக்ஷையில் இங்கிலீஷிலும் மலையாளத்திலும் சித்தி பெற்றிருப்பதை யறிந்து மிகவும் சந்தோஷிக்கிறோம். மீதிருக்கும் ஒரு பாடத்திலும் இம்மாது சித்திபெற வேண்டுமென்று விரும்புவதோடு தென்னிந்தியாவிலுள்ள மற்ற மாதர்களும் இவரை முன்மாதிரியாய்க் கொண்டு கல்வியில் விருத்தியடைவார்களென்று நம்புகிறோம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
27 JUN 1907
MADRAS.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
னெண்மை யுறவோக்கு முலகு."

Vol. II. தொகுதி II. | MADRAS, MARCH 1907. சென்னை, 1907-ளு மார்ச்சி-மீ. | No. 8. பகுதி 8.

## மிஸ்டர் தியடோர்மாரிஸன் இந்தியப் பெண் கல்வியைப்பற்றிச் செய்த பிரசங்கம்.

மிஸ்டர் தியடோர் மாரிஸன் இப்பொழுது இங்கிலாந்திலே இந்திய காரியதரிசியின்சங்கத்திலே ஒரு அங்கத்தினராய் இருந்து வருகிறார். இவரோ இந்தியாவிலே நடக்கும் கல்வியிலாகா விஷயங்களை எல்லாம் நன்றாய் அறிவர். ஏனெனில் இவர் கொஞ்சகாலம்முந்தியே அலிகார் காலேஜின் பிரின்ஸிபல் உத்தியோகத்தைவிட்டுப் புது அநுவலில் இங்கிலாந்துக்குப் போனவர். ஆகையால் இவர் என்ன அபிப்பிராயம் உடையராய் இருக்கிறார் என்பதைக்கவனிக்க வேண்டியது ஆவசிகம்.

மிஸ்டர் தியடோர் மாரிஸன் ஜனவரி மீ 26௳யில் M. A. O. காலேஜ் சங்கத்திலே தாம் எழுதிய பிரசங்கத்தை வாசித்தனர். ஸர் எம். எம். பௌனகிரி அக்கிராசனாதிபதியாய் இருந்து இந்தியப் பெண்கல்வி யபிவிருத்தியைக் குறித்து மிகவும் தாம் கவலை கொண்டவராய்ப் பேசினார். மிஸ்டர் மாரிஸன் செய்த பிரசங்கத்தின் முக்கிய அபிப்பிராயங்களைச் சற்றுக் கவனிப்பாம்:

இவர் இந்தியாவிலே மேன்தகுதியிலே உள்ளவர்களின் அபிப்பிராயங்கள் விசேஷமாய் மாறுபட்டு வருகிறதென்றும், இவ்வித மும்முரமாய் நடக்கும் மாறுபாடு ஐரோப்பாவிலே விசேஷ ஆச்சரிய விஷயங்களை உண்டுபண்ணக்கூடியவை வென்றும், இந்தியாவிலே இக்கல்வியபிவிருத்தி எல்லாத் தகுதியாருக்கும் பரவும் என்றும், மேனாட்டாரின் புதிய அபிப்பிராயங்களை மறுத்தக்கூடிய வழக்கத்தடைகள் இல்லையென்றும், ஆண்பாலாரின் விஷயங்களில் இம்மாறுபாடுகள் வெகுவாய்ப் பூர்த்தியாய்விட்டதென்றும், பெண்பாலார் சின்னாள்முன்னர் மேனாட்டாரின் விஷயங்களை அறியாமல் இருந்தனர் என்றும், தற்காலமும் தங்கள் குடித்தனப்பாங்கைத் தம் வழியிலே நடத்தி வந்தனர் என்றும், தற்காலம் இந்தியப்பெண்கள் தமது ஆடவர்களைப்போலே கல்விவிருத்தியில் முற்படவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதென்றும், குடித்தனப்பாங்கே ஐரோப்பியரின் வழக்கங்களை அநுசரித்து மாறுகின்றதென்றும்; இன்னும் சில தலைமுறைகளில் ஐரோப்

பியரின் வழக்கங்களை அநுசரித்தே குடும்பமுறைமை மாறுவது திண்ணம் என்று வெளியிட்டனர். இதையும் தவிர்த்து, பெண்களின் கல்வி ஏராளமாக விருத்தி அடையும் என்றும், படித்த புருஷர்கள் படித்த பெண்களை மனைவிகளாய் வாய்க்க வேண்டுகிறார்களென்றும், இவ்விஷயங்களில் அக்கரை உள்ளவர் அநேகம் பேர் ஒரு பராக்கா கவனிக்கிறவர்களே என்றும், பின்காலத்தில் இக்கவனக்குறைவு கஷ்டத்தைக் கொடுக்கும் என்றும், இந்திய வழக்கங்களை ருடித்தனப்பாங்கில் மாறுபட்டு ஐரோப்பிய வழக்கங்களை அநுசரிக்கக் காலம் வந்துவிடும் என்றும் வற்புறுத்திக்காட்டினர். மிஸ்டர் மாரிஸன் வேண்டுவது என்னவெனின், இந்தியக் குடும்ப வாழ்வில் எவை உத்தமம் எனக்காணப்படுகின்றனவோ அவைகளை அநுசரித்தும், எவைகள் மாறுபாடுகள் அடைய வேண்டுமோ அவைகளைக் கவனித்தும், இந்தியப் பெண்கள் நல்ல சுதேசத்ரமிகளாய் இருக்க எத்துறையிலே பெண்கல்வியைச் செலுத்தவேண்டுமோ அத்துறையிலே பாடுபடல் ஆவசிகம் என்பதே." அவர் சொன்னபடி, பெண்கல்வி மிக ஆவசிகம் என்றும், ஐரோப்பியரின் அபிப்பிராயங்களை ஒத்து நடத்தல் மிகுந்த கஷ்டத்தை விளைவிக்கும் என்றும், இந்திய முறைமையைச் சீர்திருத்தலே முக்கிய கருத்தாய் இருக்கவேண்டும் என்றும், பெண்கல்வி விஷயத்திலே மிகுந்த கவலை எடுத்துழைக்கும் பல சீர்திருத்தக்காரருடைய அபிப்பிராயத்தில் தமக்குப் பொதுவாய் நன்னம்பிக்கையே என்றும் சொல்லித் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டனர். அங்கிருந்த மிஸ்டர் அப்தல் க்வாதியா என்பவர் எழுந்து எவ்விதமான கஷ்டம் வரினும் பெண்கல்வி அபிவிருத்தி விசேஷம் பரவவேண்டும் என்றும், அப்படிப் பரவுவதினால் சில சங்கடச் சந்தர்ப்பங்கள் வாய்ப்பது இயற்கையே என்றும், இப்போது இந்தியர்கள் ஐரோப்பியரின் நடையுடை பாவனைகளில் உத்தமமானதை வைத்துக் கொள்ளப் பிரயத்தனப்படுவது போல் மாதர்களும் அவ்வண்ணமே செய்யும் படி நேரிடும் என்றும் இச்சங்கடத்தால் வேறு ஆலோசனை செய்வது நியாயம் இல்லை என்றும் சில உதாரணங்களை எடுத்துக் காட்டிப் பெண்கல்வி எவ்விதமான சங்கடத்தைத் தரினும் அதை இடைவிடாது முந்திவரச் செய்ய வேண்டும் என்றனர்.

மிஸ்டர் ஹேரல்டு காக்ஸ் M. P., மிஸ்டர் அப்தல் க்வாதியா பேசியது நியாயம் என்று வியந்தனர். இன்னும் பிறரும் பெண்கல்வி இடைஞ்சல் இன்றி விருத்திக்கு வர வேண்டுவது ஆவசிகம் என்றனர்.

# HAMLET.

## ஹாம்லெட்.

(160-ம் பக்கத்தொடர்ச்சி.)

பிசாசு சொல்லிய தொல்லொன்றும் சரியாய்ப் போய்விட்டது பார்த்தாயா?

ஹொரே:—ஆம், பிரபுவே.

ஹாம்:—விஷத்தைக்காதில் ஊற்றுகிறது என்னும் பேச்சு வந்தவுடனே என் சிற்றப்பன் முகத்தை நன்றாய்ப் பார்த்தாயா?

ஹொ:—வெகு நன்றாய்ப் பார்த்தேன், பிரபுவே.



ஹாம்:—பாரடா பாடகன்: அரசனுக்கு நாடகம் பிரியமில்லாவிடில் எனக்கென்ன? ஒரு இயால் பாடு, என் மனம் களிக்கிறது.

ரோஸென், கில்டென் திரும்பவும் பிரவேசம்.

கில்டென்:—தங்களிடத்தில் ஒரு வார்த்தை பேசவேண்டும், பிரபுவே.

ஹாம்:—ஆயிரம் வார்த்தைகள் பேசுவதில் எனக்கு ஆக்ஷேபமில்லை.

கில்டென்:—நமது அரசன்.

ஹாம்:—நமது அரசனுக்கு என்ன ஆபத்து வந்தது?

கில்டென்:—அவருக்கு உடம்பு சரியாகவில்லை.

ஹாம்:—மதுபானத்தினாலோ?

கில்டென்:—அல்ல, பித்தோபரியாக இருக்கிறது (கோபமாயிருக்கிறார் என்பது).

ஹாம்:—நீங்கள் புத்திசாலிகளாயிற்றே; வயித்தியனையல்லவோ அழைத்துக்காட்டல்வேண்டும்; நான் அவருக்குப் பேதிக்குக் கொடுப்பின், அவருக்குப் பித்தம் அதிகரித்துவிடுமே.

கில்டென்:—நான் ஒன்று சொல்லத் தாங்கள் ஒன்று சொல்லுகிறீர்களே. சற்றுக் கவனித்து மறுமொழி சொல்ல வேண்டும், பிரபுவே.

ஹாம்:—நீங்கள் சொல்லுவதைச் சாந்தமாய்க்கேட்கின்றேன், சொல்லுங்கள்.

கில்டென்:—அரசியாகிய தங்கள் தாய் மிகவும் மனம் நொந்து என்னைத்தங்களிடத்திற்கனுப்பினாள்.

ஹாம்:—சந்தோஷம்.

கில்டென்:—எனக்குச்சரியான மறுமொழி பகர்ந்தால் தங்கள் தாயின் கட்டளையைத்தங்களுக்கு அறிவிக்கிறேன்: அன்றேல், தயவு செய்து எனக்கு விடைதரல்வேண்டும்.

ஹாம்:—என்னாலாகாது.

கில்டென்:—தங்களாலாகாதது என்ன, பிரபுவே.

ஹாம்:—சரியான ஜவாப்சொல்ல முடியாது; என்புத்தி கலங்கி நிற்கின்றது; என்னாற்கூடியமட்டில் மறுமொழி சொல்லுகின்றேன். விஷயத்தைச் சொல்லும். என் தாயாரென்று சொன்னீரே அது என்ன?

ரோஸெ:—தங்கள் நடபடிக்கை தாயாருக்கு ஆச்சரியத்தையுண்டாக்கியிருக்கிறதாம்.

[ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோனெனக் கேட்டதாய்.]

ஹாம்:—தாய்க்கு ஆச்சரிய முண்டாக்குகிற பிள்ளை உத்தமகுமாரனாயிருத்தல் வேண்டும். மேல்விஷயமிருந்தால் சொல்லும்.

ரோஸென்:—படுக்கப் போகுமுன் தங்களைக்கண்டுபேச வேண்டுமென்று தங்கள் தாயார் சொல்லியிருக்கின்றாள்.

ஹாம்:— அவளிஷ்டப்படி செய்வோம். உமக்கு நம்மிடத்தில் வேறு காரியமுண்டா?

ரோஸென்:—தங்களுக்கு மனநோய் வந்திருப்பதற்குக் காரணம் என்ன, பிரபுவே, அதை வெளியிடாமலிருப்பதினால் தங்களுக்கு ஆபத்து வரும்போலிருக்கிறது.

ஹாம் :—எனக்கு உத்தமபதவிகிடைக்காமலிருக்கிறது தான் காரணம்.

ரோஸென் :—இந்நாட்டுக்குத் தாங்களே யுவ ராஜா என்று அரசன் சொல்லியபிறகு அவ்வாறு நினைத்தற்கு ஏது இல்லையே.

ஹாம் :—ஆறுகரைபுரண்டு போனாலும் நாய் நக்கித்தானே குடிக்கவேண்டும்.

நாடகமாடிகள் நாதசுரத்தோடு பிரவேசம்.

நாதசுரக்காரர் வந்துவிட்டார்கள். உன்னுடன் இரகசியமாய் ஒரு வார்த்தை சொல்லவேண்டும். என்னை வலைக்குட்படுத்துவதற்கென்று நீ பல்வகையாக என்னைக் கேள்வி கேட்பது எதற்கு?

கில்டென் :—தங்களிடத்தில் எனக்குள்ள அன்பினால் மாத்திரம் அவ்வாறு செய்யத் துணிந்தேன், பிரபுவே.

ஹாம் :—நீ சொல்வது எனக்குத் தெரியவில்லை. இந்த நாத சுரத்தை வாசிக்கத் தெரியுமா உனக்கு.

கில்டென் :—எனக்குத்தெரியாது, பிரபுவே!

ஹாம் :—சிறிது பிரயத்தனம் பண்ணிப்பார்.

கில்டென் :—தெரியவே தெரியாது, பிரபுவே.

ஹாம் :—எப்படியாவது முயற்சிபண்ணிப்பார்.

கில்டென் :—எந்தஸ்தானத்தில் கைவைப்பதென்றே எனக்குத் தெரியாது, பிரபுவே.

ஹாம் :—பொய் சொல்வது எவ்வளவு எளிதோ அவ்வளவு எளிதுதான் நாதசுரம் வாசிப்பதும், துவாரங்களில் விரலை வைத்துக்கொண்டு ஊதினால் சாதிற்சிவிய சங்கீதம் உண்டாகுமே. இவைகள்தான் சுரஸ்தானங்கள்.

கில்டென் :—நான் ஊதினால் கர்ணகடூரமாயிருக்கும் : எனக்குத் தெரியாத விஷயம் இது.

ஹாம் :—நீ நல்ல சமர்த்தனடா, என்னைப்பெருமூடனாக்குகிறாயே? நாதசுரத்தினுடைய சுரஸ்தானங்களையறியாய்; என்னுடைய மர்மங்களைமாத்திரம் நன்றாயறிந்துவிடலாமென்றெண்ணுகிறாய். நாதசுரம் வாசிப்பதினும் என்னை ஆழம்பார்த்தல் அதிக சுளுவான காரியமென்றெண்ணுகிறாயன்றோ? என்மனத்தைப் புண்ணாக்கலாம். என் இரகசியத்தை நீ அறிந்து கொள்வது சாத்தியமல்ல போ.

போலோனியஸ் பிரவேசம்.

கடவுள் உம்மை இரக்ஷிப்பாராக!

பொலோ :—அரசி தம்மிடத்தில் இந்தக்ஷணமே பேசவேண்டுமென்று சொல்லுகிறார்.

ஹாம் :—அதோ தெரிகிற மேகம் ஒட்டகையைப் போலிருக்கிறதல்லவா?

பொலோ :—ஒட்டகையைப் போலத்தானிருக்கிறது, பிரபுவே.

ஹாம் :—கீரியைப் போலிருக்கிறதல்லவா?

பொலோ :—கீரிபோன்ற முதுகை உடையத்தாயிருக்கிறது.

ஹாம் :—ஓர் திமிங்கிலம் போலிருக்கிறதல்லவா?

பொலோ :—தத்ஜாதியமாயிருக்கிறது, பிரபுவே?



ஹாம் :—என்தாயை நான் பார்க்கிறேன் சீக்கிரத்தில் [தனக்குள்ளே என் மனம்போன போக்கெல்லாம் விட்டுத் தான் பார்க்கிறார்கள்.] கூடிய சீக்கிரத்தில் வருகிறேன்.

பொலோ :—அப்படியே தெரிவிக்கிறேன், [பொலோனியஸ் போய்விடுகிறான்.]

ஹாம் :—"சீக்கிரத்தில்" என்று சொல்ல நாழிகையாய் விடாது. நண்பர்களே நீங்கள் விடைபெற்றுக் கொள்ளலாம் [ஹாம்லெட்டைத்தவிர எல்லாரும் போய்விடுகிறார்கள்.]

[தனிமொழி] இது நள்ளிரவு: முதுகாட்டிலிருந்து தீ நாற்றம் உலகிற்பரவி எவர்க்கும் தீங்கிழைக்கும் காலம் : இப்போழ்து எந்தப் பாதகத்தையும் நான் செய்யத் துணியலாம் : பகலில் செய்வதற்கு அஞ்சும்படியானவற்றைச் செய்யலாம் : என் தாயைப் போய்ப் பார்த்தல் வேண்டுமே! அவளைப் பார்த்தவுடன் எனக்கு ஆத்திரம் ஜனிக்காமலிருத்தல் வேண்டும். மாதாவைக் கொன்ற நீரோ சக்கிரவர்த்தியின புத்தி எனக்கு வராமலிருத்தல் வேண்டும். சுடுசொல் என் தாயிடத்தில் சொல்வேன் : இயற்கைக்கு விரோதம் ஒன்றும் செய்யேன். அவள் மனதிற்குப் புண்ணுண்டாக்குவேனேயன்றிச் சரீரத்திற்குக் கேடுசெய்யேன்.

## மூன்றும் அங்கம்.

### மூன்றும் களம்.

அரசன், ரோஸென், கில்டேன் பிரவேசம்.

அரசன் :—அவனிடத்தில் எனக்குப் பிரியம் இல்லை; அவன் பைத்தியத்திற்கு இடங்கொடுத்தல் எனக்கே ஆபத்து. அவன் இங்கிலாண்டிற்கு இப்போழ்தே போய்விடவேண்டும் : உங்களுக்கு உத்திரவு பத்திரம் தருகின்றேன். பிரயாணத்திற்குவேண்டியவற்றைச்சேகரித்துவைத்துக்கொள்ளுங்கள். அவனிடத்தில் எனக்கு உண்டாயிருக்கும் அச்சத்திற்கு இனியும் இடங்கொடுத்தல் கூடாது.

ரோஸென், கில்டென் :—தயார் செய்து கொள்ளுகின்றோம். [ரோஸென், கில்டென் இருவரும் போய்விடுகிறார்கள்.]

போலோனியஸ் பிரவேசம்.

போலோ :—பிரபுவே: ஹாம்லெட் அவன் மாதாவின் அந்தப்புரத்திற்குப் போகின்றான். அவர்களிருவருக்கும் நடக்கும் சம்பாஷணையைக் கேட்பதற்கு நான் திரையின்புறத்தில் ஒளித்திருக்கிறேன். அவள் அவனைக் கண்டிப்பாளென்பது நிச்சயம். பெற்ற மனம் பித்து என்றுபழமொழி வழங்குதலால் அவள்தன்பிள்ளையிடத்துள்ள பக்ஷத்தால் சிலவற்றை ஒளிக்கலாம். ஆனதுபற்றிச் சமுகத்தில் சொல்லியவாறு வேறுயாராவது அவ்விருவருக்கும் நடப்பவற்றைக்கேட்டல் நலம். விடைபெற்றுக் கொள்ளுகிறேன். தாங்கள் படுக்கப்போகுமுன் நடந்த விஷயங்களை வந்து தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அரசன் :—உமக்கு வந்தனம், ஐயா. [பொலோனியஸ் போய்விடுகின்றான்].

(அரசன் முழந்தாளிட்டு.)

(தனிமொழி).—நான் செய்த பாவத்தின் நாற்றம் மூவுலகிலும் பரவி நிற்கின்றது. சகோதரஹத்தி ஆதிக்காலந்தொட்டு வெறுக்கப்பட்டதாயிற்றே. கடவுளைப்பிரார்த்திக்க

என் நா எழவில்லையே; மனம் பூர்த்தியாயிருந்தாலதென்ன? நான் செய்த கொடும்பாவமல்லவோ என்வாயைப்பூட்டிவிட்டது; இரண்டு காரியங்களை ஏற்றுக்கொண்டவன் முதலில் எதைத் தொடங்குகிறது என்றறியாமல் திகைத்தல்போல் நானும் புத்திகலங்கி நிற்கின்றேன். என் அண்ணனைக் கொன்ற இரத்தம் என்கையிற் கனமாய்ப் பூசப்பட்டிருந்தாலென்ன? அதை அலம்பிக் கையினைச் சுத்தஞ் செய்தற்கு மழை நீர் இல்லையா? குற்றஞ்செய்தவர்களை ஒழுங்குப்படுசெய்தற்கன்றி கருணை எதற்கு? கடவுளைப் பிரார்த்திப்பது பாவம் அனுகாமலிருத்தற்கும் செய்தபாவம் நீருவதற்குமல்லவா? ஆதலின் நான் கடவுளை நோக்குகின்றேன். என்பாவம் சென்ற காலத்தது கடவுளை எவ்வகையில் தோத்திரம் செய்தால் எனக்கு நன்மை பயக்கும்? "நான் செய்த கொலையை மன்னித்தல் வேண்டும்." இது பயன்படாது. நான் கொலைசெய்து அடைந்த அரசும், இராணியும், அதிகாரமும் என்வசத்திலுள்ளமட்டில் அவ்வகைப் பிரார்த்தனை ஒவ்வாது. பாவத்தினால் அடைத்தலாபம் ஒருவனிடத்திருக்கையில் அவன் மன்னிக்கப்படுவானோ? உலகத்தில் பணமுடையோன் பாவச்செய்கைகளால் அடைந்த பொருள்களைப் பரிதானங்கொடுத்துத் தன்வசமே வைத்துக் கொள்ளலாகும். கடவுள் சந்நிதியில் இத்தகைய நடபடிக்கை பலிக்காது. நமது குற்றங்கள் சாக்ஷியாக அவர் முன்னிலையில் வந்து நிற்கும். அங்குதந்திரங்கள் உதவி செய்யா. வேறு உபாயம் உளதோ? மனநைவு பாவத்தினின்று விடுதலை செய்யுமோ? எனக்கு மனநைவு உண்டாகவில்லையே. என் கஷ்டம் பெரிது, பெரிது. யமனைப் போல் கறுத்த சித்தமே வலையிற் சிக்கி வெளிவரப் பார்க்குங்கால் இன்னும் சிக்கிக் கொள்ளும் ஆத்துமாவே! தேவர்காள்! உங்கள் பிழை; கால்களே வணங்குமின்! இரும்பு போன்ற இருதயமே, சிசுக்கள் உடம்பைப் போல் வளை! க்ஷேமத்தை அடையலாம். [முழந்தாளிட்டுக் கொண்டிருக்கிறான்].

## ஹாம் லெட் பிரவேசம்.

ஹாம்:—இப்போழ்து கடவுளை வணங்கா நின்றான். அவனைக் கொல்ல இதுநல்ல சமயமே. இதோ கொல்லுகின்றேன். கொன்றேனாயின், என் சிற்றப்பன் மோக்ஷத்தையடைகின்றான். இவ்வாறு செய்வதனால் பழிக்குப் பழி வாங்கினவனாவேனா? அதைப் பரிசீலனை செய்தலவசியம். ஒரு பாவி என் பிதாவைக் கொன்றான். ஏக புத்திரனாகிய நான் அக்கொலையாளியை மறுமையில் நல்ல கதியையடையச் செய்கின்றேன். வெகு அழகாயிருக்கிறது! இது கூலி வேலையன்றோ? என் பிதா பிராயச் சித்தாதிகள் செய்து கொள்ளாமலும் பாவ நிவர்த்திக்கு வழி ஒன்றுந் தேடாமலும் இறந்தான். கடவுள் அவனுக்கு என்னகதி விதித்தாரோ நானறியேன். சிற்றறிவினராகிய நாம் தெரிந்து கொண்டமட்டில் என் பிதா நல்ல கதியடைந்திருத்தல் சாத்தியமில்லை. என் சிற்றப்பன் கடவுளை வழிபட்டுக் கொண்டிருக்குங்கால் நான் அவனைக்கொல்வதனால், அவனைத்தண்டித்தவனாவேனா? ஒரு போதுமில்லை, என்கையிலுள்ள வாளே! இது சமயமன்று கள்ளைக் குடித்துப் பாவங்களைச் செய்யும் தருணத்தில் என் சிற்றப்பனைத் தலைகீழாக வீழ்த்தி நரகத்திற்கனுப்புதல்தான் சரியான காரியம். என் தாய் காத்திருப்பாள். சிற்றப்பா! இப்போழ்து நீயுண்ணும் மருந்து உன் கஷ்ட காலத்தை நீளச் செய்கின்றதேயன்றி வேறில்லை. [ஹாம் லெட் போய்விடுகிறான்].

அரசன்:—வாக்கினால் கடவுளைத் தோத்திரஞ் செய்கிறேன். என்மனம் மட்டில் மண்ணிலே தான் நிற்கின்றது. வாக்கும் மனமும் ஒத்தாலன்றோ மோக்ஷம் கிடைக்கும்.



# மூன்றாவது அங்கம்.

## நான்காவது களம்.

### அரசும் போலோனியஸும் பிரவேசம்.

பொலோ:—உமது குமாரன் ஹாம்லெட் இப்போது வருவான்; அவனிடத்தில் கண்டிச்சொல் சொல்லவேண்டும்; அவனுடைய சேஷ்டைகள் பொறுத்தற்குக் கூடாதவையென்றும், அவனிடத்துண்டாயிருக்கிற மனஸ்தாபத்தைத் தணிப்பதற்கு நீர் மிகுந்த முயற்சிகள் செய்திருப்பதாகவும் சொல்லுதல் அவசியம். இத்தத் திரையின் பின்புறத்தில் நான் மறைந்து நிற்கிறேன். அவனைக்கண்டித்தல் வேண்டும்.

ஹாம்:—(உள்ளிருந்து வருகையில்) அம்மா, அம்மா, அம்மா.

அரசி:—(போலோனியஸை நோக்கி) நீர் என்னிடத்தில் சந்தேகப்படவேண்டியதில்லை: அப்படியே செய்கின்றேன். ஹாம்லெட் வருகிறான். நீர் ஒளிக்கப்போம். (போலோனியஸ் போய்விடுகிறான்.)

ஹாம்:—அம்மா, நீ என்னை அழைத்தது எதற்கு?

அரசி:—உன் பிதாவுக்குக் கோபமுண்டாக்கி யிருக்கின்றாய்.

ஹாம்:—என் பிதாவுக் கல்லவோ நீ மிகுந்த ஆக்கிரமுண்டாக்கியிருக்கிறாய்.

அரசி:—நான்கேட்ட கேள்விக்குத் தக்க உத்தரம் சொல்லவில்லையே.

ஹாம்:—உன் கேள்விகளே வீண் கேள்விகளாயிருக்கின்றன.

அரசி:—என்ன சொன்னாயடா, ஹாம் லெட்?

ஹாம்:—சமாசாரமென்ன?

அரசி:—நான் யாரென்பதை மறந்தாயோ?

ஹாம்:—கடவுளறியச் சொல்லுகின்றேன்: உன்னை மறக்கவில்லை. நீ அரசி; உன் பர்த்தாவின் சகோதரனுடைய மனைவி; உன்னை எனக்குத் தாயென்று சொல்ல மனம் வாராவிடினும்,—தாயென்று சொல்ல வேண்டியவனாயிருக்கிறேன்.

அரசி:—நான் பேசுவது சரியல்ல; உன்னிடத்தில் தக்க மனுஷ்யர்களைப் பேசும்படி செய்கிறேன்.

ஹாம்:—அம்மா இருக்கட்டும்; உட்கார்; இருந்த இடத்தை விட்டு நகராதே; உன்னுடைய அந்தரங்கம் இருக்கும் நிலைமையைக் காட்டுகின்ற ஓர் கண்ணாடியை உன் முன் வைக்கிறேன்.

அரசி:—என்ன செய்ய நினைக்கின்றாய்? என்னைக் கொல்லவா போகின்றாய்? யாரடா, வேலைக்காரர்கள்! வாருங்கள், வாருங்கள் பொலோ [திரையின் பின் பக்கத்தில் நின்று கொண்டு] வேலைக்காரர்களா, வாருங்கள், வாருங்கள்.

ஹாம்:—[கத்தியை உருவிக் கொண்டு] என்ன எலியோ, இதோ கொன்றேன் [திரையின் பின் புறத்திலிருந்த பொலோனியஸ் குத்துப்பட்டான்.]

பொலோ:—[பின்னிருந்தபடி] நான் செத்தேனே! [உடனே கீழே வீழ்ந்தான்.]

அரசி:—என்ன காரியம் செய்தாயடா!

ஹாம் :—ஒன்று மில்லையே : அங்கிருந்தது அரசனே?

அரசி :—என்ன பெருங் கொலை செய்தாயடா!

ஹாம் :—இது ஒரு கொலையா! அம்மா, அரசனைக் கொன்று மைத்துனனை மணம் புரிவதனினும் இது கெட்ட காரியமோ, அம்மா?

அரசி :—அரசனைக் கொல்லுகிறதா!

ஹாம் :—அப்படித் தான் சொன்னேன், மேமாட்டி [திரையைத் தூக்கிப் பொலோனியஸ் மாண்டு கிடப்பதைக் கண்டு]

அடா பாவி: உன்னை நல்லவனென்றல்லவோ எண்ணியிருந்தேன்; இந்தகதி உனக்குவந்தது தகுதியே. பிறர் காரித்தில் பிரவேசித்தால் பிராண ஹானி யென்று தெரிகிறதா? அம்மா, கையை ஏன் பிசைகின்றாய்? படபடத்தல் வேண்டாம்; உட்காரு; உன்னுடைய இருதயத்தைப் பிழிந்து விடுகிறேன். பழகப் பழகப் பாறும் புளித்தால் போல உன் மனம் நன்னெறியிற் செல்லா வண்ணம் இறுகிப் போகா திருக்கு மாயின், அதையும் இளகச் செய்வேன்.

அரசி :—நான் செய்த பிழை என்னடா, பிதற்றுகின்றாயே.

ஹாம் :—நீ செய்த காரியத்தை நான் என்னென்று சொல்வேன்! கற்பின் அழகை அழித்து விட்டாய்; நற்குணத்தையும் கபடத்தையும் ஒன்றாய்க்கி விட்டாய்! காதலைக் குருபப்படுத்தினாய்; மணத்திற் கூறும பிரதிக்கினைகளைக் சூவாடுவோனுடைய வாக்கைப் போல் பொய்யாக்கினாய்; சொல்லினுக்கும் பொருளினுக்கும் சம்பந்த மில்லாமற் செய்து விட்டாய்.

தெய்வபக்தியைப் பரிகாச வார்த்தை யாக்கினாய் உன் காரியத்தைக் கண்ணுற்ற கடவுளுக்கு மிகுந்த கோப முண்டாயிருக்கின்றது : இவ்வுலகமே நகைக்க முற்றிருக்கின்றது. றென்சொல்வேன்.

அரசி :—நான் செய்ததென்ன, நீ இப்படிக் கதறிப் பழிக்கின்றாயே.

ஹாம் :—[கையில் இரண்டு சிறிய படங்களை வைத்துக்கொண்டு] முன்னும் பின்னும் உனக்குப் புருஷர்களான இரண்டு சகோதரர்களுடைய படங்களையும் பார். மூத்த புருஷனாகிய என் பிதாவின் முகவடிவையும், சுருண்ட தலை மயிரையும், அகன்ற மார்பையும் அச்ச முறுத்தும் நோக்கையும் கந்திருவன் மலையுச்சியில் நிற்றல் போன்ற நிலையையும் பார். தெய்வங்கள் ஒருமித்துப் புருஷனுக்குண்டாகிய தான். கடவுள் அவனு என் பிதாவினிடத்தே அமைந்திருந்தனர்கள் போலும். தெரிந்து கொண்டிருந்தார். இப்போழ்து உனக்குக் கணவனாயிருப் பவனை சிற்றப்பன் கடவுளை கோடரிக் காம்பு போலிருக்கின்றான். உனக்குக் கண் இனத்தன்மடித்தவனு மலையை விட்டு வெட்டி வெளியில் வயிற்றை நிரப்பப் இலக்ஷணங்களை யெல்லாம் பார். உன் வயதில் காமப் பேய் பிடித்தாமோ? சித்தத்துவர் தாம் உனக்கு நாயகனுக செலுத்தும் படியான காலம். உனக்கு வெட்க மில்லையோ ப்பார். குலத்தைக் கெடுக்கவந்த காமப் பேய் இத்தனை விகாரங்கள் செய்யுமாயின் இருக்கிறதா? புல்லடர்ந்த இந்த தீயிற் பட்ட பொருள்போலெரிந்து நாசமடைதல். பின் போகலாமா? கண்ணை விளக்கிப் க்காக நடத்தத் தவறிப் போமாயின் பின் எது தா றேன்றதை ஒழுங்கான வழியிலல்லவோ

அரசி :—அடா, ஹாம் லெட், போதும், ரோ? முதியனாயிருப்பவனிடத்தில் என் அகக் கண்களை நீ திறந்து விட்டாய். ளையோரிடத்தில் கற்பு நிலைமை மை யன்றே ஞானம் சித்தத்தை ஒழு ன் சரிப்படும்.

பாது யடா, இனி பேசுதல் வேண்டாம்.



கின்றாய் அறிகின்றேன்: உன் சொற்கள் என் காதிற்கு நவரசமாயிருக்கின்றது. ந்தாய், ஹாம் லெட், போது மடா.

ஹாம் :—கொலை செய்த பாதகன் உன் மூத்தான் யோக்கியதையின் சதாம் சத்திஃ ஒரு பாகங் கூட உடையவனல்ல! வேஷ அரசன்; மகுடத்தையும் அரசுரிமையையுந் திருடிப்பைக்குட் போட்டுக் கொண்ட பாவிக் கள்வன்.

அரசி :—போதும், அப்பா போதும்.

[இறந்து போன ஹாம் லெட்டின் பைசாச ரூபம் இளவரசன் ஹாம் லெட்டின் கண்ணிற்கு மாத்திரம் தோற்றல்].

ஹாம் :—தேவர்களே, இரக்ஷியுங்கள் (பிசாசை நோக்கி) உனக்கு வேண்டிய தென்ன?

அரசி :—அந்தோ என் பிள்ளைக்குப் பைத்தியம் பிடித்ததே.

ஹாம் :—[பிசாசை நோக்கி] உன்னுடைய பிள்ளை வாக்குக் கொடுத்தபடி செய்யாமல் தாமதித்ததற்கு அவனைக் கண்டிப்பதற்காக வந்தாயன்றோ? சொல்.

பிசாசு:—மறக்காதே உன் காரியத்தின் முனை மழுங்கிப் போயிற்று : அதைத் தீட்டுதற்குத் திரும்பவும் வந்திருக்கிறேன். உன் தாய் புத்தி கலங்கி நிற்கின்றாள், பார்; அவளுக்கு ஆறுதல் சொல்லு : மனத்திட மில்லாதவர்களுக்குக் கலக்க முண்டாயின் அது பெருங் கேடு : ஹாம்லெட், அவளிடத்தில் பேசு.

ஹாம் :—அம்மா, உனக்கு உடம்பு என்ன செய்கிறது?

அரசி :—ஒன்றுங் காணாத இடத்தில் எதையோ கண்டது போலப் பேசுகின்றாயே, உனக்கு உடம்பு என்னவோ? வெருண்டு வெருண்டு விழிக்கின்றாயே உன் ஆத்திரமாகிய அக்கினியில் பொறுமை யாகிய தண்ணீரைத் தெளி. எங்கு பார்க்கிறாய்?

ஹாம் :—அவனைத் தான் பார்க்கிறேன் : அவன் முகத்தைக் கண்ணுற்றவர் கல்லாயிருப்பினும் மனமுருகி நிற்பார்கள். [பிசாசை நோக்கி] என்னை நீ அப்படிப் பார்த்தலாகாது என் மன உறுதி குறைந்து காரியத்தைச் செய்வதை விட்டுக் கண்ணீரை விட்டு நின்றுவிடுவேன்.

அரசி :—யாரிடத்தில் இவ்வாறு பேசுகின்றாய்?

ஹாம் :—உன் கண்ணில் ஒன்றும் படவில்லையா?

அரசி :—ஒன்று மில்லை : இருக்கின்ற பொருள்களை யெல்லாம் பார்க்கின்றேனே.

ஹாம் :—உன் காதில் ஒன்றும் படவில்லையா?

அரசி :—நம்மிருவருடைய குரலைத் தவிர வேறொன்று மில்லை.

ஹாம் :—அதோ போகின்றது பார், என் பிதாவின் உருவம். அவன் ஜீவதசையோடிருந்தவாறே இருக்கின்றது. அதோ மறைகின்றது, பார் [பிசாசு மறைகின்றது].

அரசி :—பித்தர்களுக்குத் தோன்றுவ தெல்லாம் உனக்குந் தோன்றுகின்றதே, பாவம்!

ஹாம் :—பைத்திய மென்றா சொல்லுகிறாய்? என் நாடியிற்கும் உன் நாடி யிற்கும் பேத முண்டா, பார் நான் பைத்தியத்தினாற் பேசவில்லை, நான்சொன்ன ஒவ்வொரு சொல்லையும் திருப்பிச் சொல்லுகிறேன். பித்தர்கள் தவறுவார்கள் அம்மா, உனக்குப் புண்ணியமுண்டு உன் பாவங்கள் என்னைப் பேசும் படி செய்ததே யன்றி என் பைத்தியமல்ல.

2

னை வெறியனென்றெண்ணி நீ நல்லவனென்று கருதுவாயின் உன்னுக்கு மருந்திட வேண்டிய வியாதிக்கு வெளிப் பற்றுப்போட்டுத் தீர்க்க முயல்வதுபோலாகும். உன் பாவங்களைக் கடவுளிடத்திற் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொள்.

அரசி:—என் இருதயத்தை இரண்டாய்ப் பிளந்து விட்டாய்,

ஹாம்:—அதிற் கெட்ட பாதியை எறிந்து விட்டு நல்லதை வைத்துக் கொண்டு நன்னெறியில் நடப்பாயாக. நான் போய் வருகிறேன் என் சிற்றப் பனிடத்தில் படுக்கப்போகாதே செம்மைக் குணம உன்னிடத்திலில்லா விடினும் இருப்பது போல் பாவனை செய். கடவுளின் கிருபையைப் பெற உனக்குப் புத்திவருங்கால்நானும் உன் அநுக்கிரகத்தைநாடுகிறேன். [பொலோனியஸின் பிரேதத்தை நோக்கி] இவரைக் கொன்றதற்காக நான் அவரைக் கொல்ல வேண்டுமென்று கடவுளாக் கிளையிருந்தது போலும்அவரை அடக்கஞ்செய்து அவர் கொலைக்கு உத்திர வாதஞ் செய்கிறேன். விடை பெற்றுக் கொள்ளுகிறேன் அம்மா, பிரியமா யிருத்தற் காகவே கொடுமையும் செய்ய வேண்டியவனாயிருக்கின்றேன். சிறு கேடு ஆரம்பித்து விட்டது. பெருங்கேடு இனி உண்டாக வேண்டியது.

கே. வெங்கிடராமய்யர், பி. ஏ.

## கல்வி யாது?

(விவேக விளக்கம்.)

புருஷர்களில் அநேகர் பள்ளியிற் பயிலுங் காலத்தில் இலௌகிக விஷயத்திற் குரிய கல்வியைக் கற்று பல பரீக்ஷைகளிற்தேறிபெரியஉத்தியோகங்களைச் செய்யவேண்டுமென்கிற அவாவொன்றையே கடைப் பிடியாகப் பிடித்துக் கொண்டு வருகின்றார்கள். இம்மார்ச் சாலப் பிடியிருப்பது அவசியமாயினும் அக்கல்வி இகத்திற்குப் பிரயோஜனமேயொழிய பரத்திற்குறிய தல்ல. இகத்திற்குறிய கல்வியைக் காட்டிலும் கடவுளுடைய அடிமலரைத் தொழுது நிற்கும் கர்க்கடகப் பிடியாகிய கல்வி யொன்றே எக்காலத்தும் பலன் தருவதாயிருக்கும் ஆகையினாலே "வித்தைவிரும்பு, வீடுபெற்நில்" என்று ஔவையாரும்சொன்னார். அரசன் முதல் பிச்சைக் காரனீறாகவுள்ள யாவரும் வயிற்றை எப்படியாகிலும் வளர்த்துக் கொண்டு வருவதை பிரத்தியக்ஷமாய்க் காண்கிறோம். ஈசுவரனுடைய திருவடிக் கன்பராய் பரலோகத்தை அடையும் வித்தையைக் கற்றுத் தெளிவது ஏகதேசமாயிருக்கிறது. இப்படியாதற்குக் காரணம் ஆரியமத நூல்களைச் சிறுவர்களுக்குச் சிறுவயதில் பயல் விக்காதிருப்பதேயாகும். அரசாங்கத்தார் பள்ளிக்கூடங்களுக்கேற் படுத்தும் நூல்களில் நீதி மார்க்கங்களை மாத்திரம் காணலாமே யல்லாமல், பக்தி மார்க்கம் கிடையாது. இதற்கு ஔவையார் நீதி வாக்கியங்களில் "திருமாலுக்கடிமைசெய்" வேதத்தைப்பேணிற்வத்திற்கழகு" என்பவாதி வாக்கியங்களை எடுத்து விட்டுப் பதிப்பித் திருக்கு மொன்றே போதுமான சாக்ஷியாக விருக்கிறது ஆகையால் நஞ்சிறுவர்களுக்கு மதநூல்களை போதிக்க வேண்டியது அவசியம். இப்பக்தி மார்க்கத்தை பள்ளியிற் பயிலுஞ் சிறுவர்களுக்கு முளையிலேயே கிள்ளி யெறிந்து விடுவதால், அவர்கள் பிரம வித்தையை யறிந்து கொள்ளக் கூடாமற் போகின்றார்கள். இவ்வண்ணமாக மகம்மது, கிறிஸ்து மார்க்கச் சிறுவர்களுக்



குச் செய்யாமல் அவரவர்கள் மதபோதனைகளை யூட்டுவதால் அவர்களுக்குப்பக்திசிறப்பிக்கின்றது எங்கேனும் ஒன்றி ரண்டு ஆரியமத போதனைச் செய்யும்பள்ளிக் கூடங்களிருப்பினும், அப்போதனை யொன்றால் யாதொரு பயனுமில்லாமற் போகின்றது. பலதுளி பெருவெள்ளமாகுமாப் போல் எங்கும் ஆரியமத நூல்களைப் போதிக்க முயற்சி செய்வது அவசியமாயிருக்கிற தென்பது சொல்லாதமையும்.

இது நிற்க நஞ்சிறுவர்கள் நீதிகளையேனு முணர்ந்திருக்கிறார்களென்று பார்த்தாலோ அவைகளை பாலியத்திலேயே மறந்து போய் செருக்குக் கொண்டு "கற்கக்க சடறக் கற்பவை கற்றபின் நிற்கவதற்குத்தக" என நிற்காமல் வன்னெஞ்சுடையராய் வம்பருக்குள் பருமாகின்றார்கள். இவர்கள் விசாலித்த அறிவு உண்டாகும் படி மெய்ஞ் ஞானத்தைக் கற்றாலும், அடங்காதார் எக்காலத்தும் அடங்கார். அகன்ற கண்ணையுடைய நங்காய் உப்போடு நெய் பால் தயிர் காயம் பெய்துசிறப்பின் பாகம் செய்யப் படினும் பேய்ச்சுரையின் காய் கைப்பு அறாது. "இடம் பட மெய்ஞ் ஞானங் கற்பினுமென்று மடங்காதாரென்று மடங்கார்—தடங்கண்ணாய், உப்போடு நெய்பால் தயிர் காயம் பெய்திடினும், கைப்பறு பெய்ச் சுரையின் காய்" என்றவாக்கியங்களுக்கு ஒப்பாய் விடுகிறார்கள். எனேனின், அவைகள் இனே இனே கல்வி, நீதி, மதபோதனைகளைப் பெறுதிருக்கிற குறையேயாம்.

அடிமைப் பெண்களால் ஒழுக்கமும் வேசியால் ஆயுள் குறைவும், பிறர் மனைவியால் எல்லா நலமும் போகும் என்பதை சிறுவர்களறிந்தும், அவர்களையே தேடி அலைந்து கெடுகின்றார்கள். இவைகளை யெல்லாம் ஒழிப்பது கடவுள் தியானம் ஒன்றினாலேயாகும் ஆகையினாற்றான் தெளிவு பொருந்தி அழகிய பாதங்களைத் தொழாது போவார்க்குக் கற்றதினால் வரும்பயன் என்னை? "கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவனற்றாள் தொழாஅரெனின் என்று கூறப்பட்டிருக்கிறது.

## பரோடா மஹாராஜாவின் வெள்ளி ஜூபிலி.

இம் மார்ச்சு மீ 5ந் தேதி யாகிய செவ்வாய்க் கிழமை தினம் பரோடா நகரத்தில் பல விழாக்கள் கொண்டாடப் பட்டன. அத்தினத்தில் பரோடா மஹா ராஜாவின் குடிகள் மட்டுமே அன்றி மற்ற இந்தியாவில் உள்ள ஜனங்களும் மிகத் திருப்தி யடைந்து அந்நாளைத் திரு நாளாய்க் கொண்டாடி யிருப்பார் என்பது திண்ணம். இத்திருநாள் கொண்டாடுவதற்குக் காரணத்தைச் சிறிது கவனித்தால், அத்தினமே பரோடா காயக்வார் மஹாராஜாவுக்கு இராச்சிய பரிபாலன விஷயத்திலே 25-வது வருஷம் முடிவு பெற்ற தினமாகும்.

லார்ட் ரிப்பன் என்னும் வைஸிராய் காலத்திலேஇவரிடம் பரோடா ராஜ்யம்ஒப்புவிக்கப்பட்டது. அன்று முதல் இம் மஹாராஜா தம்நாட்டுக்கு வேண்டிய பல்விதச் சீர்திருத்தங்களைச் செய்து வருகிறார். இவர் ஐரோப்பா முதலிய இடங்களுக்குத் தம் ராணியோடு சென்று. அத்தேசங்களில்நடைபெற்றுவரும் கைத்தொழில்வேலைகளையும், கல்வி

விருத்தியினையும் வெகுவாய்க் கவனித்து அவ்விதமே இந்தியாவும் முன்னுக்கு வர வேண்டும் என்று தேசபக்தி கொண்டு போராடுகிற ராஜ பூஷணம்." இவர் தம் நாட்டிலுள்ள குடிகள் கல்வியிலும், வலிமையிலும், செல்வத்திலும் நடையிலும் நயபழக்க முறச் செய்யும் செயல்களை எடுத்துரைத்தல் சாத்தியம் இல்லை. மஹா வித்துவ சிரோன்மணியும் தேசபக்தரு மாகிய ஸ்ரீரமேச சந்திரதத் தரை மந்திரியாகக் கொண்டு, இவர் தேசமுன்னுக்கு வரப்படும் பாடு இன்ன இன்ன விதம் என்று சொல்லவும் நமமால் முடியாது. பரோடா மஹா ராணி யார் கல்கத்தா மாதர் சங்கத்திலே சொல்லிய படி. அனைவரும் தேசபக்தி கொண்டு நன் மார்க்கத்தில் முன்னுக்கு வரும் படி உழைத்தல் நியாயம் எனவும் படித்த இந்திய சகோதரிகளைத் தாம் பார்க்க நேர்ந்த மனக் களிப்பு இனைய தெனவும் அனைவரும் அறிய வெளிப்படுத்தினார் இது பெண்கல்வி விஷயத்திலே இம்மஹா ராணிக்கு எத்தனை கவலை என்பதைக் குறிக்கின்ற தல்லவா?

ஆகையால் தேச பக்தியிற் சிறந்த பரோடா மஹா ராஜாவின் பெருமையைப்பலபல விதம் ஜனங்கள் புகழ்கிறார்கள். இராச்சிய பரிபாலன விஷயத்தில் ஆழ்ந்தான்றி ஆலோசித்து நல்வழி நடக்கும் சீலர் எனச் சிலர் புகழ்வார்கள். சிலர் இவரை ஜனசார விஷயங்களிலும் சீர் திருத்தங்களிலும் சிறந்த மதிநுட்ப என்பார்; சிலர் நாட்டிலுள்ளோர் முன்னுக்கு வரக் கல்வியும் கைத் தொழிலும் சேர்பித்துக் கவலை யறக் காலம் கழிக்கச் செய்யும் குணத்தார் என்பார், சிலர் என்றும் அகலா ஜீவகாருண்யமும் பரோபகாரமும் நிறைந்த அரசர் எனபார். இவ்விதப் பெருமை வாய்த்த பாரத மாதாவின் சிறந்த தொண்டராய இம்மாஹான் தம் நாட்டைச் சிறப்போடு ஆண்டு நீடூழி வாழ்க! வாழ்க!

---

# அரிச்சந்திரன்.

## 5-ம் அத்தியாயம்.

---

(162-ம் பக்கத்தொடர்ச்சி.)

சந்திர மதிக்குச் சுடுகாடு இருக்கும் இடம் அறியாள்; பிணங்கள் சுடுகின்ற பெரு நெருப்பு எரிகிற குறிப்பாலும், சுடலைகளிலே சுற்றித் திரிந்து பிரேதங்களைப் பூரத்தியாய்த் திக்கப் புலையர் இடுகின்ற கூச்சலும், பிணம் சுடும் கொடிய நாற்றமும், புகையும் மிகுந்த தீயும் வெளிப்படுவதாலும் இதுவே மயான மென அறிந்து சென்றனள். தன் பிள்ளையை ஓரிடத்தே வைத்துப் பல திசையும் விரைந் தோடிக் குறைக் கட்டைகளை யெடுத்து வந்து ஐதை யமைத்துத் தன் மகனை அதன் மேற்போட்டுத் தீ மூட்டினள்.

இதை நடுவிரவானதால் ஒருவாறு அங்கு காத்திருக்கும் காவலனும் அரிச்சந்திரன் கண்டு அவசரமாய்ப் பறந்து வந்து "அடீ, நீ யாரடி, நீ மூடி, எமக்குரிய காற் பணம் பொருளையும், கொள்ளி யாடைத் துண்டையும் வாய்க் கரிசியும் கொடுத் தன்றோ நீ பிணம் சுட வேண்டியது. அவ்வண்ணம் நடக்கும் வழியிருக்க இவ்வண்ணம் செய்தல் அழகோ? திருடிக் குறைக் கட்டைகளை எடுத்து வந்து ஐதை மூட்டுதல் இயல்போ? இது



...ளியின் வழியல்லவா? நீ செய்வது தருமத்துக் கடாது" என்று சொல்லிக் கால் நீட்டி ...தலையைக் களைத்து பிணம் கீழ் விழச் செய்தனன்.

இதைக் கேட்டுச் சந்திரமதி மதிதயங்கினாள்; ஈசன் இட்டவழி இதுவோ என வருந்தினாள் நெடுமரம் கீழ் விழுந்தால் அன்னத் தரையில் விழுந்து அலறினாள். "ஏ, காவலரே, நான் ஒரு மிக ஏழை. இவ்வூரிலே வழங்கு நீதி அறியேன். எனக்கு ஒரு வரும் உதவி செய்வார் இல்லை. பாவியாகிய நான் என் மகனை ஸ்மசானத்திலே தகிக்க வந்தேன். உறவினர் உண்டேல் என் மகனைத் தோள் மீது எடுத்து வர நீதி உண்டோ? ஐயா நீர் தெய்வத்துக் கிரங்கி ஏழையை என் மகனைச் சுட உத்தரவுதந்தருளும்" என்று வேண்டினாள். அவன் காலில் வீழ்ந்து அலறினாள். இதற்கு அரிச்சந்திரன் "என்னைவிடு, நான் புலையன் அல்ல. புலையற்கு நான் ஒரு அடிமை. என்னை நீ வணங்கு தல் நியாயம் அன்று. நான் சொன்ன பொருளையும் துண்டையும் கொண்டுவா. அவைகளைப் புலையற் களித்து விடுவேன். வாய்க் கரிசியோ என்னது. அதை நான் விரும்பவில்லை" என்றனன். இதைக் கேட்டுப் பெண்மணியும் பலவிதமாய்ப் புலம்பி பஞ்சிபடும் பாடு படும் பாவியேற்குப் பணமேது கொள்ளி முறிப்பாதி யேது" என்று சொல்லுகையிலே காவலன் "பாவாய், நீ ஒரு ...ர்த்தி. உன்னைப் போல யான் ஒருவரையும் கண்டதில்லை. உன் கழுத்தில் மங்கல ...ன் இருக்க ஒன்றுமில்லை யென்று வீணே பொய் சொல்லுகிறாய். இதனை ...யனுக்குக் கொடுத்து உன் வேலையைச் செய்து கொள்" என்றனன்.

இம் மொழிகளைக் கேட்டுச் சந்திரமதி மனம் நடுங்கினாள்; தளர்ந்து வாடினாள். ...கெடு காலம் நமக்கு எனப்புலம்பினாள்; பின் வரும் வண்ணம் மனம் கதறுவாள்: "என் ...அருமை மங்கலம் அரிச்சந்திர மகாராஜ பாவனுக் கன்றிவேறொருவர்க்கும் காணப்படாதே! ...நான் எவ்விதமான தப்பு செய்திருப்பினும், கற்புக்கு மாறுதல் செய்து அறியேனே! விசுவாமித்திர மகாமுனிவன் சூழ்ச்சி இதிலும் உளதோ? தெய்வ வாக்களித்த பரமசிவன் மொழி ...ரும் பழி விளங்குமோ? என் தந்தை யாகிய சுகேசி அரசற்கு என்னை மணம் புரிய வருவார் எவர்க்கு என் காணரும் மங்கலம் காணுமோ அவரே எனக்கு நாதன் என்று அளி...த்த வாக்கும் பொய்யோ? என் தந்தைக்கு உற்ற நற்பெண்ணாயும், என் நாதருக்கு உற்ற ...பதிவிரதா சிரோன் மணியாயும், என் குழந்தைக்கு உரிய அன்புள்ள மாதாவாயும் இருப்...பதில் நான் ஒரு சிறிது தவறையும் அறிந்திலனே! அரிச்சந்திரர்க்குச் செல்வம் போய், ...பதி போய், மகன் போய், கீழ்மை வரினும் என் கற்புப் போவதற்குக் காரணம் ...என்ன வென்று அறிகிலனே! ஆஹா, இத்தனையும் வேதியராகிய விசுவாமித்திரரின் சூழ்...ச்சியோ! ஏதேவா, என் செய்வேன்! என் செய்வேன் ! விதித்த விதி இதுவோ !"

இம்மாதிரிச் சந்திரமதி தடுமாறு வதை அரிச்சந்திரன் கண்டு" இவள் நமது மனைவி, ...நம்குழந்தை காட்டுக்குச் சென்று பாம்பு கடிக்க இறந்தனன். ஏ பாலா, நீ என்னை எவ்...வண்ணம் நொந்தனையோ? தந்தை அன்னையும் மகனும் அடிமை செய்ய ஓர் இடத்திலே ...விட்டு சென்றனன் திரும்பி நம்மை மீட்பனோ என்றனையோ ?' நம் நாடு இழந்தோம்; ...நலம் இழந்தோம்; எம்மை நீ பின் தொடர்ந்து இவ்வண்ணம் உன் கதி முடிந்தது! உன் ...தாயை அடிமை யாக்கிய போது நீ பென்னைப் பிடித்து நெருங்கவும் அன்பில்லா வேதியன் இழுத்ததையும் கண்டேன். அத்தந்தை நம்மை மீட்க வாரான் என்றெண்ணிப் பாம்...பின் வாய்ப் பட்டிறந்தனையோ? ஐயோ, பாம்பு தீண்டிய காலத்தே என்ன என்ன எண்...ணங்கள் எண்ணினையோ? பிறந்த காலத்தே ஒருவன் இறப்பது நிச்சயம் என்று அனைவ

ரும் அறிவர். நீ இளமையிலே செல்வ சம்பத்து முதலிய அநுபவியாமலே இறந்தது எ
குடும்பத்தார் செய்த கொடுமையே அன்றோ? ஐயோ, என் கண்ணே, உனக்குச் செய்
வேண்டிய கடமைக்குப்பதிலாய் உன் தாயினை தோள்மீதேறி ஸ்மசானம் வந்தனை” என்
துக்கித்ததைக் கண்டு பெண் மணியும் இவன் அரிச்சந்திரனே என்று உணர்ந்தன
அவன் காலடி வணங்கினள். உத்தம, விதித்ததல்லது வேறனுகாது” என்று நான் அ
ந்தேன் ‘நீர் தருமத்தை தினையும் வேறு விஷயங்களைக் கவனித்தல் மார்க்கம் இல்லை’ எ
றனை. இவ்வற்புத தம்பதிகள் சந்தித்த இடமும் சந்தர்ப்பமும் எவ்விதமான தென்
இதைப் படிப்போரே அறிவார். பலவிதம் வார்த்தையாடிச் சந்திரமதி வேதியனிட
போய் பணமும் கொள்ளி யாவையும் கொண்டு வருவேன் எனச் சென்றனன்.

---

# ராய்பகதூர் சீதாராம் விஸ்வநாத் பட்டவர்த்தன் அவர்கள் பி. ஏ.

---

சென்ற நூற்றாண்டின் துவிதியார்த்தத்தில் எழுதப்பட்ட தக்கண நவீன சரித்திர
தில், கேவலம் தரித்திர குடும்பத்திற் ஜனித்தும் தங்களுடைய பொறுமை, விடாமுயற்
இவைகளின் பலத்தால் முடிவில் அறிவு தனம் பெருகி அதிக உன்னத ஸ்திதியை யடை
தவர்கள் பலருளர் என்பதைக் காணலாம். இவ்விஷயத்தில் உண்மை பீரார் மாகாண
களில் பொது வித்யா விசாரணைத்தலைவராக இருந்து (Direcor of Public Instruction)
இந்த ஆறு ஆண்டுகளாகப் பென்ஷன் பெற்றுவரும் ராய்பஹதூர் சீதாராம் விஸ்வநாத்
பட்டவர்த்தனர் அவர்களின் சரித்திரம் வாசிப்பவர்களுக்குத் தெளிவாய் விளங்கும்.

Mr. சீதாராம் அவர்களின் பூர்வ (முன்னோர்) புருஷர் ராஜப்பூர் தாலூகாவையடுத்
த ஒரு சிறு கிராமத்தினர். Mr. விஸ்வநாத் கிருஷ்ண பட்டவர்த்தன வென்னும் நாமம்
வகித்த இவர் பிதா பிக்ஷாடனம் செய்து வந்த ஓர் வறிய அந்தணர். அவருக்கு இருபது
பிராயம் முடியவே தம் முன்னோர்கள் விர்த்தியை விட்டொழித்து ராஜப்பூர் வந்தடைந்து
ஓர் வர்த்தகனிடம் ஓர் குமாஸ்தாவாக அமர்ந்தனர். அமர்ந்து பத்து வருஷம் கழிந்தபின்
னர், தம் குடும்பத்தை வரவழைத்துக் கொண்டு ராஜப்பூரிலேயே ஸ்திரமாய் வசித்து வந்
தனர். அவருக்கு பத்து புத்திரர்களும் இரண்டு கன்னிகைகளு முண்டு. அவர்களுள்
Mr. சீதாராம் என்பவர் தான் ஐந்தாவது புத்திரர்.

சீதாராம் என்பவர் 1840 ஆம் ஆண்டு மார்ச்சு மாசம் 30 தேதியில் ராஜப்பூரில் ஜனி
த்தனர். இவரது ஆரம்பிராயத்தில் இவரை மராத்தி பாடசாலைக்கு அனுப்பினார்.
1856-ம் வருஷத்தில் இரத்தினகிரியில் உபாத்தியாயர் பரீக்ஷையிற் றேர்ந்தனர். இப்ப
ரீக்ஷையிற் றேர்ந்த பின்னர் ராஜப்பூரில் ஓர் உபாத்திமைத் தொழில் கிடைக்குமென்று
எதிர் பார்த்துக் கொண்டிருக்க மற்றொருவருக்கு அவ்வேலை கிடைக்கவே தகுந்த வேலை
சாம்பாதிக்க இரத்தின கிரிக்குத் திரும்பிப் போகத் தீர் மானித்தனர். கடைசியாக ஆங்
கிலம் கற்கப் பூனாவுக்குப் போகத் தீர் மானித்தனர். தமக்குக் கிட்டுமென்றெண்ணியிருந்த
உபாத்திமை வேலை தவிர்ந்து போனதே சீதாராம் உலகிற பிரக்யாதி யடைந்து அதில் உன்



நதபதவிக்கு வரக் காரணமாயிருந்தது. பூனாவுக்குச் சென்று ஆங்கிலம் அப்பியசிக்க
கொ ஆவலிருந்தும் அங்ஙனம் பிரயாணஞ் செய்வதற்குக் கையில் ஒரு காசுங் கிடை
து.

ராஜப்பூரின் கண் வசித்த Mr. கேசவராவ் பட்கி என்ற ஓர் வியாபாரி இச்சமயத்தில்
ண்டரா புரத்திற்கு யாத்திரை போகச் சித்த மாயிருந்தனர். இவ்வாலிப சீதாராம்
வ்னவரோடு கூடப்போகத் தீர் மானித்து இரத்தினகிரி ஜில்லாவிலுள்ளதஹிவாடி என்
மோர் கிராமம் வரையிலும் பின் சென்றனர். இவ்விடத்தில் அவ்வர்த்தகரைப் பிரிய
வண்டியிருந்தது. தஹிவாடியிலிருந்து சதாராவுக்கும் அங்கிருந்து பூனாவிற்கும்
சய்த பிரயாணம் மிகப்பிரயாச மாயிருந்தது. இவ்வளவு தூரப் பிரயாணத்திற்கு சீதா
ரமிடம் இருந்த பொருள் ஒரு ரூபாய் நான்கே அணா (1—4—0) வும் உண்டி பதார்த்த
மில் ஒரு வெல்லப் பாகும் அரை சேர் அரிசிமாவுமே.

தஹிவாடிக்கும் சாதாராவுக்கு முள்ள தூரம் 36 மயில். சீதாராம் தம்மிட மிருந்த
அற்ப ஆகாரத்தைப் புசித்துக்கொண்டு இவ்வளவு தூரம் கால் நடையாகவே சென்று
கடைசியாக மிக்க களைப்புடனும் கால் வீக்கத்துடனும் சதாரா வந்தடைந்தனர். இவிடமி
ருந்து பூனாவுக்குப் போக ஒரு ரூபாய் வாடகை கொடுத்து ஓர் குதிரையைப் பேசி 1856ஞு
நவம்பர் மாசத்தில் பூனாவை யடைந்தனர். வழியில் மீதியிருந்த நான்கணாவை சாப்பிட்
டுச் செலவு செய்தனர்.

பூனாவை யடைந்த வுடனே (Training College) பிரவேசப் பரீக்ஷைக்குச் சென்று
அதில் தேறினார். ஆனால் மாணவர்களுக்குக் கொடுக்கும் உபகாரச்சம்பளம் இவருக்குக்
கிடைக்கவில்லை. அக்காலத்தில் அந்த காலேஜ் பிரின்சிபாலாயிருந்த கிருஷ்ண சாஸ்
திரி சிப்லூன் கார் என்பவர் அதிர்ஷ்டஹீனரான சீதாராமுக்கு யாதொரு சகாயமும் செ
ய்யக்கூடவில்லை. இதனால் மனக்கவலை கொண்ட நம் சிறுவாலிபருக்கு சில
மாசங்கள் யாதொரு நோக்கமுமின்றி அங்குமிங்கும் திரிந்து கொண்டிருந்த
னர். கடைசியாக 1857ஞு ஜுன் மாசத்தில் பூனா ஹைஸ்கூலில் சம்பளமி
ல்லாமற் சேர்ந்தார். சேர்ந்த பல மாசங்கள் வரையில் இவருக்குச் சாப்பாட்டிற்கு வழியி
ல்லாமல் வீடுவீடாய்ச் சென்று அன்ன பிக்ஷைவாங்கி ஜீவனஞ்செய்துவந்தனர். ஆங்கில
ங்கற்கத் தொடங்குகையில் இவருக்கு வயது 18. உபாத்தியாயர் சொல்வதை மிக்க கவன
மாய்க் கேட்டு வந்தார். 1860ஞு ஜுன் மாசத்தில் இவர் பூனா ஹைஸ்கூலைவிட்டு பம்
பாய்க்குச் சென்றார். பம்பாயிலுள்ள ராபர்ட்மோனி வித்தியாசாலையில் இவர்சேர்ந்தார்.
அப்பொழுது அப்பாடசாலைக்குப் பிரின்சிபல் கனம் ஆர் கரல்பிரெய்த்என்பவர். சீதா
ராம் என்பவர் கணிதத்தில் மிக்க தேர்ச்சியடைந்தவராயிருந்ததால் மிஸ்டர் கல்பிரெய்த்
அவர்களுக்கு மிகவும் வேண்டியவராக இருந்தார். அதனால் சீதாராம் என்பவருக்கு
மாசம் எட்டு ரூபாய் உபகாரச்சம்பளம் கொடுக்கப்பட்டது. சீதாராம் இவ்வித உபகாரச்
சம்பளத்தை 1862ம் வருஷம் வரையிலும் பெற்று வந்தார். அதே வருஷம் ஜுன் மாசத்
தில் எல்பின்ஸ்டன் காலேஜில் சம்பளமில்லாமல் சேர்ந்தார். 1863ம்வருஷத்தில் மெட்ரிகு
லேஷன் பரீக்ஷையில் தேர்ந்தார். கணிதத்தின் பொருட்டு கொடுக்கப்படும் உபகாரச்சம்
பளமாகிய மாசம் 20 ரூபாய் வீதம் 2-ஞு வரையில் பெற்று வந்தார். 1865ஞு எப்
பிரேல் மாசத்தில் எப். ஏ. பரீக்ஷையிற் றேர்ந்தார். பிறகு பி. ஏ. பரீக்ஷைக்குப் போய்
இருமுறை தேறவில்லை. முதல் முறை லத்தின் பாஷையிலும் இரண்டாவது முறை ஆங்
கிலத்திலும் பிறகு 1867ம் வருஷத்திய பி. ஏ. பரீக்ஷைக்குச்சென்று வகுப்பில்தேர்ந்தார்.

யுடுப்பது அவர்கள் கொள்கைகளுக்கு விரோதமே. மேலும் இந்தியாவின் சிற்சில பாகங்
களில் ஸ்திரீகளணியும் வஸ்திரங்கள் அவர்கள் ஸ்தானம் செய்து ஜலத்தினின்று வெளி
வருங்கால் அவர்களவயவங்களின் மயிர்க்கால்கள்கூட எண்ணக்கூடும்படி யவ்வளவு
மெல்லியதாய் இருக்கின்றன. பஞ்சாப்பிலேயோ வஸ்திரமே தரிக்காமல் ஈசன் சிருஷ்
டித்த சரீரத்துடன் மாத்திரமே பெண்மணிகள் ஸ்நானம் செய்கிறார்கள். ஆகையினால்
இவ்வாடைவிஷயங்களில் நம் ஸ்திரீகளுக்கு மெல்லியசாரிகள் வாங்காமல், அந்தப்புரத்
திலகூட உள்ளாடையணிந்து அதன்மேல் சாரியை உபயோகிக்கச் செய்யவேண்டும்.

தையல் வேலையிலோ, அபூர்வமான வித்தைகளைவிட சாதாரணமாய் வீட்டிலுபு
யோகிக்கக் கூடிய நாடோடி வேலைகளைக் கற்று அவைகளை நன்றாய்ச் செய்ய வேண்டும்.
பரதேச வித்தைகளைவிட ஸ்வதேசவித்தையை யதிகமாய்க் கற்று ஹிந்துகளுக்குப் யோ
கமானவேலைகளைச்செய்ய வேண்டும்.

ஜனங்களுக்கு ஸ்வபாஷையில் மதபோதனை செய்வித்து சம்ஸ்கிருதபாஷையை
இரண்டாவது பாஷையாய்க் கற்றுக் கொடுக்க வேண்டும். ஆடவர்களுக்கு குடும்ப பத்தி
லுப யோகப்பட்க் கூடியவைகளைக்கற்பித்து, அவைகளை யவர்கள யனுஷ்டிக்கும்படி செ
ய்ய வேண்டும்.

## சைன வர்த்தமானங்கள்.

சைனாவில் பெரிய வாய்க்கால்:—சுமார் 700-மையில் நீளமுள்ளது. முப்பதாயிரம்
மனிதர்கள் நாற்பது வருஷம் கஷ்டப்பட்டுக் கட்டியகால்வாய் இது முதலில் வெகு நன்
றாய் உத்தேசிக்கப்பட்டு வெகு அழகாய் முடிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லப்படுகி
றது.

* * *

சலவைக்கல் பாலம்:—சைனாவில் மிக அழகிய பாலம் அல்லது வாராவதி ஒன்று
ண்டு. இரண்டு பக்கங்களிலும் எழுபது கால்கள் நிறுத்திப் பிரமாண்டமான சிங்க உருகு
வங்களால் அலங்காரம் செய்யப்பட்டு வெள்ளைச்சலவைக் கற்களால் கட்டப்பட்டது.
நான்கின் பட்டணத்திலுள்ளது.

* * *

பீங்கான் கோபுரம்:—ஒப்புயர் வற்றதும் மிகவும் அழகியதுமான கட்டிடம். அது
200 அடி உயரமுள்ளதாம் ... ல் ஒன்பது அடுக்கு மெத்தையும் பீங்கானால் செய்யப்ப
ட்ட ஓட்டின் கூரையும் பார்க்க பார்க்க மனதுக்கு வெகு ரம்மியஞ் செய்யும். இந்தப்
பீங்கான் கோபுரத்தைப்போல் இங்கிலாந்து முதலிய வேறெந்த இடங்களிலும் காணமுடி
யாது.

* * *

சைனாவில் பளுவான மணிகள் அனேக முண்டு லக்ஷம் பவுன் நிறையுள்ள மணிகள்
எத்தனையோ இருக்கின்றனவாம், இவைகள் சப்தம்போட்டால் காதடைத்துப்போகும்
என்பதில் சந்தேகம் இல்லை. ருஷியாவில் மாஸ்கோ பட்டணத்திலுள்ள பெரிய மணியா
னது மூன்றுலக்ஷம் பவுன் நிறையுள்ளது. இது தவிர உலகத்தில் பெரிய மணிகள் சை
னாவில் உள்ளனவென்று சொல்லலாம்.

* * *

நீலக்கல் கோயில்:—வாம்போவுக்குச் சமீபத்தில் நீலக்கல்லாற் கட்டப்பட்ட ஒன்பது
அடுக்கு மெத்தைகளுள்ள கோயிலொன்றிருக்கின்றது. அந்தக்கோயிலைப் பார்த்தால் ஆகா



யத்தையும் பூமியையும் அளாவிநிற்கும் ஒரு பெரிய ராக்ஷசராஜன் போல் காண்கிறது
சலவைக்கல்லால் கட்டினபோதிலும் இவ்வளவு அழகாயிராதென்றும், அந்த கட்டிடத்
தில் காலகதியால் அவைகளில் முளைத்திருக்கும் கொடிசெடி முதலியவைகள் அதை மிக
வும் அழகுபடுத்துகின்றனவென்றும் சொல்கிறார்கள்.

* * *

சைனாக்காரர் விவாகம்:—சைனாக்காரர் கல்யாணஞ் செய்வதைப் பற்றிய சில விஷய
ங்களை நாம் இங்கு பேச வேண்டியிருக்கிறது. அனேக மாய் நம்மைப் போலவே சை
னாக்காரர்களுக் குள்ளும் கல்யாணப் பிள்ளை கல்யாணப் பெண்ணை விவாகத்திற்கு முன்
பார்க்கிற வழக்கம் கிடையாது. கல்யாணப்பிள்ளை மிகவும் ஆர்பாட்டத்துடன்ஊர்க்கோல
மாய்ப் போய்க் கல்யாணப்பெண்ணை அழைத்து வருவது வழக்கம். கல்யாணப பண்டி
கைகள் சாதாரணமாய் முடிவாக ஒரு மாதஞ் செல்கிறது. முன் யாம் சொன்ன படி
கால் மடக்குண்ட பெண்களே மிகவும் ரூபவதிகளென்று அவர்களையே கல்யாணப் பிள்
ளைகள் தேடுவார்கள். அனேகர் சதிபதிகள் சௌக்கியமாய் சந்தோஷ சித்தத்தோடு வா
ழ்ந்து வந்த போதினும், பல புருஷர்கள் தங்கள் மனைவிகளை மிருகங்கள் போல் நினை
த்து அவர்களை அடிப்பதும் வருத்து வதும் வழக்கமா யிருக்கிறது.

* * *

சைன பாணவேடிக்கைகள்:—மிகவும் பெயர் போனவை. இங்கிலீஷ் பாணங்க
ளைப்போல் அவ்வளவு பிரகாசமில்லாவிடினும் சைனாக்காரரின் பாணங்களின் உருவங்கள்
மிகவும் ஆச்சரியம் தரத்தக்கவையாயிருக்கின்றன. திராக்ஷப்பந்தர் ஒன்றைப்போல் சை
னாக்காரர்கள் தங்கள் பாணவேடிக்கையில் காட்டுகிறார்கள், அதனுடைய இலைகளும் கொ
டிகளும் பழங்களும் மிகவும் விநோதமாய்த்தெரிகின்றன. அநேக ஆகாயபாணங்கள்
மினுக்கென்கிற நக்ஷத்திரங்களைப்போலவும் புஸ்ஸென்கிற பாம்புகளைப்போலவும் மிக
அருமையாய்த் தோன்றுகின்றன. அநேக வேடிக்கையான லாந்தர் சுற்றிலும் நெருப்பு
மழையைக்கொண்டு விளங்குவன சொல்ல முடியாத அற்புதமுடையவையா யிருக்கின்
றன. சைனாக்காரர்கள் தமது பாணவேடிக்கையால் நடுராத்திரியைப் பட்டப்பகலென
ஆக்கி விடுவார்கள். அநேகம் பறவைகள் ஏககாலத்தில் ஆகாயத்தில் பறப்பதும் அவை
களைச்சுற்றிஅநேக கொடிகள் பிரகாசிப்பதும் மிக அபூர்வமான காட்சி. எல்லாவற்றை
யும் விடசக்ரவர்த்தியவர்கள் சிரசின்மீது பச்சைப்பந்தல்போலமைத்து, ஆயிரம் பிரங்
கிசம் வெடிசப்தம் உண்டாகச்செய்வது மிகச் சிறந்தவேடிக்கையென்று சொல்லப்படு
கிறது.

* * *

சைனாக்காரர் தண்டனைகள்:—கூண்டுயென்கிறஜெயிலில் அகப்பட்டுக்கொண்டவனு
க்குத் திரும்பவுமுடியாது. நிற்கவும்முடியாது அசையக்கூடமுடியாது. அவன்சாகும்வரை
க்கும் அதிலே அல்லல்படவேண்டியதுதான். குற்றவாளிக்குமிகுந்தவெட்கம் உண்டாக்கி
அவனை அழைப்பதற்கு அந்தக் கூண்டைத் தெருத்தெருவாய் எடுத்துக்கொண்டு போ
வார்கள், இதல்லாமலும் மிகப் பளுவான பலகை நடுவில் பொத்த லுண்டாக்கித்
தலையை நுழைத்து விட்டு பக்கங்களில் இரண்டு பொத்தல் களுண்டாக்கி இரண்டு கைக
ளையும் நுழைத்து விட்டுச் சில குற்றவாளிகளை வருத்துகிற தண்டனையுமுண்டு. குற்றத்
திற்குத் தக்க மாதிரி பளுவும் அதிகப்படும். இது மிகவும் வெட்கக் கேடான தண்டனை.
பெரிய மனிதர் களாகிய குற்ற வாளிகட்கு இது அடுத்த தண்டனையாய்க் கொள்ளப்படுகி
றது. அவர்களை இவ்வித தண்டனைக்குட் படுத்தி அவர்கள் வீட்டுப் பக்கத்திலேயே
விட்டு விடுவது வழக்கம். பிரம் பாலடிப்பது மற்றொரு தண்டனை. அடிப்பட்டவன்

மாஜிஸ்திரேட்டுக்கு வந்தனை செய்து போவது வழக்கம். ராஜத்துரோகம் செய்தவர்களுக்கு மாத்திரம் சித்திரவதை விதிப்பது உண்டு. விரல் விரலாய் வெட்டி யெறிந்தும் சதையைத் துணிக்கை களாகச் செதுக்கியும் பலவகையான கொடுமைகள் அவர்களுக்குச் செய்வது உண்டு.

* * *

சைனுக்காரர்கள் மரணம்:—சைனு காரர்கள் உயிரோடிருக்கும் போதே விலையுயர்ந்த மரம் வாங்கி வைத்து தமது மரணப் பெட்டிக்கு என்று ஏற்பாடு செய்து வைப்பது வழக்கம். சைனுக்காரன் ஒருவன் இறந்து விட்டால், அந்த வீட்டுத்தெருவில் ஒரு போர்ட் கட்டி இறந்தவன் பெயர், பட்டம் முதலானவைகளை எழுதி வைப்பது வழக்கம். இறந்தவனுடைய பந்துக்க ளெல்லாரும் ஒன்று சேர்வதும் முரட்டு வெள்ளைத் துணியைத் தலையிலும் உடம்பிலும் அணிந்து தரையில் உட்கார்ந்து அழுவது வழக்கம். மரணப்பெட்டியில் சுண்ணாம்புபோட்டுப் பிரேதத்தை வளர்த்தி வைத்து இருபத்தொருநாள்பொறுத்துப் பிரேதம் புதைக்கு மிடத்திற்குக் கொண்டு போவது வழக்கம் பந்துக்கள் போகும் போது வெள்ளைத் துணியை உடம்பிலே போட்டு இடுப்பில் கயிற்றைச் சுற்றிக் கொண்டு புதைக்கு மிடத்திற்குப் போவது சாதாரணமாய் சைனுவில் காணலாம். பந்துக்கள் சில நாள் வரைக்கும் பிரேதங்களைப் புதைக்கு மிடத்திலேயே இறந்தவர்களைப் பற்றிய பஜனைசெய்வார்கள். வீட்டிற்கு வந்ததும் போர்டைக் கழற்றி இறந்து போன பெரியோர்களுக்குக் கென்று ஏற்படுத்திய ஹாலில் சேர்த்து விடுவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் இறந்து போன பெரியோர்களுக் கென்று ஒரு ஹால் ஏற்படுத்தி அவரவர்கள் போர்டை வைத்திருப்பது வழக்கம். ஒருவனுடைய சந்ததியார் முழுமையும், எத்தனை பெயரா யிருந்த போதிலும் அந்த ஹாலில் பெரியோரைத் தொழுங் காலங்களில் ஒன்றாய் வந்து சேருவது ஸஹஜம்.

* * *

சைனு விக்கிரகங்களுக்குப் பூஜை:—மாம்ஸம் படைப்பதும் வர்ணக் காகிதங்கள் கொளுத்துவதும் நமஸ்காரம் செய்வதும் ஆகிய காரியங்களாலே சைனுக்காரர் அவர்களுடைய விக்கிரகங்களைப் பூசிப்பார்கள். சைனுகாரர் களுடைய குருக்கள் பான்ஸ் என்னப்படுவார்கள். சைனுக்காரர்கள் விக்கிரகங்களைப் பூசிப்பதல்லாமலும் இறந்தவர்களையும் அவர்கள் பூசிக்க வேண்டு மென்பது அவர்களுடையமதக் கோட்பாடு. அப்படி அவர்கள் செய்யா ராயின் அது அவர்களுக்குள் வெகு குறைவாய் எண்ணப்படும். சைனுக்காரர் களுக்கு அதிருப்தியான விஷயம் யாதாயினும் காணப்படுமாயின்

விக்கிரகங்கள் கதி அதோகதிதான்:—நம் ஊரில் குடும்பத் தொந்தரைகள் அதிகமாய்க் காணப்பட்டால் உன் கோயிலிடிய, கோபுரம் விழ என்று கடவுளை திதிப்பது வழக்கம். சைனுக் காரர்கள் அதோடு விட மாட்டார்கள்.

சைனுக்காரர்கள் விக்கிரகங்களை அவைகளிருந்த நிலைகளினின்றும் மேடைகளிலிருந்தும் கர்ப்பக்கிரஹங்களி லிருந்தும் கோபத்தோடு இழுத்து கழுத்தைப் பிடித்துத் தள்ளி, தெருத் தெருவாய்க் கோலங்காட்டி, அவைகளைக் கடவுள் நாய்கள் என்று வைது, அவைகளுக்கு அதன் பிறகு வர்ணம் கொடுக்கவும் மூலாம் பூசவும் கோயில் கட்டவும் பிரசாதங்கள் படைக்கவும் முடியாதென்று பிரம்பாலடிப்பார்கள். தங்கள் காரியங்கள் ஆகிறவரைக்கும் தான் சைனுக்காரர்கள் பூசை செய்வார்கள். தங்கள் காரியம் ஆகாவிடின் அனர்த்தம் தான்.



வேறு பல தேவதைகளும்சைனுக்காரர்களுக்கு உண்டு. ஒன்பது மனிதத் தலையுள்ள புலியையும், ஆறுதலையுள்ள முதலையையும், வெள்ளைத் தலையை யுடையதும், சிவந்த வாலையுடையதும், குதிரை போன்றதுமாகிய மானையும், ஒரு கண்ணுள்ள பறவையையும் நாய்த் தலையையும், ஆறு கொம்பையு முடைய கல் யானையையும், காற்றுத் தேவதையையும், காட்டுத் தேவதையையும், இன்னும் பற்பல விநோத விசித்திரமான தேவதைகளையும் சைனுக்காரர்கள் தொழுவார்கள்.

* * *

சைனுக்காரர் மதம் பலவகைப் பட்டது. நிரீஸ்வரவாதிகளாகப் பலரும், சந்தேகிகளாகப் பலரும், தத்துவ சாஸ்திரிகளாகப் பலரும், மூடபக்தியால் கட்டுண்டவர்கள் பலருமாக சைனு காரருக்குள் அபிப்பிராய பேதங்கள் உண்டு. இவ்வாறு பல வித்தியாசங்கள் அவர்களுக்குள் காணப்பட்ட போதிலும் முக்கியமாய்

மூன்று மதங்கள் அங்கு அதிக அதிகாரஞ் செலுத்துகின்றன. நியாய மதம் ஒன்றும், புத்த மதம் ஒன்றும், கன்ப்யூஸிய மதம் ஒன்றும் ஆக அவை மூன்று. நியாயமதம் மோக்ஷதேவனும், பாபவிநாஸியும் ஜலராஜனும் ஆகிய கடவுளில் நம்பிக்கை வைத்து அவன் புகழ் பாடுவதிலும், அவன் கட்டியங்கள் கூறுவதிலும் அதிக கவனஞ் செலுத்துகின்றது. ஆனால் இந்த மதத்தில் வேறு அனேகம் முரட்டு கொள்கைகளும் காணப்படுகின்றன.

புத்தமதம்:—சைனுவில் புத்தமதஸ்தர் மூன்று திவ்விய புத்தர்களை வணக்கஞ் செய்வதுண்டு. இறந்தகால புத்தரையும், நிகழ்கால புத்தரையும், எதிர்கால புத்தரையும் விக்கிரக ரூபமாக அவர்கள் தொழுவார்கள். நம்பிக்கை விஷயமாக மேற்படி விக்கிரகங்களுக்கு சைனு புத்தமதஸ்தர்கள் அனேக சக்திகளை கற்பிப்பார்கள் அனேக புத்தர்கள் சைனுவில் காணப்பட்ட போதிலும்,

கான்ப் யூஸியமதந்தான் கற்றறிந்தவர்களாலும் தத்துவ விஷயங்களில் தலையிட்டவர்களாலும் ராஜாங்கத் தாராலும் அனுஷ்டிக்கப் படுவது. கான்ப் யூஸியஸ் என்பவர் கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்நூறு வருஷங்களுக்கு முன் பிறந்தவர். ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு மதத்திலும் பெரிய போதகாசிரியர் களுக்கும் அரிய குணத்தினர்க்கும் இணைக் கில்லாத துன்பம் வந்து சேர்வது போலே கான்ப் யூஸியஸுக்கும் அனேக துன்பங்கள் நேர்ந்தனவாம். பற்பல இடங்களில் அவர் உழன்றுழன்று திரிந்து திரிந்து கடைசியாகத்தம் மதத்திற்குப் பல சீடர்களைச் சேர்த்துக் கொண்டார். அவர் சீடர்கள் ஒரு வகுப்பில் தர்மம் என்பதையும் இரண்டாவது வகுப்பில் நியாயம் என்பதையும் மூன்றாவது வகுப்பில் ராஜாங்க முறைகளையும் நாலாவது வகுப்பில் தத்துவ விஷயங்களையும் படிப்பது வழக்கம். கான்ப்யூஸியஸுடைய பிரிய சீடர் ஒருவர் இறந்து விட்டமையால் அவர் மிக்க வருத்த மடைந்து கதறிக் கொண்டே மோக்ஷம் சேர்ந்தா ரென்பது கதை.

# NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

பம்பாயில் சிறிது காலம் முந்தி ஒரே அழகியமுத்து ரூ. 35000க்கு விற்கப்பட்டதாம். இது சிறந்தவிலை மதிப்புள்ளதென்றே நாம் எண்ண வேண்டியிருக்கிறது.

பரோடா மஹாராஜா தமது நாட்டில் 300 தர்ம புஸ்தகசாலைகள் ஏற்படுத்துவதாக எண்ணம் கொண்டிருக்கிறார். இச்சீர்திருத்த வேலை காதி ஜில்லாக் கிராமங்களில் முதலில் ஏற்பாடாகி யிருக்கின்றது.

* * *

பொருள் கொடுத்துப் புதையல் வாங்கினான்:—ஐக்கிய மாகாணத்திலுள்ள காஜிபாத் என்னும் பட்டணத்தில் சில ஆசாரக்கள்ளர் ஒரு பை நிறைய முலாம் பூசிய செம்புத் துட்டுகளை வைத்துக்கொண்டு இதைக் கிரயத்துக்கு வாங்குவதற்கு ஒரு பைத்தியக்காரனைத் தேடியலையும்பொழுது ஒரு மடையன் அதைப் பரிசோதித்தறிந்தபின்பு வாங்குவதாய் ஒப்புக்கொண்டான். உடனே கள்ளர் தங்களிடமிருந்த மெய்யான ரூபாய் சிலவற்றைக் கொடுக்க அவை உண்மையான வெள்ளியாயிருப்பதைக்கண்டு திருப்தியடைந்த அந்த மடையன் அந்தப்பைமுழுமையும் 1400 ரூபாய் கிரயம் கொடுத்து வாங்கினான். பின்பு இரண்டு தினங்கழித்து ரூபாயெல்லாம் செம்பென்று தெரிந்து கள்ளர்களைத் தேடத்தொடங்கினான். கள்ளர்கள் போனவிடம் தெரியவில்லை.

* * *

மனைவியை மூக்கறுத்தான்:—கல்கத்தாவில் கங்நாலி ஷாயிக் என்பவனுக்கும் அவன் மனைவி பீபி என்பவளுக்கும் சிற்சில மனஸ்தாபங்களுண்டு. ஒரு நாள் இரவு நித்திரை செய்துகொண்டிருக்கும் சமயத்தில் புருஷன் வெளியேயிருந்து குடித்துவிட்டு வீட்டுக்குள் வந்து நுழைந்து நித்திரைசெய்து கொண்டிருந்த மனைவியண்டை போய் உட்கார்ந்து ஒரு கத்தியால் அவளுடைய மூக்கை அறுக்கத் தொடங்கினான். இந்த அரவங்கேட்டு பீபி விழித்துக்கொண்டு சப்தமிட்டாள். அடுத்த வீட்டுக்காரர்கள் வந்து கூடினார்கள். உடனே புருஷன் வீட்டைவிட்டு வெளியேறி ஓட்டம் பிடித்தான். ஓடும்பொழுது போலீசார் பிடித்துக்கொண்டார்கள். கேஸ் விசாரணையாய்க் கொண்டிருக்கின்றது. கேஸ் முடிவாகிற வரை ஷாயிக் 50 ரூபாய் ஜாமீன்பேரில் விடப்பட்டிருக்கிறான்.

# புத்தக வரவு.

சங்கீதபோதினி: (முதற்பாகம்) தெலுங்கிலே ஸ்ரீமத் K. வரதாசாரியார், K. V. சீனிவாஸய்யங்கார், வீணை K. கிருஷ்ணமாசாரியார் முதலியோரால் இனிமையில் எழுதப்பட்டது. சங்கீத விஷயங்களில் பாலர்களுக்கும் பாலிகைகளுக்கும் விசேஷ நன்மையைத் தரும் என்று எண்ணுகிறோம். இதன் விலை அணா 4.

* * *

திருவாரூரில் பிரசுரித்திருக்கப்பட்டு வருகிற "பிரம்மஞ்ஞானப் பத்திரிகை" நமக்கு பிப்ரவரி மாதத்தியது எட்டியது. இதை 1906 வரு ஜூலை முதல் வெளிப்படுத்திவருகிறார்கள். தற்காலம் இருக்கும் மதநிலைமைகளை ஆலோசிப்பார் எவரும் இது அவசியமான பத்திரிகையென்றே எண்ணவேண்டியது நிச்சயம். இப்பத்திரிகையிலே "பகவத்கீதை, புருஷார்த்தம், ஈசுவரனும் பக்தனும், உயிர்தூய தத்துவங்கள் முதலிய விஷயங்கள் வெகு அழகின் எழுதப்பட்டிருக்கின்றன. இப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூபா 1—8—0. ஆதலால் அனைவரும் இதை வரவழைத்துப் பயனடைவார்களென்று நம்புகிறோம்.



சுபோத பாரிஜாதம்.—இது புதிதின் திருச்சிராப்பள்ளியிலே நடத்தப்படும் ஒரு மாதாந்தரப்பத்திரிகை. இதற்குச் சந்தா வருஷம் ஒன்றுக்கு ரூபா 2—4—0. இப்பத்திரிகையில் "வடமொழியிலிருந்து அரிய புராதனக்கதைகளும், நவீன நாடகங்களும் வேறு பாஷைகளிலிருந்து அருமையான விஷயங்களும், வியாசங்களும், நல்லநடையில் எழுதப்பட்டு நாளுக்கு நாள் க்ஷீணித்துவரும் நமது தாய்ப்பாஷையின் நிலைமையை முன்னுக்குக் கொண்டுவருவதே இதன் முக்கிய கருத்தாம்." என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் விருத்தியில் ஊக்கமுள்ள அனைவரும் இதை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம். இதற்கு மானேஜர் S. A. சுப்பிரமணிய ஐயர், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

# விடுகதை வினா?

## முதலாவது விடுகதை வினா?

சங்கர சதாசிவன்றன் பெயரி லொன்றும்
தடவரையின் பெயரொன்றுங் கோளினொன்றும்
திங்கள் பனிரெண்டு கொண்ட வாண்டி னொன்றும்
திதி பொன்றும் மாத மொன்றுய்நாளி னொன்றும்
இங்கிதமாஞ் சாதி யொன்றுமைச்சேர்த்தி
விடையையொன்று பெடுத்து முறையாகக் கோர்க்கில்
அங்கமதை யின்சொலொடு கொண்டு மாந்தர்க்
கழுதெனவே யளித்திடும் பத்திரிகையாமே.

## இரண்டாவது விடுகதை வினா?

நான்கெழுத்தா லமைந்திருக்கும் பொருளினொன்று
நலமுடனே முன்னீக்கிற் பெண்ணென்றாகும்
பாங்குடனே உபையம்விடில் மேகமாகும்
பாதிசெய்து பின்னீக்கி லம்பென்றாகும்
ஒங்குதிரியுபையம்விடிற் புலியென்றாகும்
மென்றதிரி நான்குதன்னிற் திங்களாகும்
மீங்கிதன்றன் பொருளறிந்து சிறந்துலாவு
மினியசக்ரவர்த்தியினி லெழுதுவீரே.

## மூன்றாவது விடுகதை வினா?

ஈரிரண்டக்சரமமைந்த வோர்சொல்லாதி
யெடுத்துவிடில் மேகமென வியம்பலாகும்
சேரிரண்டாமெழுத்துவிடி லுலகளந்த
திருமாலின் றேவியின்பேர் தெரியலாகும்
கூரிடலாந்திரியைவிடிற் பறவையென்றே
குறித்தமுற்றும் விண்ணெனவே கூறலாகும்

பாரினிலஞ் சுக மொளிபோ லின் சொற்கொண்டு
பரவு சக்ரவர்த்தினியிற் பகருவீரே.

## நான்காவது விடுகதை வினா?

ஆறெழுத்தாலமைந்த பொருளாதி நீக்கி
லாகிவிடும்காசுதி திரியாதிதள்ளிற்
கூரிடலா மலையெனவே யுபையமூன்று
குறைத்துவிடிற் பீடமெனக் கூரலாகும்
சேருடன்முன்பாதி விடிலெனமென்றாகும்
திரியாதி நான்கைவிடிற் பொருளென்றாகும்
சேராதிதிரியயைந்தும் நீக்கிற்பத்தாம்
சிதையாதுநோக்கில் முற்றும் மாடியாமே.

## ஐந்தாவது விடுகதை வினா?

அச்சரமைந்தா லமைந்தவிருக்ஷத்தின்பே
ராதிரெண்டுந்தள்ளிவிடிற் பொருளென்றாகும்
பச்சமுருவுபைய நான்கத்தில்லாறும்
பார்த்துபையமூன்று விடிலெனமென்றாகும்
இச்சையுடன் நாலுதள்ளிற் குணமென்றாகும்
யிரண்டுடனே மூன்றுநான் கெழுத்தை நீக்கில்
உச்சிதமாய்ச் சுகமெனவே சொல்லலாகும்
முறைபொருளை யின்னதென வுரைசெய்வீரே.

## ஆறாவது விடுகதை வினா?

ஒருநான்கச்சரமதனி லமைந்தவோர்சொல்
ஒதுக்கிவிடிலாதிதனைப் பொன்னென்றாகும்
பொருந்திவழுருபையமதை நீக்கி நோக்கிற்
புகழ்பெரிய மௌனமெனப் புகலலாகும்
வருந்திரியை யகற்றிவிடிற் கரமென்றே
வழுத்திடலாம்முழுதுமொரு ராகப்பேராம்
திருந்தகைமைபெற்றரிய செஞ்சொற்கூறும்
சிறந்த சக்ரவர்த்தினியிற் றெரிவிப்பீரே.

## ஏழாவது விடுகதை வினா?

அந்தர மீனென்று ஆதியைவிடுக்கில் வேலை
வந்திடு மிடையை நீக்கி வழுத்திடில் மதிலென்றாகும்
அந்தமதகற்றிநீக்கி லாதித்தன்நாமமாகும்
வந்திடும் பயனைச் சக்ரவர்த்தினிக் கெழுதுவீரே.

எஸ். ஞானவடிவுடையம்மாள்.



குயின் அலக்ஸாண்ட்ரியா.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
னெண்மை யுறவோர்க்கு முலகு."

| Vol. II. | MADRAS, APRIL 1907. | No. 9. |
|---|---|---|
| தொகுதி II. | சென்னை, 1907-ளு ஏப்ரல்-மீ. | பகுதி 9. |


## ஸ்திரீ புருஷர் கடமை.

ஈசுவர சிருஷ்டிகளாகிய தாவர ஜங்கமங்களிரண்டிலும் ஆண் பெண் என விரண்டு பேத வடிவங்களுண்டு. தாவரங்களாகிய செடி கொடி விருட்சங்களில் அந்தப்பேதம் கண்டறிவது சாதாரணமல்ல. பதார்த்தகுண விஞ்ஞான சாஸ்திர விற்பன்னர்கள் கண்டு கூறுவார். பசு பட்சி மனிதர்களில் ஆண்பெண் என்கிற பேதம் எல்லாராலும் அறியப்படும் விஷயமாம். இப்படி சிருஷ்டிக்கப்பட்டால்தான் பிரபஞ்சம் விருத்தியடையுமென்பது கடவுளின் கருத்துப்போலும். அதனாலேதான் ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் நேசித்துக்கூடி வாழ்தற் குரிய காதல் அவரிடம் அமைந்திருக்கின்றது. இவைகளுக்கு அது இயல்பாகவே யமைந்ததாதலால் அதனை மாற்றுவதரிது. பசு பட்சிகளைக் கவனித்துப்பார்த்தால் அந்தக்காதலெப்படிப் பட்டதென்று யாவருமெளிதில் அறிந்து கொள்ளலாம். ஆண்பறவையானது தனக்குக் கிடைத்த ஆகாரத்தைத்தனது பெட்டைவாயில் கொடுத்துவிட்டு, அது தின்பதை மகிழ்ச்சியோடும் பார்த்துக்கொண்டிருக்கின்றது. பெண் முட்டையிட்டு அடைகாக்கும் காலத்தில் ஆண்பறவை பெண்ணுக்கு வேண்டிய ஆகாரத்தைச் சேகரித்துக் கொடுப்பதுந்தவிரத் தானுமடைகாத்து உபகரிக்கின்றது. விசேஷமாய் ஆணும் பெண்ணுந் தனித்து வசிப்பதில்லை. பெண்பட்சிகளும் ஆண்பட்சிக்குப் பேனெடுத்தலாதி பணிவிடைசெய்கின்றது. மிருகங்களும் அவ்வாறே யொன்றை யொன்று நேசித்துபகரித்துக் கொள்ளுகின்றன. மிருகங்களுள் பெண்ணானது எப்பொழுதும் ஆணை அடுத்து ஜீவிக்கின்றது. சில ஆண்மிருகமோ கிடைத்த ஆகாரத்தைப் பெண்விலங்கு அருந்துமட்டும் தான் தொடாமற் காத்திருக்கின்றது. பெண்மிருகம் தனக்கு ஆபத்து வருவதாகக் கருதுமிடத்து ஆணிடம் வந்து ஒண்டுகிறது. ஆணோ தனது பராக்கிரமத்தால் எதிரியோடு பொருது தனது பெட்டையைக் காப்பாற்ற முயல்கின்றது. இதனால் பசு பட்சிகளிலும் ஆண் வலிவுள்ளதென்றும், பெண் பலஹீனமுள்ளதென்றும், ஆண் பெண்ணைக்காப்பாற்றும் கடமை யுடையதென்று மெளிதிலறிந்து கொள்ளலாம். இது போலவே மனிதர்க்குள்ளும் ஆண்பலமும் மனவூக்கமும் திடதைரியமுள்ளவனும், பெண் அதற்கு மாறுபட்ட இலக்கணமுள்ளவளுமாகவே யேற்பட்டிருக்

கின்றது. அதனாலே பெண்களுக்கு மெல்லியரென்று ஓர் பெயர் கூறப்பட்டது. எத்தந்தேசத்திலும், எந்தப்பாஷையிலும் ஸ்திரீகளை வர்ணிக்குங்கால் மலர் முதலிய மெல்லியவஸ்துக்களையுபமானங்கூறி யவரது சரீர வியல்பையும், புருடருடைய சரீரத்துக்கு மலைமுதலிய கடின பதார்த்தங்களையு முவமையாகக் கூறி விளக்குகின்றனர். மான் முதலிய சாந்தமிருகங்களையும், கிளி புறா முதலிய இனியபறவைகளையும் பெண்களுக்குவமை கூறுகிறார்கள். புலி, சிங்கம் மதயானை முதலியவற்றை ஆடவர்களுக்குவமையாகக் கூறுகிறார்கள். ஆகையால ஆடவர்கள் பெண்களைக் காப்பாற்றுங் கடமையுடையவர்களென்றும் பெண்கள் ஆடவர்களாற் காப்பாற்றப்பட வேண்டியவர்களென்றுந் தெளிவாய் விளங்கும். அதற்காகவே காதல் என்னும் பற்றுப்பொருள் அவர்கட்கிடையில் வைக்கப்பட்டிருக்கிறது. காதலென்னும் பாசத்தினால் அவ்விருவரையும் ஒருங்கே சேரப் பிணித்து வைத்து அவர்களைக் கொண்டு பிரபஞ்சத்தை நடத்தியருளுகின்றார் ஜகதீசுவர னென்க.

இனி பசு பட்சிகளில் ஆண்பெண்ணுக்குள்ள நேசத்துக்கும் மனிதர்களிடமுள்ள நேசத்துக்கும் பேதமுண்டு. அவற்றிற்குள்ள நேசமும் காதலும் இகபோக மொன்றினையே குறித்துள்ளன. மனிதரிடத்திலோ அப்படியன்று. இகவாழ்வு பரவாழ்வுகளுக்கும் மோட்சத்துக்கும் சாதனமாயுள்ளது. ஆடவர் மகளிரது மனமொத்த நேசமும் பாசமும் மோட்ச பரியந்தம் விட்டொழியா வென்பது நமது முன்னோர் கொள்கையாம். இதர தேசங்களிலும் மதங்களிலும் இத்தப் பெருமை கூறப்படவில்லை. ஆகையாலது பட்சிகளின் நேசம போல இகத்துக்கு மாத்திரம் பயன் படுவது. நமது சம்பிரதாயமோ பூலோகத்திலுயிரோடுள்ள வரையும் பிரியப் படாததும், செத்த பின் மறுலோகத்துக்குக் கூடப் போய் அங்கங்குள்ள சுகபோகங்களைப் புசிப்பதும், கடைசியில் மீளாத மோட்சத்தை யடைவது மானவைகட்கு முக்கியமாயுள்ள சாதகமாதலால் மற்றவர்களை விட நாம் நமது மனைவி மார்களை யெவ்வளவோபங்கு அதிகமாக நேசித்துக் காப்பாற்றிப் போற்றக் கடமைப் பட்டிருக்கிறோம். அப்படியே மனைவியும் தன் நாயகனை நேசித்துப் போற்ற வேண்டும். அதனாலே தான் மனைவியின் பெருமை விளங்கும்படி "நல்ல ஞாலமும் வானமும் பெறினும், எல்லாமில்லை யில்லில் லோர்க்கே" என்று முன்னோர் கூறினார்கள். உலகமுழுவதையும் தேவலோக ஆட்சியையும் பெற்றிருந்தாலும் அவருக்கு மனைவி யில்லாவிட்டால் அந்த வாழ்க்கை யில்லாதது போலவே யாமென்பது இதன் பொருள். "நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லாவுண்டி பாழ், ஆறில்லாவூருக்கழகுபாழ், மாறில், உடற்பிறப்பில்லா வுடம்புபாழ் பாழே, மடக்கொடியில்லா மனை" என்றதனால் பெண்களில்லாத வீடு பாழ் என்று பெறப்பட்டது.

"எவனுக்கு பத்தினியில்லையோ அவன் யக்ஞம் முதலிய கர்மங்களில் உபயோகப்படான். விவாகஞ் செய்து பத்தினியுடனிருப்பவன் தருமங்களைப் பெற அதிகாரியாகின்றான்! ஆதலால் விவாகந் தருமத்திற்குச் சாதன மாகின்றது. தம்பதிகளுக்கு நேரிடும் சம்பந்தம் முக்கியமாய்த் தருமானுஷ்டானத்தை யநுசரித்தே யாதலால் பிராம்மாதி விவாகங்கள் சர்வ சிலாக்கியமுடையன" என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆதலால் நமது தாம்பத்தியம் பசு மிருகாதிகளைப் போலவும், இதர தேசத்தார்களைப் போலவும் சிற்றின்பத்தையே நோக்கினதல்ல. இகபரமோட்ச சாதனமாயுள்ளதாதலால் ஸ்திரீ புருஷர்கள் உண்மையான நேசமுடையவர் களாயிருத்தல் வேண்டு மென்று நமது சாஸ்திரங்களின் கருத்தும், சாஸ்திரங்களையியற்றின பெரியோர்களின் கருத்து மாகிறபடியால் ஸ்திரீ



புருஷர்களின் நேசத்துக்கு நமது தேசமே சிலாக்கிய முடையதாயும், தாயகமாயுமிருக்கின்றதென்பதிற் சந்தேகமில்லை. புருஷன் தன் மனைவியாலும், மனைவி தன் புருஷனாலும் சந்தோஷத்தை யடைந்து வாழ்வாராயின் அக்குல மிக க்ஷேமத்தைப்பெறும். ஆகையால் புருஷன் எப்பாடு பட்டாவது தன் மனைவியை ரட்சிக்க வேண்டும். மனைவி கற்புடையவளாய்ப் புருஷனுக்குப் பிரிய முண்டாகும்படி நடக்க வேண்டும். இப்படி அவர் ஒருவரையொருவர் நேசித்து வாழ்வதனால் அந்தக் குல மாட்சிமை யடையும். என்ற ஸ்மிருதி வாக்கியங்களால் தம்பதிகள் மனமொத்துக் கூடினாலே சற்சந்தான விருத்தி யுண்டாய்க் குலமேன்மையும் பெறு மென்பது விளங்குகின்றது. இவ்வாறு நேசித்த கிருகஸ்தாச்சிரமத்திலிருக்கும் ஸ்திரீ புருஷர்களொருவரை யொருவர் காப்பாற்ற வேண்டிய விஷயத்தை ஸ்மிருதிப்படி கூறுகின்றோம்.

ஸ்திரீகள் போக மோட்ச சாதகமாக விருப்பதால் அவர்களைத் தன்னை விட்டு நீங்காமல் வைத்துக் காப்பாற்ற வேண்டும். அவர்களுக்கு எவ்விதத்திலும் துர்ஜன சகவாசம் நேராதிருக்கும்படி காக்க வேண்டும். இவ்வாறு செய்வது எல்லாவருணத்தார்க்கும் பொதுவான தருமமாதலால், எல்லாரு மிகச் சௌக்கியத்தைக் கண்டு அவரவர்தத்தம் பெண்டிர்களைத் தனம் முதலிய குறைவுள்ள வர்களாயினு மெப்பாடு பட்டாலும் காப்பற்ற வேண்டும். தங்கள் மனைவிகளை மிக ஜாக்கிரதையுடன் காப்பாற்றுவதால் குறைவற்ற சந்தானத்தையும் நல்ல பெயரையும் குலத்துக்கு மேன்மையையும் சற்கருமங்களைச் செய்துவர மகிமையையும் பரலோக வாழ்வைத்தரும் புத்திரர்களையும் பெற்றுவருகின்றார்கள். மனைவிகள்புருஷனிடத்திலெப்படிப்பட்ட எண்ணம் கொண்டிருக்கிறார்களோ அப்படிப்பட்ட புத்திரர்களைப் பெறுகின்றார்களாதலால் தம்மிடத்தில் அவர்களுக்குப் பிரியமுண்டாகும்படி நடத்த வேண்டும். ஆதலால் தமது பத்தினிகளை நடத்த வேண்டிய விதமாவது: புருஷர்கள் சம்பாதிக்கிற பணத்தை யவர்களிடத்து நம்பிக்கையாய்க் கொடுத்து அதை உசிதமானபடி செலவு செய்யவும், செட்டாகச் செலவு செய்யவும், பாத்திரதிரவியங்களைச் சுத்தி செய்தல், புத்திரர்களைக் காப்பாற்றுதல், கணவனுக்குப் பணிவிடை செய்தல், ஆகாரத்திற்குவேண்டிய சாமான்களைச்சேகரித்தல், சமைத்தல், படுக்கை, வஸ்திரம், ஆசனம் சமையலுக்குதவும் பாத்திரம், மற்றுமுள்ளவீட்டுப்பண்டங்கள் இவைகளில்சுவாதந்திரியத்தைக் கொடுத்துக் கவனித்துவரும்படி செய்ய வேண்டும். இப்படிச்செய்யாமல் மற்றவர்களைக் கொண்டு நடத்தி வந்தால் மனைவி மனம் வருந்துவாளாதலால் அவள் தன் புருஷனாலாதரிக்கப்படாதவளாகிறாள். ஏனென்றால், கவலையில்லாமல் ஒரு தொழிலைக் கொண்டு மனசமாதானத் துடனிருந்தவர்களை ரக்ஷிக்கப்பட்டவராகின்றார்கள். பெண்கள் படுக்கை ஆசனம் ஆடை ஆபரண மிவைகளில் ஆவலும், காமம் துரோகம் ஒழுங்கில்லாமையாகிய குணங்களை யியற்கையாகவே யுடையவர்களுமாதலால் அவர்களை மிகவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டுவது புருஷர்கடமையாம். கணவனது குணத்தோடு பழகின பெண்கள் சமுத்திரத்திற் சென்று விழும் மஹா நதிகளைப் போலப் புருஷனது குணத்தைப் பெறுவார்கள். பெண்களிடத்தில் பல துர்க்குணங்களிருப்பினும் அனேக நன்மைகளை யடைவதற்கு அவர்கள் சாதகமாக விருத்தலால் எவ்வகையாலு மவர்களைக் காப்பாற்ற வேண்டும். ஸ்திரீகளால் மோட்ச யோக்கியமான சற்சந்தான விருத்தி யுண்டாகின்றன. வீடு விளங்குகின்றன. பெண்களே வீடுகளுக்குத் திருமகள் (இலட்சுமி) ஆகின்றனர். இகபரசாதனங்களுட் புத்திரனே சிறந்தவனாதலால் அதற்குரியமனையாளும் சிறந்தவள். ஆதலால் அவளைத் தன்னுயிர் போலக் காப்பாற்ற வேண்டும்.

பிறந்த பிள்ளைகளைப் பரிபாலனஞ் செய்வதும், தினந்தோறும் அதிதி பந்து மித்திரர் இவர்களைப் போஜன முதலியவற்றால் உபசரிப்பதும் மனைவியைப் பொறுத்த பாரமாகின்றது. அன்றியும் தரும காரியங்கள், பணிவிடை, புத்திரர்களைப் பெற்று சுவர்க்க வாழ்வை சில சிறுத்துவதுமான விவைகள் பெண்களைச் சேர்ந்திருக்கின்றன. அன்றியும், பூஜை முதலான சற்கருமங்கள் விதிகள் புருஷனது சரீர பாத்தியம் அவனது பணிவிடை யாக யக்ஞங்களில் அதிகாரம் இவையெல்லாம் மனைவிக்குரியனவே. ஆனதால் ஸ்திரீ புருஷர்கள் மனமொத்து ப்பிரியாம லிணங்கித்தருமகாரியங்களை நடத்தவேண்டியதால் ஸ்திரீகளைக் கவனமாய்க் கருதிப் போஷிக்க வேண்டும். பெண்கள் புருஷனது அபிப்பிராயத்துக் கொத்து நடப்பார்களானால் கிரகஸ்தாச்சிரமம் எல்லா ஆச்சிரமங்களிலு முயர்ந்ததாகும். அவர்களுக்குத் தருமம் அர்த்தம் காம்மியங்கள் எளிதாய்க் கிடைக்கும். தம்பதிகளொத்து வாழ்ந்தால் அது சுவர்க்க வாழ்வுக்குச் சமானமாகும். ஒற்றுமை யில்லாவிட்டாலது நரகமேயாம். தம்பதிகளின் ஒற்றுமை சுவர்க்கத்திலுங் கிடைப்பதரிது. கிரகஸ்தாச்சிரம சுகமுழுதும் மனைவியினிடத்தி லிருப்பதால் அவர்களைப் பொன் போலப் போற்றவேண்டும். புருஷன் ஒரு நாள் தன்னொடு பட்சமாய் பேசாவிட்டால் அந்தமனைவியின் மனம் படும்பாடு சொல்ல முடியாது. ஆகையால் மதுபானம் செய்தல், கெட்டவருடன் சிநேகித்தல், கணவனை விட்டு பிரிந்திருப்பது, பிறர் வீடுகளிற் புகுந்து கெட்ட வியவகாரங்களைப் பேசிவருவது, அகாலத்தில் உறங்குவது, பிறர் வீட்டில் வாசஞ் செய்வதுமாகிய இந்த ஆறு செய்கைகளும் கெடுதியை விளைக்கும் ஆதலால் அக்காரியங்களைச் செய்ய வொட்டாமல் தடுத்துத் தனது கிருகத்தில் சர்வசுவாதந்திரியம் கொடுத்துத்தன் மனைவியைப் பாது காப்பது புருஷனுக்குரிய கடமையாம்' என்று சாஸ்திரங்களில் ஸ்திரீகளுக்குச் சர்வ சுதந்திரமுங் கூறியிருக்கின்றது.

இனி ஸ்திரீ தருமத்தைக் (கடமை) கவனிப்போம். "ஸ்திரீகளுக்கு யக்ஞம் விரதம் உபவாசம் இவைகள் தனியே கிடையாது. தன் பதிக்குப் பணிவிடை செய்பவளே சொர்க்கத்தையடைவாளே யன்றி அதைத் தவிர வேறு எவ்விதமான சற்கருமத்தினாலும் பெறுவதில்லை. புருஷனே பெண்களுக்கு இகபர வாழ்வுக்குக் காரணமாயிருப்பவன்; என்றால் அவன் இகபர போகமுதவுந் தெய்வத்துக்குச் சமான மாகின்றானென்பது கருத்து. நற்கதியை அடைய விரும்புகிற நல்ல பெண்ணானவள் தன்னாயகன் உயிரோடிருந்தாலும் இல்லாவிட்டாலு மவனை யவமதிப்பது கூடாது. தான் எவ்வளவு பெரியவளாயினும் புருஷனது கருத்துக்கு விரோதமாக எந்த வகையான வீட்டுக் காரியத்தையுஞ் செய்யக் கூடாது. வேறு சற்கருமங்களையும் தெய்வங்களையுங் கருதாமல் தன் புருஷனையே தெய்வமாகக் கருதி யவனது பணிவிடைகளை மனமொத்துச்செய்துவருகிற பெண் பதிவிரதை யெனப்படுவாள். பதிவிரதைகளான ஸ்திரீகளுக்குக் கணவனுயிரோடிருக்கிற வரைக்கும் பூஜை, ஜபம், தபம், ஹோமம், தானம், விரதம் இவைகளில்லை. ஏனென்றால் பர்த்தாவின் பணிவிடை யவர்களுக்கு மேலானபலனைத் தருமாதலால். ஜனங்களால் பிரியப் பட்டாலும், ஏதாவதொரு காரணத்தால் பர புருஷனது சரீரம் தன்மேற்பட்டாலும் மனோவிகாரமில்லாமல்மனோவாக்குகாயங்களால் தன்புருஷனைக்கனப்படுத்திவருகிறவளே பதிவிரதை யெனப்படுவாள். அவர்கள் அகம்பாவமொழிந்து காமக்குரோதமின்றிப் பரபுருஷரைக் கருதாது தன் பதியின் மனதிற்கு இசைந்து நடப்பார்கள். தன் நாயகன் புசித்த பிறகு புசித்தலும், அவனது துக்கம் தன் துக்கமாகக் கொண்டு துக்கித்தலும், சந்தோஷமடையும் போது தானும் சந்தோஷித்தலும், அவன் உறங்கின பின்



உறங்குகிறதும், அவன் விழித்தெழுந்திருக்கும்முன் எழுந்திருந்தும் மனதினாற்கூட பரபுருஷனைக் கருதாமலிருப்பதும் உடையவளெவளோ அவள் பதிவிரதையெனப்படுவாள். மாமனார் மாமியாரிடத்திலும் கணவனிடத்தும் மிகப்பக்தியும் தருமகாரியத்தில் அநுகூலமும், செல்வம் முதலியவற்றாலுண்டாகும் பெருமித காலங்களில் மன அடக்கமும் காரியங்களில் மன தைரியமும், தன் சரீரத்தில் மிகச் சுத்தியும், எக்காலமும் இனிய வசனங்கள் பேசுதலும் உடையவள் தன்பதியின் அன்பையும் உலகத்தாரால் புகழ்ச்சியையும் அடைவள். அவள் மங்களகரமான காரியங்கள், வீடுகளைச் சுத்தி செய்து அலங்கரித்தல், வீடுகளில் நடக்கும் விசேஷங்களுக் குரிய சாமான்களைச் சேகரிப்பது இவைகளில் அறிவுள்ளவளா யிருத்தல் வேண்டும். தன் நாயகனது ஆயுசு விருத்தியைக் குறித்து மஞ்சள் பூசிக்குளித்தல், குங்குமந் தரித்தல், சிந்தூர மணிதல், கண்ணுக்கு மையிடுதல், ரவிக்கை புனைதல், தாம்பூலந் தரித்தல், தலைசீவிமுடித்தல், தலை கை காதுகளில் ஆபரணம் அணிதல், மங்கல்யாபரண மிவற்றை யொருபொழுதுங் கைவிடக்கூடாது. கணவனொருவனே இகபரலோக வாழ்வளிக்குந் தெய்வமென்றுகருதி, நன்னடக்கை சத்தியம் தர்மம் சிரவண முதலிய வற்றை விடாதவளாய் மனமொழி மெய்களால் கணவனை வழிபடும் பெண்களிருக்குமிடம் சொர்க்காதி பதவிகளாம். தந்தியில்லாத வீணையும் அச்சில்லாத தேரும் பயன் படாதது போலக் கணவனில்லாத பெண் நற்கதிபெறாள். புருஷன் நாகரிகம் பெற்றவனாயினும் மூடனாயினும் முடவனாயினும் பாபியாயினும் அசுபத்திற்பற்றுள்ளவனாயினும் அவனைத் தெய்வமாக வழிபடுதல் பதிவிரதையின் முக்கியமான செய்கையாம். கெட்ட நடக்கை துராசார முள்ளவனாயினும், தனமுள்ளவனாயினும், இல்லாதவனாயினும் பதிவிரதைக்குத்தன் கணவன் பரமதெய்வமாகின்றான். ஆனதால் தன் பதியின்கட்டளையை மீறாமல்நடப்பது பதிவிரதைகளுக்குப் பெரும் பதவியைத்தரும் மஹாதவமென்று பெரியோர்சொல்லுகிறார்கள். அவ்வாறு பணிவிடை செய்யும் பெண்களைப் பாபம் அணுகாது. பதிவிரதையான பெண்மணி ருத்திர பத்தினியாகிய ருத்திராணி (உமாதேவி) யென்பதிற் சந்தேகமில்லை.

பத்திராசிரியர்.

# விஜயலட்சுமி.

இராமலிங்கம், லோகநாதா! நாம்நினைத்து வந்தபடி திவ்யதரிசனம் கிடைத்தது. அம்மனுடைய அலங்காரத்தைப் பார்த்தாயா? பிரத்தியட்சமாய் எதிரே நின்று பேசுகிறதுபோலவே யிருக்கிறது. முன்னாலே பார்த்திராத ஒருவன் வந்தால் சாட்சாத் பெண்வடிவமென்று நினைப்பானே யொழிய சிலா விக்கிரகமென்று கருதவேமாட்டான். குருக்கள் அலங்கரிப்பதில் கைதேர்ந்தவன். ஒவ்வொரு விக்கிரகத்தின் அலங்காரமும் அப்படியே யிருக்கிறது. இன்றையதினந்தான் நீ சொல்லிவந்த விஷயம் சரியென்று மனதில் படிந்தது. நானு முன்போலவே தினந்தோறும் தேவாலயத்துக்குவந்து கும்பேசுவர மூர்த்தியையும் மங்களாம்பிகையையும் தரிசனஞ் செய்யாமல் போஜனம் செய்வதில்லையென்று விரதம் பூண்டேன். இதுவரையிலும் தெய்வபக்தி சிறிது மில்லாத வீணரோடு சிநேகம் பண்ணி அவர்கள் பேச்சில் நம்பிக்கைவைத்து தெய்வசம்பத்தில்லாத நாஸ்திகளுகக் காலங்கழித்துவிட்டேன். இவ்வளவு காலம் வீணாய்ப்

போய்விட்டதேயென்று மனம்வருந்துகிறேன். இனிமேல் எனக்கு நீயே குரு தெய்வம். நீ தியானிக்கிற முறைகளை யெனக்குபதேசஞ்செய்தால் அந்த நெறிதவறாமல் நின்று வழிபடுவேன் என்றான். லோகநாதன்; அப்பா ராமலிங்கம்! உன் மனம் இவ்வளவு சீக்கிரத்தில் மாறுதல் அடைந்து நல்வழிப்படும்படி யருள்புரிந்த பரமகருணாநிதியான மங்கைபங்கனுக்கு வந்தனம் பண்ணுகிறேன். ஜகதீசனே மனமிரங்கி உன்னை வந்தாட்கொண்டால் அதைத்தடுப்பவராா்? நல்லது, அஸ்தமானமாய் ஒருமணிநேரந்தானாயிற்று. சிரமத்தைப்பாராமல் சுவாமிமலை போய் எங்கள் குலதெய்வமான சுவாமிநாதனைத் தரிசிக்கவேண்டும். அவர்சந்நிதியில் உனக்குபதேசஞ் செய்கிறேன் என, இராமலிங்கம் ஆனால் சரி; எங்கே கூப்பிட்டாலும் வருகிறேன் என்று புறப்பட்டான். இருவரும் காவேரிநதியைக்கடந்து வாயுவேகமாய் நடந்து இரவு ஏழரைமணிக்குள்ளாக சுவாமிமலை போய்ச்சேர்ந்து சுவாமிநாதனைத் தரிசித்தார்கள். இராமலிங்கமும் தன்மனோபீஷ்டப்படியுபதேசம்பெற்று மனமகிழ்ந்தான். பின்னர் நேரமாய்விட்டதே நாம் ஊருக்குப்போவோம் வா என, லோகநாதன் அப்பா! நானொரு ரகசியமான சமாசாரம் சொல்லவேண்டும். நீ யெனக்கு உயிர்த்தோழனாதலால் உன் மனமறியாமலொன்றும் செய்ய இஷ்டமில்லை. உன்னோடு கலந்துபேசவேண்டுமென்கிற அபிப்பிராயத்துடனேயே நானுன்னை யழைத்துக் கொண்டு தேவாலயத்துக்கு வந்தது. தெய்வகடாட்சத்தால் நீ யெனக்குத்தோழனாயிருப்பது போல மனமொத்த சிநேகிதனுமானது எனக்குப் பரம சந்தோஷத்தை விளைக்கின்றது. இனி நமதிரகசியங்களைப்பிறரறியாமல் காப்பாற்ற வேண்டும். நான் சொல்வதைக் கவனமாய்க் கேள்.

நான் இது வரைக்கும் பெற்ற தந்தையைப் போலப்பாவித்து வந்த தமையனை விட்டுப் பிரிந்திருக்கும் காலம் சமீபித்து விட்டது. என்னவென்றால் எனக்குப் பிதுரார்ஜித சொத்துக்கள் கிடையாது. என்னுடையதமையனார் சம்பாதிப்பதைக்கொண்டே குடும்ப காலக்ஷேபம் நடக்கவேண்டியிருக்கிறது. எங்கள் குடும்பத்தில் நாலு பேர்களேயிருந்தாலும் தமையனுடைய மாமனார் வீட்டுச் சனங்கள் அடிக்கடி வருவதும் போவதுமாயிருக்கிறார்கள். அவருடைய சிநேகிதர் பலர் வந்து போகின்றார்கள். அவருக்கு மேலான உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி வந்து விருந்துண்டு போகிறார்கள். என் தமையனார் நல்ல ஸ்திதிக்கு வர வேண்டி விரும்புகிற படியால் அவர்களெல்லாரையு முபசரித்துத் தீரவேண்டியிருக்கிறது. சில தினங்களுக்கு முன் தமையனுடைய மாமனார் வந்திருந்தார். அவர் தம்முடைய இரண்டு குமாரர்களும் தங்களூரிலிருந்த சிறிய பாடசாலையில் படித்தாய்விட்டதென்றும், மேலான படிப்புக்காகக் கும்பகோணத்தில் கொண்டுவந்துவிடவேண்டுமென்றும், தான் ஏழையாயிருப்பதினாலே சிறிது உதவி செய்து அவர்களை படிப்பிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அதற்கு என் தமையனார் முன்பின் யோசித்துப் பாராமல் சரியென்று ஒப்புக்கொண்டு சொல்லி விட்டார். ஜனவரி விடுமுறை முடிந்ததும் அவர்கள் வரப் போகிறார்கள். இப்போதே அவருக்கு வருகிற சம்பளம் நூற்றைம்பது ரூபா போதாமல் மாதந் தோறும் அறுபது எழுபது கடன் வாங்குகிறார். இப்படிக்கடன் வாங்கினதொகை இது வரை ஐயாயிர ரூபா ஆயிற்று. அவர் பெருங்கடனாளியாகிவிட்டாராகையால் அதைக் குறித்து மிகவும் கவலைப்படுகின்றார். செலவை யெப்படி குறைக்கிறதென்று பலவகையாக யோசித்து பார்த்தும் முடியவில்லை. இதைக்குறித்து சில தினங்களாக என் வீட்டில் கலகம் நடந்து வருகின்றது. முந்தாநாள் என் தமையனாரும் தாயாருமாகப் பேசிக் கொண்டிருந்த பொழுது நானுற்றுக் கேட்டுக் கொண்டிருந்தேன்.



அந்தப் பேச்சினால் நான் ஏதாவது ஈனத்தொழிலாவது செய்து ஜீவனஞ் செய்ய வேண்டுவதே உசிதமாகத் தோன்றுகிறது. என் தமையனும் அவர் மனைவியுமொரே மனதாயிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னை வைத்துக் காப்பாற்றுவது மிகக்கடினமாகவிருக்கிறது. என் தாயாரோ இதைக்குறித்து என்னிடத்தில் பேச இஷ்டமில்லாமலிருக்கிறாள். ஆகையால் ஒருவருக்கும் மனவருத்தமில்லாமல் நடக்க வேண்டுவதாயிருந்தால் நான்தேசாந்தரம் போவதே யுசிதமாகத் தோன்றுகிறது. இதை நீ ஒருவருக்கும் வெளியிடாதே. என் தாயாரொரு சமயம் என்னைக்குறித்து விசனப்பட நேரிட்டால் என் சமாசாரத்தை யவளுக்குத் தெரிவித்துச் சமாதானப்படுத்து. மனது கலங்காமலிருக்கச்சொல். நான் தல யாத்திரை செய்து வருகிறேன். அடிக்கடி உனக்குச் சமாசாரந் தெரிவிக்கிறேன் என்று சொல்ல இராமலிங்கஞ் சற்றுநிதானித்து, ஆம் ஆம் அவ்வாறு செய்வது யுக்தந்தான். ஆயினும் அது தமையனார் பேருக்குக் குறைவே யொழிய உமக்கொரு குறைவுமில்லை. “அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல, இல்லாகித் தோன்றாக் கெடும்” என்றபடி ஒருவன் தன் வருமானத்தை யறிந்து அதற்குத் தக்கபடி செலவு செய்யாவிட்டால் கடன் தொந்தரவால் வருந்த வேண்டியவனே யாவன். சிலருக்கு இந்த நல்ல புத்தி உண்டாவதில்லை. அதை நாம் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. நீ கையில் யாதொரு ஆதாரமும் இல்லாமல் போவது நியாயமாகவில்லை. ஊருக்குப்போனதும் என்னிடத்திலிருக்கும் சொற்பத் தொகையைத் தருகிறேன்; அதைக் கையில்வைத்துக்கொண்டு பிரயாணப்படலாம். அதோ நண்பன்சந்திரசேகரன் வருகின்றான்; எல்லாருஞ்சேர்ந்து ஊர் போய்ச் சேர்வோம். பிறகு நடப்பது நடக்கட்டும்.

சந்திரசேகரன்.—ஆர் அங்கே, லோகநாத ஐயரா உட்கார்ந்திருக்கிறது. எங்கே, சுவாமி தரிசனத்துக்கு வந்தாப் போலேயோ?

லோகநாதன்,—ஆமாம்! தாங்களெங்கே யிப்படி யெழுந்தருளியது?

சந்திரசேகரன்.—என்ன! உலகத்தில் செல்வமொரு இடத்தில் நிலையாய்நிற்பதில்லை. அது வருகிறதும் போகிறதும் மாயமாயிருக்கிறது. நேற்று இலட்சப் பிரபுவாக இறுமாந்திருப்பவர்கள பிக்ஷையெடுக்கப் புறப்படுகிறார்கள். பிக்ஷையெடுத்துழன்றவர்கள் இன்று பல்லக்கேறிவருகிறார்கள். ‘இருவே றுலகத் தியற்கை திருவேறு, தெள்ளிய ராதலும் வேறு’ என்றபடி அவரவர் செய்த புண்ணியத்துக்குத் தக்கபடி செல்வமும் அறிவும் அமைகின்றது. கற்றுவல்ல சான்றோரிடத்துச் செல்வஞ் சேருவதருமை! தனவானிடத்திலே கல்வி அறிவு உதிப்பது கடினம். ஆதலாலேதான் தனவானாயிருப்பவன் செல்வம்நிலையற்றதென்று உணர்ந்து கொள்ளாமல், இறுமாந்து தெய்வசிந்தை யில்லாமல் பிறரைமதியாமல், பெரியோர் சிறியோரென்று கருதாமல் தன் மனப்படியே நடந்து திரிகிறான். அவ்வாறான அகங்கார மேறினபோது தனலட்சுமி அந்தர்த்தானமாய் விடுகிறாள். அப்புறம் பல்லைப் பிடுங்கின பாம்பு போலாய் விடுகிறான். அப்பொழுது அவனது நிலைமை பரிதாபத்துக்கிடமாகின்றது. ஆகையால் கல்விச்செல்வமே யென்றுங்குறைவில்லாததாகையால் அதைப்பெற்றவனே புண்ணியசாலி. அவன் எவ்வகையிலும் சீர்பெறுகின்றான். நமது ஊருக்கு அடுத்த வலையப்பேட்டை கோவிந்தப்பிள்ளையைத் தெரியுமல்லவா? அவன் நேற்றுவரைக்கு மெப்படியிருந்தான்? இன்று அவனது ஆஸ்திகளெல்லாவற்றையும் கடன்காரர் ஏலம்போட்டுக் கொண்டு போய்விட்டார்கள். குடிக்கக் கஞ்சியும் உடுக்கத்துணியு மரிதாய்விட்டது. அதைப்பார்த்து உலகவாழ்வில் வெறுப்படைந்து சுவாமிதரிசனத்துக்குவந்தேன். இனிதெய்வத்துக்கு ஊழியம் செய்வதே சரியென்று கருதியிருக்கிறேன் என்றான்.

இராமலிங்கம்.—சந்திரசேகரா! இது என்னவைராக்கியம்? மயானவைராக்கியமா? சுவானவைராக்கியமா? பிரசவவைராக்கியமா?

சந்திரசேகரன்—யார்! பிள்ளையவர்களா? நீரிருக்கிறதை நான் பார்க்கவில்லை எந்தவைராக்கியமாயிருந்தாலென்ன? கோவிந்தபிள்ளை பண்ணையில் என்தகப்பனார் வேலை பார்த்து வந்தாரல்லவா? பிள்ளையவர்களுக்குக் கஷ்டம் வந்தால் என் குடும்பத்துக்கும் சங்கடம் வந்து சேரும். அதனாலேதான் மனம் வருந்திப் புறப்பட்டுவந்தேன். அந்தவருத்தமும் தனக்குத்தானே படிப்படியாய்க் குறைந்துபோகிறது. அதைப்பற்றிக் கவலையில்லை. உலக இயல்பு அவ்வாறிருக்கிறதென்பதை மாத்திரஞ் சொல்லுகிறேன். நிலையற்ற செல்வத்தை நிலையாக நினைத்து முன்பின்பாராமல் யோசனையின்றி நடந்து பின் வருந்துகிறவர்களுடைய புத்திக்குத்தான் மிகவருத்தப்படுகிறேன்.

இராமலிங்கம்:—அப்புறம் வருத்தப்படலாம்; சுவாமி தரிசனமாய்விட்டதா? ஆனால் வீட்டுக்குப்போகலாமே.

சந்திரசேகரன்:—ஆம், போகலாம்.

மூவரும் புறப்பட்டுப் பல பல வார்த்தைகளைப் பேசிக் கொண்டே நடந்து வீடு போய்ச் சேர்ந்தார்கள். இராமலிங்கம் என்பவன் பென்ஷன் தாசில்தார் சொக்கலிங்கபிள்ளை யவர்களுடைய பேரப்பிள்ளை. அவனுடையதகப்பன் பத்திராசலம்பிள்ளை யென்பவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர். ஆங்கிலேய கலாசாலையில் பி. ஏ. என்னும் வித்தியா பட்டம் பெற்றவர். அவருக்குத்திரண்ட செல்வமிருந்தது. சர்க்கார் உத்தியோகத்தில் பிரியமில்லை. ஆகையால் தமக்குள்ள பூமியைப் பண்படுத்திப் பயிர் செய்வதும், கண்டிராக்டு வேலைசெய்வதும் வியாபாரஞ் செய்வதுமே அவருக்குப் பிரியமாதலால் அவ்வத் தொழிலைநேர்ந்த போது செய்துகொண்டு காலங் கழித்து வந்தார். தம் செல்வப் புதல்வனுக்கும் அந்தத்தொழில்களிலேயே ஜீவனமுண்டாக வேண்டு மென்று கருதி ஆங்கிலேய பாஷையில் பேசவும் எழுதவும் பயிற்றுவித்து சுதேசபாஷையை நன்றாய்க் கற்பித்து வந்தார். லோகநாதன் சிறிது இங்கிலீஷ் படித்துச் சுதேசபாஷையாகிய தமிழ் சம்ஸ்கிருதத்தில் மிக பாண்டித்தியம் பெற்றுப் பண்டிதனாயிருந்தமையால் இதுவரை பத்திராசலம்பிள்ளை யவர்கள் அவனிடத்தில் பிரியம் வைத்துத் தன் குமாரனுக்கு அவனைத் தோழனாகக் கொண்டார். அது முதல் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் உயிர்த்தோழரானார்கள். அதனாலேதான் லோகநாதனைப் பிரியவாற்றாத இராமலிங்கம் மனம்வருந்தியவன் தேசாந்தரம் போகாதபடி தடுக்க தன்னாலான பிரயத்தனங்களைச் செய்துகொண்டிருந்தான்.

---

## இரண்டாவது அத்தியாயம்.

கோடிலிங்கதீட்சிதர்.—இராமசந்திரதீட்சிதரே! எங்கே அவசரமாய்ப் போகிறீர்? இங்கே சற்று வந்து போம்.

இராமசந்திரதீட்சிதர்.—நாளன்றைக்கு நவராத்திராரம்பமல்லவா? அதற்காக உடையார் பாளையம் போகவேண்டும். உடையார் பாளையம் மழவரங்கபூபன் நவராத்திரோற்சவத்தில் வித்துவசபை கூட்டி அவர்களுக்கு நல்ல பரிசுகொடுப்பாரல்லவா? அதைக் குறித்துத்தான் போகப் போகிறேன். நீரும் வருகிறதாயிருந்தால் இருவருஞ் சேர்ந்து போவோம்.



கோடிலிங்க தீட்சிதர்.—ஆமாம் எனக்குத்தெரியும். நாலா பக்கதிலிருந்து வித்துவான்களும், கைத்தொழிலோரும் வந்து தகுந்த சன்மானம் பெறுவது வழக்கம். நானும் வருகிறேன் போவோம் வாரும் என்று கூறி யிருவரும் மறுநாளுதயத்தில் புறப்பட்டுப் போனார்கள்.

இருவரும் போகும் போது கொள்ளிடநதிக்கரை வந்து சேர்ந்தார்கள். கொள்ளிடத்தில் வெள்ளம் பெருகிறது. அக்கரைபோக முடியாது. அக்கரைபோயிருக்கும் பரிசில் வந்துதான் போகவேண்டும். அதற்குள்ளாகப் பல்தேய்த்துக் காலைக்கடனை முடித்துப் போமென்று கருவேலங்குச்சியை முறித்துக்கொண்டு பல்தேய்க்க உட்கார்ந்தார்கள்.

(இன்னும் வரும்.) தேவதஞ்சரியம்மாள்.

---

# HAMLET.

# ஹாம்லெட்.

(178-ம் பக்கத் தொடர்ச்சி.)

## நான்காவது அங்கம்.

### முதற் களம்.

கோட்டையில் ஓர் அறை.

அரசன், அரசி, ரோஸென், கில்டென் பிரவேசம்.

அரசன்:—(அரசியை நோக்கி) நீ பெருமூச்சு விடுவதைப் பார்த்தால் ஏதோ விசேஷம் இருத்தல் வேண்டும். எனக்குத் தெரியப்படுத்து! நானதை அறிதல் அவசியம். உன் மகன் எங்கே?

அரசி:—(ரோஸென், கில்டென் இருவரையும் நோக்கி) சற்று விலகி இருங்கள் (அவ்விருவரும் போய் விடுகிறார்கள்).

இன்றிரவு நான் கண்டதை என்னென்று சொல்வேன், பிராணநாதா!

அரசன், காதலி, என்ன விசேஷம்? ஹாம்லெட் சவுக்கியமா?

அரசி:—கடலும் காற்றும் போர் புரியின் உண்டாகும் கலக்கம் போல் அவன் அறிவு கலங்கி நிற்கிறான். முதிர்ந்த வெறியில் இரைக்குப் பின் எலி ஓடுகிறதென்று சொல்லிக்கொண்டு அங்கிருந்த நமது கிழ மந்திரியைக் குத்திக் கொன்று விட்டான்.

அரசன்:—மகாபாவமாயிற்றே! நான் அங்கிருந்தால் எனக்கும் அந்தக் கதி தான் வந்திருக்கும். அவனை சுவேச்சையாய் விட்டிருத்தல் எல்லாருக்கும் கேடு. உனக்கும், எனக்கு மற்றுமுள்ள ஒவ்வொருவருக்கும் கேடு. இந்தக் கொலைக்கு நாம் எவ்வாறு உத்தரவாதம் பண்ணப் போகின்றோம்?

ஹாம்லெட்டினால் பிறர்க்குக் கேடு வராமல் எச்சரிக்கையா யிருத்தல் என்னுடைய கடமை யாயிற்றே. இச்சிறுவனிடத்திலிருந்த அன்பின் மிகுதியால் இன்றியமையாத

விஷயங்களையும் கவனிக்காமலிருந்து விட்டேன். தனக்கு வந்த ஆபத்தான நோயை ஒளித்து வைப்பவன் பின்பு துன்பமுறுவது போல் நானும் இப்போது கஷ்டப்படவேண்டியதாயிற்று. அவன் எங்கே போனான்?

அரசி:—தான்கொன்ற பொலோனியஸின் பிரேதத்தை எடுக்கப்போயிருக்கின்றான். பைத்தியத்திலும் தான் செய்த காரியத்தைப் பற்றி அவன் பரிதபிக்கிறான்.

அரசன்;—காதலி, நாம் போவோம் வா. நாளை சூரியனுதயமாகு முன்னமேயே ஹாம்லெட்டை இவ்வூரை விட்டுப் போகச் செய்வோம். எந்த உபாயஞ் செய்தாவது பொலோனியஸ் மரணத்தின் குற்றம் நம்மேல் சுமராமல் செய்ய வேண்டும்

[ரோஸென், கில்டென், இருவரும் திரும்பவும் பிரவேசம்.]

நண்பர்களே, துணைக்கு இன்னுஞ் சிலரைச் சேர்த்துக்கொள்ளுங்கள். ஹாம்லெட் பைத்தியமாயிருக்கும் பொழுது பொலோனியஸைக் கொன்று விட்டான். பிரேதத்தை வெளியில் இழுத்து வருகிறானாம். அவன் இருக்கும் இடத்திற்குப் போகவேண்டும். அவனிடத்தில் நயமாய்ப் பேசுங்கள். பிரேதத்தை இங்கே கொண்டு வாருங்கள்.

[ரோஸென், கில்டென் இருவரும் போய் விடுகிறார்கள்]

காதலி, என் கூட வா. நம்முடைய மந்திரிகளை யழைத்து நடந்து போன காரியத்தையும் இனி நாம் செய்யப் போகும் காரியத்தையும் அவர்களுக்குத் தெரிவிப்போம். நாம் செய்யும் சூழ்ச்சியால் நம்மிடத்தில் குற்றம் தோன்றாமலிருத்தல் வேண்டும். என் புத்தி மிகவும் கலக்க முற்றிருக்கின்றது.

## நான்காம் அங்கம்.

### இரண்டாங் களம்.

### கோட்டையில் மற்றொரு அறை.

ஹாம்லெட் பிரவேசம்.

ஹாம்:—பத்திரமாய் அடக்கம் செய்து விட்டேன்.

ரோஸென் } ஹாம்லெட் பிரபுவே!
கில்டென் }

ஹாம்:—இது என்ன சத்தம்? ஹாம் லெட்டைக் கூப்பிடுவது யார்? இவர்களா?

ரோஸென், கில்டென், பிரவேசம்.

ரோஸென்:—பிரேதத்தை என்ன செய்தீர், பிரபுவே?

ஹாம்:—சுயஜாதியாகிய மண்ணுடன் கலந்துவிட்டேன்.

ரோஸென்:—அது இருக்கிற இடத்தைச் சொல்லும். அதைக் கோயிலுக்குக் கொண்டு போதல் வேண்டும்.

ஹாம்:—அதை நம்பாதே.

ரோஸென்:—எதை நம்பலாகாது?

ஹாம்:—என் இரகசியத்தை வெளியிட்டு உன் மர்மங்களை மாத்திரம் வெளியிடாமல் வைத்திருப்பேனென்பதை. கடற்பஞ்சு போன்ற நீ என்னைக் கேட்கவும் நான் உனக்கு மறுமொழி பகர்வதும் இராஜகுமாரனுக்குத் தக்கதன்று.



ரோஸென்:—என்னைக் கடற்பஞ்சென்றா நினைக்கிறீர், பிரபுவே?

ஹாம்:—ஆம், ஆம். அரசன் நட்பையும் வெகுமதிகளையும் அதிகாரங்களையும் உறிஞ்சும் கடற்பஞ்சு. இத்தகைய சேவகர்கள் அரசனுக்கு முடிவில் உதவி செய்பவர்களே. குரங்கு தீனி தின்னுதல் போல் அரசன் உங்களைக் கடைவாயில் வைத்திருக்கிறான். முதலில் மென்று பின்பு விழுங்கப்படும். உங்களிடத்துள்ள சாரத்தைக் கிரகணம் பண்ண வேண்டுமாயின், உங்களைப் பிழிதல் வேண்டும். பின்பு பூர்வஸ்திதிக்கு வந்து விடுவீர்கள்.

ரோஸென்:—தங்கள் பேச்சிற்குப் பொருள் தெரியவில்லை.

ஹாம்:—சந்தோஷந்தான். கள்ளப்பேச்சு மூடர்களுக்குத் தெரியாது.

ரோஸென்:—பிரேதம் இருக்கும் இடத்தைச் சொல்லி எங்களுடன் அரசன் சந்நிதி வரல் வேண்டும், பிரபுவே.

ஹாம்:—இந்தக் கொலைக்கு அரசனே உத்தரவாதி. பிரேதம் அரசனிடத்தில் இல்லை. அரசன் ஒருவஸ்து.

ரோஸென்:—வஸ்துவா, பிரபுவே?

ஹாம்:—அரசன் அபதார்த்தம். அவனிருக்கு மிடத்திற்கு என்னை இட்டுக் கொண்டு போ. [பண்டமோரிடம், பழிபத்திடம்]

## நான்காம் அங்கம்.

### மூன்றாங் களம்.

### கோட்டையில் மற்றோர் அறை.

பரிவாரத்துடன் அரசன் பிரவேசம்.

அரசன்:—ஹாம் லெட்டைத் தேடவும் பொலோனியஸ் பிரேதத்தைக் கண்டு பிடிக்கவும் ஆட்களை அனுப்பியிருக்கிறேன். ஹாம்லெட்டை யதேச்சையாய் விட்டிருத்தல் பெரிய ஆபத்தாயிருக்கின்றது. வெளித்தோற்றத்தை விரும்பிப் புத்தியை உபயோகிக்காத சாமானிய ஜனங்கள் அவனிடத்தில் அதிக பிரியமாயிருத்தல் பற்றி ஹாம்லெட்டைச் சட்டத்திற் சொல்லியிருக்கிற கடுந்தண்டனைக் குள்ளாக்கலும் கூடாதகாரியமாயிருக்கிறது. இப்படிப்பட்ட சமயங்களில் குற்றவாளி செய்த பெருங்குற்றத்தைக் கவனிக்காமல் ஜனங்கள் தண்டனையைமாத்திரம் பெரிதாக எண்ணுகிறார்கள். கலகம் ஒன்றும் உண்டாகாமலிருத்தற்கு ஹாம்லெட்டை உடனே வேறு ஊர்க்கனுப்புவதே தக்க உபாயமாம். வியாதி மும்முரித்தால் பச்சைவெட்டு மருந்து கொடுப்பின் தீருமேயன்றி வேறு வகையில் அனுகூலமாகாது.

ரோஸென்:—பிரவேசம்.

என்ன சமாசாரம்?

ரோஸென்:—பிரேதமிருக்கும் இடத்தை எனக்கு ஹாம்லெட்டு சொல்லுவாரில்லை ஸ்வாமி.

அரசன்:—ஹாம்லெட்டு எங்கே?

ரோஸென்:—வெளியில் இருக்கிறார்; காவல் வைத்திருக்கிறேன்: தங்கள் ஆக்ஞை என்ன?

அரசன்:—அவனை நமது முன்னிலையிற் கொண்டுவா.

ரோஸென்:—ஓ கில்டென், ஹாம்லெட் இளவரசனை அழைத்துவா.

ஹாம்லெட், கில்டென். பிரவேசம்.

அரசன்:—ஹாம்லெட், பொலோனியஸ் எங்கே?

ஹாம்:—அவருக்குப் போசனகாலம்.

அரசன்:—போசனகாலமா! எங்கே?

ஹாம்:—அவர் போசனம் பண்ணவில்லை. அவரே போசனமாகுமிடத்தில் இருக்கிறார். இராச்சிய தந்திரத்தில் தேர்ந்த சில கிருமிகள் அவரைப் புசித்துக் கொண்டிருக்கின்றன. ஆகார விஷயத்தில் கிருமி தான் சக்கரவர்த்தி. நம்முடல் பெருத்தற்கு மற்றப் பிராணிகளின் உடலைப் பெருக்கச் செய்கின்றோம். "பருத்த தொந்தி நம்மதென்று நாமிருக்க காய் நரிகள் பேய் கழுகு தம்மதென்று தாமிருக்குந்தான்." பருத்தஅரசனும், இளைத்த பிச்சைக் காரனும் வெவ்வேறு பக்குவங்களே. அவர்கள் இருவரும் ஒரு பொருளுக்கே இரையாகின்றார்கள். இதே நமது முடிவு.

அரசன்:—அடாடாடா!

ஹாம்:—அரசனைத்தின்ற கிருமியைக் கொண்டு ஒரு மீனைப்பிடித்தலாகும். அந்த மீனையே ஒருவன் தின்னலாகும்.

அரசன்:—நீ சொல்வதின் பொருளென்ன?

ஹாம்:—ஓர் அரசன் சரீரம் பிச்சைக்காரன் மலப்பையில் போய்ச் சேரலாகும் என்பதைத் தான் உமக்கறிவித்தேன்.

அரசன்:—பொலோனியஸ் எங்கே?

ஹாம்:—சுவர்க்கத்தில் இருக்கின்றான். அவ்விடத்திற்கு ஆளனுப்பும். அங்கு இல்லாவிடில் நீரே அங்கு போய்ப்பாரும். ஒரு மாதகாலத்தில் அவன் அகப்படாவிடின் மாடிப் படிப் பக்கத்தில் நாற்ற முண்டாகும், அங்கு போய்ப்பாரும்.

அரசன்:—[வேலையாட்களை விளி] அங்கு போய்ப்பாருங்கள்.

ஹாம்:—நீங்கள் போகிறவரையில் அங்கே பொலோனியஸ் இருப்பான் [வேலையாட்கள் போய் விடுகிறார்கள்]

அரசன்:—நீ செய்த காரியம் எனக்கு மிகுந்த துக்கத்தை உண்டாக்கி இருக்கின்றது. உனக்கு எவ்விதத்துன்பமு முண்டாக்கலாகா தென்பதும் என்னுடைய கவலையாயிருக்கின்றது; அதுபற்றியே உன்னை இக்ஷணமே வேறு ஊர்க்கனுப்புதல் அவசியம். புறப்படுதலுக்கு ஆயத்தம் செய்துகொள். உன் தோழர்கள் தயாராயிருக்கிறார்கள். காற்றும் அனுகூலமாயிருக்கின்றது! கப்பலுந்தயாராயிருக்கின்றது, அங்கிலேயதேசத்திற்குப் பிரயாணம் சித்தமாயிருக்கிறது.

ஹாம்:—அங்கிலேய தேசத்திற்கா?

அரசன்:—ஆம், ஹாம்லெட்.

ஹாம்:—நல்ல காரியம்.



அரசன்:—நமது கருத்தை நீ அறிவாயாயின், நல்லதென்றே என்னுவாய்.

ஹாம்:—தெய்வமே அதை அறிந்திருக்கிற தென்பது எனக்குத் தெரியும். போய்வருகிறேன், அம்மா!

அரசன்:—அப்பாவென்று சொல், ஹாம்லெட்.

ஹாம்:—அம்மாதான். அப்பனும் ஆத்தாளும் புருஷனும் ஸ்திரீயுந்தானே. கணவனும் மனைவியும் ஒருடலாயிற்றே. அதைப் பற்றித்தான் அம்மா வென்றேன். அங்கிலேய தேசத்திற்குப் போய்வருகின்றேன் [ஹாம லெட் போய் விடுகிறான்].

அரசன்:—[ரோஸென், கில்டென் இருவரையும் நோக்கி] அவன் பின்னே போங்கள்: சீக்கிரத்தில் அவனைக் கப்பலுக்கு இட்டுப் போங்கள். தாமதம் வேண்டாம்! இன்றிரவு ஹாம்லெட் இவ்வூரில் இருத்தலாகாது. மற்றக் காரியங்களெல்லாம் கடிதத்தில் எழுதியுள்ளன. துரிதமாய்ச்செல்லுங்கள். [ரோஸென், கில்டென் இருவரும் போய் விடுகிறார்கள்.]

## நான்காம் அங்கம்.

---

### நான்காங் களம்.

### டென்மார்க்கில் ஒரு வெளி.

ஹாம்லெட், ரோஸென், கில்டென், வேறு சிலர் பிரவேசம்.

ஹாம்:—அங்கு நிற்பது எவருடைய படை, அய்யா?

சேனைத்தலைவன்:—நார்வே அரசனுடையது, ஸ்வாமி.

ஹாம்:—எதற்கு அந்தப்படை வந்திருக்கிறது, அய்யா?

சேனைத்:—போலாண்டு நாட்டின்மேல் படையெடுத்தற்கு.

ஹாம்:—சேனையை நடத்துபவர் யார், அய்யா?

சேனைத்:—நார்வே அரசனுடைய சகோதரன் புத்திரனாகிய பார்ட்டின் பிராஸ் என்பவர், ஸ்வாமி?

ஹாம்:—போலாண்டையே பிடித்தற்குப் போகின்றதா, அவ்வெல்லையிலுள்ள நாட்டைப் பிடித்தற்கோ?

சேனைத்:—வாஸ்தவத்தைச் சொல்ல வேண்டுமாயின் முழுநாட்டையும் பிடித்தற்கு நாங்கள் போகவில்லை. பேருக்கு மாத்திரம் நாடென்ற ஓர் சிறுபாகத்தைக் கைப்பற்றத் தான் போகின்றோம். அப்பூமியை ஐந்து பணத்திற்கும் நான் சாகுபடி செய்யச் சம்மதிக்க மாட்டேன். அப்பூமியைவிற்றால் நார்வேயாருக்காவது போலாண்டாருக்காவது ஐந்து பணம் கிடைக்காது.

ஹாம்:—அப்படியாயின் போலாண்டார் அப்பூமியைக் காவல் செய்யார் போலும்.

சேனைத்:—முன்னமே காப்புச் சேனைகள் வைக்கப்பட்டுள்ளன.

ஹாம்:—ஈராயிரம் ஆட்களும் இருபதினாயிரம் பொன்னும் இந்த அற்ப காரியத்தைத்தீர்க்க மாட்டா. இது திரவியக் கொழுப்பும் சண்டையின்மையும் உண்டாகும் பிளவை. உள்ளேயே உடைந்து வெளிப்புறத்தில் ஒன்றுந் தோற்றாமல் ஆளைக்கொல்லும் நோய் இது. தங்களுக்கு வந்தனம், அய்யா.

சேனைத்:—கடவுள் உம்மை இரக்ஷிப்பாராக. [போய் விடுகிறான்].

ரோஸென்:—வருகிறீர்களா, பிரபுவே?

ஹாம்:—இதோ வந்துவிட்டேன்: நீர் சற்று முன்னேபோம். [ஹாம்லெட்டைத் தவிர எல்லோரும் போய் விடுகிறார்கள்].

ஹாம்:— [தனிமொழி] என் மேல் குற்றஞ்சொல்லாத சமயம் ஒன்றுமில்லை; என்னுடைய ஆத்திரத்தை எதுவும் கிளப்பி விடுகின்றது. உண்பதிலும் உறங்குவதிலும் காலத்தைப் போக்குகிறவன் விலங்கினத்தைச் சேர்வானே யன்றி வேறில்லை. பூதபவிஷ்யகாலத்தை யறியக்கூடியதாய் நமக்களிக்கப் பெற்றதாயுள்ள ஞானம் நம்மிடத்தில் நிஷ்பிரயோஜனமாய்த் துருப்பிடித்தற்கன்று. மிருகங்களுக்குள்ள மறதியாலோ, எந்த விஷயத்தையும் ஆழ்ந்து பார்த்தலினாலோ, என் மனம் கோழைப்பட்டுச் சங்கற்பித்த காரியம் முற்றுப் பெறாமற் போய் விடுகின்றது. சிற்றப்பனைக் கொல்வதற்குக் காரணமும் பலமும் உபாயமும் எனக்கு உண்டு. பிரத்தியக்ஷமாய்த் தோற்றும் ஜடப்பொருளாயுள்ள பூமி என்னைத் தூண்டிவிடுகின்றது. நார்வே இளவரசன் சிறுபிள்ளை: அவன் சரீரம் மிகவும் கோமளமானது; ஒரு பெருஞ் சேனைக்குத் தலைவனாய்ப் போகின்றான்; அநித்தியமாயுள்ள சரீரத்தை யுத்தத்தில் இழக்கப் போகிறான். ஆபத்திற்கு எள்ளளவேனும் பயந்தானில்லை. முடிவில் அவனுக்கு ஜயம் வருவதும் நிச்சயமாயில்லை. ஆயினும் தீரமாய்த் தானிருக்கிறான். அவனைப் பார்த்தாவது எனக்குப் புத்திவர வேண்டாமா? மானபங்கம் வருங் காலத்தில் சண்டைக்குத் தக்க நியாயங்களுண்டா வென்று விசாரித்தல் வேண்டாம். அற்பகாரணமிருந்தாலும் அதுவே போதும். அப்பன் கொலையுண்டும் ஆத்தாள் கற்பழிந்துமுள்ள நான் சும்மா விருத்தல் தர்மமா? எனக்கு அளவற்ற கோபம் வருதல் அவசியமன்றோ? நார்வே இளவரசன் இருபதினாயிரம் போர்ச் சேவகர்களைக் கூற்றினுக்கு இரையாக்கக் கொண்டு போவது எதற்கு? வியாஜ்யமூலமாயுள்ள நிலத்தின் பரப்பை யெண்ணும் பக்ஷத்தில் அது இருபதினாயிரம் ஆட்கள் நிற்கவும் போதாது; அவர்களைப் புதைக்கவும் போதாது. கீர்த்தியடைய வேண்டுமென்கிற ஆசையால் உந்தப்பட்டல்லவோ அவன் உற்சாகமாய்ப் போகின்றான். இக்ஷணமுதற்கொண்டு சிற்றப்பனைக் கொலை செய்வதொன்றைத் தவிர்த்து வேறு ஒரு எண்ணத்தையும் சித்தத்தில் குடிகொள்ள நான் இடங்கொடுப்பதில்லை. இது சத்தியம்.

கே. வெங்கிடராமய்யர், பி. ஏ.

---

உ

# பானுமதி.

---

## காப்பு.

மங்களம் பெருக நான் மறைநெறி விளங்க ஞால
மெங்கிலுஞ் சராச ரங்க ளின்பமுற் றினிது வாழச்
சங்கர னொருபான் மேவிச் சகமரு ளுமையீன்ற
ஐங்கரக் களிற்றைநாடி யகங்களித் துருகா நிற்பாம்.

## மங்கள வாழ்த்து.

அமிர்தமயமான பூர்ண சந்திரனு நாணும்படி பிரகாசிக்கிற வதனார விந்தத்திலே மலர்ந்தொளிரும் நீலோத்பலங்களாகிற கண்கடையினாலே, சர்வாண்டசராசரங்களையு மொருநொடியிலே பஸ்மமாகத்தகிக்கும் ஸர்வசங்காரருத்திர மூர்த்தியினுடைய நெற்றிக்



கண்ணில் ஜ்வாலித்தெரியும் அக்கினிகுளிரவும், அந்த அக்கினியினாலே யெரிந்திறந்த மன்மதன் மறுபடியு முயிர்பெற் றெழுந்திருந்து சராசரங்களுக்கு இன்பப்பிரவாகத்தை யருளவும், பரமேசுவரனுடைய முகத்தை நோக்கிப் புன்னகைபுரியும் பருவத வல்லியாகிய உமாதேவியின் மடிமீதி லெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ குமாரமூர்த்தியானவர் ஸர்வஜகத்துக்கும் மங்கள மருள்வாராக.

## பிரஸ்தாபனை.

### ஸூத்ரதாரி பிரவேசம்.

ஆரடி நடீ! என்ன செய்துகொண்டிருக்கிறாய்? இங்கே வா!

நடீ:—நான் தலைவாரிப் பின்னிமுடித்து அலங்காரம் பண்ணிக்கொண்டு, நெற்றிக்குக் கஸ்தூரி திலகமிட்டுக் கொண்டிருக்கிறேன். இதோ வந்துவிட்டேன்.

ஸூத்:—ஆனால் சந்தோஷம்; நான் நினைத்தபடியே யிருக்கிறது சீக்கிரம் வா.

நடீ:—ஐயா! இதோ வந்துவிட்டேன். எனக்கென்ன கட்டளை யிடுகிறீர்.

ஸூத்:—ஆகா! நடீ, இந்த வசந்த காலத்தைப்பார்த்தாயா! எவ்வளவு ரம்மியமாயிருக்கிறது. பழைய இலைகளெல்லாமுதிர்ந்து, இரத்தினத் தகடுபோலத் துளிர்விட்டுக் கண்ணுக்கினிமையாக விளங்குகிற தேமாமரங்கள் தோறும் ஆண்குயில்கள் மாந்தளிரைக் கோதிக்கோதி இனிமையான குரலினாலே பெண்புறாக்களின் மனதை யுருக்குகின்றன. பட்சிகளும் மிருகங்களும் ஜோடி ஜோடியாகக்கூடி விளையாடி மகிழ்கின்றன. சண்பகம், பாதிரி, மகிழ், கோங்குமுதலிய விருக்ஷங்கள் மலர்ந்து காததூரம் சுகந்த பரிமளம் வீசுகின்றன. ரமணீகரமான இந்தக்காலத்தில் தேவர்கள் அமிர்தம் உண்டு மகிழ்வதுபோல இந்தச்சபையார் கேட்டு மகிழும்படி, உன்னுடைய தாமரை மலர்போன்ற வாயைத் திறந்து அமுதம் ஊற்றுவது போல ஒரு பதம் பாடு பார்ப்போம்.

நடீ:—ஐயா! அப்படியே பாடுகிறேன்.

இராகம் - இந்துஸ்தானி.

பல்லவி.

நாதா இன்னமும் வாதா புவிபுகழ்
தாதா இரங்கலாகாதா வென்றன்மேல்-நாதா.

சரணங்கள்.

மாங்குயில் துணையொடுங் கூடிப்பாடியென்
மனநிலையுருக்குதே அனல்மெழுகாகவே
வந்தாதரித்தருள் சிந்தாகுலமறத்
தந்தான் புஜத்தணி பைந்தாரிறைவனே-நாதா.
மன்றலம்பாதிரி சண்பகமாமகிழ்
மலர் கமகமவென வாசனைவீசுதே
அன்றிலம்பெடையொடு துன்றிநின்றெங்கணும்
நன்றுள மகிழ்ந்தெனை வென்றுகொண்டாடுதே-நாதா.
சிந்தையிற் கவலையற் றுய்ந்தழியாதமெய்ச்
சிவானந்த சாகரத் தெள்ளமுதுண்டினி
பந்தமும் வினைகளுஞ் சொந்தமும் விடைபெறச்
செந்திலமர்ந்தரு ளெந்தையைப் பாடியும்-நாதா.

ஸூத்:—பேஷ்! நட! உண்மையாகவே யிந்தப்பதம் பருவகாலத்துக் கேற்றதாகவும் தேவாமுதம்போல மிகவு மினிமையாகவு மிருப்பதனால், சபையாரெல்லாருக்கு மானந்தமாகவே யிருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் என்மனதிற்கு இன்னமொ குறைவிருக்கிறது. அதற்கென்ன செய்யலாமென்று யோசிக்கிறேன். அதென்னவென்றால் சுகமான இக்காலத்தில் சபையாருடைய காதுக்கும் மனதுக்கும் கண்களுக்கும் ஆனந்த முண்டாம்படி இதுவரைக்குமொருவரும் பார்த்திராததும், கேட்டிராததும், மனதுக்கு ஆனந்த மளிப்பதும், நூதனமானதும், நவரசாலங்கார முள்ளதுமான ஒரு நாடகத்தைச் சபையாருக்கு நடித்துக் காட்டவேண்டுமென்பதே. இதற்கு நீ யென்ன சொல்லுகிறாய்!

நட:—ஐயா! இதற்குத்தானா இவ்வளவு வருத்தம். ஸ்ரீவத்ஸ கோத்திரமாகிய திருப்பாற்கடலிற் பிறந்த கௌஸ்துபமணிபோல்பவராகிய திரிசிரபுரம் சிவராமக்ருஷ்ண சாஸ்திரியவர் கேசவராது மாணாக்கரும் மருகரும் பாலகவியெனச் சிறப்புப் பெயர்பெற்றவருமான அலங்கார சுப்பிரமணிய பாரதியவர்களாலியற்றப்பட்டிருக்கிற பானுமதி நாடகம் உமதுகருத்துப்போலிராதா! அது மிகவும் நூதனமானதல்லவா! சித்தமானால் அதை நடித்துக்காட்டலாமே,

ஸூ:—நட! பேஷ். நன்றாகச் சொன்னாய்; அதுவே தகுந்தது. அதையே நடித்துக் காட்டுவோம். அதோபார்த்தாயா! ஒரு ஆண்மயிலானது தோகையை விரித்து அசைந்தாடிக்கொண்டிருப்பதும் அதைச்சூழ அநேக மயில்களிருந்து களிப்பதையும் பார்த்தால் காசிராஜாவாகிய வீரேசுவரன் கொலுவிலிருப்பதை ஞாபகப்படுத்துகிறது. அதோவீரேசுவர மகாராஜாவின் உயிர்த்தோழனாகிய விதூஷகன் வருகிறான், நீ உள்ளே போ. நானும் வருகிறேன். (போய்விட்டார்கள்.)

## முதலங்கம், முதற் காக்ஷி.

### விதூஷகன் பிரவேசம்.

விதூஷகன்:—ஆர் அங்கே! ஆஸ்தானமண்டபக் காவலாளி விஜயனா?

விஜயன்:—ஆமாம்; நமஸ்காரம் சுவாமி.

விதூ:—இன்றையதினம் மகாராஜா கொலுவுக்குவருகிறார். அதையுனக்கறிவிக்க வந்தேன். நீ சித்தமாயிரு.

விஜ:—அப்படியே காத்திருக்கிறேன் சுவாமி, என்னவிசேஷம்?

விதூ:—விசேஷமென்ன! நமது ராஜாக்கள் சங்கதி தெரியாதா; யோக்கியர் அயோக்கியரென்று யோசிக்காமல் அவர்களைச் சிநேகராக பாவிக்கிறதும், அவர்களிடத்தில் பூரணமான நம்பிக்கை வைக்கிறதும், கடைசியில் ஆபத்துவந்தால் விழிக்கிறதும், அதை நிவர்த்தித்துக்கொள்வதற்காக மதி மந்திரிகளையழைத்துச் சபைகூட்டுகிறதும் வழக்கந்தானே. எல்லாம் மகாராஜா வந்தால் தெரிகிறது. எக்காள மூதுகிற சப்தங் கேட்கிறது; நான் அவசரமாய்ப் போகவேண்டும். போகிறேன். (போய்விட்டான்.)

கட்டியக்கார உத்தண்டவீரன்:—ஆஸ்தானக்காவல் விஜயா! மஹாராஜா கொலுவுக்குவந்துவிட்டார். கொலுமண்டபம் அலங்கரித்திருக்கிறதா!



விஜயன்:—எல்லாம் சித்தப் படுத்தி வைத்து மஹாராஜா வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

### மஹாராஜா பிரவேசம்.

இராஜன் சிம்மாசனத்திலுட்காருகிறார்.

கட்டியம்:—சகலகல்யாணகுணசம்பன்ன மதிமன்ன சாச்வதைச்வர்ய யோக; சகலகலா விற்பன்ன நிலவுலகம் பரவுதரணி ஜனபரிபாலகா! சத்ருஜன சங்காரவுத்தண்ட கெம்பீர ஜயவெற்றி வீரதீர; சஜ்ஜன தயாபரா வற்புதக்ருபாகரா சாமீ பராக் பராக்கு.

மஹாராஜா:—மந்திரிவிவேகசீல! இராஜ்யத்தில் மாதமும்மாரிபெய்து நீர்வளம் சிறந்திருக்கின்றனவா? சகலவித தானிய தவசங்களுங் குறைவற விளைந்து சம்ருத்தியாயிருக்கின்றதா? சத்ருபயம், சோரபயம் வியாதிபயம், மிருகபயம், அதிகாரிபயங்களில்லாமல் குடிகள் கவலை யற்றுக்களித்து வாழ்கின்றனரா? அதிகாரிகள் நிஷ்பட்சபாதமாய் நீதி செலுத்திவருகிறார்களா? அந்தணரனைவரும் மறைநெறி கடவாமல் நித்தியகர்மானுஷ்டான சீலர்களாய் யாகயக்ஞாதிகளைச் செய்து முத்தீவளர்த்து வருகிறார்களா? மாதர்கள் கற்புநெறி கடவாமல் தத்தம்பர்த்தாக்களைத் தெய்வமாகக் கொண்டு வழிபட்டு வருகிறார்களா?

(மந்—விவே)மஹாராஜாவே சந்நிதானத்திய ஆக்ஞாசக்கிர மகிமையாலே யாதொரு குறைவுமில்லாமல் யாவும் சரிவர நடந்து வருகின்றன.

மஹா:—உன்னைப்போலொத்தமதிமந்திரியை யுரிமையாகப் பெற்றிருக்குமென்னைப் போன்ற இராஜாக்களுக்கு யாதொரு குறைவு நேரிடாது. அந்தணர் மறைநெறி திறம்பினால் மேகம் மழைபொழியாது. மாதர் கற்புநெறிகடந்தால் சற்சந்தானோற்பத்தியில்லாமல் கிராதர்கள் போன்ற பிரஜைகள் ஜனித்து இராஜ்யமெல்லாம் பாழாய்விடும். அதிகாரிகள் நடுநிலைமை கடந்தால் குடிகளெல்லாங் கஷ்டப்பட்டு இராஜனைச்சபிப்பார்கள்! அதனால் இராஜ்யத்துக்கு ஹானி நேரிடும். இவையெல்லாம்சகலசாஸ்திர விற்பன்னனான உனக்குத் தெரியாததல்லவே.

(ம-வி) மஹாராஜாவின் சித்தம்போல இராஜ்யத்தை நடத்தி வருகிறேன்.

மஹாராஜா:—மந்திரீ, அதோவருகிறவன்யார்! புதியவனாகக் காண்கிறான்.

(மந்-வி)—நமது ஒற்றன் சூட்சுமதரிசிதான் வருகிறான்.

## முதலங்கம், இரண்டாம் காக்ஷி.

### வேவுகாரன் பிரவேசம்.

(சூட்சுமதரிசி) சாமீ சேவகம்.

(மஹாராஜா) சந்தோஷம். எந்தத்தேசம் போனாய், அங்கங்கே யென்ன விசேஷம்.

(சூட்சுமதரிசி) அங்கதேசம், வங்கதேசம், கலிங்கதேசம், காம்போஜ தேசம், விதர்ப்பதேசம், பஞ்சகௌடதேசம் முதலான பல தேசங்களிலும் பலபல வேஷம்பூண்டு உருமாறிச்சஞ்சரித்துவந்தேன். விதர்ப்பதேசத்தில் ஒரு விசேஷத்தைக்கண்டு அவசரப்பட்டு ஓடிவந்தேன். சொல்லவோ நாவெழவில்லை. சொல்லாதிருக்கவும் மனம் வரவில்லை.

(மஹாராஜா) பயப்படாமல் சொல்லு. எதுவா யிருந்தாலும் தெரிய வேண்டியதுதானே.

(சூட்சுமதரிசி) விதர்ப்ப நாட்டுக்குப் புதிதாக மகுடஞ் சூட்டப்பெற்ற ஜயநாதன் பழையபகையைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு நம்தேசத்தின்மேல் படையெடுத்து வரு

கிறான். கலிங்கராஜனும் காம்பிலிராஜனும் அவனுக்குப் படைத்துணையானார்கள். இன்றைக்கோ நாளைக்கோ இங்கே வந்து சேர்ந்து நமது நகரத்தை முற்றுகை செய்வார்கள். இது சமாசாரம் நிச்சயமறிவதாக.

(மஹாராஜா) மந்திரி! இதென்ன இடி விழுந்தாற்போலிருக்கிறதே. நாமோ யுத்தத்துக்குச் சித்தமாயிருக்கவில்லையே! சத்துருவந்து மேல்விழுந்துவிட்டால் இராஜ்யம் கலங்கிப்போமே. இப்பொழுது சாம தான பேத தண்டமென்கிற சதுர்விதராஜதந்திரங்களிலெது செய்யத்தக்கதோ அதையோசித்துச் சொல்லு.

(விதூஷணன்) பூர்வகாலத்தில் உன் தகப்பனும் பாட்டனும் அந்தராஜ்யத்தை யென்னபாடுபடுத்தினார்கள். அவன் சும்மாவிடுவானா? இப்பொழு ததைத்துக்கொண்டென்னசெய்கிறது? "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" படிபடி, என்று மனதுக்குள்ளே சொல்லிக்கொண்டு மகாராஜாவைப்பார்த்து, ஆமாம் அவசியம் யோசிக்கவேண்டியதுதான். அதுவும் சீக்கிரமாகவேண்டும்.

(மந்-ரி) சற்று யோசித்து, சுவாமி நல்ல யோசனையொன்று தோன்றிற்று. வடக்குத்தெருவில் அசோகனென்றொரு பிராமணப்பிள்ளை யொருவனிருக்கிறான். அவன் மகா ரணாரங்கசூரன். மந்திர தந்திரங்களில் சிறந்தவன். திரிலோகங்களையும் வெல்லவல்லவன். அவனையழைத்து அனுப்பினால் நமக்கே ஜயம் வருமென்பதிலைய மில்லை. உத்தரவானால் அழைப்பிக்கிறேன். (இன்னும் வரும்)

வரகவி - திரு - அ - சுப்பிரமணிய பாரதியார்.

# பெண்களும், பேயென்னும் பெரும் வியாதியும்.

மேற்றேசத்துப்பெண்கள் போதுமான சுதந்தரம் பெற்றுப்பிரகாசிக்கையில், இத்தேசத்துப் பெண்கள் அஞ்ஞான விருளில் ஆழ்ந்து ஆடவர்க்கடிமைகளாக விருப்பது மன்றிப் பேய்களுமா அவர்களைப் பிடித்தல் வேண்டும்? பெண்ணென்றால் பேயுமிரங்குமென்றுபொதுவாய்ச் சொல்லுகின்றார்களே யன்றி, பேய்களொன்றும பெண்கள் விஷயத்தில் இரங்குவதாய்க் காணவில்லை. இரங்குவதுண்மையாயின், இந்நாட்டுப் பெண்களைப் பேய்கள் ஏன் பிடிக்கின்றனவோ தெரிய வில்லை! பெண்களைமட்டும் பேய்கள் பிடிக்கையில் ஆண்களை ஏன் பிடிப்பதில்லை? ஆண் பேய்கள் பெண்களைப் பிடித்தால் பெண் பேய்கள் ஆண்களைப் பிடிக்கவேண்டுமே; அங்ஙனமொன்றும் காணோமே! மோகினிப் பேய்கள் உளதென்று மொழிகின்றார்களே யன்றி, அவைகள் ஆண் பேய்கள் செய்யும் ஹிம்சைகளைப் போன்ற ஹிம்சைகளெவையுஞ் செய்வதாய்க் காணவில்லையே. பொதுவாய்ப் பேய்களின் பயம் இந்நாட்டிலிருப்பதைப் போன்று எந்நாட்டிலுமில்லை. இப்பயம் எங்குமுளதேல், ஐரோப்பியர் பேய்களுக்கேன் பயப்படுகின்றார்களிலர்? இந்நாட்டுப் பெண்களைப் போல ஐரோப்பிய ஸ்திரீகளும் பெண்களேயன்றோ? அவர்களைப் பேய்களேன் பிடித்தலில்லை? துர்மரணமாய் மடிந்தவரெல்லாம் பிசாசுகளாகி நம்பெண்களையே பிடித்தாட்ட வாரம்பிக்கின், இந்நாட்டிற் பேய்களுக்குப் பெண்கள் அகப்படுவதே பெரும்பிரயாசையாய்விடும்; ஏனெனில், மற்ற தேசத்தினர் தம் பெண்களைப்பேய்கள்



பிடித்தாட்டும் பெருமையைப் பெற்றாரிலர். பெற்றிருப்பதுண்மையாயின், அவர்களுள்ளும் அலகையின் ஆட்டமும் ஓட்டமும் இருக்குமன்றோ? அங்ஙனமொன்றுமில்லை. வயோதிகப் பெண்களையும் இளமைப் பெண்களையும் பேய் பிடிக்காது, வாலிபப் பெண்களைமட்டும்பேய்கள்தேடிப் பிடித்து வருதலென்னை? கிழவிகளென்றும் குழந்தைகளென்றும் அவர்கள் விஷயமாய் இரக்கங்காட்டி விட்டனவோ! அல்லது ஆடின ஒரு பெண் பூசாரியிடம் புகன்றதுபோலப் பேயாடும் பெண் தனக்குப்பெண்டாயிருக்க வேண்டுமென்றுதான் பேய் பிடித்துக் கொண்டதென்றும் தெரியவில்லை. இதிலெல்லாம் ஆடவர்க்கவமானமில்லை போலும்! பெண்கள் பேயாடுதற்கு வியாதி முதலிய வேறு பல காரணங்களிருக்கப்படாதா? பேய்களின் ஹிம்சைகளைப்போன்ற வியாதிகள்பெண்களுக்குளதென்று வைத்திய சாஸ்திரங்களால் நன்கு விளங்குகின்றது. தற்சமயம் பட்டணவாசப் பெண்களிற் சிலர் இதை வியாதிகளென்றே நினைத்து ஆஸ்பத்திரி முதலிய விடங்களுக்குப் போய் அவ்வௌஷதங்களை வாங்கியுண்டுவருவதால், இப்போது ஒருவாறு முன்னிருந்த மூடநம்பிக்கை குறைந்து வருகின்றதேயெனினும் முற்றிலும் குறைந்த பாடில்லை. அன்றிப் பேயாடும் பெண்களின் செய்கையும் பெரிய சந்தேக விபரீதத்திற் கிடந்தருகின்றது. மாமிமார் செய்யும் உபத்திரவத்தால் அவர்கள் ஆடுகின்றனரோ? புருஷன் தன்னைப்போஷிக்கவில்லையென்னும் கலிப்பினாலாடுகின்றனரோ? காலைமுதல் மாலைவரையில் அடுப்பைவிட்டு அப்புறம் போகாமல் நல்லகாற்று, நல்லநித்திரை, ஆகாரமின்றி கிரகவிருத்தியங்களாலுண்டான பித்த மயக்கத்தினாலாடுகின்றனரோ? பேய்க்கதைகளைக் கேட்ட பெரும் பிரமையாலாடுகின்றனரோ? அவர்களைப் பேய்தான்பிடித்தாட்டுகின்றதோ? மதியிலாப்பெண்களின் மதி மயக்கை அந்தோ! என்னென்றெடுத்துரைப்பேன். ஆடவரும் தம்மருந்துணைவிகளுக்குப்பேய்கள் பிடித்ததென்று நினைத்தல் என்னபெருமையோ தெரியவில்லை. பேய்களென்று நினைத்துப் பூசாரிகளுக்குப் பறிகொடுத்த புருஷர்களெத்தனை? பெண்களைப் பறிகொடுத்த பெற்றோர்களெத்தனை? கற்பிழந்த கன்னிகைகள் எத்தனை? இங்ஙனம் பொருளையும், புகழையும், பெண்ணையும், பிறப்பையும், பெண்டிரையும் பூசாரிகளிடம் ஒப்புவித்ததென்ன பெருமையோ தெரியவில்லை. அந்தோ! இந்நாட்டுப் பெண்களும் பிறரும் இன்னும் இத்தகைய பேதைமதியுள்ளவர்களாயிருப்பின், இந்நாடு எப்படி ஈடேறுமோ எனக்குத்தெரியவில்லை.

பெண்களுக்கு யாதொருசுதந்தரமின்றிச் செய்து அவர்கள் வாய்ச்சொல் செல்லாத போது மிக்க பொறுமையுள்ளவர்களேயாயினும், அவர்களுக்கும் சிலசமயம் கோபம்பொங்கி ஆடவரை எதிர்த்தும் தம் சொற்கிணங்கி வரும்படியான பற்பல தந்திரங்களை செய்தலுங்கூடும். நிதர்சனமாக ஒரு விஷயத்தையீண்டு விவகரிக்கின்றேன்:—பிதா குழந்தைக்குத் தம்முன்னோர் பெயர்வைக்கவேண்டுமெனில், தாய்மறுத்துப்பார்த்துப் பயனில்லையெனத் தெரிந்தால் அருளோ, மருளோ, அலகையோ வந்ததுபோல ஆடிப்பாடி அபிநயித்துப் பயமும் நயமும் காட்டி யிறந்துபோன தம்வழியிலுள்ள ஒருவன் பெயரே தம்பெயரெனச் சொல்லிக் குழந்தைக்கு அவன்பெயர்வைப்பின் போவேனென பயங்காட்டிப் புருஷனை உடன்படும்படி செய்துவிடுகின்றாள். இவைபோன்ற தந்திரங்கள் பலவுள. பேய்பிடித்த ஒரு பெண் பயங்கரப் படுத்திப் பற்பல பாசாங்குகள் செய்து யாவரையும் பிரமிக்கும்படி செய்த சமயத்தில் பின்திரும்பித் தனக்குத் தானே புன்னகை கொண்டாளாம்! அடக்கமும் ஒடுக்கமும் பார்த்தாலெனில் மிக்கபக்ஷமுமுள்ள பெண்கள்கூட யாதோ சில காரணத்தால் பேயாடுபவராய் மாறி மனம் போனபடி நடந்துவருகின்றனர். இங்ஙனம் அட்டகாச

ஞ்செய்யும்போது பர்த்தாவந்து விடின் வழக்கப்படி பயந்து பணிவுகாட்டியு முள்ளார்கள். புருஷன் ஒருவேலையின் நிமித்தம் வெளியிற்போய் வீட்டிற்குத் திரும்பிவந்த காலையில், மனைவி வீட்டிலிராது பெருமாள் கோவிலிற் பேயாடிக்கொண்டிருக்கிறுளெனக் கேள்வி யுற்றுப்பிரம்பும் கையுமாய் ஆண்டுச்சென்று அவளை நையப்புடைக்க, அதற்கு அவள் என்னையேன் அடிக்கின்றாய்; உனக்கு வேண்டிய உணவு உறியில் வைத்து வந்துளேனே என்று உரையாடினளாம். அன்றித்தத்தம் புருஷர்களுக்கெதிரில் பெண்களுக்குப்பேய்கள் வந்தாடுவதில்லை என்கின்றார்கள். புருஷர்களைக்கண்டால் பேய்களுக்கு பயமோ? வேறு யாது காரணமோ? மேலேசொன்னபடி பேய்கள்பிடித்த பெண்களுக்கு எந்திர மந்திரங்களால் ஏற்பட்ட நன்மையைவிடப் பிரம்படியே சில சமயம் பெரும் பிரயோசனத்தை யளித்ததெனச் சொல்வாருமுளர். ஆவ், ஜாவ் என்றன்னிய மொழிகளைப் பேய் பிடித்த பெண்கள் பேசினதைக் கேட்டு, அம்மொழிகளைப்பேசுவோன் ஆவேசமே அவளை அடைந்துளதென்று பிரமித்துப் பேசுகின்றார்கள். என்னே நம்மவர்களின் மதியிருந்தவாறு! அவர்கள் தாம் காதிற் கேட்ட சில மொழிகளை மொழிவார்களே யன்றி அப்பாஷைகளைத் தக்கபடி நன்கறிந்தவர்களோடு பேசி வினவியதற்குத் தக்கவிடை கொடுத்து வாசித்து எழுதி அவன் கல்விவன்மையை மெய்ப்பித்துக்காட்ட முடியாதன்றோ? இரண்டொரு துலுக்க வார்த்தைகளை உச்சரித்தவுடனே அவளைத் துலுக்கப்பேய் பிடித்துளதென்றும், தப்பித்தவறி இரண்டொரு சமஸ்கிருத மொழிகள் வாயில் வந்துவிடில், சாஸ்திரப் பண்டிதர்களின் ஆவேசம் அவளைச் சார்ந்து சாஸ்திரங்களெல்லாம் பேசுகிறுளென்றும் நம்மவர் சொல்லிக் கொள்வார். ஆலோசிப்போமாயின், இதிலொன்று மாச்சரியமில்லை. சில பெண்கள் நிரட்சரகுட்சிகளாயினும், அன்னிய பாஷைகளை நன்கு பேசவும், கேள்விஞானத்தாற் பாடவும், புராணங்களைத் தலைகீழா யொப்புவிக்கவும், வேதாந்தரகசியங்களை யெல்லாம் எடுத்து விவகரிக்கவும் கூடியவராயிருத்தலைக் கண்டு திகைத்துள்ளேன். சில பெண்களுக்கு இத்தகைய எவ்வளவோ சக்தியிருந்தும் இடபேதத்தாலும், இயற்கை நாணத்தாலும் ஒன்று மறியாதவர்போற் பிறருக்குத்தோன்றி வியாதிவந்தகாலையில் பித்தமயக்கத்தாலும், புத்தி பேதத்தாலும் வெட்கமும் பயமும் போய் ஒருவாறறிந்த அன்னியமொழிகளைப் பேசவுங் கூடும். இதன் மர்மமறியாதவர் பேயே உள்ளிருந்து பேசுகிறதென்று பிரமைகொள்வர். பேய்பிடித்த பெண்கள் "சக்கரம்" போடுதல் ஆச்சரியமல்லவா என்பாராயின் ஆச்சரியமன்று. ஒருத்தி போட்ட கோலத்தைப் போன்று கொடியிற் போடக் கற்ற பெண்கள் "சக்கரம்" போடுதல் என்ன ஆச்சரியமோ எனக்குத் தெரியவில்லை. பெண்களிற் சிலர் மாமன், மாமி, நாத்தி முதலியவர்கள் செய்யும் ஹிம்சைகளைப் பொறுத்துப் பார்த்தும் சகிக்காது பின்பு "கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்" என்பதுபோலப் பழிதீர்க்கும்பொருட்டு பேய்களென்று பேர்வைத்துத் தாமே இரகசியமாய்ப் பூட்டியிருக்கும்பெட்டிகளிலுள்ள வஸ்துக்களொன்றை யெடுத்துமற்றொரு பெட்டியில் வைப்பதும் மாற்றுவதும், கொடிகளிலும் பெட்டிகளிலுமிருக்குந் துணிகளை மற்றவர் மர்மமறியாதபடி மடிப்புகளிற் சிலதை கட்டெறித்து மறுபடியும் பழையமாதிரியாய் வைத்துவிடுதலுங் கூடுமென்பார். இஃது மிக அரிதாய் நடக்கும் காரியமாகும். எவர்களு மித்தகையோர்களுமல்லர். இவ்வளவு தூரம் யான் எழுதுவதெல்லாம் சகோதரிகளின் தற்கால கஷ்டம் நிவர்த்தியாக வேண்டுமென்பதே. என்கருத்தன்றி தூஷிக்க வேண்டுமென்பதன்று. மிகவரிதாய் சிற்சில விடங்களில் மலஜலங்களைக் கொட்டுதலும், வீட்டிற் கொள்ளிவைச்



சொருகுதலும் உளதெனினும், இவற்றை யெல்லாம் வநிதைகளே செய்யாவிடினும், இதற்கெனவேற்பட்டிருக்கும் துன்மார்க்கராலும் செய்வித்தலுஞ் செய்தலுங்கூடுமன்றோ? சில துன்மார்க்கர் திமுறி பாஷாணத்தை ஈரத்துணியிற்சுற்றி விரோதிகள் வீட்டின்மேல்வீச அது அரை மணிநேரத்தில் திகீரென்று பற்றியெரிய வாரம்பிக்கும். இதை அறியாதவர் குட்டிச்சாத்தான் ஏவலென்றே கூறுவர். திமுறி பாஷாணத்தை ஜாலவித்தை செய்வோர் மிளகு பிரமாணம் வாயிலடக்கிக்கொண்டு வைக்கோல் முதலியவைகளின் மேலூத, அது உடனே பற்றி யெரிகின்றது. இதன் இரகசிய மறியாதவர் பேயின் வசியத்தால் இங்ஙனஞ் செய்கிறார்களென்றே சொல்வர்.

க. மி.

(இன்னும் வரும்.)

# கலாவதி.

ஓர் காலத்தில் புண்ணிய க்ஷேத்திரமாகிய காசிமா நகரில் வேதவித்பன்னராகிய ஓர் அந்தணர் வசித்துவந்தார். அவருக்கு இலட்சுமிதேவியையொத்த பேரழகுவாய்ந்த ஓர் பெண் பிறந்தனள். தனக்குப் பிறந்த செல்வக்குழந்தையை அவ்வந்தணர் யாதொரு குறைவுமின்றி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்துவந்தார். அப்பெண்குழந்தையானது பேதைப்பருவம் நீங்கி பெதும்பைப்பருவமாகிய எட்டாவது வயதுவந்ததுமுதற்கொண்டு, பிரதிதினமும் அதிகாலையிலெழுந்திருந்து அக்ஷேத்திரத்தில் விளங்கும் ஞான தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து தன்தந்தை தேவபூஜைக்கு புஷ்பமெடுத்து வருவதும் அவருக்கு அன்போடு பணிவிடைசெய்வதும், தெய்வபக்தி புரிந்து வருவதுமாக விருந்து வந்தனள். ஞான தீர்த்தத்தின் வரலாறு யாதோவெனின், உலகமுழுவதும் மழையற்று ஆறுகுளங்களிற் றண்ணீர் வரண்ட ஓர் காலத்தில், அஷ்டதிக்குப்பாலகருள் வடதிக்குக்கு அதிபதியாகிய ஈசானதேவர் அகிலலோக கர்த்தராகிய மங்கைபங்காளனைக்குறித்து அரிய தவமியற்றும்பொருட்டு புண்ணியக்ஷேத்திரமாகிய காசிக்கரையடைந்தார். அக்காலத்தில் அந்த திவ்ய க்ஷேத்திரத்தில் தண்ணீர் கிடைப்பது அரிதாயிருந்தமையால் தனது கைச்சூலாயுதத்தால் ஒரு குளந்தோண்டி, அதினின்று உண்டாகும் நற்றண்ணீரை காருணிகர மூர்த்தியாகிய ஜகதீசனுக்கு அபிஷேகஞ்செய்து ஆராதனை புரிந்து மெய்யன்போடு அரியதவமியற்றி வந்தார். ஜகதீசன் அவர்புரிந்துவரும் தவத்துக்கு மனமகிழ்ந்து, அண்ட புவனங்கள் தந்த அம்மை யுமாதேவியோடு விருஷபவாகனரூடராய் காக்ஷி தந்து, வேண்டும் வரங்களை யுதவி, அவரால் வெட்டப்பட்ட குளத்திற்கு சிவதீர்த்தமென்று பெயரிட்டு அதில் ஸ்நானஞ்செய்வோர் ஞானத்தையடைந்து முத்தியடைவார்களென்றுங் கூறி அந்தர்த்தானமாயினர். பின்பு அத்தீர்த்தத்தில் அநேக முனிபுங்கவர்களும், ரிஷி சிரேஷ்டர்களும் ஸ்நானஞ்செய்து ஞானமடைந்து முத்திபெற்றமையால் அதற்கு ஞானதீர்த்தமெனும் பெயருண்டாயிற்று. இவ்வாறிருக்கையில் அந்தப்பெண்ணை விவாகஞ்செய்து தரும்படி மன்மதனைப்போன்ற அழகுவாய்ந்த அந்தணச்சிறுவர்கள் அநேகர் வந்து கேட்டும் "விதி வழி மதி" சொல்லுமென்பதற்கேற்ப வந்த அந்தணர்களெல்லாம் அந்தப்பெண்ணின் தந்தை விவாகஞ் செய்து கொடுக்க மறுத்துவந்தனர். பின் ஒருநாள் வழக்கம்போல் அம்மாது சிரோமணி ஞானதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து நந்தவனத்தில் பூக்கொய்து கொண்டிருந்தனள். அப்பொழுது ஆகாசமார்க்கமாகப் போய்க்

கொண்டிருந்த ஓர் வித்தியாதரமன்னன் காசி க்ஷேத்திரத்தையடைந்து அந்த நந்தவனத்துக்கு நேரே வரும்போது அம்மாது சிரோமணியைக் கண்ணுற்றனன். கண்ணுற்றதும் அந்த ஸ்திரீ ரத்தினத்தின்மேல் ஆசைகொண்டு பிரமித்து நின்றான். அதற்குள் அம்மாது பூக்கொய்துகொண்டு தன் கிருகத்திற்குப் போய்விட்டாள். பின்பு அந்த நந்தவனம் விட்டகன்று சுந்தரமாதின்பேரில் உண்டான ஆசையால் அன்றிரவுவரை அவ்வித்தியாதர மன்னன் அவ்விடமே காத்திருந்து, மாயாரூபமாக அப்பிராமணோத்தமர் வீட்டிற்கு சென்றான். அப்பொழுது பஞ்சணையிற்படுத்துக்கொண்டிருந்த அம்மாது சிரோமணியைத்தன் மந்திரசக்தியால் அயர்ந்து நித்திரை போகும்படி செய்து பின்பஞ்சணையோடு அலுக்காமல் தன்தோளில் தூக்கிவைத்துக்கொண்டு, ஆகாசமார்க்கமாகவிரைந்து தன்னிருப்பிடத்திற்கு போய்க்கொண்டிருந்தான். அப்பொழுது அந்த வழியில் ஓர் ராக்ஷதவீரன எதிர்தோன்றி வித்தியாதரமன்னனைப்பார்த்து, நில்லென்று சொல்லி, இன்று உன்னுயிரை யேனும் அல்லது உன்னுயிருக்கின்னுயிராகிய அந்த ஸ்திரீ ரத்நத்தையேனுங் கொடுத்தாலொழிய உன்னைவிடுவதில்லை என்று வழிமறித்துக்கொண்டான். அச்சமயத்தில் அந்த மாதுசிரோமணி நித்திரை தெளிந்து எழுந்து கண்விழித்து எதிரேநிற்கும் ராக்ஷதவீரனையும், தானொரு வித்தியாதரமன்னன் றோளிலிருப்பதையுங் கண்டு பயந்து நடுநடுங்கி துயருற்றனள். உடனே அவ்வித்தியாதரமன்னன் என் கண்ணே! என்னாருயிரே! நீ யஞ்சவேண்டாம் இதோ ஒரு நொடியில் இவ்விராக்ஷதனைக் கொலசெய்வேனென்று தைரியஞ் சொல்லி மிகக் கோபங்கொண்டு அவ்விராக்ஷதனை எதிர்த்தான். அந்தக்ஷணம் ராக்ஷதன் ஓர் வாளாயுதத்தால் வித்தியாதர மன்னன் மார்பில் குத்தினான். பின் அவ்வித்தியாதர மன்னன் ராக்ஷதன் தலை சுக்கல் சுக்கலாகும்வண்ணம் ஓர் குத்துக் குத்தினான். குத்தின மாத்திரத்தில் ராக்ஷதவீரன் உயிர் துறந்தனன். அவன் உயிர்விடுஞ் சமயத்தில் ஞான தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்த புண்ணியவதியாகிய மாது சிரோமணியைத் தரிசித்த மகிமையினால் மன்மதனென அழகான ரூபங்கொண்டு விண்ணுலகெய்தினான். வித்தியாதரமன்னனும் பின்புயிர் துறந்தான்.

இவ்விபரீதத்தைக் கண்ணுற்ற அம்மாது தன்னைப் பெண்டாளவெண்ணி காதலோடு தோளிலெடுத்துவந்தமையால், அவ்வித்தியாதரமன்னனே தனக்கு நாயகனாக வேண்டுமென எண்ணிக்கொண்டு, நாயகனிறந்தபின் தானுலகிலிருப்பதில் யாதுபயனுளதென நினைத்து அம்மாது சிரோமணியும் உயிர் துறந்தனள். பின்பு அடுத்த ஜன்மத்தில் அவ்வித்தியாதர மன்னன் மலயகேதுவெனும் ஓர் அரசனுக்குப் புத்திரனாகப்பிறந்து மாலியகேதுவெனும் பெயரொடுவிளங்கினான். அக்காலத்திலே அதுபோலவே அப்பிராமணமாதும் கருநாடதேயத்து ராஜனுக்கு மகளாகப்பிறந்து கலாவதி என்னும் பெயரொடு விளங்கிவந்தாள். தெய்வசங்கல்பத்தாலும் முற்சென்ம வினைப்பயனாலும் அவ்வித்தியாதரமன்னன் அந்தக்கலாவதியை விவாகஞ்செய்துகொண்டு, புத்திரர்களைப் பெற்று, ராஜ்யபரிபாலனஞ் செய்துகொண்டுவந்தான். அக்காலத்தில் காசிக்ஷேத்திரம் போய்வந்த யாரோ ஒருவர் காசிக்ஷேத்ரம் வரைந்துள்ள ஓர் படத்தைக் கொண்டுவந்து (வித்தியாதரனாகிய) ராஜனிடம் காட்டினார்கள். அதை அவன் கண்டு சந்தோஷமடைந்து பின்தன் பிராணநாயகிக்கும் அவள் தோழியைக்கொண்டு காண்பிக்கும்படி செய்தனன். கலாவதி படத்தைக் கையால் வாங்கி ஒவ்வொன்றாய்ப் பார்த்துவருகையில் ஞானதீர்த்தத்தைக் கண்டனள். அத்தீர்த்தத்தில் முன்ஜன்மத்தில் ஸ்நானஞ் செய்திருக்கும் மகிமையினால் கலாவதி கண்ணுலே கண்டதும் பூர்வஞானம் பிறந்து தன் முன்ஜன்ம அனுபவங்களை நன்குணர்ந்தனள்



உடனே ராஜனிடஞ்சென்று கைகூப்பி நமஸ்கரித்து, ஏ மகாப்பிரப! தங்களைக் கணவனாகக் கொண்டு உலகத்தில் எல்லா சுபமுமடைந்தேன். ஆனால் இன்னும் ஒன்றுபாக்கி யுளது. அதனைத் தந்தருளவேண்டுமென்றனள். அரசன் கண்ணே! என் ஆசைக்கிசைந்த நேசக்கிளியே! எல்லா முனதேயாகும். உனக்கில்லாதது எது. கேள்? தருவேனென்றான். கலாவதி: பிராணநாதா நான் காசிக்ஷேத்திரம் போகவேண்டும்; விடைகொடுத்தனுப்புவீராகவென்று விநயத்துடன் கேட்டாள். ராஜன்: தன் பிரிய நாயகி வசனத்தைக் கேட்டு திடுக்கிட்டு பின்பு சற்றுயோசித்து தன் நாயகி செய்தது நல்ல யோஜனைதானென்று கருதி கலாவதியின் வேண்டுகோளுக்கிணங்கி "பாழே மடக்கொடி யில்லாமனை", என்ற நீதிவாக்கியத்தை யனுசரித்து, தன் புத்திரனிடத்தில் ராஜ்யபாரத்தை ஒப்புவித்துத் தானும் தன்மனைவி கலாவதியுடன் காசி க்ஷேத்திரமடைந்து தானதருமங்களைச்செய்து, மங்கைபங்காளனுக்கு ஆராதனை புரிந்து, ஞானதீர்த்தத்திலும் கங்காநதியினும் ஸ்நானஞ்செய்து, மெய்யன்போடு விளங்கிவந்தனர். பின்பு ஜகதீசன அவர்கள் செய்யும் மெய்யன்புக்கிரங்கி பிரத்தியக்ஷமாகி தாரகமந்திர முபதேசித்தருளினர். உடனே அவ்விருவரும் சிவசின்னங்கள் தாங்கப்பெற்று முத்தியடைந்தார்கள்.

வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியார்.

## வாழ்த்துக் கவி.

பொங்குதிரைக் கடலுலகிற் பொன்னுலக மெனப்பலரும் புகழ்ந்து போற்றச்
செங்கமலை கலைமங்கை யருள்கொழிக்கு மிவ்விந்தியா தேச மோடு
எங்குமொரு குடைநிழற்கீ ழாட்சிசெயச் செய்ததவ மின்று மிங்கே
மங்களமே பெருகவடி வெடுத்தலக் ஸாண்டரியா ணிடூழி வாழி மாதோ (1)

வான்சுரந்து மழைபொழிய வளங்குலவு புலகெங்கும வழுவாத் தர்மந்
தான்பரவ நீதிநெறி தவறாநற் குணமணிப்பூண் தாங்கித் தன்செங்
கோன்முறைமை செலுத்தவெங்கு மாபரா பரனருளாற் குன்றுஞான
மேன்மேலு மிகப்பெருகி வாழியலக் ஸாண்டரியா விஜய மாதே (2)

திரிசிரபுரம் - காமாட்சியம்மாள்.

## புத்தக வரவு.

சென்னை எழும்பூரிலுள்ள R. S. சுப்புலட்சுமியம்மாளிடமிருந்து, "பார்வதியம்மன் சோபனம்" என்ற ஒரு சிறுபுத்தகம் கிடைக்கப் பெற்றனம். அது செந்தமிழ் நடையில் அமைந்திலதெனினும், ஸ்காந்த புராணத்தின் முதற்காண்டமாகிய உற்பத்திகாண்டத்தை நந்தேசமாதர் எளிதிலறிந்து கொள்ளும் வண்ணமமைந்துளதாதலால், அது நந்தேச மாதருக்கு மிக்க அவசியமானது. ஆதரிக்கத் தகுந்தது.

# NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

பெண் ரெயில்வே கார்டுகள்:—சமீபத்தில் வங்காளம் ரெயில்வே யொன்றில் ரெயில்வே இன்ஸ்பெக்டராகிய ஒரு பரங்கி ஒரு இந்து மாதை மானபங்கம் செய்ய யத்தனித்த குற்றத்திற்காக ஆறுமாதம் தண்டனைவிதிக்கப்பட்டது யாவர்க்கும் தெரிந்த விஷயம். இப்பொழுது "ரெயில்வே பிரயாணி சபை" என்னும் ஒரு கூட்டத்தார் ரெயில்வேக் கம்பெனியாருக்கு ஒரு வேண்டுகோள் செய்திருக்கிறார்கள். அதாவது இரவில் பிரயாணமாகும் ரெயில் வண்டிகளிலுள்ள பெண்கள் வண்டிக்கு ஒரு பெண்கார்டு நியமிக்க வேண்டுமென்று கேட்கின்றார்கள். இந்தயோசனை சரியானதென்றே எண்ணுகின்றோம்.

* * *

இந்திய விஷயத்தில் கனேடியா மாதரின் சிரத்தை:—இந்தியாவின் அருமை பெருமைகள் உலகத்தில் எங்குள்ளவர்களின் மனங்களையும் ஆகர்ஷித்து வருகின்றன வென்பதற்கு அத்தாக்ஷியாக, அமெரிக்காவைச் சேர்ந்த கனடா-தேசத்திலுள்ள மான்ட்ரீல் மாகாணத்திய மாதர் சங்கத்தில் இந்துதேச சரித்திரம், வேதாந்தம், பௌத்தமதம், புராணம் முதலிய விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் எழுதிப்படிக்கப்படுகின்றன. சம்ஸ்கிருதபாஷையில் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன. இந்தியாவில் நெருங்கிய சம்பந்த முடைய பிரிட்டிஷ் ராஜ்ய மாதர்கள் இந்தக்கனேடியா மாதர்களின உதாரணத்தைப் பின்பற்றி ஏன் நடக்கக்கூடாது?

* * *

தர்மவீடும் தொழிற்பாடசாலையும்:—கல்கத்தாவிலுள்ள சில்பசமிதி என்னும் சங்கத்தார் ஏழை இந்துப்பெண்களுக்காக ஒரு தர்மவீட்டையும், தொழிற்பாட சாலையையும் ஸ்தாபித்திருக்கிறார்கள். நற்குடிப்பிறப்பும், சற்குண சீலமும் வாய்ந்த 20 மாதர்களை இதிற் சேர்த்து அவர்களுக்கு ஜாதிமதாசாரங்களின்படி உணவளித்து, பிற்காலத்தில் அவர்களின் பிழைப்புக்குப் பிரயோஜனமா யிருக்கத்தக்க நெசவுதையல் வேலைகளையும் மற்றும் உபயோகமான தொழில்களையும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தர்மவீட்டின் சம்பந்தமாகப் பெண்களுக்கு ஒரு பகற்பள்ளிக்கூடமும் ஏற்படுத்தி, அதில் சம்பளமின்றிப் பொதுப் படிப்பும் தொழிற் படிப்பும் கற்பிக்கவும் யோஜனை செய்யப்பட்டிருக்கிறது.

* * *

கல்விப் பொருட் காட்சி:—சென்னையில் இவ்வருஷம் ஆகஸ்டு மாதத்தில் ஒரு கல்விப் பொருட்காட்சி நடைபெறப்போகின்றதாய் அறிவிக்கப்படுகின்றது. இது சென்னையிலுள்ள கல்வியிலாகா அதிகாரிகளாலும் பள்ளிக்கூட உபாத்திமார்களாலும் நடத்தப்படுகின்றது. இந்தக் காட்சியில் சென்னை ராஜதானியிலுள்ள பற்பல பள்ளிக்கூடங்களிலும் வாசிக்கும் மாணாக்கர்களும் உபாத்திமார்களும், சித்திர மெழுதல், எழுத்து எழுதல், பின்னல் நூல் செய்தல், ஜரிகைவேலை, முதலியவைகளி லடைந்த தேர்ச்சியைக் காண்பிக்கக் கூடியசாமான்கள் கொண்டுவந்து காண்பிக்கப்படும். சாமான்கள் அனுப்ப விரும்புவோர் ஆகஸ்டு முதல் தேதிக்குள் அனுப்பவேண்டும். சென்னை ஜார்ஜ்டவுன் தங்கசாலை போஸ்டு கல்விப் பொருட்காட்சி காரியதரிசிகளுக்கு எழுதவும்.

REGISTERED 31 DEC 1907 MADRAS

ஸ்ரீ

சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா னுண்மை யுறவோங்கு முலகு."

Vol. II. | MADRAS, MAY 1907. | No. 10.
தொகுதி II. | சென்னை, 1907-ளு மே-மீ | பகுதி 10.

## ஸ்திரீ புருஷர் கடமை.

(197-ம் பக்கத் தொடர்ச்சி.)

புருஷனது அநுமதி யில்லாமல் ஸ்திரீகள் வீட்டைவிட்டு வெளியிற் போகக் கூடாது. அநுமதி பெற்றுக்கொண்டு போகிறவள் மேலுத்தரீயந்தரித்து வேக மில்லாமல் மெதுவாய்ச் செல்லவேண்டும். பரபுருஷனிடத்திற் சற்றும் பற்றுதல் வைக்கக் கூடாது. வியாபாரி, வைத்தியன், விருத்தன் முதலானவர்களுக் கெதிரில் மேல்வஸ்திர மில்லாமல் வரக்கூடாது. கால் முதலியவையும் வஸ்திரமுடுத்தி உடம்பை மூடிக்கொண்டு வரல் வேண்டும். சற்றேனும் அசட்டையாயிருத்தல் கூடாது. கணவனை அவமதிப்பதும் பரிகாசமாய்ப் பேசுவதுங் கூடாது. தாஸி, விபசாரி, சூதாடுபவள், ஏடுபட்டவள், கலகஞ் செய்பவள், கெட்ட நடத்தையுடையவள் இவர்களுடன் சேர்ந்திருப்பது கூடாது. அவர்களிடம் புருஷனிருந்தால் தன்னடத்தையுங் கெட்டுப்போய்விடு மாகையால், புருஷன் வியாதியாயிருக்கும் பொழுது உபவாசம் விரதமனுஷ்டித்தல் கூடாது. தன கர்ப்பத்தை யழிப்பவள், பத்தர்களுக்கும் ஞானிகளுக்கும் தீங்கு செய்பவள் இவர்களிடம் சினேகம் செய்வதுங்கூடாது. அதிகச் செலவு செய்வதும் வீட்டுசாமான்களை யசட்டை செய்வதுங் கூடாது. வேலைக்காரிகள் முதலானவர்களைக் கடுகடுத்துப் பேசி யலட்சியஞ் செய்வதுங்கூடாது. இவைபோன்ற விலக்கானவைகளை யொழித்து பதிவிரதா தருமத்தை யனுசரித்துக் கணவனைத் திருப்திப்படுத்தி யவனுக்கடங்கி நடந்து வரும்பெண்ணை தரிசனஞ் செய்ய [illegible] தேவர்கள்கூடக் காத்திருப்பார்கள்" என்று சாஸ்திரங்களிற் கூறப்பட்டது.

இவ்வண்ணம் கூறியிருந்தும் நமது தேசத்தில் பெண்களுக்கிருக்கும் சுதந்தரம் எவ்வளவு பெரிதென் றாலோசித்துப் பாருங்கள். புருஷனுக்குரிய சகல பொருள்களிலும் மனைவிக்கே அதிகாரம். புருஷனது பந்துக்கள் மித்திரர்கள் ஞாதிகள் முதலானவர்களை யுபசரிப்பதும் மனைவிக்கே கடமை. புதிதாய் வரும் அதிதிகளை யுபசரிப்பதும் அவளது செய்கை. புருஷனால் சம்பாதிக்கப்பட்ட பொருளை செலவு செய்ய அவளுக்கே யதிகாரம், பிச்சையிடக்கூட புருஷனுக்கு அதிகாரமில்லை, மனைவிக்கே யதிகாரம், பிட்சைக்கா

னர்கள் புருஷனிடத்திற் பிட்சைகேட்கக்கூடாது. "பவதி பிட்சாந் தேஹி" என்று மனைவியை நோக்கியே கேட்கவேண்டும். சகல தர்மங்களுக்கும் மனைவியேயதிகாரி. மனைவியின்றிப் புருஷன் எந்த தேவகாரியத்தையும் பிதுர்காரியத்தையுஞ் செய்யக்கூடாது. மனைவி யில்லாத புருஷனுக்கு யாகயஞ்ஞம் முதலிய கர்மங்களி லதிகாரமில்லை. இதைக்கருதாது இந்தியாவில் பெண்களுக்குச் சுதந்தரமில்லை யென்று குறை கூறுவது நியாயமேயில்லை. நமது தேச சாஸ்திரங்களில் சிறிதும் அப்பியாசமில்லாமல் மிலேச்சரது சாஸ்திரங்களையும், நடை உடை பாவனை மேற்கொண்டு, அவரோடு சகவாசஞ்செய்து அவர்களுடைய கொள்கைகளையும் நாகரீகத்தையும் கைக்கொண்டு சுதேசக்கொள்கைகளை யிகழ்வது எவ்வகையினும் நியாயமாகாது. நமது முன்னோர்கள் தங்கம் இரத்தினம் முதலியவற்றைப் போற்றுவது போலப் பெண்களையும் மிக அருமையாகக்காப்பாற்றி வரத்தக்க ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அவர்கள் மெலிந்த சரீரமுடையவர்களாயிருப்பதுபற்றி வெளியில் அலைந்து திரியும் வேலையைக் கொடுக்கவில்லை. அதுகடினமாதலால் பலமான சரீரமுடைய புருஷருக்கேயுரியதாக விதிக்கப்பட்டது. குளிர்ச்சியுள்ளதேசத்துக்கும் உஷ்ணதேசத்துக்கும் வித்தியாசமுண்டு. நமது தேசத்துப்பெண்கள் வெயிலின் வெப்பத்தினால் வாடிவதங்கி மெலிந்து போகாதபடி இவ்வேற்பாடு செய்ததும் உசிதமேயாம். இவையெல்லாம் ஸ்திரீபுருஷருடைய சரீர பலாபலங்களைப்பற்றி யேற்பட்டபடியாலும், தேசத்தின் சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கவாறு நியமிக்கப்பட்டதாலும் குற்றங்கூற இடமில்லை.

இனி இவ்விஷயத்தைச்சற்றுக் கவனிப்போம். அந்நிய நாட்டாரது நாகரீகத்தைக் கண்டு மகிழ்ந்த சிலர் நமது தேசத்து ஸ்திரீகளுக்குச் சுதந்திர மில்லையென்பர். மேலே நாம் எடுத்துக்காட்டிய பிரமாண வசனங்களினாலே நாம் நமது பெண்களுக்குக்கொடுத்திருக்குஞ்சுதந்தரம் இதரநாடுகளிற் கிடையாதென்பது பிரத்தியக்ஷமாய் விளங்கும். சில இடங்களில் மாமியார் நாத்திமார்களாலே பெண்களுக்குக் கஷ்டம் நேரிடுவது உண்டு. அதுபோலவே மருமகளாலே மாமியார் நாத்திமாரும் கஷ்டப்படும் குடும்பங்களும் உண்டு. இதனாலே சுதந்தரஹீனம் உண்டாமென்பது தவறு. பெண்கள் தங்களுடைய இஷ்டப்படி வெளியிலேபோகவும், தோழிகள் வீட்டுக்குத்தனியே போகவும், ஐரோப்பியர்களைப்போல் பர புருஷர்களோடு மனங்கலந்து பேசவும், அவர்களோடு ஒரு வண்டியிலேறி இச்சையான இடங்களுக்குப்போகவும், அவர்களது கையைப்பிடித்துக்கொண்டு உலாவப்போகவும்; அன்னிய புருஷர்களோடு பலநாள் தனித்து வசிக்கவும் இடம்பெறுமையே சுதந்தரஹீன மென்பதாம் என்பர் ஆங்கிலேயபாஷா பண்டிதர். அது எக்காலத்துந் தவறேயாமென்பதில் ஐயமில்லை. இருப்பு ஊசியைக் காந்தம் தன்னிடத்தில் இரசிப்பது போல் ஆடவர் மகளிரது மனம் ஒன்றையொன்று இரசிக்கு மியல்புள்ளது. அதுவே காதலென்று முன்னே கூறப்பட்டது. காதல் என்பது காந்தம் போலும். மனம் இரும்புபோலும். அந்தக்காதலென்பது ஆடவர்மகளிரது மனதை ஒன்றுபடச்சேர்க்கு மியல்புள்ளது. அது எப்பொழுதும் அவரிடமமைந்திருப்பது நிச்சயமாயினும் தனித்து இருவருங் கூடியிருக்கும்போது அதற்கு விசேஷ சக்தியுண்டு. இந்தச் சக்திசுபாவமாகவே ஜனிப்பது ஆதலால் அதையடக்கும் சக்தி யெவர்க்குமிராது. அதுபற்றியே ஆடவர் அன்னிய ஸ்திரீகளிடத்தில் சிநேகம் செய்வதும், பெண்கள் பரபுருஷரிடத்தில் சிநேகம் செய்வதுங் கூடாதென்பது ஆரியரது சித்தாந்தம். கண்டு அநுபவித்த பொருளிலே வெறுப்பு உண்டாவதும் நூதனமான பொருளினிடத்



தில் விருப்பமுண்டாவதும் மனதுக்குச் சுபாவம். அந்நிய புருஷர் கூட்டுறவால் பெண்கள் மனதும், பர ஸ்திரீகளின் கூட்டுறவால் ஆடவர்மனதும் கெடுமென்பதும் மறுக்கப்படாத வுண்மை. அது ஆடவரைவிடப் பெண்களிடத்தி லதிகமாய் விளங்குவதாம். அன்றியும் ஆடவர்மனதைக் கவரும் சக்தி பெண்வடிவத்துக்கு மிக வுண்டு. இவ்வுண்மையுள்ளவாறு உணர்ந்த ஆரியர்கள் எவ்விதத்திலும் பெண்களுக்குப் பரபுருஷ சம்பந்தம் கூடாதென விலக்கினார்கள். நமது தேசத்தாரால் வெறுத்தொதுக்கப்பட்ட இந்தவிஷயம் மேற்றிசையாராகிய ஐரோப்பியருக்குச் சிறந்த நாகரீகமாயிற்று. அதனால் ஐரோப்பியர் படுங்கஷ்டம் கொஞ்சமல்ல. தமது மனைவிகளைப் பரபுருஷரோடு கலந்து உறவாடச் சுதந்தரங் கொடுத்ததனாலே அப்பெண்கள் தத்தம் கணவரை வெறுத்துக் கோர்ட்டில் வழக்கிட்டு அந்த விவாக சம்பந்தத்தை நீக்கிக்கொள்ளவும் தமக்கிஷ்டமான புருஷரை மணக்கவும் இடந்தந்தது. அப்படியே புருஷர் தம்மனைவிமாரைக் கோர்ட்டுமூலமாகத் தள்ளவும் இஷ்டமான வேறுபெண்களை மணம்புரியவு மிடமாயிற்று. முதலிற்கொண்டபுருஷனுயிரோடிருக்கும்போதே பல புருஷரை மணம்புரிய இடந்தந்தது இந்த மூடசுதந்தரத்தினாலேயே. இதனால் குடும்பத்தில் ஐக்கியந் தாழ்வும், புத்திர போஷணைக் குறைவும் உண்டாயின. இந்தச் சுதந்தரத்தினால் ஸ்திரீ புருஷனையும், புருஷன் ஸ்திரீயையும் பரித்தியாகஞ் செய்துகொண்டதைப்பற்றி 1858௵ முதல் 1892௵ வரையில் இங்கிலாந்தில் ஒரு கணக்கு எடுக்கப்பட்டது. அதன் விவரம் கீழே குறிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1858௵ | முதல் | 1868௵ | வரைக்கும் நடந்த | பரித்தியாக விவகாரத்தொகை | 2197 |
| 1868 | ,, | 1878 | ,, | ஷை. | 3328 |
| 1878 | ,, | 1888 | ,, | ஷை. | 5086 |
| 1889௵ | ... | ... | | ஷை. | 522 |
| 1890௵ | ... | ... | | ஷை. | 541 |
| 1891௵ | ... | ... | | ஷை. | 526 |
| 1892௵ | ... | ... | | ஷை. | 539 |

இவ்வாறு ஸ்திரீ புருஷன்மேலும், புருஷன் தன் மனைவிமேலும் வழக்குத் தொடுத்துக் கோர்ட்டேறுவது எவ்வளவு மதியீனமும் அவமானமுமான காரியம். இதுதான் மேற்றிசையார் கொடுத்த ஸ்திரீ சுதந்தரத்தின் பயனும். இந்தச் சுதந்தரம் நம் தேசத்தாருக்கு அநாவசியமேயாம். இவ்வாறு ஸ்திரீ புருஷர்கள் வழக்கிட்டுக்கோர்ட்டேறியதன் காரணத்தை யோசித்துப்பார்த்தால் மூடனுக்குக்கூட நகைப்பதற்கு இடமாகும். அவற்றுட் சில வருமாறு:—

ஸ்திரீ புருஷன்மேல் வழக்குத் தொடுத்த காரணம்.

(1) என் புருஷன் குளிக்கிறதில்லை. அதனால் மனைவிமனதுக்கு வருத்த முண்டாகிறது.

(2) புருஷன் தன் மனைவியின் சகோதரி திருடியென்று சொன்னான். அதனாலே மனைவி மனதுக்கு வருத்தமுண்டாகிறது.

(3) கலியாண மறுநாளே புருஷன் குடித்தமையால் மனைவி புருஷனை வெறுக்க நேரிட்டது. கலியாணமான மூன்றாம் நாளே பரித்தியாக வழக்குத் தொடுக்கப்பட்டது.

(4) ஸ்திரீக்குத் தலைநோய் வருவதுண்டு. சுருட்டுப்புகையினாலே தலைநோய் அதிகமாவது வழக்கம். புருஷன் சுருட்டுப்பிடிப்பதினாலே மனைவிக்குத் தலைநோய் அதிகமாகின்றது.

(5) புருஷன் கப்பல் உத்தியோகத்தில் அமர்ந்தான்.

(6) வீட்டில் போதுமான ஜலம் வைக்கவில்லை. சௌக்கியமாக வீடு பழுது பார்க்கவில்லை. அது குரூரமானது.

(7) ஸ்திரீ வியாதியால் வேலைசெய்யத் திராணியில்லாதிருந்தபோது கடவுள் வேலை செய்யக் கட்டளையிட்டிருக்கிறார் என்று புருஷன் சொன்னான். பெண்கள் புருஷனுக்கு அடங்கியிருக்கவேண்டுமென்னும் பைபிள் வாக்கியங்களைப் புருஷன் அடிக்கடி எடுத்துக் காட்டுவதுண்டு. என் புருஷன் கால் நகங்களை வாங்குகிறதில்லை. முக்கியமாய் புருஷன் இராத்திரி புரளுந்தோறும் அந்த நகம் என்னைக் கிறவுகிறது. நாங்கள் கலியாணஞ்செய்துகொண்ட நாளாகத் தன்னோடுகூடக் குதிரையேறிச் சவாரி செய்யச்சொன்னதில்லை. அதனால் எனக்கு மனவருத்தமுண்டாயிற்று.

(8) புருஷன், என்னையும் என் குழந்தைகளையும் கோவிலுக்குப்போகவேண்டாமென்றான்.

(9) ஒரு செல்வமுள்ள பெண் தனக்கு மேல்விசாரணை செய்பவரை சட்டை செய்யாமல், தான் விதவையாய்ப் போனால் ஆஸ்தியைத் தடையின்றிச் செலவழிக்கலாமென்று யோசித்து, வியாதியால் ஆஸ்பத்திரிக்குப் போய்ச்சாகுந் தருணத்தி லிருந்த ஒரு செல்வவானைக் கல்யாணஞ் செய்து கொண்டாள், அவன் தெய்வகதியால் பிழைத்து விட்டான். அவள் தன் கணவன் தன்னை மோசஞ் செய்தானென்றும், தன்னைக் கொடுமையாய் நடத்தினானென்றும் வழக்குத் தொடுத்தாள்.

புருஷன் மனைவிமேல் தொடுத்த பரித்தியாக கேசுகள்.

(1) மனைவி புருஷனை பரிகாசம் செய்து நீ மனிதனே யல்லவென்று சொன்னாள். அதனால் புருஷனுக்கு மனவருத்தமுண்டாயிற்று.

(2) என் மனைவி என் துணிகளைப் பழுதுபார்க்க மாட்டேனென்கிறாள். சமைக்கமாட்டேனென்கிறாள். என் பொத்தான்களைத் தைக்கமாட்டேனென்கிறாள்.

(3) மனைவி புருஷன் மீசையைப் பிடித்திழுத்துப் படுக்கையிலிருந்து கீழே தள்ளினாள்.

(4) மனைவி, புருஷனைப் பார்த்து உன் தேகமுழுவதையும் என் கண்ணிமைக்குக் கூட ஈடாக மதிக்க மாட்டேனென்றதனால் புருஷனுக்கு மனவருத்த முண்டாயிற்று.

(5) மனைவி தன்னுடைய ஆடையால் புருஷனை உதைத்து அடித்தாள். அதனால் புருஷனுக்கு மனவருத்தமுண்டாயிற்று.

இந்தக் காரணங்கள் எவ்வளவு அழகாயிருக்கின்றன? இவ்விதம் பரிகசித்தற்கிடமான காரணங்களை யேற்படுத்திக் கொண்டு புருஷனை ஸ்திரீயும் ஸ்திரீயைப் புருஷனுந் தள்ளிவிட்டுத் தமக்கு இஷ்டமானவர்களை மணந்து கொள்வது எத்தனை பேதைமை பாருங்கள். இவ்விதமான புத்தி அவர்களுக்குண்டான காரணமெது வென்று யோசித்துப் பார்த்தால், ஸ்திரீகள் தங்களிஷ்டப்படி பரபுருஷரோடு கலந்துறவாடவும், தம் சொந்தப் புருஷர்களை விட்டுத் தனியாகப் பரபுருஷரோடு வண்டிசவாரி, குதிரை சவாரி போகவும், அவர்களுடன் தனித்து வசிக்கவும் சுதந்தரம் பெற்றதே யாமென்றும் தெளியவரும். மேற்கூறினவைகளெல்லாம் 1894-ம் இந்திய டைம்ஸ் பத்திரிகையில் வெளி



யிடப்பட்டது. இது ஆரிய ஜனப்பிரியவில் எடுத்து எழுதப்பட்டது. பின் பிரம்மவித்தியா பத்திரிகையில் பிரகடிக்கப்பட்டதனையே யிங்கெடுத்தெழுதினோம். வேறொரு திடுக்கிடும் விஷயமும் அந்த வருஷத்திய பத்திரிகைகள் எல்லாவற்றிலும் வெளியிடப்பட்டது. அதாவது இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய தேசத்துப் பெண்கள் தங்களுடைய பெற்றோர்களுக்கு அடங்காமலும், சகோதரர்களை மதியாமலும் அலட்சியம் செய்து வருகிறார்கள். தாம் பக்குவமாகு முன்னரே பெற்ற குழந்தைகளின் கழுத்தை முறிப்பதும், பிறந்தவுடன் பெட்டிக்குள் வைத்துக் கொல்லுவதும், மேல் கிடைத்த மாடத்திலிருந்து பூமியிலெறிந்து கொல்வதும், தண்ணீர்த் தொட்டியில் அமிழ்த்திக் கொல்வதும், கத்தியால் வெட்டுவதும், இன்னம் பலவிதமான அக்கிரமங்கள் செய்து குழந்தைகளைக் கொல்வதும் செய்து வருகிறார்களென்பதும், அப்படியில்லையேல் ஆபத்தும் மருந்து முதலிய பிச்சையால் சிசுவைக்கொல்லுகிறார்களென்பதுமாம். புனர் விவாகத்தால் இச்சைச் சிசுஹத்தி விளையலாமென்று பத்திரிகைகள் கூறுகின்றன. இது ஸ்திரீகளுக்குச் சுயேச்சா சுதந்தரம் கொடுத்ததனாலுண்டானதென்று ஐரோப்பியரே உணர்ந்திருக்கிறார்கள். அதனால் விளைவுத்தீமை தெளிவில்லாதவராதலால் அதைமேலும் முன்னோர்கள் பற்று விலக்கினார்கள்.

இவ்விஷயத்தில் சில உண்மைகளை நாம் கவனிக்கவேண்டும். மனித சரீரம் தன்னைச் சார்ந்த பொருளின் குணத்தைக் கிரகித்துக் கொள்ளு மியல்புள்ளது. அதனாலே தொத்து வியாதிகள் மனிதரைப் பிடிக்கின்றன. ஒரு வியாதிக்காரனைத் தொட்டால் அந்த வியாதி தொட்டவனைப் பற்றுகிறது. இது பிரத்தியட்சம். போஜனம் முதலியவற்றின் வேறுபாட்டாலும், தேச வேறுபாட்டாலும் மனிதருடைய சரீரகுணமும் வேறுபடுகின்றது. இளமை முதுமை கௌமாரம் முதலிய பருவ வேற்றுமையாலும் வேறுபடுகின்றன. தேகஸ்தான வித்தியாசத்தாலும் வேறுபடுகின்றன. இவ்வாறு குணவேற்றுமை யடைந்த சரீர சம்பந்தத்தால் சரீரம் வேறுபட்ட குணத்தை யடைந்து அபாயத்துக்குள்ளாமென்பது வைத்திய சாஸ்திரங்களின் கருத்து. வைத்தியம் பிரத்தியட்சப் பிரமாணமாதலால் இதனை யாவரு மெளிதிலுணர்ந்து கொள்ளலாம். சத்புத்திரர்களைப் பெற்றுத் தம் குலத்தை மேன்மைப்படுத்தற்குரிய பெண்கள் தன் புருஷனது சரீரமன்றி வேறு புருஷரது சரீர சம்பந்தத்தால் குண வேறுபாடடைந்து கெடுமாயின், பிறக்கும் பிரஜைகளும் அவ்வாறே சீர் கெடும். பெண்களின் சரீரம் மிருதுத் தன்மையுடையதென்று முன்னமே கூறியிருக்கின்றோம். ஆண் சரீரம் வலுவுடையதென்றும் கூறினோம். எப்பொழுதும் மிருதுத் தன்மையுள்ள பொருள் கடின பதார்த்தத்தின் குணத்தைச் சீக்கிரத்தில் எளிதாக அடையப் பெறுமியல்புடைத்தாதலால் மெல்லியராகிய பெண்களின் மலர் போன்ற சரீரம் கடினமான ஆடவர் சரீரகுணத்தைச் சீக்கிரம் கிரகித்துக் கெடுதலையடையுமென்பது நமது ஆரியோத்தமர்களின் பரம சித்தாந்தமாதலால் பெண்களுக்குச் சர்வ சுதந்தரத்தையுங் கொடுத்துப் பரபுருஷரோடு உறவாடிக் கைகோர்த்துக் கொண்டு உலாவுவதாகிய இந்தக்கொடிய சுதந்தரத்தை முற்றும் விலக்கினார்கள். இது பெண்களின் சாசுவதமான சுகத்தையும், நன்மையையும் கருதியது. ஆதலால் கொண்டாடத்தக்கதேயாகும். ஆதலால் புருஷர் தங்களுடைய மனைவிமார்களுக்குப் பரபுருஷர் கூட்டுறவொன்று தவிரச் சாஸ்திரங்களிற் சொல்லிய சகல சுதந்தரங்களையுங் கொடுத்துத் தமது வீட்டுத் தலைமையைத்தந்து, வெயில் பனி காற்று முதலியவற்றில் அலைய விடாமல் பாதுகாக்கவேண்டியது. அதனாலே தான் பெண்களை வீட்டுக்குள்ளிருந்து

இருக்கிருத்தியங்களை நடத்தி வரவும், புருஷர்கள் வெளியில் அலைந்து தரிதலாகிய கடின வேலையைப்பார்த்து வரவும் நூல்கள் விதித்தது. புருஷர்களுக்குக் கடினமான வேலையும், பெண்களுக்கு எளிய வேலையும் நியமிக்கப்பட்டிருப்பதையும் யோசித்துப்பார்க்கும்போது பெண்களுக்குக் கொடுத்திருக்கும் சுதந்தரத்துக்கு மெச்சி அறிவுடையோர் ஆரியர்களுக்கு வந்தனஞ்செய்வார்கள். அதனைக் கவனிக்காமல் பெண்களைச் சிறைப்படுத்தி அடிமையாக்கி விட்டார்கள் என்பது புத்திசாலித் தன்மையாகாது. இவ்வாறு சிலர் பத்திரிகைகளிலெழுதுவதைப்படித்துப் பார்த்த பெண்களிற் சிலர் அதை வாஸ்தவமென்று நம்பித் தாங்களும் அதைப் பின்பற்றுவதும் வழக்கமாயிருக்கிறது. அது இந்தியாவுக்கு நன்மையாகாது. ஸ்திரீகளின் சரீர வியல்பு முதலியவற்றைப் பின்னுலெழுதுவோம். அதனாலே ஆரியர் சித்தாந்தம் சரியென்று தெரியவரும்.

**பத்திராசிரியர்.**

## விஜயலட்சுமி.

(201-ம் பக்கத் தொடர்ச்சி.)

கோடிலிங்கதீட்சிதர்.—இராமசந்திர தீட்சிதரே! என்ன அநியாயம் பார்த்தீரா! நான் வலையப்பேட்டை கோவிந்தப்பிள்ளை பண்ணையில் வேலைபார்த்து வந்தபடியால் போனவாரம் வரைக்கும் கவலையற்றுக் காலங்கழித்துவந்தேன். இப்பொழுது பிள்ளையவர்களுடைய சொத்துக்களெல்லாவற்றையும் கடன்காரர்கள் ஏலம்போட்டுக்கொண்டு போய்விட்டார்கள். பிள்ளையவர்கள் ஸ்திதி பரிதாபமாயிருக்கிறது. இப்படி வருமென்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அவருக்குமிந்த எண்ணம் தெரியவில்லை. நேற்றென்று கடன் காரர்கள் வந்து ஜங்கம ஸ்தாவர சொத்துக்களெல்லாவற்றையுங் கவர்ந்து கொண்டார்கள். பிள்ளையவர்களுக்கோ இன்று சோற்றுக்கு வழியில்லை. என் நிலைமையும் அப்படித்தானிருக்கிறது. இந்தச்சங்கதி கேட்டவுடன் என் புத்திரன் சந்திரசேகரன் எங்கேயோ போய்விட்டான். என் பத்தினி புத்திரனைக்காணாமல் படுகிற துக்கம் சொல்லிமுடியாது. நான் எதற்கென்று வருத்தப்படுவேன்? என் மனம் பதறுகிறது. கடன்காரர்கள் செய்தது அக்கிரமம் என்றுதான் எனக்குத் தோற்றுகிறது. அதனாலேதான இவ்வளவு வருத்தம் நேரிட்டது. எப்பொழுதாவது என் மனதுக்கு ஆறுதல் உண்டாகுமோ உண்டாகாதோவென்று சித்தம் கலங்குகிறது. 'தர்மம் தலைகாக்கும்' என்கிறமுன்னோர் வசனமும் பிள்ளையவர்கள் விஷயத்தில் தவறிப்போயிற்று. தம்பிள்ளைகளுக்கு ஊரார் அநியாயம் செய்தால் அதைத் தாய்தந்தையர் விசாரித்துத் தீர்க்கவேண்டும். பெற்றோர் தம் புத்திரர்களுக்கு அக்கிரமஞ்செய்தால் அரசன் கேட்கவேண்டும் அரசன் செய்த அக்கிரமத்தைத் தெய்வம் கேட்கவேண்டும்; தெய்வமே தன் புத்திரர்களுக்கு இப்படிப்பட்ட அக்கிரமத்தைச் செய்தால் யார்கதி? இதை நினைக்க நினைக்க மனம் பொங்குகிறபடியால் ஊரைவிட்டுப் புறப்பட்டு வந்துவிட்டேன். இனியென்ன செய்யப்போகிறேன் என்றார்.

இராமசந்திரதீட்சிதர்.—ஆம்காணும்; "தாந்தாம் முன்செய்தவினைதாமே அனுபவிப்பார், பூந்தாமரையோன் பொறிவழியே" என்னும் முதுரையை நீர் அறியீரா? ஒரு



வர் தாம் செய்த புண்ணியபாவ பலன்களைத்தாமே அனுபவிக்க வேண்டாமோ? எந்தக்காலத்தில் எது நேருமோ அதை அனுபவித்தே தீரவேண்டும். புத்திமான் தனக்குக் கஷ்டகாலம் வந்ததென்று கவலைப்படக்கூடாது. "கழிந்தவைதானிரங்கான் கைவாராதக்கால்" என்றபடி கடந்துபோனவற்றைக்குறித்து வருந்துதலும், தனக்குக் கிடைக்கக்கூடாத பொருளைச் சம்பாதிக்கக்கருதிக் கவலைப்படுதலும் ஈனர்தொழிலாம். இழந்த பொருளைச் சம்பாதிக்க ஊக்கத்தோடு முயற்சிசெய்தலும், கஷ்டகாலம் வந்தபோது மனம்கலங்காதிருத்தலும் புத்திமான் செயலாம். நீர் கோவிந்தப்பிள்ளையை நம்பித்தானா பூலோகத்தில் பிறந்தீர். உமது அட்டவிகட சாமர்த்தியங்கள் எனக்குத் தெரியாதா. நீர் மனங்கலங்கினால் என்னைப்போன்ற வைதிகர்கதி என்னவாகும். உம்மை வருந்தியழைத்து உபசரிக்கும் பிரபுக்கள் எத்தனைபேரிருக்கிறார்கள். "என்னே, விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ, குரங்கேற்றுக்கொள்ளாத கொம்பு" என்று நம்பர் கூறிய வசனத்தை மறந்துபோனீரா? ஆதலால உமக்கொரு குறைவும் வாராது. கவலைப்படாதேயும் என்றார்.

கோடி—தர்.—நீர் சொல்வது மெய்தான்; நான் என் விஷயமாகக் கவலைப்படவில்லை. பிள்ளையவர்களிட்ட அன்னத்தைப் புசித்தல்லவோ இந்தச் சரீரம் வளர்ந்தது. அவரது வருத்தத்தை நினைத்தால் மனம் பதறுகிறது. இனி அவரும் அவரது குடும்பமும் என்னபாடு படவேண்டுமோ என்பதை நினைக்க எனக்குத் துக்கமேலிடுகின்றது. "உப்பிட்டவரை உள்ளளவு நினை" என்றபழமொழியுமிருக்கின்றதே; அவரை நான் மறக்கலாமா? மறந்தால் நன்றிகொன்ற மகாபாவம் வந்து சேராதா? பஞ்சமகா பாதகங்களுக்கும் பிராயச்சித்தம் விதித்தநூல்கள், நன்றிமறந்த பாபத்துக்குப் பிராயச்சித்தம் விதிக்கவில்லையே.

இராம—தர்.—சரிதான்; கோவிந்தபிள்ளையைக் குறித்துக் கவலைப்படக் கூடாது. ஏனென்றால், அவர் செய்தது தர்மமாகுமா? சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குப் பணங்களை வாரியிறைத்துக் கீர்த்திபெற முயன்றார். கபிஸ்தலம் மூப்பனாரைப் போலப் பொருட்செலவு செய்து பெருமை வேண்டுமென்று கருதி அலட்சியமாய் வாரி யிறைத்தார். மூப்பனார் செல்வத்துக்கு இவர்செல்வம் உறைபிடக்காணுமோ? இவருடைய ஆஸ்தியெல்லாம் நூறுவேலிதானே? அவர்மேலே பொறாமைகொண்டு அவரது பெருமையையெல்லாம் தாம்கொள்ளைகொள்ளக்கருதி அளவுக்குமிஞ்சிச் செலவுசெய்தல்நல்லதாமோ? 'வளவனாயினும் அளவறிந்தழித்துண்' என்ற நீதியைக்கருதாமல் மனம்போனபடி பிள்ளையவர்கள் செலவு செய்தார். அதனாலே 'அடாது செய்தவன் படாது படுவான்' என்றபடி தமக்குத் தகாத காரியத்தைச்செய்து வருத்தப்படுகின்றார். அப்படித்தான் செலவு செய்தாரே; ஏழை எளியவர்களுக்கு ஏதாவது உபகாரஞ்செய்தாரா? போலீஸ்காரர்களுக்கும், மாஜிஸ்டிரேட்டுகளுக்கும், ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்கும், தாஸில்தார் முதலிய ரெவின்யூ உத்தியோகஸ்தர்களுக்கும் கொட்டிக் கடனாளியானார் பிள்ளையவர்கள். 'அழுக்காறவாவெகுளி யின்னாச்சொல்நான்கும் இழுக்காவியன்றதறம்' என்ற வசனத்துக்கு விரோதமாக மூப்பனாரையேலே பொறாமைகொண்டதனால் இப்பலனடைந்தாராதலால் அவரைப்பற்றி வருந்துவது நலமல்ல. இனிமேல் உமது குடும்ப ஸம்ரக்ஷணையைக்குறித்து யோசித்து ஆகவேண்டியதைச் செய்யும் என்றார்.

கோடி.—தர்.—சற்று நேரம் யோசித்து, இராமசந்திரதீட்சிதரே! பிள்ளையவர்கள் தர்மமுஞ் செய்திருக்கின்றார். ஆனாலும் பெரும்பாலும் நீர் சொன்னபடி வீண் செலவுதான். தற்காலத்தில் கடன் காரர்கள் வந்து மேல்விழுவதற்கு ஆச்சரியமில்லை. அவரிடத்தில் வாங்கித்தின்ற உத்தியோகஸ்தர்களே கடன்காரர்களைத் தூண்டிவிட்டு இப்படி அவமானஞ் செய்திருப்பார்களென்று நினைக்கிறேன். போலிஸ் இன்ஸ்பெக்டர் சடைநாதம்பிள்ளையை யுமக்குத்தெரியுமல்லவா? அவரும், தாசில்தார் வேங்குவையரும், ஸிவில் சிரஸ்தேதார் குப்புசாமி ஐயரும், ஆகிய மூவருமே இதற்குக் காரணமாக விருக்க வேண்டுமென்று உத்தேசிக்கிறேன். இல்லாவிட்டால் இப்படித் திடீரென்று நடக்க ஏதுவில்லை. குப்புசாமி ஐயரும் பிள்ளையவர்களைப்போலவே உத்தியோகஸ்தர்களுக்குக் கொட்டிகடனாளியாய்விட்டார். இப்பொழுது கடனைத்தீர்க்க முயற்சிக்கின்றார். அது நிமித்தம் தமது தம்பி லோகநாதனென்கிற அறியாதபாலகனைக்கூட வெளியேற்றப்பார்க்கின்றார். அவருடைய தாயார் சுப்புலட்சுமி அம்மாள் லோகநாதனுக்கு விவாகஞ்செய்து வைத்துக் குடியுங் குடித்தனமுமாக அனுப்பவேண்டுமே தவிர அனாதையாக அனுப்புவது சரியல்லவென்றும், அப்படி அனுப்புவது அவருக்கும் தனக்கும் பெருங்குறைவென்றும் ஒரேபிடியாகப் பிடிக்கிறாள். குப்புசாமி ஐயருக்கும் அதுவே உசிதமென்று மனதில் பட்டபடியால் தம்பிக்கு விவாகஞ் செய்ய பிரயத்தனப்பட்டுப் பிள்ளையவர்களிடம் ரூபா இரண்டாயிரம் கேட்டார். அப்படியே தாசில்தாரும், இன்ஸ்பெக்டரும் தாங்கள் தாங்கள் செய்த உபகாரத்துக்கு கைம்மாறாகச் சில தொகை கேட்டார்கள். பிள்ளையவர்கள் கொடுப்பதற்குச் சற்றுத்தாமதித்தபடியால் அவர்களே இப்படிப்பட்ட வேலை செய்திருப்பார்களென்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இந்தமோசத்தை யெப்படி வெளிப்படுத்தலாம்? ஒரு யுக்தி சொல்லும் பார்ப்போம்.

இராம—தர்.—ஐயா! இவ்விஷயத்தில் பலபடியாலும் பழகின உமக்குத் தெரியாத யோசனையா என்னை கேட்கிறீர்? இது பரிகாசமாக இருக்கிறது. ஆனாலும், அதிக சந்தோஷம், துக்கம், காமம், குரோதம் முதலியவற்றால் மயங்கப்பெற்றவர்கள் எத்தனை புத்திசாலிகளானாலும் அவர்களுக்கு யோசனை தோற்றுகிறதில்லையென்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். நீர் துக்கத்தினால் புத்தி மயங்கிக் கேட்கிறதாக வைத்துக்கொண்டு சொல்லுகிறேன். கோவிந்தபிள்ளையவர்கள் இப்பொழுது இழந்துபோன சொத்து அவருடைய சுயார்ஜிதமல்ல. பிதுரார்ஜிதமாதலால் அதன்மேல் கடன் வாங்கவும், விற்கவும் கோவிந்தபிள்ளையவர்களுக்கு அதிகாரங்கிடையாது. அவருடைய புத்திரன் சாம்பசிவபிள்ளையைக் கொண்டு மைனர் வியாஜ்யம் தொடங்கினால் உண்மை வெளிப்படும். அப்பொழுது உமது கருத்தும் நிறைவேறும். ஸிவில் ஜட்ஜ் துரையவர்கள் நியாயமாய் விசாரணை செய்பவராதலால் நிஷ்பட்சபாதமாய் வியாஜ்யத்தை நடத்துவார். இதுதான் எனக்குத் தோன்றிய யுக்தி. அப்புறம் உமது மனம்போல நடத்திக்கொள்ளும்.

கோடி.—தர்.—ஐயா! உமது யோசனை பழுதாகுமா? நல்ல யோசனை சொன்னீர். நான் பையனை ஆதாரமாக வைத்துக்கொண்டு அண்டங்களைக் கூடப் புரட்டுவேன். உடையார்பாளையம் போய் மீண்டதும் மைனர் வியாஜ்யத்துக்குக் கங்கணங்கட்டிக்கொள்ளுகிறேன். என் கவலை யொழிந்தது. சமயத்துக்கேற்ற யோசனை சொன்னீர். இதற்குத்தான் மனமொத்த நண்பர்கள் வேண்டுமென்பது. அவர்கள் "உடுக்கையிழந்தவன் கைபோல" ஆபத்துக் காலத்தில் உதவி செய்கிறார்கள். அதோ பரிச



லும் வந்துவிட்டது. எழுந்திருமென்று சொல்ல இருவரும் எழுந்திருந்து வாய் கொப்பளித்து, கைகால் முகம் சுத்தி செய்து, காலைச் சந்தியை முடித்துக்கொண்டு பரிசிலேறத் தயாரானார்கள். அப்பொழுது பிராமணர்களும், சூத்திரர்களுமான சில வழிப்போக்கர்களும் பரிசிலேற வந்து கூடிக்கொண்டார்கள். அந்தக் கூட்டத்திலொரு பிராமணன் கோடிலிங்க தீட்சிதரைப் பார்த்து ஐயா! ஏது இவ்வளவு தூரம் வந்தது? கோவிந்தபிள்ளையவர்கள் வீட்டுத் திண்ணையை விட்டுக் கீழே இறங்கமாட்டீர்களே; இப்பொழுது பிள்ளையவர்கள் கைசோர்ந்து போய்விட்டபடியால் வெளிப்புறப்பட்டாற் போலிருக்கிறது. விதியாரை விட்டது. பாபம் என்ன செய்யலாமென்று சொல்லி நகைத்தான். அது பொறுக்கமாட்டாத தீட்சிதர் மனமெரிந்து அவனைப் பார்த்து என்னகாணும் ஓய் முன் பின் பாராமல் பேசுகிறீர். கோவிந்தபிள்ளையவர்கள் கைசோர்ந்தாலென்ன? அவருடைய புத்திரனும் கைசோர்ந்து போனானா? அவன் மைனர் வியாஜ்யத்துக்குத் தொடங்கினால் என்னவாகுமோ அது யாருக்குத் தெரியும்? அற்பத்துக்குள் மகிழ்ந்து பரிகாசஞ் செய்துவிட்டீரே. அந்த மட்டும் உமது வாயையடக்குமென்றார். அதைகேட்ட வழிப்போக்கன், அப்படியா! மைனர் வியாஜ்யமிருக்கிறதென்பது எனக்குத் தெரியாது. கோபித்துக் கொள்ளாதேயும். பொறுத்துமையா பொறுத்துமென்று கூறினான். பரிசிலும் வந்து சேர்ந்தது. இந்தப்பரிசில் நவராத்திரோத்ஸவத்துக்கு வருபவர்களை யேற்றிக்கொண்டுபோம் பொருட்டு மழவரங்கதுரையால் நியமிக்கப்பட்டதாதலால் அதில் எல்லாரும் ஏறிக்கொண்டு அக்கரைபோய்ச் சேர்ந்தார்கள்.

கொள்ளிடம் நதிக்கு வடகரையில் மதனத்தூர் என்று ஒரு சிறு கிராமம் உண்டு. கிராமம் சிறியதானாலும் நாலாபக்கங்களிலுமிருந்து ஜனங்கள் வந்து தங்குவதற்கேற்ற வசதியான இடம். அவ்விடத்தில் மழவரங்கதுரையால் கட்டப்பட்ட பல சத்திரங்களுண்டு. அவ்விடத்தில் வந்து தங்கும் எளியவர்களுக்கும், பிராமணர்களுக்கும் அன்னதானம் வழங்குவது வழக்கம். இந்த உற்சவகாலத்தில் விசேஷமாக விருக்கும். உத்தியோகஸ்தர்கள் வந்து தங்கிச் சமைத்து உண்பதற்காக ஒரு சத்திரமுமுண்டு. நாம் பேசி வருங்காலத்தில் அநேக ஜனங்களும், வண்டிகளும், குதிரைகளும் நிறைந்து எள்ளிட இடமில்லாமலிருந்தது. தீட்சிதரிருவரும் அவ்விடத்தில் பகற்போஜனத்தைக் கழிக்க நிச்சயித்துக் கொள்ளிடத்தில் ஸ்நானஞ்செய்து, சத்திரத்தில் போஜனஞ்செய்து பனைத் தோப்பில் படுத்துப் பலபல பேச்சுக்களைப் பேசிக்கொண்டிருந்தார்கள். மந்தமாருதம் வந்துலாவியது. குயில் முதலிய பட்சிகள் இனிமையாய்க் கூவிக்கொண்டிருந்தன. பலவகையான விருட்சங்களடர்ந்து இருள் குடிகொண்டாற்போல பரந்திருந்தது. நாலாஜாதி ஜனங்களும் நிறைந்திருந்ததனால் பேச்சுத்தொனி கலகலவென்று தொனித்துக்கொண்டிருந்தது. அச்சோலையின் காட்சி கண்ணுக்கும் மனதுக்கும் வெகு ரம்மியமாயிருந்தது. தீட்சிதரிருவரும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து பின் அயர்ந்து நித்திரை போய்விட்டார்கள். மூன்றுமணிக்கு விழித்துக்கொண்டு உடையார்பாளையம் போவதைக் குறித்து யோசித்தார்கள். அக்காலத்தில் உடையார்பாளையம் போவதென்றால் எளிதல்ல. சரியான இரஸ்தாக்கள் கிடையாது. உடையார்பாளையம் காடு என்று பிரசித்தி பெற்றிருப்பது யாவரும் அறிந்த விஷயம். அந்தக் காட்டில் கரடி, புலி முதலிய துஷ்டமிருகங்களும், மான் முயல் புனுகுபூனை முதலியவைகளும், மயில் முதலிய பறவைகளும் நிறைந்திருக்கும். பலபல ஜாதி விருட்சங்களும், மருந்துகளுக்குரிய செடி கொடிகளும் அடர்ந்திருக்கும். இடையிடையே வேடர் வில்லியர்கள் வசிக்

கும் குடிசைகள் ஆங்காங்கு காணப்படும். கொடி வழிகள் பலபிரிந்துபோய்க் கொண்டிருக்கும். ஒருவண்டி போகும்படியான சிறிய வழியென்றுபோம். அதனிருபுறத்தும் வெட்பாலை புரசு முதலிய சிறிய விருட்சங்களும், காயா, ஈஞ்சு, கொஞ்சி முதலிய செடிகளும் நிறைந்து உயர்ந்து கவிந்து கூடாரம் போட்டாற்போல மூடிக்கொண்டிருக்கும். வண்டிகள் போகும்போது அந்தச் செடிகளும் விருட்சங்களும் வண்டியின் மேல் உராய்ந்து சடசட, படபட வென்கிற தொனிகளும், கரகர வென்கிற தொனியுமுண்டாயிருக்கும். சில சமயங்களில் மேற்படி விருட்சங்களின் கிளைகள் வண்டிக் கூட்டின்மேல் மோதி அது நடவாதபடி தடை பண்ணுவதுமுண்டு. முரட்டு மாடுகளாயிருந்து முரண்டு வண்டியை இழுத்தால் மேற்கூண்டு பிய்ந்து சின்னபின்னமாவதுமுண்டு. வண்டிக்காரர்கள் சற்று அஜாக்கிரதையாயிருந்தால் மரங்களின் வேர்களின் மேலும், மேடுகளின் மேலும் வண்டியேறி விழுந்து குடைக் கவிழ்ந்து சேதமுண்டாவதும் வழக்கம். ஆங்காங்கு சிறிய குட்டைகளும் குளங்களும் ஏரிகளுமிருக்கும். திருடர் பயமும் மிகுதி. கங்கைகொண்ட சோழபுரம், ஜயங்கொண்ட சோழபுரம் முதலிய இரண்டொரு ஸ்தலங்கள் இடையிலேயுண்டு. மன்னைத்தூரினின்று புறப்பட்டுப் போகும் பிரயாணிகள் அவ்விரண்டு ஊர்களில் தான் தங்கலாம். வேறு இடம் கிடையாது. மன்னைத்தூருக்கும் உடையார்பாளையத்துக்கும் பதினேழு மைல் தூரமானாலும் கஷ்டமாய் நடந்து சென்றால் இரண்டு நாளில் போய்ச் சேரலாம். இந்த உஷ்ணகாலத்தில் சதா ஜனங்கள் போய்க்கொண்டிருப்பாராகையால் பயமின்றி யாவரும் இரவும் பகலும் நடந்து போகக்கூடும். மற்றைய காலங்களில் அந்தக் காட்டில் தனிமையாகப்போவது அபாயத்துக்கிடமாகும். அதனாலே தான் கிட்டிதர்களுடனும் சேர்ந்து போயிருந்தார்கள். மேற்படி உஷ்ணகாலத்தில் நாலாபக்கங்களிலுமிருந்து வியாபாரிகள் பலபல சாமான்களை வண்டியின்மேல் ஏற்றிக்கொண்டு உடையார்பாளையம் போய் வியாபாரம் செய்வது வழக்கம். அவர்கள் அஸ்தமனமான பிறகுவண்டிகட்டி இராத்திரி யானம் போவார்கள். அவர்களோடு கூட இவ்விருவரும் போவதாகத் தீர்மானம் செய்துகொண்டு அங்கேயே தங்கி, அன்னசத்திரத்தில் இராப்போஜனம் செய்து பின் வண்டிக் கூட்டங்களோடும், பலஜாதி ஜனங்களோடும் கூடிப்புறப்பட்டுப் போய் விடியற்காலம் ஜயங்கொண்ட சோழபுரத்தைச் சேர்ந்தார்கள். அது ஒரு சிறிய கிராமமானாலும் தற்காலத்தில் உடையார்பாளையம் தாலூகாவிற்குத் தலைமை ஸ்தானமாதலால் தாசில்தார் கச்சேரியும், சப்மாஜிஸ்டிரேட் ஆபீசு, ரிஜிஸ்டர் ஆபீசு, போஸ்ட்டாபீசு, போலீஸ் கச்சேரி முதலியவைகளும் உண்டு. அதற்கும் உடையார்பாளையத்துக்கும் ஆறு மைல் தூரம்; ஆதலால் மத்தியான வெய்யிலை முடித்துக்கொண்டு போகலாமென்று தங்கினார்கள். அந்த ஊரில் ஆவேரி யென்கிற ஒரு ஏரி உண்டு. அது தான் ஸ்நானபானங்கள் எல்லாவற்றிற்கும் உபயோகமும் சௌக்கியமுமுடையது. அதில் ஸ்நானஞ் செய்து தாசில்தார் சுப்பிரமண்ய சாஸ்திரிகள் கிருகத்தில் போஜனத்துக்குப் போனார்கள்.

தாசில்தார் சுப்பிரமண்ய சாஸ்திரிகளென்பவர் நாகபட்டணம் பரசுராம சாஸ்திரிகளின் பௌத்திரர். அவர் பரம்பரையாகவே பிரபு. ஆனாலும் இவரது பாட்டனார் கப்பல் வியாபாரத்தில் நஷ்டமடைந்து தரித்திரரானார். அது முதல் அவரது குடும்பம் ஏழைமையான ஸ்திதிக்கு வந்துவிட்டது. அந்தக்குடும்பத்தில் இவரொருவரே சற்புத்திரராக அவதரித்துப் பூர்வ பிதாக்களின் கீர்த்திக்கும் மகிமைக்குங் குறைவில்லாமலிருக்கும்படி தமது குடும்பத்தை முன்னுக்குக்கொண்டுவர முயன்று நாகபட்டணத்து



மிஷன் பாடசாலையிற் படித்து உயர்தர பரீக்ஷையில் தேறிச்சர்க்கார் உத்தியோகத்தில் அமர்ந்து படிப்படியாக உயர்ந்த பதவியை அடைந்தார். அரசாங்கத்தார் அவரது சாமர்த்தியத்தை மெச்சி அரியலூர் டிப்டி கலெக்டர் உத்தியோகம் கொடுத்தார்கள். அடுத்த மாசம் முதல் தேதி டிப்டி கலெக்டர் உத்தியோகத்தை வகிக்கவிருக்கிறார். அவர் தமது பூர்வ ஸ்திதியை நினைத்து கர்வமென்பது சிறிதுமில்லாமல் யாவரோடும் கலந்து சம்பாஷிப்பார். ஏழைகளிடத்தில் அதிக இரக்கம் பாராட்டுவார். பரஹிம்சை சகியாத பரமபுருஷர். தம் வீட்டுக்கு யாரேனும் அதிதிகள் வந்தால் பட்சமாய் ஆதரித்து உபசரிப்பார். நிஷ்பட்சபாதகமாய் நியாயந் தீர்ப்பார். பரிதானமென்ற வார்த்தையைக் கேட்டால் ஆலகால விஷத்தைக் கண்டதுபோல நடுநடுங்குவார். வஞ்சனை துரோகங்களைக் கனவிலும் நினையார். பொய் என்பதே அவருக்குத் தெரியாது. தமது சத்துருக்களுக்கு முபகாரம் புரியக் கருதும் நிர்மல சித்தமுடையவர். தெய்வத்தினிடத்தில் அத்தியந்தமான பக்தி செலுத்துபவர். அவருடைய வடிவம் குட்டையும் நெட்டையுமில்லாமல் நடுத்தரமாயும், பூசினாற்போலப் பருத்தும் அழகாயிருக்கும். அகன்று நீண்ட கண்களும், கறுத்து வளைந்த புருவங்களும், அஷ்டமி சந்திரனைப்போன்று விளங்கும் நெற்றியும், முத்துப்போன்ற பற்களும், சந்திரமண்டலம்போன்று வட்டமாய் ஒளிநிறைந்த முகமும் உடையவர். உடையார்பாளையம் மழவராயர் பூபதிக்கு அந்தரங்கச் சிநேகர். அவரது கிருகத்தின் திண்ணையில் வந்துட்கார்ந்தார்கள். அதற்கு முன்னால் இரண்டு பிராமணர்கள் வந்து உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவர் கீரியனூர் அப்பாசாமி சாஸ்திரிகள். மற்றொருவர் ஒலையூர் இராமநாத கனபாடிகள். இவ்விருவரும் சகல சாஸ்திர விற்பன்னர்கள். இந்த நால்வரும் ஒருவரையொருவர் க்ஷேமலாபம் வினவி அளவளாவிக் கொண்டிருந்தார்கள். கோடிலிங்க தீக்ஷிதருக்குச் சதுர் சாஸ்திர பண்டிதரென்கிற பிரதாபப் பெயருண்டு. இராமசந்திர தீக்ஷிதர் இதிகாச புராணங்களிலும், ஸ்மிருதிகளிலும் வல்லவர். இந்நால்வரும் சாஸ்திர விசாரணை செய்துகொண்டிருக்கையில் உள்ளே யிருந்து தாசில்தாரவர்கள் வந்து சற்றுநேரம் அவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்து பிறகு மரியாதையோடு உள்ளே யழைத்துக் கொண்டுபோய் போஜனஞ் செய்து வைத்துத் தாம்பூலம் அளித்து மீண்டு ஊருக்குப்போகும்போது இவ்விடம் வந்து போம்படி உபசாரங் கூறித் தாம் கச்சேரிக்குப் போய்விட்டார். இந்த நாலுபேரும் தாசில்தாரது கல்யாண குணங்களைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்து, வெயில்சற்றுத் தாழ்ந்ததும் பிரயாணப்பட்டு உடையார் பாளையம் நோக்கிப்போனார்கள்.

## மூன்றாம் அத்தியாயம்.

இப்பொழுது லோகநாதனைக் கவனிப்போம். லோகநாதனும் இராமலிங்கமும் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாரென்று சொன்னேமல்லவா? லோகநாதன் வீடுபோகும் பொழுது இரவு பத்தரை மணியாயிற்று. வாசற்கதவடைத்திருந்தது. உள்ளே பேச்சுக்குரல் கேட்டது. அதென்னவென்று கேட்டான். லோகநாதன் தாயாருக்கும் தமையனுக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது.

குப்புசாமி ஐயர்.—அம்மா! நானென்ன செய்கிறது; என்னால் கூடியமட்டும் பிரயாசப்பட்டுப்பார்த்தேன். லோகநாதனுக்குத் தகுந்த உத்தியோகம் கிடைக்கவில்லை. வியாபாரிகளிடத்தில் கொண்டுபோய் விடலாமென்றாலோ ஆறு ஏழு ரூபாய்க்கு மேற்பட்ட சம்பளம் கிடைக்காது. தவிர அதுவும் என் கௌரவத்துக்குக் குறைவுதான். நான் சொன்ன பேச்சைக்கேட்டு இங்கிலீஷ்படித்து மெட்ரிகுலேஷன் பரீக்ஷையிலாவது தேறியிருந்தானானால் எப்படியாவது ஒரு வேலை சம்பாதிக்கலாம். யாரிடத்தில் பேசினாலும் என்ன பாஸ் பண்ணியிருக்கிறானென்று கேட்கிறார்கள். அப்பொழுது தலை குனியவேண்டிவருகிறது. நேற்று இரவு தாசில்தாரிடத்திலே பேசி ஒரு காபியிஸ்ட் வேலை செய்து கொடுக்கும்படி கேட்டேன். அவர் பாஸ் பண்ணாதவர்களுக்குக் கொடுக்கக் கூடாதென்றும், மெட்ரிகுலேஷன் பரீக்ஷை கொடுத்தவர்களுக்கே கொடுக்கவேண்டுமென்றும் மேலான அதிகாரியிடத்திலிருந்து தமக்கு உத்திரவு வந்திருப்பதாயும் தான் தாம் வருத்தப்படுவதாயுஞ் சொல்லிவிட்டார். அதனால் நான் பதில்பேசவாயில்லாமல் திரும்பி வந்துவிட்டேன். நானென்ன செய்கிறது. தனக்குத்தக்க உத்தியோகத்தைத் தேடிக்கொள்ளும்படி சொன்னால் நல்லது. அவனைத்தனியாக அனுப்பவேண்டுமென்பது எனக்கு எண்ணமில்லை. நம்முடைய தற்கால நிலைமை அப்படியிருக்கிறது என்றார்.

சுப்புலட்சுமியம்மாள்.—அது சரிதான். எனக்கும் அப்படித்தான் கருத்து. ஆனாலும் அவனுக்கு விவாகம் செய்துவைப்பது நமது கடமையல்லவா? நீ உயர்ந்த நிலைமையிலிருக்கும்போது அவனுக்கு ஒரு கால்கட்டு கட்டிவிட்டால் அப்புறமெப்படியாகும். கல்யாணத்தைச் செய்து முடித்தால் அவனுக்குக் குடும்பபாரம் சுமந்துபோம். அதற்குமேல் அவன் எந்தத்தொழிலையாவது செய்து பிழைக்க வழிதேடுவான். அப்படிச் செய்யாமல் அனுதையாக அனுப்பிவிட்டால் பிச்சைக்காரனைப்போல் ஊரூராய்த்திரியும்படியல்லவோ நேரிடும். அப்பால் அவனைக்கண்டுபிடிப்பதே கஷ்டமாகும். அவனோ மிகுந்த ரோஷக்காரன். அதனாலேதான் இதுவரைக்கும் இந்தச்சமாசாரத்தை அவனுக்குச் சொல்லாமல் மறைத்துவைத்திருக்கிறேன். அவனுக்கு விவாகமாகாமலிருப்பது எனக்குப் பெருங்குறைவாகத் தோன்றுகிறது. உனக்கும் அவமானம். ஊராரெல்லாரும் உன்னை ஏசமாட்டார்களா? இப்பொழுது என்தோழிகளும், மற்றவர்களும் லோகநாதனுக்கு ஏன் இன்னம் கலியாணமாகவில்லையென்றும், எப்பொழுது செய்ய உத்தேசித்திருக்கிறீர்களென்றும் கேட்கிறார்கள். நமது வீட்டு இரகசியம் தெரிந்தசிலர் பரிகாசம் பண்ணுகிறார்கள். அவர்களுக்குப் பதில் சொல்ல எனக்கு நாவெழவில்லை. "உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடலாமா" இதுதான் எனக்குத் தடையாயிருக்கிறது.

குப்—ர்.—அம்மா! அந்த வெட்கக்கேட்டை யென்ன சொல்லுகிறது. நீ சொன்னபடி பல விடங்களில் பெண் விசாரித்தேன். எல்லாரும் இங்கிலீஷ் படித்தபிள்ளைகளையே விரும்புகிறபடியால் பெண்கொடுக்க மறுக்கிறார்கள். சில ஏழைகள் பெண்கொடுக்கச்சம்மதித்தாலும் அதிகதொகை கேட்கிறார்கள். ஒரு சங்கதி சொல்லுகிறேன் கேள், முத்தனூர் இராமசாமி ஐயருக்கு ஒரு பெண் இருக்கிறதென்றும், அவளுக்கு விவாகத்துக்குப்பருவம் வந்து விட்டதென்றும் கேள்விப்பட்டு எங்கள் ஆபீஸ் குமாஸ்தா வெங்கிட்டு மூலமாகவிசாரித்தேன். இராமசாமி ஐயர் கையில் ரொக்கமாக ரூபா ஐந்நூறும்



இரு நூற்றைம்பது ரூபாய்க்கு நகையும்போட்டுக் கல்யாணமும் நாமே செய்துகொள்வதானால் பெண்கொடுக்கச் சம்மதிப்பேன் என்றாராம். ஸ்ரீபுரந்தான் சாஸ்திரிகளும் அப்படியே கேட்டதுதவிரப் பெண்பேருக்கு ஆயிரரூபா ஆஸ்தி வைக்க வேண்டுமென்றும் சொன்னாராம். யாரைக்கேட்டாலு மிப்படியே சொல்லுகிறார்கள். நாம் கல்யாணஞ் செய்துகொள்வதானால், கொஞ்சத்திலாகுமா? நம்முடைய கௌரவத்துக்குத் தக்கபடி நடத்தவேண்டாமா? அப்படியே நடத்தினால் ரூபா இரண்டாயிரத்தைந்நூறுக்கு மேலாகிறது. தற்காலத்தில் அவ்வளவு செலவு செய்யும்படியான சக்தி நமக்கிருக்கிறதா? ஏற்கனவே ஆறாயிரம் ரூபா கடனிருக்கிறது. எந்தக்காலத்தில் கடன்கொடுத்தவர்கள் வியாஜ்யந் தொடருவார்களோ வென்று நடுங்கிக்கொண்டிருக்கிறேன். இந்தக்கடனும் பழையகடனும் சேர்ந்தால் எண்ணாயிரத்தைந்நூறு ரூபாவரையாகிறது. அந்தக்கடனை யெப்படி தீர்க்கிறது. உன்மனதுக்குத் திருப்தி யுண்டாக்கும்பொருட்டு எந்தக் கடனானாலும் ஆகட்டும் கடவுள் சித்தம்போலாகிறது. கல்யாணத்தை முடித்துவிடுவோம் என்று நினைத்து வலையப்பேட்டை கோவிந்த பிள்ளையிடம் மூவாயிர ரூபா கடன் கேட்டேன். அவரும் தருகிறேனென்றார். அதற்குள் அவர்கதி நிர்க்கதியாய் விட்டது. இனி யென்ன செய்கிறது. லோகநாதன் ஏதாவதொரு அலுவலிலிருந்து பத்து ரூபா சம்பாதித்தானால் அப்பொழுது இவ்வளவு தொகையாகாது. கொஞ்சம் செலவு மட்டுப்படுமென்று நினைக்கிறேன். எந்தத்தொழிலின் அவனுக்குப் பிரியமென்று கேட்டு அதிலே பிரவேசிக்கச் சொல்லு. நானும் அதற்கு யத்தனஞ் செய்கிறேன்.

---

# கௌரி.

செந்தமிழ் வழங்கும் பாண்டிய வள நாட்டிற்கு இராஜதானி நகரமாகிய மதுராபுரிப்பட்டணத்திலே விக்கிரமனென்னும் பாண்டிய அரசன் மனுநீதி தவறாமல் ராஜ்ய பரிபாலனஞ்செய்து வந்தான். அக்காலத்திலே அம்மதுரைமாநகரில் வேதவித்பன்னராகிய விருபாக்ஷரென்னும் பேர்கொண்டவோர் வைதிகப் பிராமணர் வசித்து வந்தார். அவ்வந்தணரும் அவர் மனைவியும் அத்திவ்விய க்ஷேத்திரத்திலெழுந்தருளியிருக்கும் அகிலலோககர்த்தாவாகிய ஸ்ரீ ஜகதீசுவர ஸ்வாமிக்கு மெய்யானபக்தி செய்து வழிபட்டு வந்தார்கள். அந்த பகவான் கருணையால் இம்மண்ணுலகில் அடையத்தக்க சகல சுக போக பாக்கியங்களையு மடைந்திருந்தார்கள். ஆனால், மக்கட்பேறு மாத்திரம் வினைப்பயனால் அவர்களுக்கு வெகுகாலம் கிட்டாதிருந்தது. அவ்வந்தணர் தமக்கு நேர்ந்த அப்பெருங்குறையை நிவர்த்திக்கும் பொருட்டு ஜகதீசனைக் குறித்து அரியதவம் புரிந்தார். அதன்பின் ஜகதீசன் திருபாகடாக்ஷத்தால் அழகென்பதே ஓர் மானிடக் குழந்தை போன்ற உருவெடுத்ததெனச் சொல்லத்தக்க பேரழகு வாய்ந்த ஓர் பெண் குழந்தை பிறந்தது.

உள்ளக்கவலையை யொழிக்க வந்த ஒப்பிலாமணியென விளங்கும், அக்குழந்தைக்கு அவ்வந்தணர் கௌரியெனத் திருநாமம் புனைந்து, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து வந்தார். பூர்வ ஜன்ம தவக்குறையை முடிக்கும் பொருட்டு

இம்மண்ணுலகுதித்த புண்ணியவதியாகையால் கௌரிக்கு ஐந்தாவது வயது வந்ததும் பிரமஞானந் தோன்றித் தன் தந்தையைப் பார்த்து, அப்பா! வெனவழைத்து, துன்பக் கிற்கிடந்தரும் இம்மண்ணுலகத்தினின் றீடேற அடியேனுக்கு ஒரு மந்திரம் உபதேசித்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தாள். மழலைமொழிபகரும் தன் குழந்தையிடத்துண்டாயிருக்கும் பிரமஞானத்தைக் கண்டு அவ்வந்தணர் பரமானந்தங்கொண்டு, என் கண்ணே! கண்ணினுள் மணியே! என்னுருயிரே! யெனக்குழந்தை கௌரியைக் கையாலெடுத்து, மார்போடணைத்து, முத்தமிட்டு, மடிமீதுட்காரவைத்துக் கொண்டு, சர்வாண்டகோடிகளையும் தன்னிடத்தினின்று தோற்றுவித்த உலகமாதாவாகிய பராசக்தியினுடைய திருமந்திரத்தை உபதேசித்தருளினார். அன்று முதல், சந்திரவதனசுந்தரரூபியாகிய கௌரியானவள் தன் தந்தை யுபதேசித்த மந்திரத்தைச் சிந்தையிலமைத்து நாடோறும் தியானித்து வந்தாள்; விருபாக்ஷனென்னும் அவ்வந்தணர் குழந்தை கௌரியின் ரூபலாவண்ணியத்தையும் ஞானசிரோமணியாய் விளங்குவதையுங் கண்டு, பிரமசரிய நெறிதவறாதவனும், வேதவித்பன்னனும், சிவபக்தியுள்ளவனுமாகிய குணவானுக்கே விவாகஞ்செய்து கொடுக்கவேண்டுமெனத் தீர்மானித்திருந்தார்.

இவ்வாறிருக்கையில், கௌரிக்கு வயது ஏழு நிறைந்து எட்டாவது பிறந்து விட்டது. அது வரையிலும் அவ்வந்தணர் எண்ணியவாறு மணமகன் கிடைக்கவில்லை. எட்டாவது வயதில் விவாகம் நடத்துவதே பிராம விவாகத்தின் முறையாதலாலும், அந்த வயதுடைய ஒரு பெண்ணைப் பிரமசரிய நெறிதவறாத ஒருவனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தால் அவனுடைய இருபத்தொருதலைமுறையும் முத்தியானந்த மடையுமென்று சாஸ்திரமேற்பட்டிருப்பதாலும், அவ்வந்தணர் தன் குழந்தை கௌரிக்கு அப்போர்க்கொத்த சமயம் தவறிப்போகிறதே என்று மிக்க வியாகூலப்பட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒருநாள், ஒரு வைஷ்ணவ பிரமசாரி அவர் வீட்டுக்கு பிக்ஷைக்கு வந்தான். பிக்ஷைக்கு வந்த வைஷ்ணவ பிரமசாரி தேஜஸைக்கண்டோ, அல்லது தன் குழந்தை கௌரிக்கு விவாகத்துக் கேற்பட்ட வயது கடந்து போகிறதென்றோ, கௌரியின் விதிவசத்தாலோ அவ்வந்தணர் "விதிவழிமதி" யென்பதற்கேற்ப, தான் முந்தி யெண்ணியிருந்த எண்ணமெல்லாம் மறந்து, அவ்வைஷ்ணவ பிரமசாரிக்குக் கௌரியைக் கொடுக்க நிச்சயித்து, அவர் மனைவி முதலியோர் அநுமதியின்றி அவன் கையில் தாரை வார்த்து விட்டார். பின்பு அவர் வீட்டு ஜனங்கள் குலகோத்திரம் விசாரியாமல் தாரை விட்டதை யறிந்து மனம் மிகவும் வருந்தி வைஷ்ணவனென்கிற குற்றமிருப்பினும், மறுக்க முடியாமை கண்டு, அவர்களும் மதற்கிசைந்து விவாகம் நடத்தவேண்டியதாயிற்று. அந்தப் பிரகாரமே விருபாக்ஷனென்னும் அந்தணர் கௌரிக்கு காலோடு தலைவரையில் வேண்டிய ஆபரணங்களைப்பூட்டி, அக்கினி சாட்சியாக திருமணஞ் செய்து முடித்தார். விவாகம் முடிந்தவுடன் வைஷ்ணவ பிரமசாரி "குருடன் கண்ட புதையல்போல்" தனக்குக் கிடைத்தமாது சிரோமணி கௌரியை யழைத்துக் கொண்டு தன் தாய்தந்தையிருக்கும் ஊரையடைந்து தன் வீட்டிற்குள் போனான். போனதும் அவன் தாய் தந்தை தம்பிள்ளை வெகு நாள் வெளியே போயிருந்து வந்திருக்கிறானே என்கிற சந்தோஷமின்றி அவனைப் பார்த்து சண்டாளா! துரோகி, "குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பாயிருக்கிறாயே" இதென்ன அநியாயம். சுடுகாட்டில் எலும்பு மாலைபூண்டு சாம்பலைப் பூசிக்கொண்டு திரியும் முக்கண்ணனுக்கு பக்திசெய்யும் குலத்துதித்த பெண்ணை எங்கேயடா அழைத்து வந்தாய் என்று திட்ட



ஆரம்பித்தார்கள். பின்பு அவ்வைஷ்ணவப் பிரமசாரி தான் பிக்ஷைக்குப் போனதும் வழியில் கௌரியைக் கலியாணஞ் செய்துகொடுத்ததும் சவிஸ்தாரமாய்த் தெரியும்படி தன் பெற்றோருக் குரைத்தான். அதனைக்கேட்ட அவன் பெற்றோர் மிக்க வருத்த மடைந்து, அவ்வீட்டிலேயே ஒரு மூலையில் ஒரு அறையில் கௌரியை தனியே யிருக்கும்படி இட்டப் படுத்தினார்கள்.

இப்படி யிருந்து வாழ்ந்துவரும் நாளில், ஒரு நாள் அவ்வீட்டிலுள்ளோர் எல்லோரும் பக்கத்தூரிலுள்ள அவர் பந்து வீட்டு விவாகத்துக்குப் போகநேரிட்டது. அப்போது வீட்டிலுள்ள அறைகளை யெல்லாம் பூட்டிக்கொண்டு, கௌரியைமட்டுந் தனியே வைத்து விட்டுப் போய்விட்டார்கள். அவ்வீட்டில் கௌரி தனியே யிருக்கும்பொழுது தான் ஒருவேதவித்பன்னராகிய சிவபக்தர் வீட்டிற்பிறந்து வளர்ந்ததும், பின் வைஷ்ணவ பிரமசாரிக்கு வாழ்க்கைப்பட்டு, சிவபக்தரைக் கண்ணாலே பார்க்கக்கூடத்தனக்குக் கிடைக்காமற் போனதற்கும் மனம் மிக்க வருந்திதுக்கப்பட்டு தனியே புலம்பிக்கொண்டிருந்தாள். அந்தப்புண்ணியவதியாகிய கௌரி தனியே புலம்புவதை யறிந்த கருணாகரமூர்த்தியாகிய சோம சுந்தரக்கடவுள் மனமிரங்கி, ஒரு கையில் கமண்டலமும், மற்றொரு கையில் ஒரு பழைய புத்தகமும், மேனியெங்கும் விபூதி ருத்திராக்ஷமுமணிந்து விருத்தாப்பியப் பிராமண வேடம்பூண்டு, கைநடுங்கக் கால் நடுங்கக் கூனிக் குறுகிக் கொண்டு கௌரியிருக்கும் இருகத்திற்கு வந்தார். விபூதி ருத்திராக்ஷமணிந்த சிவபக்தரை யெப்பொழுது பார்ப்போமென்று மழையின் வரவை யெதிர்பார்த்து வாடிநிற்கும் இளம்பயிர்போல் முகம் வாடி துக்க சாகரத்தில் மூழ்கியிருந்த கௌரி தன் எதிரில் வந்த, சிவபக்தராகிய விருத்தாப்பியரைக் கண்டதும் மட்டில்லா மகிழ்ச்சிகொண்டு பக்கத்தில் ஓடிவந்து, சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து சுவாமி நானென்ன பணிவிடை செய்ய வேண்டும், தெரிவித்தால் என் சக்திக்கியன்றவாறு செய்கிறேன் என்று மிக்க வணக்கத்துடன் கேட்டாள். கேட்டதும் அவ்விருத்தாப்பியர் நிமிஷத்துக்கு நிமிஷம் இருமிக்கொண்டு நெஞ்சிற் கோழையுடைய வார்த்தை பாதி அறியக்கூடியதும்பாதி அறியக்கூடாததுமாய் மிக்க பசியுள்ளவர்போல் தன் வயிற்றைக் கையால் பிடித்துக்கொண்டுகொஞ்சம் பசிக்கு அன்னமிடுவெனக் கெஞ்சிக்கேட்டார். அதனைச்செவியுற்ற கௌரிசகிக்கமுடியாத் துயரங்கொண்டு, சுவாமி! நானென்ன செய்வேன். எவ்விதம் அன்னமிடுவேன் என்னைமட்டும் தனியே இவ்வீட்டில் வைத்து வீட்டிலுள்ள அறைகளையெல்லாம் பூட்டி விட்டல்லவோ போயிருக்கிறார்கள். அன்னமென்று வாய்திறந்துகேட்ட அரனடியார்க்கு அன்னமிடும் புண்ணியம் செய்யாத மஹாபாவியானேனே என்று வாய்விட்டு அலறி வருந்தினாள். அவ்வாறு துயரங்கொண்டு புலம்பும் கௌரியைப் பார்த்து பெண்ணே! நீ வருந்தாதே. உன் கையால் கதவின் பூட்டைத் தொடு; அது உடனே திறந்து கொள்ளும். பின் சமையல் செய்து எனக்குப் போஜனம் செய்விப்பாயென்றார். உடனே கௌரி சந்தோஷங்கொண்டு தன் கையால் அறைக் கதவின் பூட்டைத் தொட்டாள். தொட்டமாத்திரத்தில் பூட்டு தானே திறந்து கொண்டது. அதனைக்கண்டு கௌரி ஆச்சரியமடைந்து, அறைக்குட் சென்று அந்தட்சணமே தேவாமிர்தம்போன்ற சமையல் செய்து, பின் அவ்விருத்தாப்பியருக்குக் காலலம்ப ஜலங்கொணர்ந்து காலலம்பி அந்த ஜலத்தைத் தன் சிரசில் புரோக்ஷணை செய்துகொண்டு, அவரை உட்காரவைத்து, இலை போட்டுப் பரியாற அன்னமிட்டாள். கௌரி மனமுவந்து உபசாரத்துடனிட்ட போஜனத்தைப் புசித்ததும் அவ்விருத்தாப்பியர் விருத்தாப்பியம் நீங்கி மன்மத

னைப்பேரழகு வாய்ந்த வாலிப பருவத்தை யடைந்து கௌரிக்கு எதிரில் நின்றனர். அந்த திவ்விய தேஜஸோடு கூடிய வாலிபரைக் கண்டதும் கௌரி மனம் நடுங்கி வாய்பேசாமல் இதென்ன விபரீதம், இது மாயமாயல்லவோ யிருக்கிறது என்று பயந்து, பார்த்தோர் நகைப்பாரே என்று ஒரு மூலையிற்போய் ஒதுங்கி நின்றாள். அச்சமயத்தில் விவாகத்திற்குச் சென்றிருந்த அவர் வீட்டாரனைவரும் வந்து விட்டார்கள். வந்த அவ்வீட்டார் தன்னைக் காண்பதற்குள்ளாக வாலிப வடிவங்கொண்டிருந்த அவ்விருத்தப்பியர் திடீரென்று இளங்குழந்தையாகமாறி அங்கிருந்த ஒரு வஸ்திரத்தில் பால் மணக்குந் திருவாயில் கால்விரலை வைத்துச் சூப்பிக் கொண்டும் அழுதுகொண்டும் கிடந்தார். அழுதுகொண்டிருக்கும் இளங்குழந்தையைக் கண்ட கௌரியின் மாமி நம் வீட்டில் குழந்தை வரக்காரணமென்னவென்று அதிசயித்து கௌரியையழைத்து இக்குழந்தை யாருடையது, இது என் இங்கு வந்தது? என்று கேட்டாள். கேட்டவுடன் கௌரி பயந்து காரணஞ் சொல்லவகையின்றி தேவதத்தனென்னும் ஓர் சிவபக்தன் மனைவி சற்று நேரத்துக்குமுந்தி இவ்விடம் வந்தாள். வந்து இக்குழந்தையைச் சற்று பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு வெளியே போனாள் என்றாள். சிவபக்தன் குழந்தையென்ற வார்த்தையைக்கேட்ட மாமி அடங்காக் கோபங்கொண்டு, கௌரியை யழைத்து நீ கொஞ்சமும் அஞ்சாமல் சிவபக்தன் குழந்தையின் பேரில் அன்புவைத்தவளாகையால், இனி இவ்வீட்டிலிருக்கத்தகாது; வெளியேபோவென்று கடிந்துத் துரத்தி விட்டாள். கௌரி தன் தலைவிதியை நினைத்துக்கொண்டு என்னசெய்வதென்று ஒன்றும் தோன்றாமல் அத்தருணமே அங்கு கிடந்த குழந்தையை வஸ்திரத்துடனெடுத்துக் கொண்டு தெருவில் வந்தாள். வந்து குழந்தையைப்பார்க்கையில் குழந்தை யிடத்துண்டான சில குறிகளால் பரமசிவன்தான் இத்திருவிளையாடல் செய்திருக்கவேண்டுமென நினைத்து தன் தந்தை உபதேசித்த பராசக்தியின் திருமந்திரத்தை தியானித்தாள். தியானித்ததும் குழந்தைவடிவாயிருந்த ஆண்டவன் ஆகாசத்தில் விருஷபவாகனரூடராகிக் கௌரிக்குக் காட்சி தந்து, கௌரியைப் பார்வதி சொரூபமாகச்செய்து சகல ஜனங்களும் கண்டு அரஹர வென்று துதிக்கத் தன்னோடு விருஷபவாகனத்தில் வைத்துக்கொண்டு அம்மதுன்ரமாநகரில் விளங்கும் திருக்கோயில் சென்று மறைந்தருளினர்.

கஜாம்பிகை.

---

# பெண்களும், பேயென்னும் பெரும் வியாதியும்.

(213-ம் பக்கத் தொடர்ச்சி.)

பெண்கள் பூசாரிகளோடு வாதிக்கின்றனரே. இது பேயின் குணமா? அப்பெண்ணின் இயற்கை குணமா என்பாராயின், அதற்குக் காரணம் அச்சமயம் அவர்களிருக்கும் கலக்கத் தோற்றமேயன்றி வேறொன்றுமன்று; சில பெண்கள் வேண்டுமென்று வாதிப்பினும் வாதிப்பர். அன்றிப் பித்தத்தை யுண்டுபண்ணும் சில புகைகளைப்போட்டு பல தந்திரங்களைச் செய்து அவர்கள் புத்தியை பேதிக்கச் செய்கின்றனர். பெண்கள் பூசாரிகளுக்கிசைந்து வராதபக்ஷத்தில் தீர்த்தத்தை அபிமந்திரித்துக்



கொடுப்போமெனச் சொல்லித் தண்ணீரிற் கஞ்சா இலை முதலியவைகளைக் கலந்து குடிக்கக்கொடுப்பர். இம்மயக்கத்தில் எப்பேர்ப்பட்டபெண்ணும் மயங்கிவிடுவாள். பூசாரியின் மிரட்டுக்கஞ்சாதவளாயின் அவள் பேரிற் பூனைக்காஞ்சி யிலையைப் பொடிபண்ணித் தூவி பிரமிக்கச் செய்வர். அதற்கு மசையாதவளாயின், அவளை உப்பில்லாத பத்தியத்தில் வைப்பர். சோறில்லாச் சோர்வால் சோர்ந்து போவாளாயின் பேயின் பெருமையைப் பாருங்கள், "அவளை நாளுக்குநாள் ஒருக்கிவிட்டதே" எனவுரைப்பர். என்னே பூசாரிகளின் பெருமை! தனக்குவேண்டிய விஷயங்களுக்குத் தனியாக வுபதேசிக்கவும் ஆரம்பிப்பர். இன்றைக்குப் போகிறேனென்று சொல்லெனச் சொல்லி வைப்பர். போதித்தபடியே போய்விடுகிறேனென்று சொன்னபோது அதற்கு நிதர்சனமென்ன கூறுமெனக் கேட்பர். ஊருக்கப்பாலுள்ள விடத்தில் இன்ன மரத்தின் கிளையொன்றை முறித்துக் கீழே தள்ளிவிட்டுப் போகிறேன்; அதுவே நான் போவதற்கறிகுறியென அப்பேயும் சொன்னபடி சொல்லும். இதற்கென வேற்பட்டிருக்கும் பேயோட்டும் பெரும்புரட்டர்கள் ஏற்கெனவே யப்படியே யாங்குச் செய்திருப்பரென்பதை யெடுத்தெழுத வேண்டியதில்லை. பார்த்தவர்க்கு மிது உண்மையென்றே தோன்றும். இநாட்டுச் சகோதரிகளின் கஷ்ட நிஷ்டூரங்கள் தற்கால நாகரீகத்திற் கேற்றபடி ஒருவாறு குறைந்து வருகிறதெனினும், முற்றிலும் குறைந்தபாடில்லை. மாசற்ற ஆடவரனைவரும் இவ்வப்போது தமது சகோதரிகளின் கஷ்டத்தை நிவர்த்திக்கக் கங்கணங்கட்டவேண்டும். பேதைகளைப் பேய் பிடித்துள்ளதென்று வீணே அதட்டி மிரட்டி அவள் வீட்டிற்செய்யும் வேலைகளுக்கெல்லாம் வேண்டுமென்று குற்றமேற்படுத்தி அது அவள் செய்கையன்று, அவளைப் பிடித்த பேயின் செய்கையெனப்பேசிப் பூசாரிகளை யழைத்துப் பூசைபோடுகின்றார்கள். அவர்கள் பெண்களிடத்துப் பேயில்லையெனில் தம்பிழைப்பிற்கே பெருமோசம் வந்திடுமென அறிந்தவராதலின், பெண்களின் சூதகவாயுவையும் பெரிய பேயாக்கி விடுகின்றனர். அவர்கள் தம்தேகமெங்கும் விபூதியணிந்து, குங்குமப் பொட்டு திலகப் பொட்டு முதலிய பலவர்ணப் பொட்டுகளை வதனத்திலணிந்து கையிற் பிரம்பேந்தி பாதக்குறடுகள் போட்டு தாடியும் மீசையும் மிகுதியாக வைத்து பார்ப்பதற்கே பயமாகும் பெரிய பகல்வேஷம் போட்டு உட்கார்ந்து, உடுக்கையடித்து ஆ, ஊ, என்றாரவாரஞ்செய்து முதலே பிரமை கொண்டுள்ள பெண்களைப் பேயென்றழைத்துப் பின்னும் பயந்து நடுங்கும்படிச் செய்கின்றனர். பெண்களுக்குப் பேயென்னும் சிந்தையே பெரிதாயிருப்பின் தேகம் மெலிவுறும்; பித்தம் மேலிடின் கனவுங்காண்பர்; அலறி உளறி யெழுந்திருப்பர்; அழுது மங்கலாய்ப்பர். பெண்களுக்குச் சூதக சம்பந்தமான வியாதி நேரிடினும் சித்தப் பிரமை கொள்ளல், நித்திரையில் வாய் பிதற்றல், அலறி யெழுதல், தூக்கம் சோம்பல் கொட்டாவி முதலியவை உண்டாதல் இயல்புதானே? இது பேயல்லவென்றும் வியாதியென்றும் இதற்குத் தானே அவுஷதம தம்வச முளதென்றும் ஆயுள்வேதிய ரொருவர் "ஆந்திர பிரகாசிகாவில்" அறிக்கை செய்துள்ளார். பேயென பிரமிக்கும் இவ்வியாதியை ஆங்கிலேயர் "ஹிஸ்டீரியா" என்பர்! இவ்வியாதியுள்ளவர் விவேகமற்றவராயின் அவர்களால் தலைசுற்றியாடல் பறவைத் தூக்கல் முதலிய கோரகிருத்தியங்களைச் செய்வித்தலும் எளிதேயாகும். தந்திரங்களுக்குட்படாதவர் யாவர்? கற்றறியாப் பெண்களை மோசஞ்செய்து பிழைத்தலு மொருபிழைப்பா? இதுவா தேசாபிமானம்? கற்ற வித்தைகளைக் காட்டலே தகுதியாகும். பெண்கள் பேயாடுதற்கெல்லாம் பிரமையென்பதே பிரதானகாரணமாக வெனக்குத்

தோன்றுகின்றது. இப்பிரமை இந்நாட்டுக்கிழப்பெண்களாற் பின்னுமதிகரிக்கப்படுகின்றது. புதிதாயெவனுகினு மொருவன் தன்மரணமாயின், மறுநாளே அவன் அலகை யுருப்பெற்று அங்காங்கலைந்து கொண்டிருக்கின்றானென வருவித்துப் பெரும் அச்சமுண்டாக்கி விடுகின்றனர். கல்வி வாசனை சிறிதுமில்லாத சிறுமிகள் இவ்வார்த்தைகளை மெய்யென நம்பி, அது முதற் பேயின் பயமே மனதில் நிலைகொண்டு நாடோறும் பயம் விருத்தியாகி ஒவ்வொரு வஸ்து பேயின் விகாரரூபமாய்த் தோன்றி, இருட்டாயிருந்தால் கேட்பது இப்பயம் மென்னும் பெரிதாய் வளர்ந்துவரும். இங்ஙனம் பயந்த பெண்கள் இரவில் வெளிவரார், இரண்டொருவர் துணையின்றி இருந்தவிடம் விட்டசையார். இத்தன்மையோர்க் கிரவிற் காணும் சட்டிபெட்டி முதலிய யாவுமே பேயாகி, பின்னர் பிராணனுக்கே ஆபத்தாய் முடியும். பெண்களுக்குள் இத்தகைய பயமுளதாவென்று சந்தேகிப்பதற்கில்லை. கயிற்றைப் பார்த்துப் பாம்பென்றும், கட்டையைப் பார்த்து மனுஷனென்றும் சந்தேகிப்பதெவர்க்கு மியல்புதானே. இருட்டுகளை தரிசித்தவர்கள் எவ்வளவு தீரராயினும் அப்போது வாயில் வார்த்தை வராது உளறுதல் பயமேயன்றி வேறென்ன? இரவிற் கயிற்றை மிதித்து அது பாம்பென பயந்து கடித்ததாயுக் கருதிப் பிராணனை விட்டாருமுளர். இங்ஙனம் பயப்படு மியல்பினர் இறந்தவர் தம்மெதிரில் வந்து நிற்பதாயும், பேசினதாயும் பாவிப்பர். பயத்தால் ஜுரமுண்டாகி உடம்பு தெரியாமல் பற்பல விகாரங்கள் செய்து வெகுவாய்க் கஷ்டப்படுவர். இத்தகையோர் சிகிச்சையும் அன்னபானாதிகளுமின்றி நாளாவட்டத்தில் தேகம் மெலிவுற்று, இறுதியில் எம்மருந்தும் பிடிக்காது மரணமடைவர். பெண்கள் பயம் நீங்கும்படி யந்திர தந்திரங்கள் ஏற்ற உபயோகமெனச் சொல்லினும் மனப்பேய் ஒழிதற்குத் தக்க கல்வி போதிப்பின், அக்கல்வியால் இப்பேயின் பயம் பஞ்செனப் பறக்கும்.

அலர்மேல்மங்கை யம்மை.

## பொதினா.

பூமியின்மீதுண்டாகும் விருக்ஷலதைகளிலும், செடி கொடி வகைகளிலும் பொதினாச் செடியும் செடி வர்க்கத்தில் சேர்ந்ததாயிருக்கின்றது. இப்பொதினாச் செடியைப் புதினா வென்றும் பல்லோர் பகர்வாராகின்றனர். பல செடி கொடிகளின் உற்பத்தியைக் காட்டிலும் இப்பொதினா உற்பத்தியாகும் வகை மிக்க ஆச்சரியகரமென்பதும் தத்துவசாஸ்திரிமார்கள் பலரும் தம்மிருதயத்தில் அமைத்து இன்புறவேண்டியதாமாம். இப்பொதினாச் செடியின் இலை மிக்க உபயோகமுள்ளதெனப் பல்லோராலுங் கருதப்படுகின்றது. ஐரோப்பியர் மகமதியர் முதலாயினோர் இவ்விலையின் உபயோகத்தினைப் பெரிதும் போற்றிக்கொண்டாடி, இவ்விலையைத் தினந்தோறும் தம்முணவுகளிற் றக்கபடி பக்குவஞ் செய்து கலந்துபயோகிப்பதனால் ஆரோக்கிய முடையவராயும் மிக்கசக்தியுடையவராயுமிருப்பதாகவும் தெரியவருகிறது. இப்போது இதன் பயனறிந்து பல்லவகையினரும் பரிசோதித்தறிந்த இந்நாட்டவரில் பல்லோரும், இதனைத் தம்முணவுடன் உட்கொள்ளுவாராகின்றனர். இச்செடிகள் எக்காலத்திலும் எங்கும் தண்ணீர் மிகுதியாயுள்ள இடத்திலும், தக்க பாதுகாப்பு முதலிய பொருந்தியவிடத்தும் பெரிதும் செழித்துத் தளிர்த்து வருவதாகத் தெரிகிறது.



செடியின் உற்பத்தி:—இச்செடி உற்பத்தியாகும் விதத்தைப்பற்றிப் பல்லோர் பலவாறு தெரிவித்துக்கொள்ளுவாராகின்றனர். சில்லோர் இச்செடிகளுக்கு விதைகள் இல்லையென வாதிப்பாராகின்றனர். சில்லோர் இச்செடிகளுக்கு விதைகள் உள்ளனவென்றும், அவைகள் செடிகளுற்பத்தியாக்க விதைக்கப்படுவன வில்லையெனவும் அப்படி அவ்விதைகள் பூமியின்மீது விதைக்கப்படினும், செடிகள் அவ்விதைகளினின்றும் முளைத்துக் கிளம்புவதில்லையெனவும் கூறுவாராகின்றனர். சிலர் அவ்விதைகளினின்றும் செடிகள் கிளம்புகின்றனவென்றும், எப்போது செடி என்னும் பெயர்கொண்டு பூமியில் உற்பத்தியாயதோ அப்பொழுதே அச்செடிக்குப் புஷ்பமும் விதைகளும் உண்டென்று சாதிப்பினும், அவர்கள் அவ்விதைகளைத் தாம் பூமியிலிட்டுப்பார்த்த அநுபோகத்தினைப்பற்றிக் கூறாதொழிகின்றனர். ஆதல் ஒரு சாரார் செடி, விதை விதைத்துப் பூமியினின்று கிளம்பிச் செடியாகும் விதத்தினைத் தவிர்த்து வேறு விதமாயுரைப்பாராகின்றனர்.

1. சாதாநார்க்கயிற்றிலேனும், உயர்ந்த வைக்கோற் கயிற்றிலேனும் வெல்லத்தைக் கரைத்து நன்றாகக் கயிறு முழுவதும் தடவி, சுவரிலோ மற்றெவ்விடத்திலோ வஸ்திரமுலர்த்துவதற்கு கட்டுங்கொடிபோன்று கட்டிவைத்தால், வெல்லத்தின் இனிப்புக்காக பல ஈக்கள் அக்கயிற்றிலுள்ள வெல்லப்பாகை உறிஞ்சுமாறு அக்கொடியில் மொய்ப்பனவாகின்றன. அவ்வாறு மொய்த்த சில நாட்கள் சென்றபின் நல்ல பழைய எரு அல்லது உரங்கலந்து, பக்குவப்படுத்தப்பட்ட புழுதியுள்ள நிலத்தில் ஈக்கள் மொய்த்துள்ள அத்தகைய கயிற்றினைக் கொண்டுவந்து பரப்பி மேலே மண்ணினால் மூடிச் சின்னாட்கள் வரையில் தண்ணீர் தெளித்துவரப் பொதினாச் செடியின் முளைகள் மனமகிழுமாறு கிளம்புவனவாகின்றன.

2. பதரில்லாமல் வைக்கோலை ஆராய்ந்தெடுத்து, அதில் ஒரு பன்னை (ஒரு சிறு வைக்கோற்கற்றை) எடுத்து வட்டம்போற் செய்துகொண்டு அக்கற்றையில் அரிசியிலிருந்து வடித்த கஞ்சியைக் காலைதொட்டு இரண்டு நாழிகைக்கொருதரம் அப்பன்னை வைக்கோலின் மேல் நாள் முழுதுமாவது அல்லது அந்நாளில் நான்கு அல்லது ஐந்து தடவைகளாவது தெளித்துக்கொண்டிருக்க, இயல்பிலேயே மொய்க்குங் குணமுள்ள ஈக்கள் அப்பன்னை வைக்கோலின் மீது மொய்த்த பின்னர் அப்பன்னை வைக்கோலில் ஈக்களால் இடப்பட்ட எச்சத்துடன் அவ்வைக்கோற் கற்றையை இரண்டுமூன்று நாட்கள் முன்னரே அதற்கென்றே தோண்டப்பட்டுள்ள பழைய எருக்கலந்த ஒரு அடி ஆழமுள்ள பள்ளத்தில் அன்று சாயந்திரம் வைத்து, மூடிமேலே இரண்டு மூன்று தரம் ஜலம் தெளிக்க இருபத்தொரு நாட்களில் பொதினாச் செடியின் முளைகள் கிளம்புவனவாகச் சொல்லப்படுகின்றன. அத்தகைய செடிகள் ஒன்றரை அடி உயரம் வளர்வனவாகவுஞ் சொல்லப்படுகின்றன.

3. புதுவையிலுள்ள செயிண்டுலேன் என்னும் மறுபெயர் வாய்ந்த இராஜா தோட்டத்தின் மேலதிகாரியினிடத்து நாம் சம்பாஷித்ததில் இப்பொதினாச் செடியின் மூலோற்பத்தி ஈ என்னும் சிறு பறவையின் எச்சத்தினாலுண்டாவதென்றும் வெல்லக்கட்டி வந்ததோர் சாக்கைச் சுமார் ஆறுமாத காலவளவு, அதன்மேல் சிறிதேனுங் கவனம் வைக்காது ஒரு மூலையிற் போட்டுவைக்க ஆறுவதுமாத விறுதியில் அச்சாக்கு அம்மூலையிற்போட்டு மண் சுவரூபமான தூள்களாக மாறுவதாகின்றதாகவும், பின்னர் தக்க எருவுடன் கலந்த ஒரு சதுரமண்ணில் அத்தூள்களைத் தூவி மூடி மண்ணைக்கிளறிக் கலந்து மூன்றுநாட்கள்

வரை தண்ணீர் தெளித்துவர மூன்றாவது நாட் காலையில் பொதினாச்செடியின் முளைகள் அங்குலச் சதுரப்பரப்பில் தோன்றுவதாகின்றனவெனவும் இது தாம் அநுபவத்தில் கண்டறிந்த தென்றும் சந்தேகமறக்கூறுகின்றார்.

இஃதிப்படியிருக்கச் சிலர் இப்பொதினாச்செடியின் மூலகாரணம் வௌவால் புழுக்கையென்று கூறுவாராகின்றனர். இது விஷயம் எதுவரையில் உண்மையோ சொல்லுதலரிது.

இப்பொதினாச்செடி சில அங்குலவளவு பூமியின் மட்டத்திலிருந்து உயர்ந்த பிறகு இன்னும் செடிகள் உற்பத்தி செய்யவேண்டி அச்செடிகளைக் கிள்ளிக்கிள்ளி நடுவதுண்டு. அவைகள் நொச்சி, இளைப் பொன்னாங்காணி முதலிய செடிகள் போன்று வேரூன்றித் தளிர்க்கின்றன. இச்செடிகள் பூத்துக் காய்ப்பதுண்டு. விதைகளை யெடுத்து விதைத்தலினால் இவ்விதமாயும் செடிகள் முளைப்பதாகக் கூறுகின்றனர். இப்பொதினாச் செடியின் மற்றுமுள்ள அதிசயமான விதமாய் உற்பத்தியாகும் விதங்களை நன்குணர்ந்த நம் பத்திரிகை நேயர்கள் பலரும் அச்செடியின் மீது தாம் வைத்திருக்கும் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பாரால் யாம் அவர் பால் வந்தனை முள்ளவராவோம்.

மணம் :—இப்பொதினாவிலை முகர்தற்கு இனிமையான வாசனையையே வீசுவதாகின்றது. சிலர் அவ்வாசனையை விரும்புவாராகின்றனர். சிலர் அவ்வாசனையை வெறுப்பாராகின்றனர்.

உபயோகம் :—இப்பொதினா இலையைப் பெரிதும் போற்றிக் கொண்டாடுவோர் மகமதிய வமிசத்தினரே. தினந்தோறும் அவர்கள் இப்பொதினா இலையைத் தம்முணவுடன் பக்குவஞ்செய்து உட்கொள்ளுவாராகின்றனர். மகம்மதியர் செக்கிலிச்சோறு என்னும் பெருந்தவுண்டியைப் பாகஞ் செய்யுங்கால் இப்பொதினா இலையை அதிற்பெரிதும் உபயோகிப்பாராகின்றனர். ஐரோப்பியர், மகமதியருக்கு இரண்டாவதாக இப்பொதினா இலையைத் தம்முணவுடன் கலந்துட் கொள்ளுவாராகின்றனர். மூன்றாவதாக இந்துக்களும் மற்றையோரும் இவ்விலையைப் பல்மாதிரியாகப் பக்குவஞ்செய்து உபயோகிப்பாராகின்றனர்.

இப்பொதினா இலையைச் சாப்பிடுவதனால் மனிதர் அடையும் நன்மை அநந்தம். இப்பொதினா இலை தேகாரோக்கியத்திற்கு இன்றியமையாததாயிருக்கின்றது. வைத்திய முறையில் இத்தகைய இலை வெகுவாகப் போற்றப்படுகின்றது. வாயரோகம், காய்ச்சல், பித்த அரோசிகம், முதலியவைகளுக்குப் பொதினா இலை சிறந்ததோர் ஔஷதமாகப் பிரயோகிக்கப்படுகின்றது. பொதினா இலையை உபயோகிப்பதனால் இரத்த விருத்தியும் பித்த சாந்தியும் ஜீரண சக்தியும், புத்தி விலாசமும் இவை போல்வன பிறவும் உண்டாவதாகப் பெரிதும் மதிக்கப்படுகின்றது. ஆகவே ஐரோப்பியர் இவ்விலையை மிகுதியும் போற்றி உபயோகப்படுத்துவாராகின்றனர். கலபத்தில் ஜீரணமாகாத தன்மை பொருந்திய மாமிசாதிகளை மேற்கூறியதை உபயோகப்படுத்துகையில் இவ்விலையின் உபயோகம் அவர்களுக்குப் பெரிதும் வேண்டுவதாகின்றது.

இந்துக்கள் இவ்விலையை வெயில் வதக்கிச் சிறிது புளி, இஞ்சி, மிளகாய், உப்பு, கருவேப்பிலை, முதலியன சேர்த்து அரைத்துத் துகைத்துத் துவையலாக்கிப் பித்த சாந்தத்திற்காகவும் ஜீரணசக்தி யுண்டாவதற்காகவும் சிற்சிலவேளைகளில் உணவுடன் கலந்துட் கொள்ளுவாராகின்றனர்.



ஞர்கள் இப்பொதினா இலையை இடித்துப் பிழிந்து வைத்திய முறைக்கேற்ற
துக்கடைச் சரக்குகளை உடன் சேர்த்து ஒருவிதமான திரதம் (நெய்) காய்ச்சு
இந்நெய் வியாதியஸ்தர்களுக்கு மிகுதியும் உபயோகப்படுவதாகின்றது. இத
ர்கள் தேக ரோக்கியமுடையவராயும் மனச்சந்துஷ்டி யுடையவராயும் திடகாத்
ம் றார்கள். இத்தகைய திரதத்தை வைத்தியர் தேகத்தின் உஷ்ணத்திற்கும்
கிற்கும் கொடுத்து வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவாராகின்றனர்.

ரோப்பியரும் இத்தகைய அருமையான இலையின் மகத்துவங்களை நன்குணர்ந்த
இவ்விலையினின்றும் சாறு எடுத்து பெப்பர் மெண்டு (Peppermint) என்னும்
ாய் வகைகளாகச் செய்வித்து உலகினர்க்குப் பயன்படச் செய்திருப்பதை நாம்
ங் காண்கிறோம். ஆனால் இவ்விலையைப் பிழிந்து சாறுக்கும் ஐரோப்பியர் பெப்பர்
டு மிக்ஸ்சர் (Pepper mint Mixture) என்று ஜலரூபமாகப் பலவிதமான வைத்
சரக்குகளை உடன் சேர்த்துச் செய்து, பித்த சாந்திக்கும் இன்னும் பலவித வியாதி
கும் உபயோகிக்க வைத்தியசாலையில் (Hospital) ஏற்பாடு செய்திருக்கின்றனர்.
கைய அரிய செடியின் மகத்துவத்தைப் பற்றி பத்திரிகாபிமானிகள் பலரும் தத்தம்
த்தைச் செலுத்தி தமது அபிப்பிராயங்களையும இப்பத்திரிகை வாயிலாய் வெளியிடு
ான்று நம்புகின்றோம்.

வி—று.

# சந்திரமதி.

## ஏழாம் அத்தியாயம்.

(14-வது பக்கத்தொடர்ச்சி.)

இன்னும் இரண்டு தினங்கள் சென்ற பின்பு ஒருநாள் சாயங்காலம் சந்திரமதி
ாழிகளுடன் கூட படிப்பதற்காக வந்து, உபாத்தியாயர் எவருடனோ உள்ளே ரகசிய
ம் பேசுவதாகக் கேள்வியுற்று, அவர் வெளியே வருமளவரையில் கோடைகாலமாதலால்
விர்ந்த காற்றின் நிமித்தம் வாயில் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு கையிலிருந்த
வடியைத்திறந்து பழம்பாடங்களைச் சிந்தனை செய்து கொண்டிருந்தாள்.

விசிறியைக் கையில் தாங்கி தலைமேல் அழகிய பாத்திரங்களை வைத்துக்கொண்டு
ங்கீர்த்தனங்களைப்பாடிக்கொண்டு அப்பொழுது அங்கே சில சாத்தானிகள் வந்து சந்
திரமதியை ஏதாவது கொடுக்கும்படி மிகத்தாழ்மையாய்க்கெஞ்சி யாசிக்கத் தொடங்கி
னார்கள். அதற்குள் வித்தியாசாகரர் உள்ளே யிருந்து வந்து சந்திரமதி என்ன செய்
வாளோ கண்டுபிடிக்க வேண்டுமென்று மறைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்.
அவள் சிறிதுநேரம் ஆலோசித்து, பழம் வாங்குவதற்காக வீட்டிலிருந்து கொண்டு வந்
திருந்த துட்டைத் தன் சிற்றாடையின் தலையிலிருந்து அவிழ்த்து, அவர்களுள் வாலிப
வயதுள்ளவர் எவருக்கும் கொடாமல், ஒரு கிழவன் கையில் கொடுத்து அனுப்பிவிட்டாள்,

அப்பொழுது வித்தியாசாகரர் வெளியே வந்து சந்திரமதியைப் பார்த்து அதோ போகிறவர்களுடனே என்ன பேசிக்கொண்டிருந்தாய் என்று கேட்டார்.

சந்திர: அவர்கள் இங்கே வந்து தங்களுக்கு ஏதாவது கொடுக்கும்படி என்னை மிகவும் தொந்திரவு செய்தார்கள். எல்லோரும் பாடுபடவேண்டு மென்றும், தம் தம் ஜீவனத்துக்காகப் பாடுபடும் பொருட்டாகவே கடவுள் எல்லோருக்கும் கைகால் முதலிய அவயவங்களை அளித்திருக்கிறாரென்றும் முந்திய நாள் தாங்கள் சொன்னீர்களல்லவா. ஆகையால் ஒருவருக்கொருவர் கொடுக்கவேண்டிய அவசரம் இல்லை யென்று எனக்குத் தோன்றியது. ஆயினும் அவர்களுக்குள்ளிருந்த ஒரு கிழவனைப் பார்த்தபொழுது அவனைச் சும்மா அனுப்பிவிட மனம் வராமல் சிற்றுண்டிக்காக வைத்துக் கொண்டிருந்த காசை அவனுக்குக் கொடுத்தேன்.

குரு: நீ தெரிந்து செய்யாமற் போயினும், அக்கிழவனுக்கே தானம் செய்ததினால் நல்ல காரியம் செய்தாய். பிறரையே நம்பிக் கொண்டிராமல் தன் ஜீவனத்திற்காகத் தானே பாடுபடவேண்டியது பிரதிமனிதனுக்கும் விதியாயினும், மஹாராஜா முதல் தரித்திரன் வரையில் அந்யோன்ய சகாயம் அவசியம் வேண்டியிருக்கும். நீங்கள் தினந்தோறும் புசிக்கும் பஞ்சபக்ஷ்ய பரமான்னங்களுக்கு வேண்டிய பதார்த்தங்களெப்படியோ, ஏழைகுடிக்கும் கஞ்சிக்குவேண்டிய அரிசியும் அப்படியே பலர் பாடுபடாமல் கிடைத்தலரிது. ஒரே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டு ரக்ஷிக்கப்பட்டு வருவதால், ஜனங்களெல்லோரும் ஒரே குடும்பத்தில் உள்ளவர்போல் நடந்து கொள்ளவேண்டும். ஒரு குடும்பத்தில் சம்பாதிக்கச் சக்தியுள்ள ஒருவன் இருக்கும் பக்ஷத்தில் அவனைப்போஷித்தல் சக்தியுள்ளவனுக்கெப்படி கடமையோ, அப்படியே கடவுளின் குடும்பமாகிய இந்தப் பிரபஞ்சத்திலும் சக்தியுள்ளவர்கள் சக்தியற்றவர்களைக் காப்பாற்றுதல் முக்கியமான கடமையாகும். ஆகையால் அங்கக் கேட்டினாலாவது, மூப்பினாலாவது, நோயினாலாவது பாடுபடச் சக்தியற்றவராயிருக்கும் ஏழைகள் அனைவருக்கும் சம்மானமான சகாயம் தப்பாமல் செய்து வரவேண்டும். சக்தியிருந்து பாடுபடாமல் சோம்பேறிகளாய் பிச்சையெடுப்பதை ஜீவனோபாயமாய் வைத்துக்கொண்டு திரியும் தடியர்களுக்கு மாத்திரம் நாம் ஒன்றும் கொடுக்கக் கூடாது. தேசத்திற்குப் பஞ்சம் வருங்காலத்திலும், அந்நிய தேசத்திலிருந்து அலைந்து வந்த பொழுதும், தெய்வச் செயலால் ஏதேனும் ஆபத்து வந்த காலத்திலும், திடசரீரமுள்ளவருக்குக் கூட அளிக்கவேண்டும். பாத்திரமறிந்து இவ்வாறு செய்யப்படும் தானங்களுக்குத்தான் பலனுண்டு. கூடுமான வரையிலும் தானம் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் இரகசியமாய்ச் செய்யவேண்டும். பூவானது மறைவிலிருந்தாலும் அதன் பரிமளம் அனைவருக்கும் தெரிவது போல், யோக்கியன் எங்கிருந்தாலும், அவனது நற்குணங்கள் வெளிப்படாமற் போகா. டம்பார்த்தமாய் முகஸ்துதி செய்பவருக்கும் மோசக்காரர்களுக்கும் செய்யும் தியாகம் வீணே.

சந்திர: நாம் பிறரிடத்தில் நடந்து கொள்ளவேண்டிய தர்மங்களைச் சொல்வதாக முன்னே வாக்களித்திருக்கிறீர்களல்லவா? தயவு செய்து அவற்றையெல்லாம் இப்பொழுது விவரமாய்க் கூறுங்கள்.

குரு:—முன்னே நான் சொன்ன சத்தியம் முதலியவைவும், இப்பொழுது சொன்ன தான விஷயமும் பிறமனிதர் விஷயமான தர்மங்களிலேயே சேரும். அப்படிப்பட்ட



தர்மங்களனைத்தையும் பூர்ணமாய்ச் சொல்லத் தொடங்கினால் வெகுநாளாகும். சாமான்யமாய் ஜனங்கள் விஷயமாய்ச் செய்யவேண்டிய கடமைகள் சிலவற்றை மாத்திரம் இப்பொழுது சுருக்கமாய்ச் சொல்லி, புத்தகங்களின் விஷயத்தில் செலுத்தவேண்டிய கடமைகளை இன்னொருதடவை சொல்லுகிறேன். தான் வெயிலுக்கும் மழைக்கும் பொறுத்துக்கொண்டாவது பிறர்க்கு நிழலும் கனியும் அளித்துவரும் மரங்களைப்போல, எல்லோரும் தாங்கள் சில கஷ்டங்களைப்பட்டாவது பரோபகாரம்செய்வதற்கு முயலவேண்டும்.

சந்திர:—யோக்கியா யோக்கிய விசாரணை செய்யாமல் அனைவருக்கும் உபகாரம் செய்துவர வேண்டுமோ?

## சுதேசமித்திரன், மேமீ 31உ

"சக்ரவர்த்தினி" :—இம்மாதாந்தப் பத்திரிகையின் எப்ரல் மாத இலக்கத்தின் பிரதியொன்று கிடைக்கப்பெற்றோம். அதில் பத்திராதிபரால் 'ஸ்திரீ புருஷர் கடமை' என்னும் விஷயமும், ஸ்ரீ வெங்கடராமய்யரால் 'ஹாம்லெட்' என்னும் விஷயமும், வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியாரால் 'பானுமதி', 'கலாவதி' என்னும் இரண்டு விஷயங்களும், முடிவில் ஸ்ரீமதி கர்மாட்சியம்மையரால் அலக்ஸாண்டிரா மகாராணியார் மீது செய்யப்பட்ட பாடல்களும் காணப்படுகின்றன. பெண் கல்வி வேண்டும் வேண்டுமென்று கூவுமிக்காலத்தில் இதுபோன்ற பத்திரிகைகள் வெளிவருவது எமக்கு அளவற்ற சந்தோஷத்தைத் தருகின்றது. இதைத் தளரவிடாது ஆதரிக்க வேண்டியது பொது ஜனங்களின் கடமையாகும்.

## இந்தியா, ஜூன்மீ 8உ

"சக்ரவர்த்தினி" என்ற மாதாந்தத்தமிழ்ப் பத்திரிகையின் சென்ற மாதப் பிரதி வழக்கம்போலவே இந்த முறையும் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. இது மாதர்களின் அபிவிருத்திக்குரிய பல அம்சங்கள் கொண்டிருக்கின்றது. தமிழ்நாட்டு ஸ்திரீகளால் ஆதரிக்கத்தக்கது.

## மங்கள வாழ்த்து.

செந்தமிழ் வழங்கு நந்தமிழ் நாட்டுச்
சந்திர வதன சுந்தர மாதர்
தேனே பாகோ தெவிட்டா வமுதோ
தானே விதுவதின் மேலோ வெனத்தமிழ்
தோது போதார்க் கில்லை புணர்வோ
டொழுக்க மென்றனவை யோதிய நீதி

வாசக வுண்மை மாசற வறிந்து
வழுவில் ஞான வளமலிந் துய்ய
கணவர்ப் போற்றல் கற்புநெறி நிற்றல்
இனையபல் சுகத்துக் கிசைபவ மென்று
நற்போ தனைசெய் நாடகங் காதை
அற்புதமாகச் சொற்பொருட் சுவைபெறத்
தந்தருள் புரியும் சக்கிர வர்த்தினி
திருந்துநந் தமிழில் சந்தத மிருந்தல்
என்றுநல் லெவரும் நன்றி பாராட்டத்
தன்றிறங் குன்றாத் தகைமை யோடனவில்
காலங் கற்பின் கடந்திடை யுறாது
சால நீடூழி வாழிவா ழியவே.

வரகவி; திரு. அ. சுப்பிரமணிய பாரதியார்.

---

## 1907 ளு மார்ச்சுமீ சஞ்சிகை 191-ம் பக்கத்தில் எஸ். ஞானவடிவுடையம்மாள் எழுதியிருக்கிற விடுகதை வினாவிற்கு விடை.

| | | |
|---|---|---|
| முதலாவது | வினாவிற்கு விடை | சக்ரவர்த்தினி. |
| இரண்டாவது | ,டை | புதையல். |
| மூன்றாவது | டை | ககனம். |
| நான்காவது | டை | ஆதரிசனம். |
| ஐந்தாவது | டை | சந்தனம். |
| ஆறாவது | டை | மோகனம். |
| ஏழாவது | டை | ஆதிரை. |

லக்ஷ்மி அம்மாள்

---

# NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

அமீர்:—இப்பொழுது கண்டகாரிலிருக்கும் அமீர் அரசர் சில தினங்களாக சந்து வாத (கீல்களில் நோவெடுத்தல்) நோயால் வருந்துகின்றதாய்ச் சொல்லப்படுகின்றது. ஆகையால் அமீர் சரீரசுக மடையும்வரை கண்டகாரில் தானே இருப்பாரென்று தெரிய வருகிறது.

* * *

ஒற்றைத்தண்டவாள ரெயில்வே:—இந்தியாவில் ஒற்றைத்தண்டவாள ரெயில்வே போடுவதற்குச் சோதனை பார்ப்பதற்காக ரூபா 90,000 சாங்க்ஷன் செய்யப்பட்டிருப்பதாய் கல்கத்தா எம்பயர் பத்திரிகை கூறுகின்றது. (இரண்டு தண்டவாளங்களில்லாமல் ஒரே தண்டவாளத்தின்மேல் ஓடுவது ஒற்றைத்தண்டவாள ரெயில் (Monorail) வே யென்று சொல்லப்படும்).

OFFICE OF THE ... OF BOOKS
REGISTERED
23 DEC 1907
MADRAS.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
ழெண்மை யுறவே வரு முலகு."

Vol. II. } MADRAS, JUNE 1907. { No. 11.
தொகுதி II } சென்னை, 1907-ளு ஜூன்-மீ. { பகுதி 11.

## ஸ்திரீ புருஷர் கடமை.

(222-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்விதமான பெருங் கேடுகள் நேர்வதற்குக் காரணம் யாது என்று ஆராய்ந்து பார்ப்போமானால், "சில பத்திரிகைகள் கூறுகின்றன" வென்று முன் கூறினபடியே புனர் விவாகத்தினாலும், பெண்கள் தாமாகவே கணவனைத் தெரிந்துகொண்டு மணம் புரிந்துகொள்ளுந் தாவழக்கத்தினாலுமே யென்று ஆரியப் பெரியோர் கூறுகின்றனர். இதுவரை கூறியதனது, இல்லற விஷயத்தில் ஐரோப்பியர் கொண்ட ஆசாரம் அநாசாரமென்பதும், ஆரியர்களாகிய நமது நாட்டார் அந்த அனுஷ்டானத்தை மெச்சி அதைத்தாமும் அனுஷ்டிக்க முயல்வது நியாயமல்லவென்பதும், அது தீமை தருமேயன்றி நன்மைதாராதென்பதும் விளக்கவேயாம். ஆகையால் அது இம்மட்டில் நிற்க. முன்னே சொல்லியபடி நமது விவாக சம்பந்தம் இவ்வுலகத்தோ டொழியாது மறுமை, மோட்ச பரியந்தம் தொடர்ந்துவருவதாதலால் நாயகனும் நாயகியும் ஒருமனதாய்க் களங்கமற்ற உள்ளத்துடனிருந்து இல்லறதருமத்தை நடத்தவேண்டுமென்பது நூல்களின் துணிவு. "மருவிய காதன் மனையாளுந் தானும், இருவராய்ப்பூண்டேய்ப்பி னல்லா—லொருவரால், இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடஞ், செல்லாது தெற்றிற்று நின்று." என்றதனால் மனைவியும் கணவனு மனமொத் திருந்தா லன்றி இல்லறவாழ்க்கை நடைபெறாதென்பது விளக்கப்பட்டது "இல்லறமல்லது நல்லறமன்று" என்று ஔவையாராலும் இல்லறத்துக்கு மேற்பட்ட ஆசிரமமில்லையென்று புகழ்ந்துகூறப்பட்டது. அறத்தாற்றி னில் வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற், போஒய்ப் பெறுவ தெவன், என்று திருவள்ளுவரும் துறவறத்தைவிட இல்லறமே சிறந்ததென்று கூறினர். அன்றியும் "வையத்துள்வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந், தெய்வத்துள் வைக்கப்படும்" இல்லறநெறி தவறாதொழுகுபவர் தேவர்க்குச் சமானமென்று பலனும் உடன் கூறினர். இவற்றால் இல்வாழ்க்கை மிகச் சிறப்புடையதென்றும், மனைவியும் புருஷனும் மனமொத்து நடத்தினாலன்றி அது சிறக்க நடவாதென்றும் விளங்குகின்றதனால் இல்லறம் பூண்ட நாயகியும் நாயகனும் தத்தம் செய்கையால் ஒருவரை யொருவர் பிரியப்படுத்தி மனங்கலந்து வாழவேண்

டும். இல்வாழ்க்கைக்கு முக்கியமாய் தெய்வவழிபாடும் அதிதிபூசையும், சுற்றந்தழுதலும், புத்திரப் பாதுகாப்புமே முக்கிய அம்சங்களாம். இவற்றைச் செய்தற்குப் பொருள் இன்றியமையாத சாதனமாகின்றது. பொருள் இன்றி இல்லறம் நடவாது. அந்தப்பொருளும் சன்மார்க்கத்தால் சம்பாதிக்கப்படவேண்டும். பொருளோ வெய்யிலையும் மழையையும் காற்றையும் சகித்து பிறரால் உண்டாக்கப்படும் விக்கினங்களுக்கு அஞ்சாமல் எதிர்த்து நின்று அவ்விக்கினங்களை மேற்கொண்டு பசி, தாகம், நித்திரைகளாதிய உயிர்க்குணங்களையும் இலட்சியம் செய்யாமல், பிறரால் நேரிடும் அவமானங்களையுங் கருதாமல் முயன்றாலன்றிக் கிட்டுவதரிது. இவ்வளவு தொல்லைகளையுஞ் சகித்துக்கொண்டு பொருள் சம்பாதிப்பது ஸ்திரீகளால் இயலாது. ஏனென்றால் அவர்களுடைய சரீரம் ஆண் சரீரத்தைப்போல முற்றும் பரிபாகப்படாத இயல்புள்ளதாகையால் பலக்குறைவும் மென்மைத் தன்மையு முடையதாகையால் மேலே கூறிய கஷ்டங்களைச் சகிக்குந் திறமையுடையதல்ல. அதனால் அவர்கள சரீரஞ் சீக்கிரந் தளர்ந்து கெடும். அதிக குளிர்ச்சியான ஐரோப்பா கண்டத்து ஸ்திரீகளுக்கு நமது நாட்டுப் பெண்களைவிடப் பலமதிகம். உஷ்ணதேசத்துப் பெண்களுக்குப் பலம் மிகக்குறைவு. அந்த நாட்டுப் பெண்களோடு நமது பெண்களையும் சமனாக வைத்துப்பார்ப்பது கூடாது. ஆதலால் நமது தேசத்துப் பெண்கள் வெளியில் அலைந்து பொருள் சம்பாதிக்கச் சக்தி அற்றவர்கள். அவர்கள் வீட்டுக்குள்ளிருந்து கிருக கிருத்தியத்தை நடத்த மாத்திரமே யுரியவர்கள். வலுத்த சரீரமுடைய ஆடவனே வெளிவேலை செய்ய அருகனாவான். அவன் வெளியிற்போய் வேலை செய்யும் பொழுது மனைவி வீட்டிலிருந்து கிருககிருத்தியங்களைச் சரிவரப் பார்த்துவர வேண்டியவளாகிறாள். வீட்டுவேலை லேசானதல்ல. பிரபுவீடா யிருந்தாலும், ஏழைவீடா யிருந்தாலும் மனைவிக்கு வேலையிருக்கும். அயோக்கியமான பெண்களுக்கே வீட்டில் வேலையிராது. நற்குணநிறைந்த பெண்களுக்கு வீட்டில் நிரம்பவேலையிருக்கும். ஆதலால் அவள் வீட்டை பரிபாலிக்கும் விஷயத்தில் கருத்தாயிருந்து தங்கள் குடும்பத்தின் மேன்மையையும் க்ஷேமத்தையுங் கருதி நடக்கவேண்டும். "பார்யாமூலமிதங் க்ருஹம்" என்றபடி மனைவியே வீட்டுக்கு மூலமாகின்றாள். சண்டையிடும் குணமுள்ளவளும், தன்வீட்டுச் சொத்தைத்திருடுகிறவளும், பிறருக்கு அநுகூலமாயிருப்பவளும், எப்போதும் பரிகாசஞ் செய்கிறவளும், சதா அண்டை அசல் வீட்டுக்குப் போகிறவளுமாகிய பெண் குடும்ப வாழ்க்கைக்கு ஏலாதவளென்று நூல்கள் கூறுகின்றமையால் பெண்கள் தம்மால் கூடியவரையில் இத்தத் துர்க்குணங்களை யொழித்து நடக்கமுயன்று சற்குணவதிகளா யிருக்க வேண்டும். இவ்விதமான துர்க்குணமுள்ள பெண்களின் கூட்டுறவைக் கூடப் பற்றற ஒழித்துவிடவேண்டும். பழக்கம் பொல்லாது; பழக்கத்தாலேயே மனிதர்கள் குணவேறுபாடுகளை யடைகிறார்கள். ஆதலால் மேற்கூறியவைகளுக்கு மாறான நற்குணமணிகளான பெண்களோடன்றி மற்றவரிடம் சிநேகம் வைக்கலாகாது. வீட்டுவேலையில் பணிப்பெண்போலவும், ஆலோசனையில் மந்திரிபோலவும், பொறுமையில் பூமிதேவிபோலவும், ஸ்நேகத்தில் தாய்போலவுமிருந்து புருஷனுக்கு உபசரிப்பவளே குடும்பவேலைக்குப்பாத்திரமாவாளென்று நூல்கள் கூறுகின்றன. அதிகாலையிலெழுந்திருந்து, வீட்டுவாசல்களைச் சுத்திசெய்தலும், பாத்திரங்களைச் சுத்தி செய்தலும், வஸ்திரங்களை அழுக்கறத் தோய்த்தலும், போஜனத்துக்குவேண்டிய பதார்த்தங்களைச் சேகரித்தலும், அவைகளைச் சீராக்கிச் சமைத்தலும் ஆகிய காரியங்களில் ஏமாறாமல் இருந்து நாடோறும் செய்து முடிக்கவேண்டும். "சிறுகாலை அட்டில் புகாதாள் பெரும்பிணி" யென்று பெரியோர்



சொல்லுவதால் சரியான காலத்தில் சமையல் செய்துவைத்து, நாயகன் வருகைக்கு எதிர்பார்த்திருந்து, அவன் வருகிறபொழுது முகமலர்ச்சியோடு அவன் வருகையை ஏற்றுக் கைகால் கழுவ நீர்தந்துச் சற்றுக் களைப்பாறும்படி இனிய வசனங்களைப்பேசி ஸ்நானஞ் செய்வித்துப் போஜனமளித்துத் தானும் புஜித்து, நாயகன் வீட்டிலிருக்கும் வரையில் அவனை விட்டகலாமலிருந்து அவனுடைய மனங் களிக்குமாறு நடக்கவேண்டும். வெளியிற்போய்வந்த வருத்தத்தினாலோ, அவ்விடத்தில் நேரிட்ட தொல்லைகளினாலோ அவன்மனங்கலங்கித் தாறுமாறாகக் கோபித்துக்கொண்டாலும் மிகப்பொறுமையோடிருந்து, அவனை யுபசரித்து அவன் கோபமடங்கிக் களித்திருக்கும்போது நடந்த உண்மைகளைத் தெரிவித்துச்சாந்தப்படுத்த வேண்டுமே யல்லாமல் அவனோடு எதிர்த்துப் பேசிக் கலகம் விளைத்துச் சண்டையிட்டு ஊரார்சிரிக்கும்படி நடக்கக்கூடாது. பெற்றதாயானவள் தன் புத்திரன் எவ்விதமான தப்பிதங்களைச் செய்தாலும் மனம்பொறுத்து அவனை நேசிப்பதுபோலத் தன் கணவன் தனக்குச் செய்த குற்றங்களை மறந்து அவனிடத்தில் நேசம் பாராட்ட வேண்டும். கணவன் யாரிடத்தில் அதிக நேசமாயிருக்கிறானோ அவர்களிடத்தில் தானும் சிநேகமா யிருக்கவேண்டும். அவனுக்கு விரோதமானவர்கள் தன்னுடைய தாய்தந்தையரானாலும் அவர்களோடு கலந்து உறவாடக்கூடாது. கணவன் அழைத்தபோது, தனக்கு எவ்வளவு வேலைத் தொந்தரவிருந்தாலும் உடனேவந்து அவன் சொல்வதைக்கேட்டு அதற்குத் தகுந்த பதில் சொல்லிவிட்டு பிறகுமறுவேலைகளைச் செய்யவேண்டும். கணவன் விருந்தாளிகளை அழைத்துக்கொண்டு எந்தநேரத்தில் வந்தபோதிலும், சோம்பலில்லாமல் அவர்களை யுபசரித் தனுப்பவேண்டும். தன் கணவன் பாக்கியவந்தனாயிருந்து வீட்டுவேலைசெய்ய வேலைக்காரர்களை நியமித்திருந்தால் அவர்களை அன்பாய்ப் பரிபாலித்து அவர்களைக்கொண்டு வீட்டு வேலைகளைச் சரியாக நடத்திக் கொள்ள வேண்டும். புத்திரர்களைப்போஷித்து நன்னெறியிலவர்களைப் பழக்க வேண்டும். "மங்கல மென்ப மனைமாட்சி மற்றது, னன்கல நன்மக்கட்பேறு." என்றதனால் நல்ல மக்களைப்பெற்று வளர்த்தலே இல்லறவாழ்க்கைக்கு அலங்காரமாதலாலும், புத்திரர்களாலே இகத்திலே கீர்த்தியும், மறுமையில் சொர்க்கவாழ்வும் அடையப்படுதலாலும் புத்திரர்விஷயத்தில் அதிக கவலையா யிருக்கவேண்டும். அவர்களுடைய நடக்கையைச் சீர்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்துவதில் மிகவும் சிரத்தையாயிருக்கவேண்டும். அவர்களுடைய மனதிலே தெய்வபக்தியை அழியாத தீபமாக ஏற்றிவைக்கவேண்டும். கல்விஞானத்தை யபிவிருத்தி செய்யவேண்டும். தெய்வபக்தியில்லாத பிள்ளைகள் சுத்த நாஸ்திகராய் எவ்வகையான பாபங்களையுந் துணிந்து செய்வார்களாகையால் சொர்க்கநரக வாழ்வுகளின் இன்பதுன்பங்களையும் அவற்றிற்கு மூலமான புண்ணிய பாபங்களாகிற வழிகளையும், அவர்கள் மனதிலே நன்றாய்ப் படியும்படி செய்விக்கவேண்டும். துஷ்ட பிள்ளைகளுடன் கூடாமலிருக்கும்படி செய்யவேண்டும். எப்பொழுதும் வணக்கமும் அடக்கமுமாயிருக்கும்படி போதிக்கவேண்டும். இவற்றையெல்லாம் வெளியில் அலைந்து திரியும் நாயகன் கவனிக்க நேரமிராதாகையால் மனைவியே வீட்டிலிருந்து ஒழுங்காய் நடத்தவேண்டும். கணவன் தன்கையில் தரும்பொருளை வீண்செலவு செய்யாமலும், அலட்சியம்பண்ணாமலும் குடும்பத்துக்கு வேண்டியவற்றைச் சேகரித்துக்கொண்டு கூடியவரையில் செட்டாக இருக்கவேண்டும். எவ்வகையிலாவது தன் கணவனுடைய வருமானத்தில் கொஞ்சம் மிச்சம்பிடித்து ஆபத்துக்காலங்களுக்குதவும்படி சேர்த்துவைக்கவேண்டும். இவ்விதமான வேலைகளையெல்லாஞ் செய்து குடும்பத்தைப்பாதுகாக்கும் மனைவிக்கு

வேறுவேலைகள்செய்ய நேரமிரா. கணவன் சம்பாதிக்கிறதற்காக ஒருநாள் முழுவதும் வேலைசெய்வது போல மனைவிக்கும் ஒரு நாள் முழுவதும் வேலையிருக்கும். ஆகலால் பெண்கள் பகற்காலத்தில் தன்குடும்ப வேலைகளிற் பிரயாசித்து அதை யொழுங்காகச் செய்யும்பொழுது சரியாயிருக்கும். பின்னர் இராப்போஜனத்திற்குத் தயார் செய்யவும் பள்ளிக்கூடத்துக்குப்போய்வந்த பிள்ளைகளை ஆதரிக்கவும் சரியாயிருக்கும். நடுவிற்சிறிது ஒழிகாலம் நேரிடுமானால், அக்காலத்தில் தெய்வபக்தியைத்தரும் நூல்களையும், பரலோகவாழ்க்கைக்குரிய நூல்களையும் படித்து ஆராய்ந்து தெரிந்துகொள்ளவேண்டும். அப்படிச் செய்யாமல் படுத்துக்கொண்டு உறங்குவதும், அண்டை அயல் வீட்டுப்பெண்களுடன் கூடி வீண்வம்பு வார்த்தைகளைப் பேசுவதும், காமக்குரோதங்களை விருத்திபாக்குகின்ற அசட்டுக்கதைகளைப்படித்துக் காலம்போக்குவதுங்கூடாது. நற்குண நற்செய்கைகள் அமைந்து தன்னைப்போலக் குடும்பபாதுகாப்பிலும், தன் நாயகனுடைய சுக சௌக்கியத்திலும் கருத்தாயிருக்கும் பெண்களுடைய சிநேகமிருந்தால் அவர்களுடன் கூடிப்பேசிச் சிறிது காலங்கழிக்கலாம். எப்படியானாலும் தெய்வபக்தியில்லாத பெண்களோடு சிநேகிக்கலாகாது. தன் குடும்பத்திலுள்ள குற்றங்குறைகளையும், தன் கணவனுடைய குற்றங்களையும் பிறரிடத்தில் எந்தக் காரணத்தாலானாலுஞ் சொல்லக்கூடாது. அப்படி சொல்பவர்களை விஷத்தைப்போல மதிக்கவேண்டும். தன் நாயகனுடைய குற்றத்தை பிறருக்கெடுத்துச் சொல்லும் பெண் கற்புடையவளாகாள். குடும்பத்திலுள்ள குறைகளை வெளியிட்டால் பிறர் சிரிக்க நேரிடும். அவமானமும் வரும். இவ்வாறு குடும்பத்தைப் பரிபாலித்து அதைப்பற்றிய கவலை கணவனுக்கில்லாதபடி நடந்துகொள்கிற பெண்ணை குலஸ்திரீயென்றும், தர்மபத்தினியென்றும் எல்லாராலும் புகழப்படுவாள். இவளே தனக்கும் தன்னைக்கொண்ட கணவனுக்கும் நன்மைகளைத் தேடுகிறவளாவாள். இந்தக்குணமுடையவளையே இல்லாள், மனைவி, கிருகணியென்று நூல்கள் புகழ்ந்து கூறின. இவற்றுள் தனக்கும் தன் கணவனுக்கும் இகபரவாழ்வில் சுகத்தைத் தேடுகிறதே மனைவியாகிய ஸ்திரீயின் முக்கியகடமையாமெனக.

புருஷர்களுக்கு உபநயனமென்பதுபோலப் பெண்களுக்கு விவாகஞ் சிறந்தது. உபநயனகாலத்தில் புருஷர்களுக்குப்பிரம்மோபதேசஞ் செய்யப்படுகிறது. அதாவது வாக்குமனதுக்கெட்டாததகடவுளைத் தெரிவித்தலாம். கட்புலனுக்கறியப்படாத கடவுளைக் குருவின் சொரூபமாகக் கொண்டு வழிபடும்வகையை உபதேசித்தலாம். அதனாலேதான் பிரமசாரியாசிரமத்திலிருப்பவர்களுக்குக் குருகுலவாசம் விதிக்கப்பட்டது. அதுபோலவே பெண்களுக்கு விவாககாலத்தில் கணவனையே தெய்வமாகவும் குருவாகவுங்கொண்டு தெய்வவழிபாடு செய்யு முறைமையை உபதேசித்தலே பெண்களுக்கு விவாகமாம். இதனால் புருஷன் தன் மனைவிக்குக் குருவும் தெய்வமுமாகிறான். ஆகலால் அந்தப்பெண்ணை நல்வழியில் நடத்தவும், தெய்வபக்திசெய்யவும், இகபரசுகத்தை யடையவும் தக்கவழிகளைப்போதிக்கவும் அவளுக்கு யாதொரு குறைவும் நேரிடாதபடி காப்பாற்றவுங் கடமைப்பட்டவனாகிறான். இல்லறவாழ்க்கைக்கு மனைவியே சிறந்தவள். அவளில்லாவிட்டால் அது இல்லறமன்று. இதனாற்றான "பாரியாமூலமிதங்கிருகம்" என்று கூறப்பட்டது. அதாவது பத்தினியின் மூலமாகத்தான் கிருகம் உண்டாகிறது என்பது. குடும்பம் என்பதற்குப் பத்தினியே மூலமாயிருக்கிறாள் என்பது. அவளில்லாவிட்டால் குடும்பமில்லை. ஆதலால் குடும்பவாழ்க்கையை விரும்புகிற ஒவ்வொருவனும் தன்பத்தினியைத்



தன்னுயிரினுஞ் சிறந்தவளாகக்கருதி யவளை பரிபாலிக்கவேண்டும். தான் அதிக செல்வமுள்ளவனாக இல்லாவிட்டாலும் தன்னால் கூடியமட்டும் அவளுடைய விருப்பத்தை நிறைவேற்றவேண்டும். எவ்வகையிலாவது பிரயாசப்பட்டுத்திரவியந்தேடிவரவேண்டும். குடும்பக்கவலை முழுவதையும் மனைவி தன்மேற்போட்டுக்கொண்டு அந்தக்கவலை தனக்கில்லாமற் செய்வதால் பணந்தேடுந் தொழிலைத் தான் கைக்கொண்டு முயன்று சம்பாதித்துக் காசுக்கவலை அவளுக்கில்லாமற் செய்யவேண்டும். அவளுடைய இஷ்டப்படி ஆடையாபரணாதிகளால் அலங்கரிக்கச் சக்தியில்லாதவனானால் அவளுக்கு குறைவற்ற ஆகாரமளிக்கவாவது முயலவேண்டும். செல்வமென்பது பிரயாசத்தினாலன்றி அதிர்ஷ்டத்தாலும் வருவதனால் சிலருக்குப்போதுமான பணம் கிடைப்பது கஷ்டந்தான். அப்படிப்பட்டவன் தன்பத்தினியை அன்புடன் நேசித்துப் பிரியமுள்ளவனாயிருந்தால் அவளுந்தன் நாயகனுடைய கஷ்டநிஷ்டூரங்களை யுணர்ந்து தனக்கு அதிர்ஷ்ட மிவ்வளவுதானென்று கருதி அவனிடத்தில் பிரியம்வைத்து நடப்பாள். அப்படியில்லாமல் தன்னுடைய வருத்தத்தையே பெரிதாக நினைத்துச் சதாகாலமும் கடுகடுவென்றிருப்பதும், அவள்பேரில் குற்றமிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவளைக்கோபித்துக்கொள்ளுதலும் துர்க்குணமாம். மனைவி அறிந்தேனும் அறியாமலேனுந் தப்பிதஞ்செய்திருந்தால் அது செய்தது தவறென்று பல நியாயங்களால் விளக்கிக் காட்டி இனிமேல் அப்படிச் செய்யாதபடி உபதேசிக்கவேண்டும். அதுவன்றி அவள்செய்த அற்ப குற்றங்களையும் பெரிதாக நினைத்துச் சத்துருக்களைப்போலத் தண்டித்தலும், அதற்காக அவளோடு பேசாமல் பகை சாதித்தலும் குடும்பவாழ்க்கைக்கு அழகன்று. இதனால் மனைவிக்குக் கணவன்மேல் வெறுப்புண்டாவதேயன்றிப் பிரியமுண்டாகாது. தன்னுடைய சுகங்களெல்லாம் அவளிடத்திலிருப்பதால் அவள் செய்யுங்குற்றங்களைப்பாராட்டாமல் மன்னித்து, அக்குற்றங்கள் நேராதவழியைப் போதிக்கவேண்டும். மாமியார், நாத்திமார் முதலியோர் தம்வீட்டுக்குவந்த பெண்களை யலட்சியஞ் செய்து அவளைக்கஷ்டப்படுத்துவதும், இல்லாதகுற்றங்களை யெல்லாம் கூறி அவளைக்குற்றப்படுத்துவதும் பெரும்பாலும் வழக்கமாயிருப்பதால் அந்த விஷயத்தில் கணவன் மிகவும் ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கவேண்டும். அவர்கள்கூறும் வார்த்தையை மாத்திரம் கேட்டு மனைவியைத் தண்டித்தல் நியாயமாகாது. இதனால் தன்னைத்தவிர தன்மனைவிக்குநேசமானவர்கள்குடும்பத்திலிருப்பது அருமையென்பதையறிந்து அவளைப் பரிபாலித்து இல்லறத்தை நடத்துவது புருஷனுக்குரிய கடமையாம். இவ்வாறு புருஷனால் மனைவியும் மனைவியால் புருஷனும் ஆதரிக்கப்பட்டு ஒருவரையொருவர் நேசித்து நடப்பதே இல்லறவாழ்க்கையாம். இந்தவீட்டில் சகல தேவர்களும் வசித்துத்தம்பதிகளை வாழ்த்திக்கொண்டிருப்பார்கள். இதுவே ஸ்திரீபுருஷர் கடமையாம். ப-ரீ.

## பானுமதி.

(210-ம் பக்கத் தொடர்ச்சி.)

மதுராராஜா:—மந்திரீ அப்படிச் செய்வதற்கு என்ன தடையிருக்கிறது. சேனாபதிக்குத்தக்க ஆடையாபரணாதிகளோடு போய் அவனுக்குச் செய்யவேண்டிய சிறப்புகளைச் செய்து அழைத்துக்கொண்டுவோர்,

விதூஷணன்:—ஆமாமா; தலையில் இடித்த பின்புதானே குனிந்து நடக்கும். நான் அப்போதே சொன்னேனே; அது மனதில் பட்டதா? அர்த்தகாலத்திலேயே அசோகனையழைத்துச் சிறப்புச் செய்திருந்தால் கவலையற்றிருக்கலாமே. இப்பொழுது காணிக்கை, வெப்பங்களுடன் போயவன்காலில் விழுந்து கும்பிட்டு அழைத்துக்கொள்வீரா என்று மனதிற்குள்ளே சொல்லிக்கொண்டு, அரசனைப்பார்த்து மஹாராஜாவே இதுதான் யுக்தி. அசோகன் அசகாயசூரன்; அஞ்சாத வீரன்; சத்துருசங்காரதீரன்; இந்த ஆபத்துக்காலத்தில் அவனை யழைப்பதே சரி.

மஹாராஜா:—விதூஷணா! நானுன் பேச்சைக்கேளாமல் மதிமோசம் போனேன். அரசனாயிருப்பவன் கல்விகேள்விகளிற் சிறந்த புலவர்களையும், மதியூகியான மந்திரிகளையும், யுத்தத்தில் பின்வாங்காத வீரர்களையும் எப்படியேனும் சேர்த்துக்கொள்ள வேண்டும். நீயேபோய் அசோகனை மரியாதையோடு அழைத்துக்கொண்டுவா.

வி—ன்:—அப்படியே செய்கிறேன் மஹாராஜாவே. (போய்விட்டான்.)

## முதலங்கம், மூன்றாங் காக்ஷி.

அசோகன் பிரவேசம்.

அசோகன்:—தன் மனதிற்குள் சொல்லிக்கொண்டு வருகிறான்: சிறந்த புலவர்கள், அழகுள்ள வனிதையர்கள், சாஸ்திர புஸ்தகங்கள், கூரிய ஆயுதங்கள், ரணசூரர்கள், கைத்தொழில் வல்லோர்கள், மந்திரவாதிகள், இவர்களெல்லாரும் தகுந்த சார்பையடைந்தால்தான் பிரகாசிப்பார்கள். விசுவேசர் கிருபையினால் இன்று நமக்கு நல்லகாலம் பிறந்தது. அரசனாலேதான் இன்று இராஜசேவை கிடைத்தது. அரசனுக்கு ஆபத்து நேரிட்ட காலத்திலே அவன் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் யுத்தவீரனானவன் தானாகவே யவனிடம்போ யுபகாரம் பண்ணவேண்டும். ஏனென்றால் அது பலஜனங்களுக்குமுபகாரமாயிருக்கிறது. தேசாட்சணையாகிறது. ஆதலால் நாம் அவசியம் இராஜனிடம் போகவேண்டும். போகிறேன்.

அசோகன்:—இராஜராஜேஸ்வர இராஜமார்த்தாண்ட இராஜபூஜித்ய இராஜபுரந்தரவீரேசுவரா! நீடூழிவாழ்க. அசோகன் வந்தனம் செய்கிறேன்.

மஹாராஜா:—அசோகா! உன் வரவு நல்வரவாகுக. அதிரதவீரனாகிய நீ நமது நகரத்திலிருக்கிறதை யிதுவரையும் நான் அறியாமலிருந்ததற்காக விசனப்படுகிறேன்.

அசோகன்:—மகாராஜாவே எல்லாம் காலத்தினாலாகின்றன. ஒருவரோடொருவரைக்கூட்டுவதும், கூடியிருப்பவரைப் பிரிப்பதும் காலமேயாம். அக்காலபலம் ஒத்துவந்ததனாலேதான் நான் மஹாராஜாவின் சந்நிதிக்கு வரலானேன். என்னுடைய வீர
வழியில் ரமும், மந்திரதந்திரோபாயங்களும் மஹாராஜாவின் சார்பினாலேதான் பிரகாசிக்க
ாப்போதிக்கவும் சூரியனொளியின் சம்பந்தம் பெற்ற சந்திரனும் உலகம்புகழப் பிரகாசிக்க
.மைப்பட்டவனாகிறான் ாவுப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்.
—ால் அது இல்லறமன்று.
—டது. அதாவது பத்தினியின் மூல
ம் என்பதற்குப் பத்தினியே மூலமாய
ல்லை. ஆதலால் குடும்பவாழ்க்கையை



மஹாராஜா:—இவனிடத்தில் பிரமதேஜஸ் ஜொலிக்கின்றது. வீரதீரங்களினால் சூரியனையும் அக்கினியையும் போல விளங்குகிறான். இவன் நமது காரியமுடிக்கத்தக்க உத்தம புருஷன்தானென்று தன் மனதுக்குள் பேசிக்கொண்டான்.

சூட்சமதரிசி பிரவேசம்.

சூட்சமதரிசி:—மஹாராஜாவே வந்தனம்; நான் சொன்னதை மெய்யாக்கும் பொருட்டுச் சத்துரு சைன்னியம் எள்ளிட இடமில்லாமல் பதின்காததூரம் பரவி வருகின்றது. அது வருகிற வேகத்தினாலே மேலெழும்பின கருந்தூளி செந்தூளிகள் பூமியாகாயமெங்கும் பரவிச் சூரியனையும் மறைக்கின்றன. அந்தப்படைகள் வந்து நமது நகரத்தைச் சூழ்ந்துகொள்வதன்முன்பு நாம் எதிர்கொண்டுபோய் வழிமறித்துக்கொண்டு போர்புரியவேண்டும். அப்படிச் செய்யாமல் தாமதித்தால பிரமாதம் நேரிடும்.

மஹாராஜா தனக்குள்:—(இனியென்ன செய்யலாம். அசோகனை அனுப்பி யுத்தம் புரிவதே நலமாகத் தோற்றுகின்றது. அனுப்புவோமென்று சொல்லிக்கொண்டு) ஐயா! அசோகா! சத்துருக்கள் நமது நாட்டின்மேற் படையெடுத்து வருவதாகத் தூதர்கள் அறிவித்தார்கள். அதைக்குறித்துத்தான் உன்னை அழைப்பித்தது. நமது படைகளுக்குச் சேனாதிபதியாக உன்னை நியமித்திருக்கிறோம். நம்மிடத்திலிருக்கும் சேனைகளைக் கூட்டிக்கொண்டுபோய் நடுவழியிலேயே எதிரி படையைத் தடுத்து யுத்தம் புரிந்து ஜயம்பெற்றுவருவாயாக.

அசோகன்:—மகாராஜாவே! அதிரதனாகிய க்ஷத்ரவீரனுக்குப் பின்பலமும் வேண்டுமோ? தேவரீருக்குச் சித்தமானால் உமது பரிபூரண கிருபையையும், மலையைத் திரண்டு உருண்டு நீண்டு பருத்திருக்கும் என்னுடைய புயங்களையும், எனது மனோதைரியத்தையும் துணையாகக் கொண்டுபோய், அண்டங்கள் திரண்டுவரினும், அகிலம் பரந்துவரினும், தேவர் தானவர் தைத்தியர்களாயினும் நானொருவனே யெதிர்த்து கடுஞ்சமர்புரிந்து சர்வசங்காரருத்திரனைப்போலச் சத்துருக்களைச் சின்னாபின்னப்படுத்தி விஜயலட்சுமி சமேதனாகத் தமது சந்நிதியில் வந்து சேருகிறேன். சீக்கிரம் உத்திரவு தந்தருளும்.

மஹாராஜா:—(இதுவல்லவா வீரம்! இதுவல்லவா தைரியம்! இவனுக்கேன் ஜயம் வராமற்போகும்? என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டு) அசோகனைப் பார்த்துச் சபாஷ் அசோகா! உனது தைரிய லட்சுமியே உனக்குஜயந்தரும். இந்தா முத்திரை மோதிரம், பெற்றுக்கொண்டு சீக்கிரம்போய் வெற்றிபெற்றுவா.

அசோகன்:—மகாபாக்கியம்! அப்படியே ஜயம்பெற்று வருகிறேன் மஹாராஜாவே. (போய்விட்டான்).

## முதலங்கம் நான்காவது காக்ஷி.

அரசன், மந்திரி, விதூஷணன், சூட்சமதரிசி இந்நால்வரும் பிரவேசம்.

அரசன்:—மந்திரி! சத்துரு சைனியத்தை நடுவழியில்தானே மறித்துக்கொண்டு போர்புரியும்படி அசோகனுக்குச் செலவுகொடுத்தனுப்பினோம். அவனுடைய சப்பிரமாண

வசனமும் தோற்றமும் நமக்கே ஜயம் வருமென்று விளக்குகின்றன. சத்துருக்களின் பெருக்கத்தைக் கேட்க மனதில் அச்சம் உண்டாகிறது. எப்படியானாலும் நாம் அலட்சியமாயிருக்கிறது நியாயமல்ல. நம்மிடத்தி லுள்ள படைகளைத் திரட்டி கோட்டைகொத்தளங்களைக் காவல் செய்துகொண்டு, யுத்தத்துக்கு தயாராகவே யிருக்கவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். சீக்கிரமாகப்போய் நமது எண்ணப்படிசெய்.

மந்திரி–விவேகன்:—மஹாராஜாவே, முன்னமே எல்லாம் செய்தாய்விட்டது. நமது கோட்டைக்கு யாதொரு பயமுமில்லை. கூலிப்படைகளையுஞ் சேகரித்து வைத்திருக்கிறேன். துணைப்படைகளுக்காக நாலாபக்கங்களுக்கும் தூதர்களையனுப்பி யிருக்கிறேன். நம்மோடு சேசுக்கட்டுப்பாடு செய்திருக்கும் இராஜாக்களுக்கும் சமாசாரந் தெரிவித்து உதவிசெய்யக்கேட்டிருக்கிறேன். ஆனாலும் இவையெல்லாம் அநாவசியமே. அசோகனே ஜயம்பெறுவான்.

மஹாராஜா:—சந்தோஷம்: உன்னைப்போன்ற அமைச்சர்களுக்குச் சொல்லவேண்டுமா?

விதூஷகன்:—ஆமாமா, எட்டுவருஷங்களுக்குமுன் மந்திரிகள் விரைத்த உபதேசமொழிகள் இப்பொழுதுதான் பலன்கொடுக்கிறாப்போலிருக்கிறது. பாட்டன் முப்பாட்டன்மார் சம்பாதித்துவைத்த செல்வத்தினால் இறுமாப்படைந்து கண்கால் தெரியாமற் செலவழித்து உண்டு உடுத்துக்காலத்தைப் போக்கிவிட்டு, மந்திரிகளைக் கண்ணெடுத்துப்பாராமலும், அவர்கள் வார்த்தைகளுக்குச் செவிகொடுக்காமலும் அலட்சியமாயிருந்ததன்பலன் இதுதான். அப்போதே மந்திரிகள் பேச்சைக் கேட்டிருந்தால் இவ்வளவு வருத்தம் வருமா? கிடக்கட்டும் ஆனாலும் அரசன்படுகிற மனவருத்தத்தைப்பார்க்கும்போது இரக்கந்தானுண்டாகிறது. மனதைக்கொஞ்சம் தேற்றுவோமென்று தனக்குள் பேசிக்கொண்டு, அரசனைப்பார்த்து மகாராஜாவே! தமக்கே ஜயம்வரும். அசோகனே யுத்தத்துக்குப்போயிருக்கிறபோது ஜயம்வராமற் போகுமா?

மஹா:—அதேன் அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லுகிறாய்? ஜோதிஷத்தினாற் சொல்லுகிறாயா? அல்லது ஏதாவது சமாசாரந்தெரிந்து சொல்லுகிறாயா?

விது:—ஆமாம், ஜோதிஷந்தான்! என் ஜோதிஷந்தவறாது என்பது தமது சித்தத்துக்கு நன்றாய்த்தெரியுமே.

மஹா.—கிரகநிலையைக்கொண்டு பார்த்தாயா? அல்லது ஆரூடத்தினால் அறிந்து சொல்லுகிறாயா?

விது:—இரண்டுமல்ல. பிரத்தியட்சத்தினாலேயே தெரிந்து சொல்லுகிறேன்.

மஹாராஜா:—அதென்ன பிரத்தியட்சம்? எனக்குத் தெரியச் சொல்.

விது:—இதென்ன மஹாராஜாவே! யாவருக்குந் தெரிந்தவிஷயந்தானே. தமது சித்தத்துக்கே தெரிந்திருக்கும். ஆனாலும் சொல்லுகிறேன். தமது திருநாமம், மந்திரி பெயர், சேனாதிபதியின் பெயர் மூன்றையுங்கொண்டு நாம் பலன் பார்த்தால் பிரத்தியட்சமாய்த் தெரியாதா? வீரம், விவேகம், அசோகம் இம்மூன்றும் எப்பொழுது ஒன்றாய்க் கூடினவோ அப்பொழுது எந்தக்காரியந்தான் அபஜயமாகும்? எல்லாம் ஜயமே; மனதிலே கவலை வேண்டாம்.



மஹா:—கடகடவென்று சிரித்து நன்றாய்ச் சோதிஷம் சொன்னாய்; இது அதனை சோதிஷம், நேர்த்தியாயிருக்கிறது.

விது:—என் ஜோதிஷம் பலித்தால் அப்பொழுது தெரியும். அதோ குட்சுமதரிசி ஓடிவருகிறான். எனக்கு நல்ல வெகுமதி தரவேணும் மஹாராஜாவே.

மஹா:—விவேகசீலா; குட்சுமதரிசி விரைந்தோடி வருகிறதைப்பார்த்தால் எனக்கு மிகுதியும் கிலேசமாயிருக்கிறது. என்ன சமாசாரஞ் சொல்லுவானோ என்னவோ? தெரியவில்லை.

விவேக;—மஹாராஜாவே! அவன் வருகிறவேகத்தையும், அவன்கோலத்தையும்பார்த்தால் நமக்கு ஜயங்கிடைத்து விட்டதென்று தோன்றுகிறது. நல்லசமாசாரமேவருகிறது.

விதூஷ:—மஹாராஜாவே! எனக்குமுத்துமாலைதரவேண்டும்.

குட்சும:—மஹாராஜாவே! ஜயம், ஜயம், ஜயம்! நீடூழிவாழ்க. மஹாராஜாவுக்குமங்களமுண்டாகுக. அசோகன் ஜயங்கொண்டான். சத்துருசைனியங்கள் தூளிபடலமாயின; சத்துருக்கள் அசோகன் கையில் சிறையானார்கள். ஜயம்பெற்றவர்கள் யுத்தகளத்திலேயே இராத்தங்க வேண்டுமென்கிற நியாயத்தினால் அசோகன் யுத்தகளத்திலேயே தங்கியிருக்கிறான். விடிந்தபின் தமது சமுகத்துக்கு வருகிறதாக விருக்கிறான்.

விது:—மஹாராஜாவே! முத்தாரமெங்கே? என் ஜோதிஷம் பலித்துவிட்டது.

மஹா:—இராஜ்ஜியமே உன்னுடையதாயிற்றே? உனக்கு நான் என்ன கொடுக்கவிருக்கிறது. இந்தா! முத்தாரம், இரத்தினாரம். குட்சுமதரிசீ இந்தா பட்டாடை, பூஷணங்கள், பெற்றுக்கொள். மந்திரி விவேகசீல நகரத்தை அலங்கரிக்கச்சொல். பட்டத்து யானையைச் சிங்காரித்து அதன்மேல் சேனாபதியை ஏற்றி ஊர்கோலஞ் செய்வித்து அவனுடைய கீர்த்தியை எங்கும் பறையடித்துப் பிரசித்தப்படுத்தச்சொல். விடிந்தபின் நீயே எதிர்கொண்டுபோய் அழைத்து வா?

விவேக:—அப்படியே செய்கிறேன் மஹாராஜாவே. (இன்னும் வரும்.)

வாகவி. திரு. அ. சுப்பிரமணிய பாரதியார்.

---

# HAMLET.

## ஹாம்லெட்.

(206–ம் பக்கத் தொடர்ச்சி:)

### நான்காம் அங்கம்.

ஐந்தாங் களம்.

எல்ஸினூர் கோட்டையில் ஓர் அறை.

அரசி, ஹொரேஷியோ கனவான் பிரவேசம்.

அரசி:—நான் அவனிடத்தில் பேசமாட்டேன்.

கனவான்:—மிகவும் கெஞ்சிக் கேட்கிறாள்; வாஸ்தவத்தில் புத்தி கலங்கி யிருக்கிறாள்: அவள் நிலைமை பரிதபிக்கத்தக்கதாயிருக்கின்றது.

அரசி:—அவளை உள்ளே வரச்சொல்லும் [கனவான் போய்விடுகிறார்.]

[தனிமொழி] : பாவத்தினால் புண்ணாயிருக்கும் என்மனத்திற்கு அற்பவிஷயமும் பெருந் தீங்கினுக்கு அறிகுறியாய்த் தோன்றுகின்றது. குற்றமுள்ள மனம் ஒளிக்கவிரும்புவதை வெளிப்படுத்தி விடுகின்றது.

கனவானும் ஒப்பிலியாவும் பிரவேசம்.

ஒப்பிலி:—டென்மார்க்கு இராக்கினி எங்கே?
அரசி:—ஒப்பிலியா, என்ன காரியம்?
ஒப்பிலி:—[பொருட்படாத ஒரு பாட்டைப் பாடுகின்றாள்]
அரசி:—நீ பாடுவதின் பொருளென்ன, பெண்ணே?
ஒப்பிலி:—சொல்லுகிறேன், கேளும், அம்மா, [பாடுகிறாள்].

காலனுக்கிரையானான் அம்மா, காலனுக்கிரையானான்
தலைமாட்டில் புல்லும், கால்மாட்டில் கல்லும்
காலனுக்கிரையானான் அம்மா.

அரசி:—அஃதிருக்கட்டும் ஒப்பிலியா.
ஒப்பிலி:—நான் சொல்வதைக்கேளும் [பாடுகிறாள்.]

மலைப்பனிபோன்ற, வெளுத்த முகத்திடும்·

அரசன் பிரவேசம்.

அரசி:—இவளைப்பார்த்தீர்களா—பிரபுவே!
ஒப்பிலி:—(பாடுகிறாள்.)

நறுமணங்கமழும், நாண்மலர் பூண்டு
அற்பின் மழை சொரிய, நற்பதம் போந்தான்

அரசன்:—சவுக்கியமா, பெண்ணே!
ஒப்புலி.—நமதுதற்கால நிலைமையை அறிவோம்: இனிவருங்கதியாதென்று அறியோம்
அரசன்:—தகப்பனைப்பற்றின எண்ணங்கள்.
ஒப்பிலி:—இதுபோதும், என்னவென்று கேட்பனாயின் இவ்வாறு சொல்லும்.

[நாளைபொன்மண நாள், வேளையுதயமாம்
சாளரவாயிலிலே, கோளறநிற்பனியான்]

அரசன்:—எவ்வளவு காலமாய் இந்தமாதிரியாயிருக்கிறாள்?

ஒப்பிலி:—எல்லாம் நன்றாயிருக்குமென்றெண்ணுகிறேன்: நாம் பொறுத்தல் வேண்டும்: அவனைப்புதைத்ததை நினைக்க எனக்கு அழுகைவருகின்றது. என் தமையனிடத்தில் அதைத் தெரிவிக்கிறேன்: நீங்கள் எனக்குச்சொல்லுகிற யோசனைக்காக உங்களை வந்தனம் பண்ணுகிறேன். என்வண்டிவரட்டும்: உங்களுக்கு இரவுநல்ல இரவாகச்செல்லட்டும்.

அரசன்:—அவள்பின்னும்போ: அவள்செய்வதை நன்றாய்க்கவனிப்பாயாக [ஹொரேஷியோ போய்விடுகின்றான்]. இஃது துக்கத்தினால்வந்ததேயே. அவள் தகப்பனிறந்ததனால்



உற்பத்தியானது: கெர்ட்ரூட், கெர்ட்ரூட், துக்கம் தனித்து வருவதில்லை, சேனைபோல் வெள்ளம் வெள்ளமாய்த்தான் வருகின்றது.

அரசி:—அந்தோ, அது என்ன கூக்குரல்?

அரசன்:—என் உடற் காவலாளிகள் எங்கே? கோட்டைவாயிலை அவர்கள் காத்தல் வேண்டும்.

[மற்றோர் கனவான் பிரவேசம்].

என்ன சமாசாரம்?

கனவான்:—பிரபுவே, தங்கள் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளல் வேண்டும்: சமுத்திரம் கரைபுரண்டு சமநிலங்களை மூழ்கச் செய்வதிலும் வேகமாய் லேர்டீஸ் தங்கள் காவலாளிகளை வென்று வருகின்றான்: நாட்டிலுள்ள கீழ்மக்கள் அவனை அரசாக அழைக்கின்றார்கள். "லேர்டீஸே நமது அரசன், லேர்டீஸே நமதரசன்" என்று எல்லோரும் உரத்துக் கூவுகிறார்கள்.

அரசி:—என்ன பொய்ப்பயம் உண்டாக்குகிறீர்கள், நாய்களா?

அரசன்:—கதவை யுடைத்துக்கொண்டு வருகிறார்களே.

[கத்தியைக் கையிற்பிடித்து லேர்டீஸும், அவனுடன் சில நாட்டார்களும் பிரவேசம்.]

லேர்டீஸ்:—இந்த அரசன் எங்கே? நீங்கள் வெளியே நில்லுங்கள்.
நாட்டார்கள்:—நாங்கள் உள்ளே வருவோம்.
லேர்டீஸ்.—எனக்கு தயவு செய்து அனுமதி தரல்வேண்டும்.
நாட்டார்:—அவ்வாறே செய்தோம்.
லேர்டீஸ்:—உங்களுக்கு வந்தனம். அடா பாவியான ராஜனே—என்னப்பனைத்தா.
அரசன்:—ஆ, ஆ, லேர்டீஸ, உன் கலகம் பிரமாதமாயிருக்கின்றதே, அதற்குக்காரணம் என்ன? கெர்ட்ரூட்நீ குறுக்கிடவேண்டாம். நம்முடையஉடலுக்குத்தீங்கிழைக்க இவனால் ஆகாது: அரசன் உடல் ஆண்டவனால் காக்கப்படுதலின் துரோகிகள் கிட்டவரலாமேயன்றி துன்பஞ்செய்தல் கூடாதகாரியம். லேர்டீஸ், உனக்கேன் இவ்வளவு கோபம்? கெர்ட்ரூட், நீகுறுக்கிடாதே சொல்லடா.
லேர்டீஸ்:—என் பிதாஎங்கே?
அரசன்:—இறந்தான்.
அரசி.—அரசன் கொல்லவில்லை.
அரசன்:—அவன் கேட்பதை எல்லாம் கேட்கட்டும்.
லேர்டீஸ்:—அவர் இறந்ததெப்படி? என்னையேய்த்தல்முடியாது. எந்தப்பாவத்திற்கும் துணிந்து விட்டேன். இம்மை மறுமைஇரண்டிலும் எனக்குச்சுகம் வேண்டேன். வந்தது வரட்டும். என் அப்பனைக்கொன்றவனை யமனுக்கிரையாக்கி விட்டுத்தான் மறுகாரியம்.

அரசன்:—உன்னைத்தடை செய்ய யார் துணிவார்?

லேர்டீஸ்:—என்மனமொன்றுதான் தடைசெய்யும் திறத்தது: உலகத்தில்வேறு ஒன்றும் ஆமாகாது. எனக்கிருக்கும் சிறிதுபலத்தைக் கொண்டு பெருங்காரியத்தையும் சாதிப்பேன்

அரசன்:—குழந்தாய் லேர்டீஸ், உன் அப்பன் மறித்த குற்றம் என்னுடையதன்றென்பதை உன்புத்திக்குப் பகற்காலம் போல விளக்குவிக்கிறேன்,

நாட்டார்:—அவன் உள்ளே செல்லட்டும்.

லேர்தீஸ்:—என்ன சத்தம் அது, என்ன ?

[ஒப்பீலியா திரும்பவும் பிரவேசம்].

என் மூளை நெருப்பில் வெந்து போகாதா ! நீர் சொரிந்த கண்கள் மறைந்து போகலாகாதா ! என்னருமைச் சகோதரி, உனக்குப்பயித்தியம் பிடிக்கும்படி செய்தவனைச் சித்திரவதை செய்தாலென்ன ? விருத்தனுடைய பிராணன் போல உன் புத்திக்கும் நாசம் வந்துவிட்டதா ? இயற்கையாயுள்ள அன்பு வருத்துமாயின் புத்திக்கும் மலினம் வருமன்றோ ?

ஒப்பிலி:—(பாடுகிறாள்.)

சவமுகம்போர்க்கச் சான்துணியின்றி
அவமே இறந்த என் அப்பனை
கல்லறைக்கண்ணீர் அல்லலைத்தீர்க்குமோ ?

லேர்தீஸ்:—நீ சித்தப்பிரமை யில்லாமல் பேசுவையாயின் எத்துணை கோபத்தை யுண்டாக்க மாட்டாய் ?

ஒப்பிலி.—[பாடிப்புலம்புகிறாள்.]

லேர்தீஸ்:—பொருளல்லாத பேச்சும் பொருளுள்ளதாகின்றதே.

ஒப்பிலி:—(புலம்பல்).

திரும்பிவாராரோ, இறந்துபோனாலும்
திரும்பிவாராரோ, வீண்துயரம் என் உனக்கு
மாண்டவர்வருகை, மாநிலத்திலுண்டோ
பனிபோல் நரைத்த, இனிதானகுஞ்சியை
என்றுகாண்பேன், நான், என்றுகாண்பேன்,
அழுதழுது, நெஞ்சம்புண்ணாகச்
பழுதுபழுது, புலம்பல்பயனிலது.

லேர்தீஸ்:—கடவுளே, இதைப்பாரும்.

அரசன்:—லேர்தீஸ், உனக்குவந்ததுக்கம் எனக்குமுண்டென்று நினைத்தல் வேண்டும், சற்றுப்பொறுத்தல்வேண்டும். உன்னுடைய நண்பர்களில் சிலரைக்கேள். அவர்கள் என்மேல் குற்றம் சொன்னால்நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். எந்தவகையிலாவதுஉன்பிதாவின் மரணத்தில் நான் சம்பந்தப்பட்டவனாக ருஜுவாகுமாயின், என்னுடைய இராச்சியம், மகுடம், பிராணன், வேறுஉரிமைகள் அனைவற்றையும் உனக்குத்தர்த்துவிடுகிறேன். என்மேல் குற்றமில்லை யென்று ஏற்படுமாயின், உனக்குச்சிறிதுபொறுமை இருத்தல் வேண்டும். உன்மனத்திற்குத்திருப்தி யுண்டாக்குவதற்கு இருவரும் கூடியவரையில் பிரயத்தனம்பண்ணுவோம்.

லேர்தீஸ்:—அப்படியே ஆகட்டும். என் அப்பன் இறந்தவகை தெரியாமலும், அவனை ஒருவருமறியாமல் புதைத்ததும்; அவன் அந்தஸ்திற்குத்தக்கபடி உபசாரங்கள் ஒன்றும் நடக்காமலிருந்ததும் எனக்குமிகுந்தவருத்தமுண்டாக்கியிருக்கின்றது. இத்தக்காரியங்களுக்குத் தக்க சமாதானம் இருக்குமாயின் நான் திருப்திப்படுவேன்.



அரசன்:—உனக்குத்திருப்தி யுண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை. குற்றமுள்ள இடத்தில் உன்கத்தியை நீ உபயோகிக்கலாம். நாமிருவரும் போவோம் வா [இருவரும் போய் விடுகிறார்கள்].

## நான்காவது அங்கம்.

### ஏழாவது களம்.

### கோட்டையில் மற்றோர் அறை

அரசனும் லேர்தீஸும் பிரவேசம்.

அரசன்:—இப்பொழுதாவது உன் மனதிற்கு என்மேற் குற்றமில்லை யென்று விளங்கிற்றா ? உன் பிதாவைத் கொன்றவன் என்னையுங் கொல்லப்பார்த்தான் என்று உனக்கு நன்றாய்த் தெரிந்திருப்பதால் என்னை உன் நண்பனாகக் கொள்ளலாகாதா ?

லேர்தீஸ்:—தெளிவாய் விளங்குகிறது. அஃதெப்படியானாலென்ன : என்பிதா இறந்து போய்விட்டார். சகல நற்குணங்களும் குடிகொண்டிருந்த என் சோதரிக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது. இவை இரண்டும் வீண்போகா.

அரசன்:—இதற்காக நீ தூங்காமலிருத்தல் வேண்டாம். ஆபத்து நெருங்கி வருகையில் அதை வேடிக்கையென்று நினைக்கிற மூடன் என்று என்னை எண்ணவேண்டாம். கூடிய சீக்கிரத்தில் உன் காதில் சமாசாரம் படும். உன் பிதாவிடத்தில் எனக்குப்பிரியமுண்டு. என் பிராணனை ஆபத்துக்குள்ளாக்கவும் எனக்கு இஷ்டமில்லை. இதனாலேயே நீ அறியலாம்.

தூதன் பிரவேசம்.

என்ன விசேஷம் ?

தூதன்:—ஹாம்லெட்டிடத்திலிருந்து கடிதங்கள் கொண்டுவந்திருக்கிறேன். இது தங்களுக்கு. இது மகாராணி அவர்களுக்கு.

அரசன்:—ஹாம்லெட்டிடத்திலிருந்தா ? கொண்டுவந்தது யார் ?

தூதன்:—கப்பலோட்டிகள் கொண்டுவந்தார்களாம். நான் அவர்களைப்பார்க்கவில்லை. கிலாடியோ என்று ஒருவர் என்னிடத்தில் கொடுத்தார். கடிதம் கொண்டுவந்தவர்கள் அவரிடத்தில் கொடுத்தார்களாம்.

அரசன்:—லேர்தீஸ், கடிதத்தில் இருப்பதை வாசிக்கிறேன் கேளு [தூதனை நோக்கி] நீ போகலாம் [தூதன் போய்விடுகிறான்.]

[கடிதத்தைப் படிக்கிறான்] ராஜாதி ராஜனே : தங்கள் நாட்டில் நிர்வாணமாய் வந்திறங்கி இருக்கிறேன். நாளைக்குத் தங்களைவந்து பார்க்கிறேன். அப்பொழுது நான் திரும்பி வந்ததற்குக் காரணம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஹாம்லெட்:—இது என்னபுதுமை ? எல்லோரும் திரும்பிவந்தார்களா ? இது மோசமோ ? பரிகாசமோ ?

லேர்தீஸ்:—கையெழுத்துத் தங்களுக்குத் தெரியுமன்றோ ?

அரசன்:—ஹாம்லெட்டின் கையெழுத்துத்தான். 'நிர்வாணமாய்' என்றும், பின்பு 'தனியே' என்றும் எழுதி யிருக்கிறான். உனக்கு இச்சொற்களை விடுக்கத் தெரியுமா? நான் செய்யவேண்டுவதென்ன?

லேர்தீஸ்:—எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை: அவன் வரட்டும்: என்மனம் பதைக்கின்றது. அவன் வந்தவுடன் என்வாளால் ஆத்திரம் தீர அவனை வெட்டிப்போடுகிறேன்

அரசன்:—உன்னிஷ்டம் அப்படியானால் நான் சொல்வதைக் கேட்பாயா?

லேர்தீஸ்:—இராஜி பேசாவிட்டால் தங்கள் பேச்சைக்கேட்கிறேன்.

அரசன்:—உன் மனதிற்குச் சந்தோஷம் உண்டாவதற்குத்தான் சொல்லுகிறேன்: கப்பல்யாத்திரை போவதற்கு இஷ்டமில்லாதவனாய் ஹாம்லெட் இருப்பானாயின், ஓர் உபாயம் எனக்குத் தோன்றுகிறது. அவ்வுபாயம் பலிக்குமாயின் அவன் இறக்கவேண்டியதே. ஒருவர்மேலும் குற்றம் சொல்ல முடியாது. அவனுடைய தாய்கூட ஹாம்லெட்டின் மரணம் தற்செயலென்றே சொல்வாள்.

லேர்தீஸ்:—என்னாலேயே ஹாம்லெட் மரணம் அடையும்படி இருக்குமாயின் தங்கள் சொற்படி செய்வேன்.

அரசன்:—நீ சொல்வது சரி. உன்னிடத்தில் பெரிய சாமர்த்தியம் ஒன்று உண்டென்று ஹாம்லெட்டின் காதில் பட்டிருக்கிறது. நான் அதை உயர்த்தியாக நினைக்காவிடினும் ஹாம்லெட் அதைக்கேள்வியுற்ற போழ்தெல்லாம் உன்னைக்கண்டு மிகவும் பொறாமைப்பட்டிருக்கின்றான்.

லேர்தீஸ்.—அஃதென்ன, பிரபுவே?

அரசன்:—சிறுபிள்ளைகளுக்கு பெருமையை யுண்டாக்குவது; இன்றியமையாததுங்கூட: முதிர்ந்த வயதுள்ளவர்களுக்குப் பொறுமையும் அமைதியும் தக்கவையாயிருத்தல் போலவே, சிறுவர்களுக்கு உற்சாகமும் பரபரப்பும் தக்கவை. இரண்டு மாதத்திற்கு முன் நார்மண்டியிலிருந்து இங்கு ஒரு கனவான் வந்திருந்தார். அவர் கத்திச்சிலம்பத்தில் உன்னைவிடத் தேர்ந்தவர் அவர் நாட்டிலில்லையென்றும் ஏலையோர் சிலம்பம் புலம்பல்தான் என்றும் சொன்னதை ஹாம்லெட் கேட்டு மிகவும் பொறாமைப்பட்டு உன்னுடன் கத்திச் சிலம்பமாடி ஜயிப்பதற்காக உன்னை உடனே ஊர்க்குத் தருவிக்கவேண்டுமென்று விரும்பினானுண்டு. இதினின்றும்,

லேர்தீஸ்:—இதினின்று ஆகக்கூடியதென்ன, பிரபுவே?

அரசன்:—உன் பிதாவினிடத்தில் உனக்கு உண்மையானவிசுவாஸமிருந்ததோ, அன்றேல் வேஷம்போடுகிறாயோ?

லேர்தீஸ்:—ஏன் இவ்வாறுகேட்கிறீர்கள்?

அரசன்:—உன் அப்பனுக்குமகன் நீ என்பது நிஜமாயிருந்தற்கு சொற்களாலன்றி செய்கையால் என்ன செய்யப்போகிறாய்?

லேர்தீஸ்:—கோயிலில் என் பிதாவைக்கொன்றவன் கழுத்தையறுக்கத் துணிந்திருக்கிறேன்.

அரசன்:—எங்குநடந்தாலும் கொலை கொலை தான். ஆத்திரத்திற்கும் அளவில்லை. அப்பா, லேர்தீஸ், நீ சும்மா வீட்டில்இரு. நீவருக்குவந்திருக்கிறசமாசாரம் ஹாம்லெட்டிற்கு



அறிவிக்கப்படும். சிலஆட்களைக் கொண்டு உன்னுடைய சிலம்பத்திறத்தை அவனிடத்தில் இரட்டிப்பாகப் புகழச் செய்வோம். நீங்கள் இரண்டு பேரும் பந்தயச்சிலம்பம் ஆடும்படி நேரும். ஹாம்லெட் சூது ஒன்றுஞ்செய்யமாட்டான். நீ கூரானகத்தியை வைத்துக்கொண்டு சிலம்பஞ்செய். அவன் மழுங்கினகத்தியால் ஆடுவான். சமயம்பார்த்துக்குத்திவிட்டாயானால் உன்தகப்பனைக்கொன்றதற்குத்தக்க தண்டனை நீ அவனுக்குச் செய்தவனாவாய்.

லேர்தீஸ்:—அப்படியே செய்கிறேன். வைத்தியன் ஒருவனிடத்தில் ஓர் விஷம் வாங்கி வைத்திருக்கிறேன். அதை என்கத்தியின் முனையில் தடவிவைக்கிறேன். அந்தக்கத்தியின் முனையால் ஓர் சிறுகுத்து உடம்பில் இரத்தம்வரும்படி குத்தினாலும் குத்தப்பட்டவன் பிழைப்பதில்லை. இவ்வுலகில் அந்தவிஷத்திற்கு மாற்றுமிடையாது.

அரசன்:—இதைப்பற்றிப் பின்னும் ஆலோசனைசெய்வோம்: உங்கள்திறத்தையறியப் பந்தயமும் ஏற்பாடு செய்வோம். ஒருகால் உன்கத்தியால் காயப்பட்டு ஹாம்லெட் இறக்காமல் தப்புவானாயின் இன்னோர் உபாயம் செய்வதாக நிச்சயித்திருக்கிறேன். சிலம்பம் ஆடுகையில் ஹாம்லெட் தாகமாயிருப்பான். நீர்பருகவேண்டுமென்றால் விஷம் கலந்த நீர் தயார் செய்துவைக்கிறேன். அதைக் கொடுத்தாவது ஹாம்லெட் சாகும்படி செய்துவிடுவோம். பொறு, பொறு, என்ன சத்தம்?

அரசிபிரவேசம்.

என்னவிசேஷம், என் அருங்காதலா?

அரசி:—(லேர்தீஸை நோக்கி) பட்டகாலிலேபடும் என்றவாறு ஒருதுக்கத்திற்குப்பின் மற்றோர் துக்கம்வந்து விட்டது: உன்சோதரிதண்ணீரில் மூழ்கி இறந்துபோய்விட்டாள்.

லேர்தீஸ்:—மூழ்கி இறந்தாளா எங்கு?

அரசி:—ஆற்றங்கரையோரத்தில் ஓர் மரம் சாய்ந்திருந்தது. அம்மரத்தின் இலைகள் தெளிந்த நீரில் பிரதிபிம்பித்திருந்தன. பலவகைப்பூக்களைக்கொண்டு ஒரு மாலையைக்கட்டி ஆற்றோரத்தில் சாய்ந்திருந்த கிளையின் நுனியில் தொங்கவிடவெத்தனித்துப்போனாள். கிளை முறிந்து நீரில் விழுந்துவிட்டாள். மூழ்கி இறந்துபோய்விடுவோமென்னும் ஞானமில்லாமல் சற்று நேரம் மிதந்துகொண்டு பாடிக்கொண்டேயிருந்தாளாம். கட்டின ஆடைகள் முற்ற நனைந்து கனத்துத் தண்ணீரில் மூழ்கி உயிர் துறந்துவிட்டாள்.

லேர்தீஸ்:—அந்தோ, மூழ்கியா போய்விட்டாள்?

அரசி:—ஆம், ஆம், மூழ்கிப்போய்விட்டாள்.

லேர்தீஸ்:—தங்காய், நீ நீரில் மூழ்கி இறந்துவிட்டபடியால் நான் கண்ணீர் விடுதல் இல்லை. எவ்வளவாகக் கண்ணீர் விடுதலை நிறுத்தவேண்டுமென்று ஆண்மையோடு நாம் முயன்றாலும் நம்மையும் தப்பி அது வந்துவிடுகிறது. பிரபுவே, என் கோபாக்கினி இப்போழ்து ஜொலித்துக்கொண்டிருக்கின்றது. சோதரிமரணமல்லவோ அந்த நெருப்பை அவிக்கின்றது.

அரசன்:—கெர்ட்ரூட், நாமும் போவோம்: லேர்தீஸ் கோபத்தைத்தணிக்க அதி கஷ்டப்பட்டிருக்கிறேன். அவன் சோதரி இறந்துபோனது அவன் கோபத்திற்குத் திரும்பவும் உயிருண்டாக்கும்போலிருக்கின்றது. அவன் பின்னே நாமும் போவோம் [எல்லோரும் போய்விடுகிறார்கள்.]

கே. வெங்கட்ராமய்யர், பி. ஏ.

# சந்திரமதி.

## ஏழாம் அத்தியாயம்.

(229-வது பக்கத்தொடர்ச்சி.)

குரு:—நல்லோருக்குச் செய்யும் நியாயமான சகாயமே உபகாரமாகுமல்லது, நல்லோர் தீயோர் என்ற ஆராய்ச்சியின்றி செய்வது உபகாரமன்று. ஆகையினால் தான் திருடர் முதலானவருக்கு நாம் சகாயம் செய்யும் பக்ஷத்தில் உபகாரம் செய்தவராய் ஆகாததோடு தண்டனை யடைவதற்குக்கூட உரியவராவோம்.

சந்திர:—மற்ற தர்மங்களையும் சொல்லுங்கள்.

குரு:—நாம் எவ்வளவு இல்லாமையிலிருந்தும் பிறர் பொருள்களில் கைவைக்கலாகாது. திருட்டுத்தனம் செய்தவர்களை இவ்வுலகத்தில் அரசன் சிக்ஷிப்பான்; நாம் திருடும்பொழுது ஒருவரும் பார்க்கவில்லை யென்றெண்ணிக் கொண்டாலும், திருட்டுத்தனம் எப்பொழுதாவது வெளிப்படாமல் போகாது. ஒருவேளை மறைந்தாலும், எல்லாமறிந்த கடவுளை நாம் ஏமாற்ற முடியாதாகையால் பரலோகத்தில் தண்டனை தப்பாது. ஆகையால் எத்தனை ஆபத்துகள் நேர்ந்தாலும் உயிர்போவதா யிருந்தாலும் திருட்டுத்தனம் செய்யக்கூடாது. நமக்கு யாராவது சிறிது உபகாரம்செய்தாலும் அவர்கள்செய்த நன்மையை மறந்து போகாமல் கூடுமானால் பிரதியுபகாரம் செய்யவேண்டும். நன்றியற்றவனை யெல்லோரும் பகைத்து அவனுக்குக் கெடுதியைக் கோருவார்கள். பிறர் சம்பத்தைப்பார்த்து நாம் எப்போதும் பொறாமைபடக்கூடாது. பொறாமையானது நெருப்புபோல் தான் சேர்ந்த விடங்களையெல்லாம் அழித்துவிடும். ஒருவருடைய க்ஷேமத்தைக்கண்டு பொறாதவர்கள் வியாதி யில்லாமலே வருந்துவர். நாம் எவ்விஷயத்திலும் எவரையும் மோசம் செய்யலாகாது. எல்லா விஷயங்களிலும் நேர்மையாய் நடந்துகொள்ளவேண்டும். நாம் யாருக்காவது நியாயமான விஷயங்களில் ஏதாயினும் வாக்குத்தத்தம் செய்திருந்தால் எத்தனைப்பாடாயினும் பட்டு நாம் சொன்ன வார்த்தையை நிறைவேற்ற வேண்டும். நாம் அடிக்கடி வாக்குத்தத்தம் செய்யாமல் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். பகையும் நட்பும் பேச்சுகளாலேயே வருமாகையால் கடுஞ்சொல் பேசுவதை ஒழித்துப் பிறருடன் பேசும்பொழுது மிக்க அமைதியுடன் இருக்க வேண்டும். அறிவில்லாதவர் அவசரபட்டு நம்மை யென்னசொன்னாலும் நாம் பொறுமையுடன் சகித்துக்கொண்டு போகவேண்டும். நாம் எப்பொழுதும் பிறர் குற்றங்களை அவர்கள் இல்லாத விடங்களில் ஒருவருடனும் சொல்லப்படாது. இவர்கள்பேச்சை அவர்களிடத்தும் அவர்கள் பேச்சை யிவர்களிடத்தும் சொல்லாமல், அவரவர் பேச்சை அங்கேயே மறந்துபோக வேண்டும். நாம் எல்லோரையும் கவுரவிக்கவேண்டும். நம்மை விடமேலானவர்களிடத்தில் நாம் பக்திபூண்டு அவர்கள் சொல்லும் நியாயமான வேலைகளில் அவர்களுக்குட்பட்டு நடக்கவேண்டும். நமதுசேவகர்முதலானவர்மீது காரணமின்றி கோபித்துக்கொள்ளாமல் நல்லதனத்திலேயே அவர்களைக்கொண்டு வேலைசெய்வித்துக் கொள்ளவேண்டும். எந்த விஷயத்திலும்நாம் ஆத்திரப்படக்கூடாது. ஒவ்வொருகாரியத்தையும் நன்றாய் ஆலோசித்துப் பிறகு செய்யவேண்டும், எல்லோரிடத்திலும் சமபுத்தியைவைத்து, எவ்விஷயத்திலாவது பிறர் நமது அபிப்பிராயத்தைக் கேட்குங்கால், பக்ஷபாதமின்றி நம் மனத்தில் தோன்றுவதைக்கபடமில்லாமல் கூறவேண்டும். யாதொருகாரணமுமின்றி நாம் பிறருக்கு ஒருபோதும் வருத்தமுண்டாகாதபடி நடந்து கொள்ளவேண்டும். தெய்வீகமாய் பிறரது தேகங்களில் உண்டாயிருக்கும் கோணல்களைப் பார்த்து நாம் ஒருபோதும் கேலிசெய்யக்கூடாது. யாராவது நமக்கு இஷ்டமில்லாத காரியத்தைச் செய்தாலும், வார்த்தைகளாலாவது பார்வையாலாவது நாம் அவர்களுக்கு எவ்வித வருத்தத்தையும் விளைக்கக்கூடாது. டம்பம் முதலான பிறதுர்க்குணங்களை விடுத்து எல்லோருக்கும் நம்மீது பிரீதிஉண்டாகும்படி நடக்கவேண்டும். நாம் நல்லகுணங்கள் உள்ளவர்களாகவேயிருந்தாலும் நாம் செய்யும் சகவாசத்தை யொட்டியே ஜனங்கள்நமது குணம் இப்படிப்பட்டதென்று தீர்மானிப்பார்கள். கெட்டசகவாசத்தினால் நல்லவர்கள்கூட கெட்டுப் போவதும் நல்லோர்களின் நட்பினால் துஷ்டர்கள்கூடத் திருந்துவதும் நாம் தினந்தோறும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே துஷ்டசகவாசத்தை ஒழித்து எப்பொழுதும் நல்லோர்களுடன் பழகி ஒழுகவேண்டும்.



சந்திர:—எல்லாக்காரியங்களிலும் நாம் இவ்வாறு நடக்கவேண்டுமென்று தெரிவிக்கும் விதி யொன்று ஏதாவதிருக்கின்றதா!

குரு:—உண்மைபேசவேண்டுமென்று நான் சொல்லாத முன்னும் உனக்குத் தெரியுமல்லவா. நான் பொய் சொல்லவேண்டுமென்று உனக்குப் போதித்தாலும் நீ என்வார்த்தையில் நம்பிக்கை வைக்கமாட்டாய். உனக்கு நன்மை தீமைகளைப் போதிக்கும் மனச்சாட்சி உனக்குள்ளேயே இருக்கிறது. அது நமக்குத்தர்மாதர்மங்களைப் போதிப்பது மாத்ரமன்றி பாபகாரியங்களைச் செய்தபொழுது வியசனத்தையும் புண்ணியகாரியங்களைச் செய்தபொழுது சந்தோஷத்தையும் உண்டாக்குகின்றது. இந்த மனசாட்சிக்கு விரோதமின்றி நடக்கின்றவனே புண்யவான். பிறர் நமக்கு எதைச்செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ அதையே நாம் பிறருக்கும் செய்தும்; பிறர்நமக்கு எதைச் செய்யக்கூடாதென்று விரும்புகிறோமோ அதை நாம் அவர்களுக்குச் செய்யாமலும் இருக்கவேண்டும். இஃதொன்றே எல்லா நீதிசாஸ்திரங்களினுடையவும் சாரமான மூலத்துவம் சரியானசமயம் வாய்த்தால் எல்லோரும் சன்மார்க்கர்களாயிருப்பர். ஆபத்துவந்தகாலத்தில் கூடத் துன்பங்களை யெல்லாம் சகித்துக் கொண்டு நெறிதப்பாமல் நடப்பவர் மாத்திரமே சாணை பிடித்தவுடன் மெருகுபொருந்தி ஒளிரும் வைரக்கல்போல் பிரகாசித்துப் புகழடைவார்.

(இன்னும் வரும்.) மஹேச குமார சர்மா.

# விஜயலட்சுமி.

(229-வது பக்கத்தொடர்ச்சி)

சுப்பலட்சுமி அம்மாள்:—அவன் சம்பாதிப்பதைக் குறித்து எனக்குக்கவலையில்லை. ஒருவன்பிறக்கிறதற்குமுன்னே தானே தாய்முலையில் பாலை யமைத்துவைக்கும் தெய்வம் பிறந்தபின் காப்பாற்றாதா? அவனுக்கென்று ஏதாவதொரு தொழில் ஏற்பட்டேயிருக்கும்; நாம் செய்யவேண்டியதைச் செய்து முடித்து விட்டால் அவன் எப்படி

யாவது பிழைக்கட்டும். நம்முடைய கடமையைக் கழித்துவிடுவோம். நான்கொடவாசலுக்குப் போய் என் தமையனோடுகலந்து பேசுகிறேன். என் தமையன் சுலபமாகவிவாகமுடிப்பதானால் எளிதாகமுடியும். நீ பெரியஉத்தியோகஸ்தனாக இருப்பதால் அதிக தொகை கேட்பார்கள். என் தமையன் குடித்தனக்காரனாக இருப்பதினால் சகாயமாகவே முடியும். எப்படியாவது தைமாசம் பிறந்ததும் விவாகத்தை முடித்து விடவேண்டும். இரண்டொருநாள் பொறுத்து நான்கொடவாசலுக்குப்போகிறேன். கல்யாணம் ஆகிறதாயிருந்தால் நீ எத்தனை ரூபாகொடுப்பாய்? அதைச்சொன்னால் மேலேயாகும் செலவை என் தமையனையே போடும்படி கேட்கிறேன். அவன் என் பேச்சைத்தடுத்துப் பேசமாட்டான் என்றாள். குப்புசாமி ஐயன் அம்மா நான் ஐந்நூறுரூபா கொடுக்கிறேன் என்றான்.

இந்தச்சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த லோகநாதன் மனம்வருந்தி தாயும் தமையனும் வெறுக்கும்படியான ஜன்மத்தை யெடுத்துவிட்டோம். எல்லாம் காலம்வந்து தான் ஆகவேண்டுமென்பதை இங்லீஷ்படித்தவர்கள் அறியமாட்டார்கள். கடன்பட்ட வருத்தத்திலே முழுகியிருக்கிற தமையனுக்கு இந்தநல்லறிவு தோன்றமாட்டாது. அவருடைய வார்த்தையை கேட்டு மனம் புண்பட்டுவருந்துகிற தாயாருக்குத்தான் என்ன மதியிருக்கும். நமக்கோ இன்னம் ஒரு வருஷம்வரைக்கும் நல்லகாலம்வாராது. தமையனுக்கு எதிரில் நின்று நாம் பேசுகிறவழக்கமில்லை. ஒருக்கால் அவர் நம்மைநேரில்கூப்பிட்டு உன் அபிப்பிராயம் என்னவென்று கேட்டாலும் கேட்கக்கூடும். நாம் சொல்லுகிறபடி அவர் மனதுக்குப்பிடியாது. அதனால் மனஸ்தாபம்நேரிடும். அம்மாளிடத்தில் பேசுவதினால் யாதொருபயனுமில்லை. ஆகையால் நாம் ஒருவருடனும் சொல்லாமல் தேசாந்தரம் போவதே யுசிதம். ஒருவனுக்கு விதிபிரதிகூலமாயிருக்கும் போது சுற்றமுந்துணையும் பகையாகின்றன. தன் கைகால்முதலிய அவயவங்களே பகையாகிறபோது மற்றவரைக்குறித்துப் பேசுவானேன். விதி அநுகூலமான போதுபகைவரும் உறவாகிறார்கள். அப்போதுதனலட்சுமி தானே வந்தடைகிறாள். அவன் கால்பட்டகல்லும் பொன்னாகிறது. அவன் செய்கிற செய்கைகள் எல்லாம் புகழ்ச்சியாகவே முடிகின்றன என்று பலவாறாக யோசித்துக்கொண்டு, கதவைத்தட்டாமலும், போஜனம் செய்யாமலும் திண்ணையிலேயே படுத்துக்கொண்டு நித்திரையில்லாமல் நெடுநேரம்புரண்டுகொண்டிருந்து, விடியுமுன் எழுந்திருந்து வீட்டை விட்டுப் புறப்பட்டு இராமலிங்கத்தின் வீடுபோய்ச் சேர்ந்தான். லோகநாதன் பிரிவையெண்ணியிரவெல்லாம் நித்திரையில்லாதிருந்த இராமலிங்கம் படுக்கையை விட்டெழுந்திருந்து தெருத்திண்ணையில் வந்துட்கார்ந்து பல்தேய்த்து வாய்கொப்பளித்து முகம்கழுவித் திருநீறணிந்து தெய்வத்தியானம் பண்ணிக்கொண்டிருந்தான். லோகநாதன் வருகிறதைப் பார்த்துத் திடீரென்று எழுந்திருந்து எதிர்கொண்டு போய் மரியாதையோடு அழைத்துப் போய் ஒரு நாற்காலியில்உட்காரவைத்துப் பேசிக்கொண்டிருந்தான். லோகநாதன் இராமலிங்கத்தினிடத்தில் ராத்திரிதன்தமையனுக்கும் தாயாருக்கும் நடந்ததைக்கூறி இனியொருக்ஷணப்பொழுதுகூடத் தாமதிக்கக்கூடாது. நான்யாத்திரைபோய் வருகிறேன். நான் சொன்னவற்றை மறவாதே. சமயமறிந்து தாயாருக்கு மாத்திரம் உண்மைகூறிச் சமாதானப்படுத்து என்று கூறியெழுந்திருந்து சிறிதுதூரம் நடந்து போனான். இராமலிங்கம் அவனைத்தொடர்ந்துபோய்த்தன் கையிலிருந்த பத்து ரூபாநோட்டை அவனிடம்தந்து இதைச்செலவுக்கு வைத்துக்கொண்டு சுகமாய்ப் போய்வாரும். அடிக்கடி எனக்குக்கடிதமெழுதும். செலவுக்குவேண்டியிருந்தால் கிடைத்ததை உடனே அனுப்புகிறேன். அதைரியப்படாதேயும். போய்வாருமென்றுகூறி அவனிடம் விடைபெற்றுக்கொண்டு வீடுபோய்ச்



சேர்ந்தான். லோகநாதன் அதிப்பிரயாணமாகப்புறப்பட்டுக் காவேரியாற்றைக் கடந்து அக்கரைப்போய் அங்கே ஒரு தோப்பில் உட்கார்ந்து யாதுசெய்வதென்று யோசித்துக்கொண்டிருந்தான். அந்தத் தோப்பின் கீழ்ப்புறம்கொள்ளிடம்போகும் இரஸ்தா. அந்தரஸ்தாவில் இரண்டுமூன்றுபேர்கள் நின்றுகொண்டு உடையார்பாளையத்தில் நடக்கும்நவராத்திரோற்சவ சிறப்பையும், மகாராஜாவினுடைய உதாரகுணத்தையும்பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். அதைக்கேட்டலோகநாதன் அப்படியானால்நாமும்உடையார்பாளையம்போய்அந்தஉற்சவக் காட்சியைக்கண்டு தெரிசித்தபின் மற்ற விஷயங்களைப்பற்றியோசிப்போம் என்று தனக்குட் சொல்லிக்கொண்டு அந்தச்சிநேகர்களைப்பார்த்து ஐயன்மீர்! உடையார்பாளையம் போகும் மார்க்கமெது என்று கேட்டான். அவர்கள் ஐயா! இந்த ரோட்டின் மேலேயே போனால் எதிரேகொள்ளிடநதி தோன்றும். அதைப்பரிசிலேறிக்கடந்துஅக்கரைபோனால் அவ்விடத்தில் உடையார்பாளையம் போகும்ஜனங்கள் பலரிருப்பார்கள்; அவர்களோடுசேர்ந்து போகலாமென்றார்கள். அப்படியே லோகநாதன் கொள்ளிடக்கரைதாண்டிப் போய் மதனத்தூரில் அன்று பகல் தங்கியிருந்து, சாயங்காலமானபின் உடையார் பாளையம் போகும்பிரயாணிகளோடு சேர்ந்து பிரயாணப்பட்டான். அந்தக்கூட்டத்தில் லோகநாதனோடு கூடப்பள்ளிக்கூடத்தில் படித்த கிருஷ்ணசாமிநாயக்கன் என்பவன் கண்டு ஐயா! எங்கேபோகிறீரென்றான். லோகநாதன், கிருஷ்ணசாமீ நான் உடையார்பாளையம் போகிறேன் என்றான். அப்படியானால் எனக்கு நல்லதுணைகிடைத்தது, நானும் அங்கே தான் போகிறேனென்று கூறிஅவனுடன் கலந்து வார்த்தையாடிக்கொண்டு போனான். இருவரும் பிரயாணிகளோடு கூடி இரவு பகலாக நடந்து போய் உடையார்பாளையம் சேர்ந்தார்கள். அன்று நவராத்திரி ஒன்பதாநாளாகிய மஹாநவமி. நவராத்திரி தேவி ஆராதனைநாட்களுட்சிறந்த திருவிழாவும் விரதநியமுமாய்; உமாதேவிபரமசிவனைப் பிரிந்து பருவதராஜனுக்குப் புத்திரியாயவதரித்துத் தவஞ்செய்துகொண்டிருந்த காலத்தில் தேவர்களுக்கு அநுக்கிரகித்தருளினள். சூரபத்மாசுரன் வீரமகேந்திரத்தில் அரசுபுரிந்திருந்தபோது, அவனுடைய படைவீரர்களுட் கொடியதுஷ்டரும், தேவருக்கும முனிவருக்கும் துன்பஞ்செய்த மஹாபலபராக்கிர சாலிகளுமாகிய சும்பாசுரன், நிசும்பாசுரன், சண்டாசுரன், முண்டாசுரன், மஹிஷாசுரன் முதலிய தானவர்களைச் சங்கரித்து உலகுக்குபகாரம்புரிந்தனள். இவ்வொன்பது நாட்களுள் முதல் மூன்று நாட்களில் துர்க்காதேவி சொரூபமாகவும், இரண்டாவது மூன்றுநாட்களில் இலட்சுமி சொரூபமாகவும், மூன்றாவது மூன்றுநாட்களில் சரஸ்வதி சொரூபமாகவும் பராசக்தியை ஆராதிப்பது பெரியோர்கொள்கை. இது மிகமுக்கியமானதாகையால் பரதகண்டத்திலுள்ள ஆரியர்களெல்லாராலும் அநுஷ்டிக்கப்படுகின்றது. க்ஷத்திரியர்கள்மிகுதியுங்கொண்டாடுவார்கள். இதனால் வீரம், ஜயம், கல்வி, ஐசுவரியங்களுண்டாய்ப் பூலோகத்தில் சுகபோகங்களையநுபவித்துத் தேகாந்தத்தில் சொர்க்கவாழ்வும் கிடைக்கும் என்பது நூல்களின்கருத்து. இராஜாக்கள் இவ்வொன்பது நாட்களிலும் விரதமிருந்து தான தர்மங்களைச் செய்து, பத்தா நாள் ஆயுதபூசை, செய்து ஆயுதமெடுத்து அம்பு போட்டு வீட்டுக்கு வருவார்கள். அது வரையிலும் வீட்டை விட்டு வெளியில் வருவதில்லை. பலவித்வான்களுடைய பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். பத்து நாட்களுமானபின் அவ்வவ்வித்வான்களுடையசாமர்த்தியத்துக்கேற்ற சன்மானங்கள் அளித்துச் சிறப்புச்செய்வார்கள். சாதாரண ஜனங்கள் மஹாநவமி தினத்தில்மாத்திரம் சரஸ்வதி பூஜை செய்வார்கள். இன்றுதினம் தான் கடைசிநாளாகையால் உடையார்பாளையம் இன்றுதினம் சொர்க்கலோகம்போல அலங்கரிக்கப்பட்டி

ருந்தது; வருவோர்போவோர்களுக்குத்தக்கப்படிப்பலவிடங்களில் அன்னசாலைகள் ஏற்படுத்தியிருந்ததுப் போஜனமளிக்கப்பட்டது. எங்கேபார்த்தாலும் வித்துவான்கள் நிறைந்திருந்தார்கள். போஜனம் தட்சிணைமுதலியவற்றைக் குறித்துப் பலதேசங்களி லிருந்தும் ஏழைப் பார்ப்பார்கள் குடும்பசகிதமாக வந்திருந்தார்கள். வீதிகளில் ஆங்காங்கு பற்பலவிநோதங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அந்தவிநோதங்களைப் பார்ப்பதற்காக அநேகர் வந்திருந்தார்கள். தெருத்திண்ணைகள்தோறும் வித்துவசிரோமணிகள் கூட்டங்கூட்டமாகச்சேர்ந்து உட்கார்ந்து கொண்டு தங்கள் தங்கள்கல்வி நலம்புலப்படுமாறு பிரசங்கித்துக்கொண்டிருந்தார்கள். போலீஸ்கான்ஸ்டேபில்களும் அரண்மனைச்சிப்பாய்களும் களவுமுதலியகுற்றங்கள் நேரிடாதபடி காவல்செய்து உலாவிக்கொண்டிருந்தார்கள். பற்பலவிடங்களிலிருந்து வியாபாரிகள் அற்புதபண்டங்களைக் கொண்டுவந்து கடைபரப்பி வியாபாரஞ்செய்து கொண்டிருந்தார்கள். இந்த அதிசயக்காட்சிகளைக் கண்டவுடனே லோகநாதனுக்கு மனதிலுள்ள துக்கங்களெல்லாம் ஒருவாறு மாறிப்போய் ஆனந்தம் பொங்கினது; இதுவரையி லிப்படிப்பட்ட அற்புதக்காட்சிகளை அவன் கண்டதேயில்லை. ஆதலால் அவன் ஆனந்தபரவசனாய்த்தெருவீதியில் போய்க்கொண்டிருந்தான். அவ்வாறு அக்கிராரவீதியில் போய்க்கொண்டிருக்கையில் அங்கொரு திண்ணையின்மேல் நாலைந்து வித்துவான்கள் தங்கள் புலமை வெளிப்படப்பிரசங்கித்துக் கொண்டிருப்பதையும், அங்குள்ள சாய்மனையில் ஒரு பிரபுவானவர் சாய்ந்துகொண்டு மந்தகாசமுகத்துடன் அந்தப் பிரசங்கங்களைக் கேட்டு மகிழ்ந்திருப்பதையுங் கண்டான். அந்தப் பிரசங்கம்செவிகளுக்கு ஆனந்தமாயும் மனதுக்கு மகிழ்ச்சியாயு மிருந்தபடியால் லோகநாதனும் அதைக்கேட்கும்படி அங்கேபோய் ஒரு பக்கத்தில் உட்கார்ந்தான். அந்தப் பிரபுதான் உடையார்பாளையந்தாசில் சுப்பிரமணிய ஐயரவர்கள். ஐயரவர்கள் சமஸ்கிருதபாஷையிலும் தமிழ்பாஷையிலும் மிகவல்லவரானபடியால், மழவராயபூபதி அவரைப் பரீக்ஷகராக நியமித்திருந்தான். அதுநிமித்தம் அவர் அங்கேவந்து வித்துவான்களுடைய தராதரங்களை யாராய்ந்து கொண்டிருந்தார். கோடிலிங்க தீட்சிதரும் இராமசந்திர தீட்சிதரும்கூட அங்கேயிருந்தார்கள். அப்பொழுது அந்தப் பிரபுவானவர் லோகநாதனுடைய பிரசன்னவதனத்தைக் கண்டு மகிழ்ந்து, அவன் பக்கந்திரும்பி ஐயா! நீரெந்தவூர்! உமதுபேரென்ன? என்று விசாரித்தார். லோகநாதன் தானிருப்பது கும்பகோணமென்றும், தான் தமிழ்ப் பாஷையிலும் ஸமஸ்கிருத பாஷையிலுஞ் சிறிது பயின்றிருப்பதாகவும், வித்துவபரீக்ஷையைக் குறித்து வந்திருப்பதாகவும் கூறினான். அதுகேட்டபிரபுவானவர் மனமிக மகிழ்ந்து, அவனைச்சில கேள்விகள் கேட்டார். அதற்கு அவன் வெகுவிநயமாகவும், சாதுரியமாகவும் விடைகொடுத்தான். அதனால் அந்தப்பிரபுவும் அங்கிருந்த வித்துவான்களும் சபாசென்று மெச்சினார்கள். பிறகு பிரபுவானவர் ஐயா! லோகநாதா! நான்தான் பரீட்சகன். நீர் இவ்விடத்திற்குப் புதியவராதலால் ஸ்நானம் பண்ணிவிட்டு இங்கேயே போஜனத்துக்கு வாரும். அதன்பின் நாமிருவரும் சேர்ந்து சபாமண்டபத்துக்குப் போவோமென்று மரியாதையாயுரைத்தார். லோகநாதன் அதற்கிணங்கி ஸ்நானத்துக்குப் போனான். போகும்பொழுது, "அறம்பொருளின்பமும் வீடும்பயக்கும், புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்று, அற்றுழியுங் கைகொடுக்கும், கல்வியி னூங்கில்லை, சிற்றுயிர்க் குற்றதுணை." "கற்றவர்க்குச், சென்றவிடமெல்லாஞ்சிறப்பு". எனவும், கூறியுள்ள ஆன்றோர்வசனங்களின் அருமையை நினைத்து ஆகா! முன்னோர் கூறிய முதுமொழிகள் எவ்வளவு உண்மையாயிருக்கின்றன. நாம் இந்தக்கல்வியிற் சிறிது பயின்றிருப்பதனாலன்றோ இங்கே மரியா



தைபெற்றோம்; இல்லாவிட்டால் நம்மை யார்திரும்பிப்பார்ப்பார்கள் "யாதானு நாடாமா ஊராமாலென்னொருவன், சாந்துணையுங்கல்லாதவாறு" என்றதேவர் திருவாக்குக்குவைகம் மாறேது? என்று கருதிமுன்னோர்களைப்புகழ்ந்து மகிழ்ந்து போய் ஸ்நானம்பண்ணி ஜபதபங்களை முடித்துக்கொண்டு ஐயரவர்கள் ஜாகை போய்ச்சேர்ந்தான். இதற்குள்ளாக ஐயரவர்கள் நித்தியகர்மானுஷ்டானங்களையும் சாளக்கிராமபூஜையும் முடித்துக்கொண்டு லோகநாதன் முதலானவர்களுக்காக காத்துக்கொண்டிருந்தார். பிறகு எல்லாரும் போஜனத்துக்கு உட்கார்ந்தார்கள். ஐயரவர்கள் லோகநாதனுடைய மலர்ந்த முகவிலாசத்தினால் நேத்திரானந்தமும், மதுரவசன வளமையால் சுரோத்திரானந்தமும், அவனுடைய பக்திவிநய வணக்கங்களினால் மாறாத மனமகிழ்ச்சியையு மடைந்து அவனிடத்தில் தம்மையறியாமலன்புபெருக ஆனந்தபரவசராய் அவனைப்பார்த்து ஐயா! லோகநாதா! இன்னும் ஒரு வாரம் நானிங்கேயிருப்பேன், அதுவரைக்கும் என்கூடவே நீர் இருக்கவேண்டும். அப்புறம் ஐயங்கொண்ட சோழபுரம் போய் மற்றவிஷயங்களைக் குறித்துப் பேசிக்கொள்வோம் என்ன, அவனும் அப்படியே ஆகட்டுமென்றான். போஜனமுடிந்தபின் எல்லாரும் புறப்பட்டு அரண்மனை போய்ச் சேர்ந்தார்கள்.

(இன்னும் வரும்.)

தேவகுஞ்சரி அம்மாள்.

## ‘கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை.’

இவ்வாக்கியமானது; நமது மூதாட்டியாராகிய ஒளவையார் என்னும் பெண்மணியால் "கொன்றைவேந்தன்" என்னும் நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, "கற்பென்று சொல்லுஞ் சிறந்த குணத்தின் தன்மையானது தன்னை மணம் புரிந்த கணவனது வார்த்தைக்கு மாறுபட்டு நடவாதிருக்கையாம் என்பது பொருளாகும். அதாவது ஒரு பெண்பால் தன் கணவன் இடும் கட்டளையின்படியே நடக்க வேண்டுமென்பதாம். இதனால் கணவன் எவ்வித கட்டளையை இட்டபோதிலும், அதற்குப் பெண்பால் இணங்கி நடக்கவேண்டியது அவசியமோவென்று சிலர் சந்தேகிக்கலாம். அதன் கருத்து அப்படியன்று. ஓர் ஆண்பால் ஒரு பெண்பாலை தக்க காலத்தில் மணம் புரிவது தனனுடைய இல்லற தர்மத்தை சரியாக நடத்துவதற்கேயல்லது வேறல்ல. இவ்வாக்கியமானது, இல்லற தர்மத்தின் வரம்புக்குட்பட்டவர்களுக்கேயன்றி வரம்பு கடந்தவருக்கு சொல்லப்பட்டதன்று. அவ்வரம்பில் நிற்பவர்கள், அவ்வில்லற தருமத்தை நடத்துவதற்கு வேண்டிய கட்டளைகளை யிடுவார்களே யல்லது, மற்றப்படி வேறொன்றையும் இடார்கள் அவைகளுக்கு இணங்கியே நடந்து தீரவேண்டும். சிலர், இவைகள் பழையநாள் வழக்கங்கள்; தற்காலத்து வழக்கங்களுக்கு முற்றும் மாறுபடக் கூடியவைகள். முன்காலத்தில் பெண்பாலரில் அநேகர் படியாமலிருந்தார்கள். ஆகையால் அவர்கள் அக்கட்டளைக்கு அடங்கி ஒடுங்கி நடந்து வந்தார்கள். இக்காலத்திலோ பெண்பாலாரில் அநேகர் கல்வியறிவுடையவர்களா யிருக்கிறார்கள். இவர்கள் அவ்வித கட்டளைகளுக்கெல்லாம் அடங்கி நடந்து வந்தால், தற்சுதந்தரமற்று, எல்லாவற்றிற்கும் பிறர் சுதந்தரத்துக்கே எதிர் பார்க்கவேண்டிவரும். அதனால் நம் தேசம் சுகப்படாது என்று சிலர் சொல்லலாம் கணவருடைய கட்டளைக்கு காதலி அடங்கி நடக்கவேண்டுமானால், அதனால் சுதந்தரமும் கல்வியின் பெருமையும் கெட்டுப்போகாது. கற்பு என்பதற்குப் பொருள் வேறு

என்று சிலர் எண்ணலாம். கற்பு என்றால் கல்வியறிவென்றே பொருள் கொள்ளப்படும். அதுபற்றியே சங்கத்தாரும் தங்கள் நூலொன்றில் "குலனுடைமையிற் கற்புச் சிறந்தன்று" என்று கூறியுள்ளார்கள். நல்லகுலத்தை உடைத்தாயிருப்பதினும் கல்வியறிவு மேலானது என்பது பொருள் படும். அதன்படியே பெண்களுக்கு கல்வியறிவினுண்டாகும் பயனாவது கணவன் சொற்படி நடப்பதேயென்று கல்வியறிவுடைய பெண்களுக்காகவே அவ்வாக்கியம் நமது மூதாட்டியாரும், கல்வியறிவிற் சிறந்தவருமாகிய ஔவையாரால் கூறப்பட்டதென்று கருதுவதே புத்திசாலிகளுக்கழகாகும். வேறுவகை கருதுவது அவ்வளவு சிறப்பாகமாட்டாது. அதற்கடுத்த வாக்கியம் "காவலனே பாவையர்க்கழகு" என்று பிரகாசிக்கிறது. அக்கற்பெண்ணும காவலினால் தன்னைக்காத்துக்கொள்வது பெண்பாலார்க்கு அழகாகும், என்பது அதன் பொருளாகும். அக்காவலாவது கணவருடைய வார்த்தையேயாகும். இதன் உண்மைப் பொருளை உலகத்தாருக்கு விளக்கிக்காட்டவே தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும் நமதன்னையாராகிய வாசுகியம்மாளுடன் இல்லறதருமத்தை நடத்துங்காலத்தில் நாயனார் சாப்பிடுங்காலத்தில் ஒரு கிண்ணத்தில் ஜலமும், ஒரு ஊசியும் கொண்டுவந்து வைக்கும்படி சொல்லியிருந்தார். அதன்படியே அந்தம்மாளும் செய்துவந்தார்கள். அதனாலுண்டாகும் பிரயோசனத்தை அந்தம்மாள் திகழுக்காணவுமில்லை. ஏன் இதை வைக்கச்சொன்னீர்களென்று கேட்கவுமில்லை. மற்றுகட்டங்களின் பிரயோஜனங்கள் யாவையும் தெரிந்தே செய்துவந்தார்கள். அதைக் கேட்டால் கற்பெனும் கல்வியறிவுக்கு எங்கே பங்கம்வந்துவிடுமோ வென்பதாக அந்த அம்மாள் கேட்டுத் தெரிந்துகொள்ளாமலே செய்து வந்தார்கள். கடைசியாக அந்தம்மாளுக்கு பிராணன் போகுஞ் சமயத்தில் கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை காணென்ற ஔவையதன் வாக்கை, தகைசலனையே பூண்டு தன்பதிக்கு நாடோறும் பணிசெய் தன்மையியற்றி, சொற்பொருடெரியா வொருபணிப்பொருளைச்சொல் வெளுமுகதரிசனத்தாற், கறியற்றி, பிணைநீஇத்திக் கேட்டாரடிக் கிழ்க்கலந்த வெண்ணமமை தாளேபோற்றி" வாயினால் கேட்காமல்முகத்தைப்பார்த்து, அதன் உபயோகத்தை சொல்லத் தெரிந்துகொண்டு மோட்சவுலகம் போனதாகத் தெரியவருகிறது. அவர் கிண்ணத்தில் தண்ணீரும், ஒரு ஊசியும் வைக்கச்சொன்னது தான் புசிக்கும்போது சாதம் கீழே தவறி விழுந்தால் அதை ஊசியால் எடுத்து தண்ணீரில் அலம்பி சாப்பிடுவதற்கேயாம். அவ்விதம் சாதம் தவறி கீழே விழுந்ததும் கிடையாது. அவர் ஊசியால் அதை யெடுத்து அலம்பிச் சாப்பிட்டதும் கிடையாது. அந்நிகழ்ச்சியைத் தன் கண்ணாரப் பார்த்திராமையால் அவ்விஷயம் ஒன்றுமாத்திரம் தமக்குத் தெரியாமலிருந்தது. ஒரு தினம் அந்தம்மாள் கிணற்றில் தண்ணீர் மொண்டுகொண்டிருக்கும்போது நாயனார் அழைத்தாராம். அந்தம்மாள் கிணற்றிலிருந்து குடத்தை எவ்வளவு தூரம் தூக்கினார்களோ அவ்விடத்திலேயே விட்டுவிட்டு வந்தார்களாம். அக்குடம் அப்படியே தாழாமல் நின்றிருந்ததாம். "இதல்லவோ காவலனே பாவையர்க்கழகு" என்பதின் இலட்சணம். பெண்கள் புருஷர்களுக்கு இல்லறதர்மத்தை நடத்துவதற்கு இன்றியமையாத துணைக்கருவிபோலமைந்துள்ளவர்கள். இவர்களுடைய சுதந்தரமில்லாது புருஷர்கள் ஒரு காரியத்தையும் செய்ய இயலாதவர்களாயிருக்கிறார்கள். அப்படியிருக்க பெண்களைத் தற்சுதந்தரமற்றவர்களென்றும், புருஷர்களுடைய சுதந்தரத்தையே பெண்கள் எதிர்பார்க்கவேண்டியவர்களாயிருக்கிறார்களென்றும் கூறுவது சுத்தபிசகு. இந்துமத ஆசாரத்தின்படி, ஆண்பாலரும், பெண்பாலரும் ஒருவருடைய சுதந்தரத்தை ஒருவர் அநுசரித்து நடக்க வேண்டியவர்களாகவே யிருக்



கின்றார்கள். அவ்விதம் நடவாவிட்டால் இல்லறதர்மம் சரிவர நடவாது. புருஷர்கள் பெண்களுடைய சுதந்தரத்தை இன்றியமையாதனவாக மேற்றுக்கொண்டு நடப்பது போல, பெண்களும் புருஷர்களுடைய சுதந்தரத்துக்கு மாறுபடாது நடக்கவேண்டிய தற்று கடமைப்பட்டவர்களாகவேயிருக்கின்றார்கள். அவ்விதம் நடவாவிட்டால் இல்லறதர்மம் நடவாமற்போகும். இது பற்றியே

"பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலும் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாறாக விருப்பாளே யாமாயின்
கூறாமற் சந்நியாசங் கொள்."

என்று மேலோர் கூறியுள்ளார்கள். இந்தப்பாடலின் கருத்தாவது புருஷனுடைய மனதின்படி பெண்கள் நடவாவிட்டால் புருஷர்கள் துறவறத்தை மேற்கொளளும்படி சொல்லப்பட்டிருப்பதேயாம். பெண்களுடைய மனதின்படி புருஷர்கள் நடவாவிட்டால் பெண்கள் எதை மேற்கொள்வதென்று சிலர் சந்தேகிக்கலாம். புருஷர்கள் பெண்களுடைய மனதின்படி நடக்கக்கடமைப்பட்டவர்களென்பது உலக அநுபவத்தில் யாவரும் வெள்ளிடைமலைபோலத் தெள்ளிதினுணரக்கூடிய விஷயமாயிருக்கிறது. ஒரு புருஷனானவன் காலையில் தன் தூக்கத்தைவிட்டு எழுந்ததுமுதல், இரவில் தான் படுக்கும்பரியந்தம் உலகில் கஷ்டப்படுவதெல்லாம், பெண்களின் பாதுகாப்பினிமித்தமேயல்லது வேறொன்றுக்குமல்ல. அப்படி கஷ்டப்பட்டுக்கொண்டு வரும் ஊதியம் எவ்வளவு குறைவாயிருந்தாலும், அதைப்பரிவாயேற்று, அதனாலாகக்கூடும் உணவாதிகளைச் செய்து தன்புருஷனுக்கு ஊட்டி, தானும் உண்டு சுகித்திருந்தால் புருஷன்பட்ட கஷ்டத்துக்கு ஒருவித ஆறுதலுண்டாகும். இதனாலன்றோ மனிதர் வசிக்கும் இடத்திற்கு வீடு என்கிற ஒரு பெயரும் அமைந்துள்ளது. ஒரு புருஷனானவன் தான் படும் கஷ்டத்திலிருந்து விடுபட்டு சுகித்திருக்கும் ஓர் இடமாகையால் அந்த இடத்திற்கு காரணப்பெயராய் வீடென்கிறபெயரமைந்துள்ளது. இதன்படியே உலகபந்தத்திருந்து விடுபட்டு ஒரு ஆத்துமா போகும் மோட்சமாகிய ஒரு இடத்துக்கும் வீடு என்கிற பெயர் ரூடியாயமைந்துள்ளது. உலகவீட்டில் ஒரு புருஷனுக்கு சுகம் உண்டாவது பெண்களுடைய சுதந்தரத்தில் அமைந்திருக்கின்றது. அதாவது புருஷன் இஷ்டப்படி நடப்பதுதான். அப்படி நடவாவிட்டால் ஒரு புருஷனுக்கு எவ்விதம் சுகம் உண்டாகும்? இதனைத்தான் கற்பு என்று பெரியோர்கள் பெண்களுக்கு சிறந்த பூஷணமாக சொல்லியிருக்கிறார்கள். அந்த கற்பும் கல்வியறிவினால் பிரகாசிக்கக்கூடியதாயிருக்கின்றது. அதுபற்றியே நாயனாரும் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந் திண்மையுண்டாகப்பெறின்" என்று பெண்களுக்குகல்வியறிவு வேண்டியது அவசியமென்று கூறினாரென்றாலும் பொருந்தும். அவ்வித கல்வியறிவையுடைய பெண்கள் புருஷர் சொற்படி நடவாமல் மாறுபட்டு நடப்பார்களானால் ஒரு புருஷனுக்கு ஆத்மசுகம் எங்கிருந்துண்டாகும். ஒரு நாளெல்லாம் புருஷன் தேகசுகத்தின்பொருட்டு கஷ்டப்பட்டு வீடுவந்து சேர்ந்தபிறகு தான் தன் மறுமைக்கு வேண்டிய ஆத்மசுகத்தைத் தேடுவதற்கு போதுமான சாவகாசமுள்ளவனாயிருக்கிறான். அக்காலத்திலும் வீட்டில் தன்மனதுப்படி ஒத்துவராத பெண்பாலுடைய கஷ்டத்துக்குள்ளாவானானால் ஆத்மசுகத்தைத் தேடுவதற்கு காலம் எங்கிருந்து வரும்? இதுபற்றியே

"இல்லாளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்கு மேலவ்வில்
புலிகிடந்த தூறாய்விடும்."

என்றும் மேலோர் கூறியுள்ளார்கள். ஆகையால் ஒரு புருஷன் தேகசுகத்தோடு ஆத்ம சுகத்தையும் பெண்களினுதவியைக்கொண்டே அடைய வேண்டியவனு யிருக்கிறன்.

(இன்னும் வரும்.)

அம்மாகண்ணு அம்மாள்.

# NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

அனிபெஸண்ட் அம்மையார். :—அனிபெஸண்ட் அம்மையார் தியஸாபிகல் சபையின் பிரஸிடென்டாக அதாவது கர்னல் ஆல்காட்டின் ஸ்தானத்தில்; இருக்கும்படி தெரிந்தெடுக்கப் பட்டதாய் இங்கிலண்டிலிருந்து தந்திவந்திருப்பதாய் அடையாறு தியோசி சபையார் நமக்குத் தெரிவிக்கின்றார்கள்.

*   *   *

ஸர் டென்ஸில் இபெட்ஸன். :—பஞ்சாப் லெப்டினெண்ட் கவர்னர் ஸர்டென்ஸில் இபெட்ஸன் தொண்டையில் உண்டாயிருந்த நோய் குணமாய் விட்டதாயும் அவர் இம் மாதம் 4-ஆம் தேதியன்று புறப்பட்டு இந்தியாவுக்கு வந்து சார்ஜ் ஒப்புக்கொள்வாரென்றும் ஸிம்லாவுக்குத் தந்திசமாசாரம் வந்திருப்பதாய்ச் சொல்லப்படுகிறது.

*   *   *

மகம்தியப் பெண் கல்வி :—ஐக்கிய மாகாணத்திலுள்ள மகமதியப் பெண்களின் கல்வியின் அபிவிர்த்திக்காக அலிகாரில் ஒரு பெண்பாடசாலை ஸ்தாபிப்பதற்கு கவர்ன்மெண்டார் 15 ஆயிரம் ரூபாய் கிராண்டு கொடுத்திருக்கிறார்களாம். இந்தியா முழுவதில் மகமதியர்களுடைய வித்தியாபிவிர்த்திக்கு அலிகார் தலைமைதலை நகராய் விட்டதென்பதில் தடையில்லை. ஆனால் சென்னையில் மகம்தியர்களுக் காகக் கவர்ன்மெண்டார் ஒரு ஹைஸ்கூல்மட்டும் தான் ஸ்தாபித்திருக்கிறார்கள், காலேஜாவது பெண்பாடசாலைகளாவது கிடையாது.

*   *   *

மிஸஸ் கமலாகரம். L. M. S. :—இப்பெண்மணியார் 7-வயதில் மராத்தி பாஷையில் தேர்ச்சியபின் இங்கிலீஷும் கொஞ்சம் கற்றுக்கொண்டே 11 வயதில் மராத்தியில் மிக்குயர்ச்சியாய் விளங்கி யிருந்து, பிறகு இவரின் மகிழ்ச்சிகொண்டு பூனா கவர்ன்மெண்டு ஹிந்து கரல்ஸ் ஹைஸ்கூலில் விட்டுப் படிப்பித்ததில் பம்பாய் மாகாணத்து முதல் ஹிந்துப்பெண் மெட்ரிகுலேட்டாயினர். உடனே விவாகமாய்க் குழந்தைகள் பிறந்துவிட்டது பற்றிக்கல்வி விருத்திக்குத் தடையாய் விட்டாலும் மேற்கொண்டு வைத்திய சாஸ்திரத் தேர்ச்சியைவிரும்பி பம்பாய் கிராண்டு மெடிக்கல் காலேஜில் படித்துவர தேகசௌகரியம் சரிப்படாமல் மதிராஸ் வந்து சேர்ந்தும், கணவனுருக்கு பம்பாயில் அலுவலாயிருந்த வருத்தமும் ஒழிந்து மதிராஸிலேயே கிடைத்துவிட்டதாம். இங்கே வந்து சுகப்படுத்திக்கொண்டபிறகு மெடிக்கல் காலேஜில் சேர்ந்துகிருபாய் சத்தியநாதன் ஸ்காலர்ஷிப்பெற்று படித்தும் F. A. பரீக்ஷையில்லாமல் L. M. S. பரீக்ஷைக்கு லாயக்கில்லாமையால் F. A. க்கும் படித்து 5 வருஷகாலம் படமுடியாத சிரமப்பட்டுக் கொண்டு ஆனரரி ஸெர்ட்டிபிகேட்டுகளுடன் தேறிய திறம்புகழத் தக்கதேயாகும். இதோடு நில்லாமல், இனி இங்கிலண்டுக்கும் போய்ப்படித்துப் பட்டம் பெற்றுவரத் தீர்மானித் திருப்பதாயறிவது இன்னும் மெச்சத்தக்கதாகு மென்னத் தடையின்றே.

279 REGISTERED 23 DEC 1907 MADRAS.

ஸ்ரீ

# சக்ரவர்த்தினி.

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா,
ணுண்மை யுறவோங்கு முலகு."

Vol 2 | MADRAS, JULY 1907. | No. 12.
தொகுதி 2. | சென்னை, 1907-ளு ஜூலை மீ. | பகுதி 12.

## தாய் மகளுக்குக்கூறிய புத்தி.

திருவாசி யென்னும் ஊரிலே செல்வத்திற் சிறந்த பெரிய பிரபுவாகிய நடராஜையரென்பவர் மீனாட்சி யென்கிற மனைவியோடு கூடி இல்லறம் நடத்திவரும் காலத்தில் ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் பிறந்தார்கள். புத்திரனுக்கு இராமசந்திர னென்றும் பெண்ணுக்கு ஞான சுந்தரி யென்றும் பேரிட்டு வெகு செல்வமாக வளர்த்து வந்து தகுந்த வயதில் வித்தியாரம்பஞ் செய்வித்தார். ஞானசுந்தரியைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாமல் தாமே கல்வி கற்பித்து வந்தார். அவள் நாளுக்கு நாள் கல்வியில் தேர்ச்சி அடைந்து சிறந்த புலமையுடைய வளானள். பத்து வயதானவுடன் விவாகஞ் செய்து வைத்தார். ஞானசுந்தரி கல்வியிற் சிறந்திருந்தது போலவே நற்குண நற்செய்கைகளிலும் சிறந்தவளாய்த் தன் மாதாபிதாக்களுக்கும் தமையனுக்கும் அடங்கி அவர்கள் சொல்லை மீறாமல் நடந்து எல்லாராலும் புகழப்பட்டு வந்தாள். பதினைலாம் வயதில் அவளுக்குச் சோபன கல்யாணம் நிறைவேறியது. இரண்டு மாதங்களுக்குப்பின் அவளுடைய மாமியார் அவளை அழைத்துக்கொண்டு போகவந்தாள். தாய் தகப்பனுக்கும் தமையனுக்கும் அவளைப் பிரிய மனமேயில்லை. இல்லாவிட்டாலும் என்ன செய்யலாம் புக்ககத்துக்கு அனுப்பியே தீரவேண்டும். இதைக் குறித்து மிக்க கவலைப்பட்டுக் கடைசியில் ஒருவாறாக மனந்தேறி மாமியாரோடு கூட அனுப்பத்துணிந்தார்கள். ஊருக்குப் போவதற்கு முதல் நாள் இராத்திரி ஞான சுந்தரியின் தாயார் அவளைத் தன் அருகில் அழைத்து மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சிச் சீராட்டியபின் அவளை நோக்கிக் கூறுகின்றாள். என்னருமை மகளே! நீயென்னை விட்டுப் பிரிந்து போய்த் தனியாக வசிக்கும்படியான காலம் சமீபித்தது. அதைக் குறித்துக் கவலைப்படுவதில் பிரயோசனமில்லை. பவளம், முத்து, பொன், இரத்தினங்கள் பெண்கள், கல்வியிற் சிறந்த புலவர்கள் இவையெல்லாம் தாம் பிறந்த இடத்தில் இருந்தால் மகிமை பெறுவதில்லை. மறுதேசத்தில் தகுந்த இடத்தில் போய்ச் சேர்ந்தால் தான் மகிமையுண்டாம். நீயும் உன் கணவன் வீட்டுக்குப்போய் வசித்தால்தான் உனக்குப் பெருமையுண்டாகுமே ஒழிய என் வீட்டிலிருந்தால் பெருமை அடையமாட்டாய்

ஆகலால் அதைக் குறித்து உனக்குச் சில புத்தி மதிகள் சொல்லவேண்டியது என் கடமை; சொல்லுகிறேன் கவனமாய்க்கேள்; "தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை." என்ற முதுமொழியை மனதில் வைத்து என் பேச்சைக் கேட்டு அதன்படி நடந்து உலகத்தில் கீர்த்தியுடனிருந்து காலங்கழிக்க முயல்வாயாக.

குழந்தாய்! குடும்பம் நடத்துவதென்றால் எளிதான காரியமென்று நினையாதே; நீ சிலகாலத்துக்கு முன்னே அடுத்த வீட்டுப்பெண்களாகிய உன் தோழிகளோடு கூடிச் செப்புகளைவைத்துக்கொண்டு சமைத்துச் சாப்பிட்டு விளையாடிக் கொண்டிருந்தாயே அதுபோலத்தா னிருக்குமென்று கருதாதே. ஒரு குடும்பத்தை ஒரு இராஜ்யபார நடத்துவதுபோலக் கருதி ஏமாறாமலிருந்து நடத்தவேண்டும். ஒரு குடும்பத்துக்கு நாயகனும் நாயகியும் அரசனையும் மந்திரியையும்போலவும், இராஜனையும் இராஜப்பிரதிநிதியையும் போலிருந்து நடத்தவேண்டும். இராஜாங்கத்தில் உண்டாவதுபோலவே குடும்பத்திலும் பல தொல்லைகளும் கஷ்டநிஷ்டூரங்களும் சம்பவிக்கும். அவற்றுக்கு எல்லாம் மனம் வருந்தி திகைத்து நிற்காமல் பொறுமையோடிருந்து, சமயத்துக்கு ஏற்றபடி புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள வேண்டும். ஐரோப்பியர்களைப் போல விவாகமானதும் கணவனும் மனைவியும் குடும்பத்தை விட்டுப்பிரிந்து வசிப்பது நமது நாட்டுவழக்கமில்லை. மாமியார் மாமனார், நாத்தனார், கொழுந்தன், மச்சினன், ஓரகத்தி முதலானவர்களோடு கூடி வாழ்வதே நமது தேசவியற்கை ஆதலால் ஐரோப்பியர்களைவிட நமது குடும்பவாழ்க்கையில் கஷ்டநிஷ்டூரங்கள் மிகுதியாம்; இந்தக்குடும்பங்களில் ஒரு பெண் நல்லவளென்று பேர் வாங்குவது மகாகஷ்டந்தான். கணவனுக்கடங்கி அவனுக்கேற்றபடி நடப்பதுபோலவே மாமியார் மாமனார் முதலானவர்களுக்கும் பிரியமுடையவளாய் அடங்கி நடக்கவேண்டும். நீ வாழ்க்கைப்பட்ட வீடுபெரியகுடும்ப மாகையாலும், அந்தக் குடும்பத்தில் நீயே மூத்த மருமகளாதலாலும் நான் கூறும்புத்தியை நீ அவசியம்கவனித்து நடக்கவேண்டும். எவ்வளவுபுத்திசாலியாயிருந்தாலும் கணவன் மாமியார் மாமனார் இவர்கள் கூறுவதைக்கேட்டு அதன்படி நடக்கவேண்டும். சில பெண்கள் கணவனுக்குப் பிரியமுண்டாகும்படி நடந்தால் போதுமென்றெண்ணி மற்றவர்களை அலட்சியம் பண்ணுவது வழக்கம். அது பெரியதவறென்று மனதில் வைக்கவேண்டும். பெண்களுக்கு கணவனேதெய்வமும் குருவுமாதலால் அவன் விருப்பத்தின்படி நடப்பது அத்தியாவசிகமானாலும், "அன்னையும் பிதாவுமுன்னறி தெய்வம்" என்றபடி கணவனுக்குத் தெய்வமாகிற மாமியார் மாமனாரையும் தெய்வமாகவே பாவித்து நடக்கவேண்டும். உன் கணவன் தன் பெற்றோர்களிடத்தில் ஏதாவது ஒருகாரணம் பற்றி வெறுப்படைந்தால் நீயும் அப்படியேநடப்பது கூடாது. சமயமறிந்து கணவனிடத்தில் மதுரவசனமாகப் பேசி அவனுடைய கோபத்தையாற்றி அவன் தன் பெற்றோரிடத்தில் பிரியமாயிருக்கும்படி செய்யவேண்டும். உன் கணவனுடைய சகோதரர்சகோதிரிகளை உன்சொந்தப் புத்திரர் புத்திரிகளைப் போலப்பாவித்துநடத்த வேண்டும். ஓரகத்திமார்களைச் சகோதரிகளைப் போலவே நேசித்து, அவர்களுக்கு உன்னிடத்தில் விருப்பமுண்டாம்படி செய்துகொள்ள வேண்டும். உன்கணவனுக்குப் பிரியமானவர்களிடத்திலும், மாமனார் மாமிக்குப் பிரியமானவர்களிடத்திலும் நீ நேசம்பாராட்டவேண்டும். குடும்பச்செலவுக்கு வேண்டியதானியதவசங்களை யெல்லாம் அவற்றுக்குரியகாலங்களிற் சேகரித்துவைத்துக்கோள்ள வேண்டும். வீட்டுக்குவேண்டிய தானியாதி பதார்த்தங்கள் செலவாய் விடுமானால், அது செலவழிவதற்கு நாலுநாள் முன்ன



தாகவே கணவனுக்குத் தெரியப்படுத்திக் குடும்பகாரியம் தடைபடாதபடி சேகரித்துக் கொள்ளவேண்டும். அதுவும் கணவன் பசித்திருக்கும்போதும், உண்ணும்போதும், கோபமா யிருக்கும்போதும், வேறு விஷயத்தில் கவனத்தைச் செலுத்தியிருக்கும் போதும் சொல்லக்கூடாது. போஜனம் செய்து வேறொரு கவலையு மில்லாமல் சந்தோஷமாயிருக்கும் சமையம் பார்த்து இனிய வசனங்களால் கூறவேண்டும். வெளியில் போய் அலுத்துச் சலித்து வரும் புருஷனிடத்தில் இவைகளைப் பேசக்கூடாது. அப்பொழுது சொன்னால் அவனுக்குக் கோபமுண்டாகும். உண்ணும்போது சொன்னால் அவனுக்குப் போஜனத்திற் சிந்தை செல்லாது. கோபமாயிருக்கும்போது சொன்னால், அவன் கவனித்துக் கேட்கமாட்டான். காசையாவது, பதார்த்தங்களையாவது கடன்வாங்கிக் காரியத்தை நடத்தும் வழக்கம் எப்பொழுதுங் கெட்டது. கடன்வாங்கினால் கடன்கொடுத்தவர்களுக்கு நாம் அடிமையேயன்றி வேறல்ல. அந்த வழக்கம் பெரிதாகி மேலும்மேலுங் கடன் வாங்கிக் கடைசியில் பெருங்கடனாளியாய் விடுவோம். இந்தப் பாழானகடனால் இலட்சப் பிரபுக்கள் எத்தனையோ பேர் பிச்சைக்காரர்களானார்கள். இராஜ்யங்கள் ஹீனதசையை அடைந்து கெடுவதும் பிரத்தியட்சம். அதனால் பெரிய அவமானம் நேரிடும். பலராலும் நகைக்கப்படுவோம். ஆகையாலிந்தத் தீர் வழக்கத்தைப் பற்றற, ஒழித்துவிடவேண்டும். கடன்வாங்கிச் சீவிப்பதை விடப் பட்டினி கிடந்து சாவதே மேலானது. கடன் தொந்தரவு நரக வாதனைக்குச் சமானம். கடன்படாமல் அரைவயிறு கால்வயிறு நிரம்பும்படி கஞ்சிகாய்ச்சிக் குடித்துச் சீவித்தாலும் அது சொர்க்க வாழ்வாகும். இந்தப் போதனையை உன் மனதில் உறுதியாக வைக்கக்கடவாய். சொர்க்க போகத்துக்குத் தர்மம் பிரதான மாவதுபோல உலகவாழ்க்கைக்குப் பொருள் பிரதானம். அந்தப் பொருளே தர்மத்துக்கும் ஆதாரம். ஆதலால் பொருளே இகபரபோகங்களிரண்டிற்கும் முக்கிய சாதனமாகும். இது பற்றியே "அருளிலார்க் கவ்வுலகமில்லை பொருளிலார்க், கிவ்வுலக மில்லாகியாங்கு" என்று திராவிடவேதகர்த்தராகிய திருவள்ளுவனார் கூறியருளினார். "பொருடனைப் போற்றி வாழ்" "திரைகடலோடியும் திரவியந்தேடு" என்ற வாக்கியங்களும் பணத்தின் அளவில்லாத பெருமையை விளக்குகின்றன. ஆதலால் குடும்ப வாழ்க்கையைச் சீர்பெற நடத்த வல்ல பெண் பொருளினிடத்தில் மிக்ககவனஞ் செலுத்தவேண்டும். தம் குடும்பத்தின் வரவை யறிந்து அவ்வரவுக்குக் குறைந்த செலவு செய்து செட்டாகக் குடித்தனம் பண்ணவேண்டும். தமதுவரும்படியில் ஓரபங்காவது மிச்சம் பிடிக்கவேண்டும். "வளவனாயினு மளவறிந்தழித்துண்" என்ற அமிர்தவசன மெப்போது மனதிலிருக்கவேண்டும். வரவுக்குமேற்பட்ட செலவு செய்யக்கூடாது. "ஆன முதலில தி கஞ் செலவானால், மானமழிந்து மதியழிந்து—போனதிசை, எல்லார்க்கும் பொல்லானாயேழ் பிறப்புந் தீயவனாய், நல்லார்க்கும் பொல்லானாநாடு" என்ற வசனத்தால் வரவுக்கு மிஞ்சின செலவுசெய்வதனால் எவ்வளவு தீமையுண்டா மென்பதனை யோசித்துக்கொள்ள வேண்டும். இம்மையில் கஷ்டமும் அவமானமும் மடைவதுந்தவிர மறுமையையு மிழந்துவிட நேர்கின்றதனால் பொருளின் பிரயோசன மெத்தனை யென்பதை நீயேசிந்தித்துப்பார். இகபரவாழ்வுகளுக்கு முக்கிய சாதனமான திரவியம் எவ்வளவு சிறந்ததென்று பார். ஆதலால் கணவன் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துக்கொண்டு வந்து தரும் பொருளில் ஒரு இம்மிகூட வீணாகாதபடி சாவதானமாகச் செலவழிக்கவேண்டும். "பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும்" என்ற பழமொழியை நீ கேட்டிருப்பா யல்லவா? பொருளை

பிச்சியாதவர் உலகத்திலொருவருமில்லை. "சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க்கடல் கடந்தும் பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம், பாழினுடம்பை வயிற்றின் கொடுமையால், நாழியரிசிக்கே நாம்" என்றபடி உலகத்திலுள்ள மாந்தரது செய்கைகளெல்லாம் பொருள்சம்பாதிக்கிற வழியாகவே முடியும். இச்சகம்பேசித் தலையைத்தடவிப் பொருளை யபகரிப்பவர் அநேகர்; அத்தன்மையரோடு உறவாடக்கூடாது. நகைக்கென்றுந் துணிக்கென்றும் அளவுகடந்துபொருளைச் செலவழித்துக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற குடும்பங்கள்பல. டம்பத்துக்காகச் செலவுசெய்து கெட்டகுடும்பங்கள் அநேகம். மற்றவர்களுக்கு நாம் தாழ்ந்திருக்கக் கூடாதென்கிற அகங்காரத்தினால் வீண் செலவிட்டு தாழ்ந்த குடும்பங்கள் அநந்தம். தமது சக்தி யெவ்வளவென்று யோசித்துப்பாராமல் கௌரவத்துக்காகச் செலவிட்டுத் தாழ்வடைந்த குடும்பங்கள் எண்ணுக்கடங்கா. புகழ்ச்சிக்காகப்பொருளை வாரியிறைத்துச் சீரழிந்த குடும்பங்கள் கணக்கிடப்படா. "ஆலிலைபூவுங் காயு மளிதருபழமுண்டேல், சாலவே பட்சியெல்லாந் தங்குடி யென்றேவாழும், வாவி பார்வந்துகூடி வந்திப்பார் கோடி கோடி, ஆலிலையாதியோனால் அங்குவந்திருப்பாருண்டோ" என்றபடி கைப்பொருளுண்டாயிருக்குங்காலத்தில், உற்றாரென்றும், உறவினரென்றும், சிநேகரென்றும் அநேகம்பேர் சூழ்ந்துகொண்டு, காலாலிட்ட வேலையைக் கையாற் செய்துகொண்டு கைகட்டிக் காத்திருப்பார்கள், கைப்பொருளற்றால் ஒருவருந் திரும்பிப்பார்க்கமாட்டார்கள். "கல்லானே யானாலுங் கைப்பொருளொன்றுண்டாயின், னெல்லாரும் வந்தங்கெதிர் கொள்வார்—இல்லானை, யில்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்ததாய் வேண்டாள், செல்லாதவன்வாயிற் சொல்" என்று கூறியுள்ள மூதுரையை எப்போதும் மனதில் பதித்திருக்கவேண்டும். இதுவரைக்கும் சொல்லிவந்ததினால் பொருளினிடத்தில் அதிக கவனமாயிருக்கவேண்டுமென்றும், வரவுக்கு மேற்பட்ட செலவு செய்யக்கூடாதென்றும் உனக்கு நன்றாய் விளங்கியிருக்கும். இதனால் பொருளை யிறுகப்பிடித்துச் செலவுசெய்யாமல் புதைத்துவைத்து லோபியென்று பேரெடுக்கவேண்டுமென்பதில்லை. உலோபியென்று ஒருபோதும் பேர்வாங்கக்கூடாது. "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்றபழமொழியை யோசித்துத் தக்கவர்களுக்குச் சிறிது கொடுத்துத் தருமத்தையுஞ் செய்து மறுமை வழிதேடுவதும் அவசியமாம். வேலை செய்து ஜீவனம்பண்ணச் சக்தியில்லாத கூன், குருடு, மூடமானவர்களுக்கும், தீராத ரோயாளிகளுக்கும் கொடுப்பதே தருமமென்பது சிலருடைய அபிப்பிராயம். இவர்களே தர்மத்துக்குரியபாத்திரமாவார்களென்பது அவர்களுடைய கருத்து. அது சரியென்று எடுத்துக் கொள்ளக் கூடியதேயானாலும், விதிவசத்தினாலே, ஏழைகளாகிக் கஷ்டத்தின் மேற்கஷ்டமுண்டாய்த் துன்பப் படுகிறவர்களும், ஜீவனத்துக்காகப் பலபடிமுயன்றும் அம்முயற்சிகள் பயன்படாமல் பரதவிக்கிறவர்களும் அநேகராகையால் அவர்களும் தர்மஞ் செய்தற்குரிபாத்திரங்களாம். "ஈதலிசைபட வாழ்தலதுவன்றி, யூதியமில்லை யுயிர்க்கு" என்ற நீதிப்படி தரித்திரத்தாற் கஷ்டப்படுகிறவர்களுக்குத் தம்மாலியன்ற, பொருளுதவிசெய்தலுந் தருமமேயாம். இல்லறவாழ்க்கைக்குத் தருமமே பிரதானமாகையால் இயன்ற அளவு தருமம் செய்யவேண்டும். தருமஞ்செய்கிறோமென்று முன்பின் யோசிக்காமல் கண்டபடி பொருளைவாரியிறைத்து விட்டு பின்புதரித்திரதசையையடைந்து கஷ்டப்படுவோர் அநேகம். அது எப்போதுந்தப்பானகாரியம். கைப்பொருளை யிழந்தபின் அதருமத்தையுஞ் செய்யும்படி நேரிடுமாதலால் இல்லறதருமத்தின் பயனையடையாமற் போவோம். இதுநிற்க; நமதுகிருகத்துக்காகச் செலவுசெய்



கிறபொழுது மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். செலவுசெய்வதற்குமுன்னாலேயே, இந்தச்செலவு செய்ய வேண்டியது அவசியந்தானா? அல்லவாவென்றும், அதுசெய்யாமல் முடியாதாவென்றும் யோசிக்க வேண்டும். அவசியம் செய்யத்தான் வேண்டுமென்று தோற்றினால் அப்போது வேண்டிய அளவுக்குச் செலவு செய்யலாம். வீட்டில் அநாவசியமான வேலைக்காரர்களைவைத்துக் கொண்டு வீண் செலவுசெய்வது அநாவசியம். நம்மாற் செய்யமுடியாத வேலைகளுக்காக வேலைக்காரர்கள் வைத்துக் கொள்வதும் நியாயமே. வேலைக்காரர்களிடத்தில் எப்பொழுதுங் கடுகடுவென்றிருத்தல் கூடாது; அப்படியிருந்தால் அவர்கள் மனம் வெறுப்படைந்து திருப்தியாய் வேலை செய்யமாட்டார்கள். எப்பொழுதும் அவர்களிடத்தில் விளையாட்டுத்தனமா யிருப்பதுங் கூடாது. அதனால் அவர்கள் நம்மைஅலட்சியஞ் செய்து வேலையைச் சரிவரச் செய்ய மாட்டார்கள். ஆகையால் அவர்களிடத்தில் அன்பாயும், வேலை விஷயத்தில் கண்டிப்பாயு மிருக்கவேண்டும். வேலைகள் செய்து முடிந்தபின் வேலை நன்றாய்ச் செய்தாயென்று கூறி மகிழ்விக்க வேண்டும். நன்றாய்ச் செய்யாத பட்சத்தில் மறுபடியும் அதைச் சீர்திருந்தச் செய்யும்படி சொல்லவேண்டும். எப்பொழுதும் மலர்ந்த முகமாயிருக்கவேண்டும். சரிவர வேலை செய்யாத பொழுது கோபக் குறிகாட்டவேண்டும். இப்படிச் செய்தால் வேலைக்காரர்கள் உன்னிடத்தில் அன்பாயும் பயந்தும் வேலை செய்வார்கள். இதற்கு மாறாக நடந்தால் வீட்டு வேலை சரியாய் நடவாது. மகளே! இப்பொழுது நான் கூறிவந்தவைகளை உன் மனதிலே நன்றாய்ப் பதியவைத்துக்கொண்டு பொருள் விஷயத்திலும், குடும்ப விஷயத்திலும் வெகு ஜாக்கிரதையாக நடந்துகொள்.

பத்திராசிரியர்.

## விஜயலக்ஷ்மி.

(261-ம் பக்கத்தொடர்ச்சி.)

அரண்மனையில் மழவரங்கபூபன் கொலுவீற்றிருக்கும் சபாமண்டபத்தை யடைந்தார்கள். பூபதி சகலதானதர்மங்களையும் முடித்துவிட்டுக் கட்டியக்காரர்கள் கட்டியங்கூறி எச்சரிக்கையிட, வந்தியர் மாகதர் புகழ்ந்து போற்ற, பிராமணர்கள் வாழ்த்த, வித்துவான்கள் கொண்டாட, மந்திரிமார்கள் சூழ்ந்திருக்கத், தேவேந்திரனைப்போலக் கொலுவில் வீற்றிருந்தார். அப்பொழுது ஐயரவர்கள் லோகநாதன் முதலான வித்துவகோஷ்டியோடு சபையில்வந்து தமது ஆசனத்தில் உட்கார்ந்து மற்றவர்களைத் தகுந்த தவிசிலிருக்கச் செய்து பூபதியின் உத்தரவின்மேல் வித்துவகோஷ்டிகளைப் பரீக்ஷிக்கத்தொடங்கினார். வைதிகபிராமணருடைய வேதகோஷத்தினாலும், தார்க்கிகர் மீமாஞ்சகருடைய தர்க்கவாதத்தினாலும், கவீசுரர்களுடைய கவிமுழக்கத்தினாலும், சாஸ்திர பாண்டிதருடைய பிரசங்கத்தினாலும், கதாப்பிரசங்கிகளுடைய கதாப்பிரசங்கத்தினாலும் அந்தச்சபையானது சுதர்மையென்னும் தேவேந்திரசபைபோலவே விளங்கிற்று. இந்தச்சபைக்கு அக்கிராசனாதிபதியாகிய ஐயரவர்களும் உதவிபரீக்ஷகர்களும் வந்த வித்துவான்களைப் பரீட்சித்து அவ்வவருடைய தராதரப்படி முதலாவது இரண்டாவது மூன்றாவது என்றிறபடி முறைவகுத்து எழுதிக்கொண்டார்கள். லோகநாதன் தர்க்

கம் கவிபிரசங்கம் முதலிய பலபரீக்ஷைகளிலும் தேறி எல்லாரிலு மேம்பட்டயோக்யனா லும் பெருமைபாராட்டப்பட்டான். மழவரங்கபூபதி லோகநாதனுடைய கல்வித் திற மைக்கு மெச்சி அவனிடத்தில் அதிகப் பிரியம்வைத்தார். ஐயரவர்களுக்குண்டான மன மகிழ்ச்சிக்குக் கங்குகரையில்லை. "தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது" என்றபடி, சபையாரனைவரும் ஆனந்த மடைந்தார்கள். இவ்வாறு இரண்டுநாள் பரீக்ஷை நடந்தேறியது. மூன்றாநாள் பண்டிதர் யாவருக்கும் தக்க பரிசளிக்கப்பட்டது. பூபதியானவர் லோகநாதனைத் தம்மருகிலழைத்து அவனுக் குத் தமது கைகளாலேயே பட்டு பட்டாவளிகளும், ஹாரகுண்டல கடகாதி யாபர ணங்களும் அளித்து, ஆயிரம்பொன் கொடுத்து நீயே கல்விக்களஞ்சியம், நீயே கவி சாகரம், நீயே பிரசங்காமிர்தம் என்றுபுகழ்ந்து கூறி, வருடந்தோறும் நீயிவ்விடத்துக்கு வந்து, என்சபையை அலங்கரிக்கவேண்டுமென்று உபசாரவார்த்தைகள் கூற, லோக நாதன் வெகுவணக்கத்துடன் மரியாதைகளை யேற்றுக்கொண்டு மனமகிழ்ச்சியோடிரு ந்தான். சபையாரனைவரும் பூபதி அவனுக்குச் செய்த மரியாதை தகும் தகும் என்று கொண்டாடினார்கள். அன்றுசாயந்திரம் சபைகலைந்தது. ஐயரவர்கள் லோகநாதனை அழைத்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார்கள். கோடிலிங்கதீட்சிதரும் இராமசந்திர தீட்சிதரும் கூடப்போனார்கள். இந்தநாலு பேரும் சிறிது நேரம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஐயரவர்கள் லோகநாதனைப்பார்த்து, ஐயா! நீர் மனமகிழ்ச்சியுள்ளவர்போலத் தோற்றினாலும் உள்ளத்தினுள்ளே ஏதோ கவலை குடி கொண்டிருப்பதாக உமது முகம் வெளியிடுகின்றது. அதன் காரணம் அறியவிரும்பு கிறேன். உமது வரலாறு என்ன? சொல்லக்கூடுமோ கூடுமானால் சொல்லவேண்டுமென, லோகநாதன் சற்று நிதானித்து, அவரைநோக்கிச் சுவாமீ! தமக்கு வெளியிடக்கூடாத இரகசியமுண்டா சொல்கிறேன் கேளுங்கள்.

எங்கள் பூர்வம்வசித்தது வேதாரணியம் என்தந்தையார் இராமநாத ஐயர் எனப் படுவார். அவர் தமது கல்வித்திறமையால் நன்றாய்ச் சம்பாதித்துக் கீர்த்திபெற வாழ்ந் திருந்தார். அவர் பரலோகவாழ்விலே அதிகப்பிரியம் வைத்த சுத்தவைதிகராதலால் வந்தவர்களுக்கு இல்லையென்னாமல் அன்னமிட்டும், ஏழைகளுக்கு வஸ்திரதானம் முதலிய பலதானங்கள் வழங்கியும், தேவாலயங்களுக்குப் பூசை முதலானவை நடத்தியும் திர ண்டபணம் செலவழித்துக் கீர்த்திபெற்றிருந்தார். அவர் சிவபதமடையும்போது நான் ஒரு வயசுக்குழந்தையாயிருந்தேன். எங்கள் குடும்பத்துக்குப்போதுமான ஆஸ்தி வைத்திருந்தார். அவர் இறந்தபிறகு என் தமையன் குடும்பத்தலைவனானான். இராஜ பாஷைகற்கும்படி அவ்வூரிலிருந்த பாடசாலைக்கு அனுப்பியிருந்தார்கள். பிறகு அதிக படிப்புக்காக கும்பகோணம்போனான். அவ்விடத்தில் அவன் துஷ்டரோடு சகவாசஞ் செய்துகொண்டிருந்ததனாலும், டம்பத்தினாலும் தகப்பன் வைத்துவிட்டுப்போன சகல சொத்துக்களையும் அழித்துவிட்டான். பின்னர் செலவுக்கில்லாமல் கஷ்டப்படுகிற போது ஒருவருக்குந்தெரியாமல் அங்கிருந்த வீட்டின்மேல் ஐந்நூறு ரூபாய் கடன்வாங் கிச் செலவுசெய்து உயர்தரப் பரீட்சையாகிய பி. ஏ. பரீக்ஷைக்குப்போய்த் தெய்வாநு கூலத்தால் அதில் தேறிவந்தான். அப்பொழுது குடும்ப காலக்ஷேபத்துக்கு வெகுகஷ் டமாயிருந்தது. அதனால் அந்த வீட்டை விற்கத்துணிந்தபோது என் தாயார் கூடாதென் றும், தகப்பன் ஆஸ்திமுழுவதையும் நீயே தொலைத்துவிட்ட படியால் இந்த வீடு லோகநாத



னுக்குரியதென்றும், அதை நீ விற்பது நியாயமல்லவென்றும் சொல்லித், தன்னுடைய நகைகளை விற்று வீட்டை மீட்டுக்கொண்டு மிச்சமிருந்த சிறிதுபணத்தைக்கொண்டு குடும்பத்தைக்காப்பாற்றி வந்தாள். கஷ்டத்தோடுகஷ்டமாய் எனக்கும் இராஜபாஷை கற்பித்துவந்தாள். இராஜபாஷை கற்பதென்றால் எளிதல்லவே! எவ்வளவு பணம் செலவழிக்கவேண்டும். அவ்வளவுக் கில்லாமையால் படிப்பைநிறுத்திவிடும்படி நேரிட் டது. நான் என் தோழரோடு கூடி இராஜபாஷைபேசவும் எழுதவுங்கற்றுக்கொண் டேன். அதையே பெரிதாகப் பாராட்டாமல் தகுந்த உபாத்தியாயர்களுடைய தயவு இரு ந்தமையால் சுதேசபாஷையில் நன்றாய்ப் பயின்றுவந்தேன். இப்படியிருக்கையில் என் தமையன் கும்பகோணம் ஸ்மால்காஸ் கோர்ட்டில் உத்தியோகத்தில் அமர்ந்தான். சம் பளம் இருபத்தைந்து ரூபாய்; அவனைமுன்னிட்டு நாங்கள் கும்பகோணம்வந்து சேர்ந் தோம். அங்கேவந்தபின் அங்குள்ள இராஜாங்கக் கலாசாலையில் சேர்ந்து படிக்கும் படி அனுப்பினார்கள் பிரவேச பரீக்ஷைவரையில் படித்தேன். அப்பொழுது என் தமையனுக்கு விவாகம் நேர்ந்தது. அது நிமித்தம் இரண்டாயிர ரூபாய் வரையில் கட னாய் விட்டது. கடன்காரர் தொந்தரவினால் என் படிப்புக்கு இடையூறு நேர்ந்தது. பிறகு என் வீட்டைவிற்றும் கடனுக்குப்போதாமையால் மிக்க கஷ்டப்பட்டுக்கொண் டிருந்தோம். என் தமையன் சம்சாரம் வீட்டுக்குவந்ததும், அவருக்கு ஐம்பது ரூபாய் சம்பளமாயிற்று. மேலுமேலும் உயர்ந்த உத்தியோகம்பெற விரும்பி மேலதிகாரிகளு க்கு அடிக்கடி விருந்து முதலிய டம்பச்செலவுசெய்து கடனாளியாய் விட்டார். இப் பொழுது சிரஸ்தேதார் உத்தியோகத்திலிருக்கிறார். சம்பளம் நூற்றைம்பது ரூபாய் ஆனாலும் கடன் எழாயிரம்வரையிலாய்விட்டது. இதனால் என் குடும்பத்தில் கலகம் நேரிட்டது. அதுபற்றி என் தயார் மிகவருத்தமுறுவது சகிக்கப்படாமல் நான் தேசாந் திரம் போய்ச் சீவிக்கக்கருதிப் புறப்பட்டு தமது சந்நிதானத்துக்கு வந்து சேர்ந்தேன். அதன்பிறகு நடந்த சமாசாரம் எல்லாந்தமது சித்தத்துக்கே தெரியவருமென்று சொல்லி முடித்தான். அதுகேட்ட ஐயரவர்கள் கலகலவென்று நகைத்து, இது நமது தேசத் துக்குஇயற்கையாய்விட்டது. ஏழையாயிருப்பவர்கள் கூடத் தங்களுக்குள்ள சொத்துக் களையெல்லாம் விற்று இராஜபாஷையைப் பயிற்றுவிக்கின்றார்கள். போதும்போதா தற்கு யாசகஞ்செய்தும், உபாதானமெடுத்தும் செலவுசெய்கின்றார்கள். அவர்கள் படி த்து முடித்தபின் உத்தியோகத்துக்காகச் சிலவருஷங் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் நிமித்தம் கடன்வாங்கிப் பரிதானமளித்து உத்தியோகம் சம்பாதிக்கின்றார்கள். அவ்வளவு பிரயாசப்பட்டாலும் அவரவர்களுடைய கர்ம அனுசாரப்படி ஆண்டவன் அளி த்துக் கொடுக்கிறாரேயன்றி மேலே உடையப்படவில்லை. சிலரே பெரிய உத்தியோகத் திலிருந்து பெரும்பொருள் சம்பாதித்துச் சுகமாய்வாழ்கிறார்கள். அப்படியெல்லாருக்குங் கிடைப்பதில்லை. சிலருக்கு உத்தியோகங்கிடைக்காமலே போய்விடுகிறது. உத்தியோக மானவுடனே பூர்வஸ்திதியை மறந்து இறுமாந்து நடந்துபாதாளத்தில் விழுந்து வருந்து கிறவர்கள் பலர். என்னபாடுபட்டும் உயர்ந்த உத்தியோகங்கிடையாமல் கஷ்டஜீவனம் செய்பவர் மேலே பெரிய உத்தியோகம் வருமென்று கருதிக்கடன் வாங்கிச் செலவு செய்து திண்டாடுகிறவர்கள் பலர். சிறிய உத்தியோகத்தில் அமர்வது இழிவென்று கருதிப் பெரிய உத்தியோகங்களை யெதிர்பார்த்திருந்து வாழ்நாளை வீணாகக்கழித்து உயிர்துறந்தார்பலர். கொஞ்ச உத்தியோகங் கிடைத்தவுடனே தலைகால்தெரியாமல் தம்மைப்போற்றி வளர்த்துக் கல்விகற்பித்து, இவர்களால் அந்தியகாலத்தில் சுகப்

படலரமென்று மகிழ்ந்திருந்த மாதாபிதாக்களும் பிராதாக்களும் சோற்றுக்கு வருந்தியுயிர்துறக்கத் தமது மனைவிமக்களுடன் சுகித்து வாழ்பவர் பலர். நமது இந்தியா தேசத்தில் எத்தனையோ பிழைப்புகளிருக்க அவைகளை யசட்டைசெய்து உத்தியோகம் ஒன்றையே பெரிதாகக்கருதி இப்படிக்கஷ்டப்படும் நம்மவரது பேதைமைக்கே வருந்தவேண்டிவருகிறது. ஐயோ! பாவம், ஈசுவரன் என்றைக்கு நம்மவர்க்கு நல்லபுத்தியைக் கொடுத்துக் காப்பாற்றுவாரோ தெரியவில்லை. "இருவேறுலகத்தியற்கை திருவேறு, தெள்ளியராதலும் வேறு" என்ற தேவர் திருவாக்கின்படி செல்வமுடையராதற்குப் படிப்புத்தான் காரணமென்பதில்லை. கல்வியிற் சிறந்திருக்கும் அதிருஷ்டம் வேறு, செல்வத்தையடைந்து களித்திருக்கும் அதிருஷ்டம் வேறு. ஐயங்கொண்ட சோழபுரத்தில் இராமநாதபிள்ளையென்றும் ஒரு பிரபு இருக்கிறார். அவருக்குத்தன்பெயர் எழுதக்கூடத்தெரியாது; அவர் தமது சொந்தக்ஷேயால் இலட்சத்துக்குமேல் சம்பாதித்திருக்கிறார். மாட்டுப்பொதி வியாபாரஞ்செய்து கஷ்டஜீவனஞ்செய்த முருகபிள்ளையென்பவர் இப்போது நாலைந்து இலட்சம் முதலுள்ளவராய்க் களித்திருக்கின்றார். அற்ப நெசவுத்தொழிலைச் செய்து வருந்திய சாயமுத்தையன் இப்பொழுது எவ்வளவு கௌரதையாக வாழ்கிறான். இன்னமொரு வேடிக்கைகேளும்; நான் ஐயங்கொண்ட சோழபுரத்தில் உத்தியோகத்துக்குவந்தபோது என் வீட்டுச் சுவர்வைக்க இராமன் என்ற ஒரு கூலிக்காரன்வந்தான். அவன் இப்பொழுது கொத்தர்களுக்குத் தலைவனாய்த் திரண்ட ஆஸ்திசம்பாதித்து மஹாராஜனாய் வாழ்கின்றான். மழவரங்கபூபதிகூட அவனை இராமபிள்ளையவர்களே வாருங்களென்று கூப்பிடும்படியான நிலையிலிருக்கிறான். நமது தேசத்தில் எவ்வளவோ விசித்திரமான கைத்தொழில்களிருக்கின்றன. அவற்றில் பயின்று விருத்திக்குக்கொண்டு வந்தால் எவ்வளவோ பெருமையாக வாழலாம். அதைவிட்டு எல்லா ஜாதியாரும் இராஜாங்கபாஷைபயின்று உத்தியோகஞ்செய்ய விரும்பிக் "கொக்குக் கொன்றேமதி" என்பதற்கிணங்கக் கலங்கித்திரிகின்றார்கள். அதிலும் பிராமணர்கள் நிலைமை மிகப்பரிதாபம். இதுநிற்க, என்னுடைய சரித்திரஞ்சொல்லுகிறேன் சற்றுக் கவனித்துக் கேளுங்கள்

என்னுடைய பூர்வபிதாக்கள் மகம்மதியர் மகாராஷ்டிரருடைய அரசாட்சியில் பெரிய உத்தியோகஞ் செய்து திரண்ட ஆஸ்திசம்பாதித்தார்கள். நூறுவருஷங்களுக்கு முன்னுவிருந்த எனது பிரபிதாமகர் ஆராதாரித்தனமாய்ச் செலவுசெய்து வெகுதிரவியத்தை நஷ்டஞ்செய்து விட்டார். அது முதலாக எங்கள் குடும்பம் க்ஷீணதசையடையத்தொடங்கிற்று. என் பாட்டனார் காலத்தில் எல்லாம் போய் விட்டது. அவருக்கு நாலுபுத்திரர்கள். என்பிதா எல்லாரினும் மூத்தவர். அவர் ரேவுதுறையில் அற்ப உத்தியோகத்திலமர்ந்து அதிர்ஷ்டவசத்தினால் கொஞ்சம் மேலான பதவியையடைந்து ஐம்பதினாயிரரூபாய் வரையில் சம்பாதித்துத் தம்பிமார்களுக்குத் தலைக்குப் பதினாயிரரூபாய் கொடுத்துத் தகுந்தவியாபாரத்தில் நிலைநிறுத்தி, அதைவிருத்தியாக்கும்படி கூறித் தாமும் அவர்களுக்கு உதவிசெய்துவந்தார். என்பிதாவுக்கு நான் ஒரேபுத்திரன். நான் பிறந்து ஐந்துவயதாயிருக்கையில் அவர் கர்மவசத்தால் தேகவியோகமானார். அப்பொழுது தமது ஆஸ்தியைத் தம்பிமார்வசத்தில்வைத்து, என்னையும் என் தாயாரையும் பாதுகாத்து வரும்படியாயும், எனக்குத்தக்கவயது வந்ததும் ஆஸ்தியைக் கொடுக்கும்படியாயுந்திட்டம் செய்திருந்தார். எனக்குப்பனிரண்டு வயதாகுமுன்னேதானே யென்



சிற்றப்பன்மார்கள் துர்ச்செலவு செய்து தங்கள் ஆஸ்தியை இழந்ததுமன்றி யென்பாகத்திலுங்கைவைக்கத் தொடங்கினார்கள். இதை அறிந்த என்மாதா எவ்வளவோ சொல்லித்தடுத்தும் கேளாமல் அக்கிரமஞ் செய்துவந்தார்கள். என் மாதா அதைக் கண்டு சகிக்காமல் பஞ்சாயத்தாரிடந் தெரிவித்தாள். அவர்கள் என் சிறியதந்தையர்களை அழைத்து விசாரித்தபோது, அவர்கள் என்தந்தை செலவாளியாதலால் சொத்து அதிகமாய்வைக்கவில்லை யென்றும், இருந்தசொற்பத் தொகையும் எங்கள் விஷயத்திலேயே செலவழித்து விட்டாராகவும், ஒருவீடுமாத்திரம் மிச்சமாயிருக்கிறதென்றும் தப்புக்கணக்கு ஜோடித்துக் காட்டினதுமன்றி தவிரப்பொய்ச் சத்தியமுஞ் செய்துவிட்டார்கள். அது கேட்ட என்மாதா இடியரவம் கேட்டசர்ப்பம்போல நடுநடுங்கியாதொன்றும் பேசாமல் வீடுவந்து சேர்ந்தாள். தன்னிடத்திலிருந்த சொற்பநகைகளை விற்றுக் கஷ்டஜீவனஞ் செய்துவந்ததுமன்றி எனக்கும் சிறிது இராஜபாஷைகற்பித்து வந்தாள். மூன்றுவருஷங்களுக்குள் அதுவுஞ் செலவழிந்து வேறு ஜீவனத்துக்கு மார்க்கமில்லாமல் பரிதவித்துக்கொண்டிருந்தாள். அப்பொழுதெனக்குப் பதினைந்து வயதாய்ப்புத்தி தெரிந்திருந்தபடியால், என்னையழைத்து அப்பா குழந்தாய்! நாமெந்தவிடத்தில் மிகப்பெருமையாக வாழ்ந்தோமோ அந்த இடத்திலேயே பிச்சையெடுக்கும்படியான நிலைமைக்கு வந்துவிட்டோம். ஊழ்வினை அப்படியிருந்தது. இனியென்செய்வது? நீ ஏதாவது சம்பாதித்தால் தான் ஜீவிக்கலாம். இல்லாவிட்டால் நான் உபாதானமெடுத்துத்தான் உன்னைப்போஷிக்கவேண்டும். வாழ்ந்திருந்த விடத்திலே தாழ்ந்திருக்க என்மனம் சகிக்கவில்லை. இதற்கென்ன செய்யலாமென்று கூறிக்கண்ணீர் விட்டாள். அந்தக்கண்ணீர் என் நெஞ்சைக் ககரவென்று அறுத்தபடியால் மனம் வருந்தி அம்மா! இதற்கு நீ வருந்தவேண்டாம். நமக்குள்ளது ஒருபோதும் போகாது. இந்த ஊரிலிருக்க எனக்குமனமில்லை. ஆகையால் கும்பகோணம்போய் எப்படியாவது ஜீவிப்போம் வாவென்று கூறி, என்வீட்டை ஒருவரிடத்தில் வாடகைக்கு விட்டுவிட்டுப்புறப்பட்டுக் கும்பகோணம் வந்துவிட்டேன். அவ்விடத்தில் எனது அத்தைவாழ்க்கைப் பட்டிருந்தாள். வந்த அன்றுதினம் அவள்வீட்டில் தங்கியிருந்தேன். அன்றிரவுதனியாகப் படுத்துக்கொண்டு பலபல யோசனைகள் செய்தேன். ஒன்றும் முடிவுக்குவரவில்லை. கடைசியில் பிச்சையெடுத்தாவது தாயைப் போஷிப்பதே நமது கடமையென்று கருதிப் பிச்சையெடுக்கத் தீர்மானித்தேன். மறுநாட்காலையி லெழுந்திருந்து ஒரு தயாளுவான பிராமணன் வீட்டில் போய் அவரைக்கண்டு என் நிலைமையைக் கூறித், தாழ்வாரத்தில் கொஞ்ச மிடந்தரும்படி கெஞ்சிக் கேட்க அவர்சம்மதித்தமையால் என் தாயாரையும் அழைத்துக் கொண்டு வந்து அந்த வீட்டில் குடியேறி, அன்று முதல் என் ஆசிரமத்துக் கேற்ற தொழிலாகிய பிச்சையெடுத்தலைமேற்கொண்டேன். என் மாதாவுக்கு அதுசம்மதமில்லாவிடினும் வேறு வழியில்லாமையால் வாய்திறவாமலிருந்து விட்டாள். அந்தத் தொழிலைச் செய்து கொண்டே இராஜபாஷை படித்துக் கொண்டும், சுதேசபாஷைகளைப் படித்துக் கொண்டும் வந்தேன். பதினேழாம்வயதில் நான் பிரவேசபரீக்ஷைக்கு படித்தது தெரிந்த என் அத்தை தனது ஏகபுத்திரியை எனக்கு விவாகம் செய்துகொடுக்க உத்தேசித்து என்னையும் என் தாயாரையும் தவட்டிக்கொண்டிருந்தாள். என் தாயாருடைய கட்டாயத்தினால் நானும்சம்மதித்து விவாகஞ் செய்துகொண்டேன். அதன்பின் அந்தத் தொழிலை விடும்படி நேரிட்டபடியால் என் அத்தைவீட்டிலிருந்து பிரவேசப்பரீக்ஷைக்குப்போய்த் தேறினேன். குடும்பவிவகாரம் மேலிட்டபடியால் மேலேபடிக்க முடியாமல் அத்தோடு

படிப்பை நிறுத்திவிட்டுச் சம்பாதிக்கமுயன்றேன். அப்பொழுது என்னுடன் கூடப்படித்துக்கொண்டிருந்த முத்துநாயக்க னென்பவனுடைய தந்தை வீராசாமிநாயக்கர் போலிஸ் இன்ஸ்பெக்டராயிருந்தார். அவர் என்னிடத்திலுண்மையான பிரியமுள்ளவராதலால் அவரையடுத்துக் காத்திருக்கையில் அவருடைய சிபாரிசினால் அரியலூர் டிப்டிகலெக்டராபிசில் தஸ்தர்பந்து வேலையிலமர்ந்து மாதம் எட்டுரூபாய் சம்பளம் பெற்றுக் கஷ்டஜீவனஞ்செய்துகொண்டு மேல்படித்துக்கொண்டிருந்தேன். அதிர்ஷ்டவசத்தால் பரீட்சைகளிலெல்லாம் நிறைவால் தேறிப்படிப்படியாய் உயர்ந்த உத்தியோகத்துக்குவந்து இப்பொழுதிருக்கும் நிலைமையையடைந்தேன். அடுத்தவாரம் அரியலூருக்குப் போய் டிப்டிகலெக்டர் உத்தியோகம்பார்க்கப் போகின்றேன். நான்படிக்கும்போது பி. ஏ. பரீக்ஷையில் தேறின கிருஷ்ணையர் இன்னம் சரியான உத்தியோகங்கிடையாமையால் மிக வருத்தப்படுகின்றார். அண்ணுசாமி என்பவன் என்னிடம் வந்துபதினைந்து ரூபாய் சம்பளத்துக்குக்குமாஸ்தாவேலைபார்த்து வந்தான். போன மாதந்தான் ரிவினியூ இன்ஸ்பெக்டராகப்போயிருக்கிறான். ஆதலால் படித்தவர்களுக்குத்தான் செல்வமுண்டாகுமென்பதில்லை. படித்திருந்தாலும் படியாதிருந்தாலும் அதிருஷ்டமுள்ளவனுக்குத்தான் பணஞ்சேருகின்றது. உத்தியோகம் பண்ணித்தான் சம்பாதிக்கவேண்டுமென்பதில்லை. பலவழிகளினாலே நாணயமாய்ச் சம்பாதிக்கலாம். உத்தியோகத்தினால் சுகமென்பதில்லை. அதிலிருக்கும் கஷ்டத்தை நானன்றாயறிவேன். ஆதலால் சீக்கிரத்தில் உத்தியோகத்தை விட்டு ஒழிந்து நல்ல வியாபாரந் தொடங்கலாமென்று கருதியிருக்கிறேன். லோகநாதா! நீர் அதிருஷ்டசாலியாதலால் பெரிய நிலைமையை அடைவீரென்று கூறிக், கோடிலிங்க தீட்சிதரைப்பார்த்து என்னசொல்லுகிறீர் தீட்சிதரே யென்றார். அவர் ஆமாம் தாங்கள் சொல்வதில் எள்ளளவுந்தவறில்லை. சொல்வதெல்லாஞ்சரிதானென்றார். இராமசந்திர தீட்சிதர்பிரபுவை நோக்கிச் சுவாமி! இந்தச்சிறுவனை நான் கும்பகோணத்தில் அநேகந்தடவைபார்த்திருக்கிறேன். இதுவரைக்கும் இவனுடைய அருமையெனக்குக் கொஞ்சங் கூடத்தெரியாது. இப்பொழுது தான் தெரியவந்தது. வித்துவான்கள் தமது சமஸ்தானத்தில் ஒருபோதும் பெருமைபெறுகிறதில்லை. அந்நியதேசம் போனால்தான் கீர்த்திபெறுகிறார்கள். குடத்திலிட்ட விளக்குப் போலமறைந்துகிடந்த இவனுடைய பெருமையிப்பொழுது மலைமேலிட்ட விளக்குப்போல எங்கும்பிரகாசிக்கின்றது. விளக்குக்குத்தூண்டுகோல் போலத்தங்களுடைய சார்பு இவனுக்குக்கிடைத்ததனால் இவன் யாதொருகுறைவுமற்றுச்சிறந்துவாழ்வனென்பதில் யாதொருதடையுமில்லை. இவனுடைய தகப்பனை நானன்றாயறிவேன். அவர் லோகநாதனுக்குப் பெண்தேடும்படி என்னைக்கூடக் கேட்டிருந்தார். ஆனால் நல்ல என்னைத் தொடல்லை. எப்படியாவது இவனை விலக்கிவிடலாமென்கிறார் என்னைத்திறவும். தாயாருடைய கட்டாயத்தினாலுமே. இனி இவனுக்கென்னகுறைச்சலிருக்கின்றது. மகாராஜபூபதியின் தயவும், தமதுசார்புங்கிடைத்திருப்பதினால் இவன் பெரும்பதவியை அடைவானென்று பேசிக்கொண்டிருக்கையில் பரிசாரகன் வந்து சந்தியாவந்தனத்துக்குத் தயாராயிருக்கிறது எழுந்திருக்கவேண்டும் என்று கூறிப்போனான். பிரபுவானவர் எல்லாரையும் சந்தியாவந்தனத்துக்கு அனுப்பிவிட்டுத்தாமும் எழுந்திருந்து உள்ளேபோனார். பிறகு கொஞ்சநேரத்துக்கெல்லாம் போஜனஞ்செய்து தீட்சிதர்களுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு லோகநாதனோடு நெடுநேரம் அளவளாவி அவனுடைய புத்திநுட்பத்துக்கும் குணங்களுக்கும் மகிழ்ந்து நித்திரைபோனார். மறு



நாட்காலையிலெழுந்திருந்து லோகநாதனையும் அழைத்துக்கொண்டு ஜெயங்கொண்டசோழபுரம்போனார். அவ்விடத்திலிரண்டு மூன்று நாளிருந்தபின் ஒருநாள் லோகநாதனைப்பார்த்து ஐயா! நான் நாளையதினம் அரியலூர்போய் டிப்டிகலெக்டர் சார்ஜ் ஒப்புக்கொள்ள வேண்டும். அவ்விடத்தில் சர்க்கார்வேலை வெகுசாய்ப்பாக்கியிருப்பதினாலும், கிராமங்களைச் சுற்றிப்பார்க்கவேண்டியிருப்பதினாலும் இரண்டு மாதம் நான் அங்கேயேயிருக்கவேண்டும். என் மனைவி குழந்தைகள் இங்கேயேயிருப்பார்கள். அவர்களுக்கு வேறு துணையில்லாமையால் நீர் அதுவரைக்கும் இவ்விடத்திலிரும். பின்பு நான் வந்து அழைத்துக்கொண்டு போகிறேன் என்று திட்டம்செய்துவிட்டு அரியலூர் போய்விட்டார். பிரபுவினுடைய மனைவியார் லோகநாதனைத்தன் புத்திரனைப் போல்பரிபாலித்து வந்ததனால் அவன்யாதொரு குறைவுமில்லாமல் அந்தம்மாள் கூறிய வேலைகளைச் செய்துகொண்டு வீட்டைப்பாதுகாத்துக் கொண்டிருந்தான்.

## நான்காம் அத்தியாயம்.

என்னடா சுப்பாசாஸ்திரி மசாலைவடை மணக்கிறது! சட்டையப்பா! ஆமாம் உனக்கு அதைத்தவிர வேறு நினைவேகிடையாது. அப்பன்சம்பாதித்தசொத்தா? நீ பிரயாசப்பட்டுச் சம்பாதித்ததா! ஐயோபாவம்; ஏழைப்பட்சணக் கடைக்காரர்கள் கடன் வாங்கிக் கஷ்டப்பட்டுக் கால்வயிற்றுக்கஞ்சி அகப்படாதா வென்று, இரவும்பகலும் வருந்திக் கடைவைத்திருந்தால், அதைக்கொஞ்சங்கூடக் கவனிக்காமல் உன் வயிற்றைநிரப்பிக்கொண்டு வெட்கமில்லாமல் ஊராரையெல்லாம் பரிகாசம்பண்ணிக்கொண்டு திரிகிறாய்; அத்தோடு போகிறதா; உன்பரிவாரங்கள் தலைக்குத்தலை புகுந்து ஜாடுகிறார்கள். அதனாலேதான் பட்சணக்கடைக்குச் சரியானலாபம் வருகிறதில்லை. உன்னையும் உன்பரிவாரங்களையுங் கண்டால் எமனையும் எமதூதர்களையும் கண்டாற்போலக் கடைக்காரர்களெல்லாரும் நடுநடுங்குகிறார்கள். நீயோ சொந்தவீட்டுக்காரியிடத்தில் கேட்பதுபோல மானம் வெட்கமில்லாமல் அதிகாரத்தோடு கேட்டு வாங்கித்தின்றுவிடுகிறாய், உன்பரிவாரமும் அப்படியே செய்கின்றது அப்படிப்போல என்னையும் நினைத்துக்கொண்டாயா? சும்மாவிரு என்னடா சுப்பா! காலப்பில் விடுகிறாய், உன்பண்டவாளந்தெரியாதா? நீ கிராமசேர்த்தனைக்குப் போகும்போது என்ன செய்கிறாய்? ஏழையென்றும் பணக்காரர்களென்றும் பார்க்கிறாயா? எப்படியாவது உன் வயிற்றையும் பெட்டியையும் நிரப்பிக்கொண்டு வந்து விடுகிறாயே அது வெகுயோக்கியமோ? உன் எஜமான் தாசில்தார் இருக்கிறாரே, அவருக்குமேலே டிப்டிகலெக்டரிருக்கிறாரே இவர்களெல்லாரும் என்னசெய்கிறார்கள். வாங்கின சம்பளத்தில் ஒரு காசு தொடுகிறார்களா? அப்படியே பாங்கிக்கு அனுப்பிவிடுகிறார்கள். ஏழைகள் வாயில்மண்போட்டுத்தானே அன்றாடம் காலக்ஷேபஞ் செய்கிறார்கள். சர்க்கியூட் போகிறதென்று பேர்வைத்துக்கொண்டு கிராமந்தோறும் போய்க், குடிகளிடத்தில் அடித்துப் பறித்துத்தின்றுவிட்டு மிச்சம் ஒரு வண்டிநிறையக் கொண்டுவந்து வீட்டிலே கொட்டிவிடுகிறார்கள். நிஜமாய்ச்சொல்லு; உங்கள் தாசில்தார் ஒரு காசுக்கு உப்பாவது வாங்குகிறாரா! அஃதிருக்கட்டும் டிப்டி கலெக்டர் இராமசுப்பு ஐயர் போன

மாதம் தன் மகளுக்கு விவாகம் நடத்தினரே; ஒரு காசாவது தான் சம்பாதித்த காசிலிருந்தெடுத்துச் செலவழித்தாரா? உப்பு புளிமுதல்கொண்டு குடிகள் கொண்டுவந்து கொடுத்ததும் தவிர மொய்ப்பணம் என்று ஐயாயிர ரூபாய் வரையில் சேர்த்துப் பெட்டியில் வைக்கவில்லையா? ஓவர்சியர் வெங்கிட்டராமபிள்ளை உன் சிநேகிதனுயிற்றே அவர் சேதியென்ன? ரேஞ்சு ஆபீசர் இராமசந்திர ஐயர் சமாசாரந்தெரியுமா! இதோ உட்கார்ந்துகொண்டு தனக்கொன்றும் தெரியாததுபோலச் சிரிக்கிறாரே சிரேஸ்தார்தார் குப்புசாமி ஐயரவர்கள்; இவர்...க்கியர் இவரெப்படி ஜீவிக்கிறார். எல்லாரும் அப்படித்தானு என்னைமட்டும் பரிகாசம் பண்ணுகிறாயே. உன் தலையிலிருக்கும் வைக்கற்போரை மறந்துவிட்டல்லவோ பிறன் தலையிலிருக்குந் துரும்பை கவனிக்கவேண்டும். இது உன் சுபாவம் உன்மேல் குற்றமில்லை. சட்டையப்பா! நீயென்ன சொன்னாலும் பிரயோசனமில்லை. போலீஸ்காரர், மாஜிஸ்திரேட்டார் இவர்களுக்குக்குடிகள் பயப்படுகிறது போல மற்ற டிபார்ட்மெண்டாருக்குப் பயப்பட மாட்டார்கள். ரிவினியூ, இர்ரிகேஷன் டிபார்ட்மெண்டாரிடத்தில் குடிகள் பயந்து நடக்கமாட்டார்கள். நாங்களோ அவர்களிடத்தில் சும்மா காசுவாங்கமாட்டோம். அவர்களுக்கு வேண்டிய உபகாரத்தையெல்லாம் செய்கிறோம் அதனால் ஜனங்கள் மனமகிழ்ந்து கொடுக்கிறார்கள்; நீங்களோ அப்படியல்ல நிஷ்காரணமாகப் பொருந்து இல்லாத குற்றங்களைச்சுமத்திப் பயமுறுத்தி "ஓநாய்க்குத்தெரியுமா ஆட்டின்வருத்தம்" என்பதுபோலப் பிச்சுப்பிடுங்கித் தின்றுவிடுகிறீர்கள். ஆதலால் உங்களுக்குக் கிடைப்பதுபோல எங்களுக்குக் கிடைக்கமாட்டாது. எங்களுக்கேதாவது ஒரு காலத்தில் கிடைக்கும். உங்களுக்கோ நினைத்தபோதெல்லாம் பெருந்தட்டு என்ன குப்புசாமி! நான் சொல்லுவது சரியாதப்பா? சொல்லு சட்டையப்பனுக்கென்னகவலை! அவன் அப்படித்தான் உளறுவான் "தான் திருடி பிறரைநம்பான்" என்றபழமொழி கேள்விப்பட்டதில்லையா? சட்டையப்பன் தன்னைபோலவே எல்லாரையு நினைத்துப்பேசுகிறான். அவனிடத்தில் வாயைக்கொடாதே சுப்பாசாரி! இந்த குப்பன் பரமசாது அவனுக்கொன்றுந்தெரியாது. இந்தமாதத்தில் என்னூயிர ரூபாய்கடன் அடைத்தானே யெப்படி யடைத்தானென்று கேளு. திருப்பணந்தான் அப்பீல்கேஸில் பதினையிரந்தட்டிவிட்டான் நமக்கு நூறு ஐம்பது என்றுவந்தால் அவனுக்குப் பதினுயிரம் இருபதினுயிரமென்று கிடைக்கிறது. இவன் என்ன உபகாரம் செய்துவிட்டான். இவன் யோக்கியன் தப்புச் செய்திருக்கமாட்டானென்று ஒருபொய்சொல்லி பதினையாயிர ரூபாய்த்தட்டிபோட்டு விட்டானே. அந்தக்கொழுப்பல்லவா? இப்படிப் பேசச்சொல்லுகிறான். போகுங்குப்பா இந்தமட்டில் உன்வாயை மூடு சுப்பாசாரி மசாலைவடைமணக்கிறதே காரணமென்ன? எங்கே தட்டினாய் சொல்லு எனக்குக்கொஞ்சங் கொண்டுவரக்கூடாதா? நாமெல்லாரு மின்னையதினம் இவ்விடத்தில் கூடுவோமென்பது உனக்குத்தெரியுமே இப்படி வஞ்சனை செய்யலாமா? இராமையா பட்டணக்கடைவழியாகவந்தேன். அவன் வடைசுட்டுக்கொண்டிருந்தான்; அது சமயம் கமகமவென்று மூக்கில் புகுந்தது உடனே வாயில் நீரூறியது கால் அங்கே இழுத்தது; போய்ப்பார்த்தேன் அவ்விடத்தில் கூட்டமாயிருந்தபடியால் ஒரு துக்காணி கொடுத்து இரண்டு வடைவாங்கித் தின்றுவிட்டுவந்தேன். அப்பளம் போளி இராமாசாரிவருவான் அவன் எல்லாருக்கும் வாங்கிக்கொண்டுவருவான் நீ நாக்கைத்தீட்டிக்கொண்டிரு. அப்பளம் போளி ராமாசாரி யென்பவன்யார்? எனக்குத்தெரியவில்லையே. அவன் தானுகா எட்டுமால்தா; அவன் உன் சிநேகிதனுயிற்றே. ஒஹோ இவனு? இவனே யென



க்குத்தெரியாதா? சரி அவன் என்னைமறக்கமாட்டான். அவசியம் கொண்டுவருவான் அவன் வருகிறதற்குக் காரணமென்ன? அவனுக்கு ஆபீஸில்லையா? இல்லை இல்லை; இன்று தினம் இரவில் நமக்கெல்லாம் காவேரியில் நிலாச்சாப்பாடு அதைச்சொல்லும் பொருட்டு வருகிறான். அதோ அவன் வருகிற வேகத்தைப் பார்த்தாயா? ஆமா அவன்கூட ஒரு பையன் தலையில் ஒரு கூடையை வைத்துக்கொண்டு வருகிறான். அதுதான் மசாலைவடை போலிருக்கிறது. நல்லவேட்டைதான். இராமாசாரிவந்து குட்மார்னிங் மிஸ்டர்சட்டையப்பா! உன்னையெங்கெல்லாம் தேடியலைந்து வருகிறேன். இராமாசாரி! நானிங்கேயிருப்பேனென்று உனக்குத்தெரியாதா! கிடக்கட்டும்; முன்னாலே மசாலைவடையைப்போடு வாயில் நீரூறுகிறது. வெங்காயவாசனை மூக்கைத்துளைக்கிறது. என்று சொல்லிக்கொண்டு கூடையில் கையைப்போட்டு இரண்டு மூன்றாக எடுத்து வாயில்போட்டுத் தின்றுகொண்டே, குப்பனுக்குஞ் சுப்பனுக்கும் வாயில் மண்தான். சூத்திரன் தொட்டுவிட்டபடியால் அவர்கள் தொடமாட்டார்கள். சுப்பாசாரி, சட்டையப்பா! நீ தொட்டதினாலே வடையுஞ் சூத்திரனாய்விடுமா? அல்லது என் வாயில் அது செல்லாதோ, சென்றாலுங் குமட்டுமோ? இருக்கட்டும் இராமா! என்னிடம் பத்து வடைபோடு, சட்டையப்பன், அடே அடே! சாதியாசாரத்தைக் கெடுத்துக் கொள்ளாதே நான் எச்சில் கையால் தொட்டுவிட்டேன் என் எச்சில் தின்றால் எனக்குப்பாபம் உனக்கும் பாபம் தொடாதே நீ பார்ப்பானல்லவா? சுப்பாசாரி, பாபத்தையும் புண்ணியத்தையும் நீதான் கண்டுபிடித்தாய்; உனக்குத்தான் தெரியும்; ஆதலால் உனக்குத்தான் பாவம். எனக்குக்கிடையாது நான் எப்பொழுது என்ன கிடைக்குமென்று எதிர்பார்த்திருக்கிற பார்ப்பான்; இராமா! கொட்டு கொட்டு, சட்டையப்பன், என்னடா சுப்பா நீ மார்பில் பூணூல் போட்டிருக்கிறாயே நீ பிராமணன் இல்லாவிட்டால் பூணூல் என் தரித்திருக்கிறாய். சட்டையப்பா! இந்தப் பூணூல் செய்யும் உபகாரம் உனக்குத்தெரியுமா? கிராமங்களுக்குப்போனால் அவ்விடங்களில் அடிக்கடி அப்பியங்கன ஸ்நானஞ்செய்கிறது அப்பொழுது அரைஞாண் கயிறுக்குப்பதிலாகவும், சிலசமயங்களில் நிக்காடுகளைக்கட்டுவதற்கும் உபயோகப்படுகிறது. ஆதலால் பூணூல் எனக்கு மிக உபகாரியாயிருக்கிறது. அதைப்பற்றி நீபேசாதே; எங்கள் மடத்து ஆச்சாரியார் வந்தபோதெல்லாம் ஒரு மாதச்சம்பளத்தை அவருக்குக் கொடுத்துவிடுகிறேன். அதனால் எனக்கு எவ்வித பயமுஞ் சேரமாட்டாது. என்று இப்படி விளையாட்டாகப் பேசிக்கொண்டு நாலுபேருமாக மசாலைவடை, பக்கவடாய், வாழைக்காய்ப்பஜ்ஜி முதலான பட்சணங்களைத் தின்று தண்ணீர்குடித்து ஏப்பம் விட்டுக்கொண்டு உட்கார்ந்தார்கள். அப்பொழுது இராமாசாரி மற்றவர்களைப்பார்த்து இன்றுதினம் இரவில் காவேரிக்கரையில் நிலாச்சாப்பாடு நடக்கிறதாம்; அதற்காக நீங்கள் எல்லாரும் வரவேண்டுமென்று தாசில்தாரவர்கள் சொன்னார்கள். ஆகையால் ஏழுமணிக்கெல்லாரும் மடத்துத் துறைக்கு வந்து சேருங்கள் என்றார் சட்டையப்பன், இராமாசாரி! இன்றைக்கென்ன விசேஷம், நிலாச்சாப்பாடு செய்ய வேண்டிய அவசியமென்ன? யார்செய்துவைக்கிறார்கள். சுப்பாசாரி, சட்டையப்பா அதெல்லாம் என் கேட்கிறாய்; கூப்பிட்டால் போய்த்தின்றுவிட்டு வருவோம்வா அடே சுப்பா உனக்கொன்றுந்தெரியாது;

தேவகுஞ்சரியம்மாள்.

# HAMLET

## ஹாம்லெட்.

205-ம் பக்கத் தொடர்ச்சி.

### ஐந்தாவது அங்கம்.

முதற்களம்.

புதைக்காடு.

மண்வெட்டி கையிற்பிடித்த நாட்டுப்புறத்தார் இருவருடைய பிரவேசம்.

முதல் நாட்டுப்புறத்தான்— தற்கொலை செய்துகொண்டவருக்கு மந்திர பூர்வமான கிரியைகள் உண்டா?

இரண்டாவது நாட்டுப்புறத்தான்— உண்டு: குழியை ஒழுங்காக வெட்டு; சாஸ்திரிகள் உண்டென்று சொல்லிவிட்டார்கள்.

மு—நா—தன் உயிர்தப்புவதற்கு யத்தனஞ் செய்ததில் மரணம் வந்திருந்தாலல்லவோ அவ்வாறு சொல்லலாம்?

இ—நா—சாஸ்திரிகள் அப்படித்தான் என்கிறார்கள்.

மு—நா—அவள் புத்தி பூர்வமாய் முழுகி இறந்தவளாயிற்றே.

இ—நா—நான் சொல்லுவதைச் சற்றுக் கவனித்துக்கேள்.

மு—நா—நான் சொல்லுவதை நீ கேளு: தண்ணீர் இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம்: அதன் பக்கத்தில் ஒரு மனிதன் இருக்கிறதாகவும் வைத்துக் கொள்வோம்: மனிதன் தண்ணீரில் இறங்கி இறப்பானாயின் அது தற்மரணமாம்: அவ்வாறன்றி மனிதன் இருக்குமிடத்தில் தண்ணீர்வந்து அவனை மூழ்க அடித்துக்கொல்லுமாயின், அம்மனிதன் தற்கொலை செய்தவனாகான்.

இ—நா—நீ சொல்லுவது சாஸ்திரமா?

மு—நா—சாஸ்திரிகள் அப்படித்தான் சொல்லுகிறார்கள்.

இ—நா—வாஸ்தவம் தெரியுமா? செத்துப்போனவள் பெரிய இடத்துப்பெண்ணாயில்லாவிட்டால், அவளுக்கு ஈமக்கடன்கள் சாஸ்திரப்பிரகாரம் நடக்கா.

மு—நா—ரசத்தைக்கண்டுபிடித்தாய். [தன் மண்வெட்டியைப்பார்த்து] சாமானிய ஜனங்களுக்குத் தற்கொலை செய்துகொள்ளச் சட்டம் இடங்கொடுப்பதில்லை: பெரிய மனிதர்கள் தண்ணீரில் விழுந்தும் தூக்கு மாட்டிக்கொண்டும் சாவதற்குச் சுதந்திரம் உடையவர்களாயிருக்கின்றார்களே, இது என்னபாவம்? தோட்டக்காரர்கள், குழி வெட்டுபவர்கள், சவக்



குழி தோண்டுபவர்கள் இவர்களையன்றி வேறொருவரையும் புராதனக் கனவான்களாகச் சொல்லலாகாது: ஆதி புருஷனான ஆதாம் தொழிலை மேற்சொன்னவர்கள்தான் நடத்திவருகிறார்கள்.

இ—நா—ஆதாம் கனவானா?

மு—நா—ஆயுதம் கையாண்டவர்களில் ஆதாம் தான் ஆதிபுருஷன்.

இ—நா—ஆதாமுக்கு ஆயுதம் ஏது?

மு—நா— நீ அஞ்ஞானியா? வேதம் படித்திருக்கிறாயா? ஆதாம் தோட்டத்தைக் கொத்தினான் என்று வேதத்தில் சொல்லவில்லையா? ஆயுதமில்லாமல் கொத்துவதெப்படி? நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு ஜவாப் சொல்லுவாயானால் சரி. இல்லாவிட்டால்.

இ—நா—போடாபோ.

இ—நா—கொற்றன், தச்சன், கப்பல் செய்பவன் இவர்கள் செய்வதைவிட நீடித்தகாலமிருக்கிற வேலையைச் செய்பவன் எவன்?

இ—நா—தூக்குமரஞ் செய்பவன். எவ்வளவோ பேர்களைக் கொலை செய்த பிறகும் அது மாத்திரம் நிலையாய் இருக்கிறது.

மு—நா—பேஷ்: நன்றாய்ச் சொன்னாய். தூக்குமரம் சரியானது தான்—குற்றவாளிகளுக்கல்லவோ அது சரியாகும். கோயிலைவிடத் தூக்குமரம் நீடித்தகாலமுள்ளதென்று நீ சொல்வது ஒத்துக்கொள்ளத் தக்கதல்ல. இன்னொருமுறை யோசித்து மறுமொழி சொல்.

இ—நா—கொற்றன், தச்சன், கப்பல் செய்பவன் இவர்களை விடப்பலமான வேலை செய்பவன் யார்?

மு—நா—அதைச் சொல்லி விடுகதையை அவிழ்.

மு—நா—இப்பொழுது நான் சொல்வேன்.

இ—நா—சொல்லு.

இ—நா—எனக்குத் தெரியவில்லை, போ.

[சிறிது தூரத்தில் ஹாம்லெட்டும்.]

[ஹொரேஷியோவும் பிரவேசம்.]

இ—நா—நீ ஏன்டா மண்டையை உடைத்துக் கொள்ளுகிறாய்? அடிப்பதினால் கழுதை வேகமாக ஓடுமா? இந்தக்கேள்வி யாராவது கேட்டால் "சவக்குழிவெட்டுவோன்" என்று மறுமொழி சொல். இவன் கட்டும் வீடுகள் ஊழிக்காலம் வரையில் இருக்கும். கடைக்குப் போய் ஒரு குப்பி சாராயம் வாங்கிவா.

(இ—நா—போய் விடுகிறான்).

(குழி வெட்டிக் கொண்டே பாடுகிறான்).

சின்னஞ்சிறுபிராயத்திலே

கன்னி ஒருத்திமேல் மோகங்கொண்டு
வீணுட்டத் திரிந்தேன், திரிந்தேன்.

சிறுபிராயத்திலே விரகதாபனுய
நான் களித்துத் திரிந்தேன், திரிந்தேன், பெண்ணே.

ஹாம்—குழி வெட்டுகையிலே பாடுகிருனே, இவனுக்குச் சனக்கரைவு கிடையாதோ?

ஹொரே—வாடிக்கை சுளுவாக்கி விட்டது.

ஹாம்—நீ சொல்வது சரிதான்-சிறுவேலை செய்வோர்க்குப் புத்தி கூர்மையாய்த் தானிருக்கும்.

மூ—கா—(பாடுகிருன்).

மூப்புவந்ததுகள் வன்போல காப்பாரெவரு மிலர்
மாதர் மயலினைத் துறந்தேன், துறந்தேன்.
மூப்புவரும், திருடன் போல
காப்பவர் யாரும் கிடைக்கார்
மாதர் மேல் மயல் கொளல்
மதிமயக்கமே, மதிமயக்கமே.

(மண்டையோடு ஒன்றை எடுத்து எறிகிருன்.)

ஹாம்—அவன் எறிந்த மண்டை ஓட்டில் ஒன்றுட் இசைபாடும் நாக்கு ஒரு காலம் இருந்திருக்கலாம்: கொலைகாரன் தலையை அலக்ஷியமாய் வீசுவதுபோல வீசுகிருனே, கடவுளையும் ஏமாற்றும் சமர்த்துள்ள அரசுடைத்துப் பசனுடைய மண்டை ஓடாக இருந்தாலும் இருக்கலாம்.

ஹொரே—அப்படியே இருக்கலாம், பிரபுவே.

ஹாம்—இந்தப் பயல் எறிவதற்கா இந்த எலும்புக் கொலம் வளர்ந்தன? இதைப்பார்க்க என் உடம்பு நோகின்றது.

மூ—கா—(பாடுகிருன்).

மண்வெட்டி ஒன்று, கந்தலி ஒன்று,
தின்னிய சவமூட்டுத் துணி ஒன்று,
குழி ஒன்று வெட்டி அதனில்
பழியான உடம்பை அடக்குதல் தகவாம்.

[இன்னொரு மண்டை ஓட்டை எடுத்தெறிகிருன்.]

ஹாம்—இன்னொரு மண்டை ஓடு: இது ஒரு நியாயவாதியினுடையதா யிருக்கலாம். இவனுடைய நம்பர்க்கட்டு, நிறை வேற்று மனு, பிராது, சம்மன், அறிக்கை, இவ்வித முதலியவைகளெல்லாம் எங்கே போயிற்று! சவக் குழிவெட்டும் பயன் இவன் மண்டை யோட்டைப் பந்துபோல மூலைக்கு மூலை விட்டெறியப் பிராது பண்ணுமல் வாயைமூடிக்கொண்டிருக்கிறுனே இது என்ன புதுமை சவக்குழி வெட்டுபவனிடத்தில் பேசிப்பார்க்கிறேன். அது யாருடைய கல்லறையடா?

மூ—கா—என்னுடையது அய்யா.

[திரும்பவும் பாட ஆரம்பித்துவிட்டான்.]



# பானுமதி.

(249-வது பக்கத்தொடர்ச்சி.)

## இரண்டாம் அங்கம், முதல் காக்ஷி.

பிரவேசம்.

கோட்டைவாசலில் ஒரு மரத்தடியில் நாகன், ஏரண்டன் என்கிற இரண்டு நகர் காவலர்கள் பிரவேசிக்கிருர்கள்.

தேவரானுலு மந்தத் தேவரை நடுங்கச் செய்யும்
மாவலியரக்கரேனும் மறலியே யுருவமாறித்
தீவிரமாய் வந்தாலுஞ் செருக்கொடுபிடித்திறுக்கும்
காவலேரண்டன் நாகன் சபரியில் வருகின்றுரே.

காவலர் வருகிற தரு, இராகம் பைரவி.

பல்லவி.

காவலர் தோன்றிஞர் - காசிநகர்க் - காவலர்தோன்றிஞர்.

அநுபல்லவி.

தேவர்களானுலும் மாவலி ராக்ஷதர், யாவரே யானாலும் தாவிப்பிடிக்கவல்ல—காவலர்

சரணங்கள்.

(1) கச்சை வரிந்துகட்டி-நடக்கிறும்-காலில் செருப்பணிந்து
நச்சுண்ட வாளிடை வச்சுக்குலுக்கடி, மெச்சப்பிடித்த கத்-தச்சமில்லாமலே-கா
(3) சட்டைகுல்லாதரித்து-நல்லவீர-பட்டமும் நெற்றிக்கிட்டுத்
திட்டமாய் வேந்தன் செய்கட்டளையுண்டானுல், எட்டுமலையையும் தொட்டெடுக்கவல்ல—காவலர்
(3) துட்டர்விலங்குபயம்-களவுசெய்-சோரர் பயங்கெடவே
அட்டதிக்கெங்கிலும் பிட்டுக்கொள்ளும்படி, பட்டவிருட்டிலும் பட்டணங்காக்கவே—காவலர்.

நாகன்:—ஏண்டண்ணே நாகா! காவக்காரர்களுக்கெல்லாம் இப்ப அட்டமச்சனி பிடிச்சாப்பிலே யிருக்குது:

ஏரண்டன்:—ஆமாமா! இது யாராலே யாகுமாருண்ணே! நம்ப தலையெழுத்தா விதி! ராவெல்லாம் சுத்திசுத்திக் காலெல்லாம் வலிக்கிது. பகலிலே சத்தே தூங்குவமின்னு கொத்தவால் நிமிசத்துக்கு நிமிசம் புச்சு புச்சா உத்தரவு கொடுக்கிருங்க. அதுவுமின்னு சும்மா சும்மா கூப்பிடுருங்க; அப்ப இல்லாட்டி போனு நம்ம உசுருக்கு மோசம் வரும். அந்த திருட்டுப்பசங்கதான் ராஜா அரமனையிலே வந் திருடருன். அது நம்ப கழுத்துக் கத்தியா வந்துட்டுது.

நாகன்:—ஏண்டண்ணே! அவன் பலே திருட்டுப்பயலா?

ஏரண்டன்:—அவன் பழய திருடன்தான். அவன் திருட்டு ரொம்ப வேடிக்கைடா, பட்டப்பகலிலே கண்ணைக்கொண்டுபோயிடுவாண்டா!

நாகன்:—அவன் யாருடாண்ணே! எங்காலே யிருந்துவரான்.

ஏரண்டன்.—ஒத்தன் சொல்லுறப்பலே ஒத்தன் சொல்லலேடா; அவனை மலைக்குறவன் என்னுறுங்கோ, வேட்டைக்காரனுயிருப்பானென்னுறுங்கோ! ராச்சதனுயிருப்பானென்னுறுங்கோ; என்னென்னமோ சொல்லுறுங்கடா! அவனை யின்னுமொருத்தனும் கண்டவனல்லே. அவன் எங்கிட்டாலே யிருந்து வாரானென்னுந்தெரியாது. தெரிஞ்சா இன்னேரம் விட்டிருப்பாங்களா? நம்ப கொத்தவாலு ரெக்கை கட்டிகிட்டுப் பறக்கமாட்டாங்களா! எப்பா! அந்தத்திருடன் எத்தனை வூட்டைக் கொள்ளை யிட்டுட்டான். எத்தனைப்பேரைக் கொண்ணுப்பிட்டான். அவனை நினைச்சுக்கிட்டாக் கொலை நடுங்குதே.

ஏரண்டன்:—அப்படி யாண்ணு ராசாவும், மந்திரியும் சும்மா விட்டுட்டிருக்கிறுங்களே; அவங்ககூடப் பயப்புடுறுங்களா!

நாகன்:—இதுக்கு இண்ணு ராசாபுடிக்க ஆரம்பிச்சா முடியாமப் போமோடா? வண்டிமாட்டுக்கால்சுளுக்கிக்கிட்டா சவாரி பண்ரவுங்களுக்கு வருத்தந் தெரியுமா? ஊரெல்லாங் கொள்ளையிட்டப்போ சும்மா தூங்கிக்கிட்டுக் கெடந்தாங்க; தங்கவூட்டுக்குள்ளே பூந்த அப்பறம் முளிச்சிகிட்டு நம்மே அதிகாரம் பண்ருங்க. எல்லாம் தங்களுக்கு வந்தாத்தாண்டா தெரியும். அப்பவே உத்தரவு கொடுத்துத் தொலைச்சிருந்தா இத்தனையேன். மெள்ள மெள்ள உளவு தெரிஞ்சுக்கிட்டு இத்தனைநாப்புடிச்சிருக்கலாம். இப்பவந்து நம்ப தாலியே அறுக்கிறுங்க. அதுவும் ஒரு வாரத்துக்குள்ளே புடிக்கணுமிண்ணு கொத்தவால் கட்டளேடா.

ஏரண்டன்:—அதுக்குள்ளே ஆகுமோ அண்ணே! அப்படி எவன் புடிப்பான்.

நாகன்:—ஏண்டா! சிங்கன், தரக்கன், கோளன், வாணன் நாலுபேரும் என்ன அல்பங்க இண்ணுக்கிட்டிருக்கிறெயோடா; இந்த நாலுபேரும் நாலு திக்கையும் இடிப்பாங்களே. அவுங்கபிடிச்சுக்கிட்டு வந்துருவாங்க பாரு.

ஏரண்டன்:—ஏதப்பா! அவுங்க அம்பிட்டு வல்லவர்களா! அவுங்கதான் போயிருக்கராங்களா! அப்படியானு ஆப்பிட்டுக்குவான். அவங்களை யெனக்குத் தெரியுமடாண்ணே.

நாகன்:—ஏரண்டா! அதோ என்னடா மூணுக்கு மூணுக்குண்ணு வெளிச்சம் தெரியுது?

ஏரண்டன்:—பெரியகாவல் போரங்கன் வாரயிண்ணுங்களே! அவுங்கதான் வருவாங்க, உசாரா இக்கணும்.

பெரிய காவல் போரங்கன் பிரவேசிக்கிறன்.

போரங்கன்:—நாம் பரம்பரையாக இப்பட்டணத்தைக் காத்துவருகிறோம்; இதுவரைக்கும் இப்படிப்பட்ட திருட்டுக் கேள்விப்பட்டதில்லை. இது வெகு ஆச்சரியமாகவே யிருக்கிறது. அரண்மனையில் எத்தனையோ கட்டுக்காவலிருக்கின்றன. வெளியிலே நாம் கண்ணிமை கொட்டாமல் விழித்துக்காக்கிறோம். நமது காவலாளிகளும் ஏமாறுமலும் சோம்பலில்லாமலும் வேலை பார்த்துவருகிறார்கள். இத்தனை பேர்களையும் ஏமாற்றி அரண்மனையிலே திருடிவிட்டான். இது நம்முடைய பேருக்குக் குறைவுதான். இருக்கட்டும், எவ்வகையிலும் அவனைப்பிடித்துத் தீரவேண்டும். இல்லாவிட்டால் நமது பேர்



கெடுவதுமன்றி இராஜ கோபமும் வரும். காவற்காரர்களை உஜார்படுத்திவிட்டுத் தக்க பிரயத்தனம் செய்கிறேன். என்று (மனதுக்குள் சொல்லிக்கொண்டு) வந்து யாரடா அங்கே மரத்தடியில் நிற்கிறது?

நாகன்:—சாமி நாகனும் ஏரண்டனும் நிற்கிறோம். இது திருடர் வருகிற வழியாகையால் இங்கே பதுங்கியிருந்து காவல் செய்கிறோம்.

போரங்கன்:—நல்ல யுக்தி செய்தீர்கள். அதோ அந்த வேலிமறைவிலே பதுங்கியிருங்கள்.

நாகன்:—அப்படியே யிருக்கிறோம் சாமீ.

போரங்கன்.—உஜாராயிருங்கள். நான் நகரத்தை ஒரு சுற்று சுற்றிக்கொண்டு வருகிறேன். போய்விட்டான்.

சிங்கன், தரக்கன் இரண்டு காவலர் பிரவேசிக்கிறார்கள்.

சிங்கன்:—தரக்கா! என்ன பெருமோசமாயிருக்கிறது. பொழுது விடிந்தால் அரசன் நமக்குக் கொடுத்த கெடுநாட்கள் முடிந்துபோகின்றன. நமக்கு இட்ட வேலையை நாமின்னம் நிறைவேற்றவில்லை. பெரிய ஆபத்து வரும்போலிருக்கிறது. இதற்கென்ன செய்யலாம்? சொல் பார்ப்போம்?

தரக்கன்.—கோளன் வரட்டும்; அவன் சும்மா வரமாட்டான்; ஏதாவது துப்பு விசாரித்துக்கொண்டு தான் வருவான். உளவு பார்ப்பதில் அவன் வல்லவனென்று உனக்குத் தெரியாதா!

கோளனும், வாணனும் ஒரு சந்நியாசியைப் பிடித்திழுத்துக் கொண்டு வருகிறார்கள்.

கோளன்:—வாணு, நமக்கு நல்லகாலம்; இந்தத் திருட்டுப்பயல் சந்நியாசி வேஷம் போட்டு நமது நகரத்திலேயே வசித்துக்கொண்டிருக்கிறான். இவனை யொருவரும் அறியவில்லை; பார்த்தாயா! உள்ளும் கள்ளுமாயிருக்கிற இந்தப்பயலை யார் பிடிக்கப்போகிறார்கள்? நமது அதிர்ஷ்டந்தான் நம்மிடத்திலகப்பட்டுக்கொண்டான். நமக்கு வெகுமதி கிடைக்கும்.

வாணன்:—கோளா! உன் சாமர்த்தியமே சாமர்த்தியம். இவனை யெப்படியோ விசாரித்துக் கண்டுபிடித்தாயே. இனிமேல் நகரத்துக்கு க்ஷேமந்தான். இவன் விழித்துக்கொண்டிருக்கும்பொழுதே இடக்கண்ணில் பூந்து வலக்கண்ணில் புறப்படுவானாமே! உன் கையிலே யெப்படி அகப்பட்டான்?

கோளன்:—அது கேட்கிறாயா! ஊருக்கு மேற்கே நடுக்காட்டிலே ஒரு பர்ணசாலை கட்டிக்கொண்டு அதிலிருந்து தவசு பண்ணுகிறவனைப்போல் பாசாங்கு பண்ணிக்கொண்டிருந்தான். நான் இவனைப் பார்த்தபோதே சந்தேகமுண்டாயிற்று. உடனே விபூதியைப் பூசிக்கொண்டு இவன் கிட்டப்போய்க் கும்பிட்டு, அவனுக்கு சிஷ்யனாகப் பணிவிடை செய்து கொண்டிருந்தேன். முந்தாநாள் ராத்திரி நான் படுத்துக்கொண்டு ஆழ்ந்த யோசனைசெய்துகொண்டிருந்தேன். அப்போது இவன் மெல்ல எழுந்திருந்து சத்தப்படாமல் நடந்தான். இதை யறியும்படி நானும் தொடர்ந்து போனேன். இவனுக்கு ஒரு கூத்தி இருக்கிறாள்; அவள் வீட்டில் போய் நுழைந்து, அவளோடு பேசிக்கொண்டிருந்ததை

கேட்டுச் சங்கதி தெரிந்துகொண்டு, முன்னாலே ஓடி வந்து பர்ணசாலையில் முன்போலப் படுத்துக்கொண்டிருந்தேன். அப்போது இரவு இருபது நாழிகை யிருக்கும். சற்று நேரத்துக்கெல்லாம் இவன் தன் பரிவாரங்களுடன் வந்து எட்டி நின்றுகொண்டு இராசாவைப்போல அதிகாரம் பண்ணிக்கொண்டிருந்தான். எமது எண்ணம் பலித்ததென்று தெய்வத்தைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தேன். மறுநாள் விடிந்ததும் இவனைப் பிடிக்கும் உபாயத்தை யோசித்துக்கொண்டிருந்தேன். இன்று இரவில் இவன் ஜபம் பண்ணுவதுபோலக் கண்ணை மூடிக்கொண்டிருக்கையில், திடீரென்று இவன் புஜங்களைப் பாசக்கயிற்றால் இறுக்கிக்கட்டி வெகுதூரத்திலே கொண்டுபோய் மறைத்து வைத்துக்கொண்டிருந்தேன். ஒருவரும் இல்லாத சமயம் பார்த்து இழுத்துக்கொண்டு வந்தேன். இவனை யிப்படிக் கொண்டு போகக்கூடாது. தரக்கனை கைவிலங்கு கால்விலங்குகளுடன் அதோ மரத்தடியில் வந்து காத்திருக்கும்படி சொல்லி யிருக்கிறேன். இவனுக்கு விலங்கிட்டு வெகு ஜாக்கிரதையாய்க் கொண்டு போக வேண்டும் என்று தரக்கன் இருக்குமிடம் வந்து ஆரடா தரக்கா! தயாராயிருக்கிறாயா!

தரக்கன்:—ஆம்! நானும் சிங்கனும் தயாராய்க்காத்திருக்கிறோம். திருடன் அகப்பட்டானா? அப்பா இப்போதான் உயிர்வந்தது.

சிங்கன்:—தரக்கா! நீ சொன்னது சரியாப்போச்சு; கோளன் கட்டிக்கொண்டு வந்துவிட்டான். அவன்தாண்டா நமக்குப் பிராணதாதா. அவனைத்தான் கும்பிடணும்.

கோளன்:—சிங்கா! இவன் கையிலும் கால்களிலும் விலங்கு பூட்டு; இவனை இப்பவே கொத்துவாலிடம் ஒப்புவித்துவிட்டு நமது கடமையை கழித்துவிடவேணும்; தவக்கம்பண்ணாதே.

சிங்கன்:—அப்படியே கொண்டுபோவோம். இதோ விலங்கு பூட்டிவிட்டேன். போவோம். (கோளன், வாணன், சிங்கன், தரக்கன் நாலுபேரும் திருடனை விலங்கிட்டுப் பிடித்துக்கொண்டு கொத்தவாலிடம் போகிறார்கள்).

## இரண்டாம் அங்கம், இரண்டாவது காக்ஷி.

அரசனும், மந்திரியும் மாறுருபங்கொண்டு நகரிசோதனை செய்து வருகிறார்கள்.

அரசன்:—மந்திரி! இப்பொழுது இருபது நாழிகைக்கு மேலாயிற்று. காவற்காரர்கள் ஒரு வரையும் காணோம். என்னவேலை செய்கிறார்களென்று தெரியவில்லை.

மந்திரி:—மகாராஜாவே! அவர்களெல்லாரும் திருடனைப்பிடிக்கும் முயற்சியிலிருப்பார்கள். விடியும்முன் திருடனைப்பிடிக்க உத்தரவாயிருக்கிறதல்லவா;

அரசன்:—ஆம், நாம் நகரத்தைச் சுற்றிப்பார்த்து வருவோம் வா!

மந்திரி:—அப்படியே போவோம். [போகிறார்கள்].

அரசன்:—மந்திரி! அதோ கேட்கிற சப்தமென்ன?

மந்திரி:—மஹாராஜாவே! யாரோ சிலர் உற்சாகமாய் பேசிக்கொண்டிருக்கிறார்கள், நமது காவற்காரர்களுடைய தொனிபோலக் காணுகிறது. பார்த்துவருகிறேன். (திரும்பிவந்து) சுவாமி! நமது காவற் காரர்கள் நாகன், சண்டன், கோளன், வாணன்,



சிங்கன், தரக்கன் இவர்களாறுபேரும் கூடி யிருக்கிறார்கள். ஒரு சந்நியாசிக்கு விலங்கிட்டு உட்கார்த்தி வைத்திருக்கிறார்கள்.

அரசன்:—ஆனால் நாம் ஒளிந்திருந்து என்ன நடக்கிறதென்று பார்த்துத் தெரிந்துகொள்வோம்.

மந்திரி:—அப்படியே செய்வோம். (ஒளிந்துகொண்டு பார்க்கிறார்கள்.)

கோளன்:—சிங்கா! எங்கேடா கள்ளுமொந்தை? இப்பொழுது குடிச்சாத்தான் பட்டவருத்தந்தீரும். கொண்டுவா எல்லாரும் குடிப்போம்.

சிங்கன்:—அப்படியே கொண்டுவந்தேன். எல்லாரும் குடித்துக் களித்திருக்கிறார்கள்.

கண்ணிகள்.

1. என்னென்ன வேடிக்கை தோணுதுபாரு
எங்கிலுமேகமாய்க் காணுது பாரு.
முன்னுள்ள துன்பங்க ளோடுது பாரு
மோனப்பரசுகம் கூடுது பாரு.

2. எண்ணாத எண்ணங்கள் தோன்றி மறையுது
இன்னையில் பேரானந்த வெள்ளம் பெருகுது
விண்ணாளுந் தேவரெவரையுங் காட்டுது
மேலானபேர்நமக் கில்லையென் றெண்ணுது.

3. மலையோ டெதிர்த்துப் பொர எண்ணந்தோற்றுது
வாரணம் யாளி மசகமாய்த் தோற்றுது
உலகெல்லாம் கை நெல்லிக் கனியாய் விளங்குது
ஓகோ இக்கள்ளின் மகிமை பெரியது.

சிங்கன்:—வாணா! தரக்கா! கோளனாலே நமக்கு வெற்றி கிடைச்சது. மோகன், சூர்தன், அவங்களுக்கெல்லாம் வவுத்தெரிச்சலா யிருக்குமடா. இந்தத் திருட்டுப்பயல் சந்நியாசி வேஷம் போட்டுக்கொண்டு மறைந்திருப்பது யாருக்குத்தான் தெரியும்? கோளன் புத்தியே புத்தி; அவனுக்குத்தான் கள்ளு நிரம்பக் கொடுக்கணும்.

வாணன்:—ஆமடா! இந்தக்கோளன் செய்த சாகசம் காவற்காரர்க ளெல்லாருக்கும் பெருமைதாண்டா! கொத்தவாலுக்குத்தான் பெருங்கீர்த்தி.

கோளன்:—அப்பா! இந்தக்கள்ளு அப்ப கிடைச்சிருந்தா என்ன வேலை செய்திருப்பேன். என்னபாடு பட்டேன். இந்தச் சந்நாசிப்பயலுக்கு எத்தனைநாள் அடிமைவேலை செய்தேன். இந்தப்பயலை இங்கேயே உதைத்துக் கொல்லவேண்டுமடா!

தரக்கன்:—கோளா! இப்ப இந்தப்பேச்சு என்னத்துக்கு? நாம் பிடிச்ச காரியத்தை செயிச்சிக்கிட்டோம். நமக்கு ஒத்தாசை செய்த சாமியைத் துதிக்கணுமடா?

கோளன்:—ஆமா, எல்லாரும் நம்ப குல தெய்வங்களைத் தொழுவோம் (எல்லாரும் தெய்வம் தொழுகிறார்கள்).

கண்ணிகள்.

பகவதி காளி மகமாயி, பாவாடைராயன் காட்டேரி
கருப்பண்ணன் வீரன் பெருமாடன், காத்தவராயன் சாமுண்டி
தொட்டியச்சின்னான் மங்காயி, தொத்திப்பெரியன் மாகாளர்
கானகதெய்வங்களை யெல்லாம், கைதொழுதேத்திக் கும்பிடுவோம்,

### கொத்தவால் பிரவேசம்.

கொத்தவால்:—ஆரடா அங்கே !

சிங்கன்:—சாமி ! கும்பிடு. நாங்கதான் காவக்காரங்க.

கொத்தவால்:—என்ன விசேஷம் எல்லாருங்குடித்து வெறித்திருக்கிறீர்கள் ?

நாகன் :—சாமி ! திருடன் அகப்பட்டான்.

கொத்தவால் :—அகப்பட்டானா ! யார்பிடித்தது. அவனுக்கு நல்ல வெகுமானம் வாங்கித்தருகிறேன்.

சிங்கன் :—சாமி ! கோனான்தான் கட்டிப்பிடிக்க இழுத்துக்கொண்டு வந்தான்.

கொத்தவால் :—கோனா ! சபாசு ; உன்சாமர்த்தியமே சாமர்த்தியம் நீ திருடனைப்பிடியாதிருந்தால் விடிந்தபின் காவற்காரர்களெல்லோருக்கும் ஆபத்துத்தான். நல்லது திருடனைச் சாவடிக்குக் கொண்டுபோங்கள், நாளைக்கு நல்ல சனியாட்டுச் செய்வோர்.

மந்திரி :—மகாராஜாவே திருடன் அகப்பட்டான் போலிருக்கிறது. நகரத்துக்கு க்ஷேமந்தான். நாம் போய்விடுவோம், (போய்விட்டார்கள்).

கொத்தவால்சாவடியில் திருடனை அழைத்துக் கொண்டுவந்து
கோனன் முதலானோர் கூடுகிறார்கள்.

கொத்தவால் :—கோனா ! இவனைப்பார்த்தால் பெரியசாமியாராகக்காணுகிறது. நீ யோதிருடனென்கின்றாய், சந்தேகமாயிருக்கிறது, இவனை யெவ்விதமாய்த் திருடனென்றறிந்தாய் ? எப்படிப்பிடித்தாய்.

கோனன் :—சாமி ! காட்டுப்பட்டியில் இவன் கூத்தியார் இருக்கிறா, அவ வீட்டிலே கண்டு பிடிச்சேன். சந்யாசியென்று நினைக்காதேங்கோ, மஹா பொல்லாதவன் இவன் ஆப்பிட்டது தெய்வச் செயல்தான். இவன் கண்ணைமூடிக்கிண்டு தவசுபண்ணறாப்போலப் பாசாங்குபண்ணையிலே மேலேவிழுந்து பிடிச்சுகட்டிக்கொண்டு வந்தேன். இல்லாட்டி இவன் ஆப்பிடறவனா ?

கொத்தவால் :—சிங்கா ! நாகா ! நீங்கள் எல்லாரும் இவனைச் சாக்கிரதையாய்க் காத்துக்கொண்டிருந்து, விடிந்ததும் அரண்மனைக்குக் கொண்டுவாருங்கள். நான் இந்தச் சமாசாரத்தை ராஜாவுக்குத் தெரிவிக்கப் போகிறேன், போய்விட்டான்.

வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியார்.

145626



# NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

டாக்டர் J. C. போஸ் :—இந்திய பிரகிருதி சாஸ்திரிகளுள் சிறந்தவராகிய டாக்டர் J. C. போஸ் என்னும் வங்காளி கனவான் ஆராய்ச்சியின் பொருட்டு ஜர்மனிதேசத்துக்குப் புறப்படப்போகிறார். இவர் அங்கிருந்து இங்லாண்டிற்குப் போவாரெனவும் திரும்ப இரண்டு வருஷகாலம் செல்லுமெனவும் சொல்லப்படுகிறது.

* * *

ஒரு வங்காளி மாது :—இதுவரையும் கல்கத்தா யூனிவர்ஸிட்டியில் பி. ஏ. பரீக்ஷை கொடுத்தவர்களுள் ஒருவராவது இங்கிலீஷ் உபந்நியாச தேர்வுதனில் இவ்வருஷம் பி. ஏ. பரீக்ஷை தேறியிருக்கும் ஒரு வங்காளி மாதவ்வளவு அதிக மார்க்கு வாங்கவில்லையாம். இந்த வங்காளிமாதின் பெயர் மிஸ் விக்டோரியா மூக்கர்ஜியாம். இவருக்கு வழக்கப்பிரகாரமான "தங்கமெடல்" பரிசு கொடுக்கப்பட்டது.

* * *

இலங்கையில் ஸயாம் அரசர் :—சிலகாலமாய் ஐரோப்பா கண்டத்தில் தேச யாத்திரை செய்துகொண்டிருந்த ஸயாம் தேசத்தரசர் தமது தேசத்துக்குத் திரும்பும் மார்க்கத்தில் இலங்கையி லிறங்கிக் கொழும்பு, அநுராதபுரம் இந்தப் பட்டணங்களைப் பார்வையிடுவார். இவ்வரசர் பௌத்த மதஸ்த ராகையினால் அநுராதபுரத்திலுள்ள பௌத்த மதஸ்தர்களாகிய சிங்களவர்கள் இவரை வரவேற்பதற்கு வேண்டிய பெருமுயற்சிகள் செய்கிறார்கள்.

* * *

100 கொள்ளைக்காரர்கள் :—அயோத்திக்குச் சமீபத்தில் சில காலமாக நடந்து வரும் கொள்ளைகளைப்பற்றிப் பலமான புகார் உண்டாய்க்கொண்டிருந்தது. அதன் பேரில் போலீஸ் சிப்பாய்களும் சுமார் 3000 ஜனங்களுமாகத் திரண்டு கொள்ளைக்காரர்களைத் தேடிக்கொண்டுபோக ஒரு தினத்தன்று 100 கொள்ளைக்காரர்கள் பிடிக்கப்பட்டார்களாம். இவர்களிடம் சண்டை செய்வதற்கு வேண்டிய வில், அம்பு முதலிய பழையகாலத்து ஆயுதங்கள் காணப்பட்டனவாம். காட்ரி எனனும் ஒரு பெரும் காட்டில் இவர்கள் வசிப்பதாயும், இவர்கள் போட்ட கொள்ளைகளுக்கு எண்ணிக்கை இல்லை என்றும் சொல்லப்படுகின்றது. எல்லாரும் இப்பொழுது விசாரணை செய்யப்படுகின்றார்கள். இரண்டொருவருக்கு ஜன்மதீாப்புச் செய்யப்பட்டது.

* * *

ஒரு யூனிவர்ஸிட்டி மோசக்கேஸ் :—ஜகநாதன் என்ற ஒரு வாலிபன் தான் யாதொரு பரீட்சையும் பாஸ் செய்யாதவனாயிருந்தும் தான எப். ஏ. பரீக்ஷையில் பாஸ் செய்திருப்பதாயும் சர்ட்டிபிகேட்டுத் தவறி விட்டதாயும், ஆதலால் வேறொரு சர்ட்டிபிகேட்டு அனுப்பவேண்டுமென்றும் யூனிவர்ஸிட்டி ரிஜிஸ்தராருக்கு ஒருகடிதமெழுதி தன் பெயருள்ள வேறொருவனுடைய கையொப்பம் வைத்தனுப்பிய மோசடி கண்டு பிடிக்கப்பட்டு சென்னை நகரப் போலீஸ் சீப் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் S. பவானந்தம் பிள்ளையால் திருச்சினாப் பள்ளியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு சென்னை பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் முன்பு கொண்டுவரப்பட்டான. வருகிறமாதம் 2-ஆம் தேதி வாயிதா போடப்பட்டிருக்கின்றது.

"சுல்தான்" என்னும் ஒரு வட இந்திய (மகமதிய) ப்பத்திரிகை அடியிற்கண்டவாறு எழுதுகின்றது:— "இன்னும் சமீபகாலத்தில நடக்கப்போகும் பெரிய யுத்தமானது இந்தியாவில் நடைபெறும். அதில் இந்துக்கள்வென்று பிரிட்டிஷார்கள் தோற்றுப் போவார்கள். பின்பு இந்துக்களே இராஜ்யாதிகாரம் செய்யத் தொடங்குவார்கள். ஆனால் இதற்குள் இந்துக்களுக்கும் மகமதியருக்கு மிடையில் பெரிய சண்டை தொடங்கும். அப்பொழுது நேப்பாளத்தார் இந்துக்கள்பக்கமும், பார்ஸிகள், ஆப்கானியர், பௌத்தர்கள் மகமதியர் பக்கமும் சேருவார்கள். இதன்மத்தியில் விலக்குத் தீர்ப்பதற்காக ருஷியர்களும், ஜப்பானியர்களும், பிரான்சுக்காரரும், ஜெர்மனியரும், இத்தாலியரும் வந்து இடையில் விழுந்து டணக்கெணக்கென்று அடிபிடிப்படுவார்கள். இவ்வாறு அந்தத் தேசங்களுக் கிடையே பெரும் பெரும் யுத்தங்கள் நடக்கும்." இவ்வளவு மட்டும் கூறிய நமது "சுல்தான்" பத்திரிகை இதற்குமேல் முடிவென்னுருவடையு மென்பதைப்பற்றி ஒன்றும் சொல்லாது நின்றுவிட்டது. வருங்கால சம்பவங்களாகிய இவற்றை யெல்லாம் இப்பத்திரிகை எந்த ஜோஸ்யரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டதோ தெரியவில்லை.

* * *

குருவுக்குக் கோபம் கூடாது:—பொதுவாக நமது தேசத்தில் குருபக்தி யென்பதை விசேஷமாகச் சிறப்பித்துப் பேசிக்கொண்டாலுங்கூட குரு சிஷ்யர்களிடம் அன்பு பாராட்டவேண்டியதும் மிகவும் அவசியந்தானென்பதைப்பற்றி ஒருவரும் வற்புறுத்துவதில்லை. மாணுக்கர்கள் தங்கள் குருவைப் பிதாவைப்போல் மதித்தொழுகவேண்டுமென்று சொல்லப்படுவது போலவே குருவும் மாணுக்கர்களைத் தம்பிள்ளைகளைப்போல நடத்த வேண்டுமென்பது அவ்வளவு நன்றாய்க் கவனிக்கப்படுவதில்லை. இவ்வாறு நமது பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்தியாயர்கள் மாணுக்கர்களை பல முறையும் அன்பின்றிக் கொடூரமாய் நடத்தி வருவதற்கு எத்தனையோ திருஷ்டாந்தங்களைக்கண்டு வருகிறோம். இந்தக் காரணத்தினால்தான் நமது தேசத்திலுள்ள உபாத்திமார்கள் ஐரோப்பிய உபாத்திமார்களவ்வளவு மரியாதையையும் மதிப்பையும் பெறவில்லையென் றெண்ணுகின்றோம். இராஜரீக சம்பந்தமான சில காரணங்களாலன்றி, போதனா சக்தியிலும் மாணுக்கர்களுடைய மனத்தைக் கவர்ந்து வசியப்படுத்தி உள்ளன்புபாராட்டுவதிலும் ஐரோப்பியர்களுக்குள்ள சாமர்த்தியமும் பொறுமைகுணமும் நமது உபாத்தியாயர்களிடமில்லையென்பதை ஒளியாமல் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் நமது உபாத்திமார்களிடமுள்ள கோபமேயாகும். உதாரணமாக கல்கத்தாவில் "அக்ரூல் இங்கிலீஷ் ஸ்கூல்" என்ற பாடசாலை எட்மாஸ்டர் ஒருவர் கீழ்வகுப்பு மாணுக்கனாகிய 9 வயதுள்ள ஒரு சிறு குழந்தைப் பையன் விளையாடிக் கூச்சலிட்டதற்காகக் கோபம் கொண்டு அவனை பிரம்பினால் 80-அடி அடித்து விட்டதாகவும், பையன் மூர்ச்சையாகி ஜுரங்கண்டு படுக்கையிலிருப்பதாயும், பெற்றோர்கள் மாஜிஸ்திரேட்டிடம் தெரிவிக்க உபாத்தியாயர் குற்றம் சாட்டப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகின்றது. மகா பரிசுத்தமும் கௌரவமும், புண்ணியமுமான உயர்ந்த உபாத்திமைத் தொழிலிலிருக்கும் ஒரு உபாத்தியாயர் அற்பமான கோபவெறியால் கிரிமினல் குற்றவாளியாகிக்கோர்ட்டில் படியேறும்படிநேர்ந்தது மிகவும் விசனிக்கத்தக்கது. இதை நமது உபாத்திமார்கள் கவனிக்க விரும்புகின்றோம்.